பத்துப்பாட்டு

ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யரும்

அவர் மாணாக்கர்

வித்வான். C. ஜெகந்நாதாசார்யரும்

M. A. (Hist), M. A. (Tamil), L. T., P. O. L., Dip-in-Geog.

(தமிழ்த்துறைத்தலைவர், விவேகாநந்தர் கல்லூரி, மயிலை)

இயற்றிய ஆராய்ச்சியுரையுடன்

வை. மு. நரசிம்மன்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பெனி

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

ரூ 9-00

சார்வரி ஸூ
தை மீ, 1
14—1—61

1961

[விலை [illegible]

ஆனந்தாபார்வதி அச்சகம், 30, இடைப்பாளையம் தெரு, சென்னை-3.

முகவுரை

அருந்தமிழன்பர்காள்!

கடைச்சங்கத் தொகைநூல்களுள் ஒன்றாகிய பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம் நீங்கலாக, ஏனைய ஏழனுக்கும் எனது ஆசிரியரும் உரையாசிரியச் சக்கரவர்த்தியு மாகிய ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் சிறிய உரைகண்டுள்ளமை இத்தமிழ்கூறுநல்லுலகம் நன்கறியும். அவர் உரையெழுதாது விடுத்துச்சென்ற ஏனைய மூன்றனுக்கும் உரையெழுதி அக்குறையை நிறைசெய்யவேண்டுமென்ற அவா வுடையேனாயிருப்பதையறிந்து, அவ்வாசிரியரின் திருத்தவப் புதல்வர் ஸ்ரீ. வை. மு. நரசிம்மன் (பொறியியல் வல்லுநர்) என்னைப் பெரிதும் ஊக்கினர். அவ்வூக்கத்தின் பயனாகச் சென்ற மூவாண்டு களில் குறிஞ்சிப்பாட்டு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் இவை யிற்றின் உரையாக்கங்கள் வெளிவந்தன. இவ்வுரைகள் பெரிதும் நச்சினார்க்கினியருரையைத் தழுவியே சென்று, அவருரைப் போக்கினமுகையும் தெளிவுறுத்துவனவாகும். இவ்வாறாக, பத்துப் பாட்டு முழுவதுக்கும் உரை முற்றுப்பெறவே, இவையனைத்தை யும் தொகுத்து ஒரே வெளியீடாகக் கொணரவேண்டுமென்ற எண்ணம் மலர்ந்தது. அதன் விளைவாக, என் ஆசிரியரெழுதிய உரைநூல்களேழும் மீளவும் பதிப்பிக்கப்படவே, அவைகளைப் பார்வையிட்டுச் செம்மையுற ஆக்கியதோடு ஆங்காங்கே எனக்குத் தோன்றிய நுண்ணிய கருத்துக்களையும் சேர்த்து உதவியுள்ளேன். மற்றும், பத்துப்பாட்டினுள், ஒவ்வொரு பாட்டினிறுதியிலும் காணப்படும் வெண்பாக்களுக்கும் உரையெழுதியுள்ளேன். அரும் பதவகராதியும் பயனுறத் தொகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பத்துப் பாட்டில், மலைபடுகடாத்திடத்து என் தந்தையாருக்குத் தனிப்பட்ட பற்றுதலுண்டு. இவ்வுரையாக்கத்தில், குணங்கள் காணப்படின் அவை என் ஆசிரியரின் ஆசியினாலேற்பட்டவை யெனவும்; குற்றங்கள் காணப்படின் அவை என் மந்த புத்தியாலேற்பட்டவை யெனவும் கொண்டமையுமாறு வேண்டுகின்றேன்.

எனது காலத்தையெல்லாம் வீணாக்காமல் தமிழ்த் துறையிற் செலுத்தி, எனக்குத் தோன்றாத்துணையாய் நின்று திருவருள் புரியும் அருட்பெருங்கடலை அநவரதமும் எண்ணியெண்ணி வாழ்த்துகின்றேன்.

சார்வரி ஷு
தை, மீ 1
14—1—61

ஸி. ஜெகந்நாதாசார்யர்.

உள்ளுறை

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்

திருமுருகாற்றுப்படை

முருகக்கடவுளினிடத்து வீடுபெறுதற்குச் சமைந்தான் ஓர் இரவலனுகிய புலவனை ஆற்றுப்படுத்தும் மேன்மையையுடைய நூல் எனப் பொருள்படும். ஆற்றுப்படை - வழியிற் செலுத்துவது என ஏழாம்வேற்றுமைத்தொகை. முருகாற்றுப்படை - முருகனிடத்து ஆற்றுப்படுத்துவது என இதுவும் ஏழாம்வேற்றுமைத்தொகையே.

முருகக்கடவுளின் திருவருளைப் பெற்ருெருபுலவன் எதிரே வந்த மற்ருெருபுலவனுடைய இயல்பைக்கண்டு இரங்கி அவனை நோக்கி, 'முருகக்கடவுள் இன்னஇன்ன இடங்களில் இருப்பார்: இன்னஇன்ன இயல்பை யுடையார்: இப்படியாகப்போய் அவரை இன்னவாறு வழிப்பட்டால் அவருடையதிருவருளைப் பெறலாம்' என்றுகூறி அந்த முருகக்கடவுளிடம் செலுத்தியதாக நக்கீரனுராற் கற்பித்துச் செய்யப்பட்டது, இச்செய்யுள்.

பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை முதலிய ஆற்றுப் படைகளெல்லாம் ஆற்றுப்படுக்கப்பட்டாராற் பெயர் பெற்றிருக்க அம்முறைக்கு மாருக, இந்நூல் பாட்டுடைத்தலைவனுன தெய்வத்தின் பெயரைச்சேர்த்து 'முருகாற்றுப்படை' என்று பெயர்பெற்றதற்குக் காரணம்—'தொல்காப்பியனுர் நிலையற்ற பொருளைப் பெறுவதற்காகக் கூத்தர் முதலியோரையே ஆற்றுப்படுத்தற்கு உரியவராகக் கூறி யுள்ளார். தமது அருந்தமிழ்ப்புலமை அந்நெறியில் வழங்கவேண்டா' என்று மனங்கொண்டு, நக்கீரர் கடவுளிடத்துப் புலவனைச்செலுத்து வதாகப் பெருநோக்கம்படக் கூறியமையேயாகும். ஆகவே, இது மற்றையாற்றுப்படைகள் போல்வதன்றிப் புதுவதாக எழுந்த நூலாகும். இனி, ஆற்றுப்படுக்கப்பட்டவரின் பெயரைக்கொண்டு புலவராற்றுப்படை யெனவும் ஒருகாலத்து வழங்கியது உண்டு என்ப. (முருகனுடைய திருவருளை விரும்புபவர் இதனை நியமத்துடன் பாராயணஞ் செய்வது உண்டு.)

இது, தொல்காப்பியத்துப் புறத்திணையியலுள் "தாவினல் லிசை" என்னுஞ் சூத்திரத்து "ஆற்றிடைக்காட்சி யுறழத் தோன் றிப், பெற்றபெருவளம் பெருஅர்க்கறிவுறீஇச், சென்றுபயனெ திரச் சொன்னபக்கமும்" என்பதனை யொட்டிப் பேறுபெற்ருெ ருருவன் அதனைப் பெருதாெனுருத்தனுக்குப் பெறுமாறுகூறி அவனை வழிப்படுத்துக்கூறுவா னென்றதுபற்றிச் செய்த செய்யுள். ஆகவே, இந்நூற்குத் தொல்காப்பியத்து நேரே விதியில்லை: 'எதுவும் தொல்காப்பியத்துக் கூறியதில் அடங்கும்' என்று சாதிப் பவரான நச்சினுர்க்கினியர், இந்நூலும், "தாவினல்லிசை" என்று தொடங்கும் தொல்காப்பியச்சூத்திரத்து விதியில் அடங்கும் என்று சாதித்துக் கந்தழியைப் பெற்ருெருருவன் அதனைப் பெருதா

னொருவனுக்குப் பெறுமாறு கூறி, அவனை வழிப்படுத்துக்கூறுவா னென்பது பற்றிச் செய்யுள் செய்தாராயிற்று என்றார். "புதியன புகுதலும்...வழுவல" என்பது இலக்கணநூலார்கொள்கை யாத லால், தொல்காப்பியத்து நேரே விதியில்லாமையால் இந்நூற் கேனும், தொல்காப்பியத்திற்கேனும் யாதோ ரிழுக்கும் இன்று. புறப்பொருள்வெண்பாமாலையில், "இருங்கண்வானத்திமையோ ருழைப், பெரும்புலவனை யாற்றுப்படுத்தன்று" என்று இவ்வாறான துறைக்கு விதி கூறியுள்ளார்.

இது செய்தவர் நக்கீரர் என்ப: இவரது இயற்பெயர், கீரனா ரென்பது என்றும், 'ந' என்பது சிறப்புப்பொருளைத் தருவதோ ரிடைச்சொல் என்றும், இவர் தந்தையார் மதுரையிற் பலர்க்கும் நூலையோதுவிப்பவராயிருந்ததனால் மதுரைக்கணக்காயனா ரென்றே பேர் பெற்றார் என்றும், கீரங்கொற்றனாருடைய தந்தை இவர் என்றும் கூறுப. இவருடையகுலம் சங்கறுக்குந்தொழிலைச் செய்து வந்த ஒருவகை வேதியர்குலமென்பது, ஒருசாரார் கொள்கை. அன்னார் 'கீர்கீர்' என்று சங்கினையறுக்கும் அந்தணர்குலத்திற் பிறந்தவராதலால் இப்பெயர் பெற்றார் என்றுங் கூறுவர். நல்ல சொற்களையுடையவர் என்பாருமுளர். கடைச்சங்க காலத்தில் சங்கப் பலகையில்முதலிடம் பெற்றவர் இவரென்ப. நக்கீரனார் நெடுநல் வாடையை இயற்றியவர். நற்றிணையில் 7-உம், குறுந்தொகையில் 8-உம், அகத்தில், 17-உம், புறத்தில் 3-உம் நக்கீரர் இயற்றியன வாகத் தொகைநூல்களுள் உள்ளன. நாலடி நானூறு என்னும் நூலொன்று நக்கீரர் இயற்றினாரென்றும், அடிநூல் என்ற செய்யுளிலக் கணநூலொன்று இயற்றினாரென்றும் யாப்பருங்கலவிருத்தியால் தெரிகின்றது. திருவள்ளுவமாலையில் நக்கீரர் பாடிய பாடல் ஒன்று உள்ளது. நக்கீரர் இறையனாரகப்பொருளுக்கு உரை கண்டுள்ளார். (இப்பொழுது வழங்குகின்ற உரை நக்கீரர் கூறியதனை வரன்முறை யாகப் பாடங்கேட்டு வந்து ஈற்றில் இளம்பூரணர் எழுதிவைத்ததா யிருக்கவேண்டுமென்று ஊகிக்கின்றனர்.*) 11-ஆந்திருமுறையி லுள்ள கைலைபாதிகாளத்திபாதி யந்தாதி முதலிய 9 - பிரபந்தங் களையும், திருக்காளத்தி ஞானப்பூங்கோதை ஸஹஸ்ரநாமம் என்ற வடமொழி நூலொன்றையும் செய்தவர் நக்கீரரென்று கூறுவதும் உண்டு.

"கொங்குதேர்வாழ்க்கை" என்று தொடங்கும் இறையனா ரியற்றிய செய்யுளுக்கு நக்கீரர் குற்றங்கூறி, அச்சிவபிரானால் வாது செய்யமுடியாமல் நெற்றிக்கண்ணைத்திறந்து வெருட்டப்பட்டதனால், உடல்வெந்து பொற்றாமரை வாவியில் வீழ்ந்தபோது அக்கடவுளைக் கோபபிரசாதமென்ற பிரபந்தத்தால் துதித்தன ரென்றுங் கூறுப. நக்கீரனார் சங்கத்து இருந்தகாலத்திலே கொண்டானென்னுங்

---

* இந்த ஊகம் சரியன்றென்பதை எமது நெடுநல்வாடை 3-ஆம் பக்கத்து அடிக்குறிப்பிற் காட்டியுள்ளமை காணவும்.

குயவன் மதுரைப்பட்டிமண்டபத்தில் [பட்டிமண்டபம் - வித்தியா மண்டபம்] வந்து 'வடமொழியே சிறப்புடையது: தென்மொழி இழிந்தது' என்று இழித்துக் கூற, அவனை இவர் "முரணில் பொதியின் முதற்புத்தேள்வாழி, பரணகபிலரும் வாழி - அரணிலா, ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான், ஆனந்தஞ் சேர்க சுவாகா" [ஆனந்தம் - மரணம்] என்று கூறலும், அவன் இறந்தானாக, அதனைக்கண்ட அங்கிருந்த மறையோர்வந்து இவரை வேண்டியதனால் "ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த, காரியத் தாற் காலக்கோட் பட்டானைச்-சீரிய, அந்தண் பொதியி னகத்தியனு ராணையினாற், செந்தமிழே தீர்க்க சுவாகா" என்று ஒரு வெண்பா வைப் பாடி மீள அவனை உயிர்ப்பித்தன ரென்பர். இவர், ஈங்கோய் மலையெழுபது என்னும் நூல் இயற்றியதுபற்றி முற்காலத்து அரச னொருவன் ஈங்கோய்மலைக்கோயிலில் இவருடைய திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து பூசைநடத்தற்கு நிபந்தமுமேற்படுத்தி வைத் துள்ளானென்று அத்தலத்துச் சிலாசாசனமொன்று கூறுகின்ற தென்ப. (திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி புக்கத்தே நக்கீரருருவம் இருக்கின்றதென்கின்றனர்: மதுரையில் மேலைமாசி வீதியின் மேற்சிறகிலே இவருடைய கோயிலொன்று உள்ளது; அது சங்கத்தார்கோயி லெனவும் வழங்கும்.)

* ஆராய்ச்சி:—நக்கீர ரியற்றினாரென்று சொல்லப்படும்வற்றுள் பதினோராந் திருமுறையிற் சேர்ந்த (1) கைலைபாதிகாளத்திபாதி யந்தாதி, (2) திருவீங்கோய்மலை யெழுபது, (3) திருவலஞ்சுழி மும் மணிக்கோவை, (4) திருவெழுகூற்றிருக்கை, (5) பெருந்தேவபாணி, (6) கோப பிரசாதம், (7) காரெட்டு, (8) போற்றித்திருக்கலிவெண்பா, (9) கண்ணப்பதேவர் திருமறம் என்ற ஒன்பது நூல்களும், அவற்றி லுள்ள வடசொற்களினளவு, கையாளப்பட்டுள்ள நடை முதலிய எவ்வகையை நோக்கினாலும் சங்ககாலத்துக்கு மிகவும் பிற்பட்டவை யென்பது கற்றோரால் மனமாரத் தெள்ளிதினுணரலாகும்: ஆகவே, நக்கீரதேவநாயனார் சங்ககாலத்தவரான நக்கீரரல்லர்: வேறொருவ ரென்பது தெளியலாம்: பதினோராந்திருமுறையைச் சேர்ந்ததான நக்கீரதேவநாயனார் செய்த திருவெழுகூற்றிருக்கை யாப்பருங்கல விருத்தியி லெடுத்தாளப்பட்டிருத்தலால், அன்னார் பதினோராம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் எனவும், கண்ணப்பரின் அன்பிற்குத் தலைமை கொடுத்திருத்தலால் மாணிக்கவாசகர் காலமாகிய ஒன்ப தாம் நூற்றாண்டினராயிருக்கலாமெனவும் நக்கீரதேவ நாயனாரைப் பற்றி ஒருசார் ஆராய்ச்சியாளர் ஊகிக்கின்றனர்.

---

* இவ்வாராய்ச்சியிற் காட்டப்பெறும் பொருள்களுட் பல, ஸ்ரீசென்னை அட்வகேட் T. G. ஆராவமுதய்யங்கார் ஆங்கிலத்தில் எழுதிய Tamil Tradition - Two Studies என்ற ஆராய்ச்சிநூலிற் காணப்படுவனவும், சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்த்துறைப் புலவராயிருந்த ராவ்ஸாஹெப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் பதிப் பித்த திருமுருகாற்றுப்படையின் முன்னுரையிற் கண்டனவுமாம்.

அகநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்களிற் சில செய்யுள்களையும் பத்துப்பாட்டைச்சேர்ந்த நெடுநல்வாடை என்ற நூலையும் செய்தவர்—சங்ககாலத்தவரான நக்கீரனாரென்பதற்கு மாறுகூறுபவர் எவருமில்லை: இனி, 'பத்துப்பாட்டுஎன்ற தொகை நூலுக்குக் கடவுள்வாழ்த்துப்போன்று முதலதாக அமைந்ததும், பதினோராந் திருமுறையைச் சேர்ந்ததுமாகிய திருமுருகாற்றுப் படையை யியற்றியவர் சங்ககாலத்தவரா? அன்றிப் பதினோராந் திருமுறையில் கைலைபாதிகாளத்திபாதியந்தாதி முதலியன இயற்றிய நக்கீரதேவ நாயனாரா?' என்று ஒருகேள்வி யெழுகின்றது. இதற்கு ஒருசார் ஆராய்ச்சியாளர் அவ்விருவரு மல்லர்: இவர் வேறொருத்தராக இருக்கவேணும் என்று காரணங்காட்டுவர்: அக்காரணம் வருமாறு:—திருமுருகாற்றுப்படையில் (1) 'தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார், மனனேர் பெழுதரு வாணிற முகனே" (89-90) என்றவிடத்து "மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கைக், காலக்கிளவியோடு முடியுமென்ப" என்ற தொல்காப்பிய வினையியற் சூத்திரத்துக்கு மாறாக, முடிமார் என்பது முடிப்பவருடைய என்ற பொருளில் வந்ததும், (2) "ஒன்பதிற்றிரட்டியுயர்நிலைபெறீஇயர்" (வரி-168) என்றவிடத்துப் பெறீஇயர் என்பது எச்சப்பொருளிலேனும் வியங்கோட்பொருளிலேனும் வாராது பெற்றவர் என்ற பொருளில் வந்ததும், (3) "பெறலரும் பரிசில் நல்குமதி" (வரி-295) என்ற இடத்து, முன்னிலையசைச்சொல்லாக வரவேண்டிய 'மதி' என்பது படர்க்கையில் வந்ததும்-மற்றையோரியற்றிய சங்க இலக்கியங்களிலும், சங்கப்புலவரான நக்கீரரியற்றிய அகநானூறு முதலிய தொகைநூற்செய்யுள்களிலும் நெடுநல்வாடையிலும் காணப்படாதனவே. இங்ஙன் தொல்காப்பியத்திற்கு மாறாகவும், சங்கச்சான்றோர் செய்யுட்களின் வழக்கிற்கு வேறாகவும் இருத்தல், திருமுருகாற்றுப்படையியற்றிய நக்கீரர் சங்ககாலத்தவரல்லரென்பதைக் காட்டும் முதற்காரணம். அன்றியும், சங்ககாலத்து நக்கீரர் உலகியல் வாழ்க்கையில் விருப்பினராய் வள்ளல்களையும் அரசர்களையும் பாடிப் பரிசு பெற்று அதனால் தம் வாழ்க்கையை நடத்துபவராக இருக்க, இந்தத் திருமுருகாற்றுப்படையியற்றிய நக்கீரர் உலகவாழ்க்கை நசையொழிந்து வீட்டு நசை பொருந்திக் கடவுளை வழிபட்டு அவன் நல்லருள்பெற்று உலகோரையும் அவ்வழியிற் செலுத்துபவராய்க் காண்கின்றார். இது, இரண்டாவது காரணம். இனி, 'பத்துப்பாட்டுள் முதலதாகிய திருமுருகாற்றுப்படை சங்ககாலத்திற்குப் பிற்பட்டதெனல் ஏற்குமோ?' என்று ஒரு சங்கை யெழலாம். இறையனார்களவியலுரையில் சங்கத்தைப்பற்றிக் கூறுமிடத்துப் பத்துப்பாட்டு என்பது வழங்காமையும், முழுதுங் கிடைத்துள்ள இந்தப்பத்துப்பாட்டைத் தொகுத்தார் தொகுப்பித்தார் இன்னார்இன்னார் என்று அறியப்படாமையும், பாட்டு என்பதே பிற்காலத்தது என்பதைக் குறிப்பித்தலும், இது சங்ககாலத்ததன்று என்பதைத் தெரிக்கும். ஆயினும், மயிலைநாதருரையில் பத்துப்பாட்டு பதினெண்கீழ்க்கணக்கு என வருத

லால், இந்தப் பத்துப்பாட்டு என்ற தொகைநூல்வழக்கு பதினேராம் நூற்றுண்டுக்கு முற்பட்ட தாகுமென்ப: ஆனல், சங்ககாலத்து நக்கீரர் மூன்றும் நூற்றுண்டினராயிருக்க, இந்தத் திருமுருகாற்றுப் படையை யியற்றிய நக்கீரருடைய காலம் சங்ககாலத்தை யடுத்து ஐந்து அல்லது ஆரும் நூற்றுண்டாக விருக்கலாம். திருமுருகாற்றுப்படையின் நடையும் சங்ககாலத்தை யொட்டியகாலத்ததென் பதை யுணர்த்தும்: ஆகவே, இவர் பதினேராந்திருமுறையில் கைலை பாதிகாளத்தியந்தாதி முதலிய நூல்களை யியற்றியவரினும் வேருவர். சமணமதத்து நூலான *நாலடிநானூறு என்பதையும், செய்யு ளிலக்கண நூலான அடிநூலையும், இறையனர்களவியலுரையை யும் இயற்றியவர், முன்னையவர்களினும் வேருன ஒரு நக்கீரராக இருக்கக்கூடும். நாலடி நானூற்றில்வரும் பெருமுத்தரையர் காலமும், களவியலுரையிலெடுத்தாளப்பட்டுள்ள பாண்டிக்கோவையின் காலமும் ஏழாம் நூற்றுண்டு எனப்படுதலால், வேருன இந்த நக்கீரர் காலமும் ஏழாம் நூற்றுண்டாக இருக்கலாம். ஆகவே, நக்கீரர் என்ற பெயருள்ளவர் நால்வர் இருந்திருக்கலா மென்பர்.

பத்துப்பாட்டுக்களாவன :—திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணுற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இந்தத்திருமுருகாற்றுப்படை, 317 - அடிகளைக்கொண்ட ஆசிரியப்பாவால் இயன்றது.

திருமுருகாற்றுப்படை தோன்றியதைப்பற்றி வழங்கும் வரலாறு வருமாறு:—பாண்டியநாட்டில் மதுரைநகரிலே சரசுவதியினவதாரமாகி உலக முழுதும் தம்புகழ்நாட்டிய நக்கீரனர்முதலிய பெரும் புலவர்கள் இறையனரோடு இருந்து தமிழாராயலாயினர். அப்போது "கொங்குதேர் வாழ்க்கை" என்ற பாடலைப்பற்றி முரண்பட்டதனல் நக்கீரனர் தொழுநோயால் வருந்துமாறு இறைவனராற் சபிக்கப்பெற்றுர். அந்த இறைவனரின் மொழிப்படி அச்சாபம்நீங்க, நக்கீரர், கைலையை நோக்கிப் பயணமாகித் தமதுகால்கள் வெள்ளெலும்பாகத்தேய இமய மலையை யடைந்தார். அடைந்து, செல்லும் வழியிலே கடலையொத்த

*பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நான்மணிக்கடிகை முதலிய மற்றை நூல்களையெல்லாம் ஒவ்வோராசிரியர் செய்தவராக இருக்க நாலடிநானூற்றைச் சமணமதத்தவர் பலர் செய்தாரென்பது சரியன்று என்றும், யாப்பருங்கலவிருத்தியில் நாலடிநானூறு என்று ஒன்று நக்கீரர் இயற்றியதாக வருவதாலும், அந்த நாலடியில் ஏழாம் நூற்றுண்டிலிருந்த பெருமுத்தரையரைப்பற்றிக்கூறியிருத்தலாலும், இறையனரகப்பொருளுரையில் ஏழாம் நூற்றுண்டினதான பாண்டிக்கோவையிலிருந்து மேற்கோள்கள் வருவதாலும், சமண மதத்தினராய் ஏழாம் நூற்றுண்டினராய் ஒரு நக்கீரரிருந்திருக்கலா மென்பது ஒருசார் ஆராய்ச்சியாளரின் ஊகம்.

*ஓர் தடாகத்தைக் கண்டு நீராடிச் செய்கடன் முடித்துக் கரையி லிருந்த ஆலமரத்தடியில் தியானத்தி லமர்ந்திருந்தனர். அச்சமயத் திலே, அம்மரத்திலிருந்து ஓரிலை பாதி நீரிலும் பாதி கரையிலுமாக விழ, சலத்தில்விழுந்த பாகம் மீனும் கரையில்விழுந்த பகுதி பறவையுமாகி மீன் நீரிலும் பறவை கரையிலுமாக இழுக்க, நக்கீரர் அப்புதுமையைக் கண்டு தியானநிலை தவறினர். அச்சமயம் பார்த்து ஒருகரிய பூதம் இவரைப் பிடித்துத் தூக்கிக் கொண்டுபோய்ச் சிவ பூசையாதிகளில் தவறினவர்களாய் முன்னர் இருட்குகையில் அடைத்துவைத்திருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன் பதின்மரோடு சேர்த்து ஆயிரவராக்கி, 'இனி இவர்களை யுண்ண லாம்' என்று கருதி, தன்நியமத்தை முடிக்க நீராடுதற்குச் சென்றது. அப்போது அந்தக்குகையிலிருந்தவர்கள் தமது புண்ணியமுதிர்ச் யால் நக்கீரர் வந்தனரென்று உணராமல், 'பூதம் தான் எண்ணிய சங்கியை நிரம்பாமையால் நாங்கள் இதுவரையிற் சிறையிலகப்பட் டிருந்தாலும், உணவுமுதலியன பெற்றுச் சுகித்திருந்தோம்; இன் றைக்கு இரையாங்காலம் சமீபித்தது' என்று அஞ்சிநடுங்கிக் கூறி னர். நக்கீரர் அவர்கள்மீது கருணைகொண்டு, 'முருகக்கடவுளை வழிப் பட்டால் நமது துயரம் நீங்கும்' என்று கருதி அக்கடவுளைக் குறித்து 'திருமுருகாற்றுப்படை' என்னும் பிரபந்தத்தை அருளிச்செய்தார். அப்போது முருகக்கடவுள், புலவர் பெருமானுக்கு முன்னே தோன்றி அவரையுண்ணவந்த பூதத்தைக் கதாயுதத்தால்மோதி முடியைத் தகர்த்துக் கொன்று யாவரையுஞ் சிறைவிடுத்துத் திருவருள் சுரந்தன ரென்பது.

இவ்வரலாற்றைப்பற்றிய ஆராய்ச்சி வருமாறு:—இங்குக் காட்டிய வரலாற்றில் இரண்டுஅமிசங்கள் அமைந்துள்ளன: ஒன்று - இறை யனாரோடு வாதாடிச் சாபம் பெற்று அது நீங்க முயன்றமை: மற் றொன்று-நியமந் தவறிப் பூதத்தின்கையிலகப்பட்டு இருட்குகையில் அடைக்கப்பெற்று ஏற்கனவே அடைக்கப்பெற்றவரோடு தம்மையும் விடுவித்துக் கொண்டமை. தருமிக்குப் பொற்கிழியளிக்க "கொங்கு தேர் வாழ்க்கை" என்ற பாடலை இறையனார் இயற்றித் தந்தது குறித்து, "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி, நற்கனகக் கிழி தருமிக் கருளினோன்காண்" எனத் திருநாவுக்கரசுசுவாமிகள் தேவா ரத்தும், "பொதியப்பொருப்பன் மதியக்கருத்தினைக், கொங்குதேர் வாழ்க்கையைச் செந்தமிழ்கூறிப், பொற்குவை தருமிக் கற்புட னுதவி" என்று கல்லாடத்தும் நக்கீரனைப்பற்றிய பிரஸ்தாபம் இல் லாமலே கூறப்பட்டுள்ளது: ஆனால், நக்கீரரையும் "கொங்குதேர் வாழ்க்கை" என்ற பாசுரத்தையும் உளப்படுத்து முதன்முதலிற் கூறப்பட்டிருப்பது, பதின்மூன்றும் நூற்றாண்டினதாக ஒருசாராரால் கருதப்படும் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்திலே

---

*சீகாளத்திப்புராணத்துக் கண்டது, இவ்வரலாறு: இது திருப் பரங்குன்றத்து நிகழ்ந்ததாகத் திருவாலவாயுடையார் திருவிளை யாடற்புராணம் கூறும்.

*தான்: திருமுருகாற்றுப்படையை நக்கீரனாரியற்றியது குறித்த வரலாறும் அத்திருவிளையாடற்புராணத்தே காணப்படினும், அப்பாடல்கள் இடைச்செருகலெனத் தோன்றுமாறு அமைந்துள்ளன: பதினைந்தாம் நூற்றாண்டினராக் கூறப்படும் அருணகிரிநாதருடைய வாக்கில் "கீரனுக்குகந்து***உலகமுவப்பவென்று னருளா லளிக்குகந்த பெரியோனே", "மலைமுகஞ் சுமந்த புலவர் செஞ்சொல்கொண்டு வழி திறந்த செங்கை வடிவேலா" என்ற இடங்களில் திருமுருகாற்றுப் படையியற்றிய வரலாற்றைச் சிறிது காணலாம். பின்னிட்ட நூல்களில் இவை பலவிடத்துக் காணப்படுகின்றன.* இவைகளைப்பற்றி யாராயின், நக்கீரனாரின் பெருமையை மிகுத்தவேணுமென்று விரும்பியவரின் புனைந்துரையே யாகும் இவை யென்பது பெறப்படும்.*

நூல்

முருகக்கடவுளின் அருளைப்பெற்ற ஒருவன், அக்கடவுளினிடத்து ஆற்றுப்படுத்தக் கருதியவனைநோக்கி, " நீ குமரக்கடவுளின் சேவடியைப் படரும் உள்ளத்தோடு அவனைநோக்கிச் செல்லவிரும்பினால், உன்கருத்து இனிது நிறைவேறும்' என்று முதல் **66** - அடிகளாற் கூறுகின்றான்:—

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்

பதவுரை:—(1) *உலகம் உவப்ப - உலகத்துவாழும் உயிர்கள் மகிழும்படி, ஏர்பு - எழுந்து, வலன் திரிதரு - (மகாமேருவை) வலமாகச் சுற்றுகின்ற, (2) பலர் புகழ் - (தனது ஒளியால் காட்சியின் பயனைக் கொள்வார்) பலரும் புகழ்கின்ற, ஞாயிறு - சூரியன், கடல் கண்டாஅங்கு - கடலினிடத்தே கண்டாற்போல, (3) ஓ அற*

**உதாரணமாக, திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழில் "ஏர் கொண்ட பொய்கைதனில் நிற்குமொரு பேரரசின் இலைகீழ் விழிற் பறவையாம், இதுநிற்க நீர்விழிற் கயலாமி தன்றியோ ரிலையங்கு மிங்குமாகப், பார்கொண்ட பாதியும் பறவைதா னாகவப் பாதியுஞ் சேலதாகப், பார்கொண் டிழுக்கவது நீர்கொண் டிழுக்கவிப் படி கண்ட ததிசயமென, நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய் நெடும்பூத மதுகொண்டுபோய், நீள்வரை யெடுத்ததன் கீழ் வைக்கு மதுகண்டு நீதிநூல் மங்காமலே, சீர்கொண்ட நக்கீரனைச் சிறை விடுத்தவா செங்கீரை யாடியருளே, திரையெறியும் அலைவாயுகந்தவடி வேலனே செங்கீரை யாடியருளே" என்றது காண்க.*

இமைக்கும் - (கட்புலன் சென்று) தங்குதல் இல்லையாகுமாறு இமைத்துப்பார்த்தற்குக் காரணமானதாகி, சேண் விளங்கு - நெடுந்தூரஞ் சென்று பிரகாசிக்கின்ற, அவிர் ஒளி - விளங்குகின்ற ஒளியினையும், (4) உறுநர் தாங்கிய - (தன்னைச்) சார்ந்தவர்களைத் (தீவினையைப்போக்கித்) தாங்கின, மதன் உடை - அறியாமையை யுடைத்தற்குக் காரணமான, நோன் தாள் - வலிய தாளினையும்,—(5) செறுநர் தேய்த்த - அழித்தற்கு உரியவரை யழித்த, செல் உறழ் - இடியோடு மாறுபட்ட, தட - பெருமையையுடைய, கை - கையினையுமுடைய, (6) மறு இல் கற்பின் வாள் நுதல் கணவன் - குற்றமில்லாத கற்பினையும் ஒளி பொருந்திய நெற்றியையுமுடைய ளான தெய்வயானையாரின் கணவன்,—(எ - று.)

விசேடவுரை:—நான்குதொடர்களால் முருகக்கடவுளின்சிறப் பைத் தெரிவிக்கக்கருதிய ஆசிரியர் முதற்கண் கூறிய தொடராகும், இது. இத்தொடரால் முருகக்கடவுளின் தோற்றப் பொலிவைக் கூறுகிருர்.

(3) ஒளியினையும் (4) தாளினையும் (5) கையினையுமுடைய (6) கணவன் என்க. மறுவில் கற்பின் வாணுதல் கணவன்என்பது, இங்கே முருகனென்னும் பெயர் மாத்திரமாய் நின்றது; இப்பெயரை முற்கூறியது, படைத்தற்கும் காத்தற்கும் உரிமை தோன்ற.

1—3: சூரியன் எழுந்து மேருவை வலமாகத் திரிகின்ருனென் பதை, "ஞாயிறுபோற்றுதும்...மேருவலந் திரிதலான்" என்னுஞ் சிலப்பதிகாரமங்கலவாழ்த்துப்பாடலாலும் உணர்க. ஞாயிறு உலகத் துப் பலராலும் புகழப்படுமென்பதை, "முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி, யேமுறவிளங்கிய சுடர்," "தயங்கு திரைப் பெருங்கட லுலகுதொழத் தோன்றி, வயங்குகதிர் விரிந்த வுருகெழு மண்டிலம்," "பலர்புகழ் ஞாயிறு படரினல்லதை" என்பவற்றிலு முணரலாம். கண்டாங்கு என்ற உவமம், தொழிலும் வண்ணமும் பற்றிவந்தது:ஞாயிறு இருளைக் கெடுக்குமாறுபோலத் தன்னைமனத் தால் தியானிப்பார்க்கு முருகக்கடவுள் மாயையைக் கெடுப்பானென் பது தோன்றக் கூறியதனுல் தொழிலுவமமாயிற்று: (1) உவப்ப ஏர்புதிரிதரு (2) ஞாயிற்றைக் கடற்கண்டாஅங்கு (3) அவிரும் ஒளி என்று இவ்வுவமையில் முடிபு காண்க. அன்றியும் தன்னைக் கட்புல ஞல் நோக்குவார்க்குக் கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும் போல மயிலிற் பசுமையும் திருமேனியின் செம்மையுமுடையவ னென்பது தோன்றக் கூறியதனுல் வண்ணவுவமமும் ஆயிற்று. ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு சேண்விளங்கு ஒளியென இந்த உவமையில் முடிபு காண்க. 'மாக்கடனிவந்தெழு செஞ்ஞாயிற்றுக் கவினை" என்பது, புறநானூறு. ஓவுதல் - தங்குதல். இமைத்தல் - கண் இமைகளிரண்டினையும் குவித்தல். ஒளியின் மிகுதியால் கண்ணை மலர்த்தினபடியே காணமுடியாது இமைத்துப்பார்க்கும்படி முருகக்கடவுளின் திருமேனி ஒளிவிஞ்சியிருக்கு மென்க. இனி, ஓவு அற-ஒழிதலில்லாமல், இமைத்தல் விட்டுவிளங்குதலென்பாரு

மூளர். உலகம் என்பது - இங்கே ஆகுபெயராய், உலகத்திலுள்ள சீவான்மாக்களை யுணர்த்தும். வலன்-வலம் என்பதன்போலி. ஏர்பு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். வலனேர்பு என்பதை வலன் நேர்பு என எடுத்து, நேர்பு - நேராக என்பாருமுளர். ஓ என்பது - ஓரெழுத்தொரு மொழியாகிய முதனிலைத் தொழிற்பெயர். ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி - ஒழிவில்லாமல் [எக்காலத்தும்] விளங்குவதாகி, வாக்கு மனங்களையும் கடந்த தூரத்திலே விட்டு விளங்காநின்ற ஒளி: சூரிய சந்திரருடைய ஒளி செல்லாமல் இயல்பான ஒளியையுடைய நாட்டிலே அகமும் புறமு மாகிவிட்டுவிளங்காநின்ற ஒளியெனினுமாம்.

முதலடி ஆசிரியத்துள்ளே பிறதளை விரவி வருதற்கும், தாஅவண்ணத்திற்கும் மேற்கோளாம். தாஅவண்ணம் இன்ன தென்பதை "தாவண்ண, மிடையிட்டுவந்த எதுகைத்தாகும்" என்பதனாலறிக.

4.—உறுநர், ந் - பெயரிடைநிலை. மதன் = மதம்: இலக்கணை யால், அறியாமையைக் காட்டும்: அகங்காரமமகாரங்களாகிய செருக்கு என்றலும் உண்டு. நோன் - வலிமை. உடைதாள் - வினைத் தொகை. மதனுடை - அழகையுடைய எனினுமாம்: இப்பொருளில், உடை - உடைய என்ற குறிப்புப்பெயரெச்சத்தின் விகாரம். 5.— செறுநர் - (தனது அருள்வழி நில்லாது) மாறுபட்டவருமாம். செறு நரைத் தேய்த்தலில், கைக்கு இடி உவமையாம். இனி செல் - மேகமெனக்கொண்டு, தன்னையடைந்தார்க்கு உதவுவதால்வந்த உவமையெனக்கூறுதலுமுண்டு: இது பயனுவமம். 6.—மறு இல் கற்பு - அறக்கற்பு: மறக்கற்பு அறக்கற்பு எனக் கற்பில் இருவகை யுண்டு: மறக்கற்பு - சீறிய கற்பென்றும், கொடுங்கற்பு என்றுங் கூறப்படும்: (இக்கற்பு சிலப்பதிகாரத்தின் கதாநாயகனாகிய கோவல னுடைய மனைவி கண்ணகிபாற் காணப்பட்டது.) அறக்கற்பு - ஆறியகற்பென்றும், அருட்கற்பென்றுங் கூறப்படும்: (இது - ராமா யணகதாநாயகனாகிய ஸ்ரீராமனுடைய மனைவி சீதைபாற் காணப் பட்டது.)

> கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
> வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
> தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து
> இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
> உருள்பூந் தண்டார் புரளு மார்பினன்

பதவுரை:—(7) கார்கோள் முகந்த-கடலிலே முகந்ததனாலான, கமம் சூல்-நிறைவினையுடைய கருவினைக்கொண்ட, மா மழை-கருமை யுடைய மேகமானது, (8) வாள் போழ் விசும்பில்-சந்திரசூரியர்கள் (இருளை) நீக்குகின்ற ஆகாயத்தினிடத்தே, வள் உறை - பெருமை யுடைய நீர்த்துளியை, சிதறி - (முற்பட) வீசி, (9) தலைப்பெயல் தலைஇய - (கார்காலத்து) முதற்பெயலைச்சொரிந்துவிட்ட, தண் நறுங் கானத்து - குளிர்ந்த நறுமணமுள்ள காட்டினிடத்தே, (10)

இருள் பட பொதுளிய பருஅரை மராஅத்து - இருட்சி யுண்டாகத் தழைத்த பருத்த அடியையுடைய செங்கடம்பினது, (11) உருள் பூ - தேருருள்போன்ற [வட்டமான] பூவால்தொடுக்கப்பட்ட, தண் தார் - குளிர்ந்தமாலை, புரளும் - அசையப்பெற்ற, மார்பினன் - மார்பை யுடையவன்,—(எ-று.)

விசேடவுரை:—இத்தொடரால் முருகக்கடவுளின் போகத்துக்கு உரிய தாரினைக் கூறுகிறார்.

(7) மழை (8) சிதறித் (9) தலைஇய கானத்து (10) மராஅத்து (11) பூந்தார் புரளும் மார்பினன் என்று முடிபுகாண்க. இவ்வடிகள், முருகக்கடவுள் கடப்பம்பூமாலையையணிந்துள்ளமையைக் கூறும். மேகம் கடலின் நீரை முகந்து கருக்கொண்டு பின்பு மழையாகப்பெய்யு மென்று கூறுவது, கவிசமயம்: "முழங்கு கடன்முகந்த கமஞ்சூன் மாமழை" என்றதுங் காண்க. மேகம் மழைபொழிதலாற் குளிர்ந்து பூத்து நறும்மணம்வீசுகின்ற காட்டினிடத்துத் தோன்றுஞ் செங்கடம்பின் பூமாலையை முருகக்கடவுள் அணிந்துள்ளன னென்க. மார்பில் தார் போகத்திற்குஉரியது என்பர்: இதனை முற்கூறியது, கீழ் (6) 'வாணுதல்கணவன்' என்றதனை நோக்கி. கடம்பு கார்காலத்து மலர்வ தென்பதும், அதன்மலர் முருகக் கடவுட்கு உரியதென்பதும் "காரலர் கடம்பன்", "கார் நறுங்கடம்பின்...முருகன்" என்பவை முதலிய வற்றாற் பெறப்படும்.

7.—கார்கோள் - காரினால் [மேகத்தினால்] கொள்ளப்படுதலை யுடையது: கடல்: வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை: இதனை, ஆகுபெயரென்பர் நச்சினார்க்கினியர். கமம் - நிறைவுப் பொருளை யுணர்த்தும் உரிச்சொல். 8.—வாள் - ஒளி: இச்சொல், ஆகுபெயராகி, ஒளியைத்தருஞ் சூரியசந்திரரை யுணர்த்திற்று. வாள் போழ் விசும்பின் வள் உறை சிதறி என்பதற்கு - (சந்திராதித்தருடைய) ஒளியைப் போழ்ந்து [நீக்கி] ஆகாயத்திலே வளவிய துளிகளைச் சிந்தி என்றுமாம். 9.—தலைதல் - மழை பெய்துவிடுத லென்ற பொருளதாதலை "தலையலென்பது மழை பெய்துவிடுதல்" என்ற திவாகரத்தாலும் அறிக. இனி, தலைஇய என்பதற்கு, தழைத்தஎன்று உரைப்பாருமுளர். (10) பொதுளிய - நெருங்கியஎனினுமாம். பருமை+அரை=பராரை: மரூஉ முடிபு. உருள்பூ-உவமைத்தொகை: இனி, வினைத்தொகையாக்கி, உருண்டபூ அல்லது உருளும்பூ என விரித்தலுமாம். உருள்போன்ற [திரண்ட] தார் என்று கூட்டுதலும் ஒன்று.

மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்

சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதன்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதி னொள்ளிணா ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்

பதவுரை:—(12) மால் வரை நிவந்த-பெருமையையுடைய மூங்கில் வளர்ந்த, சேண் உயர் - தேவருலகளவாக வுயர்ந்துள்ள, வெற்பில் - மலையிலே,—(13) கிண்கிணி கவைஇய ஒள் செம் சிறு அடி - சிறு சதங்கைசூழ்ந்த ஒள்ளிதாகிய சிவந்த சிறிய அடியினையும், (14) கணை கால் - திரண்ட காலினையும், வாங்கிய நுசுப்பின் - வளைந்தசைகின்ற இடையினையும், பணை தோள் - பெருமையையுடைய தோளினையும், (15) கோபத்து அன்ன தோயா பூந்துகில் - இந்திரகோபத்தை [பட்டுப்பூச்சியை] யொத்த நிறம்பிடியாத [இயல்பான சிவப்பாகிய] பூத்தொழிலினையுடைய பட்டாடையையும், (16) பல் காசு நிரைத்த சில் காழ் அல்குல் - பலமணிகள்கோத்த எழுவடமாகிய மேகலையை யணிந்த இடையினையும், (17) கை புனைந்து இயற்று கவின் பெறு வனப்பின் - (ஒருவருடைய) கையினாற் சிறப்பித்துப் பிறப்பியாத [தெய்வத்தன்மையான] அழகை (த் தமக்கு இயற்கையாக)ப் பெற்ற அழகினையும், (18) நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர் இழை - நாவலோடு அடுத்துப் பேர்பெற்ற [சாம்பூநதமென்ற] பொன்னாற் செய்யப்பெற்று விளங்குகின்ற ஆபரணத்தையும், (19) சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனி - சேய் நிலத்தை [வெகுதூர

மான இடத்தை]க் கடந்து விளங்குகின்ற குற்றந் தீர்ந்த வடிவையு முடைய, (20) துணையோர் - தோழிமார், ஆய்ந்த - நன்றென்று ஆராய்ந்த, இணை - கடை யொத்த, ஈர் ஓதி - நெய்ப்பினையுடைய மயிரிலே, (21) செங்கால் வெட்சி -சிவந்ததாளையுடைய வெட்சியின், சிறுஇதழ் - சிறியமலர்களை, இடை இடுபு-நடுவிலே (விடுபூவாகச்) சிதறி, (அதற்குநடுவே), (22) பைந் தாள் குவளை தூ இதழ் கிள்ளி - பசிய தண்டினையுடைய குவளையினது தூய இதழ்களைக் கிள்ளி யிட்டு, (23) தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின் வைத்து - தெய்வ வுத்தியோடு வலம்புரிவடிவாகச்செய்த தலைக்கோலத்தையும் (வைத் தற்குஉரிய) இடத்தேவைத்து, (24) திலகம் தைஇய தேம் கமழ் திரு நுதல்-திலகமிட்ட மணம் நாறுகின்ற அழகினையுடைய நெற்றியி னிடத்தே, (25) மகரம் பகு வாய் - சுறுவினது அங்காந்த வாயாகப் பண்ணின தலைக்கோலத்தை, தாழ - தங்குமாறு, மண்ணுறுத்து - அலங்கரித்து, (26) துவர முடித்த துகள் அறு முச்சி-(வேண்டுவன கூட்டி) முற்ற [செவ்வனே] முடித்த குற்றம் அறுகின்ற கொண்டை யிலே, (27) பெரு தண் சண்பகம் - பெரிய குளிர்ந்த செண்பகப் பூவை, செரீஇ - செருகி,—கரு தகடு - கரிய புறவிதழினையும், (28) உளை - (மேலில்) துய்யினையுமுடைய, பூ - மலர்களைக்கொண்ட, மருதின் - மருதினது, ஒள் இணர் - ஒள்ளிய பூங்கொத்துக்களை, அட்டி - (அதன்மேலே) இட்டு, (29) கீழ் நீர் கிளை கவின்று எழுதரு- நீர்க்கீழுள்ள (பச்சென்ற) கிளையினின்று அழகுபெற்று மேலே போந்துதோன்றுகின்ற, செவ் அரும்பு - சிவந்த அரும்பை, (30) இணைப்பு உறு - கட்டுதலுறுகின்ற, பிணையல்-மாலையை, வளை இ - (கொண்டையை) வளையச்சூட்டி,—துணை தக - (தம்மில்) ஒத்திருத் தற்குப் பொருந்த, (31) வள் காது - வளவிய காதிலே, நிறைந்த - நிறைய இட்ட, பிண்டி ஒள் தளிர் - அசோகினது ஒள்ளிய தளிர், (32) நுண் பூண் ஆகம் - நுண்ணிய பூணையுடைய மார்பிடத்தே, திளைப்ப - அசையாநிற்க,—திண் காழ் (33) நறுங் குறடு-திண்ணிய வயிரத்தையுடைய நறிய சந்தனக்கட்டையை, உரிஞ்சிய - தேய்த்த, பூங் கேழ் தேய்வை - பொலிவினைக் கொண்ட நிறத்தினையுடைய குழம்பை [சந்தனக் குழம்பை], (34) தே கமழ் மருது இணர் கடுப்ப- மணங்கமழ்கின்ற மருதம்பூவை யப்பிணலொப்ப, கோங்கின் (35) குவி முகிழ் இள முலை கொட்டி - கோங்கினது குவிந்த அரும்பையொத்த இளமுலையிலே யப்பி,—(அந்தச் சந்தனக் குழம்பின் ஈரம் புலர்வ தற்கு முன்னே), விரி - மலர்ந்த, மலர் - மலர்களையுடைய, (36) வேங்கை - வேங்கைப் பூவினது, நுண் தாது - நுண்ணிய தாதினை யும், அப்பி - (அதன்மேலே) அப்பி, (இவ்வாறு அலங்கரித்ததனால்) காண்வர - அழகு பொருந்த,—(37) வெள்ளில் குறு முறி கிள்ளுபு தெறியா - விளவினது சிறியதளிரைக் கிள்ளி (ஒருவர் மேலொருவர்) தெறித்து, (38) கோழி ஓங்கிய - கோழியி னுருவத்தை(த் தன்னி டத்தே) கொண்டு உயர்ந்துள்ள, வென்றுஅடு விறல் - வஞ்சியாது, எதிர்நின்று அடுகின்ற வெற்றியைத்தெரிவிக்கின்ற, கொடி-கொடி, (39) 'பெரிது வாழிய - நெடுங்காலம் வாழ்வதாக,' என்று - என்று

சொல்லி, ஏத்தி - வாழ்த்தி, (39) சூர் அரமகளிர் (41) பலர் - கொடுமையையுடைய தெய்வமகளிர்பலர், உடன் - ஒருசேர(க் கூடி), (40) சீர் திகழ் சிலம்பகம் சிலம்ப - சீர்மைவிளங்குகின்ற மலையினிடமெல்லாம் எதிரொலி யெழும்பும்படி, பாடி - பாடிக்கொண்டு, (41) ஆடும்- ஆடுதற்கு இடமான, சோலை-சோலையைக்கொண்ட,—(42) மந்தியும்- அறியா மரன் பயில் அடுக்கத்து - (மரமேறுதற்றொழிலிற்சிறப்பையுடைய) குரங்குகளும் (மரங்களின் நீட்டத்தால்) ஏறியறியாத மரங்கள்நெருங்கின பக்கமலையிடத்து நின்ற, (43) சுரும்பும் மூசா - சுரும்பினமும் மொய்க்காத, சுடர் பூ - நெருப்புப்போலும் பூவினையுடைய, காந்தள் - செங்காந்தளினது, (44) பெரு தண் கண்ணி - பெரிய குளிர்ந்த கண்ணியை, மிலைந்த - சூடிய, சென்னியன் - திருமுடியையுடையவன்,—(எ - று.)

விசேடவுரை:—12-44:—இவ்வடிகளால் முருகக்கடவுள் அடையாளப்பூமாலையையுடையவனுதலைக் கூறுகிறார்: காந்தள் முருகக்கடவுட்கு அடையாளப்பூவாதலை "வெறியாட்டயர்ந்த காந்தளும்" என்பதனாலும் அறியலாம். அடையாளப்பூ - ஒருவர்க்கே யுரிய பூ என்பர்: போர்மேற் செல்வோர் மதிலைவளைப்போர் முதலியோர் சூடும் தும்பை உழிஞை முதலிய மலர்களும், அடையாளப்பூ என்றற்கு ஏற்றனவே.

13 - 19:—'செஞ்சீறடி' முதல் 'மேனி' வரையிலுமுள்ளன, (20) துணையோர்' என்பதற்கு அடைமொழி: (41) சூரரமகளிர்க்கு அடைமொழியாக்குவாரு முளர். (12) வெற்பிலுள்ள (42) அடுக்கத்து: (41) சூரரமகளிர் ஆடும் சோலையையுடைய (42) அடுக்கத்து என்க.

(20) துணையோர் (தாம்) ஆய்ந்த ஓதியிலே (21) வெட்சிச் சிறிதழையிடையிட்டு, (22) பைந்தாட்குவளையிதழைக்கிள்ளி இட்டு (23) வலம்புரிவ்யின்வைத்து, (24) திருநுதலில் (25) மகரப்பகுவாய் தாழப்பண்ணி, (26) முச்சியில் (27) சண்பகஞ்செரீஇ, (28) மருதின் இணர் அட்டி, (29) செவ்வரும்பு (30) இணைப்புறுபிணையல் வளைஇ, (31) காதுநிறைந்த பிண்டித்தளிர் (32) ஆகத்துத்திளையாநிற்கையில் (33) தேய்வை (35) இளமுலைகொட்டி, (36) வேங்கைத்தாது அப்புதலாலேகாண்வர, (37) வெள்ளிலின்குறுமுறியை ஒருவர்மீது ஒருவர் (தெறிப்பர்: அங்ஙனம்) தெறித்து, (38) கொடி (39) ஏத்தி, பலருடனே (40) பாடி (41) சூரரமகளிர் ஆடப்பெற்றது சோலை யென்க. அவ்வண்ணமான சோலையைக்கொண்ட (42) அடுக்கத்திலுள்ள (43) காந்தளின் (44) கண்ணியை (முருகக்கடவுள்) மிலைந்துள்ளானென்க. வெட்சிச்சிறிதழை ஓதியினிடை விடுபூவாகத்தூவுதலும், அதனிடையே குவளையிதழைக் கிள்ளியிடுதலும், தெய்வவுத்தி வலம்புரிகளை உரியவிடத்தே வைத்தலும், நுதலில் மகரப்பகுவாயைத்தங்கப்பண்ணுதலும், முடித்தமுச்சியிற் சண்பகஞ்செருகுதலும், செருகியசண்பகத்தின்மேலே மருதின்பூங்கொத்துக்களையிடுதலும், செவ்வரும்புப்பிணையலை அந்தமுச்சியிலேவளையவைத்தலும்

இருகாதிலும் தம்மிலொப்பப் பிண்டித்தளிரையிட்டுநிரைத்தலும், சந்தனத்தேய்வையை முலையில் அப்புதலும், அப்பியசந்தனக்குழம் பின்மீது வேங்கைத்தாதை யப்புதலும், அமரமகளிர்க்குத் துணை யோர் [தோழிப் பெண்கள்] செய்த அலங்கரிப்பு ஆகும்: இனி, சூரர மகளிர் பலர் உடன்கூடித் தம்மில் செய்துகொண்ட அலங்கரிப்பு என்றலும் ஒன்று. இவ்வண்ணம் அரமகளிரின் அலங்கரிப்பினியற் கையை இனிது எடுத்துக்கூறியது, மிகவும்பாராட்டற்குரியது. இங்ஙனம் அலங்கரிக்கப்பெற்ற அரமகளிர் பலர் ஒருவர்மீதுஒருவர் வெள்ளிலின்குறியமுறியைக் கிள்ளித்தெறித்த வண்ணம் கொடியை யேத்திப் பாடி யாடுவரென்று மலைச்சோலையின் தன்மையைக்கூறிய வாறு. வெள்ளில் முறியைக் கிள்ளி ஒருவர்மீதுஒருவர் தெறித்தல், விளையாட்டின் வகைபோலும். 'உள்ளுபு தெறியா' என்றுபாடங் கொண்டு, பிள்ளையாரின் சீர்பாதங்களை யுள்ளித் தெறித்தன ரென்று கூறுவதும் உண்டு.

12.—வரை - கணு: கணுக்களையுடைய மூங்கிலுக்குச் சினையாகு பெயர். இனி, வரை - மலையுச்சியெனக்கொண்டு, மால்வரை நிவந்த வெற்பு என்பதற்கு - திருமால் போலுங் குவடுக ளோங்கிய வெற்பு என்றுமாம்: "மாயோனன்னமால்வரைக்கவாஅன்" என்றநற்றிணையும் காண்க. 13.—கவைஇய - கட்டியஎன்று கூறுவாருமுளர். 14.—பணைத்தோள் - மூங்கில்போலுந் தோளுமாம். 15.—துகில் - துகூல மென்ற வடசொல்லின் திரிபென்பர்: வெண்பட்டுஎன்று பொருள். அச்சொல் தமிழ்மொழியில் வரும்போது வெண்மைநிறமுள்ள பட் டிற்கும் செந்நிறமுள்ள பட்டிற்கும் பொதுவாக வழங்கும். 'கோபத் தன்ன' என்ற உவமானத்தால், இங்கு, துகில் - செந்நிறப்பட்டா டையை யுணர்த்திற்று. தெய்வத்திறுணையால் தானே சிவந்திருத்த லால், துகிலுக்கு 'தோயா' என அடைமொழி கொடுக்கப்பட்டது. 16.—காழ் - வடம்: மேகலை ஏழுவடமுடைய தாதலால், அதனை 'சில் காழ்' என்றார்: (பல்காழ்என்றும் மேகலைக்குப் பெயர்வந்துள்ளது.) "எண்கோவைகாஞ்சி யெழுகோவைமேகலை, பண்கொள்கலாபம் பதினாறு - கண்கொள், பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு, விரி சிகையென் றுணரற் பாற்று" என்றது காண்க. எண்கோவை மேகலை யென்றும் சொல்வது உண்டு. மேகலையென்பது, காஞ்சி முதல் விரிசிகை யீருக உள்ளவற்றிற்குப் பொதுப்பெயராகவும் வழங்கும். 17.—அலங்கரித்துப் பிறப்பிக்கும் அழகு போலஅன்றி, தெய்வத்தன்மையால் இயல்பாகப் பெற்ற அழகை யுடைமையால், 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறுவனப்பு' எனப்பட்டது. வனப்பு என்பதற்கு - இளமைநிறம் என்று ஒருரை. 18.—நாவலுக்கு ஜம்பூ வென்று ஒருபெயர்; ஜம்பூத்வீப மென்று பெயர்பெறுதற்குக் காரண மான ஜம்பு [நாவல்மரத்தின் பழச்சாற்று] நதியினின்று பொன் தோன்று மென்ற நூற்கொள்கைபற்றி, சிறந்த ஒருவகைப் பொன் னுக்கு ஜாம்பூநத மென்றுபெயர்: இச்சொல்லுக்கு ஜம்பூநதியின் சம்பந்தமுள்ள தென்று பொருள்: அந்தப்பொன்னை "நாவலொடு பெயரிய பொலம்' என்றார்: இந்தப்பொன் சிறந்ததாதலை "பொன்

னுக்குச் சாம்புநதம்'' என்ற திருவள்ளுவமாலையாலும் அறியலாம். இழை - மணிகளிழைத்துச் செய்யப்பெற்ற அணி. பெயரிய - பெய ரென்பதனடியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம். பொலம்-பொன் னென்பதன்திரிபு.

21, 22:—செங்கால்வெட்சி - ''செங்கால்வெட்சியு நரந்தமு நாக மும்'' என்றது காண்க. சீறிதழ் - சிறியஇதழையுடையது: பண்புத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. சிறுமை+ இதழ்: சீறிதழ்: சிறுமை யென்ற பண்புப்பெயர் ஈறுபோய் ஆதிநீண்டது: சீறடிஎன்பதும் இவ்வாறே. வெட்சிப்பூக்களை ஓதியிடையில் விடுபூ வாகத்தூவி அவற்றின்நடுவே குவளைப்பூ விதழ்களைக் கிள்ளியிட் டனரென்க. விடுபூ - கட்டாத பூ: பூக்கள் - விடுபூ தொடைப்பூ கட் டுப்பூ என மூவகைப்படு மென்பர். வெட்சிமலரின் சிறியஇதழிடை யில் குவளைப்பூவைக் கிள்ளியிட்டனரென்று கூறினருமுளர். 23:— தெய்வவுத்தி - தெய்வத்தின்பெயராற் சொல்லப்படுந் தலைக்கோலம்: [உத்தி - சொல்.] அது, சீதேவியெனப்படுந் தலைக்கோலம். வலம்புரி என்பதும், தலைக்கோலத்தைச் சேர்ந்ததே: இதற்கு - வலம்புரிச்சங் கீன்ற முத்துமாலையென்றும், நந்தியாவட்டப்பூ என்றும் உரைத்தாரு முளர். தெய்வவுத்தியும் வலம்புரியும் கூந்தலில் அணியப்படுதலை ''தெய்வவுத்தியொடுசெழுநீர் வலம்புரி...மையீரோதிக்கு மாண்புற வணிந்து'' (சிலப்: 6) என்பதனாலும் அறியலாம். 25:—பகுவாய்- பிளந்த [திறந்துள்ள] வாய்: மகரப்பகுவாய்-மகரத்தின் [சுறுமீனின்] திறந்துள்ளவாய்போற்செய்த ஓரணி: அன்மொழித்தொகை: இது வும் தலைக்கோலத்தைச் சேர்ந்ததே. இவ்வணி நெற்றியிலணியப் படுதலை, ''எறிமகரவலயமணி திகழ்நுதலியர்'' என்ற பரிபாடலும் அறிக. 27-28:—கருந்தகடு, உளை என்பன - பூவிற்குஏற்ற அடை மொழி: கருந்தகட்டுளைப்பூ என்றது - மருதமரத்துக்கு இயற்கை யடைமொழி. இணர் என்று வருதலால், இவ்வாறு கூறவேண்டுவ தாயிற்று. உளைப்பூ - (பிடரிமயிர்போல்) விரிந்தபூ என்று ஒருரை. 29.—கிளை-பச்சென்றுகிளைப்பது: ஆகவே, புதிதாகத் தோன்றிய பச்சரும்பு என்று உரைத்தலு முண்டு.

33 - 34:—சந்தனத்தேய்வை, நிறத்தினல் மருதின்இணரை யொத்திருக்கும். 36:—காண் - காட்சி, அழகு: முதனிலைத்தொழிற் பெயர். 38.—வென்றடுதல் - வஞ்சியாது எதிர் நின்றடுதல்: இதனை ஏன்று அடு என்று படித்தற்கும் இடனுண்டு: ஏன்று - எதிர்ந்து நின்று, அடு - கொல்லுகின்ற என்க.

42:—மந்தியும், உம்மை - உயர்வுசிறப்பு: இனி, மந்தனை [சனியை] மகனுகவுடைமைபற்றிச் சூரியனுக்கு மந்தியென்று ஒரு பெயருள்ளதனுல், (செறிவினுல்) சூரியன்கதிர்கள் நுழைந்தறியமாட் டாதமரங்கள் நெருங்கியுள்ள அடுக்கத்து எனினுமாம்: ''வெயினுழை பறியாக் குயினுழைபொதும்பர்'' என்றது, இங்கு ஒப்புநோக்கத் தக்கது. 43:—'தேவர்கள் அணியும் மலர்களில் வண்டுகள் மொய்க்கா'

என்ற நூற்கொள்கைபற்றி 'சுரும்புமூசாப்பூங்காந்தள்' என்றார். சுடர் - நெருப்புக்குஆகுபெயர்: சுடர்ப்பூ - உவமைத்தொகை.

(13) அடியினையும் (14) கால்முதலியவற்றையுமுடைய (20) துணையோர் ஆய்ந்த ஓதியிலே (21) இடையிட்டு (22) கிள்ளி (23) வைத்து (25) தாழமண்ணுறுத்து (27) செரீஇ (28) அட்டி (30) வளைஇ, (32) திளையாநிற்க, (35) கொட்டி (36) அப்புதலாலே காண்வர, (41) சூரரமகளிர் (39) பலருடன் (37) தெறித்து (39) ஏத்தி (40) பாடி (41) ஆடுஞ்சோலையைக்கொண்ட (42) அடுக்கத்துத்தோன்றும் (43) காந்தளின் (44) கண்ணியைமிலைந்த சென்னியனென்க. (41) சூரரமகளிர் (20) துணையோர் (39) பலருடனே (40) பாடி (41) ஆடுவரென இயைத்துக் கூறுதலும் ஒன்று.

பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்தொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபே ருருவி னொருபே ரியாக்கை
அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்

பதவுரை:—(45) பார் முதிர் பனி கடல் - பூமியைச் சூழ்ந்த குளிர்ச்சியையுடைய சமுத்திரம், கலங்க - (தன்) நிலை குலையும்படி, உள் புக்கு - உள்ளே புகுந்து, (46) சூர் முதல் தடிந்த - சூரபத்மாவாகிய தலைவனைக் கொன்ற, சுடர் இலை நெடு வேல் - எரிகின்ற இலைத்தொழிலையுடைய நெடியவேலாலே,—(47) உலறிய கதுப்பின் - (எண்ணெய்பெய்தலின்மையாற்) காய்ந்த மயிரினையும், பிறழ் பல் - (வரிசையாகஒத்திராமல்) மாறுபட்டுள்ள பற்களையும், பேழ்வாய் - அங்காந்த வாயையும், (48) சுழல் விழிபசுங்கண் -(கோபத்தாற்)சுழலுகின்ற விழியினையுடைய பசியகண்களையும், சூர்த்த நோக்கின் - கொடுமையையுடைய பார்வையையும், (49) கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்க (50) பெருமுலை அலைக்கும் காதின் - பிதுங்கின கண்ணையுடையகோட்டானோடு கடிய பாம்பு தொங்குவதனால் பெரிய முலையளவுந் தொங்கி (அவற்றை) வருத்துகின்ற காதுகளையும், பிணர் மோட்டு - சருச்சரையையுடைய உடலையும், (51) உரு கெழு

செலவின் - (பார்த்தவர்) அஞ்சுதலைப்பொருந்துகின்ற நடையினையு முடைய, அஞ்சுவரு பேய்மகள் - (கண்டார்க்கு) அச்சந்தோன்று கின்ற பேயாகிய மகள், (52) குருதி ஆடிய கூர் உகிர் கொடு விரல் - இரத்தத்தையளைந்த கூர்மையான நகங்களையுடைய வளைந்த விரலாலே, (53) கண் தொட்டு-கண்களைத் தோண்டி, உண்ட—, கழி முடை கரு தலை-மிக்க முடைநாற்றத்தையுடைய கரியதலையை, (54) ஒள் தொடி தட கையின் ஏந்தி - ஒள்ளிய தொடியையுடைய பெரு மையையுடைய கையிலேயெடுத்துக் கொண்டு,— வெருவர (55) வென்றுஅடு விறல் களம் பாடி - (அசுரர்க்கு) அச்சமுண்டாகுமாறு வஞ்சியாமலெதிர்நின்றுகொல்லுகின்ற வெற்றிக்களத்தைப் பாடிய வண்ணம்,தோள் பெயரா - தோளையசைத்து, (56) நிணம் தின் வாயள் - நிணத்தைத்தின்னுகின்றவாயையுடையளாகி, துணங்கை தூங்க - துணங்கைக்கூத்து ஆட, (57) இரு பேர் உருவின் ஒரு பேர் யாக்கை - மக்கள்வடிவும் விலங்கின்வடிவுமாகி இரண்டுபெரியவடி வினையுடைய ஒன்றாகியஉடலை, (58) அறு வேறு வகையின் அஞ்சு வர மண்டி - ஆறாகிய வேறுபட்டகூற்றினால் அச்சந்தோன்ற மிக்குச் சென்று, (59) அவுணர் நல்வலம் அடங்க - (சூரபன்மாவொழிந்த மற்றை) அசுரரின் நல்ல வெற்றி இல்லையாம்படி, கவிழ் இணர் (60) மாமுதல் - கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தை, தடிந்த - வெட்டின, மறு இல் கொற்றத்து - குற்றமில்லாத வெற்றி யினையும், (61) எய்யா நல் இசை - (ஒருவராலும்) அளந்தறியமுடி யாத நல்லபுகழினையுமுடைய, செவ்வேல் சேஎய் - செந்நிறவேலை யுடைய சேயினுடைய,—(எ - று.)

விசேடவுரை:—இத்தொடரால், முருகக்கடவுளின் பகையொழிக் குந் தன்மையைக் கூறுகிறார்.

(46) வேலானே (60) தடிந்த என இயையும். (47) கதுப்பினையும் பல்லையும் வாயையும் (48) கண்ணையும் நோக்கினையும், (50) காதி னையும் மோட்டினையும் (51) செலவினையுமுடைய பேய்மகள் (53) தலையை (54) ஏந்தி (55) பாடி (56) வாயளாய், (55) தோள்பெயரா (56) தூங்க [கூத்தாடுமாறு] (46) வேலானே (60) மாமுதல் தடிந்த (61) சேய்எனக. வேலால் மாமுதலைச் சேய் தடிந்ததனால் பேய்மகள் நிணந்தின்வாயளாய்த்துணங்கைக் கூத்தாடுவளெனக. (47) கதுப் பின் என்பதுமுதல் (51) செலவின் என்பதுவரையில், பேய்மக ளுக்கு அடைமொழி. முருகக்கடவுள் சூரபன்மாவுடன் பொருத போர்க்களத்துப் பிணந்தின்னவந்தபேய்மகள்—காய்ந்தமயிரையும், ஒழுங்கற்ற பல்வரிசையையும், பிளந்தவாயையும், சுழல்விழியையும், பசுங்கண்ணையும், கொடியபார்வையையும், கோட்டானைப்பாம்புடனே காதிலணியாகக்கொண்டு தொங்கவிட அக்காதுகள் வந்துஅலைக்கும் முலையையும், சொரசொரப்பான பருத்தஉடலையும், அச்சம்வரும் நடையையுமுடையளெனக. அப்பேய்மகள் இரத்தத்தை அளைந்த கூருகிரையுடைய கையாலே போரில்விழுந்த தலையைக் கையிற்

கொண்டு கண்ணைத்தோண்டி யுண்டு நிணந்தின்றவாயளாய்க் களம் பாடித் தோளைப்பெயர்த்து அங்கூத் துணங்கை யாடுவ ளென்க.

45.—பார் - பாறையுமாம். பனிக்கடல் பாறையைநிரம்பப் பெற்றுள்ளதென்க. 48. பசுங்கண், சினத்தைத் தெரிவிக்கும்: "பைங்கணரவம்" என வருதலுங் காண்க. சூர்த்த - இறந்தகாலப் பெயரெச்சம்: சூர்த்தம்எனப்பிரித்து - நடுக்கமென்றுகொள்வாருமுளர். 49.—கூகைக்குக் கண் பிதுங்கித்தோன்றுவது இயற்கையாதலால் 'கழல்கட்கூகை' என்றார் "கழல்கட்கூகைகுழறு குரல்" என்பது பதிற்றுப்பத்து. கழற்கண் என்று பாடமாயின், கழற்சிக்காய் போன்ற கண் என்னலாம், 50--மோடு-வயிறுமாம். 50, 51: பிணர் மோட்டு உரு என்று எடுத்து - சருக்சரையையும் பெருமையையுமுடைய வடிவம் என்பாருமுளர். 53:—தொட்டு என்ற வினையெச்சம் தொழிற்பெயர்த்தன்மைப்பட்டதெனக்கொண்டு, தொட்டு உண்ட-தோண்டுதலையடைந்த என்று கூறலும்ஒன்று. 56:—வாயள்-குறிப்பு வினைமுற்று, எச்சப்பொருள்பட்டுவந்தது. துணங்கை - ஒருவகைக் கூத்து: அதனிலக்கணத்தை "பழுப்புடையிருகை முடக்கியடிக்கத், துடக்கிய நடையது துணங்கையாகும்" என்பதனாலறிக. (57) யாக்கை (58) அஞ்சுவர என்று இயையும். 57:—இரண்டு பெரியவடிவினையுடைய ஒன்றாகிய உடலென்றது - குதிரை முகமும் மக்களுடலுங்கொண்ட சூரபத்மாவின் உடலை: "சூரொடும் பொரவஞ்சிசூடிய பிள்ளையார் படைதொட்டநாள், ஈருடம்பு மிசைந்திரண்டுநிரப்பரப்பு மிறைத்தனம்" என்ற தக்கயாகப்பரணியின் பாடலினுரையில் 'சூரபன்மாவான அசுரசேனைபதி பட்டுவிழ அவனுடைய குதிரையும் அசுரனுமான இரண்டுவடிவும்' என்று எழுதியிருப்பதும் காண்க. (58) அறுவேறு வகையின் என்பதற்கு-அவனுடல், அற்று வேறும் வகையினால் என்றும்ஆம். அறு என்ற முதனிலைவினை 'அற்று' என வினையெச்சமாயிற்றென்றுகூறுவர், இலக்கணக்கொத்துக்காரரும் நன்னூல்விருத்தியுரைகாரரும்.

(58) மண்டி (60) தடிந்தளன்க. இங்குக் குறித்த வரலாறு வருமாறு:--சிவபெருமான் உமாதேவியைமணந்துகொண்ட காலத்தில் இந்திரன்சென்று 'நீ புணர்ச்சிதவிரவேண்டும்' என்று வேண்டிக்கொள்ள, சிவபிரானும் அதற்கு உடன்பட்டுப் புணர்ச்சிதவிர்ந்து கருப்பத்தை இந்திரன்கையிற் கொடுப்ப, அதனைச் சத்தவிருடிகள் உணர்ந்து அவனிடத்தினின்றுவாங்கித் தம்மால் தாங்கமுடியாமையால் சிவபிரானது அமிசமுள்ள முத்தீயிலேயிட்டுப் பின்பு தம்மனைவியர்கையிற் கொடுக்க, அருந்ததி தவிர மற்றையறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூல்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே கருவுயிர்த்தாராக, அந்தஇறைவனதுகருப்பம் ஆறுகூறுகி வளருங் காலத்தில், இந்திரன் தான் சத்தவிருடிகளிடம் இறைவன்கருப்பத்தைக் கொடுத்ததை மறந்து அங்கேவந்துவச்சிரத்தாலெறிய, அந்தஆறுவடிவும் ஒன்றாய் அந்த இந்திரனுடனே பொருது அவனை வலியழித்துப் பின்பு சூரபத்மாவைக் கொல்லு

தற்கு அவ்வடிவம் ஆறுகிய வேறுபட்டகூற்றுலே மண்டிச்சென்ற தென்பது: இதனை "பாயிரும்பனிக்கடல்" என்ற பரிபாடலாலும் அறிக. (இனி, இவ்வரலாற்றை வெவ்வேறுவகையாகக் கூறுவாரு முளர்.) ஆறுமுகக்கடவுள், தம்முடனே எதிர்ந்தார்வலியிலேபாதி தங்கள் வலியிலேகூடும்படி அவுணரெல்லாரும் மந்திரங்கொண் டிருந்து சாதித்ததொருமாமரத்தை வெட்டினுைக, அதனல் அவுண ரெல்லாம் தம்வலம் அடங்கின ரென்க: ஆறுமுகக்கடவுள் வெட்டின மாமரம் கீழ்நோக்கிவளர்ந்திருந்தமையால் 'கவிழிணர்மாமுதறடிந்த' என்றது. "அக்றிரைப் பரப்பிற் சடையசைந்தலையாது, கீழிணர் நின்ற மேற்பகைமாவின், ஒருடலிரண்டு கூறுபடவிடுத்த...அமையா வென்றி யரத்தநெடுவேலோய்", "நிலந்தாங்கழுவத்துச் சூர்நிரந்து சுற்றிய மாதபுத்தவேலோய்," "மாக்கடன்முன்னி, யணங்குடை யவுணரேமம் புணர்க்குஞ், சூருடைமுழுமுதறடிந்தபேரிசைக், கடுஞ் சினவிறல்வேள்" என்பன காண்க. முருகக்கடவுட்கு முன்னே எதிர் நிற்கமாட்டாது சூரபன்மன் கடலினுட்புக்கு ஒளிக்க, அந்த முருகக் கடவுள் அக்கடலினுட்புக்குத் தனது வேற்படையினுல் அவ்வசுரனை வெட்டினுைக, குதிரைத்தலையும் மனிதவுடலுமமைந்த அந்தச் சூர பன்மன் துணிப்புண்டு மாமரமாக மாற, மாமரமான அவனையும் அக் கடவுள் தடிந்தானென்றலும் உண்டு.

(6) கணவன் (11) மார்பினன் (44) சென்னியன் (61) சேஎய்என் பன, முருகக்கடவுளாகிய ஒருபொருளின்மேல் வந்த வெவ்வேறு பெயர்கள்.

ஆற்றுப்படுத்துகின்றவன் முருகக்கடவுளின் தோற்றப்பொலி வையும், அவன்போகத்திற்குஉரிய மாலையையணிந்திருத்தலையும், அடையாளப்பூவை யுடையனுயிருத்தலையும் கூறி, அவன்பகை யொழிக்குந் தன்மையனென்பதையுங் கூறியபின், அப்படிப்பட்டவனை அடைந்தாயானுல், நீ முன்னியவினை கைகூடப்பெறலாம் என்று 62-66 அடிகளாற் கூறுகின்றுன்:

சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே:

பதவுரை:—(62) சே அடி - செவ்விய திருவடிகளில், படரும் - செல்வதற்குக் காரணமான, செம்மல் உள்ளமொடு - தலைமையினை யுடைய மனத்தோடு, (63) நலம் புரி கொள்கை - நல்வினைகளைச் செய்கின்ற கோட்பாட்டுடனே, புலம் பிரிந்து உறையும் (64) செலவு- இந்திரியங்களைக் கடந்து தங்குகின்ற மார்க்கத்தை, நீ நயந்தனை ஆயின் - நீ விரும்பினுயானுல், பலஉடன் - (வீடுபெறுவார்க்கு உரியனவாகக்கூறிய நற்குணங்கள்) பலவுஞ் சேர்தலால், (65) நன்னர் நன்ருகிய, நெஞ்சத்து - மனத்திலுண்டாகிய, இன் நசை - இனிய

விருப்பத்தை [வீடு பேற்றை], (66) நீ—, முன்னிய வினை - முன்பு கருதிச் செய்த நல்வினையால், (65) வாய்ப்ப - தவறாமல், (66) இன்னே - இப்பொழுதே, பெறுதி - அடைவாய்; (எ - று.)

விசேடவுரை:—கடவுளின் சேவடியிற் செல்லுதலென்பது - மோட்சமடைதலை: திருவாசகத்தில் "தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி" என்று கடவுளின் திருவடியை வீட்டுலகமாகக் கூறியிருத்தலும், உலகவழக்கிலும் மோட்சமடைதலைக் கடவுளின் திருவடிசேர்தலென்று கூறுதலும் காண்க. செலவு - சென்றுசேருவது: மார்க்கம். மோட்சமார்க்கமென்பது - எவ்வளவு தூரத்திலுள்ளதையும் சென்று சேரவல்ல மனத்திற்கும் எட்டாததாதலால், அதனை 'புலம்பிரிந்துறையும் செலவு' என்றார். சேவடி படர்தலுறுவார்க்கு நலம்புரிகொள்கை இன்றியமையாததாதலறிக. மோட்சலோகத்தைப் பெறுபவர் கடவுளின் கருணைவாய்த்தற்கு முன்னைய நல்வினை பரம்பரையாகக் காரணமாதல்பற்றி, 'முன்னிய வினையால் இன்னசைவாய்ப்ப இன்னே பெறுதி' என்றது. நெஞ்சத்திற்கு நன்னர் என்று அடைமொழி கொடுத்ததற்குக் காரணம், வீடுபெறுவார்க்கு வேண்டும் பலநற்குணங்களும் அமைந்திருத்தலாலாகும். நன்னர் - 'நர்' விகுதிபெற்ற பண்புப்பெயர். 63: புலம்புரிந்துறையும் என்று பாடங்கொண்டு, நலம்புரிகொள்கை-நன்றான அறங்களைச் செய்யுங் கோட்பாட்டுடனே, புரிந்துறையும் புலம் - (அவன்) விரும்பித் தங்குமிடத்து எனக் கூறுவாருமுளர்.

'இன்னசையின்னேபெறுதி' என்றான்: என்றானைநோக்கி 'அதுபெறுமாறு அப்பரமன் யாண்டுஉள்ளான்?' என்று ஆற்றுப்படுத்தப்படுபவன் வினவ, அம்முருகவேள் இனிதுறையும் இடங்களை இதுமுதல் (249) ஆண்டாண்டுறைதலும் (உரியன்) என்ற அளவும் கூறலுற்று, முதன்முதல் திருப்பரங்குன்றத்திலுள்ளானென்று பின்வரும் அடிகளாற் (67 - 77) கூறுகின்றான்:

செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெல்படக்
கண்போன் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன்:

பதவுரை :—(67) செரு புகன்று எடுத்த சேண் உயர் நெடு கொடி - போரில் (வென்று) விரும்பிக்கட்டின வானநிலத்தேசென்றுயர்ந்த நெடிய கொடியையும், (68) வரி புனை பந்தொடு பாவை - (நூலால்)வரிந்து புனையப்பட்ட பந்தோடு பாவையும், தூங்க-வறிதே

தொங்கும்படி, (69) பொருநர் தேய்த்த - போர்செய்வாரை இல்லை யாக்கினமையால், போர் அரு - போர்த்தொழில் அரிதாகிய, வாயில்- வாயிலினையும், (70) திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து - திருமகள் வருத்தமின்றியிருந்த குற்றந் தீர்ந்த கடைத்தெருவினையும், (71) மாடம் மலி மறுகில் - மாடங்கள்மிக்க (மற்றைத்) தெருக்களையு முடைய, கூடல் - மதுரைக்கு, குடவயின் - மேற்குத்திக்கில்,— (72) இரு சேறு அகல் வயல் - கரிய சேற்றினையுடைய அகன்ற வயலிலே, விரிந்து - முறுக்கவிழ்ந்து, வாய் அவிழ்ந்த - (தாதும் அகவிதழும் தோன்றுமாறு) மலர்ந்த, (73) முள் தாள் தாமரை-முள்ளைக்கொண்ட தாளை [நாளத்தை] யுடைய தாமரைப்பூவிலே, துஞ்சி-(இராப்போது) துயில்கொண்டு, வைகறை - விடியற்காலத்தே, (74) கள் கமழ் நெய் தல் ஊதி - தேன்நாறுகின்ற நெய்தற்பூவை யூதி,—எல்பட-சூரியன் தோன்றுகையில், (75) கண்போல் மலர்ந்த காமரு சுனை மலர்-கண்ணை யொப்பவிரிந்த விருப்பம் மருவின சுனைப்பூக்களிலே, (76) அம் சிறை வண்டின் அரி கணம் - அழகினையுடைய சிறையையுடைய வண்டு களின் அழகியகூட்டம், ஒலிக்கும் - ஆரவாரிப்பதற்குஇடனான (77) குன்று - திருப்பரங்குன்றிலே, அமர்ந்து - மனம்பொருந்தி, உறை தலும் - வசித்தற்கும், உரியன்—; (எ - று.)

விசேடவுரை:—(68) தூங்க என்ற செயவெனெச்சம், (69) தேய்த்த என்னும் பெயரெச்சத்தைத் தொடர, அது (69) வாயில் என்பதனோடு இயையும். (67) கொடியையும் (69) வாயிலையும் (70) நியமத்தினையும் (71) மறுகினையுமுடைய கூடல் எனவும், (71) கூடற் குடவயிற் (77) குன்று: (76) வண்டின் அரிக்கணம் (73) துஞ்சி (ஊதி) (76) ஒலிக்கும் (77) குன்று எனவும் இயையும். (67) 'செருப்புகன்று' என்பதுமுதல் (71) 'மாடமலிமறுகின்' என்பதுவரையில் கூடலுக்கு அடைமொழி. ஆளும்அரசன் எதிர்த்துவரும் பகைவரை மடவார் போல வலியிலராகத் தான் கருதுகின்றமைதோன்றப் பந்து பாவை [பிரதிமை] முதலியவற்றைத் தன்நகர்மதிளின்வாயிலில் தொங்கவிடு தல், முற்காலத்து மரபு: இதனை, "பந்தும்பாவையும் பசுவரிப் புட்டிலும், என்றிவை பலவுஞ் சென்றுசென் றெறியும், முந்தைமக ளிரை யியற்றி," "பகைவரைப்பாவைமாரெனத் தெரிப்பப்பந்தொடு பாவைகடுங்கித், தகைசிறிதறியா வாயில் சாறுஞ்சிற் றடப்பெரு நொச்சியும்" என்பவற்றுலும், "செம்பொறிச்சிலம்பொடு அணித் தழைதூங்கும்—புரிசை" (பதிற்: 53) என்பதற்கு - 'சிலம்பும் தழை யும் புரிசைக்கண் தங்கின என்றது ஈண்டுப் பொருவீருளிரேல், நும்காலிற்கழலினையும் அரையிற் போர்க்குரிய உடையினையும் ஒழித்து இச்சிலம்பினையும் தழையினையும் அணிமினென அவரைப் பெண்பாலாக இகழ்ந்த வாறெனக' என்று எழுதிய விசேடவுரை யாலும் உணரலாம். பந்தொடு பாவைதூங்கப் பொருநரைத் தேய்த் தது, மதுரையையாண்ட அரசன்செயலாகும். கண்ணுக்கு உவமை யாகக் கூறுதற்குஉரிய சுனைமலரை உபமேயமாக்கி 'கண்போன் மலர்ந்த காமருசுனைமலர்' எனக்கூறியது - எதிர்நிலையணியாம். இனி, காமரு - காமம்மருவுஎன்பதன் விகாரமெனக்கொண்டு, விருப்பம்

மருவின என்று பொருள்கொள்ளலுமுண்டு. காமருஎன்பதைக் காமம் வரும் என்பதன் விகாரமெனக்கொண்டு, கண்டார்க்கு விருப்பம் வரும் என்று பொருளுரைப்பர், அடியார்க்குநல்லார். உறைதலும் என்றஉம்மை எதிரதுதழுவிய வெச்சப்பொருளது. 71-73 அடிகளை, புலவராற்றுப்படையுள், ஒருமுகத்தாற் பாண்டியனையும் சார்த்தி வந்ததற்கு உதாரணமாகக் காட்டுவர், இளம்பூரணர்.

கூடல்என்று மதுரைக்கு ஒருபெயர்: அதன்காரணம் வருமாறு:—ஒருகாலத்தில் வருணன் சோமசுந்தரக்கடவுளின் வல்லமையைப் பரிசோதிக்குமாறு எண்ணி ஏழுமேகங்களையும் அளவின்றி மழைபொழிந்து மதுரையையழிக்கும்படியேவ, அங்ஙனமேவந்த ஏழுமேகங்களையும் தடுக்கும் பொருட்டு அக்கடவுளின்கட்டளையினால் அவரது சடையிலுள்ள நான்கு மேகங்களும்மேலுயர்ந்து நான்குகூடமாகக் கூடியதனால், மதுரை, நான்மாடக்கூடலென்றும் கூடலென்றும் பெயர் பெறுவதாயிற்றென்பது: இதனை "வன்றிறல் வருணன்விட்ட மாரியைவிலக்கவீசன், மின்றிகழ் சடையினின்று நீங்கிய மேகநான்கும், குன்றுபோனிவந்து நான்குகூடமாக் கூடலாலே, யன்றுநான் மாடக்கூட லானதான் மதுரைமூதூர்" என்பதனா லறியலாம்; இனி, கன்னி கரியமால் காளி ஆலவாய் என்ற நான்குகடவுளரின்மாடங்கள் கூடியிருத்தலால், மதுரை கூடலென்று பெயருடையதாயிற் றென்பது முண்டு.

77:—அதாஅன்று:—பதவுரை:—அது அன்று - அதுவல்லாமல், —(எ - று.) "அதுமுன்வருமன்றுன்றுந்தாக்கின்" என்பது விதி: ஈண்டு அளபெடுத்து வந்தது.

இனி (78) 'வைந்நுதி' என்பதுமுதல் (125) 'அலைவாய்ச் சேறலு நிலைஇயபண்பே' என்பது வரையுள்ள அடிகளால், அந்த முருகக்கடவுள் திருச்சீரலைவாயென்னும் தலத்தி லெழுந்தருளியிருத்தலைக் கூறுகின்றார்: அங்ஙன்கூறுமிடத்து முதலைந்துஅடிகள் - அலைவாயிற்செல்லும்போது யானைமேலேறுவதனைத் தெரிவிக்கும்:

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
80. படுமணி யிரட்டு மருங்கின் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்டு

பதவுரை:—(78) வை நுதி பொருத வடு - கூர்மையான நுனியையுடைய தோட்டி வெட்டின தழும்பு, ஆழ் - ஆழ்ந்துள்ள, வரி நுதல் - புள்ளிகளையுடைய மத்தகத்தில், (79) வாடா மாலை-பொன்னரிமாலையானது, ஓடையொடு - பட்டத்தோடு (கிடந்து), துயல்வர- அசையாநிற்க,—(80) படும் மணி - தாழ்கின்ற மணி, இரட்டும் - மாறிமாறி யொலிக்கின்ற, மருங்கின் - பக்கத்தினையும், கடு நடை - விரைவுள்ள நடையினையும், (81) கூற்றத்து அன்ன மாற்ற அரு

மொய்ம்பின் - யமனையொத்த (பிறரால்) தடுத்தற்குஅரிய வலிமையினையுமுடைய, (82) கால் கிளர்ந்து அன்ன - (ஓடும்போது) காற்று எழுந்தாலொத்த [விரைந்துசெல்லுகின்ற], வேழம் - யானையை, மேல்கொண்டு - ஏறி, — (எ - று.) — (79) துயல்வர (82) மேல் கொண்டுளன என இயையும்.

விசேடவுரை:—(80) மருங்கினையும், கடுநடையினையும் (81) மொய்ம்பினையுமுடையது (82) வேழமென்க. (82) மேல்கொண்டு என்ற இந்தச் செய்தெனெச்சம், (125) சேறலும் என்பதனோடு இயையும். முருகக்கடவுள் மருங்கு முதலியவற்றையுடைய யானை மேற்கொண்டு அலைவாய்ச்சேறலு முரியனென்க.

78:—வைந்நுதி - அடையடுத்த சினையாகுபெயர். 80. படுமணி என்பதற்கு-பாடு என்பது படுஎன்று விகாரப்பட்டதாகக் கொண்டு, பெருமை பொருந்திய மணி என்பாருமுளர்.

83 - ஆவதுஅடி முதல் 102-ஆவது அடி வரையில், அக்கடவுள் ஆறுமுகங்களை யுடைமையைக் கூறுபவராகி 83-முதல் 90-வரையில் ஆறுதிருமுகங்களும் விரதியரின் மனத்தில்தோன்றும் வகையைக் கூறுகிறார்:

ஐவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பின் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே

பதவுரை:—(83) ஐவேறு உருவின் செய் வினை முற்றிய (84) முடியொடு - ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய (முடிக்குச்) செய்யுந்தொழிலெல்லாம் முற்றுப்பெற்றுள்ள முடியோடே (கூடி), விளங்கிய—, முரண் மிகு - (ஒன்றற்குஒன்று) மாறுபாடுமிகும், திரு மணி - அழகினையுடைய மணி, (85) மின் உறழ் இமைப்பின்-மின்னலோடு மாறுபடுகின்ற விளக்கத்தோடு, சென்னி - தலையிலே, பொற்ப - பொலிவுபெற,—(86) நகை தாழ்பு துயல்வரூஉம் - ஒளி தங்கி யசையப்பெற்ற, வகை அமை - தொழிற் கூறு அமைந்த, பொலம் குழை-பொன்னாற்செய்த மகரக்குழை, (87) சேண் விளங்கு இயற்கை வாள் மதி - சேய்நிலத்தே (சென்று) விளங்குகின்ற இயல்பினையுடைய ஒளியுள்ள சந்திரனை, கவைஇ - சூழ்ந்து, (88) அகலா - நீங்காத, மீனின் - நட்சத்திரங்கள்போல, அவிர்வன இமைப்ப - விளங்குவனவாய் ஒளியை வீச,—(89) தா இல் கொள்கை தம் தொழில் முடிமார் - குற்றமில்லாத விரதங்களையுடைய தம்தொழிலை [தவத்தொழிலை] முடிப்பாருடைய, (90) மனன் நேர்பு எழுதரு -

மனத்திலே பொருந்தித்தோன்றுகின்ற, வாள் நிறம் முகன் - ஒளியைக்கொண்ட நிறத்தையுடைய முகங்களிலே,—(எ - று.)

விசேடவுரை :—(85) பொற்ப (88) இமைப்ப (90) எழுதரு முகன் என்க. மணி சென்னியிற் பொலிவுபெறவும், செவிகளிலே மகரக்குழை சந்திரனைச்சூழ்ந்த மீன்போல் இமைப்பவும், முருகக் கடவுளின் ஆறுதிருமுகங்களும் தவவிரதியரின் மனத்திலே பொருந்தி ஒளியுடன் தோன்றுமென்க.

(83) ஐ வேறுஉருவினையுடைய முடி - தாமம் முகுடம் பதுமம் கிம்புரி கோடகம் என்ற ஐந்துறுப்புக்களையுடைய கிரீடம். கிரீடத்தி லழுத்திய பல்வகைமணிகள் வெவ்வேறு வகையான ஒளியை வீசுத லால், 'முரண்மிகு திருமணி' என்றார். 88:—மீன்-மின்னுவது என்ற காரணம்பற்றி வந்த பெயர். அவை - உரோகிணி முதலியன. இனி, வியாழமும் வெள்ளியும் என்று கொள்ளுதலும் உண்டு. 90:—முகன்- முகமென்பதன் போலி: இச்சொல் பால்பகாவஃறிணைப்பெயர்: இங்குப் பன்மையில் வந்தது.

இனி, அவ்வாறுதிருமுகங்களிலும் ஒவ்வொன்றன் செயல்இன்னது இன்னது என்று கூறத் தொடங்கி, முதல்திருமுகத்தின் செயலை இரண் டடிகளிற் கூறுவர்:

91, 92: மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுகம்

பதவுரை :—(92) ஒரு முகம்—,—(91) மா இருள் ஞாலம் - மிக்க இருளையுடைய உலகம், மறு இன்றி விளங்க - குற்றமில்லாமல் விளங்கும்படி, (92) பல் கதிர் விரிந்தன்று - பலகிரணங்களையும் தோற்றுவித்தது; (எ - று.)

பல்கதிர்விரித்தல் - சூரியசந்திர அக்கினிமூலமாகப் பல கிரணங்களை யுண்டாக்குதலென்பர்.

இனி, (92) 'ஒருமுகம்' என்பதுமுதல் (94) 'கொடுத்தன்று' என்பது வரையுமுள்ள பகுதிகளால் இரண்டாம் முகத்தின் செயலைக் கூறுவர்:

92-94: ஒருமுகம்
ஆர்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே

பதவுரை:—(92) ஒருமுகம்—,—(93) ஆர்வலர் ஏத்த அமர்ந்து - (தன்மேல்) அன்புசெய்பவர்கள் துதிக்க (அதற்கு)ப் பொருந்தி, இனிது ஒழுகி - (அவர்க்கு) இனிமையாக நடந்து, (94) காதலின் - (அவர் மேற்சென்ற) அன்பினாலே, உவந்து - மகிழ்ந்து, வரம்-(அவர்) வேண்டும் பொருள்களை, கொடுத்தன்று - முடித்துக் கொடுத்தது; (எ - று.) கொடுத்தன்று - ஒன்றன்பால் முற்று.

இனி, (94-96) 'ஒருமுகம்...ஓர்க்கும்' என்ற பகுதியால் மூன்றும் முகத்தின் செயலைக் கூறுவர்:

ஒருமுகம்
95. மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி யோர்க்கும்மே

பதவுரை:—(94) ஒருமுகம்—,—(95) மந்திரம் விதியின் - மந்திரத்தையுடைய வேதத்திலே விதித்தலையுடைய, மரபுளி - முறைமையிலே, வழாஅ - தவறாத, (96) அந்தணர்-பிராமணருடைய, வேள்வி-யாகங்களில், ஓர்க்கும் - (தீங்குநேராதபடி) நினையாநிற்கும்: (எ - று.)

விசேடவுரை :— அந்தத்தையணவுவார் - அந்தணர்: என்றது, வேதாந்தத்தையே பொருளென்றுகொண்டு பார்ப்பவரென்றவாறு. மந்திரம் - வேதத்திற்கு ஆகுபெயர். "மந்திரவிதியிற் பூசனை பெருது" என்றதுங் காண்க. இனி, மந்திரவிதி - மந்திரத்தை விதித்தலையுடையது: எனவே, வேதமாயிற்று: மந்திரவிதியின் - வேதத்தினுடைய, மரபு- முறைமையை, உளி [உள்ளி] - ஆராய்ந்து என்றலும் உண்டு.

இனி, (96 - 98) 'ஒருமுகம்...விளக்கும்மே' என்ற பகுதியால் நான்காவது முகத்தின் செயலைக் கூறுவர்:

96 - 98. ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே

பதவுரை:—(96) ஒருமுகம்—,—(97) எஞ்சிய பொருள்களை- (இங்கே) வழங்காத (வேதங்களிலும் நூல்களிலுமுள்ள) பொருள்களை, ஏம் உற-(இருடியர்) இரட்சையடையும்படி, நாடி-ஆராய்ந்துணர்த்தி, (98) திங்கள் போல - பூர்ணசந்திரன்போல, திசை விளக்கும்-திக்குக்களையெல்லாம் விளக்குவிக்கும்: (எ - று.)—ஏமுற - ஏமமுற என்பதன்மரூஉ: ஏமம் - க்ஷேமம் என்பதன் விகாரமென்பர். எஞ்சிய பொருள் - ஆராய்ந்தறியப்படா தொழிந்தபொருளை, ஏமுற - (தேவ விருடியர்) இன்புறும்படி என்று ஓருரை. கலைகள் நிறைதலில், பூர்ணசந்திரன் உவமையாவன்.

இனி, (98 - 100) 'ஒருமுகம்...களம்வேட்டன்றே' என்ற பகுதியால், ஐந்தாம் முகத்தின் செயலைக் கூறுவர்:

ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
100. கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே

பதவுரை:—(98) ஒருமுகம்—,—(99) செல் சமம் முருக்கி-(திருவுள்ளத்துச்) சென்ற நடுவுநிலைமையைக் கெடுத்து, செறுநர் தேய்த்து - கோபிக்கும் அசுரர்முதலியோரை உயிரழியவொழித்து, (100) கறுவு கொள் நெஞ்சமொடு - கறுவுதலைக்கொண்ட மனத்தோடே, களம் வேட்டன்று - களவேள்வியைச் செய்தது; (எ - று.)

விசேடவுரை:—சம்ம் = ஸமம்: நடுவுநிலைமை: அதனைக் கெடுத்தலாவது - தேவரையும் அசுரரையும் ஒப்ப நினையாமல் தேவரைக் காத்து அசுரரையழித்தல். களம் வேட்டலாவது - போரிற் பகைவர்களைக் கொன்று பேய்கட்கு விருந்தூட்டல்.

இனி, (100 - 102) 'ஒருமுகம்...அமர்ந்தன்று' என்ற பகுதியால் ஆறும் முகத்தின் செயலைக் கூறுவர்:

100 - 102. ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே

பதவுரை:—(100) ஒருமுகம்—,—(101) குறவர் மடம் மகள்-குறவருடைய இளமையையுடைய மகளாகிய, கொடி போல் நுசுப்பின் - கொடியைப்போலும் இடையினையுடைய, (102) மடவரல் வள்ளியொடு - பெண்ணாகிய வள்ளியம்மையுடனே, நகை அமர்ந்தன்று - மகிழ்ச்சியைப் பொருந்திற்று; (எ - று.)

விசேடவுரை:—மடவரல்நகை என்றுகூட்டி - (தனக்கு) ஓரறியாமைதோன்றுதலையுடைய நகை எனக் கூறுதலும்ஒன்று. அவளொடு நகையமர்தலின் அறியாமை கூறினார். காமநுகர்ச்சியில்லாத கடவுள் உலகில் இல்வாழ்க்கைநடத்தற்கு இங்ஙனம் நகையமர்ந்தானென்க. இதனை "தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன்,...பெண்பாலுகந்திலனேற்பேதா யிருநிலத்தோர், விண்பாலியோகெய்திவீடுவர்காண் சாழலோ" என்பதனுணர்க.

இனி, (103) 'ஆங்கம்மூவிருமுகனும்' என்பதுமுதல் (118) 'பால் - படஇயற்றி' என்பதுவரையுமுள்ள அடிகளால், முருகக்கடவுளின் பன்னிரு திருக்கைகள் அப்பிரானது ஆறுதிருமுகங்களின் செயலுக்கு ஏற்பத் தொழில்செய்வதனைக் கூறுவான் கருதி, நான்கு அடிகளாற் பொதுவாகக் கைகளின் சிறப்பைக் கூறுகின்றார்:—

ஆங்கம், மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்
ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்

பதவுரை:—(103) அம் மூ இரு முகன்உம் - அந்த ஆறுமுகங்களும், ஆங்கு (தாம் செய்யும்) அத்தொழில்களிடத்து, முறை நவின்று ஒழுகலின் - (செய்யவேண்டிய) முறைமைகளைப் பழகி நடத்தலினால், (அம்முகங்களுக்குப் பொருந்த),—(104) ஆரம் தாழ்ந்த - முத்தாரந் தங்கப்பெற்ற,—அம் பகடு மார்பில் - அழகிய பெருமையையுடைய மார்பிலே கிடக்கின்ற, (105) செம்பொறி வாங்கிய - (உத்தம இலக்கணமாகிய) சிவந்த (மூன்று) வரியினையும் (தம்மிடத்தேவந்து பொருந்துமாறு) வாங்கிக்கொண்டனவும், மொய்ம்பின் சுடர்விடுபு - வலிமையினாலே சுடரையுடைய படைக்கலங்களை யெறிந்து, (அதனால்), (106) வண் புகழ் நிறைந்து - மிக்கபுகழ் நிரம்பப்பெற்று,

வசிந்து வாங்கு - (விட்டபடைக்கலங்களாற் பகைவரின் மார்பைப்) பிளந்து (அவற்றைமீட்டு) வாங்குவனவுமான, நிமிர் - பெருகிய, தோள் - பன்னிரண்டுகைகளில்,—(எ - று.)

விசேடவுரை:—'(105) செம்பொறிவாங்கிய (106) தோள்' என்றார், மார்பிலுள்ள வரி தோளளவும் வந்துகிடந்தமைதோன்ற: "வரையகன் மார்பிடை வரையு மூன்றுள" என்றார், சிந்தாமணியாரும். சுடரை யுடைய படைக்கலங்களை 'சுடர்' என்றது - ஆகுபெயர். வாங்கிய தோள், நிறைந்து வாங்கு தோள், நிமிர்தோள் என இயையும். வசிந்துஎன்பது - தன்வினை பிறவினையிரண்டற்கும்பொது: இங்கே, பிறவினை. அசுரர்முதலியோரையழிக்குங்காலத்து முருகக்கடவுள் தன் பன்னிருகைகளிலும் படைக்கல மேந்துவனுதலால், 'சுடர்விடுபு வாங்குதோள்' என்று அக்கைகளைக் கூறினார்; (58) 'அறுவேறு வகையினஞ்சுவரமண்டி' என்றதனாலும் இஃது உணரப்படும். இனி, (105) செம்பொறி - சிவந்த மூன்று வரிகளையும், வாங்கிய - (பகைவரின் வலிமையைப்) போக்கிய, மொய்ம்பின் - வலிமையையுங் கொண்டு, சுடர் விடுபு - ஒளிவிட்டு, (106) வண் புகழ் நிறைந்து—, வாங்கு நிமிர் - வளையவேண்டுமிடம் வளைந்து நிமிரவேண்டுமிடம் நிமிர்ந்த, தோள் என்று உரைத்து, (106) வசிந்து [தான் பிளவுபட்டு] என்பதனை, (114) தொடியொடுகொட்ப (115) மணியிரட்ட என மேலேகூட்டி ஒருரையும் கூறுவர்: இவ்வுரைக்குப் போர்செய்யாக் காலத்து அந்தக்கைகள் இங்ஙனமிருக்குமென்று அவற்றினியல்பு கூறுகின்றரெனக.

இனி, 107 - 117 - அடிகள்—முருகக்கடவுளின் பன்னிருதிருக்கைகளும் செய்யுஞ்செயலைக் கூறும்:

107-108. விண்செலன் மரபி னையர்க் கேந்தியது
ஒருகை உக்கஞ் சேர்த்திய தொருகை

பதவுரை :—(108) ஒரு கை—,—(107) விண் செலல் மரபின் - (எக்காலத்தும்) ஆகாயத்தேதியங்கும் முறைமையினையுடைய, ஐயர்க்கு - தேவவிருடியர்க்குப் பாதுகாவலாக, ஏந்தியது-எடுத்தது; (108) ஒருகை - (ஏந்திய கைக்குஇணைத்த) ஒருகை, உக்கம்சேர்த்தியது - மருங்கிலேவைத்தது; (எ - று.)

விசேடவுரை:—(103) ஒழுகலின், (107) ஐயர்க்கேந்தியதொருகை, (108) உக்கஞ்சேர்த்தியதுஒருகை என இங்ஙனே உக்கஞ்சேர்த்துதல்முதலியன நிகழ்கைக்கும் ஒழுகுவதைக் காரணமாக்கி இயைக்க. முருகக்கடவுளின்ஆறுமுகங்களும் தத்தமக்கென்றுஒருதொழிலை மேற்கொண்டு செய்தலால், அவற்றிற்கு ஏற்ப, அவனுடைய பன்னிரண்டுகைகளில் ஒவ்வொருகை ஒவ்வொருசெயல் செய்கின்றதென்க.சூரியனுடைய வெம்மையைப் பல்வகையுயிர்களும் பொறுக்கமாட்டா என்று நினைத்துத் தமது அருளினால் அந்தச்சுடரொடு திரிந்து அதன் வெம்மையைப் பொறுப்பவரான முனிவரைப் பாதுகாக்க எடுக்கவே அந்தக்கை உலகத்தைத் தாங்கிக் காத்ததாயிற்று:

இதனால், இந்தக்கை (91 - 92) ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் தோற்றுவித்த முகத்திற்கு ஏற்பத் தொழில்செய்ததாயிற்று. உலகத்துயிர்கட்குச் சூரியனின் வெம்மையாலுளதாகும் வருத்தந்தீர்க்க ஒரு சார் இருடியர் அந்தச்சூரியனுடன் திரிவரென்பதை "நிலமிசை வாழ்ந ரலமரல்தீரத், தெறுகதிர்க்கனலிவெம்மை தாங்கிக், காலுணவாகச்சுடரொடு கொட்கும், அவிர்சடை முனிவரும்" என்ற புறநானூற்றாலும் அறியலாம். மனமும் முகமும் கையும் ஒருதொழிலைச் செய்தலால் அதற்கு இணைந்த கை மருங்கிலே கிடந்தது.

நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை
110. அங்குசங் கடாவ வொருகை

பதவுரை:—(110) ஒரு கை அங்குசம் கடாவ - ஒருகை தோட்டியைச் செலுத்தாநிற்க, (109) ஒரு கை - (அதனோடு இணைந்த) கை, நலம் பெறு கலிங்கத்து - செம்மைநிறத்தைப்பெற்ற ஆடையையுடைய, குறங்கின் மிசை - துடையின்மேலே, அசை இயது - கிடந்தது; (எ - று.)

விசேடவுரை:—தன்னைவழிபடுவாரிடத்து வரும்போது யானைமேல்வந்து அருள்செய்தல் இயல்புஆதலால், இக்கைகள் (94) காதலினுவந்து வரங்கொடுத்த முகத்திற்கு ஏற்றதாகும். யானையேறுவார் ஒருகையால் தோட்டியைச் செலுத்த, அவருடையமற்றைக் கைத் துடையின்மேலிருத்தல் இயல்பு.

110-111: இருகை
ஐயிரு வட்டமொ டெஃகு வலந்திரிப்ப

பதவுரை :—(110) இரு கை - இரண்டுகைகள், (111) ஐ - வியப்பையும், இரு - கருமையையுமுடைய, வட்டமொடு - பரிசையுடனே, எஃகு - வேற்படையையும், வலம் திரிப்ப - வலமாகச் சுழற்றாநிற்க,—

விசேடவுரை:—'திரிப்ப' என்ற செயவெனெச்சம், (112) விளங்க, (113) பொலிய, (114) கொட்ப, (115) இரட்ட, (116) பொழிய, (117) சூட்ட, (118) இயற்றி என்று தொடரும்: இனி, (111) திரிப்பமுதலிய செயவெனெச்சங்களை யடுக்கி, (108) ஒருகை (107) ஐயர்க்குஏந்தியது, (108) ஒருகை உக்கஞ்சேர்த்தியது எனக் கிழோடு முடித்தலும் ஒன்று. (111) ஐய - அழகையுடைய, இரு - பெரிய, வட்டமொடு எனினுமாம். வட்டமொடு எஃகு வலந்திரிப்பது, அசுரர்வந்துவேள்வியைக் கெடாமல் அவரை யோட்டுதற் பொருட்டாகும்: ஆகவே, இக்கைகள் (96) வேள்வி ஓர்க்கும் முகத்திற்கு ஏற்ற தொழில்செய்வனவாம்.

111-113: ஒருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய

பதவுரை:—(முனிவர்கட்குத் தத்துவங்களைக்கூறி உரையிறந்த பொருளை யுணர்த்துங்காலத்து),—(111) ஒருகை—,—(112) மார்

பொடு விளங்க - மார்போடே விளங்காநிற்க,—ஒரு கை—,—(113) தாரொடு பொலிய - மார்பின்மாலை தாழ்ந்ததனோடு (சேர்ந்து) அழகு பெற,—(எ - று.)

விசேடவுரை:—கடவுள் மௌனத்துடனே ஞானமுத்திரையைக் காட்டியவண்ணம் தானேயிருந்து பரம்பொருளைக் காட்டித்தர, வாயில்லாக்குடத்துள் நீர் நிறைந்தாற்போல ஆனந்தமயமான ஒளி மாணாக்கர்க்கு நிறையுமென்க: ஆகவே, இக்கைகள் (97 - 98) எஞ்சிய பொருள்களை விளக்கும் முகத்திற்கு ஏற்றனவாம்.

ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப, ஒருகை
115. பாடின் படுமணி யிரட்ட

பதவுரை:—(113) ஒருகை—,—(114) கீழ் வீழ் - கீழ்முகமாகச் செல்லுகின்ற, தொடியொடு - தொடியென்னும் அணிகலத்துடனே, மீமிசை கொட்ப - மேலேசுழன்று (களவேள்விக்கு) முத்திரை கொடுப்ப,—ஒருகை—, (115) பாடு இன் - ஓசை இனிதாகிய, படு - ஒலிக்கின்ற, மணி - மணியை, இரட்ட - மாறியொலிக்கப்பண்ண,—(எ - று.)—பாடு - ஓசை.

இனி, ஒருகை கீழ் - (பகைவருடலைக்) கீழ்ந்து [கிழித்து], வீழ் - விரும்பி யணியப்பெற்ற, தொடியொடு—, மீமிசைகொட்ப - மேலே (படைக்கலமெறிதலாற்) சுழலாநிற்ப, ஒருகை—, பாடு-பெருமையும், இன் - இசையினினிமையுமுடைய, படுமணி - ஒலிக்கின்ற வீர மணியை, இரட்ட என்று உரைத்தலும் உண்டு.

விசேடவுரை:—இந்தக்கைகள் (99 - 100) களவேள்விவேட்கின்றமுகத்திற்கு ஏற்றவாறு காண்க. களவேள்விக்கு முத்திரை கொடுத்தற்குக் கையைத் தூக்க வேண்டியிருத்தலால், கையிலணிந்த தொடி கீழ்விழுவதாகும்.

115-117. ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட

பதவுரை:—(115) ஒருகை—,—(116) நீல் நிறம் விசும்பின் - நீல நிறத்தையுடைய மேகத்தாலே, மலி துளி-மிக்க மழையை, பொழிய-பெய்வியா நிற்க,—ஒரு கை—,—(117) வான் அரமகளிர்க்கு - தேவலோகத்து வாழ்கின்ற தேவமங்கையர்க்கு, வதுவை சூட்ட-மணமாலையைச்சூட்டாநிற்க,—(எ - று.)

விசேடவுரை:—உலகில் நிகழ்த்தும் இல்வாழ்க்கை இனிது நடத்தற்கு ஒருகை மழை பொழிவிக்க, மற்றொருகை இல்வாழ்க்கை நிகழ்த்தற்பொருட்டு மணமாலை சூட்டியதாதலால், இவ்விருகைகளும் (100 - 102) வள்ளியொடுநகையமர்ந்த முகத்திற்குஏற்பத் தொழில் செய்குவனவாயின. மழைபெய்தல் உலகில் இல்வாழ்க்கை இனிது

நடத்தற்கு ஏதுவா மென்பதை "நீரின்றமையா துலகெனின் யார் யார்க்கும், வானின்றமையாதொழுக்கு" என்ற திருக்குறளினாலும் உணர்க. அரமகளிர் = அமரமகளிர்.

119. ஆங்கப், பன்னிரு கையும் பாற்பட வியற்றி

பதவுரை:—ஆங்கு - அவ்வாறு, அ பன்னிரு கைஉம் - அந்தப் பன்னிரண்டு கைகளும், பால் பட - (முகத்தின்) பகுதியிலே படும் படி, இயற்றி - தொழில் செய்து,—(எ - று.)—இயற்றி (125) சேறலும் என்க. பன்னிரு கையும் - இனைத்தென வறிந்தசினைக்கிளவிக்கு உம்மை கொடுக்கப்பட்டது.

முகம் கை என்ற இவற்றின் செயலைக் கூறியபின், இனி திருச்சீரலைவாய்ச் செல்லும் வகையை 125 - ஆம் அடிவரையிற் கூறுவர்:

அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே

பதவுரை :—(119) அந்தரம் பல்லியம் கறங்க - ஆகாயத்திலுள்ள தேவதுந்துபியென்னும் பறைஒலிக்கவும்,—திண் காழ் (120) வயிர் - திண்ணிய வயிரத்தையுடைய ஊதுகொம்பு, எழுந்து இசைப்ப - மிக்கொலிக்கவும்,—வால் வளை ஞரல - வெள்ளிய சங்கு முழங்கவும், (121) உரம் தலைக்கொண்ட உரும் இடி முரசமொடு - வலியைத் தன்னிடத்தேகொண்ட பேரிடியின் இடிக்கும் ஓசையையுடைய வீரமுரசுடனே, (122) பல் பொறி மஞ்ஞை - பலபீலிகளையுடைய மயில், (அந்தக் கடவுளின் ஆணையினாலே), வெல் கொடி - வென்றெடுத்த கொடியிலே யிருந்து, அகவ - ஒலியா நிற்க,—(123) விசும்பு ஆறு ஆக - ஆகாயமே வழியாக, விரை செலல் முன்னி - விரைந்து செல்லுதலை மேற்கொண்டு, (124) உலகம் புகழ்ந்த - நன்மக்கள் புகழ்ந்த, ஓங்கு உயர் - மிகவோங்கிய, விழு சீர் - சிறந்த புகழினையுடைய, (125)—அலைவாய் - நாமனூரலைவாயென்னுந் திருப்பதியிலே, சேறல் உம் - ஏறவெழுந்தருளுதலும், நிலைஇய - (அவற்கு) நிலைபெற்ற, பண்பு-குணமாம்; (எ - று.)

(77) குன்றமர்ந்துறைதலுமுரியன்: அதாஅன்று, (82) வேழமேற்கொண்டு, (118) இயற்றி,—(119) கறங்க (120) இசைப்ப ஞரல, (122) அகவ,—(123) முன்னி, (125) அலைவாய்ச்சேறலும் அவற்கு நிலைஇய பண்பு என முடியும். (82) வேழமேல்கொண்டு (118) இயற்றி (123) முன்னி (125) சேறலும் உரிய பண்புஎன்க: அங்ஙன்செல்லுமிடத்துப் (119) பல்லியங்கறங்க, (120) வயிரிசைப்ப, வளை ஞரல, (122) மஞ்ஞைக்கொடி யகவுமென்க.

விசேடவுரை :— முருகக்கடவுட்குக் கோழிக்கொடியேயன்றி, மயிற்கொடியும் உண்டென்பர். இனி, பலபொறிகளையுடைய மயிலும்

வெற்றிக்கொடியாகிய கோழியும் ஒலிக்க என்றலும் உண்டு. அலைவாய்த்திருக்கப்பெற்ற தலமாதலால், இதற்கு 'அலைவாய்' என்று பெயராயிற்று: இது - இக்காலத்தில், திருச்செந்தூரென்று வழங்குகிற செந்திற்பதியாகும்: இதனை, நச்சினார்க்கினியர், நாமனூரலைவாயென்பர். "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே".

125:—அதாஅன்று:—பதவுரை:—அது அன்று - அதுவல்லாமல்,—

(126) 'சீரை தைஇய' என்பதுமுதல் (176) 'அசைதலும் உரியன்' என்பது ஈறாக வுள்ள பகுதிகள், திருவாவிநன்குடியில் அப்பரமன் தங்கியிருத்தலைக் கூறும்: அங்ஙன் தங்குமிடத்து நான்முகனுக்கு நேர்ந்த குறைதீரவேண்டித் திருமால் முதலியோர் முப்பத்துமூவர்தேவரோடும் பதினெண்தேவகணங்களோடும் மற்றும் உள்ளவரோடும் அந்தத்தலத்து வருவதைக் கூறத்தொடங்கி (126 - 137) அடிகளால் முனிவர் முன்னேசெல்வதைக் கூறுவர்:—

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானின்
உரிவை தைஇய வூன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த வுண்டியர் இகலொடு
செற்ற நீக்கிய மனத்தினர் யாவதுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புக

பதவுரை:—(126) சீரை தைஇய உடுக்கையர் - மரவுரியை உடுத்த உடையாகவுடையவரும், சீரொடு (127) வலம்புரி புரையும் வால் நரை முடியினர் - அழகுடனே (வடிவினாலும் நிறத்தினாலும்) வலம்புரிச்சங்கை யொத்திருக்கின்ற வெள்ளிய நரைமுடியையுடையவரும், (128) மாசு அற இமைக்கும் உருவினர் - (எக்காலத்தும் நீராடுதலால்) அழுக்கில்லாமல் விளங்குகின்ற உடம்பையுடையவரும்,—மானின் (129) உரிவை தைஇய - கிருட்டிணாசினம் போர்த்ததும், ஊன் கெடு - (விரதங்களை மேற்கொண்டு பட்டினிகிடத்தலால்) தசை கெட்டுள்ளதுமான, மார்பின் - மார்பிலே, (130) என்பு - எலும்புகள், எழுந்து - (கோவையாகத்) தோன்றி, இயங்கும் - உலாவுகின்ற, யாக்கையர் - உடம்பினையுடையவரும்,—நல் பகல் - (எப்பொருள்களையும் நுகர்தற்கு) நன்றாகிய பகற்பொழுதுகள், (131) பல—, உடன்கழிந்த - சேரக்கழிந்த, உண்டியர் - உணவினையுடையவரும்,—இகலொடு - மாறுபாட்டுடனே, (132) செற்றம் - செற்றத்தினையும், நீக்கிய - போக்கிய, மனத்தினர் - மனத்தையுடையவரும்,—யாவதும் - சிறிதும், (133) கற்றோர் அறியா அறிவினர் - (பலவற்

றையும்) கற்றோரால றியப்படாத இயற்கையறிவை யுடையவரும், கற்றோர்க்கு (134) தாம் வரம்பு ஆகிய தலைமையர் - (பலவற்றையுங்) —கற்றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையையுடையவரும், —காமமொடு (135) கடுஞ்சினம் கடிந்த காட்சியர் - ஆசை யோடே கடியசினத்தையும் போக்கின அறிவையுடையவரும், இடும்பை (136) யாவதும் அறியா இயல்பினர் - (தவத்தினால் மெய்வருத்தம் உளவாலும் மனத்தினால்) வருத்தஞ் சிறிதும் அறியப்படாத இயல்பினையுடையவருமான, (137) துனி இல் - (ஒருவருடனும்) வெறுப்பில்லாத, காட்சி - நல்ல அறிவினையுடைய, முனிவர்—,(136) மேவர - உள்ளத்திற் பொருந்துதல்வர, (137) முன் புக - முன்னே செல்லவும்,—(எ - று.)

விசேடவுரை:—முனிவர்களின் தோற்றத்தையும் தன்மையை யும் இவ்வடிகள் தன்மைநவிற்சியணிபட இனிது விளக்குதல் காண்க. பிரமனுக்கு நேர்ந்த சாபத்தைத் தீர்க்கவேண்டித் திருமால் முதலியோர் ஆவிநன்குடியிற் செல்கையில், முனிவர் முன்னே புக்கன ரென்க.

126 - 130: சீரை தைஇய வுடுக்கைய ரென்பதற்கு - மரவுரி யைக்காவியில்தோய்த்தல் முதலியன செய்த உடுக்கைய ரென்றலு முண்டு. விரதம்பற்றிப் பட்டினி கிடத்தலால் உடம்பிலுள்ள தசை வற்றி மார்பினெலும்புகள் கோவையாக வெளியெழுந்தியங்கு மென்க. 'சீரை தைஇய வுடுக்கையர், என்பெழுந்தியங்கும் யாக்கையர்' என்ற விடத்து, "தோலுடுத்து என்பெழுயாக்கையன்" என்ற குமரகுரு பரர்வாக்குக் காணத்தக்கது. 130-134:—நன்பகல் பலவுடன் கழிந்த உண்டியர்-பலதினங்களை உணவின்றியே கழித்தவர்: இது, மாஸோபவாஸங்கூறியதென்பர்: இத்தொடர் வடநூன்முடிபு. இகல் - பகைமை: பகைமை நெடுங்காலம்நிகழ்வது செற்றம் என, இவ்வேறுபாடு அறிதற்கு உரியது. இயற்கையறிவையுடையோராத லால், இவரறிவு கற்றோராற் சிறிதும் அறியப்படாதென்க. இனி, யாவதும் என்ற இடத்து 'யாவையும்'என்று பாடங்கொண்டு,யாவை யும் கற்றோர் - கற்கவேண்டுவன எல்லாவற்றையும் கற்றவர் எனப் பொருளுரைத்தலும் உண்டு. கற்றோர்க்கு வரம்பாகிய தலைமையர் - கல்வியைக்கரைகண்டவரென்றவாறு: 135 - 136: கோபம் நீட்டித்து நிற்பின் சினமெனப்படு மென்பர். இடும்பை யாவதும் அறியாவியல் பினர் என்ற இடத்து, "இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத் தைக், கையாறுக் கொள்ளாதா மேல்" என்ற திருக்குறள் காணத் தக்கது.

(138) 'புகைமுகந்தன்ன' என்பது முதல், (142) 'மேவலரின்னரம் புளர' என்பது வரையில், அங்குக் கந்தருவர் யாழ்வாசித்தலைக் கூறும்:

புகைமுகந் தன்ன மாசில் தூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்

நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர

பதவுரை:—(138) புகை முகந்து அன்ன - புகையைமுகந்தாலொத்த, [முகந்தபுகையையொத்த], மாசு இல் தூ உடை - அழுக்கு ஏறுத சுத்தமான உடையினையும், (139) முகை வாய் அவிழ்ந்த - மொட்டுக்கள் வாய் நெகிழப்பெற்ற, தகை - மாலை, சூழ் - சூழ்ந்த, ஆகத்து - மார்பினையுமுடைய, (140) செவி நேர்பு வைத்த - எஃகு செவியாலே (சுருதியை) அளந்து (நரம்பைக்) கட்டின, செய்வு உறு - சுற்றுதல்பொருந்திய, திவவின் - வார்க்கட்டினையுடைய, (141) நல் யாழ் - நன்றாகிய யாழின் இசையிலே, நவின்ற - பயின்றதனுலான, நயன் - ஈரத்தை, உடை - உடைய, நெஞ்சின் - நெஞ்சினுலே, (142) மெல் மொழி மேவலர் - (எக்காலமும்) மெல்லிய வார்த்தைசொல்லுதலைப் பொருந்திய கந்தருவர், இன் நரம்பு உளர - இனியநரம்பை வாசிக்க, (எ - று.)

விசேடவுரை:—'புகைமுகந்தன்ன' என்றாராயினும் உடைக்கு உவமையாதற்கு உரியது புகையே யாதலால், முகந்த புகையன்ன உடை என்க. ஆடைக்குப் புகை உவமைகூறப்படுவதை, "புகை விரிந்தன்ன பொங்குதுகில்," "ஆவியன்ன பூந்துகில்" முதலிய இடங்களிலுங் காண்க. தகைதல் - கட்டுதல்: கட்டப்படுதலின், மாலைக்குத் தகையென்று பெயராயிற்று. செவியென்றது - இங்கு, எஃகுசெவியினை: எஃகுசெவியாவது - தோற்செவி மரச்செவி எஃகு செவி என்னும் மூவகைச்செவியிலும் தலையான கூரியசெவி. (138) உடையையும், (139) ஆகத்தையுமுடைய (142) மென்மொழி மேவலரென்க.

(143) "நோயின்று" என்பதுமுதல் (147) மகளிர்என்பது வரையில் கந்தருவமகளிர் கந்தருவருடன் விளங்குதலைக் கூறும்:—

நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலையர் இன்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்க

பதவுரை:—(143) நோய் இன்று இயன்ற யாக்கையர்-(மக்களுக்கு வருகின்ற) நோய் இல்லையாமாறு இயன்றுள்ள உடலினையுடையவரும், மாவின் (144) அவிர் தளிர் புரையும் மேனியர்-மாமரத்தினது விளங்குகின்ற தளிரை யொத்த நிறத்தையுடையவரும், அவிர் தொறும்-விளங்குந்தோறும், (145) பொன் உரை கடுக்கும் திதலையர்-பொன்னுரைவிளங்கினுற்போலுந் தேமலையுடையவரும், இன் நகை (146) பருமம் தாங்கிய-கண்ணுக்கினிய ஒளியினையுடைய பதினெண்கோவையாகிய இடையணியை யணிந்த, பணிந்து ஏந்து அல்குல் - (தாழவேண்டியஇடம்) தாழ்ந்து (உயரவேண்டிய இடம்) உயர்ந்த அல்குலினை யுடையவரும், (147) மாசு இல் - குற்றமில்லாத

வருமான, மகளிரொடு - (கந்தருவ) மகளிருடனே, மறு இன்றி விளங்க - குற்றமில்லாமல் விளங்காநிற்க,—(எ - று.)

விசேடவுரை:—கந்தருவர் யாழ் வாசிக்கும்பொழுது கந்தருவ மகளிர் உடன்விளங்குவரென்க, பொன்னுரை-பொன்னை உரைகல்லில் உரைத்தஉரை. திதலைக்குப் பொன்னுரை உவமை. அல்குல் - இடை.

அந்தத்திருவாவிநன்குடியில் நான்முகனுடைய குறைதீரவேண்டி முனிவர்முன்செல்லக் கந்தருவர் இனிய நரம்புளர அவர்மகளிர் உடன் விளங்கத் திருமால் முதலியோர் செல்வதைக் கூறக்கருதி, 148-151- அடிகளால் திருமாலைக் கூறுகின்றார்:—

கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்று
அழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும்

பதவுரை:—(*148*) கடுவொடு - விஷத்துடனே, ஒடுங்கிய தூம்பு உடை - உள்ளே கிடந்த துளையினையுடைய, வால் எயிறு-வெள்ளிய பற்களையும், (*149*) அழல் என உயிர்க்கும் - நெருப்புஎன்னும்படி பெருமூச்சுக்கொள்ளுகின்ற, அஞ்சு வரு கடு திறல் - (கண்டார்க்கு) அச்சந்தோன்றுகின்ற கடிய வலிமையினையுமுடைய, (*150*) பாம்பு—, பட - அழியும்படி, புடைக்கும் - அடிக்கின்ற, பல் வரி கொடு சிறை-பலவரியினையுடைய வளைந்த சிறகினையுடைய, (*151*) புள் - கருடனை, அணி - அணிந்த, நீள் கொடி - நீண்ட கொடியினையுடைய, செல்வனும் - சீமானாகிய திருமாலும்,—(எ - று.)

விசேடவுரை:—மிடற்றிலுள்ள நஞ்சு பல்லின்துளைவழியாக வெளித்தோன்றுதலால், 'கடுவொடொடுங்கிய தூம்புடைஎயிறு' என்றார். எயிறு - காளி காளாத்திரி யமன் யமதூதி என நான்காம் என்பர்.

151 - 154 - அடிகளால் உருத்திரமூர்த்தியைக் கூறுகின்றார்:—

வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்

பதவுரை:—(*151*) வெள் ஏறு - வெண்ணிறமுள்ள இடபத்தை, (*152*) வலவயின் - வலப்புறத்திலே, உயரிய - வெற்றிக்கொடியாக எடுத்தவனும், பலர் புகழ் திணி தோள் - பலரும் புகழ்கின்ற வலிமையினையுடைய தோள்களையும், (*153*) இமையா முக்கண் - இமைத்தலில்லாத மூன்றுகண்களையுங் கொண்டவனும், உமை அமர்ந்து விளங்கும்- இறைவி(ஒருபாகத்தே) பொருந்தி விளங்கப்பெற்றவனுமான, (*154*) மூ எயில் முருக்கிய - திரிபுரங்களையெரித்த, முரண்

மிகு - மாறுபாடு விளங்கப்பெற்ற, செல்வனும் - உருத்திர மூர்த்தியும்,—(எ - று.)

விசேடவுரை:—"வெள்ளேறு வலவயினுயரிய"— "ஏற்று வலனுயரிய" என வருவது காண்க. வலவயினுயரிய-வெற்றியினால் மேம்பட்ட எனினுமாம். வலவயின் வெள்ஏறு உயரிய என்று இயைத்து, வலம்வயின்-வெற்றிக்களத்திலே, வெள்ஏறு-வெள்ளிய ஏற்றினை, உயரிய - உயர்த்த, செல்வன் என்றுமாம்.

155-159:—அடிகளால் இந்திரனைக் கூறுகின்றார்:—

நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
எருத்த மேறிய திருக்கிளர் செல்வனும்

பதவுரை:—(155) நூறு பத்து அடுக்கிய நாட்டத்து-நூற்றைப் பத்து முறையடுக்கிய [ஆயிரமான] கண்களையும், நூறு பல் (156) வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து-நூறு என்னும் எண்ணுகிய பல வேள்விகளைச் செய்துமுடித்ததனாற்பெற்ற (பகைவரை) வென்று கொல்கின்ற வெற்றியினையும்,—(157) ஏந்திய ஈர் இரண்டு மருப்பின் - (நுனிமுன்புறமாகத்) தூக்கியுள்ள நான்காகிய தந்தங்களையும், எழில் நடை - அழகினையுடைய நடையினையும், (158) தாழ் பெரு தட கை - (நிலத்திலே) தொங்குகின்ற பெரிய வளைவினையுடைய கையினையுமுடைய, உயர்த்த - (யாவராலும்) சிறப்பித்துக்கூறப்படுகின்ற, யானை - ஐராவதமென்னும் யானையின், (159) எருத்தம்-புறக்கழுத்திலே, ஏறிய - ஏறிவீற்றிருக்கின்ற, திரு - செல்வத்தினால், கிளர் - விளங்குகின்ற, செல்வனும் - இந்திரனும்,—(எ - று.)

விசேடவுரை:—இந்திரன் ஆயிரங்கண்களையுடையானெனவும், அவனுடைய யானையாகிய ஐராவதம் நான்குதந்தங்களையுடையதெனவும் நூல்கள் கூறும். நூறு அசுவமேதயாகஞ் செய்தவரே இந்திர பதவி பெறுதற்கு உரியராதலால், 'நூறுபல்வேள்விமுற்றிய' எனப்பட்டது. உயர்த்த - உயர்ந்த என்பதன் விகாரமெனக்கொண்டு உரைத்தலுமாம். "தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்".

160 - 165:—அடிகள் - திருமால் முதலியோர் திருவாவிநன் குடியில் முருகக்கடவுளைக் காண்பதற்குக் காரணம், பூமியிலே வருமாறு நான்முகனுக்கு ஏற்பட்ட சாபம் என்பதனைக் கூறும்:

நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்

தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டி

பதவுரை :—(160) நால் பெரு தெய்வத்து - நான்கு பெருந்தெய்வங்களாகிய திக்பாலகர்களையுடையதும், நல் நகர் நிலைஇய-நன்றாகிய ஊர்கள் நிலைபெற்றதும், (161) உலகம் காக்கும் ஒன்று கொள்கை புரி - உலகத்துஉயிர்களைப் பாதுகாக்கின்ற ஒருகொள்கையையே விரும்பின, (162) பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக - பலரும்புகழ்கின்ற திரிமூர்த்திகளும் தலைவராக இருத்தலினாலே, (163) ஏமுறு - இன்புறுகின்றதுமான, ஞாலம் தன்னில் - இந்தப் பூமியிலே, தோன்றி - வந்து தோன்றுதலாலே, (164) தாமரை பயந்த - தாமரையாற் பெறப்பெற்றவனும், தா இல் ஊழி - அழிவில்லாத மிகப்பல காலத்தை(த் தன் வாழ்நாளாக) உடையவனுமான, (165) நான்முகன் ஒருவன் சுட்டி - நான்குமுகங்களையுடைய ஒருத்தன் [பிரமதேவன்] காரணமாக,—(எ - று.)—'சுட்டி' என்ற இந்தவினையெச்சம், (174) 'காண' என்பதனோடு இயையும். (163) தோன்றி (165) சுட்டி (174) காண என்க. (151) செல்வனும், (154) செல்வனும், (159) செல்வனும் (165) நான்முகவொருவற்சுட்டி, (163) ஞாலந்தன்னில்தோன்றி (174) காண என்று இயைத்து உரைத்தலும் உண்டு.

விசேடவுரை:—நாற்பெருந்தெய்வங்களாவார் - கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு என்னும் நான்கு பெருந்திசைகட்குப் பாலகரான இந்திரன் யமன் வருணன் குபேரன் என்ற இவர். ஞாலமானது, நாற்பெருந்தெய்வத்தையுடையது: நன்னகர் நிலைபெற்றது; உலகங்காக்கும் ஒருகொள்கைபுரி மூவரும் தலைவராக இருத்தலாலே ஏமுறுகின்ற தென்க. நான்முகனுக்கு ஏற்பட்ட சாபமாவது—முருகக்கடவுள் அசுரரையழித்து இந்திரன்மகள் தெய்வயானையை மணந்தபோது, தம்கையிலுள்ள வேற்படையை நோக்கி, 'நமக்கு எல்லாம்தந்தது இவ்வேல்' என்ன, அப்போது அருகேயிருந்த பிரமதேவன், 'இவ்வேலுக்கு இப்பெருமை நம்மால் வந்ததே' என்றான்: உடனே முருகக்கடவுள் 'நமதுவேலுக்குச் சக்தி கொடுப்பவன் நீயோ?' என்று சினந்து, 'இங்ஙனம் கூறிய நீ பூமியைச் சேர்க' என்று கூறியது என்ப.

(165 - 174) இவ்வடிகள் - முப்பத்துமூவர்தேவரும், பதினெண் தேவகணங்களும் (திருமால் முதலியவரோடு) உடன்காணவந்தமையைக் கூறும்:—

காண்வரப்
பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட

உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காண

பதவுரை:—(165) காண்வர - அழகுபொருந்த, (166) பகலில் தோன்றும் - பகல்போல(த் தெளிவாக)க் காணப்படுகின்ற [மயக்கமற்றிருக்கின்ற], இகல் இல் - மாறுபாடு இல்லாத, காட்சி - அறிவையுடையவரும், (167) நால் வேறு இயற்கை - நான்காகிய வேறுபட்ட இயல்பினையுடைய, பதினொருமூவரொடு-முப்பத்து மூவரொடு, (168) ஒன்பதிற்று இரட்டி - பதினெட்டுவகையான, உயர்நிலை பெறீஇயர்-உயர்நிலையைப்பெற்ற தேவகணங்களும், (169) மீன் பூத்து அன்ன தோன்றலர் - நட்சத்திரங்கள் (வானத்திற்) பூத்ததுபோன்ற தோற்றமுடையவரும், மீன் சேர்பு (170) வளி கிளர்ந்து அன்ன செலவினர் - மீன்களுலாவுகின்ற இடத்தைச் சேர்ந்து காற்று எழுந்தாலொத்த விரைந்த நடையையுடையவரும், வளியிடை (171) தீ எழுந்து அன்ன திறலினர் - காற்றிலே நெருப்பு எழுந்தாற்போன்ற வலிமையையுடையவரும், தீ பட (172) உரும் இடித்து அன்ன குரலினர்-நெருப்புப்பிறக்கும்படி இடியேறு இடித்தாற்போன்ற குரலினையுடையவருமாகி, விழுமிய - சிறந்த, (173) தம் உறு குறை மருங்கில் - தாம் அடைந்துள்ள குறைவிஷயத்தில் [குறைதீர்த்தலை என்றபடி], பெறும்முறை கொண்மார் - பெறவேண்டியமுறையிலே கொள்ள வேண்டி, (174) அந்தரம் கொட்பினர் - அந்தரமார்க்கத்திலே சூழுதலுடையராய், உடன் வந்து காண - ஒருசேர வந்துகாணும்படியாக,—

விசேடவுரை:—திருமால்முதல் பதினெண்தேவகணங்கள் ஈருகக் கூறப்பட்ட இவர்கள் வானத்தில்தோன்றி வரும்போது விண்ணில் மீன்பூத்தாற்போன்ற தோற்றமும் காற்றெழுந்தாலொத்த விரைந்த நடையுமுடையராயிருந்தனர்: அன்னர், வளியிடைத் தீயெழுந்தன்ன திறலினர்: தீப்பட உருமிடித்தன்ன குரலினரென்க. சாபத்தால் அயன் பூமியில்வந்து விடவே, அவர்கள் தமதுகாத்தல்முதலிய தொழில் தடைப்பட்டதனுல் அக்குறையைப் பண்டுபோலப் பெறக் கருதி முருகக்கடவுளைக்காண அந்தரக் கொட்பினராய் வந்தனரென்க. 166:—பகலில்தோன்றும் - அருக்கனைப்போலத் தோன்றுகின்ற என்று உரைத்தலுமுண்டு. இனி, பகலில் - (ஒருபொருளைப்) பலவாமாறு பகுத்துக்காண்பதில், தோன்றும் - (வேறுபடத்) தோன்றுகின்ற, இகல் - மாறுபாடு, இல் - தம்முளில்லாத, காட்சி - அறிவினையுடைய எனினுமாம். பகலில் தோன்றும் இகலில் காட்சி (167) என்ற தொடர், நால்வேறுஇயற்கைப் பதினொருமூவர்க்கு அடைமொழி. பதினொருமூவர் - முப்பத்துமூவர்: இவர்களை நால்வேறியற்கையரென்றது - வசுக்கள்எண்மர், உருத்திரர்பதினொருவர், அருக்கர்பன்னிருவர், அசுவினிதேவர் இருவர் என்று நான்குவகையாகப் பகுத்துக்கூறுதலானென்க: "எண்மர் பதினொருவ ரீராறுவரோரிருவர்" என்ற பொய்கையார்வாக்கையுங்காண்க. 168:—ஒன்பதிற்றிரட்டி யுயர்நிலைபெறீஇய ரென்றது - பதினெண்தேவகணங்களை. பதினெண்தேவகணங்கள் - தேவர் அசுரர் தைத்தியர்

கருடர் கின்னரர் கிம்புருடர் இயக்கர் விஞ்சையர் இராக்கதர் கந்தருவர் சித்தர் சாரணர் பூதர் பைசாசர் நட்சத்திரங்கள் நாகர் ஆகாயவாசிகள் போகபூமியோர் என இவர்: பெறீஇயர் - பெற்றவர்; வினையாலணையும் பெயர். இங்கு (173) கொண்மார் என்பது, "மாரைக்கிளவி" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தின்படி 'காண' என்ற காலக்கிளவியோடியைந்தது.

175. தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவிநன்குடி அசைதலு முரியன்

பதவுரை:—(175) தா இல் கொள்கை மடந்தையொடு - வருத்தமில்லாத அறக்கற்பினையுடைய தெய்வயானையாருடன், சில் நாள் - சிலநாள், (176) ஆவிநன்குடி - ஆவிநன்குடியென்னும் ஊரிலே, அசைதலும் - இருத்தலும், உரியன்—; (எ - று.)

விசேடவுரை:—'தாவில் கொள்கை' எனவே, அறக்கற்பாயிற்று. ஆவியென்பவன் இருந்த இடமாதலால், ஆவிநன்குடியென்றுபெயர்: இதனை, ஆவினன்குடி யென்று எழுதுகின்றனர்: நூல்களில் 'பொதினி' என்றுவழங்கி, பழனியென்று இக்காலத்து வழங்குவதே இந்த ஆவிநன்குடியென்பர். பொதினி ஆவியென்னும் அரசனுடையதென்பதை "நெடுவேளாவி, அறுகோட்டியானைப்பொதினி," "நெடுவேளாவி, பொன்னுடைநெடுநகர்ப்பொதினி" என்பவற்றால் அறிக. இனி, நச்சினார்க்கினியர் கூறுவது வருமாறு:—சித்தன் வாழ்வுஎன்ற ஊர் முற்காலத்து ஆவிநன்குடிஎன்று பெயர் பெற்றது என்றுமாம்: அதனை, 'நல்லம்பர் நல்லகுடியுடைத்துச் சித்தன் வாழ்வு, இல்லந்தொறு மூன்றெரியுடைத்து - நல்லரவப், பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியனின்; நாட்டுடைத்து நல்ல தமிழ்" என்ற ஔவையார் வாக்கிலுங் காண்க. சித்தனென்பதும் - முருகக்கடவுளுக்கு ஒரு திருநாமம்.

(137) முனிவர் முற்புக, (142) மேவலர் இன்நரம்பு உளர, (147) மகளிரொடு விளங்க, (151) செல்வனும் (154) செல்வனும் (159) செல்வனும் (167) பதினொரு மூவரொடு (168) பெறீஇயரும், (163) ஞாலந்தன்னில் தோன்றியதனால் (165) நான்முகவொருவற்சுட்டி, (173) தம்பெறுமுறை கொண்மார் (174) அந்தரக் கொட்பினராய் உடன்வந்துகாண, (175) மடந்தையொடு (176) ஆவிநன்குடி அசைதலும் உரியன் என்க..

176: அதாஅன்று—பதவுரை:—அது அன்று - அதுவுமல்லாமல்;—(எ - று.)

177-189 - இப்பகுதி, அந்த முருகக்கடவுள் ஏரகத்துறைதலைக் கூறும்:—

இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்டு

ஆறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்து
ஏரகத் துறைதலு முரியன்

பதவுரை:—(177) இரு மூன்று எய்திய இயல்பினின் - ஆறுகிய (நன்மை) பொருந்திய தன்மையினின்றும், வழாஅது - தவறுமல் நின்று, (178) இருவர் சுட்டிய பல் வேறு தொல் குடி - (தாயும் தந்தையும்ஆகிய) இருவர்குலத்தையும் (உலகத்தார் நன்றென்று) மதித்த பலவாய் வேறுபட்ட பழைய குடியிலே (பிறந்து), (179) அறு நான்கு இரட்டி யாண்டு - இருபத்துநான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டியாண்டு, நல் இளமை - நல்லிளமையை, (180) ஆறினில் - (வேதங்கூறிய) வழியிலே, கழிப்பிய - (பிரமசரியத்தை மேற்கொண்டு) போக்கியவரும், (அதன்பின்), அறன் நவில் கொள்கை - இல்லறத்திறம்பயின்ற கோட்பாட்டினையுடையவரும், (181) மூன்று வகை குறித்த முத்தீ செல்வத்து - மூன்றுவகையாக வடிவமைத்து வளர்க்கப்படுகின்ற (காருகபத்தியம் ஆகவனீயம் தட்சிணுக்கினி என்ற) மூன்றுதீயாகிய செல்வத்தினையுடையவருமான, (182) இரு பிறப்பு ஆளர் - (தாய்வயிற்றிற்பிறப்பும் பூணூல் பூண்டு காயத்திரியைப் பெறும் ஞானப்பிறப்பும் ஆகிய) இருவகைப் பிறப்பினையுமுடைய அந்தணர், (183) ஒன்பதுகொண்ட மூன்று புரி நுண் ஞாண் - ஒன்பது இழைகளைக்கொண்டு இயன்ற மூன்று புரியாகிய நுண்ணிய பூணூலைத்தரித்தலுடனே, (184) புலரா காழகம் புலர உடீஇ - (நீராடும்போது நனைந்தது) உலராதஆடையை (உடம்பில் தானே கிடந்து)உலரும்படி உடுத்து, (185) உச்சி கூப்பிய கையினர் - தலைமேலே குவித்துவைத்த கைகளையுடையவராய், தன் புகழ்ந்து - (முருகனாகிய) தன்னைத் துதித்து, (186) ஆறுஎழுத்து அடக்கிய அரு மறை கேள்வி - ஆறெழுத்துக்களை (த் தன்னிடத்தே) கொண்ட (கேட்டற்கு) அருமையான (இரகசியமாகக்) கேட்கப்படுதலையுடைய மந்திரத்தை, (187) நா இயல் மருங்கின் - நாக்கு அசையும் அளவிலே, நவில - பயிலும்படி, பாடி - உச்சரித்து,—(188) விரை உறு நறு மலர் ஏந்தி - மணம்மிக்க நறியமலரை எடுத்து,—(182) பொழுது அறிந்து நுவல - தக்கசமய மறிந்து துதித்து அருச்சிக்க,—(188) பெரிது உவந்து - (அதற்கு) மிகவும் மகிழ்ந்து, (189) ஏரகத்து - ஏரகமென்ற தலத்தில், உறைதலும் உரியன் - இருத்தலும் உரியவன்; (எ - று.)

விசேடவுரை:—(177) இருமூன்று என்பதுமுதல் (182) இருபிறப்பாளர் என்பது வரையில், அந்தணரின் சிறப்பைக் கூறும்:

அவ்வாருன அந்தணர் ஏரகத்தில் முருகக்கடவுளை வழிபடுவதை (182) பொழுது...(188) ஏந்தி என்ற பகுதி தெரிவிக்கும்.

(180) கொள்கையினையும் (181) செல்வத்தினையுமுடைய (182) இருபிறப்பாளர், (183) ஞாணுடனே (184) காழகம் உடீஇ, (185) உச்சிகூப்பிய கையினராய், புகழ்ந்து (187) பாடி (188) ஏந்தி (182) நுவல, (188) உவந்து, (189) ஏரகத்திருத்தலும் உரியன்என்க. ஏரகமென்பது -சோழ நாட்டிலுள்ள சுவாமிமலையென்பர், ஒருசாரார்: "காவிரிபுறம்பு சுற்று மேரகமமர்ந்த பச்சைமயில் வீரா" என்ற திருப்புகழும் காண்க.* மலைநாட்டிலிருப்பதோர் திருப்பதி யென்பர், ஆசிரியர் நச்சினர்க்கினியர்: "சீர்கெழுசெந்திலும் செங்கோடும் வெண்குன்றும், ஏரகமு நீங்காவிறைவன்" என்று சிலப்பதிகாரத்தில் வருமிடத்து, அரும்பதவுரைகாரர் 'வெண்குன்று - சுவாமிமலை' என்று எழுதியதனுல், அவரும் ஏரகம் சுவாமிமலையினும் வேருன ஒருதலமென்று கொண்டிருப்பதாகத்தெரிகின்றது.† இக்காலத்தில் உடுப்பி என்று வழங்குவதை, நச்சினர்க்கினியர் முதலியோர் ஏரகமென்று கருதியிருக்கலாமென்று தோன்றுகின்றது.‡ (180) 'ஆறினிற்கழிப்பி' என்ற பாடமும் உண்டு.

(177)—இருமூன்று ஏந்திய இயல்பு - ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆருகிய நன்மை பொருந்திய தன்மை. இயல்பினின்என்பதற்கு - வைதிகஆசாரத்தினின்று என்று உரைப்பாருமுளர். (178)— இருவர்ச்சுட்டியகுடி என்றதனுல், தாய்வழியிலும் தந்தைவழியிலும் தூய்மையுற்றுச்

---

*மற்றும், திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழில் ஆறுபடை வீடுகளையும் அடைவுபடுத்திக்கூறும் சிறுபறைப் பருவச் செய்யுளில், "அரிய மறைபுகலும் ஏரகமும்" எனக் கூறியிருத்தலின், அரிய மறையாகிய பிரணவப் பொருளை முருகன் சிவபிரானுக்கு ஓதிய பதி சுவாமிமலையாதலின், ஏரகமே சுவாமிமலை எனப் பெறப்படலாம்.

† இதனுல், அரும்பதவுரையாசிரியர் நச்சினர்க்கினியர் காலத்து ஏரகம் என்பது சுவாமிமலைக்கு வழங்கவில்லையென்பதும், அந்நிலை மாறி 15-ஆம் நூற்ருண்டினராகிய அருணகிரிநாதர் காலத்திலிருந்து பயில வழங்க சுவாமிமலையே ஏரகமாயிற்று என்பதும் விசதம். "ஏரகவெற்பெனும் அற்புத மிக்க சுவாமிமலைப்பதி" என்றதும் காண்க.

‡ தமிழ் லெக்ஸிகனில் "ஏரகம்" என்பதற்கு (1) Udipi, South Kanara, sacred to Skanda, one of the six Padai - vidus—(see திருமுருகு: ஏரகத் துறைதலுமுரியன்) (2) Swamimalai in the Tanjore Dt. (Modern usage) என்றும் எழுதியுள்ளது. Modenr usage, என்றதால் யான் மேற்காட்டிய முடிவு வலியுறும்.

[ஸி. ஜெகந்நாதாசார்யர்.]

சிறந்த குடியினர் என்பது, பெறப்படும். குடி - கௌண்டிந்யர், காச்யபர், வாதூலர் என்றாற்போல்வன. (179 -180):—அறுநான்கு- ஆறுகியநான்கு: எனவே, இருபத்துநான்கு: அவற்றின் இரட்டி - இரட்டிப்புக்கொண்டது: நாற்பத்தெட்டு: "நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தான்" என்று இறையனாரகப்பொருளுரையிலும் தொல்காப்பியக்களவியலுரையிலும் வருவதும் காணலாம். (181) காருகபத்தியம் ஆகவனீயம் தட்சிணாக்கினி என்ற மூன்றுவகை அக்கினிக்கும் வெவ்வேறுவடிவம் கல்பசாஸ்திரத்திற் கூறப்பட்டிருத்தலால், 'மூன்றுவகை குறித்த முத்தீ' என்றது: நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய மூன்றுவகையைக் கருதின......முத்தீ என்பர், நச்சினார்க்கினியர். முத்தீ - ஒன்று வேதத்தை வழங்கவும், ஒன்று தேவர்கட்குத் தட்சிணைகொடுக்கவும், ஒன்று பூலோகத்தை ரட்சைபண்ணவும் இவ்வாறுகிய முத்தீ என்பாருமுளர். (182) பொழுது அறிந்து நுவலஎன்பதற்கு-உதயகாலத்தும் மத்தியான்னகாலத்தும் அத்தமனகாலத்தும் தாபனம் அநுட்டானம் பூசை ஆகிய மூன்றுதொழிலையும் முயன்றுசெய்யஎன்பது ஒருரை. (186) மறை - இரகசியம்: இரகசியமாகக் கேட்கப்படுவதுஎனவே, மந்திரமாயிற்று; ஆறெழுத்து அடக்கிய அந்தமந்திரமாவது 'நம: குமாராய' என்பது.

189 :—அதாஅன்று—பதவுரை :—அது அன்று - அதுவும்லலாமல்,—(எ - று.)

இனி, 190 - 217:—அடிகளில் அந்தமுருகக்கடவுளின் குன்றுதோறும் ஆடுந்தன்மையைக் கூறுவர்: (முருகக்கடவுள் குறிஞ்சிநிலத்திற்குத் தலைவனாதலால், குறிஞ்சிநிலமாகிய குன்றுதோறும் ஆடுவன்எனக. திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவிநன்குடி திருவேரகம்என்பவற்றோடு, குன்றுதோறாடல் பழமுதிர்சோலை என்ற இரண்டையுஞ்சேர்த்து இவ்வாறும் குமாரக்கடவுளின் படைவீடுகள் [படைவீடு - இராசதானி] என்று கூறும் மரபு உண்டு: கந்தபுராணத்தில் கடவுள்வாழ்த்திலும் இவ்வாறினுக்கும் தனித்தனியே வணக்கங்கூறப்பட்டுள்ளது. "சகலமுதலாகிய அறுபதிநிலைமேவிய தடமயிலதிலேறியபெருமாளே", "ஆறுதிருப்பதியில் விளங்குபெருமாளே" என்று திருப்புகழில் அருணகிரிநாதரும் கூறியுள்ளார்: ஆயினும் குன்றுதோறாடல் என்பதை எப்படி ஒருதலமாகக் கொள்வது என்பது விளங்கவில்லை. குன்று தோறு - மலைகள் தோறும், ஆடல் - ஆடுவது என்பது பொருளாவதன்றி, 'குன்றுதோறாடல்' என்று, ஒரு ஸ்தலம் இருப்பதாகத் தெரியவில்லை.)

190\. பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ் சாந்தணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்

நீடமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்கான்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை யணைத்த கூந்தல்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிணர் ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் மேனி திளைப்ப வுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குரும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பு ஆர்த்தன்ன வின்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையி னியல வேந்தி
மென்றோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே

பதவுரை:—(190) பைங்கொடி - பசிய இலையையுடைய கொடியாலே, நறை காய் - நறுநாற்றத்தையுடைய சாதிக்காயை, இடை இடுபு - நடுவேயிட்டு,—வேலன் - படிமத்தான், (191) அம் பொதி புட்டில் விரைஇ - அழகினையுடைத்தாய்ப் பொதிதலையுடைய தக்கோலமென்பதன் காயைக் கலந்து, குளவியொடு - காட்டுமல்லிகையுடனே, (192) வெள் கூதாளம் - வெண்தாளியையும், தொடுத்த - கட்டின, கண்ணியன் - கண்ணியனாய்,—(193) நறு சாந்து அணிந்த கேழ் கிளர் மார்பின்-நறிய சந்தனத்தைப்பூசிய நிறம்விளங்குகின்ற மார்பினையுடைய, (194) கொடுந் தொழில் வல் வில் கொலைஇய - கொடியதொழிலையுடைய வலியவில்லாற் கொல்லுதலைச் செய்த, கானவர் - குறவர், (195) நீடு அமை விளைந்த தேன் கள் தேறல் - நெடிய மூங்கிலிலேயிருந்து முற்றிய தேனாற்செய்த கள்ளின் தெளிவை, (196) குன்றகம் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து - மலையிடத்துச் சிறிய ஊரிலேயிருக்கின்ற சுற்றத்தாருடனே (உண்டு) மகிழ்ந்து, (197) தொண்டகம் சிறுபறை - தொண்டக மென்னுஞ் சிறுபறையினது தாளத்திற்கேற்ப, குரவை அயர - குரவைக் கூத்தாட,—(198) விரல் உளர்ப்பு - விரலினால் அலைத்தலாலே, அவிழ்ந்த - (வலிய மலர்த்தப்பெற்று) மலர்ந்த, வேறுபடு நறுங் கான் - வேறுபடுகின்ற நறியமணத்தினையுடைய, (199) குண்டு

சுனை பூத்த - ஆழ்ந்தசுனையிற்பூத்த (பூவினாற்செய்த), வண்டுபடு - வண்டுகள் விரும்பிமொய்க்கின்ற, கண்ணி - தலையிற்சூடும் மாலையினையும், (200) இணைத்த கோதை - (இதழ்பறித்துக்) கட்டின மாலையையும், அணைத்த கூந்தல் - சேர்த்தின கூந்தலினையுமுடையராய்,—(201) முடித்த குல்லை - (இலையைத்) தலையிலேயணிந்த கஞ்சங்குல்லையினையும், இலை உடை நறு பூ - இலையையுடைய நறிய பூங்கொத்துக்களையும், (202) செங் கால் மராஅத்த வால் இணர் - செவ்விய காலினையுடைய கடம்பமரத்திடத்தனவான வெள்ளிய கொத்துக்களையும், இடை இடுபு - நடுநடுவேவைத்து, (203) சுரும்பு உண - சுரும்பு (தேனை) உண்ணும்படி, தொடுத்த—, பெருந் தண் மா தழை - பெரியகுளிர்ந்த அழகினையுடைய தழையை, (204) காழ் திருந்து மேனி திளைப்ப உடீஇ - வடங்கள் திருந்தும் மேனியிடத்தே [இடையிடத்தே] அசையும்படி யுடுத்து,—(205) மயில் கண்டு அன்ன - (சாயலுடைமையால்) மயிலைக் கண்டாற்போன்றுள்ள, மடம் நடை மகளிரொடு - மடப்பம்பொருந்தியநடையை யுடைய மகளிருடனே,—(206) செய்யன் - சிவந்த நிறத்தனாய், சிவந்த ஆடையன் - சிவந்த ஆடையுடுத்து, செம்அரை (207) செயலை தண் தளிர் துயல்வரும் காதினன் - சிவந்த அரையினை யுடைய அசோகின் குளிர்ந்த தளிர் அசையும் காது பொருந்தி, (208) கச்சினன் - கச்சைக்கட்டி, கழலினன் - கழலை யணிந்து, செச்சை கண்ணியன் - வெட்சிமாலைசூடி, (209) குழலன் - குழலை யூதி, கோட்டன் - கொம்பைக்குறித்து, குறு பல்லியத்தன் - சிறிய பல்லியங்களை யெழுப்பி, (210) தகரன் - ஆட்டுக்கிடாயைப் பின்னிட்டு, மஞ்ஞையன் - மயிலையேறி, புகர் இல் சேவல் அம் (211) கொடியன் - குற்றமில்லாத கோழிக்கொடியைஉயர்த்து, நெடியன் - (தான் வேண்டிய வடிவைக் கொள்ளுதலாற் பிள்ளையாயிராமல்) நெடுகவளர்ந்து, தொடி அணி தோளன் - தொடியைத் தோளிலே யணிந்து, (212) நரம்பு ஆர்த்து அன்ன இன் குரல் தொகுதியொடு - நரம்பு ஆரவாரித்தாலொத்த இனியமிடற்றையுடைய பாடும் மகளிருடனே, (213) குறும் பொறி கொண்ட - உதரபந்தத்தின்மேலே யுடுப்பதாகக்கொண்டதும், நறு தண் சாயல் - நறிய குளிர்ந்த மென்மையுடையதுமாகி, (214) மருங்கில் கட்டிய - இடையிலே யிறுகக்கட்டிய, நிலன் நேர்பு துகிலினன் - நிலத்தினளவுந்தொங்குகின்ற துகிலினை யுடுத்து, (215) முழவு உறழ் தட கையின் - முழவை யொத்த பெருமையையுடைய (தன்னுடைய) கைகளால், இயல ஏந்தி - பொருந்தத்தாங்கி, (216) மெல் தோள் பல் பிணை - மெல்லிய தோளினையுடைய பலவாகிய மான்பிணைபோலும் மகளிரை, தழீஇ - தழுவி, தலைத்தந்து - (அவர்கள் களவொழுக்கத்தையறிந்து அவர்கட்கு) ஏற்ற இருப்பிடங்கொடுத்து, (217) குன்றுதொறு ஆடலும் - மலைதோறுஞ்சென்று விளையாடுதலும், தன் நின்ற பண்பே - தனக்கு [அந்தமுருகக்கடவுளுக்கு] நிலைநின்ற குணமாம்;

(194) கானவர் (195) தேக்கள் தேறல் (196) கிளையுடன்மகிழ்ந்து (205) மகளிரொடு (197) குரவையயர, (190) வேலன் (192) தொடுத்த

கண்ணியை யுடையனாக, (206) செய்யன் [முருகக்கடவுள்], உடுத்து, (207) அசோகு தளிரசையுங் காதுபொருந்தி, (208) கச்சினைக்கட்டிக் கழலை அணிந்து வெட்சிமாலைசூடி (209) கொம்புஊதிக் குழல் குறித்துப் பல்லியம் எழுப்பி (210) தகரைப்பின்னிட்டு மயிலைஏறி (211) கோழிக்கொடி உயர்த்து, தொடி அணிந்து (214) துகிலை யுடுத்து (212) இன்குரல் தொகுதியோடு (215) தடக்கையின் இயல ஏந்திப் (216) பிணைபோன்ற மகளிரைத் தழுவித் தலைத்தந்து, (217) குன்றுதொறு ஆடுதலும் நின்ற தன் பண்பு என முடிக்க. கானவர் மகளிரோடு குரவை யாடாநிற்க, முருகனாகியவேலன் [முருகக் கடவுளால் ஆவேசிக்கப்பெற்ற வேலன்], கண்ணிசூடியவனாய்ச் செவ்வியனாகி உடுத்தல் முதலியனசெய்து, இன்குரலைக்கொண்ட பாடுமகளிருடனே பிணைபோலும் மகளிரைத் தன்கையினால் பொருந்த ஏந்தித் தழுவிக் கைகொடுத்துக் குன்றுதொறும் ஆடுவன் என்பாரு முளர். இனி, (194) கானவர் (197) குரவையயர, (205) மகளிரோடும், (212) தொகுதியோடும் (216) பல பிணை தழுவி, (206) முருகக்கடவுள் (217) ஆடுவனென்றலும் ஒன்று.

விசேடவுரை:—190-192:—வேலன்- படிமத்தான்: தேவராளன்: பூசாரி: இவன் கையில் வேலைக்கொண்டு முருகனுடைய ஆவேசம் பெற்றுஆடிக் குறிமுதலியனசொல்லுவதாகத் தமிழ்நூல்களில் வழங்குகின்றது: கையில் வேலைக்கொண்டு ஆடுவதனால், வேலன் என்று இவனுக்குப் பெயராயிற்று. இவன் பச்சிலைக்கொடியிலே சாதிக்காயை இடையேயிட்டுத் தக்கோலக்காயைக் கலந்து காட்டு மல்லிகையுடனே வெண்தாளியைச்சேர்த்துக் கண்ணியைத் தொடுத்தனன்: அந்தத் தொடையலைச் செய்யனாகிய முருகக்கடவுள் சூடியுள்ளானென்க. பச்சிலையென்று ஒருகொடி: எல்லாவற்றைக் காட்டிலும் இலை பச்சென்றிருத்தலால், இது இப்பெயர் பெறும்: பச்சிலையென்னது சினையாகிய இலையின் பண்பை முதலின்மேலேற்றி,'பைங்கொடி' என்றார். தக்கோலக்காய் புட்டில்போல இருக்குமாதலால், அதனைப் புட்டிலென்றே கூறினர். குளவி - தாளிப்பூவென்பாரு முளர். கண்ணியன் - வினையெச்சமுற்று.

193 - முதல் 205 - வரை, கானவர் மகளிரோடு குரவையாடுதலைத் தெரிவிக்கும்:—அவற்றுள் 193 - 197 - அடிகள் - கானவர் தேறலை மகிழ்ந்து உண்டு, குரவையாடுதலையும், மேல் 205 - அடிவரையில், கானவருடனே குரவையாடும் மகளிர்வருணனையும் தெரிவிப்பன வாகும். 198 - 205:—வலிய மலர்த்தி வேறுபட்ட [இயற்கையில் மலர்ந்த மலர்க்குஇல்லாத] நறுநாற்றமுள்ளனவும் ஆழமான சுனையிலே பூத்தனவும் வண்டுகள்மொய்க்கின்றனவுமான பூக்களால் தொடுத்த கண்ணியை [தலையிலணியும்மாலையை]யும், இதழ்பறித்துக்கட்டினகோதையையும், சேர்த்துக்கட்டின கூந்தலையும், தழை பேணி (அல்குல்) திளைப்ப உடுத்து மயில்கண்டன்ன மடநடையையுமுடையராகிய (கானவரின்) மகளிர்என்க. மடநடை - மெல்லியநடை: நடை - ஒழுக்கமுமாம். (205) இந்த (க்கானவ) மகளிரொடு (194) கானவர் (197) குரவையயர என்க. 201 - 203 - அடிகள் - கானவமகளி

ருடுத்ததழையின் தன்மையைக் கூறும்: குல்லையையும் இலையுடை நறும்பூக்களையும் மராத்தின் வாலியஇணரையும் இடையிட்டுச் சுரும்புண்ணுமாறு தொடுத்தது, தழையென்க: தழையென்பது - பலவகைப்பூக்களையிடையிட்டு மரவிலைகளாற் கட்டப்பட்டதான உடை: இதனைப் பண்டைக்காலத்தவர் உடையாகக் கொண்டிருந் தனரென்பது, பழைய நூல்களால் தெரியவருகின்றது. (204) உடீஇ என்ற செய்தெனெச்சம், (205) 'அன்ன' என்ற குறிப்புப்பெயரெச் சத்தோடு தொடரும். (212) இன்குரல்தொழுதியொடு என்றும் பாடம்: தொழுதி - பணிபுரியும் மகளிர்கூட்டம். (215) இயலவேந்தி என்ற இடத்து இகல்வே லேந்தி என்றும் பாடமுண்டு. தலைத்தந்து- முதற்கைகொடுத்து இருப்பிடந்தந்து: இப்பொருள், இந்தத் திரு முருகாற்றுப்படைக்கு உள்ள ஓருரையால் விளங்கும். (216) பிணை - உவமவாகுபெயர்.

193 - 194:—சாந்து அணிந்த மார்பினையுடைய கானவரென்க. கொடுந்தொழில்வல்வில் கொலைஇய கானவர்-"கோட்டமை வல்விற் கொலைபிரியா வன்கண்ணர்" என்றது காண்க. கொலைஇய - கொலை யென்ற பெயரினடியாகப்பிறந்த பெயரெச்சம். குலைஇய என்ற பாடத்திற்கு - வில்லைவளைத்த என்க. (195) தேக்கள்ளை மூங்கிற் குழாயிலிட்டு முற்றவைத்த லுண்டு என்பதை "வேய்ப்பெயல் விளை யுட் டேக்கட் டேறல்", "திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்", "தூம்பகம் பழுநிய தீம்பிழி" முதலியவற்று லறியலாம். அமை - மூங் கில். அமை விளைந்த தேக்கள்என்பதற்கு-மூங்கிலரிசியிலுண்டாகச் சமைத்திட்டு இனிமைக்கு இடமாகிய மது என்று உரைப்பாரு முளர்: தேன் + கள் = தேக்கள். தேனென்மொழிவலிவர, ஈறுபோய் வலிமிக்கது: [நன் - மெய். கக] (197) தொண்டகம் - குறிஞ்சி நிலத் துக்குரிய பறை. குரவை-கைகோத்துஆடுங் கூத்து. (198) மலரும் பருவத்து அரும்பை வலியஅலர்த்த, அப்பூ நறுமணம் மிக்கிருக்கு மென்பதை, "திறந்துமோந்தன்ன சிறந்து கமழ் நாற்றத்து" என்ற தனாலும் அறியலாம். (199) பூத்தகண்ணி - பூத்தபூவினால் இயன்ற கண்ணி: ஒற்றுமைநயம்பற்றிப் பூத்தஎன்ற பெயரெச்சம், தனக்கு வினைமுதலாகிய பூவென்ற பொருளினாற் செய்யப்பெற்ற கண்ணி யென்ற பெயரைக்கொண்டு முடிந்தது: பூத்தகண்ணியென்பதைப் பெயரெச்சம், செய்வதாதியறுபொருட் பெயரன்றிப் பிறபெயர் எஞ்ச நின்றதற்கு மேற்கோளாகக் காட்டினர், நன்னூல் விருத்தியுரைகாரர். (205) இன்குரல் - அன்மொழித்தொகை.

206 - 214 - அடிகள் - குன்றுதோறுஆடும் முருகக்கடவுளின் நிலையை வருணிப்பன:—(206) செய்யனுகிச்சிவந்தஆடையுடுத்து, (207) அசோகின் தளிர் காதிற்பொருந்தி, (208) கச்சைக்கட்டிக் கழலை யணிந்து வெட்சி மாலைசூடி (209) பல்லியங்களையும்எழுப்பி (210) தகரைவிட்டிட்டு மயிலையேறி, சேவலின் (211) கொடியையுயர்த்து (214) நிலம்வரைத்தொங்கத் துகிலையுடுத்துள்ளானென்க. 206-இல், சிவந்தஆடையன்என்று வந்திருத்தலாலும் (213) குறும்பொறிக்

கொண்ட (214) மருங்கிற்கட்டிய துகிலினன் என வந்ததனாலும் ஆடுவதற்கு ஆக மேலேயணியும்ஆடையை அரையில் உதரபந்தனத்தின்மேற்கட்டி, அங்ஙன் கட்டிய துகிலின் இருநுனிகளையும் தரையிற்படும்படி தொங்கவிட்டுள்ளானென்க. ஒருகால் நாரதமுனிவன் செய்த வேள்வியினின்று கொடுமைகொண்டு எழுந்த தகர் [ஆட்டுக்கிடா] மூவுலகிலுஞ் சென்று நலிய, முருகக்கடவுள் தேவர் முதலியோரின் வேண்டுகோளினால் அதனையடக்கி வாகனமாகக் கொண்டானென்பது சரிதமாதலால், மயிலை முன்னிட்டு வாகனமாகக்கொள்ளும்போது தகரைப்பின்னிடுவ னென்க.

(206) ஆடையன்' என்பதுமுதல் (214) 'துகிலினன்' என்பது வரையிலுள்ள உயர்திணையாண்பாற்குறிப்புமுற்றுக்கள், செய்தெனெச்சப்பொருளை யுணர்த்தின வென்பர்.

நச்சினார்க்கினியர் (194) கானவர் (197) குரவையயர (216) அதனைக்கண்டு மென்றோட்பல்பிணை (215) இயல [இயல - குரவையாடியசைய] (அதனைப் பொருதே) (206) செய்யன், (190) வேலன் (192) கண்ணாரிசூடி, (206) செவ்வாடையுடுத்து...(211) தொடியையணிந்து (214) துகிலையுடுத்து (205) மகளிரோடே (212) தொகுதியுடனே (217) மலைகடோறுஞ்சென்று (216) தழீஇ (215) ஏந்தி (216) தலைத்தந்து (217) ஆடலும்நின்ற தன்பண்பே என்று கூட்டிமுடிப்பர்: அவர் (205) 'மகளிரொடு' என்றது-தன்னைச்சேவிக்கும் மகளிரையும், (212) தொகுதியொடு என்றது - தன்னைச் சேவித்துப்பாடும் மகளிரையுங் காட்டு மென்றுங் கூறுவர்.

217: அதாஅன்று—பதவுரை:—அது அன்று - அதுஅன்றி;

இனி, 244 - அடிகள் வரை மற்றும் முருகக்கடவுளை வழிபடுமாறு காணக் கூடிய இடங்களைக் கூறும்:—

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்

பதவுரை:—(218) சிறு தினை - சிறியதினையரிசியை, மலரொடு விரைஇ - மலர்களோடே கலந்து [பிரப்பரிசியாகவைத்து], மறி அறுத்து - ஆட்டுக்கிடாயை யறுத்து, (219) வாரணம் கொடியொடு - கோழிக்கொடியுடனே, வயின்பட நிறீஇ - (முருகக்கடவுள்) அவ்விடத்தே நிற்கும்படி நிறுத்தி, (220) ஊர் ஊர்கொண்ட - ஊர்தோறும் ஊர்தோறும் (செய்வதாக) எடுத்துக்கொண்ட, சீர் கெழு விழவினும் - தலைமைபொருந்தின விழாவினும்,—(எ - று.)

முருகக்கடவுளைக்கருதிப் பிரப்பரிசிவைத்து மறியறுத்து வாரணக்கொடியோடு அக்கடவுள் நிற்குமாறு ஊர்தோறும் விழாச் செய்தல், பண்டைக்கால மரபு. அவ்வாறான ஊர்விழாக்கள் தோறும் முருகக்கடவுளைக் காணலாமென்க.

221. ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்

பதவுரை:—ஆர்வலர் - (தன்மேல்)அன்புடையவர், ஏத்த - துதிக்குமாறு, மேவரு - விரும்புதல்வருகின்ற, நிலையினும் - இடத்திலும்,—(எ - று.)

தன்னிடம் அன்புடையார் ஏத்துகின்ற இடங்களிலெல்லாம் முருகக்கடவுள் மனம்பொருந்தி யெழுந்தருளியிருப்ப னென்க.

வேலன் தைஇய வெறியயர் களனும்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

பதவுரை:—(222) வேலன் - படிமத்தான், தைஇய - அமைத்து வைத்த, வெறி அயர் களனும் - வெறியாடுகளத்திலும்,—(223) காடும் - காட்டிலும், காவும் - சோலையிலும், கவின் பெறு துருத்திஉம் - அழகுபெறுகின்ற யாற்றிடைக்குறையிலும், (224) யாறும் - ஆற்றங்கரைகளிலும், குளனும் - குளக்கரைகளிலும், வேறு பல் வைப்பும் - (முற்கூறிய இடங்களன்றி)வேறுபட்ட பலவாகிய ஊர்களிலும், (225) சதுக்கமும்-நாற்சந்தியிலும், சந்தியும்-முச்சந்தியிலும் ஐஞ்சந்தியிலும், புது பூ கடம்பும் - புதிய பூக்களையுடைய கடம்பமரத்திலும், (226) மன்றமும் - ஊர்க்கு நடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடியிலும், பொதியிலும் - அம்பலத்திலும், கந்துஉடை நிலையிலும் - ஆதீண்டு குற்றியையுடைய இடத்திலும்,—(எ - று.)

விசேடவுரை:—வேலன் வெறியாடுதல், "வெறியறி சிறப்பின் வெவ்வாய்வேலன்" என்ற தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரத்தால் அகத்திற்கேயன்றிப் புறத்திற்கும் வரு மென்க. முச்சந்தியேயன்றி ஐஞ்சந்தி கூறப்படுதலை "சந்தியைந்து தம் முடன்கூடி வந்துதலைமயங்கிய பெருமன்றத்து" என்ற சிலப்பதிகாரத்திலும் காண்க. (222) வேலன் தைஇ வெறியயர்களனும் என்றும் பாடமுண்டு.

மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பி யைதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுடை யுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை

துணையுற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியொ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியன்நகர்

பதவுரை:—(227) *மாண் தலைகொடியொடு* - மாட்சிமைப்பட்ட தலைமையையுடைய கோழிக்கொடியோடு, *அமைவர மண்ணி* - பொருந்துமாறு வைத்து, (228) *நெய்யோடு ஐயவி அப்பி* - நெய்யோடு வெண்சிறுகடுகையும் அப்பி, *ஐது உரைத்து* - (தான் வழிபடுதற்குஉரிய மந்திரத்தை வெளியிற் கேட்காமல்) மெல்ல உச்சரித்து, (229) *குடந்தம்பட்டு* - வழிபட்டு, *கொழுமலர் சிதறி* - அழகிய மலரைச் சிதறி, (230) *முரண் கொள் உருவின் இரண்டு உடை உடீஇ* - (தம்மில்) மாறுபாடுகொண்ட நிறத்தினையுடைய இரண்டு ஆடைகளை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக உடுத்து, (231) *செம் நூல் யாத்து* - சிவந்த நூலைக் கையிலே காப்புக்கட்டி, *வெள் பொரி சிதறி* - வெள்ளிய பொரியைத் தூவி, (232) *மதவலி நிலைஇய மா தாள் கொழு விடை* - மிகுதியையுடைய வலி நிலை பெற்ற பெருமையையுடைய காலைக்கொண்ட கொழுவிய கிடாயின், (233) *குருதியொடு* - இரத்தத்தோடே, *விரைஇய* - பிசைந்த, *தூ வெள் அரிசி* - தூயவெள்ளரிசியை, (234) *சில் பலி செய்து* - சிறுபலியாக இட்டு, *பல் பிரப்பு இரீஇ* - பலபிரப்பும் வைத்து, (235) *சிறு பசு மஞ்சளொடு* - (அரைத்த) சிறிய பசுமஞ்சளோடே, *நறு விரை தெளித்து* - (சந்தனம் முதலிய) நறுமணமுள்ள பொருளையுந் தெளித்து, (236) *பெருந் தண் கணவீரம் நறுந் தண் மாலை* - பெரிய குளிர்ந்த செவ்வலரிப்பூவால் தொடுத்த நறிய குளிர்ந்த மாலைகளை, (237) *துணை உற* - (தம்மில்) இணையொக்க, *அறுத்து* - அரிந்து, *தூங்க நாற்றி* - அசையத்தூக்கி, (238) *நளி மலை சிலம்பின்* - செறிந்த மலைப்பக்கத்திலுள்ள, *நல் நகர்* - நல்ல ஊர்களை, *வாழ்த்தி* - (பசியும் பிணியும் பகையும் நீங்குக என்று) வாழ்த்தி, (239) *நறு புகை எடுத்து* - நறிய தூபங் கொடுத்து, *குறிஞ்சி பாடி* - (அந்த நிலத்திற்கு ஏற்பட்ட) குறிஞ்சிப் பண்ணைப் பாடி, (240) *இமிழ் இசை அருவியொடு* - முழங்குகின்ற ஓசையையுடைய அருவியுடனே, *இன் இயம் கறங்க* - இனிய வாத்தியங்களும் ஒலிக்க, (241) *உருவம் பல் பூ தூஉய்* - சிவந்த நிறத்தினையுடைய பலபூக்களையுந் தூவி, *வெருவர* (242) *குருதி செம் தினை பரப்பி* - அச்சம் வரும்படி உதிரமளைந்த செந்தினையையும் பரப்பி,—*குறமகள்* - குறச்சாதியிற்பிறந்த பெண்,—(243) *முருகு இயம் நிறுத்து* - முருகனுவக்கும் வாத்தியங்களை வாசிக்கப்பண்ணி, *முரணினர் உட்க* - (தெய்வமில்லையென்று) மாறுபட்டுக் கூறினவர் அஞ்சும்படியாக, (244) *முருகு ஆற்றுப்படுத்த* - முருகக்கடவுள்வரும்படி

வழிப்படுத்தின, உரு கெழு - அச்சம்பொருந்தின, வியன் - அகற்சி பொருந்திய, நகர் - மலைக்கோயிலிலும்,—(எ - று.)

விசேடவுரை:—218-அடிமுதல் முருகக்கடவுள் காட்சியளிக்கும் இடங்களை 9-அடிகளாற் கூறிய ஆசிரியர், பின்னும் குறமகள் வழிபட முருகக்கடவுள் இருக்கும் மலைக்கோயிலை 227 - ஆம் அடிமுதல் 244-ஆம் அடிவரையிற் கூறினர்.

(242) குறமகள் (227) சிறப்புள்ள கோழிக்கொடியொடு பொருந்துமாறு அமைத்து (228) நெய்யோடு வெண்சிறுகடுகை அப்பி, மந்திரத்தை மெல்ல உச்சரித்து (229) மலர்களைத் தூவி வழிபட்டு, (230) வெவ்வேறு நிறங்களையுடைய இரண்டு உடைகளை உடுத்து (231) செந்நூலைக்காப்பாகக்கட்டி, பொரிசிதறி, (232) கொழுத்த கிடாய்களின் (233) உதிரத்தோடு பிசைந்த அரிசியைச் (234) சிறுபலியாகக் கொடுத்து, பலபிரப்பும்வைத்து, (235) மஞ்சள் நீரையும் சந்தனம் முதலிய வாசனைப்பண்டங்களின்நீரையும் (தான் வழிபடுங் கடவுளுள்ள கோயிலிலே) தெளித்து,(236-237) கணவீர மாலையை அசையத்தூக்கி, (238) ஊர்களை வாழ்த்தி, (239) (கடவுளுக்குத்) தூபங்காட்டி, குறிஞ்சிபாடி (240) அருவியொலியோடு பல்லியவொலி முழங்கப் (241) பலநிறப்பூக்களைத்தூவி, (242) இரத்தங்கலந்த செந்தினையைப் பரப்பி, (243) முருகனுவக்கும் வாச்சியங்களை வாசிக்கப்பண்ணி,தெய்வமில்லையென்பார் அஞ்சும்படி (244) முருகக்கடவுள் (தன்மீது) வரும்படி வழிப்படுத்திய மலைக் கோயிலென்க. நகர் - கோயில்: குறிஞ்சி நிலத்து மாதாகிய குறமகள் வழிபடுங் கோயில் ஆதலால், மலைக்கோயிலெனப் பட்டது. கோழிக்கொடியோடு பொருந்தஅமைத்ததும், வெண்சிறுகடுகை நெய்யோடு அப்பியதும், அம்மலைக்கோயிலின்கண் நிகழ்த்திய செயலாகும்.

(227) மாண்டலைஎன்ற இடத்து ஆண்டலை என்றுபாடமாயின், பேய் முதலியவை பலியை நுகராமல் தலை ஆண்மகன்தலையும் உடல் புள்ளின் வடிவமுமாக எழுதின கொடி என்க. (228) நெய்யோடு சிறுகடுகுகளைஅப்புவது - இரட்சைக்காக: இது, கடவுளிடத்துப் பொங்கும்பரிவினாற்செய்யுஞ்செயலாகும். (229) குடந்தம் என்பதை 'தட' என்பதுபோல வளைவை யுணர்த்தும் உரிச்சொல்லாகிய 'குட' என்ற உரிச்சொல்லினடியாகப் பிறந்த பெயரெனக்கொண்டு, குடந்தம் - வணக்கத்தை, பட்டு - பொருந்தி என்று உரைத்தலும் ஒன்று. (231) செந்நூல்யாத்து என்பதற்கு - நூலொழுக்கி எல்லைப் படுத்து என்றுமாம். (232) மதவலி - ஒருபொருட்பன்மொழி. கொழுவிடை - யானைத்திரள் என்று உரை கூறினருமுளர். (234) பல்பிரப்பு இரீஇ - பலபிரப்புக்கூடைகளைவைத்து என்றுமாம். பிரப்பு-தெய்வத்தின்முன்பு குறுணிவீதம் நிவேதனமாகக் கொள்கலனிற் பரப்பிவைக்கும் அரிசிபோன்ற தானியம். (235) சிறுபசு மஞ்சள் - மஞ்சளில் ஒருசாதி விசேடமுமாம். விரை-நறுமணமுள்ள சந்தனம் முதலிய பண்டங்கட்கு ஆகுபெயர். (238) நகர்வாழ்த்தி

என்ற இடத்தில் "பசியும் பிணியும் பகையு நீங்கி, வசியும்வளனுஞ் சுரக்கெனவாழ்த்தி" என்ற சிலப்பதிகாரம் காணத்தக்கது. நகர் - முருகக்கடவுளின் கோயிலென்பாருமுளர். (243) குருதிச்செந்தினை - இரத்தம்போன்ற செந்தினையுமாம். (244) முருகியம் - துடி: தொண்டகப்பறையுமாம். முருகக்கடவுள் ஆவேசமாக வந்து தெய்வத்தன்மை தோன்ற விளங்குதலால், முரணினர் உட்குவ ரென்க. "வேலன் வெறியாட்டயர்ந்த" என்ற தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரத்தில் சிறுபான்மை ஏனையோரும் ஆடுவ ரென்று கொண்டதனால், குறமகளின் வெறியாட்டை இங்குக் கூறினரென்ப.

விழா முதலியவற்றில் முருகக்கடவுளைப் பலரும் வழிபடும் முறையை 245-ஆம் அடிமுதல் நான்கு அடிகளாற் கூறுகின்றார்:—

245. ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோட்டுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட

பதவுரை:—(245) ஆடு களம் சிலம்ப பாடி - அந்தவெறியாடு கின்ற களம் எதிரொலியொலிக்க (அதற்குஏற்பனவற்றைப்) பாடி, (246) கோடு (245) பலஉடன் (246) வாய்வைத்து - கொம்புகள் பலவற்றையுஞ் சேரஊதி, கொடுமணி இயக்கி-கடியஓசையையுடைய மணியையும் ஒலிப்பித்து, (247) ஓடா பூட்கை பிணிமுகம் வாழ்த்தி - கெடாத வலியினையுடைய பிணிமுகமென்னும் பட்டத்துயானையை வாழ்த்தி, (இப்படி), (248) வேண்டுநர் வேண்டிய ஆங்கு எய்தினர் வழிபட - குறைபெறவேண்டுவோர் (தாங்கள் விரும்பியவற்றை) விரும்பினபடி பெற்று நின்று வழிபடாநிற்க,—(எ - று.)

கோடு - ஊதுகின்ற கொம்பு என்ற வாச்சியம். பிணிமுகம் என்பது - முருகக்கடவுள் பவனிவரும் யானையென்பர். இச் சொல்லுக்கு - மயிலென்று உரைத்தலும் உண்டு. (248) எய்தி வழிபட என்றும் பாடமுண்டு.

249. ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே

பதவுரை:—ஆண்டுஆண்டு - (கீழ்க்கூறிய களன் காடு காவு துருத்தி யாறு குளன் வைப்பு சதுக்கம் சந்தி கடம்பு மன்றம் பொதியில் நகர்என்ற) அவ்வவ்விடங்களிலே, உறைதலும் - தங்கு தலும்,—(உரியன்); அறிந்த ஆறு - (யான்) அறிந்தவளவில் (கூறினேன்); (எ - று.)—'உரியன' என்றும், 'கூறினேன்' என்றும் வினைமுற்றுக்கள் வருவித்து முடிக்க.

250 முதல் 295 - வரையில், ஆற்றுப்படுத்துவோன், ஆற்றுப் படுத்தப்படுமவனை நோக்கி 'யான் கூறிய இந்த இடங்களுள் எங்கே யாகிலுஞ் சென்று அந்தமுருகக்கடவுளைத்துதித்து உன்கருத்தைக்

கூறுமளவில், ஆங்குள்ள பணியாளர்கள் முருகக்கடவுளிடம் சென்று உன்வருகையைத் தெரிவிக்க, அக்கடவுள் உன்முன்வந்து அபயமளித்து நீ வேண்டியதைத் தந்தருள்வர்' என்கின்றான். அவற்றுள் (281) 'குறித்தது மொழியாவளவையின்' என்றது வரையில், அக்கடவுளைச்சார்ந்து துதித்துத் தன் கருத்தை வெளியிட்டு வேண்டவேண்டும் வகையை ஆற்றுப்படுத்துவோன் தெரிவித்தல்:—

ஆண்டாண் டாயினு மாக காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவி லொருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்த ரேறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே!
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள!
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்!
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்! எனப்பல
யானறி யளவையி னேத்தி யானாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க்கு அருமையின்
நின்னடி யுள்ளி வந்தனென் நின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோய்! எனக்
குறித்தது மொழியா வளவையின்

பதவுரை:—(250) ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக - (யான் முன்னே கூறிய) அவ்வவ்விடங்களிலே யாயினுமாக (பிறவிடங்களிலேயாயினுமாக), (251) முந்து நீ கண்ட உழி - முற்பட நீ கண்ட போது, (250) காண் தக - அழகு பொருந்த, (251) முகன் அமர்ந்து

ஏத்தி - முகம்விரும்பித் துதித்து, (252) கைதொழூஉ பரவி (முன்னர்) கையை(த்தலைமேலே) கூப்பி வாழ்த்தி, கால் உற் வணங்கி - (பின்னர் அக்கடவுளின்) பாதம் (சிரசிலே) படும்படி தண்டனிட்டு, (253) 'நெடு பெரு சிமையத்து - நெடிய பெரிய இமவானுச்சியிலே, நீலம் பைஞ் சுனை - தருப்பைவளர்ந்த பசிய சுனையினிடத்தில், (254) ஐவருள் ஒருவன் - (பஞ்சபூதங்களின் கடவுளராகிய) ஐவருள் ஒருவனாகிய அக்கினிதேவன், அம் கை ஏற்ப - (தன்னுடைய) உள்ளங்கையிலே வாங்க, (255) அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ - (அருந்ததி யொழிந்த) அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவுபொருந்திய செல்வனே! (256) ஆல் கெழு கடவுள் புதல்வ - கல்லாலின்கீழ் விளங்குகின்ற கடவுளி னுடைய புதல்வ! மால் வரை (257) மலைமகள் மகனே - பெரிய மலையாகிய மலையரசன் மகளான பார்வதியின் மகனே! மாற்றோர் கூற்றே - பகைவர்க்கு யமன்போன்றவனே! (258) வெற்றி வெல் போர் கொற்றவை சிறுவ - (தன்னைவழிபடுவார்க்கு) வெற்றியைத் தருகின்றவளும் (தான்) வெல்லும்போரைச் செய்தவளுமான துர்க்கைக்குப் புதல்வனே! (259) இழை அணி - பூணை யணிந்த, சிறப்பின் - தலைமையினையுடைய, பழையோள் - காடுகாளுடைய, குழவி - குழந்தாய்! (260) வணங்கு வில் - வளையும் வில்லைக்கொண் டுள்ள, வானோர் தானைத் தலைவ - தேவர்களின் சேனைத்தலைவனே! (261) மாலை மார்ப - (இன்பத்திற்குரிய கடப்பம்பூ) மாலையையணிந்த மார்பையுடையவனே! நூல் அறி புலவ-எல்லா நூல்களையும் அறியும் புலவனே! (262) செருவில் ஒருவ - போர்த்தொழிலில் ஒப்பற்றவனாக நிற்பவனே! பொரு விறல் மள்ள - பொருகின்ற வீரத்தினையுடைய இளமைப்பருவத்தோனே! (263) அந்தணர் வெறுக்கை - அந்தண ருடைய செல்வமாக இருப்பவனே! அறிந்தோர் சொல்மலை - சான்றோர் புகழ்ந்து சொல்லப்படுஞ் சொற்களின் கூட்டமாக இருப்பவனே! (264) மங்கையர் கணவ - தெய்வயானையாரும் வள்ளி நாச்சியாருமாகிய மகளிர்க்குக் கணவனே! மைந்தர் ஏறே - வீரர்க்கு இடபமே! (265) வேல் கெழு தட கை சால் பெரு செல்வ - வேல் பொருந்தின பெருமையையுடைய கையாலமைந்த பெரியசெல்வத் தையுடையவனே! (266) குன்றம்கொன்ற - கிரவுஞ்சமலையைப் பிளந்த, குன்றா கொற்றத்து - குறையாத வெற்றியினையுடைய, (267) விண் பொரு நெடு வரை - தேவருலகத்தைத் தீண்டும் நீண்ட மலைகளையுடைய, குறிஞ்சி - குறிஞ்சிநிலத்துக்கு, கிழவ - உரிமை யுடையோனே! (268) பலர் புகழ் நல் மொழி - பலரும் புகழ்ந்து சொல்லும் நன்றாகிய சொற்களையுடைய, புலவர் - (பரசமயத்துள்ள) புலவராகிய யானைகட்கு, ஏறே - சிங்கவேறுபோன்றவனே! (269) பெறல் அரு மரபின் - (பிறர்க்குப்) பெறுதற்கு அரிய முறைமை யினையுடைய, பெரும் பெயர் முருக - பெரும்பொருளையுடைய முருகனே! (270) நசையுநர்க்கு ஆர்த்தும்-(அந்தப்பெரும்பொருளைப் பெறவேணுமென்று) விரும்புகின்றவர்க்கு (அதனை) நுகர்விக்கின்ற, பேர் இசை ஆள - பெரும்புகழை ஆள்பவனே! (271) அலந்தோர்க்கு அளிக்கும் - (பிறரால்) துன்பப்பட்டுவந்தவர்க்கு அருள்புரிகின்ற,

(272) மண்டு அமர் கடந்த - மிக்குச்செய்கின்ற போர்களை முடித்த, நின் - உன்னுடைய, வென்று ஆடு - வென்று அடுதலையுடைய, அகலத்து - மார்பிலே, (271) பொலம் பூண்-பொன்னணிகலமணிந்த, சேஎய் - குமாரக்கடவுளே! (273) பரிசிலர் தாங்கும் - இரந்துவந்தோரை (வேண்டுவனகொடுத்துப்) பாதுகாக்கின்ற, உரு கெழு - உட்குதல்பொருந்திய, நெடு வேஎள்-நெடிய வேளே! (274) பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள் - தேவரும்முனிவரும் ஏத்துகின்ற பெருமைபெற்ற திருநாமத்தையுடைய தலைவனே! (275) சூர் மருங்கு அறுத்த - சூரபன்மாவின் குலத்தை இல்லையாக்கின, மொய்ம்பின்-வலிமையுடைய, மதவலி - மதவலியென்னும் பெயருடையாய்! (276) போர் மிகு பொருந - போரில் வல்ல வீரனே! குரிசில் - தலைவனே! என - என்று, பல - பலவற்றையும், (277) யான் அறி அளவையின்-யான்அறிந்து (நினக்குக்) கூறிய அளவிலே, ஏத்தி - (நீ) துதித்து, ஆனாது - (அவ்வளவினால்) அமையாமல், (278) 'நின் அளந்து அறிதல் - நின் தன்மையையெல்லாம் முற்ற அளவிட்டு அறிதல், மன் உயிர்க்கு அருமையின் - பல்லுயிர்க்கும் அரிதாகையினாலே, (279) நின் அடி உள்ளி வந்தனென் - நின்திருவடியை(ப் பெற வேண்டுமென்று) நினைந்து வந்தேன்: நின்னொடு - உன்னோடு, (280) புரையுநர் இல்லா-ஒப்பாரில்லாத, புலமையோய் - மெய்ஞ்ஞானத்தையுடையோய்!' என - என்று சொல்லி, (281) குறித்தது - (நீ) கருதியதனை, மொழியா - சொல்லாத, அளவையின் - அளவிலே [நீ கருதியதைச் சொன்னாயோ இல்லையோ அவ்வளவிற்குள்],—(எ.று.)

விசேடவுரை:—250.—காண்தக என்பதற்கு - உனது காட்சிக்குத்தக என்று ஒருரை. ஆயினும், உம்மை - ஐயவும்மையாதலால், பிறவிடங்களிலேயாயினுமாக என்று உரைக்கப்பட்டது. 251—முருகக்கடவுளின் தெய்வத்தன்மையைக் கண்டபோது அச்சம் பிறவாது நிற்கவேண்டுமென்றற்கு 'முகனமர்ந்து' என்றது. 253—நீலம் - அந்த இமயத்துச்சியினின்ற நீலநிறத்தையுடைய தருப்பம்: என்றது, சரவணப்பொய்கையை. நீலம் பசுமை கருமை என்ற நிறங்களை அபேதமாகக்கொண்டு கூறுதல், கவிசமயம். நீலப் பைஞ்சுனை என்பதற்கு - நீலமலர்முதலியவற்றைக்கொண்ட சரவணப்பொய்கை யென்றே உரைகூறினுமாம். 254—சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பஞ்சபூதங்கட்குத் தெய்வமாதலால், 'ஐவர்' என்றார்: இத் தன்மையை "பாராதியைந் துக்கும் பன்னுமதிதெய்வங்கள், ஆராயனுதிதேவராம்" என்ற உண்மைவிளக்கத்தாலும், "ஐவகைப் பூதத்திற்கு நாயகரான பிரமா விட்டுணு ருத்திர ஈசுவர சதாசிவர்கள்" என்ற தக்கயாகப்பரணி யுரையாலும் அறியலாம். ஐவருள் ஒருவன் என்றது - உருத்திரனென்னுந் தெய்வத்தின் அமிசமாகிய அக்கினியை: 'அக்கினி அங்கையேற்ப' என்றது - இந்திரன் இறைவனிடத்தினின்று வாங்கிய கருப்பத்தைச் சப்தருஷிகள் வாங்கித் தம்மால் தாங்கமுடியாமையால் அவ்விறைவன் கூறுகிய முத்தீக்குண்டத்திலிட்டதனைக் கருதி. 255.—அறுவர்பயந்த ஆறமர் செல்வ என்றது-கீழ்ச்சொன்ன

வாறு அக்கினியிலிட்டுச் சத்திகுறைந்த கருப்பத்தை முனிவ ரெழுவரும் வாங்கித் தம்மனைவியர் கையிற்கொடுப்ப, அருந்ததி யொழிந்த அறுவரும்விழுங்கிய சூல் முதிர்ந்து சரவணப்பொய் கையில் பதுமப்பாயலிலே பெற, அங்கு ஆறுவடிவாக வளர்ந்த மையைக் கூறியதாம்: "கடவுளொருமீன் சாலினியொழிய, அறுவர் மற்றையோரும் *** நிவந்தோங்கிமயத்துநீலப் பைஞ்சுனைப், பயந் தோரென்ப பதுமத்துப்பாயல்" (பரிபாடல், 5) என்றது காண்க. 256—வரை-மூங்கிலுமாம். 258.—வெல்போர்க் கொற்றவைஎன்றது-மகிஷாசுரனையழித்தவளாதலால். 259.—காடுகிழாளும் இறைவ னுடைய சத்தியாதலால், 'பழையோள் குழவி' என்றது. காடு கிழாள் - வனதுர்க்கை.

261.—மாலை - இன்பத்திற்குஉரியமாலை: அதாவது, கடம்ப மாலை யென்பர். நூல்அறிபுலவ என்பதற்கு-வேதாகமங்கள் முதலிய பலசாஸ்திரங்களையும் ஓதாதுணர்ந்த பண்டிதனே! என்று கருத்துக் காணலாம். 262—பொருவிறல்மள்ள - வீரராயிருப்பார்க்கு வீரனு யிருப்பவனே! என்று உரைத்தாருமுளர்: மள்ளன்என்றசொல் இளமையுடையோன் வீரன் என்ற இரண்டுபொருள் உரைத்தற்கும் ஏற்கும். 265—வேல்கெழுதடக்கைச் சால்பெருஞ்செல்வம்என்றது - வேல்வெற்றியாற் பெற்ற செல்வத்தை. 266 - அசுராவேசம்பெற்ற கிரௌஞ்சமலையை முருகக்கடவுள் வேலாற் பிளந்தானுதலால், 'குன்றங்கொன்ற' என்றது. குறிஞ்சிக்கிழவனுயிருந்தும் குன்றங் கொன்றானென்று கூறிய நயம் காண்க. 267—குறிஞ்சிக்கிழவ - "சேயோன்மேய மைவரையுலகம்" என்றார், தொல்காப்பியரும். 268—முருகக்கடவுளை 'ஏறு' என்றதற்குஏற்பப் பரசமயப்புலவரை யானையாகவும் கல்வியை மதமாகவும் உரைத்துக்கொள்க. 269.— பெயர் - பொருள்: "பெற்ற பெரும்பெயர் பலர் கையிரீஇய" (பதிற்: 90: 23) எனவும், "சொற்பெயர்நாட்டம்" (பதிற்: 21: 1) எனவும் வருவன காண்க. பெரும் பெயரென்றது-மோட்சத்தினை. மதுரைக்காஞ்சி, வரி - 699 உரையுங் காண்க.

272, 273 - மண்டமர்கடந்த நின், அகலத்து - மார்பினுல், பரிசிலர்த் தாங்குகின்றவேள் என்று கூட்டுவாருமுளர்: அகலத்தைக் கொண்ட வேள் என்று சேர்த்தலும்ஒன்று. 274 - இயவுள்-கடவுளு மாம். 275—மிக்கவலிமையுடைமையால் முருகக்கடவுட்கு மதவலி யென்றுஒருபெயர். 276—பொருந - உவமிக்கப்படுவாய்! என்று மாம்: பொருவப்படுமவன், பொருநன்.

281 - 286:—முருகக்கடவுளிடத்துச் சேவிப்போர் புதிதாக வந் தோனைப் பற்றித் தகவுரை கூறுவதைத் தெரிவிப்பன:—

குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவா யிரவலன்

வந்தோன் பெரும! நின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல வேத்தி

பதவுரை:— (281) உடன் குறித்து - (நீ விண்ணப்பஞ்செய் வதை) உடனே மனத்திற்கொண்டு, (282) வேறு பல் உருவின் - வேறுவேறாகிய பலவடிவினையுடைய, குறு பல் கூளியர் - சிறிய பல பூதகணங்களாயிருப்பவர், (283) சாறு அயர் களத்து-விழாநடக்கும் அவ்விடத்தே, (தாங்கள்), வீறு பெற தோன்றி - பொலிவுபெறக் காணப்பட்டு, (284) 'முது வாய் இரவலன் - அறிவுமுதிர்ந்த வாய்மை யினையுடைய புலவனாகிய இரவலன், தான்—, அளியன் - அளிக்கத் தக்கான்: (285) பெரும - பெருமையுடையோனே! (அவன்), நின் வண் புகழ் நயந்து - நினது வளவிய புகழினைக் கூறவிரும்பி, (286) இனிய உம் - (கேட்போர்க்கு) இனியனவும், நல்லஉம் - உறுதிபயப்பனவு மாக, நனி பல ஏத்தி - மிகப்பலவற்றை வாழ்த்தி, (285) வந்தோன் - வந்துள்ளோன்,' என - என்றுகூற,—(எ - று.)

கூளியர்—சேவித்து நிற்போர் என்பர். "நின், கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்" என வருவதுங் காண்க (புறம்: 23)

இனி, 295—அடிவரை ஆற்றுப்படுத்தப்பட்டு முருகக்கடவுளி னிடம் செல்வானுக்கு அக்கடவுள் பிரதியட்சமாகி அருள்புரிவதைக் கூறுவன :

தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பின் தான்வந் தெய்தி
அணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்ச லோம்புமதி யறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி யளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய வுலகத்து
ஒருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி

பதவுரை :—(287) தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின் - தெய்வத்தன்மையமைந்த வலிவிளங்கும் வடிவினையும், (288) வான் தோய் நிவப்பின் - வானைத்தீண்டும் உயர்ச்சியையுமுடைய, தான் - அந்தமுருகக்கடவுள், வந்து எய்தி - (அங்கு) வந்து காணப்பட்டு, (289) அணங்கு சால் உயர்நிலை தழீஇ-அச்சந்தரவல்ல (தனது) பெரு நிலையை உள்ளடக்கி, பண்டை - பழமையான, தன் - தன்னுடைய, (290) மணம் கமழ் தெய்வத்து - மணம் வீசுகின்ற தெய்வத்தன்மை யையுடைய, இள நலம் - (முன்பு இருந்த) இளமையழகை, காட்டி—, (291) 'அஞ்சல் ஓம்புமதி - அஞ்சுவதைவிட்டிடுவாய்: நின் வரவு அறி வல் - உனதுவருகையை (நான்) அறிவேன்,' என - என்று, (292) அன்பு உடை நல் மொழி அளைஇ - (நின்மேல்) அன்புடையனவாகிய நல்லவார்த்தைகளைப் பலகாலும்அருளிச்செய்து, விளிவு இன்று - கெடுதலில்லாமல் [நிரந்தரமாக], (293) இருள் நிறம் - இருண்டநிறத்

தையுடைய, முந்நீர் - கடலினால், வளை இய-சூழப்பெற்ற, உலகத்து- உலகத்திலே, (294) ஒரு நீ ஆகி தோன்ற - உனக்கு ஒப்பார் ஒருவருமில்லையென்று கூறும்படியாகி நீ மேம்பட, விழுமிய - மிகச்சிறந்த, (295) பெறல் அரு பரிசில் - பெறுதற்கு அரிய பரிசிலை, நல்கும் - தருவன்; (எ - று.)

விசேடவுரை:—(287 - 290)—முருகக்கடவுள் தனது தெய்வத் தன்மைகொண்ட ஓங்கியவடிவைக் காட்சிகொடுக்க, அது கண்ணுற்று கண்டுகளித்தற்கு அடங்காமல் மிகப்பெரிதாயிருத்தலால் மருளக் கூடுமென்று, பிறகு தன்னுயர்நிலையை யுள்ளடக்கி இளமை கொண்டவடிவைக் காட்டுவனென்க. அணங்கு சால் உயர்நிலை - வருத்தமமைந்த தெய்வத்தன்மையுமாம். (295) நல்குமதி— “ மியாயிகமோமதி****ஆவயினாறு முன்னிலை யசைச்சொல் ” (இடை - 26) என்ற தொல்காப்பியத்திற்கு மாறாக மதியென்பது - படர்க்கைவினைமுற்றில்வந்தது; இனி, மதியென்பதனை மேலே வருகின்ற ‘பலவுடன்’ என்றதனோடுகூட்டி, மதி பலவுடன் - அறிவுகள் பலவுடனே, பரிசில்நல்கும் என்றுருமுளர். 291 - அறிவம்நின் என்றும், 294 - ஆகத்தோன்ற என்றும் பாடம்.

295 - 317:—இனி, நல்கும் என்றதற்கு வினைமுதலைக் கூறுகின்றான்:—

பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி யகில்சுமந்து
ஆர முழுமுத லுருட்டி வேரல்
பூவுடை யலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம ழலரிறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேண்நின்று
இழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே,

பதவுரை:—(295) பல - (தாம்) பலவும், உடன் - ஒருசேர,—(296) வேறு பல் துகிலின் - வேறுபட்ட பலவாகிய துகில்களைப் போல, நுடங்கி-அசைந்து,—அகில் சுமந்து-அகிலை மேற்கொண்டு,—(297) ஆரம் முழு முதல் உருட்டி - சந்தனமாகிய பெரியமரத்தைத் தள்ளி, வேரல் (298) பூ உடை அலங்கு சினை புலம்ப வேர் கீண்டு - சிறுமூங்கிலினது பூவையுடைய அசைகின்ற கொம்பு தனிப்ப வேரைக்கீண்டு,—(299) விண் பொரு நெடு வரை பரிதியின் தொடுத்த (300) தண் கமழ் அலர் இறால் சிதைய - தேவருலகைத் தீண்டுகின்ற நெடிய மலையினிடத்தில் சூரியமண்டலத்தைப் போல (ஈயால்) வைக்கப்பட்ட தண்ணியவாய்மணக்கின்ற விரிந்த தேன் கூடு சிதையும்படியும், நல் பல (301) ஆசினி முது சுளை கலாவ - நன்றாகிய பல ஈரப்பலாவினுடைய முற்றிய சுளை (தன்னிடத்தே) கலக்கவும், மீமிசை (302) நாகம் நறு மலர் உதிர - மலையுச்சியிலுண்டான சுரபுன்னையின் நறிய மலர் உதிரவும், யூகமொடு (303) மா முகம் முசு கலை பனிப்ப - கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய ஆண்முசுக்களும் நடுங்கவும், பூ நுதல்(304) இரு பிடி குளிர்ப்ப - புள்ளியுள்ள நெற்றியையுடைய பெரிய பெண்யானை குளிரும்படியும், வீசி - அலைவீசி,—பெரு களிறு (305) முத்து உடை வான் கோடு தழீஇ - பெரிய யானையினுடைய முத்தையுடையவாய தந்தங்களை உள்ளடக்கி, (306) நன் பொன் மணி நிறம் கிளர (305) தத்துற்று (306) பொன் கொழியா - நல்லபொன்னும் மணியும் என்பவற்றின் நிறம் விளங்காநிற்கத் தாவிப் பொன்னைக் கொழித்து, (307) வாழை முழுமுதல் துமிய - வாழையினது பெரியமுதல் துணியவும், தாழை (308) இளநீர் விழுகுலை உதிர-தெங்கின் இளநீரையுடைய சீரியகுலை உதிரவும், (அவ்விரண்டினையும்), தாக்கி -, (309) கறி கொடி கரு துணர் சாய - மிளகு கொடியின் கரியகொத்துக்கள் சாயவும், பொறி புறம் (310) மடம் நடை மஞ்ஞை பலவுடன் (311) கோழி வய பெடை (310) வெரீஇ (311) இரிய - புள்ளியையுடைய முதுகினையும் மடப்பத்தையுடைய நடையினையுமுடைய மயில்பலவற்றுடனே கோழியினுடைய வலிவுள்ள பெடை அஞ்சி நிலை கெடவும், கேழலொடு - ஆண்பன்றியுடனே, (312) வெளிற்றின் இருபனை புன் சாய் அன்ன (313) குரூஉ மயிர் யாக்கை குடா அடி உளியம்-வெளிற்றினையுடைய கரியபனையின் புல்லிய செறும்பினையொத்த மயிரினையுடைய உடம்பினையும் வளைந்த அடியினையுமுடைய கரடி, (314) பெருங் கல் விடர் அளை செறிய - பெரிய மலையின் பிளவுகளிலுள்ள முழைஞ்சுகளிலே நெருங்கிச் சேரவும், கரு கோடு (315) ஆமா நல் ஏறு சிலைப்ப - கரிய கொம்பினையுடைய காட்டுப்பசுவர்க்கத்தைச் சேர்ந்த சிறந்த ஏறுகள் கதறும்படியும், சேண் நின்று - மிகவுயரத்திலிருந்து [மலையுச்சியிலிருந்து], (316) இழுமென இழிதரும் - இழுமென்ற ஓசையுண்டாம்படி குதிக்கின்ற, அருவி - அருவியினையும், (317) பழமுதிர் சோலை - பழம்முற்றின சோலைகளையுமுடைய, மலை - மலைக்கு, கிழவோன் - உரியவனான முருகக்கடவுள்; (எ - று.)

(296) நுடங்கி, சுமந்து (297) உருட்டி (298) கீண்டு (304) வீசி (305) தழீஇ, (306) கிளர (305) தத்துற்று (306) கொழியா, (308)

தாக்கி, (309) சாய (311) இரிய (314) செறிய (315) சிலைப்ப (316) இழிதரும் அருவி என்க. (307) துமிய (308) உதிரத்தாக்கி எனவும் இடையே காண்க. அருவியைப்பற்றிக் கூறுவதால், (295) பலவுடன் - அவ்வருவிகள் பலவும் ஒருசேரப் (296) பல்வேறு துகில் போல நுடங்கு மென்க. 297-298: வேரல் - மூங்கிலும், பூவுடை இலங்குசினைகளும், புலம்ப - நடுங்க என்பாருமுண்டு. மீமிசை - மிகவும் உயர்ந்த எனினுமாம். பல் + துகில் = பஃறுகில்.

விசேடவுரை:—"சேயோன்மேய மைவரையுலகமும்" என்றபடி முருகக்கடவுள் வரையுலகத்திற்குத் தெய்வமாதலால், அக்கடவுளை 'மலைகிழவோன்' (317) என்றார்: நச்சினார்க்கினியரும் இவ்வாறே உரைகூறியிருக்கின்றனர். மலைக்கு அடைமொழியாக, சோலையும் அருவியும் வந்தன. இனி, ஒருசாரார், பழமுதிர்சோலைமலைகிழவோன்என்ற தொடர்க்கு - பழமுதிர்சோலையென்ற மலைத்தலத்துக்குக் கிழவன் முருகக்கடவுள் என்றும், பழமுதிர்சோலை யென்பது திருமாலிருஞ்சோலைமலையைக் காட்டுமென்றும், அது முருகக்கடவுளின் படைவீடுகள் ஆறனுள் ஒன்று என்றும் கூறுவர். ஆனால், சிலப்பதிகாரத்திலேயே அழகர்மலை "திருமால் குன்றம்" என்றே வழங்கப்பட்டது காணத்தக்கது. [சிலப்:காடுகாண்காதை—வரி. 91]

(6) கணவன் (11) மார்பினன் (44) சென்னியனுகிய (61) சேயினுடைய (62) சேவடி படருஞ் செம்மலுள்ளமொடு (63) புலம்பிரிந் துறையுஞ் (64) செலவு நீ நயந்தனையாயின், (65) வாய்ப்ப, (66) இன்னேபெறுதி: '(அவனைக்காணும்படி அவன் எங்கேஉறைவான்?' என்றும், 'விரும்பியதை யான் பெறும்வகை எப்படி?' என்றும் வினவுவா யென்னில்,—) (77) குன்று அமர்ந்து உறைதலும் உரியன்: அதுவன்றி, (125) அலைவாய்ச் சேறலும் நிலை இயபண்பு; அதுவன்றி, (176) ஆவினன்குடி யசைதலும் உரியன்: அதுவன்றி, (189) ஏரகத்துறைதலும் உரியன்: அதுவன்றி, (217) குன்றுதோறு ஆடலும் நின்ற தன் பண்பு: அதுவன்றி, (220) விழவினும், (221) நிலையினும், (222) களனினும், (223) காடு கா துருத்தி (224) யாறு குளன் என்ற இவற்றினும், வேறுபல்வைப்பினும், (225) சதுக்கம் சந்தி கடம்பு (226) மன்றம் பொதியில் என்றவற்றிலும் கந்துடை நிலையினும், (244) நகரினும், (248) வழிபட, (249) ஆண்டாண்டு உறைதலும் (உரியன்): அறிந்தவாறே (கூறினேன்): (250) ஆண்டாண்டாயினும் ஆக, (பிறவிடங்களிலும் ஆக): (251) முந்து நீ கண்டுழி முகனமர்ந்து ஏத்தி, (252) கைதொழூஉ, பரவி, வணங்கி, (255) 'செல்வ!...(276) குரிசில்' எனப்பல (277) யான் அறி அளவையின் ஏத்தி, ஆனாது, (279) 'நின்னடி உள்ளிவந்தனென்' (280) என (281) (நீ) குறித்தது மொழியா அளவையின், (282) கூளியர் (281) குறித்து, (283) தோன்றி, (284) 'இரவலன் (286) ஏத்தி, (285) வந்தோன் (284) அளியன்' (285) என, (317) மலைகிழவோன், (288) தான் வந்துஎய்தி, (289) அணங்குசாலுயர்நிலை தழீஇ, (290) இளநலங்காட்டி (291) 'அஞ்சல் ஓம்புமதி; நின்வரவு அறிவல்' என (292)

அன்பு உடை நன்மொழி அளை இ, (293) உலகத்து (294) ஒருநீ ஆகித்தோன்ற (295) பெறல் அரும் பரிசில் நல்கும் என முடிபு காண்க. இங்ஙனம் சுருக்கமான ஒரு பொருளை, ஆங்காங்கு உட்பகுப்பான வெவ்வேறு பொருளையும் விரித்து 317 - அடிகளால் கூறியும், நுணுகி நோக்குமிடத்து அப்பொருள் அணுகிய நிலையதாகத் தோன்றுமாறு அமைந்திருக்கின்ற இதுவே, மாட்டு எனப்படும்: "அகன்று பொருள்கிடப்பினும் அணுகிய நிலையினு, மியன்று பொருண்முடியத் தந்தன ருணர்த்தல், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்றது காண்க. இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள்கொள்ளாது இங்குஒன்றும் அங்கு ஒன்றுமாகப் பதங்களைச் சேர்த்துப் பொருள்கூறுதலை மாட்டு என்றல் ஏலாது என்ப.

(62 - 66) 'சேவடி படருஞ் செம்மலுள்ளமொடு புலம்புரிந் துறையும் செலவுநீ நயந்தனையாயின், நெஞ்சத்து நசைவாய்ப்ப இன்னேபெறுதி' எனவும், (293 - 295) 'உலகத்து ஒருநீ ஆகித் தோன்ற, விழுமிய பெறலரும் பரிசில் நல்கும்' எனவுங் கூறியதனால் ஆற்றுப்படுத்துவோன் தான் பெற்ற கந்தழியைப் பெறுமாறு இரவலனை வழிப்படுத்தியதாகச் செய்யப்பட்டது இப்பாடலென்பர்: 'கந்தழியாவது - ஒருபற்றும் அற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருள்: அது, "சார்பினுற்றோன்றாது தானருவா யெப்பொருட்கும். சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத் தரோ, வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த, தூய்மை யதா மைதீர் சுடர்" என்பதாம்: "உற்றவாக்கையினுறுபொரு ணறுமலரெழுதரு நாற்றம்போற், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" என அதனை உணர்ந்தோர் கூறியவாற்றானுணர்க' என்று நச்சினார்க்கினியர் கூறியவாறு காண்க.

இப்பாடலில் (12 - 41) சூரரமகளிர், (47 - 56) பேய்மகள் அவள் துணங்கையாடுவது, (67 - 71) கூடல், (72 - 76) திருப்பரங்குன்றம் இவற்றின் வருணனையும்; (83 - 118) முருகக்கடவுள் ஆறுமுகங் களும் பன்னிருகைகளுங்கொண்டு செய்யுந்திறனும், (126 - 137) முனிவரின் தன்மைநவிற்சியும், (138 - 147) மனைவியரோடு கந்தருவர் யாழ்வாசித்தலும், (148 - 174) திருமால்முதலிய தேவகணங்கள் முருகக்கடவுளை வந்துசேவித்தலும், (177 - 188) அந்தணர் தன்மையும் அவர் முருகக்கடவுளை வழிபடுதலும், (193 - 205) மகளி ரொடு கானவர் குரவையயர்தலும், (190 - 192) (206 - 217) முருகக் கடவுள் குன்றுதோறாடுதலின் தன்மைநவிற்சியும், (228 - 241) குறமகள் வியன்நகரில் முருகாற்றுப்படுத்தும் திறனும், (253 - 277) முருகக்கடவுளின் துதியும் (296 - 315) மலையருவியின் தன்மையும், இயற்கைச்சுவை பெறக் கூறப்பட்டிருத்தல் காண்க.

இப் பாடலிலுள்ள உபமான உபமேயங்கள் வருமாறு:—(2,3,6 ஞாயிறு காணுதல் X முருகக்கடவுள் தோகையின்மீது காணப்

படுதல், (5) செல்லுறழ்கை, (11) உருள் × பூ, தார், (15) கோபம் × துகில், (43) நெருப்பு × காந்தட்பூ, (75) கண் × சுனைமலர், (81) கூற்றத்தன்னமாற்றருமொய்ம்பு, (82) கால்கிளர்ந்தன்ன வேழம், (87, 88) மதியைநீங்காதமீன் × முகத்தின் இருபக்கத்தும் பூணும் காதின்மகரக்குழை, (96 - 98) முகம் திங்கள் போலத் திசை விளக்கும், (101) கொடி × நுசுப்பு, (121) உருமிடி முரசம், (127) வலம்புரி × நரைமுடி, (138) புகை முகந்தன்ன மாசில் தூவுடை, (143 - 144) மாவின் தளிர் × உடம்பின் நிறம், (145) பொன்னுரை × திதலை, (149) அழல் × உயிர்ப்பு: (166) பகலில்தோன்றும் காட்சி, (169) மீன்பூத்தன்ன தோன்றலர், (170) வளிகிளர்ந்தன்ன செலவினர், (170-171) வளியிடைத்தீயெழுந்தன்ன திறலினர், (172) உருமிடித்தன்ன குரலினர், (205) மயில்கண்டன்ன மடநடை, (212) நரம்பு ஆர்த்தன்ன இன்குரல்தொகுதி, (215) முழவுறழ்தடக்கை, (296, 316) துகில் × அருவி, (299, 300) பரிதி × இருள், (312, 313) பனைவெளிற்றின் புன்சாயன்ன மயிர்.

இந்நூலில்,—அங்குசம், உரு [ரூபம்], கணம், சதுக்கம், சந்தி, சீரை, பலி, மகரம், மந்திரம், மனன், முகம், வட்டம், விடை என்றாற் போல மிகச்சில வடமொழிப்பதங்களே வந்துள்ளன: ஏறக்குறைய இரண்டாயிரம் பதங்களுள்ள இப்பாட்டில் நூற்றுக்கு ஒன்று வீதம் வடமொழி வந்துள்ள தென்னலாம்: ஆகவே, செந்தமிழே நிறைந்து இயற்கை வருணனை மிகுந்து இந்நூல் மிகச்சிறந்து விளங்குகின்ற தென்க.

வெண்பாக்கள்.

1. குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் னுள்ளத் துறை.

(இ - ள்.) குன்றம் எறிந்தாய் - கிரௌஞ்ச மென்னும் மலையைப் பிளந்தவனே! குரை கடலில் - ஒலிக்கின்ற கடலினிடையே புக்கிருந்த, சூர் - மாமர வடிவான சூரபன்மனை, தடிந்தாய் - வெட்டினவனே! புன் தலைய பூதம்-புற்கென்ற தலையினையுடைய பூதத்தை, பொரு - போர் செய்தழித்த, படையாய் - படைக்கலத்தையேந்தியவனே! என்றும் இளையாய் - எக்காலத்தும் இளமை குன்றாத குமரனே! அழகியாய் - பேரழகு பொருந்தியவனே! ஏறு ஊர்ந்தான் ஏறே - இடபவாகனத்தையேறிச் செலுத்தும் சிவபிரானுக்குச் சிங்கவேறுபோன்ற மைந்தனே! (நீ) உளையாய் - எஞ்ஞான்றும் நிலை பெற்றிருப்பவனாய், என் உள்ளத்து - அடியேன் மனத்தில், உறை - தங்கியிருப்பாயாக; (எ - று.)

இதனால், குமரனைக் கவி தம்முள்ளத்துக் கோயில்கொள்ளு மாறு வேண்டுகிறார். எறிந்தாய் முதலிய விளி ஆறும் அறுமுக னுக்கேற்ப வந்தன போலும். 'யசோதையிளஞ்சிங்கம்', சிறிய னென்று என்னிளஞ்சிங்கத்தை இகழேல் கண்டாய்' என்பன போல, ஈண்டு 'ஏறே' என்பது சிங்கவேற்றைக்குறித்தது. இனி, விடையெனக் கொள்ளலுமாம்; "மழவிடையே ! திருமாமடிகட்கென வைத்த கௌத்துவமே" என்று குமரகுருபரர் விடையாகக் கூறியிருத்தலுங் காணலாம். முருகனாதலின் இளையாய் அழகியாய் என்றது. "என்றுமழியாத விளமைக்கார" என்றது திருப்புகழ். உளையாய் - முற்றெச்சம். உளையாய் உறை என்றமையால், நீங்கா துறைதல் வேண்டப்பட்டது. இனி, குன்றமெறிந்த கதை :— சிவபிரானின் இளைய குமாரனாய்த் தேவர் வேண்டுகோளால் அசுரர் களை யொழித்தற்குத் தேவசேனாபதியாம் பொருட்டு அவதரித்த முருகக் கடவுள், சூரபதுமனைப் பொருது அழித்தற்குச் செல்லும் வழியிடையே, கிரௌஞ்சனென்னும் அசுரன் பெரிய மலைவடிவங் கொண்டு அவனை நலிவதாக எதிர்வந்து நிற்க, அதன்மேல் அப் பெருமான் தனது தெய்வத்தன்மையுள்ள வேற்படையை யேவி அதனைத் துளைத்து அழித்திட்டனனென்பது. இனி, பரசுராமனும் சுப்பிரமணியனும் பரமசிவனிடம் வில்முதலிய ஆயுதப்பயிற்சியைச் செய்து முடித்த பின்பு, இவர்களுள் உயர்வுதாழ்வு அறியும் பொருட்டுச் சிவபிரான் உமாதேவியின் முன்னிலையிலேயே இவர்க ளுக்குக் கிரௌஞ்சமலையைச் சுட்டிக்காட்டி 'இதனைத் துளைத்திடும்' என்று நியமிக்க, பரசுராமபிரான் அம்பெய்து அதனைத் துளையிட்டுக் காட்ட, முருகக்கடவுள் வேலாயுதத்தை வீசியெறிந்து அம்மலையைப் பிளந்திட்டனனென்றும் கதை கூறப்படும். சூர்தடிந்த வகையை "மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து" (60) என்றதன் உரை யிடத்துக் காண்க. பூதம் - நக்கீரனைச் சிறைவைத்த பூதம். பொருபடை - வேல்; கதாயுதம் எனினுமாம். பூதத்தைக் கதா யுதத்தால் மோதி முடியைத்தகர்த்துக் கொன்றனர் என்பர்; இனி, வேல்வகுப்பில்" பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப் புலவனிசைக்குருகி வரைக்குகையையிடித்துவழிகாணும்," என்றும், "மலைமுகஞ் சுமந்த புலவர் செஞ்சொல்கொண்டு வழிதிறந்த செங்கை வடிவேலா' என்றும் வருவன நோக்கி வேலெனலாம். மேலை வெண் பாவில், "கற்பொதும்பிற் காத்ததுவும்...வேல்" என வருதலும் நோக்குக.

2. குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

(இ - ள்.) குன்றம் எறிந்ததுவும் - கிரௌஞ்சகிரியைப் பிளந்த தும், குன்ற - பகைவரொழியும்படி, போர் செய்ததுவும் - போரிட்டதும், அன்று-போரிட்டஅக்காலத்து, அங்கு-அவ்விடத்து,

அமரர் இடர் தீர்த்ததுவும் - தேவர்களின் துன்பத்தைப் போக்கியதும், இன்று - இற்றைவரை, என்னை - அடியனாகிய என்னை, கைவிடா நின்றதுவும்-விட்டொழியாது நின்றதும், கல் பொதும்பில் காத்ததுவும் - கல் முழையினிற் சிறையினின்று காப்பாற்றியதும், [எதுவெனில்], மெய் விடா வீரன் - சத்தியத்தினின்றும் பிறழாத வீரனாகிய முருகனின், கை வேல் - கையிடத்துள்ளதாகிய வேலாகும்; (எ - று.)

இதனால், முருகன்கை வேலின் சிறப்புக் கூறப்பட்டது. அமரரிடர் தீர்த்தது - தேவசேனாபதியாகி அசுரர்களையொழித்தமையாலாகும். கற்பொதும்பிற் காத்தது - பூதத்தினின்று. 'எறிந்ததுவும்', 'செய்ததுவும்' எனக் குற்றியலுகரம் ஓரோவிடத்துக் கெடாமல், வகரவுடம்படுமெய்பெற்று வந்தது.

3. வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

(இ - ள்.) செவ்வேள் திரு கை வேல் - முருகப்பெருமானின் அழகிய கை யேந்திய வேலானது, வீரவேல் - வீரம்பொருந்திய வேலாகும்; தாரை வேல்-கூரிய வேலாகும்; விண்ணோர் சிறைமீட்ட - தேவர்களை [அசுரரிட்ட] சிறையினின்றும் காப்பாற்றிய, தீரவேல் - வலிபடைத்த வேலாகும்; வாரி குளித்த வேல் - கடலிற் பாய்ந்த வேலாகும்; சூர்மார்பும் குன்றும் துளைத்தவேல் - சூரபன்மனின் மார்பையும் அவனுக்கு மறைவாய் ஓடிவரலான மலையையும் துளைத்திட்ட வேலாகும்; [ஆகவே] கொற்றவேல் - வெற்றிவேலாகும்; [அத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த வேல்] துணை உண்டுஏ - (அடியனாகிய எனக்குத்) துணையாக வமைந்திருக்கிறது; [எனவே, இனி, எனக்கு என்ன குறை என்றபடி]; (எ - று.)

இதனால், முருகன் கைவேல் இத்தன்மைத்தெனக் கூறி, அது துணையாயினார்க்குக் குறையில்லையென்பது பெறவைக்கப்பட்டது. செவ்வேள் - அடை, கருவேளிற் பிரித்தபடி. தாரை - கூர்மை; இதனைக்கூறியது குன்றும் துளைக்கும் எனப் பெறவைத்தற்கு. முருகக்கடவுட்கு முன்னே எதிர்நிற்கமாட்டாது சூரபன்மன் கடலினுட் புக்கு ஒளிக்க, அந்த முருகக்கடவுள் அக்கடலினுட்புக்குத் தனது வேற்படையினால் அவ்வசுரனை வெட்டியபோது வேல் வாரி குளித்தமை பெறப்படும்; மற்றும், கடல்சுவற வேல் விட்டமையும் நினைக. 'சூர்மார்பும் குன்றும் துளைத்தவேல்' என்றவிடத்து "உழல்சூரு மலைமார்பு முடனூடுறப்பொருது" என்ற தக்கயாகப் பரணியும், அதனுரையாக "சூரபன்மாவுக்கு மறைவாய் ஓடிவரலான மலையினுடைய மார்பும் சூரபன்மாத்தானும் ஒக்க ஒரேகாலத்திலே ஊடுருவும்படி வேலேறுபடப், பொருதருளி" என்று கூறியிருத்தலும் நோக்குக: இனி, குன்று - கிரௌஞ்சகிரியுமாம். வேல்

துணையாவதை அருணகிரியாரும் "தனித்து வழிநடக்கு மென திடத்து மொருவலத்து மிருபுறத்து மருகடுத் திரவுபகற் றுணையது வாகும்" என்றார். உண்டே துணை - இதில், தெளிவுப்பொருளைத் தருதலால், ஏகாரம் தேற்றம்.

4. இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

(இ - ள்.) கொன் நவில் வேல் சூர் தடிந்த கொற்றவா - பெருமை பயின்ற வேலினால் [மாமரமாய் மாறி நின்ற] சூரபன்மனை வெட்டிய வெற்றியையுடையவனே! முன்னம் - முன்னொருகால், பனி வேய் நெடு குன்றம் பட்டு உருவ தொட்ட தனி வேலை - பனியினாற் சூழ்ந்த பெரிய கிரௌஞ்சகிரியைத் தீண்டி யூடுருவும்படி [விசையொடு] விடுத்த ஒப்பற்ற வேலை, எனது இடும்பை குன்றுக்கும் - [அடியனாகிய] என்னுடைய துன்பமாகிய குன்றினைத் தகர்த்து நீக்குதற்கும், இன்னம் ஒருகால் - இதுபோதும் ஒருமுறை, வாங்க தகும் - விடுத்தல் தகுதியாகும்; (எ - று.)

இதனால், வேலின் துன்பநீக்கி இன்பம் பயக்கும் பண்பு தெரிவிக்கப்பட்டது. வேல், இடும்பை தொலைத்தலை "சுரர்க்கும் முனிவரர்க்கும் மகபதிக்கும் விதிதனக்கும், நரர்தமக்கும் நமர்தமக்கு முறுமிடுக்கண் வினைசாடும்" என்றதாலுமுணரலாம். மலைபோன்று பெரிதாய இடும்பையும் வேல்தொட்ட மாத்திரத்தில் நீங்குமென்றபடி. இடும்பையைக் குன்றாக உருவகித்தது, தீவினையினாலீட்டிய அதன் பேரளவு நோக்கி. 'குன்றுக்கும்' என்றவிடத்து, நான்கனுருபுக்கு "துன்பத்திற்கு யாரே துணையாவார், மறத்திற்குமஃதே துணை, பிணிக்குமருந்து என்பவற்றிற்போலே நீக்கஎன நடுவே பெய்து பொருளுரைக்கப்பட்டது. கொன் - பெருமை; "அச்சம் பயமிலி காலம் பெருமை யென்று, அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே" என்றது தொல்காப்பியம்.

5. உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

(இ - ள்.) பன்னிரு கை - பன்னிரண்டு திருக்கைகளிலும், கோல் - [ஈட்டி, வாள் முதலிய] ஆயுதங்களையேந்தியுள்ள, அப்பா - தலைவனே! வானோர் - தேவர்களின், கொடிய வினை தீர்த்து அருளும் - கடிய பாபங்களைப்போக்கிக் காத்துத் திருவருள் புரியும், வேல் அப்பா - வேலேந்திய தலைவனே! செந்தி வாழ்வே - திருச்செந்தூரில் நித்தியவாசம் பண்ணுமவனே! யான்—, உன்னை ஒழிய ஒருவரையும்

நம்புகிலேன் - உன்னைவிட்டு வேறொரு கடவுளையும் நம்புகின்றே னில்லை; பின்னை - ஆகவே, ஒருவரை பின் செல்லேன் - வேறொரு வரையும் பின்பற்றிச் செல்லமாட்டேன்; (எ - று.)

இதனால், கவி தான் மறந்தும் புறந்தொழாமை பெறவைத் தார். கோல் - ஆயுதப்பொது குறிப்பது. பன்னிருகைக்கும் பன்னிரு படையேந்திநிற்றலை "அவரும் பிறரும் அமர்ந்து படை யளித்த, மறியு மஞ்ஞையும் வாரணச் சேவலும், பொறிவரிச் சாபமு மரனும் வாளுஞ், செறியிலை யீட்டியுங் குடாரியுங் கணிச்சியுந், தெறுகதிர்க் கனலியு மாலையு மணியும், வேறுவே றுருவினிவ் வாறிரு கைக்கொண்டு......புகழ்வரம் பிகந்தோய்" என்ற பரிபாடலாலுணர்க. வேலப்பா என வேலை விதந் தெடுத்துக் கூறியது, வானோர்கொடிய வினைதீர்த்தருளுதலில் பேருதவிபுரிந்தமைபற்றி. வானோர்கொடியவினை - அசுரர்நலிந்தமை, சிறைப்பட்டமை முதலியன. செந்தி - செந்தில்: திருச்செந்தூர். செந்தில் என்றே பாடங்கொண்டாலும் இழுக்கில்லை. வாழ்வே - அனைவர் வாழ்ச்சிக்கும் காரணமாகுமவனே என்றபடியுமாம். நம்பு கிலேன் - கில், மாட்டாமை தெரிப்பது. பின்செல்லுதல்-வழிபடுதல்.

6. அஞ்சு முகந்தோன்றின் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

(இ - ள்.) முருகா என்று ஓதுவார் - முருகா! என்று அவன் திருநாமத்தைச் செபிப்பவர்க்கு, அஞ்சு முகம் தோன்றின் - (யாதொரு பயத்தினால்) அஞ்சிய முகம் ஏற்படின், [அஞ்ஞான்று], முன் - அவர் முன்னிலையில் (அப்பயம் நீக்குதற்கு), ஆறுமுகம் தோன்றும் - ஆறுதிருமுகங்களோடு முருகக்கடவுள் தோற்ற மளிப்பான்: [மற்றும்] வெம் சமரில் - கொடிய [போர் ஏற்படுமாயின் அப்] போரிடத்து, [முன் - அவர்முன்னே], அஞ்சல் என - 'பயப் படாதே' என்று அபயமளித்து, வேல் தோன்றும் - [முருகப்பெரு மானின்] வேலாயுதம் தோற்றமளிக்கும்; [மற்றும்] நெஞ்சில் ஒருகால் நினைக்கின் - மனத்தில் [பத்தி சிரத்தையோடு] ஒருமுறை தியானிப் பாரேயாயின், [முன் - அவர்முன்னே], இரு காலும் தோன்றும் - [அப்பெருமானின்] இரண்டு திருவடிகளும் தோற்றமளிக்கும்;(எ-று.)

இதனால், பக்தி சிரத்தையோடு முருகன் திருநாமங்களைச் செபிப்பவர்க்கு ஏற்படும் பலன் கூறப்பட்டது. 'ஓதுவார்' என்ற சொல்லாற்றலால், முருகன் திருநாமம் வேதம்போற் சிறப்புடைத் தாதல் பெறவைக்கப்பட்டது. 'முன்' என்றது ஏனையீரிடத்தும் கூட்டப்பட்டது. முதலடி மூன்றுமடிகளில் சொல்லலங்காரம் காண்க. முருகு - மாறாத இளமைச்செவ்வி: அதனையுடையவன் - முருகன்.

7. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

(இ - ள்) முருகனே-!, செந்தி முதல்வனே - திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள தலைவனே! மாயோன் மருகனே - திருமாலின் மருகனே! ஈசன் மகனே - சிவபிரானின் குமாரனே! ஒருகைமுகன் தம்பியே - விநாயகனின் தம்பியே! நின்னுடைய—, தண்டைக்கால் - தண்டையென்னுங் காலணி அணிந்துள்ள திருவடிகளை, எப்பொழுதும் - எக்காலத்திலும், நான்—, நம்பியே -, கைதொழுவேன் கைகூப்பி வணங்குவேன்; (எ - று.)

இதனால், முருகனின் திருவடியே தஞ்சம் என்பது பெறவைக்கப்பட்டது. மருகன், மகன், தம்பிஎன உறவிட்டுச் சொன்னது, அவன் குடிப்பெருமை விளங்தபடி. பார்வதியின் அமிசமான காளி கிருஷ்ணவதாரஞ்செய்த திருமாலுக்கு உடன்பிறந்தவளாதலாலும், அறுமுகக்கடவுள் பார்வதியின் புதல்வனுதலாலும், முருகக்கடவுள் அத்திருமாலுக்கு மருகனுவன். மாயோன் - திருமால். ஒருகைமுகன் - ஒப்பற்ற துதிக்கையை முகத்திலுடையவன்: ஆனைமுகத்தான், கரிமுகன். விநாயகன் கரிமுகனுன வரலாறு:—மாகதனென்னும் முனிவனுக்கு விபுதையென்னும் அசுரகன்னிகையினிடத்தில் யானைமுகமாய்ப் பிறந்த கஜமுகாசுரனென்பவன், அநேகவரங்களைப் பெற்று, தன்னுடன்பிறந்த பல அசுரர்களுடனே உலகத்துக்கு அளவிறந்த பலவகைத் தீங்குகளை இழைத்து வருகையில், தேவர்களின் வேண்டுகோளால் அவனைக் கொல்லும்பொருட்டுச் சிவபிரான் யானைமுகக்கடவுளாக விநாயகமூர்த்தியை உண்டாக்கினர் என்பதாம். அவ்வசுரன் இரணியன்போலத் தேவர்களாலும் அசுரர்களாலும் மனிதர்களாலும் மற்றும் பலபிராணிகளாலும் தனித்தனி இறவாதபடி வரம் பெற்றிருந்ததனுல், அவனைச் சிவபிரான் யானைமுகமும் தெய்வப்பிறப்பும் பூதவடிவமுங்கொண்ட ஒரு புத்திரனை யுண்டாக்கி அவனுல் அழித்தருளினர்.

8. காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

(இ - ள்.) அறுமுகவா - ஆறுமுகனே! காக்க கடவிய நீ - காப்பதற்கெனக் கடம்பூண்டுள்ள நீ, காவாதிருந்தக்கால் - [கடமை மறந்து] காப்பாற்றுமலிருப்பாயாயின், (அஞ்ஞான்று) ஆர்க்கு - யாருக்கு, பரம் ஆம் - மேலுலகம் கிட்டும்? (வீடுபேறு சித்திக்கும்). [ஒருவர்க்கும் கிட்டாது என்றபடி]; [ஆதலின்], பூக்கும் கடம்பா - பூத்த கடம்பமாலையை யணிந்துள்ளவனே! முருகா—, கதிர் வேலா - ஒளிவிடுகின்ற வேலனே! நல்ல இடம் காண் - காப்பதற்கு நல்ல

இடம் என்னிடத்துக்காண்பாயாக; இனி - அங்ஙன் கண்ட பின்னர், இரங்காய் - (என்மாட்டு) இரக்கங்கொள்வாயாக; (எ - று.)

இதனால், முருகன் காத்தலாற்றுன் வீட்டுலகம் சித்திக்கும் என்பது பெறவைக்கப்பட்டது. எனவே, வீடுபேறு வழங்குந் தகுதி முருகனுக்கே யுளது என்றபடி. கடவு - கடமை: 'என்னுக் கடவுடையேன் யான்' (இராமாநுச நூற்றந்தாதி: தனியன்) என்ற விடத்துங் காண்க. பரம் - மேலுலகம், வீட்டுலகம்: 'இகபரமாகி யிருந்தவனே' என்றது திருவாசகம். 'மேலுலகம் இல்லெனினு மீதலே நன்று' என்ருர் நாயனுரும். 'ஆர்க்கும் பரமாம்' என்று பாடங்கொள்வாருமுளர்: அப்போது, ஆர்க்கும் - யாவர்க்கும், பரம் ஆம் - பாரம் ஏற்படும் என்று பொருள். பாரம் - துன்பச் சுமை. ஈற்றடியில் மோனையழகு காண்க.

9. பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

(இ - ள்.) நெஞ்சே - மனமே! (நீ) பரங்குன்றில் - திருப்பரங் குன்றத்துக் கோயில்கொண்டுள்ள, பன்னிருகை கோமான் தன் பாதம் - பன்னிரண்டு திருக்கைகளைக்கொண்ட தலைவனுகிய முருகப் பெருமானின் திருவடிகளை, கண் குளிர கண்டு - கண்குளிரும்படி பார்த்து, கரம் கூப்பி - கைகூப்பி வணங்கி, ஆசையால் - ஆர்வத் தோடு, அணி முருகாற்றுப்படையை - அழகிய திருமுருகாற்றுப் படையென்னும் நூலை, பூசையாக்கொண்டே - [முருகனின்] நித்திய பூசனைக்குரியதாக்கொண்டே, சுருங்காமல் - தவருமல், புகல் - (நியமத்துடன்) சொல்வாயாக [பாராயணஞ் செய்வாயாக என்றபடி];

இதனால், முருகனுடைய திருவருளை விரும்புபவர் நித்திய பூசைக்குரியதாகத் திருமுருகாற்றுப்படையை ஏற்றுக்கொண்டு, நியமத்துடன் பாராயணஞ்செய்தல் வேண்டுமென்பது பெறவைக்கப் பட்டது. ஈண்டு, கவி தமது நெஞ்சை விளித்துக் கூறுமுகத்தான் அனைவர்க்கும் அறிவுறுத்துகிருர். 'நெஞ்சே' என்றதால் மனமும், 'புகல்' என்றதால் வாக்கும், 'கூப்பி, கண்டு' என்றவற்ருல் காயமும் தெரிவிக்கப்பட்டுத் திரிகரணங்களாலும் முருகனை வழிபடல்வேண்டு மென்பது வலியுறுத்தப்பட்டது. ஆசை - ஆர்வம்: பத்தி. பூசை - நித்தியபூசனை: 'சிறப்பொடு பூசனை செல்லாது' என்றவிடத்துப் போல. சுருங்குதல் - ஒழுக்கம் முதலியவற்றினின்று தவறுதல்; இப்பொருளில் வருதலை "துகிலிடைச் சுற்றியில் தூநீ ராட்டி, நல்லன விரைமலர் நறும்புகை விளக்கவி, சொல்லின பரிசிற் சுருங்கலன்" என்ற திருக்கண்ணப்பதேவர் திருமறத்திலுங் காண லாம். இனி, சுருங்காமல் - தப்பாமல், சங்கிரகமாக்காமல் எனப் பொருள் காணலுமாம். இத் திருமுருகாற்றுப்படையை நியமமாகப் பாராயணஞ்செய்யுங்கால், பெரியோர்களால் தொன்றுதொட்டு ஓதப்

பெற்றுவருகின்ற கட்டளைக்கலித்துறைச்செய்யுள் பின்வருமாறு:— "ஒருமுரு காவென்ற னுள்ளங் குளிர வுவந்துடனே, வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே, தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையல் முன்னே, திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே" என்பது.

10. நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.

(இ - ள்.) நக்கீரர் தாம் உரைத்த - நக்கீரராகிய பெரும் புலவர் சொன்ன, நல் முருகாற்றுப்படையை - நல்ல திருமுருகாற்றுப் படையை, நாள்தோறும் - தினமும், தன் கோல - தன் அபிமானம் [அகங்காரம்] கெட, சாற்றினால் - ஓதினால், முன் - [அங்ஙனம் ஓதுபவர்] முன்னே, கோலம் மா முருகன் - அழகிய சிறந்த முருகன், வந்து - தோன்றி, மனக்கவலை தீர்த்து அருளி-[அன்னோர்க்குள தாம்] மனக்கவலையனைத்தையும் போக்கி யருள்செய்து, [பின்னும்], நினைத்த எல்லாம் - அவ்வோதுபவர் நினைக்கின்ற எல்லா விருப்பங் களையும், தான் தரும் - தானே தருவன்; (எ - று.)

இதனால், திருமுருகாற்றுப்படையை நாடோறும் ஓதுதலா லுண்டாம் நற்பயன் கூறப்பட்டது. முருகாற்றுப்படைக்கு 'நல்' என்ற அடைகொடுத்தது, சொற்பொருளமைதியும் சிறப்பும் நோக்கி. இந்நூல் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்ட சிறப்பும் நினைக. தற்கோலல் - தற்செருக்குக் கெடுதல். தன் - தானென்னுஞ் செருக்கு; அகங்காரம். கோலல் - கொல்லுதல், கெடுதல். நக்கீரரை நற்கீரரென்றும் வழங்குப: அப்பெயர் ஈண்டு எதுகைக்குச் சிறந்து காணினும், நக்கீரர் என்பதே பெருவழக்காதலின், இன வெதுகை வந்தது.

[வி. ஜெகந்நாதாசார்யர்.]

திருமுருகாற்றுப்படையின் அரும்பதவகராதி முதலியன

எண் - அடியெண்.

அ

அகலம் - மார்பு, 272
அகவ - ஒலியாநிற்க, 122
அங்குசம் - தோட்டி, 110
அசை இயது - கிடந்தது, 109
அஞ்சு - அச்சம், 149
அட்டி - இட்டு, 28
அடங்குதல் - இல்லையாதல், 59
அடுக்கம் - பக்கமலை, 42
அணங்கு - அச்சம், வருத்தம், (தெய்வமென்றபொருளும் உண்டு) 289
அணைத்தல் - ஒன்றாகச் சேர்த்தல், 200
அப்பி, 218
அமை - மூங்கில், மூங்கிலரிசி, 195
அமைதல் - பொருந்துதல், 86
அரமகளிர் - அமரமகளிர், 117
அரி - அழகு, 76
அருமை - முடியாமை, 278
அரை - அடி, மரத்தின் அடிப்பாகம்: 10, 206
அலங்குதல் - அசைதல், 298
அலந்தோர் - இடுக்கட்பட்டு வந்தவர், 271
அலர்தல் - பரத்தல், 300
அலைவாய், 125
அவிர்தல் - விளங்குதல், 3, 18
அளவை - அளவு, 277
அளிக்கும் - அருள்செய்யும், 271
அளை - குகை, 314
அளை இ - பல்காலும் சொல்லி, 292
அறு - ஆறு: அற்ற: 58

ஆ

ஆகம் - மார்பு, 139
ஆசினி - ஈரப்பலா, 301
ஆடுகளம் - வெறியாடுமிடம், 245
ஆடுதல் - அளைதல், 53
ஆமா - காட்டுப்பசு, 315
ஆர்த்தும் - நுகர்விக்கும், 270
ஆரம் - சந்தனம், 297, பொன்னாரம், முத்தாரமுமாம்: 104
ஆவிநன்குடி, 176
ஆறமர்செல்வன், 255
ஆறாது - அமையாது, 277

இ

இகந்து - கடந்து, 19
இகல் -பகைமை,மாறுபாடு,131, 166
இசை - புகழ், 61, 270 : ஓசை, 240
இடும்பை - துன்பம், 135
இணர் - பூங்கொத்து, 89: பூ, 34
இணைப்பு - கட்டுதல், 30
இமிழ்தல் - ஒலித்தல், 240
இமைக்கும் - விளங்கும், 128
இமைப்பு - விளக்கம், 85
இயம் - வாச்சியம், 240
இயல்பு - வைதிகஆசாரம், 177
இயல - குரவையாடியசைய, 215
இயவுள் - தலைவன், கடவுள், 274

இரட்டுதல் - மாறியொலித்தல், 80
இரு - கருமை, 111
இழுமெனல் - ஒலிக்குறிப்பு, 316
இழை - அணி, 18, 259
இளநலம் - இளையவடிவம், 290
இறால் - தேன்கூடு, 300
இன் - இனிய, 115

ஈ

ஈர் - நெய்ப்பு, 20

உ

உக்கம் - இடுப்பு, 108
உகிர் - நகம், 52
உட்க - அஞ்ச, 243
உயர்த்தல் - மேம்படுத்துக் கூறுதல், 158
உயர்நிலை - தெய்வத்தன்மை, 289
உரம் - வலிமை, 121
உரிஞுதல் - தேய்த்தல், 33
உரிவை - தோல், 129
உரு - உட்கு 51, நிறம், 230
உருத்திரன் தன்மை, 151-4
உரும் - பேரிடி, 172
உளர்ப்பு - அலைத்தல், 198
உளர - நரம்பைவாசிக்க, 142
உளியம் - கரடி, 313
உளை - பஞ்சின்எஃகின் நுனி போலும் பூவின் மெல்லிய பகுதி: துய் எனப்படும். உளைப்பூ - பிடரிமயிர்போல் விரிந்தபூ, 28
உறழ்தல் - மாறுபடுதல், 85
உறு - மிக்க, 188
உறுநர் - சேர்ந்தவர், 4
உறை - துளி, 8

எ

எய்யா - அறியமுடியாத, 61
எருத்தம் - புறக்கழுத்து, 159
எல் - சூரியன், 74
எழில் - அழகு, 157
எழுந்திசைத்தல் - மிக்கொலித்தல், 120

ஏ

ஏந்துதல் - உயரஎடுத்தல், 107, உயர்தல், 146
ஏமுறுதல் - இரட்சையடைதல், 97, இன்பமுறுதல், மயக்கமுறுதல், 163
ஏர்பு - எழுந்து, 1
ஏரகம், 189

ஐ

ஐ - வியப்பு, 111
ஐது - மெதுவாக, 218
ஐயர் - இருடியர், 107
ஐயவி - வெண்சிறுகடுகு, 228

ஒ

ஒருகைமுகன் - விநாயகன், வெண்பா, 7

ஓ

ஓ - தங்குதல், ஓவுதல்-ஒழிதல், 3
ஓடா - கெடாத, 247
ஓதி - கூந்தல், 20

க

கடந்த - முடித்த, 172
கடாவ - செலுத்த, 110
கடு - விஷம், 148
கண்ணி - முடியிலணியும்பூ, 44
கணவீரம் - செவ்வலரி: கரவீரம் என்று வடமொழியில் வருகின்றது, 236
கதுப்பு - மயிர், 47
கந்தழி, பக் - 59
கந்திருவர், 133-142
கந்து - ஆதீண்டுகுற்றி, 226
கமம் - நிறைவு, உரிச்சொல்: 7
கலாவ - கலக்க, 301
கலிங்கம் - ஆடை, 109

கவிழ்தல், 59
கவின் - அழகு, 17, 223
கவைஇய - சூழ்ந்த, 13
கழலுதல் - பிதுங்குதல், 49
கழி - மிகுதி, 53
கறி - மிளகு 309

கா

கா - பொழில் 223
காசு - மணி, 16
காண் - அழகு, 36, 250
கார்கோள் - கடல், 7
கால் - மரத்தின் அடிப்பகுதி, 21
காழ் - வடம், 16, 204: வயிரம், 32, 119
காழகம் - வஸ்திரம், 184
கான் - நறுமணம், 198

கி

கிண்டு - பிளந்து, 298

கு

குடந்தம் - வழிபாடு, வணக்கமுமாம்: குடந்தம்படுதல்-வழிபடுதல், 229
குடவயின் - மேற்றிசையினிடத்து, 71
குடாவடி - வளைந்தஅடி, 313
குடி - ஊர், 196
குண்டு - ஆழம், 199
குரிசில், 276
குரூஉ - நிறம், 313
குல்லை - கஞ்சங்குல்லை, 201
குளவி - காட்டு மல்லிகை, 191
குறடு - கட்டை, 33
குறிஞ்சி - ஓர்பண், 239
குறித்தல் - எண்ணுதல், 281
குறும்பொறி - உதரபந்தம், 213

கூ

கூளியர் சேவித்துநிற்பார், ஏவலாளர், 282

கொ

கொட்டி - அப்பி, 35
கொட்ப - சுழல, 114
கொடுஞ்சிறை - வளைந்தசிறகு, 150
கொடுமணி - கடிய ஓசையையுடைய மணி, 246
கொன்-பெருமை, (வெண்பா, 4)
கொன்ற - பிளந்த, 266

கோ

கோடு - ஊதுகருவி, 209: தந்தம், 305
கோபம் - பட்டுப்பூச்சி, 15
கோலம் - அழகு, (வெண்பா, 10)

சா

சாந்து - சந்தனம், 193
சாம்புநதம், 18
சாய் - செறும்பு: (சிறும்புஎன வழங்குவர்.) 312
சாயல் - மென்மை, 213
சாறயர்தல் - திருவிழாச்செய்தல் 283
சான்ற - அமைந்த, 287

சி

சிமையம் - மலையுச்சி, 253
சில்காழ் - மேகலை, 16
சிலம்ப - ஆரவாரிப்ப, 40, 245
சிலம்பு - மலை, 40
சிலைப்ப - முழங்க, 315
சிறப்பு - தலைமை, 259

சீ

சீரை - மரவுரி: சீரம்என்ற வடசொல்லின் திரிபு, 126

சு

சுடர் - நெருப்பு, 43
சுடர்தல் - எரிதல், 46

சுருங்காமல் - தவறாமல், (வெண்பா, 9)
சுனை - மலையில்ஊற்றுள்ளசிறு நீர்நிலை, 75

சூ

சூர் - கொடுமை, 41; சூரபன்மன், (வெண்பா)
சூர்த்த - கொடுமைசெய்த, சூர்த்தம் - நடுக்கம், 48
சூரரமகளிர், 12-41
சூல் - கரு, 7

செ

செச்சைக்கண்ணி -வெட்சிமாலை, 208
செந்தி - செந்தில், திருச் செந்தூர், (வெண்பா, 5, 7)
செம்மல் - தலைமை, 62
செய்யன் - சிவந்தவன், 206
செயலை - அசோகு, 207
செயிர் - குற்றம், 19
செரீஇ - செருகி, 27
செல் - இடி, மேகம், 5
செல்வன் - கடவுள், 151, 154, 159
செவ்வேள்-முருகன், (வெண்பா, 3)
செறிய - சேர, 314
செறுநர் - 5, 99

சே

சேண்- உச்சி, 315: நெடுந்தூரம், 3, 19, 87; தேவருலகு, 12: உயரமான இடம், 67

சொ

சொன்மலை - சொற்களின்கூட்ட மாயிருப்பவன், 263

ஞ

ஞரல - முழங்க, 120

த

தகடு - புறவிதழ், 27
தகர் - ஆட்டுக்கிடாய், 210
தகை - மாலை, 139
தட - பெருமை, 5: வளைவு, 158
தடிந்த - கொன்ற, வெட்டின, 46, 60
தண்டை - காலணி, (வெண்பா, 7)
தத்துற்று - குதித்து, 305
தலைதல் - சொரிதல், 9
தலைப்பெயல் - முதற்பெய்தல், 9
தழை - உடைவிசேடம், 203
தற்கோலல் - தற்செருக்குக் கெடுதல், (வெண்பா, 10)

தா

தா - வருத்தம், 89, 175: கேடு, 164
தாமரை, 164
தாரை - கூர்மை, (வெண்பா, 3)
தாழை - தெங்கு, 307

தி

திதலை - தேமல், 145
திரிப்ப - சுழற்ற, 111
திவவு - யாழின்வார்க்கட்டு, 140
திளைப்ப - அசையாநிற்க, 32,204

து

துணங்கை - ஒருவகைக்கூத்து, 56
துணர் - கொத்து, 309
துணையோர் - தோழிமார், 20
துமிய - துணிய, 307
துயல்வருதல் - அசைதல், 79, 86, 207
துருத்தி - யாற்றிடைத்திட்டு, 223
துவர - முழுதுற, 26
துனி - வெறுப்பு, 237

தூ

தூ - தூய்மை, 22
தூங்க - ஆட, 56: தொங்கின படியே கிடக்க, 68: அசைய, 237
தூம்பு - துளை, 148

தெ

தெய்வவுத்தி - ஒரு தலைக்கோலம், 23

தே

தேம் - மணம், 24, 34
தேய்த்தல், 5, 69, 99
தேய்வை, 33

தை

தைஇய - இட்ட, அணிந்த, 24: உடையாகச் செய்த, 126: போர்த்த 129; இழைத்த, செய்த, 222

தொ

தொட்டு - தோண்டி, 53
தொண்டகம், 197

தோ

தோய்தல் - தீண்டுதல், 288
தோன்றல் - தோற்றம், 169

ந

நகர் - ஊர், 160, 238: கோயில், 244
நகை - ஒளி, 86, 145: மகிழ்ச்சி, 102
நயன் - ஈரம், 141
நலம் - நல்வினை, 63: நல்நிறம், 109
நவின்று - பயின்று, 103
நளி - செறிவு, 238
நறைக்காய், 190

நா

நாகம் - சுரபுன்னை, 302
நாவலொடுபெயரியபொலம், 18
நாற்பெருந்தேளத்து நன்னகர், 160
நாற்றி - தொங்கவிட்டு, (நால் வினைப்பகுதி), 237
நான்முகவொருவன்சாபம், 165 195

நி

நியமம் - அங்காடித்தெரு, 70
நிலை - இடம், 221, 226
நிவந்த-ஓங்கிவளர்ந்த, 12
நிறுத்து-வாசிக்கச்செய்து, 243

நீ

நீல் = நீலம்: கடைக்குறை, 116

நு

நுசுப்பு-இடை, 14, 101
நுதல்-நெற்றி, மத்தகம், 24, 78, 303

நே

நேர்பு-பொருந்தி, 90, 214: அளந்து, உற்றறிந்து, 140

நோ

நோன்-வலிமை, 4

ப

பகடு-பெருமை, 104
பகல்-130, 166
பட-இறக்க, 150: பிறக்க, 171
படரும்-செல்லும், 62
படுதல்-உண்டாதல், 10: தாழ்தல் 80: தோன்றுதல், 74: வீழ்தல், 199: பொருந்துதல், 118, 219
படுமணி, 80, 15
பணை - பருமை, மூங்கிலுமாம், 14
பதினெண்கணம், 168

பயில் - நெருங்கின, 42
பரம்-மேலுலகம், பாரம், (வெண்பா, 8)
பராரை - பருத்தஅரை, 10
பருமம்- பதினெண்கோவையணி, 146
பழையோள்-காடுகாள், 259

பா

பாடி-உச்சரித்து, 187
பாடு-ஓசை, 115
பார்-பூமி, பாறை, 45

பி

பிணர்-சொரசொரப்பு, 50
பிணிமுகம்-முருகக் கடவுளின் பட்டத்துயானை, மயிலுமாம்: 247
பிணை, 216
பிணையல் - மாலை, 30
பிரப்பு - தெய்வத்தின் முன்பு குறுணிவீதம் நிவேதனமாகக் கொள்கலனிற் பரப்பிவைக்கும் அரிசிபோன்ற தானியம், 234

பு

புகையெடுத்தல்- தூபங்கொடுத்தல், 239
புட்டில், 191
புடைக்கும்-அடிக்கும், 150
புரி-செய்தல், 63; முறுக்கிய கயிறு: 83
புரிதல்-விரும்புதல், 161
புலம்ப-தனிப்ப, 298
புன்றலைய பூதம், (வெண்பா, 1)

பூ

பூ-பொலிவு, 33: புகர், 303
பூட்கை - வலி, 247

பெ

பெயர் - பொருள், 269
பெரும்பெயர் - மோட்சம், 269
பெறீஇயர் - பெற்றவர், 168

பே

பேழ்வாய் - பெரியவாய், 47

பை

பைங்கொடி - பச்சிலைக்கொடி, 190

பொ

பொதும்பு - முழை, (வெண்பா, 2)
பொதுளுதல், 10
பொறி - புள்ளி, புள்ளியையுடைய பீலிக்கு ஆகுபெயர்: 122, 309

போ

போழ்தல் - பிளத்தல், நீக்குதல், 8

ம

மகரப்பகுவாய், 25
மஞ்ஞை - மயில், 123, 210, 310
மண்டுதல் - 58, 272
மண்ணி - பண்ணி, 227
மண்ணுறுத்து - செய்து, அலங்கரித்து, 75
மதவலி-, 233, 275
மதன் - அறியாமை, 4
மந்திரவிதி - வேதவிதி, 95
மரபு - வழக்கம், முறைமை, 107, 269
மராம் - செங்கடம்பு, வெண்கடம்பு, 10, 202
மருங்கு-பக்கம்: 80; வமிசம், 275: அளவு, 187: இடை, 214: பெறக்கூடியவழி, 173
மலைதல் - சூடுதல், 44
மள்ளன் - இளமைப்பருவத்தோன், வீரன், 202
மறுவில்கற்பு - அறக்கற்பு, 6

மறை - மந்திரம், 186
மன் - பல, 278
மன்றம் - ஊர்க்குநடுவே எல்லாரும் இருக்கும் மரத்தடி, 226

மா

மாமுதல் - மாமரம், 60
மால் - பெருமை, திருமால், 12, 256

மு

முகிழ் - அரும்பு, 35
முச்சி - கொண்டை, 26
முசுக்கலை, 303
முடி - கிரீடம்: முடி ஐவேறுருவின் செய்வினை முற்றியது, 83-4
முதல் - தலைவன், 46
முதிர்தல்-முற்றுதல், வளைதல், 45
முதுசுளை - முற்றிய சுளை, 301
முதுவாய் - அறிவுமுதிர்ந்த வாய்மை, 284
முந்து - முற்பட, 251
முந்நீர், 293
முப்பத்துமூவர்நால் வேறியற்கையர், 167
முருகன் தன்மை, 3-5: 41-44: 60-66: 174-176: 188-189: 206-217: 256 - 295, 316-317: முருகன் உறையும் பல வேறிடங்கள், 118 - 250: முருகன் ஆறு முகங்கள், 91-102: முருகன் குழை, 86-88: அப்பிரான் பன்னிரு கைகள், 107 - 118: அப்பிரான் பிறவி, 253-255: அப்பிரான் மார்பு 104-5: அப்பிரான் முடி, 83-85: அப்பிரான் யானை, 78-82: முருகாற்றுப்படுத்த மலைக்கோயில் 227 - 249
முழுமுதல் - பெரியமரம், 297
முறி - தளிர், 37
முன்னி - மேற்கொண்டு, 123
முன்னியவினை - கருதிச்செய்த வினை, 66

மூ

மூவெயில், 154

மொ

மொய்ம்பு - வலிமை, 105

யூ

யூகம் - கருங்குரங்கு, 302

வ

வகை - தொழிற்கூறு, 86
வசிந்து - பிளந்து, 106
வட்டம் - கேடகம், 111
வணங்குதல் - வளைதல், 260
வதுவை - மணமாலை, 117
வய - வலி, 311
வயிர் - ஊதுகொம்பு வாச்சியவகை, 120
வயின் - இடம், 23, 219
வரிப்புனைபந்து, 68
வலம் - வெற்றி, 59
வலம்புரி - ஒரு தலைக்கோலம்: நந்தியாவட்டப்பூ, 23: சங்கின் பேதம், 126
வலிய அலர்த்தின பூவுக்குநறுமணம் அதிகம், 198
வள்ளுறை - பெருந்துளி, 8
வளை - சங்கு, 120

வா

வாங்குதல் - வளைதல், 14: தன்னிடத்திலே வந்து விழக் கொள்ளுதல், 105: மீட்டுக் கொள்ளுதல், 106
வாடாமாலை - பறவாக்கொக்கு என்பதுபோன்ற வெளிப் படைச் சொல்: 79

வாரணக்கொடி - கோழிக்கொடி, 221
ாரி - கடல், (வெண்பா, 3)
ான்கோடு - வெள்ளியதந்தம், 305

வி

விடர் - பிளவு, 314
வியன் - அகற்சி, 244
விரிந்து - முறுக்குநெகிழ்ந்து, 72
விரை - நறுமணம், 188: வாசனை யுடைய சந்தனம் முதலியன, 235
விளிவு - கேடு, 292
விளைந்த - முற்றின, 195

வீ

வீறு - பொலிவு, 283
வீற்றிருத்தல் - வருத்தமின்றி யிருத்தல், 70

வெ

வெட்சி, 21
வெண்கூதாளம் - வெண்டாளி, 192
வெரு - அச்சம், 54
வெள்ளில் - விளா, 37
வெளிறு - வயிரமில்லாப்பகுதி, 312
வெறியயர்களன் - வெறியாடு மிடம், 222
வெறுக்கை - செல்வம், 263
வென்றடுதல் - வஞ்சியாது எதிர் நின்றடுதல்: 38: வென்று கொல்லுதல், 156

வை

வை - கூர்மை, 78
வைந்நுதி - அங்குசம்: அடை யடுத்த வாகுபெயர், 78
வைப்பு - ஊர், 224

—●❋●—

இந்தத் திருமுருகாற்றுப்படை அச்சாகுங்கால் இப்பதிப்பினைப் பார்வையிட்டுப் பிழைதிருத்திச் செம்மையுற ஆக்கியதோடு தமக்குத் தோன்றிய நுண்ணிய கருத்துக்களையும் சேர்த்து உதவியவர், சென்னை விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் வித்வான். C. ஜெகந்நாதாசார்யர், M. A. (Hist), M. A. (Tamil) L. T., P. O. L., Dip-in-Geog. ஆவர்.

பொருநராற்றுப்படை.

பொருநராற்றுப்படை யென்ற தொடர்-பொருநரை யாற்றுப்படுத்தும் நூல் எனப்பொருள்படும்: இரண்டாம் வேற்றுமைத்தொகை. ஆற்றுப்படை - வழியிற்செலுத்துவது என ஏழாம்வேற்றுமைத்தொகை. இங்குப் பொருநரென்ற சொல், ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியாகும். பொருநர்-மற்றொருவர்போலவேடங்கொள்பவர்: இப்பொருநர், ஏர்க்களம்பாடுவோர் போர்க்களம்பாடுவோர் பரணிபாடுவோரெனப் பலர். அவர்களுள் இப்பொருநன் - போர்க்களம் பாடுபவன்: இவ்விஷயம், "போந்தைத்தோடும் கருஞ்சினை, அரவாய் வேம்பினங்குழைத்தெரியலும், ஓங்கிருஞ்சென்னி மேம்பட மிலைந்த, இருபெருவேந்தருமொருகளத்தவிய, **வெண்ணித்தாக்கிய** வெருவருநோன்றாட், கண்ணார்க்கண்ணிக் கரிகால்வளவன்" எனப் போர்க்களவெற்றியை எடுத்துக்கூறுதலாலும், இப்பொருநன் தடாரிப்பறைகொட்டுபவன் என்பது "கைக்கசடிருந்தவென் கண்ணகன்றடாரி,...ஒன்றியான் பெட்டாவளவையின்" என வருவதாலும் அறியப்படும்.

ஆற்றுப்படை யென்பது - கூத்தர்முதலியவர்களுள் ஒருத்தர் கொடையாளியான ஒருவனிடத்துத் தாம் பெற்ற செல்வத்தை எதிர்வந்த இரப்போர்க்குஉணர்த்தி அவரும் அந்தக்கொடையாளியினிடம் தாம் பெற்றது போலவே பொருளைப் பெறுமாறு வழிப்படுத்துவது. இது புறப்பொருளான பாடாண்டிணையின் துறைகளுள் ஒன்று. இதன் இலக்கணம்—"கூத்தரும் பாணரும் **பொருநரும்** விறலியும், ஆற்றிடைக்காட்சி யுறழத்தோன்றிப், பெற்ற பெருவளம் பெறுஅர்க்கறிவுறீஇச், சென்று பயனெதிரச்சொன்ன பக்கமும்" என்று தொல்காப்பியத்துக் கூறப்பட்டுள்ளது. [இதன் பொருள்:—ஆடல்மாந்தரும் பாடற்பாணரும் **கருவிப்பொருநரும்** இவருட்பெண்பாலராகிய விறலியும் என்னும் நாற்பாலரும் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவித்து, அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும் என்பது.] ஒவ்வொருவரும் இங்ஙனம் தாம் பெற்ற செல்வத்தை இரவலர்க்கு அறிவுறுத்தி வழிப்படுத்துதற்கு உரியராயினும், கூத்தர்முதலியோரே எதிர்வந்த கூத்தர் முதலியோர்க்குத் தாம் பெற்றதைக் கூறி அவரை வழிப்படுத்துவதாகச் செய்யுள்செய்வதே கவிமரபு. இங்ஙனம் இயற்றப்பெற்றவை-கூத்தராற்றுப்படை பாணராற்றுப்படை **பொருநராற்றுப்படை** விறலியாற்றுப்படை என வழங்கும்.

இந்தப் பொருநராற்றுப்படை, நக்கீரனார் முதலிய கடைச்சங்கப் புலவர்களாலியற்றப்பட்ட பத்துப்பாட்டுக்களுள் இரண்டாவது. பத்துப்பாட்டுக்களான-திருமுருகாற்றுப்படை, **பொருநராற்றுப்படை**, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. (இவைகளைப் பத்துப்பாட்டு

எனத் தொகுத்தவரும் தொகுப்பித்தவரும் இன்னாரென விளங்கவில்லை.) இந்நூல்—248-அடிகளையுடைய **நேரிசையாசிரியப்பாவாலாகியது:** இந்த ஆசிரியப்பா முழுதும் ஓரோசையாக அகவலோசையே கிடப்பின் படிப்போர்க்கு ஊக்கங்குன்றுமென்று 177 - அடிகளுக்குப்பின் படிப்போர்க்கு ஊக்கம்பெருகுமாறு இருசீர்வஞ்சியடிகள் 46-இடையிடையே வரத் தொடுத்து அகவலோசை யன்றி வேற்றோசையாகிய தூங்கலோசை முதலியன விரவிவரப் பாடிய ஆசிரியரின் திறமை மிகவும்பாராட்டுதற்கு உரியது: ஆசிரியப்பாவில் வஞ்சியடிவரலா மென்பதை "ஆசிரியநடைத்தேவஞ்சி" என்று தொல்காப்பியனார் பெறவைத்தமை காண்க. 186-ஆவது அடியை "ஏற்றி யாமை தன்பார்ப் போம்பவும்" என நாற்சீரடியாகப் பிரிக்கவும் இடமுண்டு. ஈற்றயலடி முச்சீரடியாலமைந்தது, இச்செய்யுள் நேரிசையாசிரியப்பாவாதலா லாகும்.

இஃது பரிசில்பெறக் கருதிய ஒருபொருநனை, பரிசில் பெற்றானொரு பொருநன் இளஞ்சேட்சென்னிபுதல்வனாகிய கரிகாற்பெருவளத்தானிடத்திற் செல்லுமாறு வழிப்படுத்தியதாகக் கற்பித்து முடத்தாமக்கண்ணியார் பாடியது: (தாம் ஒருபொருநனாகவும், மற்றொருபொருநனைத் தமக்குப் பரிசுகொடுத்தவனிடத்தே ஆற்றுப்படுத்துவதாகவும் இவ்வாறு படைத்துக்கொண்டு கூறுதல், கவிமரபு.)

இதனை இயற்றியவர்-**முடத்தாமக்கண்ணியார்:** "இயற்பெயர் முன்னர்" என்னுஞ் சூத்திரவுரையில் 'ஆர்' விகுதி பன்மையோடு முடிதற்கு முடத்தாமக்கண்ணியார் வந்தா ரென்பது உதாரணமாகக் காட்டப்பெற்றிருத்தலால், இவர்பெயர் 'முடத்தாமக்கண்ணி' என்று தெரிகின்றது. இப்பெயர் உறுப்பால் வந்ததென்றும், இவர் பெண்பாலாரென்றும் கொள்ள இடமுண்டு. இவரைப்பற்றி வேறுவிவரமொன்றும் தெரியவில்லை.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டுக்கும் உரையெழுதியுள்ளார். அவ்வுரை இல்லாவிடின், இக்காலத்தார்க்குப் பத்துப்பாட்டுப்போன்ற பழைய நூல்களுக்குப் பொருள்ஒருசிறிதும் புலப்படாது: ஆயினும், அவ்வுரையை உள்ளபடியே பதிப்பித்தால், அவ்வாசிரியர் சிலஇடங்களில் இங்கே ஒரு சொல்லையும் எங்கேயோ கிடக்கும் மற்றொருசொல்லையும் பிணைத்துப் பொருள்கூறும் வழக்கமுடையராதலால் நேராகச்சொல்லக்கூடிய பொருள் தவறுதலாலும், மாணவர்க்குப்பொருள் விளங்குவது அருமையாமாதலாலும் அங்ஙனஞ்செய்யாது, பெரும்பாலும் அவ்வுரையை ஆதாரமாகக்கொண்டு, நேராகவே பொருள்சொல்லுதற்கு உரியனவாத் தோன்றுமிடங்களில் வருந்திப்பொருள்கூறுது நேராகவேஅந்வயித்து எளியநடையில் இவ்வுரை எழுதப்படுகிறது.

கரிகாற்பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்தக்கருதும் பொருநன் ஆற்றுப்படுத்துபவனைநோக்கி, 'பரிசில்கொடுப்பாரைத்தேடிச் செல்லும் நீ வேறு வழியிற்போகாது என்னையெதிர்ப்பட்டது, உனது முன்னைய நல்வினைப் பயனே' என்று முதல் 59-அடிகளில்

அன்னான் தன்னை வழியிடைக் கண்டதைப் பாராட்டிக் கூறுகின்றான்: முதலில் மூன்று அடிகளால் ஆற்றுப்படுத்துபவன் ஆற்றுப்படுத்தக்கருதும் பொருநனை விளிக்கின்றான்:—

1—3: **அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்**
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந!

(இ-ள்.) (1) அறாஅ-இடையறாத, யாணர்-செல்வவருவாயினை யுடைய, அகல் தலை-அகன்ற இடத்தையுடைய, பேர் ஊர்-பெரிய ஊர்களிடத்து, (2) சாறு கழி வழி நாள்-விழாக்கழிந்த பின்னாளில், சோறு நசை உறாது-(அங்கே பெறுகின்ற) சோற்றை விரும்புதல் செய்யாமல், (3) வேறு புலம் முன்னிய-(விழாக்கொண்டாடும்) வேற்றூரிடத்தை (அடைய)க் கருதிய, விரகு அறி-உபாயத்தை யறிந்த, பொருந-பொருநனே! (எ-று.)

திருவிழாநடந்து முடிந்தவூரிலே பின்னுஞ்சோறுகிடைக்குமென்றாலும் அங்கே தங்கியிராது புதிதாகத் திருவிழா நடக்கும் வேற்றூரை நாடிச்செல்பவன் இந்தப்பொருநனென்க. திருவிழாக் கழிந்தபின்பும் இரண்டொருநாள் அங்கு உணவுகிடைக்குமேனும் உணவுஇடுபவர் வெறுக்குமளவும் அங்குத்தங்குவது நன்று அன்று என்றுகருதி, திருவிழாநடக்கின்ற வேற்றுப்புலத்துக்குச் செல்வதனால், பொருநனுக்கு 'விரகறி' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. திருவிழாக்காலங்களில் பலர்க்கும் உணவு இடுதல் முற்காலத்து இயல்புஎன்பது, இதனாற் பெறப்படும். பொருந-அண்மைவிளி: "அண்மையினியல்பு மீறழிவும்" என்பது விதி.

4-ஆவது அடிமுதல் 24-ஆவது அடிவரை, பொருநனுடன் செல்லும் பாடினி பாலையாழ் வாசித்துக்கொண்டு பாடுவதைக் கூறுகின்றான்: அவற்றுள் 19-அடிகளால் அந்தப்பாடினி வைத்துக்கொண்டுள்ள பாலையாழ், பத்தல் முதலியஉறுப்புகளைக் கொண்டிருத்தல் கூறப்படும்.

4. **குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்**

(இ - ள்.) குளம்பு வழி அன்ன - (மானின்) குளம்புஅழுத்திய இடத்தையொத்த, கவடு படு-இரண்டருகுந்தாழ்ந்து நடு உயர்ந்த, பத்தல் - பத்தலினையும்,—(எ - று.)

குளம்பு - விலங்குகளின் அடிப்பாதம். பத்தல் - குடுக்கை போலுள்ளயாழின்ஓருறுப்பு. கவடு - பகுப்பு. "கொன்றைகருங் காலிகுமிழ்முருக்குத் தணக்கே" என்பதனால், பத்தற்கு - மரம், குமிழும் முருக்கும் தணக்குமாமென்பர். (கோட்டிற்கு மரம் கொன்றையும் கருங்காலியுமாம். கீழ் 13-ஆம் வரி உரைகாண்க.)

5. **விளக்கழ லுருவின் விசியுறு பச்சை**
எய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்று

ஐதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை

(இ - ள்.) (5) விளக்கு அழல் உருவின் - விளக்கினதுஎரி கின்றநிறத்தையுடைய, விசி உறு - விசித்துப்போர்த்தலுற்ற, பச்சை - தோலாகிய, (6) எய்யா-மிகஅறியப்படாத,இள சூல்- இளையகருப்பத்தையுடைய, செய்யோள் - சிவந்தநிறத்தையுடை யோளது,அ வயிறு - அழகினையுடைய வயிற்றின், (7) ஐது மயிர் ஒழுகிய-மெல்லிதாகிய மயிர் ஒழுங்குபடக்கிடந்த, தோற்றம்போல —,(8)பொல்லம் பொத்திய-(இரண்டிடத்தையும்) கூட்டித்தைத்த, பொதிஉறு - (மரத்தைப்) பொதிதல்பொருந்திய, போர்வை - போர்வையினையும்—(எ - று.)

இது, பத்தரைப்போர்த்ததோல். "விளக்கழலுறுத்தபோ லும் விசியுறுபோர்வை" என்ற சிந்தாமணி, இங்குஒப்புநோக்கத் தக்கது. உரு-ரூபமென்ற வடசொல்லின்சிதைவு. பத்தரைமூடிய தோலின்தையலுக்குச்செய்யோளின் இளஞ்சூலையுடைய வயிற்று ஐதுஒழுகியமயிரை யுவமைகூறினர். செய்யோளென்றது - மயி ரொழுங்கு விளங்கித்தோன்றுதற்கு. 'எய்யாமையே அறியா மையே'.

அளைவா ழலவன் கண்கண் டன்ன
10. துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி

(இ - ள்.) (9) அளை வாழ் அலவன் - வளையிலே வாழ்கின்ற நண்டின், கண் கண்டு அன்ன - கண்ணைக் கண்டாலொத்த, (10) துளை வாய் தூர்ந்த-துளைகளின் வாய் மறைதற்குக்காரணமாகிய, துரப்புஅமை-(தோல்நெகிழாமல்) முடுக்குதலமைந்த, ஆணி- ஆணியினையும்,— (எ - று.)

துளைவாய்தூர்ந்த துரப்பமையாணி என்பதற்கு - பத்தலி ரண்டுஞ்சேர்தற்கு முடுக்கின ஆணியென்றும் உரையுள்ளது. அன்னஎன்ற குறிப்புப்பெயரெச்சம், 'ஆணி' என்பதனோடு இயை யும். ஆணி, அளைவாழலவன் கண்ணைப்போலுமெனக. ஆணி யென்பதை, வடசொல்லென்பர். "திவவுத்திங்கள் கோணிரைத் தனையவாணி" என்ற இடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'கோள் நிரைத்த திங்கள் பத்தரில் தோலைச் சூழமுடுக்கின ஆணிக்கு உவமம்... துளைவாய்தூர்ந்ததுரப்பமையாணிஎன்றார்பிறரும்'என்று கூறியிருத்தற்கு ஏற்ப, இங்குஉள்ள ஆணியென்பதனை மேலடி யோடும் இயைத்து, 'ஆணி, திங்களின்வடிவிற்றாகியிருப்ப'என்று உரைத்தல் ஏற்கும்.

11—12. எண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
அண்ணா வில்லா வமைவரு வறுவாய்

(இ - ள்.) (11) எண் நாள் திங்கள்-(அமாவாசைகழிந்த) எட் டாநாளில் தோன்றுஞ்சந்திரனது, வடிவிற்று ஆகி-வடிவையுடைய தாய், (12) அண் நா இல்லா-உள்நாக்குஇல்லாத, அமைவரு- பொருந்துதல் வந்த, வறு வாய்-வறிய வாயினையும்,—(எ - று.)

எண்ணாட்டிங்கள் - அஷ்டமீசந்திரன்.

13. பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்

(இ - ள்.) பாம்பு அணந்து அன்ன-பாம்பு தலையெடுத்தாலொத்த, ஓங்கு - ஓங்கின, இரு மருப்பின் - கரியதண்டினையும்,—

யாழின்நீண்டதண்டம், பாம்பு தலையெடுத்திருந்தாற்போலுமென்க. தண்டிற்கு மரம், கொன்றையுங் கருங்காலியுமாம்.

மாயோண் முன்கை யாய்தொடி கடுக்கும்
15. கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவின்

(இ - ள்.) (14) மாயோள் - கரியநிறத்தையுடையோளுடைய, முன்கை-முன்னங்கையிலேயணிந்த, ஆய் தொடி - அழகிய தொடியை, கடுக்கும்-ஒத்திருப்பதும்,—(15) கண்கூடு இருக்கை திண் பிணி - ஒன்றோடொன்று நெருங்கின இருப்பையுடைத்தாகிய திண்ணியபிணிப்பினையுமுடைய, திவவின் - வார்க்கட்டினையும்,—

இது, நரம்பு துவக்கப்படுவது. யாழின்வார்க்கட்டு, மாயோள் முன்கை ஆய்தொடிகடுக்குமென்க. "மடந்தைமுன்கைக், குறுந்தொடியேய்க்கு மெலிந்து வீங்குதிவவு" என்ற பெரும்பாணாற்றுப்படை, இங்கு ஒப்புநோக்கத்தக்கது. 'தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவின்' என்றது மலைபடுகடாம்.

16—18. ஆய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பின்
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்

(இ-ள்.) (16) ஆய் தினை அரிசி-ஆராய்ந்தெடுத்த தினையரிசியின், அவையல் அன்ன-குத்தலரிசியையொத்த, (17) வேய்வை போகிய-குற்றம்போகிய, விரல் உளர்-விரலாலசைக்கும், நரம்பின்-நரம்பினுடைய, (18)கேள்வி போகிய-இசைச்சுருதிமுற்றுப்பெற்ற, நீள் விசி - நீண்ட விசித்தலையுடைய, தொடையல் - தொடர்ச்சியினையும்,—(எ - று.)

தினையின்குத்தலரிசி யாழ்நரம்பிற்கு உவமையாதலை "ஆய்தினையவையலனையவா நரம்பு" என்ற இடத்துங் காண்க.

மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
20. அணங்கு மெய்ந்நின்ற வமைவரு காட்சி

(இ - ள்.) (19) மணம் கமழ் மாதரை - கலியாணஞ்செய்தமை தோன்றுகின்ற மாதரை, மண்ணி அன்ன-அலங்கரித்தாலொத்த, (20) அணங்கு மெய் நின்ற-(யாழிற்கு உரிய) தெய்வம் தன்னிடத்தே நின்ற, அமை வரு-(இலக்கணம்) அமைதல் வருகின்ற, காட்சி-அழகினையும்,—(எ - று.)

"மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி... குற்ற நீங்கிய யாழ்" என்ற சிலப்பதிகாரம் இங்கு ஒப்புநோக்கத் தக்கது. யாழிற்கு உரியதெய்வம் மாதங்கி யெனப்படுவாள்.

21—22. ஆறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை

(இ - ள்.) (21) ஆறு அலை கள்வர்-வழியையலைக்கின்ற கள்வர், படைவிட-(தம் கையிற்) படைக்கலங்களை விடும்படி, அருளின் (22) மாறு-அருளுக்கு மாறுகிய மறத்தினை, தலை பெயர்க்கும்-(அந்தக்கள்வருடைய) இடத்தினின்று போக்குகின்ற, மருவு இன்-மருவுதலினிய, பாலை-பாலையாழை,—(எ - று.)

பாலையாழின் இசையைக் கேட்ட ஆறலைகள்வர் தமது கையிற் படை நெகிழ்ந்துவிழத் தமக்கு இயற்கையான மறக்குணத்தினின்று நீங்குவரென, அவ்யாழின் சிறப்பைக் கூறினர். பாலை-ஓர் பண்: அப்பண் பிறக்கும் யாழைப் பாலையென்றார்: ஆகுபெயர்.

(4) பத்தலினையும், (5) பச்சையாகிய (8) பொல்லம் பொத்திய போர்வையினையும், (10) ஆணியினையும், (12) வறுவாயினையும், (13) மருப்பினையும், (15) திவவினையும், (17) நரம்பின் (18) தொடையலையும், (20) காட்சியையுமுடைய (22) பாலை யென்க.

23—24. வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி

(இ - ள்.) (23) வாரிஉம் - (நரம்புகளைக்) கூடத்தழுவியும், வடித்துஉம்-உருவியும், உந்திஉம் - தெறித்தும், உறழ்ந்துஉம் - ஒன்றைவிட்டு ஒன்றைத் தெறித்தும், (24) சீர் உடை நல் மொழி நீரொடு சிதறி-சீரையுடைத்தாகிய தேவபாணிகளை நீர்மையுடன் பரக்கப்பாடி,—(எ - று.)

'சிதறி' என்ற வினையெச்சம் (48) "பாடின" என்ற பெயரெச்சத்தோடு இயையும். பாலையாழை வார்தல் முதலியனசெய்து நீர்மையொடு சிதறிக் கடவுட்கடனை (நீ) கழிப்பியபின்றை என்று பொருநனுடைய செய்கையாகக்கொண்டு கூறுவர், ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

பாலையாழை வார்தல் முதலியனசெய்து நன்மொழியைப் பரக்கப்பாடி யென்க. 'வார்தலென்பது - சுட்டுவிரற் செய்தொழில்: வடித்தல் என்பது-சுட்டுவிரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல். உந்தலென்றது-நரம்புகளைத்தெறித்து வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழி பட்டது மென்று அறிதல். உறழ்தலென்பது - ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்' என்பர், சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர். வடித்தல்-நரம்பெறிதலென்று உரைப்பாருமுளர்.

'சீர்'எனவே, பாணியும் தூக்கும் உள்ளனவாம். சீர்முதலியன தாளவிசேடங்கள்: 'சீர்-முடியுங்காலத்தைத் தன்னிடத்தேயுடையது; பாணி-எடுக்குங்காலத்தைத் தன்னிடத்தேயுடையது: தூக்கு-நிகழுங் காலத்தைத்தன்னிடத்தேயுடையது' என்று கலித்தொகையுரையில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். தேவபாணியென்பது-தேவரைப்பரவுதல்: அது பெருந்தேவபாணி சிறுதேவ

பாணி யென இருவகைப்படுமென்றும், அவை முத்தமிழ்க்கும் பொதுவென்றும், இசைத்தமிழில் வருங்கால் செந்துறை முதலிய இசைப்பாக்கள் பத்தின் பாற்படுமென்றும் கூறுவர்.

இனி, பொருநன் செல்லும்போது உடன்செல்லும் பாடினியின் உருவத்தைக் கூந்தல்முதல் அடிவரையில் 25 - முதல் 47 - வரையிலுமுள்ள இருபத்துமூன்று அடிகளாற் கூறுகின்றான்:—

25. அறல்போற் கூந்தல்

(இ - ள்.) அறல் போல் கூந்தல் - (ஆற்றின்) கருமணல் போன்ற கூந்தலினையும்,—(எ - று.)

பிறைபோல் திருநுதல்

(இ - ள்.) பிறை போல்-பிறைச்சந்திரன்போல், திரு-அழகினையுடைய, நுதல் - நெற்றியினையும்,—(எ - று.)

26. கொலைவிற் புருவத்து

(இ - ள்.) கொலை வில் - கொலைத்தொழிலையுடைய வில்லைப் போன்ற, புருவத்து-புருவத்தினையும்,—(எ - று.)

புருவம்-ப்ரூ என்ற வடசொல்லின் திரிபென்பர்.

கொழுங்கடை மழைக்கண்

(இ - ள்.) கொழு கடை - அழகிய ஓரத்தினையுடைய, மழை கண் - குளிர்ச்சியையுடைய கண்ணினையும்,—(எ - று.)

27. இலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்

(இ - ள்.) இலவு இதழ் புரையும் - இலவினது இதழையொத்திருக்கின்ற, இன்மொழி துவர் வாய் - இனிய சொல்லையுடைய செந்நிறத்தையுடைய வாயினையும்,—(எ - று.)

28. பலவுறு முத்தின் பழிதீர் வெண்பல்

(இ - ள்.) பல உறு - பலவுஞ்சேர்ந்த, முத்தின் - முத்துக்கள் போல, பழி தீர் - குற்றந் தீர்ந்த, வெள் பல் - வெள்ளிய பல்லினையும்,—(எ - று.)

ஒருகோவையாயிருத்தலின், பல்லுக்குப் பலமுத்துக்களையுவமைகூறினார்: இனி பலஉறு முத்தின் என்பதற்கு - பல விலையுற்ற முத்து என்றுமாம்.

மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
30. பூங்குழை யூசற் பொறைசால் காதின்

(இ - ள்.) (29) மயிர்குறை கருவி மாண் கடை அன்ன-மயிரை வெட்டுகின்ற கத்தரிகையினுடைய மாட்சிமைப்பட்ட குழைச்சையொத்தனவாகி, (30) பூங் குழை ஊசல் பொறை சால் - பொலி

வினைக்கொண்ட (மகரக்) குழையின் அசைவினைப்பொறுத்த லமைந்த, காதின் - காதுகளையும்,—(எ-று.)

கத்தரிகையின்குழைச்சு, காதுக்கு வடிவுவமமாம்.

31. நாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தின்

(இ-ள்.) நாண் அட - நாணம் வருத்துதலால், சாய்ந்த - (பிறரை நோக்காது) கவிழ்ந்த, நலம் கிளர்-நன்மை விளங்குகின்ற, எருத்தின் - கழுத்தினையும்,—(எ-று.)

கற்புடைமகளிர் நாணந்தோன்றக் கவிழ்ந்த எருத்துடனிருத்தல், இயல்பு.

32. ஆடமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை

(இ-ள்.) ஆடு - அசைகின்ற, அமை - மூங்கில்போலும், பணை - பெருத்தலையுடைய, தோள் - தோளினையும்,— அரி மயிர் - மெல்லிய மயிரினையுடைய, முன் கை - முன்னங்கையினையும்,—

33. நெடுவரை மிசைஇய காந்தண் மெல்விரல்

(இ-ள்.) நெடு வரை மிசைஇய - நெடிய மலையின் உச்சியிடத்துள்ளனவான, காந்தள் - காந்தள்போலும், மெல் விரல் - மெல்லிய விரலினையும்,—(எ-று.)—மிசைஇய - குறிப்புப்பெயரெச்சம்.

34. கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகிர்

(இ-ள்.) கிளிவாய் ஒப்பின் - கிளியின்வாயோடு ஒத்திருத்தலையுடைய, ஒளி விடு - ஒளிவிடுகின்ற, வள் உகிர் - பெருமையையுடைத்தாகிய உகிரினையும்,—(எ-று.)

"கிளிவாயன்ன வொளிவாயுகிரின்," "கிள்ளைவாயி னன்ன வள்ளுகிர்" என்பன காண்க.

35. அணங்கென வுருத்த சுணங்கணி யாகத்து
ஈர்க்கிடை போகா வேரிள வனமுலை

(இ-ள்.) (35) அணங்கு என உருத்த - (பிறர்க்கு) வருத்தமெனத் தோன்றின, சுணங்கு அணி ஆகத்து - சுணங்கையணிந்த மார்பினிடத்துள்ள, (36) ஈர்க்கு இடை போகா ஏர் இள வனம் முலை - ஈர்க்கும் நடுவேபோகாத எழுச்சியையுடைய இளைய அழகினையுடைய முலையினையும்,—(எ-று.)

ஆடவர்க்கு வருத்தம் விளைத்தலால், 'அணங்கெனவுருத்த... முலை' என்றது.

37. நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூழ்

(இ-ள்.) நீர் பெயர் சுழியின் - நீரினிடத்துப் பெயர்தலையுடைய சுழிபோல, நிறைந்த - (உத்தமவிலக்கணங்கள்) நிரம்பின, கொப்பூழ் - கொப்பூழினையும்,—(எ-று.)

38. உண்டெனை வுணரா வுயவு நடுவின்

(இ - ள்.) உண்டுஎன உணரா - உள்ளதென்று (பிறரால்) உணரப்படாத [மிகவும் நுண்ணிய], உயவும்-வருந்துகின்ற, நடுவின் - இடையினையும்,—(எ - று.)

மிகவும் நுண்ணிதாயிருத்தலால், பிறவுறுப்பின்பாரத்தைத் தாங்கமாட்டாது இடை வருந்தும். 'உயவின்' என்ற பாடத்துக்கு -வருந்துதலையுடைய என்க.

39. வண்டிருப் பன்ன பல்கா ழல்குல்

(இ - ள்.) (பல்) வண்டு இருப்பு அன்ன - பலவண்டுகளின் இருப்பை யொத்த, பல் காழ்-பலமணிகோத்தவடங்களையுடைய மேகலையை யணிந்த, அல்குல்-அல்குலினையும்,—(எ - று.)

"பாடுவண்டிருந்தவன்னபல்கலையகலல்குல்" என்றசிந்தாமணி, இங்கு ஒப்புநோக்கத்தக்கது. பல்காழ் - பலவடங்களையுடைய மேகலைக்குப் பண்புத்தொகையன்மொழி. மேகலை- ஏழுவடங்களை யுடையதென்பர். எண்கோவை மேகலை யென்றலும் உண்டு.

40. இரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கின்

(இ - ள்.) இரு பிடி தட கையின்-பெரிய பெண்யானையின் பெருமையையுடைய கைபோல, செறிந்து திரள்-(நீளவந்துமெல்லிதாகத் தம்மில்) நெருங்கியொன்றித் திரண்ட, குறங்கின் - துடையினையும்,—(எ-று.)

"இரும்பிடித்தடக்கையிற் சேர்ந்துடன்றிரண்ட, குறங்கின்" என்ற சிறுபாணாற்றுப்படை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

41—42. பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி

(இ - ள்.) (41) பொருந்து-(கணைக்காற்கு இலக்கணமென்றற்குப்) பொருந்தின, மயிர் ஒழுகிய-மயிரொழுங்குபட்ட, திருந்து - (ஏனை இலக்கணங்கள்) திருந்தின, தாட்கு-கணைக்காலுக்கு, ஒப்ப-பொருந்த, (42) வருந்து நாய் நாவின்-ஓடியிளைத்த நாயினது நாப்போல, சிறு-சிறிய, பெருதகு-பெருமைதக்கிருக்கின்ற, அடி-அடியினையுமுடைய,—(எ-று.)

மயிரொழுகிய தாள், திருந்து தாள் என்க. "உயங்குநாய் நாவினல் லெழிலசைஇ, வயங்கிழை யுலறிய வடி" என்பது சிறுபாணாற்றுப்படை. தாளுக்குஒப்பச் சிறு அடிஎன இயையும். பெரு என்னும் முதனிலை, பெருமையையுணர்த்திநின்றது. சிறுமை+அடி=சீறடி: பண்புப்பெயர் ஈறுகெட்டு ஆதிநீண்டது.

அரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலின்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
45. மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்
நன்பக லந்தி நடையிடை விலங்கலின்

(இ - ள்.) (43) அரக்கு உருக்கு அன்ன - சாதிலிங்கத்தை உருக்கின தன்மையையொத்த,செந் நிலன்-செந்நிறமான நிலத்தே, ஒதுங்கலின்-நடத்தலினாலே, (44)பரல் பகை உழந்த-சுக்கான் கல்லாகிய பகையாலே வருந்தின, நோயொடு-நோவோடு, சிவணி-பொருந்தி, (45) மரல் பழுத்து அன்ன - மரற்செடி பழம்பழுத்தாற்போன்ற, மறுகு நீர்-துளும்புகின்ற நீரையுடைய, மொக்குள் - கொப்புளத்தால், (46) நன் பகல் அந்தி நடை இடை விலங்கலின்-உச்சிக்காலமாகிய சந்தியிலே (அடிகள்) நடத்தலை நடுவே தவிர்தலாலே,-(எ- று.)—'விலங்கலின்' என்பதும் (48) பாடின என்பதனோடு இயையும்.

பரலைப் பகையென்றது, வருத்தத்தை விளைத்தலால். பரற்கற்கள் நிரம்பின செந்நிறமுள்ள நிலத்திலே அடிவைத்துநடக்கும் போது அந்த அடிகள் நோய்கொண்டு கொப்புளமும் வெடிக்க, நல்ல உச்சிவெயிலில் வழிநடப்பதைவிட்டுத் தங்கியிருக்கையிற் பெடைமயி லுருவினையுடைய பாடினி பாடினள் என்க. அந்தி, நீர்-ஸந்த்யா, நீரம் என்ற வடசொற்களின் சிதைவென்பர்.

வள்ளலைத் தேடிக்கொண்டு செல்லுகின்ற பொருநனுடன் பாடினியின் வருணனையைக்கூறுமிடத்து இந்த நான்கு அடிகள், இடைப்பிறவரலாய் அவள் அங்குப்பாடுதற்குக் காரணத்தைத் தெரிவிக்கவந்தன.

(43) அரக்குருக்கன்ன செந்நிலத்து நடத்தலால்(பாதங்கள்) (44) பரற்பகையுழந்த நோயொடு சிவணி (45) மரல்பழுத்தன்ன மறுகுநீர் மொக்குள்கொண்டு (46) நன்பகலந்தி நடை இடைவிலங்கலின் (47) பாடினி (22) பாலையாழை (24) நீரொடு சிதறிப் (48) பாடினள் என்க.

47. பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி

(இ - ள்.) (47) பெடை மயில் உருவின் - பெட்டைமயில் போலுஞ்சாயலினைக்கொண்ட, பெருதகு பாடினி-கல்விப்பெருமை தக்கிருக்கின்ற பாடினி,—(எ - று.)

"கருவார்பொழில்" என்ற விடத்து 'கரு' என்பது கருமையென்ற பண்பையுணர்த்துவது போல பெரு என்பது இங்குப் பெருமை யென்ற பண்பினை யுணர்த்தும்.

(25) கூந்தலினையும் நுதலினையும் (26) புருவத்தினையும் கண்ணினையும் (27) வாயினையும் (28) பல்லினையும் (30) காதினையும் (31) எருத்தினையும் (32) தோளினையும் முன்கையினையும் (33) விரலினையும் (34) உகிரினையும் (36) முலையினையும் (37) கொப்பூழினையும் (38) நடுவினையும் (39) அல்குலினையும் (40) குறங்கினையும் (42) அடியினையுமுடைய (47) மயில் உருவினைக்கொண்ட பாடினி என்க.

(25 - 42) தலைமுதல் அடிவரையிற் கூறினராதலின், அடியென்பதனை அடியினால் ஒதுங்கலின் (43) என்றுகூட்டிப்பொரு

ளுரையாமல், அடியினையும் என்று பொருள்கூறி, ஒதுங்குதல் தொழிற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது.

இனி, பாடினி பாலையாழைப்பரக்கவாசித்துப்பாடின பாணிக்கு ஏற்பக் காட்டிலே தங்கிப்பொருநன் தடாரிவாசித்தல் 52-அடிவரையிற் கூறப்படும்:

48. பாடின பாணிக் கேற்ப

(இ - ள்.) பாடின—, பாணிக்கு - ரீதிக்கு, ஏற்ப-பொருந்த,—(எ - று.)—ஏற்பஎன்பது, கழிப்பிய (52) என்றபெயரெச்சத்தோடு இயையும்.

நாடொறும்
களிறு வழங்கதர கானத் தல்கி
இலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கின்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை

(இ - ள்.) (48) நாள் தொறும் (49) களிறு வழங்கு - தினந்தோறும் யானை யுலாவப்பெற்ற, அதர - வழியையுடைய, கானத்து-காட்டிடத்தே, அல்கி-தங்கி,—(50) இலை இல் மராத்த-இலையில்லாத மராமரத்தினிடத்தனவான, எவ்வம் - (ஞாயிற்றின் வெம்மையால் தனக்குவந்த) வருத்தத்தை, தாங்கி - பொறுத்துக் கொண்டு, (51) வலை வலந்து அன்ன - வலையைமேலே கட்டினாலொத்த, மெல் நிழல் மருங்கில்-மெல்லிய நிழலினிடத்தே, (52) காடு உறை கடவுள் கடன் கழிப்பிய பின்றை-காட்டிலே தங்குகின்ற தெய்வத்திற்கு (மனமகிழ்ச்சியாகச்செய்கின்ற) முறைமைகளைச் செய்துவிட்ட பின்பு—,—(எ - று.)—(58) நெறிதிரிந்தொராஅது(59)ஆற்றெதிர்ப்படுதலும் நோற்றதன் பயனேஎனமுடியும்.

நாடொறுங்களிறுவழங்கு அதரையுடையது எனக்கானத்தின் தன்மை கூறப்பட்டது. பாடினி நடை இடைவிலங்கலிற்பாடின பாணிக்குஏற்ப, (பொருநன்)நிழல் மருங்கிலே கடவுட்கடனைக்கழிக்கின்றன னென்க. மரா-ஒருவகையாச்சாவென்பர்: இது, சுள்ளியெனவும் வழங்கும். இலையில்லாத மரம் ஆதலால்அதன்மென்னிழலிலே பொருநன் தங்கும்போது ஞாயிற்றின் வெம்மையால் நிகழும் எவ்வத்தை அவன்தாங்கவேண்டியதாயிற்று. தாங்கிக் கழிப்பிய என இயையும். இலையில்லாத மராமரத்தின் கிளையினிடையிடையே தோன்றும் மென்னிழல், வலந்த வலைபோலுமென்றார்; இந்த அருமையானஉவமை, மிகவும் பாராட்டுதற்கு உரியது.

(50)'எவ்வந்தாங்கி'என்பதைப் பாடினியின் தொழிலாக்கி, கொப்புளத்தால்வந்த வருத்தத்தைத் தாங்கினஎன உரைத்து, (46) நடையிடைவிலங்கலின் என்பதனோடு இயைத்துப்பொருள்கூறினர் நச்சினார்க்கினியர். எவ்வந்தாங்கிக் கடவுட்கடன் கழித்தல் - தடாரிவாசித்தல். காடுறைகடவுள் - வனதேவதை.

(3) பொருந! (47) பாடினி (22) பாலையாழ் (23) வாரியும்... உறழ்ந்தும் (24) சீருடைநன்மொழி நீரொடுசிதறி, (48) பாடின பாணிக்கு ஏற்ப, (நீ), (49) கானத்தல்கி, (50) எவ்வந் தாங்கி (51) நிழல்மருங்கில் (52) கடவுட்கடன்கழிப்பியபின்றை என்க.

பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாள்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
அரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ! கொண்ட தறிந!
அறியா மையி னெறிதிரிந் தொராஅது
ஆற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே.

(இ - ள்.) (53) பீடு கெழு திருவின் - பெருமைபொருந்தின செல்வத்தையும், பெரும் பெயர் - பெரியசீர்த்தியையும், நோன் தாள்-வலியையுடைய முயற்சியையும், (54) முரசு முழங்கு தானை - வெற்றிமுரசுமுழங்கும் படையினையுமுடைய, மூவர்உம்-(சேரசோழ பாண்டியர் என்ற) மூவரும், கூடி-தம்மிற் (பகைமைநீங்கிச்) சேர்ந்து, (55) அரசு அவை இருந்த தோற்றம் போல-(செல்வக்குறைபாடு இல்லாமல்) அரசு இருத்தற்குஉரியசபையாக இருந்த காட்சி போல,—(56) பாடல் பற்றிய-(மிடற்றுப்) பாடலைத்தொடங்கியெழுந்த, பயன்உடை-பயன்களை (த் தன்னிடத்தே) யுடைய, எழாஅல்-யாழையுடைய, (57) கோடியர் தலைவ - கூத்தர்க்குத்தலைவனே! கொண்டது அறிந-(பிறர்மனத்துக்) கொண்டதனைக் குறிப்பால் அறியவல்லாய்! (58)அறியாமையின்-(யான் இருக்கும்இவ்வழியை) அறியாமையால், நெறிதிரிந்து - இவ்வழியைத் தப்பி, ஒராஅது-(வேறொருவழியிற்) போகாமல், (59) ஆறு எதிர்ப்படுதலும் - இவ் வழியிலே (என்னைக்) கண்டதும், நோற்றதன் பயனே-(நீ முற்பிறப்பிற்) செய்த நல்வினைப்பயனையாம்; (எ-று.)

(53-56) அரசவையில் மூவேந்தர்சேரவிருந்தாற்போல நிருத்தம் கீதம் வாத்தியம் என்ற மூன்றும் அமைந்திருத்தலால், மூவருங்கூடியரசவையிருந்த தோற்றம்போலப் பாடல்பற்றிய என்று உவமைகூறினர்: வாத்தியம் நிருத்தம் கீதம் என்ற மூன்றும், **கொட்டாட்டுப்பாட்டு** என வழங்கும்: "கொட்டாட்டுப் பாட்டொலி யோவாத் துறையூர்" முதலியன காண்க. இனி, மூவருங்கூடி அரசவையிருந்த தோற்றம்போல, வலிவும் மெலிவும் சமனுமாகப் பாடுதலைப்பற்றிய பாடல்என்று கூறின், குலமும் செல்வமும் வீரமும் முதலியவற்றால் தம்மில்ஒத்தாரை யுவமித்தலின், அவர்க்கும் வலிவும் மெலிவும் சமனுமென்னுங் குணங்கள் இருப்பனவாகக் கொள்ளவேண்டிவருமாதலால், அவ்வுரைபொருந்தாதென்பர். (தோற்றம்போல "இன்மைதீரவந்தனென்" (129) என மேலே கூட்டியுரைத்து, 'ஈண்டுப்பயனே உவமையென்றுஉணர்க' என்று கூறியுள்ளனர், நச்சினார்க்கினியர்: நேரேபொருள்கூறாது இங்குமங்கும் சொற்களைக்கூட்டிப் பொருளுரைத்தல், அவர்க்குஇயல்பு.)

மூவரென்பது-சேரசோழபாண்டியர்களைக்குறிக்கும் தொகைக் குறிப்புச்சொல். தன்னையெதிர்ப்பட்டதனால் தகுந்தவனிடத்துத் தான் வழிப்படுத்துவது கருதி, 'அறியாமையின் நெறிதிரிந்தொரா அது ஆற்றெதிர்ப்படுதலும் நோற்றதன்பயனே' என்றான்.

இனி, மீண்டும் பொருநனைக்கொண்டாடிவிளித்து யான்சொல்வதைக் கேட்பாய் என்று ஆற்றுப்படுத்துபவன் 60-ஆவது அடியாற் கூறுகின்றான்.

60. போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந!

(இ - ள்.) புகழ் மேம்படுந-புகழினால்மேம்பட்டவனே! (யான் கூறுகின்றவற்றை), போற்றி-விரும்பி, கேண்மதி - கேட்பாயாக;

புகழ் மேம்படுந என்பதற்கு-(புறத்தாரின்) புகழை (அரசவையில்) மேம்படுத்துபவனே! என்றுகூறினுமாம். கேண்மதி, மதி-முன்னிலையசை.

இனி, மூன்றடிகளால் 'சுற்றத்தோடு பசிநீங்கக்கருதின், கரிகால்வளவனிடத்து எழுக' எனறு பொருநனுக்குக்கூறுகின்றான்:-

61—63: ஆடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டின் நீடின்று
எழுமதி வாழி ஏழின் கிழவ!

(இ - ள்.) (61) ஆடு பசி உழந்த - கொல்வதுபோன்ற பசியாலே வருந்தின, நின் இரு பேர் ஒக்கலொடு-நின்னுடைய கரிய பெரியசுற்றத்தோடே, (62) நீடு பசி-நெடுநாளாகவந்தபழம்பசியை, ஒராஅல் வேண்டின்-(நின்னைக்) கைவிடுதலை விரும்புவாயாயின், நீடு இன்று - நீட்டித்தலின்றி, (63) எழுமதி - எழுந்திருப்பாயாக; வாழி-(இனி நீ) வாழ்ச்சிபெறுக; ஏழின் கிழவ - (குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்னும்) நரம்புஏழின்கண்ணும் உரிமையுடையாய்! (எ - று.)

இரும்பேரொக்கல் என்பதற்கு-மிகப் பெரிய சுற்றமெனக் கூறின், இரும்பேர்-ஒருபொருட்பன்மொழி.

'எழுக' என்று கூறியவிடத்து 'எவ்விடத்துக்கு? என்று ஒருகேள்வி பிறத்தலின் அவ்விடம் கரிகாற்பெருவளத்தானென்பதைக் குறிப்பிக்கக் கருதி, இனி, 64-ஆவது அடிமுதல் 129-ஆவது அடியில் "இன்மைதீரவந்தனென்" என்பது வரையிலுள்ள பகுதிகளால், ஆற்றுப்படுத்தும் பொருநன், வறிஞனாயிருந்த தான் கரிகாற்பெருவளத்தானிடஞ்சென்றமையையும், அங்குத்தங் குகையிற் பலபடியாக அன்னான் உபசரித்தமையையும், விடைகேட்டபோது அன்னான் விடைகொடுத்தனுப்ப மனமின்றியே பலபொருள்களையும் கொடுத்து அனுப்பியமையையும் ஆற்றுப்படுத்தக்கருதும் பொருநனிடம் கூறுகின்றான் :—

64—73 :—இவ்வடிகளால், ஆற்றுப்படுத்துபவன் தான் கரிகாற்பெருவளத்தானுடைய வாயிலிற்சென்று தடாரிகொட்டிப் பாடத் தொடங்கியமையைக் கூறுகின்றான் :—

பழுமர முள்ளிய பறவையின் யானும்அவன்
இழுமென் சும்மை யிடனுடை வரைப்பின்
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்கென் னிடும்பை தீர
எய்த்த மெய்யே னெய்யே னாகிப்
பைத்த பாம்பின் துத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்
ஒன்றியான் பெட்டா வளவையின்

(இ - ள்.) (64) பழுமரம்-பழுத்த மரத்தை, உள்ளிய-நினைத்துச் செல்கின்ற, பறவையின்-(வௌவாலென்னும்) பட்சிபோல, யான்உம்-(இப்போது செல்வம் படைத்துள்ள) யானும், (முன்பு வறியவனாயிருந்தபோது), அவன் (65) இழுமென் சும்மை இடன் உடை வரைப்பின் - அந்தக் கரிகாற்பெருவளத்தானுடைய இழுமென்றெழும் ஓசையினையுடைய அகலமுடைத்தாகிய மதிலில், (66) நசையுநர் தடையா நல் பெரு வாயில்-விரும்பி வந்தார்க்குத் தடையில்லாத நன்றாகிய பெரிய கோபுரவாயிலில், (67) இசையேன் புக்கு-(வாயிலோனுக்குக்) கூறாமலே உட்புகுந்து, என் இடும்பை தீர-என்னுடைய வறுமைத்துன்பம் நீங்குமாறு, (68) எய்த்த மெய்யேன் எய்யேன் ஆகி - (முன்பு) இளைத்த உடம்பையுடைய யான் (அவ்வாயிற்குஉள்ளேசென்றமகிழ்ச்சியாற் பின்பு) இளைப்புத் தீர்ந்தவனாகி,—(69) பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்ப-படம்விரித்த பாம்பின் படப்புள்ளியையொப்ப, (70) கை கசடு இருந்த-கையின் வடுப்பட்டுக்கிடந்த, என் கண் அகல் தடாரி-எனது கண்ணகன்ற உடுக்கையினின்று(தோற்றுவித்த), (71) இரு சீர் பாணிக்கு ஏற்ப-இரட்டைச்சீரையுடைய தாளத்திற்குப்பொருந்த, விரி கதிர் (72) வெள்ளி முளைத்த நள் இருள் விடியல்-விரிகின்றகிரணங்களையுடைய சுக்கிரனென்றகிரகம் உதயமாகின்ற செறிந்த இருளையுடைய உதயகாலத்திலே, (73) ஒன்று யான் பெட்டா அளவையின் - ஒருபாட்டினை யான் பேணிப்பாடுவதற்கு முன்னே,— (எ - று.)—(74) 'கேள்கொளல்வேண்டி' எனத் தொடரும்.

இவ்வடிகளால் தான் வறியவனாயிருந்த முற்காலத்துப் பழுத்தமரத்தை நாடிச்செல்லும் வௌவாற்பறவைபோலக் கரிகாற்பெருவளத்தானை நாடி அவனுடைய மதிலிடையேயுள்ள கோபுரவாயிலினுள்ளே தடைசெய்வாரின்றிப் புகுந்து ஆங்குச் சேர்ந்த காரணத்தாலேயே இளைப்புநீங்கி, மிடிதீரவேண்டி (என் வருகையைக் கரிகாற்பெருவளத்தானுணரும்படி) விடியற்காலத்திலே உடுக்கையின் தாளத்திற்கு ஏற்ப ஒருபாட்டுப்பாடினேனென்று, முன்னைய நிகழ்ச்சியை ஆற்றுப்படுத்துபவன் கூறுகின்றான். "பழுமரந்தேரும்பறவைபோல்," "தாஅவஞ்சிறை நொப்பறைவாவல், பழுமரம் படரும்" என்று இவ்வுவமைபலவிடங்களிலும் வருதல் காண்க. நசையுநர்த்தடையா நன்பெருவாயில்- "பொருநர்க்காயினும் புலவர்க்காயினும், அருமறைநாவினந்

தண்ணர்க்கர்யினும், அடையாவாயில்" என்ற சிறுபாணாற்றுப்படையைக் காண்க. 'சீர்' இன்னதென்பது, 24 - ஆவது அடியினுரையிற் கூறப்பட்டது.

(64) பறவையின் (67) புக்கு, (68) எய்யேனாகி, (67) இடும்பைதீர, (70) தடாரி (71) பாணிக்கேற்ப (72) விடியலில்(73) ஒன்று பெட்டாவளவையின் என்க. பொருநர் விடியற்காலத்தே சென்று தடாரி கொட்டிப்பாடுதலும், கேட்ட உபகாரிகள் அந்தப்பொருநர்க்கு வேண்டியவற்றை யளித்தலும் பண்டைக்கால வழக்கு.

கைக்கசடுக்குப் பாம்பின் துத்தி உவமை. வெள்ளி விடியற் காலத்துத் தோன்றுதல், இயல்பு: "வெள்ளிமுளைத்த விடியல்" என்றதுங் காண்க. பெட்டா-பெள் என்ற பகுதியினடியாகப்பிறந்த எதிர்மறைப் பெயரெச்சம். எய்த்தல்-இளைத்தல்.

73 - 83:—இவ்வடிகளால், தான்பாடத்தொடங்கியவுடனே கரிகாற்பெருவளத்தான் தன்னிடத்து அன்புகொண்டு குளிர நோக்கித் தனது மாசு பொதிந்த கந்தலுடையைநீக்கி உயர்ந்த ஆடையளித்தமையைக் கூறுகின்றான்:—

ஒன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமொடு
உருகு பவைபோ லென்புகுளிர்கொளீஇ
ஈரும் பேனு மிருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன வறுவை நல்கி

(இ - ள்.) (73) ஒன்றிய (74) கேளிர் போல கேள் கொளல்-(முன்பேதன்னோடு) பொருந்திய நண்பினரைப்போல உறவு கொள்ளுதலை, வேண்டி-விரும்பி, (75) வேளாண் வாயில் - (தான்) உபகரித்தற்குவழியாகிய யாசகத்தொழிலை, வேட்ப-(யான் எப்பொழுதும்) விரும்பும்படி, கூறி - (உபசாரமொழிகளைச்) சொல்லி, (76) கண்ணில் காண நண்ணு வழி இரீஇ - (தன்) கண்ணிலே காணும்படி (தனக்குச்) சமீபமானஇடத்திலே (என்னை) இருக்க வைத்து, (77) பருகு அன்ன அருகா நோக்கமொடு - பருகுந்தன்மையை யொத்த கெடாத பார்வையாலே, (78) உருகுபவைபோல்-உருகுந்தன்மையுள்ள மெழுகுமுதலியனபோல (நெகிழும்படி), என்பு குளிர்கொளீஇ-என்பைக் குளிர்ச்சிகொளச்செய்து,—(79) ஈரும் பேன் உம் இருந்து இறைகூடி-ஈரும் பேனுங் கூடியிருந்து அரசாண்டு, (80) வேரொடு நனைந்து - வேர்வையாலே நனைந்து, வேறு இழை நுழைந்த-வேற்றுநூலிழைகள் உள்ளேநுழைந்துள்ள, (81) துன்னல்-தைத்தற்றொழிலையுடைய, சிதாஅர்-சீரை

யை, துவர நீக்கி - (என்னிடத்தினின்று) அடியோடு போக்கி,—(82) நோக்கு நுழைகல்லா நுண்மைய - கண்ணிற்பார்வை(இஃது இழைபோன வழிஎன்று) குறித்துப்பார்க்கவாராத நுண்மையையுடையனவாய், பூ கனிந்து (83) அரவு உரி அன்ன-பூத்தொழில் முற்றுப்பெற்றமையாற் பாம்பினதுதோலையொத்த, அறுவை-ஆடைகளை, நல்கி - தந்து,—(எ-று.)—(101) கூஉய், (102) பதனறிந்து, (104) தண்டி என இயையும்.

74: தனக்கும் கரிகாற்பெருவளத்தானுக்கும் யாதோருறவும் இன்றியிருப்பினும் நட்புறவுகொள்ள அன்னுன் விரும்பியமையைக் கூறுகின்றது இவ்வடி.

75: "இரத்தலும் ஈதலேபோலுங்கரத்தல், கனவிலுந்தேற்றுதார் மாட்டு," "கரப்பிலாநெஞ்சிற் கடனறிவார்முன்னின்று, இரப்புமோரேஎருடைத்து" என்பவாதலால், வேளாண்வாயில், வேட்குமாறு [விரும்புமாறு] ஆயிற்று. இரத்தலென்பது ஒருவன் தன் செல்வத்தை உபகரித்தற்கு வாயிலாகுதலால், இரப்புக்கு, 'வேளாண்வாயில்' என்று ஒருபெயர் கூறினர்.

76—78: கரிகாற்பெருவளத்தான் தன்னைக் கண்ணெதிரே நிறுத்தி என்புருகக் குளிரக்கண்டமையை இவ்வடிகளால் தெரிவிக்கின்றுன். உலகத்துப்பொருள்கள் வெப்பத்தால் உருகுமாறு நெகிழ்வனவாக, என்பு, குளிர்ச்சியால் நெகிழு மென்க.

79—83: பழஞ்சீரையை யப்பாலெறிந்திட்டு மிகச்சிறந்த ஆடைகளை யளித்தமையை இவ்வடிகள் கூறும். 'ஈரும்பேனுமிருந்திறைகூடி...துன்னல்' என்ற அடைமொழியால், பழஞ்சீரையின் தன்மையை இனிதுவிளக்கிய **தன்மைநவிற்சியணி** பாராட்டத்தக்கது. கரிகாற்பெருவளத்தான் அளித்த ஆடைகள் பூத்தொழில் மிக்கதனுல், அரவினுரியைப் போலும். 'நோக்கு நுழைகல்லா நுண்மைய' என்று அந்த ஆடைகள் அமைந்த நுண்மைத்தன்மையை இனிது விளக்கினுன்.

தான் சென்ற நாளில் அரசன் உபசரித்தமையைக் கீழ்க்கூறி விட்டுப் பின் நிகழ்ந்தவற்றைக்கூறக் கருதி, அந்த அரசமாடத்து மகளிர்உபசரித்ததைத் தான்பெற்றுச் செருக்கொடுநின்றமையை 84 - அடிமுதல் 89-அடிவரையிற் கூறுகின்றுன்:—

மழையென மருளு மகிழ்செய் மாடத்து
85. இழையணி வனப்பி னின்னகை மகளிர்
போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை

(இ - ள்.) (84) மழை என மருளும் - 'மேகமண்டலமோ?' என்று (கண்டவர்) மருள்கொள்ளுதற்குக் காரணமானதும், மகிழ்செய் மாடத்து-(மனத்துக்கு) மகிழ்ச்சியையுண்டாக்கவல்லதுமான

மாடத்தில்வாழ்கின்ற, (85) இழை அணி வனப்பின் இன் நகை மகளிர் - அணிகலங்களையணிந்த அழகினையுடைய (பாட்டாலும் கூத்தாலும் வார்த்தையாலும் அரசனுக்கு) இனிய மகிழ்ச்சியைச் செய்கின்ற (நங்குலத்து) மகளிர், (86) போக்குஇல் பொலம் கலம் நிறைய-ஓட்டமற்ற பொன்னாற்செய்த வட்டில்நிறையும்படி, பல் கால் (87) வாக்குபு தரதர - கள்ளைப் பலகாலும் வார்த்துத்தந்து கொண்டேயிருக்க ,வருத்தம் வீட (88) ஆர உண்டு - (வழிபோன) வருத்தம் போம்படி நிறைய உண்டு, பேர் அஞர் போக்கி - கள்ளுண்ணப்பெற்றிலேமென்று நெஞ்சிற் கிடந்த) பெரிய வருத்தத்தையும் போக்கி, (89) செருக்கொடு நின்ற காலை - மகிழ்ச்சியுடன் (நான்) நின்ற (அந்திக்) காலத்திலே,—(எ-று.)—(90) 'தங்கி' என்றதனோடு இயையும்.

84—89: இவ்வடிகள், அந்தக்கரிகாற்பெருவளத்தான் ஆய மகளிரைக்கொண்டு கள்ளைப் பொற்கலங்களில் தரத்தர, அந்தக் கள்ளை மிகப்பருகி வழிவந்த இளைப்பைப் போக்கி மகிழ்ச்சியுடன் தான் ஆண்டுத் தங்கியமையைக்கூறும். மாடம் ஓங்கியிருத்தலால், அதனைக் கண்டோர் 'இது மேகமண்டலமோ' என்று மருளும்படியுள்ளதென்பது, 'மழையென மருளும் மாடம்' என்பதன்பொருள். தொழிற்பாடுமுதலியவற்றால், அம்மாடம் கண்டோர்க்கு மகிழ் செய்யு மென்க. பண்டைக்காலத்துத்தமிழுலகில், புதிதாய் வந்தோர்க்கு உபசாரமாகக் கள்ளைப் பருகுமாறு தருதலும், உண்ணுமாறு ஊனைத் தருதலும், இயற்கையாகவிருந்தனஎன்பது, இங்கு அறிக. இழையணி...மகளிர், மருளும் மகிழ் மழையென மாடத்துப் பல்கால்வாக்குபு-(உண்டார்) மயங்குதலைச்செய்யும் மகிழை [கள்ளை] மழையென்னும்படி மாடத்திடத்தேபல்காலும்வார்த்து, போக்கில்பொலங்கலம் நிறையத்தரத்தரஎன்று பதங்களை மாற்றிப் பொருளுரைத்தனர், நச்சினார்க்கினியர்.

மிகநெகிழும்பொன்னாற் கலஞ்செய்வது அரிதுஆதலால், 'போக்கில் பொலங்கலம்' என்றது.

89-95:—இவ்வடிகளால், அந்தக் கரிகாற்பெருவளத்தானது அரண்மனையிலே இரவிற் படுத்துத் துயின்று எழுந்தமையைக் கூறுகின்றான்:—

மற்றவன்
திருக்கிளர் கோயி லொருசிறைத் தங்கித்
தவஞ்செய் மாக்கள் தம்முடம் பிடாஅது
அதன்பய மெய்திய வளவை மான
ஆறுசெல் வருத்த மகல நீக்கி
அனந்தர் நடுக்க மல்லது யாவதும்
மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து

(இ - ள்.) (89) மற்று-(இவ்வண்ணம் வருத்தந் தீர்ந்த)பின்பு, அவன்-அவனுடைய, (90) திரு கிளர் கோயில்-செல்வம் விளங்குகின்ற அரண்மனையில், ஒரு சிறை தங்கி-ஒருபக்கத்தே கிடந்து, (91) தவம் செய் மாக்கள்-(மிக்க) தவத்தைச் செய்கின்ற மானுடர், தம் உடம்பு இடாஅது-தம்முடைய (தவஞ்செய்த) உடம்பை விட்

டிடாமல், (92) அதன் பயம் எய்திய-அந்தத்தவத்தாலடையக் கூடிய பயனைப் பெற்ற, அளவை-தன்மையை, மான-ஒப்ப, (93) ஆறு செல் வருத்தம் அகல நீக்கி-வழிபோன வருத்தத்தை (என்னிடத்துச்) சிறிதும் நில்லாமற் போக்கி, (94) அனந்தர் நடுக்கம் அல்லது (95) மனம் கவல்பு (94) யாவதுஉம் (95) இன்றி-கள்ளின் செருக்காலுண்டான உடல்நடுக்க மல்லால் வேறு மனக்கவற்சி சிறிதுமின்றி, மாழாந்து - மயங்கி, எழுந்து - துயிலுணர்ந்து,—(எ-று.) (102) 'கழுப்பிய பின்றை' என இயையும்.

(90) தங்கி (93) நீக்கி (95) எழுந்து என்க.

கரிகாற்பெருவளத்தானிடம் மிக்கமிடி [வறுமை]யோடு வந்த தானே அம்மிடிதீர நுண்ணிய அறுசுவையையும் மதுவையும்பெற்றுப் பேரனுருடனே ஆறுசெல்வருத்தமும் அகல நீங்கினமையால் 'தவஞ்செய்மாக்கள் தம்முடம்பு இடாஅது அதன்பயமெய்திய அளவைமான' என்று உவமை கூறினன். இங்கே தவஞ்செய்ப வரை மக்களென்னுது மாக்களென்றது-அவர்கள் வீடுபேறுகுறியாது, செல்வத்தைக் குறித்துத் தவஞ்செய்பவராதலினென்பர். துயின்று எழுந்த பின்பும் கள்ளுண்டமயக்கமிருத்தலால் 'அனந்தர் நடுக்கம்...மாழாந்தெழுந்து' என்று கூறப்பட்டது.

96-100:—இவ்வடிகளால், கரிகாலனைக் காண்பதற்கு முன்னைய தன் நிலையையும் கண்டபின் தன்நிலையையும் கருதி 'இவ்வாருன நிலைமையும் நமக்கு நேருமோ? இதுகனவோ, நனவோ?' என்று மருண்டுநிற்கையில், கல்லாவிளைஞர் சொல்லிக்காட்டுவதனுல் என்நெஞ்சு துணிந்ததன்றி என்னுடன் வந்தோர் மனமும் உவப்பதாயிற்றென்கின்றுன்:—

மாலை யன்னதோர் புன்மையுங் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்
கனவென மருண்ட வென்னெஞ் சேமாப்ப
வல்லனுர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
100. கல்லா விளைஞர் சொல்லிக் காட்ட

(இ-ள்.) (96) மாலை-யான் அவனைக் காண்பதற்கு முன்னுளின் மாலைக்காலத்திலே, அன்னது ஓர் புன்மைஉம் - (என்னிடத்திலிருந்த) அப்படிப்பட்ட [சொல்லிற்கு எட்டாத] ஒப்பற்ற மிடியையும், காலை - (அவனைக்கண்ட மற்றைநாட்) காலையில், (97) கண்டோர் மருளும்-(என்னைக்) கண்டவர்(நேற்றுவந்தவன் இவன் அல்லன்) என்று மருண்டு கூறுதற்குக் காரணமான, வண்டு சூழ் நிலைஉம் - வண்டுகள் இடையருது மொய்க்கின்றதன்மையையும் (கருதி), (98) கனவு என மருண்ட என் நெஞ்சு ஏமாப்ப - '(இது) கனவாயிருக்குமோ?' என்று மயங்கிய என் நெஞ்சு (நலவென்று) துணியவும், (99) வல் அனுர் பொத்திய மனம் மகிழ் சிறப்ப-வலிய (மிடியாலுண்டாகிய) வருத்தம் நிரம்பிய (என்னுடன் வந்தவரின்) மனம் மகிழ்ச்சிமிகவும்,-(100) கல்லா இளைஞர் சொல்லி காட்ட-கல்வியறிவில்லாத சிறியவர்கள் (நேற்று மாசுபொதிந்த கந்தையுடை முதலியவற்றுடன் வந்தவன் இன்று பொற்பட்டாடை முதலிய

வற்றோடு அரசன் அருளினால் விளங்குகின்றான் என்று)சொல்லிக் காட்டாநிற்கையில்,—(எ-று.)—(101) கூஉய், (102) பதனறிந்து, (104) தண்டி(த்தர)என்க.

அரசனைக்கண்டபின் பல நறுநாற்றங்களுந் தானுடைமையின், 'வண்டு சூழ்நிலையும்' என்றது. அன்னது-நெஞ்சறிசுட்டு.

இனி, கல்லாஎன்பதை உடன்பாட்டுஎச்சமாகக்கொண்டு, கல்லா இளைஞர் சொல்லிக்காட்ட என்பதற்கு - (அந்தக்கரிகாலனுக்குஉரிய புகழ்களை முற்றக்) கற்று (என்பின்னின்ற) இளைஞர் (அவற்றைச்) சொல்லிக்காட்ட என்றும் பொருளுரைத்துள்ளனர், நச்சினார்க்கினியர். அன்றியும், (95) மாழாந்து என்பதனை, (97) வண்டுசூழ்நிலையும் மாழாந்து என்று இங்கே கூட்டியுரைப்பர்.

101-119.—இவ்வடிகளால், மற்றைநாள்முதல் கரிகாற்பெருவளத்தானென்ற அவ்வரசன் தங்களை வரவழைத்துப் பல்வகையான உணவுதந்து உபசரித்தமையைக் கூறுகின்றான்:—

கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்
அதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராஅரை வேவை பருகெனத் தண்டி
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
ஊழி னூழின் வாய்வெய் தொற்றி
யவையவை முனிகுவ மெனினே சுவைய
வேறுபல் லுருவின் விரகு தந்திரீஇ
மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ்
ஒண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி யொருநாள்
அவிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பரல்வறைக் கருனை காடியின் மிதப்ப
அயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
எல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி
உயிர்ப்பிடம் பெறாஅ தூண்முனிந்து

(இ-ள்.) (101) கதுமென கரைந்து வம் மென கூஉய்-'(நேற்று வந்தவர்களை) விரைவாக அழைத்துவாருங்கள்' என்று (வாயிலோர்க்குக்) கூறி (யாங்கள் உட்புகுந்தபின்பு எங்களை அணுக) வருகஎன்று அழைத்து, (102) அதன்முறை கழிப்பிய பின்றை-அந்தக்காட்சியினிடத்துச் செய்யவேண்டிய முறைகளை (யாங்கள்) செய்துமுடித்தபின்பு,—பதன் அறிந்து - காலமறிந்து, (103) துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின்(104)பரு அரை வேவை பருகு என தண்டி-(அருகம்புல்லால்திரித்த) பழுதையைத் தின்ற செம்மறியாட்டுக்கிடாயின் அழகியபுழுக்கினதில் பருத்த மேல்

துடை வெந்ததனை விழுங்குவரென்று (எங்களைப்) பலமுறை வருந்திவேண்டி(த்தர), (105) காழின் சுட்ட கொழு ஊன் கொழுகுறை (106) வெய்து ஊழின் ஊழின் வாய் ஒற்றி-இருப்புநாராசத்திலே (கோத்துச்) சுட்ட அவ்விறைச்சிகளின் கொழுவிய துண்டங்கள் வெய்தாக (அவற்றை) முறைமுறை இடத்திலும் வலத்திலும் வாயிற்சேர்த்து (ஆற்றித் தின்று), (107) அவை அவை முனிகுவம் எனின் - புழுக்கிச்சுட்ட அவ்விறைச்சிகளையெல்லாம் (யாங்கள்) வெறுத்து (இனி) வேண்டாமென்கையினாலே, சுவைய - இனிமையுடையவாய், (108) வேறு பல்உருவின் விரகு-வெவ்வேறாகிய பலவடிவினையுடைய பண்ணியாரங்களை, தந்து-கொண்டுவந்து, (அவற்றைத்தின்னும்படி), இரீஇ-(எங்களை) இருத்தி,—(109) மண் அமை முழவின் - மார்ச்சனையமைந்த முரசத்தோடு, பண் அமை சிறு யாழ்-பண்குறைவற்ற சிறிய யாழையுடைய, (110) ஒள் நுதல் விறலியர்-ஒள்ளியநெற்றியையுடைய விறலியர்கள், பாணிதூங்க-தாளத்தோடு ஆடும்படி, (111) மகிழ்பதம் - மகிழ்ச்சியையுடைய கள்ளுண்டலிலே, பல் நாள் கழிப்பி-பலநாளை (எங்களுக்குப்) போகச் செய்து,—ஒருநாள் (112) அவிழ்பதம் கொள்க என்று இரப்ப - ஒருநாள் சோறாகிய உணவையும் கொள்க என்று இரக்கையினாலே, முகிழ் தகை (113) முரவை போகிய முரியா அரிசி (114) விரல் என நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல் - முல்லைமுகையின் தகைமையை [தோற்றத்தை]யுடைய தவிட்டுவரி நீங்கின இடைமுரியாத அரிசி விரலென்னும்படி நெடுகின ஒன்றோடொன்றுசேராத சோற்றையும், (115) பரல்வறை கருனை - பரலை வறுத்தவற்றைக் கூட்டிய பொரிக்கறிகளையும், காடியின் மிதப்ப (116) அயின்ற காலை-கழுத்திடத்தே வந்து நிரம்பும்படி விழுங்கின காலத்தில், பயின்று-(அவனைப்பிரியாது) பழகி, இனிது இருந்து - இனிதாக இருந்து, (117) பல்லே கொல்லை உழு கொழு ஏய்ப்ப (118) எல்லையும் இரவும் ஊன் தின்று மழுங்கி - (எம்முடைய) பற்களே கொல்லைநிலத்தையுழுத கொழுவையொப்பப் பகலும் இரவும் இறைச்சியைத்தின்று முனை மழுங்கி, (119) உயிர்ப்ப இடம் பெறாஅது ஊண் முனிந்து - மூச்சுவிடவும் இடம்பெறாமையால் இவ்வுணவுகளை வெறுத்து,—(எ-று.) (122) 'கிளந்தனமாக' என இயையும்: ஆகஎன்பது (124) சிறியவன்போல்என்பதிலுள்ள சிறாதல்வினையோடு தொடரும். இனி, (123) என என்பதனோடு இயையும் எனினுமாம்.

முதல்நாள் கரிகாற்பெருவளத்தானாலும் அவனுடைய உத்தரவினால் ஆங்குள்ளவிறலியராலும் உபசரிக்கப்பெற்றமையைக் கூறிய பொருநன், பிற்றைநாள்முதல் தான் விடைகேட்கும்வரை பலநாள் அவ்வரசனால் பலவகையுணவுஈந்து உபசரிக்கப்பெற்றமையை இங்குக் கூறினன்.

101 - 108:—கரிகாற் பெருவளத்தான் வம்மெனக் கூவுகையினால், அவனைக் காணும் அந்தக்காட்சியிற் செய்யவேண்டிய முறைகளைப் பொருநன் செய்தனனென்க. கதுமென-விரைவுக்குறிப்பிடைச்சொல். "ஏனோருந்தம்மென" என்ற இடத்துத் தாரு

மென்பது தம்மென வந்ததுபோல, வாருமென்பது வம்மென வந்தது. புழுக்கின்வேவை பருகு-"ஊனும் ஊணு முனையினினிதெனப், பாலிற்பெய்தவும் பாகிற்கொண்டவும், அளவுபுகலந்து மெல்லிது பருகு" என்றது காண்க. கழிஎன்பதன் பிறவினை-கழிப்பு: அதனடியாப்பிறந்த இறந்தகாலப்பெயரெச்சம் - கழிப்பிய என்பது. பருமை + அரை = பராஅரை. வேவை-வெந்தது. சுட்டதசை சூடாயிருப்பதனால் வாயில் ஒரு புறத்துவைத்துக்கொள்ள இயலாமல், வாயினுள்ளே வலத்தாடையிலும் இடத்தாடையிலுமாக மாறிமாறிச் சேர்த்துச் சூட்டை ஆற்றவேண்டுவதாயிற்று. (104) தண்டி என்பதைத் தண்டஎன்பதன் திரிபு என்னலாம். விரகினால், [உபாயங்களாற்] பண்ணுவதால், பண்ணியாரங்களை 'விரகு' என்றார். இரீஇ = இருவி: சொல்லிசையளபெடை.

(104) தண்டி (த்தர) (106) ஒற்றி (107) முனிகுவமெனின் (108) தந்திரீஇ (111) கழிப்பி (112) இரப்ப (116) அயின்றகாலைப் பயின்று இருந்து (119) உயிர்ப்பிடம்பெறாஅது முனிந்து (122) கிளர்ந்தனமாக எனவும் இயையும்.

(111-119) மகிழ்ப்பதம் - மகிழ்ச்சியையுடைய உணவு: எனவே, கள்ளாயிற்று: "மகிழ்ப்பதத்தில் பலநாளைக் கழிப்புதல்-கள்ளுண்டல் தொழிலிலே பலநாளைப்போக்குதல். இனி, மகிழ்ப்பதம்-மகிழ்ச்சியையுடைய காலமென்றலுமொன்று. தசைகள் இவற்றையுண்டு உண்டு சலித்தபோது 'சோற்றைக் கொள்க' என்று இரப்பப் பலவகை இலைக் கறிகளோடு மூக்குப்பிடிக்கஉண்டமை இவ்வடிகளிற் கூறப்பட்டது. இறைச்சி பணியாரம் சோறு என்று கூறியன எல்லாம்உண்ணுதல் தொழிலுக்கு உரிமையுடையனவாதலால், 'ஊண் முனிந்து' என்றது. 117,118;—"தேமுரம்புழுவார் நாஞ்சிற்கொழுவெனத் தேய்ந்து" என்றது காண்க,

119—129:—பலவகையுணவுகளையும் உண்டு வெறுத்தமையால் ஒருநாள் கரிகாற்பெருவளத்தானை விடைகேட்க, அவன் தம்மைப் பிரிதற்கு மனமில்லாமை சொல்லிலும் நோக்கிலும் தோன்ற இருந்து, 'வேண்டியவளவுயானைமுதலியன கொள்க' என்று சொல்ல, தான் வேண்டுமளவு தன்வறுமை தீர அவைகளை முகந்துகொண்டு வந்தமையைக் கூறுகின்றான்:—

ஒருநாள்
120. செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ! சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
அகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
125. துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானும்
என்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்டு
இன்மை தீர வந்தனென்

(இ-ள்.) (119) ஒருநாள்-ஒருதினத்தில்,—(120)—'செயிர்த்து எழு தெவ்வர் திறை துறைபோகிய (121) செல்வ - குற்றஞ்செய் தெழுந்த பகைவரைத் திறைகொள்ளுந் துறையில்வல்ல செல்வனே! பெயர்ந்து-(இனி) மீண்டு, எம் தொல் பதி - எம்முடைய பழையவூரிடத்தே, சேறும் - செல்வோம்,' என - என்று, (122) மெல்லென கிளந்தனம் ஆக-மெதுவாகச் சொன்னோமாக,—(அது கேட்ட கரிகாற்பெருவளத்தான்),—(123) 'எம் ஆயம் விட்டு-எம்திரளைக் கைவிட்டு, (122) வல்லே-விரைந்து, (123) அகறிர் ஓ-போகின்றீரோ?' என-என்றுசொல்லி, (124) சிரறியவன் போல் செயிர்த்த நோக்கமொடு-கோபித்தவன்போல (எமக்கு) வருத்தத்தைச் செய்த பார்வையுடனே, (125) துடி அன்ன அடி தூங்கு நடை குழவியொடு - துடியையொத்த பாதங்களால் அசைந்து நடத்தலையுடைய கன்றுகளுடனே, (126) பிடி புணர் வேழம் - பெண்யானையோடு சேர்ந்த ஆண்யானைகளையும், பெட்டவை-(பின்னும்) விரும்பிய ஆடைகள் அணிகலங்கள் முதலியவற்றையும், கொள்களன-கொள்வாயாக என்று, (127) தன் அறி அளவையின் -தான் அறிந்த அளவாலே, தர தர-மேன்மேலேதர,—யான்உம் —, (128) என் அறி அள்வையின்-(என்னுடையகுறைகளை) யான் அறிந்த அளவாலே, வேண்டுவ-வேண்டுவனவற்றை, முகந்து கொண்டு-, (129) இன்மை-(என்னுடைய) வறுமை, தீர-(எக்காலமும்) இல்லையாம்படி நீங்க, வந்தனென்—;(எ - று.)

125—126: பரிசிலர்க்குக் களிற்ரேடு கன்றையும் பிடியையும் வழங்குதல், பண்டைக்காலவழக்கம்: "பரிசிலர்க்காணிற்கன்ருெடு, கறையடியானையிரியல்போக்கும், மலைகெழுநாடன்," "இருபெயர்ப்பேராயமொடு, இலங்கு மருப்பிற் களிறு கொடுத்தும்" என்றது காண்க. யானைக்கன்றின் அடிகளுக்குத் துடி உவமை கூறப்படுதலை "துடியடிக்குழவிய", "துடியடிக்கயந்தலை" "துடியடியன மடிசெவியன துறுகய்முனி" முதலிய இடங்களிலுங் காண்க.

(64) யானும் அவன் (65) வரைப்பின் (66) வாயில் (67) புக்கு என் இடும்பைதீர (68) எய்யேனுகி (72) விடியல் (71) பாணிக்கு ஏற்ப (73) யான்ஒன்று பெட்டாவளவையின் (74) கேள்கொளல் வேண்டி (75) வேட்பக்கூறி (76) இரீஇ (77) நோக்கமொடு (78) குளிர்கொளீஇ, (81) சிதாஅர் துவரநீக்கி (83) அறுவைநல்கி—(84) மாடத்து (85) மகளிர் (86) கலநிறையப் பல்கால்(மதுவை) (87) வாக்குபுதரத்தர, வருத்தம்வீட, (88) உண்டு, அஞர்போக்கி, (89) செருக்கொடுநின்றகாலை, (90) தங்கி, (93) நீக்கி, (95) மாழாந் தெழுந்து, (100) இளைஞர்சொல்லிக்காட்டாநிற்கையில் (101) கூவுகையினலே (102) கழிப்பியபின்றை, (104) தண்டி,—(108) விரகுதந்திரீஇ,—(110) தூங்க (111) கழுப்பி (112) இரப்ப, (116) அயின்ற காலை, —இருந்து,—(118) மழுங்கி (119) முனிந்து ஒருநாள் (121) சேறுமென (122) மெல்லெனக் கிளந்தனமாக, (123) அகறிரோவென (124) சிரறியவன்போற் செயிர்த்த நோக்கமொடு

(125) குழவியொடு (126) பிடிபுணர்வேழம் பெட்டவை கொள்கென (127) தரத்தர, யானும் (128) முகந்துகொண்டு (129) இன்மைதீரவந்தனென் என்க.

இனி, 177-ஆவது அடிவரையில் தான் பெற்ற பரிசிலையுணர்த்தின ஆற்றுப்படுத்துபவன், ஆற்றுப்படுத்தப்படுபவனிடத்தில் 'நீவிர் அந்தக்கரிகாற்பெருவளத்தானிடத்திற் செல்குவீராயின், அவன் நும்மை இன்ன இன்ன வகையாக உபசரிப்பன்: வெறுமனே போகுமாறு விட்டிடான்' என்று கூறுகின்றான்:—

இதுமுதல் 148-ஆம் அடிவரையில் கரிகாற்பெருவளத்தானது சிறப்புக் கூறப்படும்.

வென்வேல்
130. உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்

(இ - ள்.) (129) வெல் வேல் - வென்ற வேலினையும், (130) உருவம் - அழகினையும், பல் தேர் - பலதேரினையுமுடைய, இளையோன் - இளஞ்சேட்சென்னியின், சிறுவன்-புதல்வனும்,—

உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னி யென்று, கரிகாற்பெருவளத்தானது தந்தை வழங்கப்பெறுவன்: இதனை, "உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும், அவன்மகனாகிய கரிகாற்பெருவளத்தான் நாங்கூர்வேளிடை மகட்கோடலும்" என்று தொல்காப்பியத்து அகத்திணையியலில் நச்சினார்க்கினியர் எழுதுவதுகொண்டும் அறியலாம். இத்தொடரில், இளஞ்சேட்சென்னி யென்பது அவனது பெயராக, 'உருவம்' என்பதும் 'பஃறேர்' என்பதும், அடைமொழியாய் நின்றன.

131. முருகற் சீற்றத் துருகெழு குருசில்

(இ-ள்) முருகன் சீற்றத்து-முருகக்கடவுளின் சீற்றம்போலுஞ் சீற்றத்தினையுடைய, உரு கெழு-உட்குதல் பொருந்திய, குருசில்-தலைவனுமாகிய,—(எ-று.)

உட்கு-கண்டார்வெருவுந்தோற்றம். இந்த அடி புறநானூற்றில் 16-ஆம் பாடலில் இங்ஙனமே வந்துள்ளது. "முருகினன்ன சீற்றத்து" என்பது, அகநானூறு.

தாய்வயிற் றிருந்து தாய மெய்தி
எய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநல்
நாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
ஆளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி

முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்கு
இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்

(இ - ள்.) (132) தாய் வயிறு இருந்து தாயம் எய்தி - தாயின் வயிற்றிலே (நல்லமுகூர்த்தம்வருமளவும்) தங்கியிருந்ததனாலே அரசுவுரிமையைப்பெற்று, (133) எய்யா தெவ்வர் ஏவல் கேட்ப - (முன்பு தன்வலிமையை) அறியாத பகைவர் (பின்பு தன்வலிமையையறிந்து) ஏவினதொழிலைச் செய்யவும், (134) செய்யார் தேஎம் தெருமரல்கலிப்ப-ஏவல்செய்யாதவரான பகைவரின் தேசம் மனக்கவற்சி பெருகவும்,—(136) வெவ் வெம் செல்வன் - வெம்மையையுடைய (எல்லாராலும்) விரும்பப்படுகின்ற இளஞ்சூரியன், (135) பவ்வம் மீமிசை பகல் கதிர் பரப்பி-கடலின்மீது பகலைச்செய்யுங் கிரணங்களை (முதலிற்) பரப்பிப் (பின்னர்), (136) விசும்பு படர்ந்தாங்கு - ஆகாயத்திலே சென்றாற்போல, (137) பிறந்து தவழ் கற்றதன் தொட்டு-பிறந்து தவழ்தலைக் கற்றநாள் தொடங்கி, சிறந்த நல் (138) நாடு செகில் கொண்டு நாடொறுஉம் வளர்ப்ப- (ஏனையோர் நாட்டினுஞ்) சிறந்த (தனது) நல்லநாட்டைத் தோளிலேவைத்துக்கொண்டு நாடோறும் வளர்த்தல்காரணமாக, (139) ஆளி நல் மான் அணங்கு உடை குருளை - யாளியாகிய சிறந்த விலங்கின் வருத்துதலையுடைய குருளையின், (140) மீளி மொய்ம்பின் மிகு வலிசெருக்கி - கூற்றுவனுடையவலியிற்காட்டில் மிகுகின்ற வலியாலே செருக்குக் கொண்டு, (141) (அவ்யாளி), முலை கோள் விடாஅ மாத்திரை - முலையுண்ணுதலைக் கைவிடாத இளம்பிராயத்தில், ஞெரேரென-விரைவாக, (142) தலைக்கோள் வேட்டம் களிறு அட்டாஅங்கு - (இரையை) முதன்முதலிற் கொள்வதற்குக் காரணமான வேட்டையிற் களிற்றைக்கொன்றாற்போல, (143) இரு பனம் போந்தை தோடுஉம் - கரியபனங்குருத்தின் (அலர்ந்தவலப்பக்கத்து) ஓலையையும், கருஞ்சினை (144) வேம்பின் அரம் வாய் அம்குழைதெரியல்உம் - கரிய கொம்பினைக்கொண்ட வேம்பினுடைய வாளரத்தின்வாய்போலும் விளிம்பினையுடைய அழகியதளிராற்செய்த மாலையையும், (145) ஓங்கு இரு சென்னி மேம்பட மிலைந்த-ஓங்கிய பெரிய தலையிலே (ஏனையோர் சூடும் அடையாளப்பூக்களிற்) சிறப்பச் சூடிய, (146) இரு பெரு வேந்தர்உம்-மிகப்பெருமைவாய்ந்த மன்னவராகிய சேரனும் பாண்டியனும், ஒரு களத்து அவிய - ஒரேபோர்க்களத்திலே தோற்று விழும்படி, (147) வெண்ணி தாக்கிய - வெண்ணியென்ற ஊரிடத்தே பொருத, வெருவரு நோன் தாள் - அச்சந்தோன்றுகின்ற வலியையுடைய் முயற்சியினையும், (148) கண் ஆர் கண்ணி-கண்ணுக்கு (அழகு) நிறைந்த ஆத்திமாலையினையுமுடைய, கரிகால்வளவன்-கரிகாற்சோழனுடைய,—(எ-று.)

132. தாய்வயிற்றிலிருந்தே தாயத்தைக் கரிகால்வளவன் அடைந்தானென்பது பொருந்தாதாகையால், இங்ஙனம் உரை கூறப்பட்டது.கோச்செங்கட்சோழன் நல்லமுகூர்த்தம்வருமளவும் தாய் வயிற்றில்தானே யிருந்து நல்லமுகூர்த்தம்வந்தபின் பிறந்தானென்றும், அக்காரணத்தால் அவன் சிவந்தகண்ணையுடையனு யினுனென்றும் கூறுவது, இங்குக் கவனிக்கத்தக்கது; இத்தகையோரைக் கருவிலே திருவுடையவரென்று கூறுவர்.

133—138: "எய்யாமையேயறியாமையே" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தால், எய்யாமை - அறியாமைப்பொருளதென்பது, பெறப்படும். பிறந்தபோதே இருளைக்கடியும்பேரொளியுடனே இளஞ்சூரியன் தோன்றுதல்போல இந்தக்கரிகால்வளவனும் தவழ்கின்ற பருவத்திலேயே பகைவரைக் கடியவல்லவலிமையைப்பெற்று, பிறகு அந்தச்சூரியன் விசும்பிற்படர்தல்போலப் பகைவர்நாட்டின்மீது படையெடுத்துச்சென்றனனென்க. இவன் பிறந்தசிலநாளுக்குப்பிறகே நாடுபெற்றுனுதலால், 'தவழ் கற்றதற்றொட்டு நாடுசெகிற்கொண்டு' என்றியைத்தல், பொருந்தாது. (137) 'தவழ்கற்றதற்றொட்டு (140) மிகுவலிசெருக்கி' என இயையும். தோள்வலியாலே பகையை வென்று நாடுகாத்தமை பற்றி, 'நாடுசெகிற்கொண்டு' என்றார். தவழ்-தவழ்தல்: முதனிலைத் தொழிற்பெயர்.

139 - 148. கரிகாற்பெருவளத்தான் வெண்ணிப்பறந்தலையிற் பொருது வென்றுனென்பதை "கரிகால்வளவனொடு வெண்ணிப் பறந்தலைப், பொருது புண்ணாணியசேரலாதன்","காய்சினமுன்பிற் பெரும்பெயர்க்கரிகால், ஆர்கலிநறவின் வெண்ணிவாயிற், சீர் கெழுமன்னர்மறலியஞான்றின், இமிழிசை முரசம் பொருகளத் தொழியப், பதினொருவேளிரொடுவேந்தர்சாய, மொய்வலியறுத்த ஞான்றை" என்ற அகநானூற்றாலும் அறியலாம். வெண்ணிக் களத்திலே சேரனும் பாண்டியனும் அழியும்படி மிக்க இளமையில் தானே அவ்விரு வேந்தருடனும் பொருது வெற்றிபெற்ற கரிகாற் பெருவளத்தானுக்கு,- முலைக்கோள்விடாஅமாத்திரைத் தலைக் கோள்வேட்டத்திலே களிற்றை யடும் யாளி உவமையாகும்: "முலை முதறுறந்தவன்றே மூரித்தாளாளியானைத், தலைநிலம் புரள வெண்கோடுண்டதேபோன்றுதன்கைச், சிலையிடம் பிடித்த ஞான்றே தெவ்வரைச் செகுத்த நம்பி, நிலவுமிழ்குடையினீழற் றுஞ்சுகவையமென்பார்" என்ற சீவகசிந்தாமணியும், "ஆளிநன் மானணங்குடை யொருத்தல், மீளி வேழத்து நெடுந்தகைபுலம்ப, ஏந்தல்வெண்கோடுவாங்கிக்குருகருந்தும்", "கோள்கருதுமால்வரை யாளிக், குருளையுங் கொல்களிற்றின் கோடு" என்பன இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

வேம்பின் அரவாய் குழைத்தெரியல் பாண்டியனுக்கும்,பனம் போந்தைத் தோட்டுமாலை சேரனுக்கும் உரியனவாம். பனைமரத்தினின்று மடல் போதருதலால் [வருவதனுல்] 'போந்தை' என்று பனைக்குப் பெயர். வேம்பின் இலை அரம்போன்று இருக்குமாத

லால், 'அரவாய்வேம்பு' என்றார். இங்ஙனம் பொருள்களின் தன்மை மனத்திற்பட உவமையமைப்பது நல்லிசைப் புலவரின் தன்மை யாகும்.

இளமையில் இந்தவளவனுடைய காலில் நெருப்புப்பட அதனால் கால்வெந்ததுபற்றி, இவனுக்கு 'கரிகால்வளவன்' எனப் பெயர் வழங்கலாயிற்று: இந்தச்செய்தி "முச்சக்கரமுமளப்பதற்கு நீட்டியகா, லிச்சக்கரமே யளந்ததால் - செய்ச்செய், அரிகான்மேற் றேன்றொடுக்குமாய்புனனீர்நாடன், கரிகாலன்கானெருப்புற்று" என்ற வெண்பாவாலும் அறியப்படும். 145: "ஓங்கிருஞ்சென்னி மேம்படமலைய" என்பது, சிலப்பதிகாரம். "கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச்செழியன்" என்றார், சிறுபாணாற்றுப்படையிலும்.

149-ஆம் அடிமுதல் 177-ஆம் அடிவரையில் அந்தக்கரிகாலனிடத்துச் சென்றால் அவன் செய்வன இன்னவையென்று கூறுகின்றான்:—

தாணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்று
ஈற்று விருப்பிற் போற்றுபு நோக்கிநுங்
கையது கேளா வளவை யொய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவி பருகி
எரியகைந் தன்ன வேடி ருமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஊட்டுளை துயல்வர வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழம்
தரவிடைத் தங்கலோ விலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்
செல்வுகடைக் கூட்டுதி ராயிற் பலபுலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்லன்

(இ - ள்.) (149) தாள் நிழல் மருங்கில் - (அவனுடைய) காலின் நிழலினிடத்து, அணுகுபு குறுகி-மிகவுஞ்சமீபமாகக்கிட்டி, (150) தொழுது - வணங்கி, முன் நிற்குவிர் ஆயின் - (நும்முடைய வறுமைதோன்றுமாறு) முன்னே நிற்பீராயின்,—பழுது இன்று - (நும்மிடத்துள்ள) வறுமை இல்லையாம்படி, (151) ஈற்று ஆ விருப்பின் போற்றுபு நோக்கி - ஈனுதல்தொழிலையுடைய[கன்று போட்ட] பசுவினது (தன்கன்றுக்குப் பால்சுரந்து கொடுக்க வேண்டுமென்னும்) விருப்பம்போல் (நும்மை) விரும்பிப் பார்த்து, —நும் (152) கையது கேளா அளவை - நும்முடைய கையிலிருக் கும்வித்தையைக் கேட்பதற்குமுன்னே, ஒய்யென - விரைவாக, (153) பாசி வேரின் மாசொடு குறைந்த - கொட்டைப்பாசியினது வேர்போல அழுக்கோடேகுறைந்துள்ள, (154) துன்னல் சிதாஅர்-தையலையுடைய ஆடைகளை, நீக்கி - போக்கி,—தூய (155) கொட்டை கரைய பட்டுஉடை நல்கி-தூய்மையையுடையனவும் திரளமுடிந்தமுடிகளைக் கரையிலேயுடையனவுமான பட்டாகிய உடைகளைத் தந்து, (156) பெறல் அரு கலத்தின் பெட்டாங்கு உண்க என - பெறுதற்கரியபொற்கலத்தில் 'விரும்பினபடியே உண்க' என்றுசொல்லி, (157) பூ கமழ் தேறல் - குங்குமப்பூவின் நறுமணம் வீசுகின்ற கள்தெளிவை,வாக்குபு தர தர-மேன்மேலே வார்த்துக்கொடுத்துக்கொண்டேயிருக்க, (158) வைகல் வைகல் கைகவி பருகி-தினந்தோறும் (போதும்போதுமென்று) கையைக் கவித்துக்காட்டிக்கொண்டே குடித்து,—(159) எரி அகைந்து அன்ன ஏடுஇல் தாமரை - நெருப்புத்தழைத்தாலொத்த (செயற்கையாகவன்றி இயற்கையான) இதழில்லாத தாமரையை (த்தர), (160) சுரி இரு பித்தை பொலிய சூட்டி-கடைகுழன்ற கரிய மயிரிலே பொலிவுபெறச் சூட்டிக்கொண்டு, (161) நாலின் வலவா நுணங்கு அரில் மாலை-நூலால்கட்டாத நுண்மையையும் பிணக்கத்தையுமுடைய பொன்னரிமாலையை, (162) வால் ஒளி முத்தமொடு-வெள்ளிதாகிய ஒளியையுடைய முத்தாரத்துடனே, (தந்தனுல்), பாடினி அணிய-பாண்குலமகள் அணியாநிற்க,—(நீங்கள் விடைபெற்றுச்செல்லும்போது), (163)கோட்டின்செய்தகொடுஞ்சி நெடுந் தேர்-யானைத்தந்தத்தாற் செய்த கொடுஞ்சியென்னும் உறுப்பினையுடைய நெடிய தேரிலே, (164) ஊட்டுஉளை துயல்வர -(சாதிலிங்கம்) ஊட்டின தலையாட்டமென்னும் அணி பொங்கவும், ஓரி நுடங்க-பிடரிமயிர் அசையவும், (165) பால் புரை புரவி நால்கு உடன் பூட்டி-பாலையொத்த நிறத்தினையுடைய குதிரைகள் நானகினை ஒருசேரப் பூட்டி, (166) காலின் ஏழ்அடி பின்சென்று - தன் காலாலே ஏழடி பின்னேசென்று, கோலின் (167) தாறு களைந்து-(குதிரையைச்செலுத்துங் கருவியாகிய) கோலிலே தாற்றுக்கோலை நீக்கி, ஏறு என்று ஏற்றி-'ஏறு' என்றுசொல்லி (அந்தத்தேரிலே) யேறவிட்டு, வீறு பெறு (168) பேர்யாழ்-பெருமைபெற்ற சிறந்த யாழ்ப்பாணர்க்கு, (கொடுக்கவேண்டிய மரியாதைகளை),முறையுளி கழிப்பி-(உனக்கும்) முறைமையாற் செய்திட்டு, நீர்வாய் (169) தண் பணை தழீஇய தளரா இருக்கை (170) நல் பல் ஊர நாட்டொடு-நீரை (எப்பொழுதும்) தன்னிடத்தேயுடைய குளிர்ந்த

மருதநிலஞ் சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய நன்றான பலவூர்களையுடைய நாடுகளுடனே, (171) வெரூஉ பறை நுவலும் பரூஉ பெரும் தட கை (172) வெருவரு செலவின் வெகுளி (170) (நல்பல்) (172) வேழம்-(கேட்போர்க்கு) அச்சத்தையுண்டாக்கும் பறை (தன் முன்னிடத்தே) ஒலிக்கப்பெற்றனவும் பருத்த பெரிய வளைந்த கையினையுடையனவும் அச்சந்தோன்றும் ஓட்டத்தையும் கோபத்தையுமுடையனவுமான நன்றாகிய பலயானைகளை, (173) தரவு இடை-தருதல்தொழிலிடத்தே, தங்கல் - நிலைபெறுதலை, ஓவிலன்-ஒழிதலிலன் : வரவிடை (174) பெற்றவை-வருவாயிலே பெற்ற பொருள்களை, பிறர் பிறர்க்கு ஆர்த்தி-பிறர்க்குப் பிறர்க்குக்கொடுத்து, தெற்றென-விரைவாக, (175) செலவு-(அவனிடத்தினின்றுபோகின்ற) போக்கை, கடைக்கூட்டுதிர் ஆயின் - முடிவு போக்குவீரானால், (அவ்வாறு நீங்கள் தன்னைவிட்டுப் பிரிந்து போவதற்கு மனம்பொறாமல் அவன்), பல புலந்து - பலகாலும் வெறுத்து, (176) நில்லா உலகத்து-(செல்வம் யாக்கை முதலியன) நிலைத்துநில்லாத இவ்வுலகத்தில், நிலைமை தூக்கி - புகழின்பெருமையை ஆராய்ந்து, செல்க என விடுக்குவன் அல்லன் - போக என்று (நும்மை எளிதில்) அனுப்புவானல்லன்; (எ - று.)

(129) வென்வேல் என்பது முதல் (173) தங்கலோவிலன் என்பது ஈறானவை, **கரிகாற்சோழனது தன்மையைப் பொதுவாகத் தெரிவிப்பன:** (149) குறுகி என்பதுமுதல் (162) அணிய என்பதுவரையில் அவனால்உபசரிக்கப்பெறுவதைக்கூறி, அதற்குமேல் (163) 'கோட்டிற்செய்த' என்பதுமுதல் (173) தரவிடைத்தங்கலோவிலன் என்பது இறுதியாகவுள்ளபகுதிகளால், அந்தக் கரிகாற்பெருவளத்தான் விடைகொடுத்து அனுப்பும்போது செய்யுமவற்றைத் தெரிவிக்கின்றான். 173 - க்குமேல் 'செல்கென விடுக்குவனல்லன்' என்பதுவரையில் - விடைகேட்கும்போது இவர்பல நாள்பழகியவராதலால் இவரைப் பிரியலாமென்னாமலும் முன்னரே பலபொருள்களைத்தந்தோமேயென்னாமலும் அவன் அரிதிற்பல கொடுத்து அனுப்புவானென்பதைத்தனியேயெடுத்துக்காட்டும்.

(149) குறுகி (150) நிற்குவிராயின் (151) போற்றுபுநோக்கி (152) அளவை, ஒய்யென (154) நீக்கி, (155) நல்கி, (157) தரத்தர (158) பருகி,—(160) சூட்டி (162) அணிய,—(165) புரவிபூட்டி (166) பின்சென்று (167) ஏற்றி, (168) கழிப்பி, (170) நாட்டொடு (172) வேழம் (173) தரவிடைத் தங்கலோவிலன் என்க. (155) பட்டுடைநல்கியபின் மன்னவனுடைய பணியாளர் அவனுடைய ஏவலினால், (157) தேறல் வாக்குபு தரத்தர நீவிர்பருகி, (159) பொற்றாமரைமலரை (த் தர அவற்றை) (160) பித்தைபொலியச் சூட்டி (161) மாலையை (162) முத்தாரத்துடனே பாடினிக்குத் தர அவள் அணிந்தபின் (165-167) (விடை கேட்கையில்) குதிரைபூட்டிய தேரில்ஏற்றி (170) நாட்டொடு (172) வேழம் (173) தருவனென்க.

149: நிழல் மருங்கில்தாள் என இயைத்து - அருளைத் தன்னிடத்தேயுடைய அடிகளை என்று உரைத்தலுமுண்டு.

150: பொருந! (வரி, 3) என்னும் ஒருமைச்சொல் 'தொழுது முன்னிற்குவிராயின்' எனப் பன்மையோடு முடிவதற்கு "முன்னிலை சுட்டிய வொருமைக்கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே, ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" என்பது விதி.

151: ஈன்றபசு கன்றினிடத்துப் பெருவிருப்புக்கொண்டிருக் கும்: "தனிக்கன்றுள்ளியபுனிற்றுப்போல, விரைவிற்செல்லும் விருப்பினனாகி" என்றதுங் காண்க.

151: ஈற்று + ஆ = ஈற்று: ஈனுதலையுடைய பசு: ஈற்று-தொழிற் பெயர். 152: கையது-ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர்.

153—158:—'பாசியன்னவுடைகளைந்து, திருமலரன்ன புது மடிக்கொளீஇ, மகிழ்தரன்மரபின் மட்டேயன்றியும்...வெட்கலத் தூட்டல்", "பாசி, வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை, நுண்ணூற் கலிங்கமுடீஇயுண்கெனத், தேட்கடுப்பன்னநாட்படுதேறல், கோண்மீனன்ன பொலங்கலத்தளைஇ" என்பன காண்க. 157, 158: கைகவி தேறல்என்றுகூட்டி-சிறிதுகொடுத்தபோதே தன் கடுமையாற் போதுமென்று சொல்லத்தக்க தேறல் என்றுஉரைப் பர், நச்சினார்க்கினியர். சொற்கிடக்கையைப்பார்க்குமிடத்து, மிகுதியாகத் தேறலைத் தருதலால் பருகுவோர் கைகவித்துப்பரு குவ ரென்றல் ஏற்கும்.

159-160: ஏடில்தாமரையெனவே, பொற்றாமரையாயிற்று: பிறகுறிப்பு. "எரியகைந்தன்னதாமரை" என்பது, அகநானூறு. அரசரிடத்துப் பரிசிலாகப் பாணன் பொற்றாமரைமலர்பெற்றுச் சூடுதலும், பாடினி பொன்னரிமாலைமுதலியனபெற்றுஅணிதலும் பண்டைக்காலத்துவழக்கங்கள்'பைம்பொற்றாமரைபாணர்ச்சூட்டி, ஒண்ணுதல்விறலியர்க்காரம்பூட்டி", "பாடினிமாலையணிய வாடாத் தாமரை சூட்டுவனினக்கே", "வாடாமாலை பாடினியணியப், பாணன்சென்னிக்கேணிபூவா, எரிமருடாமரைப்பெரு மலர்த் தயங்க" என்பன காண்க.

163: கொடுஞ்சி-தாமரைமொட்டுவடிவபாகச்செய்து தேரின் முன்புறத்தே நடப்படும் ஒருறுப்புஎன்பர்: அஃது, யானைத்தந் தத்தாற்செய்யப்பட்டுள்ளதென்க. "மருப்பியலூர்தி", "கோட் டினிற்புரிகொடுஞ்சியந்தேர்" என்பன காண்க. 165: "வளைகண் டன்னவாலுளைப்புரவி, துணைபுணர் தொழில நால்குடன்பூட்டி" என்பது, பெரும்பாணாற்றுப்படை. நால்கு - நான்குஎன்பதன் பெயர்த்திரிசொல். 166: நண்பினரை எதிர்கொள்ளும்போது ஏழடிசென்று எதிர்கொள்ளுதலும், வழிவிடும்போது ஏழடி சென்று வழிவிடுதலும் மரபு: ஆனதுபற்றியே, வடமொழியில் நண்புக்கு 'ஸாப்தபதீநம்' என்று ஒருபெயர் கூறப்பட் டுள்ளது: இங்ஙனமாகவும், ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'பாணரைவழிவிடும்போது ஏழிசைக்கும் வழிபாடு செய்தானா கக் கருதி ஏழடிவருதல் மரபு' என்று இங்குக் கூறியுள்

ளார். "செலவினும் வரவினும்" என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரச்சூத்திரத்துப்பொதுவிதியால், சென்று என்பது - வந்து என்னும்பொருளைத் தந்தது. 167: கோலில்தாற்றினைக்களைந்தது- தாற்றுக்கோல்கொண்டு குதிரைகளைத் தூண்டிச்செலுத்தினால் அவ்விசையைப் பாணன் முதலியோர் தாங்கமாட்டாரென்று கருதுவதனாலென்க. கோல் இன் தாறு என்றுபிரித்துப் பொருள் கூறுதலு முண்டு. 169: இவ்வடி, சிறுபாணாற்றுப்படையிலும் இவ்வாறே வந்துள்ளது.

171—172: யானையை வெளிச்செல்லவிடும்போது பறையறைந்துமுன்செல்லுதல் பண்டைக்காலத்து இயற்கை: "தெண்கிணைமுன்னர்க்களிற்றினியலி", "நிறையழிகொல்யானைநீர்க்குவிட்டாங்குப், பறையறைந்தல்லது செல்லற்க", "பணையெழுந்தார்ப்ப, மாலைநெற்றி வான்பிறைக்கோட்டு, நீலயானை", "முரசதிர்ந்தானை முன்னோடை" என்பன காண்க.

173: வரவிடை-வருதலிடத்து என்றபடி. தங்கலோ இலன் என்று பிரித்து - தருந்தொழிலில் தாழ்த்தலோ (அவ் வளவன்) இல்லாதவனென்று உரைப்பினுமாம். 176-ஆவதுஅடி இங்ஙனே பெரும்பாணாற்றுப்படையின் 466-ஆவது அடியாகவந்துள்ளது. புகழ் நிலைத்துநிற்குந்தன்மையுடையதாதலில், அதனை, 'நிலைமை' என்றே கூறினார்.

அந்த வளவன் நாட்டொடு தேர்களிறு ஈயவும், அவற்றைப் பிறர்க்குக் கொடுத்துவிட்டு நீங்கள் போகநிச்சயித்துஅவனிடத்தினின்று விடைகேட்பின், அந்தவளவன்'செல்வம்முதலியனநிலைத்திரா: புகழே நிலைத்துநிற்பது' என்பதை ஆய்ந்துஅறிந்தவனாதலால், தன்னைவிட்டுப்பிரிந்து நீவிர் செல்வதற்காக வெறுப்புக் கொண்டவனாய் நும்மைப்பார்த்துப் போவென்று எளிதில் விடை கொடுத்தனுப்பமாட்டான்: வந்தவரைஉபேட்சியாமல் கௌரவிப்பவன் தான் என்பது தோன்றும்பொருட்டு நாட்டொடு வேழம் தந்து, தேரில் குதிரைபூட்டி ஏறெனஏற்றி அரிதில்விடைகொடுத்தனுப்புவானென்றவாறு. எதுவும் நில்லாத இவ்வுலகத்திலே நிலைத்துநிற்றலைவேண்டி நும்மைச் செல்கென விடுக்குவனல்லனெனக் கூறலும் ஒன்று.

இனி, முடியுமளவாகவுள்ள பகுதியினால், **காவிரிநாட்டின் சிறப்பையும் கரிகாலன் சிறப்பையும்கூறி, அந்நாட்டிற்குரியவன் கரிகாலன்** என்று முடிக்கின்றான்.

இதுமுதல் 226-அடிவரையில் **திணைமயக்கம்** கூறப்படுகின்றது:—

ஒல்லெனத்
திரைபிறழிய விரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த வகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினெல்
தாழ்தாழைத் தண்டண்டலைக்

கூடுகெழீஇய குடிவயினன்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
185. மனைநொச்சி நிழலாங்கண்
ஈற்றியாமைதன் பார்ப்போம்பவும்

(இ-ள்.) (177) ஒல்லென - ஒல்லென்றவொலியுண்டாக, (178) திரை பிறழிய - அலைகள் முரிந்த, இரும் பௌவத்து-கரிய கடலின், (179) கரை-கரையினுலே, சூழ்ந்த-சூழப்பெற்ற, அகல் கிடக்கை-பரந்தபரப்பினையுடைய இவ்வுலகில், (180) மா மாவின் வயின் வயின் - ஒருமாவென்னும் அளவையுடைய நிலத்தின் இடந்தோறும், நெல் (182) கூடு-நெற்கூடுகளுடனே, (181) தாழ் தாழை தண் தண்டலை - தாழ்ந்த தெங்கின் குளிர்ந்த சோலைகள், (182) கெழீஇய-விளங்கப்பெற்ற, குடிவயினன்-(மானிடர்) குடியிருக்குமிடத்தில், (183) செஞ் சோற்ற பலி மாந்திய-சிவந்தசோற்றையுடைய பலியை யுண்ட, (184) கருங் காக்கை-கருநிறமுள்ள காக்கை, (தன் வயிறு நிரம்பியுள்ளதனுல்), கவவு முனையின்-(தான் பின்னும்)தின்னுவதை வெறுத்தலால், (பின்பு பசித்த காலத்துத் தின்பதற்காக), (185)மனை நொச்சி நிழல் ஆங்கண்-மனையைச்சூழ்ந்த நொச்சியின நிழலிடத்துக்கிடந்த, (186)ஈற்று யாமைதன பார்ப்பு-ஈற்றுத் தொழிலையுடைய[சமீபத்தில்ஈன்ற] யாமையின் பார்ப்பை, ஓம்பவும்-பாதுகாத்துவைக்கவும்,—(எ-று.)

மாஎன்பது - நூறுகுழிகொண்டநிலமென்பர். இங்கு, மருத நிலத்துக் காக்கை நெய்தல்நிலத்துயாமைப்பார்ப்பைத் தின்னுமென்றுகூறியது, திணைமயக்கம்: திணைமயக்கங்கூறுவதற்குக் காரணம், அந்நாட்டில்நால்வகை நிலங்களும் ஒன்றையொன்று அடுத்துள்ளனவென்பது தோனறுதற்கு ஆகும். "தவழ்பவை தாமு மவற்றோரன்ன" என்ற தொல்காப்பியத்து மரபியற் சூத்திரத்தினுல், 'யாமைப்பார்ப்பு' என்றது.

187. இளையோர் வண்ட லயரவும்

(இ-ள்.) இளையோர் - மருதநிலத்துமகளிர், வண்டல் அயர உம்-(நெய்தல்நிலத்தில் மணற்குன்றிலே) வண்டலிழைத்துவிளையாடவும்,—(எ - று.) நெய்தலும் மருதமும் இங்கு மயங்கிவந்தமை காண்க.

187.—188: முதியோர்
அவைபுகு பொழுதிற் றம்பகை முரண்செலவும்

(இ - ள்.) (187) முதியோர் - முதுமக்கள், (188) அவை புகு பொழுதில் - (தன்னுடைய) நீதிமன்றத்திற் புகுந்தபொழுதில், (சரியானநியாயத் தீர்ப்பை அரசன் கூறிவிட்டதனுல்), தம் பகை முரண் செலஉம் - தமது பகைக்குந்தன்மையான மாறுபாடு நீங்கவும்,—(எ - று.)

அவை - ஸபாஎன்பதன் சிதைவென்பர். 'முதியோர்' என்ற தனாற் காட்டில்வசித்தற்குரியவரென்பது பெறப்படும்: ஆகவே, அன்னார் நாட்டில்வந்து வழக்கைத்தீர்த்துக்கொண்டமையைக் கூறியதனால், முல்லையும் மருதமும் மயங்கியமைகூறியன இவ்வடிக ளென்னலாம். இளையோரைக் கீழ்க்கூறியதற்கு ஏற்ப, இங்கு முதியோரைக் கூறினரேயன்றி, இதில் திணைமயக்கங் கொண்டுகூறினரல்ல ரென்றலும் ஒன்று. இவ்வடிகளில் 'உரை முடிவுகாணான்' என்னும் பழமொழிப்பாடலின் கதைக்குறிப்பினைக் காண்பாரும் உளர்.

முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி

(இ - ள்.) (191) பைம் பாகல் பழம் துணரிய (192) செஞ் சுளைய கனி-பசிய பாகற்பழத்தையும் தொகுதியான செவ்விய சுளையையுடைய பலாப்பழத்தையும், மாந்தி-உண்டு, (189) முடம் காஞ்சி-வளைவையுடைய காஞ்சிமரத்திலும், செம் மருதின்-செவ்விய [நேர்மையான] மருதிலுமிருந்த, (190) மடம் கண்ண - மடப்பத்தைத் தன்னிடத்தேயுடைய, மயில்-மயிற்பறவை, ஆல - ஆரவாரிக்கவும்,—(எ - று.)

குறிஞ்சிநிலத்துப்பொருளாகிய மயில், மருதநிலத்து மரமாகிய காஞ்சி மருதம் என்றஇவ்விடத்து ஆலுதலைக் கூறினர். பாகற் பழத்தைமயிலுண்ணுதலை ''பைங்கொடிப்பாகற்செங்கனிநசைஇக், கானமஞ்ஞைக்கமஞ்சூன்மாப்பெடை, யயிரியாற்றடைகரைவயிரி னரலும்'' என்ற அகப்பாட்டிலுங் காண்க. இனி, பைம்பாகல் பழம்-பசுமைநிறமாகத் தோன்றுகின்ற பலாப்பழத்தில், துணரிய-தொகுதியாயுள்ள, செஞ் சுளைய கனி-செவ்விய சுளையாயுள்ள பழத்தை [பழுத்துள்ள பக்குவமான பலாச்சுளைகளை], மாந்தி - உண்டு என்று பொருள்கூறினுமாம்.

அறைக்கரும்பி னரிநெல்லின்
இனக்களம ரிசைபெருக
வறளடும்பி னிவர்பகன்றைத்
தளிர்ப்புன்கின் றாழ்காவின்
நனைஞாழலொடு மரங்குழீஇய
அவண்முனையி னகன்றுமாறி
அவிழ்தளவி னகன்றோன்றி
நகுமுல்லை யுகுதேறுவீப்
பொற்கொன்றை மணிக்காயா
நற்புறவி னடைமுனையின்

(இ-ள்.) (193) அறை கரும்பின்-அறுத்தலைச்செய்யுங் கரும்பிலும், அரி நெல்லின்-அரிகின்ற நெல்லிலும், (194) இனம் களமர்-திரண்டகளமருடைய, இசை-ஓசை, பெருக-மிகுதலால், (195)

வறள் அடும்பின்-நீரற்றஇடத்திலெழுந்த அடம்பினையும், இவர் பகன்றை-படர்கின்ற பகன்றையினையும், (196) தளிர் புன்கின் - தளிரையுடைய புன்கமரத்தினையும், தாழ் காவின் - தாழ்ந்த [தழைத்த] சோலைகளையுமுடையதாகி, (197) நனை ஞாழலொடு - அரும்பைக்கொண்ட ஞாழலோடு, மரம்-(ஏனைய) மரங்களும், குழீஇய-திரண்டுள்ள, (198) அவண்-அவ்விடத்தை [மருதநிலத்தை], முனையின்-(அந்நிலத்தவர்) வெறுத்தார்களாயின், அகன்று மாறி-அவ்விடத்தைவிட்டுநீங்கி(முல்லைநிலத்துச் சேர்ந்தும்), (199) அவிழ் தளவின்-மலர்கின்ற செம்முல்லையினையும், அகல் தோன்றி-பரந்த காந்தள்மலரினையும், (200) நகு முல்லை - அலர்கின்றமுல்லையினையும், வீ உகு தேறு - பூச்சிந்துகின்ற தேற்றுவினையும், (201) பொன் கொன்றை-பொன்போலும்பூவினைக் கொண்ட கொன்றையினையும், மணி காயா - நீலமணிபோலும் பூவினைக்கொண்ட காயாவினையுமுடைய, (202) நல்புறவின் நடை-நல்லகாட்டில் வாழ்கின ஒழுக்கத்தை, முனையின் - வெறுத்தால், (அவ்விடத்தைவிட்டுத் தம்மிடத்துக்கே மாறவும்);—(எ - று.)

'இனக்களமரிசைபெருக...நனைஞாழலொடுமரங்குழீஇயஅவண்' என்றதனால், அவ்விடம் மருதமென்பது பெறப்படும்: படவே, முனைதல்தொழிலுக்கு உரியவரும் அந்த மருதநிலத்தவரே யென்க. அந்த நிலத்தவர் அவ்விடத்தை வெறுத்தற்குக் காரணம், களமரின் இசைப்பெருக்கமாகும். களமர்-மருதநிலத்துப் பயிரிடுதல்முதலியதொழிலைச்செய்யும் பணியாளர். மருதநிலத்தவர் களமர்செய்கின்றஓசை பெருகுதலால், அந்நிலத்தைவிட்டு மாறித்தமக்கு அருகிலுள்ள முல்லைநிலத்தைச் சார்வர்: சார்ந்தும் அந்நிலத்துஒழுக்கத்துத் தமக்குப் பழக்கமில்லாமையால் அவ்விடத்தை வெறுத்து அகன்று மாறித் தம்மிடத்துக்கே மீள்வரென்க. '(194) இசைபெருக (198) முனையின் அகன்றுமாறி—(202) நற்புறவினடைமுனையின்' என்ற இடங்களில் ஏற்றசொற்கள் வருவித்துமுடிக்கப்பட்டன; இங்ஙனம்வருவித்துமுடித்தலை அவாய்நிலையென்பர், இலக்கணநூலார். அடம்பும் ஞாழலும், நெய்தனிலத்துக்கருப்பொருளென்று இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் பயின்றிருப்பினும்இங்குமருதநிலத்துப்பொருளாகக் கூறப்பட்டன: இவ்வாறு வருவதனை "எந்நிலமருங்கிற்பூவும் புள்ளும், அந்நிலம பொழுதொடுவாராவாயினும், வந்த நிலத்தின் பயத்தவாகும்" என்ற தொல்காப்பியத்துப் பொருளதிகாரச் சூத்திரத்தில் ஆசிரியர் இளம்பூரணர்'வந்ததுகொண்டு வாராதது முடித்தல் என்னும் உத்தியால் பிறவரினுங்கொளக' என்றதனால் அமைக்கலாம்: இவ்வாறுனவற்றை "திணைமயக்குறுதலுங் கடிநிலையிலவே" என்ற சூத்திரத்திலேயடக்குவர், நச்சினார்க்கினியர். (இனி, எழுவாயைஊகித்துப் படைத்துக் கொள்ளுதலை விரும்பாத சிலர், (203 - 204) 'சுறவழங்குமிரும் பௌவத்து, இறவருந்திய வினநாரை' என்று மேல்வருவதை எழுவாயாகக்கொண்டு, (204) நாரை (194) இனக்களமரிசைபெருக...(198) முனையின் அகன்று மாறி (புறவினைச்சேர்ந்தும்), (202) நற்புறவினடை

முனையின் (205) (பூம் புன்னைச் சினைச்சேப்பவும்), பூம்புன்னைச் சினைச் சேப்பின் என்று இயைத்து உரைப்பர்.

இங்கு, (220) அகவர், (193) களமர்இசைபெருக (198) முனையின் அகனறு மாறி,(221) பஃறிணைநுவலவும், (220) கானவர் (199) அவிழ்தளவின் அகல்தோன்றி (200) நகுமுல்லை வீஉகு தேறு (201) கொன்றை காயா (202) நல்புறவின் நடைமுனையின் (220) மருதம்பாடவும், (210) பாக்கத்து (218) பரதவர் குறிஞ்சி பாடவும்என்று வெவ்வேறிடத்துள்ள சொற்களை இயைத்துப் பொருள் விரிப்பர், ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

சுறவழங்கு மிரும்பௌவத்து
இறவருந்திய வினநாரை
பூம்புன்னைச் சினைச்சேப்பின்
ஓங்குதிரை யொலிவெரீஇத்
தீம்பெண்ணை மடற்சேப்பவும்

(இ - ள்.) (203) சுற வழங்கும் - சுறுமீன்கள் திரிகின்ற, இரும் பௌவத்து - கரிய கடலில், (204) இறவு அருந்திய இனம் நாரை - இறுமீனைத் தின்ற திரளான நாரையெனனும்பறவைகள், (205) பூம் புன்னை சினை சேப்பின்-மலர்களையுடைய புன்னைமரத்தின் கிளையிலே தங்கினுல், (206) ஓங்கு திரை ஒலி வெரீஇ - (அம்மரத்தின்மீது முரிகின்ற) உயரிய அலைகளின் ஆரவாரத்திற்குஅஞ்சி, (207) தீம் பெண்ணை மடல் சேப்பஉம்-(மருதநிலத்துள்ள) இனிய பனையினது மடலிலே தங்கவும்,—(எ-று.)

இதனுல், நெய்தனிலத்துப்பறவை மருதநிலத்துச்சென்றமையைக் கூறியவாறு. புன்னை-நெய்தனிலத்து மரம்.

கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்து
யாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயர

(இ - ள்.) (208) கோள் தெங்கின்-குலைகொண்ட தெங்கினையும், குலை வாழை-குலையினையுடைய வாழையினையும், (209) கொழு காந்தள்-கொழுவிய காந்தளினையும், மலர் நாகத்து-மலர்ந்த சுர புன்னையினையும், (210) துடி குடிஞை-துடியோசைபோலும் ஓசையினையுடைய பேராந்தையினையுமுடைய, குடி - குடியிருப்பைக் கொண்ட, பாக்கத்து-கடற்கரையூரில், (211) யாழ் வண்டின் கொளைக்கு ஏற்ப-யாழோசைபோலும் வண்டின் பாடலைக் கேட்டு அதற்குப்பொருந்த, (212) கலவம் விரித்த-தோகையை விரித்த, மடம் மஞ்ஞை-மடப்பத்தையுடைய மயில், (213) நிலவு எக்கர் பல பெயர-நிலாப்போலும் இடுமணலிலே பலபகுதிப்பட ஆடவும்,

இங்கு, குறிஞ்சிநிலத்துப்பொருளாகிய மயிலுக்கு, மருதநிலத்துப்பொருளான வண்டினேசைக்குஏற்ப நெய்தனிலத்துப்

பாக்கத்துமணலிலே ஆடல் நிகழ்ந்ததாகத் திணைமயக்கங்கூறிய வாறு. துடியோசை குடிஞையிரட்டுதற்கு உவமைகூறப்படுதலை, "குடிஞைத்துடிமருடிங்குரல்," "ஆகுளி கடுப்பக், குடிஞையிரட்டு நெடுமலை" என்ற விடங்களிலுங் காண்க.

தேனெய்யொடு கிழங்குமாறியோர்
215. மீனெய்யொடு நறவுமறுகவும்

(இ - ள்.) (214) தேன் நெய்யொடு - தேனாகியநெய்யோடே, கிழங்கு-கிழங்கையும், மாறியோர்-விற்றவர்கள், (215) மீன் நெய்யொடு-மீனின் நெய்யோடே, நறவு-கள்ளையும், மறுகஉம்-கொண்டு போகவும்,—(எ - று.)

நெய்யென்று தேன் வழங்கப்படுவதனை "தேனெய் தோய்ந்தன" என்ற சீவகசிந்தாமணியாலும், தேனை வடிக்கட்டுதற்கு உதவும் பன்னாடையை நெய்யரியென்று வழங்குவதனாலும் அறியலாம். இங்கு, குறிஞ்சிநெய்தல்களின் மயக்கங் கூறப்பட்டமை காண்க.

216-217: தீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவும்

(இ - ள்.) (216) தீங்கரும்போடு-இனியகரும்புடனே, அவல்-அவலை, வகுத்தோர்-கூறுபடுத்து விற்றவர்கள், (217) மான் குறையொடு-மானின் தசையுடனே, மது-கள்ளையும், மறுகவும்-கொண்டு போகவும்,—(எ-று.)

மருதநிலத்துப்பொருளாகிய கரும்பையும் நெல்லினின்று ஆக்கிய அவலையும் விற்றவர், அவற்றிற்குப் பிரதியாகக் குறிஞ்சி நிலத்துப் பொருளாகிய மானின்தசையையும் மதுவையும் வாங்கிக்கொண்டுசெல்வரென்க.

218-219: குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்
நறும்பூங் கண்ணி குறவர் சூட

(இ - ள்.) (218) பரதவர் - நெய்தனிலத்து மாக்கள், குறிஞ்சி பாட-குறிஞ்சிப்பண்ணைப் பாடவும், நெய்தல் (219) நறும் பூங் கண்ணி-நெய்தலின் நறுமணமுள்ளமலர்கொண்டு தொடுத்த மாலையை, குறவர் சூட-குறவர் சூடவும்,—(எ-று.)

குறிஞ்சி நெய்தல் திணைகட்கு மயக்கங்கூறியமை காண்க.

220. கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவல

(இ - ள்.) (220) கானவர் - முல்லைநிலத்துவாழ்வார், மருதம் பாட-மருதப்பண்ணைப் பாடவும், அகவர்-மருதநிலத்துவாழ்வார், (221) நீல்நிறம் முல்லை பல் திணை நுவல-நீலநிறமுள்ள முல்லைக் கொடிபடர்ந்த பல காட்டுநிலத்தைக் கொண்டாடவும்,—(எ-று.)

இவ்வடிகளால், முல்லைமருதத் திணைகட்கு மயக்கங் கூறிய வாறு.

222-223: **கானக்கோழி கதிர்குத்த**
மனைக்கோழி தினைக்கவர

(இ - ள்.) (222) கானம் கோழி-காட்டிடத்துக்கோழிகள், கதிர் குத்த-(மருதநிலத்து விளையும்) நெற்கதிரைத் தின்னவும், (223) மனை கோழி-(மருதநிலத்து) மனையிலுள்ள கோழிகள், தினை கவர -(காட்டில் விளையும்) தினைக்கதிரைத் தின்னவும்,—(எ - று.)

இவ்வடிகளும், முல்லைமருதத் திணைகளின் மயக்கங் கூறியனவே.

வரைமந்தி கழிமூழ்கக்
225. **கழிநாரை வரையிறுப்ப**

(இ - ள்.) (224) வரை மந்தி - மலையிடத்திற்குரிய பெண் குரங்குகள், கழி மூழ்க-உப்பங்கழியில் மூழ்கவும், (225) கழி நாரை -கழியிலேதிரியும் நாரைகள், வரை இறுப்ப-மலையிலே கிடக்கவும், —(எ-று.)

குறிஞ்சிநெய்தல் திணைகட்கு மயக்கங் கூறியவாறு.

226. **தண்வைப்பின் நாஞடுகுழீஇ**

(இ - ள்.) தண் வைப்பின் - குளிர்ந்தவைப்புக்களையுடைய, நால் நாடுகுழீஇ-நான்கு கூறுகியநாடுகள் திரளப்பெற்று,--(எ-று.) (248) காவிரிபுரக்கும் என்க.

''நடுவணைந்திணை நடுவணதொழிய'' என்னுஞ்சூத்திரத்தால், 'நால்நாடு' என்றார். வைப்பு-வைக்கப்பட்டுள்ள பொருள்.

227-231:—இவ்வடிகளால், கரிகாலனது ஆட்சிச்சிறப்புக் கூறுகின்றான்:—

மண்மருங்கினுன் மறுவின்றி
ஒருகுடையா ஞென்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
230. **அறனெடு புணர்ந்த திறனறி செங்கோல்**
அன்னேன் வாழி வென்வேற் குருசில்

(இ - ள்.) (227) மண் மருங்கினுன்-இந்தப்பூலோகத்தில், மறு இன்றி - குற்றமின்றி, (228) ஒரு குடையான் - (தன்னுடைய)ஒரு குடையினால், ஒன்று கூற-(தனது) ஆணையொன்றையே (உலகங்) கூறும்படி, (229) பெரிது ஆண்ட - நெடுங்காலம் (உலகை) அரசு புரிந்த, பெருங் கேண்மை - பெரியநட்பையும், (230) அறனொடு புணர்ந்த திறன் அறி செங்கோல் - தருமத்தோடுகூடிய வழியை (உலகம்) அறிதற்குக்காரணமான செங்கோலையுமுடைய, (231) வெல் வேல் குருசில் அன்னோன் - வெற்றிபொருந்திய வேற் படையையுடைய குரிசிலாகிய அவன், வாழி—; (எ - று.)

'ஒருகுடை' என்றதனுலும் 'ஒன்றுகூற' என்றதனுலும், இவன் மண்முழுதும்ஆண்டானென்று கூறிஞர். ஆண்டஅன்ஞேன், கேண்மையும் செங்கோலேயுமுடைய அன்னேன் எனஇயையும். வாழி - வாழிய என்ற வியங்கோண்முற்றின் ஈறுசென்றது.

இங்குக் கரிகாலனது தோற்றச் சிறப்புக் கூறப்படுகின்றது:—

232. மன்னர் நடுங்கத் தோன்றி

(இ-ள்.) மன்னர் நடுங்க - பகையரசர்கள் நடுங்கும்படி, தோன்றி - விளங்கி, (எ - று.)—தோன்றிஎன்றவினையெச்சம், (248) 'நாடுகிழவோன்' என்ற தொடரால் கூறப்படுகின்ற நாட்டிற்குஉரியஞயிருத்தலைக்கொண்டு முடியும்.

இனி, இறுதியளவுமுள்ள அடிகளால், பஞ்சகாலத்திலும்தன் நீரிஞல் உலகூட்டும்காவிரிபாயும் நாடுடையவன் அன்ஞனென்று கூறத்தொடங்கி, 232 - 237 — அடிகளாற் பஞ்சகாலத்தினியல்பு கூறுகின்ருன்:—

பன்மாண்
எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெ.ரி நைப்பவும்
235. அருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடல்கோண் மறப்பவும்
பெருவற ஞகிய பண்பில் காலையும்

(இ - ள்.) (232) பல்மாண் (233) எல்லை தருநன் - பலவுயிர்களும்மாட்சிமைப்படுதற்குக் காரணமான பகற்பொழுதைத்தருஞ் சூரியன், (தன்நிலையை விட்டு), பல் கதிர்பரப்பி-பலகிரணங்களைப் பரப்புகையிஞலே, (234) குல்லை கரியஉம் - கஞ்சங்குல்லை தீய்ந்து போகவும், கோடு எரி நைப்பஉம் - (மரங்களினுடைய) கொம்புகளை நெருப்புத்தின்னவும், (235) மா மலை அருவி நிழத்தஉம் - பெருமையையுடையமலை (தன்னிடத்து) அருவிகளை இல்லை யாக்கவும், மற்று - பின்னும், அ கருவி வானம் - தொகுதியையுடைய அந்த மேகம், கடல் கோள் மறப்பஉம் - கடலிடத்துமுகத்தலை மறப்பவும், (237) பெரு வறன் ஆகிய - பெரியபஞ்சம்உண்டாகிய, பண்பு இல் காலை உம்-நற்குணமில்லாத காலத்தும்,—(எ - று.)— (248) 'காவிரிபுரக்கும்' என்க.

சூரியன்பல்கதிர்பரப்புதல், குல்லைகரிதல் முதலியன நிகழ்தற்குக் காரணமாம். புகை அனல் நீர் காற்று இவைகளின் தொகுதியிஞலேயே மேகம் ஆகின்ற தென்ற கொள்கைபற்றி, 'கருவி வானம்' என்றது: இனி, கருவிவானம்-உலகம்நடப்பதற்குக் கருவியான வான மெனினுமாம்.

238-248: இவ்வடிகளால், காவிரிவளங்கொண்ட நாட்டை உடையோன் அந்தக்கரிகால்வளவ னென்பதைக்கூறுகின்ருன்:—

நறையு நரந்தமு மகிலு மாரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி

நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடைய
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடு கிழவோனே.

(இ - ள்.) (238) நறைஉம் நரந்தம்உம் அகில்உம் ஆரம்உம்-நறைக்கொடியும் நரந்தம்புல்லும் அகிலும் சந்தனமுமாகிய சுமையை, (239) துறைதுறை தோறுஉம்-நீர்த்துறைதோறும், பொறை உயிர்த்து-இளைப்பாற, ஒழுகி - தள்ளிப்போய், (240) நுரை தலை குரை புனல்-நுரையைத் தலையிலேயுடைய ஆரவாரத்தையுடைய நீர், வரைப்பகம் புகுதொறுஉம் - குளத்திலும் *கோட்டகத்திலும் புகுந்தோறும், (241) புனல் ஆடும் மகளிர் - நீராடுகின்ற மகளிர், கதுமென குடைய - விரையக் குடைந்து விளையாட,— (242) கூனி-வளைந்து நின்று, குயத்தின்வாய்-அரிவாளின்வாயாலே [கூரிய முனையாலே], நெல் அரிந்து-நெல்லையறுத்து, (243) சூடு கோடு ஆக பிறக்கி-நெற்சூட்டை மலைச்சிகரம்போல அடுக்கி, நாடொறும் (244) குன்று என குவைஇய குன்றுகுப்பை-நாடோறும் (கடாவிட்டு மேரு) மலையென்னும்படி திரட்டின தொலையாத நெற்பொலி, (245) கடுதெற்று மூடையின் இடம் கெட கிடக்கும் - நெருங்கிச்செறிந்த குதிரிலே வெற்றிடமில்லையாம்படி யிருத்தற்குக் காரணமான, (246) சாலி நெல்லின் சிறைகொள் வேலி - சாலி நெல்லைக்கொண்ட வரம்புகட்டிய வேலிநிலம், (247) ஆயிரம் விளையுட்டு ஆக - ஆயிரக்கலமென்னும்அளவு விளையுளையுடையதாக, (248) காவிரி புரக்கும் - காவிரி நதிபாய்ந்து பாதுகாக்கின்ற, நாடு-சோழநாட்டை, கிழவோன் - (தனக்கே) உரியதாகுந்தன்மையுடையோன்; (எ - று.)

பொறையுயிர்த்தல் - சுமைநீங்குவதனால்மூச்சுவிடுதல்: இலக்கணையால், இளைப்பாறுதலென்றபொருளைத் தரும். கடுந்தெற்று மூடை-நெருங்கத்தெற்றின நெற்கோட்டையுமாம். வேலியென்பது - இருபதுமாஅளவுகொண்ட நிலமென்பர்.

(237) வறனாகிய பண்பில்காலையும், (239) பொறையுயிர்த்தொழுகி, (240) புனல்புகுதொறும் (241) மகளிர்குடைய, (242) குயத்தின் நெல்லரிந்து (243) பிறக்கி (244) குவைஇய குப்பை (245) கிடக்கும் (247) விளையுட்டாக (248) காவிரி புரக்கும் நாடு என்க.

(3) பொருந! (57) கோடியர்தலைவ! கொண்டதறிந! (60)புகழ்மேம் படுந! (63) ஏழின்கிழவ! (52) காடுறைகடவுட்கடன் கழிப்பிய

* கோட்டகம் - ஒருவகைநீர்நிலை.

பின்றை (58) நெறிதிரிந்தொராது (59) ஆற்றெதிர்ப்படுதலும் நோற்றதன்பயனே: (60) போற்றிக்கேண்மதி: (61) நின்னிரும்பேரொக்கலொடு (62) பசியொராஅல்வேண்டின், நீடின்று (63) எழுமதி: (64) யானும் (129) இன்மைதீர வந்தனென்: (130) உருவப் பஃறேரிளையோன்சிறுவனும், (131) உருகெழு குருசிலுமாகிய (148) கரிகால்வளவன் (149) தாணிழன்மருங்கிற் குறுகி (150) முன்னிற்குவிராயின், (170) நாட்டொடு (172) வேழம் (173) தரவிடைத் தங்கலோவிலன்: (232) மன்னர் நடுங்கத்தோன்றி (248) நாடுகிழவோன் (231) குருசில் அன்னோன் வாழி எனக்கூட்டி முடிவுசெய்க.

இந்தப்பொருநராற்றுப்படையில், பொருநர் சோறுபெறுமாறு விழாவிற்குச்செல்லுந்தன்மையரென்பதும், பாலையாழின் வருணனையும், விறலியின் கேசாதிபாதவருணனையும், பாலைக் கொண்ட வழியிற்செல்லும்போது வெயிலில் மிகக் கால்கொப்புளங்கொண்டு வழிநடக்கமுடியாதபோது பாடினி யாழ்வாசிக்கப் பாணன் தடாரிகொட்டிக் காடுறைகடவுட்குப் பூசை புரிவனென்பதும்,பாலையாழின் இசையைக்கேட்டு ஆறலைகள்வர் தம் கொடுஞ்செயலைமறந்து அன்புடையராவரென்பதும், கரிகாற்பெருவளத்தான் எளியபாணர்களை உபசரிக்கும்வகையும், அவன் அளிக்கும் பலவகையுணவுகளும், அவ்வரசன் தன்னையடைந்த பாணர்களைப் பிரியமாட்டாது அவர்களின் பிரிவை அரிதிலிசைந்து அவர்கட்குப் பலவகையான சம்மானங்களையுந்தந்து அனுப்பும்விதமும், அக்கரிகாற்பெருவளத்தானது வீரத்தோடு வெற்றிச்சிறப்பும், திணை மயக்கமும், காவிரிபாயும் நாட்டுச்சிறப்பும் கூறப்பட்டன.

ஏறக்குறைய ஆயிரஞ்சொற்களைக்கொண்ட இந்தப் பொருநராற்றுப்படையில், தவம், பயம், மனம், உருவம், தேளம், மாலை, பலி, அவை, கலவம் முதலியவாகப் பத்துப்பன்னிரண்டுவடசொற்களே வந்துள்ளன.

சொல்லுகின்ற எதுவும் கண்ணுக்குளதிரே நிற்பதுபோலத் தோன்றுமாறு ஏற்ற அடைமொழிபுணர்த்துத் **தன்மைநவிற்சியணியாலும்**, உவமையணியாலும் கூறுதலை, பத்துப்பாடலில் மற்றைப் பாடல்களிற்போலவே இந்தப்பாடலிலுங் காணலாம்.

இந்தப் பொருநராற்றுப்படையிற் கூறிய விடயத்தின் சுருக்கம் வருமாறு:—தான் வறியனாயிருந்து கரிகாற்பெருவளத்தானையடைந்து பலபடியாக உபசரிக்கப்பெற்று மிகுந்தசெல்வம் முதலியவற்றையடைந்த ஒரு பொருநன், திருவிழாநடந்துமுடிந்த ஓரூரிலிருந்து திருவிழாநடக்கப்போகின்ற வேறோரூரை நாடித் தன் சுற்றத்தோடு செல்லுபவனாகி வழியிடையே எதிர்ப்பட்டவேறொரு பொருநனைப்பார்த்து 'பொருநனே! காட்டில் நடக்கமுடியாமையால் ஒதுங்கிப் பாடினி யாழைவாசித்துப்பாடாநிற்க அதற்கேற்பப்பறைகொட்டிக் கடவுட்கடனை முடித்தபின்பு நீ வேற்றுவழியாகச்சென்றிடாமல் யான் இருக்குமிடம்வந்தது, நீ முற்பிறவியில் நோற்றதன் பயனேயாம்: கோடியர் தலைவனே! நான் சொல்வதை விரும்பிக்கேட்பாய்:

உன்சுற்றத்தோடு பசிப்பகை யொழியவேண்டினையாயின், தாமதமின்றி இப்பொழுதே யெழுக: நானும் முன்பு உன்னைப் போல் வறியநிலையிலிருந்தபோது பழுமரத்தை நினைத்துச்செல்லும் வௌவால்போன்று கரிகாலனையடைய எண்ணி இரவலரைத் தடைசெய்யாத அவனது அரண்மனைவாயிலிற் புகுந்து மகிழ்ந்திருந்து விடியற்காலத்தே தடாரிப்பறையைக்கொட்டி ஒருபாடலைப் பாடத்தொடங்கினேன்: அதுகேட்டவளவில், கரிகாற் பெருவளத்தான் என்னோடு நட்புக்கொளவேண்டி என்னைக்கிட்டி இனியகூறி என்பும்உருகக் குளிரநோக்கி, ஈரும்பேனுங் கூடியிருந்த என் பழங்கந்தற் சீரையை நீக்கி இழைபுலப்படாத நுண்ணிய பூத்தொழில்கொண்ட ஆடையைத்தந்து உதவியபின் விறலியர் கள்ளைப்பலமுறைவார்த்துத்தர உண்டு வழிவந்தகளைப்பு நீங்கி அரண்மனையில் ஒருசார்இருந்தேன். அப்போது கள்ளுண்ட மயக்கமன்றி வேறுதுன்பம் என்னிடத்து இல்லாமற்போயிற்று; எனக்கு நேர்ந்த நன்னிலை 'இது கனவோ?' என்று என்னுற் கருதும்படியாயிற்று. மறுநாள் அந்தக்கரிகாற்பெருவளத்தான் எம்மைவாருமெனக்கூவி, நாங்கள் அரசசம்முகத்து நடத்தவேண்டிய வழிபாடுகளைச் செய்திருந்தேமாக, அவன் பலவகையிறைச்சிகளையும் பண்ணியாரங்களையும் மதுவையும் பலநாள் தந்து அவற்றையெல்லாம் உண்டுஉண்டு நாங்கள் வெறுத்தபின் நெல்லரிசிச்சோற்றையும் உண்ணுமாறு இரந்துதந்தனன். இங்ஙனம் பலவகையுணவுகளையும் மூச்சுவிடவும் இடமில்லையாம்படி பலநாள் நாங்கள் உண்டு பல்லும் முனைமழுங்கி ஊணில்வெறுப்புத் தட்டவே, 'ஒருநாள் ஊருக்குச்செல்வேம்: விடைதருக' என்று மெல்லச்சொல்லவே, நாங்கள் பிரிதலில் அந்தக்கரிகாற்பெருவளத்தானுக்கு விருப்பமில்லாமையால் "போகின்றீரோ?" என்று கோபித்தவன்போன்று பார்த்துக் கன்றையுடைய யானைகளுடனே யாம்வேண்டிய பலபொருள்களையும் தந்தான்: அவற்றைப்பெற்றுக்கொண்டு என்வறுமைதீர இப்பொழுதுதான் மீண்டனென்.

ஆதலால், நீங்களும் அந்தக்கரிகாற்பெருவளத்தானிடத்துச்செல்லுமின்: அவன் முருகக்கடவுளைப்போன்றவன்: கருவிலே திருவுடையவன்: பிறந்த பொழுதேதொடங்கி வலிமைகொண்டு பகைவென்று நாடாட்சியை மேற்கொண்டவன்:பஞ்சகாலத்திலும் வளந்தவருத காவிரிநாட்டையுடையவன். அவனைச்சேர்ந்தால் உங்களுடைய கந்தைத்துணிகளைநீக்கிப் பட்டுடைநல்கிமதுவைப் பருகத்தந்து பொற்றாமரைப்பூவை நினக்குச் சூட்டிப் பொன்னரிமாலையோடு முத்தாரமும் பாடினி அணியத்தருவான்: விடைதருங்காலத்தில் நான்குகுதிரைகளைக்கொண்ட தேரைப்பூட்டி ஏற்றிமெல்லவோட்டி ஏழடிப்பின்சென்று பாணர்க்குவேண்டிய உபசாரங்களைச்செய்து யானைகளுடனே விளைவயலுள்ள ஊர்களையுடைய நாட்டையுந் தருவான். விடைகேட்கும்போது முன்னமே பலதந்தோமேயென்று வெறுத்தனே யனுப்பமாட்டானென்பது.

இதிலுள்ள உவமைகள் வருமாறு:—(4) பத்தல் × குளம்புவழி. (5) பச்சை × விளக்கழலுரு. (6-8) போர்வையிற்பொர்த்தியபொல்

லம் × இளஞ்சூற்செய்யோள்வயிற்றுமயிர். (9-10) ஆணித்துளை × அலவன்கண். (11-12) (யாழின்) அண்ணுவில்லாவமைவருவறுவாய் × எண்ணுட்டிங்கள்வடிவு. (13) யாழ்த்தண்டு × பாம்பின் எடுத்த தலை. (14-15) திவவு × கைத்தொடி. (16-18) யாழ்நரம்பு × திணையரிசியவையல். (19-20) யாழ்வனப்பு × மணமாதரின் கோலம். (25) கூந்தல் × அறல்: நுதல் × பிறை, (26) புருவம் × வில்: கண் × மழை. (27) வாய் × இலவிதழ். (28) பல் × முத்து. (29 - 30) காது × மயிர்குறைகருவியின்கடை. (32) தோள் × அமை. (33) விரல் × காந்தள். (34) உகிர் × கிளிவாய். (37) கொப்பூழ் × நீர்ச்சுழி. (39) காழ் × வண்டு. (40) குறங்கு × பிடிக்கை. (42) நாய்நா × சீறடி. (43) செந்நிலன் × அரக்குருக்கு. (45) பழுத்தமரல் × நீர்மறுகுமொக்குள். (47) பாடினி × மயிலுரு. (51) நிழல் × வலந்தவலை. (54 - 56) பாடல் × மூவருங்கூடியிருந்தஅரசவை. (64) கொடுப்போரை நாடும்தான் × பழுமரமுள்ளியபறவை. (69-70) துத்திப்பாம்பின்பை × கைக்கசடிருந்த தடாரி. (74) கரிகாலன் கேளிர்போலக்கேள் கொளல். (78) உருகுபவைபோலென்புகுளிர்கொளீஇ. (83) அறுவை × அரவுரி (91-93) இவ்வுடம்போடு பொருநன் ஆறுசெல் வருத்தமகலநீக்குதல் × தவஞ்செய்வோர் தம்முடம்புடனே பயனெய்தல். (112-113) அரிசி × முகிழ். (114) சோறு × விரல். (117 - 118) ஊன் தின்னும்பல் × கொல்லையுழுகொழு. (125) துடி × வேழக்கன்றின் பாதம். (131) முருகற்சீற்றத்து. (135 - 140) கரிகாலன் தவழ்கற்றதற் றொட்டுமிகுவலிசெருக்கிப்பின்நாடுசெகிற்கொள்ளுதல் × இளஞாயிறு கடலின்மீதுபகற்கதிர்பரப்பி விசும்புபடர்தல். (139-147) கரிகாலன் இளமையிலேயே இருபெருவேந்தருமொருகளத்தவிய வெண்ணிதாக்குதல் × ஆளிக்குருளை முலைக்கோள் விடாமாத்திரைத்தலைக்கோள்வேட்டங் களிறடுதல். (144) அரவாய் வேம்பின்குழை. (151) ஈற்றுவிருப்பிற்போற்றுபுநோக்கி. (153-154) மர்சொடுகுறைந்ததுன்னற்சிதாஅர் × பாசிவேர். (159) பொற்றுமரை × அகைந்தளரி. (165) பால்புரைபுரவி. (213) எக்கர் × நிலவு. (242-244) நெல்லரிந்தகுப்பை × குன்று. **தற்குறிப்பேற்றம் வருமாறு:—** (77) பருகுவன்னவருகாநோக்கம். (84) மழையெனமருளும்மாடம். (124) சிரறியவன்போற்செயிர்த்த நோக்கம்.

---

1. ஏரியு மேற்றத்தி னுனும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம் - தேரின்
அரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு.

(இ - ள்.) தேரின் - ஆராயுமிடத்து,—ஏரிஉம் - ஏரியினாலும், ஏற்றத்தினுன்உம் - (நீரிறைக்கின்ற) ஏற்றத்தினாலும், பிறர் நாட்டு வாரி சுரக்கும் - அயல்மன்னவரின்நாட்டில் நீர்பாய்வதனுல் தோன்றுகின்ற, வளன் எல்லாம் - எல்லாவளமான விளைபொருள்களும்,—கரிகாலன் காவிரி சூழ் நாடு-கரிகாலனுடைய காவேரிநதி சூழப்பெற்ற நாட்டின், அரி காலின்-அரிந்த நெற்பயிரின் தாளின்,

கீழ்-கீழே, உகூஉம் - சிந்துகின்ற, அ நெல்லே- அந்தநெல்லுக்கே, சாலும் - ஈடாகப்போதும்; (எ - று.)

மற்றைநாட்டுவிளைகின்ற வளமுள்ள பொருள்களெல்லாமுஞ் சேர்ந்து,கரிகாலனுடைய காவிரிசூழ்ந்த சோழநாட்டில் அரிந்த பயிரின்கீழ்ச் சிந்திப்போகின்ற நெல்மணியொன்றுக்கே ஈடாகு மென்று சோழநாட்டுவளனைச் சிறப்பித்துக்கூறியவாறு. வ்ளன் - மகரனகரப்போலி. அரிகால் - வினைத்தொகை. உகூஉம்-அளபெடை, இன்னிசைபயக்கவந்தது: அலகிட்டுக் காண்க. (1)

2. அரிமா சுமந்த வமளிமே லானைத்
திருமா வளவனெனத் தேறேன் - திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன் றொழுதகைப்
போனவா பெய்த வளை.

(இ - ள்.) அரிமா சுமந்த அமளி மேலானை - சிங்கந் தாங்குவதாகச் செய்யப்பட்ட அணையின்மேலிருப்பவனை, திரு மாவளவன் என தேறேன் - கரிகாற்பெருவளத்தானென்று அறியேன்: திரு மார்பின் - திருமகளை மார்பிலே கொண்ட, மானம் - பெருமை பெற்ற, மால் என்றே-திருமாலென்றே கருதி, தொழுதேன் - கை குவித்துவணங்கினேன்; தொழுத கை - கூப்பிய கையினின்று, பெய்த வளை - அக்கையிற்பெய்த [அணியப்பெற்றிருந்த] வளையானது, போன ஆ-கழன்றுபோய்விட்டவிதம் (என்னே!) (எ-று.)

இச்செய்யுள்-திருமாவளவனிடத்துக்காதல்கொண்ட தலைவியொருத்தி கூறியதாகச் செய்யப்பெற்றது. தலைவனிடத்துக் காதல் மிகுதியால் உடலிளைக்க, கையினின்று வளை கழன்று போயின வென்க. அரிமாசுமந்தவமளி-சிங்கவணை. அரசனிடத்துத் திருமாலினமிசமுண் டென்று நூல்கள் கூறுவதற்கு ஏற்ப, 'திருமார்பின்மானமாலென்றேதொழுதேன்' என்றது. 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்' என்றதும் நோக்குக. (2)

3. முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால் - செய்ச்செய்
அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

(இ - ள்.) செய் செய் - வயல்கடோறும், அரி கால்மேல் - நெல்லரிந்த தாளின்மேல், தேன் தொடுக்கும்-(வண்டுகள் அருகேயிருந்த தாமரை முதலிய மலர்களிலிருந்து) தேனைக்கொணர்ந்து கூண்டுகட்டப்பெற்ற, ஆய் புனல் நீர் நாடன் - அழகிய மிக்க நீர்வளத்தையுடைய சோணாட்டிற்கு உரியவனான, கரிகாலன் - கரிகாற்சோழனுடைய, கால் - பாதம், நெருப்பு உற்று - (இளமையில்) நெருப்பைப்பொருந்தியதனால், மு சக்கரம்உம் அளப்பதற்கு நீட்டிய கால் - மூன்று லோகங்களையும் அளப்பதற்கு நீட்டிய அந்தக் காலானது, இ சக்கரமே அளந்தது - இந்நிலவுலகத்தையே யளந்தது; (எ - று.) (3)

பொருநராற்றுப்படையின்

அரும்பதவகராதி.

அகவர் - மருதநிலத்தார், 220
அகன்கிடக்கை, 179
அகைதல் - தழைத்தல், 159
அஞர் - வருத்தம், 88, 99
அட்டாங்கு = அட்டவாங்கு, 142
அட - வருத்த, 31
அடும்பு - ஒருகொடி, 195
அண்ணு - உள்நாக்கு, 12
அணங்கு-தெய்வம், 20: வருத்தம், வருத்துகை, 35, 139
அணக்கல் - தலையெடுத்தல், 13
அணுகுபு குறுகி - ஒருபொருட்பன்மொழி, 149
அதர் - வழி, 49
அமை = மூங்கில், 32: பொருந்துகை, 10, 12
அடைதல்-பொருந்துதல்-20: முற்றுப் பெறுதல், 109
அரசவை, 55
அரவாய்வேம்பு, 144
அரவுரி - பாம்புத்தோல், 83
அரி - மென்மை, 32
அரிநெல், 193
அரில் - பிணக்கம், 161
அருகா - கெடாத, 77
அருந்துதல் - உண்ணுதல், 204
அருளின்மாறு - மறக்குணம், 21
அல்குதல் - தங்குதல், 49
அல்குல், 39
அலவன் - ஞெண்டு, 9
அவ் - அழகிய, 6
அவல் - ஓர்சிற்றுண்டி, 216
அவிழ்ப்பதம், 112
அவை - நீதிமன்றம், 188
அவையல் - குத்தலரிசி, 16
அழலுரு - எரிகின்றநிறம், 5
அளவை - தன்மை, 92
அளை - வளை, 9
அறல் - கருமணல், 25
அறுதல் - இடையில் நீங்குதல், 1
அறுவை - ஆடை, 83
அறை - அறுத்தல், 193
அனந்தர் - கள்ளின்செருக்கு, 94
ஆகம் - மார்பு, 35
ஆடு - கொல்லுதல், முதனிலைதிரிந்த தொழிற்பெயர், 61
ஆடுதல் - அசைதல், 32
ஆர்த்தி - கொடுத்து, 174
ஆர்தல் - நிறைதல், 148
ஆரம் - சந்தனம், 238 [88
ஆரவுண்ணுதல் - நிறையவுண்ணுதல்
ஆய் - அழகிய, 14
ஆயம் - திரள், 123
ஆளி நன்மான், 139
ஆறலைகள்வர், 21
ஆறு - வழி, 93
இசை - ஓசை, 194
இசையேன் - சொல்லாதவனாகி, 67
இடனுடைமை-அகலமுடைமை, 65
இடுதல்-போடுதல், 91
இடும்பை - துன்பம், 67
இடை - நடுவிடம், 36
இரு - கரிய, 13, 160: பெரிய, 40
இருக்கை - இருப்பு, குடியிருப்பு, 15 169
இருசீர்ப்பாணி-இரண்டு முடியுங் காலத்தைத்தன்னிடமுடைய தாளம், 72
இலவிதழ் - இலவம்பூவின்தளம், 27
இவர்தல் - படர்தல், 195
இழுமெனல் - ஓரொலிக்குறிப்பு, 65
இழை-நூலிழை, 80: ஆபரணம், 85
இளஞ்சூல் - முதிராத கரு, 6
இறவு - ஓர்மீன், 204
இறப்ப - தங்க, 225
இறைகூடி - அரசாண்டு, 79
இன்மை-வறுமை, 129
இன்னகை - இனியமகிழ்ச்சி, 85
இனம் - திரள், 194
ஈற்று - சமீபத்தில் ஈன்றபசு, 151
உகுதல் - சிந்துதல், 200
உந்துதல்-யாழ்நரம்பின்தொழில், 23
உயவுதல் - வருந்துதல், 38
உயிர்ப்ப-மூச்சுவிட: இலக்கணையால், இளைப்பாற: 119
உரி - தோல், 83

உரு-உட்கு, 131
உருக்கு-உருக்கினது, 43
உருத்தல்-தோன்றுதல், 35
உருவம்=ரூபம்: அழகு: 130
உழந்த-வருந்திய, 61
உள்ளிய-நினைத்த, 64
உளர்தல்-அசைத்தல், 27
உளை-தலையாட்டம், 164
உறழ்தல் - யாழ்நரம்பின் தொழில் விசேடம், 23
ஊசல் - அசைவு, 30
ஊட்டுதல்-சாயம்பூசுதல், 164
ஊழ்-முறைமை, 106
எக்கர்-இடுமணல், 213
எய்த்தல்-இளைத்தல், 68 [133
எய்யா-அறியப்படாத, அறியாத, 6,
எரி-அக்கினி, 159, 234
எருத்து-கழுத்து, 31
எல்லை-பகல், 218
எல்லைதருநன்-சூரியன், 233
எவ்வம்-துன்பம்,50
எழால்-யாழ், 56
எழுந்து-துயிலுணர்ந்து, 95
ஏடு-இதழ், 159
ஏமாப்ப-துணிய, 98
ஏய்ப்ப-ஒப்ப, 69
ஏர்-எழுச்சி, 36
ஏவல்-ஏவியகட்டளை, 133
ஏழடிபின்செல்லுதல், 166
ஏழின்கிழவ, 63
ஐது-இலேசானது, 7
ஒக்கல்-சுற்றம், 61
ஒண்ணுதல், 110
ஒதுங்கல்-நடத்தல், 43
ஒய்யென-விரைவாக, 152
ஓராஅது-நீங்காது, 58
ஓராஅல்-நீக்குதல், 62
ஒல்லென - ஒல்லென்றவொலியுண்டாக, 177
ஒழுகுதல்-ஒழுங்காக இருத்தல், 7 41, தள்ளுதல், 239
ஒன்றுதல்-பொருந்துதல், 73
ஓரி-பிடரிமயிர், 164
ஓவுதல்-ஒழிதல், 173
கசடு-வடு, 70
கடல்கோள் - கடலிடத்துமுகத்தல், 236
கடுக்கும்-ஒத்திருக்கும், 14
கடை-நுனி, 29
கடைக்கூட்டுதல்-முடிவுபோக்குதல், 175
கண்கூடுதல்-நெருங்குதல், 15
கண்ணி, 148, 219
கதிர், 222
கதுமென-விரைய, 101, 241
கரிகால்வளவன், 148
கரிய-தீய, 234
கருவிவானம், 236
கருனை-பொரிக்கறி, 115
கரைந்து-அழைத்து, 101
கல்லாவிளைஞர், 100
கலவம்=கலாபம்; தோகை, 212
கலிப்ப-மிக, 134
கவடு-பகுப்பு, 4
கவல்பு-கவற்சி, 95
கவவு-இன்பது, 184
கழிதல்-முடிந்திடுதல், 2
கழிநாரை, 225
கழிப்புதல் - செய்துமுடித்தல், 52,
களம்-போர்செய்யுமிடம்,146 [102
களயர், 194
களிறு, 142
கனவு, 98
காஞ்சி-ஒருமரம், 189
காட்சி-அழகு, 20
காடி-கழுத்து, புளிங்கறி: 115
காடுறைகடவுள், 52
காந்தள்-விரலுக்கு உவமையாகும் ஒருசெடியின்பூ, 33
காழ்-மணிகோத்தவடம், 39, நாராசம், 105
கானக்கோழி, 222
கானம்-காடு, 49
கானவர்-முல்லைநிலத்து வாழ்வார், 220
கிழவோன்-உரியவன், 248
கிளத்தல்-சொல்லுதல், 122
கிளர்தல்-விளங்குதல், 31, 90
குடிஞை-பேராந்தை, 210
குடைய-துளைந்தாட, 241

குத்துதல்-தின்னுதல், 222
குயம்-அரிவாள், 242
குருசில்-ஆண்பாற் சிறப்புப்பெயர், 131, 231
குருளை-குட்டி, 139
குரை-ஆரவாரம், 240
குல்லை-ஓர்செடி, 234
குவைஇய-திரண்ட, 244
குழவி-குஞ்சரக்கன்று, 125
குழை-ஓர்காதணி, 30; தளிர், 144
குளப்புவழி-குளம்புபதிந்த இடம், 4
குறங்கு-தொடை, 40
குறவர், 219
குறிஞ்சி-ஓர்பண், 218
குறை-துண்டு,மாமிசத்துண்டு, 105, 217 [153
குறைதல்-துண்டிக்கப்பட்டிருத்தல்,
குன்றுக்குப்பை - தொலையாதநெற்பொலி, 244
கூடு-நெற்கூடு, 182
கூனி - வளைந்து, இறந்தகாலவினையெச்சம்: 242
கெழு-பொருந்தின, 53
கேண்மை-நட்பு, 229
கேள்கொளல்-உறவுகொள்ளுதல், 74
கேள்வி-இசைச்சுருதி, 18
கேளிர்-சுற்றத்தார், 74
கைகவிபருகுதல், 158
கையது-கையிலுள்ளவித்தை, 152
கொட்டை-முடிச்சு,தும்புமாம்:155,
கொடுஞ்சி-தாமரைமுகை போன்ற வடிவுடையதோர்தேருறுப்பு, 163
கொப்பூழ்-உந்தி, 37
கொல்லை, 117
கொழு-அழகிய, கொழுத்த,26, 117
கொழுங்குறை-கொழுந்துண்டம்,105
கொளை-பாடல், 211
கோடியர்-கூத்தர், 57
கோடு-தந்தம், 163: மரக்கொம்பு 234; மலைச்சிகரம், 243
கோயில்-அரண்மனை, 90
கோழூன், 105
கோள்-குலை, 208
சாலிநெல், 246
சாலுதல்-அமைதல், 30
சாய்தல்-கவிழ்தல், 31
சாறு-திருவிழா, 2
சிதறுதல்-பரக்கப்பாடுதல், 24
சிதாஅர்-சீரை, 81, 154
சிறியவன்-கோபித்தவன், 124
சிவணுதல்-பொருந்துதல், 44
சிறப்ப-மிக, 99
சிறை-பக்கம்,90: வரம்பு, 246
சினை-கிளை, 205
சீர்-தாளவிசேடம், 24
சீறியாழ், 109
சுணங்கு-அழகுதேமல், 35
சும்மை-ஓசை, 65
சுரி-கடைக்குழற்சி, 160
சுவைய-சுவையுள்ள: குறிப்புப்பெயரெச்சம், 107
சுளை, 192
சுறவு-சுறுமீன், 203
சூடு-நெல்லரிக்கட்டு, 243
செகில்-தோள், 138
செய்யார்-பகைவர், 134
செய்யோள்-செந்நிறமுடையாள், 6
செயிர்த்த-வருத்தஞ்செய்கின்ற,124
செயிர்த்து-குற்றஞ்செய்து, 120
செருக்கு-மகிழ்ச்சி, 89
செருக்குதல்-கருவங்கொள்ளுதல்140
செலவு-நடை, 172:போக்கு, 175
செறிதல்-நெருங்குதல், 40
சென்னி-தலை, 145
சேப்ப-தங்க, 207
சேப்பின்-தங்கினால், 205
சேறும்-செல்வோம், 121
ஞாழல்-ஓர்மரம், 197
ஞெரேரென-விரைவாக, 41
தகை-தன்மை, 112
தங்கல்-நிலைபெறுதல், தாமதித்தல், 173
தடக்கை-வளைந்தகை, 171
தடாரி-உடுக்கைப்பறை, 70
தடையா-தடைப்படாத, 66
தண்டலை-சோலை, 181
தண்டி - பலமுறை வருந்திவேண்டி, 104
தரவு-கொடுத்தல், 173 [142
தலைக்கோள்-முற்படக்கொள்ளுகை,

தலைபெயர்த்தல் - ஓரிடத்தினின்று நீக்குதல், 22
தவஞ்செய்மாக்கள், 91
தவழ்-தவழ்தல், 134
தழீஇய-சூழ்ந்துள்ள, 169
தளவு-செம்முல்லை, 199
தன்னறியளவையின்தருதல், 127
தாயம்-உரியபாகம், 132
தாள்-முயற்சி, 53, 147; பாதம்,149
தாழ் கா-தாழ்ந்த[தழைத்த]சோலை, 196
தாழை-தெங்கு, 181
தாறு-முட்கோல், 167
தானை-சேனை, 54
திங்கள்-சந்திரன், 11
திண்மை-வலிமை, 15
திணை-நிலம், 221
திரு-செல்வம், 90
திருந்துதல்-இலக்கணங்கள்நேர்மையாகஅமைதல், 41
திரை-அலை, 178
திவவு-வார்க்கட்டு, 15
திறன்-வழி, 230
திறை-கப்பம், 120
தினை - புனத்தில் விளையும் ஓர் வகைப்பயிர், 16
துடியன்னஅடி, 125
துணரிய-தொகுதியான: குறிப்புப் பெயரெச்சம்: 191
துத்தி-புள்ளி, 69
துயல்வர-பொங்க, 164
துரப்பு-முடுக்குகை, 10
துராய்-புல்லைத்திரித்தபழுதை, 103
துருவை-செம்மறியாட்டுக்கிடாய்,103
துவர்-செந்நிறம், 27
துவர-முற்றவும், அடியோடு, 81
துற்றிய-தின்ற, 103
துறை-இறங்குமிடம், 239
துறைபோதல்-துறையில் வல்லமை பெறுதல், 120
துன்னல்-தைத்தல், 81, 154
தூங்க-ஆட, 110
தூங்குநடை, 125
தெரியல்-மாலை, 144
தெருமரல்-மனக்கவற்சி, 134
தெவ்வர்-பகைவர், 120, 133
தெற்றுதல்-செறுதல், 245
தெற்றென-விரைவாக, 174
தேஎம்=தேசம், 134
தேறல்-கள்தெளிவு, 157
தேறு-தேற்றாஎன்னும்மரம், 200
தேனெய்-தேனாகியநெய், 214
தொடி-ஓர்கையணி, 14
தொடையல்-தொடர்ச்சி, 18
தொல்பதி, 121
தோடு-குருத்தோலை, 143
தோன்றி-காந்தள், 199
நகுதல்-மலர்தல், 200
நசை-விருப்பம், 2
நசை-விரும்பிவந்தவர், 66
நடு-இடை, 38
நடை-நடத்தல்,ஒழுக்கம்,125; 202
நண்ணுவழி-சமீபமான இடம், 76
நரந்தம்-ஓர்புல், 238
நல்கி-தந்து, 83
நலம்-நன்மை, 31
நள்ளிருள், 72
நறவு-கள், 215
நறை-ஓர்கொடி, 238
நன்பகலந்தி-நடுப்பகலந்தி, 46
நனை-அரும்பு, 197
நாகம்-சுரபுன்னை, 209
நாண்-நாணம், 81
நால்கு-நான்கு, 165
நாணுடு, 226
நிமிர்தல் - நெடுகுதல், 114
நிரல்அமைதல்-வரிசையாகப்பொருந்துதல், ஒன்றோடொன்றுசேரா
நிலவு, 213 [திருத்தல், 114
நிலைமை - புகழ், 176 பகுதி) 235
நிழத்த - இல்லையாக்க, (நிழத்து-
நிழல் - சாயை, அருள், 149
நீடு - நெடுநாளாக, நீட்டித்தல், 62
நீர் - நீர்மை, 24
நீனிறமுல்லை, 221
நுடங்க - அசைய, 164
நுணங்கு - நுண்மை, 161
நுதல் - நெற்றி, 25, 110
நுவலுதல் - ஒலித்தல் 171: கொண்டாடிக்கூறுதல் 221

நெய்தல் - ஓர்மலர் 218
நெறிதிரிதல்-வழிதப்புதல், 58
நைப்ப-தின்ன, 234
நொச்சி-ஒருமரம், 185
நோக்கம்-பார்வை, 77
நோன்-வலி, 147
நோன்தாள்-வலியமுயற்சி, 53
பஃறேர் = பல் + தேர் "குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தமாகவும் பெறூஉமல்வழியானே", "னல முன் றனவும்" என்பவற்றால், லகரம் ஆய்தமாகத்திரிந்து, தகர வொற்று றகரமாயிற்று, 130, 135
பகற்கதிர்-பகலைச்செய்யுங்கிரணம்,
பகன்றை - சிவதையென்னுங் கொடி, 195
பச்சை-தோல், 5
பட்டுடை, 155
படர்ந்தாங்கு = படர்ந்தவாங்கு என்பதன்தொகுத்தல்: படர்தல் செல்லுதல், 136
பண் - இராகம், 109
பண்பு - நற்குணம், 237
பணை-பருமை, 32: மருதநிலம், 169
பணைத்தல்-பெருத்தல், 32
பத்தல்-குடுக்கைபோன்றஓர்யாழுறுப்பு, 4
பதம்-உணவு, 112
பதன்-காலம், 102
பயம்-பிரயோசனம், 92
பயன், 56
பயிலுதல் - விடாதுபழகுதல், 116
பரதவர் - நெய்தனிலத்தவர், 218
பரல்-சுக்கான்கல், 44: உள்ளிருக்கும் விதை: அவரைக்கொட்டை போல்வன: 115
பராஅரை-பருத்த அடை, 104
பருகு - பருகுகை, 77: உண், 104
பல்கால்-பலமுறை, 87
பல்காழ் - மேகலை, 39
பலபெயர்தல் - பலபகுதிப்பட ஆடுதல், 213
பவ்வம் - கடல், 135 (பௌவம்என வும் வரும்).
பழுது - குற்றம்: இங்கே வறுமை [150
பழுமரம்-பழுத்தமரம், 64
பறை, 171
பாக்கம்-கடற்கரையூர், 212
பாகற்பழம், 191
பாசிவேர், 153
பாடினி-பாடும் மகள், 47, 162
பாணி-தாளம், நீதி, 48, 110
பார்ப்பு-இளமைப்பெயர், 186
பாலை-ஓர்யாழ், 22
பிடி-பெண்யானை, 40, 126
பிணி-கட்டு, 15
பித்தை-மயிர், 160
பிறக்கி-அடுக்கி, 243
பிறழிய-முரிந்த, 178
பீடு-பெருமை, 53
புரவி-குதிரை, 165
புரக்கும்-பாதுகாக்கின்ற, 248
புலந்து-வெறுத்து, 175
புலம்-இடம், 3
புழுக்கல்-சோறு, 114
புழுக்கு-புழுக்கினது, 103
புறவு-காடு, 202
புன்கு-ஒருமரம், 196
புன்மை-வறுமை, 96
புனல்-நீர், 240
பூக்கமழ்தேறல், 157
பூக்கனிதல்-பூத்தொழில் முற்றுப் பெறுதல், 82
பெட்டவை-விரும்பியவை, 126
பெட்டா-விரும்பாத, 73
பெட்டாங்கு = பெட்டவாங்கு என்பதன் தொகுத்தல், 156
பெடை பெட்டை, 47
பெண்ணை-பனை, 207
பெயர்-கீர்த்தி, 53
பெயர்தல்-செல்லுதல், 37, ஆடுதல், 213
பெயர்ந்து-மீண்டு, 121
பெருகுதல்-மிகுதல், 194
பெறலருங்கலம், 156
பைத்த-படமெடுத்த, 69
பொத்துதல்-தைத்தல், 8; நிரம்புதல், 99
பொல்லம்பொத்துதல்- இரண்டுதலையையும் கூட்டித்தைத்தல், 8
பொலங்கலம்-பொற்கலம்-86

பொலிதல்-விளங்குதல், 160
பொறை-தாங்குதல், 20
பொறையுயிர்த்தல்-இளைப்பாறுதல், 239
போக்கு-ஓட்டம், நெகிழ்ச்சி, 86
போதல்-இல்லையாதல், 113
போந்தை, 143
போற்றுதல்-விரும்புதல், 60
போற்றுபு-விரும்பி, 151
மகிழ்-மகிழ்ச்சி, கள், 84, 99
மகிழ்ப்பதம்-கள், 111
மஞ்ஞை-மயில், 212
மடல், 207
மண்-பூமி, 227: மார்ச்சனை, 109
மண்ணுதல்-அலங்கரித்தல், 19
மணம்-கலியாணம், 19
மணி-நீலரத்தினம், 201
மது-தேன், 217
மந்தி-பெண்குரங்கு, 224
மயிர்குறைகருவி-கத்தரிகை, 29
மரல்-ஓர்செடி, 45
மரா-ஒருமரம், 50
மருங்கு-இடம், 149
மருதம்-ஓர்பண், 220
மருப்பு-தண்டு, 13
மருவுதல்-பொருந்துதல், 22
மறு-குற்றம், 227 [217
மறுகுதல்-கொண்டுபோதல், 215,
மறுகுநீர்-துளும்புகின்றநீர், 45
மனைக்கோழி, 223
மா-ஓரளவு, 180
மாசு-அழுக்கு, 153
மாண்-மாட்சி, 232
மாந்தி-உண்டு, 192
மாயோள்-கருநிறமுடையவள், 14
மாலை-சாயங்காலம், 96: பொன்னரி மாலை, 161
மாழாந்து-மயங்கி, (மாழா-பகுதி) 95
மாறுதல்-விற்றல், 214
மான்-விலங்கு, 139
மான்குறை-மானின்தசை, 217
மான-ஒக்க, 92
மிசைஇய-மேலிடத்துள்ள, 33
மிதப்பவயிலுதல்-நிரம்பவிழுங்குதல், 115
மீமிசை, 135
மீளி-யமன், 140
மீன்நெய்-மீனின்நெய், 215
முகந்துகொண்டு- வாரிக்கொண்டு, 128
முகிழ்-முகை, 112
முடம் வளைவு, 189
முத்தம்-முக்தா என்றவடசொல்லின் சிதைவென்பதுஒருசாரார்கொள்கை: தமிழ்மொழியென்பர்மற்றொருசாரார்: 162
முதியோர், 187
முரண்-மாறுபாடு, 188
முரவை-தவிட்டுவரி, 113
முருகன், 131
முலைக்கோள் விடாமாத்திரை-மிக்க இளம்பிராயம், 141
முழவு, 109
முறை-முறைமை, 102
முறையுளி-முறைமையினால்: உளி-மூன்றாம்வேற்றுமைச் சொல்லுருபு, 168
முன்னுதல்-கருதுதல், 3
முனிகுவம்-வெறுப்போம், 167
மூடை-குதிர், 245
மூவர், 54
மெய்-உடல், 20
மெல்லென, 122
மென்னிழல், 51
மேம்படுந, 60
மொக்குள்-கொப்புளம், 45
மொய்ம்பு-வலிமை, 140
யாணர்-புதுவருவாய், 1
யாமை, 186 [216
வகுத்தோர்-கூறுபடுத்துவிற்றவர்,
வடித்தல் - யாழ்நரம்பின் தொழில் விசேடம், 23
வண்டல்-மணலைக்கொண்டு ஆடும் விளையாட்டு, 187
வண்டுசூழ்நிலை, 97
வம்-வாரும், 101
வயின்-இடம், 180
வரவு-வருவாய், 173
வரை, மலை, 33, 224 [இடம்: 240
வரைப்பு-மதில், 65, கரையையுடைய

வல்லே-விரைவாக, 122
வலத்தல்-கட்டுதல், 51
வலவா-கட்டாத, 161
வழங்குதல்-செல்லுதல், திரிதல், 49, 203
வழிநாள்-பின்னாள், 2
வள்ளுகிர் - பெரியநகம், 34
வறள்-வறட்சி, 195
வறன்-பஞ்சம், 237
வறை-வறுத்தது, 115
வனப்பு-அழகு, 85
வனமுலை-அழகியமுலை, 36
வாக்குபு = வார்த்து, 87, 157
வாயொற்றுதல் - வாயில்வலப்புறத்திலும் இடப்புறத்திலுமாகச்சேர்த்தல், 106
வார்தல்-யாழ்நரம்பின் தொழில்விசேடம், 23
வாலொளி - வெள்ளிய ஒளி, 162
விசித்தல்-இழுத்துக்கட்டுதல், 5
விசும்பு, 136
விடியல். 72
விரகு-உபாயம், 3: பண்ணியாரம், 108
விலங்கல்-தவிர்தல், 46
விளையும்-ஒன்றன்பாற்குறிப்பு முற்று: விளையுள் - பகுதி, 247
விறலியர் - பாடினியர், 110
வீ - மலர், 200
வீட-ஒழிய, 87
வீறு-பெருமை, 167
வெகுளி, 172
வெண்ணி-ஓரிடம், 147
வெய்து-வெம்மை, 106
வெருவரு - அச்சம் வருகின்ற, வெருவா - பகுதி, 147
வெரூஉ - அச்சம், 171
வெவ்வெஞ்செல்வன், 136
வெள்ளி-சுக்கிரனென்னுங்கிரகம், 72
வென்வேல்-வென்றவேல், 129
வேட்டம், 142
வேட்ப-விரும்ப, 75
வேய்வை-குற்றம், 117
வேர்-வேர்வை, 80
வேலி -ஓரளவுநிலம், 246
வேவை-வெந்தது, 104
வேழம், 126
வேளாண்வாயில்-இரத்தல், 75
வைகல், 158
வைப்பு-வைக்கப்பட்டுள்ள பொருள், 226

இந்தப்பொருநராற்றுப்படைக்குத் தலைவனுன கரிகாற்பெருவளத்தானைப்பற்றிய குறிப்புக்கள்:—கரிகாற்பெருவளத்தானென்பவன், உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியின் புதல்வன்: இவன் தந்தை இந்தக்கரிகாற்பெருவளத்தான் பிறப்பதற்குமுன்னமே இறந்திருக்கவேண்டுமென்பது *"தாய்வயிற்றிருந்துதாயமெய்தி"(பொருந-132) என்று இவனைப்பற்றிக் கூறும் அடியாற் பெறப்படும். இவன் இளமையில் நெருப்பாற் சுடப்பட்டுக் கரிந்தகாலையுடையவனுனதனல், **கரிகால்**வளவன் [வளவன் - சோழன்] என்று வழங்கப்பெற்றானென்ப. இளஞ்சூரியன்கதிர்பரப்பி வானத்திற் செல்வதுபோல, இவன் இளமையிலேயேதன் வலிமையறிந்து பகைவர் ஏவல்கேட்பவும் பகைவர்தேசம் வருந்தவும் நாடாட்சியை மேற்கொண்டான்.

* இதற்குப் பழைய உரையை யொட்டி முன்பு உரை கூறப்பட்டது: அவ்வுரை மருத்துவநூலுக்கு ஒவ்வாது என்போர் கொள்கை இங்கு வேறுவகையாகக் கூறப்படுகின்றது.

இவன் வெண்ணியென்னும் போர்க்களத்திலே போர்செய்த *ஒரு சேரனையும் அவனோடு வந்த ஒருபாண்டியனையும் வென்றானென்பது (143-148) "இரும்பனம்போந்தைத்தோடும், ***இருபெரு வேந்தரும் ஒருகளத்தவிய, வெண்ணித்தாக்கியவெருவருநோன்றாட், கண்ணார்கண்ணிக்கரிகால்வளவன்" என்னும் அடிகள் தெரிவிக்கும். மேற்கூறிய இருபெருவேந்தரோடு பதினொருவேளிரையும் வென்றானென்பதை, 'காய்சினமொய்ம்பின் (246) என்ற அகநானூற்றுப்பாட்டால்விளக்கும். சிலப்பதிகாரத்தில், ஒருகாலத்தில் இவன் இங்குத் தனக்குஎற்றபகைவரைக்கிடையாமையால் இமயம் வரையிற்சென்று அதுகுறுக்கிட்டமையால் அதனைச்செண்டு கொண்டு திரித்து அதனுச்சியில் தனதுபுலிக்கொடியை நாட்டினானென்பதும் பெறப்படும். இந்த ஆற்றுப்படையில் இவன் கொடைச்சிறப்பு விளங்கும்.

பொருநராற்றுப்படையில் முக்கியமான கேள்விகள்:—(1) பொருநராற்றுப்படையை இயற்றியவர் யார்? (2) இதிற் கூறப்படும் பொருளைச் சுருக்கி யெழுதுக. (3) இது அகம் புறம் என்ற இருவகைப் பொருளில் எதன்பாற்படும்? (4) இந்தப்பொருநராற்றுப்படைக்குத் தலைவன் யாவன்? (5) அந்தத்தலைவனுடைய பிறப்பு வீரம் கொடை இவைகளைப்பற்றி நீர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக. (6) இந்நூலாசிரியர் இயற்கையை ஆராய்ந்தறிந்தவர் என்பதற்கு மூன்று உதாரணம் தருக. (7) திணைமயக்கம் என்றால் என்ன? இது, எதற்காகக் கூறப்படுவது? (8) 'ஒல்லெனத், திரைபிறழிய விரும்பௌவத்துக், கரைசூழ்ந்தவகன்கிடக்கை, மாமாவின்வயின்வயினெல், தாழ்தாழைத்தண்டண்டலைக், கூடுகெழீஇய குடிவயினான், செஞ்சோற்றபலிமாந்திய, கருங்காக்கை கவவுமுனையின், மனைநொச்சி நிழலாங்கண், ஈற்றுயாமைதன் பார்ப்போம்பவும்'—இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள விஷயத்தைத் தெளிவு பெற எழுதவும், மா-என்பதுஎன்ன? 'ஈற்று' என்ன சொல்? (9) மயில் எந்நிலத்துப்பொருள்? அது எந்தப்பழத்தைத்தின்னுமென்று கூறப்பட்டுள்ளது? (10) மருதநிலம் எவ்வாறு இருக்குமென்று கூறப்பட்டுள்ளது? அந்நிலத்தவர் அதைமுனைந்தால் எங்குச் செல்வர்? அதை முனைவதற்குக் காரணம்யாது? (11) பாக்கம் எவ்விடத்துள்ள ஊருக்குப்பெயர்? (12) காவிரியின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது? (13) அடம்பும் ஞாழலும் இந்த ஆற்றுப்படையில் எந்நிலத்துப்பொருளாக வந்துள்ளன? இது பொருந்துமா? விடைக்குக் காரணமும்வேண்டும். (14) அகவர், களமர், புறவு, செகில், தளவு, அஞர்,பௌவம் - பொருளென்ன? (15) ஆற்றுப்படுப்போன் தான் கரிகாலனிடத்து என்ன எவ்வாறு பெற்றதாகக் கூறுகின்றான்? (16) மாலையன்னதோர்புன்மையும், காலைக்கண்டோர்மருளும் வண்டுசூழ்நிலையும்—இவற்றை விவரிக்க; **அல்லது** 1. கானவர்மருதம்பாட வகவர், நீனிறமுல்லைப்பஃறிணை நுவல, 2. கானக்கோழிகதிர்குத்த, மனைக்கோழி தினைக்கவர:

* இவனைச் சேரமான்பெருஞ்சேரலாதனென்ப.

இவற்றை விவரிக்க. (17) பாணனுக்கும் பாடினிக்கும் பரிசிலாக அரசன் தருவன எவை? அறுவை, நிழல், மாசொடுகுறைந்ததுன்னற்சிதார், குறங்கு, புருவம்-இவற்றிற்கு உவமையாகக் குறித்த பொருள் எவை? (18)வேம்பு, செங்கோல் இவற்றைக் கூறியுள்ளபடி அடைமொழி புணர்த்துக்கூறுக. (19) வேளாண்வாயில் என்று எது கூறப்பட்டுள்ளது? ஏன்? (20) நெறிதிரிந்தொராஅது ஆற்றெதிர்ப்படுதலும்நோற்றதன்பயனே—என்று கூறக் காரணம் என்? (21) நீர்ப்பெயர்ச்சுழியினிறைந்தகொப்பூழ்—நாணடச் சாய்ந்த நலங்கிளரெருத்து, ஆய் தினையரிசியவையலன்ன வேய்வை போகியவிரலுளர்நரம்பின்—கேள்விபோகிய நீள்விசித்தொடையல் -இவற்றுக்குப்பதவுரைகூறி, இவற்றிலுள்ள உபமானஉபமேயங்களைப் பொருத்திக்காட்டுக: ஒவ்வொரு உவமையும் இன்னவகையுவமையென்பதையும் தெரிவிக்க. (22) விரகறிபொருந என்று விளித்தது எதனால்?

இந்தப் பொருநராற்றுப்படை அச்சாகுங்கால், இப்பதிப்பினைப் பார்வையிட்டுப் பிழைதிருத்திச் செம்மையுற ஆக்கியவர், சென்னை விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர், **வித்வான். C. ஜெகந்நாதாசார்யர். M. A., L. T. Dipl. Geog. அவர்.**

வை. மு. கோபால கிருட்டிணமாசாரியர்

பதிப்புக்கள்

கம்பராமாயணம் ஆறுகாண்டங்கள் 7-வால்யூம் மூலம், பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்புகள், பாடபேதங்கள், அரும்பொருள் விளக்கம் இவைகளுடன் கூடியது.

வில்லிபாரதம் பத்துப்பருவங்கள் 7-வால்யூம் மூலம், மிக எளிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்புகள், கதைச்சந்தர்ப்பங்கள், அரும் பொருள்விளக்கம், அபிதானசூசிகையகராதிகளுடன் கூடியது.

திருக்குறள் மூலம், பரிமேலழகர்உரை, பரிமேலழகருரைக்கு விளக்கமான குறிப்புரை இவைகளுடன் கூடியது.

பத்துப்பாட்டு (ஏழுபாட்டுக்கள்) மூலம், பதவுரை, விசேடவுரை, ஆராய்ச்சியுடன் கூடியது.

தண்டியலங்காரம் பொதுவியல் பொருளணியியல் - மூலம், பழையவுரை, குறிப்புரை இவைகளுடன் கூடியது.

மற்றும் பல புத்தகங்களும்

கிடைக்குமிடம்:—

வை. மு. நரசிம்மன்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பெனி

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஆனந்தாபார்வதி அச்சகம், 30, இடைப்பாளையம் தெரு, சென்னை-3.

சிறுபாணாற்றுப்படை.

இந்தச் சிறுபாணாற்றுப்படை, நக்கீரனார் முதலிய கடைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்ட பத்துப்பாட்டுக்களுள் மூன்றாவது. (பத்துப்பாட்டுக்களாவன:—திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவைகளைப் பத்துப்பாட்டு எனத் தொகுத்தவர் இன்னாரென விளங்கவில்லை.) இந்நூல் 269-அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் இயன்றது.

சிறுபாணாற்றுப்படை என்ற தொடர் - சிறுபாணை ஆற்றுப் படுத்தும் நூல் எனப் பொருள்படும். ஆற்றுப்படை - வழியிற் செலுத்துவது என ஏழாம்வேற்றுமைத்தொகை. பாணாற்றுப்படை- பாணனை யாற்றுப்படுத்துவது என இரண்டாம் வேற்றுமைத் தொகை. சிறுபாண் - பண்புத்தொகை. பாண் - பாணனுக்கு ஆகு பெயர்.

பாணர் - இசைப்பாணரும், யாழ்ப்பாணரும், மண்டைப் பாணரும் எனப் பலராவர்: இதிற் கூறப்படுபவன் - யாழ்ப்பாணன். இந்நூலுள் " இன்குரற் சீறியாழிடவயிற்றழீஇ " என்றும், பெரும் பாணாற்றுப்படையில் " இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி" என்றும் வருதலாலும், 'பெரும்பாணர் - குழலர் பாணர் முதலாகிய பெரிய இசைக்காரர்' என அடியார்க்குநல்லார் கூறுதலாலும், இவ் யாழ்ப்பாணரில் சிறுபாண் பெரும்பாண் என இருவகையினருண் டென்பது பெறப்படும். (சிறுபாண் - சிறியயாழையுடையபாணன்.) சிறுபாணை ஆற்றுப்படுத்துவதாக வந்ததனால், இது சிறுபாணாற்றுப் படை எனப்பட்டது. இனி, பத்துப்பாட்டிலுள்ள பாணாற்றுப்படை யிரண்டனுள் இது அடியால் குறைந்திருப்பதுபற்றிச் சிறுபாணாற்றுப் படை என வழங்கலாயிற்றென்பதும் உண்டு. அடியளவினாற் சிறிய [குறைந்துள்ள] பாணாற்றுப்படை யென்க.

ஆற்றுப்படை யென்பது - கூத்தர் முதலியவர்களுள் ஒருத்தர் கொடையாளியான ஒருத்தனிடத்துத் தாம் பெற்ற செல்வத்தை, எதிர்வந்த இரப்போர்க்கு உணர்த்தி, அவரும் அந்தக் கொடையாளி யினிடஞ் சென்று தாம் பெற்றதுபோல் பொருளைப் பெறுமாறு வழிப்படுத்துவது. இந்தப் பாணாற்றுப்படை, புறப்பொருளான பாடாண்திணையின் துறைகளுள் ஒன்று: இதன் இலக்கணம்— " கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபயனெதிரச் சொன்னபக்கமும் " என்று தொல்காப்பியத்துக் கூறப்பட்டுள்ளது. " சேணோங்கிய வரையதரிற், பாணனையாற்றுப் படுத்தன்று " என்பது புறப்பொருள்வெண்பாமாலைக் கொளு. ஒவ்

வொருவரும் இங்ஙனம் தாம் பெற்ற செல்வத்தை இரவலர்க்கு அறிவுறுத்தி வழிப்படுத்துதற்கு உரியராயினும், கூத்தர் முதலியோரே எதிர்வந்த கூத்தர் முதலியோர்க்குக் கூறி அவரை வழிப்படுத்துவதாகச் செய்யுள் செய்தலே மரபு.

இஃது - ஓய்மானாட்டு நல்லியக்கோடனிடத்திற் பரிசு பெற்ற பாணனொருவன், தன்னை யெதிர்ப்பட்ட மற்றொரு பாணனை நோக்கி, 'பாணனே! சேர சோழ பாண்டியரின் இராசதானிகளாகிய வஞ்சிமா நகரும், உறையூரும், மதுரையும் பரிசில் தருவதிற் குறைந்தன: ஆதலால், நீ அந்நகர்களை நோக்கிச் செல்லவேண்டா: பேகன் பாரி முதலிய ஏழு வள்ளல்களும் மேற்கொண்டிருந்த கொடைப்பாரத்தைத் தாங்கியவனும் மாவிலங்கையை யாண்ட ஓவிய மன்னவரின் குலத்திற் பிறந்த நல்லியக்கோடனென்று ஒரு வள்ளல் இருக்கின்றான். அவன் பிடி [பெண்யானை]க்கணங்களைப் பரிசிலர்க்குக் கொடுப்பவன்; கூத்தர்களைப் பாதுகாப்பவன்: அவனிடத்துப் பரிசில் பெறும் விருப்போடே முன்பு ஒருநாள் அவனையும் அவனுடைய மலை வளத்தையும் பாடிக்கொண்டு யாம் சென்றனமாக, பலநாளாகப் பசியால் வருந்தியிருந்த எமது துயரம் அவனால் தொலைந்திட யானைகளையும் தேர்களையும் பரிசிலாகத் தரப் பெற்று அவனிடத்தினின்று இப்போதுதான் திரும்பி வருகின்றோம்: நீ கொடுப்போரை நாடிச் செல்வதாயிருந்தால் சுற்றத்தாரோடு அவனிடஞ் செல்க. செல்லும் போது வழியிடையில் நெய்தல் நிலத்துள்ள அவனுடைய எயிற் பட்டினத்திலே சேர்ந்தால் பரதவராலும், முல்லை நிலத்துள்ள அவனுடைய வேலூரை யடைந்தால் எயிற்றியராலும், மருத நிலத்துள்ள அவனுடைய ஆமூரை யடைந்தால் உழத்தியராலும், உண்ணுதற்கும் பருகுவதற்கும் உதவி உபசரிக்கப்படுவீர்: அவனுடைய இராசதானி தூரத்திலுள்ளதும் அன்று: குறிஞ்சிநிலத்ததான அங்குச் சென்று கிடங்கு என்னும் அவன்நகரின் அடையாத வாயிலினுட் புக்கு, தன்னுடைய செய்ந்நன்றியறிதல் முதலிய குணங்களை அறிஞர் முதலியோர் புகழ்ந்துகூற வீற்றிருக்கும் அந்த நல்லியக்கோடனை யடைந்து உன்னுடைய யாழை வாசித்து நீ சில வார்த்தைகளை அவனிடத்துச் சொல்வதற்கு முன்னே அவன் உடுக்க உடைகளையும் பருகத் தேறலையும் உங்கட்கு வழங்கி உணவைப் பொற்கலத்திலே யிட்டுத் தானே யூட்டுவான்: பின்பு நிதிகளோடே, உயர்ந்த பாகனோடு தேர்களையும், காளைகளையும், குதிரைகளையும், யானைகளையும் அணிகலங்களையும் வழங்கி அன்றே உங்களை விடுவான்' என்று கூறி, அந்த நல்லியக்கோடனிடம் ஆற்றுப்படுத்தியதாகச் செய்யப்பட்டது. இவ்வாறு பரிசுபெற்ற பாணன் தன்னையெதிர்ப்பட்ட பாணனைநோக்கி வள்ளலிடத்து ஆற்றுப்படுத்துவதாகக் கவிஞன் தனதுதிறனாற் கற்பித்துக் கூறும் முகத்தால் நல்லியக்கோடன் என்னும் வள்ளலின் புகழை ஏத்துகின்றானென்க.

இதனையியற்றியவர் - இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரென்புவர். இடைக்கழி நாட்டிலுள்ள ஊர் பலவற்றுள் நல்லூரென்

பது இந்நூலாசிரியருடைய ஊராகும். (இடைக்கழி நாடென்பது - சென்னை நகர்க்குத் தென்மேற்கிலுள்ளதாகி இப்போதும் அப்பெயருடனேயே வழங்குகின்றது.) இவருடைய இயற்பெயர் - தத்தனாரென்றும், நக்கீரர் முதலிய பெயர்களிற்போலச் சிறப்புப் பொருளையுடைய 'ந' என்பது இவரது கல்விமேம்பாடுபற்றிப் பின்னர்ச் சேர்க்கப்பட்டிருக்கலா மென்றும் கருத இடமுண்டு. புறநானூற்றின் 218-ஆம் பாட்டின் ஆசிரியர் பெயரின் பாடபேதமாக நத்தத்தனாரென்பது காணப்படுகின்றமையால், அந்த நத்தத்தனாரென்பவரும், திருவள்ளுவமாலையைப் பாடிய கடைச்சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர்களுள் ஒருவராக வருகின்ற நத்தத்தனாரென்பவரும், நத்தத்தமென்னும் இலக்கணநூலை யியற்றிய நத்தத்தரென்பவரும் ஒருகால் ஒருவரேயாக இருக்கலாமோ என்று கருதுகின்றனர். இவருடைய காலத்திருந்த புலவர் - நல்லியக்கோடனைப் பாடிய புறத்திணை நன்னாகனாவர். இவர் காலத்திருந்த பிரபுக்கள் - இந்தப் பாட்டுடைத் தலைவனாகிய நல்லியக்கோடன் தவிர, நன்னாகனாற் பாடப்பெற்ற ஓய்மானல்லியாதனும், ஓய்மான்வில்லியாதனும், கரும்பனூர்க்கிழானும் என்பவர்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இந்நூற்கு உரை யெழுதியுள்ளார்: பெரும்பாலும் அவ்வுரையை யாதாரமாகக்கொண்டு மாணாக்கர்க்கு விளங்குமாறு எளிய நடையில் இவ்வுரை யெழுதப்படுகின்றது.

இந்தச் சிறுபாணாற்றுப்படையின் முதல் 38 அடிகள்— *விறலியரோடும் பாண்மகனோடும் கொடுப்பாரைத் தேடிக்கொண்டு செல்லும் பாணனாகிய இரவலனை ஆற்றுப்படுப்பவன் விளித்த விளியாக வருவன.

அங்ஙனம் பாணனை விளிக்குமிடத்து அன்னான் விறலியரோடும் பாண்மகனோடும் கொடையாளியைத் தேடிச்செல்கின்றவன் பாலைநில வழியாற் செல்கின்றமையை முதல் 12 அடிகள் கூறும்:—

மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்பு விரித்தன்ன காழக நுணங்கறல்
அயிலுருப் பனைய வாகி யைதுநடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரற் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாள்
காலை ஞாயிற்றுக் கதிர்கடா வுறுப்பப்

* விறலியர் - மனத்துக்குறிப்புப் புறத்துவெளிப்படப் பாடியாடும் மகளிர்.

பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ

பதவுரை :—(1) பணை தோள் - மூங்கிலாகிய தோள்களையுடைய, மா மணி மலை நிலம் மடந்தை - பெருமைபெற்ற மணிகள் தங்கின மலையையுடைய பூமிதேவியின், (2) அணி முலை துயல் வரூஉம் ஆரம் போல - அழகிய முலைமீது கிடந்தசைகின்ற முத்துவடம்போல, (3) செல் - செல்லுகின்ற, புனல் - நீரினால், உழந்த-வருந்தியதும், சேய் வரல் - வெகுதூரத்திலிருந்து வருதலையுடைய, கான் யாறு - காட்டியாற்றினால், (4) கொல் கரை - குத்தப்படுகின்ற கரையிலேயுள்ளதுமான, நறும்பொழில்-நறுமணமுள்ள சோலையினிடத்திலேயுள்ள,— குயில் குடைந்து உதிர்த்த - குயில்கள் (தமது மூக்கினாற்) குடைந்து உதிர்த்த, (5) புதுபூ - புதியபூக்களின், செம்மல் - வாடலை, சூடி-, புடை நெறித்து - தம்மிடமெல்லாம் நெறிப்புக்கொண்டு, (6) கதுப்பு விரித்து அன்ன - மயிரை விரித்தாலொத்த, காழ் அகம் நுணங்கு அறல் - கறுப்புநிறத்தைத் தம்மிடத்தேகொண்ட நுண்ணிய கருமணலில், (8) வெயில் உருப்பு உற்ற - வெயிலினால் வெம்மையைப் பொருந்தின, வெம் பரல்-வெவ்விய பரல், (7) அயில் உருப்பு அனைய ஆகி - வேல் காய்ந்ததை ஒத்தனவாகி, (8) கிழிப்ப - (பாதங்களைக்) கிழித்தலினால், (7) ஐது நடந்து - மெல்ல நடந்து,—(9) வேனில் நின்ற வெம் பதம் வழி நாள் - வெயிற்காலம் நிலைநின்றமையாலான வெவ்விய செவ்வியைத் தன்னிடமுடைய நாளிலே, (10) காலை ஞாயிறு கதிர் கடாவுறுப்ப - காலையிலே தோன்றும் தன்மையுள்ள சூரியனுடைய கிரணம் (வெம்மையைச்) செலுத்துதலைச் செய்கையினால், (11) பாலை நின்ற - வெப்பம் நிலைநின்ற, பாலை - பாலைவனமாகிய, நெடு வழி - நீண்ட (தொலையாத) வழியையுடைய, (12) சுரன் முதல் - சுரதினிடத்திலுள்ள, மராஅத்த - கடம்பமரத்தினுடைய, வரி நிழல் - அழகிய (செறியாத) நிழலிலே, அசைஇ - தங்கியும்,—(எ - று.)

விசேடவுரை :—மலைமீதினின்று பெருகும் கான்யாற்றுப் பெருக்கு நிலமகளின் முலைமீது அசையும் முத்துவடம் போலுமென்பது 1-2 அடிகளின் பொருள்: இது - மெய்யுவமம். பெருக்கினால் மரக்கிளைகள் ஆட்டமெடுப்பதனால் 'புனலுழந்த' என்றது. கரையிலுள்ள பூஞ்சோலைகளினின்று உதிரும் புதுப்பூவாடல்களையுடைய யாற்றின் கருமணல், ஒருமகள் பூவைச்சூடிய தன் மயிரை விரித்துள்ளது போலுமென்பது 5-6 அடிகளின் கருத்து. 5. நெறித்தல் - படிப்படியான குழற்சியைப் பெறுதல். செம்மல் - செம்மையற்றது என வாடலுக்குக் காரணக்குறி. அந்தக் கான்யாற்றுக் கருமணலிற் பரல்குத்த விறலியர் மெல்ல நடந்தமையை, 7-8 அடிகள் கூறும்.

11. பாலை - வெப்பம் : பாலைத் தன்மையுமாம். பாலைத் தன்மை யாவது - காலையும் மாலையும் நடுப்பகலை யொத்த கடுமைமிகச் சோலை தேம்பிக் கூவல் முதலிய நீர்நிலைகள் மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பயனைத் துறந்து பறவைகளும் விலங்குகளும் புலம்புற்று இன்ப

மின்றித் துன்பம் பெறுவது என்பர். மராஅத்த - குறிப்புப் பெயரெச்சம். 11-12: கொடுப்போரைத் தேடிக்கொண்டு செல்லும் பாணனோடு அவனைச் சார்ந்த விறலியர் கான்யாற்று மணற்பாங்கான நிலத்துப் பரல்குத்த வருந்தி மெல்ல நடந்தும், பாலைவனத்துச் செல்லும்போது சூரிய வெப்பத்தால் நடக்க முடியாமற் போகவே கடம்ப மரத்தின் நிழலில் தங்கியும் இங்ஙனம் அரிதிற் செல்கின்றன ரென்க. வரி நிழல் - வரி வரியாயுள்ள நிழல்; வரி - கோடு.

முதற் பன்னிரண்டடிகளால் விறலியர் செல்கின்ற பாலையியல்பைக் கூறிய ஆசிரியர் 13-முதல் 31-அடி வரையில் அவ்விறலியரின் முடி முதல் அடிவரை வருணித்து, நடந்த வருத்தத்தால் அவ்விறலியரின் காலை இளைஞர் மெல்லப்பிடித்தலை 2-அடிகளாற் கூறுவர்.

ஐதுவீ ழிருபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅய்
உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்து
ஈர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையின்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்து
யாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்செறி நீர்தரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவர

பதவுரை:—(13) ஐது வீழ் இரு பெயல் - மெல்லிதாகத் துளித்து வீழ்கின்ற பெய்யுந் தன்மையுள்ள மேகத்தின், அழகு - அழகை, கொண்டருளி - (தன்னிடத்தே) கொண்டு, (14) நெய் கனிந்து - எண்ணெயிலே முற்றுப்பெற்று, இருளிய - இருண்ட, கதுப்பின் - மயிரினையும்,—

(15) உடன் - ஒருசேர, பல (16) மயில் - பல ஆண்மயில்கள், (14) கதுப்பு என - மயிர்போல, (15) மணி வயின் கலாபம் பரப்பி - நீலமணி தம்மிடத்தே யுடைய தோகைகளை விரித்து, (அம்மகளிரின் கூந்தல் மயிருக்குத் தமது தோகை ஒவ்வாமையால்), (16) மயில்

குளிக்கும்-பேடை மயிலுக்குள்ளே மறைதற்குக் காரணமான, சாயல்-சாயலையும்,—

சாஅய் - ஒடியிளைத்து, (17) உயங்கு - வருந்துகின்ற, நாய்-நாயினுடைய, நாவின் - நாக்கினது, நல் எழில் - நல்ல அழகை, அசை இ-வருத்தி, (18) வயங்கு இழை உலறிய - விளங்குகின்ற (சிலம்பு முதலிய) அணிகலனை (வறுமையினால்) அணியாது பொலிவிழந்த, அடியின் - பாதங்களையும்,—

(19) ஈர்ந்து நிலம் தோயும் - இழுக்கப்பட்டுப் பூமியிலே படிகின்ற, இரு பிடி தட கையின் - கருநிறமுள்ள பெண்யானையினது பெருமையையுடைய கை போன்று, (18) அடி தொடர்ந்து - பாதங்களோடு தொடரப்பெற்று, (20) சேர்ந்து - திரண்டு, உடன் செறிந்த - ஒன்றோடொன்று நெருங்கிய, குறங்கின் - துடைகளையும்,—

குறங்கு என - துடைபோல, (21) மால் வரை ஒழுகிய - பெரிய மலையிலே ஒழுங்குபட வளர்ந்த, வாழை - (அழியாது) வாழ்தலையுடைய, வாழை - வாழையின், (22) பூ என - பூப்போல, பொலிந்த - பொலிவுபெற்ற, ஓதி - கூந்தல் முடிச்சினையும்,—

ஓதி - அந்தக் கூந்தலிலே சூடிய, (23) நளி சினை வேங்கை நாள் மலர் - செறிதலைக்கொண்ட கிளைகளையுடைய வேங்கைமரத்தில் தோன்றிய அன்று மலர்ந்த மலர் (இது என்று மயங்கி), நச்சி - விரும்பி, (24) களி சுரும்பு அரற்றும் - களிப்பினையுடைய வண்டுகள் ஆரவாரிக்கப்பெற்ற, சுணங்கின் - சுணங்கினையும்,—

சுணங்கு பிதிர்ந்து - சுணங்கு பிதிர்பட்டு, (25) யாணர் கோங்கின் - புதிதாகப் பூத்தலையுடைய கோங்கினது, அவிர் முகை - விளங்குகின்ற மொட்டை, எள்ளி - இகழ்ந்து, (26) பூண் அகத்து ஒடுங்கிய-ஆபரணங்கள் இடையிலே கிடக்கின்ற, வெம் முலை-விருப்பத்தையுடைய முலைகளையும்,—

முலை என - (மகளிரின்) தனங்கள்போல, (27) வண் கோள் பெண்ணை வளர்த்த - பெரிய குலையினையுடைய பனையிலே வளர்த்த, நுங்கின் - நுங்கினது, (28) இன் செறி நீர் - இனிய செறிந்த நீரின் இனிமையை, தரும் - தருகின்ற, எயிற்றின் - பற்களையும்—

எயிறு என - (மகளிரின்) பல்போல, (29) குல்லை அம் புறவில் - கஞ்சங் குல்லையையுடைய அழகிய காட்டிடத்தே, குவி முகை அவிழ்ந்த - குவிந்த அரும்பு மலரப் பெற்ற, (30) முல்லை-முல்லையை, (சூடுதற்கு), சான்ற - அமைந்த, கற்பின் - கற்பினையும், மெல் இயல்-மெல்லிய இயல்பினையும், (31) மடம் மான் நோக்கின்-இளமையினையுடைய மான்போலும் பார்வையினையும்,வாள் நுதல்-ஒளிபொருந்திய நெற்றியினையுமுடைய, விறலியர்-விறல்பட ஆடும் மகளிர், (கீழ்க் கூறியபடி ஐந்துடன்றும் விரி நிழல்சை இயும் இவ்வாறு), (32) நடை-நடத்தலாலே, மெலிந்து - இளைத்து, அசை இய - ஓய்ந்த, (அவர்களின்), நல் மெல் சிறு அடி - அழகிய மெல்லிய சிறிய அடியை,

(33) கல்லா இளையர்-(தம் தொழிலை யொழிய வேறொன்றைக்) கற்றறியாத சிறுவர், மெல்ல கைதவர - மெத்தென்று தடவவும்,—(எ-று.)

விசேடவுரை :—(7) ஐதுநடந்து(ம்), (12) வரி நிழலசை இ(யும்) (31) விறலியர் (இங்ஙனம்) (32) நடை[நடத்தலால்]மெலிந்து அசைஇய (அவருடைய) சீறடியைக் (33) கல்லாவிளையர் கைதவரவும் என்க.

(14) கதுப்பினையும், (16) சாயலினையும், (18) அடியினையும், (20) குறங்கினையும், (22) ஓதியினையும், (24) சுணங்கினையும், (26) முலையினையும், (28) எயிற்றினையும், (31) நோக்கினையும் நுதலினையும் (30) மெல்லியலினையும் கற்பினையுமுடைய விறலியர் என்க. (30) கற்பினையும் என்பது இடையிலிருப்பினும் அன்வயம் காட்டுமிடத்து உடலுறுப்புக்களைச் சொல்லும் பகுதியை யெல்லாம் ஒன்று சேர்த்து, மனத்தின் நிலையால் விளையுங் குணமாகிய கற்பு இறுதியிற் காட்டப்பட்டது.

(13 - 14) பெய்யும் மேகம் கதுப்பிற்கும், (15-16) மயில் சாயலுக்கும், (17-18) நாய்நா அடிக்கும், (19-20) பிடியின்கை குறங்கிற்கும், (21 - 22) வாழைப்பூ ஓதிக்கும், (23 - 24) வேங்கைமலர் சுணங்கிற்கும், (25 - 26) கோங்கின்முகை முலைக்கும், (27 - 28) நுங்கின்நீர் எயிற்றின்நீர்க்கும், (28-30) முல்லை முகை எயிற்றுக்கும் (31) மானின் நோக்கு நோக்கிற்கும் உவமையாம் ; இங்ஙனம் தொடர்ச்சிப்பட உவமை வருவதை மாலையுவமை யென்றும், சந்தானவுவமை யென்றும் கூறுப. 'அடியின் அடி தொடர்ந்து'; 'குறங்கின் குறங்கென', 'வாழை வாழைப்பூவென', 'ஓதி ஓதி நளிச்சினை', 'சுணங்கின் சுணங்கு பிதிர்ந்து' என இவ்வாறு ஒன்றைக் கூறிவிட்டு அங்ஙனம் விட்டதை மீண்டும் பற்றிக்கொண்டு செல்லுதல், ஒற்றைமணிமாலையணியாம்: இதனை வடநூலார் ஏகாவளியலங்காரமென்பர். (14 - 16) ஆண்மயில்கள் மகளிரின் கூந்தலைப்போலத் தம் தோகையை விரித்தும் மகளிரின்சாயல் தமக்கு வாராமையால் வெள்கிப் பெடைமயிலில் மறையும் என்று வருணித்தவாறு. சாயல்-மென்மையென்பர். (20 - 22) ஓதிக்கு உவமையாகக் கூறிய வாழைப்பூவில், வாழை என்பதற்குக் குறங்கு உவமையாக வந்ததனால், இது - அடுக்கியல் வரலுவமை யென்னுங் குற்றத்திற்கு இடனாகாது: இனி, வாழைப்பூ என்பதிலுள்ள உபமேயமாகிய வாழைக்கு உபமானமாகிய குறங்கு பிடிக்கையை உபமானமாகப் பெற்று வந்திருப்பது, அடுக்கியல் வரலுவமை யென்னுங் குற்றமாகாதோவெனின், பிடிக்கைபோலுங் குறங்கு என அற்றபின், குறங்கென என்று தனியே எடுக்கப்படுவதனால் குற்றமாகாதென்க; இவ்வாறு வருவனவற்றிற்கெல்லாம் இது கொள்க. (21 - 22) வாழைப்பூ மகளிர் ஓதிக்கு உவமை கூறப்படுவதை "வாழையீன்ற வையேந்து கொழுமுகை,...மகளிரோதியன்ன பூவொடு" (நற்: 225) என்றவிடத்தும், வேங்கைப்பூ சுணங்கிற்கு உவமையாதலை "வேங்கைவீ, முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணாகம்" (கலி: 64) என்றவிடத்தும் காண்க. சுணங்கு - அழகு தேமல், சுணங்கை வேங்கைமலரென மயங்கிச் சுரும்பு அரற்றுவ

தாயிற்றென்க. (28-30) மகளிரின்எயிற்றை முல்லை முகைக்கு உவமை கூறியது எதிர்நிலையுவமை. (30) கற்பின்மிகுதி தோன்ற மகளிர் முல்லை சூடுதல் முற்காலத்து இயல்பு என்ப. (33) கல்லாவிளையர் என்பதற்கு-தத்தம் சிறுதொழிலை யன்றி வேறொருதொழிலைக் கல்லாத இளையர் என்று உரை விரிப்பர்.

34—40 : இவ்வடிகள்—ஆற்றுப்படுப்போன் இரவலனை ஆற்றுப்படுத்துதற்காக விளித்தமை தெரிவிக்கும்:—

பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல !

பதவுரை :—(34) பொன் வார்ந்து அன்ன - பொன்னை(க் கம்பியாக) நீட்டினாற்போன்ற, புரி அடங்கு நரம்பின் - முறுக்கு அடங்கின நரம்பினது, (35) இன் குரல் - இனிய ஓசையையுடைய, சிறு யாழ்- சிறிய யாழை, இடவயின் தழீஇ - இடப்பக்கத்தே தழுவிக் கொண்டு,— (36) நைவளம் பழுநிய - நட்டபாடையென்னும் பண் முற்றுப்பெற்ற, நயம் தெரி - இனிமை தெரிகின்ற, பாலை - பாலை யாழை, (37) கைவல் - வாசித்தலைவல்ல, பாண்மகன் - பாணனாகிய மகன், கடன் அறிந்து - (வாசிக்கும்) முறைமையை யறிந்து, இயக்க- வாசிக்க,—(38) இயங்கா வையத்து - அசைதலில்லாத பூமியிலே, வள்ளியோர் நசைஇ - பரிசில் தருவாரை விரும்பி, (39) துனி கூர் எவ்வமொடு-(தன்னை) வெறுத்தல் மிக்க வருத்தத்தோடே கூடின, துயர் - வறுமைத் துயரம், ஆற்றுப்படுப்ப - (நின்னைக்) கொண்டு போகையினாலே, (38) முனிவு இகந்து இருந்த - (வழி நடந்த) வருத்தம் நீங்கியிருந்த, முது வாய் - பேரறிவு வாய்ந்திருந்த, இரவல- இரவலனே ! (எ - று.)

விசேடவுரை :—(33) தைவர, (37) பாண்மகன் இயக்க, (35) சீறியாழ் இடவயின்தழீஇ, (38) வள்ளியோர்நசைஇ, (39) எவ்வமொடு துயர் ஆற்றுப்படுப்ப (40) முனிவிகந்திருந்த இரவல ! என்று, 34-ஆவது அடி முதல் இந்த அடிவரை, பரிசில் பெற்றானொருவன் கொடையாளியைத் தேடித்திரியும் இரவலனை விளித்ததாக முடிபு காண்க.

யாழின் நரம்பை 'பொன்வார்ந்தன்ன' என்று வருணிப்பதைப் பல இடங்களிற் காணலாம். புறநானூற்று 308-ஆஞ் செய்யுள் முதல்வரியுங் காண்க. இயங்குகின்ற வையத்தினு வேறுபாடுதோன்ற 'இயங்காவையம்' என்றார் : பாயாவேங்கையென்றாற் போன்ற பிறகுறிப்பு இது. வையம் என்ற சொல் - பூமி என்ற பொருளோடு வண்டி என்ற பொருளையும் உடையது. இனி,

பரிசில் தருவார்கிடையாமையால் பரிசிலர் இயங்காத வையமென்று உரைப்பாருமுளர். இசையிற் பேரறிவு படைத்திருத்தலால், 'முதுவாயிரவல' என்றது.

பரிசில் பெற்று வந்தவன் இங்ஙனம் இரவலனை விளித்து, 'நீ சேரர் முதலியோரின் இராசதானியிற் செல்லுதலிற் பயனில்லை'யென்று கூறுபவனாகி, முதலில் (41 - 50) வஞ்சியிற் செல்லுதலிற் பயனில்லை யென்கின்றான்:

கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழல்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே:

பதவுரை:—(41) *கொழு மீன் குறைய - கொழுவிய மீன் துண்டுபடும்படி, ஒதுங்கி-நடந்து, வள் இதழ் (42) கழுநீர் மேய்ந்த-வளப்பமுள்ள இதழையுடைய செங்கழுநீர்ப்பூவைத் தின்ற, கய வாய் - பெரிய வாயையுடைய, எருமை—,—(43) பைங்கறி நிவந்த பலவின் நீழல் - பசிய மிளகின் கொடி படர்ந்த பலாமரத்தின் நிழலிலே, (44) மஞ்சள் மெல் இலை - மஞ்சளினது மெல்லிய இலை, மயிர் புறம் தைவர - (தனது) மயிரையுடைய முதுகைத் தடவாநிற்க, (45) விளையா இள கள் நாற - முற்றாத இளைய தேன்மணம் வீசும்படி, மெல்குபு பெயரா - மென்று அசையிட்டு,—(46) குளவி பள்ளி பாயல் கொள்ளும் - காட்டுமல்லிகையாகிய படுக்கையிலே துயில் கொள்ளுதற்கு இடனான, (47) குட புலம் - மேற்றிசைக்கணுள்ள நிலத்தை, காவலர் - காத்தற்றொழிலையுடைய சேரரின், மருமான் - குடியிலேயுள்ளவனாகி,—ஒன்னார் (48) வடபுலம் இமயத்து - பகைவருடைய வடக்கின்கணுள்ளதாகிய இமயமலையிலே, வாங்கு வில் பொறித்த - வளையும்வில்லை அடையாளமாக நாட்டிய, (49) எழு உறழ் திணி தோள் - இரும்புத்தூணோடு மாறுபடுகின்ற திணிந்த தோளையுடைய, இயல் தேர் குட்டுவன் - நடக்கின்ற தேரையுடைய குட்ட நாட்டையுடையோனின், (50) வரு புனல் - பெருகுகின்ற நீரையும், வாயில் - கோபுரவாயிலையுமுடைய, வஞ்சியும்—, வறிது - (பரிசில் தருவதிற்) சிறுமை யுடையதாயிருக்கும்; (எ - று.)*

விசேடவுரை :—(41 - 46) *'கொழுமீன்...கொள்ளும்' என்ற தொடர், குடபுலத்துக்கு அடைமொழி. வஞ்சியென்பது - சேரரின் தலைநகரம்: திவாகரம் முதலிய நிகண்டுகளில் வஞ்சியென்பது கருவூரெனக் கூறப்பட்டுள்ளது. எருமை, மீன்கள் துண்டுபடும்படி*

நடந்து நீர்நிலையிற் படர்ந்துள்ள கழுநீரை மேய்ந்திட்டு, மிளகுகொடி படர்ந்த பலாமரத்தின் நிழலிலே அருகிலிருக்கும் மஞ்சளினிலை முதுகைத் தடவாநிற்க, கழுநீர்ப்பூவைத் தின்றமையால் தேன் மணம் நாற அசையிட்டவண்ணம் காற்றின் வயத்தாலடித்துக்கொண்டு வரப்பெற்றுப் படுக்கைபோலமைந்த காட்டுமல்லிகைகளிற் படுத்துக்கொள்ளுதற்கு இடனான குடபுலமென்க. (குடபுலம் சேரர்க்கும், தென்புலம் பாண்டியர்க்கும், குணபுலம் சோழர்க்கும் உரியன.) பெயரா - செய்யா என்னும் வாய்ப்பாட்டு உடன்பாட்டெச்சம்: அசையிட்டு என்று பொருள். 47 - 48 குட்டநாட்டையுடையரான சேரரிற்சிலர் வடதிசைமேற் படையெடுத்துச் சென்று அத்திசை வேந்தரை வென்று தாம் அங்ஙனம் அவர்களைவென்றமைக்கு அடையாளமாகத் தமது விற்கொடியை இமயத்தின்மீது பொறித்தனரென்க. பொறித்தல் - அடையாளமாக வைத்தல்.

இனி, (50 - 67) பாண்டியன் தலைநகராகிய மதுரையிற் செல்வதிற் பயனில்லை என்கிறான்:—

அதாஅன்று
நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்து
அறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பின்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
உளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
தென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே.

பதவுரை :—*(50) அது அன்று - அந்தவஞ்சியென்னும் ஊரேயல்லாமல், (51) நறவு வாய் உறைக்கும்-தேனை (மலர்கள்) தம்மிடத்தினின்று துளிக்கப்பெற்ற, நாகு முதிர் நுணவத்து - இளமை முதிர்ந்திட்ட நுணமரத்தினது, (52) அறை வாய்-வெட்டின வாயையுடைய, குறு துணி - குறிய மரக்கட்டையை, அயில் உளி பொருத - கூர்மையையுடைய உளிகள் கடைந்து உண்டாக்கிய, (53) கைபுனை - (சாதிலிங்கம் வழித்து) அழகாக்கின, செப்பம் - செப்பு என்னும் அணி, கடைந்த - அசைந்து கொண்டுள்ள, மார்பின் - மார்பினையுடைய*

வாய்,—(54) செய் பூ கண்ணி செவி முதல் திருத்தி - (சடையினாற்) செய்த பூவினாலியன்ற நெற்றிமாலையைக் காதுகளினடியிலே திருத்தமாக வைக்கப்பெற்று, (55) நோன் பகடு உமணர் ஒழுகையொடு வந்த - வலிய எருதையுடைய உப்புவாணிகரின் வண்டி யொழுங்கோடு கூடவந்த, (56) மகாஅர் அன்ன - (உமட்டியர் வளர்த்தலால் அவருடைய) பிள்ளைகளை யொத்த, மந்தி-குரங்குகள், (அவ்விடத்து), மடவோர் (57) நகாஅர் அன்ன நளி நீர் முத்தம் - மகளிரின் பற்களை யொத்த செறிந்த நீரையுடைய முத்துக்களை, (58) வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி - வாளின் வாய் போலும் வாயையுடைய கிளிஞ்சிலின் வயிற்றிடத்தே யிட்டு மூடி,—(59) தோள் புறம் மறைக்கும் - தோள்கள் (தாம் இறுகத் தழுவி ஊற்றின்பம் பெற்றறியாது என்று நேர்ந்த) பழிச்சொல்லைப் போக்கும், நல்கூர் நுசுப்பின்-நுண்ணியதான இடையைக் கொண்ட, (60) உளர் இயல் ஐம்பால் உமட்டியர் - அசைகின்ற தன்மையையுடைய கூந்தலையுடைய உப்பு வாணித்தியர், ஈன்ற - பெற்ற, (59) கிளர் பூண் புதல்வரொடு - விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்த பிள்ளைகளுடனே, கிலுகிலி ஆடும் - கிலுகிலுப்பை கொண்டு விளையாடுதற்கு இடனான, (62) தத்து நீர்வரைப்பின் - (அலை) முறிகின்ற நீரை(த் தனக்கு) எல்லையாக வுடைய, கொற்கை - கொற்கை யென்னும் ஊர்க்கு, கோமான் - அரசனும், (63) தென் புலம் காவலர் மருமான் - தெற்குத் திசையிலுள்ளதான நிலத்தைக் காத்தல் தொழிலை யுடையாரின் குடியிலுள்ளோனும், ஒன்னார் (64) மண் மாறு கொண்ட - பகைவர் நிலத்தை மாறுபாட்டாலே கைக்கொண்ட, மாலை வெண் குடை - முத்த மாலையையுடைய வெண்கொற்றக் குடையையும், (65) கண் ஆர் கண்ணி - கண்ணிற்கு நிறைந்து தோன்றுகின்ற கண்ணியினையும், கடு தேர்-விரைந்து செல்லுந் தேரினையுமுடைய, செழியன்-பாண்டியனுடைய, (66) தமிழ் நிலைபெற்ற - தமிழ்மொழி நிலையாகவீற்றிருக்கின்ற, தாங்கு அரு மரபின் (67) மகிழ் நனை - தாங்குதற்கு முடியாத [மிக்க] நிலைமையினையுடைய மகிழ்ச்சி தோன்றப்பெற்ற, மறுகின் - தெருவினையுடைய, மதுரையும்—, வறிது - (கொடுக்கும் பரிசிலில்) அளவு பட்டதாக விருக்கும்; (எ - று.)

விசேடவுரை :—கோமான் (62) மருமான் (63) செழியன் (65) மதுரையும் வறிது (67) என முடிபு காண்க. மதுரை - பாண்டியரின் இராசதானி. (64) மாலை வெண்குடையையும் (65) கண்ணார் கண்ணியையும் கடுந்தேரையுமுடைய (63) ஒன்னார் (64) மண்மாறுகொண்ட (65) செழியன் என்க. தமிழ் நிலைபெற்றதனால் மதுரையில் தாங்கரு மரபின் மகிழ்ச்சி தோன்றுவதாயிற்று. (51 - 62) உமட்டியரால் தமது மக்கள் போல வளர்க்கப்பட்டு உமணரின் வண்டிவரிசைகளோடு வந்த மந்திகள் கிளிஞ்சிலின் வயிற்றிடத்து முத்துக்களை யிட்டு மூடி அங்ஙனம் மூடியவற்றைக் கிலுகிலிப்பையாகக் கொண்டு உமட்டியருடைய சிறுவருடனே விளையாடுதற்கு இடனாகித் தத்துநீரை வரப்பாகக் கொண்டுள்ளது கொற்கை யென்கிறார். பாண்டிய நாட்டிலுள்ள கொற்கை, ஓர் கடற்கரைப் பட்டினம்.

(53 - 58) மடவாரால் தமது மக்களைப்போல வளர்க்கப்பட்ட மந்திகள் நுணா மரத்திலிருந்து வெட்டியெடுத்த கட்டைகளின் சிறு துண்டைக் கடைந்து சாதிலிங்கந் தோய்த்துச் செய்த செப்பு என்னும் அணிகலன் மார்பில் தொங்கவிடப்பெற்று, சடையினாலியன்ற நெற்றிமாலையைச் செவி யடியிலே திருத்தமாகக் கட்டப்பெற்று உப்புவாணிகருடைய வண்டிகளின் வரிசையோடு வந்தன வென்க. செப்பு என்பது பவழத்தாவடம்போலக் காணப்படும் ஒருவகை யாபரண மென்று தோன்றுகின்றது. குரங்குகளை வளர்ப்போர் இக்காலத்திலும் அதற்குச் சிலவகை அணிகலனைப் பூட்டுதல் இங்குக் கருதத்தக்கது. இனி, செப்பம் என்பதற்கு செந்நிறமெனக் கொண்டு, நுணாக்கட்டையைக் கடைந்து அலங்கரித்தாற் போன்ற செந்நிறமார்பினையும் கண்ணியையுமுடைய மந்தியென ஒருவகைக் குரங்குச்சாதி விசேடத்தைக் கூறியதெனக் கொள்வாருமுளர்.

அன்று-அன்றி என்பதன் திரிபு. அது+அன்று=அதான்று. "அதுமுன்வருமன்றான்றாந் தூக்கின்" என்பது விதி: அத்தொடர் அளபெடுத்ததென்க. நகார் - சிரிப்பு: பல்லுக்கு ஆகுபெயர். தொண்டைநாட்டவராகிய ஆசிரியர் 'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்...மதுரை' என்று கூறியமை, பாராட்டுதற்கு உரியது. நல்கூர்ந்த-வறுமையான: இலக்கணையால், நுண்ணிய என்ற பொருளை யுணர்த்திற்று. தோள் இறுகத் தழுவி ஊற்றின்பத்தை நுண்ணிய இடுப்புக்குந் தருமென்பது, 'தோள்புறமறைக்கும் நுசுப்பு' என்பதன் பொருள். ஐம்பால் - கொண்டை குழல் பனிச்சை அளகம் துஞ்சை என ஐந்து வகையாக முடிக்கப்படும் மகளிர் கூந்தல்: பண்புத்தொகையன்மொழி. குழலையும் அளகத்தையும் வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும், பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும் முடித்தல் என்ப.

இனி, (67 - 83 - வரை) சோழனதுஉறையூரும் வறிதாயிருக்கு மென்கிறார்:—

அதாஅன்று
நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
ஓவத் தன்ன வுண்டுறை மருங்கின்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
ஆசி லங்கை யரக்குத் தோய்ந்தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
ஏம வின்றுணை தழீஇ யிறகுளர்ந்து
காமரு தும்பி காமரஞ் செப்புந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னார்
ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும்

தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை **நற்றேர்ச் செம்பியன்**
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே.

பதவுரை :—(67) அதுஅன்று - அந்த மதுரை யென்னும் ஊரே யன்றி,—(68) நறு நீர் பொய்கை-நறுமணமுள்ள நீரையுடைய பொய்கையின், அடைகரை - நீரடைந்த கரையிலே, நிவந்த-ஓங்கிவளர்ந்த, (69) துறு நீர் கடம்பின் - நெருங்கிய தன்மையையுடைய கடம்பமரத்தின், துணை ஆர் கோதை - இணைதல் நிறைந்த மாலைபோலப்பூத்த மலர்கள், (72) கோவத்து அன்ன கொங்கு- இந்திரகோபத்தையொத்த தாதுகளை, சேர்பு உறைத்தலின் - (தன்னிடத்து) ஒரு சேர உதிர்த்தலால், (70) ஓவத்து அன்ன - சித்திரத்தையொத்துத் தோன்றுகின்ற, உண் துறை மருங்கின் - உண்ணுந்துறையிடத்தே நின்ற, (72) வரு முலை அன்ன வள் முகை உடைந்து - எழுகின்ற முலையையொத்த வளப்பமுள்ள மொட்டு நெகிழ்ந்து, (73) திருமுகம் அவிழ்ந்த தெய்வம் தாமரை - அழகினையுடைய முகம்போல மலர்ந்த தெய்வத் தன்மையையுடைய தாமரை மலரினிடத்தில், (74) ஆசு இல் அகம் கை அரக்கு தோய்ந்து அன்ன - குற்றமில்லாத அகங்கையைச் சாதிலிங்கந் தோய்ந்தாலொத்த, (75) சேய் இதழ் பொதிந்த - செந்நிறவிதழ் சூழ்ந்த, செம்பொன் கொட்டை - செம்பொன்னாற் செய்தாலொத்த கொட்டையாகிய பீடத்திலே, (76) ஏமம் இன் துணை தழீஇ - (தன்னுயிர்க்குக்) காவலாகிய இனிய பெடையைத் தழுவிக்கொண்டு, (77) காமர் தும்பி - விருப்பம் மருவின ஆண் வண்டுகள், (76) இறகு உளர்ந்து- (தமது) சிறகுகளை அசைத்துக்கொண்டு, (77) காமரம் செப்பும் - சீகாமரமென்னும் பண்ணைப் பாடுதற்கு இடமான, (78) தண் பணை - குளிர்ந்த வயல்களையுடைய மருதநிலம், தழீஇய - தழுவிய, தளரா இருக்கை - அசையாத குடியிருப்பினையுடைய, (79) குண(க்கு)புலம்- கிழக்கிடத்திலுள்ள நிலத்தை, காவலர் - காத்தற்றொழிலையுடையவரின், மருமான் - குடியிலுள்ளோனும், - (80) ஓங்கு எயில் கதவம் உருமு சுவல் சொறியும் - ஓங்கியமதிலின் கதவில் உருமேறு (தன்) கழுத்தை(த் தினவால்) தேய்க்கின்ற, (79) ஒன்னார் (81) தூங்கு எயில் - பகைவரின் (வானத்துச்) சஞ்சரிக்கின்ற எயிலை, எறிந்த - அழித்த, தொடி விளங்கு தட கை-தோடா என்னும் அணி விளங்குகின்ற பெருமையையுடைய கைகளையும், (82) நாடா நல் இசை - (ஐயுற்று) ஆராயப்படாத (உலகறிந்த) சிறந்த புகழையும், நல் தேர் - நல்ல தேரினையுமுடைய, செம்பியன் - சோழனது, (83) ஓடா பூட்கை- (தன்னிடத்திருந்தோர்) ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோளினையுடைய, உறந்தைஉம் - உறையூரும், வறிது-(தான் தரும்) பரிசிலில் சிறிதாயிருக்கும்; (எ - று.)

விசேடவுரை:—பொய்கையிற்பூத்த தாமரைமலரின் பொகுட்டில் தன்பெடையைத் தழுவிக்கொண்டு தும்பி காமரஞ் செப்பும் தண் பணை தழீஇயஇருக்கையினது குணபுலம் என, (68) 'நறுநீர்ப் 'பொய்கை' என்பது முதல் (78) தண்பணை தழீஇய தளராவிருக்கை'

என்பது வரையில் குணபுலத்தின் சிறப்புக் கூறப்படுகின்றது. தண் பணை - குளிர்ந்த வயலையுடையது என மருதத்திற்குப் பண்புத் தொகையன்மொழி. (68-70) கரையிலோங்கிய கடம்பினுடைய மலரின் செந்நிறத்தாதுகள் சேரப்பெற்ற உண்டுறை, சித்திரத்தை யொத் திருக்குமென்க. (73) திருமகளுக்கு உறைவிடமாவதால், 'தெய்வத் தாமரை' என்றது. (80) 'ஓங்கெயிற்கதவம் உருமுச்சுவல்சொறியும்' என்று ஒன்னார் எயிலின்கதவம் வானத்து ஓங்கிய தன்மையை விளக் கினார். இனி, 'சொரி' என இடையினரகரமாய் வருதலை, சிலப்பதி காரத்து நாடுகாண்காதையில் 'சொரிபுற முரிஞ்சப் புரிஞெகிழ் புற்ற' (வரி: 122) என்றவிடத்துக் காண்க. (83) உறந்தை - உறையூரென் பதன் மரூஉ. உறந்தைக்கு 'ஓடாப் பூட்கை' என அடைமொழி கொடுத்தது - அவ்வூர்க்கோழி வெளிநாட்டு யானையை வெல்லும் வலிபடைத்தமையாலாகும்: இதனை "முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்" என வரும் நாடுகாண்காதை யடிகளாலும் உணர்க.

முன்னொரு காலத்தில் திரிபுரத்து அசுரர்போலச் சில அசுரர்கள் ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்குந்தன்மையுள்ள தெய்வத்தன்மை யுடைய மூன்றுமதிள்களை வரத்தாற்பெற்று அவற்றினுள் தாம் சிறிதும் அச்சமின்றிச் சிறந்த பாதுகாப்போடு இருந்துகொண்டு அந்நகரங்களுடனே தாம் நினைத்த இடங்களிற் பறந்துசென்று பல இடங்களையும் பாழாக்கி நிலவுலகத்தை வருத்தித் தேவர்களையும் அச்சுறுத்தி வருகையில், அகத்தியமுனிவனுடைய சொல்லினாற் சிவபிரான்போல ஒரு சோழராசன் கோபங்கொண்டு சென்று பொருது அம்மதில்களை யழித்தனனென்பது, தூங்கெயி லெறிந்த தொடிக்கைச் செம்பியன் என்பதிலுள்ள வரலாறு.

இனி, (83 - 143 - வரை) நல்லியக்கோடனென்பானிடத்து இரவலனை ஆற்றுப்படுத்த எண்ணுகின்றவன், அந்த நல்லியக் கோடன் எழுவள்ளல்களின் ஈகைக்குணத்தையும் கொண்டுள்ளோ னென்று கூறி அவனைத் தான் சென்று கிட்டிப் பரிசில் பெற்று வருவதனைக் கூறுகின்றான்:

83 - 87:—அந்த எழுவள்ளல்களில் பேகன்.

அதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திறல் அணங்கி னாவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்

பதவுரை :—(83) அது அன்று - அவ்வூரேயல்லாமல்,—(84) வானம் வாய்த்த - மழை பொய்யாமற் பெய்கையினாலே யுண்டான, வளம் - செல்வத்தையுடைய, மலை கவாஅன் - மலைப்பக்கத்திலே, (85) கானம் - காட்டிடத்தே திரிகின்ற, மஞ்ஞைக்கு - மயிலுக்கு, கலிங்கம் நல்கிய - போர்வையைக் கொடுத்த, (86) அருந் திறல்

அணங்கின் - (பெறுதற்கு) அரிய வலிமையையுடைய வடிவினை யுடைய, ஆவியர் பெரு மகன் - ஆவியர் குலத்துத் தோன்றிய பெருமைபெற்ற மகனாகிய, (87) பெரு கல் நாடன் பேகன்உம்-பெரிய மலைநாட்டையுடையனாகிய பேகனென்னும் வள்ளலும்,—(எ - று.)

விசேடவுரை :—ஆவியர் குலத்திற் பிறந்தவனும் மலைநாட்டை யுடையவனும் நல்லூர்க்கு உரியவனுமான பேகனென்னும் வள்ளல் காட்டினிடத்திலே மயிற்பறவையொன்று கூவியதாக,அது குளிர்க்கு வருந்திக் கூவியதென்று இரக்கங்கொண்டு அதற்குப் போர்வை கொடுத்தானென்று அவன் வள்ளன்மையைப் பாராட்டிக்கூறியன இவ்வடிகள் : இதனை "உடாஅபோரா வாகுதலறிந்தும், படாஅ மஞ்ஞைக்குஈத்த எம்கோ,...கலிமான்பேகன்" என்று வரும் புறநானூற்றினாலும் அறியலாம்: இங்ஙனம் இன்னதற்கு இன்னது கொடுப்பதென்று வரையறைகொள்ளாது கொடுப்பது, கொடைமட மெனப்படும்.

87 - 91:—பாரி.

சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்

பதவுரை :—(87) சுரும்புஉண - வண்டு உண்ணும்படி, (88) நறு வீ - நறிய பூ, உறைக்கும் - (தேனைத்) துளிக்கின்ற, நாகம் - சுரபுன்னையையுடைய, நெடு வழி-நெடிய வழியில் நின்ற, (89) சிறு வீ முல்லைக்கு - சிறிய மலர்களையுடைய முல்லைக்கொடிக்கு, பெரு தேர் நல்கிய - பெரிய தேரைக் கொடுத்த, (90) பிறங்கு வெள் அருவி வீழும் சாரல் (91) பறம்பின் கோமான் - விளங்குகின்ற வெள்ளிய அருவி குதிக்கின்ற பக்கத்தினையுடைய பறம்புமலைக்குத் தலைவ னாகிய, பாரிஉம் - பாரியென்ற வள்ளலும், (எ - று.)

விசேடவுரை :—பாரியென்பவன் உழுவித்துண்ணும் வேளிரைச் சேர்ந்தவன்: முந்நூறு ஊர்களையுடைய பறம்புநாட்டிற்கும் பறம்பு மலைக்குந் தலைவன். முந்நூறுஊர்களையும் இரவலர்க்குத்தந்த இவன் ஒருகால் காட்டின்வழிச் செல்லுகையில் முல்லைக்கொடி கொழுகொம் பின்றி இருப்பது கண்டு ஓரறிவுயிராகிய அதன்மீதுங் கருணை கொண்டு அம்முல்லைக்கொடி இனிதுபடருமாறு அதனருகே தன் தேரை நிறுத்திவிட்டுக் கால்கள் சிவப்பூர நடக்கலானானென்பர். இவன் முல்லைக்குத் தேர்கொடுத்த செய்தி, "பூத்தலையறாஅப் புன் கொடிமுல்லை, நாத்தழும்பிருப்பப் பாடாதாயினும், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த, பரந்தோங்கு சிறப்பிற் பாரி" என்று புறநானூற்றிலும் கூறப்பட்டுள்ளது. பாரி பெருவள்ளலா தல் "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பா ரிலை" என்ற தேவாரத்தாலும் பெறப்படும்.

91 - 95:—காரி.

கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த
அழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேல்
கழறொடித் தடக்கைக் காரியும்

பதவுரை :—(91) கறங்கும் மணி - ஒலிக்கும் மணியினையும், (92) வால் உளை புரவியொடு - வெள்ளிய பிடரிமயிரினையுமுடைய குதிரையோடே, வையகம் - (தனது) நாட்டையும், மருள - (மற்றையோர் கேட்டு) வியக்கும்படி, (93) ஈரம் நல் மொழி - அருளினையுடைய நல் வார்த்தையுடனே, இரவலர்க்கு ஈந்த - யாசகர்கட்குக் கொடுத்தவனை, (94) அழல் திகழ்ந்து இமைக்கும் - சினத்தீ விளங்கித் தோன்றுவதும், அஞ்சுவரு நெடு வேல் - அச்சந்தோன்றுவதுமான நெடிய வேலினையும், (95) கழல் தொடி தட கை - உழலுகின்ற தொடியையணிந்த பெருமையையுடைய கையினையுமுடைய, காரிஉம் - காரியென்ற வள்ளலும்,—(எ - று.)

விசேடவுரை :—பெண்ணையாற்றங்கரையிலுள்ள மலாடென்று வழங்கும் மலையமானாட்டின் அரசனும் முள்ளூர்மலையையுடையவனும் கோவலூரை இராசதானியாகக் கொண்டவனுமான காரியென்பவன் தன்னூர்களை இன்மொழியோடு இரவலர்க்கு ஈந்தனனென்க. இவனுடைய கொடைச் சிறப்பு "அரிவை தோளளவல்லதை நினதென விலை," "ஈத்தவிழையணிநெடுந்தேர், பயன்கெழுமுள்ளூர்மீமிசைப், பட்டமாரியுறையினும்பலவே" என்பன முதலியவற்றாலறிக. இவன் மலையமான் திருமுடிக்காரி எனவும், மலையமானெனவும், காரி எனவும் வழங்கப்படுவான்.

95 - 99:—ஆய்.

நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி யாயும்

பதவுரை :—(95) நிழல் திகழ் - ஒளிவிளங்குவதும், (96) நீலம் - நீல நிறத்தையுடையதும், நாகம் நல்கிய - பாம்பு ஈன்று கொடுத்ததுமான, கலிங்கம் - உடையை, (97) ஆல் அமர் செல்வற்கு - ஆலின் கீழிருந்த இறைவனுக்கு, அமர்ந்தனன் கொடுத்த - நெஞ்சுபொருந்திக்கொடுத்த, (98) சாவம் தாங்கிய சாந்து புலர் திணி தோள் - வில்லைத்தாங்கியதாகிச் சந்தனம்பூசப் பெற்றுப் புலர்ந்த திண்ணிய தோளினையும், (99) ஆர்வம் நல் மொழி - கேட்டோர்க்கு, விருப்பத்தைச் செய்யும் நன்றாகிய சொல்லினையுமுடைய, ஆய்உம்-ஆயென்னும் வள்ளலும்,—(எ - று.)

விசேடவுரை :—ஆய்என்பவன், இருவகை வேளாளரில் உழுவித்துண்போர் வகையினன்; அரசராற்கொடுக்கப்படும் வேளென்னும் உரிமை யடைந்தோன்; சிறந்தவீரன்; பொதியின்மலைத்தலைவன்; அதனருகேயுள்ள ஆய்குடியென்பது இவனுடைய ஊர்; ஆய் அண்டிரனென்றும், அண்டிரனென்றும் இவன்பெயர் வழங்கும்; பாணர்க்கும் இரவலர்க்கும் யானைகளையும் பிறவற்றையும் மிகுதியாகக் கொடுத்தோன் ; கொங்குநாட்டாரோடு போர்செய்து அவர்களைப் புறங்காட்டியோடச் செய்தோன்; யாதொரு பயனையுங் கருதாது இரவலர்க்குக்கொடுத்து மகிழ்வித்தலையே கடனாகவுடையோன்; பாம்பு பெற்றுக்கொடுத்த நீலவுடையினை ஆலின்கீழெழுந்தருளிய தலைவற்கு[பரமசிவனுக்கு]க்கொடுத்தவன். (சிவபெருமான்கல்லாலின் கீழ் வீற்றிருந்து, சனகாதியர்க்கு நன்னெறியைப் போதிக்கின்றனென்று நூல்கள் கூறும்.) இந்த ஆயினுடைய நற்குணநற்செய்கைகளைக் கண்டு மனமுருகிப் புலவர்கள் இவனைப் பாடியனவாகப் புறநானூற்றில் 15-பாடல்கள் உள்ளன. சாவம் - சாபமென்ற வடசொல்லின் சிதைவு.

99 - 103:—அதிகன்.

மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஒளவைக் கீந்த
உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்
அரவக் கடற்றானை யதிகனும்

பதவுரை :—(99) மால் வரை - பெருமையையுடைய மலையின், (100) கமழ் பூ சாரல் - மணம்வீசும் மலர்களையுடைய சாரலிலேநின்ற, கவினிய - அழகு பெற்ற, நெல்லி - நெல்லியினது, (101) அமிழ்து விளை தீம் கனி - அமிழ்தத்தின் தன்மை (தன்னிடத்தே) யுண்டான இனிய பழத்தை, (தான் நுகர்ந்து நெடுநாள் உயிர்வாழ்ந்திருக்கப் பெறாமல்), ஒளவைக்கு ஈந்த - ஒளவைக்குக் கொடுத்தவனை, '(102) உரவு சினம் கனலும் ஒளி திகழ் நெடு வேல் - வலியினையுடைய கோபம் நின்றெரிகின்றதும் ஒளிவிளங்குகின்றதுமான நெடியவேற்படையினையும், (103) அரவம் கடல் தானை - ஆரவாரத்தையுடைய கடல்போலுந் தானையையுமுடைய, அதிகன்உம் - அதிகனென்னும் வள்ளலும்,—(எ - று.)

விசேடவுரை :—சேரமானுக்கு உறவினனும் குதிரைமலைக்கும் தகடூர்க்கும் உரியவனுமான இந்த அதிகமான்நெடுமானஞ்சியென்பவன் உண்டாரை நெடுங்காலம் பிழைத்திருக்கச்செய்வதாகிய நெல்லிக்கனியை அரிதிற்பெற்றும் அதனை ஒளவைக்கு ஈந்தானென்பதை, புறநானூற்றில் வரும் ஒளவைபாடலாலும் அறிக. இந்த அதிகன், வேலையும் கடல்தானையையு முடையவனென்க. உரவுச்சினம் என்பதற்கு - தன்னிடத்துறையுங் கொற்றவையது வலியினையுடைய சினம் என்று விசேடப்பொருளுரைப்பர். கொற்றவை படைக்கலத்துஉறைவாளென்பது, நூற்கொள்கை : இந்தக்கொற்

றவை, வெற்றிக்குஉரிய பெண்தேவதை. கவினிய - 'கவின்' என்ற உரிச்சொல்லினடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம்.

103 - 107—நள்ளி.

கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்
முட் டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும்

பதவுரை :—(*103*) கரவாது - (தன்மனத்துநிகழ்வனவற்றை) மறையாது சொல்லி, (*104*) நட்டோர் உவப்ப - நட்புச்செய்தோர் மனம்மகிழும்படி, நடை பரிகாரம் (*105*) முட்டாது கொடுத்த - (அவர்களின் இல்லறம்) நடப்பதற்குவேண்டிய பொருள்களைத் தட்டுப்படாது (நாடோறும்) கொடுத்து வந்த, முனை விளங்கு - பகைப்புலத்தே (கொலைத்தொழிலால்) விளங்குகின்ற, தட கை - பெருமையையுடைய கையையும், (*106*) துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடு கோடு (*107*) நளி மலை நாடன் - துளியையுடைய மழை (பருவந்தவறாது) பெய்கின்றதும் (உயர்ச்சியாற்) காற்றுத் தங்கும் நெடிய சிகரங்களையுடையதுமான செறிந்த மலைநாட்டையு முடையனாகிய, நள்ளிஉம் - நள்ளியென்னும் வள்ளலும்,—(எ - று.)

விசேடவுரை :—நள்ளியென்பவன் தோட்டியென்னும் மலைக்கும் அதனைச்சார்ந்த நாட்டிற்கும் தலைவன்: இவன் கண்டீரக்கோப் பெருநள்ளி யெனவும் கண்டிற்கோப்பெருநள்ளியெனவும் வழங்கப்படுவான். இவன் சிறப்பை, 'காட்டில் வேட்டத்துக்குச் சென்று வேட்டுவக்கோலத்தைக் கொண்ட இவன், வேற்று நாட்டிற்கு நடந்துசென்ற எனது வருத்தத்தையும் உலைவையும்நோக்கிக் கைகவித்துஇருத்தி உண்ணத்தந்து, பின்னும் போகத்தொடங்குகையில் காட்டு நாட்டேமான எம்மிடத்துவேறுபொருளில்லையென்று வருந்தித் தன் மார்பிலணிந்த ஆரத்தையும் கையிலணிந்த கடகத்தையும் தன்னையின்னனென்று தெரிவிக்காமலே ஈந்தான்' என்று வன்பரணர் பாடியுள்ளார்.

107 - 111:—ஓரி

நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை யோரியும்

பதவுரை :—(*107*) நளி சினை - செறிந்த கொம்புகளிடத்தே, (*108*) நறும் போது கஞலிய - நறியமலர்கள் நெருங்கின, நாகு முதிர் - இளமை முதிர்ந்த, நாகத்து-சுரபுன்னையையும், (*109*) குறு பொறை-குறிய மலைகளையுமுடைய, நல்நாடு-நன்றாகிய நாடுகளை, கோடியர்க்கு-

கூத்தாடுவோர்க்கு, ஈந்த - கொடுத்த, (110) காரி குதிரை காரியொடு மலைந்த - காரியென்னுங் குதிரையையுடைய காரியென்னும் பெயரை யுடையவனுடனே போர்செய்த, (111) ஓரி குதிரை ஓரிஉம் - ஓரி யென்னும் பெயரை யுடைத்தாகிய குதிரையையுடைய ஓரி யென்னும் வள்ளலும்,—(எ - று.)

விசேடவுரை :—ஓரியென்னும் வள்ளல், கொல்லிமலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன் : இவன் ஆதனோரிஎனவும் வல்விலோரி யெனவும் கூறப்படுவன். இவன்கொடைச்சிறப்பை, இவன் வேட்டுவக்கோலத்துடன் காட்டில் வேட்டையாடுகையிற் பாணன் தன் கூட்டத்துடனே பாடிப்போகத்தொடங்க அதற்கு இடந்தராது உணவுதந்து பொன் முதலியனவுந் தந்தானென்று புறநானூற்று வருவதனாலும் அறியலாம். (காரி இந்த ஓரியுடன் பொருது இவனைக் கொன்றானென்று ஒரு செய்தி, "முள்ளூர்மன் னன்கழறொடிக்காரி, செல்லாநல்லிசை நிறுத்த வல்வில், ஓரிக் கொன்று" என வரும் அகநானூற்றடிகளாற் பெறப்படும்.) காரி யென்றசொல்லும் ஓரிஎன்றசொல்லும்-வள்ளலுக்கும் அன்னாருடைய குதிரைகட்கும் பெயரென்ப: இனி, காரி - கரியகுதிரையென்றும், ஓரி - பிடரி மயிரென்றும் பொருள் கூறுவாருமுளர்.

வள்ளல் எழுவரைக் கூறியபின், அவ்வெழுவர்களுடைய கொடைத் தொழிலை மேற்கொண்டுள்ளான் ஓவியர்குலத்துத் தோன்றிய நல்லியக்கோடன் என்று 111 - முதல் 126 - வரை அடிகளாற் கூறுவன்:—

எனவாங்கு
எழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய வுரனுடை நோன்றாள்
நறுவீ நாகமு மகிலு மாரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுன றரூஉம் போக்கரு மரபின்
தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத் தழும்பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை

பதவுரை :—(111) என - என்று (கொடைக்குச் சிறப்பித்துக்) கூறுமாறு, ஆங்கு - அக்காலத்தில் [முற்காலத்தில்] (112) எழு சமம்

கடந்த - (தம்மேல்) வருகின்ற போர்களை வென்று, எழு உறழ் திணி தோள் - கணையத்தோடு மாறுபடுகின்ற திண்ணிய தோளையுடைய, (113) எழுவர் - எழுவரும், பூண்ட - மேற்கொண்ட, ஈகை-கொடையாகிய, செம் நுகம் - செவ்விய பாரத்தை, (114) விரி கடல் வேலி வியல்அகம் விளங்க (115) ஒரு தான் தாங்கிய - பரந்த கடலாகிய வேலியையுடைய விசாலமாகிய இடம் [உலகமெல்லாம்] விளங்கும்படி ஒருவனாகியதானே தாங்கின, உரன்உடை நோன் தாள் - அறிவையுடைய வலியமுயற்சியையும்,—(116) நறு வீ நாகம்உம் அகில்உம் ஆரம்உம் - நறும்மணமுள்ள மலர்களையுடைய சுரபுன்னைக்கட்டையும் அகிற்கட்டையும் சந்தனக்கட்டையும்,—(117) துறை ஆடும் மகளிர்க்கு தோள் புணை ஆகிய - குளிக்குந் துறையிலே ஆடுகிற மகளிருடைய தோளுக்குத் தெப்பமாகிய, (118) பொருபுனல் - (கரையைக்) குத்தும் நீரை, தரூஉம்-தருகின்ற [பெற்றுள்ள]தும், போக்கு அரு மரபின் - (பகைவர் எவராலும்) அழித்தற்குஅரிய முறைமையையுடையதும், (119) கருவொடு - கருப்பதித்தபோதே [நகரத்தை அமைக்கத் தொடங்கியபோதே], தொல் மா இலங்கை பெயரிய - பழமையாகிய பெருமையினையுடைய இலங்கையென்னும் பேரைப் பெற்றதுமான, (120) நல் மா இலங்கை - நன்றாகிய பெருமையையுடைய இலங்கைக்குரிய, மன்னருள்ளும் - அரசர்கட்குள், (121) மறு இன்றி விளங்கிய - குற்றமின்றி விளங்கியவனான, வடுவில்-[பகைவருடைய முகம்மார்புமுதலிய இடங்களில்] வடுச்செய்தலில், வாய் - வாய்த்த, வாள் - வாளையும், (122) உறு புலி துப்பின் - மிக்கபுலி போலும் வலியினையுமுடைய, ஓவியர் பெருமகன் - ஓவியர்குடியிலுள்ளவனும், (123) களிறு தழும்பு-யானையைத்தூண்டிச்செலுத்துதலாலுளதான தழும்பு, இருந்த - கிடந்த, கழல் தயங்கு - வீரக்கழல் கிடந்தசைகின்ற, திருந்து அடி-நேரான [பிறக்கிடாத] அடியினையும், (124) பிடி கணம் சிதறும் பெயல் மழை தட கை - பிடித்திரளை(ப் பலர்க்கும்) கொடுக்கின்ற பெய்தல்தொழிலையுடைய மழைபோன்ற பெரியகையினையுமுடைய, (125) பல் இயம் கோடியர் புரவலன் - பல வாச்சியங்களையுடைய கூத்தரைப் புரத்தலில் வல்லவனுமான, பெரு இசை (126) நல்லியக்கோடனை - பெரியபுகழையுடைய நல்லியக் கோடனை,—(எ - று.)

விசேடவுரை :—ஓவியர்பெருமகன் (122) எழுவள்ளல்கள்பூண்ட ஈகைப்பாரத்தைத் (113) தான் தனித்துத்தாங்கிய நோன்றாளையும் (115) வாளையும் (121), புலித்துப்பினையும் (122) உடையான்: (128) இலங்கைமன்னருள்ளும் மறுவின்றி விளங்கியவன் என்றவாறு.(121) விளங்கிய (122) பெருமகன் என்க.(116) 'நறுவீநாகமும்' என்பதுமுதல் (120) 'நன்மாவிலங்கை' என்பது வரையில் ஓவியரின் இலங்கைச் சிறப்பைத் தெரிவிப்பது. மாவிலங்கை யென்பது, இராமநாதபுர ஸமஸ்தானத்தைச் சேர்ந்த ஊர்களுள் ஒன்றாகவுள்ள தென்பர். இலங்கை யென்று பெயரிடப்பெற்று இராவணனிலங்கையினும் வேறுபாடு விளங்கவும், பெருமைபெற்றதென்னவும் மாவிலங்கை

யென்று வழங்கலாயிற்றுப்போலும். கருவொடுபெயரிய - நகரத்தை யமைக்கக் கருவிட்டபோதே [அஸ்திவாரம்போட்டபோதே] பெயர் பெற்ற என்றபடி. இங்கு நல்லியக்கோடனைக் கூறுவதுபோலவே, குமணனைக் கூறுமிடத்தும் ஏழுவள்ளல்களுக்குப் பின் அவர்களின் கொடையைக் கொண்டுள்ளானென்று புறநானூற்றில் (செ: 158) கூறப்பட்டுள்ளது.) இவர்கள் எழுவரும் முதலெழுவள்ளல்கள் இடையெழுவள்ளல்கட்குக் காலத்தாற் பிற்பட்டவராகுதலால், கடையெழு வள்ளல்கள் எனப்படுவர்.

(122) பெருமகன் (125) புரவலன் (126) நல்லியக்கோடனை என்க. (124) பிடிக்கணம் சிதறும் கை, மழைக்கை என இயையும்.

இனி, (126 - 143) நல்லியக்கோடனையடைய, அவனால் தமது வறுமை தீர்ந்து பரிசில் பெற்று வருகின்றமை கூறுகிறான் :—

நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக

பதவுரை :—(126) நயந்த - (காண்டற்கு) விரும்பிய, கொள்கையொடு - எண்ணத்துடனே, (127) தாங்கு அரு மரபின் - (பிறரால்) பொறுத்தற்கு அரிய (குடிப்பிறந்தோரின்) முறைமைகளையுடைய, தன்உம் - அந்நல்லியக்கோடனையும், தந்தை (128) வான் பொரு நெடு வரை வளன்உம் - அவன் தந்தையின் வானுலகத்தைத் தீண்டும் நெடியமலையின் செல்வத்தையும், பாடி—, (129) முன் நாள் சென்றனம் ஆக - சில நாளைக்குமுன்னே (நாங்கள்) போனேமாக,—(எ-று.) —இந்த 'ஆக' என்ற வினையெச்சம், மேல் (140-இல்) வரும் 'வீட' (142) எய்தி எனத் தொடரும்.

இந்நாள்
திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்
தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருதும்

பதவுரை :—(129) இந்நாள் - இற்றைநாளில்,—(130) திறவா கண்ண - விழியாத கண்களையுடையனவாகிய, சாய் செவி குருளை - வளைந்தசெவியினையுடைய குட்டி, (131) கறவா பால் முலை கவர்தல் - (பிறரால்) கறக்கப்படாத பாலினையுடைய முலையை யுண்ணுதலை, நோனாது - (தன்பசி மிகுதியால்) பொறாமல், (132) புனிறு நாய் - ஈன் றணிமையையுடைய நாய், குரைக்கும்-குரைத்தற்கிடனான, புல்லென் அட்டில் - பொலிவழிந்த அடுப்பானது, (133) காழ் சோர் - கூரைக் கழிகள் (கட்டற்று) விழுகின்றதாகிய, முது சுவர் - பழமையானசுவ ரிலே, கணம் சிதல் அரித்த - கூட்டமாகத் திரண்டெழுந்த கறை யான் அரித்ததான, (134) பூழி - (நனைந்த) புழுதியிலே, பூத்த - தோன்றிய, புழல் - உட்பொய்யாகிய, காளாம்பி - காளானுடனே (இருக்க),—(135) ஒல்கு பசி உழந்த - தளர்தற்குக்காரணமாகிய பசி யாலே வருந்திய, ஒடுங்கு நுண் மருங்குல் - ஒடுங்குகின்ற நுண்ணிய இடையினையும், (136) வளை கை - வளையலையணிந்த கையினையு முடைய, கிணை மகள்-கிணைவனுடைய மனைவி, வள் உகிர் குறைத்த- கூரிய நகத்தாற் கிள்ளின, (137) குப்பை வேளை - குப்பையிலுள்ள வேளைக்கீரை, உப்பு இலி வெந்ததை-உப்பில்லாமல் (அவ்வடுப்பிலே) வெந்ததனை, (138) மடவோர் காட்சி நாணி கடை அடைத்து-(வறுமை யுறுதலும் இயல்பேயென்று அறியாமற் புறங்கூறுகின்ற) மடமைக் குணமுடையோர் காண்பதற்கு வெள்கித் தலைவாசலைமூடி, (139) இரும் பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும் - (வறுமையினாற்) கரிய பெரியசுற்றத்தோடேகூட இருந்து ஒருசேர உண்கின்ற, (140) அழி பசி - (அறிவுமுதலியன) அழிதற்குக் காரணமான பசியாலுள தாகிய, வருத்தம்—, வீட - ஒழியும்படி,—பொழி கவுள் - (மதம்) பொழிகின்ற கதுப்பினையும், (141) தறுகண் பூட்கை - கொடுமையை யுடைய வலியினையும், துயங்கு மணி மருங்கின் - அசைகின்ற மணி யைக் கொண்ட பக்கத்தினையும், (142) சிறுகண் - சிறுகண்ணையு முடைய, யானையொடு - யானையுடனே, பெருந் தேர் எய்தி - பெரிய தேரையும் பெற்று, (143) யாம்—, அவணின்றும் - அவ்விடத்தி னின்று, வருதும் - வாராநின்றேம்: (எ - று.)—(140) வீட (142) எய்தி (143) வருதும் என்க.

விசேடவுரை :—ஆற்றுப்படுத்தும் பாணன், நல்லியக்கோடனை யடைந்து பரிசில் பெறுதற்கு முன்னர்த் தாம்இருந்தவறுமைநிலையை (130) 'திறவாக்கண்ண' என்பதுமுதல் (140) 'அழிபசிவருத்தம்' என் பது வரையிலுமுள்ள பகுதிகளால் விளக்கமாகக் கூறுகிறான். (130-140) அடுப்பில் சமைத்தல் நிகழாமையால் அங்குக் குட்டியீன்ற தாய் நாய் தங்குமென்கிறான்: 'அடுப்பிற் பூனைக்குட்டி யுறங்குகின்றது' என இக்காலத்து வழங்குவது, இங்குக் கருதத்தக்கது. காசிக் கலம்பகத்தில் "ஆம்பிபூத்த, எலிதுயிலடுப்பில்" என்று வருவது ஒருசார் ஒப்புநோக்கத்தக்கது. தன்குட்டி யுண்பதற்கும் பால் கொடாது தாய்நாய் குரைப்பது பசி மிகுதியா லாகும். வீட்டி லிருப்பவர் சமைத்து உண்பரானால் நாய்க்கும் உணவு கிடைக்கும்: அஃது இல்லாமையால், நாய் உணவின்றிக் கிடக்கின்றதென்க.

'திறவாக்கண்ண' என்றமையால் கண்திறக்கும் காலமுமாகாத சிறு குட்டியென்பது பெறப்படும். (133-134) வீட்டுக்கூரை கட்டுஅற்றுக் கழி தொங்கும் பழஞ்சுவரிலுள்ள கறையான் அந்த அடுப்பை அரிக்க, புழுதியுள்ள அந்த அடுப்பிற் காளான் பூத்துள்ளது என்கிறார். (135 - 140) இப்படிப்பட்ட அடுப்பிலே கிணைமகள் பெரும்பசி வாட்டக் குப்பையில் முளைத்த வேளைக்கீரையைக் கொணர்ந்து உப்பில்லாமலே சமைத்து, தாம் இங்ஙனம் உண்பதைப் பிறர் கண்டால் பரிகசிப்பரே என்று கதவைமூடிக்கொண்டு அவ்வுணவைத் தன் பெருஞ்சுற்றத்துடனே உண்ணும்படி, அங்ஙனம் தங்கட்குப் பசி மிக்கிருந்த தென்று ஆற்றுப்படுத்துவோன், தமது வறுமையின் இயற்கைநிலைமையை எடுத்துக்கூறுகின்றான். கிணைமகள் - கிணைப் பறை கொட்டுவோனுடைய மனைவி; இது, ஆற்றுப்படுத்தும் பாணன் தன்மனைவியைக் கூறியது. 'உப்பிலிவெந்ததை' என்றது - உப்புவாங்குவதற்கும் முடியாத வறுமைநிலையைப் புலப்படுத்தும். வருதும் - தன்மைப்பன்மை, நிகழ்காலங் காட்டிற்று. 141 - 142 - அடிகள் ஆற்றுப்படுத்துவோன் தான் பரிசில்பெற்று வருகின்றதைக் கூறும்.

இனி, இங்ஙனம் தான் நல்லியக்கோடனால் வறுமையொழிந்து பெரும் பரிசில் பெற்றுவந்ததைக் கூறியவன், பரிசில் கொடுப்பாரைத் தேடித்திரியும் பாணனைநோக்கி, நீங்களும் அவனை நோக்கிச் செல்வீராயின் வழியிலுள்ளாரும் நுமக்கு உணவுமுதலியன கொடுத்து உதவுவார்: பிறகு அவன்ஊர் சமீபத்திலிருக்கும்: ஆதலால், ஆங்குச்சென்று அவனைக் குறுகிச் சிலசொல்லு மளவிற்குள் அவன் உணவுமுதலியன தந்து மிகுபரிசிலும் ஈந்து நும்மை விடுப்பானென்று கூறிமுடிக்கிறான்:—

நீயிரும்
இவணயந் திருந்த விரும்பே ரொக்கல்
145. செம்ம லுள்ளமொடு செல்குவி ராயின்

பதவுரை :—(143) நீயிரும் - நீங்களும், (144) நயந்து இவண் இருந்த - விரும்பி இவ்விடத்திருந்த, இரும் பேர் ஒக்கல் - (வறுமையாற்) கரிய பெரிய சுற்றத்தின், (145) செம்மல் உள்ளமொடு - தலைமை பெற்ற நெஞ்சத்துடனே, செல்குவிர் ஆயின் - (அவனிடத்தே) செல்பவராயிருந்தால், (எ - று.)—நயந்தனிர்செலின் (269) என்பதை இங்குக் கொணர்ந்துகூட்டுக.

விசேடவுரை :—நீவிரும் நல்லியக்கோடனை நாடி விரைந்து செல்வீர் என்று 143 - 145 இல் கூறி, மேல் பெறக்கூடியன கூறுவான்.

நல்லியக்கோடனைநோக்கிச் சென்றால் செல்லும் வழியிடங்களிலுள்ளவரால் உபசரிக்கப்படுவதைக் கூறத் தொடங்கி, நெய்தனிலத்

துள்ள எயிற்பட்டினத்துப் பெறுவதை 146 - முதல் 163 - வரையிலுமுள்ள அடிகளாற் கூறுகின்றான்:—

அலைநீர்த் தாழை யன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகங் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்தல் நெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரின்
ஓங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதியேக் கறூஉ மாசறு திருமுகத்து
நுதிவேனோக்கின் நுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
தளையவிழ் தெரியற் றகையோற் பாடி
அறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்:

பதவுரை :—(146) அலை நீர் தாழை அன்னம் பூப்பஉம் - கடலினலையெறிகின்ற நீர் பாயப்பெற்ற தாழை அன்னம்போலப் பூக்கவும், —(147) தலைநாள் செருந்தி தமனியம் மருட்டஉம்-இளவேனிற்காலந் தொடங்குகின்ற நாளிலே செருந்திப்பூ (தன்னைக் கண்டாரைப்) பொன்னென்று மருளப்பண்ணவும்,—(148) கடுஞ் சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலஉம் - முதிர்ந்தசூலையுடைய கழிமுள்ளி ஒளியையுடைய நீலமணிபோலப் பூக்கவும், - (149) நெடுங் கால் புன்னை நித்திலம் வைப்பஉம் - நெடியதாளையுடைய புன்னை முத்துப்போல அரும்புகொள்ளவும், (150) கானல் - கடற்கரையில், வெள் மணல் - வெள்ளியமணலிலே, கடல் உலாய் நிமிர்தர - கடலின் நீர் பரந்து நிமிராநிற்கவும்,—(151) பாடல் சான்ற-புகழ்தல்அமைந்த, நெய்தல்-நெய்தல்நிலத்தின், நெடுவழி - நெடியவழியிலுள்ளதும்,—(152) மணி நீர் வைப்பு - நீலமணிபோலும் கழியின்நீர்சூழ்ந்த ஊர்களையுடையதும், (153) பனி நீர் படுவின் - குளிர்ச்சியையுடைய நீரைக்கொண்ட குளங்களையுடையதுமான, (152) மதிலொடு பெயரிய (153) பட்டினம்-மதிலோடே பெயர்பெற்ற பட்டினத்தில் [எயிற்பட்டினத்தே], படரின் - செல்வீராகில்,—(154) ஓங்குநிலை ஒட்டகம் துயில் மடிந்து அன்ன - உயர்ந்த தன்மையையுடைய ஒட்டகம் உறக்கத்தே கிடந்தாற்போல, (155) வீங்கு திரை - மிகுகின்ற திரை, கொணர்ந்த - கொண்டு வந்த, விரை மரம் விறகின்-மணத்தையுடைய அகிலாகிய விறகாலே, (156) கரும்புகை செந்தீ மாட்டி - கரியபுகையையுடைய சிவந்த நெருப்பையெரித்து, பெருந் தோள் (157) மதி ஏக்கறூஉம்

மாசு அறு திரு முகத்து (158) நுதிவேல் நோக்கின் நுளைமகள் - பெரியதோளினையும் சந்திரன் (நாம் இத்தன்மை பெற்றிலேமே! என்று) ஏக்கங்கொள்ளுதற்குக் காரணமான குற்றமற்ற அழகிய முகத்தையும் முனையினையுடையவேல்போலும் பார்வையினையுமுடைய நுளைச்சாதியிற்பிறந்த மகளாலே, அரித்த - அரிக்கப்பட்ட, (159) பழம் படு தேறல் - பழையதாகிய களிப்புமிகுகின்ற கள் தெளிவை, பரதவர் - பரவர், மடுப்ப - வாயினிடத்தே வைக்க,—(160) இனை மலர் படப்பை கிடங்கில் கோமான் (161) தளை அவிழ் தெரியல் தகையோன் பாடி - கொத்தாக வெழுந்த மலர்களையுடைய தோட்டங்களைக் கொண்ட கிடங்கிலென்னும் ஊர்க்கு அரசனாகிய அரும்புநெகிழ்ந்த மாலையினையுடைய அழகையுடையோனைப் பாடி, (162) அறல் குழல் பாணி தூங்கியவரொடு - தாளவறுதியையுடைய குழலோசையின் தாளத்திற்கு ஏற்ப ஆடின மகளிரோடே, (163) வறல் குழல் சூட்டின் - உலர்த்தலையுடைய குழல்மீனைச் சுட்டதனோடே, வயின் வயின் பெறுகுவிர் - மனைதோறும் மனைதோறும் பெறுவீர்; (எ - று.)

விசேடவுரை :—எயிற்பட்டினம்படரின் (153) கிடங்கிற்கோமானாகிய (160) தகையோனைப்பாடி (161) ஆடினமகளிரோடே (162) (நீங்களும்) சூட்டோடே (163) தேறலைப்பரதவர் மடுப்ப, (159) அவற்றை வயின்வயிற் பெறுகுவிர் (163) என்க. 146 முதல் 151 வரையில் நெய்தல் நிலத்து வருணனை. நல்லியக்கோடனைநோக்கிச்செல்லும் நீர் இடைவழியிலுள்ள நெய்தனிலத்து எயிற்பட்டினத்தைச்சேரின் நுளைமகள் தீமூட்டிக்காய்ச்சி யரித்த தேறலோடு குழல்மீன்சூட்டைத் தரப் பாணிதூங்கியவரோடு பெறுகுவீரென்கின்றான். பாணிதூங்கியவர் - பாணனுடன்செல்வோர். (154-155), ஒட்டகந்துயில் மடிந்தன்ன திரை என்க. துயின்மடிந்தன்ன விறகுமாம். நல்லியக்கோடனுடைய தலைநகராகிய கிடங்கில் என்பது, கிடங்காலென்ற பெயருடன் திண்டிவனத்துக்குச் சமீபத்திலுள்ளதென்பர்.

எயிற்பட்டினத்தைக் கடந்தபிறகு முல்லையிலுள்ள வேலூரிற் சென்றாற் பெறுவதை (164 - 177 அடிகளாற்) கூறுகின்றான்:—

பைந்நனை யவரை பவழங் கோப்பவும்
கருநனைக் காயாக் கணமயி லவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொல்லை நெடுவழிக் கோப மூரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே லுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்
உறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை

எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொடு
ஆமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்:

பதவுரை :—(*164*) பை நனை அவரை பவழம் கோப்பஉம்-பசுத்த அரும்புகளையுடைய அவரை பவழம்போல மலர்களைத்தொடுக்கவும், (*165*) கரு நனை காயா கணம் மயில் அவிழஉம் - கரியஅரும்பினையுடைய காயாக்கள் திரண்ட மயிலின்கழுத்துப்போலப் பூக்கவும், (*166*) கொழு கொடி முசுண்டை கொட்டம் கொள்ளஉம் - கொழுவிய கொடியினையுடைய முசுண்டை கொட்டம்போலும் பூவைக் கொள்ளவும், (*167*) செழுங் குலை காந்தள் கைவிரல் பூப்பஉம் - வளவியகுலையினையுடைய காந்தள் கைவிரல் போலப் பூவாநிற்கவும், (*168*) கொல்லை நெடு வழி கோபம் ஊரஉம் - கொல்லையிடத்து நெடியவழிகளிலே இந்திரகோபம் ஊராநிற்கவும், (இங்ஙன் அவரை முதலியன கார் காலம் வந்திட்டமையைத் தெரிவிக்கவும் கணவன்சொற் பிழையாது தலைவி இல்லிருந்து நல்லறஞ்செய்து), (*169*) முல்லை சான்ற-ஆற்றியிருந்த தன்மையமைந்த, முல்லை அம் புறவின் - முல்லைக்கொடி படர்ந்த காட்டினிடத்து, (*170*) விடர் கால் அருவி வியல் மலை (*171*) சுடர் (*170*) மூழ்கி (*171*) கான்மாறிய செவ்வி நோக்கி - முழைஞ்சுகளிலேகுதிக்கும் அருவியினையுடைய பெரிய (அத்த)கிரியிலே சூரியன் மறைந்து (அவன்) கிரணங்களெல்லாம் மாறிய அந்திக்காலத்தைப் பார்த்து, (*172*) திறல் வேல் நுதியின் பூத்த கேணி (*173*) விறல் வேல் வென்றி *வேலூர் எய்தின் - வலியினையுடைய (முருகக் கடவுளின்) வேலின்முனைபோல மலர்களைப்பூத்த கேணியினையுடைய வெற்றியையுடைய வேலாலே வென்றியையடைந்த வேலூரைச் சேர்ந்தால், (*174*) உறு வெயிற்கு உலைஇய - மிகுகின்ற வெயிலுக்கு (உள்ளுறைகின்றோர்) வருந்துகின்ற, உருப்பு அவிர் குரம்பை - வெப்பம் விளங்குகின்ற குடிசையிலிருக்கின்ற, (*175*) எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ் சோறு - எயினக்குலத்து மகளிராலே சமைக்கப்பட்ட இனியபுளிங்கறியிட்ட வெவ்விய சோற்றை, (*176*) தேமா மேனி சில் வளை ஆயமொடு-தேமாவின் தளிர்போலும் மேனியையும் சிலவாகிய வளையினையுமுடைய (நும்) மகளிருடைய திரளுடனே, (*177*) ஆமான் சூட்டின் - ஆமான்சூட்டிறைச்சியையும், அமைவர - அமைய [பசி கெட], பெறுகுவிர்—; (எ - று.)

விசேடவுரை :—சுடர்கால்மாறிய செவ்விநோக்கி (*171*) முல்லையம்புறவின் (*169*) வேலூரெய்தின் (*173*), சோற்றைச் (*175*) சூட்டிறைச்சியுடனே (*177*) ஆயமொடு (*176*) பெறுகுவிர் (*177*) என்க. வேலூர் (*173*) முல்லையம்புறவின் (*169*) உள்ள தென்க. *164* - முதல் *168* - வரையிற்கூறிய அவரை பவழங்கோத்தல் முதலியன, கார்காலத்துநிகழ்வன. தன் கணவன் கார்காலத்து மீண்டுவருவதாகக் கூறி வினைவயிற்சென்றவன் அங்ஙனம் மீண்டுவராவிடத்தும் விரை

*வேலூர் - உப்பு வேலூரென்பர்,

வில்வருவனென்ற கருத்தோடு தலைவி யாறியிருத்தற்கு இடனாவது முல்லை யெனக் கூறுவது பொருளிலக்கண மரபு ஆதலால், 'பைந்நனை யவரை பவழங்கோப்பவும்...கோபமூரவும் முல்லைசான்ற' என்றார். கொட்டம் - பனங்குருத்தாற் செய்த ஒருவகைப்பெட்டி. இன்புளி - தித்திப்புமாம். தேமா - தளிர்க்குச் சினையாகுபெயர். பல்வளையிடுவது பெதும்பைப் பருவத்துக்கு உரியதாதலால், (176) சில்வளையாயம் என்றது - ஆடல்முதலிய துறைக்குஉரிய பருவத்தின ரென்ற கருத்தைக் காட்டு மென்பர்.

172, 173 - அடிகள் வேலூரின்சிறப்பைத் தெரிவிப்பன: ஒரு கால் நல்லியக்கோடனுக்குப் பகை மிக்கதாக, இவன் அப்பகை மிக்கமைக்கு அஞ்சிமுருகக்கடவுளை வழிபட, அக்கடவுள் இவனதுவழி பாட்டிற்கு மனமுவந்து இவனது கனவில் தோன்றி, ஒரு கேணியைச் சுட்டிக்காட்டி 'இக்கேணியிற் பூத்த மலர்களைக்கொண்டு நும்பகைவர்மீது எறி: இவற்றாற் பகையொழியும்' என்று கூறி அக்கேணியின் மலர்களையெல்லாம் தன் வேலாக நிருமித்து வைக்க, இந்நல்லியக்கோடனும் அந்தக்கேணியின் மலர்களைப் பறித்துப் பகைவர் மீது எறிய, அம்மலர்களெல்லாம் முருகக்கடவுளின் வேலாகிப் பகைவரையழிக்க, நல்லியக்கோடன் தன் பகையொழிந்து கவலையற்றனனென்பது இந்த அடிகளிற் குறித்த கதை. இங்ஙனம் கேணிமலர்களை முருகக்கடவுள் வேலாகநிருமித்ததுபற்றியே இவ்வூர்க்கு வேலூரென்று பெயராயிற்றென்பர்.

இனி, மருதத்துள்ள ஆமூரெய்தின் பெறுகுவனவற்றை, 178 - 195 அடிகளாற் கூறுகிறான்:—

நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்
மதிசே ரரவின் மானத் தோன்றும்
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
அந்தண ரருகா வருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கி னவனாமூ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தின்
உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்கா முலக்கை யிரும்புமுகந் தேய்த்த
அவைப்புமா ணரிசி யமலை வெண்சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்;

பதவுரை :—(178) நாள் - காலையிலே, நறும் பூங் கோதை தொடுத்த - நறிய மலர்களை மாலைகட்டினாற்போல ஒழுங்காக்கொண்டுள்ள, சினை - கிளைகளையும், (179) குறுங் கால் - குறியஅடியினையுமுடைய, காஞ்சி - காஞ்சிமரத்தின், கொம்பர் - பெரியகொம்புகளிலே, ஏறி—, (180) நிலை அருங் குட்டம் நோக்கி நெடிது இருந்து - (எக்காலத்தும்) நிலைப்படுதல்அரிதாகிய (நீர்நிலையின்) ஆழத்தை (த் திரிகின்ற மீன்களை யெடுத்தற்கு ஏற்றகாலங் குறித்து)ப் பார்த்த வண்ணம் நெடும்பொழுது இருந்து, (181) புலவு கயல் எடுத்த - புலானாற்றத்தையுடைய கயலை (முழுக்கினாற்) கவர்ந்து எடுத்த, பொன் வாய்-பொன்னிறமான வாயையுடைய, மணி சிரல் - நீலமணிபோன்ற சிச்சிலிப்பறவையின், (182) வள் உகிர் கிழித்த-கூரியநகத்தினாற் கிழித்த, வடு - தழும்பு, ஆழ் - அழுந்தின, பசு அடை - பசிய இலையையுடைய, முள்அரை-முள்ளையுடைத்தாகிய தண்டினையுடைய,தாமரை -வெண்டாமரையின், முகிழ் விரி நாள் போது - அரும்புவிரிந்த காலைவேளையிற்பூவின், (184) கொங்கு - தேனை, கவர் - உண்கின்ற, நீலம் செங் கண் சேவல் - நீலநிறத்தினையும் செந்நிறக்கண்களையுமுடைய வண்டின் ஒழுங்கு, (185) மதி சேர் அரவின் மான தோன்றும் - சந்திரனைச்சேர்கின்ற கரும்பாம்பையொப்பத் தோன்றுகின்ற, (186) மருதம் சான்ற - ஊடலொழுக்கம்மிகுந்த [ஊடியுங்கூடியும் போகம் நுகர்கின்ற], மருதம் - மருதநிலத்து, தண் பணை-குளிர்ந்த வயலிடத்தையும், (188) அம் தண் கிடங்கின்-அழகினையுடைய குளிர்ந்த அகழினையும், (187) அருங் கடி - அரிய காவலினையும், வியன் - அகற்சியையுடைய, அந்தணர் அருகா நகர் - பிராமணர் சுருங்காத நகராகிய, (188) அவன் ஆமூர் - அந்நல்லியக்கோடனுடைய ஆமூரை, எய்தின் - அடைந்தால்,—(189) வலிபுணர் எருத்தின் - (இழுத்தற்குரிய) வலிமை பொருந்தின கழுத்தோடு, வலம் பட நடக்கும் - வெற்றியுண்டாகுமாறு நடப்பதாக, (190) நோன் பகடு - உடல்வலிமையையுடைய எருதினையுடைய, உரன் கெழு உழவர் - அறிவு பொருந்தின உழவருடைய, தங்கை - தங்கையாகிய, (191) பிடி கை அன்ன பின்னு வீழ் சிறு புறத்து (192) தொடி கை மகடூஉ - பெண்யானையினது கைபோன்ற பின்னின மயிர் வீழ்ந்துகிடக்கின்ற சிறியமுதுகினையும் தொடியணிந்த கையினையுமுடைய மகள், (தான்உள்ளேயிருந்துகொண்டு), மக - (தன்) பிள்ளைகளைக்கொண்டு, முறை - முறைமையாக, தடுப்ப- (நும்மெல்லாரையும்) போகாதுதடுக்கையினாலே,—(193) இரு காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த - கரிய வயிரத்தையுடைய உலக்கையினது பூணினைக் கொண்ட முகத்தைத் தேயப்பண்ணின, (194) அவைப்பு மாண் அரிசி அமலை வெண் சோறு - குற்றுதல்மாட்சிமைப்பட்ட அரிசியினாலாக்கிய கட்டியாகிய வெள்ளியசோற்றை, (195) கவை தாள் அலவன் கலவையொடு - பிளவுபட்ட தாளையுடைய ஞெண்டு (பீர்க்கங்காயுடன் கலந்த) கலவையோடே, பெறுகுவிர்—; (என்றவாறு.)

விசேடவுரை:—பணையையும் (186) கிடங்கினையும் (188) கடியையுமுடைய அந்தண ரருகாநகராகிய (187) ஆமூரெய்தின் (188), உழவர்

தங்கை (190) மகடூஉ தடுப்ப (192), சோறு (194) கலவையொடுபெறுகுவிர் (195) என்க.

178 - முதல் 186 வரையில், ஆமூர் மருதத்தைச்சேர்ந்ததென்பான், மருதநிலத்து வருணனை கூறுகின்றான். வெண்டாமரைப் பூவில் தேனையுண்ண வண்டுகள் மொய்ப்பது - சந்திரனைச்சேர்கின்ற கரும்பாம்புபோலத் தோன்றுதற்கு இடனான மருதஞ்சான்ற மருதமென்றவாறு. சிச்சிலிப்பறவை காஞ்சிமரத்திற்காத்திருந்து சமயம் பார்த்து மீனைக் குத்தி யெடுத்துச் செல்லும்போது அதன்உகிர்வடு பதிந்த பசிய இலையையுடையது வெண்டாமரைக்கொடி யென்க. மயிலொழிந்த பறவைகளின் ஆணைக்காட்டும் 'சேவல்' இங்கு, ஒழுங்காகப்படியும் வண்டுகளைக் காட்டிற்று. (192) மகடூஉ மகமுறை தடுப்ப என்பதற்கு - உழவர் மகள் பிள்ளைகளை உபசரிக்குமாபோலே உபசரித்துப் போகவொட்டாது விலக்க என்றுமாம்.

இனி, 202-ஆம் அடிவரையில் இங்ஙனம் ஆமூரையடைந்திட்டால் அதன்பிறகு அந்த ஓய்மானாட்டு நல்லியக்கோடனூர் சேய்த்தன்று, அணித்தேயிருக்கு மென்கிறான்:—

எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்
நிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள்
200\. அண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று சிறிது நணியதுவே:

பதவுரை :—(196) எரி - (மேல்நோக்கியெரியுந்தன்மையுள்ள) நெருப்பு, மறிந்து அன்ன - சாய்ந்தாலொத்த, நாவின் - நாக்கினையும், (197) கரு மறி காதின் - வெள்ளாட்டுக் குட்டியையணிந்த காதுகளையும், கவை அடி - பிளவுபட்ட கால்களையுமுடைய, பேய்மகள் - பேய்மகளின், (198) நிணன் உண்டு சிரித்த-நிணத்தைத்தின்று சிரித்த, (196) இலங்கு எயிறு - விளங்குகின்ற பற்களின், (198) தோற்றம் போல - காட்சி போல, (199) பிணன் உகைத்து சிவந்த பேர் உகிர் - (தாம் கொன்ற) பிணங்களின் தலைகளைக் காலாலே தள்ளிச் சிவந்த பெரிய உகிரினையும், பணை தாள் - பெருமையையுடைய கால்களையுமுடைய, (200) அண்ணல் யானை - தலைமையையுடையவாகிய யானைகளின், அருவி - மதவருவி, துகள் - (எழுந்த) துகளை, அவிப்ப - அடக்குவதனால், (201) நீறு அடங்கு - புழுதியடங்கின, தெருவின் - தெருவினையுடையதும், அவன் சாறு அயர்-அந்நல்லியக்கோடனது விழா நடக்கின்றதுமான, முது ஊர் - பழமையான ஊரானது, (202) சேய்த்தும் அன்று - தூரிய இடத்திலுள்ளதும் அன்று: சிறிது ணியது ஏ-சிறிதாகச் சமீபித்த இடத்தில்தானே யுள்ளது; (எ-று.)

விசேடவுரை:—பிணனுகைத்துச் சிவந்த யானையின் பேருகிர் நிணனுண்டுசிரித்த பேய்மகளின் இலங்கெயிறு போலும்: அங்ஙன

முள்ள யானையின் மதநீரால் தெருவின்புழுதி யடங்கு மென்றதனால், அவனுடைய யானையின் மிகுதி பெறப்படும். (269) 'நல்லியக்கோடனை நயந்தனிர்செலினே' என்பதை, 'நணியதுவே' என்பதன்பின் கூட்டுதலும் ஒன்று.

இனி, இந்நூல் முடியுமளவுள்ள பகுதிகளினால், இங்ஙன் (நல்லியக்கோடன் நகர்) அணித்தாகையால் அந்த நல்லியக்கோடனைக் குறித்துச் செல்வதாயிருந்தால், அவனுடைய நகரின் வாயிலைச் சேர்ந்து, பின்னர் அறிஞர் முதலியோரேத்த இருக்கும் அந்த நல்லியக்கோடனைக் குறுகி ஏத்துமளவிற்குள் அவன் உணவு முதலியன கொடுத்துப் பரிசிலையும் ஈந்து விடுப்பா னென்கிறான்:—

203 - 206:—நல்லியக்கோடனைக் குறித்துச் செல்லும்போது, முதலில் அவன் நகர்வாயிலைக் குறுகவேணுமென்கின்றான்:—

பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவி னந்தணர்க் காயினும்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயி லவனருங் கடைகுறுகி

பதவுரை:—(ஆதலால்), (203) பொருநர்க்கு ஆயினும் - கிணைப் பொருநர்க்காயினும், புலவர்க்கு ஆயினும் - அறிவுடையோர்க்காயினும், (204) அரு மறை நாவின் அந்தணர்க்கு ஆயினும் - அரிய வேதத்தையுடைத்தாகிய நாவினையுடைய அந்தணர்க்காயினும், (206) அடையா - அடைக்கப்படாத, (205) கடவுள் மால் வரை கண் விடுத்து அன்ன - தெய்வங்களிருக்கின்ற பெருமையையுடைய மேரு ஒருகண்ணை விழித்துப்பார்த்தாலொத்த, (206) அரு - (பொருநர்முதலியோர்க்கன்றி ஏனையோர்க்குப் புகுதற்கு) அரிய, அவன் கடைவாயில் - அந்த நல்லியக்கோடனது தலைவாயிலை, குறுகி - அணுகி,—(எ - று.)

விசேடவுரை:—'பொருநர் முதலியோர்க்கு அடையாவாயில்' எனவே, பரிசில் பெறுபவரன்றி ஏனையோர்க்கு உள்ளே சேறற்கு அரிய தென்க. அடையாவென்ற பன்மை நான்கு வாயிலையுங் கருதியது.

207 - 209:—இவ்வடிகள்-பலரும் அந்த நல்லியக்கோடனை ஏத்தும் ஆறு கூறத்தொடங்கி, அறிஞர் இன்ன இன்ன குணங்களையேத்துவரென்கிறான்: —

செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையும்
இன்முக முடைமையு மினிய ஞதலும்
செறிந்து விளங்கு சிறப்பி னறிந்தோரேத்த

பதவுரை:—(207) செய் நன்றி அறிதலும் - (பிறர் தனக்குச்) செய்த நன்றியையறிந்து (அவர்க்குத் தானும்) நன்மை செய்தலையும், சிறு இனம் இன்மையும் - அறிவும் ஒழுக்கமுமில்லாத மாக்

களின்திரள் (தனக்கு) இல்லாமையையும், (208) இன்முகம் உடைமையும் - (காண்போர்க்கு) இனிய முகத்தை (எக்காலத்தும்) உடையவனுதலையும், இனியன் ஆதலும் - (முகத்தில் இனிமையாகச் சிரித்து மனத்து இன்னாதவனாகாமல் மனம் முகத்திற்கு ஏற்ப) இனியவனாதலையும், (209) செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த - (எக்காலமும் தன்னுடனே) நெருங்கிவிளங்குகின்ற தலைமையினையுடைய பலகலையும் உணர்ந்தோர் புகழவும்,—

விசேடவுரை:—'சிறிய வினமாவது-நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும் விடருந் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு: இது, அறிவைத் திரித்து இருமையுங்கெடுக்கும் இயல்பிற்று' என்பர், பரிமேலழகர். இனியனாதலும் என்றவிடத்து "முகத்தினினியநகாஅ அகத்தின்னா, வஞ்சரையஞ்சப்படும்" என்ற திருக்குறள் அறியத்தக்கது. அறிஞர் முதலியோரேத்துகின்ற குணங்கள் அவ்வவர்க்கு ஏற்றவாறு இருத்தல் கவனித்தற்கு உரியது,

210-212:—வயவரேத்துகின்ற குணங்கள் இன்ன இன்ன என்று கூறும்:—

210. அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவரேத்த

பதவுரை:—(210) அஞ்சினர்க்கு அளித்தலும் - (தன் வீரத்தைக் கண்டு) அஞ்சிவந்து அடிவீழ்ந்தார்க்கு அருள்செய்தலையும், வெம் சினம் இன்மையும் - கொடிய கோபமில்லாமையையும், (211) ஆண் அணி புகுதலும் - வீரர் நின்ற அணியிலேசென்று (அந்த அணியைக்) குலைத்தலையும், அழி படை தாங்கலும் - (தனது படை கெட்டதாயின்) கெட்ட அந்தப் படையிடத்தே சென்று (பகைவரை ஓங்கவொட்டாது) தாங்குதலையும், (212) வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த - வாள்வலியாலே மேலாகிய சொல்லைப்பெற்ற வீரர் புகழவும்,—(எ - று.)

விசேடவுரை: — ஆணென்றசொல் ஆண்பாலையெல்லாம் உணர்த்து மெனினும், அணிபுகுதலென வந்தமையால் வீரரையுணர்த்திற்று. கோபம் நீட்டித்து நிற்பது, சினமெனப்படுமென்பர்.

213 - 215-இவ்வடிகள் - அரிவையரேத்துகின்ற குணங்கள் இன்ன வின்ன வென்று கூறும்:—

கருதியது முடித்தலுங் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையு மோடிய துணர்தலும்
215. அரியே ருண்க ணரிவைய ரேத்த

பதவுரை:—(213) கருதியது முடித்தலும் - (தன் நெஞ்சு) கருதிய புணர்ச்சியைக் குறைகிடவாமல் முடிக்கவல்ல தன்மையையும்,

காமுற படுதலும் - (அங்ஙனந் தானே இன்பமுறுதே அம்மகளிரும் தம்மாலே மிக்க இன்பத்தைப் பெறும் தன்னை) விரும்பப்பட்டிருத்தலையும், (213) ஒருவழிப்படாமையும் - (அவர்கள் அங்ஙனம் விரும்பினார்களென்று அவர்களின்) வசத்தனாகாமையையும், ஓடியது உணர்தலும் - (தான் அவர்கள் வசத்தனாகாவிடினும் அம்மகளிர் வருந்திய தன்மையையுணர்ந்து (அவரைப்) பாதுகாத்தலையும், (215) அரி ஏர் உண்கண் அரிவையர் ஏத்த - செவ்வரிபொருந்தின மையுண்ட கண்களையுடைய மகளிர் புகழவும்,—(எ - று.)

விசேடவுரை:—நுகர்தற்கு உரிய மகளிரை நுகர்ந்து பற்று நீங்காவிடின் பிறப்பு நீங்காதாதலால், கருதியதுமுடித்தல் வேண்டப் படுவதாயிற்று. ஓடியதுணர்த லென்பதற்கு - மகளிர் நெஞ்சில் நிகழ்ந்ததை யுணர்ந்து அவர்குறை முடித்த லெனினுமாம்.

216 - 218:—இவ்வடிகள்—பரிசிலர் ஏத்துகின்ற குணங்கள் இன்ன வின்ன என்று கூறும்:—

அறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்த

பதவுரை:—(216) அறிவு மடம்படுதலும்-(தான் கூறுகின்றவற்றை அறியும் அறிவு இல்லாதாரிடத்துத் தான்) அறியாமைப் பட்டிருத்தலையும், அறிவு நன்கு உடைமையும்-(தன்னைப்போல அறிவுடையாரிடத்துத் தான்) நன்றாக அறிவுடையனாயிருத்தலையும், (217) வரிசை அறிதலும் - (பரிசிலருடைய) தரத்தினை அறிந்து கொடுத்தலையும், வரையாது கொடுத்தலும் - (கல்வியறிவில்லாத பரிசிலர்க்குக்) கொடாதிருத்தலை மேற்கொள்ளாமல் (அவர்கள் அளவிற்குத்தக்கனவற்றைக்) கொடுத்தலும், (218) பரிசில் வாழ்க்கை பரிசிலர் ஏத்த - பிறரிடத்துப்பெற்றபொருளால் இல்வாழ்க்கை நடத்துதலையுடைய பாணர் கூத்தர்முதலாயினோர் புகழவும்; (எ-று.)

விசேடவுரை :—'அறிவும்டம்படுதலு மறிவு நன்குடைமையும்' என்ற இடத்து "ஒளியார்மு னொள்ளிய ராதல் வெளியார்முன், வான்சுதைவண்ணங்கொளல்" என்ற குறளின்பொருள் அறிதற்கு உரியது. 'வரையாது கொடுத்தல்' என்பதற்கு - தனக்கென்று ஒன்றைவைத்துக்கொள்ளாமற் கொடுத்தலென்றுமாம்.

219 - 220 :—இவ்வடிகள் - ஆயமோடு இருந்தானைக் குறுக வேணுமென்று கூறும்:—

பன்மீன் நடுவட் பான்மதி போல
220. இன்னகை யாயமோடு இருந்தோற் குறுகி

பதவுரை:—(219) பல் மீன் நடுவண் பால் மதி போல - பல்மீன்களுக்கு நடுவிருந்த பால்போலும் ஒளியையுடைய (கலைநிறைந்த) சந்திரன்போல, (220) இன் நகை ஆயமோடு இருந்தோன் - (இயல்

இசை நாடகங்களாலும் இனிய மொழிகளாலும்) இனிய மகிழ்ச்சியைச் செய்யுந் திரளோடேயிருந்தவனே, குறுகி—,—(எ - று.)

இனி, பரிசிலுக்குச்செல்லும் பாணன் பாடிப் புகழுமாற்றை 221-235 அடிகளால் கூறுகின்றான்:—

பைங்க ணூகம் பாம்பு பிடித்தன்ன
அங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்து
அமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பின்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி யாழது
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினை யெனவும்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவும்
நீ சில மொழியா வளவை

பதவுரை:—(221) பைங்கண் ஊகம் பாம்பு பிடித்து அன்ன-பசிய கண்களையுடைய கருங்குரங்கு பாம்பின் தலையைப்பிடித்த காலத்து (அப்பாம்பு ஒருபாலிறுகவும் ஒருபால்நெகிழவும் அதன்கையைச் சுற்றுமாறு) போன்ற, (220) அம் கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின் - அழகிய தண்டினிடத்தே நெருங்கச்சுற்றி நெகிழவேண்டுமிடத்து நெகிழ்ந்தும் இறுகவேண்டுமிடத்து இறுகியும் நரம்பு துவக்கும் வார்க்கட்டினையும், (223) (இரண்டு விளிம்புஞ்சேரத் தைத்த ஆணிகளாலே), மணி நிரைத்து அன்ன வனப்பின் - மணியை வரிசைப்படுத்திவைத்தாற்போன்ற அழகினையும், வாய் அமைத்து - பொருந்தப்பண்ணி, (224) வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து - வயிறு சேர்ந்து ஒழுங்குபட்ட தொழில் வகையமைந்த பத்தரினையும்,—(225) கானம் குமிழின் கனி நிறம் கடுப்ப (226) புகழ் வினை பொலிந்த பச்சையொடு - காட்டிடத்துக் குமிழினுடைய பழத்தினது நிறத்தையொப்பப் புகழப்படுந் (துவளுட்டின) கைத்தொழிலாற் பொலிவுபெற்ற போர்வையோடே, தேம் பெய்து - தேனொழுகுகின்ற தன்மையைத்(த்தன்னிடத்தே) பெய்து கொண்டு, (227) அமிழ்துபொதிந்து இலிற்றும் புரி அடங்கு நரம்பின் - அமிழ்தத்தை(த்தன்னிடத்தே) பொதிந்து துளிக்கின்ற முறுக்கு அடங்கின நரம்பையுமுடைய, (228) பாடுதுறை முற்றிய-(நீர்) பாடுந் துறைகளிலெல்லாம் முற்றப் பாடுதற்கு, பயன் தெரி கேள்வி - (தனது) பயன் விளங்குகின்ற இசைகளை, (229) கூடு

கொள் - (தான்) கூடுதல்கொண்ட, இன் இயம் - இனியயாழை, (230) நூல் நெறி மரபின் - இசைநூல்கூறுகின்ற முறையாலே, (229) குரல் குரல்ஆக - செம்பாலையாக, (230) பண்ணி - வாசித்து,—(230) ஆறுது (231) முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும் - (ஒருகால் குவித்தலோடு) அமையாமல் (பலகால்) அரசன் உவாத்தியான் தாய் தந்தை தம்முன் என்னும் பெரியோர்கட்குக் குவித்த கைகளையுடையையெனவும்,—(232) இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும் - வீரரெறிதற்கு மகிழ்ந்து கொடுத்த மார்பையுடையை யெனவும், (233) ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும் - ஏரினையுடைய குடிமக்கட்கு நிழல்செய்த செங்கோலை யுடையை யெனவும்,—(232) தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும் - தேரினையுடைய அரசர்க்கு வெம்மைசெய்த வேலையுடையாயெனவும், (235) நீ சில மொழியா அளவை - நீ சில புகழ்மொழிகளைக் கூறுதற்கு முன்பு, (எ - று.)

திவவினையும் (222), வணப்பினையும் (223), அகளத்தினையும் (224), பச்சையொடு (225) நரம்பினையுமுடைய (227) கேள்விக் (228) கூடுகொள் இயம் குரல்குரலாக (229) மரபிற்பண்ணி (230), எனவும் (231), எனவும் (232) எனவும், (233) எனவும் (234) நீ மொழியா அளவை (235) என்க. குறுகி (220) பண்ணி (230) மொழியா வளவை (235) யென இயையும். (226-227): "தீந்தேனணிபெற வொழுகியன்ன வமிழ்துறழ்நரம்பினல்யாழ்" என்றது நோக்கத் தக்கது; இங்ஙன் கூறுவது இசையினினிமையைப் புலப்படுத்த. இன் இயம் என்றது, பாலையாழை; பாலையாழில் அமைந்துள்ள குரலையே குரலாகக்கொண்டுவாசிக்க அது செம்பாலையாகும். (228) முற்றிய-செய்யியஎன்னும் வினையெச்சம். (232) இளையோர்க்கு மலர்ந்தமார்பினை - "விருந்தாயினையெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற்கு, அரும்பூணறவெறிந்தாங்கவ னின்றூழினியெனவே" என்றார் பிறரும். இனி, இளையோர் - மகளிருமாம்: "வணங்குசிலை பொருதநின் மணங்கமழகலம், மகளிர்க்கல்லது மலர்பறியலையே," "மகளிர்மலைத்த லல்லதுமள்ளர், மலைத்தல்போகிய சிலைத்தார் மார்ப" என்பன காண்க.

புகழும் அளவையில் நல்லியக்கோடன் உபசரிக்கும்வகையைக் கூறுகின்றான்:—

மாசில்
காம்பு சொலித்தன்ன வறுவை யுடீஇப்
பாம்பு வெகுண்டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்

வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
உ௪௫. ஆனா விருப்பிற் றானின் றூட்டி

பதவுரை :—(235) மாசு இல் (236) காம்பு சொலித்து அன்ன- குற்றமற்ற மூங்கிலின் ஆடையை யுரித்தாலொத்த, அறுவை- உடையினை, உடீஇ-உடுக்கப்பண்ணி, (237) பாம்பு வெகுண்டு அன்ன தேறல் நல்கி - பாம்பின் விஷம் ஏறிமயங்கினாற்போன்ற மயக்கத்தை யுண்டாக்குங் கள்தெளிவைத்தந்து,—(238) கா எரி ஊட்டிய கணை கவர் தூணி (239) பூ விரி கச்சை புகழோன்-(காண்டவ) வனத்தை நெருப்பு உண்ணும்படி செய்த அம்பை யுள்ளேயடக்கின அம்புப் புட்டிலையும் பூத்தொழில்பரந்த கச்சையினையுமுடைய புகழ்பெற்ற அருச்சுனனது, தன்முன் - தமையனாகிய, (240) பனிவரை மார்பன் - இமயமலைபோலும் பரந்த மார்பினனாகிய வீமசேனன், பயந்த - செய்த, நுண் பொருள் (241) பனுவலின் - நுண்ணிய விஷயங் களையுடைய பாகசாஸ்திரத்திற் கூறிய முறைமையில், வழாஅ - தவறாமற்செய்த, பல் வேறு அடிசில் - பலவேறுவகைப்பட்ட உணவை, (242) விசும்பில் வாள் நிறம் கோள் மீன் சூழ்ந்த (243) கதிர் இள ஞாயிறு எள்ளும் தோற்றத்து (244) விளங்கு பொன் கலத்தில் - ஆகாயத்திலே ஒளியையுடைய நிறத்தையுடைய கோளாகிய [கிரகங்களாகிய] நட்சத்திரங்கள் சூழ்ந்ததும் கிரணங்களை யுடையதுமான இளஞ்சூரியனை [உதயகாலத்துச் சூரியனை] இகழுந் தோற்றத்தையுடைய விளங்குகின்ற பொற்கலத்திலே, விரும்புவன பேணி - (நீ) விரும்புவனவற்றை(த்தான்) விரும்பி மனத்திற் கொண்டு, (245) ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி - (நும்மி டத்து) மிகுகின்ற விருப்பத்தாலே தான் உடனிருந்து உண்ணப் பண்ணி,—(எ - று.)

விசேடவுரை:—நீ சிலமொழியாவளவை (235) உடீஇ (236) நல்கி (237) விரும்புவனபேணி (244) அடிசிலை (241) கலத்தில் (இட்டு) (244) தான் நின்று ஊட்டி (245) என்க. விரும்புவனபேணிஎன்றது-இன்ன வாறு உணவு அமையின் இந்தப் பாணனுக்கு உவப்பாயிருக்கு மென்று தன்மனத்திலாராய்ந்துபார்த்து அங்ஙனம் ஊட்டுகின்றா னென்க. பாண்டவரைவருள் இரண்டாமவனான வீமசேனன் சமைத்தல்தொழிலில்வல்லவனென்பது அன்னான் அஞ்ஞாதவாச காலத்திற் பலாயனனென்னும் பெயர்பூண்டு விராடராசனிடத்துச் சமைக்குந்தொழிலாளியாக அமர்ந்ததனாற்பெறப்படும்: அவன் தந்த நுண்பொருள்பனுவல்என்றமையால், வீமசேனன் பாகசாஸ்த்ர மொன்று இயற்றினானென்பது, பெறப்படும். அக்கினி தேவ னுடைய வேண்டுகோளின்படி காண்டவவனத்தை எரிக்குமாறு அநுமதிகொடுத்து அருச்சுனன் அதற்கு இடையூறுசெய்த தேவ தைகளையொறுத்து ஓட்டியமை பாரதத்தில், பிரசித்தம்.

இனி, அந்த நல்லியக்கோடன் பரிசில்களைத் தந்து விடுக்கு மதைக் கூறுகின்றான்:—

திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்டு
ஆரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்து பெயர்பெற்ற வெழினடைப் பாகரொடு
மாச்செல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில்:

பதவுரை:—(246) திறல் சால் வென்றியொடு - வலிமை யமைந்த வெற்றியோடே, தெவ்வு-பகையை [குறுநிலமன்னரை], புலம் அகற்றி - (தத்தம்) நிலத்தைக் கைவிட்டுப்போகப் பண்ணியும், (247) விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி - வெற்றியையுடைய வேலைத்தாங்கிய முடிவேந்தர் நிலையாகத் தங்கிய அரண்களையழித்தும், (அவ்விடங்களிற் பெற்ற பொருளாலே), (248) நயவர் பாணர் புன்கண் தீர்த்த பின் - (ஆங்கு) விரும்பி வந்தவரின் புன்கண்மையையும் பாணரின்புன்கண்மையையும் போக்கிய பின் (விஞ்சியனவாய்), (249) வயவர் - (தன்) படைத்தலைவர், தந்த - கொணர்ந்த, வான் கேழ் நிதியமொடு - நன்றாகிய நிறத்தையுடைய பொருள் திரளுடனே, (250) பருவம் வானத்து (251) உருவம் வால் மதி (250) பால் கதிர் பரப்பி (251) ஊர் கொண்டாங்கு - கூதிர்க் காலத்தையுடைய வானிடத்தே நிறைவடிவையுடைய வெள்ளிய சந்திரன் பால்போலுங் கிரணங்களைப் பரப்பி ஊர்கோளைக்கொண்டாற்போல, (252) கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறடு (253) ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு - கூரிய உளிகள்சென்று செதுக்கின உருக்களழுந்தின வலியினையுடைய குறட்டிடத்தில் தைத்த ஆர்கள்சூழ்ந்த சூட்டினையுடைய உருளையோடும், (254) சிதர் நனை முருக்கின் - சிந்துதலையுடைய அரும்பையுடைய முருக்கஞ்செடியின், சேண் ஓங்கு நெடுஞ்சினை - விசும்பிலே செல்லவளர்ந்த நெடிய கொம்பிலே, (255) ததர் - பூங்கொத்து, பிணி அவிழ்ந்த - முறுக்கு நெகிழ்ந்த, தோற்றம்போல - தோற்றரவுபோல, (257) கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி - வலிய தொழிலைச்செய்யுந் தச்சருடைய கையாற்செய்யுந் தொழில்களெல்லாம் முற்றுப்பெற்று, (256) உறுக்

குறு அரக்கு உள் எறிந்த போர்வை - உருக்கப்படுஞ் சாதிலிங்கம் உள்ளே வழித்த பலகையையுடைய, (258) ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடை பாகரொடு - ஏறிப்பார்த்து (உண்மையான ஓட்டமுண்டுஎன்று) பெயர்பெற்ற அழகிய நடையையுடைய தேரோடே, (259) மா செலவு ஒழிக்கும் மதன் உடை நோன் தாள் (260) வாள் முகம் பாண்டில்-(தன்னுடைய விரைவான நடையினால்) குதிரையின் நடையைப் பின்னிடச்செய்யும் அழகைக்கொண்ட வலிய காலையும் ஒளியினையுடையமுகத்தையுமுடைய எருதையும், வலவனொடு-(அதனைச்செலுத்தும்) பாகனோடே, (261) பரிசில் - (யானை குதிரை அணி கலம்முதலிய) பரிசில்களையும், (260) தரீஇ-கொடுத்து, (261) அவன்-அந்த நல்லியக்கோடன், அன்றே விடுக்கும் - (சென்ற) அன்றே அனுப்பி விடுவான் : [பரிசில்நீட்டியான்என்றபடி];—(எ - று.)

(249) நிதியத்தையும் (258) பாகரோடும் (260) வலவனோடுங் கூடிய பாண்டிலையும், (261) பரிசிலையும் அவன் (260) தரீஇ (261) அன்றே விடுக்குவன் என இயைக்க. (246 - 219) வயவர்-தன்படைத் தலைவரான வீரர். தன்படைத்தலைவர் குறுநிலமன்னரையும் வேல் மன்னரையும் அழித்து ஆங்குப் பெற்ற பொருளால் நயவர்பாணர் களின் புன்கண்மை [வறுமைத் துன்பம்] போக்கினபின் மிக்கன வாய்க்கொண்டு வந்த நிதிய மென்க. குறடு - சந்திரனையும், நேமி-ஊர்கோளையும்போலும். பாகர் - மரத்தினாலியன்றதேரின் சுற்றுச் சுவர்: ஆகுபெயரால், தேரினைக் காட்டிற்று. பாண்டில்-எருது.

இனி, யாரிடத்துச்சென்றால் இவ்வாறெல்லாம் இவ்வாறெல்லாம் பெறலாமென்று ஒரு வினாவை யெழுப்பிக்கொண்டு விடைகூறுகின்றான்:—

மென்றோள்

துகிலணி யல்குல் துளங்கியன் மகளிர்
அகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்டு
எறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

பதவுரை :—(261) மெல் தோள் - மெல்லிய தோளினையும், (262) துகில் அணி அல்குல் - ஆடை சூழ்ந்த இடையினையும், துளங்கு இயல் - தளர்ந்த தன்மையினையுமுடைய, மகளிர்—, (263) அகில் உண விரித்த அம் மெல் கூந்தலின் - அகிற்புகையையுண்ணுமாறுவிரித்த அழகிய மெல்லிய கூந்தல் போல(த் தோன்றும்படி), (264) மயில் மணி கலாபம் மஞ்சு இடை பரப்பி - மயில் நீலமணி போலும் பீலிக்கண்களையுடைய தோகையை மஞ்சின்நடுவிற் பரப்புமாறு, (265) துணி மழை தவழும் - தெளிந்தமேகம் தவழப்பெற்ற, துயல் கழை - அசைகின்ற மூங்கிலையுடைய, நெடுங் கோடு - நெடிய

மலையினது, (266) உரும் எறிந்து இறந்த ஏற்று அரு சென்னி-இடி யெறிந்ததனால் வழியாக்கின (அதற்கு முன்பு) ஏறுதற்கரிதற்கு அருமையான சிகரத்தையுடைய, (267) குறிஞ்சி-குறிஞ்சிநிலத்திற்கு, கோமான்-தலைவனும்,—கொய் தளிர் கண்ணி - கொய்யப்பட்ட தளிர் விரவின மாலையுடனே, (268) செல் இசை நிலைஇய பண்பின் - (பிற ரிடத்து இல்லாமற்) போகின்ற புகழ் (தன்னிடத்தே) நிற்றற்குக் காரணமான குணத்தினையுமுடைய, (269) நல்லியக்கோடனை—, நயந் தனிர்செலின்- விரும்பிச்சென்றால்,—(எ - று.)

முதுவாயிரவல ! (40) வஞ்சியும்வறிது, அதுவன்றி (50) மதுரை யும் வறிது; அதுவன்றி (67) உறந்தையும் வறிது; அதுவன்றி (89) எழுவர் பூண்ட ஈகைச்செந்நுகம் (113) ஒருதான்தாங்கிய (115) பெரு மகன் (122) புரவலனாகிய (125) நல்லியக்கோடனை நயந்த கொள்கை யொடு (126) முன்னாட்சென்றனமாக, இந்நாள் (129) அழிபசிவருத்தம் வீட (140) யானையொடு தேரெய்தி (142) யாம் அவணின்றும் வரு தும்: நீயிரும் (143) செம்மலுள்ளமொடு செல்குவிராயின் (145), குறிஞ்சிக்கோமானாகிய (267) நல்லியக்கோடனை நயந்தனிர்செலின் (269) (வழியிற்பெறுமவற்றை யாம் கூறக்கேண்மின்): எயிற்பட்டினம் படரின் (153) வயின்வயிற்பெறுகுவிர் (163) (அதன் பின்னர்) வேலூ ரெய்தின் (173) ஆமான்சூட்டின் அமைவரப்பெறுகுவிர் (177); (அதன் பின்னர்) ஆமூரெய்தின் (188), சோறு (194), கலவையொடு பெறுகுவிர் (195); (அவ்விடத்தினின்று) அவன் மூதூர் (201) சேய்த்துமன்று ; சிறிதுநணியதுவே. (202) (ஆண்டுச்சென்று) குறுகி (206) ஏத்த (209) ஏத்த (212) ஏத்த (215), ஏத்த (218), இருந்தோற்குறுகி (220), பாடுதுறைமுற்ற (228) இன்னியத்தைப் (229) பண்ணி (230) நீ சிலமொழியாவளவை (235) அவன் (261) உடீஇ (236) நல்கி (237) அடிசிலைக் (241) கலத்தேயிட்டு (நீ) விரும்பு வனபேணி (244) தான்நின்றூட்டி (245), தரீஇ (260) அன்றே விடுக்கும் (261) என இப்பாட்டுக்கு முடிபு காண்க.

இதிலுள்ள உவமைகள் வருமாறு:—(1) பணைத்தோள், (1-3) நில மடந்தை மார்பு துயல்வருமாரம் × கானியாற்றுப்புனல், (6) கதுப்பு விரித்தன்னகாழக நுணங்கறல், (7-8) அயில் × பரல், (13-14) பெய்ல் × கதுப்பு, (14-15) கதுப்பு × கலாபம், (16) மயிற்குளிக்குஞ்சாயல், (17-18) நாய்நா × அடி, (19-20) பிடி தடக்கை × குறங்கு, (20-21) குறங்கு × வாழை, (21-22) வாழைப்பூ × ஓதி, (27-28) பெண்ணை நுங்கி னின் சேறு × எயிறு, (28-30) முல்லைமுகை × எயிறு, (31) மடமான் × நோக்கு, (34) பொன்வார்ந்தன்னநரம்பு, (49) எழுவுறழ் திணிதோள், (56) மகரன்னமந்தி, (57) நகாரன்னமுத்தம், (70) ஓவத்தன்னவுண்டுறை, (71) கோவத்தன்ன கொங்கு, (72) முலை யன்னதாமரைமுகை, (71-75) அரக்குத்தோய்ந்தன்ன தாமரை யிதழ், (122) புலித்துப்பு, (124) பெயன்மழைத் தடக்கை, (146) தாழைஅன்னம்பூப்ப, (147) செருந்தி தமனியமருட்ட, (148) முண்டக மணி கழாஅல, (149) புன்னை நித்திலம்வைப்ப, (152) மணிநீர்

வைப்பு, (154-155) ஒட்டகந்துயில்மடிந் தன்னவீங்கு திரை, (157) மதியேக்கறூஉம் முகம், (158) வேணேக்கின், (164) அவரைபவழங் கோப்ப (165) காயாமயிலவிழ, (167) முசுண்டை கொட்டங்கொள்ள, (167) காந்தள்கைவிரல்பூப்ப, (172) வேனுதியிற்பூத்தகேணி, (176) தேமாமேனி, (178) பூங்கோதைதொடுத்த சினை, (181) பொன்வாய் மணிச்சிரல், (183-185) தாமரைப்போது கொங்குகவர் நீலச்செங்கட் சேவல் × மதிசேரரவு, (191) பிடிக்கையன்னபின்னு, (192) மகடூஉ மகமுறைதடுப்ப, (196) எரிமறிந்தன்னநா, (197-199) பேய்மகள் நிணனுண்டு சிரித்த எயிற்றுத்தோற்றம் × பிணனுகைத்துச்சிவந்த யானையின்உகிர்த்தோற்றம்,(205-205) மேருகண்விடுத்தன்ன வாயில், (219-220) பன்மீனடுவட்பான்மதிபோல இன்னகையாயமொடிருந் தோன், (221-222) ஊகம் பாம்பு பிடித்தன்ன கோட்டுச்செறிந்த திவவு, (223) மணிநிரைத்தன்னவனப்பு, (225-226) கானக்குமிழின் கனிநிறங்கடுப்பப்பொலிந்தபச்சை, (226 - 227) தேம்பெய்து அமிழ்துபொதிந்திலிற்றும்நரம்பு, (236) காம்புசொலித்தன்ன வறுவை, (237) பாம்புவெகுண்டன்னதேறல், (243-244) இளங் கதிர்ஞாயிறெள்ளுந்தோற்றத்து விளங்குபொற்கலம், (250-253) கதிர்பரப்பி மதியூர்கொண்டாங்குக் குறட்டாரஞ் சூழ்ந்தநேமி, (254-256) முருக்குத்ததர்பிணி யவிழ்ந்த தோற்றம்போல-உள்ளரக் கெறிந்தபோர்வை, (259-260) மாச்செலவொழிக்கும்பாண்டில், (263-264) அகிலுணவிரித்த வம்மென்கூந்தல் × மஞ்சிடைப்பரப்பிய மணிமயிற்கலாபம்.

இந்தச்சிறுபாணாற்றுப்படையில் — மலையினின்று யாற்றுத் திடரைச் சுற்றும் அருவியின்வருணனையும், கான்யாற்றுக் கருமணல் வருணனையும், விறலியரின் கேசாதிபாதவருணனையும், குடபுலம் தென்புலம் குணபுலம் இவையமைந்துள்ளவகையும், வஞ்சி கொற்கை மதுரை உறந்தையென்னும் நகரின் வருணனையும், எருமைகள் மேய்ந்து படுத்திருக்கும் நிலையும், உமணர்வளர்க்கும் மந்தி மக்களுடன் கிலுகிலிப்பை விளையாடுதலும், எழுவள்ளல்களின் அருஞ்செயலும், நல்லியக்கோடனது குணவிசேடங்களும், தன் வறுமை நிலையும், நெய்தல்நிலத்து எயிற்பட்டினத்துவாழும் நுளைச்சியர் உபசரிக்கும்வகையும், முல்லைத்தன்மையும், அங்கு வேலூரில் எயிற்றியர் விருந்துபேணும்வகையும், சிச்சிலிப்பறவை மீனைக் கவரும் தன்மையும், மருதநிலத்து உழவர்மகளிர் விருந்தினர் திறத்து நடந்துகொள்ளும் வகையும், நல்லியக்கோடனது நகரத்து வாயிலின் வருணனையும், அவன் அறிஞர் முதலியோர் தத்தமக்கு ஏற்பக் குணங்களைப் புகழ ஆயமோடிருக்கும் நிலைமையும், யாழின் வருணனையும், பரிசில் பெறுவோன் ஏத்தும் வகையும், நல்லியக் கோடன் உபசரித்துப் பரிசிலீந்து விடுத்தலும் ஆகிய விஷயங்கள் கற்போர்மனத்துப் பசுமரத்தாணிபோல நன்குபதியுமாறு மிகவும் இனிதாகக் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம்.

ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூற்றைம்பது சொற்களுக்கு மேற் பட்ட இந்தச் சிறுபாணாற்றுப்படையில், ஆரம், கலாபம், இமயம்,

நாகம், சாவம், பரிகாரம், தம்னியம், சமம், கோபம் முதலியவாகச் சில வடசொற்களே வந்துள்ளன.

அடுக்கிவரலுவமையைப்பற்றிய விளக்கம்:—"அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" என்பது தொல்காப்பியத்து உவமவியற் சூத்திரம். இதன் பொருள்:—அடுக்கிய தோற்றம் - உவமைக்கு உவமை அடுக்கிவருகிற தோற்றத்தை, விடுத்தல் - விட்டிடுவது, பண்பு - தக்க தன்மையாம் என்பது. ஆகவே, உவமையணியில் அடுக்கிவரலுவமையென்பது குற்றமென்பது, பெறப்படும். விவரிப்பு:—"மதியத்தன்ன வாண்முகம்போலும், பொதியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை" என்பதில், தாமரை என்ற உபமேயத்துக்கு முகம் உவமை: உவமையாக வந்த இந்த 'முகம்' என்பதற்கு மதியம் என்று உவமை கூறியிருப்பதால், இது "அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" என்ற சூத்திரத்தால் விலக்கப்பட்ட அடுக்கிவரலுவமையாம். "ஈர்ந்து நிலந்தோயும் இரும்பிடித்தடக் கையிற், சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென, மால்வரை யொழுகிய வாழை வாழைப், பூவெனப் பொலிந்த வோதி" என்ற சிறுபாணாற்றுப்படை (21-24) யடிகளில் அடுக்கிவரலுவமையில்லை. ஏனெனில் — விறலியருடைய குறங்கைப் பிடித்தடக்கையின் சேர்ந்துடன் செறிந்த என்றார். பின்னர் அக்குறங்கையுடைய அந்த விறலியரின் ஓதிக்கு உவமையாக வாழைப்பூவைக் கூறினார். அங்ஙனம் உவமையாகக் கூறப்பட்ட 'வாழைப்பூ' என்ற தொடரிலுள்ள வாழைக்கு 'குறங்கென' என்று உவமை கூறினாரேயன்றி, வாழைப்பூவுக்கே உவமை கூறவில்லை; ஆனால், உவமையாக வந்திருக்கின்ற 'குறங்கென' என்பதற்குத் தடக்கையின் என்று உவமை கூறியுள்ளாரே, இது உவமைக்கு உவமை வந்ததன்றோ எனின்? —அன்று: முதலிலுள்ள 'குறங்கின்' என்பது உபமேயமாய்நின்று 31-ஆம் அடியிலுள்ள விறலியர் என்பதைக் கொண்டுபோய் முடிகின்றது; பின்னர் வேறாக வந்த உவமையாகிய குறங்குஎன என்பதே வாழையைக்கொண்டு முடிகிறது; எனவே, உவமைக்கு உவமை எங்கே கூறப்பட்டுள்ளது? இல்லையன்றோ: ஆகவே அடுக்கிவரலுவமை என்று இதனைச் சொல்வதற்கு இல்லை. "இலங்குவளையன்ன நலங்கேழாம்பற், போதினன்ன தாதவிழ்கைதை" என்ற இடத்து, கைதையாகிய உபமேயத்துக்கு உவமையாக வந்தது, ஆம்பற்போது: உவமையான அந்த ஆம்பற்போது என்பதற்கும் இலங்குவளையன்ன என்று வேறு ஓர் உவமை கூறப்பட்டிருக்கின்றது; அதனால், இது தொல்காப்பியனாரால் விலக்கப்பட்ட அடுக்கிவரலுவமையாம்: ஆகவே இங்ஙன் வருதல் கூடாது என்க.

வெண்பா.

1. அணியிழையார்க் காரணங் காகிமற் றந்நோய்
தணிமருந்துந் தாமேயா மென்ப—மணிமிடைபூண்
இம்மென் முழவி னெயிற்பட் டினநாடன்
செம்மல் சிலைபொருத தோள்.

(இ - ள்.) இம்மென் முழவின் எயிற்பட்டினநாடன் - இம் மென்னும் ஓசைபட ஒலிக்கும் முழவினையுடைய எயிற்பட்டினத் தைக்கொண்ட [நெய்தனில] நாட்டையுடையவனும், செம்மல் - தலைமையையுடையவனும் ஆகிய நல்லியக்கோடனின், மணி மிடை பூண் - மணிகள் செறிந்த ஆபரணங்களைப்பூண்ட, சிலை பொருத - மலையொடு மாறுபட்ட [திண்ணிய], தோள் - தோள்கள்,—அணி இழையார்க்கு - அணிந்த ஆபரணங்களையுடைய மகளிர்க்கு, ஆர் அணங்கு ஆகி - பொறுத்தற்கரிய வருத்தத்தைச் செய்வதற்குக் காரணமாகி, மற்று - பின், அ நோய் - அந்த விரகநோயை, தணி மருந்துஉம் தாமேயாம் என்ப - தணிக்கின்ற மருந்தாகப் பயன்படு வதுமாம் என்று கூறுவர் (உலகோர்); (எ - று.)

இதனால், நல்லியக்கோடனின் இன்பச் சிறப்புக் கிளந்தவாறு. ஆடவர்க்குச் சிறந்த உறுப்புத் தோளாகலின், அதனை விதந்தோ தியபடி. 'சிலை பொருத தோள்' என்றது, திண்மை குறிக்க வந்தது. தோளினாய நோய்க்கு மருந்தும் அத்தோளே யாயிற்று, 'அணியிழை, தன்னோய்க்குத் தானே மருந்து' என்றவிடத்துப் போல. இம்மென் - ஒலிக்குறிப்பு. முழவொலித்தல் வளமைச்சிறப் புத் தெரிக்கும்; 'முழவங் கண்டுயிலாத முதுநகர்' என்றார் சிந்தாமணி யாரும். எயிற்பட்டினம் நெய்தனிலத்ததென்பதை 150 - 153 வரி களிற் காண்க. 'மற்று' என்னும் இடைச்சொல், 'பின்' என்னும் பொருளிலும் வருமென்பதை " மற்றிவளும் கோறகண்ணனாகும் குனிந்து" என்ற விடத்தாலும் அறிக. 'என்ப' என்பதற்கு எழு வாய் வருவிக்க.

2. நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் பாம்பேர் மருங்குல்—இடுகொடி
ஓடிய மார்ப னுயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்.

(இ - ள்.) இடு கொடி ஓடிய மார்பன்-எழுதுகொடி பொருந்திய மார்பையுடையவனாகிய, உயர் நல்லியக்கோடன் - சிறந்த நல்லியக் கோடன் என்பான், சூடிய கண்ணி - தரித்த முடிமாலையானது,— நெடு வரை சந்தனம் நெஞ்சம் குளிர்ப்ப படும் - நீண்ட வரையிடத் துக்கிளைத்த சந்தனமரத்தாலாக்கிய சாந்தம் நெஞ்சமும் குளிரும்படி

பெய்த [பூசிய], அடும் பாம்பு ஏர் மருங்குல் - (படமெடுத்து) வருத்துகின்ற பாம்பினையொத்த இடுப்பினையுடைய மகளிரை, சுடும் - மிக வருத்தும்; (எ - று.) கண்ணி மருங்குல் சுடும் என இயையும்.

இப்பாட்டால், அவன் கண்ணி 'அணியிழையார்க்கு ஆரணங் காதல்' பெறவைக்கப்பட்டது. நல்லியக்கோடன்பாற் காதல் கொண்ட மகளிர், அவனணிந்த கண்ணியையாயினும் பெற்றுத் தரிக்கலாமெனப் பார்க்க, அதுவும் கிடைக்காமையால் மிக வருந்துவர் என்றபடி. காதல்கொண்ட மகளிர் தாம் விரும்பிய தலைவனது மாலையையாயினும் பெறவிரும்பிப் பேதுறுதலை "மாலை தந்தவர் பைந்துழாய்மதுமாலை தந்திலர்" (திருவரங்கக்கலம்பகம்: 27), "மாற்றொன்றிலையென் மருந்துக்கந்தோ சொக்கர் மாலைகொடார்" (மதுரைக்கலம்பகம்: 5) முதலிய தொடர்களாலும் உணரலாம். இடு கொடி - எழுதுகொடி. ஆடவர் எழுதுகொடியை யணிந்த மார்பினையுடையராதலை 'இடுகொடியணிந்த மார்பர்' (சிந்: 2145), 'கொடி மார்பினர்' (சிந்: 2264) 'கொடியணிந்த வியரலங்கல்வரைமார்பன்' (சிந்: 2483) என்ற விடங்களாலுணர்க. நெஞ்சமும் குளிரும்படி சாந்தம் பூசப்பட்டிருப்பினும், அவன் கண்ணி சுடும் எனவே, அவனைப் பிரிந்த மகளிர் பிரிவாற்றாமையாற் படுகிற துன்பமிகுதி தெரித்தவாறு. படுதல் - பெய்தல்: "படுமழையாடும் வரையகம்' என்றது கலித்தொகை (103). ஏர்தல் - ஒத்தல்; இப்பொருளில் வருதலை "பிணையேர் மடநோக்கு" (குறள் 1089), 'முத்தேர் முறுவலாய்' (இனி. நாற்: 2) என்ற விடங்களிலுங் காண்க. மருங்குல் - இடுப்பு: இடுப்பினையுடைய மகளிர்க்கு ஆகுபெயர்.

[ஸ்ரீ. ஜெகந்நாதாசார்யர்.]

சிறுபாணாற்றுப்படையின்

அரும்பதவகராதி முதலியன

அ

அகளம் - பத்தர், 224
அகில், 116
அகிலுணவிரித்த அம்மென் கூந்தல், 263
அங்கை, 74
அசைஇ - தங்கி, இளைப்பாறி, 12; வருத்தி, 17
அசைஇய - ஓய்ந்த, 32
அஞ்சினர்க்களித்தல், 210
அஞ்சுவரு - அச்சந்தோன்றுவதான, 94
அட்ட, 175 [அடுதல் - சமைத்தல்]
அட்டில் - அடுக்களை, 132
அடிசில் - உணவு, 241
அடும்பாம்பு, (வெண்பா)
அடும்பாம்பேர்மருங்குல், (வெண்பா)
அடை - இலை, 182
அடைகரை, 68
அடையாவாயில், 206
அண்ணல் - தலைமை, 200
அண்ணல் யானை, 200
அணங்கு - வடிவு, 86; வருத்தம், (வெண்பா)
அணியிழையார், (வெண்பா)
அதாஅன்று, 50, 67, 83 [அது + அன்று]
அந்தணர் அருகா நகர் ஆமூரெனல், 187-88
அதிகன், 103
அம் - அழகிய, 263
அமர்தல் - நெஞ்சு பொருந்துதல், 97
அமலைவெண்சோறு, 194
அமிழ்து - ஓசையினிமைக்கு வந்தது, 227
அமிழ்துவிளை தீங்கனி நெல்லி, 101
அமைவர - அமைய [பசிகெட], 177
அயில் - வேல், 7; கூர்மை, 52
அயில்வாய்-கூரியவாய்; என்றது சூட்டிற்கு ஆகுபெயர், 253
அயிலுளி, 52
அரக்கு - சாதிலிங்கம், 74, 256
அரக்குத்தோய்ந்தன்ன சேயிதழ், 74-75
அரவம் - ஆரவாரம், 103
அரற்றும் - ஆரவாரிக்கும், 24
அரி - செவ்வரி, 215
அரித்த - தின்ற, 133
அரியேருண்கண், 215
அரிவையரேத்துதல், 213-215
அருங்கடைவாயில், 206
அருமறைநாவினந்தணர், 204
அரை - தண்டு, 183
அலவன்-ஞெண்டு, நண்டு, 195
அவரை பவழம்போலப் பூக்கலைத் தொடுத்தல், 164
அவிர்தல்-விளங்குதல், 25, 174
அவிழ்தல்-நெகிழ்தல், 29; மலர்தல், 73, 161
அவிழ்ந்துவீங்குதிவவு, 222
அவைப்பு - குற்றுதல், 194
அழல் - சினத்தீ, 94
அழல்திகழ்ந்திமைக்கும்வேல், 94
அழன்ற வேல், 234
அழிபசி, 140
அழிபடை, 211
அழிபடைதாங்கல், 211
அறல் - கருமணல், 6 ; தாளவறுதி, 162
அறிந்தோரேத்துதல், 207-209
அறிவுநன்குடைமை, 216
அறிவும்டம்படுதல், 216

அறுவை-உடை, 236
அறை வாய்-வெட்டின வாய், 52

ஆ

ஆகு - குற்றம், 74
ஆணணிபுகுதல், 211
ஆமான், 177
ஆமூர், 188
ஆய், 99
ஆய் ஆர்வநன்மொழியுடையன் எனல், 99
ஆயம் - திரள், 220
ஆர்வநன்மொழி, 99
ஆரஞ்சூழ்ந்த அயில்வாய் நேமி, 253
ஆரம் - ஹாரம், முத்துவடம், 2; சந்தனம், 116
ஆலமர்செல்வன், 97
ஆவியர், 86
ஆனாது - அமையாமல், [பல காலும் என்றபடி], 230
ஆனா விருப்பு, 245

இ

இகந்து - இர்ந்து, 40
இகுத்தல் - தாழ்தல், 13
இடுகொடி - எழுதுகொடி, (வெண்பா)
இடுகொடி ஓடிய மார்பன், (வெண்பா)
இம்மென் முழவு, (வெண்பா)
இமயம், 48
இயங்கா வையம் - உலகம்; [வெளிப்படை], 38
இயல் - நடக்கின்ற, 49; தன்மை, 60
இயல்தேர், 49
இயம் - வாச்சியம், 125
இரு - கரிய, 139, 193
இருக்கை-குடியிருப்பு, 78
இரும்பேரொக்கல், 139, 144
இலங்கைபெயரிய இலங்கை, 119-120
இலிற்றும் - துளிக்கும், 227
இழை - அணி; சிலம்பு முதலியன குறிப்பது, 18
இளங் கள், 45
இளஞாயிறு-உதயசூரியன், 243
இளையோர்-வீரர், 232 (மகளிருமாம்)
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை, 232
இறகுளர்தல் - சிறகுகளை அசைத்தல், 76
இன்குரற்சீறியாழ், 35
இன்புளிவெஞ்சோறு, 175
இன்முகமுடைமை, 208
இன்னகையாயம், 220
இன்னியம், 229
இனியனுதல், 208

ஈ

ஈகைச் செந்நுகம்-கொடையாகிய செவ்விய பாரம், 113
ஈர்தல் - இழுத்தல், 19
ஈர நன்மொழி, 93

உ

உகிர் - நகம், 136, 199
உகைத்தல் - தள்ளுதல், 199
உடீஇ - உடுத்து, 236
உண்கண்-மையுண்ட கண், 215
உப்பிலி வெந்தது, 137
உமட்டியர் - உப்பு வாணித்தியர், 60
உமட்டியரீன்ற புதல்வரொடு மதிகள் கிலுகிலியாடுதல், 56-61
உமணர் - உப்புவாணிகர், 55
உயங்குதல் - வருந்துதல், 17
உருப்பவிர் குரம்பை, 174
உருப்பு - வெம்மை, 7, 8, 174
உரும் - உருமேறு, 256
உருமு - இடியேறு, 80

உருமு எறிதல், 266
உருமுச்சுவல் சொறியும், 80
உரவு - வலி, 102
உரன் - அறிவு, 115, 190
உருவ வான்மதி, 251
உலக்கை, 193
உலக்கையின் இரும்பு முகம், 193
உலறிய அடி - பொலிவழிந்த அடி, 18
உலேஇய-வருந்துகின்ற, 174
உழந்த - வருந்தின, 3
உளர்தல்-அசைதல், 60; அசைத்தல், 76
உளே - தலையாட்டம், பிடரிமயிர், 92
உறந்தை - உறையூர், 83
உறழ் - மாறுபடும், 49, 112
உறுபுலித்துப்பு, 122
உறுவெயில், 174
உறைத்தல் - உதிர்த்தல், 71; துளித்தல், 51, 88

ஊ

ஊகம் - கருங்குரங்கு, 221
ஊகம் பாம்பு பிடித்தல், 221
ஊர் - ஊர்கோள், 251

எ

எயில் - அரண், 247
எயிற்கதவம், 80
எயிற்பட்டினநாடன், (வெண்பா)
எயிற்றியர், 175
எயிறு - பல், 28, 196
எரி-நெருப்பு, 196
எரிமறிந்தன்ன நா, 196
எருத்து - கழுத்து, 189
எருந்து - கிளிஞ்சில், 58
எருமை கழுநீர்ப்பூவை மேய்தல், 42
எருமையின் முதுகை மஞ்சளிலே நைதவரல், 44
எவ்வம் - வருத்தம், 39
எழு - கணையம், 49, 112
எழுவர்பூண்ட ஈகைச் செந்நுகம் ஒருதான் தாங்கியவன் நல்லியக்கோடன் எனல், 113-115
எழுவுறழ்திணிதோள், 49, 112
எள்ளுதல்-இகழ்தல், 25, 243
எறிதல் - அழித்தல், 81

ஏ

ஏக்கறுதல் - ஏக்கங்கொள்ளுதல், இளைத்து இடைதல், 157
ஏமம் - காவல், 76
ஏர் - பொருந்தின, 215
ஏர்தல் - ஒத்தல், (வெண்பா)
ஏரோர் - ஏரினையுடைய குடிமக்கள், 233
ஏரோர்க்கு நிழன்ற கோலினை, 233
ஏற்றருஞ்சென்னி, 266

ஐ

ஐது - மெத்தென, 7; மெல்லிதாய், 13
ஐது நடத்தல், 7
ஐம்பால் - கூந்தல், 60

ஒ

ஒக்கல் - சுற்றம், 139
ஒட்டகந் துயின் மடிந் தன்ன திரை, 154-55
ஒதுங்கி - நடந்து, 41
ஒருவழிப்படாமை, 214
ஒல்குதல் - தளர்தல், நுடங்குதல், 135
ஒழுகிய - ஒழுங்குபட வளர்ந்த, 21; ஒழுங்குபட்ட, 224
ஒழுகை - வண்டியொழுங்கு, 55
ஒளிதிகழ்நெடுவேல், 102
ஒன்னார் - பகைவர், 47, 63, 79

ஓ

ஓங்குநிலே ஒட்டகம், 154
ஓடாப்பூட்கை, 83
ஓடியதுணர்தல், 214

ஓதி - கூந்தல் முடிச்சு, 22
ஓரிக்குதிரையையுடையவன் ஓரி, 111
ஓவம் - சித்திரம், 70
ஓவியர், 122

ஔ

ஔவைக்கு நெல்லிக்கனி யீந்தவன் அதிகன் எனல், 100-103

க

கஞலிய - நெருங்கின, 108
கடம்பு, 69
கடலுலாய் நிமிர்தல், 150
கடவுண்மால்வரை - மேருமலை, 205
கடற்றுனை, 103
கடனறிந்து - முறைமையறிந்து, 37
கடனறிந்தியக்குதல், 37
கடர்வுறுப்ப - வெம்மையைச் செலுத்த, 10
கடி - காவல், 187
கடுந்தேர் - விரைந்து செல்லுந் தேர், 65
கடுப்ப, 225
கடையடைத்தல், 138
கண்ணார்கண்ணி, 65
கண்ணி - நெற்றிமாலை, 54, 65, 267, (வெண்பா)
கண்விடுத்தல் - கண்ணைவிழித்துப்பார்த்தல், 205
கணச்சிதல் - திரண்ட கறையான், 133
கணை - அம்பு, 238
கதவம், 80
கதிர் - கிரணம், 243, 250
கதுப்பு - மயிர், 6, 14
கய - பெரிய, 42
கயவாய், 42
கருதியதுமுடித்தல், 213
கருந்தொழில் வினைஞர், 257
கரும்புகைச்செந்தீ, 156
கருமறி - வெள்ளாட்டுக் குட்டி, 197
கரைகொல் - கரையைக் குத்துகின்ற, 4
கல்லா இளையர், 33
கலவை, 195
கலாபம் - தோகை, 15, 264
கலிங்கம் - போர்வை, 85; உடை 96
கவாஅன் - பக்கம், 84
கவினிய - அழகுபெற்ற, 100
கவுள் - கதுப்பு, 140
கவை - பிளவுபட்ட, 195, 197
கவைத்தாள் அலவன் - பிளவுபட்ட காலினையுடைய நண்டு, 195
கழல்தயங்கு திருந்தடி, 123
கழல்தொடி, 95
கழாஅல - கழற்ற, பூக்க, 148
கழை - மூங்கில், 265
கள் - தேன், 45
களிற்றுத்தழும்பிருந்த அடி, 123
கற்பின் மிகுதிதோன்ற முல்லை சூடுதலியல்பு, 30
கறங்கு - ஒலிக்கின்ற, 91
கறி - மிளகுகொடி, 43
கனிந்து - முற்றுப்பெற்று, 14

கா

கா - [காண்டவ] வனம், 238
காஞ்சி - ஒருமரம், 179
காண்டவவனத்தை அருச்சுனன் எரியூட்டியமை, 238-239
காந்தள் கைவிரல்போலப் பூத்தல், 167
காம்பு - மூங்கில், 236
காம்புசொலித்தன்ன அறுவை, 236
காமரம் - சீகாரமென்னும் பண், 77
காமரு தும்பி, 77
காமுறப்படுதல், 213

காயா, 165
காயா மயிலின் கழுத்துப் போலப் பூத்தல், 165
காரி, 95
காரிக்குதிரையை யுடையவன் காரி, 110
கால் - தாள், 149, 179
காவெரியூட்டியகணை, 238
காழ் - கருமை, 6; கழி, 133; வயிரம், 193
காழ்சேர் அட்டில், 132-33
காளாம்பி - காளான், 134

கி

கிடங்கில் - ஓர் ஊர், 160
கிடங்கிற் கோமான் - நல்லியக் கோடன், 160
கிடங்கு - அகழி, 188
கிணைமகள், 136
கிலுகிலி-கிலுகிலிப்பை, 61
கிளிஞ்சிலினுள் முத்துக்களை யிட்டு மூடிக் கிலுகிலிப்பை யாக் கொள்ளல், 57-61
கிளை - கொத்து, 160

கு

குட்டம் - ஆழம், 180
குட்டுவன், 49
குடபுலங்காவலர் - சேரர், 47
குடபுலம், 47
குணபுலம், 79
குதிரையொடு நாட்டையும் ஈந்தவன் காரி எனல், 92-95
குப்பைவேளை, 137
குமிழின் கனிநிறத்தை யொத்தது போர்வை, 225-26
குயில்குடைந்துதிர்த்தல், 4
குரம்பை-குடிசை, குடில், 174
குரல்குரலாகப்பண்ணுதல், 229-30
குருளை - குட்டி, 130
குல்லை-கஞ்சங்குல்லை, 29
குல்லையம்புறவு, 29
குழல்-குழல்மீன், 163
குளவி-காட்டுமல்லிகை, 46
குளவிப்பள்ளி, 46
குறங்கென வளர்ந்த வாழை, 20-21
குறங்கு-துடை, 20
குறடு-அச்சுக்கோக்குமிடம், 252
குறிஞ்சிக்கோமான் -நல்லியக்கோடன், 267
குறுங்காற்காஞ்சி, 179
குறுந்துணி-குறிய கட்டை, 52
குறும்பொறை-குறியமலை, 109
குறைத்த-கிள்ளின, 136
குறைதல்-துணிபடல், 41

கூ

கூருளி, 252

கே

கேணி, 172
கேழ் - நிறம், 246
கேள்வி - இசை, 228

கை

கைவல்பாண்மகன், 37
கைவினைமுற்றுதல், 257

கொ

கொங்கு - தாது, 71; தேன், 184
கொட்டங்கொள்ளுதல் - கொட்டம் போலும் பூவைத் தன்னிடத்தே கொள்ளுதல், 166 [கொட்டம் - பனங்குருத்தாற் செய்த ஒருவகைச் சிறிய பெட்டி]
கொய்தளிர்க்கண்ணி, 267
கொழுங்கொடிமுசுண்டை, 166
கொழுமீன், 41
கொள்கை - எண்ணம், 126
கொற்கை, 62
கொற்கைக் கோமான் - பாண்டியன், 62

கோ

கோங்கு, 25
கோடியர் - கூத்தர், 109, 125

கோடியர் புரவலன் நல்லியக் கோடன் எனல், 125 - 26
கோடு - சிகரம், 106; யாழின் தண்டு, 222; மலை, 265
கோண்மீன் - கிரகங்கள், 242
கோதை - மாலை, 69, 178
கோபம் - இந்திரகோபம், 168
கோவம் - இந்திரகோபம், 71
கோள் - குலை, 27

ச

சமம் - போர், 112

சா

சாஅய் - ஓடியிளைத்து, 16
சாந்து - சந்தனம், 98
சாந்து புலர் தோள், 98
சாய்செவிக்குருளை, 130
சாயல் - மென்மை, 16
சாவம் - வில், 98
சாறயர் மூதூர், 201
சாறு - விழா, 201

சி

சிதர் - சிந்துதல், சிச்சிலி, வண்டு, 254
சிரல் - சிச்சிலிப் பறவை, 181
சிரல் கயலை முழுகியெடுத்தல், 181
சிரலினது உகிர் கிழித்தவடு பாசடையிலமூந்துதல், 181-82
சில்வளையாயம், 176
சிலமொழியா அளவை, 235
சிலைபொருத தோள், (வெண்பா)
சிற்றினமின்மை, 207
சிறுகண்யானை, 142
சினங்கனலும் வேல், 102
சினை - கொம்பு, 23

சீ

சீறடி - சிறிய அடி, 32
சீறியாழ் - சிறிய யாழ், 35

சு

சுடர்கான்மாறிய செவ்வி - அந்திக்காலம், 171
சுணங்கு - அழகுதேமல், 24
சுணங்கு பிதிர்தல், 24
சுரன் - சுரம், கானகம், 12
சுரும்பு - வண்டு, 24, 87
சுவல் - கழுத்து, 80
சுவல் சொறிதல், 80

சூ

சூடியகண்ணி சுடும், (வெண்பா)
சூடு - சூட்டிறைச்சி, 163, 177 [சூடு - சுடப்பட்டது]
சூரியன் அத்தகிரியில் மறைதல் 170-71
சூல் - கருப்பம், 148

செ

செப்பம்-செப்பு என்னும் அணி, 53
செம்பியன் - சோழன், 82
செம்மல் - வாடல், 5; தலைமை, 145, (வெண்பா)
செம்மலுள்ளம், 145
செய்ந்நன்றியறிதல், 207
செருந்தி, 147
செருந்திப்பூ பொன்போலிருத்தல், 147
செல்லிசை நிலைஇய பண்பு, 268
செவிமுதல் - காதுகளினடி, 54
செழியன் - பாண்டியன், 65
செறிந்து விளங்குசிறப்பு, 209
சென்னி - சிகரம், 266

சே

சேணோங்கு நெடுஞ்சினை, 254
சேய்த்து, 202
சேய்வரற்கான்யாறு, 3
சேயிதழ்பொதிந்த செம்பொற் கொட்டை, 75
சேரர் இமயத்து விற்பொறித்தமை, 48
சேவல் - வண்டின் ஒழுங்கு, 184

சொ

சொலித்தன்ன - உரித்தாலொத்த, 236

த

தகையோன், 161
தடக்கை, 95, 105, 124
தண்பணை - மருதநிலம், 78; குளிர்ந்தவயலிடம், 186
தணிமருந்து, (வெண்பா)
தத்துநீர் - (அலை) முறிகின்ற நீர், 62
தத்துநீர்வரைப்பு, 62
ததர் - செறிந்த, கொத்து, 255
தமனியம் - பொன், 147
தமிழ்நிலைபெற்ற மதுரை, 66-67
தயங்கு - அசைகின்ற, 141
தழீஇ - தழுவி, 76
தழீஇய, 78
தளராவிருக்கை - அசையாத குடியிருப்பு, 78
தளை - அரும்பு, 161
தளையவிழ்தெரியல், 161
தறுகண் - கொடுமை, 141

தா

தாங்கரும்மரபு, 66
தாழை அன்னம்போலப் பூத்தல், 146
தாள் - முயற்சி, 115; கால், 259
தானுடனிருந்து உண்ணப்பண்ணுதல், 245
தானை - சேனை, படை, 103

தி

திருந்தடி - பிறக்கிடாத அடி, 123
திவவு - நரம்புதுவக்கும் வார்க்கட்டு, 222
திறல் - வலிமை, 86; 246
திறல்சால்வென்றி, 246

தீ

தீ மாட்டி - நெருப்பையெரித்து, 156

து

துஞ்சுதல் - தங்குதல், 106
துணிமழை - தெளிந்த மேகம், 265
துணை - இணைதல், 69; பெடை, 76
துப்பு - வலி, 122
தும்பி - ஆண்வண்டு, 77
துயர் ஆற்றுப்படுத்தல், [துயர்-வறுமை], 39
துயல் - அசைகின்ற, 265
துயல்வரல் - கிடந்தசைதல், 2
துயில் மடிதல் - உறக்கத்தே கிடத்தல், 154
துளங்கியன்மகளிர், 262
துறு - நெருங்குகின்ற, 69
துறையாடு மகளிர்க்குச் சுரபுன்னைக்கட்டையும் அகிற்கட்டையும் சந்தனக்கட்டையும் தோட்புணையாதல், 116-17
துனி - வெறுப்பு, 39
துனிகூரெவ்வம், 39

தூ

தூங்கெயில் - சஞ்சரிக்கின்ற மதில், 81
தூங்கெயிலெறிந்த செம்பியன், 81-82
தூணி - அம்புப்புட்டில், 238

தெ

தெய்வத்தாமரை, 73
தெரியல் - மாலை, 161
தெவ்வு - பகை, 246
தெவ்வுப் புலமகற்றுதல், 246
தென்புலங்காவலர்-பாண்டியர், 63
தென்புலம், 63

தே

தேமாமேனி, 176
தேரோர், 234

தேரோர்க்கு அழன்ற வேலினை, 234
தேறல் - கள்தெளிவு, 237

தை

தைவரல் - வருடல், தடவல், 33, 44

தொ

தொடி-தோடா என்னும் அணி, 81; வளையல், 192
தொன்மாவிலங்கை - இராவண னது இலங்கை, 119

ந

நகார் - பல் [ஆகுபெயர்], 57
நச்சுதல் - விரும்புதல், 23
நசைஇ - விரும்பி, 38
நட்டோர், 104
நணியது, 202
நயந்தனிர், 269
நயந்து - விரும்பி, 144
நயம் - இனிமை, 36
நயவர் - விரும்பிவந்தோர், 248
நல்கூர் நுசுப்பு-நுண்ணியதான இடை, 59
நல்லியக்கோடன், 126, 269, (வெண்பா)
நள்ளி, 107
நளி - செறிவு, 23, 57, 107
நளிசினை, 107
நளிமலை, 107
நளிமலைநாடன்நள்ளி, 107
நறவு - தேன், 51
நறுவீநாகம், 116
நறுவீயுறைக்கும் நாகம், 88
நன்மாவிலங்கை - நல்லியக்கோட னின் நகர், 120
நனை - தோன்றப்பெற்ற, 67; அரும்பு, 164, 165, 254

நா

நாகம் - சுரபுன்னை, 88, 108, 116; பாம்பு, 96
நாகம் நல்கிய கலிங்கம் இறைவ னுக்கு ஈந்தவன் ஆய் எனல், 96-99
நாகு - இளமை, 51, 108
நாகுமுதிர் நுணவம், 51
நாட்போது, 183
நாய்நா அடிக்கு உவமை, 17-18

நி

நிணனுண்டு சிரித்த தோற்றம், 198
நித்திலம் - முத்து, 149
நிலையருங்குட்டம், 180
நிவந்த - படர்ந்த, 43; வளர்ந்த, 68
நிழல் - ஒளி, 95
நிழன்ற - நிழலைச்செய்த, 233
நிழன்றகோல், 233
நின்ற-நிலைபெற்ற, 9, 11

நீ

நீர் - நீர்மை, தன்மை, 57, 69
நீலச்செங்கட்சேவல், 184
நீறு - புழுதி, 201

நு

நுகம் - இலக்கணையால், பார மென்ற பொருளையுணர்த் திற்று, 113
நுங்கின் இன்செறிநீர், 28
நுசுப்பு - இடை, 59
நுண்பொருட்பனுவல், 240-41
நுணங்கறல், 6
நுணவம் - நுணமரம், 51
நுதிவேல், 158
நுதிவேல்நோக்கு, 158
நுளைமகள், 158
நுளைமகள் அரித்த தேறலைப் பர தவர் மடுத்தல், 158-59

நூ

நூனெறிமரபு, 230

நெ

நெடுங்காற்புன்னை, 149
நெய்-எண்ணெய், 14

நே

நேமி - உருளை, 253

நை

நைவளம் - நட்டபாடை யென்னும்பண்; இக்காலத்து நாட்டையென்ப, 36
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை, 36

நோ

நோக்கு - பார்வை, 158
நோன் - வலிமை, 55, 115, 190, 252, 259
நோன்பகடு, 190
நோன்ருள் - வலிய முயற்சி, 115; வலியகால், 259
நோனுது - பொறுத்தலாற்ருது, 131

ப

பகடு - எருது, 55, 190
பச்சை - போர்வை, 226
படப்பை - தோட்டம், 160
படு - குளம், மடு, 153
படுதல் - பெய்தல், பூசுதல், (வெண்பா)
பணை - மூங்கில், 1; வயல், 186; பெருமை, 199
பதம் - செவ்வி, 9
பரல் - பருக்கை, 8
பரிகாரம் - பொருள்கள், 104
பரிசில், 261
பரிசில்வாழ்க்கை, 218
பரிசிலரேத்துதல், 218
பருவவானம், 250
பல்வேறடிசில், 241
பழுநிய - முற்றுப்பெற்ற, 36
பறம்பு - பறம்புமலை, 91
பறம்பிற் கோமான் பாரி, 91
பன்மீன்நடுவண் பான்மதி, 219
பனிவரை - இமயமலை, 240
பனுவல் - நூல்; இங்கே, மடை நூல், [பாகசாஸ்திரம்] குறிப்பது, 241

பா

பாகர் - மரத்தினுலியன்ற தேரின் சுற்றுச்சுவர்; ஆகுபெயரால் தேரினைக்காட்டிற்று, 258
பாசடை - பசியஇலை, 182
பாடல்சான்ற நெய்தல், 151
பாடுதுறை, 228
பாடுதுறை முற்றுதல், 228
பாண்டில் - எருது, 260
பாணர், 248
பாணி - தாளம், 162
பாணி தூங்கியவர் - தாளத்திற் கொப்ப ஆடின மகளிர், 162
பாம்பு, 237
பாம்புவெகுண்டன்ன தேறல், 237
பாயல் - படுக்கை, 46
பாயல்கொள்ளுதல், 46
பாரி, 91
பாலை - பாலைத்தன்மை, பாலை நிலம், 11; பாலையாழ், 36
பாலைநின்றபாலை, 11
பாற்கதிர், 250
பான்மதி, 219

பி

பிடிக்கணஞ்சிதறும் கை, 124
பிடிக்கையன்ன பின்னு, 191
பிடியின் தடக்கை நிலந்தோய்தல், 19
பிணியவிழ்தல் - முறுக்கு நெகிழ்தல், 255
பிதிர்தல் - சிதறல், 24
பின்னு - பின்னின மயிர், 191

பு

புகழோன் - அருச்சுனன், 239
புகழோன் தன்முன் - வீமசேனன், 239
புதல்வர், 61
புரவி - குதிரை, 92
புரி - முறுக்கு, 34, 227
புரியடங்குநரம்பு, 227
புல்லெனட்டில், 132
புலம் - நிலம், 47, 48, 63, 79 246
புலமகற்றுதல் - நிலத்தைக் கைவிட்டுப் போகப்பண்ணுதல், 246
புலவர் - அறிவுடையோர், 203
புலவு - புலால் நாற்றம், 181
புழல் - உட்பொய்யாகிய, 134
புழற்காளாம்பி, 134
புறம் - முதுகு, 44, 191
புறம் மறைத்தல் - பழிச்சொல்லைப் போக்குதல், 59
புறவு - காடு, 29, 169
புன்கண் - துன்பம், 248
புன்னை முத்துப்போல அரும்பு கொள்ளுதல், 149
புனிறு - ஈன்றணிமை, 132

பூ

பூ - பூத்தொழில், 239
பூட்கை - மேற்கோள், 83, 141
பூவிரிகச்சை, 239
பூழி - புழுதி, 134

பெ

பெண்ணை - பனை, 27
பெயல் - மழை, 13
பெயன்மழைத்தடக்கை, 124

பே

பேகன், 87
பேய்மகள், 197
பேரிசை - பெரிய புகழ், 125

பை

பை - பசுத்த, 164
பைங்கண் ஊகம், 221
பைங்கறி - பசிய மிளகுகொடி, 43
பைந்நனை அவரை, 164

பொ

பொய்கை - மானிடராக்காத நீர்நிலை, 68
பொருநர் - சிணைப்பொருநர், 203
பொருபுனல், 118
பொழிகவுள், 140
பொற்கலம், 244
பொறித்தல் - வைத்தல், 48
பொன்வாய்மணிச்சிரல், 181
பொன்வார்ந்தன்ன புரியடங்கு நரம்பு, 34

போ

போக்கருமரபு, 118
போது - மலர், 108
போர்வை - பலகை, 256

ம

மகடூஉ - மகள், 192
மகமுறைதடுப்ப, 192
மகாஅர் - பிள்ளைகள், 56
மகாஅரன்ன மந்தி, 56
மகிழ் - மகிழ்ச்சி, 67
மஞ்சு, 264
மஞ்ஞை - மயில், 85
மடமானோக்கு, 31
மடவோர் - மகளிர், 56, 138
மடவோர் காட்சி நாணுதல், 138
மண்மாறுகொள்ளல், 64
மணிநிரைத்தன்ன வனப்பு, 223
மணிநீர்வைப்பு, 152
மணிவயிற்கலாபம், 15

மதவருவி துகளவித்தல், 200
மதன் - வலி, 259
மதி ஏக்கறூஉம் மாசறு திரு முகம், 157
மதிசேரரவு, 185
மதிலொடு பெயரிய பட்டினம் - எயிற்பட்டினம், 152-153
மதுரை, 67
மந்தி, 56
மயில் மயில் குளிக்குஞ் சாயல், 16
மயிலுக்குப்போர்வை யீந்தவன் பேகன், எனல், 85 - 87
மராஅம் - கடம்பு, 12
மருங்கு - இடம், 70; பக்கம், 141
மருங்குல்-இடை, 135; இடுப்பு; மகளிர்க்கு ஆகுபெயர் (வெண்பா)
மருதஞ்சான்ற மருதம், 186
மருமான் - குடியிலுள்ளோன், 47, 63, 79
மலைக்கவாஅன்-மலைப்பக்கம், 84
மற்று - பின், (வெண்பா)
மறு - குற்றம், 121
மறுகு - தெருவு, 67

மா

மா - குதிரை, 259
மாண் - மாட்சிமைப்பட்ட, 194
மாநிலமடந்தை, 1
மால் - பெருமை, 20, 99
மான - ஒப்ப, 185

மி

மிளகுகொடி பலாவில் படர்தல், 43

மீ

மீக்கூற்றம் - மேலாகியசொல், 212
மீன் - நட்சத்திரம், 219

மு

முகிழ் - அரும்பு, 183
முகிழ்த்தல் - குவித்தல், 231
முகை - அரும்பு, 25, 29, 72
முகையுடைதல் - முகை நெகிழ்தல், 72
முசுண்டை கொட்டங் கொள்ளுதல், 166
முட்டாது - தட்டுப்படாது, 105
முட்டாது கொடுத்தல், 105
முண்டகம் - கழிமுள்ளி, 148
முண்டகம் நீலமணிபோலப் பூத்தல், 148
முத்தம் - முத்து, 57
முதல் - அடி, 12
முதுசுவர், 133
முதுவாய் - பேரறிவு வாய்த்த, 40
முதுவாயிரவல, 40
முதுவோர், 231
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை, 231
முருக்கி - அழித்து, 247
முருக்கு, 254
முல்லைக்குத் தேரீந்தவன் பாரி எனல், 89-91
முல்லை சான்ற கற்பு, 30
முல்லைசான்ற முல்லையம் புறவு, 169
முலைகவர்தல் - முலையையுண்ணுதல், 131
முள்ளரைத்தாமரை, 183
முன் - முன்பிறந்தவன், தமையன், 239
முனிவு - வழிவருத்தம், 40
முனை - போர்முனை, பகைப்புலம், 105

மெ

மெல்குபு - மென்று, 45
மெல்குபு பெயர்தல் - மென்று அசையிடுதல், 45

மெல்லியல், 30

யா

யாணர் - புதிது, 25

வ

வகையமைமயகளம், 224
வஞ்சி - சேரரின் தலைநகரம், 50
வடபுலம், 48
வடுவாழ்நோன்குறடு, 252
வடுவில் வாய்வாள், 121
வண் - பெரிய, 27
வண்முகை - பெரியமுகை, 72
வயவர் - வீரர், படைத்தலைவர், 212, 249
வயவரேத்துதல், 210-212
வயிறு - பத்தரின்நடு, 224
வயின் - பக்கம், 35; இடம், மனை, 163
வயின்வயின் பெறுதல், 163
வரிசையறிதல், 217
வரிநிழல் - செறியாத நிழல், 12
வருதும், 143
வருபுனல் - பெருகுகின்ற நீர், 50
வருமுலையன்ன முகை, 72
வரையாதுகொடுத்தல், 217
வலம் - வெற்றி, 189
வலம்பட நடக்கும், 189
வலவன் - பாகன், 260
வழாஅ - தவறுமல், 241
வழிநாள்-பின்னாகிய நாள், 9
வள் - பெரிய, கூரிய, 136
வள்ளியோர், 38
வள்ளுகிர், 136, 182
வளன்பாடுதல், 128
வளி - காற்று, 106
வளிதுஞ்சும் நெடுங்கோட்டு மலை, 106-7
வறல் - உலர்தல், 163
வறிது - சிறிது, 50, 67, 83

வா

வாங்கு - வளைந்த, 48
வாண்மீக்கூற்றத்து வயவர், 212
வாணிறவிசும்பு, 242
வாணுதல் விறலியர், 31
வாய்வாள் - தப்பாத வாள், 121
வாயில் - கோபுரவாயில், 50
வார்தல் - ஒழுகுதல், 34
வால் - வெள்ளிய, 92
வாழைப்பூவெனப் பொலிந்த வோதி, 21-22
வாள் - ஒளி, 242, 260
வாள்வாயெருந்து, 58
வான்கேழ்நிதியம், 249
வான்பொருநெடுவரைவளன், 128
வானம் வாய்த்தல் - மழை பொய்யாமற்பெய்தல், 84
வானம் வாய்த்த வளமலை, 84

வி

விசும்பு - ஆகாயம், 242
விடர் - முழைஞ்சு, 170
விடர்காலருவி, 170
வியல் - பெரிய, 170
வியன் - அகற்சி, 187
விரிகடல் வேலிவியலகம், 114
விரை - மணம், வாசனை, 155
விரைமரவிறகினைத் திரை கொணர்தல், 155
விளைதல் - முற்றுதல், 45
விறல் - வெற்றி, 173, 247
விறலியர், 31: [விறல்-சத்துவம்]

வீ

வீ - பூ, 88, 89, 116
வீமசேனன் மடைநூல் [பாக சாஸ்திரம்] இயற்றினனென்பது, 240-41

வீமசேனனைப் பனிவரை மார்பன் எனல், 240

வெ

வெஞ்சினமின்மை, *210*
வெம்பதம் - வெய்ய செவ்வி, *9*
வெம்முலை, *26*
வெம்மை - விருப்பம், *26*

வே

வேங்கை நாண்மலர், *23*
வேல்நுதிபோலப்பூத்தல், *172*
வேலூர், *173*

வை

வைப்பு - ஊர், *152*
வையகம் புரவியொடு மருள ஈத்தல், *92-93*
வையம் - உலகம், *38*

கவனிப்பு :—வரி 28 - இல் "இன்சே றிருதரும் எயிற்றின் எயிறென" எனவும் பாடம்.

இந்தச் சிறுபாணாற்றுப்படை அச்சாகுங்கால் இப்பதிப்பினைப் பார்வையிட்டுப் பிழைதிருத்திச் செம்மையுற ஆக்கியதோடு தமக்குத் தோன்றிய நுண்ணிய கருத்துக்களையும் சேர்த்து உதவியவர், சென்னை விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் வித்வான். **C.** ஜெகந்நாதாசார்யர், **M. A. (Hist), M. A. (Tamil), L. T., P. O. L., Dip-in-Geog.** *ஆவர்.*

பெரும்பாணாற்றுப்படை.

இந்தப் பெரும்பாணாற்றுப்படை, நக்கீரனார் முதலிய கடைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்ட பத்துப்பாட்டுள் நான்காவது. பத்துப்பாட்டுக்களாவன:—திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவைகளைப் பத்துப்பாட்டு எனத் தொகுத்தவர் இன்னாரென விளங்கவில்லை. இந்நூல் 500—அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் இயன்றது.

பெரும்பாணாற்றுப்படை என்ற தொடர் - பெரும்பாணனை ஆற்றுப்படுத்தும் நூல் எனப் பொருள்படும். ஆற்றுப்படை - வழியிற்செலுத்துவது என ஏழாம்வேற்றுமைத்தொகை. பாணாற்றுப்படை - பாணனை ஆற்றுப்படுத்துவது: இரண்டாம் வேற்றுமைத் தொகை. பெரும்பாண் - பண்புத்தொகை. பாண் - பாணனுக்கு ஆகுபெயர்.

பாணர் - இசைப்பாணரும் யாழ்ப்பாணரும் மண்டைப்பாணரும் எனப் பலராவரென்ப. இதிற் கூறப்படுபவன் - யாழ்ப்பாணன். இந்நூலுள் "இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி" என்றும், சிறுபாணாற்றுப்படையில் "இன்குரற் சீறியாழிடவயிற்றழீஇ" என்றும் வருதலாலும், 'பெரும்பாணர் - குழலர் பாணர் முதலாகிய பெரிய இசைக்காரர்' என அடியார்க்குநல்லார் கூறுதலாலும், இவ் யாழ்ப்பாணரில் சிறுபாணன் பெரும்பாணன் என இருவகையினருண்டென்பது பெறப்படும். பெரும்பாண்-பெரியயாழையுடையவன்.

இனி, பத்துப்பாட்டிலுள்ள பாணாற்றுப்படையிரண்டனுள், இது-அடியால் மிக்கிருப்பது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை என வழங்கலாயிற்றென்பதும் உண்டு; அடியளவினாற் பெரிய [மிக்குள்ள] பாணாற்றுப்படை யென்க.

ஆற்றுப்படை யென்பது - கூத்தர் பாணர் பொருநர் முதலியவர்களுள் ஒருத்தர் கொடையாளியினிடத்துத் தாம் பெற்ற செல்வத்தை எதிர்வந்த கூத்தர்போன்ற இரப்போர்க்கு உணர்த்தி, அவரும் அந்தக் கொடையாளியினிடஞ் சென்று, தாம் பெற்றதுபோல் பொருளைப் பெறுமாறு வழிப்படுத்துவது. இந்தப் பாணாற்றுப்படை, புறப்பொருளான பாடாண்திணையின்துறைகளுள் ஒன்று: இதன் இலக்கணம்:- "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க்கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்று தொல்காப்பியத்துக் கூறப்பட்டுள்ளது: [இதன்பொருள்-ஆடல் மாந்தரும் பாடற்பாணரும் கருவிப்

பொருநரும் என்ற ஆண்பாலாராகிய இவரும் பெண்பாலாகியவிறலியும் என்னும் நாற்பாலரும் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும் என்பது.] "சேணோங்கிய வரையதரிற், பாணனை யாற்றுப்படுத்தன்று" என்பது, புறப்பொருள்வெண்பாமாலைக்கொளு. ஒவ்வொருவரும் தாம் பெற்ற செல்வத்தை இரவலர்க்கு அறிவுறுத்தி வழிப்படுத்துதற்கு உரியராயினும், கூத்தர் முதலியோரே எதிர்வந்த கூத்தர் முதலியோர்க்குக் கூறி அவரை வழிப்படுத்துவதாகச் செய்யுள்செய்தலே மரபு. இங்ஙனம் இயற்றப்பெற்றவை - கூத்தராற்றுப்படை பாணாற்றுப்படை பொருநராற்றுப்படை விறலியாற்றுப்படை என வழங்கும்.

இது, தொண்டைமானிளந்திரையனிடத்திற் பரிசுபெற்றுவொரு பாணன் தன்னையெதிர்ப்பட்ட பெரும்பாணன்ஒருவனை நோக்கி, "ஆதரிப்பாரைப் பெருமையால் அன்னாரைப் பெறும்பொருட்டுச் சுற்றத்தோடுந்திரியும் பெரும் பாணனே ! யாம் பலநாளாகப் பசியால் வருந்தி, சுற்றத்தோடே சென்று பெருஞ் செல்வம்படைத்துக் குதிரைகளையும் யானைகளையும் பெற்றுக்கொண்டு வருகின்றோம். நீங்களும் எமக்கு இப்படிவழங்கிய பெருவள்ளலாகிய இளந்திரையனிடஞ் சென்றால், உங்கள் வறுமை நீங்கிவிடும்: அவனுடைய இடஙகள், இயல்புகள் இவற்றைக் கூறுவேன்: கேள்-என்று கூறுகின்றான்:—

இளந்திரையனிடம் போகும்போது வழியில் யாதோர் அச்சமுமில்லை. அவனுடைய நாட்டில்கைப்பொருளை வவ்வுங் கள்வர் இலர்: வழியிடையில் இடி அரவம் காட்டு விலங்குகள் என்பவற்றால் யாதொரு துன்பமும் உண்டாகாது. நீயும் உன் சுற்றத்தாரும் இளைப்பாறவேண்டிய இடங்களில் இளைப்பாறித் தங்கவேண்டிய இடங்களில் தங்கிச் செல்க.

செல்லும்போதுகாட்டுவழியில் 'செவ்வரை நாடன் பாணரேம்' என்று கூறுவீராயின், எயிற்றியர் புல்லரிசியோடு ஊனையும் சேர்த்துச் சமைத்த சோற்றைத்தரப் பசிமிக்க சுற்றத்தோடுஉண்பீர்கள்.உண்டு நடந்து அருஞ்சுரங்களை நீங்கியபின் எயினர் குடியிருப்பில் தங்கின், அங்குஎயிற்றியர் அட்ட மேட்டுநிலத்துவிளைந்தநெல்லரிசிச் சோறு உடும்புப்பொரியல் கால்யாத்ததனை மனைதோறும் பெறுவீர்கள். பின்னுஞ் சென்றால், அங்கே அஞ்சாநெஞ்சுபடைத்த மறக்குடிவீரர்கள் பசுக்களைப் பகைப்புலத்தினின்று ஓட்டிவந்து கள்ளுக்கு விலையாக அவற்றைப்போக்கித் தோப்பிக்கள்ளைப்பருகிக் கூததாடுமிடம் உண்டு. அவ்விடத்தைக் கடந்து இடையர்குடியிருப்பைக்காண்பீர்: அங்குத்தங்கினால், தினையரிசிச்சோற்றையும் பாலையும் பெறுவீர்கள். அங்குள்ள மேய்புலங்களைக் கடந்துசென்றபின்பு, முல்லைநிலத்து உழுதுண்பார்களின் சீறூர்களில் தங்குவீராயின், வரகின்சோற்றை அவரைப்பருப்பாலாகிய உணவோடே பெறுவீர்கள். அவர்களுடைய

இடங்களைக் கடந்து சென்றபின்பு மருதநிலங்கள் சூழ்ந்த இருக்கையைக் கண்டு ஆங்குள்ள ஊர்களில் தங்குவீராயின் வெண்ணெலரிச்சோற்றைக் கோழிப்பொரியலோடு பெறுவீர்கள். அன்றியும், அந்நிலத்துக் கரும்பாலைகள் தோறும் கருப்பஞ்சாற்றை யுண்பீர்கள். பின்பு வலையர்களுடைய குடியிருப்பில் தங்குவீராயின், நென்முளையாலாக்கிய கள்ளோடு மீன்சூட்டையும் பெறுவீர்கள். ஆங்குள்ள கடவுட்பூவாகிய தாமரையையொழித்து மற்றைக் குளத்து மலர்களைப் பறித்து மாலையாக அணிந்துசெல்வீர்களாக. அங்கே அந்தணர் இருப்பிடம்உண்டு: அங்குத் தங்கின் அந்தணமகள் சமைத்த இராசான்னமென்னும் நெல்லரிசிச்சோற்றோடே ஊறுகறியையும் பெறுவீர்கள்.

அவ்வாறான இடங்களுக்கு அப்பால் நீர்ப்பெயரைக்கொண்ட ஊரொன்று உள்ளது: அதனையும் கடந்து சென்றால் பட்டினமொன்றைக் காண்பீர்கள். அங்குத்தங்கின் பன்றித்தசையுடன் கள்ளைப் பெறுகுவீர்: அவ்விடத்தைக்கடந்து தண்டலையுழவரின் ஒப்பற்ற வீடுகளில் தங்குவீராயின், பலா இளநீர் வாழைப்பழம் நுங்கு முதலியவற்றைப் பெறுவீர். அவற்றில் வெறுப்புத்தோன்றின், வள்ளிமுதலிய கிழங்குகளையும் தின்பீர். பின்பு, தென்னந்தோப்புக்களிடையே செல்லின், வள்ளிக்கூத்தையாடும் ஊர்களைக் கொண்ட நாட்டைக் கடப்பீர். கடந்தபின் திருமால் பள்ளிகொண்ட திருக்கோலத்தோடு கிடக்குந்திருவெஃகாவை யடைந்து அங்கே இளைப்பாறி, அக்கடவுளுக்குப் பாடல்திருத்தொண்டு செய்துவிட்டுக் காஞ்சீபுரத்தையடைவீர்கள். தேரோடும்வீதிகளும் பழங்குடிகளும் மதிலும் கொண்டு பழமையும் சிறப்பும் பெற்றுவிளங்கும நகரத்துக்குள் தலைமையான அந்த நகரத்தில் நான் சொல்லும் உபகாரியாகிய இளந்திரையன் உள்ளான். அவனது செவ்விபார்த்துக் கையுறையேந்திப் பலரும்காத்திருப்பர். அவன் வேண்டியவர்கட்கு வேண்டியன வழங்கிச் சுற்றத்தாரோடுவீற்றிருப்பான். நீங்கள் அவனையடைந்து அவன்முன்னே நின்று 'புலவர்பூண்கடனாற்றிப் பகைவர்கடிமதிலெறிந்து குடுமி கொள்ளும் தொண்டையோர்மருக! மள்ளர்மள்ள! மறவர் மறவ! செல்வர் செல்வ! செருமேம்படுந! எம்பசிதீரும்பொருட்டு நின்னை வாழ்த்தி வந்தேம்' என்று சொல்லிப் பேர்யாழை வாசித்துக் கலைத்திறனைக் காட்டுமின்: அபபொழுதே அவன் உலகத்துப் புகழ்பெற விரும்பிய பாசிபோன்ற நும்கந்தைகளைநீக்கிப் பாலாவிபோன்ற உடைகளை நீங்கள் உடுக்கும்படி செய்வான். பின்பு சிறந்தஉண்கலங்களைப்பரப்பி ஊனுணவு அரிசிச்சோறு முதலிய பல்உணவுகளைப் பரிமாறி இன்முகமுடையவனாகி நும்மையுண்பிப்பான். உண்டபின் பொற்றாமரைபபூவை உம்தலையிலேயணிந்து பொன்னரிமாலையை விறலியர் அணியச்செய்வான். பிறகு நான்கு குதிரைகளைப்பூட்டியதேரை நல்கியும் அமையாதவனாகி, தான் பொருது வென்ற பகைவரிடத்தினின்றுங் கவர்ந்த குதிரைகள் முதலியவற்றையும் கொடுத்து அன்றே விடை தருவான். ஆதலால், நீங்கள் அவனிடத்துச்சென்று பயனடைந்து வாழ்வீர்களாக' என்பது, அந்தஇளந்திரையனிடம் ஆற்றுப்படுத்தியவன் கூறியது.

இதனையியற்றியவர்—கடியலூர் உருத்திரங் கண்ணனார். இவர் பத்துப் பாட்டுக்களுள், இந்தப்பெரும்பாணாற்றுப்படையையன்றிப் பட்டினப் பாலையையும் இயற்றியவர். குறுந்தொகையிலுள்ள "நெடுநீராம் பல்"என்றசெய்யுளும், அகநானூற்றிலுள்ள "வயங்குமணிபொருத" என்னுஞ்செய்யுளும், இவரால் இயற்றப்பெற்றனவென்பர். கடியலூர் உருத்திரங்கண்ணனார்என்று இவர் பெயர் கூறப்பட்டிருத்தலால், **இவருடையஊர்** - கடியலூரென்றும், உருத்திரங்கண்ணனென்ற தொகையை உருத்திரன் மகனாகிய கண்ணனென்று விரித்தற்கு இடமிருத்தலால் இவருடைய தந்தையார் பெயர் உருத்திரனென்று இருக்கலாமென்றும் கருதுகின்றனர். (உருத்திரனென்பது குறுந் தொகைச்செய்யுளியற்றிய ஆசிரியருள் ஒருவர்பெயராகக் காணப் படுகின்றது.)

"ஊரும்பெயருமுடைத்தொழிற்கருவியும், யாருஞ்சார்த்தியவை யவைபெறுமே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினுரையிற் பேரா சிரியர் 'உறையூர்ஏணிச்சேரிமுடமோசி, பெருங்குன்றூர்ப்பெருங் கௌசிகன், கடியலூர் உருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரி யன' என்று உரைத்திருத்தலால், இவர் அந்தணரெனக் கருதப்படு கின்றார்.

"இருநிலங்கடந்த திருமறுமார்பின், முந்நீர் வண்ணன்", "கரந் தளஞ்சிலம்பிற் களிறுபடிந்தாங்கு பாம்பணைப்பள்ளியமர்ந்தோனாங் கண்" என்று திருமாலையும்,"நீனிறவுருவினெடியோன் கொப்பூழ்,நான் முகவொருவற்பயந்தபல்லிதழ்த், தாமரைப்பொகுட்டு" என்று அத் திருமாலின் உந்திக்கமலத்தையும்,பாராட்டிக் கூறியிருத்தலின், இவர் திருமாலினிடத்து அன்புடையரெனக் கூறுதற்கு இடனுண்டு. **இவரை ஆதரித்தவர்** - தொண்டைமானிளந்திரையனும், சோழன்கரி காற்பெருவளத்தானும். (சோழன்கரிகாற்பெருவளத்தான் பட்டினப் பாலையைக்கேட்டு மகிழ்ந்து பதினாறுநூறாயிரம்பொன் பரிசுஅளித்தா னென்பது "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன், பத் தொடாறு நூறாயிரம் பெறப், பண்டு பட்டினப்பாலைகொண்டதும்" 'பாடியதோர் **வஞ்சிநெடும்பாட்டாற்** பதினாறு, கோடிபொன்கொண்டது நின்கொற்றமே" என்பவற்றால் உணரப்படும்) இவர் **காலம்** - கடைச் சங்கத்தார்காலமென்பது வெளிப்படை.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இந்தப்பெரும்பாணாற்றுப்படைக்கும் உரை எழுதியுள்ளார். பெரும்பாலும் அவ்வுரையை ஆதாரமாகக் கொண்டு மாணாக்கர்க்கு விளங்குமாறு எளிய நடையில் இவ்வுரை எழுதப்படுகின்றது. கி. பி. 1949 இல் பாஷாசேகரர் மகாவித்வான் ஸ்ரீ. உ. வே. ரா. ராகவையங்கார் சுவாமிகள், எழுதிய ஆராய்ச்சியுரை அண்ணாமலை நகர்ப்பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது. அத னிலுள்ள சில அரிய பொருள்களும் இதில் எடுத்துக்கொள்ளப்பட் டுள்ளன.

இந்தப் பெரும் பாணாற்றுப்படையில் முதல் 22-அடிகள், *தாங்குநரைப் பெறுமையால் தன்சுற்றத்தோடும் தாங்குநரைப்பெறவேண்டித் திரியும்* **பெரும்பாணனாகிய இரவலனை ஆற்றுப்படுத்துபவன் விளக்கும் விளியாகும்.**

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனில்
பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்ததன்
உள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையின் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
உருக்கி யன்ன பொருத்துறு போர்வை
சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கை
குறுந்தொடி யேய்க்கும் மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பின்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி இடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதரும்
தண்கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!

(இதன்பொருள்) (1) *அகல் இரு விசும்பில்-மிகப்பரந்த ஆகாயத்தினிடத்திலே (தோன்றி), பாய் இருள் பருகி - பரந்த இருளை விழுங்காநின்று,* **(2)** *பகல் கான்று - (மறைந்த) பகற்பொழுதை (உலகத்திலே) தோன்றுவித்து, எழுதரு - (தான) உதிக்கின்ற, பல கதிர் பருதி-ஆயிரங்கிரணங்களையுடைய சூரியன்,* **(3)** *காய் சினம் திருகிய - கோபிக்கின்ற சினம் முறுகிய, கடு திறல் - கடியவலியையுடைய, வேனில் - வேனிற் காலத்திலே,* **(4)** *பசு இலை ஒழித்த - (பின்பனிக் காலத்திலே) பசிய இலைகளை யுதிர்த்த, பரு அரை பாதிரி - பருத்த அடிக்கட்டையையுடைய பாதிரியின்,* **(5)** *வள் இதழ் மா மலர்-செழுமையையுடைய இதழைக் கொண்டுள்ளதும் வண்டுகள் மொய்க்கப் பெற்றதுமான பூவின், வயிறு இடைவகுத்ததன் - வயிற்றினிடத்தைப் பிளந்ததன்,* **(6)** *உள் அகம் புரையும் - உள்ளிடத்தையொத்த,*

ஊட்டுறு - (செந்நிறம்) ஊட்டுதலுற்ற, பச்சை - தோலினாலியன்று, (7) பரிய அரை கமுகின் பாளை அம் பசு பூ (8) கரு இருந்து அன்ன கண்கூடு செறிதுளை - பருத்த அடியினையுடைய பாக்குமரத்தின் பாளையிலுள்ள அழகிய பசிய பூ(விரியாமற்)கருவாக இருந்தாலொத்த இரண்டு கண்ணுங்கூடின செறிந்ததுளையினையுடைய, (9) உருக்கி அன்ன பொருத்துறு போர்வை - உருக்கியொன்றாக வார்த்தாற் போன்ற வேறுபாடு தெரியாமல் இயைக்கலுற்ற போர்வையினையும், (10) சுனை வறந்து அன்ன இருள் தூங்கு வறுவாய் - சுனை வற்றி உள் இருண்டாலொத்த இருள்மண்டின உள்நாக்கினையில்லாத வாயினையும், (11) பிறை பிறந்து அன்ன பின் ஏந்து கவை கடை - முதற்பிறை பிற(ந்து ஏந்தியிரு)ந் தாற்போன்ற பின்பு ஏந்தியிருக்கின்ற கவைத்தலையுடையகடையினையும்,(12)நெடுபணை திரள் தோள் மடந்தை முன் கை (13) குறுந்தொடி ஏய்க்கும் - நெடிய மூங்கிலையொத்த திரண்ட தோளினையுடைய மகளுடைய முன்கையிலேயணிந்த குறிய தொடியை யொத்திருக்கின்ற, மெலிந்து வீங்கு திவவின் - (நெகிழவேண்டிய இடத்து) நெகிழ்ந்தும் (இறுகவேண்டிய இடத்து) இறுகியுமுள்ள வார்க்கட்டினையும், (14) மணி வார்ந்து அன்ன மா இரு மருப்பின் - நீலமணி நீளஇருந்தாலொத்த கருமை நிறத்தையுடைய பெரிய தண்டினையுமுடைய, (15) பொன் வார்ந்து அன்ன புரி அடங்கு நரம்பின் (16) தொடை அமை கேள்வி - பொன் (கம்பியாய்) ஒழுகினாலொத்த புரி அடங்கின நரம்பின் கட்டு அமைந்த யாழை, இடவயின் தழீஇ - இடப்பக்கத்தே யணைத்து,—(17) வெம் தெறல் கனலியொடு மதி வலம் திரிதரும் (18) தண் கடல் வரைப்பில்- வெம்மையைக் கொண்ட தெறுதல் தொழிலை (சுடுதல் தொழிலை) யுடைய சூரியனோடு சந்திரனும் (மகாமேருவை) வலமாகத்திரிகின்ற குளிர்ந்த கடல் சூழ்ந்த உலகில், தாங்குநர் பெறாது - (தன்னைக்) காப்பவரைப் பெறாமையாலே (19) பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்து - பெய்கின்ற மழை துறத்தலினாலே (நிலத்திலிருந்து எழுந்த) ஆவி சூழ்ந்த மலையிடத்தே, (20) பழுமரம் தேரும்பறவைபோல-பழுத்த மரத்தைத் தேடித் திரியும் பறவைபோல, (21) கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும் - (பசிமிகுதியால்) அழுகின்ற சுற்றத்தாருடனே (ஓரிடத்திராமல் பயனின்றி) ஓடித் திரிகின்ற, (22) புல்லென் யாக்கை புலவு வாய் பாண-பொலிவிழந்த உடலினையும (கற்ற கல்வியை) வெறுத்துக்கூறுகின்ற வாயினையுமுடைய பாணனே!

வேனிலில் (3) கேள்வியைத்தழீஇ (16) தாங்குநர்ப்பெறாது (18) குன்றத்துப் (19) பறவைபோலத் (20) திரிதரும் (21) பாண (22) என்று ஆற்றுப்படுத்துவோன் பாணனை விளிக்கின்றானென்க.

1-3—முதல் மூன்றடிகள், வேனிலின் வருணனையாகும். அகல் விசும்பு என்பதை - தன்னையொழிந்த நான்குபூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமான விசும்பு எனப் பொருள்விரிப்பர். இங்கு, அகல்என்ற காலங்கரந்துவந்த பெயரெச்சம்; 'நோய்நீரும்

மருந்து' என்றஇடத்துப்போலக் காரணப்பொருட்டாய் வந்தது. பாஷாசேகரர் இங்குக்கூறுவது—நல்லதைப் பருகித் தீயதைக் காலுதல், உலகவியல்பு: அதற்குமாறாக,பரிதியோ இருளைப்பருகிப் பகலைக் காலுவதுஎன அதன்தெய்வத்தன்மையைக்கூறினர்: நூன்முகத்தே இங்ஙனம் கூறியதும் ஓர்நயம்பற்றியாகும்: பல்லவர் லோகாதித்தர்எனப் பெயர்பெறுவரென்று சாசனங்களால் அறியப்படும்: இந்த இளந்திரையனைப்பற்றி ''குணகடல் வரைப்பின்முந்நீர் நாப்பண், பகல்செய் மண்டிலம்பாரித் தாங்கு(440-441)இருந்தோன்எனமேல்வருதல்காண்க. பல்லவர்க்குப்பகைவர் சளுக்கியர். அந்தச்சளுக்கியர்க்குப்பன்றிக்கொடி உண்டு: இந்தச்செய்யுளைப்பாடிய புலவர் தாம் எடுத்துக்கொண்ட பாட்டுடைத்தலைவன் லோகாதித்தனெனவும், அவனால் இல்லையாக்கப்படுவது இருளாகிய பன்றியெனவும்இதனாற் குறிப்பித்தவாறு என்ப. பாயிருள் பருகி - ''உண்டற்குரிய வல்லாப் பொருளை, யுண்டன போலக் கூறலுமரபே'' என்ற விதிபற்றிவந்த மரபுவழுவமைதி. இவ்வாறு வருவதனை, அணிநூலார் சமாதி என்னுமலங்காரமென்பர். 'சினம்'என்றது-வெம்மையை:''ஞாயிறு, கடுகதிர் மூட்டிக்காய்சினந் தெறுதலின்'' என்ற கலித்தொகையைக்காண்க: இதனால் முதுவேனிற்காலம்என்று குறிப்பாகப்பெறவைத்தார்.

'பாசிலை' (4) என்பதுமுதல் 'தொடையமை' (16) என்பதுவரையில், கேள்விக்கு அடைமொழியாம். (16) கேள்வி என்பது, ஶ்ருதி என்ற வடமொழியின் பரியாயம்: சுருதியை யுடைமையால், யாழ் 'கேளவி' எனப்பட்டது சுருதியாவது-ஏழுவகையான இசைகள். காதிற்கேட்டற்குஉரியன வாதலால்,இசைகளைச் சுருதி யென்னலாம். போர்வையினையும் (9)வாயினையும் (10) கடையினையும் (11)இவவினையும் (13) மருப்பினையுமுடைய (14) கேள்வி (16)என்க. யாழினுறுப்புக்களாக இங்குப் போர்வை வாய் கடை இவவு மருப்பு என்பவை கூறப்பட்டுள்ளன.

4-ஆவது அடிமுதல் 9-ஆவது அடிவரையில் உள்ள பகுதி போர்வை என்றஉறுப்பின் இயற்கைவருணனையாகும்.மா-வண்டு. பாதிரி மலரின்பூவைப்பிளந்தால் அதன் உள்ளிடம் சிவந்திருக்குமாதலின்,நிறமூட்டியதோலுக்கு அது உவமையாயிற்று. இலையுதிர்ந்த இப் பாதிரி இத்திரையன்காலத்துப் பாடலியரசர்வலிகுன்றியதனைக்குறிப்பிப்பதாமென்ப. பாதிரிப்பூ, செந்நிறமலர். கமுகுபாளை விரிதற்குமுன் எவ்வாறு இணைந்துள்ளதுஎன்ற தன்மை அறியமுடியாதப்படி வாய்ப்புறம் செறிந்திருக்குமோ,அவ்வாறே பச்சையைவைத்துத்தைத்துள்ளதுளை வெளிக்குத்தெரியாமல (பச்சையென்பது நிறம் அன்று: யாழ்மரத்திற்பொத்தியிருக்குந்தோல்) தைத்துளளதென்க. கமுகம்பாளையின இளம்பூவிற்கரு[பூவின்உளளீடு] அடுத்தடுத்துச் செறிந்து அச்செறிதற்கு இடையே நுண்ணியதுளை பெறறிருக்கும். அவ்விளமபாளையைப்பிரித்துப்பார்த்தால்அவைதெரியவரு மென்ப. இந்தப்பச்சை,

செந்நிறம்ஊட்டப்பெற்றிருக்கும்: ''விளக்கழலுருவின்விசியுறுபச்சை'' என்றது காண்க.

10—வீணைத்தண்டில்அமைந்துள்ள வாய் நாக்குஇன்றி இருக்கு மாதலின், 'வறுவாய்' என்றது. அவ்வாயின் உட்புறம் ஒலிக்கும்நரம் பைப்பெறாது இருண்டுகிடத்தலின், அதற்கு வறந்த சுனையின் இருள்தூங்கும் உட்புறம் உவமையாகும்.

11—வீணையின் ஒருபுறத்து முனையை வாயென்றதனால், மற் றொரு முனையே கடையெனப்படுவதென்பது பெறப்படும். முற் காலத்து வீணையின் கடை கவைத்திருக்குமென்பது இதனாற் பெறப் படுகின்றது. கவைத்தல் - கவடுவிட்டிருத்தல்: வீணையின் பின்புறம் ஏந்தியிருக்குமென்க.

12.13—யாழ்த் தண்டின் வார்க்கட்டு மடந்தைமார் முன்கையில் அணியும் தொடியை யொத்திருக்கும். 'நெடும்பணைத்திரடோள்' என் பது, மடந்தைமார்க்கு அடைமொழி. மெலிந்து வீங்கு திவவு - முரண் டொடை. 14 - மருப்பு - யாழின் தண்டு. நீண்டயாழ்த் தண்டு கருமை நிறமுடைமையால், அதனை 'மணிவார்ந்தன்னமருப்பு' என்றார். மா - கருமைநிறம். இருமை - பெருமை.

15-16 - யாழின்நரம்புகள்நீண்டு செம்பொன்போலத் தோன்று தலால், 'பொன்வார்ந்தன்ன நரம்பு' எனக் குறித்தார். புரி - முறுக் குடைப்பொருள். பலபுரிசேர்ந்திருந்தும் அத்தன்மை தெரியாதபடி அமைந்துள்ளதுஎன்பது 'பொன்வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்' என்பதனால் பெறப்படும். தொடை - தொடுத்தல். கட்டு யாழைக் கொண்டு வாசிக்குமிடத்துஇடவயின் தழுவுதல் இயல்பு.

17-21—பூமியின் நடுவில் மேருஎன்று பேர்பெற்றதாய்ப் பொன் மயமானதொரு மலை உள்ளதென்பதும், அந்தமலையை நவக்கிரகங் களும் சுற்றித் திரிகின்றன என்பதும், சூரியன் அம்மலையைச்சுற்றும் போது எந்த இடத்துத் தோன்றுகின்றானோ, அவ்விடத்துப் பகலும் அவன் காணாத இடத்து இரவும் தோன்றுகின்றன என்பதும் நூற் கொள்கையாதலால், 'வெந்தெறல்கனலியொடுமதிவலந்திரிதரும்' என்றதென்பர்: ''உலகமுவப்ப வலனேர்புதிரிதரு, பலர் புகழ் ஞாயிறு'' என்பது, திருமுருகாற்றுப்படை.

பாணன் யாழை இடவயின்தழுவிக்கொண்டு பறவை போலத் திரிதற்குக் காரணம், தாங்குநரைப்பெறாமையாகும். மழைபெய்து நின்றபோது நிலத்தினின்றும் ஆவி எழுதல் இயல்பு. மழைதுறந்த - மழைபெய்தநின்றதனாலெழுந்தனஎன்க. கல்லெனல்-அழுகைக்குறிப்பு: ''கணங்கொண்டுசுற்றத்தாகல்லென்றலற'' என்ற நாலடியையுங் காண்க.

யாழில் மிகப்பயின்றிருந்தும் தாங்குபவரைத் தேடித் தன் சுற்றத்தோடு பசியுடன் திரியவேண்டியிருத்தலால், பாணன் தான் கற்ற கல்வியை வாயினால் வெறுத்துக்கூறுகின்றனனென்பான் 'புலவுவாய்ப்பாண' என்றான்; (புலவு-புலத்தல்: வெறுத்துக் கூறுதல்:) "சில் செவித்தாகிய கேள்வி நொந்து" என்பது, புறநானூறு. "அடகெடுவாய் பலதொழிலுமிருக்கக் கல்வியதிகமென்றே கற்றுவிட்டோமறிவில்லாமல், திடமுடன்மோகனமாடக் கழைக்கூத்தாடச் செப்பிடுவித்தைகளாடத் தெரிந்தோமில்லை, தடமுலைவேசையராகப் பிறந்தோமில்லை சனியான தமிழைவிட்டுத் தையலார்தம், இடமிருந்து தூது சென்று பிழைத்தோமில்லை யென்னபயன் சன்மமெடுத்துலகிலிருக்கின்றோமே" என்ற தனிப்பாடலும் காண்க. இனி, புலவுவாய்-புலால் நாற்றம் நாறுகின்ற வாய் எனினுமாம்.

இனி 23-ஆம் அடிமுதல் 'வருதும்' (28) என்பது வரையிலுமுள்ளவை, ஆற்றுப்படுப்பவன் தான் பெற்ற பெருவளனைப் பெறுதஅப் பாணனுக்குத் தெரிவிப்பன:—

பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்
பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு
யாமவ ணின்றும் வருதும்

(இ-ள்.) (23) பெரு வறம் கூர்ந்த கானம்-பெரிய பஞ்சகாலம்மிக்க காட்டிலே, கல்லென - ஆரவாரம் மிகும்படி, (24) கருவி வானம்-தொகுதியையுடைய மேகம், துளி-நீர்த்துளியை, சொரிந்த ஆங்கு-பொழிந்த அத்தன்மைபோல,— (திரையன் மிகவும்வறுமைநிலையையடைந்த எமக்குப் பெருஞ்செல்வம் அளித்ததனால்),—(25) பழம் பசி கூர்ந்த எம் இரு பெரு ஒக்கலொடு-வெகுநாளாய்க்கிடக்கின்ற பசி மிகுந்த எம்முடைய கரிய பெரியசுற்றத்தோடே (கூடிய), (28) யாம்-நாங்கள், (26) வழங்க தவாஅ-(பிறர்க்குக்)கொடுக்கவும் மாளாத, பெரு வளன் எய்தி-பெருஞ்செல்வத்தைப் பெற்று, (27) வால் உளை புரவியொடு-வெள்ளிய பிடரிமயிரையுடைய குதிரையோடு, வய களிறு முகந்து கொண்டு - வலியினையுடைய யானைகளையும் வாரிக்கொண்டு, (28) அவண் நின்றும் - அந்த இளந்திரையனுடைய ஊரிலிருந்தும், வருதும்-வருகின்றோம்:

சொரிந்தாங்கு என்பதற்குக் கொண்டுமுடியுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. இனி, சொரிந்தாங்கு (திரையன்) வழங்க, ஒக்கலொடு வளனெய்தி வருதும் என்று இயைத்து முடிப்பினுமாம். காட்டில் மழைத்துளி சொரிந்தால் அக்காடு பொலிவுபெற்று விளங்குமன்றோ? அவ்வாறு பொலிவுபெற்று விளங்கப் பெருவளனெய்தினேமெனினுமாம்.

இனி, (28) 'நீயிரும்'என்பதுமுதல் 'பல்வேற்றிரையற் படர்குவிராயின்'(37) என்பதுவரையில், ஆற்றுப்படுப்பவன் பெரும்பாணனைநோக்கி, அவன் செல்ல வேண்டிய இளந்திரையனைப்பற்றிய சிறப்பைக் கூறுகின்றான்:

நீயிரும்
இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பல்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரியன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த வறம்புரி செங்கோல்
பல்வேற் றிரையற் படர்குவி ராயின்

(இ - ள்.) (28) நீயிரும்—,—(29) இரு நிலம் கடந்த-பெரிய நிலத்தை யளந்த வனும),திரு மறு மார்பின் - திருவையும் மறுவையும் மார்பிற்கொண்டுள்ள (வனுமான), (30) முந்நீர் வண்ணன்-கடல் போலும் நிறத்தையுடையனாகிய திருமாலின், பிறங்கடை - மரபிலே தோன்றிய பினனிடத்தோனும, அ நீர் (31) திரை தரு மரபின் - அந்தக்கடலின திரைகொண்டு வந்து ஏறவிட்ட மரபைக்கொண்ட, உரவோன் - வலிமையை யுடையோனுமானவனுடைய, உம்பல் - குடியிற் பிறந்தவனும, (32) மலர் தலை உலகத்து மன் உயிர் காக்கும் (33) முரசு முழங்கு தானை மூவருள் உம்-அகன்ற இடத்தையுடைய உலகத்திலே நிலைபெற்ற உயிர்களைப்பாதுகாக்கும முரசு முழங்குகின்ற (நால்வகைப்)படையினையுமுடைய சேர சோழ பாண்டியரென்னும் மூவரினும், (34) இலங்கு நீர் பரப்பின் வளை மீக்கூறும்(35)வலம்புரி அன்ன - விளங்குகின்ற நீரையுடைய கடலிடத்துப்பிறந்த சங்குகளிலே மேலாக (உலகம்) உயர்த்துக் கூறுகின்ற வலம்புரிச் சங்கையொத்த, வசை நீங்கு சிறப்பின - குற்றம் நீங்கிய தலைமையினையும், (36) அல்லது கடிந்த அறம் புரி செங்கோல் - மறத்தைப்போக்கின அறத்தை விரும்பின செங்கோலினையுமுடைய, (37) பல்வேல் - பலவேற்படையினையுடைய, திரையன - திரையனென்பவனை நோக்கி, படர்குவிர் ஆயின் - செல்லத்துணிவீராகில்,—(எ - று.)

"இருநிலங்கடந்த" (29) என்பது முதல் "பல்வேற்றிரையன்" (37) எனபது வரையில், காஞ்சீபுரத்தில் அரசு புரிந்த தொண்டைமானிளந்திரையனைப்பற்றிக் கூறுவனவாகும். திருமறுமார்பினையுடைய (29) முந்நீர் வண்ணனது பிறங்கடையும், அந்நீர்த் (30) திரைதரு மரபினைக்கொண்ட உரவோனுமானவனது உம்பலாகி (31) மன்னுயிர்காக்கும் (32) மூவருள்ளும் (33) வளையில் மீக்கூறும் (34) வலம்புரியன்ன வசைநீங்கு சிறப்பினையும் (35) செங்கோலையுமுடைய (36) திரையன் (37) என்க.

இதனால், இங்குக் கூறப்படும் திரையனது குடிக்குத் திருமால் தலைவனென்பதும், திரைதந்த மரபினைக்கொண்ட உரவோனுடைய பரம்பரையினனென்பதும் தெற்றெனப்பெறப்படும்.

இங்கு, பாஷாசேகரர் சேதுசமஸ்தான வித்வான் அண்ணாமலைப் பல்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறையி லிருந்த ஸ்ரீமான் ரா. ராகவய்யங்கார் எழுதிய முக்கிய அமிசங்களைச் சுருக்கமாகக் காட்டுவேன்:

முன்னர்த் தொல்காப்பியர்காலத்துச் சேர சோழ பாண்டியரென மூவரசரே யிருந்தனர்: பின்னர்ப் பல்லவர் வந்துள்ளார்: அவர்குடி தொண்டைக்குடி எனப்பட்டிருக்கவேண்டும். (அக்குடிக்கு அப்பெயர் எக்காரணத்தால் வந்ததென்று திட்டமாகச் சொல்லமுடியவில்லை.) அவர்கள் ஆண்ட நாடு அருவா, அருவாவடதலை என்ற கொடுந் தமிழ்நாடா யிருக்கலாமென்றும், அதுவே இப்போது தொண்டைநாடு எனப்படுவது என்றும் சாசனங்களால் ஊகிக்கப்படுகின்றது. மற்றும், இக்குடிக்குத்தலைவனை திருமாற்குப் பிரமனும், அவனுக்கு ஆங்கிரசும, அவனுக்குப் பிருகஸ்பதியும், அவனுக்கு ஸம்யுவும், அவனுக்குப் பரத்துவாசனும், பரத்துவாசனுக்குத் துரோணனும், துரோணனுக்கு அசுவத்தாமனும் தோன்றினரென்ப. அருவா என்பது அசுவத்தைக் காட்டுமாதலால், அருவா, அருவாவடதலை என்பன அசுவத்தாமனால் ஆளப்பட்ட இடமாக இருக்கலாம். இனி, அமராவதி சாசனத்தில் அசுவத்தாமனுக்குப் பல்லவனுண்டான வரலாற்றை விளக்கிய இடத்து, அசுவத்தாமாவும் மதனியென்னும் அப்சரசும் கூடநேர்ந்து அசோகமரத்தடியில் பல்லவத்தொட்டிலில ஓர்மகவு ஈனப் பெற்றதுகண்டு, அம்மகவு பல்லவத்திற் கிடத்தலால் பல்லவனென்று அசுவத்தாமனால் பெயரிடப்பட்டது என்று உள்ளதனால், திருமாலின் புதல்வனை பிரமன் வழியில் அப்சரசினிடம் பல்லவனுண்டாகிய குடியையே 'அந்நீர்த்திரைதருமரபு' என்றார். பிரமனுடைய மரபு பலஇருடிகளைத் தலைமையாகக்கொண்டு பலவாறாக இருத்தலின் இப்பாட்டுடைத்தலைவன் மரபினை அப்பிரமன் மரபில் 'திரைதருமரபு' என்றார். (செயங்கொண்டாரும் கருணாகரத்தொண்டைமானை "மறைமொழிந்தபதிமரபின்வந்த குலதிலகன் வண்டை நகராதிபனே" என்றதும் கருதத்தக்கது.) இங்குக்கூறியவாற்றால், பிரமன் மரபு பலவற்றுள் பல்லவரும் ஒருமரபினரென்பது விளங்கும். "பிரமனாதியாகவராநின்ற பல்லவவமிசத்துள்" என்று காஞ்சிபுரத்து வைகுந்தப்பெருமாள் சாசனத்திலும் இருக்கின்றது. பல்லவர் சாசனங்களில் பல்லவரைப்பற்றி பரத்துவாசகோத்திரத்தின ரென்றும், பிரமக்ஷத்திரியரென்றும் காணப்படுகின்றன. மற்றும் க்ருதாசிமுதலிய தேவகன்னிகை ஐவர் பாற்கடல் கடைந்தபோது தோன்றியவராதலால், திரையினால் தரப்பட்டவராவர்: பரத்துவாசமுனிவர் இருதாசி யென்ற தேவகன்னிகையை விழைந்ததனால் துரோணருண்டானார்' என்று ஒருபழங்கதை மகாபாரதத்தில் ஆதிபருவத்திற் காண்கின்றது. துரோணர் இருதாசியென்ற அப்சரசுக்குத்தோன்ற அந்தத்

துரோணகுமாரனான அசுவத்தாமன் மதனியென்ற தேவமாதினைச் சேர்ந்து பெற்ற பிள்ளையைப் பல்லவத்தொட்டிலில் [பல்லவம் - தளிர்] கிடத்தி அதனால் பல்லவன் என்று பேர்பெற்றானென்பதைக் கருதுமிடத்து, திரைதருமரபு என்பது - கடலலை தந்த குலமென்று அப்சரசுக்கள் தோன்றிய குலத்தைக் குறிப்பதாகும்: ஆகவே மகாபாரதத்தின்படி திரைதருமரபினுரவோன் என்பது அசுவத்தாமனையும், அமராவதி சாசனத்தின்படி அசுவத்தாமனது புதல்வனான பல்லவனையும் காட்டும். (அப்சரசுக்களெனப்படும் தேவமாதரை "கடல் செல்வியர்" என்று பண்டைத் தமிழ்நூல் கூறும்.)

திரைதருமரபினுரவோனும்பல் என வந்துள்ளதனால், இந்த இளந்திரையன் என்பவனைப்பற்றி, நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னிகையைப் புணர்ந்த காலத்து, அவள் "யான் பெற்ற புதல்வனை என் செய்வேன்?" என்று வினவ, 'தொண்டைக்கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட அவன் கரையேறின், அப்புதல்வனுக்கு அரசவுரிமையை யடைவித்து நாடாட்சிக் கொடுப்பேன்' என்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனமே வரவிட, அங்ஙனமே அக்கடல்திரை தந்ததனால் அவன் இளந்திரையன் எனப்பட்டானென்று நச்சினார்க்கினியர் கூறுவர்: அது 'திரைதருமரபினுரவோனும்பல்' என்பதனோடு முரண்படுகின்றது. பல்லவரென்பாரும் தொண்டையரென்பாரும் ஒருமரபினரேயென்பதும், பல்லவர் சோழவமிசத்தவரல்லரென்பதும் பண்டைய நூல்களையூன்றிப்பார்ப்பார்க்கு நன்குவிளங்கும். இந்நூலுள்ளும் தமிழரசர் மூவரினும் திரையனைமேம்பட்டவனாகக் கூறியுள்ளதும் காண்க. கடலில்தோன்றிய சாதாரணசங்கங்களினும் வலம்புரிச்சங்கம் மேன்மையாகச் சிறப்பித்துக் கூறப்படுவதுபோல, இந்த இளந்திரையன் தமிழரசர் மூவரினும் சிறப்பித்துக் கூறப்படுவனென்பது 'மூவருள்ளும் வளைமீக்கூறும் வலம்புரியன்ன சிறப்பின்' என்றதன் கருத்து. (திரைதருமரபுடையோன் - உரவோன்: அவன் வழிவந்தோன் இளந்திரையன்.) அந்தத்திரைதருமரபில் தோன்றியவர் பல்லவரென்றும் வழங்கப்பெறும் தொண்டையர்.

இந்த இளந்திரையனைச் சோழன் வமிசத்தவன் என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பினும், அதற்குத்தக்க ஆதாரம் ஏற்படாமையாலும் இத்திரையனை முடியுடை மன்னர் மூவரொடு சேர்த்து எண்ணப்படும் பெருமை வாய்ந்தவனாயினும் "வில்லும் வேலும்" என்னுந் தொல்காப்பியத்து மரபியற் சூத்திரவுரையில் 'மன்பெறு மரபினேனோர் எனப்படுவார் அரசுபெறுமரபிற் குறுநில மன்னரெனக் கொள்க. அவை பெரும்பாணாற்றுள்ளும் பிறவற்றுள்ளும் காணப்படும்' எனப் பேராசிரியரெழுதியிருத்தலாலும், இவனைக் குறுநில மன்னனாகப் பண்டையோர் கொண்டிருந்தனர் என்று தெரிகின்றது.

பிறங்கடை என்ற சொல் - பிறங்குகடை என்று பிரிந்து, விளங்குகின்ற எல்லையெனப் பொருள்பட்டு, வமிசத்திற் பிறந்தோ

னைக் காட்டுமென்ப. மேன்மையென்று பொருளுள்ள 'உ' என்பதனடியாகப் பிறந்த உம்பல் என்ற சொல் - சிறந்தமகன் என்ற பொருளைக் காட்டும். மூவர் என்பது-நோக்குக்குறிப்பாய், சேர சோழ பாண்டியவரசரைக் காட்டும். நீர்ப்பரப்பு - நீரின் பரப்பையுடையது; கடல்: வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வலம்புரி-வலப்புறமாகச் சுழிதலை உடையது எனக் காரணப்பெயர்: சங்குகள் சாதாரணமாக இடப்புறமாச் சுழிந்திருக்கும்: அந்தச் சங்குகளினும் ஆயிரம் மடங்கு மேம்பாடுடையது எனப்படும் இந்த வலம்புரிச்சங்கம். திரையற்படர்குவிர் - இயல்பின் விகாரம்.

38-ஆம் அடி முதல் "காட்டுமாவு முறுகண் செய்யா" (43) என்பது வரை இளந்திரையனுடைய நாட்டின் இயல்பினைக் கூறுகின்றான்

கேளவ னிலையே கெடுகநின் னவலம்;
அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்
உருமு முரறா தரவுந் தப்பா
காட்டு மாவு முறுகண் செய்யா

(இ - ள்.) (38) அவன் நிலை கேள் - (அங்ஙனம் பல்வேல் திரையனைக்குறித்துச் செல்கின்ற நீ) அந்த அரசனுடைய நிலைமையைக் கேட்பாயாக: நின் அவலம் கெடுக-உனது வறுமைநிலை கெடுவதாக: (41) அவன் கடிஉடை வியல் புலம் - அவ்விளந்திரையனது காவலையுடைய அகற்சியைக் கொண்ட நிலம், (39) அத்தம் செல்வோர்-வழிப்போவாரை, அலற-கோவென்று கதறும்படி, தாக்கி-அடித்து, (40) கை பொருள்-(அந்த வழிப்போவோர்)கையில் வைத்துக் கொண்டிருக்கின்ற செல்வத்தை, வௌவும்-கவர்ந்து கொள்கின்ற,களவு ஏர் வாழ்க்கை-திருடுவதையே உழவுபோலும் இல்வாழ்க்கைப் பொருளாகக்கொண்ட, (41) கொடியோர்-கொடுமையுடையோரை, இன்று-பெற்றிருப்பதில்லை; (அன்றியும்), 42) உரும்உம் உரறாது - பேரிடியும் வீழ்ந்து துன்புறுத்தாது: அரவுஉம் தப்பா-பாம்பும் கொல்லாது: (43) காடு மாஉம் உறுகண் செய்யா-காட்டிடத்துள்ள புலிமுதலியனவும் வருத்தஞ் செய்யா; (எ - று.)

'பல்வேல் திரையனிடத்துச்செல்வோமென்று கருதிஅவனுடைய நிலைமையைக் கேட்டபோதே, அவனிடத்துச் சென்றால் நமது வறுமைத் துன்பம் திண்ணமாக நீங்குமென்று மனத்திலுறுதியான எண்ணந் தோன்றி மனத்துயரைப்போக்குவாய்' என்பது தோன்ற, 'கெடுகநின்னவலம்' என்கின்றான், ஆற்றுப்படுத்துவோன்.

39-41: இவ்வடிகளால், இளந்திரையனது நாட்டில் கள்ளர்பயம் இல்லையென்று கூறியவாறாயிற்று. 42-43: இவ்வடிகளால், இளந்திரை

யனுடைய செங்கோலுக் கீழடங்கித் தீமையெதுவும் நிகழாமையைக் கூறியவாறு: "கோள்வலுளியமுங் கொடும்புற்றகழா, வாள்வரி வேங்கையும் மான்கணமறலா, அரவுஞ்சூரு மிரைதேர் முதலையும், உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா, செங்கோற்றென்னவர் காக்கும் நாடு" என்ற சிலப்பதிகாரவடிகளையும், அவ்வடிகட்கு "இவற்றான் இவனுணையும், ஐவகை நிலத்திற்குரிமையையும் கூறினர்" என்ற அடியார்க்கு நல்லாருரையையுங் காண்க.

இனி 45-வது அடிவரையில் இளைப்பாறியுந் தங்கியும் போகலா மென்று ஆற்றுப்படுப்போன் கூறுகின்றான்:

வேட்டாங்கு
அசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ விரவல சிறக்கநின் னுள்ளம்:

(இ-ள்.) (43) வேட்ட —(மனம்) விரும்பிய, ஆங்கு - அந்தக்காட்டில், (44) அசைவு உழி அசைஇ - இளைப்பு உண்டான இடத்தில் இளைப்பாறி நசைவு உழி தங்கி - மனத்திற்கு(த் தங்குதற்கு)ப் பிடித்த இடத்து (எத்தனைநாள் தங்கலாமென்று தோன்றுகின்றதோ அத்தனை நாள்) தங்கி, (45) சென்மோ - செல்வாயாக: இரவல - இரத்தற்றொழிலில் வல்லவனே! நின் உள்ளம் சிறக்க - உன் மனம் சிறப்புறுவதாக.

இத்தனை நாள் ஆற்றுப்படுத்தப்படும் பாணனுடைய மனம் வறுமையினால் ஒடுங்கிக் கிடத்தலின், இனி அவ்வாறு வறுமையினால் உள்ளம் ஒடுங்கவேண்டா என்பதைக் குறிப்பிக்க, ஆற்றுப்படுத்துபவன் 'இரவல! நின்னுள்ளஞ் சிறக்க' என்கின்றான். சென்மோ, மோ-முன்னிலையசை.

இனி, ஆற்றுப்படுப்பவன் அந்த இளந்திரையனிருக்கும் இடத்துக்குச் செல்லவேண்டின் வெகுதூரங் கடந்து செல்லவேண்டியிருத்தலால் **முதலிற் செல்லவேண்டிய காட்டுவழியை** இதுமுதல் 82 - அடிவரையிற் கூறவேண்டி, அவ்வழி உமணர் உப்புவண்டியினோடுசெல்லும் நெறியையுடைமையை 65 - **அடி வரையிற் கூறுகின்றனன்: —**

கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமர வுருளி
எழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன
ஆரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்
வேழங் காவலர் குரம்பை யேய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முளையெயிற் றிரும்பிடி முழந்தா ளேய்க்கும்
துளையரைச் சீறுர றூங்கத் தூக்கி

நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்
மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்பக்
கோட்டிணர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுகம் நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி

(இ-ள்.) (46) கொழுஞ் சூட்டு அருந்திய-கொழுவிய வட்டை உட்கொண்டதுவ, திருந்து நிலை ஆரத்து-திருந்திய நிலையைக்கொண்டதுமான ஆரையும், (47) முழவின் அன்ன -மத்தளத்தை யொத்த, முழுமரம் உருளி - முழுமரத்தைக் கடைந்து அமைத்த குடத்தையும் (48) எழூஉ புணர்ந்து அன்ன-இருகணையம் சேர்ந்தாலொத்த, பரூஉ கை - பருத்த இருபுறத்துச்சட்டத்திலேகோத்த, நோன் பார் - வலிய பாரையுமுடைய,(49) மாரி குன்றம் மழை சுமந்தன்ன (50) ஆரை வேய்ந்த-மாரிக்காலத்தே மலையானது மேகத்தைச் சுமந்துநின்றாற்போன்ற தொத்துளிப்பாயாலே வேயப்பெற்ற, அறைவாய்-அறுபட்ட இடத்தே செல்கின்ற, சகடம் வண்டியினுடைய,-(51) வேழம் காவலர் குரம்பை-(புனப்பயிரைத்தின்னுதபடி)யானையைக்காக்கின்ற தொழிலையுடையவர் (இதண் மேலே கட்டின) குடிசையை ஏய்ப்ப-ஒக்கும்படி (சிறுகக்கட்டின), (52) கோழி சேக்கும்-கோழிகிடக்கின்ற, கூடு-கூட்டை, உடை-உடைய, புதவின்-குடிலின் வாயிலில, (53) முளை எயிறு-மூங்கில் முளைபோலும் கொம்பினையுடைய. இரும்பிடி-கரிய பெண்யானையின, முழந்தாள் ஏய்க்கும்-முழந்தாளையொத்திருப்பதும், (54) துளை ஆரை-துளையைத் தன்னிடத்தேயுடையதுமான, சிறுஉரல்-சிறியஉரலை, தூங்க-அசையும்படி, தூக்கி—,(55) நாடகம் மகளிர் ஆடு களத்து எடுத்த - நாடகமாடுமகளிர் ஆடுகின்ற அரங்கிலே கொண்டுவந்த,(56) விசிவீங்கு இன் இயம்-வாராற் பிணித்தலிறுகின இனிய முழவை, கடுப்ப - ஒக்கும்படி,கயிறு பிணித்து-(உடையாதபடி) கயிற்றினாலே வரிந்து, (57 காடிவைத்த - ஊறுகாய் வைத்துள்ள, கலன் உடை-மிடாவை உடைய, மூக்கின் - (அப்பாரின்) தலைப்பான இடத்தேயிருந்து, (58) மக உடை மகடூஉ-குழந்தையைக் கையிற்கொண்டுள்ள (பெண்) மக்களிருந்து, பகடு-(வண்டியிற்பூட்டிய எருத்தை,புறமதுரப்ப-முதுகிலேஅடித்து ஓட்டாநிற்கையில்,-(59) கோடு இணர்-கொம்பினிடத்தேபூங்கொத்தையுடைய, வேம்பின்-வேம்பினுடைய, ஏடு இலை மிடைந்த-மென்மையையுடைய இலையை இடையிடையே கொண்டிருக்கின்ற, (60) படலைகண்ணி - தழைமாலையைஅணிந்த, பருஏர் எறுழ் திணிதோள் - பருத்தஅழகினையும் வலியினையுமுடைய இறுகினதோளையும், (61) முடலையாக்கை-

முறுக்குண்ட உடம்பினையும், முழுவலி-நிரம்பிய உடல்வலிமையையுமுடைய, மாக்கள் உமணமாக்கள்,-(62) சிறுதுளை கொடு நுகம்-சிறிய துளையினையுடைய கோடிய நுகத்தின்கண்ணே, நெறிபட நிரைத்த-வலம் இடமாகத் தவறாது ஒழுங்குறப்பூட்டின, (63) பெருங்கயிறு - பெரிய கயிறுகளைக் கொண்ட, ஒழுகை-வண்டியின் ஒழுங்கை, மருங்கில் காப்ப-(எருதுகள மாறுபடாமலும் அச்சுமுறியாமலும்) பக்கத்தே காத்துச் செல்லவும், (64) பதம் சில் உணவின்-இடப்படும் பொருளளவின்றிச் சிறியவாக இடப்படும்உணவின் [உப்பின்], கொள்ளை விலையை, சாற்றி-சொல்லி, (65) பல் எருது உமணர் - பலஎருதுகளையுடைய உப்பு வாணிகர், பதிபோகும்-ஊர்கள்தோறுஞ் செல்லுகின்ற, நெடு நெறி - நெடிய வழியினையும்,-(எ - று.)

(46-50) சூட்டையும் ஆரையும் குறட்டையும் பாரையுமுடைய ஆரை மேய்ந்தசகடம் என்க. சூட்டு-வண்டிச்சக்கரத்தின் விளிம்பைச் சூழ அமைக்கப்பட்ட வளைவுமரம். ஆர்-சக்கரத்திலமைந்துள்ள ஆரக்கால்: இலை யென்றும்சொல்லப்படும். முழவினன்ன முழுமரவுருளி - குறடு; அது அச்சுக் கோக்கும்இடம்: குடமென்று சொல்லப்படுவது. அச்சுமரத்தின்மேலே நெடியவாய் இரண்டு பக்கத்தும் நெடுகக்கிடக்கின்ற பருமரங்களை 'பரூஉக்கை' என்றார். அம்மரங்கள் இரண்டினையும நெடுகத்துளைத்துக் குறுக்கே ஏணிப்பழுப் போலக்கோத்தமரத்தைப்பாரென்றார். மலை வண்டிக்கும், மழை அதன் மேலேவேயப்படும் பாய்க்குமஉவமை. வண்டியின் பரூஉக்கை மரத்தின் மேல் கால்களை நட்டுக்குடிலாகக்கட்டி மேலே வசமபு முதலியவற்றைக் கயிற்றாலே கோத்தபாயெடுத்தலை இங்குக் கூறினார். தொத்தளிப்பாய - வண்டிக்கு மேலே வேயப்பெறுவது: தேர்த்தாளிப்பாய் எனபது இவ்வாறு எழுதப்பட்டதாக இருக்கவேண்டுமென்றும், தேர் போல் தோன்றும் தாளிப்பணியால் [கூந்தற் பணியால்] முடைந்த பாய் என்பது பொருளென்றும கூறுவர்.

(51-52) : பாயாலே வேய்ந்த வண்டிக் கூண்டின்வாய்ப்புறத்துக் கோழி கிடக்குங் கூடு உள்ளது: வேழக்காவலர் தங்குங்குரம்பை, அந்தக்கோழிக் கூட்டுக்கு வடிவுவமம்.

(53-54) வண்டிக்கூட்டின் வாசலிலே துளையிட்டுச்சிறியஉரல் தூக்கப்பட்டுள்ளது: அந்தஉரலுக்குப் பெண்யானையின் முழந்தாள் உவமை. (57) வண்டிப்பாரின் மூக்கிலேயிருந்துகொண்டு(58)மகவுடை (உமண்) மகடூஉ பகடு துரப்பஎன்க. 55-57: மூக்கு - மூக்குறுப்புப் போன்றதான வண்டிப்பாரின் தலைப்பக்கம். அங்கு ஊறுகாய்வைத்த கலன் வைக்கப்பட்டிருக்கின்றது: தகர்ந்திடாதபடி கயிற்றாலேவரிந்திருத்தலால், அந்தக்கலன், நாடகமகளிர் களத்து எடுத்தவிசிவீங்கு இயத்தை யொத்திருக்குமென்க. காடி-புளியங்காய், நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டுவைத்திருப்பது; காரமுள்ளது காடி: ஊறுகாய்: வழியிடையில் உண்ணவேண்டி இவ்வாறு கலன்வண்டியிலே

அமைக்கப்பட்டுள்ளது. இனி, காடி-நெய்யென்பாரும், காடி-வண்டிப் பாரினுடைய கழுத்தானவிடத்தே வைத்த, கலன் - மிடா என்பாரும் உண்டு.

(58 - 63) உமண்மகள் உப்புவண்டியிற் பூட்டிய பகட்டைத் தாத்துகையில், அச்சுகள் முறியாமலும் எருதுகள் இருகாமலும் பெரு வலிமாக்கள் பக்கத்தே காத்துச்செல்வர். ஒழுகை-வண்டியினொழுங்கு. (59) வேம்பின்ஒட்டிலை மிடைந்த (60) படலைக் கண்ணியையும், பரிய ஏரினை [அழகினை]யும் வலியினையுமுடைய திணிதோளையும், (61) முடலையாக்கையையும் உடைய முழுவலிமாக்கள், (63) ஒழுகை மருங்கிற் காப்ப என்க. துளைகளிற் செருகின கழிகள் கழுத்து அசையப் பட்டு நிற்றலின் 'கொடுநுகம்' என்றார்.—'நெறிபடநிரைத்த' என்றதனால், ஒரு சகடத்திற் பல எருதுகள் பூட்டுதலைக் கூறினரென்பாரு முளர்.

(50) சகடத்துப் (52) புதவின் (57) மூக்கின்கண்ணே (58) மகடூஉ பகடுதுரப்ப (61) மாக்கள் (63) ஒழுகையை மருங்கிற்காப்ப, (64) கொள்ளைசாற்றி (65) உமணர் பதிபோகும் நெடுநெறியென்க.

66-81: "எல்லிடை...பெருவழி" இவ்வடிகள் - பின்னும் இளந்திரையனை நோக்கிச் செல்லும் அவ்வழிகள், மாணிக்கம், முத்து சந்தனம் முதலியன விற்றுத் திரிவாரும் மிளகுமூட்டையைக் கழுதையின்மீது கொண்டு செல்வாருமான பிற வாணிகராகிய வம்பலர் வழங்கும்வழிகளையுடைமையைக் கூறும்:—

எல்லிடைக் கழியுநர்க் கேம மாக
மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉம்
அரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்றாள்
அடிபுதை யரண மெய்திப் படம்புக்குப்
பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணக லெறுழ்த்தோள்
கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
உடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழி

(இ-ள்.) (66) எல்லிடை - பகற்பொழுதில், கழியுநர்க்கு - வழிச் செல்வார்க்கு, ஏமம் ஆக - களிப்பு உண்டாகும்படி,—(67) மலையவும்

கடலஉம் - மலையிலுள்ளனவும் கடலிலுள்ளனவுமாகிய, மாண் பயம் - மாட்சிமையைக் கொண்ட பயன், தரூஉம் - கொடுக்கின்ற, (68) அருபொருள் - பெறுதற்கு அரிய பொருள்களை, அருத்தும்—(உலகத்தில் உள்ளாரை) நுகரச்செய்யும், திருந்து தொடை நோன் தாள் - திருத்தமாகத்தொடுத்து [தொடர்ச்சியாக]ச்செய்கின்ற வலிய முயற்சியைக்கொண்டு,—(69) அடி புதை அரணம் எய்தி - அடியை மறைக்கின்ற செருப்பைக் கோத்து,—படம் புக்கு - சட்டையிட்டு, (70) பொருகணை - (ஆறலைகள்வர்) பொருகின்ற அம்புகளை, தொலைச்சிய - போக்கின, புண் தீர் மார்பின் - (அந்தஅம்புப்)புண்களும் நீங்கிய மார்பிலே; (71) விரவு - பொருந்திய, வரி கச்சின் - வரிந்த கச்சிலே, வெள் கை ஒள் வாள் -(யானைக் கொம்பாற் கடைந்திட்ட) வெள்ளிய கைப்பிடியையுடைய ஒள்ளிய வாள், (72) வரை ஊர் பாம்பின் - மலையிடத்தே ஊர்கின்ற பாம்புபோல, பூண்டு - கோக்கப்பட்டு, புடை தூங்க - ஒரு பக்கத்தே அசையாநிற்க,—(73) சுரிகை நுழைந்த - உடைவாள் செருகப்பெற்ற, சுற்று வீங்கு -(இடையைச்)சுற்றுதலுற்றுப் பருத்துத் தோன்றுகின்ற, செறிவு - கட்டுதலிறுகுதலையுடைய, உடை - ஆடையையும்,— (74) கரு வில் ஓச்சிய - (பாலைநிலத்தின்) கருப்பொருளாகிய வில்லை, கண் அகல் எறுழ்த்தோள் - இடமகன்ற வலிய தோளினையும் (பெற்று), (75) கடம்பு அமர் நெடுவேள் அன்ன - கடம்பினிடத்தேயிருந்த நெடிய முருகனை யொத்த, மீளி (76) உடம்பிடி தடக்கை - (ஆறலைகள்வர் கவர்ந்தாலும்) மீட்கும்வன்மையைக் கொண்ட வேலைப் பெருமையையுடைய கையிலேயுடைய, ஓடா - (தம்மையெதிர்த்தார்க்குப்) பின்வாங்காத, வம்பலர் - புதியோர்,— (77) முழுமுதல் - அடியிலே, கொண்ட - குலைகொண்ட, தடவு நிலை பலவின் - குடம்போன்ற நிலையினையுடைய பலவின், (78) சிறுசுளை பெருபழம் - சிலவாகிய சுளையினையுடைய பெரிய பழத்தை, கடுப்ப - ஒப்ப, மிரியல் (79) புணர் பொறை - மிளகின் (ஒத்த கனமாகச்) சேர்தலையுடைய மூட்டையை, தாங்கிய - சுமந்தனவும், வடு ஆழ் நோன் புறத்து (80) அணர் செவி - வடுவு அழுந்தித் தோன்றுதலுற்று வலிமையினையுடைய முதுகினையும் எடுத்த செவியினையுமுடையனவுமான, கழுதை - கழுதைகளையுடைய, சாத்தொடு -(மிளகுவர்த்தகஞ் செய்யும்) வர்த்தகர்திரளோடு, வழங்கும் - செல்லுகின்ற, (81) உல்கு உடை - சுங்கத்தைக்கொண்ட, பெருவழி - பெருவழிகளையும்,—(எ-று.)

(66 - 80) இவ்வடிகள், வம்பலர் சாத்து இவர்களுடைய தன்மையை விளக்குவனவாகும். "எல்லிடைக்கழியுநர்க்கு ஏமமாக" (66) என்ற தொடரை "தேக்கிலைக் குவைஇ (104) என்ற இடத்து இயைத்து, ஏமமாக — இளைப்புத்தீர என்று பொருள் உரைப்பர், ஆசிரியர் நச்சினார்க்கினியர். அரும்பொருளருத்தும் தாளோடு [முயற்சியோடு] (68) அரணம் எய்தி, படம் புக்கு, (69) மார்பின் (70) விரவுக்கச்சின் வாள் (71) பூண்டு தூங்க,—(72) உடையையும், (73) தோளையுமுடைய (74) வேலைத் தடக்கையிற் கொண்ட ஓடாவம்பலர் (76)

வம்பலர் (76) சாத்தொடு வழங்கும் (80) பெருவழி (81) என்க. (56-76 : கடலிடத்தனவும், மலையிடத்தனவும் தோன்றும் மாட்சிமைப்பட்ட பொருளைப் பகற்பொழுதிற் காணும்போது காண்போர்க்கு மனக்களிப்பு தோன்றுவது இயல்பாதலால், 'ஏம்மாக மலையவும் கடலவும் மாண்பயந்தரூஉம்' என்றார். மலையனவாகி மாண்பயந் தரூஉம் அரும்பொருள்கள் - மாணிக்கம், சந்தனம் முதலியன. கடலனவாகி மாண்பயந் தரூஉம் அரும்பொருள்கள்-முத்துமுதலியன. மலையனவும், கடலனவும் மாண்பயந் தரூஉம் அரும்பொருள் அருத்தும் வம்பலர் என்றது - மலையினவும் கடலினவுமாகி மாண்பயனைத் தருகின்ற அரும்பொருளை உலகத்தாரை நுகரச்செய்பவரான மாணிக்கம், முத்துசந்தனம் முதலியன விற்பாரை. இனி, இத்தொடர்க்கு - மலையவும் கடலவுமாகிய பொருளைக்கொடுத்து அவற்றிற்கு விலையாக (மக்கட்குவேண்டிய) அரிய உணவுப் பொருளைப் பெற்று உலகத்தாரை உண்பிக்கச்செய்வாரை எனினுமாம். இருந்து தொடை-(சாமுத்திரிக சாஸ்திரத்தின் இலக்கணம்) திருத்தமுறஅமைந்த தொடையென்னும் உறுப்பையுடைய என்று இத்தொடரையும் வம்பலர்க்கு அடைமொழியாக்கி உரைப்பினுமாம். அடியை மறைத்தவண்ணம் கல் முள் முதலியன தாக்காது பாதுகாப்பதனால், செருப்பை 'அடிபுதையரணம்' என்றார்: வடமொழியில் பாதரட்சை எனப்படுவதும் காண்க. அரணம் - பாதுகாப்பது என்னும் பொருளுள்ள மரணம் என்ற வடசொல்லின் சிதைவு என்பர். சட்டையணிதலென்ற பொருளில் படம்புகுதலென்று வருவதனை 'படம்புகுமிலேச்சர்' என்ற இடத்தும் காண்க. ஓடாவம்பலர் ஆதலால், இவர்கள் ஆறலைகள்வரின் கணையைத் தொலைத்து மார்பிலும் புண்தீர்ந்து திறப்பரென்க. இனி, நச்சினார்க்கினியர் மார்பு கணை தொலைச்சிய புண்தீர்ந்தன [நிரம்பியன]வாயிருந்தன வென்பர்: (71) கை-கைப்பிடிக்கு ஆகுபெயர். வாளின் கைப்பிடி யானைத்தந்தத்தாற் செய்யப்பட்டிருத்தலால், வாளுக்கு 'வெண்கை' என்று அடைமொழிகொடுத்தார். (72-73) வம்பலரின் மார்பிலே வரிக்கச்சிலே பூண்ட வாள் தூங்குவது, வரையிலே பாம்பு ஊர்வது போலும்: மார்பிற்கு வரையும், அங்குத்தூங்கும் வாளுக்கு அரவும் உவமையாகும். சுரிகை-சுரிகா என்ற வடசொல்லின் திரிபு:உடைவாள் என்பதுபொருள்: உடையிற் செருகுவதுபற்றிச் சுரிகை உடைவாள் எனப்படுமாதலின், 'சுரிகை நுழைந்த உடை'என்றார்.(75)மீளி-மீட்டற் செயல்: தொழிற் பெயர்: இனி, யமன் என்றலும் உண்டு. அப்போது வம்பலர்க்கு வேலும், அவர்களுடைய வேலுக்கு யமனும் உவமமாவர். வம்பலர்க்கு எறுழ்த்தோளும் உடம்பிடித்தடக்கையும் ஓடாமையும் கூறியது - தம்மிடத்துள்ளபொருளைக் காக்கவல்லல் உடல்வலிமையையும் உள்ளவலிமையையும் உடையவர் அவர்என்றற்கு. கடம்பமரம் முருகக்கடவுள் அமருமிடமாதலை "கடம்பு நல்யாற்று நடுவுங் குன்றமும் பிறவும் அவ்வவைமேய வேறு வேறு பெயரோய், எவ்வயினோயு நீயே," "கடம்பமரணிநிலை," "செல்வக்கடம்பமர்ந்தான்" என்பவை முதலியவற்றாலும் அறியலாம்.

(77 - 81) வழங்குதல் - செல்லுதல்: சாத்து - ஸார்த்தம் என்ற வடமொழியின் திரிபு: வர்த்தகர்திரளென்றுபொருள். மிளகுவர்த்தகஞ் செய்பவரின் மிளகுப்பொதியைக் கழுதையின்மீது போட்டுக் கொண்டு வழிச்செல்வது, பண்டைக்கால வழக்கு. மிளகுமூட்டை கட்கு பலாப்பழத்தை உவமைகூறினார்: வடிவுவமை. சிறந்த பெரும் பழத்தில் சுளைமிக இராவாதலால், 'சிறு சுளைப்பெரும்பழம்' என்றது. இங்கு சிறுமை-மிகுதியர்கஇராமற் சிலவாயிருக்கையைக் காட்டிற்று. 'நெரியற்புணர்' பொறைதாங்கிய' 'வடுவாழ்' 'நோன்' என்பன, புறத்திற்கு[முதுகிற்கு] அடைமொழிகள். பெரும்பாரத்தை முதுகிற் சுமக்கும்போது அம்மூட்டையின்வடு முதுகிற்பதிந்திடுமாதலால், 'வடுவாழ்புறத்து'என்றும், பெரும்பாரத்தைச்சுமக்கும் வலிமை வாய்ந்ததாதலால் 'நோன்புறத்து' என்றும், மிளகுமூட்டை சுமக்குங் கழுதைக்கு அடைமொழி கொடுத்தார். காதைத்தூக்கியவண்ணம் இருப்பது கழுதைக்குஇயல்பு ஆதலால், 'அணர்செவிக்கழுதை' என்றது. உல்குடை என்ற அடைமொழியை 'பெருவழி' என்ற இடத்துக் கூறினாராயினும், உயணர்போகும் நெடுநெறி (65) என்ற இடத்தும் எடுத்துக் கூட்டுக. உல்கு - சுங்கம்.

இனி, ஒன்தரைஅடிகளால் செல்லும் இக்காட்டுவழிகள் விற்படையால் காக்கப்படும் என்பதைக் காட்டுகிறான்.

கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவின்

(இ - ள்.) (81) கவலை காக்கும்- யாதொருகவலையும் நேராதவண்ணம் பாதுகாக்கின்ற, (82) வில்உடை - விற்படையைக்கொண்ட, வைப்பின் - இடங்களையுடைய, வியல்காட்டுஇயவின் - பெரியகாட்டு வழிகளில்,—

(65) உமணர்போகும்நெடுநெறி, (76) வம்பலர் (80) கழுதைச் சாத்தொடு வழங்கும்(81) பெருவழி என்ற இவ்வழிகளைக் கவலைநேரா வண்ணம் பாதுகாக்கின்ற (82) விற்படையைக் கொண்ட இடத்தினை யுடையது, பெரிய காட்டுவழியென்க. கவலை - கவர்த்தவழி எனினுமாம். (65) நெடுநெறியையும், (81) பெருவழியில், கவலை - கவர்த்தவழிகளையும், காக்கும் - காக்கின்ற,வில் உடை வைப்பின் - விற்படையிருக்கின்ற ஊர்களில், வியல்காடு இயவின் - அகன்றகாட்டுவழிகளில்என்பர், நச்சினார்க்கினியர். (82) இயவின் (94) எயிற்றியர் (104) தேக்கிலையிற் குவித்தலினால், (105) பைதீர் கடும்பொடு பதமிகப்பெறுகுவிர் என்று இயையும்.

செல்லும் வழியில் பலவகைப்பட்ட **நிலங்களில், ஆங்காங்குள்ள திணைநிலமக்கள் முதலியோர் தருகின்ற உணவு பெறுவீரென்று** ஆற்றுப்படுத்துபவன் சொலத்தொடங்கி, **எயிற்றியரால் உணவு இடப்பெறுவீரென்பதை 83-105 அடிகளாற் கூறுகின்றான்:—**

நீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடாது
யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேல்தலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்
ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
ஈன்பிண வொழியப் போகி நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்பு லடக்கிய வெண்பல் லெயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழன் முன்றி னிலவுரற் பெய்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
வாரா தட்ட வாடூன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமகன்
ஓடாத் தானை யொண்டொழிற் கழற்கால்
செவ்வரை நாடன் சென்னிய மெனினே
தெய்வ மடையிற் றேக்கிலைக் குவைஇ நும்
பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவிர்

(இ - ள்.) (83) நீள் அரை இலவத்து - நீண்ட அடிப்பகுதியை யுடைய இலவமரத்தின், அலங்கு சினை - அசைகின்ற கிளை, பயந்த - காய்த்த, (84) பூளை அம் பசு காய் - பஞ்சினையுடைய அழகிய பசிய காயி னுடைய, புடை - முதுகுப்புறம், விரிந்து அன்ன - விரிந்து (பஞ்சு) தோன்றினாற் போன்ற, (85) வரி புறம் - வரியைக்கொண்ட முதுகை யுடைய, அணிலொடு - அணிலோடே, கருப்பை - எலியும், ஆடாது - திரியாதபடி, (86) யாறு அறல் புரையும் வெரிந் உடை - யாற்றின் கரு மணலையொக்கும் முதுகினையும், கொழு மடல் - கொழுவிய மடலையு முடைய, (87) நெடு தகர் (88) ஈந்து - நெடிய மேட்டுநிலத்திலுள்ள ஈந்தினுடையதாய், (87) வேல் தலை அன்ன வை நுதி (88) இலை - வேலின் முனையை ஒத்த கூரிய முனையைக்கொண்ட இலை யாலே, வேய்ந்த - கூரைபோட்ட, எய் புறம் - முள்ளம்பன்றி முதுகு போலும் புறத்தினையுடைய, குரம்பை - குடிலில், -(89) மான் தோல் பள்ளி - மான்தோலாகிய படுக்கையிலே, (90) ஈன் பிணா - மக வைப்பெற்ற எயிற்றி, (89) மகவொடு - (பெற்ற) அப்பிள்ளையோடே, முடங்கி (90) ஒழிய - முடங்கிக்கிடவாநிற்க, - போகி - (ஒழிந்தோர்) போய், (91) இரும்பு தலையாத்த - பூண் தலையிலே பொருந்தப்பெற்ற,

(90) நோன் காழ்-வலிமையையும் வயிரத்தையுமுடைய, (91) திருந்து கணை விழு கோல்-நன்றாகிய திரட்சியையுடைய சீரிய கோல் செருகின, (92) உளி வாய் சுரையின் - உளிபோலும்வாயினையுடைய தோண்டுகருவியால், மிளிர-கீழ்மேலாகும்படி, மிண்டி - குத்துகையினாலே, (93) இருநிலம்-கருநிலமாகிய, கரம்பை-தரிசுநிலத்திலே, படு - உண்டாகிய, நீறு - புழுதியை, ஆடி-அளைந்து (94) நுண் புல் அடக்கிய - நுண்ணியபுல்லரிசியை வாரியெடுத்துக்கொண்ட, வெண்பல் எயிற்றியர் - வெள்ளியபல்லையுடைய எயின்குடியிற் பிறந்த மகளிர்,— (95) பார்வை யாத்த-பார்வைமான் கட்டிநின்ற, பறை தாள்-தேய்ந்த அடியையுடைய, விளவின்-விளாமரத்தின், (96) நீழல்-நிழலையுடைய, முன்றில் - முற்றத்திடத்துத் தோண்டியுண்டாக்கின, நிலம் உரல்-நிலவுரலிலே, பெய்து - (அந்தப்புல்லரிசியைக்) சொரிந்து, (97) குறு காழ் உலக்கை ஓச்சி-குறிய வயிர முள்ள உலக்கையாலேகுத்தி, நெடு கிணறு - ஆழ்ந்தகிணற்றில், (98) வல் ஊற்று உவரி - சில்லூற்றாகிய உவரிநீரை, தோண்டி-முகந்துகொண்டு, தொல்லை (99) முரவுவாய் குழிசி-பழைய சிதைந்தவாயையுடையபானையிலே, (வார்த்த உலையை) முரி அடுப்பு ஏற்றி - முரிந்த அடுப்பிலே வைத்து, (100) வாராது அட்ட - (அரிசியைக்) கொழித்துஎடுக்காமலே ஆக்கின, வாடு ஊன் - வாட்டின ஊனோடே [உப்புக்கண்டத்தோடே] கூடின, புழுக்கல் - சோற்றை,—'(101) வாடா தும்பை - கெடாத தும்பை மலர் மாலை சூடின, வயவர் - (போரில்வல்ல) வீரரின், பெருமகன் - தலைவனாகி, (102) ஓடா தானை - முதுகிடாத சேனையையும், ஒள் தொழில் கழல் கால்-ஒள்ளிய தொழில்களையுடைய வீரக்கழலையணிந்த கால்களையுமுடைய, (103) செவ் வரை நாடன்-செவ்வியமலைநாட்டையுடையவனுடைய, சென்னியம்-பாணச்சாதியேம்,' எனின்-என்று கூறுவீரானால், (104) தெய்வம் மடையின் - தெய்வங்கட்குச்சேர இட்டுவைத்த பலிபோல, தேக்கிலை குவைஇ-தேக்கிலையிலே குவிக்கையினாலே, (105) பதம்-அந்தஉணவை,(104) நும்(105) பை தீர் கடும்பொடு-நும்முடைய பசுமை தீர்ந்த சுற்றத்தோடே, மிகபெறுகுவிர்-; (எ - று.)

(90) போகி, (92) மிண்டி, (93) ஆடி, (94) அடக்கிய எயிற்றியர் என்க. 83-88: எயிற்றியர் தங்கியிருக்கும் குடில்களின் தன்மையைக் கூறுவன, இவ்வடிகள். இலவம்பஞ்சின் விரிந்த காய் அணிலின் முதுகுக்கு வடிவுவமையாகும்: "தோன்று பூ விலவத்தங்கட்டொகையணிலனையபைங்காய்,கான்ற மென்பஞ்சி" என்றது காண்க. பகலில் அணிலும் இரவில் எலியும் திரியாமைக்குக்காரணம்-எயிற்றியர் தங்கியிருக்கின்ற அந்தக் குரம்பைகள்வேலின் தலைபோலும் நுதியைக்கொண்ட ஈந்திலையாலே வேயப்பெற்றிருத்தலென்க. மடலின் அடி தன்னிடத்தே நிற்க மேல் அறுப்புண்ட ஈந்துமுதுகு அறல்போலிருக்கும். அறுப்புண்ட ஈந்தின் பகுதியே வெரிந் எனப்பட்டது. ஈந்தினுடைய வேல் நுதி போலும்கூரிய இலைப்பக்கம்-குரம்பையின் மேலே தோன்றுவதால், அக்குடிலின் வேய்ந்த முதுகுப்புறம் எய்ப்பன்றி முதுகுபோலும்.

89 - 94: மகவைப்பெற்ற எயிற்றி ஈன்றணிமையால் வெளியே திரிந்துசென்று உணவுப்பொருளைக் கொணர வலிமைபெற்றிராமையால், அன்னாள் குரம்பையில்தானே மகவொடு ஒடுங்கியொழிய, மற்றையெயிற்றியர் புல்லரிசியைக் கொணருமாறு சென்றனர். மிக விளைந்து உதிர்ந்த புல்லரிசியை எறும்புகள் இழுத்துக் கொண்டுசென்றுசேர்த்துவைத்தஇடமறிந்துஅந்நிலத்தைத்தோண்டி அந்தப்புல்லரிசியெடுத்தல் அந்நிலத்தாரின பண்பாகும். "பெண்ணும் பிணாவும் மக்கட்குரிய" என்பதனால் மக்களுள் பெண்பாலைக் காட்டக் கூடிய பிணா என்னுஞ்சொல் குறியதன் கீழ்ஆக்குறுகி'பிண'என நின்றது. சுரை-குழைச்சு: கோல் செருகப்படுகின்ற குழைச்சையுடைய தோண்டுகருவிக்கு ஆகுபெயர்: இது, இக்காலத்து மண்வெட்டி எனப்படும். எயிற்றியர்-எயினர் என்பதன் பெண்பால்: எயினர், எயிற்றியர்-பாலைநிலத்துமாக்கள். ஈந்து + இலை = ஈத்திலை: மென்றொடர்க்குற்றியலுகரம் வன்றொடர்யிற்று.

(94) எயிற்றியர் (96) பெய்து (97) ஓச்சி (98) தோண்டி (99) ஏற்றி (100) அட்டபுழுக்கல் என்க.

(82) காட்டியவுகளில் 83) குரம்பையில் (94) எயிற்றியர், -(101) பெருமகனாகிய) (103)வரைநாடன் சென்னியம் எனின்,—(100) அட்ட வாடூன புழுக்கலை, (104) தேக்கிலையிற்குவிக்கையினாலே (105) (அப்) பதத்தை (104) நும் (105) கடும்பொடு மிகப்பெறுகுவிர் என்க. இதனால் திரையன் செங்கோல் பாலைநிலத்து எயிற்றியரையும் அறம் புரிபவராகச் செய்யவல்லதென்பதைக் காட்டியவாறு.

(95 - 105) பார்வைமான் - காட்டிலுள்ள மிருகத்தைப் பிடிக்குமாறு பழகியுள்ள மான். எயினர்க்குவேட்டையாடுதல் தொழிலாதலால் அவர்கள் வாழுமிடத்துப் பார்வை மிருகம் இருக்குமென்க. விளவில் விலங்குகளைக்கட்டுதல் இயல்பு. புல்லரிசியையும் கொழித்தெடுக்காமலே எயிற்றியர்சோறுசமைக்கின்றனர். இங்ஙனஞ் செய்வது கொழித்தற்கு வேண்டிய சுளகு இல்லாமையாற்போலும். பூமி கெட்டியாயிருத்தலால், அங்குக்கிணற்றில் தோன்றும் ஊற்றை வல்லூற்றென்றார். உவரி - உவர்ப்புச் சுவையையுடையது. எயிற்றியரின் வறுமைநிலை விளங்க, 'தொல்லை முரவுவாய்க்குழிசி முரியடுப்பேற்றி' என்றது. வாருதல் - கொழித்தல். வாடூன் - வெயிலிற்காய்ந்த ஊன்: மாமிசத்தில் உப்பிட்டு வெயிலிற்காயவைத்தது உப்புக்கண்டம் எனப்படும். வறுமையினால் உள்ளது வறந்தமைபற்றி 'பைதீர்கடும்பு' என்றது. நீங்கள் வரைநாடனுடைய பாணர்கள் என்பீரேல் அவ்வரசனிடத்துள்ள அன்பினால் அவனைச் சார்ந்த நுமக்கும் தெய்வத்துக்கிடுவதுபோலப்பரிவோடு உணவை எயிற்றியவர் இடுவரென்க.

106-133: இவ்வடிகளால் ஆற்றுப்படுத்துபவன் கானவேட்டையாடும் அருஞ்சுரம் நீங்கி எயினர் குடியிருப்பில் தங்கினால் இன்ன உணவு பெறலா மெனகிறான்:

மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
அகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கும்
அரைநாள் வேட்ட மழுங்கிற் பகலுள்
பருவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையும்
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணும்
அருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருந்துபட
ஒன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனகர்
ஊகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவி லெயினக் குறும்பிற் சேப்பின்
களர்வள ரீந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்;

(இ - ள்.) (106) மான் அடி பொறித்த - மானின் அடிவைப்பு அழுந்தியிடப்பதும், மயங்கு - ('நாம் எங்குச் சென்றால் நீரைப்பெறலாம்?' என்று அம்மான்கள்) மயங்குவதற்குக் காரணமுள்ள, அதர் மருங்கின் - வழியிடத்திலே, (107) வான் மடி பொழுதில்-மழை பெய்தலைத் தவிர்ந்த காலத்திலே, நீர் நசைஇ குழித்த - நீரைப்பெறவிரும்பித் தோண்டின, (108) அகழ்-குளத்தை, சூழ் - சூழப்பறித்துள்ள, பயம்பின் அகத்து - குழிகளினுள்ளே, ஒளித்து ஒடுங்கி - மறைந்தொதுங்கி,—(109) புகழாவாகை - அகத்தியின், பூவின் அன்ன - பூவினையொத்த,(110) வளைமருப்பு-வளைந்த கொம்பினையுடைய, ஏனம்-பன்றியின், வரவு - (நீருண்ணவருதற்குவரும்) வருகையை, பார்த்து-எதிர்பார்த்துக்கொண்டு, இருக்கும் - இருக்கின்ற, (111) அரைநாள்

வேட்டம்-முற்பாதிநாளில் வேட்டையை, அழுங்கின் - ஒழிந்தார்களாயின்,—பகல் நாள் - பிற்பாதி நாளிலே, (114) முள் அரை தாமரை - முள்ளைத் தண்டிலேயுடைய தாமரையின், புல் இதழ் - புற விதழை, புரையும் - ஒத்திருக்கின்ற, (115) நெடுஞ்செவி - நீண்ட காதினையுடைய, குறு முயல் - குறிய முயல்களை,—போக்கு அற - (ஓரிடத்தும் ஓடிப்) போகுதலில்லாதபடி, (113) தொகு வாய் வேலி தொடர் வலை மாட்டி (115) வளைஇ - நெருங்கிய இடத்திட்ட வேலியிடத்தே ஒன்றோடொன்றுபிணைத்த பின்னல்வலைகளை மாட்டி வளைத்து, (112) பகுவாய் ஞமலியொடு - திறந்தவாயையுடைய நாய்களுடனே (சென்று), பைம் புதல் எருக்கி - பசிய தூறுகளை அலைத்து (அவற்றிற் இடவாம லோட்டிப்பற்றி), (116) கடுங்கண் கானவர் - அஞ்சாமையையுடைய கானவர், கடறு-காட்டிலே, கூட்டுண்ணும்-கொள்ளைகொண்டு உண்கின்ற, (117) அருஞ் சுரம் - அரியபாலைநிலத்தை, இறந்த - கைவிட்ட, அம்பர் - அப்பால் [மற்றைநிலத்தில்], பருந்து பட - பருந்துகள் படியவும், (118) ஒன்னா தெவ்வர் நடுங்க - (தம் அரசர்க்குப்) பொருந்தாத பகைவர்அஞ்சவும், ஓச்சி - எறிந்து, (119) வை நுதி மழுங்கிய - கூர்மையையுடைய முனை மழுங்கின, புலவு வாய் எஃகம் - புலால்நாறும்வாயினையுடைய வேலை, (120) வடி மணி பலகையொடு - (நல்லோசையுள்ளதென்று) தேர்ந்தெடுக்கப் பெற்ற மணிகள் கட்டியுள்ள கிடுகுஎன்னும் பலகைகளோடே, நிரைஇ-நிரைத்துவைத்து,—முடி நாண் (121) சாபம் - (தலையிலே) முடிந்த நாணையுடைய வில்லை, சார்த்திய - சார்த்திவைத்த, கணை துஞ்சு- அம்புகள் தொழிலின்றித் தங்குகின்ற, வியல்-அகற்சியுடைய, நகர்-வீடுகளையும், —(122) ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்-ஊகம்புல்லாலே வேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மதிலையும்,-(123) வரை தேன் புரையும்-மலையில் தேனிறாலை யொத்திருக்கின்ற, கவை - குதையினை யுடைத்தாகிய, கடை-அடியினையுடைய, புதையொடு-அம்புக்கட்டுகளுடனே, (124) கடு துடி தூங்கு உடம்-கடியஓசையினையுடைய துடியென்னும் பறையுந் தங்கியிருக்கப்பெற்ற, கணை கால் பந்தர் - திரண்ட காலையுடைய பந்தரினையும்,—(125) தொடர்-சங்கிலிகளாலே, நாய் - நாயை, யாத்த-கட்டியுள்ளதனால், துன்ன அரு-கிட்டுதற்குஅரிய, கடி - காவலையுமுடைய, நகர் - வீட்டினையும்,—(126) வாழ் முள் வேலி-வாழ்ச்சிக்குக் காரணமான நிலைமுள்வேலியினையும், சூழ் மிளை பட்பை-(அதனைச்) சூழ்ந்த காவற்காட்டினையுடைய பக்கத்தினையும்,-(127) கொடு நுகம் தழீஇய - வளைந்த கணையமரம்பொருந்திய, புதவின்-(ஒட்டுக்கதவையுடைய) வாயிலினையும், செந் நிலை - செவ்வியநிலையினையும், (128) நெடு நுதி - நெடியமுனையையுடைய, வய - வலிமையுள்ள, கழு - கழுக்கள், நிரைத்த - வரிசையாக வைக்கப்பட்டுள்ள, வாயில் - ஊர்வாசலினையுமுடைய, (129) கொடுவில் எயினர் குறும்பில்-கொடிய வில்லை ஏந்திய எயினச்சாதியாரின் அரணிலே, சேப்பின்-தங்கினால்,-(130) களர் வளர் - களர்நிலத்திலே வளர்ந்த, ஈந்தின் - ஈந்தினது, காழ் - விதையை, கண்டு அன்ன - கண்டாலொத்த, (131) சுவல் விளை நெல்லின் - மேட்டுநிலத்திலே விளைந்த நெல்லினது, செவ்

அவிழ் - சிவந்த அவிழாகிய, சொன்றி - சோற்றை, (132) ஞமலி தந்த - நாய் (கடித்துக்) கொண்டுவந்த, மனவு சூல் உடும்பின் - அக்குமணிபோலும் முட்டைகளையுடைய உடும்பினது, (133) வறை - பொரியலாலே, கால் யாத்தது - மறைத்ததனை, வயின் தொறும்-மனைகடோறும், பெறுகுவிர்—; (எ - று.)

(106) "மானடி" என்பது முதல் (117) "அருஞ்சுரம்" என்பது வரையில்,பாலைநிலத்துவருணனை. கானவர் (116) பயம்பின் ஒடுங்கிப் (108) பார்த்திருக்கும் (110) அரைநாள்வேட்டம் அழுங்கின்,மற்றைப் பாதிநாள்(111) வேலியில் தொடர் வலை மாட்டி(113),போக்கற வளைஇ (115), எருக்கி (112), முயல் (115) கூட்டுண்ணும் (116) அருஞ்சுரம் (117)என்க.மழையில்லாமையால் உண்ணும் நீரை வேண்டித் தோண்டிய குளத்தைச் சூழ்ந்த குழிதோண்டிப்பதுங்கி, அக்குளத்துநீரைப் பருகவரும் பன்றியினது வருகையைப் பார்த்துக் கொண்டிருந்து கானவர் அரைநாளில் பன்றி வேட்டம் ஆடுவார்கள்: பாதிநாள் வேட்டம் இவ்வாறு கழிய, அடுத்த பாதிநாளிலே அக்கானவர் ஞமலியோடு சென்று வேலியில் வலைமாட்டிவளைத்துத் தூறுகளை யடித்து அங்குப்பதுங்கிய முயல்களைக் கொள்ளைகொண்டுஉண்பார்கள். இங்ஙன் வேட்டம்நிகழ்தற்கு இடனானது அருஞ்சுர மென்க. கானவர் - பாலைநிலமாக்கள். (106) பருகுதற்கு நீரிடையாமையால் மயங்கித்திரியும் மானின் அடி பொறிக்கப் பெற்றது, காட்டுவழியென்றார். அதர்-வழி. (108) அகழப்படுதலின் அகழ் என்று குளத்துக்குப்பெயராயிற்று: செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்டபெயர். (109 - 110):— வாகை - வெற்றி: வெற்றிமகள் வாழ்வதனால் 'கடவுள்வாகை' என இது, புகழப்படும்: புகழா வாகை யெனவே, ஆத்தியாயிற்று: இவ்வாறு வருவதனை, பிறகுறிப்பு என்பர் இலக்கணநூலோர். ஏனத்தின் மருப்பிற்கு வாகைப்பூ வடிவிலும் உவமையாம். 111-அரைநாள்-இராப்போதின் நடுயாமம் என்றும், பகல்நாள் அந்நாளின் பிற்றைநாட்பகல் என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர்உரைப்பர். நண்பகல் பாலைக்கு உரியதென்று அவ்வாறு கூறினர். சொற்பொருள் அங்ஙன் வருமா? ஆராய்க. 114-115:-முயலின் செவிக்குத் தாமரையின் புல்லிதழ் உவமை.

(117) "பருந்துபட" என்பதுமுதல் "குறும்பில்" (129) என்பது வரையில், பாலைநிலத்தைச் சார்ந்த இடத்துவாழும் எயினருடைய குறும்பின் வருணனை: குறும்பு - அரண். (129) எயினரின் குறும்பு, (121) ஈனை துஞ்சுவியல்நகரினையும், (122) வரைப்பினையும், (124) பந்தரையும், (125) நாய்யாத்த கடிநகரையும், (126) படப்பையையும், (128) வாயிலையுமுடையதென்க.

(118 - 121):—பகைவரைக் குத்துவதனால் அவருடைய இரத்தம் முதலியன தோயப் பெற்றிருத்தலால் "புலவு வாய் எஃகம்" என்றார்: வீட்டுகளின் எல்லைகளைச் சுற்றி எஃகங்கள் பலகையோடே வைக்கப்பட்டிருக்க, உட்புறத்துச் சார்த்திய வில்லும் அம்பும் தங்கியுள்ளனவென்க. 'எஃகம் பலகையோடு நிரைஇ'-"இடுகு நிரைத்தெஃ

கூன் றி", "பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து" என்பன காண்க. (123 - 129) குதை - வில்லிற்பூட்டும் முடிச்சினைக்கொண்ட அம்பின் பகுதி. கவைக்கடைப்புதை தேனிறாலை ஒக்குமென்க. வேண்டும்போது எடுத்துக்கொள்ளுமாறு அரண் பந்தரின் கால்களில் அம்புக்கட்டுக்களுடனே துடியென்னும் பறையும் தொங்கவிடப்பட்டிருக்கும். போர்க்குரிய கருவிகளை உள்ளே வைத்திருக்கும் கூடாரப்படை வீட்டுக்குக் காவலாகச் சங்கிலிகளாலே நாய்களைக் கட்டிவைத்துள்ளனர் எயினரென்க. பகைவர் வரின் அவரைக் குத்துதற்கு அரண்வாயிலிலே கழுக்களை நிரைத்து வைத்துள்ளனர். கழு - மரத்திற் கூரிய முனைகளைக் கொண்ட இரும்புக்கம்பிகள் கடாவப்பட்டுப் பூமியில் நடப்பட்டிருப்பது.

(129 - 133) எயினரின் குறும்பில் தங்கினால், அவர்கள் மேட்டு நிலத்தே விளைந்த நெல்லின் செந்நிறச் சோற்றை உடும்பின் பொரியலோடே தரப் பெறுகுவி ரென்கிறான்: உணவுக்கு முதற்பொருளாகிய சோற்றினும் வியஞ்சனமாகிய [கறியாகிய] உடும்பின்பொரியல் மிக்கிருக்குமென்பான் "கால்யாத்தது" என்றான். ஈந்தின் காழ், சோற்றவிழ்க்கு உவமை. உடும்பின் சூலுக்கு மனவு உவமை கூறப்படுதலை "மனவனைய மென்சூன் மடவுடும்பு" என்ற இடத்துங் காண்க.

பாலைநிலத்துஎயினர் குடியிருப்பிற் பெறுவன கூறிய ஆற்றுப்படுத்துவோன் அதைச் சார்ந்த குறிஞ்சிநிலமும் அதன் பகைப்புலமுமாகிய கடக்கவேண்டும் பகுதியை (134 - 147) அடிகளாற் கூறுகின்றான்:—

யானை தாக்கினு மரவுமேற் செலினும்
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
சென்னா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
இல்லடு கள்ளின் றோப்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி வலன்வளையூஉப்
பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை
முரண்டலை கழிந்த பின்றை

(இ - ள்.) (134) யானை தாக்கினும் - யானை (எதிரே கிட்டிவந்து தன் துதிக்கை கொண்டு) எறிந்தாலும், அரவு மேல் செலினும் - பாம்பு தன்மேலே சென்றாலும், (135) நீல் நிறம் விசும்பின் வல்ஏறு சிலைப்பினும் - நீலநிறத்தையுடைய மேகத்திடத்தே வலிய உருமேறு இடித்தாலும், (136) சூல் மகள்-கருப்பங்கொண்ட மறவர் மகள், மாறா-

(யானை தாக்குதல் முதலிய அவற்றிற்கு அஞ்சி) மீளாத, மறம்-வீரத் தன்மையை, பூண் - பூண்ட, வாழ்க்கை-வாழ்வினையும்,—(137) வலி—(தமது) வலிமையால், கூட்டு உணவின்-கொள்ளை கொண்டுண்ணும் உணவினையுமுடைய, வாள் குடி பிறந்த - வாள்தொழிலையே செய்யுங் குடியிலே பிறந்த, (138) புலிபோத்து அன்ன் - புலியின்து போத்தை ஒத்த, புல் அணல் காளை - புல்லிய தாடியினையுடைய அந்நிலத்துத் தலைவன், (139) செல்நாய் அன்ன -(தான் குறித்த மிருகத்தின் மேலே பாய்ந்து) செல்கின்ற நாய் (அதனைத் தப்பாமற் கொள்ளுமாறு போன்ற, கரு வில் சுற்றமொடு - கொடியவில்லையுடைய சுற்றத்தாருடனே, (140) கேளா மன்னர் கடிபுலம் புக்கு - (தன்வார்த்தையைக்) கேளாத பகைவரது காவலையுடைய நிலத்திலே சென்று, (141) நாள்-விடியற்காலையிலே, ஆ - (அவர்களுடைய) பசுக்களை, தந்து - அடித்துக்கொண்டு வந்து,(அவற்றை),நறவு நொடை தொலைச்சி-கள்ளுக்கு விலையாகப் போக்கி, (142) இல் அடு கள் - (தமது) இல்லிலே சமைத்த கள்ளுகளில், இன் - இனிய, தோப்பி - நெல்லாற் செய்த கள்ளை, பருகி - குடித்து,—(143) மல்லல் மன்றத்து -வளப்பத்தினையுடைய மன்றிலே, மத விடை - வலியையுடைய ஏற்றை, கெண்டி - அறுத்துத் தின்று, (144) மடி வாய் தண்ணுமை நடுவண் சிலைப்ப-(தோலை) மடித்துப்போர்த்த வாயையுடைய மத்தளம் (தங்களுக்கு) நடுவே முழங்கா நிற்க,—(145) சிலை நவில் எறுழ் தோள் ஓச்சி - வில்லுப்பயின்ற வலிய (இடத்) தோளை யெடுத்து, வலன் வளையூஉ-வலப்பக்கத்திலே வளைந்து, (146) பகல் மகிழ் தூங்கும் - பகற் பொழுதிலே மகிழ்ச்சியுடனேயாடுகின்ற, தூங்கா - சோர்தலில்லாத, (147) இருக்கை - குடியிருப்பையுடைய,முரண் தலை-மாறுபாட்டையுடைய இடத்தை, கழிந்த பின்றை - கழிந்தபின்பு,—(எ-று.)

முதல் நான்கடிகள், குறிஞ்சிநிலத்து வாழும் மறக்குடியின் தன்மையைத் தெரிவிப்பன. யானை தாக்கினாலும் அரவு தன மீது சென்றாலும் பேரிடி யிடித்தாலும் சூல்கொண்டமகள் சிறிதும் அஞ்சி மீளுதல் இல்லாத மறத்தைப்பூண்டது மறக்குடி யென்க. அன்றியும், தனது வலியாலே கொள்ளைகொண்டுண்பதும் வாள் தொழிலைச் செய்வது மான குடியிற் பிறந்து புலிக்குட்டிபோன்ற இளைய வீரன் வில்லை யெடுத்த தன் சுற்றத்தாருடனே பகைப்புலத்துச் சென்று தங்களுடைய வீரத்தினால் அப்பகைப் புலத்து ஆநிரைகளை விடியற்காலத்தே கவர்ந்து வந்து அவற்றை கள்ளுக்கு விலையாகக் கொடுத்துத் தோப்பிக்கள்ளைப் பருகி,மன்றத்து விடைகளை யறுத்துத் தின்று மகிழ்ந்து கூத்தாடும் இடங்கள் பல அங்கு உண்டு: அவற்றைக் கடக்கவேண்டும் என்க. பகைப் புலத்துச் சென்று ஆநிரையை அடித்துக் கொண்டு வந்த வீரன், தனதுவெற்றி விளங்கவும் கள்ளைப் பருகி,மத்தளஞ் சிலைப்பக் கூத்தாடுவ னென்க.குறிஞ்சி நிலமும் அதன் பகைப் புலமும் கடத்தலைக் கூறுகின்றவன் அவ்விடத்துப் பெறும் உணவைக் கூறுனாயினன், அவர் மாறு பாட்டோடு இருப்பவராதலால், போத்து என்பது -இளமைக்கும் ஆண்பாற்கும் உரியது.

(139) வேட்டை நாய் தான் குறித்துச் செல்லும் விலங்கின்மீது எவ்வாறு தப்பாமற் பாயுமோ அங்ஙனம் பாயவல்லர் என்பார் 'சென்னாயன்ன கருவிற்சுற்றம்' என்றார். சென்னாய்-வினைத்தொகை (ஒருவகைச்சாதி நாயைக் குறிக்க வருவது செந்நாயென நிற்கும்).

(147) "மறிய" என்பதுமுதல், (168) "பசுந்தினை மூரல்பாலொடும் பெறுகுவிர்" என்பது வரையில் உள்ள பகுதிகளால், ஆற்றுப் படுத்துபவன் முல்லை நிலத்துத் தங்கினாற் பெறுமவற்றைக் கூறுகின்றான்:

மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்
அதளோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் துருவையொடு வெள்ளைசேக்கும்
இடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்
நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகையன்ன கூம்புமுகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்
அளவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்;

(இ-ள்.) (147) மறிய - மறியினுடைய[ஆட்டுக்குட்டிகள் தின்று தின்னுந் தன்மையினையுடைய], (148) குளகு - தழைகளை, அரை யாத்த - தம்மிடத்தே கட்டின, குறுங் கால் - குறிய காலினையுடைய, குரம்பை - குடிசையையும், (149) செற்றை வாயில் - சிறுதூற்றை யுடைய வாயிலையும், கழி செறி கதவின் - மூங்கிற்கழிகளால் கட்டப் பட்ட கதவினையும், (150) கழித்தலை - (வரிந்த) கழிகளிடத்து, கற்றை - வரகு கற்றையாலே, வேய்ந்த - மேய்ந்த, சாம்பின் - சேக்கையின்மீது, (151) அதளோன்-தோலை(ப் பாயலாக) உடையமுதி யோன், துஞ்சும்-வேறுமுயற்சியின்றித் தங்குகின்ற, காப்பின்-காவலினை யும், உதள-ஆட்டுக் கிடாயினுடைய, (152) நெடு தாம்பு தொடுத்த-

(தாமணி தொடுத்த) நெடிய தாம்புகள் கட்டின, குறு தறி - குறிய
முளைகளையுடைய, முன்றில் - முற்றத்தினையும், (153) கொடு முகம்
துருவையொடு - வளைந்த முகத்தையுடைய செம்மறியாட்டுடனே,
வெள்ளை-வெள்ளாடும், சேக்கும்-கிடக்குமாறுவிட்டிருக்கின்ற, (154)
இடு முள் வேலி-கட்டுமுள்ளாலாகிய வேலியினையுமுடைய, எரு படு -
எருமிகுகின்ற, வரைப்பின்-ஊரினிடத்து, (155) நள் இருள் விடியல் -
செறிந்த இருள் போகின்ற விடியற்காலத்தே, புள் எழ - பறவைகள்
எழாநிற்க, போகி—,—(156) மத்தம் புலி குரல் ஒலிப்ப வாங்கி - மத்
தானது புலியினது குரல்போலும் முழக்கத்தை முழங்கும்படி (கடை
கயிற்றை) வலித்து, (157) ஆம்பி வால் முகை அன்ன - குடைக்கா
ளானுடைய வெள்ளிய மொட்டுக்களையொத்த,கூம்பு குவிந்த, முகிழ்-
முகிழ்களையுடைய, (158) உறை அமை- உறையாலே இறுகத் தோய்
ந்த,தீ தயிர்-இனிய தயிரை,கலக்கி-கடைந்து,நுரை தெரிந்து-வெண்
ணெயை எடுத்து, (159) புகர் வாய் குழிசி-(தயிர்) புள்ளியாகத்தெறி
த்த வாயையுடைய மோர்ப்பானையை, பூ சுமடு இரீஇ - அழகிய சும்
மாட்டிலே இருக்கவைத்து, (160) நாள் மோர் மாறும் - காலையிலே
மோரை வேறுபொருள்கட்குவிற்கின்ற,நல் மா மேனி-நன்றாகிய மாமை
யாகிய நிறத்தினையும், (161) சிறு குழை துயல்வரும் காதின் -
சிறியமகரக்குழை அசைகின்ற காதினையும், பணை தோள் - மூங்கில்
போலுந்தோளினையும், (162) குறு நெறி கொண்ட-குறிதாகிய நெறித்
தலைக் கொண்ட, கூந்தல் - மயிரினையுமுடைய, ஆய் மகள் - ஆய்ச்சாதி
மகள், (163) அளை விலை உணவின் - மோர் விற்றதனாலுண்டாகிய
நெல் முதலியவற்றாலே, கிளை - சுற்றத்தாரை,உடன் - ஒருசேர, அரு
த்தி - உண்ணப்பண்ணி,—(பின்பு), (164) நெய் விலை - நெய்யை விற்
கின்ற விலைக்கு, கட்டி - கட்டியாக, பசும்பொன் கொள்ளாள் - பசும்
பொன்னை வாங்காளாய், (165) எருமை - (பால்கறக்கும்) எருமையை
யும், நல் ஆன் - நல்லபசுவையும், கரு நாகு - கரிய எருமை நாகினை
யும், பெறாஉம் - வாங்குதற்கு இடனை, (166) மடி வாய் கோவலர் -
(சீழ்க்கைப் பிடித்தலாலே) மடித்தவாயையுடைய இடையரின், குடி
வயின் - குடியிருக்கின்ற இடத்திலே, சேப்பின் - தங்குவீராயின்,--
(167) ஞெண்டின் - நண்டினுடைய, இருங் கிளை - பெருஞ் சுற்ற
மாகிய, சிறு பார்ப்பு - சிறிய பார்ப்பை, அன்ன - ஒத்த, (168) பசு
தினை மூரல் - செவ்விய தினையரிசியின் சோற்றை, பாலொடும் - பாலு
டனே,பெறுகுவிர்—; (எ-று.)—வரைப்பின் (154) போகி (155), குடி
வயின் சேப்பின் (166), பசுந்தினைமூரல் பெறுகுவிர் (168) என்க.

(147) 'மறிய' என்பது முதல் (154) 'வரைப்பின்' என்பது வரை,
முல்லை நிலத்து ஊரின் இயற்கைத்தன்மையைத் தெரிவிக்கும். மறி -
மரட்டின்குட்டி: ஆட்டுக்குட்டிகள் நின்று தின்னும்படி தழைகளைக்
கொண்ட குறுங்காலையுடையன, ஆங்குள்ள குடிசைகள்: அந்தக்
குரம்பைகளின் வாயிலில் சிறுதூறுகள் கிடக்கும். அங்கே குடிசை
கொட்டில் முதலியவற்றின் கதவுகள் மூங்கிற் கழியாற் கட்டப்பட்
டிருக்கும்: சேக்கை வரகுகற்றையால் வேயப்பெற்றிருக்கும்: ஆங்காங்

குக் காவலாகச்சேக்கையில் (யாட்டுத்) தோலைப் பாயலாகக்கொண்டு முதியோன் துஞ்சுவான்:] வேறுசெயலைவிட்டுக் காவல் இருப்பான் [துஞ்சுதல் - வேறுமுயற்சியின்றியிருத்தல்: தூங்குதலன்று.] முன்றில்கள் யாட்டுக்கிடாயிற் பூட்டின நெடுந்தாம்புகள் கட்டிய குறிய முளைகளைக் கொண்டிருக்கும். இடுமுள் வேலியில் செம்மறியும் வெள்ளாடும் கிடக்கும். எரு, மிக்கிருக்கும்: இவ்வாறுளது முல்லைநிலத்து ஊரென்க.

இவ்வாறாகிய முல்லை நிலத்து ஊரிற்போனால் அங்குத் தங்க வேண்டிய குடியிருப்பிடம் இவ்வாறாக இருக்குமென்பதை (156)'புலிக் குரல்' என்பது முதல்(166)'மடிவாய்க்கோவலர் குடி'என்றவரையுள்ள பகுதி தெரிவிக்கும். அவற்றுள் 156-165 அடிகள்-ஆய்மகளின் தன்மையைத் தெரிவிப்பன.ஆய்மகள் தயிரில்மத்தையிட்டுக்கடைகயிற்றை வலித்துக் கடையும்போது, புலிக்குரல் போன்ற பேராரவாரம் பிறக்கும்: அங்ஙனம் கடைந்து வெண்ணெயை யெடுத்துவிட்டுப் பிறகு மோரைத் தலையிற் சும்மாட்டிலே வைத்துக்கொண்டு அடுத்துள்ள நிலத்துப் போய் விற்று நெல் முதலிய உணவுப்பொருளைக்கொண்டு அவற்றைத் தன் சுற்றத்தாருடன் உண்பள். பின்பு வெண்ணெயைக் காய்ச்சி நெய்யாக்கி அந்தநெய்யை விற்றுப் பெறும் பொருளுக்குப் பொற்கட்டி வாங்கவேணுமென்ற எண்ணங்கொள்ளாமல், வளரும்பொருளான எருமை பசு நாகு முதலியவற்றை வாங்குவள் என்க. மோருக்கு விலையாக நெல்லை வாங்கும் மரபு இப்போதும் உண்டு:அதுபற்றியே,அளைவிலையுணவு என்றது.இங்கு ஆய்மகளின் இயற்கை வருணனை இனிது கூறப்பட்டிருத்தல், கருதத்தக்கது. குறிஞ்சிநிலத்து மாக்கள் அடித்துக் கொண்டு சென்ற எருமை முதலாயவற்றை, அந்த நிலத்தே நெய்யை விற்ற ஆய்மகள் நெய்யின் விலையாக வாங்கினளென்பர், நச்சினார்க்கினியர். (166) வாயை மடித்துச் செய்யும் ஒலி, சீழ்க்கை எனப்படும்: எருமை முதலியவற்றை அழைத்தல் முதலியவற்றிற்குச் சீழ்க்கையடிக்கும்படி மடித்தவாயினர் கோவலரென்க, 167-168 ஞெண்டின் பார்ப்பு பசுந்தினை மூரலுக்கு உவமை.

ஆற்றுப்படுப்போன், 169 - 196 - அடிகளால், முல்லை நிலத்து மேய்புலங்களைக் கடந்து அந்நிலத்தைச் சார்ந்த உழுதுண்பாரின் ஊரில் தங்கினால் வரகின் சோற்றை அவரைப் பருப்புணவோடு பெறுவீரென்கிறான்:—

தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி
விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
உறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்றமருடுக்கைக் கூழா ரிடையன்

கன்றமர் நிரையொடு கானத் தல்கி
அந்நு ணவிர்புகை கமழக் கைம்முயன் று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகிமுள் ளுடுத்து
எழுகா டோங்கிய தொழுவுடை வரைப்பின்,
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றில்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்க்
குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்,
பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றிப்
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்று
இன்சுவை மூரற் பெறுகுவிர்;

(இ - ள்.) (169) தொடு தோல் மரீஇய - செருப்பு விடாமற் இட்ந்த, வடு . தழும்பு, ஆழ் - அழுந்தின, நோன் அடி - வலிய கால்களையும், (170) விழு தண்டு ஊன்றிய - (பசுக்களுக்கு) வருத்தஞ் செய்கின்ற தடியை ஊன்றிய, மழு தின் - (மரங்களை ஒடிமெறிந்து கொடுக்கும்) கோடரியால் தழும்பிருந்த, வல் - வலிய, கை - கையினையும், (171) உறி கா - (இரண்டு தலைகளிலும்) உறியினையுடைய காவுதடி, ஊர்ந்த - மேலேயிருந்ததனாலுண்டாகிய, மறு படு - தழும்புமிக்க, மயிர் சுவல் - மயிரெழுந்த தோட்கட்டினையும், (172) மேம் பால் உரைத்த ஓரி . (பலரும்) விரும்புகின்ற (பசுக் கறந்த) பாற்கையைத் தடவின மயிரையும், (173) காட்ட (172) ஓங்கு மிசை (173) கோட்டஉம் கொடியஉம் - காட்டிலுள்ளவான உயர்கின்ற உச்சியினையுடைய கொம்புகளினுள்ளவையும் கொடிகளிலுள்ளனவுமாகிய, (174) பல் பூ - பலவகையான மலர்கள், (173) விரை இ (174) மிடைந்த - கலந்து நெருங்கிய, படலை கண்ணி - கலம்பகமாகிய மாலையினையும், (175) ஒன்று அமர் உடுக்கை - ஒன்றாய்ப் பொருந்திய ஆடையினையுமுடைய, கூழ் ஆர் இடையன் - கூழ் குடிக்கின்ற இடையன், (176) கன்று அமர் நிரையொடு - கன்றுகள் பொருந்தின பசுத்திரளோடே, கானத்து - காட்டிலே, அல்கி - தங்கி, (177) அம் நுண் அவிர் புகை கமழ - அழகிய நுண்ணியதாய் விளங்கும் புகை முற்படத்தோன்றும்படி, கைம்முயன்று - கையினால்

முயற்சி எடுத்துக்கொண்டு, (178) ஞெலி கோல் - தீக்கடைகின்ற கோலாலே, கொண்ட-கடைந்துகொண்ட, பெரு விறல்-மிக்கவலிமை யையுடைய,ஞெகிழி - கடைக்கொள்ளியின்,(179) செந் தீ-செந்நிறத் தீயினால், தோட்ட-துளையிட்ட, கருந் துளை-கரியதுளையினையுடைய, குழலின் - புல்லாங்குழலினின்றெழுப்பின, (180) இன் தீம் பாலை-மிக வும் இனிய பாலையென்கின்ற பண்ணை, முனையின் - (தான்) வெறுத் தால், குமிழின் - குமிழமரத்தினது, (181) புழல் கோடு - உட்பொய் யாகிய கொம்பிடத்தே, தொடுத்த-வளைத்துக்கட்டின, மரல் புரி-மரல் முட்டைக்கயிறாகிய, நரம்பின்-நரம்பினையுடைய, (182) வில் யாழ்-வில் யாழென்பது, இசைக்கும் - ஒலிக்கின்ற, விரல் எறி - விரலாலெறிந்து உண்டாக்கிய, குறிஞ்சி - குறிஞ்சிப்பண்ணை, (183) பல் கால் பறவை - பலவாகிய [ஆறாகிய] கால்களையுடைய வண்டுகள், கிளை செத்து - (தம்) சுற்றத்தின் ஓசையாகக் கருதி, ஓர்க்கும் - செவி கொடுத்துக்கேட்கும், (184) புல் ஆர் - புல்நிறைந்த, வியல் புலம் - அகற்சியையுடைய நிலத்தைத், போகி - கடந்துசென்று,—முள் உடு த்து - முள்ளை(த் தன்னிடத்தே) சூழ்ந்து, (185) எழு - ஓங்கிவளர் கின்ற,காடு-(விடத்தேர் முதலிய)செடிக்காடுகள்,ஓங்கிய-சூழவளர்ந்த, தொழு உடை வரைப்பின் - தொழுக்களையுடைய எல்லைகளில், (186) பிடி கணத்து அன்ன - பெண்யானையின் திரள் (நின்றாற்)போன்ற, குதிர் உடை - (வரகுமுதலியவற்றைக்கொண்ட) குதிர்களையுடைய, முன்றில் - முன்றிலினையும், (187) களிறு தாள் புரையும் - யானை யினுடைய காலையொத்திருக்கின்ற, திரி மரம்-வரகுதிரிகை (நட்டுநிற் கும்), பந்தர் - பந்தரினையும், (188) குறு சாடு உருளையொடு - குறிய சகடத்தினுருளைகளோடே, கலப்பை - கலப்பையையும், சார்த்தி - சார்த்துதலினாலே, (189) நெடு சுவர் - நெடிய சுவரிடத்தில்,பறைந்த- தேய்ந்த,புகை சூழ் கொட்டில் - புகைசூழ்ந்த கொட்டிலினையுமுடைய, (190) பருவம் வானத்து - மாரிக்காலத்தையுடைய விசும்பிடத்தில், பா - பரந்த, மழை கடுப்ப - மேகத்தையொப்ப, (191) கரு வை வேய்ந்த - கருநிறமுள்ள (வரகு) வைக்கோலாலே வேயப்பெற்ற, கவின் - அழகினையுடைய, குடி - குடியிருப்பினையுடைய, சிறு ஊர் - சிறிய முல்லை நிலத்து இருப்பாகிய ஊர்களிலே, (192) நெடு குரல் - நெடியகொத்தினையுடைய, பூளை பூவின் அன்ன - சிறுபூளையின் பூவை யொத்த, (193) குறு தாள் வரகின் குறள் அவிழ் - குறியதாளினை யுடைய வரகினது சிறிய அவிழ்களாகிய, சொன்றி-சோற்றை, (194) புகர் இணர் வேங்கை வீ-நிறத்தையுடைய கொத்தினையுடைய வேங் கைப் பூவை, கண்டு அன்ன-கண்டாலொத்த, (195) அவரை வால் புழுக்கு-அவரைவிதையினது நன்றாகிய பருப்பை, அட்டி-மிக இட்டு, பயில்வுற்று-பயிலுவதினால்,(196)இன் சுவை மூரல்-இனிய சுவையை யுடைய மூரலை, பெறுகுவிர்—; (எ - று.)

இடையன் (175) கானத்து அல்கி (176) பாலைப்பண் தான் முனையின் (180) (அதனைக்கைவிட்டு), வில்யாழிலே வாசிக்கும் குறிஞ் சியை (182), பறவையோர்க்கும் (183) புலத்தைக் கடந்து போகி(184)

வரைப்புக்களிலே, (185) முன்றில் (186) முதலியவற்றையுடைய சீறூர் களிலே (191) வரகின் சொன்றியைப் (193) புழுக்கை அட்டிப் பயில் வுறுவதால் (195) இன்சுவையையுடைய மூரலைப் பெறுகுவிர் (196) என்க. இவ்வடிகளால், முல்லைநிலத்து மேய்புலத்தைக் கடந்து உழ வரூரிற் சென்றாற் பெறும் உணவு கூறப்பட்டது.

169 - 175. இவ்வடிகள், மேய்புலத்து இடையன் தன்மையைக் கூறும். இடையன் தன்காலில் எப்போதும் செருப்பை மாட்டிக் கொண்டிருத்தலால், அவனுடையகால் அச்செருப்புமாட்டிய வடுவைக் கொண்டிருக்கும்: காட்டில் உயர இருக்குந் தழைகளை யாடு முதலியன உண்ணும்படி ஒடிப்பதற்காகப் பல வேளைகளில் கோடாரிப் படை யைத் தாங்குவதனால் அத்தழும்பு அவன் கையிலிருக்கும்: அவ்வா றான கையில் பசுக்களையோட்டுந் தடியைக் கொண்டிருப்பான்: பால் தயி ர்களின் குடத்தை வைத்திருக்கும் உறிகளைக் கொண்ட காவடியைச் சுமப்பதனால், அவ்விடையனுடைய மயிரெழுந்த தோட்கட்டுத் தழும்பு செறிந்திருக்கும்: எண்ணெயைத் தடவுவதுபோல் பால்கறந்த பிசுக் கைக் கொண்ட கையை மயிரிலே தடவியிருப்பான். காட்டிலே கோட் டுப்பூ கொடிப்பூக்களான பல்நிறம் படைத்த பலவகைப் பூக்கள் கொண்டு தொடுத்த வலம்பகமாலையை யணிந்திருப்பன்: அரையில் ஒற்றையாடையையே உடுத்திருப்பன்: கூழையுண்பன் என்க. மேம்= மேவும்: செய்யுமெனெச்சம் ஈற்றுயிர் மெய் சென்றது. காட்ட—குறிப் புப்பெயரெச்சம்: காடு - பகுதி. (175) கூழ் ஆர் இடையன் என் பதற்கு - (பாற்)சோற்றையுண்கிற) இடையன் என்றலும் உண்டு. 169-184: முன்னர் இடையர்குடியிருப்புக்கூறிப் பின்னர் அவர் பசுக் கள் நிற்கின்ற முல்லைநிலமும் கூறினார்.

இனி, 184 - வரை அவ்வாறான இடையனுடைய பசுக்கள் முத லியன நிற்கும் முல்லைநிலத்தைத் தன்மைநவிற்சியாற் கூறுகின்றார். இடை யன் புல்லாங்குழலைக் கொண்டு வாசிக்கின்ற பாலைப்பண்ணை வெறுப்பா னாயின், குமிழினது புழற்கோட்டின் வளைத்துக்கட்டிய மரல்நார் நரம்பைக் கைவிரலாலே தெறித்துக் குறிஞ்சிப் பண்ணைவாசிப்பன்: அந்தப் பண்ணை வண்டுகள் தம்மினமான வண்டு செய்யும் இசையென்று நினைத்துச் செவிகொடுத்துக் கேட்கும்: இவ்வாறுள்ளது புல்லு நிறைந்த முல்லை நிலப்புலமென்க. பாலைப்பண்ணை வெறுத்தது, நெடுநேரம் அதனைவாசி த்ததனாலாம். கூழார்இடையன் என்று உடலுக்குவேண்டுவன கூறி, பின்பு உயிர் மகிழ்தற்கு ஏதுவான இசையாற் போதுபோக்குதலைக் கூறினார். வில்யாழ் என்றது, மிகமிகப்பழமையான காலத்துப் பயின் றது. (177 - 182:) அரணிக்கட்டை போன்றவற்றை முயன்று கடைந்து தீயுண்டாக்குதல் முற்காலத்து மரபு ஆதலின், 'கைம்முயன்று ஞெலிகோற்கொண்ட செந்தீ' என்றது. பலபொருள் களையும் எரிக்கும் வல்லமையுடைய தாதலால், 'பெருவிறல் ஞெகிழி' என்றது. பெருவிறல் இடையன் எனக் கூட்டுவர் நச்சினார்க்கினியர். மூங்கிலில் தீயினால் ஏழுசுரங்கள் பிறக்கத் துளை யிடுதல், பண்

டைக்கால மரபு. குமிழின் கொம்பு கெட்டியாயிராமல் உள்ளேபுழை [துவாரம்]உடையதா யிருக்குமென்பது 'குமிழின் புழற்கோடு'என்பதனால் விளங்கும். குமிழங்கோட்டை வளைத்து மரலின்நாரை நரம்பாகக் கட்டி அந்தவில்யாழைக் கைவிரலால்தெரித்துவாசிப்பதும் பண்டைக்கால வழக்கம் போலும்.

183: ஆறு கால்களையுடைமையால், வண்டு 'பல்காற் பறவை' எனப்பட்டது. "நண்டுந் தும்பியு நான்கறிவினவே, பிறவுமுளவேயக் கிளைப் பிறப்பே" என்ற தொல்காப்பியத்து மரபியற் சூத்திரத்தினால், தும்பியின் கிளையாகிய வண்டுக்கும் செவிப்பொறியுணர்வு நீங்க நான்கு பொறியுணர்வேயுண்டு என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியிருக்க, 'பல்காற் பறவை கிளை செத்து ஓர்க்கும்'என்றது எவ்வாறு பொருந்துமெனின்?—இதற்கு ஒருசாருரைகாரர் கூறும்விடை: "ஆசிரியர் நண்டுந் தும்பியும்" என்று தும்பியைப் பின்வைத்தது - மேல்வருஞ் சூத்திரத்தில், "மாவுமாக்களுமையறிவினவே" என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கு என்றுணர்க. இதனை, வாராததனால் வந்தது முடித்தலென்னும் தந்திரவுத்தியாற் கொள்க என்று ஆண்டு உரைகூறிப் போந்தாம்: அதுவே, ஆசிரியர் கருத்தென்று சான்றோருணர்ந்தன்றே, "பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த, தாதுண் பறவை பேதுறலஞ்சி, மணிநாயாத்த மாண்வினைத்தேரன்" என்று அப்பொருள் தோன்றக் கூறியதென்று உணர்க.இக்கருத்தான் இவரும் செவியுணர்வுஉண்டு என்று கூறினார்" என்பது.

(184-185): தொழூ - பட்டிமேயும்பசுமுதலியவற்றையடைக்கும் இடம்: தொழுவைக் கொண்ட இடம் முள்ளுடுத்து எழு காடு ஓங்கிய தென்க. இது, பசுக்கள் முதலியன பட்டி மேயாமற் காக்கின்ற இளங்காட்டைக் கொண்ட படைத்தலைவரிருப்புக் கூறுகிற தென்ப. 186 : வரகுதானியம் நிரம்பிய குதிர்கள் பிடிக்கணத்தைப் போலும். 187; வரகு தானியத்தைத் திரிக்கும் [அரைக்கும்] திரிகை [எந்திரம்] களிற்றுத்தாள் போலும்: அவ்வாறுள வரகுதிரிகையை நட்டு நிற்கும் இடம், பந்தர் போடப்பட்டுள்ளது என்க.

188 - 189: நெடுகக்கட்டிய கொட்டகை ஒரு பக்கத்திலே அடுப்பு எரித்து ஒருபக்கத்திலே தொழிலொழிந்த நாளில் சகடத்தின் உருளையையும் கலப்பையையுஞ் சார்த்தி எருதுகளும் கட்டப்பட்டிருக்குமாதலால் 'குறுஞ்சாட்டுருளையொடு......கொட்டில்' என்றது. கலப்பைச் சார்த்திச் சுவர் பறைந்த கொட்டில்,புகைசூழ் கொட்டில் என்க. கொட்டில்-மாட்டுக்கொட்டகை. 190-191:—முல்லை நிலத்தூர்களில் குடிசை வரகு வைக்கோலாலே வேயப்பெற்றிருப்பது, வானத்துப் பாம்பை கடுக்குமென்க: இனி வரகு வைக்கோற் போர் வானத்தை முட்ட வேய்ந்திருப்பது இவ்வாறு வருணிக்கப்பட்ட தென்றலு மொன்று.

192 - 193: பூளைப் பூவை யொத்தது வரகின் சோற்றவிழ் என்க. 194 - 195: வேங்கைப்பூ அவரைவிதைக்கு உவமையாகும்.

(196) "ஞாங்கர்" என்பது முதல் (256) "வாட்டொடும் பெறுகுவிர்" என்பது வரையில், ஆற்றுப்படுப்பவன், முல்லையைக் கடந்து மருதநிலத்துப்பேரூரில் தங்கினால் பெறும் உணவைக் கூறுகின்றான்: அவற்றுள் (206) 'வன்புலமிறந்த பின்றை' என்பது வரையில், முல்லையைச் சார்ந்த உழவர்குடியிருக்கும் இடமான கடக்கவேண்டிய நிலப்பகுதி கூறப்படும்:

ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்
கறையணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும்
வன்புல மிறந்த பின்றை,

(இ-ள்.) (196) ஞாங்கர் - அந்நிலத்திற்கு மேல், (197) குடி நிறை-குடியிருப்புநிறைந்த, வல்சி-உணவுக்குக்காரணமான, செஞ்சால்உழவர்-செவ்விய சாலாகவுழுகின்ற உழவுத்தொழிலையுடையோர், (198) நடை நவில் பெரு பகடு - (உழவுத்தொழிலின்பொருட்டு) நடையாகச் செல்வதிலே பயின்ற பெரிய எருதுகளை, புதவில் - வாயிலிலே, பூட்டி-(நுகத்தைப்) பூட்டிக்கொண்டு சென்று, 199) பிடிவாய் அன்ன மடிவாய் - பெண்யானையின் வாயையொத்த வளைந்த வாயையுடைய, நாஞ்சில் - கலப்பையினுடைய, 200) உடும்பு முகம் முழு கொழு - உடும்பினது முகத்தையொத்த பெருங்கொழு, மூழக - மறையும்படி, ஊன்றி-அமுக்கி, (வளைய உழுது), (201) தொடுப்பு எறிந்து-விதைத்தலைச் செய்து, (பின்பு), உழுத (பயிரினிடையே) உழுத, துளர்படு - களைக்கொட்டாற் செதுக்கிய; துடவை - விளைநிலத்தை, 202) அரி புகு பொழுதின் - அறுப்பதற்குப் போகுங்காலத்திலே, (அங்குத் தங்குகின்ற), 204) குறுகால் (205) கறை அணல் குறும் பூழ்-குறிய காலினையும் கரிய கழுத்தினையுமுடைய காடை, (202) இரியல் போகி-(பயிரரிபவர்களின் ஆரவாரத்திற்கு அஞ்சி) நிலை கெட்டுச் சென்று, (203) வண்ணம் கடம்பின் நறு மலர் அன்ன - (வெள்ளிய) நிறத்தையுடைய கடம்பினது நறு நாற்றத்தினையுடைய பூவையொத்த, (204) வளர் இளபிள்ளை - வளர்கின்ற இளையகுஞ்சுகள் (மிகவும் பறக்க வல்லமை அற்றவற்றை), தழீஇ - தழுவிக்கொண்டு, 205) கட்சி சேக்கும் - காட்டிலே தங்குதற்குக் காரணமான,(206) வன்புலம் - முல்லை நிலத்தை, இறந்தபின்றை - கடந்துசென்ற பின்பு,—(எ-று.)

(197) உழவர், (198) பூட்டி, (200) ஊன்றி, (201) எறிந்து,) உழுததுடவை (202) அரிபுகு பொழுதின், (205) குறும்பூழ் (204)

பிள்ளை தழீஇப் (202) போகிச் (205) சேக்கும் (206) வன்புலம் என்க. குடியிருப்பு நிறைந்த உழவரையுடையது வன்புலமென்க. இதனால், குடிச்சிறூருழவரால் உழுதற்கு உரிய முல்லைநிலங் கூறினர். குறிஞ்சியும் முல்லையும் வன்புலமெனவும், மருதமும் நெய்தலும் மென்புலம் எனவும் வழங்கப்பெறும். இது, மருத நிலத்தைச் சேர்ந்த முல்லைநிலம்.

197:- பிறர்கையைப் பார்த்து உணவு பெறவேண்டாதே தம் கைத்தொழிலாலேயே உணவைத் தேடிக்கொள்பவராதலால், உழவரை 'வல்சியுழவர்' என்றார். ஒருமுறையுழுதலை ஒரு சாலுழுதலென்றும், இருமுறையுழுதலை இரு சாலுழுதலென்றும் இவ்வாறு வழங்குவது உழவுத்தொழிற்கு மரபு ஆதலால், பல்காலுழுபவரை 'செஞ்சாலுழவர்' என்றது.

199:— நாஞ்சிலுக்கு யானையின் வாய் உவமைகூறப்படுவதை, 'தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள'' என்ற இடத்துங் காண்க. 200:— உடுப்பு முகம் கொழுவுக்கு உவமையாவதை, ''உடுப்புமுகத்த கூர்ங் கொழுவின்'' என்ற பின்னுள்ளார் வாக்கிலுங் காண்க. உடும்புமுகம் = உடுப்புமுகம்: வேற்றுமையில் மென்றொடர் வன்றொடராயிற்று. 201:- வளர்ந்த பயிரினிடையேபயிர் நெருக்கமின்றிச்செழித்து வளரவும் களை போகவும் உழுவதாகிய ஊடடித்தல் இங்குக்கூறப்படுகின்றது: இது, பல்லியாடுதல் தாளியடித்தல் எனவும்படும். தொடுப்பெறிதல்-விதைத்தலைச் செய்தல். துளர்படுதல் - களைகட்டுதல். உழுத துடவை, துளர்படு துடவை என்க. 202:- அரி - அரிதல்: முதனிலைத் தொழிற்பெயர். 203 - 205: கடம்பின் நறுமலர் காடையினிளம்பிள்ளைக்கு உவமையாம். ''பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை'' என்ற தொல்காப்பியத்தால், பிள்ளை என்பது பறவையினிளமைப்பெயராதலை அறியலாம். காடையின் தாய்ப் பறவை அரிபவரின் ஓசையைக்கேட்டு அஞ்சித் தான் வாழ்ந்து வந்த இடத்தை விட்டு, பறக்கமுடியாத தன் இளம்பிள்ளையைத் தழுவிய வண்ணம் சென்று கட்சியிற் சேக்குமென்க. சேத்தல் - தங்குதல்.

(206) ''மென்றோல்'' என்பதுமுதல் (242) ''தளரா விருக்கை'' என்பது வரையுள்ள பகுதிகளால் செல்லப் போகும் மருதவிருக்கையின் இயற்கைக் கூறப்படும்:-

மென்றோல்
மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன
கவைத்தா ளலவ னளற்றளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பின்
காரேறு பொருத கண்ணகன் செறுவின்
உழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்

முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவில்
களைஞர் தந்த கணைக்கா னெய்தல்
கட்கமழ் புதுப்பூ முனையின் முட்சினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கான் மாமலர் கொய்துகொண் டவண
பைஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி
ஈருடை யிருந்தலை யாரச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்
இரும்புவடித் தன்ன மடியா மென்றோல்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பில்
புதுவை வேய்ந்த கவிகுடின் முன்றில்
அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
தூம்புடைத் திரடா ளுமித்த வினைஞர்
பாம்புறை மருதி னோங்குசினை நீழல்
பலிபெறு வியன்களம் மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடும்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோல்
சிலம்பி வானூல் வலந்த மருங்கின்
குழுமுநிலைப் போரின் முழுமுத றொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப
வையுந் துரும்பு நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை வடபால்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்
தண்பணை தழீஇய தளரா விருக்கை

(இ - ள்.) (206) மெல் தோல் - மெத்தென்ற துருத்தியை, (207) மிதி - அமுக்கியூதுகின்ற, உலை - உலையில், கொல்லன் - கொல்லுத் தொழில் செய்கின்றவனுடைய, முறி கொடிறு - முறிந்த கொடிறு என்னுங் கருவியை, அன்ன - ஒத்த, (208) கவை தாள் அலவன் - கப்பித்த காலையுடைய ஞெண்டின், அளறு அளை - சேற்றின்கணுண்டாகிய வளை, சிதைய - கெடும்படி, (209) பைஞ் சாய் கொன்ற - பசிய கோரையை அடியிலே குத்தி யெடுத்த, மண் படு மருப்பின் - மண் இடுகின்ற கொம்பினையுடைய, (210) கார் ஏறு - பெரிய காளையெருதுகள்,

பொருந - (தம்மிற்) போர் செய்த, கண் அகல் - இடம்கன்ற, செறுவின்-வயல்களில், (211) உழாஅ-(தாம்) உழமுடியாத, நுண் தொளி-(அந்த) நுண்ணிய சேற்றை, நிரவிய - ஒக்கமிதித்த, வினைஞர்-உழவர், (212) முடி நாறு அழுத்திய - முடியாகக்கிடக்கின்ற நாற்றை நட்ட, நெடு நீர் - நெடியநீரையுடைய, செறுவில் - செய்களில், (213) களைஞர்-களைகளைப் பறிப்பார், தந்த-பறித்துப் போகட்ட, கணை கால் நெய்தல்-திரண்டகாலையுடைய நெய்தலின், (214) கள் கமழ் புது பூ - தேன் நாறுகின்ற புதிய பூவை; முனையின் - வெறுத்தால்,- முள் சினை-முள்ளையுடைய கொம்புகளையுடைய, (215) முகை சூழ் - அரும்புகள் சூழ்ந்த, முள்ளி - முள்ளியின், தகட்ட - இதழையுடையவாகிய, பிறழ் வாய் - மறிந்த வாயையும், (216) கொடுங் கால் - வளைந்த காலையுமுடைய, மா - கரிய, மலர் - பூவை, கொய்துகொண்டு - பறித்துக் கொண்டு,— அவண - அந்நிலத்திலுண்டாகிய, (217) பைஞ்சாய் கோரை - தண்டாகிய கோரையை, பல்லின் சவட்டி - பல்லாலே மென்று கிழித்து, (218) புணர் - முடிந்த, நார் பெய்த-நாரார்க்கட்டின, புனைவு இன் - அணிதற்கு இனிய, கண்ணி - மாலையை, (219) ஈர் உடை இரு தலை ஆர சூடி-ஈரையுடைய கரியதலை நிறையும்படி சூடி, (220) (பிறகு),—பொன் காண் கட்டளை கடுப்ப - பொன்னையுரைத்து மாற்றுக் காணும் உரைகல்லையொப்ப, கண்பின் - சண்பினது, (221) புல் காய் - புல்லியகாயிற்றோன்றிய, சுண்ணம் - தாதை, புடைத்த - (அக்கதிரை முறித்து) அடித்துக் கொண்ட, மார்பின் - மார்பினையும், (222) இரும்பு வடித்து அன்ன மடியா மெல் தோல் - இரும்பைத் தகடாக்கினால் அதையொத்த மடங்காத [திரைபெறாத] மெல்லிய தோலினையுமுடைய, (223) கரு கை வினைஞர்-வலிய கையால் தொழில் செய்வாருடைய, காதல் அம் சிறாஅர் - விருப்பத்தையுடைய அழகிய சிறு பிள்ளைகள், (224) பழ சோறு அமலை முனைஇ - பழைய சோற்றினது கட்டியை வெறுத்து, வரம்பில் - வரம்பிடத்து, (225) புது வை வேய்ந்த - புதிய வைக்கோலாலே வேய்ந்த, கவி குடில் - கவிந்த குடிலின், முன்றில் - முற்றத்திலே, (226) அவல் எறி உலக்கை-அவலையிடிக்கும் உலக்கையின், பாடு - ஓசை, விறந்து - செறிதலால், அயல - அயலிடத்து இருப்பனவாகிய, (227) கொடு வாய் கிள்ளை-வளைந்த வாயையுடைய கிளிகள், படு - (தமக்கு) உண்டாகின்ற, பகை - பகையாக நினைத்து, வெரூஉம் - அஞ்சுகின்ற, (228) நீங்கா - இடையறாத, யாணர் - புதுவருவாயையுடைய, வாங்கு கதிர் - வளையுங் கதிரினைக் கொண்ட, கழனி - கழனியிடத்து, (229) கடுப்பு உடை பறவை சாதி அன்ன - (எறியப்பட்டார்க்குக்) கடுக்குந்தன்மையைக் கொடுத்தலையுடைய குளவித்திரளையொத்த, (230) பைது அற விளைந்த பெருஞ் செந் நெல்லின் - பசுமையுறும்படி முற்றின பெரிய செந்நெல்லினுடைய, (231) தூம்பு உடை திரள் தாள்-உள்ளுப்பொய்யையுடைத்தாகிய திரண்ட தாளை, துமித்த - அறுத்த, வினைஞர் - தொழில் செய்வோர், (232) பாம்பு உறை மருதின் - பாம்பு கிடக்கின்ற மருதினது, ஓங்கு சினை நீழல் - உயர்ந்த கொம்பாலுண்டாகிய நீழலிலே,— (233) பலி பெறு - (அங்கே வாழ்கின்ற தெய்வங்கள்) பலி பெறு

இன்ற, வியல் களம் - அகன்ற களங்களிலே, மலிய - மிகவும் நிறைய, ஏற்றி - போராக இட்டு, (234) கணம் கொள் சுற்றமொடு - திரட்சி கொண்ட (தம்முடைய) சுற்றத்தோடே, கை புணர்ந்து - ஒழுங்காகச் செறிந்துநின்று, (235) துணங்கை (234) ஆடும் - துணங்கைக் கூத்தாடுகின்ற, (235) அம் பூதம் - அழகினையுடைய பூதம், துகில் உடுத்தவை போல் - வெள்ளிய ஆடையை உடுத்து நின்றவை போல, (236) சிலம்பி வால் நூல் வலந்த - சிலம்பியினது வெள்ளிய நூல் சூழ்ந்த, மருங்கின் - பக்கத்தினையுடைய, (237) குழூஉ நிலை - பலவாகத் திரண்ட தன்மையினையுடைய, போரின் - போர்களினுடைய, முழு முதல் - பெரிய அடியை, தொலைச்சி - வாங்கி விரித்து, (238) பகடு ஊர்பு இழிந்தபின்றை - ஏர்களைக்கொண்டு கடாவிட்டுப் போனபின்பு, துகள் தப - குற்றம் நீங்கும்படி, (239) வைஉம் துரும்புஉம் நீக்கி - வைக்கோலையும் கூளத்தையும் அங்குநின்று நீக்கி, பைது அற - ஈரம் உலரா நிற்க, (240) குட காற்று எறிந்த குப்பை - மேல்காற்றிலே கையாலே தூவித்தூற்றின பொலி, வடபால் (241) செம் பொன் மலையின் - வடதிசைக்கணுளதாகிய மேருவாகிய மலைபோலே, சிறப்ப - மிகும்படி, தோன்றும் —, (242) தண்பணை - மருதநிலம், தழீஇய - சூழ்ந்த, தளரா - அசையாத, இருக்கை - குடியிருப்புக்களில், — (எ-று.)

(221) மார்பினையும் (222) தோலினையுமுடைய (223) வினைஞரின் திருஅர் (224) முனை இ(226) அவலெறிகின்ற பாடுவிறக்கையாலே (227) கிள்ளை வெரூஉம் (228) கழனிகளில் (230) விளைந்த நெல்லினைத் (231) துமித்த வினைஞர் (233) ஏற்றி, (237) தொலைச்சி, (239) நீக்கி, (240) எறிந்த குப்பை (241) மலையிற் சிறப்பத் தோன்றும் (242) இருக்கை என்க.

206 - 212: ஆற்றுப்படுப்போன், இனி, மருதவிருக்கையைக் கூற விரும்புகின்றானாதலால், ஆங்குள்ள செறுவின் தன்மையைக் கூறி ஆங்கு நாற்று நடுஞ் செறுவையுங் கூறுகின்றான். மென் தோலை மிதிக்கின்ற உலையென்க. உலையிலுள்ளது கொல்லனுடைய குறடு என்னுங் கருவி. தோல் - தோலாலியன்ற துருத்திக்கு ஆகுபெயர். அலவனுடைய தாள், கொல்லனுடைய முறிந்த கொடிறு என்னுங் கருவியை யொக்கும். பசிய கோரையைத் தம் மருப்பில் மண்படும்படி எருது குத்தியெடுத்தலால் அலவனுடைய அளற்று அளை சிதையும். அலவனது அளை சிதையப் பைஞ்சாயை மருப்பிற் கொண்ட பெரிய ஏறு தம்மில் பொரப் பெற்றது செறு. 210-இல் 'காரேறு' என்று வருகின்றதற்கு - எருமைக்கடா என்று பொருள்படக் கூறினர், நச்சினார்க்கினியர்: எருமைக்கடாவிற்கு பைஞ்சாய் கொல்லுமாறு மண்படும் கூரிய மருப்பு இன்மையால் அப்பொருள் பொருந்துவதாகத் தோன்றவில்லை யென்பர்.) அவ்வாறு பொருததனால் நாற்றை நட முடியாதபடி மேடுபள்ளமாய்ச் சேறான செறுவிலே உழாமலே உழவு வினைஞர் நுண்ணிய சேற்றை ஒக்க மிதித்து, முடியாகக் கிடக்கின்ற

நாற்றை நடுவர்: இங்ஙன் நட்ட நாற்றுடனே நெடிய நீரையுமுடையன செய்களென்க.

213 - 219: களைபறிப்பார் களையாகப் பறித்துப் போகட்ட சேற்றில் தோன்றிய நெய்தலின் பூவை நீவிர் வெறுத்தால், முள்ளிப் பூவைப் பறித்துப் பைஞ்சாய்க்கோரையின் நாரினால் மாலை கட்டி ஈரையுடைய தலையாரச் சூடுமின்: என்கிறான். பசுமை + சாய் = பைஞ்சாய்: பஞ்சாய் எனவும் வழங்கும். கண்பு என்பது சண்பு எனவும் வழங்கும். நெய்தற்பூவை வெறுத்தால் முள்ளியைச் சூடி, (254), மடியின் என இயையும்.

220 - முதல் 242 - வரையுள்ள பகுதிகள், குடியிருக்குமிடங்களை இயற்கைச் சுவைபடக் கூறுகின்றன. 220 - 223: சண்பினது காயில் தோன்றிய தாது நீளக்கிடந்து பொன்னுரைத்தாற் போன்றிருக்க, மார்பு உரைகல்லைப் போலும். இழத்தனம் வாராமையால், மடியாமென்றால் என்றது. மார்பையும் மடியாத தோலினையுமுடைய கருங்கை வினைஞர் என்க. (223) அவர்களின் சிறுவர் (224) சோற்றமலை முனைஇ, (225) குடிலின் முன்றிலில் (226) அவலை உலக்கையால் எறிகின்றனர். அவலைக் குற்றுவது சோற்றில் வெறுப்பினால் அவலைத் தின்பதற்காக. குடில் - பன்றி முதலியவை வாராமற் காத்தற்குக் கட்டினவை. *(226 - 228 : அவலிடிக்கும்போது ஓசை செறிதலால், கிள்ளை தமக்குப் பகையாகிய பிராணியின் ஒலியென்று மயங்கி வெருவும். இவ்வாறான புது வருவாயையுடையது, வாங்குகதிர்க் கழனி யென்க. 229 - 230: செந்நெல்லுக்குக் குளவி யென்னும் பிராணி உவமையாவதை- "செந்நெல்லின் அம்பணவளவை யுறைகுவித் தாங்குக், கடுந்தேறுறுகிளை மொசிந்தன துஞ்சும்" என்ற இடத்தும் காண்க.

(230 - 242): தண்பணை தழீஇய இருக்கையின் தன்மை கூறப்படுகின்றது. செந்நெற்பயிரின் தாளைத் துமித்த வினைஞர் பழைய மரமாதலால் பாம்பு உறைதற்கு இடனான மருதின், நீழலிலமைந்த களத்திலே அந்த நெற்போரையிட்டு வைப்பர்: அதைச் சுற்றிச் சிலம்பி நூல் கட்டும். இதனால், விலங்கோ மக்களோ அதைத் தொடவில்லை யென்பதும், ஆங்கு அது களவு இல்லாப் பெருஞ் செல்வமென்பதும் பெறப்படும். அவ்வாறான நெற்போரினடியை வாங்கி விரித்துக் கடாவிட்டு உழக்கித்தூற்றின பொலி செம்பொன்மலையினைப்போற் சிறப்பத் தோன்றப் பெறுவது தண்பணை தழீஇய இருக்கை என்க. நெற்போர்களைச் சிலம்பிநூல் சுற்றியிருப்பது - தம்மில் துணங்கை விளையாடுவதற்குத் திரண்ட பூதம் துகிலுடுத்திருப்பன போலும்.

243 முதல் 256 - அடிகளால் மருதநிலத்தைச் சார்ந்த பேரூரில் தங்கினாற் பெறக்கூடிய உணவு கூறப்படும்: (254) - வரையில், பேரூரின் தன்மை கூறப்படும்.

பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்குல்
ஏணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவின்
குமரி மூத்த கூடோங்கு நல்லில்
தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றே ருருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்து
அமளித் துஞ்சு மழகுடை நல்லில்
தொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவிர்;

(இ - ள்.) (243) பகடு ஆ ஈன்ற - பெருமையையுடைய பசுக்க ளீன்ற, கொடு நடை குழவி - வளைந்த அடியையுடைய கன்றுகளைக் கட்டிய, (244) கவை தாம்பு - தாமணியையுடைய (நெடிய) தாம்பு களால், தொடுத்த - கட்டிக்கிடக்கின்ற, காழ் ஊன்று - தறிகள் நடப் பெற்ற, அல்குல் - பக்கத்தினையும், (245) ஏணி எய்தா - ஏணிக்கு எட் டாத, நீள் நெடு மார்பின் - மிக நீண்டமார்பினையும், (246) முகடு துமித்து - தலையைத் திறந்து, அடுக்கிய - உள்ளே சொரியப்பெற்ற, பழ பல் உணவின் - பழையவாகிய பலநெல்லினையுமுடைய, (247) குமரி - அழியாத்தன்மையவாய், மூத்த - முதிர்ந்த, கூடு - கூடுகள், ஓங்கு - வளர்ந்த, நல் இல் - நல்ல இல்லினையும்,—(248) தச்சச் சிறுஅர் - தச்சச் சாதியிற் பிறந்த (தொழில்செய்தற்குரிய) சிறியோர், நச்ச - (பிறர்) விரும்பும்படி, புனைந்த - இயற்றிய, (249) ஊரா - (பிறரால்) ஏறப்படாத, நல் தேர் - நல்ல(சிறிய) தேரை, உருட்டிய - உருட்டிக் கொண்டு திரிந்த, புதல்வர் - பிள்ளைகள், (250) தளர் நடை வருத் தம் வீட - (தமது) தளர்நடையாலுண்டான வருத்தம் (தம்மைவிட்டு) நீங்கும்படி, அலர் முலை - பால்சுரந்தமுலையையுடைய, (251) செவிலி- செவிலித்தாயாகிய, அம் பெண்டிர் - அழகினையுடையமகளிரை, தழீஇ- தழுவிக்கொண்டு, பால் ஆர்ந்து - (அம்முலையின்) பாலை நிறைய வுண்டு, (252) அமளி - படுக்கையில், துஞ்சும் - துயில்கொள்ளும், அழகு உடை - அழகை யுடைத்தாகிய, நல்இல் - நல்ல இல்லினையும,— (253) தொல்பசி அறியா - (ஏனைநாட்டிற்கு இயல்பாகிய) பழமையான பசியை அறியாத, துளங்கா - அசையாத, இருக்கை - குடியிருப்பினையு முடைய, (254) மல்லல் பேர் ஊர் - வளப்பத்தை யுடைத்தாகிய பெரிய ஊரின்கண்ணே, மடியின் - தங்கினால், - மடியா (255) வினைஞர் - சோம்பலில்லாத தொழில் செய்வார், தந்த - கொண்டுவந்த, வெள் நெல் வல்சி - வெள்ளிய நெற்சோற்றை, (256) மனைவாழ் அளகின்

வாட்டோடும் - மனையின்கண்ணே வாழும் கோழிப்பேடையினாற் சமைத்த பொரியலோடும், பெறுகுவிர்-; (எ. - று.)

(212) செறுவில் (214) புதுப்பூமுனையின் (216) மாமலர்கொய்து கொண்டு(217) சவட்டிப் (218) பெய்த கண்ணியை 219) சூடி, (242) தளராவிருக்கைகளில் (247)கூடோங்குநல்லில்லையும், (252) அழகினையுடைய நல்லில்லையும் (253) துளங்கா விருக்கையினையும் உடைய (254) பேருரிலே மடியின் (255)வல்சியை(256) வாட்டொடும்பெறுகுவிர் என்க. 243-247:—இங்கு அல் குல் மார்பு குமரி என்ற சொற்களை அமைத்தது, ஒருவகைக்கவிநயம். ஆவீன்ற குழவியின் தாம்புதொடுத்த பக்கத்தினையும், ஏணி எய்தாநெடுவடிவினையும், முகடுதுமித்து அடுக்கிய பழ நெல்லினையுமுடைய கூடு என்க: அல்குல் - பக்கம். மார்பு - வடிவு. அடுத்தல் - சொரிதல். பல்லுணவு என்றது - செந்நெல் முதலிய பலவகை நெல்லிருத்தலால் எனக. கூடு [குதிர்]களைக் கொண்டது நல்லில் என்க.

248 - 252: தச்சச் சிறார் புனைந்த தேரை யுருட்டிய புதல்வர் தளர்நடை வருத்தம் வீடுமாறு செவிலியரைத் தழீஇப் பாலார்ந்து அமளியில்துஞ்சும் அழகுடையது நல்லில் என்க. செவிலிப் பெண்டிர்- ஒருமைப்பன்மை மயக்கம். 256- "கோழி கூகை யாயிரண்டல்லவை, சூழுங்காலை யளகெனலமையா" என்ற தொல்காப்பியத்து மரபியற் சூத்திரத்தையொட்டி, கோழிப் பெடையை 'அளகு' என்றார்.

257 - 262: இவ்வடிகளால், ஆற்றுப்படுப்போன் அங்குக் கருப்பஞ்சாற்றையும் மிசையலாமென்கிறான்:

மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்து
அணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்கு
எந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை
விசய மடூஉம் புகைசூ ழாலைதொறும்
கரும்பின் றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்;

(இ - ள்.) (257) மழை விளையாடும் - மேகங்கள் விளையாடித் திரிதற்கு இடனான, கழை வளர் அடுக்கத்து - மூங்கில் வளர்கின்ற மலைத்தொடரிலே, (258) அணங்குஉடை யாளி தாக்கலின் - (தம்மை) வருத்துதலையுடைய யாளி பாய்கையினாலே, (259) கணம் சால் வேழம் (258) பல உடன் (259) கதழ்வுற்ற ஆங்கு - திரட்சியமைந்த யானைபலவும் கூடி ஒருசேர அஞ்சிக் கலங்கிக் கூப்பிட்டாற்போல, (260) எந்திரம் சிலைக்கும் - ஆலை ஆரவாரிக்கின்ற, துஞ்சா கம்பலை - ஓயாத ஓசையையுடைய, (261) விசயம் அடூஉம் புகை சூழ்-(கருப்பஞ்சாற்றை)வெல்லக்கட்டியாகக் காய்ச்சும் புகை சூழ்ந்த, ஆலைதொறும் -

கொட்டில்கள் தோறும், (262) கரும்பின் தீஞ்சாறு - கரும்பினது இனிய சாற்றை, விரும்பினிர் மிசைமின் - விரும்பிப் பருகுவீராக.

கரும்பை ஆட்டும் யந்திரத்தினோசை, யாளி தாக்கக் கலங்கிய யானைகள்பல ஒரு சேரப் பிளிறும் பேராரவாரத்தை யொத்திருக்குமென்க; "கரும்பினெந்திரங் களிற்றெதிர் பிளிற்றும்" என்பது ஐங்குறுநூறு. ஆலை-ஆலையைக் கொண்டுள்ள கொட்டிலுக்கு, ஆகுபெயர். கரும்பையாட்டி அதன் சாற்றைக் காய்ச்சுங் கொட்டில்களுக்குச் சென்றால், அங்குக் கரும்பின் சாற்றை நீங்கள் மிகுதியாகப் பெற்றுப் பருகலாமென்றபடி. கதழ்வுறுதல்- அஞ்சிக் கலங்கிக் கூப்பிடுதல். இலக்கணையால், துஞ்சுதல் - ஓய்தல். விசயம் - சருக்கரை என்பாருமுளர். இங்கு, மிசைதலென்பது - பருகுதலென்ற பொருளது. மிசைதல் என்ற வினை, 'ஓங்கின்மிசைந்த முழந்தாளிரும்பிடி" எனவும், "வீழ்களிறு மிசையாப் புலியினும்" எனவும் தின்னுதல்தொழிலைக் காட்டுவதால், விரும்பினிர் என்பதற்கு - கருப்பஞ்சாற்றை விரும்பிப் பருகினீராய், மிசைமின் - (அந்தக் கரும்பின் கட்டியைத்) தின்பீராக எனப் பொருளுரைத்தனர் நச்சினார்க்கினியர்.

263 - 282: இவ்வடிகளால், ஆற்றுப்படுப்போன் பின்னுஞ்சென்று வலைஞர் குடியிருப்பில் தங்கினால் பெறலாகும் உணவைக் கூறுகின்றான்:

வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றில்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்
இளையரு முதியருங் கிளையுடன் றுவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின்
அவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
எல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெங்கீ ரரியல் விரலலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவீர்;

(இ - ள்.) (263) வேழம் நிரைத்து - பேய்க்கரும்பை வரிச்சலாக ஒழுங்காக அமைத்து, வெள் கோடு விரைஇ - (நெய்தல்நிலத்திற்கு உரிய) ஞாழலினது தோலுரித்த வெள்ளிய கொம்புகளை(க் கைம்மர மாக)க்கலந்து வைத்து, (264) தாழை முடித்து - தாழைநாரால் கட்டி, தருப்பை வேய்ந்த - தருப்பைப்புல்லாலே வேயப்பட்ட, (265) குறு இறை - சிறிய இறப்பையுடைய, குரம்பை - குடிசையினை யும், பறி உடை முன்றில் - (மீனைவாரி எடுக்கும்) பறிகளைக் கொண்ட முற்றத்தினையுமுடையதான, (266) கொடு கால் புன்னை கோடு துமித்து இயற்றிய-வளைந்த காலையுடைய புன்னைகளின் கொம்புகளை வெட்டி இயற்றப்பெற்ற, (267) பைங்காய் தூங்கும் - பசிய காய்கள் தொங்கப் பெற்ற, பாய் மணல் பந்தர் - மணலைக்கீழேபரப்பிய பந்தரிலே, (268) இளையர் உம் முதியர் உம் கிளையுடன் துவன்றி - இளையவர்களும் முதிர்ந்தவர்களும் சுற்றத்துடனே நிறைந்திருந்து, (பின்பு), (269) புலவு நுனை பகழி உம் சிலை உம் மான (270) செ வரி கயலொடு பசு இரு பிறழும் - புலால் நாறும் முனையினையுடைய அம்பையும் வில்லையுமொப்பச்சிவந்த வரியினையுடைய கயல்களோடே பசிய இருமீன்களும் பிறழ்தற்கு இடனான, (271) மை இரு குட்டத்து - கருமையையுடைய பெரிய ஆழ்ந்த குளங்களில்,— மகவொடு வழங்கி - பிள்ளைகளோடு உலாவி (மீன்களை பிடித்து),— (272) கோடை நீடின் உம் குறைபடல் அறியா - கோடைக்காலம் நீட்டித்து நின்றதாயினும் வற்றுதலையறியாத, (273) தோள் தாழ்- (கையை மேலே கூப்பி முழுகி நீர்நிலைகாட்டும் காலத்துக்) கையமிழ்த்துகின்ற, குளத்த - குளங்களினுடைய, கோடு - கரையை, காத்திருக்கும் - காத்திருக்கின்ற, (274) கொடுமுடி வலைஞர்-கொடிய [கெட்டியான]முடிச்சுகளையுடைய வலையை வீசுபவரின்,குடிவயின்-குடியிருப்பிலே, சேப்பின்-தங்குவீராயின்,—(275) அவையா அரிசி-குற்ற முடியாத கொழியலரிசியை,அம் களி துழவை-அழகியகளியாகத் துழாவியட்ட கூழை, (276) மலர் வாய் பிழாவில் - அகன்ற வாயையுடைய தட்டுப் பிழாவிலே, புலர ஆற்றி-சுடுகை நீங்க ஆற்றி, (277) பாம்பு உறைபுற்றின் குரும்பி ஏய்க்கும்-பாம்புகிடக்கின்ற புற்றிலேயிருக்கும் புற்றாம் பழஞ் சோற்றை யொத்திருக்கின்ற,(278) பூ புறம் நல் அடை அளைஇ - பொலிவுபெற்ற புறத்தினையுடைய நல்ல முளையை (இடித்துக்) கலந்து, தேம் பட - இனிமை பிறக்கும்படி, (279) எல்லை உம் இரவு உம் இரு முறை கழிப்பி - காலைச்சந்தி மாலைச்சந்தி, என்ற இரண்டுவேளையையும் கள்ளை அரித்திடாமற் கழித்தலால், (280) வல் வாய் சாடியின் வழைச்சு அற விளைந்த-வலியவாயினையுடைய சாடியிலே இளங் கள்நாற்றம் அறும்படி முற்றின,(281)வெம் நீர்-வெவ்விய நீர்மையையுள்ள, அரியல் - அரிக்குந் தன்மையையுடைய, விரல் அலை - விரலாலே அரித்த, நறு பிழி - நறிய கள்ளை, (282) தண் - மிகவும் உலராத, மீன் சூட்டொடு - மீனைச்சுட்டதனோடே, தளர்தலும் - இளைப்புண்டானவளவில், பெறுகுவிர் - (அவ்விளைப்பு நீங்குமாறு) பெறுவீர்கள்; (எ-று.)

(274) குடிவயிற் சேப்பின், (281) பிழியை, (282) குட்டொடும் பெறுகுவிர் என்க. ஆற்றி 276) அளைஇ (278), கழிப்பி (279) விளைந்த (280) பிழி (281) என்க.

263 - 274: இவ்வடிகளில் வலைஞர் குடியிருக்குமிடம், வருணிக்கப்படுகின்றது. அவற்றுள், (266) கொடுங்கால் என்பது முதல் (274) வலைஞர் என்பது வரையில், வலைஞரின் தன்மை கூறப்படும். புன்னைகளின் கொம்புகள் வெட்டியியற்றியதும் (கீழ்ப்புறத்து) மணலைக் கொண்டதுமான பந்தரிலே இளையவர்களும் முதிர்ந்தவர்களும் சுற்றத்துடனே நிறைந்திருந்து, பின்புகயலும் இறவும் பிறழும் குளங்களைப் பிள்ளைகளொடு அடைந்து மீன் பிடித்துக் குளக்கரையைக் காத்திருப்பர் வலைஞர் என்க. வலைஞர் குளக்கரையைக் காப்பது, ஊரவர் திரண்டன்றித் தனிப்பட்டோர் வலைவீசாமைக்காக. (265) குரம்பையினையும் முன்றிலினையுமுடையது (274) வலைஞர் குடி என்க. (263 - 265): வலைஞர் குடியிருக்குங் குரம்பை வேழக்கோலை வரிச்சாகவும் வெண் மரங்களைக் கைகளாகவும் கொண்டு தாழைநாரால் முடிந்து தருப்பையால் மேலே வேயப்பெற்றிருக்குமென்க. குறுமை + இறை = குறியிறை. இப்புணர்ச்சியை மரூஉவின் பாத்தியது என்பர், நச்சினார்க்கினியர். வேழம் - கொறுக்காந் தட்டு: பறி - மீனை வாரியெடுக்குங் கருவி. பைங்காய் - சுரைக்காய்கள் முதலியன என்றலுமாம். முடித்து - முடிந்து என்பதன் விகாரமென்பர். வெண்கோடு - வஞ்சிமரமும் காஞ்சிமரமுமாகிய என்ற இவற்றின் வெள்ளிய கொம்புகள் என்றனர் நச்சினார்க்கினியர்: செய்தற்கு ஞாழல் புன்னை இவற்றின் கோடுகளைக் கொள்ளுதலே ஏற்குமென்பர் ஒருசார் ஆராய்ச்சியாளர்.

269 - 271: பகழி கயலுக்கும், சிலை இறவுக்கும் உவமை. இறவுக்குச் சிலை உவமையாக வருவதனை "இறவுக் கலித்துப் பூட்டறுவில் விலிற் கூட்டு முதற்றெறிக்கும்" முடங்கிறவு பூட்டுற்ற வில்லேய்க்கும்," "பூட்டு சிலை யிறவினொடு" என்ற இடங்களிலும் காண்க.

272 - 274: 'கோடை நீடினுங் குறைபடலறியா' என்பதை விளக்க, 'தோள்தாழ் குளத்த கோடு' என்றது. கையை மேலே தூக்கி முழுகி நீர்நிலையின் ஆழத்தைக் காட்டுதல், மரபு: இத்தன்மையை, "வெளிற்றுடற் குருகி வெள்ளநிலை யிதுவென்பவேபோற், களிற்றுகிர்ப் பிறழ்பற் பேய்கள் கைகளை யுச்சிக் கூப்பி, யளித்தவை பாடியாட" என்ற சிந்தாமணியிலும் காண்க. (274) கொடுமுடி என்ற தொடர், வலைஞர் என்பதில் 'வலை' என்பதனோடு இயையும்.

275 - 281: இவ்வடிகள் - கள்ளை வலைஞர் ஆக்கும் வகையைக் கூறும்: கொழிய லரிசியைக் கொண்டு கூழைத் துழாவியட்டு, அந்தக் கூழைத் தட்டுப் பிழாவிலே புலரும்படி ஆற்றி, பின்பு நென்முளையை அதிலே கலந்து சாடியிலே இனிமையுண்டாம்படி எல்லையும் இரவை

யும் இரு முறை முழு நாள் அரியாமல் வைத்து முற்றுமாறு செய்து அமைக்கப்பெற்றது அந்தக் கள் என்க. அங்ஙன் கைவிரலிட்டு அரியாமலிருந்து பின்பு விரலையிட்டு அரித்தற்கு உரியது பிழி என்றவாறு. அரித்தல் - கைவிரலையிட்டுக் கலக்குதல். நெல் முளையின் புறம் புற்றின் குரும்பியையப் பெய்க்குமென்க. அடை - முளை. எல் - பகல். வழைச்சு - இளங்கள்ளின் நாற்றம்: இளமையென்றலுமாம்.

283 - 296 : ஆற்றுப்படுப்போன் ஆங்குள்ள கடவுட் பூவாகிய தாமரையைப்பறியாது வேறு நீர்ப் பூக்களைப் பறித்து மாலையாக அணியும்படி பாணனை நோக்கிக் கூறுகின்றான்:

பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉம்
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைத லோம்பி
உறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை
அகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுந ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமையத்துப் பிணையினிர் கழிமின்;

(இ - ள்.) (283) பசு ஊன் பெய்த - செவ்வியான இறைச்சியிட்டு வைத்த, சுவல் பிணி பைந் தோல் - தோளிடத்தே கோத்து நாற்றின பசிய தோற்பையையுடைய, (284) கோள் வல் பாண் மகன் - (மீனைத் தப்பாமற்) பிடித்தலில்வல்ல பாண்சாதியிற் பிறந்தவன், தலை - தலைப்புறத்து, வலித்து யாத்த - (கயிற்றை) இழுத்துக்கட்டின, (285) நெடுங் கழை - நெடிய மூங்கிற்கோலிலுள்ள, தூண்டில் - தூண்டிலானது, நடுங்க - அசையும்படியும்,—நாண் கொளீஇ - கயிற்றைக் கொள்ளச் செய்து (பினபு), (286) கொடு வாய் இரும்பின் - வளைந்தவாயினையுடைய இரும்பாகிய அந்தத்தூண்டிலின், மடி தலை - மடித்துள்ள, தலை, புலம்ப -(இரையின்றித் தனியே கிடக்கும்படியும்,— (287) பொதி இரை கதுவிய - மறைந்திருந்த இரையைக் கௌவிச் சென்றிட்ட, போழ் வாய் வாளை - திறந்த வாயையுடைய வாளை மீன், (288) நீர் ந(ண்)ணி - நீரைச் சேர்ந்து, பிரம்பின் நடுங்கு நிழல்-(நீர்க்கு அணித்தாய் நின்ற) பிரம்பினது காற்றாலசையும் நிழலைக்கண்டு, வெரூஉம - அஞ்சுதற்கு இடனான, (289) நீத்து உடை - நீர்ப் பெருக்கினையுடைய, நெடு கயம் - நெடிய குளத்திலே, தீ பட - நெருப்பின்

தன்மை (நீரிலே) தோன்ற, மலர்ந்த - பூத்த, (290) கடவுள் ஒள் பூ - கடவுள் சூடுதற்குரிய ஒள்ளிய தாமரைப் பூவை(ப் பறித்து), அடைதல் ஓம்பி-முடிதலைப் பரிகரித்து.[தவிர்த்து],(291)உறைகால் மறிய - பெய்யுந்) துளி கால் விழுந்த, ஓங்கு உயர் - மிக்க வுயர்ச்சியையுடைய, நனந்தலை (292) அகல் இரு வானத்து - பரந்த இடத்தைக்கொண்ட அகன்ற பெரிய வானத்திடத்து, குறை வில் ஏய்ப்ப - குறைவில்லாகிய இந்திரதனுசை யொப்ப,—(293) அரக்கு இதழ் குவளையொடு நீலம் நீடி - சாதிலிங்கம்போன்ற இதழையுடைய செங்குவளையோடே நீலப்பூவும் வளர்ந்து, (294) முரண் பூ மலிந்த-ஒன்றற்கொன்று நிறம் மாறுபடுதலையுடைய ஏனைப்பூக்களும் மிக்க, முது நீர் பொய்கை - முதிய நீரையுடைய பொய்கைகளிடத்தே, (295) குறுநர் இட்ட கூம்பு விடு பல் மலர் - பறிப்பவர் (நுங்கட்காக) இட்ட குவிதல் நெகிழ்ந்த பல பூக்களை, (296) பெரு நாள் அமையத்து - பெரிய தாகிய நாட்காலத்தே, பிணையினிர்-சூடினவர்களாய், கழிமின்-அப்பாற்செல்லுங்கள்.

283 - 285: மீனைப் பிடிக்க எறியுந்தூண்டிலில் கோக்கும் இறைச்சியாகிய இரையைப் பெய்ததோற்பையைப் பாண்மகன் தோளினிடத்தே கோத்து நாலவிட்டுக் கொண்டுள்ளானென்க. 284-287: மூங்கிலின் தலைப்புறத்தே பாண்மகன் இழுத்துக் கட்டின நாணிலேயுள்ள தூண்டிலின் வாய் இரையின்றிப் போகவும் தூண்டில் அசையவும் தான் அகப்பட்டுக் கொள்ளாமலே இரையைப் பக்குவமாக வாளை கவ்விச்சென்றிட்டதென்க. மடி தலை புலம்பஎன்பதற்கு - மடிக்கப்பட்ட தலையைக்கண்டு வருந்த என்வுமாம். (285) கொளீஇ - பிறவினையிறந்தகாலவினையெச்சம் (289) நீத்து-முதனிலை திரிந்து செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயர்.

(287) வாளை (288) வெரூஉம் (289) கயத்திலே மலர்ந்த (290) பூவை ஓம்பி, 292) குறைவிலேய்ப்ப (294) முரட்பூ மலிந்த பொய்கைகளிடத்தே(495) குறுநரிட்ட மலரை(296)பிணையினிர் கழிமின் என்க. 287-289: தூண்டிலின் இரையைக் கௌவித் தான அத்தூண்டிலிற் சிக்கிக்கொள்ளாது மீண்ட வாளை, நீர்க்கரையில் முளைத்திருக்கும் பிரம்பின் நிழல்நீரினுள் தோன்றக் கண்டு,'நம்மையகப்படுத்துந்தூண்டிலைக் கொண்ட மூங்கிற்கோலோ?' என்று அஞ்சுமென்க: இவ்வாறு ஒன்றை மற்றொன்றாக மயங்குவதாகக் கூறுவதனை, பிற்காலத்தார், மயக்கவணி யென்பர். 290-296: அந்நிலத்தே சூடாமல் தவிர வேண்டிய மலர்களையும் சூடுதற்கு உரிய மலர்களையும் இவ்வடிகள் கூறும். கடவுட்பூவாதலால், தாமரைமலர் பாணராற் சூடப்பெறுமல் நீக்குதற்குரியதாகும். வானத்தில் மழை பொழியுமிடத்துக் காலிழிதல் கண்கூடாகக் காணப்படுவதொன்றாகும். பொய்கையிலுள்ள பல நிறத்த மலர்கள், அங்ஙன் காலிழிகையில்பல நிறத்ததாகிவானத்துத் தோன்றும் இந்திரவில்லை யொத்திருக்குமென்க. (291) நனந்தலை யென்பதை, (294) பொய்கை என்பதனோடு கூட்டி உரைத்தனர், நச்சினார்க்கினியர்.

297 - 310 : இவ்வடிகளால், ஆற்றுப்படுப்போன் அங்கே அந்தணரிருப் பிட முண்டு: ஆதலால், அங்குச் சென்றால், பார்ப்பினியிடும் இனிய உணவைப் பெறலாமென்கிறான்:

செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பின்
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்;

(இ-ள்.) (297) செழு கன்று யாத்த - வளப்பமுள்ள கன்றைக் கட்டின, சிறு தாள் - சிறிய கால்களையுடைய, பந்தர் - பந்தரினையும், (298) பைஞ் சேறு மெழுகிய-பசுமை நிறமுள்ள சேற்றினால் [சாணத்தினால்] மெழுகிய, நல் நகர் - நன்றாகிய அகங்களையும், படிவம் - (தாம் வழிபடும்) தெய்வங்களையுமுடையதாகி,—(299) மனை உறை கோழியொடு - மனைகளிலே தங்குங் கோழிகளுடனே, ஞமலி - நாயும், துன்னாது - சேரப் பெறாமல்,—(300) வளை வாய் கிள்ளை மறை விளி பயிற்றும்-வளைந்த வாயினையுடைய கிளியை வேதத்தின் ஓசையைத் தெரிந்து கூறச்செய்கின்ற, (301) மறைகாப்பாளர் உறை -மறையைக் காப்பவரான அந்தணர் வாழ்கின்ற, பதி-ஊரிடத்தே, சேப்பின்-தங்குவீராயின்,—(302) பெருநல் வானத்து-பெரிய நன்றாகிய ஆகாயத்தினிடத்து, வடவயின் விளங்கும் - வடதிசைக்கண்ணே நின்று விளங்குகின்ற, (303) சிறுமீன் - (அருந்ததியென்கிற) சிறிய நட்சத்திரத்தை, புரையும்-ஒத்திருக்கின்ற, கற்பின் - கற்பினையும், நறு நுதல் - நறிய நுதலினையுமுடைய, (304) வளை கை மகடூஉ-வளையைப் பூண்ட கையை யுடைய பார்ப்பினி, (305) பறவை பெயர் படு வத்தம்-பறவையினது பெயரைப் பெற்ற இராசான்ன மென்னும் நெல்லரிசியைக் கொண்டு, சுடர் கடை-சூரியன் அத்தமிக்குங் காலத்தில், (304) வயின் அறிந்து-பக்குவமறிந்து, அட்ட - சமைத்தவற்றை, (306) மாதுளத்து-கொம்மட்டி மாதுளையினுடைய, (307)பசு காய்-பசிய காயில், கறி கலந்து - மிளகுபொடி கலக்கப்பட்டு, (308) கஞ்சகம் நறு முறி-கருவேம்பினது நறிய இலை, அளைஇ - சேரப் பெற்று, (306) சேது ஆ நறு மோர் வெண்ணெயின் - அழகியபசுவினது நறியமோரின்கண் எடுத்த

வெண்ணெயிலே, (கிடந்து வேதலால்), (307) உருப்பு உறு-வெம்மை யுறுகின்ற, போழொடு - வகிரோடே, (309) நெடு மரம் கொக்கின் - நெடிய மரமாகிய மாமரத்தின், (308) பைந் துணர் - பசிய கொத்தினிடத்து, (309) நறு வடி - நறிய வடுவினை, விதிர்த்த - பலவாகப் போகட்ட, (310) தகை மாண் காடியின் - அழகுமாட்சிமைப்பட்ட ஊறுகாயோடே, வகைபட பெறுகுவிர்-சோற்றின் கூறுகளுண்டாக அடைவீர்; (எ - று.)

(301) சேப்பின், (305) வத்தத்தை (304) மகடூஉ அட்டவற்றை, (305) சுடர்க் கடையிலே, (306) மாதுளத்துப் (307) பசுங்காய்ப் போழோடே (310) காடியோடே பெறுகுவி ரென்க.

297 - 301: மறை காப்பாளர் உறையும் பதி-கன்றையாத்த கால்களைக் கொண்ட பந்தர்களையும் பசுஞ்சாணத்தால் மெழுகிய நல்லவீடுகளையும் வழிபடுந் தெய்வத்தையுமுடையதாகி, கோழியொடு ஞமலி சேரப்பெறுமல் கிளியும் வேதம்ஓதுமாறு நிற்கு மென்க. பார்ப்பார் வாழுமிடத்துக் கோழியும் நாயும் துன்னுது என்பதனை, "பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்ஞ" என்றதனாலும் அறிக. 'துன்ஞது(நிற்க)' என்ற வினையெச்சம் பயிற்றும்என்பதனோடு தொடரும். அந்தணர் பலகாலமும்வேதமோதுதலால்,சொன்னதைச்சொல்லுங் கிளிப்பிள்ளை அந்தணர் சொல்லிய அவ்வேதத்தைத் தாமுஞ் சொல்லுமென்க: "வளைவாய கிள்ளை மறைபாடு நாங்கூர்" என்ருர், பரகாலனும். அந்தணர்ஓதுவது கிளியை ஓதச் செய்வதால் 'பயிற்றும்' என்று பிறவினையாற் கூறியது. இனி, மறையைக் கிள்ளையை ஓதப் பழக்குகின்றனர் அந்தணர் என்று ஓதுவாருமுளர். மறைகாப்பாளர் என்றதனால், அந்தணர் மறையைப் பொருளாக மதிப்பரென்பது, பெறப்படும். 302-303: வடபுறத்துத் துருவநட்சத்திரத்துக்குச் சிறிது தெற்காக வானத்திலே பல்லக்குக் கணைபோற் காணப்படுவதான ஸப்தருஷி மண்டலத்திலே ஈற்றயல் நட்சத்திரமான வஸிஷ்ட நட்சத்திரத்துக்கு அருகில் காணுஞ் சிறுபுள்ளி வடிவான நட்சத்திரமே அருந்ததி நட்சத்திரம்: இங்ஙன் நட்சத்திர நிலையிலும் கணவனைவிட்டுப் பிரியாதிருத்தலால், அருந்ததி கற்பிலே மாதரார்க்கு உவமை கூறப்படுவள். 304 - 310: கொம்மட்டி மாதுளங்காயின் வகிர்கள் மிளகுபொடி கலக்கப்பட்டும் கருவேப்பிலை சேர்க்கப்பெற்றும் பசுவெண்ணெயிலிட்டு வேக வைக்கப்படுகின்றன: பார்ப்பினி *இராசான்ன நெல்லரிசியாற் சமைத்த பலவகைச் சோற்றை மாதுளங்காய்ப் போழொடும் மாவடு ஊறுகாயுடனும் பரிமாறுவர்ளென்க. இராசான்னம் என்பது இரசவன்னம் என்ற ஒருபொருளும் தோன்ற நிற்றலால், அதனை, 'பறவைப்பெயர்படு வத்தம்' என்ருர்: வத்தம் - பத்தம் என்ற வடசொல்லின் திரிபு என்

---

*ஸாரவில் [நீர்நிலையில்] விளைவது-ஸாரஸம்: அந்த ஸாரஸமென்ற நெல்லின் உணவு ஸாரஸாந்நம் எனப்படும்: அச்சொல்லே இராசான்னம் எனச் சிதைந்து வழங்கியது என்பர் பாஷாசேகரர்: சோற்றுணவுக்கு உரிய நெற்களுட் சிறத்தலால் இராசான்னம் எனப் பெயர் வந்ததென்றல் ஏற்கும்.

பர். 'அட்ட' என்று பன்மையாற் கூறியது-பாற்சோறு பருப்புச்சோறு முதலியவற்றை யுட்கொண்டு.

311 - 345: இவ்வடிகளால், ஆற்றுப்படுப்போன், பின்னுஞ்சென்றால் அந்தணர் வசிக்கும் ஊரையும் காணலாமென்றும், அதற்கு மேலுஞ் சென்றால் வடநாட்டுக் குதிரைகளிறங்கியிருக்குந் துறைகளையும் பரதர் மலிந்த தெருக்களையுமுடையதாய், மாடங்களிலே மகளிர் பந்தையும் முத்தவார் மணலிற் பொற்கழங்கையும் ஆடப்பெற்ற பட்டினமொன்றைக் காணலாமென்றும், அங்குத் தங்கினால் பன்றித்தசையொடு கள்ளையும் பெறலா மென்றும் கூறுகின்றான்:

வண்டலாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவனர்
ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பைப்பயத் தோன்றும்
நீர்ப்பெயரெல்லை போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெருவின்
சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின்
நெல்லுழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்கும்
கூடுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோல்
பைங்கா ழல்கு லுண்டுகி லுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைப்பய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயில்
செம்பூத் தூய செதுக்குடை முன்றில்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய

வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பின்
ஈர்ஞ்சே றூடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நென்மா வல்சி தீற்றிப் பன்னாள்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்:

(இ - ள்.) (311) வண்டல் ஆயமொடு - விளையாட்டினையுடைய திரள்களோடே, உண் துறை தலை இ-நீருண்ணும் துறையிலே கூடி, (312) புனல் ஆடும்-நீராடுகின்ற, மகளிர் —, இட்ட-போகட்டுப்போன, பொலம் குழை - பொன்னாற் செய்த மகரக் குழையினை, (313) இரை தேர் மணி சிரல் - இரையைத் தேடுகின்ற நீலமணிபோலுஞ் சிச்சிலி, இரை செத்து - (தனக்கு) இரையாகத் துணிந்து, எறிந்தென-எடுத்ததாக, - (பின்னர் அந்தச்சிச்சிலி), - (314) புள் ஆர் பெண்ணை புலம்பு மடல் செல்லாது - பறவைகள் நிறைந்திருக்கின்ற பனையில் தனித்த மடலிற் போகாமல், (315) கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த (316) வேள்வி தூணத்து அசைஇ- நூற்கேள்வியையுடைய அந்தணர் செய்தற்கு அரிய கடனைச் செய்துமுடித்த யாகத்திலே நட்ட *யூபத்தின் மேலேயிருந்து, யவனர் (317) ஓதிமம் விளக்கின்-சோனகர் (கலங்கரை விளக்காக இட்ட) அன்னவடிவான விளக்குப்போலவும், உயர் மிசை கொண்ட (318) வைகுறும் மீனின் - மிகவும் ஓங்கிய வானத்திடத்துக் கொண்டுள்ள (இராக்காலம்) விடிதலைத் தெரிவிக்கின்ற (வெள்ளியாகிய) மீன்போலவும், பைபய தோன்றும் - மெல்ல மெல்ல ஒளிவிட்டுத் தோன்றுகின்ற, (319) நீர்ப்பெயர் எல்லை போகி-நீரென்பதைத் தன்பெயரிற்கொண்ட பதியின் எல்லையிலே போய்,-- பால் கேழ் - பால்போன்றுநிறம் வெள்ளிய, (320) வால் உளை - வாலையும் தலையாட்டத்தினையுமுடைய, புரவியொடு - (சிந்துதேசத்தனவாகிய) குதிரைகளுடனே, வட வளம் தரூஉம் - வடதிசைக் கணுள வாகிய நுகரப்படும் பொருள்களையும் கொண்டுதருகின்ற, (321) நாவாய் - மரக்கலங்கள், சூழ்ந்த - சூழ்ந்துகிடக்கப்பெற்ற, நளி நீர் படப்பை-பெருமையையுடைய நீரான கடலின்பக்கத்தினையும்,—(322) மாடம்ஓங்கிய மணல் மலி மறுகின்-மாடம்ஓங்கியிருக்கப்பெற்ற மணல் மிக்க (தம்தேயத்தை விட்டுவந்தோர் வசிக்கும்) தெருக்களையும், (323) பரதர் மலிந்த பல்வேறு தெருவின் - பலவகை வணிகமாக்கள்மிக்குள்ள பல வெவ்வேறு தெருக்களையும், (324) சிலதர் காக்கும் சேண் உயர் வரைப்பின் - தொழில்செய்வாரால் காக்கப்படும் மிகவுமுயர்ந்த எல்லைகளைக்கொண்ட பண்டசாலைகளையும்,— (325) நெல்உழு பகட்டொடு கறவை துன்னு - நெல்லினைப் பெறுதற்குஉழுகின்ற எருதுகளோடே பசுக்கள் நெருங்கி, (326) மேழகம்தகரொடு - மேழகக்கிடாயுடனே, எகினம் - நாயும், கொட்கும் - சுழன்றுதிரிகின்ற, (327) கூழ் உடை நல்இல் - சோற்றையுடைய நன்றாகிய அகங்களையுமுடையதாகி,—கொடும் பூண் மகளிர் - வளைந்த அணிகலங்களைப்பூண்ட மக

*யூபம் - யாகபசுவைக் கட்டுந் தூண்.

ளிர்,—(328) கொன்றை-கொன்றையினிடத்து, மெல் சினை-(அரும்பு களையுடைய) மெல்லிய கொம்புகளிலே, பனி தவழ்பவை போல்-பனி யாககிடந்து தவழ்கின்றவைபோல, (329) பைங் காழ் அல்குல்-பசிய மணிகள் கோத்த வடங்களையுடைய இடையிற் கிடக்கின்ற, நுண் துகில்-மெல்லிய துகில், நுடங்க-அசைய,—(330) மால் வரை சிலம் பின் மகிழ் சிறந்து ஆலும் (331) பீலி மஞ்ஞையின் இயலி-பெருமையையுடைய பக்கமலையிலே மனமெழுச்சிமிகுந்து ஆரவா ரிக்கின்ற தோகையையுடைய மயில்போல உலாவி,—கால-பாதங்களிற் பூண்ட, (332) தமனியம் பொன் சிலம்பு ஒலிப்ப-பொன்னாலியன்ற அழகிய சிலம்புகள் ஆரவாரிக்கும்படி, உயர் நிலை (333) வான் தோய் மாடத்து-உயர்ந்த நிலைமையையுடைய தேவருலகத்தைத் தீண்டும் மாடத்திலே, வரி பந்து அசைஇ-(நூலால்) வரிதலையுடைய பந்தையடித்து இளைத்து, (334) கை புனை குறுந்தொடி தத்த-கையிற் புனைந்த குறுந்தொடி அசைய, பைப்பய-மெத்தென மெத்தென, (335) முத்தம் வார் மணல்-முத்தையொத்த நீண்ட மணலிலே, பொன் கழங்கு ஆடும்-பொன் னாற்செய்த கழற்சிக்காயைக் கொண்டு விளையாடுதற்கிடனான, (336) பட்டினம் மருங்கின்-பட்டினத்திடத்தே, அசையின்-இளைப்பாறு வீராயின்,—முட்டு இல்-தடையில்லையாக, (337) பைங்கொடி நுடங் கும் பலர் புகு வாயில்-பசியகொடிகள் அசையும் (கள்ளுண்பார்) பலரும் புகுகின்ற வாயிலிடத்து, (338) தூய-(தெய்வத்திற்குத்) தூவிய, செம் பூ செதுக்குடை-செய்ய பூவின் வாடலையுடைய, முன்றில்-முற்றத்தில், (339) கள் அடு மகளிர்-கள்ளைச் சமைக் கின்ற மகளிர், வள்ளம் நுடக்கிய-வட்டில் கழுவின, (340) வார்ந்து உகு சில்நீர்-வடிந்து சிந்தும் சில நீர், வழிந்த-(பலகால்வடிதலின் நிறைந்து) வழிந்த, குழம்பின்-குழம்புபோன்ற, (341) ஈர் சேறு ஆடிய-ஈரத்தையுடைய சேற்றை யளைந்த, இரு பல் குட்டி (342) பல் மயிர் பிணவொடு-கரியபலவாகிய குட்டிகளையும் பலவாகிய மயிர்களையு முடைய பெண்பன்றியுடனே, பாயம் போகாது-புணர்ச்சியைக் கருதுங் கருத்தால் போகாதபடி, (343) நெல் மா வல்சி தீற்றி-நெல்லை யிடித்த மாவாகிய உணவைத் தின்னப் பண்ணி, பல் நாள் (344) குழி நிறுத்து-பலநாள் குழியிலே நிறுத்தி, ஓம்பிய-பாதுகாத்த, குறுந் தாள் ஏற்றை-குறிய காலையுடைய ஆண்பன்றியின், (345) கொழு நிணம் தடியொடு-கொழுவிய நிணத்தையுடைய தசையோடே, கூர் நறா-களிப்புமிக்க நறவை, பெறுகுவிர்-பெறுவிர்; (எ-று.)

(319) எல்லைபோகி, (336) பட்டின மருங்கின் அசையின், (344) ஏற்றைக் (345) கொழுநிணத்தடியொடு கூர்நறாப் பெறுகுவிர் என்க.

311-முதல் 319-வரை நீர்ப்பாயலென்னும் ஊரின் சிறப்புக் கூறப்படும். தமது தோழிப்பெண்களுடனே நீர்த்துறையில் நீராடு கின்ற மகளிர் போகட்டுப்போன மகரக்குழையென்னும் காதணியைத் தனது இரையெனக் கருதிக் கவர்ந்த சிச்சிலிப்பறவை தினியேயுண்

ணக் கருதி, பறவை நிறைந்திருக்கின்ற பனைமரத்திற் செல்லாது அந்தணர் நட்ட வேள்வித்தூணி லிருந்ததாக, அப்போது அது யவ்னர் செய்ததும் தூணின் மேலிருப்பதுமான கலங்கரை விளக்குப் போலவும் கருவானத்து விளங்கும் வெள்ளியென்ற கிரகம் போலவும் தோன்றுமென்க. சிச்சிலி மகரக்குழையை இரையென மயங்கிக் கவர்ந்ததாகக் கூறியது - மயக்கவணி. வெள்ளன்னமேயன்றிக் காரன்னமுமுண்டு ஆதலால், 'மணிச்சிரல்' என்றார். கருமணிபோலுஞ் சிச்சிலி - காரன்னத்தையும், அதன்வாயிற் கவ்விய மகரக்குழை அவ்வன்னம் தாங்குவதாகச் செய்யப்பட்ட விளக்கையும் போலும் என்றனர் நச்சினார்க்கினியர்: வடிவமன்றி நிறத்தைப்பற்றி இங்குக் கூறவேண்டுவதில்லையாதலால், காரன்னம் என்னவேண்டுவதில்லை. மற்றும் சிச்சிலி தாங்கிய மகரக்குழைக்குக் கருவானத்துத் தோன்றும் வெள்ளிமீனையும் உவமை கூறினர். வெள்ளியென்ற மீன் [சுக்கிரன்] உதயமாவது சூரியோதயத்துக்குச் சற்று முன் நிகழ்வதால், அதனை 'வைகுறுமீன்' என்றது. நீர்ப்பெயற்றெல்லை போகி என்று அச்சிட்டுள்ளனர் மகாமகோபாத்தியாயடாக்டர்சாமிநாதய்யரவர்கள்: அன்னவரே நீர்ப்பேரெல்லை போகி என்று இருக்கலாமென்று தோன்றுகின்றது: நீர்ப்பேரென்று இங்குக் குறித்த ஊர் மதுராந்தகம் தாலுகாவில்உள்ளதுஎன்றுஎழுதியுள்ளார்: மற்றொருசாரார் க்ரோம்பேட் என்ற ஸ்டேஷனுக்கு அடுத்த திருநீர்மலையென்னுந் தலத்தைக் காட்டு மென்பர். மாவலிபுரத்துக் கடற்கரையில் திருமால் பள்ளிகொண்டிருக்கும்பதி பல்லவர்க்கு உரியதாதலால் அதனைக் காட்டலாமென்றும், நீர்ப்பாயலென்று இருக்கலாமென்றும் பாஷாசேகரர் கூறியுள்ளார். வேள்வியால் தேவர்கடன்தீருமாதலால் 'அந்தணர் அருங்கடனிறுத்த' என்றது.

(319) பாற்கேழ் என்பது முதல் (336) பட்டினம் என்பதுவரையில், பட்டினத்தின் சிறப்பைத் தெரிவிக்கும். இங்குப் பட்டினம் என்றது - கடன்மல்லையென்னும் மாவலிபுரத்தைக் காட்டுமென்பர். பட்டினம் - கடற்கரையை யடுத்துள்ள ஊர். (321) படப்பையினையும், (322) மறுகினையும், (323) பல்வேறு தெருவினையும், (324) வரைப்பினையும், (327) இல்லினையுமுடைய (336) பட்டினம் எனவும், (327) மகளிர் (329 நுடங்க (331) இயலி, 332)ஒலிப்ப, (333) மாடத்து அசைஇ (பின்னர்) (335) கழங்காடும் (336) பட்டினம் எனவும் இயையும்.

319-321:-பட்டினத்தின்கடற்பக்கம், புரவியொடு வடவளந்தரூஉம் நாவாய் சூழ்ந்துள்ளது. 322 - 324 : (பட்டினம்)— மாடமோங்கிய மணல்மலி மறுகினையும், பரதர் மலிந்த பல்வேறு தெருக்களையும், சிலதர் காக்கும் பண்டசாலைகளையு முடையது: 325 - 327: எருதும் பசுக்களும் நெருங்கி, ஆட்டுக்கிடாயுடனே நாய் திரியப் பெறும் சோறுடைய நன்றான அக்கங்களையுடையது. பரதர் - வணிகராதலால் அவர் நல்லானொடு பகடும்ஓம்புவர். நல்இல் என்றது, கொடுக்குஞ் செயலை மேற்கொண்டிருத்தலால். 328-335: மகளிர், துகில் நுடங்கமயில்போலுலவி உயர்நிலை வான்றோய்மாடத்துச் சிலம்பு

ஒலிப்பப் பந்தையடித்து இளைப்படைந்து பின்னர் மணலிலே மெல்ல மெல்லக் குறுந்தொடியசையக் கழங்காடப்பெற்றது பட்டினம் என்க. 324: வரைப்பு-மதில் சூழ்ந்த இடம்: சிலதர்காக்குஞ்சேணுயர் வரைப்பு எனவே, பண்டசாலை என்று கொள்ளப்பட்டது. 325: நெய்தல் நிலமாதலால், அவ்விடத்து, நெல்லுழுபகட்டொடு கறவை துன்னுமல் மேழகத்தகரொடு எகினங் கொட்குமென்பர் நச்சினார்க்கினியர்: அவர், பரதர் - நெய்தல்நிலத்து மக்கள் என்பர். மேழகத்தகர் - ஆட்டுக்கடா. எகினமும் மேழகத்தகரும் சிலதர் வளர்ப்பன. 327-336:- மகளிரின் வடங்களையணிந்த இடைகளிலே மெல்லிய துகில்கள் அசைபவை, கொன்றையின் (பூத்த) மென்சினையிலே பனிமாசு கிடந்து தவழ்வனவற்றை யொக்கும். 330 - 334: வான்றோய் மாடத்துப் பந்து ஆடியவண்ணம் செல்லும் மகளிர்க்கு, வரைச்சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும் பீலிமஞ்ஞை உவமம். மகளிர் நடைக்கு மயிலின் நடை உவமையாதலை, "மயில் கண்டன்ன மடநடை மகளிரோடு" "அணிமயிலன்ன வசை நடைக் கொடிச்சியை", "நடைமயிலே" என்னுமிடங்களிலுங் காண்க. மால்-மேகங்கள் தங்கப்பெற்ற, வரை எனினுமாம்.

(336) முட்டில்லாமல் (337) பலர்புகுகின்ற வாயிலிடத்துள்ள (338) முற்றத்தில் (339) வள்ளம் நுடக்கிய (340) வார்ந்துகு சின்னீர் வழிந்ததனாலான குழம்புபோன்ற (341) ஈர்ஞ்சேற்றை ஆடிய (342) பிணவுடனே பாயம்போகாது (343) திற்றி, (344) குழி நிறுத்து ஓம்பிய (பன்றி) ஏற்றையின் (345) நிணத்தடி என்க. 337 - 338: பண்டைக் காலத்தில் கள்விற்போர் கடையில், கொடிகட்டிப் பூவைத் தூவுதல் வழக்கமாதலை "மலர்சிதறிப், பலர் புகுமனைப்பலிப் புதவின் நறவு நொடைக்கொடியொடு" என்ற பட்டினப்பாலை அடிகளாலும் அறிக. 342 - 344; பாயம் - மண விருப்பத்தாற் பாய்தல்: பாயமபோகாது-புணருங் கருத்தாற் போகாதபடியென்க: இனி, பாசம் என்ற வடசொல்லின் திரிபு எனினுமாம், புணர்ந்தால் கொழுப்பு இன்றாகுமென்று அப்பன்றியைப் பிணவொடு புணராதவாறு வல்சி தீற்றி குழியில் நிறுத்தியுள்ளாரென்க. "ஆற்றலொடு புணர்ந்த வாண் பாற்கெல்லாம், ஏற்றைக்கிளவி யுரித்தென மொழிப" என்றதனால் ஆண்பன்றியினை ஏற்றை யென்றது.

(346) "வானமூன்றிய" என்றது முதல் (362) "கிழங்கார்குவிர்" என்பது வரையிலுள்ள பகுதிகளால், 'பட்டினத்தைக் கடந்து தண்டலையுழவர் தனிமனை சேப்பின், இளநீர்முதலியன பெறுகுவீர்: அவற்றை மிகுதியாகவுண்டு வெறுப்புக் கொண்டால், சேம்பின்கிழங்கை யார்குவிர்' என்று ஆற்றுப்படுப்போன் கூறுகின்றான்:

வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி

உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையும்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்
குன்றுறழ் யானை மருங்குலேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பின்
தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்,
வீழி றாழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்
திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
தீம்பஃ றார முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர்:

(இ - ள்.) (346) வானம் ஊன்றிய மதலை போல - தேவருலகுக்கு (முட்டுக்காலாக) ஊன்றிவைத்த ஒரு பற்றுக்கோடு போல, (347) ஏணி சாத்திய ஏறு அருஞ் சென்னி (348) விண்பொர நிவந்த - (தன்னிடத்து ஏறுமாறு) ஏணி சாத்தப்படும் ஏறுதற்கு அரிய தலையினையுடையதாகி விண்ணைத் தொடும்படி ஓங்கின, வேயா மாடத்து - (கற்றை முதலியவற்றால்) வேயப்படாமல் (சாந்துவாரப்பட்ட) மாடத்திடத்தே, (349) இரவில் மாட்டிய இலங்கு சுடர் - இராக்காலத்திலே கொளுத்தின விளங்குகின்ற விளக்கு, ஞெகிழி (350) உரவு நீர் அழுவத்து ஓடு-(நாம் சேரவேண்டிய துறை இதுவன்றுபோலும் என்று) நெகிழ்ந்து உலாவுகின்ற நீராகிய கடற்பரப்பிலே ஓடுகின்ற, கலம் - மரக்கலங்களை, கரையும் - (இது நம்முடைய துறைதான் என்று) அழைக்கின்ற, (351) துறை - நீர்த்துறை, பிறக்கு ஒழிய - பின்னே கிடக்க, போகி - போய்,—கறை அடி - உரல்போன்ற பாதத்தோடு கூடி, (352) குன்று உறழ் - மலையையொத்துத் தோன்றுகின்ற, யானை - யானையின், மருங்குல் - உடம்பை, ஏய்க்கும் - ஒத்திருக்கின்ற, [சருச்சரையையுடைய], (353) வள் தோடு தெங்கின் - வளப்பமுள்ள இலையையுடைய தென்னையின், வாடு மடல்-உலர்ந்த மடலுடைந்து, வேய்ந்த - வேயப்பெற்றனவாய், (354) மஞ்சள் முன்றில் - மஞ்சளையுடைய முற்றத்தினையும், மணம் நாறு படப்பை-மணம்நாறுகின்ற பூந்தோட்டங்களையும், (355) தண்டலை-சோலைகளையுமுடைய, உழவர்-உழவரின், தனி மனை-தனிப்பட்டுள்ள அல்லது ஒப்பில்லாத மனையிலே, சேப்பின்-தங்கினால்,—(356) தாழ் கோள் பலவின்-தாழ்ந்த குலைகளையுடைய பலாவினது, சூழ் சுளை பெரும் பழம்-(தின்பார் விரும்பிச்)சுற்றிக் கொள்ளுஞ் சுளையையுடைய பெரிய பழத்தையும், (357) வீழ் இல் தாழை குழவி தீநீர்-விழுதில்லாத தாழையாகிய தெங்கின் இளதாகிய இனிய நீரையும், கவை முலை இரு பிடி-கவைத்த முலையினையுடைய பெரிய பெண்யானையின், கவுள் - கவுளிடத்து, மருப்பு - தந்தங்களை, ஏய்க்கும் - ஒத்திருக்கின்ற, (359) குலை முதிர் வாழை கூனி வெள்

பழம்-குலைகள் (தம்பெருமையாலே நிலத்தே) தாழவளைந்து முற்றின வாழையின் வெள்ளிய பழத்தையும், (360) திரள் அரை பெண்ணை நுங்கொடு - திரண்ட அடியையுடைய பனையினது நுங்கோடே, பிற உம் (361) தீம் பல் தாரம் - (இவைகளினும் வேறான) இனிய பல பண்டங்களையும், முனையின் - தின்று வெறுப்பீராயின்,—சேம்பின் - சேம்பினுடைய, (362) முளைபுறம் முதிர் கிழங்கு - முளையைத் தம்மிடத்தேயுடைய முதிர்ந்த கிழங்குகளை, ஆர்குவிர் - தின்பீர்; (எ - று.)

கடற்கரையில் ஆகாயத்தளவும் உயர்ந்துள்ள மாடங்களில் இரவில் வைத்த விளக்குக்கள்,கடலிற் போகும் நாவாயினையுடையார்க்குத் துறையை யறிவிக்கும்:அவ்வாறான இடம் பிற்படக் கடந்து சென்றால்,மஞ்சளைக் கொண்ட முன்றிலையும் மணம்நாறுகின்ற படப்பையினையும் தண்டலையையுமுடைய உழவரின் தென்னங்கீற்றால் வேய்ந்த தனித்தனி மனைகள் இருக்கும்: (இவை,தோட்டங்களைப் பாதுகாத்துப் பயன்கொள்பவர் தனித்தனியே கட்டிக் கொண்டவை.) அங்குத் தங்கினால் அவர்கள் பலாப்பழம் இளநீர் வாழைப்பழம் பனைநுங்கு முதலிய பல இனிய பண்டங்களை உண்ணுமாறு தருவார்கள்: அவற்றை மிகுதியாக வுண்டு அவற்றில் வெறுப்புத் தோன்றின்,சேப்பங்கிழங்குகளை யுண்ணுமாறு அவர்கள் தருவார்க ளென்க.

(351) துறை பிறக்கொழியப்போகி, (355) (தோட்டப்பயிர் செய்யும்) உழவர் தனிமனையிற் சேப்பின், (356) பழத்தையும்(357) இநீரையும் (359)பழத்தையும்(360) நுங்கோடே (361)பல்தாரமும் முனையின், சேம்பின் (362) கிழங்கு ஆர்குவிரென்க.

346 - 348: மிகவோங்கிய மாடமென்பார் 'வானமூன்றிய மதலை போல விண்பொரநிவந்த மாடம்' என்றார்: தொடர்புயர்வுநவிற்சியணி. அந்த மாடத்தின் ஓக்கத்தை விளக்க, மாடத்திற்கு, 'ஏணிசாத்திய ஏற்றருஞ் சென்னி' என்று அடைமொழி கொடுத்தது. சார்த்திய ஏணியால் ஏற்று அருஞ் சென்னி என்று இயைத்துப் பொருள் கூறுவர். ஏற்று - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். வேய்தல் - வரகு கற்றை முதலியவற்றால் மூடுதல்: வேயாமாடம்-மேலே கூரை போடப்படாமல் மச்சாகவேயுள்ள மாளிகை: இது, பல நிலைகளையுடைய மச்சு வீட்டைக் காட்டும். தட்டோடிட்டுச் சாந்து பூசிய வீடு என்பர், சிலப்பதிகாரத்து அரும்பதவுரையாசிரியர்.

349 - 351: மாடத்து இரவிலே மாட்டிய சுடர், கடலில் ஓடும் கலங்களிலுள்ள கப்பலோட்டிக்கு 'இங்கு மரக்கலஞ் சேருந் துறை உள்ளது: ஆகையால், இங்கு வந்து சேர்க' என்று தெரிவித்தலால், 'சுடர் உரவுநீரழுவத்துஓடு கலங்கரையும்' என்றது: இது-தற்குறிப்பேற்றவுருபை வெளிப்படையாகப் பெறாது வந்த தன்மைத்தற்குறிப்பேற்றவணி. (முற்காலத்து இலக்கணக்காரர் இவ்வாறு வருவதனை உவமையிலடக்குவர்.) ஞெகிழி-இறந்தகால வினையெச்சம்; இனிப் பெயர்ச்சொல்லாகக் கொண்டு, ஞெகிழி-கடைக்கொள்ளியாற் கொளுத்தின,

இலங்கு சுடர் - விளங்குகின்றவிளக்கு என்றும் உரை கூறியுள்ளனர்.

352 - 353: யானையின் உடம்பு, சருச்சரைத்தன்மையில் தெங்குக்கு உவமை; 357: வீழில் தாழை என்பது - தென்னைக்கு வெளிப்படை: மற்றொன்று "வீழ்தாழ் தாழை" என வழங்கியிருப்பது காண்க. வீழையுடைய தாழையென்பது - நெய்தல்நிலத்துப் பொருளாகிப் பூவிற்குச் சிறந்த தாழையென்னுஞ் செடியைக் காட்டும். குழவித்தீநீர் - இளநீர். குழவி-ஓரறிவுயிரின் இளமைப் பெயர்: "பிள்ளை குழவி கன்றே போத்தெனக், கொள்ளவுமமையு மோரறிவுயிர்க்கே" என்ற தொல்காப்பியத்தையும் காண்க.

358 - 359: வாழைப் பழத்துக்குப் பிடியின் மருப்பு உவமை. 361-362: முளைப்புறம் சேம்பின் - முளையை இடத்தேயுடைய சேம்பினது இலையோடே, முதிர் இழங்கு - முற்றின வள்ளி முதலிய கிழங்குகளை, ஆர்குவிர் - தின்பீர் என்று உரைத்தலும் ஒன்று. பல்+தாரம் = பஃறாரம்: "குறில்வழி ல ள" [நன் - மெய்.]

(362) 'பகற்பெயல்' என்பது முதல் (392) 'இன்னியமியக்கினிர் கழிமின்' என்ற பகுதிகளால், தோட்டப்பயிர்செய்வோரிருப்பிடத்தைக் கடந்து, கமுகின் புடை சூழுந் தெங்கின்காய் தம்அடியிலே (அடுவோரின் பானை இவக) விழூஉம் பாக்கத்தைப் பன்மரநீளிடைப் போகி, பல நகரங்களையும் கொண்டு மதிளுடுத்து வள்ளிக்கூத்து ஆடப்பெறும் நாடுகளையும் கடந்து பெருந்துறைச்செவ்வி கொள்பவரொடு இளைப்பாறி, அவ்வயின் அருந்திறற் கடவுள் வாழ்த்தி இன்னிய மிசைத்து அப்பாற் செல்லுமாறு ஆற்றுப்படுப்போன் கூறுகின்றான்:

முதலில் 362-முதல் 371-வரையில் பலபுறநாடுகள் கடக்கவேண்டுமென கூறப்படும்.

பகற்பெயல்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய்
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி யிளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை

(இ - ள்.) (362) பகல் பெயல் (363) மழை - பகற் பொழுதிலே பெய்தலையுடைய மழை, வீழ்ந்து அன்ன - கால்வீழ்ந்தாலொத்த, மாதாள் - பெரிய தண்டினையுடைய, கமுகின் - பாக்கு மரங்களின், (364)

புடை சூழ் - பக்கத்தே சூழ்ந்த, தெங்கின் - தெங்கினுடைய, மு புடை திரள் காய் - மூன்று புடைப்பினையுடைய திரண்ட காய், (365) ஆறு செல் வம்பலர் - வழிச் செல்கின்ற புதியோர், காய் பசி தீர - (தமது) வருத்துகின்ற (மிக்க) பசி நீங்குமாறு, (366) சோறு அடு - சோற்றை ஆக்குகின்ற, குழிசி-பானை, இளக-அசையும்படி, விழூஉம் - (நிலத்தே) வீழ்கின்ற, (367) வீயா யாணர் - விடாத புதுவருவாயினையுடைய, வளம் கெழு - செல்வம் பொருந்தின, பாக்கத்து - பாக்கத்திடத்தை, (368) பல் மரம் நீள் இடை போகி - பலமரங்கள் வளர்ந்த இடத்திலே போய்,—நல் நகர் - நன்றாகிய நகர்களிலே, (369) விண் தோய் மாடத்து-ஆகாயத்தைத் தீண்டும் மாடங்களையுடையன வாய், விளங்கு சுவர் உடுத்த - விளங்குகின்ற மதில் சூழ்ந்தனவாய், (370) வாடா வள்ளியின் - வாடுங்கொடியாகிய வள்ளியல்லாத வள்ளிக் கூத்தினையுடையனவாய், வளம் பல-வளப்பம்பலவற்றையும், தரூஉம்-தருதற்குக் காரணமான, (371) நாடு பல - (புற) நாடு பலவற்றையும், கழிந்த பின்றை-கடந்து சென்ற பின்பு,—(எ - று.)

362 - 367: *இவ்வடிகள், பாக்கத்தின் வளத்தைக் கூறும்: பாக்கம் - சிறிய ஊர்.* 363 - 364: *கமுகின் தலைப்பகுதி மேகத்தையும், அதனுடைய தண்டு மேகம் கால்வீழ்ந்ததனையும் ஒக்குமென்க: கமுகுக்கு மேகம் உவமை கூறப்படுதலை "மேகமேய்க்கு மிளங்கமுகம் பொழில்" என்பதனாலும் அறியலாம். கமுகின் புடையிலே தெங்கு சூழ்ந்துள்ள தென்க.* 364 - 367: *தென்னந் தோப்புக்களில் வழிச்செல்வோர் தம் பசி தீர்தற்குச் சமைக்கும் பானை இளகுமாறு தேங்காய் விழும். இங்ஙனம்புதுவருவாயைக்கொண்டவளத்துடன் விளங்குவதுபாக்கமென்க. சமைக்கும் பானை அசைந்து உடைந்திடும்படி தேங்காய்விழுமெனின், வளம்பல தரூஉம் என்பது பொருந்தாது* 369 - 371; *இவ்வடிகள் கடக்கவேண்டிய பல நாடுகள் இப்படிப்பட்ட என்று கூறும்: நாடுகள் தம்மிடத்தேயுள்ள நகரங்கள் விண்டோய் மாடத்தையுடையவாகி ஆங்காங்கு மதிலையுடையனவாகத் தம்மிடத்து வள்ளிக் கூத்து ஆடப்பெறுமென்க. வளம் பல என்றது-இந்த வள்ளிக் கூத்து ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாய் வருதலாலென்பர்: "வாடாவள்ளி-வாடுங்கொடியல்லாத வள்ளிக் கூத்து: அஃது, இழிந்தோர் காணுங் கூத்து :உ-ம்: மண்டமரட்ட.....பெரிது, இது, பெண்பாற்குப் பெரு வரவிற்று: இதனைப்பின்கூறினார், வெறியறிசிறப்பன்மையானும் ஆண்பாற்கும்பெண்பாற்கும் பொதுவாதலல்லது அகத்திணைக் கண் வந்து பொதுவாகாமையும் பற்றி" என்று "வெறியறிசிறப்பின்" என்ற சூத்திரத்தில் உரைத்திருப்பது இங்கு அறியத்தக்கது. 'வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்' என்றதனால், இழிகுலத்தோருறையும் புறநாடு என்பது தோன்ற அவர்கள் காணுதற்கு உரிய வள்ளிக்கூத்தினைக் கூறினாரென்பர்.*

371 - 392: இவ்வடிகள்-அங்கே பொழில்தோறும் குடித்து மகிழ்ந்து களிப்பெய்தி விளையாடிக் கடவுளை வாழ்த்தி இன்னியமியக்கிக் கடக்கும் வழியை கூறும்:

நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோல்
நிழல்சூழ் வார்மண னீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழிலொறுந் திரள்கால்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கள் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர் நுதல்
நறவுபெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயின்
அருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநும்
கருங்கோட் டின்னிய மியக்கினிர்கழிமின்:

(இ - ள்) (371) நீடு குலை (372) காந்தள் - நீண்ட பூங்கொத்துக் களைக் கொண்ட காந்தளையுடைய, அம் சிலம்பில் - அழகிய பக்க மலையிலே, களிறு படிந்து ஆங்கு - யானை கிடந்தாற்போல, (373) பாம்பு அணை பள்ளி அமர்ந்தோன் ஆங்கண் - பாம்பணையாகிய படுக்கையிலே துயில்கொண்டோனுள்ள அவ்விடத்து, (374) வெயில் நுழைபு அறியா - சூரியகிரணம் (எப்போதும்) உட்புகுதலை அறியாத, குயில் நுழை - (இலைநெருக்கத்தால்) குயில்கள் நுழைந்து செல்கின்ற, பொதும்பர் - இளமரக்காவில். (375) குறுங்கால் காஞ்சி - குறிய காலினையுடைய காஞ்சிமரத்தை, சுற்றிய - சூழ்ந்த, நெடு கொடி (376) பசு இலை குருகின் - நெடிய கொடியினையும் பசிய இலையினையுமுடைய குருக்கத்தியினுடைய, புல் புறம் வரி பூ - புற்கென்ற [பொலிவிழந்த] புறத்தினையும் வரிகளையுமுடைய மலர்கள், (377) கார் அகல் கூவியர் பாகொடு பிடித்த (378) இழை சூழ் வட்டம் பால் கலந்தவை போல் - கரிய தாழிய சட்டியிலே அப்பவாணிகர் பாகுடனே (வேண்டுவன கூட்டிச்) சேர்க்கப்பட்ட நூல்போலச்சூழ்ந்துகிடக்கின்ற ஒருவகைச் சிற்றுண்டி பாலிலே கிடந்தவை போல, (379) நிழல் தாழ் வார் மணல் நீர் முகத்து உறைப்ப - நிறம்விளங்குகின்ற வார்ந்த மணலிடத்து (க்குழிகளின் நின்ற) நீரிடத்தே வீழ்ந்துமிக

அழுந்துமாறு, (380) புனல் - (பெருகிய) நீர், கால் கழீஇய - கழுவித் தூய்தாக்கிச் சென்ற, பொழில் தொறும்-சோலைதொறும், திரள் கால் (381) சோலை கமுகின் - திரண்ட தண்டினையுடைய சோலையிடத்து நிற்குங் கமுகினுடைய, சூல் வயிறு அன்ன- சூல்கொண்ட வயிற்றை யொத்த, (382) நீலம் பைங்குடம் - பச்சைக் குப்பிகளை, தொலைச்சி - (கள்ளையுண்ணுதலால்) ஒன்றுமில்லாதனவாகச் செய்து, நாளும் - நாடோறும், (383) பெரு மகிழ் இருக்கை மரீஇ - பெரிய மகிழ்ச்சியை யுடைய இருப்பைப் பொருந்தி, சிறு கோடு (384) குழவி திங்கள் கோள் நேர்ந்தாங்கு - சிறிய கோடாயிருக்கின்ற இளைதாகிய பிறையைச் செம்பாம்பு சேர்ந்தாற்போல, (385) சுறவுவாய் அமைத்த- மகரவாயாகிய தலைக்கோலத்தைச் சேர்த்தின, சுரும்பு சூழ் - சுரும்புகள் சூழும், சுடர் நுதல் - ஒளியையுடைய நெற்றியினையும், (386) நறவு பெயர்த்து அமைத்த நல் எழில் மழைக்கண் - நறவம்பூவின் இதழைப் பெயர்த் தமைத்தாற்போன்ற நன்றாகிய அழகினையும் குளிர்ச்சியையுமுடைய கண்களையுமுடைய, (387) மடவரல் மகளிரொடு - மடப்பந் தோற்றுதலையுடைய மகளிரோடே, பகல் விளையாடி - பகற்பொழுது விளையாடி, (388) பெறற்கு அரு தொல் சீர் - பெறுதற்கு அரிய பழமையையுடைத்தாகிய புகழினையுடைய, துறக்கம் - சுவர்க்கலோகத்தை, ஏய்க்கும் - ஒத்திருக்கின்ற, (389) பொய்யா மரபின் - தப்பாத (நீர் வரும்) முறைமையினையுடைய, பூமலி பெரு துறை - பூ மிகுகின்ற பெரிய துறையிடத்தே, (390) செவ்வி கொள்பவரொடு - (இளவேனிற்) செவ்வியை நுகர்வாரோடு, அசைஇ - இளைப்பாறி, அ வயின்- ஆங்கு எழுந்தருளியுள்ள, (391) அரு திறல் கடவுள் வாழ்த்தி- அரிய திறலினையுடைய திருமாலை வாழ்த்தி, நும் (392) கருங்கோடு இன் இயம் - நும்முடைய கரிய தண்டினையுடைய இனியயாழை, (391) சிறிது (392) இயக்கினிர் - சிறிது வாசித்து, கழிமின் - (அவ்விடத்தினின்றும்) போமின் ; (எ-று.)

(373) ஆங்கண் (374) பொதும்பரில் (376) குருகின் பூ (379) உறைப்பக் (380) கழீஇய பொழில் தொறும், (382) நீலப் பைங்குடந் தொலைச்சி, (383) மரீஇ, (387) மகளிரொடு பகல் விளையாடி, (389) பெருந்துறைச் (390) செவ்விகொள்பவரோடுஅசைஇ, (391) கடவுள் வாழ்த்தி, (392) இயக்கினிர் கழிமின் என்க.

371—373 : திருமால் பாம்பணையிற் பள்ளி கொள்ளுதல் காந்தளஞ்சாரலில் களிறு படிதலை யொக்கும் ; "பைந்நாகப் பள்ளி மணிவண்ணனிற் பாயல் கொண்டு, கைந்நாகந் துஞ்சுங் கமழ் காந்தளஞ் சாரல் போலி" என்றது, இங்குக் காணத்தக்கது. பாம்பிற்குக்காந்தள் உவமை கூறப்படுதலை "திருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட், கொழுமடற் புதுப்பூ ஊதுந் தும்பி, நன்னிற மருளு மருவிடர்", "பாம்புடைய விந்ததுபோலக் கூம்பிக், கொண்டலிற் றொலைந்த வொண் செங்காந்தள்" என்றவற்றிலும் காணலாம். இங்குக் கூறிய பாம்பணைக் கடவுள், திருவெஃகாவிலுள்ள திருமாலைக் காட்டுமென்று உணர

கூறியுள்ளனர் நச்சினார்க்கினியர். "பூமலிபெருந்துறைச் செவ்வி கொள்பவரோடு அசைஇ அவ்வயின் அருந்திறற் கடவுள் வாழ்த்தி" என்று வந்திருப்பதன்றித் திருவெஃகாவின் திருமால்தான் இங்குக் குறிக்கப்பட்டுள்ளாரென்று சொல்லுதற்கேற்ப யாதுமில்லை: பிற கவிஞர் "கச்சி வெஃகாவில், கிடந்திருந்து நின்றதுவுமங்கு," "இடந்தானிதுவன்றே, மன்றூர் மதிட்கச்சி மாண்பு" என்று வெஃகா கச்சியிலுள்ளதாகக் கூறுகின்றனர்: இந்நூலிலோ (373) பாம்பணைப் பள்ளியமர்ந்தோனுங்கண்***(382)மரீஇ,***(391) அருந்திறற் கடவுள்வாழ்த்தி, (392) இன்னியமியக்கினிர் கழிமின் என்று கூறியபின்பே(411)மூதூர் (420) கச்சியோனே என்று கச்சிப்பதியின் பிரஸ்தாபம் வருகின்றது: ஆகவே, இது, கச்சிப்பதியைச் சார்தற்கு முன்னரேயுள்ள ஒருபதியாகவிருக்கவேண்டும். 371 - 372: காந்தளென்பதற்குஏற்ப, பாப்பணையென வாராது பாம்பணை யென்று மெலிந்துவந்த தென்பர். நீடுகுலைக்காந்தள் படமெடுத்தபாம்புத்தலை போன்று தோன்றும்: அந்தப்பாம்பணையிற் பள்ளிகொள்ளும்பரமன் களிறுபோல்வன்:374,இவ்வடி, சோலையின்மரச்செறிவையுணர்த்தும். வெயில்நுழைதலைஎப்போதும்அறியமாட்டாமையோடு குயின்[மேகம்] நுழைந்துதங்கியிருக்கும் பொழில்என்றுமாம். மரச்செறிவால்வெயிலில்லாமையோடுமேகமநுழைந்துதங்கியிருத்தலால் பொழிலின் குளிர்ச்சியுடைமையையும்தெரிவித்தார்375-379:கரியசட்டியிலேகூவியரால்[அப்பவாணிகர்]வேண்டுவன்கூட்டிச் சேர்க்கப்பட்டு வெல்லப்பாகொடுசூழ்ந்துகிடக்கும் நூல்போன்ற ஒருவகைச்சிற்றுண்டியின்புபாலிலேகிடந்தவைபோலக் காஞ்சிமரத்திலே சுற்றியபசிய இலையினையுடைய குருக்கத்தியின்பூக்கள்வெள்ளநீர்பெருகியபோது இடத்தைத் தூய்தாக்கின பொழில்தோறும் வெண்மணலிடத்துக்குழிகளின் நீரின்மேல கிடந்து விளங்குமென்க. வெண்மணற் குழியில் தங்குவதால் நீர் பால்போல வெளுத்துத் தோன்றும். குருகின்கொடியைக் குறுங்காற் காஞ்சி சுற்றிய என்று அடைமொழிகொடுத்துக் கூறியது, மரத்தைச்சுற்றிப் படர்தல் கொடிக்குஇயல்பாதலாலென்க.

381 - 383; பசிய கமுகின்சூல்கொண்டவயிற்றையொத்திருக்குஇன்றபச்சைக்குப்பியின் உள்ளேயுள்ள கள்ளையுண்டு பேர்க்குதலால், நாடொறும் பெருமகிழ்ச்சியையுடைய இருப்புமருவுவதாகும்.பைக்குடம் என்றுஇருக்கவேண்டு மென்பதும், நீலத்தோற்பைக்குடம் அதுவே என்பதும், அது பச்சைக்குப்பிஎனப்படுமென்பதும் ஒருசார்ஆராய்ச்சியாளர் துணிபு; "கள்ளினிரும்பைக்கலம்" என்ற மதுரைக்காஞ்சியையும் காண்க.

383 - 385; மகளிரின் நெற்றியில்சுறவுவாய்என்ற தலைக்கோலம் சேர்ந்திருப்பது—பிறைச்சந்திரனைக்கோள்நேர்ந்தாற்போலும்:பிறைச்சந்திரனைப் பாம்பு தீண்டுதலின்மையால்,இது - இல்பொருளுவமையாம். கோளாய பாம்பு தீண்டினால் கருமைதோன்றுமாதலால் சுரும்புசூழ்நுதல்என்றார். 386: சுறவம்பூவின் இதழ் மகளிர் கண்ணுக்கு உவமை கூறப்படுவதை, "சுறவின்சேயிதழனையவாகிக்குவளை, மாயிதழ்புரையு

மலிர்கொளீரிமை'', ''நயவருநறவிதழ்மதருண்கண்'' என்ற இடங்களிலுங் காண்க. இனி, நறவு பெயர்த்தமைத்த என்பதற்கு-(கிண்ணத்திலுள்ள) நறவை[கள்ளை] (அங்கு நின்று)பெயர்த்து ஆக்கப்பட்ட நன்றாகிய எழிலையுடைய மழைக்கண்என்று உரை கூறினுமாம்: காளிதாசமகாகவியும் நறவுபோல் மதக்களிப்பையுண்டாக்கும் கண்ணுடையவளென்ற பொருளில் ''மதிரேட்சணா'' என்று கூறியுள்ளார். 389 390: துறையிலே இளவேனிற் செவ்வியை நுகர்பவரொடு இளைப்பாறியென்க. துறை நுகர்பொருளிற்குறைவின்மையால்துறக்கத்தை யொக்கும்.

393-420: இவ்வடிகளால், ஆற்றுப்படுப்போன் ஆற்றுப்படுத்தப்படுபவனை நோக்கி, அப்பாற் கச்சியில் தனக்கு உபகரித்த உபகாரியாகிய இளந்திரையன் இருப்பதைக் கூறுகின்றான்:

காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம்
கடுஞ்சூன் மந்தி கவருங் காவின்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்தின்
திண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவில்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் வழங்குநர்த் தடுத்த
அடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீணிற வுருவி னெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்விதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பின்
இழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழூஇக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக்கட லுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூர்
அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வாய்
அந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஆராச் செருவி னைவர் போல
அடங்காத் தானையோ டுடன்றுமேல் வந்த

ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்
கச்சி யோனே கைவண் டோன்றல்:

(இ-ள்.) (393) காமேழார் இகழ் பதம் நோக்கி - கூத்துக்கோற்காரர் சோர்ந்திருக்குஞ் சமயம் பார்த்து, கீழ (394) நெடு கை யானை நெய் மிதி கவளம் - கீழே தொங்குகின்ற நீண்ட கையினையுடைய யானையின் நெய் விட்டுத் துகைத்துத் திரட்டிய உணவுக் கவளத்தை, (395) கடுஞ் சூல் மந்தி - முதிர்ந்த சூலையுடைய பெண் குரங்கு, கவர் - கவர்ந்து செல்கின்ற, காவின் - சோலையையும், (396) களிறு கதன் அடக்கிய வெளிறு இல் கந்தின் - யானையின் சினத்தை ஓங்க வொட்டாது அடக்கவல்ல [மதயானை கட்டப்பெற்று மிகவும் உறுதியாகவுள்ள] கட்டுத் தறியையும், (397) திண் தேர் குழித்த குண்டு நெடு தெருவின் - திண்ணிய தேர்கள் (பலகால் ஓடிக்) குழியுண்டாக்கிய தாழ்ச்சியையுடைய நெடிய தெருவினையும், (398) படை தொலைபு அறியா - (தமது) படை வறிதேபோதலை யறியாத [எப்போதும் வென்றே வருகின்ற], மைந்து மலி - வலி மிகுகின்ற, பெரு புகழ் - மிக்க புகழின், (399) கடை - எல்லை, கால்யாத்த - மறைந்துள்ள, —பல் குடி கெழீஇ - பல குடிகள் பொருந்திய (400), கொடைஉம் கோள்உம் - (பண்டங்களை) விற்றலும் கொள்ளுதலும் ஆகிய இவை, (400) வழங்குநர் தடுத்த (401) அடையா வாயில் - (உலகத்திற்) கொடுப்பாரைக் கொடாமல் தடுத்த அடையாத [கதவு மூடாத] வாசலினையும், மிளை சூழ் படப்பை - காவற்காடு சூழ்ந்த பக்கத்தினையும், —(402) நீல் நிறம் உருவின் நெடியோன் கொப்பூழ் - நீலநிறத்தையுடைய வடிவினைக்கொண்ட திருமாலின் திருவுந்தியாகிய, (403) நான்முகம் ஒருவன் பயந்த பல் இதழ் (404) தாமரை பொகுட்டின் - நான்கு முகத்தையுடைய ஒருவனைப் பெற்ற பல இதழையுடைய தாமரையின் மொட்டுப் போல, காண்வர தோன்றி - அழகு விளங்கத் தோன்றி, (405) சுடுமண் ஓங்கிய - செங்கல்லாற் கட்டப்பட்டு உயர்ந்த, நெடு நகர் வரைப்பின் - நெடிய நகரைச் சூழ்ந்த மதிலினையும், —(406) இமூமென் புள்ளின் - இமூமென்னும் ஓசையைக் கொண்ட பறவையின், ஈண்டு - திரள்கின்ற, கிளை தொழுதி - சுற்றத்தின் திரட்சியைக் கொண்ட, (407) கொழு மெல் சினைய - கொழுவிய மெல்லிய கிளைகளையுடைய, கோளியுள் உம் - பூவாமற் காய்க்கும் மரங்களுக்குள், (408) பழம் மீக் கூறும் - பழத்தினினிமையால் மேலாகச்சொல்லப்படும், பலாஅ போல - பலாமரத்தை யொக்க, - (409) புலவு கடல் உடுத்த - புலால்நாற்றத்தையுடைய கடல் சூழ்ந்த, வானம் சூடிய - ஆகாயங் கவிந்த, (410) மலர் தலை உலகத்துள் உம் - அகன்ற இடத்தையுடைய உலகத்துள், பலர்தொழ - பலரும் தொழும்படி, (411) விழவு மேம்பட்ட - விழாக்களாலே (மற்றை நகரினும்) மேலான, பழ விறல் - பழமையான வெற்றியையுடைய, முதுஊர் - பழைய ஊரில், (412) அவ்வாய் வளர் பிறை - அழகிய இடத்தையுடைய வளரும் பிறையை, சூடி - (தன்மேலே) சூடி, செவ்வாய் (413) அந்தி வானத்து ஆடும் -

செம்மைவாய்ந்த அந்திக் கால வானத்திலே யுலாவுகின்ற, மழை - மேகத்தை, கடுப்ப - ஒப்ப, (414) வெண்கோடு இரு பிணம் - வெள்ளிய கொம்பினையுடைய கரிய யானைப்பிணத்தை, குருதி - இரத்தப்பெருக்காகிய யாறு, ஈர்ப்ப - இழுத்துக் கொண்டு போகும் படியும், (415) ஈர் ஐம்பதின்மரும் பொருது களத்து அவிய - துரியோதனனாதியர் நூற்றுவரும் போர்செய்து அக்களத்திலே இறந்திடும்படியும், (416) பேர் அமர் கடந்த - பெரிய போரை வென்ற, கொடுஞ்சி நெடு தேர் - கொடுஞ்சி யென்னும் உறுப்பினைக் கொண்ட தேரினையும், (417) ஆரா செருவின் - தொலையாத போரினையுமுடைய, ஐவர் போல - (தருமன் முதலிய) பஞ்சபாண்டவரைப்போல [பாண்டவர் அசுவத்தாமனுக்குத் தோற்றுப்போன அப்போது அந்த அசுவத்தாமன் ஆரவாரித்தாற்போல, (418) அடங்கா(த) தானையொடு உடன்று மேல் வந்த - (ஒரு கணக்குக்கு) அடங்காத சேனையுடனே சினந்து தன்மேல் வந்த, (419) ஒன்னா தெவ்வர் - (தன்னேவலைப்) பொருந்தாத பகைவர் (ஐவர்), உலைவு இடத்து - தோற்ற விடத்தே, ஆர்த்து - (வெற்றிமகிழ்ச்சி தோன்ற) ஆரவாரித்து, (420) கை வள் தோன்றல் - கைவளப்பத்தையுடைய தலைவன், கச்சியோனே - காஞ்சீபுரத்தி லிருக்கிறான்; (எ-று.)

(414) குருதியீர்ப்பவும் (415) ஈரைம்பதின்மரும் அவியவும் (416) அமர் கடந்த(417) ஐவர்போல்(419) ஐவர் உலைவிடத்தார்த்து,- (395) காவினையும், (396) கந்தினையும், (397) தெருவினையும், (398) படையினையும், (399) கடையினையும், (401) வாயிலையும் படப்பையினையும், (405) வரைப்பினையுமுடைய (411) மூதூராகிய (420) கச்சியோன் (யாவனெனில்) - கை வள் தோன்றல் என்க.

393 - 395: காழோர் - குத்துக்கோற்காரர்: அவராவார் - யானை அடங்காது மீறப் பார்ப்பின் அதனைக் குத்தியடக்குவதற்குக் குத்துக்கோலைக் கையில் வைத்துக் கொண்டு அதன் முன் நடந்து செல்பவர், இவர்கள் - சற்றுச்சோர்ந்திருக்கும்போது யானையினருகு வந்து கவளத்தை மந்தி கவர்ந்துகொண்டு சென்றிடு மென்க. கடுஞ்சூல்-முதிர்ந்த சூல்: இனி, சூலைச்சுமக்கும்வேதனைமிக்கிருத்தல்பற்றி முதற்கருப்பத்தைக் கடுஞ்சூல் என்றலுமுண்டு: கடுஞ்சூல் மந்தி யாதலால் அதனிடத்து இரக்கங்கொண்டு அது கவளத்தைக்கொண்டுபோகவும் ஒன்றுஞ் செய்யாது பார்த்திருக்கின்றனர், களிற்றுக்குக் கவளங் கொடுப்போர் முதலியோர். மிதிகவளம் என்றதனால், பிசைந்து கொடுக்க முடியாதவாறு கவளம் மிக்கிருத்தல் பெறப்படும். முறித்துக்கொண்டு செல்ல முடியாதபடி கந்து வயிரமா யிருத்தலால், களிற்றின் கதனை அது அடக்குவதாகும். (397) தேர்கள் சென்று சென்று தெரு குழியுண்டாகப் பெற்றுள்ளது; (இடைவிடாது வண்டிகள் செல்லும் பாட்டைகளில் சக்கரங்கள் செல்லுகின்ற தடம், குழிந்து தோன்றுவது இயற்கை யாதலறிக.) 399 - 400: ஆங்குள்ள கடையின் தன்மை கூறும்: 400-401: வழங்குநர்த்தடுத்த

அடையாவாயில் என்றது - இந்த உபகாரியே அடைந்தார்க்கு வேண்டுவன மனம்நிறையக் கொடுத்தலால், இவனை விட்டு வேறெவரிடத்தும் நசையுடையராய் எவரும் போகாமையால், இவனுடைய அடையாத வாயில் வேறே கொடுப்பவரைக் கொடுக்கவொட்டாமற் செய்வதாகும். இங்ஙன் இந்த உபகாரியின் கொடைச்சிறப்பைக் கூறிய திறன் கருதற்பாலது. வழிப்போவாரைப் போகவொட்டாமற் செய்வது எனினுமாம். 403 - 404: கச்சிநகரம் நான்முக னொருவற்பயந்த தாமரைப்பொகுட்டைப் போலும் என்றார்: இவ்வுவமை கூறியது-பழமையும் சிறப்பும் தூய்மையும் தோன்றுவதற்கு. (404) ‘தோன்றி’ என்ற வினையெச்சம், (405) ஓங்கிய என்ற பெயரெச்சத்தைக்கொண்டு முடியும். 407 - 411: கோளியுள் பலா மீக்கூறப்படுதல்போல மலர் தலையுலகத்து விழவினால் மேம்பட்டதெனக் கூறப்பட்ட மூதூர் என்க. 412-414: ஈர்த்துச் செல்லும் யானைப்பிணத்தின் வெண்கோட்டோடு கூடிய குருதி, பிறையைச் சூடிய செவ்வானத்தை யொக்குமென்க. 417 - 420: கச்சியோன் பகைவரை வென்று ஆரவாரித்துநிற்பதற்கு ஐவராகிய பகைவென்று அசுவத்தர்மன் ஆரவாரித்து நின்றமை உவமையா மென்பர். ஐவர்-சேரர் சோழர் பாண்டியர் சளுக்கியர் கங்கர் என்பர். ஐவர்போலத் திரையன் இருக்கின்றான் என்று உரைகூறின், உவமானமும் உவமேயமும் எண்ணால் மாறுபடுதலால் பொருந்தாதாம்.

421 - 440: இவ்வடிகள் - வண்மையையுடைய தோன்றல் கச்சியிலுள்ளான் என்று கூறிய ஆற்றுப்படுப்போன், அந்தக் கச்சியில் அவன் இருக்குமிடத்திற் குறுகவேணுமென்று கூறத் தொடங்கி, அவன் இருக்கும் அரண்மனை இன்னபடியுள்ளதென்று கூறுகின்றான்:

நச்சிச் சென்றோர்க் கேம மாகிய
அளியுந் தெறலு மெளிய வாகலின்
மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோரும்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோரும்
கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்னர்
இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகு மிரியன் மாக்கள்
ஒருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்கும்

கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்து
இறையுறை புறவின் செங்காற் சேவல்
இன்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்

(இ - ள்.) (421) நச்சி சென்றோர்க்கு - (தன்னிடத்து) விரும்பி வந்தவர்க்கு, ஏமம் ஆகிய - பாதுகாவலாகவுள்ள, (422) அளிஉம் - பாதுகாப்பும், தெறல்உம் - அழிப்பும், எளிய ஆகலின் - (தனக்கு) எளியவாய் நடக்கையினாலே, (423) மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட - (தன்னுடனே) போர் புரிந்தவரின் தேசத்திலுள்ள மன்றுகள் பாழாய்விடவும், (424) நயந்தோர் தேஎம் நன் பொன் பூப்ப-(தன்னை) விரும்பியிருந்தோர் தேசம் திருமடந்தையாற் பொலிவுபெற்றிருக்கவும்,—(425) நட்பு கொளல் வேண்டி நயந்திசினோர்உம்-(தம்மாற் போர் செய்ய முடியாதென்று) உறவுகொள்ளுதலை விரும்பி (அவனை) விரும்பினவர்களும், (426) துப்பு கொளல் வேண்டிய துணை இலோர் உம் - (அவன் பகையை யழிக்கவல்ல) வலியை (த் தமக்கு)ப் பெற வேண்டின (வேறோர்) உதவியில்லாதவருமாகி,—(427) கல் வீழ் அருவி கடல் படர்ந்தாங்கு - மலையினின்றும் விழுகின்ற அருவி (அம்மலையிலுள்ள பண்டங்களை வாரிக்கொண்டு) கடலுக்குக் கொடுப்பதாகச் சென்றாற்போல, (428) பல் வேறு வகையின் பணிந்த - பலவாகிய வேறு பட்ட (திறைகளின்) கூறுபாட்டோடே சென்று வணங்கின, மன்னர் - அரசர், - (429) இமையவர் உறையும் சிமையம் செவ் வரை - தேவர்கள் வாழும் உச்சியையுடைய அழகிய இமயமலையின், (430) விளங்கு சுடர் நெடுங் கோடு-விளங்குகின்ற ஒளியையுடைய நெடிய சிகரத்தினின்றும், (431) பொன் கொழித்து இழிதரும் - பொன்னைக் கொழித்துக் குதிக்கும், (430) வெள் திரை இழித்த - (கடலின்) வெள்ளிய திரையைக் இழித்துச் சென்ற, (431) போக்க அரு - கடத்தற்கு அரிய, கங்கை - கங்கையின், (432) பெரு நீர் - பெரிய நீரை, போகும் - கடந்துபோகின்ற, இரியல் மாக்கள் - நிலைகெடுதலையுடைய மாக்கள், (433) ஒரு மரம் - தோணியை, பாணியில் - வருங்காலத்தைப் பார்த்திருந்து, தூங்கி ஆங்கு - சோர்ந்து நின்றாற்போல, - (434) தொய்யா வெறுக்கையொடு - கெடாத (யானை முதலிய) அழியாதசெல்வங்களோடே, துவன்றுபு - நெருங்காநின்று, குழீஇ - திரண்டு, (435) செவ்வி பார்க்கும் - காலம் பார்த்திருக்கும், செழு நகர் முற்றத்து - வளவிய நகரத்தின் முற்றத்தினையுடைய, (436) பெரு கை யானை கொடு தொடுபடுக்கும் - பெரிய கையையுடையயானைக்கு வளைந்து கிடக்கும் பூணைச் சேர்க்கின்ற, (437) கரு கை கொல்லன் - கரிய கையினையுடைய கொல்லன், இரும்பு விசைத்துஎறிந்த - இரும்பை வேகங்கொண்டு மோதின, (438) கூடம் - சம்மட்டியினின்றுந் தோன்றுகிற, திண் இசை - வலிய ஓசையை, வெரீஇ - அஞ்சி, மாடத்து - மாடத்தினிடத்து, (439) புறவின் - புறாவினுடைய, செங் கால் சேவல் - சிவந்த காலையுடைய சேவல், (440) இன் துயில் இரியும் - இனிய

துயிலை நீங்குகின்ற, (439) இறை உறை - அரசன் தங்குகின்ற, (440) பொன் துஞ்சு வியல் நகர் - திருத்தங்குகின்ற பரப்பினையுடைய அரண்மனையிலே, (எ - று.)

(421) நச்சிச் சென்றோர்க்கு ஏமமாகிய (422) அளியினால் (424) நயந்தோர் தேஎம் நன் பொன் பூப்ப, (422) தெறலினால் (423) மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்படுமெனக. (423) பாழ்படவும் (424) பூப்பவும், (427) படர்ந்தாங்கு (428) பணிந்த மன்னர், எனக. மன்னர் பணியக் காரணம், பாழ்படவும் பூப்பவுஞ் செய்தல், (428) மன்னர், (432) இரியன் மாக்கள் (433) தூங்கியாங்குத் (434) துவன்றுபு குழீஇ, (435) செவ்வி பார்க்கும் முற்றத்தையுடைய (440) நகர் எனக.

(420) நச்சிச் சென்றோர்க்கு அளி ஏமமாகும் எனக: ஏமமாகிய என்பதை, தெறலோடும் சேர்க்கவுமாம். அளியும் தெறலும் என்று கூறிய முறைக்கு மாறாக, மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட, நயந்தோர் தேஎம் நன்பொன் பூப்ப என இயைவது, எதிர்நிரல்நிறைப் பொருள்கோள். 425- 428: மலையிற் பொருள்களை வாரிக்கொண்டு யாறு கடலை நோக்கிப் போனாற் போல் அவ்விடத்திலுள்ள பொருள்களை வாரிக்கொண்டு நயந்திசினோரும் துணையிலோருமாகிய மன்னர் பல் வேறுவகையிற் படர்ந்துபணிவரெனக.429-முதல் 435-வரையில் அவ்வாறு பணிந்த மன்னர், தோற்றோடும் மாக்கள் பெருநீர்க் கங்கையைக் கடந்து செல்லுதற்கு அதன் கரையில் தோணிவருங்காலம் பார்த்திருந்து சோர்ந்திருந்தாற்போலத் தொய்யாவெறுக்கையொடு துவன்றுபு குழீஇச் செவ்வி பார்த்திருக்கப் பெற்றது முற்றம் என்று, அரண்மனைமுற்றத்தைக் கூறியவாறு. இனி, 440 - வரையில் அவ்வாறான முற்றத்தைக் கொண்ட அரண்மனையின் வருணனை கூறப்படும்: யானைதந்தத்துக்குப் பூண்கட்டுங் கொல்லன் இரும்புப் பூணைச் செய்வதற்காகக் கூடத்திலிட்டு இரும்பை விசைத்து எறியும்போது அங்குத்தோன்றும் பேரொலியால் புறவின்சேவல் இன்துயிலிரியப்பெறுமெனக: அன்றியும், இறைக்கு உறைவிடமாகித் திருமகள் தங்கப் பெற்ற பரப்பையும் உடையது,அவ்வரசனது அரண்மனையெனக. (439) இறையுறை (440)நகர், (438)இசைக்கு வெரீஇப் (439) புறவின் சேவல் (440) இன்துயில் இரியும் நகர், பொன் துஞ்சுநகர் என இயையும்.

441 - 447: இவ்வடிகளால், ஆற்றுப்படுப்போன் அரண்மனையிலிருக்கும் அவ்வரசனைக் குறுகவேணுமென்கின்றான்:

குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
இடைத்தெரிந் துணரு மிருடீர் காட்சிக்

கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்து
உரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகி,

(இ - ள்.) (441) குண கடல் வரைப்பின் - கீழ்கடலாகிய எல்லையிடத்து, முந்நீர் நாப்பண்-கடலின் நடுவிலே, (442) பகல் செய் மண்டிலம் - பகற்பொழுதைச் செய்கின்ற சூரியமண்டலம், பாரித்தாங்கு - (தன் கிரணங்களைப்) பரப்பினாற்போல, - (443) முறை வேண்டுநர்க்கு உம் - (வலியரால் நலிவெய்தி) நீதிமுறையை வேண்டினவர்க்கும், குறை வேண்டுநர்க்குஉம் - (வறுமையடைந்து) தமக்கு ஆகவேண்டிய காரியத்தை விரும்பினவர்க்கும், (444) வேண்டுப வேண்டுப - (அவரவர்) வேண்டினவற்றை, அருளி-தந்து, —(445) இடைதெரிந்து உணரும்-நடு நிலையைஆராய்ந்து அறிகின்ற, இருள் தீர் காட்சி-மயக்கந்தீர்ந்த அறிவோடு கூடி, (444) வேண்டினர்க்கு - விரும்பியவர்க்கு, (446) கொடை கடன் இறுத்த -கொடையாகிய கடனை முடித்த, கூம்பா உள்ளத்து - குவியாத நெஞ்சத்தோடே, (447) உரும்பு இல் சுற்றமொடு - கொடுமையில்லாத மந்திரச்சுற்றத்தோடே, இருந்தோன் - இருந்தோனை, குறுகி - அணுகி, - (எ - று.)

441 - 444: சூரியன் இருளைக் கடிந்து முறைவேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் வேண்டுவன வேண்டுவன முடித்துக் கொடுத்தலால், அஃதனை உவமித்தார்: போது விடியாவிடின் எக்காரியமும் நிறைவேறுதற்கு அருமைப் படுதலால், ஞாயிறு வேண்டுவன முடித்துக் கொடுப்பதாதலை யறியலாம். 445: இவ்வடி, அவ்வரசன் நடுவுநிலையை யறிந்துணருமாறு கூறுவது. 446: இவ்வடி, மனத்தில் உலோபகுணமின்றிக் கொடுக்குந் தன்மை பூண்டிருத்தலைக் கூறும். 447: இவ்வடி, குறுகவேண்டுமரசன் மந்திரச்சுற்றத்தோடு இருத்தலைத் தெரிவிக்கும்.

448-463: இவ்வடிகளால், ஆற்றுப் படுப்போன், ஆற்றுப்படுத்தப்படுபவன் இறையனைக் குறுகினபின் துதித்து யாழ்வாசித்துக் கைதொழுது பழிச்சுதலாகிய செய்யவேண்டிய செயலைக் கூறுகின்றான்

பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக!
மள்ளர் மள்ள! மறவர் மறவ!
செல்வர் செல்வ! செருமேம் படுந!

வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும! வாழிய நெடிதென
இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி

(இ-ள்.) '(448) பொறி வரி - புள்ளியையுடைய வண்டுகளை (மத நீர்ப்பருகுமாறு) கொண்டுள்ள, புகர்முகம் - யானையைத் தாக்கிய,— வயமான்-சிங்கம், (449) கொடு வரி குருளை - வளைந்த வரியினையுடைய புலிக்குட்டியை, கொள - பற்றிக் கொள்ளுதற்கு, வேட்ட ஆங்கு - விரும்பிய அவ்வகைபோல,—(450) புலவர் பூண் கடன் ஆற்றி -புலவர்கட்கு அணிகலமாகிய கொடுக்கவேண்டுமவற்றைக் கொடுத்து, பகைவர் (451) கடி மதில் எறிந்து - பகைவரது காவலையுடைய மதிள்களை யழித்து, குடுமி கொள்ளும் - (அங்கிருந்த அரசருடைய முடிக்கலம் முதலியவற்றை வாங்கிக்கொண்டு) வீர முடி புனைகின்ற, (452) வெற்றி அல்லது - வெற்றியை விரும்புவதல்லாமல்,—வினை உடம்படினும் - (அம்மதிலரசர்) சந்து செய்தற்கு உடம்பட்டாராயினும், (453) ஒன்றல் செல்லா - (அதற்கு மனம்) பொருந்துதல் நிகழாமைக்குக்காரணமாகிய, உரவு - (உலகெங்கும்) பரக்கின்ற, வாள் - வாளையுடைத்தாகிய, தட கை - பெருமையையுடைய் கையினையும், (454) கொண்டி உண்டி - (பகைப்புலத்துக்) கொள்ளையாகிய உணவினையுமுடைய, தொண்டையோர் மருக - தொண்டையினரின் குடியில்தோன்றியவனே! (455) மள்ளர் மள்ள - வீரர்க்கும் வீரத்தைச் கொடுக்கின்றவனே! மறவர் மறவ-கொடியோர்க்குங் கொடியவனே! (456) செல்வர் செல்வ - செல்வமுடையோர்க்குங் கொடுக்கக்கூடிய செல்வனே! செரு மேம்படுந - போர்த் தொழிலிலே மிக்கவனே!—(457) வெள் திரை பரப்பில் - வெள்ளிய திரையினையுடையகடலிலே சென்று, கடு சூர் கொன்ற-கடிய சூரபதுமனைச்சங்காரஞ் செய்த, (458) பை பூண் சேஎய்-பசிய பூணினையுடைய முருகனை, பயந்த - பெற்ற, மா மோடு - பெரிய வயிற்றினையும்(459) துணங்கை - (தன்னைக் குறித்துப் பேய்களாடுந்) துணங்கைக் கூத்தையுங் கொண்ட, அம்-அழகினையுமுடைய, செல்விக்கு- பார்வதி தேவிக்கு, அணங்கு - பேய்மகள், நொடித்தாங்கு - நொடி சொன்னாற்போல, (460) தண்டா ஈகை நின் - அமையாக் கொடையினையுடைய உனது, பெரும் பெயர் ஏத்தி - பெரிய பெயருட் சிலவற்றைச் சொல்லிப் புகழ்ந்து, (461) வந்தேன்...: பெரும - பெருமானே! நெடிது வாழிய - நெடுங்காலம் வாழ்வாயாக,' என - என்று சொல்லி, (462) இடன் உடை பெரு யாழ் - (தனக்குக் கூறுகின்ற இலக்கணங்களைத்) தன்னிடத்தேயுடைய பெரிய யாழை, முறையுளி கழிப்பி- (வாசிக்கும்) முறையாலே வாசித்து, (463) கடன் அறி மரபின் - (முற்படக் கண்

டால் செய்யவேண்டிய) கடமையையறிந்த மரபோடே, கைதொழூஉ - கையால்தொழுது, பழிச்சி - வாழ்த்திநிற்க,—(எ - று.)

448 - 451 : யானையைத் தாக்கிய சிங்கத்தின் குட்டி, புலிக்குட்டியையும் கொள்ள விரும்பியது போல, சிங்கக் கொடியையுடையவனான தொண்டைமான் இளந்திரையனும் தன் தாதையைப் போலவே பெருவீரனாகி, பகைவரான யானைக் கொடியையுடைய கங்கரை வென்று புலிக்கொடியையுடைய சோழவரசனை வெல்லுதற்குச் செல்லுபவனென்பது இங்குத் தொனிக்குமென்ப. கடிமதிலை யெறிந்து குடுமிகொள்ளும் வென்றி கொண்டுள்ளானென்க. கொடுவரி வேங்கைக்கே யுள்ளதனால், இதற்கு வேறுபொருளுரைத்தல் பொருந்தாது: "இரும்புலிகொன்று பெருங்களிறடூஉம், அரும் பொறிவயமானனையை" என்ற பதிற்றுப் பத்தை ஒருசார் ஒப்பு நோக்குக. திரையன் - புலவர்க்குப் பூணைக் கொடுத்தலைக்கடமையாக் கொண்டுள்ளானென்பது, 'புலவர்பூண் கடனாற்றி' என்பதன் பொருள்; இது-இடைப்பிறவரல். பகைவர்மதிலை யழித்து அங்கே யிருந்த மன்னவருடைய முடிக்கலம் முதலியவற்றை வாங்கிக்கொண்டு வீரமுடிபுனையும்வெற்றி, **மண்ணுமங்கலம்** எனப்படும். "இகல் மதிற்குடுமி கொண்ட மண்ணுமங்கலம்" என்று தொல்காப்பியத்துப் புறத்திணையியலில் வருவது காண்க. 451 - 454 : பகைவென்று அவர் முடிக்கலம் வாங்கித் தான் புனைதலல்லது சந்து கொள்ளுமாறு மாற்றரசர் வந்தாராயினும் அதற்கு இளந்திரையன் உடன்படான்: போரில் வாள் பரக்குமாறு பொருது அப்பகைவரின் உண்டியைக் கொள்ளைகொள்ளும் திண்மையுடையான், இவ்விளந்திரையன் என்க. துரோணவமிசத்தான் இவன் என்று கொள்பவர் துரோணர் துருபதமன்னனை வென்று வேண்டவும்அவனோடு சந்தி செய்துகொள்ள விரும்பாது அகிச்சத்திரமென்றபகுதியைஆண்டமை மகா.பாரதத்திற் பிரசித்தமாதலால், அம்மரபிற்கு ஏற்பவே இத்திரையனுக்கு மறத்திறம் ஏற்பட்டமை கூறிற்றென்ப. 457 :-கடலிற்புக்கு ஒளித்த சூரபதுமனை அங்குச்சென்று முருகக் கடவுள் கொன்றமை, திருமுருகாற்றுப்படையிலுங் கூறப்பட்டது. 459 - 460 : பைம்பூட் சேய் - பொற்பூணைப் பூண்ட இளம் பிராயத்தே வெற்றிபெற்ற சேய் என்க. பேய்மகள் துணங்கையாட இறைவி பார்த்திருப்பள்: அவ்விறைவிக்குப் பேய்மகள் நொடி சொன்னாற்போல நான் உன் பெரும் பெயருள் சிலவற்றை யேத்தினேனென்க. நொடி - புதுமையான விஷயம் : இறைவி எல்லாமுணர்ந்தவளாதலால், பேய்மகள் சொல்லும் நொடியால் தேவிக்குப் புதிதாக அறியவேண்டியது ஒன்றுமிராது: அதுபோல, இவனது பெரும்பெயருட் சில கூறுவதால், இளந்திரையனுக்கும் புதிதான சிறப்பு ஒன்று மில்லையென்க. 461 : 'பெரும வாழிய நெடிது' என்பதுவரை ஆற்றுப்படுத்தப் பட்டான் செல்லப் போகின்ற உபகாரியை வாழ்த்தவேண்டிய வகை. 448: புகர்முகம் - யானை : வேற்றுமைத்தொகையன்மொழி. 462: முறையுளி, உளி - மூன்றும்வேற்றுமைச்சொல்லுருபு. 463: பழிச்சி - பழிச்ச: எச்சத்திரிபு.

464-479: இவ்வடிகளால், ஆற்றுப்படுப்போன், அந்தவள்ளல் உடுக்க உடை கொடுத்து அமுதூட்டுதலாகிய உபகாரஞ்செய்யும் வகையைத் தெரிவிக்கின்றான்.:

நின்னிலை தெரியா வளவை யந்நிலை
நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
ஆவி யன்ன வவிர்நூற் கலிங்கம்
இரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
அரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்கல்
அருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசில்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனா விருப்பிற் றானின் றூட்டி,

(இ - ள்.) (464) **நின் நிலை தெரியா** *அளவை* - உன்னுடைய நிலைமை [கலையளவு] தெரிவதற்கு முன்னமே, *அ நிலை* - (நீ நின்ற) அந்த நிலையிலே, (465) நாவல் அம் தண் பொழில் - நாவலாற் பெயர் பெற்ற அழகினையுடைய குளிர்ந்த உலகமுழுவதிலும், **வீவு இன்று விளங்க** - கேடு இல்லாமல் விளங்கும்படி, (466) நில்லா உலகத்து - (யாக்கை) செல்வம் முதலிய நிலையில்லாத உலகத்திலே, **நிலைமை தூக்கி** - நிலைபேறுடைய புகழை (நாம் பெறுதல் நன்று என்று) ஆராய்ந்து, (467) *அ நிலை* - (முற்பட நீ நின்ற) அந்தச் சேய்நிலத்தினின்று, *அணுகல்* **வேண்டி** - (தன்னை) அணுகுதற்கு விரும்பியழைத்து, **நின் அரை** - உன்னுடைய அரையிற்கிடந்த, (468) பாசி அன்ன - கொட்டைப் பாசியின்வேரை யொத்த, **சிதர்வை** - சிதரின சீரையை, **நீக்கி** - போக்கி, (469) *ஆவி அன்ன அவிர் நூல்* **கலிங்கம்** - பாலாவியையொத்த விளங்குகின்ற நூலாற் செய்த ஆடைகளை, (470) **இரு பேர் ஒக்கலொடு** - கரிய பெரிய சுற்றத்தோடே, ஒருங்குடன் உடீஇ - ஒருசேர உடுக்கப்பண்ணி, (471) கொடு வாள் **கதுவிய** - வளைந்த அரிவாளைப் பற்றுதலாலான, வடு - தழும்பு, ஆழ் - அழுந்தின, நோன் **கை** - வலிய கையினையுடைய, (472) வல்லோன் - மடையன், அட்ட - சமைத்த, பல் ஊன் கொழு குறை - பல இறைச்சியிற் கொழுவியதசைகளும், (473) அரி செத்து - அரிதல்தொழிலாலான ஈரம் போக்கக்கருதி, உணங்கிய - உலர்த்திய, பெரு செந் நெல்லின் - பெரிய செந்நெல்லினுடைய, (474) தெரி

கொள் - பொறுக்கிக்கொண்ட, அரிசி - அரிசியாலாக்கின, திரள் - திரண்ட, நெடு புழுக்கல் - இடைமுறியாத சோறும், (475) அருங்கடி தீ சுவை அமுதொடு - (பெறுதற்கு) அரிய மிகுதியையுடைய இனிய சுவையினையுடைய கண்டசருக்கரை முதலியவற்றோடு, பிறஉடம்-கூறு தொழிந்தனவும், (476) விருப்பு உடை மரபின் - விருப்பமுடைத்தாகிய முறைமையினையுடைய, கரப்பு உடை அடிசில்-(மேலேமூடுவதனால்) பாதுகாத்தலையுடைய அடிசிலை,(478)மீன் பூத்து அன்ன வான் கலம் பரப்பி-நட்சத்திரங்கள் தோன்றினாற் போன்ற வெள்ளிய கலங்களைப் பரப்பி, (478) மகமுறை மகமுறை நோக்கி - (நும்து) பிள்ளைகளை(த் தன்) பிள்ளைமுறைமை தோன்ற (அவ்வளவு அன்போடு) பார்த்துநின்று, முகன் அமர்ந்து-முகம் பொருந்தி, (479) ஆனா விருப்பில் தான் நின்று - அமையாத அன்புடனே தான் இருந்து, ஊட்டி - உண்ணப்பண்ணுவித்து,—(எ - று.)

464 - 479: இவ்வடிகள் - பரிசிலுக்குச் செல்லும் பாணனுடைய கல்வியறிவளவைக் கண்டறிவதற்கு முன்னமே இளந்திரையன் தான் உலகத்திற் பெரும்புகழ் பெற விரும்பி, வந்தவரைச் செம்மையில் நின்றுந் தன்னை அணுகுமாறு அழைத்து, (இட்டியதும்), அவர்உடுத்துள்ள பாசிவேர்ப் போலும் சிதர்வையை நீக்கி, ஒக்கலொடு கலிங்கம் ஒருங்குடலுடீஇ, கொழுங்குறையும் புழுக்கலும் அமுதொடு பிறவுமாகிய அடிசிலை வான்கலம் பரப்பி, மகமுறை மகமுறை நோக்கி, முகனமர்ந்துஊட்டியமையைத் தெரிவிக்கும்.

465 : புகழுடையோர் இருப்பதனால்தான் உலகத்திற்கு விளக்கமுண்டாகுமென்ற கருத்தால், "நாவலந்தண்பொழில் வீவின்று விளங்க" என்றது. ஜம்பூத்வீபமெனப் படுதலால், 'நாவலந்தண்பொழில்' என்றார். 466:-நிலைமை - நிலையாக நிற்குந் தன்மை: அதாவது-புகழைப் பெற்றிருக்கை: "ஒன்றா வுலகத்துஉயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பதொன்றில்," "நிற்பதேதுகொல் நீடிசையொன்றுமே நிற்கும்" என்பவை முதலியன காண்க. 468:சிதரின [சிதர்தல்-நைந்து போதல்] சீரைக்கு, கொட்டைப் பாசியின் வேர் உவமை. 469: மெல்லிய வெள்ளிய ஆடைக்குப் பாலாவி உவமை கூறப்படுதலை "பாலாராவிப் பைந்துகில்" என்ற இடத்துங் காண்க. 470 "ஒருங்குடலுடீஇ" என்று இருப்பின் நலமென்றும், 'ஒருங்கு' 'உடன்' என்று ஒருபொருட்பலசொல் வேண்டுவதில்லை யென்றும் ஒருசாரார் கூறுப. 471: பலமுறையும் அறுத்தலால், 'வடுஆழ்கை' என்றது. கதுவுதல் - கைக்கொள்ளுதல் : சிதைத்தலெனினுமாம் : மன்னெயில் கதுவுமதனுடை நோன்தாள்" எனவருவதும் காண்க.472:வல்லோன்-வல்லபன் என்று வடமொழியில் சமையற்காரனுக்கு உள்ள பெயர், இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. 473 - 474: அரி செத்து - சூரியனை ஒத்துஎன்று பொருள் கூறி, செந்நெல்லுக்கு ஞாயிறு நிறத்தால் உவமையென்பர், நச்சினார்க்கினியர்: இனி, அரி செத்து என்பதற்கு - உவமை ஒழிந்து என்றுமாம். அரி செய்து என்று பாடமாயின், அரிதலைச் செய்து

என்க. செந்நெல்லின் முழு அரிசியைப் பொறுக்கி யாக்கின சோறு என்க. 475: அருங்கடித் தீஞ்சுவையமுது என்றது - அக்காரவடிசில் போன்ற இனிய தின்பண்டங்களையெல்லாம். 476: கரப்பு - பருப்பு பால் அக்காரவடிசில் முதலியவற்றில் ஆடைபோற் படிவது. இது, தலையாப்பு எனவும் வழங்குமென்ப : இங்குச் சோற்றின்மேல் மறையு மாறு இடப்படும் பருப்பு கறி முதலியவற்றைக் காட்டும். 474 - 479: சோறு முதலியவற்றைக் கலத்திற் பரப்பி மகவின் முறைமை பாராட்டி அன்போடு இனிது நோக்கி இளந்திரையன் உண்பிப்ப னென்க. பரப்பிய வான் கலத்திற்கு வானத்திற் பூத்த மீன் உவமை.

480 - 493:- இவ்வடிகளால், விறலியர்க்குப் பொன்மாலையணியக் கொடுத் தும், பாணற்குப் பொற்றாமரை சூட்டியும் நான்கு குதிரைகளையுடைய பொற்றே ரைக் கொடுத்தும் இளந்திரையன் மனநிறைவுபெறாமல் பின்னும் போரில் வென்ற குதிரைகளையும் சேனைகளுடனே கொடுத்து, மற்றும் பரிசில் தருமாற்றை ஆற் றுப்படுப்போன் கூறுகின்றான்:

மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கும்
ஆடுவண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
உரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயற் றுளியின் மின்னு நிமிர்ந்தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
அரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்து
ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழித்த
இசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில்:

(இ - ள்) (480) மங்குல் வானத்து - திசைகளையுடைய [கவிந் துள்ள] வானத்திடத்தே யுதித்த, திங்கள் - சந்திரனை, ஏய்க்கும் - ஒத்திருக்கின்ற (481) ஆடு வண்டு இமிரா - உலாவும் வண்டுகள் ஒலியாத, அழல் அவிர்-நெருப்பிடத்தே கிடந்து விளங்கின, தாமரை- பொற்றாமரையை,(482 நீடு இரு பித்தை - நீண்ட கரிய மயிரிடத்தே, பொலிய சூட்டி-அழகு பெற அணிவித்து,—(483) உரவு கடல் முகந்த - உலாவுகின்ற கடலிடத்தே முகந்த, பருவம் வானத்து - மழைக்காலத்து மேகத்தினின்றும், (484) பகல் பெயல் துளி யின் - பகற்காலத்தே பெய்தலையுடைய துளியின்கண்ணே, மின்னு நிமிர்ந்தாங்கு - மின் ஓடினாற்போல, (485) புனை - வாரிஒழுங்காக் கின, இரு கதுப்பு அகம் - கரிய மயிரினிடம், பொலிய-அழகு பெறும்

படி, பொன்னின் - பொன்னாற்செய்த, (486) தொடை அமை - சேரக் கட்டுதலமைந்த, மாலை - மாலையை, விறலியர் மலைய - விறலியர் சூடு மாறு (கொடுத்து),—(487) நூலோர் புகழ்ந்த மாட்சிய - குதிரை நூல் வல்லோர் புகழ்ந்த அழகினையுடையவாய், மால் கடல் (488) வளை கண்டு அன்ன - கருமையையுடைய கடலிற் சங்கைக் கண்டாற் போன்ற, வால் உளை புரவி - வெள்ளிய கழுத்தின் மயிரையுடைய குதிரைகள், (489) துணை புணர் தொழில - (தம்) இனத்தோடு ஒத்துத் தொழில்செய்வனவான, நால்கு - நான்கை, உடன் பூட்டி - ஒரு சேரப்பூட்டி, (490) அரி தேர் நல்கிஉம் - காற்றையொத்த [விரைந்து செல்கின்ற] தேரைத் தந்தும், அமையான் -(கொடைமேல் விருப்பம்) தவிரானாய்,—செரு தொலைத்து -(தம்மோடு வந்து பொருதோருடைய) போர்களை மாளப்பண்ணி, (491) ஒன்னா தெவ்வர் - (தன்னேவலைப்) பொருந்தாத பகைவர், உலை விடத்து - முதுகிட்ட இடத்து, ஒழித்த- விட்டுப்போயினவான, (492) விசும்பு செல் இவுளியொடு - ஏற்றிழிவு களிற் செல்லவல்ல ஏறு குதிரைகளுடனே, பசு படை தரீஇ - பசிய [புதிய] சேணத்தையும் தந்து, (493) அவன் அன்றே பரிசில் விடுக்கும் - அவன் (நீ சென்ற) அன்றைத்தினமே (இவையொழிந்த) பரிசில்களையும் தருவான்; (எ - று.)

480 - 482 : பாணனுக்குப் பொற்றாமரையைத் தானே அரசன் சூட்டுவான் : அது, வானத்து உதிக்கும் நிலையிலுள்ள சந்திரனைப் போலத் தோன்றும்; (உதிக்கும் போது திங்கள் செந்நிறமாகத் தோன்றுமாதலால் உவமையேற்கும்.) 483 - 486 : விறலியர்க்குத் தானே சூட்டுவது முறையன்று ஆதலால், மன்னன் அவர்கள் சூடுமாறு பொன்மாலையைத் தருவனென்க. விறலியர் கூந்தலி லணிந்த பொன்மாலை கரிய வானத்து மின்னுமிமிர்வதை யொக்கும். துளிப்பெய்கையில் மேகம் கறுத்துத் தோன்றும். ‘மலைய' என்பதன் பின் ‘கொடுத்து' என ஒருசொல் வருவிக்க. 487 - 489 : சாலிகோத்திரமென்றும் உந்நயமென்றும் குதிரையின் இலக்கணத்தைக் கூறும் நூல்கள் உள்ளனவாகத் தெரிகின்றது. ஒரு தேரில் நான்கு குதிரைகளைப் பூட்டும்போது நான்கும் ஒத்துத் தொழில்செய்யாமல் வெவ்வேறு மனத்தனவாய்ச் செல்லின் தேர் இனிது செல்லாதாதலால் ‘துணைபுணர் தொழில' என்றார். நால்கு - பெயர்த்திரிசொல். 490 - 493 : நான்கு குதிரைகள் பூட்டிய தேரைக் கொடுத்ததோடு திருப்தியடையாமல், பகைவரிடத்துக் கவர்ந்த சிறந்த குதிரைகளையும் கொடுப்பானென்க. அரித்தேர் - பொற்றேர் என்றுமாம். ‘விசும்பு செல்' என்று பிரித்து வானத்திற் செல்லவல்ல என்றலுமாம்.

493-500: இவ்வடிகளால் பரிசில்தந்து விடுப்போன் இன்னானென்கிறான்:—

இன்சீர்க்
கின்னர முரலு மணங்குடைச் சாரல்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பின்

கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்
மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றில்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே.

(இ - ள்.) (493) இன் சீர் - இனிய தாளத்திலே, (494) கின்னரம் முரலும் - கின்னரமென்னும் பறவைகள் பாடுகின்ற, அணங்கு உடை சாரல் - தெய்வங்களையுடைய மலைச்சாரலிடத்து, (495) மஞ்ஞை ஆலும் - மயில்கள் ஆரவாரிக்கின்ற, மரம் - மரங்கள், பயில் - நெருங்கின, இறும்பின் - இளமரக்காட்டினையும், (496) கலை பாய்ந்து உதிர்த்த - முசுக்கலைகள் பாய்ந்து உதிர்த்த, மலர் வீழ் புறவின் - மலர்கள் சிந்தின காட்டினையுங்கொண்ட, (497) மந்தி சீக்கும் - மந்திகள் (அவ்விடத்துக் கிடந்த) துராலை வாரப்பெற்றதும், மா துஞ்சும் - மானும் புலியும் துயில் கொள்ளுதற்கு இடனுமான, முன்றில் - முன்னிடத்தே, (498) செம் தீ பேணிய முனிவர் - சிவந்த தீயைக் கைவிடாமற் காத்துப் போந்த முனிவர், வெள் கோடு (499) களிறு - வெள்ளிய தந்தங்களையுடைய யானைகள், தரு - (முறித்துக் கொண்டு வந்து) தந்த, விறகின் - சமிதையாலே, வேட்கும் - வேள்வியைச் செய்தற்கு இடனாகி, (500) ஒளிறு - (மயிலாலுதல்முதலியவற்றால்) விளங்குகின்ற, இலங்கு அருவிய - விளங்குகின்ற அருவிகளையுடைய, மலை - மலைக்கு, கிழவோன் - ஆளும் உரிமையுடையோன்.

கச்சியோனாகிய இளந்திரையனை 'மலைகிழவோன்' என்றார்: அம்மலை, தன்சாரலிலே இறும்பினையும், புறவினையும் கொண்டதாய், தன் முன்றிலில் செந்தீப்பேணிய முனிவர் களிறுதரு விறகின் வேட்கப்பட்டு ஒளிறுவதாய், இலங்கும் அருவியையுடைய தென்க. முசுக்கலை (முசு - கருங்குரங்கின் வகை: கலை - அந்த வகையின் ஆண்) பாய்ந்து பூவை யுதிர்த்தல், முசுக்கலைக்கு இயல்பு. மந்தி சீத்தலும், பகைமையுள்ள விலங்குகள் பகைமை நீங்கித் துஞ்சுதலும், முனிவர் வேட்குமாறு சமிதையைக் களிறுதருதலும், முனிவர் உறைவிடமான நிலத்தின் தன்மையால் நிகழ்ந்தன. விறகு என்றது - முருக்கமலரின் சுள்ளியையென்னலாம்: அத்தி அரசு இவற்றின் சுள்ளியும் சிலவிடத்து உதவும்.

---

(22) புலவுவாய்ப்பாண ! (26) பெருவளனெய்தி (27) முகந்துகொண்டு (28) யாம் அவணின்று வருதும்: நீயிரும் (37) இரையற் படர்குவிராயின், (38) அவன் நிலை கேள்: நின் அவலங்கெடுக: (41) அவன்புலம், கொடியோரின்று: (42) (அப்புலத்தில்) உருமும் உரறாது: அரவும் தப்பா: (43) மாவும் உறுகண் செய்யா: (ஆகலின்) ஆங்கு (44) அசைவுழி அசைஇத் தங்கிச் (45) சென்மோ:

இரவல்! நின் உள்ளம் சிறக்க: (அங்ஙனஞ் செல்லுமிடத்துக்) (82) காட்டு இயவின், (88) குரம்பையில் (94) எயிற்றியர் (100) அட்ப் வாடுன்புழுக்கலே, (101) பெருமகளுகிய (103) வரை நாடன் சென்னிய மெனின், (104) தேக்கிலையிற் குவிக்கையினுலே,(105) (அப்)பதத்தை (104) நும் (105) கடும்பொடுபதம் மிகப்பெறுகுவிர்:(பின்)(117) அருஞ் சுரம் இறந்த அம்பர்க் (129) குறும்பிற் சேப்பின், (131) சொன்றியை (132) உடும்பின் (133)வறை காஸ்யாத்தது வயின்றொறும் பெறு குவிர்: (பின்னர்), (146) தூங்கா விருக்கை (147) முரண்தலை கழிந்த பின்றை, (154) வரைப்பின் (155) போகி, (166) குடிவயிற் சேப்பின், (168) மூரல் பாலொடும் பெறுகுவிர்: (பின்னர்), (175) இடையன் (180) பாலையை முனையின் (182) யாழிலே வாசிக்கும் குறிஞ்சியைப் (183) பறவை யோர்க்கும் (184) புலத்தை(க் கடந்து) போகி, (191) சீறூரிலே (193) வரகின் சொன்றியைப் (195) புழுக்கையட்டிப் பயில் வுற்று (196) இன்சுவையுடைய மூரலைப் பெறுகுவிர்: ஞாங்கர் (206) வன்புலம் இறந்த பின்றை (219) குடி, (254) பேரூரிலே மடி யின், (255) வல்சியை (256) வாட்டொடும் பெறுகுவிர்: (262) (அன்றியும்), கரும்பின் தீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்: (274) (பின்னர்) வலைஞர் குடிவயிற் சேப்பின், (281) பிழியைச் (282) சூட்டொடு பெறுகுவிர்: (289) (பின்னர்த்) தீப்படமலர்ந்த (290) பூவை ஓம்பிக் (295) குறுநரிட்ட மலரைப் (296) பிணையினிர் கழிமின்: (301) மறை காப்பாளருறைபதிச் சேப்பின் (304) மகடூஉ அட்ட (305) வத்தத்தைச் சுடர்க் கடையிலே (306) மாதுளத்துப் (307) போழொடே (310) காடியோடே பெறுகுவிர்: (319) (பின்னர்) நீர்ப் பெயரெல்லை போகிப் (336) பட்டினமருங்கின் அசையின், முட்டுப்பாடு இன்றாக (345) கொழுங்கணத்தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்: (351) (பின்னர்த்) துறை பிறக்கொழியப் போகி, (355) தனிமனை சேப்பின், (361) (ஆண்டைத்) தீம்பல்தாரம் முனையின், சேம்பின் (362) முதிர் கிழங்கு ஆர்குவிர்: (368) (இவற்றை இவ்வழியின் கண்ணே பெற்றுப் (பின்னர்ப்) பன்மரநீளிடைப் போகி, (371) நாடுபல கழிந்த பின்றை, (373) பள்ளியமர்ந்தோன் ஆங்கண் (380) பொழில் தொறும் (382) தொலைச்சி (383) மரீஇ, (387) மகளிரொடு பகல்விளையாடி, (390) அசைஇ, (391) கடவுள் வாழ்த்தி (392) இயக்கினிர் கழிமின்: (இங்ஙனம் சென்று),—(414) குருதியீர்ப்பவும் (415) ஈர்ஐம்பதின் மரும் அவியவும் (416) அமர் கடந்த (417) ஐவர் போலும் (419) (ஐவரைவென்று) ஆர்த்து, (411) மூதூராகிய (420) கச்சியிலுள்ளான் கைவண் தோன்றல்: (அவ்வூரிலே), (428) பணிந்த மன்னர் (434) தவன்றுபு குழீஇச் (435) செவ்வி பார்க்கும் முற்றத்தினையுடைய (440) நகரிலே [அரண்மனையிலே] (442) பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு (444) அருளி (447) இருந்தோனைக் குறுகி, '(454) 'தொண்டையோர் மருக! (455) மள்ள! மறவ! (456) செல்வ! செரு மேம்படுந! (461) பெரும! (459) செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு (460) நின் பெயரேத்தி, (461) வந்தேன்: வாழிய' எனச் சொல்லி, (462) கழிப்பி, (நீ) (463) பழிச்சி (நிற்க), (464) நின்னுடைய கலை

களின் அளவைத் தான் தெரிவதற்கு முன்னமே, (500) (அம்) மலை கிழவோன், (465) நாவலந் தண் பொழில் வீவின்று விளங்கும்படி, (466) நில்லாவுலகத்து நிலைமையைத் தூக்கி, (467) அந்நிலை யணுகல் வேண்டி, (468) சிதர்வை நீக்கி, (470) உடீஇ, (472) குறையும் (474) புழுக்கலும் (475) அமுதொடு பிறவுமாகிய (476) அடிசிலை, (477) கலங்களைப் பரப்பி, (478) முகனமர்ந்து மகமுறை நோக்கித் (479) தான் (முன்) நின்று ஊட்டி, (481) (நுமக்குத்) தாமரை (482) பொலியச் சூட்டி, (486) விறலியர் (485) கதுப்பகம்பொலிய (486) மாலை மலையக் கொடுத்து), (490) அரித்தேர் நல்கியும் அமையானாய் (492) இவுளியொடு பசும் படை தரீஇ, (493) அவன்அன்றே (இவை யொழிந்த பரிசில்களையும்) விடுக்கும் என வினைமுடிவு செய்க.

இப்பாட்டில், (22) புலவுவாய்ப்பாண! (37) திரையற் படர் குவிராயின் (38) நின்னவலங் கெடுக: கேளவனிலையே: (45) இரவல! நின்னுள்ளஞ் சிறக்க: சென்மோ: (103) வரைநாடன் சென்னிய மெனின் (105) மிகப் பெறுகுவிர் என இங்ஙன் ஒருமை பன்மையோடு முடிவதை "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலையின்றே, யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" என்பதனால் அமைக்க. முக்கியத் தவனான பாணனை, விளித்து, அவனுடனிருப்போர்க்குமாகச் செய்ய வேண்டுவன கூறு தலால், இந்த ஒருமைப் பன்மை மயக்கம் வந்தது.

இதிலுள்ள உவமைகள் பின் வருமாறு :—(4 - 6) பாதிரிமாமலர் வயிற்றிடை வகுத்ததன் உள்ளகம் ╳ ஊட்டுறுபச்சை, (7-8) கமுகின் பாளைப் பசும் பூக்கரு × கண்கூடு செறி தொளை, (9) உருக்கியன்ன பொருத்துறு போர்வை, (10) சுனைவறந்தன்ன இருள் தூங்கு வறுவாய், (11) பிறை பிறந்தன்ன பின்னேந்து கவைக்கடை, (12) பணைத்தோள், (12 - 13) மடந்தை முன்கைக் குறுந்தொடி × திவவு, (14) மணிவார்ந்தன்ன மருப்பு, (15) பொன் வார்ந்தன்ன நரம்பு, (20 - 22) பழுமரந்தேரும் பறவை ╳ தாங்குநர்த் தேடித் திரியும் பாணன். (23 - 24) வறங்கூர்ந்த கானம் கல்லெனக் கருவிவானம் துளி சொரிதல் ╳ மிக்க வறுமைநிலையடைந்த தமக்கு இளந்திரையன் பெருஞ் செல்வமளித்தல், (33 - 35) வளைமீக்கூறும் வலம்புரி ╳ மூவருள்ளும் மீக்கூறும் திரையன், (47) முழவினன்ன முழுமரம், (48) எழூஉப் புணர்ந்தன்ன பரூஉக்கை, (49-50) குன்றம் மழையைச் சுமத்தல் ╳ சகடம் தொத்துளிப் பாயாலே வேயப் பெறுதல், (51 - 52) வேழக் காவலர் குரம்பை ╳ கோழிசேக்குங் கூடு, (53 - 54) முளைஎயிற்றுப் பிடி முழந்தாள் × சிறுரல், (55 - 57) நாடகமகளிர் களத்தெடுத்த விசி வீங்கு இன்னியம் ╳ கயிறு பிணித்த காடிக்கலன் (70 - 76) வம்பலர் மார்பில் வரிக்கச்சிற் பூண்ட வாள் தூங்குதல் × வரையிலே படமெடுத்த பாம்பு ஊர்வது, (75 - 77) கடம்பமர் நெடு வேள் ╳ வம்பலர்: மீளி ╳ உடம்பிடி, (77- 79) பலாமரத்து முழுமுதலிற் கிடக்கும் பலவின் பழம் ╳ மிரியற்புணர்ப் பொறை, (84 -85) பூளையம்

பைங்காய் புடை விரிந்தன்ன வரிப்புறவணில், (86) யாற்றறல் × (ஈந்தின்) வெரிந், (87 - 88) வேல் தலை × ஈந்திலையின் வைந்நுதி, ஈத்திலையால் வேய்ந்த கூரைப்புறம் × எய்ப்புறம், (100 - 105) தெய்வமடை × தேக் கிலையிற் குவித்த வாடூனும் புழுக்கலும் (109 - 110) ஆத்திப்பூ × ஏன மருப்பு, (114 - 115) தாமரைப் புல்லிதழ் × (குறுமுயலின்) நெடுஞ் செவி, (123) வரைத்தேன்புரையுங் கவைக் கடைப் புதை, (130-131) ஈந்தின் காழ் × நெல்லினவிழ், (132) மனவு × உடும்பின் சூல், (138) புலிப் போத்து × காளை, (139) செந்நாய் × கரு வில் சுற்றம், (156) புலிக்குரல் × மத்தத்தின் ஒலி, (157-158) ஆம்பி முகிழ் X உறையமை தயிர் முகிழ் (167-168) ஞெண்டின் பார்ப்பு × தினைமூரல், (182-83) குறிஞ்சிப்பண் × வண்டினிசை, (186) பிடிக் கணம் × குதிர், (187) களிறு தாள் × திரி மரம், (190 - 191) பருவவானத்துப் பாம்மை × கரு வை வேய்ந்த குடி (192-193) பூளைப் பூ × வரகின் சோற்றவிழ், (194 -195) வேங்கைப் பூ × அவரைப் புழுக்கு, (199) பிடிவாய் × நாஞ்சிலின் மடிவாய், (200) உடும்பு முகம் × முழுக்கொழு, (203 - 205) கடம்பின் நறுமலர் × குறும்பூழ்ப்பிள்ளை, (207 - 208) கொல்லன் முறி கொடிறு × அலவன் கவைத்தாள், (220 - 221) பொன்காண் கட்டளை × கண்பின் புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பு, (222) இரும்புவடித்தன்ன மடியா மென்தோல், (226 - 228) அவ்விடிக்கும் ஓசை × கிள்ளைக்குப் பகையாகிய பிராணியின்னொலி, (229-(230) குளவி × செந்நெல், (235 - 236) பூதமுடுத்த துகில் × போரைச் சுற்றிவலந்த சிலம்பி நூல், (240 - 241) தூற்றின பொலி × செம்பொன் மலை, (258 - 260) பாளி தாக்கலின் பல வேழம் கதழ்வுறுதல் × எந்திரம் சிலைத்தல், (269 - 270) பகழி × கயல், சிலை × இரு, (277 - 278) பாம்புறைப் புற்றிற் குரும்பி × நென் முளை, (285) பிரம்பு × தூண்டிற்கோல், (289 - 290) தீப்பட மலர்ந்த கடவு ளொண்பூ, (292 - 294) வானத்துக் குறைவில் × மாறுபட்ட நிறங்கொண்ட மலர்கள், (302 - 303) வட வ்வியின் விளங்குஞ் சிறுமீன் × கற்பின் நறுநுதல், (312 - 313) பொலங்குழை × சிரலிரை, (313 - 318) கருமணி போலுஞ் செச்சிலி வாயிற் கவ்விய மகரக்குழை × யவனரோதிம விளக்கு, கருவானத்துத் தோன்றும் வெள்ளி மீன், (319 - 320) பாற்கேழ் வாலுளை, (327 - 329) மகளிர் பைங்காழல்குல் நுண்டுகில் நுடங்குதல் × கொன்றை மென்சினைப் பனி தவழ்தல், (328 - 333) வான்தோய் மாடத்து (வரிப்பந்தசைஇச்) செல்லும் மகளிர் × வரைச் சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும் பீலிமஞ்ஞை, (335) முத்தவார் மணல், (346 - 348) வானமூன்றிய மதலை × விண்பொரநிவந்த மாடம், (352 - 353) யானை மருங்கு லேய்க்குந் தெங்கு, (358-359) பிடி மருப்பு × வாழைக் கூனி வெண்பழம், (363) மழை வீழ்ந்தன்ன மாத்தாட் கமுகு, (372 - 373) காந்தளஞ் சிலம்பிற் களிறு படிதல் × பாம்பணையில் திருமால் பள்ளியமர்தல், 376-379) குருகின் புன்புறப்பூ மணல் நீர்முகத்து உறைதல் × (கூவியர்) பாகொடு

பிடித்த இலை சூழ் வட்டம் பாலிற் சேர்ந்திருத்தல், (381 - 382) கழைகம்பாளையின் சூல் வயிறன்ன நீலப் பைங்குடம், (384 - 385) குழவித் திங்கள் கோள் நேர்தல் X (மகளிரின்) நுதலிற் சுறவுவாயமைதல், (386) நறவம்பூ x (மகளிரின்) கண், (388 - 389) துறக்கம் x துறை, (404 - 411) நான்முக வொருவற் பயந்த தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றும் மூதூர், (407 - 411) கோளியுள்ளும் பழமீக் கூறும் பலா X உலகத்துள்ளும் மேம்பட்ட மூதூர், (412 - 414) பிறை சூடிய செவ்வாய் அந்தி வானத்தாடு மழை x வெண்கோட்டுரும் பிணக்குருதி, (415 - 420) ஈரைம்பதின்மரும் களத்தவிய அமர் கடந்த ஐவர் உலைவிடத்து அசுவத்தாமன் ஆர்த்தல் X ஒன்னாத் தெவ்வர் ஐவர் உலைவிடத்துக் கச்சியோனார்த்தல், (427 - 428) அருவிக் கடல் படர்தல் X பணிந்த மன்னர் பல்வேறுவகையிற் படர்தல், (431-435) போரில் தோற்றோடும் மாக்கள் பெருநீர்க் கங்கையைக் கடந்து செல்லுதற்குத் தோணிவரவு குறித்துக் கரையில் காத்திருத்தல் X பணிந்த மன்னர் தொய்யாவெறுக்கையொடு முற்றத்து இளந்திரையனது செவ்வி பார்த்திருத்தல், (441 - 444) மூந்நீர் நாப்பண் பகல் செய் மண்டிலம் பாரித்தல் X சுற்றத்தாரிடையே யிருக்கும் திரையன் குறைவேண்டுநர்க்கும் முறைவேண்டுநர்க்கும் வேண்டுவன முடித்துக் கொடுத்தல், (448 - 451) யானையைப்பாய்ந்த சிங்கத்தின் குருளை அவ்யானை மத்தகத்தைக் கொள்ளுதல் x பகைவர் கடிமதிலை யெறிந்த திரையன் அவருடைய முடிக்கலம் முதலியன கொண்டு வீர முடி புனைதல், (459 - 460) செல்விக்கு அணங்கு நொடித்தல் x பாண்மகன் திரையனது பெரும் பெயரை யேத்துதல், (468 பாசியன்ன சிதர்வை, (469) ஆவியன்ன அவிர் நூற்கலிங்கம், (473) சூரியன் x செந்நெல், (477) மீன் பூத்தன்ன வான்கலம், (478) திரையன் பாணரை முகனமர இனிது நோக்கல் x பெற்றோர் மகவை நோக்கி முகனமர்தல், (480 - 481) மங்குல் வானத்துத் திங்கள் X அழலவிர் தாமரை, (483 - 486) வானத்து மின்னு நிமிர்தல் X விறலியர் கதுப்பகத்தில் பொன்தொடைமாலை யமைதல். (488) வளை கண்டன்ன வாலுளை.

(3 - 4) வேனிற்காலத்தில் பாதிரி தன் பாசிலைகளை யொழிக்குமென்பதும், (16) யாழ்வாசிப்போர் அவ் யாழை இடவயின் தழுவுவ ரென்பதும், (20) பறவைகள் பழுத்த மரத்தை நோக்கித் திரியுமென்பதும், (29 - 30) திரையன் திருமால் மரபினனென்பதும், (34 - 35) வலம்புரி, சங்கங்களில் தலைமை பெற்றதென்பதும், (39 - 43) நல்ல நாட்டில் கைப்பொருளை வெளவும் வழிபறிப்போர் இராரென்பதும், அங்கு உருமு அரவு காட்டுவிலங்கு ஆகிய இவற்றால் துன்பம் விளையாதென்பதும், (51 - 52, உமணரின் வண்டியமைப்பைச் சொல்லுமிடத்து, பாயாலே வேய்ந்த வண்டியின் கூட்டின் வாய்ப்புறத்துக் கோழிக்கூடு வைக்கப்பட்டிருக்க (53 - 58) வண்டிக் கூட்டின் வாயிலிலே துளையிட்டுச் சிறிய உரல் தூக்கப்பட்டும் வாய் விரியாதிருக்குமாறு கயிறு பிணித்தபானை வைக்கப்பெற்றும்

இருக்க, வண்டியின் மூக்கிலேயிருந்துகொண்டு உப்புவாணிக மகளிர் உப்பு வண்டிகளின் பகட்டை ஓட்டுவரென்பதும், (59 - 63) அங்ஙன் உம்மணமகளிர் வண்டி யோட்டுகையில் உம்மண மாக்கள் வேப்பிலை மிடைந்த வகை மாலையைத் தோளிலணிவரென்பதும்,(62)ஒரு சகடத்தில் பல எருதுகள் பூட்டபடுமென்பதும், (63) உம்மணமாக்கள் உம்மண மகளிர் ஓட்டும் வண்டியைக் கடையாணி கழலுதல் முதலியன நேராதபடி மருங்கிற் காப்பரென்பதும், (75) கடம்பமரம் முருகவேள் அமரும் இடம் என்பதும், பெரு வழிகளில் சுங்கம் வாங்குவ ரென்பதும், (81 - 82) கள்ளர் முதலியோரால் துன்பம் நேராவண்ணம் இடுக்கான இடங்களில் விற்படை பாதுகாக்கு மென்பதும் :

(85 - 88) அணிலொடு எலி ஆடர்மைக்காக எயிற்றியரின் குரம்பைக் கூரையின் புறம், வேல்தலை யன்ன நுதிகொள் ஈத்திலையால் வேயப்பெற்றிருக்கும் என்பதும், (89 - 90) எயிற்றியரில் மக ஈன்றவள் அம்மகவொடு மான்றோற் பள்ளியில் முடங்கிக் கிடப்பளென்பதும், (92 - 94) விளைந்து உதிர்ந்த புல்லரிசியை எறும்புகள் இழுத்துக்கொண்டு சேர்த்து வைத்த இடமறிந்து அங்கு வெட்டிக் கரம்பை நிலத்திற் புழுதியை யளைந்து அந்தப் புல்லரிசியையெடுத்தல் எயிற்றியரின் பண்பு என்பதும், (95) விளவின் தாளில் பார்வை விலங்கை யாப்பரென்பதும், (94 - 100) எயிற்றியர் மர நிழலில் நிலவுரலிலே புல்லரிசியைக் குத்தி வல்லூற்றை முகந்து தொல்லை முரவுவாய்க் குழிசியிலே முரியடுப்பேற்றி வாராது அடுவரென்பதும், (108 - 110) வேட்டை யாடுவோர் இரவில் குளத்தைச் சூழப்பறித்துள்ள குழிகளில் மறைந்திருந்து நீருண்ண ஏனம் வருவதை எதிர்பார்த்திருப்பரென்பதும், (119 - 121) எயினர் வீடுகளில் கேடகங்களோடே வேலை நிரைத்து வைத்து வில்லையுஞ் சார்த்தி வைப்பரென்பதும், (122 - 125) பின்னும் அவ்வெயினரின் வீடு ஊகம்புல்லாலான மதிலையுடையதாய் வேண்டும்போது எடுத்துக் கொள்ளுமாறு அம்புக் கட்டுகளுடனே துடியும் வீட்டுக் கூரைப் பந்தலிற் கட்டியிருக்கச் சங்கிலி பூட்டிய நாய் அங்குக் காவலாகக் கட்டியிருக்கப் பெற்றிருக்குமென்பதும், (126 - 129) எயினர் அரணம்-முள் வேலியினையும் அதனைச் சூழ்ந்த காவற்காட்டினையும் கணைய மரத்தைக் கொண்ட உட்கதவையுடைய உள் வாசலினையும் பகைவரைக் குத்துமாறு கழுக்களைக் கொண்ட வெளி வாசலையும் பெற்றிருக்குமென்பதும், (131-133) வேட்டைநாய் கவ்விவந்த உடும்பின் பொரியல் நிரம்பியதான மேட்டு நிலத்து விளைந்த நெற்சோறு அவ்வெயினர்களின்உணவு என்பதும், (139 - 146) மறக்குடிப் பிறந்த காளை விடியற்காலையில் சுற்றத்தாருடன் கேளாமன்னரின் காவலுள்ள இடத்திற் புக்குப் பசுக்களைக் கவர்ந்து வந்து கள்ளுக்கு விலையாகக் கொடுத்துத் தோப்பிக் கள்ளைப் பருகி மன்றத்து விடைகளை யறுத்துத் தின்று கூத்தாடுவனென்பதும்,

(147 - 148) முல்லை நிலத்திலே ஆட்டு மறிகள் தின்னுமாறு குடிசையின் காலினிடையிலே தழை கட்டப்பட்டிருக்கு மென்பதும்,

(149 - 150) அங்குக் கதவுகள் மூங்கிற் கழியால் கட்டப்பெற்றும் சேக்கை வரகு கற்றையால் வேயப்பெற்றும் இருக்குமென்பதும்,(151) ஆங்குக் காவலாகத் தோலைப் பாயாகக் கொண்டு முதியோன் துஞ்சுவானென்பதும், (155 - 165) இடைச்சி காலையிலெழுந்து மோர் கடைந்து வெண்ணெயெடுத்தல் முதலிய தொழிலைச் செய்து பெறும் இலாபப்பொருளுக்குக் கிளைஞரையூட்டி எருமை நல்லான் கருநாகு என்ற இவைகளையன் றிப் பொற்கட்டி வாங்கமாட்டாளென்பதும், (166-168) இடையர் குடிவயின் தங்கினால் பெறும் உணவு இன்னது என்பதும், (169 - 175) இடையனுடைய இயற்கை வருணனையும், (179 - 182) அந்த இடையனால் வேய்ங்குழலில் பாலைப்பண்ணை வாசித்து வெறுத்துக் குமிழ மரத்தின் கொம்பை வளைத்துக்கட்டின மரற்கயிற்றாலாகிய நரம்பினைக் கொண்ட வில்யாழிலே குறிஞ்சிப்பண் வாசிக்கப் பெறும் அந்த முல்லை நிலமென்பதும், (185 - 191) முல்லைநிலத்துச் சீறூர்தொழுவைக் கொண்ட எல்லைகளில் குதிர்களைக் கொண்டமுன்றிலையும் வரகுதிரிகை நட்டிருக்கும் பந்தரையும் வண்டிச் சக்கரங்களையும் கலப்பைகளையும் சார்த்துதலினாலே சுவர் தேய்ந்து புகை சூழ்ந்த கொட்டிலையும் வரகுவைக்கோலாலே வேயப்பெற்ற குடியிருப்பினையும் பெற்றிருக்குமென்பதும், (192 - 196) அங்குப் பெறக்கூடிய உணவு இன்னது என்பதும்,(196-206)முல்லையைச் சார்ந்த உழவர் குடியிருக்குமிடம் இன்னபடியிருக்குமென்பதும்,

(210 - 212) மருதவிருக்கையில் காளை எருதுகள் பொருது நிலத்தைச் சேருக்க உழமுடியாத அந்நிலத்தைக்காலால்ஒக்க மிதித்து உழவர் முடிநாற்றை நடுவரென்பதும், (215 - 219) அன்னார் கண்ணி தொடுத்துச் சூடும் வகையும், (223 - 228) கடுங்கை வினைஞரின் சிறுவர் சோற்றை வெறுத்து அவலைக்குற்ற அவ்வோசைக்குக் கிளி வெருவுமென்பதும், (230 - 241) அம்மருத நிலத்தவர் செந் நெல்லை விளைத்துக் கடாவிட்டுழக்குதல் முதலியன செய்து மலைபோல நெற்பொலியைக் குவிப்பரென்பதும், (243 - 256)நெற்கூடுகளைக் கொண்ட இல்லையும் தச்சச்சிறார்புனைந்த தேரையுருட்டிய புதல்வர் தளர் நடை வருத்தம்வீடப்பாலார்ந்து அமளித்துஞ்சும் நல்லில்லையுங்கொண்டது மருத நிலத்தைச் சார்ந்த பேரூரென்பதும் அங்குத் தங்கினாற் பெறலாகும் உணவு இன்னதென்பதும்,

(263 - 265) வலைஞர் குடியிருக்குங் குரம்பை வேழம் நிரைத்து வெண்கோடு நிரைஇத் தருப்பை வேய்ந்த குறியிறையையுடையது என்பதும்,(266-273)வலைஞர்பிள்ளைகளோடுமீன்பிடித்துக்குளக்கரைகளைக்காத்திருப்பரென்பதும், (274-282) அந்த வலைஞர் குடியிருப்பில் பிழியை மீன்சூட்டோடு பெறலாமென்பதும், (290) தாமரைப்பூச் சூடிக் கொள்ளுதற்கு உரியதன்று என்பதும்:

(297 - 301) மறை காப்பாளர்பதி, கன்றுயாத்த பந்தரைக் கொண்டு, சாணத்தால் மெழுகப் பெற்று, தெய்வங்களையுமுடைய

தாகி, கோழியும் நாயும் சேரப்பெறாமல், கிள்ளையை வேதமோதச் செய்வதென்பதும், (305 - 310) அந்தணர் பதியில் பெறக் கூடிய உணவு இன்னது என்பதும்:

(321 - 335) நெய்தனிலத்துப் பட்டினம் நாவாய் சூழ்ந்த நீர்ப் படப்பை முதலியவற்றைக் கொண்டிருக்கும் என்பதும், தொழில் செய்வார் சிறந்த பண்டகசாலைகளைக் காப்பரென்பதும், அங்கு நெல் லுழு பகட்டொடு கறவை துன்லுமென்பதும், மேழகத் தகரொடு எகினங்கொட்குமென்பதும், பரதமகளிர் மாடத்துப் பந்தசைஇ மணலிற் பொற்கழங் காடுவரென்பதும், (337 - 338) கள்விற்போர் கடையில் கொடி கட்டிப் பூவைத் தூவுதல் வழக்கமென்பதும், (342 - 345) ஏற்றைப் பன்றியைப் பிணவொடு பாயம்போகாது நென்மாவல்சி தீற்றிப் பன்னாள் குழி நிறுத்தோம்புவரென்பதும், பட்டினத்திற் பெறும் உணவு இன்னதென்பதும்,

(355 - 362) உழவர் தனிமனையிற் பெறலாகும் உணவு இன்ன என்பதும், (370 - 371) முற்காலத்து நாடுகள் இன்னபடி யிருக்குமென்பதும்,

(393 - 395) கடுஞ்சூல் மந்தி காவில் காழோ ரிகழ் பதம் நோக்கி யானைக் கவளத்தைக்கவரும் தன்மையதென்பதும், (395 - 420) கச்சி நகரின்சிறப்பும், (425-435) இளந்திரையனுடைய அரண்மனை முற்றம் இன்னபடியான தென்பதும், (441-453) இளந்திரையனுடைய வீரம் கொடை இப்படிப்பட்டவையென்பதும், (467 - 493) இளந்திரையன் உபசரித்து இன்னவாறு பரிசில் கொடுப்பானென்பதும், பாணர்க்குப் பொற்றாமரையும் விறலியர்க்குப் பொன்மாலையும் இளந்திரையன் ஈவானென்பதும், (497 - 499) அவன் மலைச்சாரலில் மந்தியும் களிறும் முனிவர்க்குக் குற்றேவல் புரியுமென்பதும் முதலிய செய்திகள் இந்தப் பெரும்பாணாற்றுப்படையிற் கூறப்பட்டுள்ளன.

இவர் தமது நூலில் ஒவ்வொரு விடயத்தையும் நேரிற் காண்பது போலத் தோன்றுமாறு தன்மைநவிற்சியாலும் உவமையணியாலும் விளக்கி யிருக்கின்றார். இரண்டோரிடத்து உவமையின் பேதமாகிய ஐயவணியும் வந்துள்ளது. மாடத்தின் ஓங்கிய நிலையை வருணிக்கும்போது மாத்திரம் (346 - 348) "வானமூன்றிய மதலை போல...விண்பொரநிவந்த வேயாமாடத்து" (369) "விண்டோய் மாடத்து என்று உயர்வுநவிற்சியணி [அதிசயோக்தி] யாகக் கூறி யிருக்கின்றனர்.

இந்தப் பெரும்பாணாற்றுப்படையில் ஐவகைத் திணைவருணனைகளும், அவ்வத்திணையிலுள்ள சாதியாரின் தொழில் தன்மைகளும், அவ்வத் திணையிலுள்ளார் அங்கு வருபவரைத் தத்தமக்குரிய உணவைக்கொடுத்து ஆதரிக்கும் முறையும், அந்தணர்பதியில்விருந்துணவின் தன்மையும் அழகாகத் தன்மைநவிற்சியாற் கூறப்பட்டுள்ளன.

இந்நூலின் உவமைகள், ஊன்றிப் பார்க்குமிடத்து மிகப் பொருந்தியனவாய்க் கற்றோரை மகிழ்விக்கும். பலபொருள்களையும் தக்க அடைமொழிகொடுத்து அவ்வப் பொருளின் தன்மைவிளக்கப்பட்டுள்ளன.

ஏறக்குறைய மூவாயிரஞ் சொற்களைக் கொண்ட இந்நூலில் - அத்தம், அந்தி, அமர், அமையம், அரணம், அரி, எந்திரம், ஏமம், கங்கை, கந்து, கழுகு, களம், கானம், சின்னரம், குமரி, சகடம், சாத்து, சாதி, சாபம், சுண்ணம், சுரம், சுரிகை, தச்சர், தண்டு, தமனியம், தருப்பை, தாமரை, துகில், தெய்வம், தேனம், நகர், நாடகம், நீலம், படம், பதம், பருதி, பலகை, பலி, பாணி, மணி, மத்தம், முத்தம், முரசு, மேழகம், வட்டம், வத்தம் என நாற்பத்தாறு வடமொழிச் சொற்களே வந்துள்ளன. இவற்றுள் சில தமிழ்மொழியே என்பர் ஒரு சாரார். ஆகவே, இந்நூலில் நூற்றுக்கு இரண்டுவீதமும் வடமொழி கலக்கவில்லையென்பது, பெறப்படும்.

இந்தப் பெரும்பாணாற்றுப்படை, **பாணாறு** எனவும் வழங்கப் பெறும்.

இந்நூல் நேரிசையாசிரியப்பாவால் இயன்றது.

தொண்டைமானிளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படை முற்றிற்று.

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
8	23	கட்டு					
11	42	அபச	அப்ச	23	38	எயிற்றியவர்	எயிற்றியர்
16	21	றென்னார்.	றென்றார்.	25	29	தூங்குஉம்	தூங்கும்
17	12	என்றார்—	என்றார்	28	20	மதிதளம்	மத்தளம்
18	19	வில்லை,	வில்லை நிரம்பவாங்கின,	,,	22	வளையூஉ	வளையூஉ
				30	30	சீழ்க்கைப்	சீழ்க்கை
,,	28	நெரியல்	மிரியல்	31	14	போரா	பேரார
19	37	வம்பவர்க்கு	வம்பலர்க்கு	35	5	தெரித்து	தெறித்து
	38	வல்லல்	வல்ல	36	5	சார்த்த	சார்ந்த
20	9	நெரியல்	மிரியல	37	33	இயற்கைக்	இயற்கை
,,	19	ஒன்நரை	ஒன்றரை	48	4	முடிதலை	முடித்தலை
,,	20	கிள	கின்	50	36	இரச	இராச
22	20	கண்ட	கண்டத்	56	18	ப்படும்	ப்பட்டும்
23	15	றொடார்	றொடரா	68	26	யானை	யானைத்

பல இடங்களிற் புள்ளி முதலியன இல்லை. கவனித்துச் சேர்த்துக் கொள்க. மற்றும் காணப்படினும் திருத்திக் கொள்க.

பெரும்பாணாற்றுப்படையின்

அரும்பதவகராதி முதலியன

அகல் - சட்டி, 377
அகலிரு - ஒருபொருட் பன்மொழி, 1
அகழ் - குளம், 108
அசைஇ - இளைப்பாறி, 44; 316: அடித்து, "பந்தசைஇ" - 333.
அசையின் - இளைப்பாறினால், 336
அசைவு - இளைப்பு, 44
அட்ட - சமைத்த, 100 : சமைத்தவை, 304. அடு - பகுதி.
அட்டி - மிக இட்டு, 195
அடக்கிய - அடங்குமாறுசெய்த, 396
அடங்காத் தானை, 418
அடிசில் - உணவு, 476
அடிபுதையரணம் - அடியை மறைக்கின்ற செருப்பு, 69
அடுக்கம் - தொடர்மலை, 25
அடுக்கிய - உள்ளே சொரிந்த, 246
அடுப்பு, 99
அடை - (நெல்லு) முளை, 278
அடைதல்-பெறுதல்: இங்கே, முடித்தல், 290
அடையாவாயில், 401
அணங்கு - வருத்துதல், 258: பேய்மகள், 459: தெய்வம், 494
அணர்ச் செவி - எடுத்தலையுடைய காது, 80
அணல் - தாடி, 138, கழுத்து, 205
அணுகல் - கிட்டுதல், 467
அத்தம் - வழி : அத்வா என்ற வடமொழியின் திரிபென்பர். 39
அதர் - வழி, 106
அதள் - தோல்: இங்குத் தோலினாலான பாய், 151
அந்தணர், 315
அந்திவானம், 413. அம்-அழகு, 177
அமர் - போர், 416
அமர்தல் - பொருந்துதல், 176
அமலை - (சோற்றின்) கட்டி, 224
அமளி - படுக்கை, 252
அமுது - அமுதம் போலினியன : கண்ட சருக்கரை போல்வன: 475
அமைத்த - சேர்த்தின, 385
அமைதல் - இறுகத் தோய்தல், 158
அரக்கு - செந்நிறம், 393
அரவு, 42, 134
அரி - சூரியன், காற்று, மாறு, 473
அரித்தேர் - பொற்றேர், 490
அரிதல் - அறுத்தல், 202
அரியல் - அரிக்குந்தன்மை, 281
அருங்கடன் - அரியகடமை, 315
அருத்தி - உண்பித்து, 163
அருத்தும் - நுகரச்செய்யும், 68
அருந்திய - பொருந்திய, 46
அருவி, 427
அரை - 'குளகரையாத்தகுறுங்கால்' 148. மரத்தின் அடிப்பகுதி, 'நீளரையிலவத்து' - 83. தண்டு, 'முள்ளரைத் தாமரை' 114
அரை நாள் - முற்பாதிநாள், 111
அல்கி - தங்கி, 176
அல்குல் - பக்கம், 244; இடை, 329
அல்லது - மறம்: பாபம், 36
அலங்குதல் - அசைதல், 83
அலவன் - ஞெண்டு, 208
அலற - கதறும்படி, 39
அவ்வாய் - அழகியஇடம், 412
அவண் - அவ்விடம், 28
அவல் - ஒருவகைச் சிற்றுண்டி, 226
அவலம் - வறுமைநிலை, 38
அவிய - இறந்துவிடும்படி, 415
அவிர் - விளங்குகின்ற, 469
அவிர்தல் - விளங்குதல், 177
அவிழ் - 131
அவையா அரிசி - குற்றமுடியாத கொழியலரிசி, 275
அழலவிர் தாமரை, 481
அழுங்குதல் - ஒழிதல், 111
அழுத்திய - நட்ட, 212
அழுவம் - பரப்பு, 350
அளகு - கோழிப் பேடை, 256
அளறு - சேறு, 208
அளி - பாதுகாப்பு, 422
அளை - மோர், 163: வளை, 208
அளைஇ - கலந்து, 278
அறம்புரி - அறத்தை விரும்பின, 3

அறல் - கருமணல், 86
அறைவாய் - ஒலிக்கின்றவாய், 50
ஆ - பசு, 141
ஆங்கு - அவ்விடத்து, 43
ஆடி - அளைந்து, 93
ஆடிய - அளைந்த, 341
ஆடுதல் - சஞ்சரித்தல், 85: உலாவுதல், 481
ஆடுமழை, 413
ஆம்பி - குடைக்காளான்: நாய்க்குடை எனப்படும்: 157
ஆய்மகள் - இடைச்சி, 162
ஆயம் - தோழியர்திரள், 311
ஆர்த்து - ஆரவாரித்து, 419
ஆர்தல் - நிறைந்திருத்தல், 314: உண்ணுதல், 251, 362
ஆர - நிறைய, 219
ஆரத்து - ஆரையுடையது, 46
ஆராச்செரு - தொலையாப் போர், 417
ஆரை - தொத்துளிப்பாய், 50
ஆலும் - ஆரவாரிக்கின்ற, 330: ஆடுகின்ற, 495
ஆவி - பாலிலெழும்புகை, 469
ஆற்றி - கொடுத்து, 450: ஆறச்செய்து, 276
ஆறு - வழி, 365
ஆன் - பசு, 165
ஆனுவிருப்பு, 479
இகழ்தல் - சோர்ந்திருத்தல், 393
இசும்பு - ஏற்றிழிவு, 492
இசை - ஓசை, 438
இசைக்கும் - ஒலிக்கும், 182
இட்ட - போகட்டுப்போன, 312; வைத்த, 295
இடவயின், 16
இடன், 462
இடுமுள்வேலி - கட்டுமுள்ளாலாகிய வேலி, 154
இடை - நடுவுநிலை, 445
இணர் - பூங்கொத்து, 59: கொத்து, 194
இமிரா - ஒலியாத, 481
இமையவர் - தேவர், 429
இயவி - உலாவி, 331
இயவு - வழி, 82
இரவல - இரத்தல் தொழிலில் வல்லவனே, 45
இரிதல் - நிலைகெடுதல், 432, நீங்குதல், "இன்றுயிலிரியும்"—440
இரியல்போதல் - நிலைகெட்டுப் போதல், 202
இரீஇ - இருக்கவைத்து, 159
இரு - கரிய, 341
இருக்கை - குடியிருப்பிடம், இருப்பிடம், 146: 242
இருடீர் காட்சி - மயக்கந் தீர்ந்த அறிவு, 445
இருநிலம் - பெரியநிலம், 29
இரும்பிடி - கரிய பெண்யானை, 53
இரும்பிணம் - கரும்பிணம் [யானைப் பிணம்]: 414
இரை - புல் விலங்களினுணவு, உணவு, 287: 313
இல் - மனை, 247, 252, 327
இலங்கு - விளங்குகின்ற, 34, 349
இவுளி - குதிரை, "இசும்பு செவிவுளி," 492
இழிதரும் - குதிக்கும், 431
இழுமென்புள் - புறா, இழுமெனல் - ஒலிக் குறிப்பு, 406
இழைசூழ் வட்டம், 378
இளக - அசைந்து விழ, 366
இளையர், 268
இறத்தல் - கடத்தல், 117
இறா - மீன் வகை, 270
இறுத்த - செய்துமுடித்த, 315, 446
இறும்பு - காடு, 495
இறை - அரசன், 439
இன்னியம் - இனிய முழவு, 56: இனியயாழ், 392
ஈண்டு - திரள்கின்ற, 406
ஈத்திலை, 88
ஈர் - பேன்குஞ்சு, 219: ஈரம், 341
ஈரைம்பதின்மர், 415
ஈனுதல் - மகப்பெறுதல், 90
உடம்பிடி - வேல், 76
உடன் - ஒரு சேர, 163
உடன்று - கோபித்து, 418
உடுக்கை - ஆடை, 175

உடுத்த - சூழ்ந்த: 'புலவுக்கடலுடுத்த' 409
உடுத்து—சூழ்ந்து, 184
உடும்பு - ஒரு பிராணி, 132
உணங்கிய - உலர்ந்த, 473
உணவு - உண்ணக்கூடிய பொருள், 163: நெல், 246
உதள் - ஆட்டுக்கிடாய், 151
உம்பல் - குடியிற் பிறந்தவன், 31
உமணர் - உப்புவாணிகர், 65
உயர்நிலை - ஓங்கிய நிலைமை, (இது, மாடத்திற்கு அடைமொழி), 332: 122
உயர்மிசை - ஓங்கிய வானத்திடம், 317
உரவு - பரக்கின்ற, 453: உலவுகின்ற, 483
உரவு நீர், - உலவாநின்ற நீர், 350
உரவோன் - வலிமையுடையோன், 31
உராருது - இடியாது, 42
உரு - வடிவம், 402
உருட்டிய, 249
உருப்பு - வெம்மை, 307
உரும்பில் சுற்றம் - மந்திரச்சுற்றம், 447 : உரும்பு - கொடுமை,
உருமு - பேரிடி, 421 உருளி - சக்கரம், 47 : உருளை - சக்கரம், 188
உரைத்த - தடவிய, 172
உல்கு - சுங்கம், 81
உலை - கொல்லன் வேலைசெய்யுங் களம், 207
உலைவிடத்து, 491
உலைவு - தோற்பு, 419
உவரி - உவர்ப்புள்ளநீர், 98
உழவர், 355
உழி - இடம், 44
உள்ளம் - மனம், 45
உளி - கூரியவாயையுடைய ஒரு கருவி, 92
உளை - பிடரிமயிர், 27, 320, 488
உறழ்தல் - ஒத்தல், 352
உறுகண் - வருத்தம், 43
உறை - பாலிலிடும் பிரைமோர் : உறையமைதீந் தயிர், 158: பெய்யுந்துளி, 291
உறைப்ப - மிகவிழுமாறு, 379
உறைபதி - வசிக்குமிடம், 301
ஊகம் - ஒருவகைப்புல், 122
ஊர்தல் - மீதுஇருத்தல், 171
ஊர்பு - மீது சென்று மிதித்து; 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம், 238
ஊராத்தேர் - சிறுதேர், 249
ஊன்றி - அழுக்கி, 200
எஃகம் - வேல், 119
எகினம் - நாய், 326
எடுத்த - கொண்டுவந்த, 55
எந்திரம் - ஆலை, 260
எய் - முள்ளம்பன்றி, 88
எயிற்றியர், 94
எயிறு - கொம்பு: தந்தம், 53
எயினர், 129: எரு, 154
எருக்கி - அலைத்து, 112
எல்-பகல், 66: எல்லை - பகல், 279
எழுதல் - மேற்கிளம்புதல், 155
எழூஉ - கணையமரம், 48
எளிய, 422
எறிதல் - இடித்தல், 226
எறிந்த - தூவித்தூற்றின, 240: மோதின, 437
எறிந்தென-எடுக்க: செய்தென என்னும் வினையெச்சம் : 313
எறுழ் - வலிமை, 60, 145:
எறுழ்தோன்ற, 74
ஏணி, 347 :
ஏணிஎய்தா- ஏணிக்கு எட்டாத, 245
ஏத்தி - சொல்லிப்புகழ்ந்து, 460
ஏமம் - களிப்பு, 66, பாதுகாவல்; 421
ஏய்க்கும் - ஒத்திருக்கும், 51, 277
ஏர் - அழகு, 60
ஏர் வாழ்க்கை - உழவுபோலுமில் வாழ்க்கைச் செயல், 40, வாழ்க்கை - வாழ்க்கைச் செயலுக்கு இலக்கணை.
ஏற்று - ஏறுதல்: (முதனிலை திரிந்த தொழிற் பெயர்), 347
ஏற்றை, "ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற்கெல்லாம், ஏற்றைக் கிளவியுரித்தெனமொழிப", 344

ஏறு பேரிடி, 135 ஏனம்-பன்றி, 110
ஐவர் பஞ்சபாண்டவர், 417 சேரன், சோழன், பாண்டியர். சளுக்கியர் கங்கர் எனும் ஐவர்.
ஒருங்குடன் - ஒரு சொ : ஒரு பொருட்பன்மொழி: 470
ஒருமரம் - தோணி, 433
ஒழித்த - உதிர்த்த, 4
ஒழுகை - வண்டியின் ஒழுங்கு, 63
ஒளித்தொடுங்கி - மறைத்தொதுங்கி, 108
ஒளிறுதல் - விளங்குதல், 500
ஒன்றல்செல்லா - உடன்படாத, 453
ஒன்னு- பொருந்தாத, 118: ஒன்னுத் தெவ்வர், 118, 419, 491
ஓங்கிய- சூழவளர்ந்த, 185, உயர்ந்த: 405
ஓக்கு, 247: ஓங்கு சினை, 232
ஓங்குமிசை - உயர்கின்ற உச்சி, 172
ஓச்சி - ஓங்கிக் குத்தி, 97, 118 : உயர எடுத்து, 145
ஓச்சிய - எய்த, 74
ஓடா - பின் வாங்காத, 76
ஓடுதல் - முதுகிடுதல், 102
ஓதிமவிளக்கு, 317
ஓம்பி, - பரிகரித்து, 290
ஓம்பிய-பாதுகாத்த, 344
ஓர்க்கும்-செவிகொடுத்துக் கேட்கும், 183
ஓரி - மயிர், 172
கச்சியோன், 420
கச்சு - அரைப்பட்டிகை, 171
கஞ்சகமுறி - கருவேப்பிலை, 308
கட்சி - காடு, 205
கட்டளை - உரைகல், 220
கட்டி, 164
கடந்த - அளந்த, 29
கடல் வரைப்பு - உலகு, 18
கடவுளொண்பூ - தாமரை, 290
கடறு - காடு, 116
கடன் - கொடுக்க வேண்டுமவை, 450: செய்யவேண்டிய முறை, 463
கடி - காவல்: உரிச்சொல்: 41, 125: மிகுதி, 475

கடிந்த - போக்கின, 36
கடிபுலம் - காவலுள்ள இடம், 140
கடுங்கண் - அஞ்சாமை, 116
கடுஞ்சூல் - முதற்கருப்பம், முதிர்ந்த சூலுமாம்: 395
கடுந்திறல், 3
கடுப்ப - ஒக்கும்படி, 56, 190, 78
கடுப்புடைப்பறவை - குளவி, 229
கடும்பு - சுற்றம், 105
கடை - அடி, 123
கண்ணி - மாலை, 210: 218
கணம் - கூட்டம், "கணங்கொள் சுற்றமொடு," 234, 259
கணை-திரட்சி, 91, 124: அம்பு-121
கணைக்கால் - திரண்டகால், 213
கதழ்வுறுதல் - அஞ்சிக் கலங்கிக் கூப்பிடுதல், 259
கதன் - கோபம், 396
கதிர், 2
கதுப்பு - மயிர், 485 [471:
கதுவிய - கையிற் பிடித்தலாலான, கவ்விச்சென்ற, 287
கந்து - கட்டுத்தறி, 366
கம்பலை - ஓசை, 260
கமழ்தல் - மணம் வீசுதல், 214
கமழ - முற்படத்தோன்ற, 77
கமுகின் பாளை, 87
கமுகு - பாக்கு, 393
கயம்-நீர்நிலை, 289: கயல், 270
காப்பு - தலையாப்பு, 476
கரம்பை - தரிசுநிலம், 93 [71
கரு-விரியாத நிலை, 8: கருப்பொருள்,
கருங்கை - வலியகை, 223, 437
கருநாகு- கரிய எருமையின் கன்று, 165
கருப்பை - எலி, 85
கருவி - தொகுதி: (உலகின் விருத்திக்குக்) காரணமான எனினுமாம் : 24
கருவில் - கருப்பொருளாகிய வில், கொடியவில், 74, 139
கரையும் - அழைக்கும், 350
கல் - மலை, 427
கல்லெனல் - அழுகைக்குறிப்பு, 21: ஒலிக்குறிப்பு, 23

கலக்கி - கடைந்து, 158
கலம் - நாவாய், 350
கலன் - மிடா, 57
கலிங்கம் - ஆடை, 469
கலை - ஒருவகையாண் குரங்கு, 496
கழங்கு - கழற்சிக்காய், 335
கவரும் - பறித்துக் கொள்ளுகின்ற, 395
கவலை - துன்பம்: கவர்த்தவழி என்றும் கூறுவர், 81
கவளம், 394
கவிகுடில், 225
கவின் - அழகு, 191
கவுள் - கன்னம், 358
கவை - குதை, 123
கவைக்கடை, 11
கவைத்தல்-கவடுபடுதல், உளதாதல், [358
கவைத்தாம்பு-மாடுகன்றுகளைக்கட்டியிருக்குந் தும்பாகியதாம்பு, 244
கவைத்தாள் - கப்பித்ததாள், 208
கழற்கால், 102
கழி - மூங்கிற்கழி, 149, கூரைக் கைத்துண்டு, 150
கழிதல் - கடந்துசெல்லுதல், 147
கழியுநர் - வழிச்செல்வார், 66
கழிப்பி - (ஒன்றுஞ் செய்யாமற்) போக்கி, 279: வாசித்து, 462
கழு - கூரிய முனையையுடையதாய் மனிதருடலைத் தேங்காய் மட்டையுரிப்பதுபோல் கிழிக்கவல்ல ஓர் கருவி, 128
கழை - மூங்கில், 257
கள் - தேன், 214
கள்ளடுமகளிர், 339
களம் - நெற்போரிடும் இடம், 233: அரங்கு, 55. போர்புரியுமிடம், 415
களர் - உவர்நிலம், 130
களவு - திருடு, 40
களி - உணவுவகை, 275
களிறுபடிந்தாங்கு, 372
களைஞர் - களைபறிப்பார், 213
கற்றை-வரகுபயிரின் வைக்கோல் தொகுதி, "கற்றை வேய்ந்த": 150
கறவை - கறக்கும்பசு, 325

கறி - மிளகு (ப்பொடி), 307
கறை - கறுப்புநிறம், 205
கறையடி - யானை, 351
கன்றுயாத்தபந்தர், 297
கனலி - சூரியன், 17
கா - தோளினுற்சுமக்குமாறு இரண்டுபக்கம் உறியைக் கொண்ட ஒருவகை மரக்கொம்பு, 171
காஞ்சி - 'குறுங்காற் காஞ்சி'; 375
காடி - ஊறுகாய், 57, 310
காண்வர - அழகுவிளங்க, 404
காதல் - விருப்பம், 223
காந்தள், 372
காப்பு - காவல், 151
காய்பசி, 365
கார்ஏறு - கரியகடா, 210
கால்கழீஇய - கழுவித்தூய்மையாக்கின, 380
கால்கிளர்தல் - ஓடுதல், 21
கால்யாத்தது - மறைத்தது, 133
காவலர் - காப்பவர், 51
காழ் - வயிரம், 90, 97: தறி, 244: விதை, 130: மணியுருக்கோத்த வடம், 329
காழோர் - குத்துக்கோற்காரர், 393
கான்மாறிய கால்விழுந்தன்மை தவிர்ந்த, 291
கான்று - தோற்றுவித்து, 2
கானம் - காடு, 23
கானவர் - பாலைநிலமக்கள், 116
கிழித்த - பிளவுபடுத்திய, 430
கிள்ளை, 227, 300
கிளை - சுற்றத்தார், 163, 183
கின்னரம் - ஒருபறவை, 494
குட்டம் - ஆழ்ந்தகுளம், 271
குடகாற்று - மேல்காற்று, 240
குடி - குடியிருக்கின்ற இடம், 166, 197, 274
குடுமி - முடிக்கலத்துக்கு இலக்கணை, 451
குண்டு - தாழ்ச்சி, குழி, 397
குணகடல் - கீழ்கடல், 441
குதிர் - நெல்சொரியுங் கூடு, 186
குப்பை - இங்கு நெற்பொலி, 240
குமரி - அழியாத்தன்மை, 247

குமிழ் - ஒருமரம், 180 [265
குரம்பை-குடிசை, 51, 88, 148,
குரல் - கொத்து, 192
குருகு - குருக்கத்தி, 376
குருதி - இரத்தம், 414
குரும்பி - புற்றாம்பழஞ்சோறு, 277
குலை - பூங்கொத்து, 371
குவைஇ - குவித்தலால், 104
குழம்பு - நீரோடு மண் சேர்ந்தாற் போன்று குழம்பியது, 340
குழல், 179: 'கருங்கொடைக்குழலின்'
குழவி-இங்கே, பசுவின்கன்று, 243
குழவித்திங்கள், 384
குழிசி - பானை, 99, 158, 397
குழித்த - தோண்டின 107, 397
குழீஇ - திரண்டு, 434
குழுமுநிலை - பலவாகத்திரண்ட தன்மை, 237 [161
குழை-தளிருருவியென்னுங் காதணி,
குளகு - விலங்குண்ணுந்தழை, 148
குறளவிழ் - சிறியஅவிழ், 193
குறிஞ்சி - ஒருப்பண், 182
குறியிறை - சிறிய இறப்பு, 265
குறுந்தொடி, 334
குறுநர் - (பூப்) பறிப்பவர், 295
குறும்பு - அரண், 129
குறும்பூழ் - காடை, 205
குறை-காரியம், 443: துன்பம், 472
குறைவில் - இந்திரதனுசு, 292
குன்றம் - மலை, 49
குன்று - மலை, 352
கூட்டுண்ணுதல்-கொள்ளை கொண்டு உண்ணுதல், கூட்டுணவு-கொள்ளை கொண்டுண்ணும்உணவு, 116, 137
கூடம் - சம்மட்டி, 437
கூடு - குதிர், 247 [446
கூம்பாவுள்ளம் - குவியாதநெஞ்சம்,
கூம்புதல்-குவிதல், நெகிழ்தல், 295
கூர் - மிகுதி, கூர்நறா - களிப்புமிக்க கள்ளு, 345
கூர்ந்த - மிகுந்த, 23, 25
கூவியர்-அப்பவாணிகர்: சிற்றுண்டி வியாபாரஞ் செய்பவர்: 377
கூழ் - உணவுவிசேடம், 175: சோறு, 327
கூனி - வளைந்து: இறந்தகால வினையெச்சம்: (கூன்-பகுதி) 159
கெண்டி - அறுத்துத்தின்று, 143
கெழீஇ - பொருந்தி, 399
கேழ் - நிறம், 319
கேள்வி - யாழ், 16, கேட்டற்குரியவற்றைக் கேட்டல், 140
கேளாமன்னர் - பகை மன்னர், 140
கைபுணர்ந்து - ஒழுங்காகச் செறிந்திருந்து, 234
கைவண் தோன்றல், 420
கொக்கு - மா, 309
கொட்கும்-சுழன்றுதிரிகின்ற, 326
கொட்டில் - கொட்டகை, 189
கொடி - துவசம், 337. [41
கொடியோர் - கொடுமையுடையோர்
கொடிறு-கொல்லன்கருவிவகை, 207
கொடு - வளைவான, 153, 436
கொடிஞ்சி - தாமரைப்பூ வடிவுள்ளதாகித் தேரின் முன்புறத்து நடப்பட்டுக் கையாற் பிடித்துக் கொள்ளத்தக்க அலங்காரவுறுப்பு, 416
கொடுமுடிவலை, 274
கொடுவரிக் குருளை, 449
கொடுவாயிரும்பு, 256
கொடுவாள், 471
கொடை - விற்றல், 400
கொடைக்கடன், 446
கொண்டி - கொள்ளை, 454
கொப்பூழ் - உந்தி, 402
கொய்து - பறித்து, 216
கொழித்து, 431
கொழு - "முழுக்கொழு," 200
கொழுஞ்சூடு - சக்கரத்தின் உறுப்பாய்க்கொழுவிய வளைந்தமரம், 46
கொழுமென் சினை, 407
கொள்ளை - விலை, 64
கொளல் - பெறுதல், 426
கொன்றை மென்சினை, 328
கோட்ட-கொம்புகளிலுள்ளவை, 173
கோடு-மரக்கொம்பு, 59: தந்தம், 181: கரை, 273: சிகரம், 430: கீறு, 383: தண்டு, 392
கோடை, 272

கோவலர் - இடையர், 166
கோள் - பிடித்தல், 284: கிரகம், இங்கே இராகு அல்லது கேது வைக் காட்டும்: 384: குலே, 356: வாங்குதல், 400 [407
கோளி - பூவாமற்காய்க்கும் மரம்,
சகடம் - வண்டி, 50 [21
சண்பின் காய்ச்சுண்ணம், 220 and
சவட்டி - மென்று கிழித்து, 217
சாடி, 280
சாடு - வண்டி, 188 [347
சாத்திய - சார்த்திவைக்கப்பட்டுள்ள,
சாத்து - வர்த்தகர்திரள், 80
சாதி - திரள், 229
சாபம் - வில், 121
சாம்பு - படுக்கை, 150
சாரல், 494
சால் - அமைந்த,259:உழுகை: 197, "செஞ்சாலுழவர்"
சிதர்வை - சிதரின சீரை, 468
சிதைய - கெட, 208
சிமையம் - உச்சி, 429
சிரல் - சிச்சிலி, 313
சில்பத உணவு - உப்பு, 64
சிலதர் - தொழில் செய்வார், 324
சிலம்பி - சிலந்திப்பூச்சி, 236
சிலம்பு - மகளிர் காணிவகை, 332, பக்கமலே, 372
சிலே - வில், 145, 269 [144
சிலேத்தல் - இடித்தல், ஒடிதல், 135,
சிறக்க - சிறப்புறுவதாக, 45
சிறந்து - மிகுந்து, 330
சிறப்ப - மேன்மைபெற, 241
சிறப்பு - தலேமை, 35
சிறாஅர் - சிறுபிள்ளேகள், 223
சினந்திருகிய-வெம்மைமுதிர்ந்த, 3
சினே - கொம்பு, 214: கிளே, 83
சீக்கும் - துரால் வாரப்பெற்ற, 497
சீர் - புகழ், 388: தாளம், 493
சீழ்க்கை-நாவின் நுனியை மடித்துச் செய்யும் ஒலி, 166
சுடர் - விளக்கு, 349: ஒளி, 385
சுடர்க்கடை - சூரியாஸ்தமனகாலம், 305
சுடுமண் - செங்கல், 405
சுமடு - பாரத்தைச் சுமக்கும்படி தலே யிற் சுற்றி வைத்துக்கொள்ளப்படு வது: 159
சுரம் - பாலேவனம், 117
சுரிகை - உடைவாள், 73
சுரும்பு - வண்டு, 385
சுரை - தோண்டுகருவி, 92
சுவல் - மேட்டு நிலம், 131: தோட் கட்டு, 171: தோள், 283
சுற்றம், 21, 139
சுறவுவாய் - மகரவாயாகிய தலேக் கோலம், 385
சுனே, 10
சூட்டு - சுட்டது, 282
சூடிய- கவிந்த, "வானஞ்சூடிய"-409
சூர் - சூரபதுமன், 457
சூல் - முட்டை, 132: கருப்பம்,136
சூல்வயிறு, 381
சூழ் சுனே, 356 [313
செத்து -ஒத்து, 473: எண்ணி, 183,
செதுக்கு - பூவின்வாடல், 338
செந்தீப் பேணுதல், 498
செந்நிலே - செவ்விய நிலே, 127
செம்பொன்மலே, 241 [456
செருமேம்படுந-போரில் மிக்கவனே,
செல்வர் செல்வ - செல்வமுடை யார்க்கெல்லாம் செல்வம் படைத் தவனே! 456
செல்வி - இங்குப் பார்வதி, 459
செவ்வரி, 270
செவ்வரை - மேரு, 429: செவ்விய மலே, 103
செவ்வாய் - செம்மை வாய்ந்த, 412
செவ்வி - ஏற்றகாலம், 435: அழகு 390
செவிலியம் பெண்டிர் - ஒருமைப் பன்மை மயக்கம், 251
செற்றை - துரால், 149
செறிதுளே, 8
செறிவு - இறுகுதல், 73
செறு - வயல், 210, 212
சென்மோ - செல்வாயாக, 45
சென்னாய் - பாயும் நாய், 189
சென்னி- பாணன், 103: தலேயிடம், 347

சேஎய் - முருகக் கடவுள், 459
சேக்கும் - கிடக்கின்ற, 153
சேணுயர் - மிகச்சிறந்த, 324
சேத்தல்- தங்குதல், 129, 166, 205
சேதா - செந்நிறப்பசு, 306
சேப்பின் - தங்கினால், 274 301
சேம்பு, 361
சேவல், 439
சொரிந்து - பொழிந்து, 24
சொன்றி - சோறு, 131, 193
சோலைக்கமுகு, 381
ஞமலி - நாய், 112, 132, 299
ஞாங்கர் - அதற்குமேல், 196
ஞெகிழி - கடைகொள்ளி, 178: நெகிழ்ந்து (இறந்தகால வினையெச்சம்), 349
ஞெண்டு - நண்டு, 208, உரை
ஞெலிகோல் - தீக்கடைகின்ற கோல், 178
தகட்ட - இதழையுடைய, 215
தகை - அழகு, 310
தச்சச்சிறாஅர், 248
தடக்கை - பெரிய கை, 76
தடவு - பெருமை, 77
தடி - தசை, 345
தண்டலை-சோலை: குளிர்ந்த இடத்தை யுடையது எனப் பண்புத்தொகை யன்மொழி: 355 [460
தண்டாஈகை - அமையாத கொடை,
தண்ணுமை - மத்தளம், 144
தண்பணை - மருதநிலம், 242
தத்த - அசைய, 334
தப்பா - கொல்லாது, 42
தப - கெட, 238
தம்னியம் - பொன்: தபநீயம் என்ற வடசொல்லின் திரிபு, 332
தருதல் - கொணர்தல், 141
தருப்பை வேய்ந்த, 264
தலை - இடம், 147
தலைஇ - கூடி, 311
தவாஅ - மாளாத, 26
தளர்தல் - இளைப்புண்டாதல், 282
தளர்நடை, 250
தளரா-அசையாத, 242 [152
தறி - (ஆடுமுதலியன கட்டும்) முளை,
தாக்கலின் - பாய்தலின், 258
தாக்கி - அடித்து, 39
தாக்குதல் - எறிதல், 134
தாங்குநர் - காப்பவர், 18
தாமரைப்பொகுட்டு - தாமரைக் கொட்டை, 404
தாழ் - விளங்குகின்ற, 379
தாழைக்குழவித்தீநீர் - இளநீர், 357
தாழைமுடித்து, 264
தாள் - பாதம், 187
தானை - சேனை, 33: 102
திங்கள் - சந்திரன், 384
திணிதோள் - இறுகினதோள், 60
திரளரைப் பெண்ணை, 360
திரிமரம் - மரவேந்திரம், 187
திரு - திருமகள், 29
திருந்துதல் - நன்றாதல், 91
திரை - அலை, 31
திரையன், 37
திவவு - வார்க்கட்டு, 13
திறல் - வல்லமை, 391
தின்னுதல்-தழும்புண்டாதல், "மழுத் தின்வன்கை", - 170
தினை - ஒருதானியம், 168
தீந்தயிர் - இனியதயிர், 158
தீற்றி - தின்னச் செய்து, 343
துகள் - குற்றம், 238
துகில், 329
துஞ்சுதல் - தங்குதல், 121: தூங்குதல், 151 ஓய்தல், 260
துஞ்சும் - துயில்கொள்ளும், 252
துடவை - தோட்டம், 201
துடி - ஒருபறை, 124
துணங்கை - இருகைகளையும் விலாப் புடைகளில் ஒற்றியடித்துக் கொண்டு அசைந்தாடுங் கூத்து, 235, 459
துணை - உதவி, 426
துணைபுணர்தொழில, 484
துப்பு - வலி, 426
தும்பை - பெருவீரர் வீரச்செயல் புரிதற்கு அறிகுறியாகப் போரி லணியும் அடையாளப்பூ, 101
துமித்த - அரிந்த, 231
துமித்து - திறந்து, 246

துயல்வரும - அசைஇன்ற, 161
துரும்பு - கூளம், 239
துருவை - செம்மறியாடு, 153
துவன்றி - நிறைந்திருந்து, 268
துழவை - துழாவியட்டகூழ், 275
துளர்படுதல்-களை செதுக்குதல்,201: துளி, 484
துளை - "கருந்துளைக்குழல்" 179
துளையரை - துளையைத்தன்னிடத்தி லுடைய, 54
துறக்கம் - சுவர்க்கம், 388
துறை - நீர்த்துறை, 351
துன்றுபு - நெருங்கி, 434
துன்னரு -கிட்டுதற்கு அரிய 125
துன்னாது - சேராமல், 299
தூக்கி - ஆராய்ந்து, 466 [54
தூங்க-தொங்க, 72 : அசையும்படி,
தூங்குதல் - மண்டியிருத்தல், 10: சோர்தல், 433 : ஆடுதல், 146 தங்குதல், 124
தூண்டில், 285
தூம்பு - உள்தொளை: (தூம்பு, புழல்- ஒரு பொருளன:) உட்பொய் எனப்படும்: 231
தூய - தூவின, 338 [474
தெரிகொள் - பொறுக்கிக்கொண்ட,
தெரிந்து - இங்கே, எடுத்து என்ற பொருளது; 158
தெவ்வர் - பகைவர், 118
தெறல் - சுடுதல், 17: அழிப்பு, 422
தேஎம் - தேசம், 423
தேம்பட - இனிமை பிறக்க, 278
தொகுவாய் - குவிந்த இடம், 113
தொடர்-சங்கிலி, 125
தொடி - பூண், 436
தொடுத்த - கட்டின, 152, 181
தொடுதோல் - செருப்பு, 169
தொடுப்பெறிதல் - விதைத்தலைச் செய்தல், 201
தொடை-கட்டு: 16: தொடுத்தல், 68
தொண்டையோர் - பல்லவர்: 454
தொய்யா - கெடாத, 434
தொல்லை - பழமை, 98
தொலைச்சி - போக்கி, 141 : ஒன்று மில்லையாக்கி, 382: ஒழித்து. 237
தொலைச்சிய - போக்கின, 70
தொடுத்த - கட்டின, 244
தொலைபு - தோற்றுபோதல், 398
தொழு - பட்டி மேய்ந்த பிராணிகளை யடைக்கும் இடம், 185
தொழுதி - திரட்சி, 406
தொளி - சேறு, 211
தோட்ட - தொளையிட்ட, (தொள். பகுதி), 179
தோடாழ் குளம், 273
தோடு - இலை, ' வண்டோட்டுத் தெங்கின் '—353
தோண்டி - முகந்து : நோண்டிஎன் பதனோடு ஒப்பிட்டுப் பார்க்க: 98
தோப்பி-நெல்லாற்சமைத்த கள், 142
தோன்றல், 420
தோன்றும் - ஒளிவிட்டுக் காணப் படும், 318
நகர் - பட்டணம், 368. 405, 435: வீடு, 121, 125,298: அரண்மனை, 440
நச்ச - விரும்ப, 248
நசைஇ - விரும்பி, 107
நசைவுழி - மனம்பிடித்த இடம். 44
நடுவண் - நடுவே, 144
நடை - அடி, (நடப்பதற்குக் கருவி யானது) 243: தொழில், 198
நணி - சேர்ந்து, 288
நயந்திசினோர் - விரும்பினவர், 425
நயந்தோர் - விரும்பியிருந்தார், 428
நல்லெழில் - நன்றாகிய எழில், 386
நவிலுதல் - பழகுதல், 145, 198
நள்ளிருள் விடியல்-'செறிந்த இருள் போகின்ற விடியற்காலம், 155
நளி - பெருமை, 321
நறவு - கள், 141: நறவம்பூ 386
நறுநுதல், 303
நறுமோர், 306
நனந்தலை - பரந்த இடம் 291
நாஞ்சில் - கலப்பை, 199
நாண் - கயிறு, விற்கயிறு, 285,121
நால்கு - நான்கு, 489
நாவாய் - மரக்கலம், 321
நாள் - விடியற்காலை, 141, 160
நாளமையம் - நாட்காலம், 296

நாறு - நாற்று, 212
நான்முகவொருவன், 403
நிணம் - கொழுப்பு, 345
நிமிர்தல் - ஓடுதல், 484
நிரவுதல் - ஒக்கச்செய்தல், 211
நிரை - பசுத்திரள், 176
நிரைஇ - நிரைத்துவைத்து, 120
நிரைத்த - வரிசையாக வைத்த, 128 வரிசையாகக் கட்டின, 62
நில்லாவுலகம், 466
நில்வரல் ,96
நிலை - நிலைமை, நிற்கும் இடம், 464
நிலைமை - நிலைத்துநிற்றலையுடைய புகழ், 466
நிழல் - நிறம், 379
நீடுதல் - நீட்டித்து நிற்றல், 272
நீத்து-நீர்ப்பெருக்கு, 289
நீர்ப்படப்பை - கடற்பக்கம், 321
நீர்ப்பரப்பு - கடல், 34
நீர்ப்பெயர், 319 [402
நீல் - நீலம்: ''நீனிறவிசும்பு'' - 135,
நீலப்பைங்குடம் - பச்சைக்குப்பி, 382
நீலம் - நீர்ப்பூவகை, 293
நீழல், 96
நீறு - புழுதி, 93
நுகம் - நுகத்தடி, 62; கணையமரம், 127
நுங்கு, 360
நுடக்கிய - கழுவின, 339
நுடங்க - அசைய, 329
நுடங்கும் - அசையும், 337
நுதி - முனை, 269
நெடியோன் - திருமால், 402
நெடுங்கிணறு-ஆழ்ந்தகிணறு, 97
நெய்தல் - ஓர் நீர்ப்பூ, 213
நெய்மிதிகவளம், 194
நெல்லுழுபகடு, 325
நெறி - வழி , 65: நெறித்தல். 162
நொடித்தாங்கு - நொடி சொன்னாற் போல: (நொடி - புதுமையான விஷயம்:) 459: பெருங் காட்டுக் கொற்றிக்குப் ''பேய்நொடித் தாங்கு''(கலித்தொகை, 89)என்ற விடத்தும் இப்பொருள்காண்க.

நொடை - விலை, 141
நோன் - வலிமை, 90, 169
நோன்கை - வலியகை, 471
நோன்பார், 48
நோன்புறம் - வலியமுதுகு, 79
நோன்றாள் - வலிமையுள்ள பாதங்கள், 68
பஃறாரம் - பலபண்டம், 361 , பல என்பது பிறவரின் அகரம்(விகற்பமாக) ஏக, ''குறில்வழிலள தவ்வணையாய்த,மாகவும் பெறூஉமல் வழியானே'' என்றதனால் லகரம் ஆய்தமாக ஆயிற்று.
பகடு-பெருமை, 248: ஏர் மாடு, 238: எருது, 58: 325
பகல், 2
பகல் செய்மண்டிலம், 442
பகழி - அம்பு, 269
பகுவாய் - திறந்தவாய், 112
பச்சூன் - செவ்விய இறைச்சி; 283
பச்சை - தோல், 6
பசியறியா இருக்கை, 253
பசும்படை - புதியசேணம், 492
பட்டினம் - கடற்கரைசார்ந்தவூர்,
பட - படிய, 117 [336
படப்பை - பக்கம், 126; 321; 401; பூந்தோட்டம், 354
படம்புக்கு - சட்டையிட்டு, 69
படர்குவிர் - செல்லத்துணிவீர், 37
படர்தல் - செல்லுதல், 427
படலைக்கண்ணி-தழைமாலை, கலம்பகமாலை, 60, 174
படிவம் - வழிபடுந் தெய்வவடிவம்; 298
படுக்கும் - சேர்க்கின்ற, 436
படுதல் - மிகுதல், 154, 171
படை - சேனை, 398
பணிந்த - வணங்கின, 428
பணை - மூங்கில், 12, 161
பதம் - உணவு, 105: சமயம், 393
பதி - ஊர், 65
பந்தர், 124 [83, 403
பயந்த - உண்டாக்கின, பெற்ற,
பயம்பு - குழி, 108

பயில் - நெருங்கின, 495
பயில்வுறுதல் - பொருந்துதல், 195
பயிற்றுதல் - தெரிந்துகூறச்செய்தல், 300
பரதர் - நெய்தனிலமாக்கள், 323
பரரரை, 4:
பரிசில், 493
பருகி-விழுங்கி, 1: பருதி-சூரியன், 2
பருவவானம், 190, 483
பரூஉக்கை - பருத்தகை, 48
பல்காற்பறவை - வண்டு, 183
பல்கை - கேடகம், 120
பலர்புகுவாயில், 337
பலா, 408
பலி - தெய்வத்திற்கு இடும் பூசை யுணவு, 233
பழிச்சி - வாழ்த்தி, 463
பழுமரந்தேரும்பறவை, 20
பள்ளி - படுக்கை, 89
பறவைப் பெயர்படுவத்தம் - இராசான்னமென்னும் நெல், 305
பறி - மீனைவாரியெடுக்குங் கருவி, [265
பறைதல் - தேய்தல், 95
பறைந்த - தேய்ந்த, 189
பனி - பனிபெய்யுமாசு, 328
பாக்கம் - சீறூர், 367
பாசிலை - பசியஇலை, 4:
பாடு - ஓசை, 226
பாண்மகன், 284: பாண, 22
பாணி - காலம், 433
பாதிரி, 4
பாம்பணைப்பள்ளியமர்ந்தோன், 373
பாமழை - பரந்தமேகம், 190
பாய்தல் - பரத்தல், 267
பாயம் - புணர்ச்சி, 342
பார்ப்பு - குட்டி: இங்கே நண்டிற்கு வந்தது. "தவழ்பவைதாமு மவற் றோரன்ன" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினால்: 167
பார்வை - இனமான மிருகங்களைப் பிடித்தற்பொருட்டுப் பழக்கிய மிருகம், 95
பாரித்தாங்கு - பரப்பினாற்போல, [442
பாலை - ஒரு பண், 180
பாழ்பட, 423
பிடி, 199: பிடிக்கணம் - பெண்யானையின் திரள், 186
பிண - பிணா: உயர்திணைப் பெண்பாலை யுணர்த்துஞ் சொல், 90
பிணவு - பெண்பன்றி, 342
பிணித்தல் - கோத்துவைத்தல், 283
பிணைதல் - சூடுதல், 296
பித்தை - மயிர், 482
பிழா - முடைந்த தட்டுவகை, 276
பிழி - கள், 281
பிறக்கு - பின்னே, 351
பிறங்கடை - பின்னிடத்தோன், 30
பிறழ்தல் - முன்பின்மாறுதல், 270
பிறழ்வாய் - மலிந்தவாய், 215
பீலி - தோகை, 331
புகர் - புள்ளி, 159: நிறம், 194
புகர்முகம் - யானை: அன்மொழித் தொகை: 448
புகழாவாகை - ஆத்தி, 109
புகை - ஆவி, 'புகைவேய் குன்றம்'— [19
புடை - பக்கம், 364
புடைத்த - அடித்துக்கொண்ட, 221
புணர் - முடிந்த, 218
புணர்ந்தன்ன - சேர்ந்தாலொத்த, 48
புதல் - தூறு, 112: புதல்வர், 249
புதவுவாயில், 52, 127, 198
புதை - அம்புக்கட்டு, 123
புரவி - குதிரை, 27, 320, 488
புரையும் - ஒத்திருக்கிற, 6; 114
புல் - புல்லரிசி, 94
புல்லிதழ் - புறவிதழ், 114 [22
புல்லெனல் - பொலிவிழத்தற்குறிப்பு,
புலம் - நிலம், 184
புலம்ப - (இரையின்றித்) தனித்திருக்க, 286
புலம்புமடல், 314
புலர - உலர, 276 : புலவர், 450
புலவு - புலால் நாற்றம், 119: "புலவுக்கடல்"—409
புலிப்போத்து - புலிக்குட்டி, 138
புழல் - உள்ளே துளையாயிருப்பது, 181
புழுக்கல் - சோறு, 100, 474
புழுக்கு-இங்கே,சமைத்தபருப்பு, 195
புற்று, 277

புறந்தரப்ப-முதுகில் அடித்து ஓட்ட, 58
புறம் - முதுகு, 88
புன்புறம், 376
புன்னைக்கோடுதுமித்தியற்றியபந்தர், 266, 267
புனல் - நீர், 380
புனை - வாரிமுடித்த, 485
புனைந்த - இயற்றிய, 218
புனைவு - அணிதல், 218
பூ - அழகு, 159
பூட்டி - வண்டிமுதலியவற்றிற் சேர்த்து, 198
பூண் - அணிகலம்: 136, 327, 450
பூத்து - தோன்றினால், 477
பூதம் - பேய், 235
பூப்ப - பொலிவு பெற்றபுறம், 424
பூமலி பெருந்துறை, 389
பூளையம் பசுங்காய், 84
பெண்ணை - பனை, 314, 360
பெய்த - இட்டு வைத்த, 283: கட்டின, 218
பெய்தல் - சொரிதல், 96
பெயர்த்தமைத்த - இடத்தைவிட்டு எடுத்து வைக்கப் பெற்ற, 386
பெயல் - பெய்கை, 363
பெரும்பெயர் - பெருங்கீர்த்தி, 460
பெரும்கன் - தலைவன், 101
பெருமகிழிருக்கை, 383
பேரியாழ் - யாழ்வகை, 462
பை - பசுமை, 105: பைங்காய், 267
பைஞ்சாய் - பசிய கோரை, 209, 217
பைஞ்சேறு - சாணம், 298
பைது - பசுமை, ஈரம், 230, 239
பைந்துணர் - பசியகொத்து, 308
பைப்பய - மெல்ல மெல்ல, 334
பைம்பூண், 458
பொதிதல் - மறைதல், 287
பொதும்பர் - சோலை, 374
பொய்கை, 294 [389
பொய்யாமரபு-தப்பாமல்வரும்முறை,
பொர - தீண்ட, 348
பொருத - போர் செய்த, 210
பொருது, 415
பொலன் குழை - பொன்குழை, 312
பொழில் - சோலை, 380: உலகம், 465, "நாவலந் தண்பொழில்": இங்கே, உலகத்தின் ஏக தேசத் தை யுணர்த்திற்று: மாயோன் காடுறையுலகமும்" என்ற இடத்து உலகம் என்றதுபோல.
பொறி - ஒளி, 448
பொறித்தல் - அடையாளமுண்டாக அழுத்தி வைத்தல், 106
பொறை - மூட்டை, 79
பொன் - அழகு, 332: திரு, 440: திருமடந்தை, 424
பொன்னின் தொடையமைமாலை, 485, 486
போக்கரு கங்கை, 431
போக்கு-தப்பியோடிப்போகை, 115
போகி - கடந்து சென்று, 184
போர் - நெற்கதிர்களை அல்லது வைக்கோல்களை ஓங்கத்தொகுத்து வைத்திருப்பது, 237
போர்வை, 9
போழ் - வகிர், 307
போழ்வாய் - அங்காந்தவாய், 287
மகடூஉ - பெண்மகள், 58: 304
மகமுறைநோக்கி, 478
மகவுடை - குழந்தையைக் கொண் டுள்ள, 58
மகவொடு, 271 [330
மகிழ்-மணவெழுச்சி, மகிழ்ச்சி, 146
மங்குல் - திசை, 480
மஞ்ஞை - மயில், 331, 495
மடல், 86
மடவரன்மகளிர், 387
மடிதல் - சோம்புதல், தங்குதல், 254
பெய்தலைத்தவிர்தல், 107
மடிதலை - மடிந்துள்ளவாய், 286
மடியா - மடங்காத, சுருங்காத, 222
மடிவாய், 199
மடை - பலி, 'தெய்வமடையின்' 104
மணம் - வாசனை, 354
மணி - நீலமணி, 14: 313
மத்தம் - மத்து: மந்தமென்ற வட சொல்லின் திரிபு; 156
மத - வலிமை, 143

மதலை - பற்றுக்கோடு, 346
மதி - சந்திரன், 17
மதிலெறிதல் - மதிலையழித்தல், 451
மந்தி - பெண்குரங்கு, 395, 497
மரபு-தொன்றுதொட்டுவரும்முறை,
மரல் - ஓர் செடி, 181 [463, 476
மரீஇ - பொருந்தி, 383
மரீஇய-மருவின,'பொருந்தின, 169
மருகன் - வழித்தோன்றல், 454
மருங்கு - இடம், 106; பக்கம், 236
மருங்குல் - உடம்பு, 352
மருது-'பாம்புறை மருது'-232
மருப்பு - (யாழின்) தண்டு, 14: கொம்பு தந்தம், 110, 209, 358
மல்லல் - வளன், 143, 254
மலர்தலை - அகன்றஇடம், 32
மலர்தலையுலகம், 410
மலர்வாய் - அகன்றவாய், 276
மலிய - மிகவும்நிறைய, 233
மலைகிழவோன், 500
மலைந்தோர் - போர்புரிந்தவர், 423
மலைய - சூட, 486
மழு, 170
மழைக்கண், 386
மழைவிளையாடும் அடுக்கம்,257
மழைவீழ்தல் - மழைக்கால்வீழ்தல்,
மள்ளர்மள்ள, 455 [363
மறம் - வீரத்தனம், 136
மறவர் மறவ, 455
மறி - யாட்டுக்குட்டி, 147
மறு - ஸ்ரீவத்ஸம் என்னும் அடையாளம், 29: தழும்பு, 171
மறுகு - தெரு, 322
மறைகாப்பாளர் - அந்தணர், 301
மறைவிளி - வேதத்தினோசை, 300
மன்றம் - பொதுவான வெளியிடம்,
மன்னர் - அரசர், 428 [143, 423
மன்னுயிர் - நிலைபெற்றஉயிர், 32
மணவு - அக்குமணி, 132
மனையுறைகோழி, 299
மா - வண்டு, 5; கருமை, 14, 216 மிருகம், 43, 497
மாட்டிய - கொளுத்திய, 349
மாடம் - மேல்நிலைவீடு, 322: வீட்டின் மேல் நிலை, 348

மாண்பயம் - மாட்சிமைகொண்ட பயன், 67
மாதுளம் - கொம்மட்டிமாதுளை, 306
மாமேனி - மாமையாகியநிறம், 160
மாமோடு - பெரியவயிறு, 458
மார்பு - விளிம்பு, 'ஏணியெய்தா நீணெடுமார்பின்' 245
மாரி - மழை, 49
மால் - பெருமை, 330
மால்கடல் - கருங்கடல், 487 [136
மாறுதல் - நிலையினின்று மீளுதல்,
மான் - ஒரு மிருகவிசேடம், 106
மான - ஒத்திருக்க, 269
மிசைமின், 262
மிடைந்த - இடையிடையேகொண்டுள்ள, 59, நெருங்கிய, 174
மிண்டி - குத்திக்கிளம்பி, 92
மிதி, 207: 394
மிரியல் - மிளகு, 78
மிளிர - கீழ்மேலாக, 92
மிளை - காவற்காடு, 126, 401
மீக்கூறுதல் - மேலாகச் சொல்லப் படுதல், 34, 408
மீளி - மீட்குஞ்செயல், 75
மீன் - நட்சத்திரம், 477
முகடு - தலை, 246
முகந்த - மொண்ட, 483
முகந்துகொண்டு - வாரிக்கொண்டு, 'புரவியொடு வயக்களிறு முகந்து கொண்டு'-27
முகனமர்ந்து, 478 [157
முகிழ் - தயிர்மேலுள்ளபுடைப்பு,
முகை - மொட்டு, 157, 215
முட்டு - தடை, 336
முடங்கி - ஒடுங்கி, 89
முடலை - முறுக்குண்மை, 61
முடி, 212
முத்தவார்மணல், 335
முதிர்தல் - முற்றுதல், 359
முதியர், 268
முந்நீர் - (ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும்) மூன்றுதன்மை யுடையது: கடல், 30. 441
முப்புடைத்திரள்காய், 364
முரண் - மாறுபாடு, 147

முரசும், 494
முரவு - சிதைவு: = முரிவு: 99
முழங்கு, 33: முழவு - மத்தளம், 47
முழுமரம் - பருத்த குறுக்கே அறுக்கப்படாத மரம், 47
முழுமுதல்-அடி, பெரியஅடிப்பகுதி, 77, 237
முழுவலி - நிரம்பியவலிமை, 61
முள்வேலி, 126
முள்ளி, 215 [362
முளை, 53 முளைப்புறமுதிர்கிழங்கு,
முற்றம், 435
முறி - முற்றாதஇலை, 308
முறை - நீதி, 443
முறையுளி - முறையால், 462
முன்றில் - முன்னிடம், முற்றம், 96 152, 186, 225, 338, 354
முனிவர், 498
முனையின் - வெறுத்தால், 180, 214
மூக்கு - (பாரின்) தலைப்பு, 57
மூத்த - முதிர்ந்த, 247
மூதூர், 411
மூரல் - சோறு, 168, 196
மூவர் - சேரசோழபாண்டியர், 33
மூழ்க - மறைய, 200
மெலிதல் - நெகிழ்தல், 13
மென்றோல் - துருத்தி, 206
மேம்பட்ட - மேன்மைப்பட்ட, 411
மேம் பால்-(எல்லாமணமும்)பொருந்திய பால், 172
மேழகத்தகர் - ஆட்டுக்கிடாய்: (மேழகம் = மேஷகம்:) 326
மேற்செலின், 134
மைந்து - வலி, 398
மோடு - வயிறு, 458
மோர்மாறுதல் - மோர்விற்றல்,160
யவனர் - சோனகர், 316
யாக்கை - உடல், 22, 61
யாணர்-புதுவருவாய், 228, 367
யாத்த-கட்டிய, 125, 148
யாளி, 258
யாறு - நதி, 86
வகுத்தது, 5
வகை - கூறுபாடு, 310: 428
வசை - குற்றம், 35
வடபால்-வடதிசையில், 240
வடவயின் விளங்குஞ் சிறுமீன், அருந்ததி, 302
வடவளம் - வடநாட்டில் விளைந்த வளப்பமுள்ள பொருள், 320
வடி - (மாம்) பிஞ்சு, 309
வடித்து - காய்ச்சியடித்துத்தகடாக்கி, 222, வடிமணி, 120
வடு - தழும்பு, 79, 169, 471
வண்டல் - மகளிர் விளையாட்டு, 311
வண்ணம் - நிறம், 203
வம்பலர் - புதியோர், 76, 365
வய - வலி, 27, 128
வயமான் - சிங்கம், 448
வயவர் - வீரர், 101
வயின் - பக்கம் அல்லது இடம்; 16: மனை, 133: பக்குவம், 304
வரம்பு - கழனியுள்ள எல்லை, 224
வரி - இரேகை, கீறு, 448: "வரிப் புறவணில்"—85
வரிப்பந்து - நூலால் வரிதலையுடைய பந்து, 333: வரிப்பூ, 376
வரை - மலை, 72, 123
வரைச் சிலம்பு - பக்கமலை, 330
வரைப்பு - எல்லை, 18, 185, மதில், 122, 405: ஊர், 154: பண்டசாலை, 324
வல்சி - உணவு, 197, 255
வல்லூற்று - சில்லூற்று, 98
வல்லோன் - மடையன், 472
வலந்த - சூழ்ந்த, 236
வலம்புரி - வலப்புறம் உட் சுழிந்துள்ள சங்கு, 35
வலன் - வலப்புறம், 145
வலி - வலிமை, 137
வலித்து-இழுத்து 284: வலைஞர்,274
வழங்கி - உலாவி, 271
வழங்குநர் - கொடுப்பவர், 400
வழங்கும் - செல்லும், 80 [340
வழிந்த - நிறைந்து வெளிச்சிந்தின,
வழைச்சு - இளமை, 280
வள்ளம் - வட்டில், 339
வள்ளிதழ், 5 [370
வளம் - செல்வம், 367: வளப்பம்,
வளர்பிறை, 412

வளன் - செல்வம், 26
வளை - சங்கு, 34: வளைக்கை, 304
வறந்து, 10: வறம்-பஞ்சகாலம், 23
வறுவாய் - உள்ளாக்கில்லாதவாய், 10
வறை - பொரியல், 133
வன்புலம் - முல்லை நிலம், 206
வாங்கி - (கயிற்றை) வலித்து, 156
வாங்குதல் - வளைதல், 228
வாட்குடி - மறக்குடி, 137
வாட்டு - பொரியல், 256
வாடாத்தும்பைவயவர் - துரோண குலத்து வீரர்: 101. (தும்பை) துரோணம் என்பன, பரியாயச் சொற்கள்.
வாடாவள்ளி - வள்ளிக்கூத்து, 370
வாடுதல் - காய்தல், 100
வாடுமடல், 353
வாடூன் - உப்புக் கண்டம், 100
வார்தல் - நீள இருத்தல், 14: வடிதல், 340: வார் மணல், 379
வாராது-கொழித்து எடுக்காமல்,100
வால் - வெண்மை, 27, 157, 320
வால்நூல் - வெள்ளிய நூல், 236
வாழ் - முள்வேலி, 126
வாழை, 359: வாளை-ஓர் மீன், 287
வான் - மழை, 107
வான்கலம் - வெள்ளியகலம், 477
வானம் - தேவருலகு, 346
விசயம், 261: விசி - பிணித்தல், 56
விசும்பு, 1
விசைத்து - வேகங்கொண்டு, 437
விடுக்கும் - தருவான்: செய்யுமென் முற்று ஆண்பாலுக்கு வந்தது:493
விடை - எருது, 143
விண் - வானம், 348 [309
விண்தோய்மாடம், 369
விதிர்த்தல் - பலதுண்டமாக்குதல்,
வியல் - பெருமை, அகற்சி, பரப்பு: 82, 121, 440
வியன்புலம் - அகன்றநிலம், 41
விரைஇ - கலந்து, 173
வில்யாழ், 182
விழவு - உத்ஸவம், 411
விழுக்கோல் - சீரியகோல், 91
விழுதத்தண்டு - வருத்தஞ்செய்கின்ற தடி: விழு - விழுமமென்பதன் விகாரம், 170
விளைந்த - முற்றின, 280, 280
விறகு - சமித்து, 499
விறந்து - செறிதலால், 226
விறல் - வலிமை, 178: வெற்றி,411
விறலியர், 486 [231
வினைஞர் - தொழிலாளர், 211,223,
வீ - மலர், 194
வீங்குதல் - இறுகுதல், 13
வீட - ஒழிய, 250
வீயா-விடாத; 367: வீவு-கேடு, 465
வீழிருழை-தெங்கு, 357
வெண்கை-வெள்ளிய கைப்பிடி,71
வெண்கோடு, 414:
வெண்டிரைப் பரப்பு-கடல், 457
வெண்ணெய், 306
வெந்நீர் - வெவ்விய நீர்மை, 281
வெயினுழைபறியாக்குயினுழை பொதும்பர், 374
வெரிந்-முதுகு (இங்கு, அறுப்புண்ட ஈந்தின் பகுதி) 86
வெரூஉம் - அஞ்சுகின்ற, 227
வெள்கோடு-வெள்ளிய கொம்பு,263
வெள்ளை-வெள்ளாடு, 153
வெளிறு-அஸாரத்தன்மை, 396
வெறுக்கை, 434
வேட்கும் - ஓமஞ்செய்யும், 499
வேட்ட - விரும்பிய, 43
வேட்டம் - வேட்டை, 111
வேண்டுநர், 443 [தல், 88
வேய்தல்-சூழ்தல், 19: கூரைபோடு
வேய்ந்த-மூடப்பட்ட,50. [வீடு, 348
வேயாமாடம் - மச்சாகவேயுள்ள
வேழம்-யானை, 51, 259: கொறுக் காந்தட்டு,பேய்க்கரும்புமாம், 263
வேள் - முருகன், 75
வேள்வித்தூணம் - யாகபசுவைக் கட்டுதற்கு நட்ட தறி, 316
வேனில், 3 [191
வை-கூர்மை, 87, 119: வைக்கோல்,
வைகுறுமீன் - விடியலைத் தெரிவிக்கும் நட்சத்திரம், சுக்கிரன்: 318
வைப்பு-இடம், 82
வௌவும் - கவர்ந்துகொள்ளும், 40

அநுபந்தம்

தொண்டைநாடு—கொடுந் தமிழ்நாடு பதினெட்டைச் சார்ந்த அருவா அருவாவடதலை என வழங்கிய நிலக்கூறு, பிற்காலத்தில் குடியேறிய **தொண்டைய** ரென்னும் ஒரு குடியினரால் ஆளப்பட, அக்காரணத்தால் அது தொண்டைநாடு என வழங்கியதாதல்வேண்டும். இச்சிற்றரசர்கள், வலிமை ஒழுக்கம் முதலியவற்றால் தமிழ் மூவேந்தரோடொப்ப மதிப்புப் பெற்றுப் புலவராற் பாராட்டப்படுவாராயினர். இனித் **தொண்டையரென்ற பெயர்** வந்த வழி—பல்லவன், துரோணனுடைய குமாரனாகிய அசுவத்தாமனுக்கு மகனாகப் பிறந்ததனால் **துரோணஜன்** எனப்பட அச்சொல் திரிந்திருக்கலாமென்றும், அதற்கு ஏற்பவே மகேந்திரபல்லவன் தன் விருதுபெயர்கட்குஇடைத்தன்னைக் **குவதுரோணன்** [நீரிற் பிறந்த துரோணகுலத்தவன்] என்று கூறிக்கொள்ளுகிறானென்றும் காட்டுவர்: இனி இந்தத் துரோணஜர் துகுண்ட ரெனப்படுதலால் ஒரு கால் அந்தத் துகுண்டர் என்பது **தொண்டைய** ரென்று வந்திருந்தாலும் இருக்கலாம். இவ்வாறன்றி, பல்லவர் நவகண்டத்தை யாள்பவரெனச் சாசனங்களாற் பெறப்படுதலால், தொண்டையர் [தொண்டு-ஒன்பது:] என்பது ஒன்பதுகூற்று நிலப்பகுதிக்கு உரியவரென்ற பொருளில் வந்த தமிழ்மொழியே எனக் கொள்ளவும் இடமுண்டு. இனி, தொண்டைப்பல்லவர் என்று ஒரு தொடர் காணப்படுவதால், **பல்லவர்** என்ற பெயர்க்குக் காரணமான பல்லவம் தொண்டைப்பல்லவமாக இருந்தால் அதனால் வந்த பெயராயும் இருக்கலாம். எவ்வாறாயினும் தொண்டையரென்பது குடிப் பெயரே.

திரைதருமரபின் வயவரும்ப லென்பதன் விவரணம் :—**துரோணர் பரத்துவாசருக்குக்** கிருதாசி என்ற நீரமகளிரிடத்துத் தோன்றியவர்: துரோணர் மனைவியாகிய கிருபியென்பவள், கௌதமருக்கு ஜாலவதி யென்னும் நீரமகளிடத்துத் தோன்றியவள். ஆகவே துரோணருக்கு மகனான அசுவத்தாமன் திரைதருமரபினன்: இந்த அசுவத்தாமன் வழித்தோன்றிய பல்லவர், திரைதருமரபின் வயவர்: அந்த மரபில் தோன்றிய இளந்திரையன், திரைதருமரபின் வயவரும்பலாவன். ஆகவே, இந்த இளந்திரையனைப்பற்றி (31-வரி உரையில்) நச்சினார்க்கினியர் கூறியிருப்பது பொருந்துவதல்ல.

இந்த ஆற்றுப்படையின் பின் காணப்படும் வெண்பா.—

கங்குலு நண்பகலுந் துஞ்சா இயல்பிற்றாய்
மங்குல் சூழ் மாக்கடல் ஆர்ப்பதூஉம்—வெஞ்சினவேல்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.

(இதன்பொருள்.) மேகங்கள் நீரை முகக்குமாறு சூழ்ந்திருக்கப்பெற்ற கருங்கடல் இரவிலும் நண்பகலிலும்சோர்தலில்லாத தன்மையதாய் ஆரவாரிப்பதும், வெஞ்சினவேலைக்கையிலேந்தி நறுமணம்வெளிப்படுத்துங் கண்ணியைச் சூடிக் கடுமானையுடைய திரையனை யான் பயந்தேனென்ற செருக்கினாலாகும் (என்றவாறு). (நீரமகளிரின் மரபில் திரையன் தோன்றியவனாதலால் அன்னானைப் பரம்பரையாற் கடல் பெற்றதாகும்.)

முல்லைப்பாட்டு

முல்லைப்பாட்டு என்ற தொடர் - முல்லைத்திணையைப்பற்றிய பாடல் என்று இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகை யாக விரியும். முல்லை யென்பது-ஆற்றியிருத்தலை உரிப்பொரு ளாகக்கொண்ட திணை. (திணை-ஒழுக்கம் நிகழும் இடம்.)

முல்லையென்றதன் பொருள்:—முல்லைப்பூ அல்லது முல்லைக் கொடி என்பது; முல்லை என்பதன் மிகுதி அல்லது சிறப்புப் பற்றி, முல்லையென்பது-அந்நிலத்துக்குப் பெயராக வழங்க, அச் சொல் அந்நிலத்து நிகழும் (ஆற்றி) இருத்தல் என்ற ஒழுக்கத் தையுங் குறிக்கும்; இவ்வாறே குறிஞ்சி முதலியனவும் குறிஞ்சிப்பூ குறிஞ்சிமரம் முதலியவற்றைக் காட்ட, பிறகு குறிஞ்சி முதலிய வற்றின் மிகுதி அல்லது சிறப்புப்பற்றி, அவ்வந்நிலங்களுக்குப் பெயராக வழங்கிப் பின்னர் புணர்தல் முதலிய ஒழுக்கத்தையும் குறிப்பனவாயின. (புறத்திணை யொழுக்கமாகிய நிரைகவர்தல் நிரைமீட்டல் முதலியனவும்-வெட்சி கரந்தை முதலிய பூக்களைக் குறியாகக் கொண்டிருத்தலுங் காண்க.) முல்லைக்கு நிலம்-காடும் காடு சார்ந்த இடமும். இனி, நச்சினார்க்கினியர் கூறுமாறு:—முல்லையென் பதன்பொருள்-இருத்தலென்பது; விளக்கு ஆகிய சுடர் இருந்த இடமும் விளக்கு எனப்படுதல்போல, இருத்தலாகிய ஒழுக்கம் நிகழும் இடமும் முல்லையெனப்படும். இவ்வாறே குறிஞ்சி முதலிய வற்றிற்கும் புணர்தல் முதலியனவாகப்பொருள் கூறவேண்டும். புணர்தல் முதலிய அவ்வவ்வொழுக்கம் நிகழும் இடமும் குறிஞ்சி முதலியனவாகக் கூறப்படும் என்பது. பாட்டு-கற்போருள்ளத்தே கற்கப்படும் பொருள் நன்குபதியுமாறு இன்னோசை பொருந்தக் கவிஞனாற் செய்யப்படுவது.

தலைமகன் போர்புரியுமாறு தன்னைவிட்டுப் பிரியக் கருதி யதைக் குறிப்பாலுணர்ந்த தலைவி ஆற்றாளாக, அவளுடைய அந்நிலையினைக் கண்டு தலைவன் 'கார்காலத் தொடக்கத்தில் மீண்டுவருவேன்; அதுவரையும் ஆற்றிக்கொண்டிரு' என்று நயமாகவுணர்த்திப் பிரிய, அச்சொல்வழியே ஏழுநிலை மாடத்தே ஆற்றியிருந்த அத்தலைவி அந்தத்தலைவன் சொன்ன கார்காலம் தொடங்கவும் வந்திடாமையால் மிகவும் ஆற்றாமையுடையளா னாள்: அப்போது பெருமுதுபெண்டிர் அதுகண்டு ஆற்றாது, விரிச்சி கேட்டுவந்து 'கணவன் போர்வினையை முடித்துவருவது திண்ணம். நீ வருத்தம் நீங்குக' என்று காரணங்காட்டி ஆற் றினர்: ஆற்றவும் முதலில் ஆற்றாதவளாயிருந்து பின்னர் 'இங் ஙனம் ஆற்றாது வருந்துதல் கற்பிற்கு முறையன்று:ஆற்றுவதே முறை' என்று உட்கொண்டு கிடந்து ஆற்றியிருந்தபோது, பிரிந்த தலைவன் வினைமுற்றி வந்துசேர்ந்தான் என்ற அகப் பொருள் இப்பாட்டினாற் கூறப்படுகின்றது. இங்ஙனம் இதில் தலைவியை ஆற்றியிருக்கச் சொல்லுதலும் தலைவி யாற்றியிருத் தலும் என்ற முல்லைக்கு உரிய *உரிப்பொருள் முக்கியமாக அமைந்திருத்தலால், இது முல்லைப்பாட்டு எனப்பட்டது.

---

* தமிழிலக்கண நூல்களில் குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என ஐந்திணைகள் பகுக்கப்பட்டுள்ளன: இவை, முதற்

இந்த முல்லைப்பாட்டு, நக்கீரனார் முதலிய கடைச்சங்கப்புலவர்கள் இயற்றிய பாக்களைக்கொண்டு தொகுக்கப்பட்ட பத்துப்பாட்டுக் களுள் ஐந்தாவது. பத்துப்பாட்டுக்களாவன-திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன: பத்துப்பாட்டு என இவை பத்தையும் ஒன்று தொகுத்தவர் இன்னாரென்பது விளங்க வில்லை. இந்த முல்லைப்பாட்டு-103 அடிகளைக்கொண்ட நேரிசை யாசிரியப்பாவால் இயன்றது; கணவனைப்பிரிந்த தலைவியினியல் பும், படைவீடு அமைந்தவகையும், படைவீட்டில் நிகழ்வனவும், போரில் நேர்வனவும், தலைவனது வீரம் முதலியனவும், கார் காலத்து இயற்கையும், இதில் நன்கு கூறப்பட்டுள்ளன; பண் டைக்காலச் செய்திகள் பலவும் இந்நூலிற் காணப்படும்: உயர்வு நவிற்சியணியில்லாமல், இயற்கையை, உவமையாலும் தன்மை நவிற்சியாலும் சித்திரமெழுதிக் காட்டினாற்போலக் கற்போர் மனத்திற் பதியுமாறுகூறுவது, சங்கச்செய்யுளிலுள்ள ஒரு சிறந்த தன்மையாதலால், இதனிலும் அவ்வாறான தன்மை யுள்ளது என்பது கூறாமலே பெறப்படும்.

இந்த முல்லைப்பாட்டை இயற்றிய நூலாசிரியர், நப்பூதனார் என்பவர். இவர் கடைச்சங்கப்புலவருள் ஒருவர்; இவருடைய ஊர்-காவிரிப் பூம்பட்டினமென்பதும், இவருடைய தந்தையார்-பொன்வாணிகனா ரென்பதும், "காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்பாடியமுல்லைப்பாட்டிற்கு" என்று முல்லைப்பாட்டினுரை முடிவில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதுவதால் தெரிகின்றது; ஆகவே, இந்நூலாசிரியர் வணிகசாதியினராயிருக்கலாம். 'ந' என்பது சிறப்புப்பொருளையுணர்த்துவதோர் இடைச்சொல் என்று சொல்லி, நச்சினார்க்கினியர் 'நப்பின்னை' முதலிய சிலசொற்களை உதாரணமாகக் காட்டுவதால், பூதனாரென்பதே இவர்க்குப் பெயரா யிருந்து, இந்த முல்லைப்பாட்டைப் பாடிய சிறப்பினால் 'நப்பூதனார்' என்று இவர்க்குப் பெயர் வந்திருக்கலா மென்றுஊகித்தற்கு இட முண்டாகின்றது. இப்பாட்டைத்தவிர, இவ்வாசிரியர் இயற்றிய தாக ஒருபாடலும் தெரியவில்லை; ஆனால், பூதனாரென்ற பெயரையுடைய ஒருவர் நற்றிணையின் 29-ஆவது செய்யுளை இயற்றியதாகத் தெரியவருகின்றது; அப்பெயரினரும் இவரும் ஒருவரோ வேறோ என்று துணிந்து சொல்லமுடியவில்லை. இவ ருடைய நூல் கடைச்சங்கநூலுட் சேர்ந்திருத்தலால், இவர்காலம் கடைச்சங்கத்தார் காலத்துக்குப் பிந்தியதாகாது: ஆகவே, இவர் ஆயிரத்தெண்ணூறு வருடங்கட்கு முந்தியவராயிருக்கலாம். மற்றைப்படி இவருடைய சரித்திரம் ஒன்றும் விளங்கவில்லை.

பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்ற மூன்று பொருள் களாற் கூறப்படும்: முதற்பொருள் - நிலமும் காலமும்: கருப் பொருள்-தெய்வம் உணா மா மரம் புள் பறை செய்தி யாழ் முதலி யன. உரிப்பொருள்-உரியவொழுக்கம்: அவை புணர்தல் பிரிதல் இருத்தல் ஊடல் இரங்கல் என்ற இவையும் இவற்றின் நிமித்தமு மெனக் குறிஞ்சி முதலியவற்றிற்கு முறையே காண்க.

மாந்தர்க்கு இம்மையில் உறுதிபயக்கும் பொருள்கள், அறம் பொருள் இன்பம் என்பன: இம்மூன்றனுள் இன்பம் - அகம் எனப் படும்; மற்றவை, புறமெனப்படும்.

'இந்த முல்லைப்பாட்டு எவரைத் தலைவராகக்கொண்டு பாடியது?' என்று ஒரு ஆராய்ச்சி தோன்றலாம். இவ்வகப்பொருளைச் சொல்லுமிடத்துத் தலைவர் பெயர் சொல்லக்கூடாதென்பது "மக்க ணுதலிய வகனைந்திணையுஞ், சுட்டி யொருவர் பெயர் கொளப்பெரு அர்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாற் பெறப் படும். இவ்வாறு வரம்பு கட்டியதற்குக் காரணம்-இன்பத்தைப் பற்றிச் சொல்லுமிடத்து ஒருவனிடத்து நிகழ்ந்ததென யாவர்க் கும் புலனாக வெளிப்படுத்துக்கூருது மறைத்தற்குஉரிய சில் பொருள்களும் வருதல்கூடுமென்ற காரணம்பற்றியிருக்கலாம். இம்முல்லைப்பாட்டும் அகனைந்திணையிற் சேர்ந்ததாதலால் தலைவன் இன்னனென்று பெயர் குறிக்கப்படவில்லை: குறிஞ்சிப் பாட்டிலும் இங்ஙனமே தலைவன் பெயர் குறித்துச் சொல்லாதிருத் தலைக் காணலாம்.

இனி, ஒருசாரார், பத்துப்பாட்டில் இந்த முல்லைப்பாட்டை யடுத்திருக்கின்ற மதுரைக்காஞ்சியும் நெடுநல்வாடையும் தலை யாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைத் தலைவனாகக் கொண்டிருத்தலால், அவற்றை யடுத்து முன்னிருக் கின்ற இதுவும் அவனையே தலைவனாகக்கொண்டதென ஊகிக்கலா மென்றும், ஆகவே இதிற் கூறப்படும் பொருள்-போாற்றல் படைத்த அந்த நெடுஞ்செழியன் தன்னேடு மாறுபாடுகொண்டு எதிர்ந்த பகைஞரோடு பொருதற்பொருட்டுக் காலங்குறித்துச்சென்றானாக, அவன் மனைவி தலைவனைப்பிரிந்த துயரத்தை அரிதின் ஆற்றி யிருக்க, கார்காலந் தொடங்கியதும் அவளது செவித்தலம் நிறையத் தன்து தேர்மா ஆலிக்க, அவ்வரசன் போர்வென்று தான் சொன்னபடியே மீண்டுவந்தமையைக் கண்டு நப்பூதனார் பாடினரென்றும் கூறுவர். இவ்விஷயம் வற்புறுத்தப்படுமாறு வேறு காரணம் ஒன்றும் புலப்படவில்லை. இனி, ஒரு சிலர் முல்லைப்பாட்டு 97-ஆம் வரியில், "கானம் நந்திய செந்நிலப் பெருவழி" என்பதிலே 'கானம்' என்பது தலையாலங்கானம் ஆதல்கூடும் என ஊகிக்கின்றனர். ஆனால் சந்தர்ப்பத்தை நோக்க இஃது பொருந்துவதாகாது.

இந்நூற்கு நச்சினார்க்கினியர் சிறந்த உரை இயற்றியிருக் கின்றார். ஆயினும், மாணவர்க்குப் பொருள்விளங்குவது அருமையாயிருத்தலால், பெரும்பாலும் அவ்வுரையை ஆதார மாகக்கொண்டு எளியநடையில் இவ்வுரை யெழுதப்படுகின்றது.

1-6-இவ்வடிகள்—முல்லைத்திணைக்கு உரிய கார்காலத்து மாலைக்காலத்து நிலையைக் கூறும்.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை

பதவுரை:—(1) நேமியொடு-சக்கரப்படையுடனே, (2) வலம்புரி-வலம்புரிச் சங்கத்தை, பொறித்த-வைத்துள்ள, தட கை-பெரிய கைகளையுடையவனும், மா தாங்கு - இலக்குமியை (மார்பிலே) தாங்குபவனும், (3) நீர் செல நிமிர்ந்த-(மாவலி வார்த்த) நீர் (தன் கையிலே) விழுந்தவளவிலே (திரிவிக்கிரமனாய்) உயர்ந்தவனுமான, மாஅல் போல-திருமாலைப்போல,—(4) பாடு இமிழ் பனி கடல்-ஒலி முழங்குகின்றதும் குளிர்ச்சி பொருந்தியதுமான கடல் நீரை, பருகி-குடித்து, வலன் ஏர்பு - வலப்புறமாக எழுந்து, (5) கோடு கொண்டு-மலைகளை இருப்பிடமாகக்கொண்டு, (1) நனந்தலை உலகம் - அகலத்தைத் தன்னிடத்தேயுடைய உலகத்தை, வளை இ-(மழை பெய்யுங்காலத்தே) வளைத்து, (5) எழுந்த—,கொடு செலவு-விரைந்த கதியையுடைய, எழிலி-மேகமானது, (6) பெரு பெயல் பொழிந்த - பெரிய மழையைப்பெய்த, சிறு-சிறு பொழுதாகிய, புல்-(பிரிந்தார்க்கு) வருத்தஞ்செய்கின்ற, மாலை - மாலைக் காலத்திலே,—(எ-று.)

கருத்துரை:—கடல் நீரைப் பருகிய மேகம் நெடிய திருமால் போன்று கருநிறம் பெற்று விரைந்த கதியுடனே உலகத்தை வளைந்து நீரொழுக நிமிர்ந்து பெரும்பெயல்பொழிந்த கார்ப்பருவ மாலைக்காலத்து என்க.

விசேடவுரை:—இந்த முல்லைத்திணைக்கு முதற்பொருளாகிய நிலம் பொழுது என்றவற்றுள் இவ்வடிகளாற் பொழுதை யுணர்த்துகின்றார்: பொழுது-பெரும்பொழுது சிறுபொழுது என இருவகைப்படும். முல்லைநிலத்துக்கு உரிய பெரும்பொழுது-கார்ப்பருவம்:சிறுபொழுது-மாலைக்காலம்: "காரு மாலையு முல்லை" என்றது காண்க. கார்ப்பருவமென்பது-ஆவணியும் புரட்டாசியுமாகிய இரண்டுமாதங்கள்கூடிய காலம். மாலையென்பது-சூரியாத்தமனந் தொடங்கிப் பத்துநாழிகைகொண்ட நேரமாகும். முல்லைநிலத்துக்குக் கார்ப்பருவமும் மாலைக்காலமும் உரியன என்பது சிறப்புப்பற்றியென்பர்: எப்படி இவை சிறந்தன எனின்?—வேனிற்பருவத்தால் காட்டகத்துத் தீய்ந்துபோன மரனும் புல்லும் புதலும் கொடியும் மேகம் முழங்கிப் பெய்யத்தொடங்கத் தாம்இழந்த அழகைப்பெற்றுத் தளிர்க்கத்தொடங்கு மாதலாலும், மாலைப்பொழுது இந்நிலத்திற்குஉரிய முல்லைமலர் மலருங் காலை மாதலாலு மென்க.

கருநிறமுடைமை உலகத்தைவளைதல் நீரொழுக நிமிர்தல் என்ற தன்மைகளால், மேகம் திருமாலுக்கு உவமையாம்: கருநிறமுள்ளமேகம் நீரையொழுகவிட்டுக்கொண்டு உலகத்தைவளைத்தது-திருமால் மாவலிவார்த்தநீர் கைகளினின்றும் ஒழுக நிமிர்ந்து உலகத்தை வளைத்ததனோடு ஒக்கு மென்க. முல்லைக்கு உரிய தெய்வமாகிய மாயோனை உவமை முகத்தாற் கூறினார். நேமியொடுவலம்புரி பொறித்த மா தாங்கு தடக்கை என்பதற்கு-நேமியோடே வலம்புரியையுமுடைய உத்தம விலக்கணமுள்ள இலக்குமியைத் தழுவிய கை யென்றுமாம்; இப்பொருளில், நேமி வலம்புரி என்பன-அவ்வடிவமுள்ள இரேகையைக் காட்டும். 'நேமியொடு வலம்புரி தாங்குதடக்கை மா பொறித்த மால்' என்று கூட்டிப் பொருளுரைப்பர், நச்சினார்க்கினியர்.

மாவலி-ஓரசுரன்: இவனிடம் திருமால் வாமனாவதாரமெடுத்துச் சென்று 'மூவடிமண்தா' என்று இரந்து அவன் தாரை வார்த்துக்கொடுக்கப்பெற்றுத் திரிவிக்கிரமனாகிப் பூமியையும் வானுலகத்தையும் இரண்டடியாக அளந்து மற்றோரடிக்காக அவன் சிரசில் தாளைவைத்து அவனைப் பாதலத்திலமுழ்த்தினானென்பது, புராணகதை.

நன என்பது-அகலமென்றபொருள் குறிக்கும் உரிச்சொல். வளை என்ற பகுதி வினையெச்சப் பொருள்பட வளைஇ என்று அளபெடுத்தது. நேமி-சக்கரம்: வலம்புரி-வலப்பக்கமாக உட்சுழிந்திருக்கும் சங்கு. திருமாலின் சங்கசக்கரங்கள் - முறையே, பாஞ்சசனியமென்றும் சுதரிசனமென்றும், சொல்லப்படும். பொறித்த-வைத்த: இது இப்பொருளில் வருதலை, "இமயத்து வாங்குவிற் பொறித்த", "வலம்புரி பொறித்தவண்கை" என்ற விடங்களிலுங் காண்க. மாஅல்-செய்யுளோசை நிறைக்கவந்த அளபெடை. பாடு-ஒலி. இமிழ்கடல், பனிக்கடல் என இயையும். ஏர்பு-செய்பு என்னும் வாய்பாட்டுவினையெச்சம். கோடு-மலை. கொடுஞ்செலவு-விரைந்துபோதல்.

7-முதல் 23 வரையிலுள்ள அடிகள்—தலைவியின் ஆற்றாமையை ஆற்றுவிக்கவேண்டி முதுபெண்டிர் மாயோன்கோயிலிற்போய்க் கைதொழுது விரிச்சி கேட்டுவந்து தலைவியைத் தேற்றவும் தலைவி தேறாது கண்ணீருகுத்தன ளென்பதைத் தெரிவிக்கும்.

**அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுய ரலமரல் நோக்கி யாய்மகள்
நடுங்கு சுவலசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாய ரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்பு முத்துறைப்ப**

பதவுரை:—*(கணவனைப்பிரிந்த துயரம் தாங்கமாட்டாது தலைவி பெருவருத்தமுற விரிச்சிகேட்டு வந்தவரான), பெரு முது பெண்டிர்-சிறப்புப்பெற்ற முதுமையடைந்த பெண்கள்,—(7) அருங்கடி-(பகைவர் அணுகுதற்கு) அரிய காவலையுடைய, முது ஊர்-பழமையான ஊரின், மருங்கின்-பக்கத்திலே, போகி-(மாயோன் கோயிலிற்) போய்,—(8) யாழ் இசை இனம் வண்டு ஆர்ப்ப-யாழினது (இசைபோன்ற) ஓசையையுடைய கூட்டமான*

வண்டுகள் ஆரவாரிக்க, நெல்லொடு-நெல்லுடனே, (9) நாழி கொண்ட - நாழி யென்னும் முகத்தலளவைக்கருவி (தன்னிடத்துக்) கொண்ட, நறு வீ-நறுமணங்கமழும் மலராகிய, முல்லை (10) அரும்பு அவிழ் அலரி - முல்லைக் கொடியில் தோன்றிய அரும்புகள் மலர்தலாலான மலர்களை, தூஉய்-தூவி, கை தொழுது-வணங்கி,—(11) விரிச்சி நிற்ப - (யாங்கள்) நற்சொற் கேட்டு நிற்க,—(12) சிறு தாம்பு-சிறிய தாம்பாலே, தொடுத்த-(காலிலே) கட்டப்பட்ட, பசலை கன்றின் - வருத்தத்தையுடைய கன்றினது, (13) உறு துயர்-(முலையுண்ணாமையால்) பொருந்திய துயரத்தினால், அலமரல்-(தாய்வருமென்று) சுழலுந்தன்மையை நோக்கி-பார்த்து,—ஆய்மகள்-இடைப்பெண், (14) நடுங்கு சுவல்-(குளிரால்) நடுங்குகின்ற தோளின்மேல், அசைத்த-கட்டிய, கையள்-கையினையுடையவளாய் நின்று, 'கைய-கையிடத்திலுள்ளனவான, (15) கொடு கோல்-கொடியகோலையுடைய, கோவலர்-இடையர், பின் நின்று-பின்புறத்தேயிருந்து, உய்த்தர - ஓட்டுவதனால், (16) தாயர்-(நுமது) தாய்ப்பசுக்கள், இன்னே வருகுவர்-இப்போதே வரும்,' என்போள்-என்று கூறுபவளுடைய, (17) நன்னர் நல் மொழி - நன்மையுள்ள நல்லமொழியை, கேட்டனம்-கேட்டோம்: அதனால்-அதனாலும்,—(18) நல்லோர்-(சேனையுள்) நற்சொற்கேட்டற்கு உரியோர்க்கு நேர்ந்த, நல்ல வாய்ப்புள் - சிறந்த நிமித்தச்சொல்லாலும்,—தெவ்வர்-பகைவருடைய, (19) முனை-மண்ணை, கவர்ந்து—, கொண்ட-(பின்பு அவரிடத்தே) வாங்கிக் கொண்ட, திறையர்-கப்பத்தை யுடையவராய்,—(20) தலைவர்—, (19) வினை - போர்வினையை, முடித்து (20) வருதல்-முடித்துவிட்டு வருவது, வாய்வது-உண்மை; (ஆதலால்), (21) மாயோய்-மாமை நிறத்தையுடையவளே! (20) நீ—, நின்-உன்னுடைய, (21) பருவரல்-மனத்தடுமாற்றத்தால் வருதலையுடைய, எவ்வம்-துன்பத்தை, களை-போக்குவாய், என-என்று, (22) காட்டவும் காட்டவும்-பலமுறை வற்புறுத்திக்கூறவும், (தலைமகள்), காணாள்-(தேறுதலை) அடையாதவளாய், கலுழ் சிறந்து - மனத் துயரம் மிகுந்து, (23) பூ போல் உண் கண்-தாமரைப்பூவையொத்த மையுண்டகண்கள், புலம்பு-தனித்து வீழ்கின்ற, முத்து-முத்துப் போலுங் கண்ணீர்த்துளியை, உறைப்ப-துளிப்ப,—(எ-று.) இங்குள்ள 'உறைப்ப என்ற வினையெச்சம் மேல்வரும் (80) 'இன்துயில்வதியுநற் காணாள் துயருழந்து' என்று தொடரும்.

தலைவி தன்கணவன் குறித்துப்போன கார்காலம் வந்தும் மீண்டு வராமையால் மிகவும்வருந்திநிற்க, அவளை ஆற்றுவிக்கக் கருதி ஊர்ப்பக்கத்து இருக்கும் மாயோன் கோயிற்குப் போய் நெல்லையும் முல்லைமலரையும் தூவி,மாயோனை வணங்கி நற்சொற் கேட்டுவந்த பெருமுதுபெண்டிர் தலைவியையாற்றுவிக்கக் கூறவும் தலைவி தேறுதலையடையாது கண்ணீருகுப்பாளாயினளென்க.

'நாழிகொண்ட' என்றது-முன்நின்ற 'நெல்லோடு' என்பதனோடும், பின்நின்ற 'நறுவீ முல்லையலரி' என்பதனோடும் இயையும். விரிச்சியென்பது ஒருசெயலைப்பற்றி எண்ணமிட்டிருக்கையில், வேறொரிடத்தில் அதற்கு ஏற்பக் கேட்கப்பெறுஞ் சொல்: இதன் பொருளை "வேண்டியபொருளின் விளைவு நன்கறிதற்கு, எண்ணி

ருண்மாலைச் சொல்லோர்த்தன்று" என்பதனால் றிக. (புற. வெ., மாலை, வெட்சி). இதனை 'உபசுருதி' என்பர். 'கைதொழுது' என வருதலாலும், முல்லைக்குத்தெய்வம் மாயோனாதலாலும், 'போகி' என்பதற்கு-'மாயோன் கோயிலிற் போய்' எனப்பட்டது.

(11) பெருமுது பெண்டிர், (7) போகி (11) விரிச்சிநிற்ப, (17) கேட்டனம் (21) என (22) காட்டவும் காணாள் கலுழ்சிறந்து (23) முத்து உறைப்ப என்று இயையும்: (இங்கு நச்சினார்க்கினியர் 18-ஆவது வரியிலுள்ள 'நல்லோர்' என்பதை, (7) 'போகி' என்பதனோடு கூட்டி, 'நல்லோர்-நற்சொல்கேட்டற் குரியோர், போகி, (11) விரிச்சி நிற்ப (17) அவர் கேட்ட நன்னர் (18) வாய்ப்புள் (13) ஆய்மகள்**** என்றார்: இங்ஙனம் அன்னார் கொண்டுகூட்டிப் பொருள்கொண்டதற்குக்காரணம் தொல்காப்பியத்திலே "பாக்கத்து விரிச்சி" என்பதனால், விரிச்சிகேட்டல்—அரசன் நிரையடித்தற்கேவியவழி படையிற்சென்றார்க்கேயுரியது என்ற கருத்தினாலாகும். அச்சூத்திரத்தை யூன்றி நோக்கின், பகைவர் நிரையைக் கொள்ளச்செல்வோர்க்கே விரிச்சிகேட்டல் கூறியிருத்தலால், அதற்கு முரணாகாதவாறு இருப்பவும், முல்லையது புறனாகிய வஞ்சிக்கேற்பவும் இருவகையிலும் ஒத்துவர, நச்சினார்க்கினியர் 'இவர் இது கேட்டு நிரைகொண்டால் அரசன் வஞ்சி சூடி மண்ணுமங்கலம் மேற்செல்வனென்பது' என வரைந்துள்ளார். இவ்வுரை யேற்கத்தக்கதெனினும், பாடற்போக்கை நோக்க, இங்குப் பகைவர் நிரையைக் கொள்ளச் செல்வோர் விரிச்சிகேட்டன ரென்பது பெறப்படாமையாலும், தொல்காப்பியச் சூத்திரத்திற் கூறிய விரிச்சி, போர்க்குச் செல்வோரைக் குறித்துப் பொதுப்பட விரிச்சி கேட்டலுண்டுஎன்பதையே புலப்படுத்துமெனக் கருத்துக் கொண்டால், யாம் கூறும் உரைக்கும் ஏற்குமாதலாலும், அன்னாருரைப்படி உரைகூறப்படவில்லை.)

இந்த இருபத்துமூன்று அடிகளாற் கூறப்பட்ட விஷயம்,—(6) மாலைக்காலத்திலே, கார்ப்பருவத்து(ப் பிரிந்து சென்ற கணவனைக் குறித்துவருந்துகின்ற தலைவியைக்கிட்டி) (11) பெருமுது பெண்டிர், "(யாம்) (7) மூதூர்மருங்கிற்போகி (8) நெல்லொடு (9) முல்லையலரிதூஉய்க் (10) கைதொழுது (11) விரிச்சி நிற்ப, (13) ஆய் மகள் (12) கன்றின் அலமரல் நோக்கி (14) நடுங்குசுவல் அசைத்த கையளாய், (15) 'கோவலர்பின்னின்றுய்த்தர இன்னே வருகுவர் தாயர்' என்போள் நன்னர் நன்மொழிகேட்டதனாலும், (18) நல்லநல்லோர் வாய்ப்புள்ளாலும், தெவ்வர் (19) முனை கவர்ந்து கொண்டதிறையராய் (20) தலைவர் வருதல் வாய்வது; (21) மாயோய்! (20) நீ நின் (21) பருவரலெவ்வங் களை" எனக் (22) காட்டவும் காட்டவும் காணாளாய், (அத்தலைவி) கலுழ் சிறந்து (23) கண் முத்துத்துளிப்பவளானாளென்பது.

நன்னர் நன்மொழி-கேட்டற்கு இனிதாகிய நல்வார்த்தை. நன்னர்-'நர்' விகுதிபெற்ற பண்புப்பெயர். (11) விரிச்சி நிற்ப, (16-18) என்போளின் நன்மொழியை நல்லோர்க்கு நேர்ந்த வாய்ப்புள்ளாகக் கேட்டோமாதலா லெனினுமாம். பருவர லெவ்வம்-கணவர்பிரிந்ததைக் கருதுவதனால் மனத்தடுமாற்றந்தோன்ற அதனாலுளதாகுந் துன்பம். மாமைநிறம்-கணவன் பிரிவில் நாருரித்த ஆம்பல்தண்டுபோன்று வெளுத்துக்காணப்படும் நிறம்:

"ஆம்பற்றும்புடைத்திரள்கால், நாருரித்தன்ன மதனின்மாலை" என்பது, நற்றிணை.

'தலைவன் காலங்குறித்துச்செல்ல, குறித்த காலங் கடந்ததும் தலைவிக்கு வருத்தமிக, அவ்வாற்றாமைக்கு இரங்கல் நிகழ்ந்தால் நெய்தலாமாதலால், 'நெய்தற்றிணைக்குரிய இரங்கற் பொருள்படப் பொருள்கூறல் பொருந்தாதாம்' என்று நேரே பொருள்கூறுதலை ஆட்சேபித்துச் சொற்களைப் பிரித்து அங்கும் இங்குமாகக்கூட்டிப் பொருள் உரைப்பர் நச்சினார்க்கினியர்: 'அவ்வாறு பொருள்கொள்வது ஆசிரியர் கருத்தாகுமா?' என்று ஆலோசிக்க வேண்டுவது ஒன்றுஉண்டு. மேலும், இரங்கலாகவே நின்றுவிடுமாயின் நெய்தலென்ன வேண்டுமேயன்றி, இரங்குகின்றதைப் பிறர் ஆற்றுவித்தலும் தனக்குள் தானே ஆராய்ந்து ஆற்றுதலும் உள்வழி முல்லையாவதன்றி நெய்தலாகாதென்க. அன்றியும், இடையில் அங்கமாய்வருகின்ற ஏனையபொருளும் தலைமையானதற்கு அங்கமாய்விடுமென்பதும் அறிக. வடமொழியாளரும் நாடகம் முதலிய காவியங்களில் மற்றைச்சுவைகள் அங்கமாய்வரினும் தலைமைச் சுவையைப் பற்றியே இன்ன சுவையினது இந்த நூல் என்று முடிவிடுதலும் காண்க.

இதுவரையில் தலைவியின் நிலைமையைக்கூறி, இனி, தலைவன் பாசறையிலிருக்கும் இருப்பை 80-ஆம் வரிவரையிற் கூறப்போகின்றார்:

24-28: இவ்வடிகள்-தலைவன் பாடிவீடு அமைத்தமை கூறும்.

கான்யாறு தழீஇய அகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப் புழையருப்பம் மாட்டி, காட்ட
இடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி

பதவுரை:—(24) கான் யாறு தழீஇய-காட்டாறு சூழப்பெற்ற, அகல் நெடு புறவின் - அகன்று நீண்டகாட்டிலே, (25) சேண் நாறு-வெகு தூரம் நறுமணம் வீசுகின்ற, பிடவமொடு - பிடவஞ் செடிகளையும், பை புதல்-(மற்றுமுள்ள) பசிய தூறுகளையும், எருக்கி-வெட்டி,—(26) வேடு-(பகைப்புலத்துக்குக்காவலாக இருக்கும்) வேட்டுவரின், புழை அருப்பம்-சிறியவாயிலமைந்த அரண்களையும், மாட்டி-அழித்து,—காட்ட-காட்டிலுள்ள, (27) முள் இடு-முள்ளாலிட்ட, புரிசை-மதிலை, ஏமுற-காவலுறும்படி, வளைஇ-வளைத்து, (28) படு-ஒலிக்கின்ற, நீர்-நீரையுடைய, புணரியின்-கடல்போல, பரந்த-பரவச்சமைத்த, பாடி-படைவீட்டில்,—(எ-று.)

கருத்துரை:—பகைமேற்சென்ற தலைவனான அரசன் தான் சென்ற காட்டினிடையே பிடவத்தையும் தூறுகளையும் வெட்டி மாற்றாரைச்சேர்ந்த வேட்டுவர்கள் தமக்கென்று ஏற்படுத்திக் கொண்டிருந்த வாயிலமைந்த கோட்டையினையும் அழித்து முள் வேலியிட்டு மிகவும் விசாலமாகப் படைவீடு அமைத்தனனென்க.

விசேடவுரை:—அகப்பொருள்திணையாகிய முல்லைக்குப் புறத்திணையாவது வஞ்சி யாதலால், இங்கு அதனை இயைபுபடுத்திக் கூறுகின்றாரென்க. இவ்வாறு ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொண்டு செல்லும்போது, அதனோடு தொடர்புபட இடையே

புகுத்தவேண்டிய வேறொருபொருளை உரியஇடம் நோக்கிப் புகுத்துதலே நல்லிசைப்புலவரின் இயல்பாகும். இடையீடுபடுவதனால், எடுத்துக்கொண்டபொருள் அகன்றுகிடந்தாலும், பொருத்தமுற வேறொன்றை யிணைத்தலால் அணுகிய நிலையால்தோன்ற அப்பொருள் முடிவதாம்; இவ்வாறு பொருளை முடிப்பதே மாட்டு என்று சொல்லப்படும்; இதனை "அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும், இயன்று பொருள்முடியத் தந்தனருரைத்தல், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்றதனாலறிக. (இச்சூத்திரத்திற்கு - சொற்றொடரைத் துண்டித்துத் தமக்குத் தோன்றியவாறெல்லாம் சேர்த்தலே மாட்டென்னும் உறுப்பு என்ற கருத்துப்பட நச்சினார்க்கினியர் பொருள் ஓதினார்.) வஞ்சியென்பது ஓரரசன் மற்றோரரசன்மீது படையெடுத்துச்செல்வது. மனைவி காதலனைப்பிரிந்து மனையின்கண் இருப்பதுபோல, பகைமேற்சென்ற தலைவன் மனைவியைப்பிரிந்து படைவீட்டிலிருப்பதனால், வஞ்சியென்பது முல்லைக்குப் புறனாகும்.

கீழ்ப் பாடிவீடு அமைத்தமையைக் கூறின கவி, 66-ஆம் வரிவரையில் அப்படைவீட்டினுள் அமைந்த நிலையையும், பின் அரசன் நிலையையும் கூறுவர்:—அவற்றுள் 29—36: இவ்வடிகள்-பாடிவீட்டிலே யானைப்பாகர் யானைக்குக் கவளத்தை யூட்டியமை கூறும்.

உவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதல்துடைத்து
அயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்ப

பதவுரை:—(29) உவலை கூரை-தழையாலேவேய்ந்த கூரை வீடுகள், ஒழுகிய - ஒழுங்காகப்பொருந்திய, தெருவில் - தெருவிடத்து, (30) கவலை - நாற்சந்திகூடுமிடமான, முற்றம் - முற்றத்திலே, காவல் நின்ற-காவலாகவுள்ள, (31) தேம் படு கவுள-மதம் பாய்கின்ற கன்னத்தினையுடையனவாகிய, சிறு கண் யானை-சிறிய கண்களையுடைய யானைகள், (32) ஓங்கு நிலை கரும்பொடு-வளர்கின்ற தன்மையையுடைய கரும்புகளுடனே, (33) வயல் விளை-வயலிலே விளைகின்ற, (32) கதிர்-நெற்கதிரினையும், மிடைந்து யாத்த-நெருங்கக் கட்டியவற்றை, (33) இன்-இனிய, குளகு-(அதிமதுரத்) தழையுடனே, உண்ணாது-தின்னாமல், (அவற்றாலே), நுதல் துடைத்து-(தம்) நெற்றியைத் துடைத்துக்கொண்டு, (34) அயில் நுனை மருப்பில்-கூரிய முனையையுடைய கொம்பினிடத்திலேயேற வைத்த, தம் கையிடை-தமது தும்பிக்கையிலே, கொண்டென-கொண்டுநின்றதாக,—(36) கல்லா இளைஞர்-(யானைபழக்குஞ்சொல்லான வடசொற்களையன்றி வேறு வடசொற்களைக்) கல்லாத இளையோர், (35) கவை முள் கருவியின்-கவைத்த [பலகிளையாகப்

பிளவுபட்டுள்ள] முள்ளைக்கொண்ட பரிக்கோலாகிய கருவியி ஞலே (குத்தி), வடமொழி பயிற்றி-(யானைப்பேச்சான) வடசொற் களைப் பலமுறைசொல்லி, (36) கவளம் கைப்ப-கவளத்தை யூட்ட,—(எ - று.)—இவ்வடிகளாற் பாடிவீட்டின் நாற்சந்தி கூடும் முற்றத்தில் யானைகள் காவலாக நிறுத்தப்பட்டவற்றின் நிலை கூறப்படுகின்றது.

கருத்துரை:—பாடிவீட்டினுள் தழைகள் வேய்ந்த கூரைகள் ஒழுங்காக அமைந்திருக்குந் தெருவின் நாற்சந்திகூடுமிடத்திலே காவலாக யானைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அந்த மதயானைகள் தமக்குஇடும் கரும்போடு கதிரும் சேரக்கட்டிய அதிமதுரத் தழையை யுண்ணுமல் துதிக்கையாற்பற்றிக் கொம்புகளின்மீது அக்கையை ஏறவைத்துக் கொண்டிருக்க, பாகர் அவ்யானைகளை அங்குசத்தாற் குத்தியும் வடமொழி பயிற்றியும் அக்கவளத்தை யூட்டுவரென்க.

விசேடவுரை:—உவலைக்கூரை-பாடிவீட்டிலே வீரர் தங்குமாறு அறையமைத்து (மேலே) தழைகள் வேயப்பெற்ற கூரை வீடுகள். ஒழுகியதெரு-இவ்வாருன கூரைவீடுகள் ஒழுங்காக இருக்குந் தெருக்கள். கவலை-இவ்வாருன கூரைவீடுகட்குச் செல்லுமாறு ஏற்பட்ட தெருக்கள் கூடுமிடம். பாடியினுள்ளேயிருக்குந் தெருவுக்குப் போகவேண்டியவர் முற்றத்திற்புகுந்து போகவேண்டியிருத்தலின் இங்கே யானைகள் காவலாக நிறுத்தப்பட்டுள்ளனவென்க. முற்றம்-திறந்த வெளியிடம். மதம்கொண்டனவாகையாலே யானைகள் உணவைத் தின்ஞமலே நுதலிலே துடைத்துக் கொம்பிலே யேறிட்டனவென்க. யானைப் பேச்சான வடமொழிகளாவன-அப்புது அப்புது, ஆது ஆது, ஐ ஐ என்பன என்று பதிப்பாளர் எழுதியுள்ளனர்; "அங்கையந்தலத்திஞலப்புதாதையெனக், கொங்கலர் கண்ணியான்...கொட்டலும்" என்ற சிந்தாமணிப்பாடலில் அப்புது முதலியன யானையைத் தட்டிக்கொடுக்கும்போது சொல்வன என்பது மாத்திரம் ஏற்படுகின்றது. கல்லா இளைஞர் என்பதற்கு-யானைக்குச் செய்யுந் தொழில்தவிர வேருரு தொழிலைக் கல்லாத இளைஞரெனினுமாம். குளகு-இலை நுகர்விலங்கின் உணவு; இங்கே, அதிமதுரத்தழையென்பர். கைத்தல்-ஊட்டுதலாதலை "காழோர்கடுங்களிறு கவளங் கைப்ப" என்றதிலும் காண்க.

யாத்த-பலவின்பாற்பெயர். கவுள - குறிப்புப்பெயரெச்சம். கொண்டென-செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

37-44: இவ்வடிகள்-பாடிவீட்டினுள்ளே
பலவகைப்படைகளும் தங்கும் அரண்களும் அவற்றினிடையே
தமது தலைவனுன அரசனுக்கென்று தனியே விடுதியும்
அமைத்துள்ளமை கூறும்.

கற்றூேய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்

கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டம் கோலி யகநேர்பு

பதவுரை:—(37) (*தனது ஆடையை*), கல் *தோய்த்து*-*காவிக் கல்லிலே தோய்த்து*, *உடுத்த*—, *படிவம்-விரதங்களையுடைய*, *பார்ப்பான்*-(*துறவி வேடத்தைக்கொண்ட*) *அந்தணன்*, (38) *முக்கோல்*-(*தான் கையில் தாங்கும் அந்த*) *முக்கோலிலே*, *அசைநிலை*-(*அக்காவியுடையைத்*) *தங்கவைத்த நிலைமையினை*, *கடுப்ப - ஒத்திருக்குமாறு*, *நல் போர்-அறத்தாற் பொருகின்ற போரிலே*, (39) *ஓடா-பின்னிடாமைக்குக் காரணமான*, *வல் வில்-வலிய வில்லிலே*, *தூணி நாற்றி-தூணிகளைத் தொங்கவிட்டு*,—(40) *கூடம் குத்தி*-(*அவ்விற்களையெல்லாம்*) *கூடாரத்திற்காக நட்டு*, (*பின்பு அவைகளையெல்லாம்*), *கயிறு - கயிற்றினால்*, *வாங்கு - வலித்துக்கட்டிச் செய்த*, *இருக்கை - இருப்பிடத்திலே*, (41) *பூந் தலை குந்தம் - பூத்தொழில்செதுக்கின தலையையுடைய கைவேல்களை*, *குத்தி - நட்டு*, *கிடுகு நிரைத்து - கேடயங்களையும் வரிசையாக வைத்து*, (*இவ்வாறு இயற்றிய*), (42) *வாங்கு வில் அரணம் - வளையுந்தன்மையுள்ள வில்லாலான அரணமே*, *அரணம் ஆக*-(*தமக்குக்*) *காவலாக அமைய*, (*அதற்குள்ளேயுள்ள*), (43) *வேறு பல் பெரும்படை நாப்பண்-வெவ்வேறான பலசேனைகளின் இருப்பிடங்கட்கு நடுவிலே*, (44) *நெடுங் காழ் கண்டம்-நீண்ட குத்துக்கால்களோடு சேர்த்துச்செய்த கூறுபட்ட பல நிறத்தினையுடைய* (*மதிள்*) *திரையை*, *கோலி-வளைத்து*, (43) *வேறு ஓர்* (44) *அகம் நேர்பு-வேறோருள்வீடு* (*அரசனுக்கு என்று எல்லாரும்*) *சம்மதித்துச் செய்து*,—(எ-று.)

வில்லில் தூணியை நாற்றியது - முக்கோலிலே காவியுடையை யிட்டுவைத்த தன்மையை யொக்கு மென்க. கூடம்-கூடாரம். பூந்தலை-எறிகோலும், கிடுகு-சட்டமுமாம். வேறுபல் படை-மொழி வேறுபட்ட [*வெவ்வேறு பாஷைகளைப் பேசுவனவான*] *பலதேசங்களிலிருந்துவந்த சேனை யெனினுமாம். கண்டம்-ஆகுபெயரால், பலநிறத்தாற் கூறுபட்ட திரையை யுணர்த்திற்று; இது, கண்டத்திரை யெனவும், பல்வண்ணத்திரை யெனவும் வழங்கப்படும்.*

45-49: பாடிவீட்டினுள்ளே அரசனகத்தில் மங்கையர் வெளிச்சம் உண்டாக்குகின்றமை இவ்வடிகளாற் கூறப்படுகின்றது.

குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து
இரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரி கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட

பதவுரை:—(45) *குறுந் தொடி முன் கை-சிறியதொடியென்னும் வளையலையணிந்த முன்னங்கைகளையும்*, *கூந்தல் அம் சிறுபுறத்து*-

தலைமயிர் அசைந்துகிடக்கின்ற அழகிய சிறியமுதுகினையுமுடைய, (46) இரவு பகல் செய்யும் திண் பிடி ஒள் வாள்-இரவைப் பகலாகச்செய்யவல்லதும் உறுதியான பிடியோடு கூடியதுமாகிய ஒண்மையுள்ள வாளை, (47) விரவுவரி கச்சின்-கலந்த நிறத்தினையுடைய (தமது) கச்சிலே, பூண்ட—, மங்கையர்—, (48) நெய் உமிழ் சுரையர்-நெய்யை வெளிவிடுகின்ற திரிக்குழாயையுடையவராய், நெடுந் திரி கொளீஇ-பெரிய தீப்பந்தத்தைக் கொளுத்திக்கொண்டு, (49) கை அமை விளக்கம்-ஒழுங்காக அமைந்த விளக்குக்கள், நந்துதொறும்-அவியுந்தோறும், மாட்ட-(மீண்டும் அவற்றைக்) கொளுத்த,—(தனக்கு என்று அமைந்த இல்லிலே தலைவன் தங்கி, (எ-று.)

கருத்துரை:—அரசன் தங்கியிருக்கும்போது அரசனுக்கென்று அமைத்த இல்லில் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ள விளக்குக்கள் அவியுந்தோறும் நெடுந்திரியைக் கொளுத்திக்கொண்டு அவிந்த விளக்கை மங்கையரேற்றுகின்றனரென்க. காவலாளராக அமைந்த இம்மங்கையர் தமது காத்தற்றொழிற்கு ஏற்ப ஏந்திய வாளை, விளக்கேற்ற நேரும்போது கச்சிலே பூண்பாராயினரென்பர்.

விசேடவுரை:—காவலும்புரியும் மங்கையராதலால், இடையிலே கச்சுப்பூண்டுள்ளார். "யவனீ சஸ்த்ரதாரிணீ" என்று வருவதனால், படையேந்தும் பழக்கம் யவனமங்கையர்க்கு உரியது என்பது பெறப்படும்: ஆகவே, ஒள்வாள் கச்சிற்பூண்ட மங்கையர் என்பது யவனமங்கையரைக் குறிக்குமென்னலாம். வாள் தீட்டப்பட்டுப் பளபள என்று இருக்கையால் அவற்றின் ஒளியால் இரவு பகல்போல விளக்கமுறுவதாயிற்று. விளக்கு அவியுந்தோறும் மங்கையர் பந்தத்தைக் கொளுத்துகின்றனரெனக் கூறுவாருமுளர். தொடிமுன்கையையும் சிறுபுறத்தையுமுடைய மங்கையர், விரவு வரிக் கச்சிற் பூண்டவாள் மங்கையர் என்க. வரி-நிறம். சுரை-முறுக்குப்பொருந்திய குழாய். பந்தம் எரியுமாறு நெய்வார்த்தற்காக மங்கையர் சுரையைக் கைக்கொண்டுள்ளார்.

50-54:—இவ்வடிகள்-மெய்காப்பாளர் அந்தப்பாடிவீட்டினுள் நடுயாமத்தில் காவலாகத் திரிகின்றமையைத் தெரிவிக்கும்.

நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநாள்
அதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழ

பதவுரை:—(50) நெடு நா ஒள் மணி-நீண்ட நாக்கினையுடைய ஒள்ளிய மணி, நிழற்றிய-அடிக்கப்பட்டு அடங்கிய, நடுநாள்-அர்த்தராத்திரியில்,—(51) அதிரல் பூத்த ஆடு கொடி படாஅர்-புனலிப்பூ மலர்ந்த அசைகின்ற கொடியின் புதர்கள், (52) சிதர் வரல் அசை வளிக்கு-மழைத்திவலையோடு வருதலையுடைய அசைகின்ற காற்றுக்கு, அசைவந்த ஆங்கு-அசைந்தவாறு

போல, (53) தூங்கல்-தூக்கமயக்கத்தால் அசைதலையும், ஓங்கு நடை-உயர்ந்த நல்லொழுக்கத்தினையுமுடையராய், துகில் முடித்து போர்த்த-ஆடையைப் பாகையாகச் சிரசிலேயணிந்து (சட்டையால் உடம்பைப்) போர்த்திருப்பவரான, (54) பெரு மூதாளர்-மிகவும் முதிர்ந்த மெய்காப்பாளர், ஏமம் சூழ-காவலாகச் சூழ்ந்து திரிய,—(எ - று.)

கருத்துரை:—மணியோசையடங்கிய நள்ளிரவில் பாகையோடு சட்டையும் அணிந்த வயது சென்ற மெய்காப்பாளர் காவலாகச் சூழ்ந்து திரியலாயின ரென்றவாறு.

விசேடவுரை:—அரண்மனையிற் பணிமடங்கும்போது மணி யடித்தல், பண்டைக்கால வழக்கம்: இதனை "நெடுநாவொண்மணி கடிமனையிரட்ட", "யாமங்கொள்பவர் நெடுநாவொண்மணி, யொன்றெறிபாணியினிரட்டும்" என்பனவும் குறிப்பிக்கும். நெடுநா ஒண் மணிநிழற்றியநடுநாள் என்பதற்கு - யானை குதிரை முதலியன துயில்வதனால் அவைகளிற் கட்டியுள்ள மணிகள் ஆடாமைபற்றி ஓசையடங்கப்பெற்ற நள்ளிரவு எனினுமாம். நாள் என்பது இரவு என்ற பொருளில் வராதிருப்பினும் நடுநாள் என்பது இரவினிடைப் பகுதியென்ற பொருளில் வருதலை "பாயல்கொள் நடுநாள்" என்ற இடத்தும் காண்க.

நிழல் என்பது-ஒளிவிழாத இடம் என்ற பொருளையுமுடையதாதலால், நிழற்றிய என்பது-நிழலைக்கொண்ட என்ற பொருளதாகி, இலக்கணையால், ஒலியடங்கிய என்ற பொருளைத் தந்தது; (இவ்வாறு வருவதுபற்றி "நிழற்றல் நுணுக்கமும் நிழல்செயலுமாகும்" என்றார் திவாகரர். இனி, "ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயி னான்கும் நுணுக்கப்பொருள" என்று தொல்காப்பியத்து உரிச்சொல்லியலில் வருவதனால், அதற்குஏற்ப "நெடுநாவொண்மணி நிழத்திய நடுநாள்" என்றுதான் பாடம் இருக்க வேண்டுமென்பர், ஒரு சாரார். தொல்காப்பியத்திலும் நிழற்றல் என்றே பாடங்கொள்ளின் இழுக்குஎன்னை என்பர் மற்றொரு சாரார்.)

தூக்கத்தினால் மெய்காப்பாளர் அசைதலுக்கு, அதிரற்கொடி சிதர் வரல்வளிக்கு அசைதலை உவமைகூறினார். அதிரல்-மோசிமல்லிகை யென்பர், சிலப்பதிகாரவுரையில் அடியார்க்குநல்லார். படாஅர்-தூறு. பகைஞரின்வஞ்சனைக்கு உட்படாமல் தம்மரசர் விஷயத்தில் உண்மையான நன்னடக்கையுடன் நடப்பவர் இவர்களென்பதற்கு 'ஓங்குநடைப் பெருமூதாளர்' என்றார்.

அசைவந்த, வா-துணைவினை: அசைவந்த என்றபெயரெச்சத்தின் அகரவீறு, தொகுத்தல், ஆங்கு-உவமவுருபு.

55-58.—பொழுது அளந்து அறியும் மாக்கள் நாழிகை யறிவித்தலைக் கூறும்.

55. பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி

எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப

பதவுரை:—(55) பொழுது அளந்து அறியும்-பொழுது (இவ் வளவாயிற்றென்று நாழிகைவட்டிலைக்கொண்டு) அளந்தறியுந் தன்மையுள்ள, பொய்யா-(தமக்குஏற்பட்டதொழிலைத்) தவறுமற் செய்யவல்ல, மாக்கள்-பொழுதறியுமவர், (56) தொழுது காண் கையர்-தொழுதவண்ணங் காணப்படுங் கையினையுடையவராய் [கூப்பிய கையராய்], தோன்ற வாழ்த்தி-(அரசனை) நன்றாக வாழ்த்தி, (57) 'எறி நீர் வையகம்-அலையெறிகின்ற நீரைக் கொண்ட கடலாற் சூழப்பட்ட பூமியிலே, வெலீஇய - (பகைவரை) வெல்வதற்கு, செல்வோய்-போகின்றவனே! நின் (58) குறு நீர் கன்னல்-உன்னுடைய கிடாரத்துநீரிலே காண்கின்ற நாழிகை வட்டிலில், இனைத்து-(சென்ற நாழிகை) இத்துணை', என்று—, இசைப்ப-சொல்ல,—(எ - று.)

கருத்துரை:—பகற்போதெல்லாம் சேனையைக்கொண்டு பகைவ ரோடு பொருத அரசன் பொழுதுபோன்தும் போரை நிறுத்திப் பாடிவீட்டில் தனக்கென்று ஏற்பட்ட இல்லிலேதங்கி ஆராய்தற் குரியவற்றையெல்லாம் ஆராய்கின்று ஞகையால், இரவில் நேரமாக, அவன் துயிலுமாறு செல்லுதற்பொருட்டுப் பொழு தளந்தறியும் மாக்கள் கூப்பியகையராய்த் தம்மரசனுக்குப் பொழுது இவ்வளவாயிற்றென்று கூறலாயினரென்க.

விசேடவுரை:—கடாரத்துநீரிலே கீழேசிறுதொளையுள்ள இலே சான வட்டிலை யிட்டால் நீர் அந்தச்சிறுதொளையால் மெல்லக் கசிந்து அவ்வட்டிலினுள்ளூறும்; அங்ஙனம் ஊறிய நீரினளவுக் குத் தக்கவாறு நாழிகை இத்துணையாயிற்றென்று கணக்கிட்டறி வது முற்காலத்து வழக்கமென்க. இவர் தம்தொழிலிற்கருத் துடையராய்ப் பொழுதளந்தறியுந் தம்தொழிலைத் தவறுதலின் றிச் செய்து வருபவராதலின், 'பொழுதளந்தறியும் பொய்யா மாக்கள்' என்றார். கடல் ஏரி முதலியவற்றின் நீர்போலப் பரந்து தோன்றுமல் குறுகித்தோன்றுதலால், கிடாரத்து நீர் 'குறுநீர்' எனப்பட்டது. கன்னல்-நாழிகைவட்டில்; "கன்னலும் கிண்ண மும் நாழிகைவட்டில்".

இனைத்து என்ற பயனிலைக்கு 'நாழிகை' என்னும் எழுவாய் வருவித்து உரைக்கப்பட்டது. இனி, 'நின்குறுநீர்க் கன்னல் இனைத்து' என்பதற்கு-(நாழிகை வட்டில் மொண்ட) சொற்ப அள வான நீரினாலே உனக்குச்சென்ற நாழிகை இத்துணையானது என்று உரைத்தலு மொன்று. கன்னல்-நாழிகை யென்னும் பொருளில்வருதலை "காவதமோரோர்கன்னலின்" என்ற இடத் துங் காண்க. எறிநீர்-கடலுக்கு, வினைத்தொகையன்மொழி.

59-66: இவ்வடிகள்—அரசன் பள்ளிகொள்ளும் இடத்துக்கு அருகே ஊமையரான மிலேச்சர் காவலாகத் திரிகின்றமை கூறும்.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
60. மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்

புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்
திருமணி விளக்கங் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய வீரறைப் பள்ளியுள்
உடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழைய ராக

பதவுரை:—(59) *மத்திகை வளைஇய-குதிரைச்சவுக்குச் சூழப் பெற்றதும், மறிந்து வீங்கு செறிவு-(அந்தச் சவுக்குமறியும்படி) மடங்கிப் பருக்க நெருங்குதலுற உடுத்தப்பட்டதுமான, உடை-ஆடையையும், (60) மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து-சட்டையிட்ட அச்சம் மிகுந்த தோற்றத்தினையும், (61) வலி புணர் யாக்கை-இயற்கையான வலிமைபொருந்திய உடம்பையு முடைய, வன்கண் யவனர்-அஞ்சாமையையுடைய யவனர் செய்த, (62) புலி தொடர் விட்ட-புலிச்சங்கிலி விடப்பட்டதும், புனை-அலங்கரித்துள்ளதுமான, மாண்-மாட்சிமைப்பட்ட, நல் இல்-(அந்த) நல்லவீட்டிலே, (63) திருமணி விளக்கம்-அழகிய செம்மணிபோன்ற விளக்கை, காட்டி-எரிய வைத்து, திண் ஞாண் (64) எழினி வாங்கிய-வலிய கயிற்றிற்கட்டியதிரையை வளையவிட்டுள்ள, ஈர் அறை-புறவறைக்கு உள்ளேயிருக்கிற இரண்டாவது அறையிலேயிருக்கும், பள்ளியுள்-படுக்கையிலே (படுக்கப் போய்), (அங்கே), (65) உரையா நாவின் உடம்பின் உரைக்கும்-வார்த்தைசொல்லமாட்டாத நாவினையுடையவராய் உடம்புறுப்புக்களால் வார்த்தைசொல்பவரான, (66) படம் புகும் மிலேச்சர்-சட்டையிட்ட மிலேச்சர், உழையர் ஆக-(பள்ளி கொள்ளுமிடத்துக்குக் காவலாக) அருகே சூழ்ந்து திரிய,—(எ-று.)*

கருத்துரை:—*சவுக்குக்கயிற்றை இடையிற்சுற்றி அந்தச்சவுக்கு மறையும்படி மடக்கிப்பருக்க ஆடையை அரையிற் கட்டியுள்ளார் யவனர்: அப்படிப்பட்ட யவனரியற்றிய புலித்தொடர்விட்ட புனைந்த இல்லின் ஈரறைப்பள்ளியுள் அரசன் படுக்கச்சென்ற போது ஊமைமிலேச்சர் காவலாக அதனைச் சூழ்ந்து திரிந்து காக்கலாயினரென்க.*

விசேடவுரை:—*மத்திகை-குதிரையை யடிக்கும் சவுக்கு. மிலேச்சர் ஊமைய ரென்பார் 'உரையாநாவின் உடம்பினுரைக்கும் மிலேச்சர்' என்றார். அரசன் பள்ளியறையிற் காவலாக அமைபவர் வாயுள்ளவராக இருந்தால் ஒருவரோடொருவர் முணு முணுத்துப் பேசுவராதலின், அவ்வாறு முணுமுணுக்காமலிருக்கும் பொருட்டு ஊமையரைக் காவல்காப்பவராகக் கொண்டனர் போலும். அரசன் மாலைநேரம் வரப் போர்நிறுத்தியதும் பின்னர் செய்யவேண்டியனவற்றை இருந்து ஆராய்தற்குப் புறவறையும், அரசன் படுக்கைக்கு உள்ளறையுமாகத் திரையை வளைத்து முன்னேயொன்றும் உள்ளேயொன்றுமாக ஈரறையாய் அரசனுக்காக ஏற்பட்ட அகம், பாடியில்லில் அமைந்துள்ளதென்க. திருமணி விளக்கம் என்பதற்கு-அழகிய மாணிக்கத்தாலியன்ற விளக்கு என்றும், அழகிய பளிங்குமணியாலியன்றவிளக்கு என்றும் கூறலாம்.*

வெருவரும், வெருவா-பகுதி, படம்-வஸ்திரம், வடசொல்; இங்கே, அதனாலியன்ற சட்டையைக் காட்டிற்று.

67-76 :—இவ்வடிகள்-பள்ளியறையுள் சிந்தையுடன் தங்கிய அரசன் நிலைமையைக் கூறும்.

மண்டமர் நசையொடு கண்படை பெறுஅது
எடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பருஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோர் உள்ளியுந் தோல்துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்து
உண்ணா துயங்கும் மாசிந் தித்தும்
ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து

பதவுரை:—(67) மண்டு அமர்-மிக்கு நடக்கின்ற போரை, நசையொடு-விரும்புதலாலே, கண்படை பெறுஅது-கண்ணுறக்கத்தை [தூங்குவதை] அடையாமல்,—(68) எடுத்து எறி எஃகம் பாய்தலின் - உயரவோங்கிவெட்டிய வாள் அழுந்துவதனால், புண் கூர்ந்து-(தம்முடம்பிற்) காயம்மிகுந்து, (69) பிடி கணம் மறந்த-பெண்யானையின் திரளையும் மறந்த, வேழம் - ஆண்யானைகளையும், வேழத்து (70) பாம்பு பதைப்பு அன்ன பருஉ கை துமிய-(பகைவர்களது) யானைகளின் பாம்பினது பதைக்கின்ற தன்மையை யொத்த (பதைப்பையுடையனவாகப்) பருத்த கைகளைவெட்டுதலால், (71) தேம்பாய் கண்ணி நல் வலம் திருத்தி-தேன் பாய்கின்ற (வஞ்சி) மாலைக்கு நல்ல வெற்றியையுண்டாக்கி, (72) சோறு வாய்த்து - செஞ்சோற்றுக்கடனைத் தப்பாமற்கழித்து, ஒழிந்தோர் - இறந்தோரையும், உள்ளியும்-நினைந்தும்,—தோல் துமிபு-(உடற்குக் காவலாக இட்ட) பக்கரைகளையும் துண்டித்து, (73) வை நுனை பகழி மூழ்கலின் - கூரிய முனையையுடைய அம்புகள் வந்து அழுந்துகையினால், செவிசாய்த்து - காதுகளைச் சாய்த்துக்கொண்டு, (74) உண்ணாது-உணவை யுட்கொள்ளாமல், உயங்கும்-வேதனைப்படுகின்ற, மா-குதிரைகளைக்குறித்து, சிந்தித்தும்—,—(75) ஒரு கை பள்ளி ஒற்றி-ஒருகையைப்படுக்கையிலே யூன்றிக்கொண்டு,ஒரு கை(76)கடகம்முடியொடுசேர்த்தி-மற்றொரு கையின் கடகம் தலையிலேபடும்படி [கையிலே தலையை] வைத்து, நெடிது நினைந்து-வெகுவாக நினைந்துவருந்தி,—(இவ்வாறு அவ்விராத்திரியைக் கழித்து),—(எ-று.)

கருத்துரை:—மறுநாள் போர்செய்யவேண்டியதைக்குறித்து விருப்பங்கொண்டுள்ளதனால் தூக்கம்பிடியாமலிருக்க, புண்பட்ட

யானைகளையும் செஞ்சோற்றுக் கடன் கழித்து இறந்தோரையும் பகழிமூழ்கியதனால் வருந்தும் குதிரைகளையும் பற்றி நெடிது நினைந்து, ஒருகை படுக்கையிலும் மற்றொருகை தலையிலுமாக அமையச் சாய்ந்தவண்ணம் வருந்தலாயினன் அரசனென்றவாறு.

விசேடவுரை:—செஞ்சோற்றுக் கடன் - செவ்விய சோற்றை யிட்டவர்க்குச் செய்யவேண்டிய கடமை: அதாவது - தம்மைச் சோறிட்டுப்பாதுகாப்போர் பொருட்டுத் தம்முயிரைவிடுதல். தோல்-தோலாலியன்ற பக்கரைக்கு ஆகுபெயர்: பக்கரை-தோலாற்செய்த கலனை முதலியவையென்பர். கடகம், தொடி என்பனவற்றை ஆண்மக்களணிதலு முண்டு; ஆண்மக்கள் அணியும்தொடி-தோடா எனப்படுமென்பர்.

77—80:—மற்றைநாளில் பகைவரைவென்று இன்றுயில் கொள்ளுதலைக் கூறும்.

பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
அரசிருந்து பனிக்கும் முரசுமுழங்கு பாசறை
80. இன்றுயில் வதியுநன்

பதவுரை:—(77) (மற்றைநாளில்), பகைவர் சுட்டிய-மாற்றரசரைக் குறித்துவைத்த, படை கொள்-வாட்படையைப் பிடித்த, நோன் விரல்-வலிய கையினாலே, (பகைவரைவெட்டி), (78) நகைதாழ் கண்ணி - விளக்கந் தங்கிய வஞ்சிமாலைக்கு, நல் வலம் திருத்தி-நல்லவெற்றியை நிலைபெறுத்தி,—(79) அரசு-பகையரசர், இருந்து பனிக்கும்-நடுங்கி யிருத்தற்குக் காரணமான, முரசு முழங்கு-வெற்றிமுரசு ஒலிக்கப்பெற்ற, பாசறை-படைவீட்டிலே, (80) இன் துயில் வதியுநன்-இனிய துயிலைப்பொருந்தி வதிகின்றவனை தலைவனை,—(எ-று.)

கருத்துரை:—முன்னாளில் தூங்காது சிந்தைகொண்டிருந்த தலைவன் பிற்றைநாளில் வென்றமையாற் கவலையெல்லாம்நீங்கி இன்துயில் கொள்ளலாயின னென்றவாறு.

இருந்து பனிக்கும்-பனித்திருக்குமென விகுதிபிரித்துக்கூட்டுக. விரல்-கைக்கு, இலக்கணை.

(28) பாடித் (29) தெருவில் (30) நின்ற (31) யானை (33) குளகுண்ணாது (34) கொண்டென (35) பயிற்றி (36) கைப்ப,—(39) நாற்றி (40) இருக்கையிற் (41) குந்தங்குத்தி, நிரைத்து (42) அரணமாக (43) (அமைந்த இடத்துத் தங்கிய) படை நாப்பண் (44) அகநேர்பு, (49) மாட்ட, (தனக்கு என்று அமைத்த இல்லிலிருந்து), (54) சூழ, (58) இசைப்ப, (64) பள்ளியுள் (போய்), (66) உழையராக, (67) கண்படைபெறாது, (69) வேழத்தையும் (72) ஒழிந்

தோரையும் உள்ளியும், (74) மாசிந்தித்தும், (76) நெடிது நினைந்து (மறுநாள்) (77) விரலால் (78) வலந்திருத்தி (79) பாசறை (80) இன்றுயில் வதியுநன் என்க.

80—89: இவ்வடிகள் தலைவனைப் பிரிந்து துயருழந்து ஆற்றியிருத்தலே முறையென்று இருக்குந்தலைவியின் செவி நிறைய தேரிற் பூண்டமாவின் ஒலி ஒலித்தமை கூறும்.

காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மய்யல் கொண்டும் ஒய்யென வுயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கியிழை நெகிழ்ந்து
பாவை விளக்கிற் பருச்சுட ரழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
இன்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோர்
அஞ்செவி நிறைய வாலின

பதவுரை:—*(80) காணாள்-காணாதவளாய் [காணாமையாலே], துயர் உழந்து-(மேலும்) வருத்தமடைந்து (81) நெஞ்சு-(தன்) நெஞ்சை, ஆறு படுத்த-(கணவனுள்ள இடத்தே) போக்கியதால் தோன்றிய, நிறை தபு புலம்பொடு-நிறையென்னுங்குணங் கெடுதற்குக்காரணமான தனிமையோடே, (82) நீடுநினைந்து-(நாம் கணவன்பிரிந்தநிலையில் அவன் சொல்லைநினைந்து ஆறியிருத்தல் நலமோ? ஆற்றாமே உயிரையும் விட்டிடுதல் நலமோ? என்று) ஆழ்ந்து ஆலோசித்து, (ஆறியிருத்தலே நலமென்று தெளிந்தமையால்), தேற்றியும்-(தன்னைத்தானே) தேற்றிக்கொண்டும், ஓடு வளை திருத்தியும்-(பிரிவுத் துயரினால் உடம்பு இளைத்திருத்தல்பற்றிக்) கழலுகின்ற வளையைக் கழலவொட்டாமற் செறித்தும், (83) மய்யல் கொண்டும்-(இங்ஙனம் தன்னைத் தானே தேறுதல்புரிகையிலும் பிரிவுத்துயர் தலைகாட்டுதலால்) அறிவு மயங்கியும், ஒய்யென உயிர்த்தும் - (அவ்வறிவு மயக்கத்தால்) விரைய மூச்செறிந்தும், (84) ஏ உறு மஞ்ஞையின் - அம்பு தைத்த மயில்போல, நடுங்கி - நடுக்கமுற்று, இழை நெகிழ்ந்து-(அந்நடுக்கத்தாலே பூண்ட) அணிகலங்கள் நெகிழப் பெற்றும்,—(85) பாவை விளக்கில்-பிரதிமை யேந்திநின்ற தகளியிலே, பரூஉ சுடர்-பெரிய விளக்கின் சுவாலை, அழல-எரிந்துகொண்டிருக்க,—(86) இடம் சிறந்து-தனக்குள்ள இடமெல்லாம் (பொன்னாலும் மணியாலும்) சிறப்புப்பெற்று, உயரிய-ஓங்கியுள்ள, எழுநிலை மாடத்து-ஏழடுக்கு மச்சுக்கொண்ட மாளிகையில், (87) முடங்கு இறை-முடங்கியுள்ள வீட்டிறப்பினின்றும் [கூடல்வாயினின்றும்], சொரிதரும்-(மழை பெய்தலினால்) கீழே விழுகின்ற, மா திரள் அருவி - பெருமையையுடைய திரண்ட*

அருவிகளினுடைய, (88) இன் பல் இமிழ் இசை-இனிய பலவாகிய ஒலிக்கின்ற ஓசையில், ஓர்ப்பனள்-(தலைவன்வரவையே) எண்ணமிடுபவளாய், கிடந்தோள் - படுத்துக்கொண்டிருந்தவளுடைய, (89) அம்செவி நிறைய-அழகிய காது நிறையும்படி, ஆலின-ஒலித்தன: (அங்ஙனம் ஒலித்தவை எவையெனில்),—(எ-று.)

பாசறையிலிருத்தலினாலே தலைமகனைத் தன்பக்கத்திற் காணாமையால் துயர்மிகுந்து நெஞ்சை அத்தலைமகனிடத்துச் செலுத்தித் தனிமையை நன்குநினைந்து, 'நாம் ஆறியிருத்தலே முறை' என்று தானே தேறி, வளை திருத்தியும், ஆறியிருத்தல் முறையென்ற கருத்தோடு பிரிவுத்துயர் வருத்தமும் ஒருங்கே சேர மையலுற்றும், உயிர்த்தும் நடுங்கி இழைநெகிழ்ந்து, பாவை விளக்கின் பருஉச்சுடரழல எழுநிலைமாடத்துக் கூடல்வாயருவியிசையைக் கேட்டுத் தலைவன் வருகையையே யெண்ணமிட்டுக் கிடந்த தலைவியின் செவியிலே வென்று மீளுந் தலைவரின் தேர்க் குதிரைகளினொலி மகிழ்ச்சியுண்டாக வீழ்ந்தன என்பதாம்.

கூடல்வாய்நீர் விழுமோசையைக் கேட்டபோது தலைவர் குறித்த கார்காலம் வந்திட்டதனால் விரைவில் வந்துசேர்வர் என்று அதனையே சிந்தித்தவண்ணம் தலைவி படுக்கையிற் கிடக்க, பகைவரைவென்று பாசறையிலே இனிதுதுயின்றஅரசன் கார்காலம் தொடங்கியது கண்டு தன்சொல் தவறுதபடி விரைதலுற்று வரலாயினனென்க. நிறை-தன்மனத்தது பிறரறியாமை யடக்குங் குணம்: "நிறையெனப்படுவது மறைபிறரறியாமை." பிரிவுத்துயரால் வருந்திக்கிடக்குந்தலைமகட்கு - ஏவுற்ற மஞ்ஞையை உவமை கூறினர். பாவைவிளக்கு-வெண்கலம் வெள்ளி போன்ற பொருளாலே அமைத்த பிரதிமை கையிலேந்தியபடி சமைந்த விளக்கு. முடங்கிறை-மடங்கிய வீட்டிறப்பு: என்றது-நீர் விழுவதற்காக இறப்புக்களிலமையுங் கூடல்வாய். இவ்வடிகள் எழுநிலை மாடத்துக் கிடக்குந் தலைவியின் நிலைமையை விளக்கும்.

கீழே 'ஆலின' என்று கூறினர்: 89:—103 இவ்வடிகள் ஒலித்தவை தலைவனது தேர்ப் பூண்டமா என்றும், அத்தலைவர் வந்த வழியின் தன்மை இஃது என்றும் கூறும்.

வென்றுபிறர்

**வேண்டுபுலங் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசய வெல்கொடி யுயரி வலனேர்பு
வயிரும் வளையும் ஆர்ப்ப அயிர
செறியிலைக் காயா அஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி**

வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப் பிரலையொடு மடமா னுகள
எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துணைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

பதவுரை:—(89) வென்று - (பகைவரைச்) சயித்து, பிறர் (90) வேண்டு புலம் கவர்ந்த-அப்பகையரசர் விரும்பிய நிலத்தைக் கவர்தற்குத்துணையாக இருந்த, ஈண்டு பெரு தானையொடு-திரளுகின்ற பெரிய சேனையோடே, (91) விசயம் வெல் கொடி-வெற்றிக்கு அறிகுறியான வெல்கொடியை, உயரி-உயரஎடுத்து,—வலன் ஏர்பு - வெற்றிதோன்றியதனால், (92) வயிர்உம் வளைஉம் ஆர்ப்ப-கொம்பும் சங்கும் ஒலிக்கவும்,—அயிர-நுண்மணலில் முளைத்துள்ள, (93) செறி இலை-நெருங்கிய இலையையுடைய, காயா-காயாவென்னுஞ்செடி, அஞ்சனம் மலர - மைபோல் மலரவும், (94) முறி இணர் கொன்றை-தளிரையும் பூங்கொத்துக்களையு முடைய கொன்றை, நல் பொன் கால-நன்றாகிய பொன்னைப் போன்ற மலரைச் சொரியவும்,—(95) கோடல் குவி முகை-வெண் காந்தளின் குவிந்த மொட்டுக்கள், அம் கை அவிழ-அகங்கைபோல விரியவும், (96) தோடு ஆர் தோன்றி-இதழ் நிறைந்த தோன்றி, குருதி பூப்ப - இரத்தம்போலப் பூப் பூக்கவும்,—(97) கானம் நந்திய செந்நிலம் பெரு வழி-காடுதழைத்த சிவந்த நிலத்துப் பெருவழியிலே, (98) வானம் வாய்த்த வாங்கு கதிர் வரகின்-மழை தக்கபடிபெய்ய(அதனால்விளைந்த)வளைந்த கதிரைப் பெறும் வரகு பயிரிடத்தே, (99) திரிமருப்பு இரலையொடு - முறுக்கின கொம்பையுடைய புல்வாய்க்கலையோடே, மடமான் உகள-மடப்பம் பொருந்திய பெண்மான் துள்ள,—(100) எதிர் செல் வெள் மழை பொழியும் திங்களில்-(முன்பு) எதிர்சென்ற வெண்புயல் (இப்போது கருக்கொண்டு மழையைப்) பெய்கின்ற கார்காலந் தொடங்கும் ஆவணியில், (101) முதிர்காய் வள்ளிகாடு-முற்றுங் காயையுடைய வள்ளிக்காடு, பிறக்கு ஒழிய-பின்னாக,—(102) துணை பரி துரக்குஞ் செலவினர்-விரைந்துசெல்கின்ற குதிரையைப் பின்னும் விரைவாகச்செலுத்துகின்ற செலவையுடைய தலைவரின், (103) வினை - போர்த்தொழிலிலே, விளங்கு - திறமை விளங்கப் பெற்ற, நெடுந்தேர் - பெரியதேரிலே, பூண்ட-பூட்டப்பட்ட, மா-குதிரைகள்:(எ-று.)—(89)'ஆலின' என்று வந்த முற்றுவினைக்கு, 'எவை?' என்று ஒருகேள்வி பிறத்தலின், ஆலினவை இன்னவை யென்று விளங்க 'நெடுந்தேர் பூண்டமா' என்று இங்குக் கூறுகின்றார்.

(88) இடந்தோள் (89) அஞ்செவிநிறைய (103) மா (89) ஆலின என்று கூறியதன் மூலம், தலைவன் தலைவியர் பிரிவுத்துயர்நீங்கச் சேர்ந்தனர் என்பதைத் தொனிக்கும்படி வைத்த கவிநயம் பாராட்டற்கு உரியது.

விளக்கவுரை:—மீண்டுவந்த வழியின் தன்மை-(92) "அயிர (93), செறியிலை காயா மலர, (94) கொன்றைகால, (95) கோடல் அவிழ, (96) தோன்றிபூப்ப, (97) நந்திய செந்நிலப்பெருவழி" என்பவற்றால் விளக்கப்பட்டது. அப்படிப்பட்ட பெருவழியில் (98) வரகின் (99) இரலையொடுமான் உகள, (100) மழைபொழியுந்திங்களில் (101) வள்ளியங்காடு பிறக்கொழிய, (102) தூரக்குஞ் செலவினரின் (103) தேர்பூண்டமா (89) ஆலின என்க.

காயா கருநிறமுள்ளதாதலின், அதன்மலர் அஞ்சனம் போலும். கொன்றையின் பூப் பொன்னிறத்தன வாதலின், 'கொன்றை பொன்கால' எனப்பட்டது. காந்தள் கை போன்றிருக்கு மென்பதை "காந்தளிரவலர்போற் கையேற்ப" எனப் பிற்காலத்தார் கூறியிருத்தலினுங் காணலாம். வானம் வாய்த்த-மேகத்தை யொத்த எனினுமாம்: வரகின்கதிர் மேகம்போன்று கறுத்திருக்குமென்பதை "வரகுபோர் மஞ்செனு வரைக் காரணைந்து" என வருவதனாலும் உணரலாம். வள்ளி-வள்ளிக் கொடி. வள்ளிக்கிழங்குதோன்றும் வள்ளிக்கொடியில் காய் காய்த்தலும் உண்டு என்பது அறிக. வள்ளியங்காடு, அம்-சாரியை; அழகிய எனினுமாம். பிறக்கு-பின்னே. எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களில் என்றவிடத்து, திங்களில்-முன்பனி தொடங்குந் திங்களிலே யென்றனர், ஆசிரியர் நச்சினார்க்கினியர். "கூதிர் வேனி லென்றிரு பாசறை" என்று தொல்காப்பியனார் கூறிய இருவகைப் பாசறையில், தலைவன் வேனிற்பாசறையில் தங்கி மீள்கின்றானென்று இந்தமுல்லைப்பாட்டிற் கூறுதலால் முன் பனித்திங்கள் எனக் கூறுவது பொருந்துவதாகத் தோன்றவில்லை.

(5) எழிலி (6) பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலையில், (11) பெருமுது பெண்டிர் (7) (யாம்) அருங்கடிமூதூர் மருங்கிற் போகி,...(8) நெல்லொடு (9) முல்லை (10) தூஉய், கைதொழுது (11) விரிச்சிநிற்ப, (13) ஆய்மகள் (12) கன்றின் (13) அலமரல் நோக்கி, (14) நடுங்குசுவல் அசைத்தகையள் (15) 'கோவலர்பின் நின்று உய்த்தர,...(16) இன்னே தாயர்வருகுவர்' என்போள் (17) நன்மொழிகேட்டனம்: அதனாலும், (18) நல்லநல்லோர் வாய்ப்புள்ளாலும், (20) தலைவர் (18) தெவ்வர் (19) முனைகவர்ந்து கொண்டதிறையராய் வினைமுடித்து (20) வருதல்வாய்வது; நீ நின் (21) பருவரல் எவ்வங் களை, மாயோய்! எனக் (22) காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து (23) புலம்பு முத்துறைப்ப,—(79) பாசறையில் (80) இன்றுயில்வதியுநனை (த் தன்மருங்கு) காணாள் (மேலும்) துயருழந்து (81) (பிறகு) நெஞ்சை ஆற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு (82) நீடு நினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும் (83) மய்யல்கொண்டு உயிர்த்தும் (84) நடுங்கி நெகிழ்ந்து, (85) சுடர் அழல, (86) எழுநிலைமாடத்து (87) முடங்கிறை சொரிதரும் அருவி (88) ஓர்ப்பனள் கிடந்தோள் (89) அஞ்செவி நிறைய, (102) துணைபரிதூரக்குஞ் செலவினர் (103) தேர் பூண்டமா (89) ஆலின என்று முடிபு காண்க. **நச்சினார்க்கினியர்** வேறுமுடிபு காட்டுவர்.

"வாயிலுசாவே தம்முளுமுரிய" "எல்லாவாயிலுமிருவர்தேஎத்தும், புல்லியமகிழ்ச்சிப்பொருளவென்ப" என்ற சூத்திரங்களினால், தலைவன் தலைவியர்க்கு மகிழ்ச்சிதோன்றும் பொருளை வாயில்கள் தமக்குள் கூறலாமென்றிருத்தலால், அவ்வாறு கூறியது இதுஎன்பர் நச்சினார்க்கினியர். [அதாவது, தலைவி ஆற்றியிருந்தவழித் தலைவன் அக்காலத்தே வந்ததனைக்கண்டு வாயில்கள் தம்முட்கூறியது இது என்றபடி]

இதிலுள்ள அருமையான உவமைகள் வருமாறு:—கடல் பருகி நீரொழுக எழுந்து உலகம்வளைக்கும் கார்மேகத்துக்கு-மாவலிவார்த்த நீரொழுக ஓங்கிவளர்ந்த கரியதிருமாலும் (அடிகள் 1-6); வில்லிலே அம்பறுத்தூணியைத் தொங்கவிட்டிருப்பதற்கு-துறவி தன் காவிவஸ்திரத்தை முக்கோலிலே தொங்கவிடுதலும் (37-39); துகின்முடித்துப் போர்த்த மூதாளர் தூக்கமயக்கத்தால் அசைதற்கு - பூத்த அதிரல் கொடித்தூறு காற்றுக்கு அசைதலும், (51-53); வேழத்தின் வெட்டிய கை பதைத்தற்கு-வெட்டுண்ட பாம்புபதைத்தலும் (70) உவமையாம்: அன்றியும், காயாமலர்க்கு அஞ்சனமும் (93), கொன்றைமலர்க்கு நன்பொன்னும் (94), கோடலுக்குக் கையும் (95), தோன்றிப் பூவிற்குக் குருதியும் (96) உவமை யெனக் காண்க.

முதுபெண்டிர் ஊர்ப்பக்கத்தேயுள்ள திருமாலின்கோயிலிற் சென்று நெல்லும் முல்லையுந்தூவி வணங்கி விரிச்சிகேட்டலும், காட்டைவெட்டிச் சென்று பாடிவீடு அமைத்தலும், பாடிவீட்டின் முற்றத்து நாற்சந்தியிலே யானையைக் காவலாக அமைத்தலும், யானைப்பாகர் வடமொழிபயிற்றி யானைக்குக் கவளமூட்டுதலும், வில்லரணமே அரணமாகப் பலபடைகளுக்கும் அமைத்த இடத்திற்கு நடுவில் அரசனுக்கென்று வண்ணத்திரையினால் வேறோர் ஈரறைகொண்ட வீடு நேர்தலும், ஒள்வாள் கச்சிற்பூண்ட மங்கையர் விளக்கம் நந்துதொறும் பந்தங்கொண்டு கொளுத்துதலும், பணிமடங்கும்போது மணியடித்துவிடுதலும், பணிமடங்கிய நடுயாமத்தில் மெய்காப்பாளர் தூக்க மயக்கத்துடனே அசைந்து காவலாகச் சுற்றித்திரிதலும், பொழுதளந்தறிவோர் நாழிகைவட்டிலாற் பொழுதையறிந்து இத்துணை நேரமாயிற்றென்று காரியத்தையாராயும் அரசற்கு இசைத்தலும், யவனர்களாற் புலிச்சங்கிலிவிட்டு அழகிதாக அரசனுக்கென்று அமைக்கப்பட்ட இல்லினுள்ளே வலியகயிற்றால் திரையைமறித்து வளையக்கட்டி இரண்டாக வகுக்கப்பட்ட பள்ளியறையிற் பின்னறையிலே அரசன் பள்ளிகொள்ளுதலும், முன்னறையிற் சட்டையிட்ட ஊமை மிலேச்சர் பள்ளியறைக்குக் காவலாகச்சூழ்ந்திருத்தலும், போர் செய்த அரசன் தான் தங்கிய பாசறையில் இருக்கும் நிலைமையும், பின்னர் வென்ற அவ்வரசனே வெற்றிக்கொடியை யுயர்த்தவண்ணம் வயிரும் வளையும் ஆர்ப்பச் சேனையோடு வருதலும் முதலியன, இதில் அறியக்கிடக்கும் பண்டைக்காலச் செய்திகளாம். ஏழடுக்கு மாளிகையும் நால்வகைப்படைகளும், பண்டைக்காலத்தவர் பெற்றிருந்தன ரென்பதும் பிறவும் இதில் நன்கு விளங்கும்.

முல்லைப்பாட்டு முற்றிற்று.

அரும்பதவகராதி

(எண்: செய்யுள்வரியின் எண்.)

அகம்-வீடு, 44 [14
அசைத்தல்-கட்டுதல்,
அசைநிலை - தங்கவைத்த நிலைமை, 38
அதிரல்-புனலிப்பூ, 51
அயிர்-நுண்மணல், 92
அயில்நுனை-கூரிய முனை, 34
அரணம்-காவல், 42
அருப்பம்-அரண், 26
அலமரல்-சுழற்சி, 13
அலரி-மலர், 10
அழலுதல்-எரிதல், 85
ஆய்மகள் - இடைப் பெண், 13
ஆலுதல்-ஒலித்தல், 89
ஆற்றுப்படுத்தல்-இருக்குமிடத்துப் போக்குதல், 81
இசை-ஓசை, 88
இணர்-பூங்கொத்து, 94
இமிழ்தல்-ஒலித்தல், 4
இரலை-மான்வகை, 99
இறை - வீட்டிறப்பு, 86
ஈண்டுதல்-திரளுதல், 90
உயங்கும் - வருந்துகின்ற, 74
உரையா நா, 65
உவலை-தழை, 29
உறைப்ப-துளிப்ப, 23
எஃகம்-வாள், 68
எருக்கி-வெட்டி, 25
எவ்வம்-துன்பம், 21
எழிலி-மேகம், 5
எழினி-திரை, 64
ஏ-அம்பு, 84
ஏமுற - காவலாகப்பொருந்த, 27
ஏர்பு-எழுந்து, தோன்றி, 4, 91
ஓய்யென - விரைதற் குறிப்பு, 83
ஒழுகுதல்-நெடுகச் செல்லுதல், 29
கடகம்-கையணி, 76
கடி-காவல், 7
கண்டம்-பல்வண்ணத் திரை, 44
கண்ணி-மாலை, 71
கண்படை-தூக்கம், 67
கலுழ்-மனத்துயரம், 22
கவலை - பலதெருக் கூடுமிடம்: 30
கவைமுட்கருவி, 36
காயா அஞ்சனமலர, 93
காழ்-குத்துக்கோல், 44
கிடுகு-கேடயம், 41
குத்தி-நட்டு, 40, 41
குந்தம்-கைவேல், 41
குளகு - விலங்கினுணவு, 33
குறுநீர்க்கன்னல், (கன்னல்-நாழிகைவட்டில்) 58
கைப்ப-ஊட்ட, 36
கொடுஞ்செலவு - விரைந்துசெல்கை, 5
கொன்றை பொன்கால, 94
கோடற் கையவிழ, 95
கோடு-மலை, 5
சிதர்-மழைத்திவலை, 52
சிறந்து-மிகுந்து, 22
சுட்டுதல்- குறித்துவைத்தல், 77
சுரை-திரிக்குழாய், 47
சுவல்-தோள், 14 [59
செறிவு-நெருங்குகை,
சேண்நாறு - வெகுதூரம் மணம்வீசுகிற, 25
சோறுவாய்த்தல் - செஞ்சோற்றுக்கடனைக் கழித்தல், 72
ஞாண்-கயிறு, 63
தபுதல்-கெடுதல், 81
திறை-கப்பம், 19
துமிபு-துண்டித்து, 72
தெவ்வர்-பகைவர், 18
தேம்படுதல்-மதம் பாய்தல், 31
தேம்பாய்தல் -தேன்பரத்தல், 71
தொடுத்தல்-கட்டுதல்,
தோடு-இதழ், 96 [12
தோன்றி - செங்காந்தள், 96
நகைதாழ்தல் - விளக்கந் தங்குதல், 78
நசை-விருப்பம், 67
நடுநாள்-நள்ளிரவு, 50
நந்துதல்- தழைத்தல், 97
அவிதல், 49
நள-அகலம், 1
நன்னர்-நன்று, 17
நாப்பண்-நடு, 43 [39
நாற்றி-தொங்கவிட்டு,
நிழற்றிய-ஒலியடங்கிய, 50
நிறை - தன்மனத்தது பிறரறியாதபடி யடக்குங் குணம், 81
நீடுநினைதல் - ஆழ்ந்து ஆலோசித்தல், 82
பசலை-வருத்தம், 12
படாஅர்-புதர், 51
படிவம்-விரதம், 37
படுதல்-ஒலித்தல், 28
பருவரல்-மனத்தடுமாற்றம், 21 [75
பனித்தல்-நடுங்குதல்,
பாடி-படைவீடு, 28
பாடு-ஒலி, 4
பாவைவிளக்கு, 85
பிடவம்-ஒருசெடி, 25
பிறக்கு-பின்புறம் 105
புணரி-கடல், 28
புதல்-தூறு, 25
புரிசை-மதின், 27
புலம்-நிலம், 90
புலம்பு -தனித்திருக்கை, அல்லது அழுகை, 23, 81
புழை-சிறுவாயில், 26
புறம்-முதுகு, 45
புறவு-காடு, 24

புன்மாலை, 6
பெருமுதுபெண்டிர், 11
பொறித்த - வைத்த, அடையாளமாகக்கொண்ட, 2
மஞ்ஞை-மயில் 84
மத்திகை - குதிரைச்சம்மட்டி, 59
மா-இலக்குமி, 2
மாட்ட-கொளுத்த, 49
மாட்டி-அழித்து: 'மாள்' என்றதன் பிறவினையான மாட்டு:பகுதி, 26
மாயோய் - மாமைநிறத்தையுடையவளே: 21 (மாமை-பிரிவில் நாருரித்த ஆம்பல் தண்டுபோல் தோன்றும் நிறம்)
முக்கோல், 38
முத்து-கண்ணீர், ஆகுபெயர், 23
முதிர்காய் வள்ளி, 101
முற்றம்-திறந்தவெளி, 30
முறி-தளிர், 94
முனை-பகைவர்புலம், 19
மெய்ப்பை-சட்டை, 6
வயிர்-ஊதுகொம்பு, 92
வரி-நிறம், 47
வலம்-வெற்றி 78
வலன் - வலப்புறம், வெற்றி, 4, 91
வளி-காற்று, 52
வளை இ-வளைந்து, 1
வாங்குதல்-வலித்துக்கட்டுதல், வளைதல், 40, 42
வாய்ப்புள்-நிமித்தமாகிய நற்சொல், 18
வாய்வது-உண்மை, 20
வானம் வாய்த்தல்-மழை தக்கபடி பெய்தல், 98
வீ-மலர், 9
விரிச்சி-உபசுருதியாகிய நற்சொல், 11
வினை-போர்ச்செயல், 19
வை-கூர்மை, 73

பயிற்சிவினாக்கள்.

(1) முல்லைப்பாட்டு என்று இதற்கு ஏன் பெயரிட்டனர்? முல்லைக்குரிய சிறுபொழுது பெரும்பொழுதுகள் எவை?

(2) முல்லைக்கு ஏற்ற புறத்திணை எது? எப்படி அது ஏற்றது?

(3) விரிச்சிகேட்டலை நமது நூலிற் கூறியபடி தெளிவுபெற வரைக.

(4) பாடி எவ்வாறிருந்த இடத்தில் எவ்வாறு அமைக்கப்பட்டது? அங்கு அரணம் எவ்வாறு அமைந்தது?

(5) ஒள்வாள் கச்சிற்பூண்ட மங்கையர், பெருமூதாளர், உரையா நாவிற் படம்புகு மிலேச்சர்—இவர்கட்குப் பாடிவீட்டில் யாதுயாது பணி?

(6) மாலைப்போது வந்தபின் போர்க்குச்சென்ற அரசன் யாது செய்வான்? எப்போது கண்படுத்தற்குச் செல்வான்? (குறுநீர்க்கன்னல் வினைத்தென்றிசைப்பக் கண்படை கொள்ளச்செல்வான்.)

(7) அரசன் கண்படை பெறுமைக்கு யாது காரணம்? கண்படை பெறு மன்னவன் எவ்வாறு இருந்தான்? அவன் சிந்தித்து கெடிது நினைவன எவை?

(8) சோறுவாய்த்தல், அரசிருந்துபனிக்கும் முரசு முழங்கு பாசறை—விளக்குக.

(9) இன்றுயில்வதியுநற் காணாத தலைவி கிடக்கும் நிலையை எவ்வாறு காட்டியுள்ளார்? (80—88.)

(10) கானம்நந்திய பெருவழி எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?

(11) காயா, கொன்றை, தோன்றி, இரலை-இவற்றுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழியுடன் இவற்றைக் கூறுக.

(12) இப்பாட்டாலறியப்பெறும் பண்டைக்காலச் செய்திகள் எவை?

இந்த முல்லைப்பாட்டு அச்சாகுங்கால் இப்பதிப்பினைப் பார்வையிட்டுப் பிழைதிருத்திச் செம்மையுற ஆக்கியவர், சென்னை விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் வித்வான் C. ஜெகந்நாதாசாரியர், M.A., L.T., Dipl. Geog. ஆவர்.

ஜகன்மோகினி அச்சகம் சென்னை-5.

மதுரைக்காஞ்சி.

மதுரைக்காஞ்சி என்ற இது, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்தம் பல்வேறு நிலையாமையைச் செவியறிவுறுத்தற்கு மாங்குடி மருதனார் பாடியது. இது, 782 அடிகளை யுடைத்தாய் ஏனைய பாட்டுக்களினும் பெருகியிருத்தலின், 'பெருகுவள மதுரைக்காஞ்சி' எனப்படும்.

'மதுரைக் காஞ்சி' என்றதற்கு—மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சி எனப் பொருள் விரித்தனர் நச்சினார்க்கினியர்; இஃது ஏழனுருபும் பொருளு முடன்றொக்க தொகையாகும். மதுரையிடத்து என்று நினைப்பிட்டது, அறுதியாயிருக்கைக்காக. *தேர்த்தட்டிற் கூறிய வார்த்தை, கடற்கரையிற் கூறிய வார்த்தை என்று நினைப்பிட்டது, அறுதியா யிருக்கைக்காக வன்றோ! அங்ஙனே கொள்ளவேண்டுவது இங்கும். அதுபற்றி யன்றோ இறுதி வெண்பாக்களிலும், இம் மதுரைக்காஞ்சியை "கூடற்றமிழ்" என்று பேரிட்டு வழங்கியதும். இந்தப் பெருமை நினையாது, ஒருவர் 'ஒருகால் மதுரையைப் பாடுமாற்றான் உணர்த்திய காஞ்சி என இத்தொடர் விரிக்கப்படுதல் பொருந்துவதாம்' என்று எழுதினர். அஞ்ஞான்று, மதுரையைப் பாடுவதுமட்டும் சிறப்புப்பெற்றுக் காஞ்சித்திணை வீறுபெறாதொழியும்; ஆனால், முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, என்ற நூற் பெயர்களில் திணைக்கு வீறுதோற்ற வன்றோ பெயரிடப்பட்டுள்ளது! ஆதலின், அவற்றொடு ஒருசேரவைத் தெண்ணப்படும் இந் நூலுக்கும் காஞ்சித் திணை வீறுதோன்றவன்றோ பெயரிட்டுள்ளனர் மருதனார். மதுரைக் காஞ்சியின் நுண்பொருளும் இக் கருத்தையன்றோ அரண்செய்வது. ஆகவே இப் பாட்டிற்குத் திணைப்பெயராற் பெயர் கூறினார் மருதனார் என்பது பெறப்பட்டது.

இனி, இத் திணைப்பெயரும் தொல்காப்பியனார் கூறிய திணைப்பெயர்ப் பொருளையே தனக்குப் பொருளாகக்கொண்டு இப் பாட்டகத்து வந்துள்ளது. அஃதாவது—"காஞ்சிதானே பெருந்திணைப்புறனே" என்பதனால், காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று; அக் காஞ்சி "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும், நில்லாவுலகம் புல்லிய நெறித்தே" என்பதாம். இதன் பதப்பொருள் பின்வருமாறு:—பாங்கு அரு சிறப்பின் - தனக்குத் துணையில்லாத வீடுபேறு நிமித்தமாக, பல் ஆற்றானும்-அறம் பொருள் இன்பம் என்னும் பொருட்பகுதியானும் அவற்று உட்பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையும்

---

*தேர்த்தட்டிற் கூறிய வார்த்தை என்றது—கண்ணபிரான் தேர்த்தட்டிடத் திருந்தே அருச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்யுங்காலத்துக் கூறிய "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய..............மாசுச:" என்ற வார்த்தை. கடற்கரையிற் கூறிய வார்த்தை என்றது—இராமபிரான் தன்னைச் சரணமடைந்த விபீடணனை ஏற்குங் காலத்துக் கூறிய "ஸக்ருதேவ ப்ரபந்நாய..............மம" என்ற வார்த்தை. இன்ன இடத்திருந்து சொன்னது இது என்று அறுதியிடல் நோக்கவேண்டுவது.

முதலியவற்ருனும், நில்லா உலகம் - நிலைபேறில்லாத உலகியற்கையை, புல்லிய - பொருந்திய, நெறித்து - நன்னெறியினையுடைத்து அக் காஞ்சி என்றவாறு. எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமை சான்றோர் அறையுங் குறிப்பினது காஞ்சித்திணை என்பது பொருளாயிற்று: இப் பொருளே மாங்குடி மருதனார் தமது பாட்டகத்துக் கோடல் தேற்றம்: ஆகலின், பன்னிரு படலம் முதலிய நூல்களாற் கூறியுள்ள காஞ்சித்திணைப் பெயரன்று, ஈண்டு 'மதுரைக் காஞ்சி' என்ற பெயரகத்து வந்துள்ள திணைப்பெயர் என்பது குறிக்கொள்ளத்தக்கது. என்னை? பன்னிரு படலத்திலோ "வஞ்சியுங் காஞ்சியும் தம்முண் மாறே" என்றது சூத்திரம்; வஞ்சி மேற்செல்லலானும் காஞ்சி எஞ்சாதெதிர்சென்று ஊன்றலானும் அப் படலத்திற் கூறிய திணைப்பெயர் [நிலையாமை கூறவந்த] இப் பாட்டிற்குப் பொருளாகாமை நன்கு உணர்க.

இப் பாட்டு, தொடக்கத்தும் இடையிடையே சிலவிடத்தும் வஞ்சியடிகள் விரவிவந்த நேரிசையாசிரியப்பாவாகும். ஆசிரியப் பாவில் வஞ்சியடிகள் வரலாமென்பதை "ஆசிரிய நடைத்தே வஞ்சி" என்று தொல்காப்பியனார் பெறவைத்தமை காண்க.

இதனை இயற்றியவர்—மாங்குடி மருதனார். இவரை மாங்குடி கிழார் என்றும் மதுரைக்காஞ்சிப் புலவர் என்றும் வழங்குவர் எனத் தெரியவருகிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு இவர்பாலிருந்த நன்மதிப்பு "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவனாக, உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர்பாடாது வரைக என் நிலவரை" என்று புறப்பாட்டில் (செ. 72) அவன் கூறிய வஞ்சினத்தால் அறியலாம். மருதனார் வாட்டாற்று எழினியாதன் என்பவனைப் பாடியுள்ளார். இவர் இயற்றிய செய்யுட்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, திருவள்ளுவ மாலை முதலியவற்றில் உள்ளன.

மதுரைக்காஞ்சியின் பாட்டுடைத் தலைவன் — தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பான். இவன் இளமைப் பருவத்திலேயே தலையாலங்கானத்துக் * கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையோடு போர் செய்து வென்று அவனைச் சிறைப்படுத்தியதல்லாமல், சோழன் இதியன் எழினி எருமையூரன் இருங்கோவேண்மான் பொருநன் என்பவரையும் வென்றவன்: வேள் எவ்வியின் மிழலைக் கூற்றத்தையும், பழைய வேளிருடைய முத்தூற்றுக் கூற்றத்தையும் கைக்கொண்டவன்; புலவர்களிடத்து அன்புள்ளவன். இவ்வரசன் "நகுதக்கனரே" என்ற இச் செய்யுளைச் செய்துள்ளதனல், செய்யுளியற்றுந் திறமுடையவனென்பது,

* இந்த ஊர் தலையாலங்காடு என்று வழங்கப்படுமென்றும், தேவாரம் பெற்ற தலமென்றும், சோணாட்டிலுள்ளதென்றும் கூறுப.

கூறுமலே விளங்கும். இந் நெடுஞ்செழியனைப் பாடிய புலவர்கள்—குடபுலவியனார், கல்லாடனார், இடைக்குன்றூர்கிழார் என்பவர்கள்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இந்த மதுரைக்காஞ்சிக்கும் சிறந்த உரை எழுதியுள்ளார்: பெரும்பாலும் அவ்வுரையை ஆதாரமாகக்கொண்டு, பயில்வார்க்கு விளங்குமாறு எளிய நடையில் இவ்வுரை எழுதப்படுகின்றது.

அடிகள் **1—23.** ஒரு தொடர்:—நெடுஞ்செழியன் முன்னோரின் செங்கோன்மைச் சிறப்புக் கூறும்.

ஓங்குதிரை வியன்பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பாகத்
தேன்றூங்கும் உயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியனாண்மீ னெறியொழுகப்
பகற்செய்யும் செஞ்ஞாயிறும்
இரவுச்செய்யும் வெண்திங்களும்
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க
மழைதொழில் உதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த
ஓங்குநிலை வயக்களிறு
கண்டுதண்டாக் கட்கின்பத்து
உண்டுதண்டா மிகுவளத்தான்
உயர்பூரிம விழுத்தெருவிற்
பொய்யறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாந்தரொடு
நல்லூழி அடிப்படரப்
பல்வெள்ளம் மீக்கூற
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!

(இதன் பொருள்):—*(1) வியல் பரப்பின் - அகலத்தையுடைய நீர்ப்பரப்பின்கண்ணே, ஓங்கு திரை - மிக்க அலைகளையுடைய, (2) ஒலி முந்நீர் - ஒலிக்குங்கடலை, வரம்பு ஆக - எல்லையாக*[க்கொண்டு], *(3) தேன் தூங்கும் உயர் சிமையம் - தேனிறால் தொங்கிநிற்கும் உயர்ந்த உச்சியையுடைய, (4) மலை நாறிய - மலைகள் தோன்றிய, வியல் ஞாலத்து - அகலத்தையுடைய உலகத்தின்கண், (5) வலம் மாதிரத்தான் - வலமாக ஆகாயத்தின்கண்ணே, வளி கொட்ப - காற்றுச்சுழல, (6) வியல் நாள்மீன் - அகலத்தை*

யுடைய [அசுவினிமுதலாய] நட்சத்திரங்கள், நெறி ஒழுக-தாம் நடக்கும் நெறியின்கண்ணே நடக்க, (7) பகல் செய்யும்-பகற் பொழுதையுண்டாக்கும், செஞ்ஞாயிறுஉம் - சிவந்த சூரியனும், (8) இரவு செய்யும் - இராப்பொழுதை யுண்டாக்கும், வெள் திங்கள்உம்-வெள்ளிய சந்திரனும், (9) மைதீர்ந்து கிளர்ந்து விளங்க-குற்றமற்றுத் தோன்றி விளங்க, (10) மழை தொழில் உதவ-மேகம் தானே பெய்தற்றொழிலை வேண்டுங்காலத்தே தந்துதவ, மாதிரம் கொழுக்க-திசைகளெல்லாம் தழைப்ப, (11) தொடுப்பின் வித்தியது-ஒருவிதைப்பின்கண்ணே விதைத்த விதை, ஆயிரம் விளைய-ஆயிரமாக விளைய, (12) நிலன்உம்-விளைநிலங்களும், மரன்உம்-மரங்களும், பயன் எதிர்பு நந்த-[பல்லுயிர்க்கும்] பயன் கொடுத்தலை ஏறட்டுக்கொண்டு தழைப்ப, (13) நோய் இகந்து-மக்கட்குப் பசியும் பிணியும் நீங்கி, நோக்கு விளங்க-அழகு விளங்க, (14) மிக பொலிந்த-மிகவும் விளக்க முற்ற, (15) ஓங்கு நிலை வய களிறு-(உலகத்தைத் தாங்குதலில்) ஓங்குந்தன்மையையுடைய வலிய திக்கயங்கள், (14) மே தக-(நுங்குலத்து முன்னோர் தாங்குதலின்) பொறை நீங்கி வருத்த மற்று மேம்பாடுதக, (.7) உண்டு தண்டா மிகு வளத்தான்-உண்டு அமையாத உணவுமிகுகின்ற செல்வத்தோடே, (16) கண்டு தண்டா கட்கு இன்பத்து-நோக்கியமையாத கண்ணுக்கு இனிமையினையும், (18) உயர் பூரிமம்-உயர்ந்த சிறகுகளையும் உடைய, விழு தெருவில்-சீரிய தெருவிலிருக்கும், (19) வாய் மொழியால் (20) புகழ் நிறைந்த-உண்மை மொழிகளையே எக்காலமும் கூறுதலாற் பெற்ற புகழ்நிறைந்த, ('9) பொய் அறியா (20) நல் மாந்தரொடு-பொய்யைக் கேட்டறியாத நல்ல அமைச்சருடனே, (21) நல் ஊழி அடி படர-நன்றாகிய ஊழிக்காலமெல்லாம் தமக்கு அடிப்பட்டு நடக்க, (22) பல் வெள்ளம் மீ கூற-பல வெள்ளமென்னும் எண்ணைப்பெற்ற காலமெல்லாம் அரசாண்ட தன்மையை மேம்படச் சொல்லும்படி, (23) உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக-உலகத்தையாண்ட உயர்ச்சிபெற்றோர் குடியிலுள்ளவனே! (எ-று).

(10) மாதிரம் கொழுக்க (11) வித்தியது விளைய (12) நிலனும் மரனும் நந்த (10) மழை தொழில் உதவ என இயைக்க. மற்றும், (5) வளிகொட்கையினாலே (i0) மழை தொழில் உதவ என இயைக்க.

இனி, (4) வியன் ஞாலத்து (10) மழை தொழிலுதவ (6) நாண்மீன் நெறியொழுக, (7) ஞாயிறும் (8) திங்களும் (9) விளங்க (13) நோக்குவிளங்கக் (15) களிறு (14) மேதக (20) நன் மாந்தரொடு (21) ஊழி(க்காலமெல்லாம்) அடிப்பட்டு நடக்கும்படி (22) மீக்கூற (2) ஒலிமுந்நீர்வரம்பாக (23) உலகம் ஆண்ட உயர்ந்தோர்மருக!—எனமுடிக்க. (10) மழைதொழிலுதவ என்பதனை முதலிற் கூட்டியது, மழையின் இன்றியமையாமை நோக்கி;

'மழையின்றி மாநிலத்தார்க்கில்லை' என்றார், நான்மணிக்கடிகையிலும்.

கருத்துரை:—கடலை யெல்லையாக்கொண்டு ஓங்கிய மலைநாறிய இவ்வியன் ஞாலத்து, விசும்பின்கண் வலமாகக் காற்று சுழலுதலாலே மழை வேண்டுங்காலத்துப் பெய்தலைச்செய்து உதவ அதனாலே திசைகளெல்லாம் தழைப்ப, வித்தியது ஆயிரமாக விளைய, நிலனும் மரனும் பயன்தழைப்ப, இன்னவை நிகழவும், அசுவினிமுதலாய நாண்மீன்கள் தாம்செல்லும் நெறியே ஒழுகவும், ஞாயிறும் மதியும் குற்றமற்றுத்தோன்றி விளங்கவும், மக்கட்குப் பசியும் பிணியும் நீங்கி அழகு விளங்கவும், உலகந்தாங்கும் அட்டதிக்கயங்கள் பொறைநீங்கி மேதகவுறவும், உண்ணவுண்ண எஞ்சாத மிகு வளத்தோடே காணக்காண வமையாத காட்சியினிமை வழங்கும் உயர்ந்த வீடுகளின் வரிசையினைக்கொண்ட தெருவிலுறையும் வாய்மையாளராகிய நல்லமைச்சருடனே ஊழிக்காலமெல்லாம் தமக்கு அடிப்பட்டு நடக்கும்படி பல்லாண்டு பல்லாண்டாகச் செங்கோலோச்சிய சிறப்பை மீக் கூறும்படி இவ்வுலகத்தையாண்ட உயர்ச்சிபெற்ற பாண்டியர் குடியில் உதித்தவனே!—என நெடுஞ்செழியன் விளிக்கப்பட்டமை கருத்து.

விசேடவுரை:—முந்நீர்-கடல்; ஆகுபெயர். சிலப்பதிகாரத்து அடியார்க்குநல்லார், "முச்செய்கையையுடைய நீர் முந்நீர் என்பது; முச்செய்கையாவன-மண்ணைப் படைத்தலும் மண்ணையழித்தலும் மண்ணைக் காத்தலுமாம்" என உரை எழுதியுள்ளார். நச்சினார்க்கினியரும், பெரும்பாணில் "முந்நீர் நாப்பண்" (441) என்றவிடத்து, "நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலையுடைய நீர்க்கு நடுவே" என உரை கண்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாற்று. சீவகசிந்தாமணியிலும் (செ. 5) நச்சினார்க்கினியர் "நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலுமுடைமையின், முந்நீர் ஆகுபெயர்" என்று கூறியுள்ளார். மற்றும், இம் மதுரைக்காஞ்சியிலேயே, "இருமுந்நீர்ப் பேஎம் நிலைஇய விரும்பௌவத்து" (75-76) என்றவிடத்து, 'முந்நீர்' என்பதற்கு 'மூன்று நீர்மையையுடைய' எனப் பொருள் கண்டிருத்தலும் காணத்தக்கது. இங்ஙனிருப்பவும், முந்நீர் - மூன்று வகைப்பட்ட நீர் எனக்கொண்டு, "யாற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீரு முடைமையால், கடற்கு முந்நீரென்று பெயராயிற்று" என்றது புறநானூற்றுப் பழையவுரை (செ. 9). அங்ஙனமே, திருவாய்மொழி 'முந்நீர் ஞாலம் படைத்த' (3-2-1) என்றவிடத்து, "ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷ ஜலமென்று சொல்லுகிறவற்றை' என்றது ஈடு. வரம்பு-எல்லை; 'முந்நீர் வரம்பாக...... வியன்ஞாலம்' என்றது, 'தெண்கடல் வளாகம்' என்றபடி. 'திரைதரு முந்நீர் வளாகமெல்லாம்' என்றது கலித்தொகையும். 'மலைநாறிய வியன்ஞாலம்' என்றது, முற்படமலை தோன்றியமை

பற்றி; 'மாமலை ஞாறிய ஞாலம்' என்றது பரிபாடல். 'கல் தோன்றி மண்தோன்றாக் காலம்' என்றது புறப்பொருள் வெண்பாமாலை. "வியலென்கிளவி அகலப் பொருட்டே". வலமாக வளிகொட்ப என்றது, நற்குறியாகி மங்கலங் குறிப்பது. 'வளிதுரந்த கண்ணும் வலந்திரியாப் பொங்கி' என்ற புறப்பொருள்வெண்பாமாலையும், வீமன் பிறக்கும்போது "நண்புடையனலன்றானுநலமிகுநண்புதோன்றப், பண்புற வலம்வந்தோங்கிப் பரிவுடன் விளக்கஞ்செய்தான்" என்ற வில்லிபாரதமும், 'நீணிற விசும்பின் வலனேர்பு திரிதரு' என்ற பட்டினப்பாலையும் ஒருசார் ஒப்புநோக்குக. அன்றியும், 'வலமாகச் சுழல' என்றது, தென்மேற்குத் திசையினின்று வரும் மழைக் காற்றாதலினும் என்னவும் ஏற்கும். நாண்மீன்-நாள்களாகிய மீன்கள்; அவை அசுவினி முதலாய இருபத்தேழு நட்சத்திரங்கள். அவை நெறி ஒழுகல்—செங்கோன்மைச் சிறப்புக் குறிப்பது: 'பகற்செய்யும் செஞ்ஞாயிறு' என்றதற்கேற்ப 'இரவுச்செய்யும் வெண்டிங்கள்' என்று மருதனார் கூறியமையின் இரண்டுக்கும் ஒருநிகராப் பொருள் கொள்ளல் நேரிதென ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'இரவுச் செய்யும்' - இராப்பொழுதை உண்டாக்கும் என உரை கண்டனர்; உண்டாக்குதலாவது - அநுபவிக்குமாறு இருக்கச் செய்தல். திங்களுக்கு 'இராமன்' என்றொரு பெயருண்மையும் நோக்கத்தக்கதே. இனி, இங்ஙன் கூறலாகாது என்று சிலர், ஏழனுருபு விரித்து, இரவின்கண் ஒளிசெய்யுந் திங்கள் எனக் கூறுவர். கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும் ஆதலின், 'மைதீர்ந்து கிளர்ந்து விளங்க' என்றது. ஞாயிறும் திங்களும் கோள்கள்: [கோள்-கிரகம்]. இந்த இரண்டனைக் கூறியது ஏனைய கிரகங்கட்கும் உபலட்சணம். மழை தொழில் உதவ - மழை உழவுத் தொழிற்கு உதவ என்றுமாம். மாதிரம் கொழுக்க-மலைகள் விளைந்து கொழுக்க என்றுமாம். ஆயிரம்-மிகுதி காட்டுவது. நோக்கு-அழகு. (15) களிறு (14) மேதக என இயையும். திக்கயங்கள் மேதகவுற்றது, உலக பாரத்தைப் பாண்டிய மன்னர் ஏற்கத் தாம் சுமத்தல் நீங்கியமையான் என்க. இனி, 'வயக்களிறு' என்றவிடத்து 'சுருளும் படியுமாகப் பண்ணினவிடத்துப் பண்ணிநிற்கும்யானை என்றுரைப்பாருமுளர்' என்றனர் நச்சினார்க்கினியர். இவ்வாறமைந்த படியினைக் களிற்றுப் படி என வழங்குவர்; அஞ்ஞான்று, 'இந்தக் களிற்றுப்படிகள் கண்ணுக்கு இனிமை பயப்பனவாயுள்ள வீடுகளின் வரிசை கொண்ட தெரு' எனப் பொருள் கொள்ளவேண்டி வரும். பூரிமம்-சிறகு; தெருவின் இருமருங்குமுள்ள வீடுகளின் வரிசை. இனி, 'பூரிமம்-சாந்திட்ட தொட்டிகள் என்பாருமுளர்' என்றார் நச்சினார்க்கினியர். 'வாய்மொழியால்' என்றதாலேயே பொய் பேசியறியாமை பெறப்படுதலின், 'பொய்யறியா' என்றவிடத்துப் 'பொய்யைக் கேட்டறியாத' என உரை கண்டனர் நச்சினார்க்கினியர். வெள்ளம்-ஒரு பேரெண். "ஆயிரவெள்ளம் வாழிய" (பதிற்: 11 : 38) என்றதும் காண்க.

உலகத்தையாண்ட பாண்டிய மன்னர்கள் தருமத்தில் தப்பாமல் ஆட்சி நடத்தவே, நாண்மீன் நெறியொழுகலும், ஞாயிறும் திங்களும் மைதீர்ந்து கிளர்ந்து விளங்கலும், மாதிரத்தான் வளிவலமாகக்கொட்ப மழை தொழிலுதவலும், அம் மழையால் மாதிரங் கொழுத்தலும் தொடுப்பினாயிரம் வித்தியது விளைதலும் நிலனும் மரனும் பயன் தழைத்தலும், மக்கள் நோய் நீங்கி ஓக்கு விளங்கலும் ஆகிய இவையும் நெறி தப்பாமல் நடக்குமென்றார்.

இலக்கணக் குறிப்பு:—*மாதிரத்தான்-மூன்றனுருபு ஏழனுருபின் பொருளில் வந்தது; வேற்றுமை மயக்கம். தொடுப்பு-தொழிற்பெயர். வய-உரிச்சொல். மே-மேம்பாடு குறித்தலின், முதனிலைத் தொழிற்பெயரெனலாம். தண்டா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.*

அடிகள் 24—42:— நெடுஞ்செழியன் முன்னோரின் தானைச் சிறப்பும், அவர் அகத்தியனாரோடு சேரவிருந்த சிறப்பும் கூறும்.

பிணக்கோட்ட களிற்றுக்குழும்பின்
நிணம்வாய்ப்பெய்த பேய்மகளிர்
இணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூபம் எழுந்தாட
அஞ்சுவந்த போர்க்களத்தான்
ஆண்டலை யணங்கடுப்பின்
வயவேந்தர் ஒண்குருதி
சினத்தீயிற் பெயர்புபொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பின்
தொடித்தோட்கை துடுப்பாக
ஆடுற்ற வூன்சோறு
நெறியறிந்த கடிவாலுவன்
அடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர
அமர்கடக்கும் வியன்றானைத்
தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்
தொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தாழ் அருவிப் பொருப்பிற் பொருந!

பதவுரை:—*(24) பிணம் கோட்ட-பிணங்களைக் கோத்த கொம்புகளையுடையனவாய்ப் பட்ட, களிறு குழும்பின்-யானையினுடைய திரளின், (25) நிணம் வாய்ப்பெய்த-நிணத்தைத் தின்ற, பேய் மகளிர்-பேய்மகளிருடைய, (26) இணை ஒலி இமிழ் துணங்கை சீர்-இணைத்த ஆரவாரம் முழங்குகின்ற துணங்கைக் கூத்தின் சீர்க்கு [ஏற்ப], (27) பிணை யூபம் எழுந்து ஆட-செறிந்த குறைத்*

தலைப் பிணம் எழுந்துநின்று ஆடுகையினாலே, (28) அஞ்சு வந்த போர்க்களத்தான் - அஞ்சுதலுண்டான போர்க்களத்திடத்தே, (29) ஆண் தலை அணங்கு அடுப்பின்-ஆண்மக்கள் தலையாகிய [நோக்கினாரை] வருத்தும் அடுப்பின்கண்ணே, (30) வய வேந்தர் ஒள் குருதி - வலியினையுடைய வேந்தருடைய ஒள்ளிய இரத்த மாகிய உலை, (31) சினம் தீயின் பெயர்பு பொங்க - சினமாகிய தீயின் மறுகிப் பொங்குகையினாலே, (34) தொடி தோள் கை துடுப்பு ஆக-வீரவளையையுடையவராகிய தோளையுடைய கைகள் துடுப்பாகக்கொண்டு துழாவி, (35) ஆடு உற்ற ஊன் சோறு- அடுதலுற்ற ஊனினாகிய சோற்றை, (36) நெறி அறிந்த கடி வாலுவன் - இடுமுறைமையறிந்த பேய்மடையன், (32) தெறல் அரு கடு துப்பின் - (பகைவரால்) கோபித்தற்கு அரிய கடிய வலியினையும், (33) விறல் விளங்கிய விழு சூர்ப்பின் - வெற்றி விளங்கிய சீரிய கொடுந்தொழிலினையும் உடையராய், (37) அடி ஒதுங்கி பின், பெயரா - இட்ட அடி வாங்கிப் பின் போகாத, (38) படையோர்க்கு-வீரர்க்கு, முருகு அயர-வேள்வி செய்யும்படி, (39) அமர் கடக்கும் வியல் தானை-போரை வெல்லும் அகலத்தை யுடைய படையினையுடைய, (42) வரை தாழ் அருவி பொருப்பின் [(41) கடவுள்] - பக்கமலையிலே விழுகின்ற அருவியினையுடைய பொதியின்மலையில் எழுந்தருளியிருக்கும் இருடியும், (40) தென் னவன் பெயரிய துன் அரு துப்பின் (41) தொல் முது கடவுள்- இராவணனைத் தமிழ்நாட்டையாளாதபடி போக்கின இட்டுதற்கு அரிய வலியினையுடைய பழமைமுதிர்ந்த இருடியுமாகிய அகத் தியனாருக்கு, (41) பின்னர் மேய (42) பொருந!-பின்னே (அடுத்த படியாக' விரல்விட்டு) எண்ணப்பட்டுச் சான்றோனாயிருத்தற்கு மேவின ஒப்பற்றவனே! (எ-று.)

(25) பேய்மகளிரின் (26) துணங்கைச்சீர்க்கு [ஏற்ப] (27) யூபம் எழுந்து ஆடுகையினாலே (28) அஞ்சுதல் வந்த போர்க்களம் என்க. அப் போர்க்களத்திடத்தே (29) இறந்த ஆண்மக்களின் தலையாகிய அடுப்பின்கண்ணே (30) பகைவேந்தரது ஒள்ளிய குருதியாகிய உலையானது (31) சினமாகிய தீயின் மறுகிப் பொங்குகையினாலே, (34) [இறந்த வீரரின்] கைகள் துடுப்பாகக் கொண்டு துழாவி (35) ஆடுற்ற ஊன்சோற்றை (36) வாலுவன் (37) அடிபெயராப் (38) படையோர்க்கு முருகயரும்படி (39) அமர் கடக்கும் தானை என்க. அத்தகைய சிறப்புப்பெற்ற தானையை யுடைய (42) பொருந! என்க.

இனி, (32) கடுந்துப்பின் (33) விழுச்சூர்ப்பின் என்பன (38) படையோர் என்பதனோடு இயையும். அஞ்ஞான்று, அடி யொதுங்கிப் பின்பெயராமைக்கு ஏதுக்களாகிச் சிறத்தல் காண்க. அங்ஙனமே (41) கடவுள் என்பதைப் பின்வரும் (42) பொருப்பின் பின் கூட்டுக; கூட்டின் பொருள் சிறக்கும்: என்னை? 'சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப் பரமாசாரியன்' என்றும், 'சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவன்' என்றும், 'தமிழ்க்

குன்றில் வாழும் சடாதாரி' என்றும் போற்றப்படுபவர் அகத்தியனாரேயாதலின் என்க. இதுவரை, நச்சினார்க்கினியர் காட்டிய பொருண்முடிபு சிறப்புறுதல் பெறவைத்தபடி.

கருத்துரை:—பிணங்கோத்த கோட்டவாய் இறந்த களிற்றுத் திரளின் நிணத்தைத் தின்ற பேய்மகளிரின் துணங்கைக்கூத்தின் தாளத்திற்கேற்ப யூபம் எழுந்து ஆடுகையினாலே, போர்க்களம் அச்சம் பொருந்துவதாயிற்று; அத்தகைய போர்க்களத்திலே இறந்த பகை வீரர்களின் தலைகளையே அடுப்பாகக்கொண்டு, இறந்த பகைவேந்தரின் குருதியையே உலையாக வைத்து, சினமாகிய தீயினை மடுக்க, அவ்வுலை மறுகிப் பொங்குகையினாலே, வீரவளையணிந்த தோளோடே இறந்த வீரர்களின் கைகளையே துடுப்பாகக்கொண்டு துழாவியட்ட ஊன்சோற்றைப் பேய் மடையன் பேய்களுக்கு இடுமுறைமையறிந்து இட்டான்; அங்ஙன் இட்டது, முன்வைத்த காலைப் பின்வைக்காது பொருது இறந்த வீரர்களின் பொருட்டு வேள்வி செய்தபடியாகும்; அங்ஙன் களத்து வேள்வி செய்யும்படி, போரினில் வெல்லும் தானையையுடைய பொருந! மேலும், அகத்தியனார்க்கு அடுத்தபடி வைத்து எண்ணப்படும் சால்புடைய பொருந! எனப்பாண்டியர் சிறப்புத்தோன்ற நெடுஞ்செழியனை விளித்தமை கருத்து.

விசேடவுரை:—போர்க்களத்து நிணமுண்டு மகிழ்ந்த பேய் மகளிர் துணங்கைக் கூத்தாட, அக் கூத்தின் தாளத்திற்கேற்பக் குறைத்தலைப்பிணம் எழுந்து நின்றாடும் என்பது மரபு; இதனைப் பரணியிற் பரக்கக் காணலாம். 'துணங்கை'யின் இலக்கணத்தை "பழுப்புடையிருகை முடக்கியடிக்கத், துடக்கிய நடையது துணங்கையாகும்" என்பதனாலறிக; அஃதாவது, விலாப்புறத்தில் இரண்டு கைகளையும் முடக்கி அடித்துக்கொண்டு ஆடுங் கூத்து. இனி, இரண்டு கைகளையும் விலாப்புறத்தில் முடக்கி வைத்து ஆடுங்கூத்து என்றுமாம்: "முடக்கிய விருகை பழுப் புடை யொற்றத், தொடக்கிய நடையது துணங்கையாகும்" என்றுங் கூறுவராதலால். "நிணந்தின் வாயள் துணங்கை தூங்க" என்ற திருமுருகாற்றுப்படையடி ஈண்டு நினைவுகூர்க. பேய்கள் தலைகளை அடுப்பாகக் கோடலை, "அரக்கர் முடிகளை அடுப்பு வகிர்வன" (திருவகுப்பு, பொருகளத்.), "முடித்தலை யொப்ப அடுப்பென வைத்து" (திருவகுப்பு, செருக்களத்.) என்பவற்றாலும் அறியலாம். இனி, குருதியை உலையாகப் பெய்தலை "அவற்றின் உலையென விரத்தம் விடுவன" என்பதாலும், கைகளைத் துடுப்பாகக் கோடலை "அவர்கரவகப்பை யவைகொடு புகட்டி யடுவன" என்பதாலும் உணரலாம். முருகுஅயர்தல்-வேள்விசெய்தல். 'வேள்வி' என்றது ஈண்டு விருந்திடுதலை;* விருந்திட்டது பேய்களுக்கு. பேய்கள் வயிறாரவுண்ண விருந்து

* விருந்திடுதலை 'வேள்வி' என்பதை, "விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன்" என்ற குறளினாலும், 'ஐம்பெரு வேள்வியின் ஒன்றாகலின் வேள்வி' என்ற பரிமேலழகர் உரையாலும் தெளியலாம்.

செய்யும்படி செய்தது அமர்கடக்கும் [பாண்டியர்] தானே. இஃது முறையறிந்து பேய்களுக்கு ஊன்சோற்றையிட்டவன் கடி வாலுவன். கடிவாலுவன்-பேய்மடையன்; கடி-பேய், மடையன்-சமையற்காரன்; சோறாக்குவோன். முருகு - விழா: "முருகுஞ் சாறும் சேறும் விழாவே" என்றது திவாகரம். இதனைநோக் காது, "முருகு-அழகென்னும் பொருட்டாகலின், அழகிய செய லாகிய ஈகையின்மேல் நின்றது" என்று உரை கூறினருமுளர்.

இனி, தென்னவன்-இராவணன். நச்சினார்க்கினியர், "திசை நிலைக் கிளவியின் ஆகுநவும்" என்றதனால், இராவணன் தென் றிசையாண்டமை பற்றித் தென்னவன் என்றார்; இப் பெயர் பாண்டியற்கும் கூற்றுவற்கும் ஏற்று நின்றாற்போல" என விளக்கவுரை செய்தனர். 'தென்னவன்' என்ற சொல் இராவண னைக் காட்டிவருதலை "தென்னவன் மலையெடுக்கச் சேயிழை நடுங்கக் கண்டு" என்ற நாவுக்கரசர் வாக்காலும் உணரலாம். தென்னவற் பெயரிய-உயர்திணையிடத்து இரண்டனுருபு தொக்கது. பெயரிய-பெயரச்செய்த; போக்கின என்றபடி. பெயரிய துப்பின் கடவுள் என இயையும். இங்ஙன் கொள்ளாத சிலர், 'தென்னவன்' என்ற சொல் பாண்டியனைக்காட்டி வந்ததெனக்கொண்டு 'தென் னவற் பெயரிய' என்பதற்கு - தென்னவன் என்னும் சிறப்புப் பெயரினையுடைய என உரைகண்டனர். ஆனால், கீழ் 37-ஆம் வரியில் 'அடியொதுங்கிப் பின்பெயரா' என்று வந்ததற்கேற்ப, ஈண்டு 40-ஆம் வரியில் வந்துள்ள 'பெயரிய' என்பதற்கு உரை வகுத்தலே தகுதியுடைத்தாதல் காண்க. இதனை விடுத்து, 'தென்னவன் என்ற சிறப்புப் பெயரையுடைய பொருந' என உரை காணலில் சிறப்பொன்றும் பெறப்பட்டிலது. மற்றும், 'தொல்முது கடவுள்' என்பதைச் சிவபிரானுக்காக்கி (அவன்) பின்னர் மேய பொருந—அவன் வழித் தோன்றிய பொருந, என உரை கண்டனர்: அங்ஙன் தாம் உரை கண்டதற்கு ஏதுவாக ஒருகால் சிவபிரான் பாண்டியமன்னன் மகளாகிய தடாதகைப் பிராட்டியை மணந்து சவுந்தரமாறனாய்ப் பாண்டி நாடாண்ட மையை எடுத்துக் காட்டினர்: ஈண்டுப் பொருந்துமேற் கொள்க. 'கடவுள்' என்றது ஈண்டு இருடி [முனிவர்] என்ற பொருளது. இருடிகளைக் கடவுளென்று கூறுதலை "கந்தன் பள்ளிக் கட வுளர்க் கெல்லாம்" (சிலப்: 11:5) என்றவிடத்தும், "இப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய, வெக் கடவுள் மற்றக் கடவுள்" (கலித்தொகை: 93) என்றவிடத்தும், "யோகொடு கறையற முயல்வதோர் கடவுள் ஒத்ததே" (சிங்: 96) என்றவிடத்தும் காணலாம். நச்சினார்க்கினியர், "அகத்தியனைத் தென்றிசை யுயர்ந்த தொய்ம்மைபோக இறைவனுக்குச் சிரொப்ப இருந்தா னென்பது பற்றிக் கடவுளென்றார்" என நயங் கண்டுள்ளார். இஃது பொருந்துவதே: "மாமலயம் நேரா, ஈசனிகராயுலகு சீர் பெற விருந்தான்" என்றார் கம்பரும் அகத்தியப் படலத்து. கடவுளாகிய அகத்தியற்குப் பின்னே [அடுத்தபடியாக வைத்து]

எண்ணப்பட்டுச் சான்ருேருயிருத்தற்குப் பொருந்தினவன் பாண்டியன் என்றது — அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புப்பற்றியாகும். இதனை நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை 'கடவுட் பின்னர்மேய பொருந' என்றது, ஒரு குலத்தரசருள் ஒருவர்க்குரிய தன்மையை மற் ருெருவர் மேலேற்றி உபசாரவழக்காகக் கூறுவது ஒருவகைக் கவிமரபு என்பதுபற்றி.

இனி, தென்னவற் பெயரிய கடவுள் என்பதற்கு—கூற்று வனை யுதைத்த கடவுள் என்று சிவபிரானுக்காக்கி, அவன் பின்னர் என்றது - அவனுக்குப் பின்ருேனுகிய அகத்தியனை என்று பொருள் கொள்ளலாகாதோ எனின், அற்றன்று எனக் காட்டுகிருர் தமது உரையில் நச்சினார்க்கினியர். அஃது பின் வருமாறு:- "கூற்றுவனை யுதைத்த கடவுள் என்று இறைவ னுக்கி, அவன் பின்னரென்றது அகத்தியனையென்று பொருள் கூறின், இறைவனுக்குத் தம்பியென்றல் சாலாமையானும், அப் பொருள் தருங்காலத்து, 'முன்னவன் பின்னவன்', 'முன்ருேன் பின்ருேன்' என்றல்லது அச்சொல் நில்லாமையானும்* அது பொருந்தாது. "முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள, பின்னரும் பீடழிக்கு நோயுள" (நாலடியார்: 92) எனப் பிறண்டும் 'முன்னர் பின்னர்' என்பன இடமுணர்த்தியே நிற்கும் என்றுணர்க" என்பது: பொருநன் என்றது தான்பிறர்க்கு உவமிக்கப்படுவா னென்னும் பொருட்டு என்றனர் நச்சினார்க்கினியர்: எனவே, ஒப்பற்றவன் என்பது பெற்ரும்.

தென்னவற் பெயரிய கடவுள் என்பதிலடங்கிய கதை:-

தென்றிசை யாண்டு குடிகளைத் துன்புறுத்திவந்த இராவ ணன் அகத்தியரது பொதியமலையினிடை வந்தபோது, அவனைப் பிணித்துத் தமிழ்நாட்டைவிட்டுப் போக்கவேண்டிக் கந்தருவ கானத்தைத் தம் யாழ்கொண்டு முனிவர் வாசிக்க, அவ்விசைக்குப் பொதியம் உருகி இராவணனைச் சூழ்ந்து நெருக் கித் தன்னுள் அகப்படுத்திக்கொள்ளவே, அதற்கஞ்சிய இராவணனின் வேண்டுகோளின்படி அவனைத் தென்னுட்டில் இனிப் புகாதபடி ஆணையிட்டு, அவ்வாபத்தினின்று அவனை விடுவித்து இலங்கைக்குப் போக்கினர் என்பது. இப் பண்டைய வரலாற்றையுட்கொண்டே நச்சினார்க்கினியரும் தம் தொல்காப்பி யப் பாயிரவுரையில், "பொதியிலின்கண் இருந்து இராவணனைக்

---

* ஆனல் சிலப்பதிகாரத்து "மறைமுது முதல்வன் **பின்னர்**" (காதை12) என்றவிடத்து, அரும்பதவுரையாசிரியர் "மறைமுது முதல்வன்—மாதேவன்; இவன் பின்னர் - அகத்தியனுகியகடவுள் என எழுதியுள்ளார். அடியார்க்குநல்லாரும், மறை முதுமுதல்வன் - பிரமன் எனக்கொண்டு, **பின்னர்** - அவன் **பின்ருேனுகிய** குறுமுனி என உரையெழுதியுள்ளார். இவர்கள் போக்கு நச்சினார்க்கினியர்போக்கொடு முரணுதல் காண்க. இந்த நுட்பத்தை **ஐயரவர்கள்** காட்டியுள்ளார்.

கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி" என எழுதியுள்ளார். மு. இராகவய்யங்கார் ஸ்வாமிகளும் *தமது ஆராய்ச்சித்தொகுதியில் பின்வருமாறு எழுதியுள்ளமை நோக்கத்தக்கது:- "எவருடைய மகிமையால் இன்றைக்கும் அரக்கர்கள் இத் தென்திக்கைக் கண்ணெடுத்தும் பார்த்து உட்புக நடுங்குகின்றார்களோ, அவருடைய ஆச்சிரமம் அது; ......அம் முனிவர் பெயரைக்கொண்டே இத் தென்திக்கும் அகஸ்தியர் திசை என்ற வெகு சாந்தமான பெயர்பெற்று மூவுலகத்தும் பிரசித்தியடைந்து கொடியவர் அஞ்சுந் திசையாக விளங்குகின்றது"' என்றும் வால்மீகி முனிவர் கூறுகின்றார். இவற்றால் இராவணன் தென்னாட்டை யாளாதபடி அகத்தியர் செய்வித்தவர் என்ற தமிழ்ச் செய்திக்கு வடமொழியிதிகாசமும் ஆதரவளித்தல் அறியத்தகும்" என்பது.*

இலக்கணக் குறிப்பு:- *அஞ்சு-அஞ்சுதல்: முதனிலைத் தொழிற் பெயர். வய - உரிச்சொல்: "வயவலியாகும்". ஆடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். வியல்-உரிச்சொல்; "வியலென்கிளவி யகலப் பொருட்டே."*

அடிகள் **43-61:—** நெடுஞ்செழியன் தன்னுடன் பொருதவரை நாற்படைகொண்டு செருவென்றும் அமையாமல், மேலும் மலையும் காடும் நாடும் கொண்ட சிறப்பினையும், நெடியோன் வழிவந்த சிறப்பினையும் கூறும்.

விழுச்சூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத்து
அளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளும் உயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களனுழக்கவும்
மாவெடுத்த மலிகுரூஉத்துகள்
அகல்வானத்து வெயில்கரப்பவும்
வாம்பரிய கடுந்திண்டேர்
காற்றென்னக் கடிதுகொட்பவும்
வாண்மிகு மறமைந்தர்
தோண்முறையான் வீறுமுற்றவும்
இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருதவரைச் செருவென்றும்
இலங்கருவிய வரைநீந்திச்
சுரம்போழ்ந்த விகலாற்றல்
உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்
நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்!

பதவுரை:- (43) விழு சூழிய-சீரிய முகபடாத்தையுடையவாய், விளங்கு ஓடைய-விளங்குகின்ற பட்டத்தையுடையவாய், (44) கடு சினத்த-கடிய சினத்தையுடையவாய், கமழ் கடாஅத்து-நாறு கின்ற மதத்தாலே, (45) அளறுபட்ட நறு சென்னிய - சேறுண் டான நறிய தலையையுடையவாய், (46) வரை மருளும் உயர் தோன்றல-மலையோ என மருளும் உயர்ந்த தோற்றத்தையுடைய வாய், (47) வினை நவின்ற பேர் யானை - பேர்த்தொழிலிலே பயின்ற பெரிய யானை, (48) சினம் சிறந்து களன் உழக்கஉம் - சினம் மிக்குக் களத்து வீரரைக் கொன்று திரியவும்,— (49) மா எடுத்த மலி குரூஉ துகள்-குதிரைத்திரள் பகைவர்மேற் செல்லு தலாலுண்டான மிக்க நிறத்தையுடையவாகிய தூளி, (50) அகல் வானத்து வெயில் கரப்பஉம்-எனைய பூதங்கள் அகன்று விரி தற்குக் காரணமான ஆகாயத்திடத்தே வெயிலை மறைக்கவும்,— (51) வாம் பரிய கடு திண் தேர்-தாவும் குதிரைகள் பூட்டிய வேக மாகச் செல்லும் திண்ணியதேர், (52) காற்று என்ன கடிது கொட்பஉம்-காற்றுச் சுற்றியடித்ததென்ன வேகமாகச் சுழலவும்,- (53) வாள் மிகு மறம் மைந்தர் (54) தோள்-வாட்போரால் மிகு கின்ற மறத்தையுடைய வீரர்களின் தோள்கள், வீறு - வெற்றியை, முறையான் முற்றஉம் - முறையாக வெட்டுதலான் முற்றுப்பெறவும்,—(55) இரு பெரு வேந்தரொடு வேளிர்சாய (56) பொருது அவரை செரு வென்றுஉம்-சேரன் சோழன் ஆகிய இரண்டு பெரிய அரசருடனே [திதியன் முதலாய] குறுநில மன்னரும் இளைக்கும்படி தாக்கி அவர்களைப் போரில் வென்றும் அமையாமல்,—(57) இலங்கு அருவிய வரை நீந்தி-விளங்குகின்ற அருவிகளையுடைய மலையிற் குறிஞ்சிநில மன்னரையெல்லாம் வென்று, (58) இகல் ஆற்றல் சுரம் போழ்ந்த-மாறுபாட்டைச் செய்து நடத்துதலையுடைய பகைவரது காடுகளைப் பலவழியாகப் பிளந்த, (59) உயர்ந்து ஓங்கிய விழு சிறப்பின்-மிகவுயர்ந்த சீரிய தலைமைச் சிறப்பினாலே, (60) நிலம் தந்த பெரு உதவி-நாட்டி லிருக்கின்ற அரசர்கள் தத்தம் நிலங்களையெல்லாம் தர [அவை யிற்றை]க் கொண்ட பெரிய உதவியையும், (61) பொலம் தார் மார்பின்-பொன்னாற்செய்த மாலையையணிந்த மார்பினையும் உடை யனுய், நெடியோன் உம்பல் - வடிம்பலம்பநின்ற பாண்டியன் வழியில் வந்தோனே! (எ-று.)

(47) யானை (48) களனுழக்கவும் (49) மாவெடுத்ததுகள் (50) வெயில்கரப்பவும் (51) தேர் (52) கொட்பவும் (53) மைந்தர் (54) தோள் வீறுமுற்றவும், (55) வேந்தரொடு வேளிர்சாயப் (56) பொருது செருவென்றும் அமையாமல் (57) வரைநீந்திச் (58) சுரம்போழ்ந்த (59) விழுச்சிறப்பினாலே (60) நிலந்தந்த உதவியினையும் (61) மார்பினையும் உடையனுய்[த் திகழ்ந்து] நெடி யோன் வழிவந்தோனே! என வினைமுடிக்க.

கருத்துரை:—முகபடாத்தையும் பட்டத்தையும் அணிந்த னவாய், இயல்பாகவே சினமுடையனவாய், கமழ்கின்ற மத

நீராலே சேறுபட்ட தலையினையுடையனவாய் மலையெனமருளும் உயர்ந்த தோற்றத்தை யுடையனவாய்ப் போரிற்பயின்ற யானைகள் மேலும் சினம்மிக்குக் களத்து வீரரைக்கொன்று திரியவும், குதிரைப்படைகள் எழுப்பியதூளி ஆகாயத்திடத்தே வெயிலை மறைக்கவும், தேர்ப்படைகள் கடிதாகச் சுழலவும், காலாட்படை வீரர்கள் தம் தோள்வலியால் வெற்றியை முற்றுப்பெறவும், இருபெரு வேந்தரொடு குறுநில மன்னர் சாயப் பொருது போர் வென்றும் திருப்தி பிறவாதவனாய், மேலும் மலையை அரணாகக் கொண்டிருந்த குறிஞ்சிநில மன்னர்களையும் காட்டை அரணாகக் கொண்டிருந்த பகையரசர்களையும் வென்று அழித்த நின் வலி கண்டு அஞ்சியதாலே நாட்டிலிருக்கின்ற அரசர்களும் தத்தம் நிலங்களை விட்டுவிட, அவற்றையெல்லாம் கைக்கொண்ட பேருதவியையும் பொலந்தார் மார்பினையும் உடையவனாய்த் திகழ்வதோடு வடிம்பலம்பநின்ற பாண்டியன் வழியில் வந்தோனே! என நெடுஞ்செழியன் சிறப்புத்தோன்ற விளித்தமை கருத்து.

விசேடவுரை:— 48-ஆம் வரியில் 'சினம்சிறந்து' என வருதலின், கீழ் 44 ஆம்வரியில்வந்துள்ள 'கடுஞ்சினத்த' என்பதுயானையினிடத்து முன்னர் இயல்பாகவே அமைந்திருந்த சினம் குறிப்பதாயிற்று: இதனை 'நிழலொடு மறலும் யானை' என்ற வழக்காலும் உணரலாம். தேவரும், "கண்ணிழல்நாறின் கனன்று தந்நிழலொடு மலைவ" (2155) என்றார். வில்லியாரும் 'தன்னிழல் கண்டு சீறுங் கருத்தது' (16-ஆம் போர்: 23) என்றார். யானை மதம் மணமுடையதென்பதை "ஈர்நறுங் கமழ்கடாஅத் தினம் பிரி யொருத்தல்" (கலித்தொகை-21), "பூநாறு கடாஞ்செருக்கி' (மணிமேகலை-19), "மும்மதம், மணமகள் கதுப்பென நாறும்" (சிந்தாமணி-1621) என்பவற்றால் அறிக. வினைநவின்ற யானை என்றதால்—முன்பே போர்செய்து பழகின யானை என்றபடி: ஆகவே, எத்திறத்தினும் பொருதொழில் புரியும் யானை என்றபடி: எத்திறத்தினும் பொருதொழில் புரிதலாவது — கால்களினால் மிதித்தும், துதிக்கையினால் அறைந்தும் பற்றியும் இழுத்தும், தந்தங்களினாற் குத்தியும், மத்தகத்தால் முட்டியும், வாலால் வீசியடித்தும் போர் செய்தல்; "கோடுகைம்முதலா வொன்பதுறுப்பினுங் கோறல்வல்ல, நீடுயர்மா" என்ற வில்லி பாரதமும் காண்க. 'உயர் தோன்றல' என்றவிடத்து, ஏழு முழம் உயர்ந்திருத்தல், உத்தம கஜ லக்ஷணம் என்பதையும், 'பேர் யானை' என்றவிடத்து ஏழுறுப்பு உறத்தாழ்ந்திருத்தல் அரசயானையின் இலக்கணம் என்பதையும் நினைவு கூர்க. ஏழுறுப்பு உறத்தாழ்தல்—கால் நான்கும், வாலொன்றும், கையொன்றும், கோசமொன்றும் நிலத்திற் படியுமாறு தாழ்ந்திருத்தல். "காலொருநான்குந் தனிக்கையுங் கோசமும், வாலுறுப்போடேழு மாநிலந்தோய்ந்து" என்பது காண்க. குரூஉ-நிறம்: "குருவுங்கெழுவு நிறனாகும்மே". மைந்தர் தோள் வீறு முறையான்

முற்றுதல்-போரில் முறையுண்டென்பதைக் காட்டுவது. இதனை விளக்க நச்சினார்க்கினியர் "விருந்தாயினை யெறிநீயென விரை மார்பகங் கொடுத்தாற்கு, அரும்பூணற வெறிந்தாங்கவன் நினதூழினி யெனவே" என்ற சிந்தாமணியடிகளை மேற்கோள் காட்டினர். இதன் பொருள்:- விருந்தாயினை - (யான் வந்தபின் நீ வந்தமையின்) நீ எனக்கு விருந்தாயினாய் ஆதலின், எறிநீஎன - நீ முற்பட வேலால் எறி என்று, [விபுலன்], விரைமார்பகம் கொடுத்தாற்கு—நறிய தன் மார்பைக் கொடுத்தவற்கு, அவன் — அவனும், அரும்பூண் அற எறிந்து—கவசத்தளவு அறும்படி எறிந்து, இனி - இனிமேல், நினது ஊழ் என - எறியும்முறை நினக்கு என்றானாக" என்பது. இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப் பொருதமை, தலையாலங்கானத்துப் போரிலே; தலையாலங் கானத்து வென்றமை மேல் 125 — 130 வரிகளில் கூறப்பட்டுள்ளது. ஆங்கு விவரம் காண்க. ஈண்டு, அப்போரை வென்றும் திருப்தி பிறவாமை குறிக்கப்பட்டது. வேளிர் - குறுநில மன்னர்; திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்பார். வரை நீந்தி, சுரம் போழ்ந்த என்றமையால், மலையும் காடும் அரணாகக் கொண்டிருந்த அரசரை அழித்தமை பெறப்படும். அங்ஙனம் அவர்களை அழித்த வலி கண்டதாலே நாட்டு அரசர்களும் தத்தம் நாடுகளைத் தாமாகவே தந்துவிட்டனர் என்பது தோன்ற "நிலம் தந்த" என்றார். இங்ஙன், குறிஞ்சி முல்லை மருதம் அடிப்படுத்தியமை பெறவைக்கப்பட்டது. நாட்டரசர்கள் தம நிலங்களையெல்லாந் தர நெடுஞ்செழியன் கொண்டமையால் அவற்றைப் "பெரு உதவி" என்றது, உதவப்பட்ட [கொடுக்கப்பட்ட] பொருள்களாதலின் என்க. கொடுக்கப்பட்ட பொருள் 'உதவி' எனப்படுதலை "உயர்ந்தவர்க்குதவிய வுதவி" என்ற கம்பன் வாக்காலும் அறியலாம். 'சிறப்பின்' (59) என்றதை நச்சினார்க்கினியர் இருவழி கூட்டினர்: அஃதும் பொருந்துவதே. இனி, நெடியோன் என்பது வடிம்பலம்ப நின்ற பாண்டியனைக் காட்டுவது. இதனை, "முந்நீர் விழவின் நெடியோன்" (செ. 9) என்றவிடத்துப் புறநானூற்றுப் பழைய வுரைகாரர் "முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றான் என்ற வியப்பால், நெடியோன் என்றாரென்ப" என்று கூறியவாற்றால் தெளியலாம். 'என்ப' என்றதால் தொன்றுதொட்டு அறிந்தோர் வழங்கிய வழக்கென்றபடி; "தம் பொருளென்ப தம் மக்கள்" என்றவிடத்துப் போல. முன்னொரு காலத்தில் மதுரையை யழித்தற்கு வந்த கடலை உக்கிரகுமார பாண்டியன் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் அருளிய வேலையெறிந்து வற்றச்செய்து அக்கடல் தன்னுடைய காலின் விளிம்பை அலம்பும்படி உயர்ந்து நின்றமையால், அவனுக்குக் கடல்வடிம்பலம்ப நின்ற பாண்டியனென்று பெயராயிற்று. இந்தச் சரித்திரம், திருவிளையாடற்புராணங்களிற் கூறப்பட்டுள்ளது. "கடல் வடிம்பலம்ப நின்ற கைதவன்" என்று வில்லிபுத்தூராரும், 'ஆழி வடிம்பலம்ப நின்றான்' என்று புகழேந்தியும், "அடியிற் றன்னள வரசர்க்குணர்த்தி, வடிவேலெறிந்த வான்பகை

பொருது...கடல் கொள்ள" என்று இளங்கோவடிகளும், சிறப்புற இப் பாண்டியனை யெடுத்தோதியிருத்தல் நோக்கத்தக்கது. அங்ஙனிருப்பவும், சிலர் 'நெடியோன்' என்பது நிலந்தரு திருவிற் பாண்டியனைக் குறிப்பது என்று கொண்டுள்ளனர்; ஒருகால் அவர்கள் 'நிலந்தந்த' (60) என்ற தொடர் கண்டு இங்ஙனம் எண்ணினர் போலும்! பொருந்துமேற்கொள்க. ஆனால் ஒன்று நினைக்கற்பாலது. என்னை? செழியனின் அவைக்களப் புலவராய மருதனார் நிலந்தரு திருவிற்பாண்டியனை யுளத்துக்கொண்டு கூறியிருப்பின், தாம் பின்னர் 763-ஆம் வரியிற் கூறியிருப்பது போல் ஈண்டு "நிலந்தரு திருவின் நெடியோன் உம்பல்" என்றே கூறியிருக்கலாமன்றோ! * உம்பல் - வழித்தோன்றல் என்ற பொருளது. 'நல்லிசைச் சென்றோர் உம்பல்' (மலைபடு-540), 'திரைதரு மரபின் உரவோன் உம்பல்' (பெரும்பாண்-31) என்ற விடங்களிலும் இப் பொருளில் வருதல் காண்க. மேன்மையென்று பொருளுள்ள 'உ' என்பதனடியாகப் பிறந்த உம்பல் என்ற சொல்—சிறந்த மகன் என்ற பொருளைக் காட்டும். இனி, உம்பல் என்பதற்கு யானையென்று பொருளிருத்தலின் 'யானை போல் வானே' என்று உரை கூறினாருமுளர்.

இலக்கணக்குறிப்பு:- சூழிய, ஓடைய, சினந்த, சென்னிய, தோன்றல என்ற செய்தெனெச்சக் குறிப்பாகிய வினையெச்ச முற்றுக்கள் அடுக்கி 'நவின்ற' என்னும் பெயரெச்சத்தோடு முடியும். இங்ஙனன்றி, 'உழக்கவும்' என்றதனோடு முடியும் என்றாருமுளர். ஆனால், மேலே வரி 48 - இல் சினஞ் சிறந்து களனுழக்கவும்" என வந்திருத்தலின், கீழ் 44-ஆம் வரியில் வந்துள்ள 'சினத்த' என்ற வினையெச்ச முற்றை 'நவின்ற' என்ற பெயரெச்சத்தோடு இயைத்தலே பொருந்துவது காணலாம். அங்ஙனன்றி, 'உழக்கவும்' என்பதனோடு இயையவைத்தால், 'கடுஞ் சினத்த......சினஞ் சிறந்து' என இருகால் 'சினம்' என்ற சொல்வரக் கூறியதுகூறலென்னுங் குற்றமாய் முடியும். ஒரு வினையெச்சத்துக்குக் கூறிய முடிபு அதனோடு ஒருநிகரா அடுக்கி வரும் ஏனைய வினையெச்சங்களுக்கும் முடிபாகுமன்றோ! இஃது நுட்பமாக உணர வேண்டுவது. அதனால்தான், உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் இந்த இலக்கணக்குறிப்பைத் தமது உரையிற் காட்டியுள்ளனர். வாம் பரிய — வாவும் பரிய: செய்யுமெனெச்சத்து ஈற்றுயிர்மெய் கெட்டது: "செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு, மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை யுகரம், அவ்விடனறிதல் என்மனார் புலவர்" என்றது

* இங்ஙன் கூறியதுகொண்டு, 763-ஆம் வரியில் வந்துள்ள நிலந்தரு திருவின் நெடியோன் என்றது — நிலந்தருதிருவிற்பாண்டியனைத்தான் காட்டுவது என்று கொள்ளக்கூடாது. ஆங்கு, சந்தர்ப்பத்திற்கேற்ப அது மாயோனாகிய கண்ணனைக் காட்டுவது. இதனை நச்சினார்க்கினியர் காட்டியுள்ளார், முன்பின் நோக்கிச் சந்தர்ப்பத்துக்குக்கேற்பப் பொருள் வகுப்பது உரையாசிரியர் கடனாதலின் என்க. இந்த உரைநயம் மேல் அவ்விடத்துக் காண்க.

தொல்காப்பியம். நன்னூலார், "செய்யுமெனெச்ச வீற்றுயிர்மெய் சேறலும்" என்றார். 'செருவென்றும் என்றவிடத்து, உம்மை - சிறப்பும்மை, வென்றும் அமையாமல் என்ற பொருளில் வந்ததாகலின். உயர்ந்துஓங்கிய-ஒருபொருட்பன்மொழி.

அடிகள் **62—88:**— நெடுஞ்செழியன் கொற்றவர்தங் கோனாமையும் தனக்கு நடவாததோர் ஊர்கொண்டமையும் கூறும்.

மரந்தின்னூஉ வரையுதிர்க்கும்
நரையுருமின் ஏறனையை
அருங்குழுமிளைக் குண்டுகிடங்கின்
உயர்ந்தோங்கிய நிரைப்புதவின்
நெடுமதில் நிரைஞாயில்
அம்புமிழ் அயிலருப்பந்
தண்டாது தலைச்சென்று
கொண்டுநீங்கிய விழுச்சிறப்பின்
தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்தொழுகிய
கொற்றவர்தங் கோனாகுவை
வானியைந்த இருமுந்நீர்ப்
பேஎநிலைஇய இரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை இதையெடுத்து
இன்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லின்
ஊர்கொண்ட உயர்கொற்றவ!

பதவுரை:— *(62) மரம் தின்னூஉ - மரங்களைச் சுட்டு, வரை உதிர்க்கும் - மலைகளை நீறாக்கும், (63) நரை உருமின் ஏறு - பெருமையினையுடைய இடியேற்றை, அனையை - ஒப்பாய்; (64) அரு குழுமிளை - பகைவர் சேர்தற்கரிய திரட்சியையுடைய காவற் காட்டினையும், குண்டு கிடங்கின் - ஆழத்தினையுடைய கிடங்கினையும், (65) உயர்ந்து ஓங்கிய நிரை புதவின் - உயர்ந்து வளர்ந்த கோபுரங்களிடத்து வாயில்களையும், (66) நெடு மதில் - நெடிய மதிலினையும்,*

கிரை ஞாயில் - வரிசையாயமைந்த சூட்டினையும் உடைய, (67) அயில் அம்பு உமிழ் அருப்பம் - கூர்மையையுடைய அம்புகளை யெறியும் அரண்களை, (68) தண்டாது - அமையாமல், தலை சென்று-அவ்வவ்விடங்களிலே சென்று, (69) கொண்டு நீங்கிய-கைக்கொண்டு ஆவ்விடங்களினின்றும் போன, விழு சிறப்பின்-சீரிய தலைமையினையுடைய,— (70) தென் குமரி [எல்லை ஆ]-தென் திசைக்குக் குமரி எல்லையாக, வட பெருங்கல் [எல்லை ஆ] - வட திசைக்குப் பெரிய மேரு [இமயம்] எல்லையாக, (71) குண குட கடல் எல்லை ஆ-கீழ்திசைக்கும் மேற்றிசைக்கும் கடல் எல்லையாக [அமைய], (இடையில் வாழ்வோரெல்லாம்) (72) தொன்று மொழிந்து தொழில் கேட்ப-தம்முடன் பழமையைச் சொல்லி ஏவல்கேட்கும்படி, (73) வெற்றமொடு-வெற்றியோடே, வெறுத்து ஒழுகிய-செறிந்து நடந்த, (74) கொற்றவர்தம்-வெற்றியையுடைய மன்னவர்தமக்கு, கோன் ஆகுவை-தலைவனான தன்மையை யுடையை;

(75) வான் இயைந்த இரு முந்நீர்-மேகம் படிந்த பெரிதாகிய மூன்று நீர்மையையுடைய, (76) பேஎம் நிலைஇய இரு பௌவத்து-அச்சம் நிலைபெற்ற கரிய கடலிடத்து, (78) கடு காலொடு-கடிய காற்றாலே, (77) கொடு புணரி - வளைகின்ற திரையை, விலங்கு போழ - குறுக்கே பிளந்தோடும்படி, (79) இதை எடுத்து-பாய் விரிக்கப்பட்டு, (80) இன் இசைய முரசம் முழங்க-இனிய ஓசையையுடைய முரசம் முழங்காநிற்ப, (81) பொன் மலிந்த விழு பண்டம் (82) நாடு ஆர-பொன் மிகுதற்குக் காரணமாகிய சீரிய சரக்குகளை நாட்டிலுள்ளார் நுகரும்படியாக, (78) கரை சேர - கரையைச் சேர்வந்து, (82) நன்கு - வாணிகம் வாய்த்துவந்து, இழிதரும் - இழிதலைச் செய்யும் [சரக்குகளை இறக்குமதி செய்யும்], (79) நெடுகொடி மிசை (83) ஆடு-நெடிய கொடி பாய்மரத்தின்மேலே ஆடுகின்ற, இயல்-இயல்பினையுடைய, பெரு நாவாய்-பெரிய மரக்கலங்கள், (84) மழை முற்றிய மலை புரைய (85) துறை முற்றிய துளங்கு இருக்கை-கருமேகஞ் சூழ்ந்த மலைபோலக் கடல்சூழ நிற்ப அசைகின்ற இருப்பினையும்,— (86) தெள் கடல் குண்டு அகழி-தெளிந்த கடலாகிய ஆழ்ந்த கிடங்கினையுமுடைய, (87) சீர் சான்ற உயர் நெல்லின் ஊர் கொண்ட உயர் கொற்றவ-தலைமையமைந்த உயர்ந்த நெல்லின் பெயரைப் பெற்ற சாலியூரைக் கொண்ட உயர்ந்த வெற்றியை யுடையவனே! (எ-று.)

இயைபு காட்டல்:—(64) மிளையினையும், கிடங்கினையும் (65) நிரைப்புதவினையும் (66) மதிலினையும் ஞாயிலினையும் உடைய (67) அருப்பம் என இயையும். (69) 'விழுச்சிறப்பின்' என்பது மேல் (74) 'கொற்றவர்' என்பதனோடு இயையும். இங்ஙன் இயைதலால் பொருட்சிறப்புறுதல் மேல் விசேடவுரையகத்துக் காட்டப்படும். (73) 'வெற்றமொடு வெறுத்தொழுகிய' என்பதும் (74) 'கொற்றவர்' என்பதனோடு இயையும். (79) இதையெடுத்து

(80) முரசம் முழங்க (82) நாடார இழிதரும் (83) நாவாய் எனவும், (79) நெடுங்கொடி மிசை (83) ஆடியல் நாவாய் எனவும் இயைக்க. அஞ்ஞான்று பொருட் பொருத்தமுற்றுச் சிறத்தல் கண்கூடு. (83) நாவாய் (85) துளங்கிருக்கையினையும் (86) அகழியினையும் உடைய (88) ஊர் என இயையும்.

கருத்துரை:—செழிய! நீ உருமின் ஏறனையை: அருமிளையினையும் குண்டு கிடங்கினையும் நிரைப்புதவினையும் நெடுமதிலினையும் நிரை ஞாயிலினையும் உடையனவாய் அம்புகளையுமிழும் அரண்களை அவையுள்ளவிடங்களிலே சென்று கைப்பற்றி ஆங்கினின்றும் நீங்கிய விழுச்சிறப்பினையுடையராயும், வடவிமயம் தென்குமரி குணகடல் குடகடல் எல்லையாக்கொண்ட நிலப்பகுதிக்கிடையில் வாழும் மக்களெல்லாம் தம்மொடு பழமை பாராட்டி ஏவல் கேட்கும்படி வெற்றியோடே செறிந்து ஒழுகுஞ் சிறப்பினையுடையராயும், திகழ்ந்த மன்னவர்க்கெல்லாம் நீ தலைவனாகுவை. கடலிடையே திரைகிழியவோடப் பாய்விரித்து முரசம் முழங்கச் சரக்குகளை ஏற்றிவந்து கரைசேர்ந்து வாணிகம் வாய்த்தலாலே அச் சரக்குகளை இறக்குதலைச் செய்யும் பெருநாவாய்கள் அக் கடல் சூழ்நிற்றலாலே மழைமுற்றியமலைபுரைவனவாய்த் துளங்குகின்ற இருப்பினையும், அக்கடலையே அகழியாகக் கொண்டுள்ள இருப்பினையும் உடைய சாலியூர் என்னும் ஊரைக் கைப்பற்றிக்கொண்ட கொற்றமுடையோனே! என நெடுஞ்செழியன் சிறப்புத்தோன்ற விளித்தமை கருத்து.

விசேடவுரை:—மரம் தின்னுதல் - மரங்களைச் சுடுதல். நரை-பெருமை என்ற பொருளில் வருதலை நச்சினார்க்கினியர் "கரு நரை நல்லேறு" என்ற குறுந்தொகைத் தொடரால் (செ. 317) விளக்கினார். உருமின் என்றவிடத்து 'இன்' சாரியை; இதனை 'அசை' என்றனர் நச்சினார்க்கினியர். மேல் 'நெல்லின் ஊர்' என்றவிடத்தும் இங்ஙனே கூறுவர். நிரை - கோபுரத்துக்கு ஆகுபெயர். 'உயர்ந்தோங்கிய' என்றவிடத்து 'உயர்ச்சி ஓங்குதலை விசேடித்துநின்றது' என்றனர் நச்சினார்க்கினியர்; மிகவோங்கிய என்றபடி. ஞாயில்-சூட்டு என்னும் மதிலுறுப்பு: அஃது பகைவர் எய்தால் மறைந்துகொள்ளுதற்கு உயரப் படுப்பது. அருப்பம் தண்டாது தலைச்சென்று (கைக்)கொண்டு நீங்கிய விழுச்சிறப்பின் **கொற்றவர்** என இயைத்துப் பொருள் கண்டனர் நச்சினார்க்கினியர். அதுவே தகுவது. என்னை? 'கொற்றவர்' என்ற சொல் குறிக்கொண்மின். கொற்றமுடையவர் கொற்றவராவர். ஈண்டு என்னை கொற்றம் என்றார்க்கு "அருப்பம் தண்டாது தலைச்சென்று கைக்கொண்டு நீங்கிய தோர் விழுச்சிறப்பாய" கொற்றமும், "தென்குமரி வடபெருங்கல் குணகுட கடலாவெல்லை யிடைவாழும் மக்களனைவரும் தொன்றுமொழிந்து தொழில் கேட்பதோர்" கொற்றமும் ஆம். அதனாலன்றே 'வெற்றமொடு வெறுத்தொழுகிய கொற்றவர்'

என மிகைப்படுத்தியதும். அத்தகைய கொற்றவர் தமக்குக் கோனாகுவை என்னில் நெடுஞ்செழியன் சிறப்பு உச்சநிலை யெட்டுதல் காண்க. இனி, அத்தகைய கொற்றவர் யாவர் என்னில், சென்றுகொண்டு இமயந்திரித்த கரிகாலன், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யாகசாலை முதுகுடுமிப்பெரு வழுதி* போன்றோர். அவர்களுக்கும் கோன் ஆகுவை என்றது— இரவி யென்பான் தன் புகழ்க்கற்றை மற்றையொளிகளைத் தவிர்க்குமாபோல் [திக்குவிசயம் செய்து] வெற்றமொடு வெறுத் தொழுகிய மூவேந்தர் கொற்றத்தையும் தங் கொற்றத்தாற் கீழ்ப்படுத்திக் கோனாயினவன் என்றபடி. இங்ஙன் கொள்ளாது, அருப்பங்களைக் கொண்டுநீங்கிய விழுச்சிறப்பினை நெடுஞ்செழிய னுக்கே ஏற்றிக் கூறினாருமுளர்; பொருந்துமேற் கொள்க.

இனி, நெடுஞ்செழியன் கொற்றம் விளக்க, இதுவரை தனக்கு அடிப்பட்டு நடவாததோர் ஊர் [அதாவது—சாலியூர்] கொண்டமை அடிகள் 75 முதல் 88 வரை கூறப்படுகின்றது. உயர்நெல் - சாலி எனப்படும். 'வயலெல்லாம் விளைசெஞ்சாலி' என்றார் சேக்கிழாரும். பெருநாவாய்கள் இயங்கும் இருக்கை யினையும் கடலையே அகழியாகக் கொண்டுள்ள இருக்கையினையும் இச் சாலியூர் கொண்டுள்ளதாகப் பேசப்பட்டிருத்தலால், இவ் வூர் கடற்கரையோரத்தைச் சேர்ந்த பட்டினமாக இருத்தல் ஒருதலை. மற்றும், அகழி நாற்புறமும் சூழவிருத்தல் சிறத்த லின், இச் சாலியூர் பம்பாய் நகரம்போலே ஓர் தீவு ஆகவும் இருத்தல்கூடும். இனி, நெல்லோடு தொடர்புகொண்டு 'நெல் லின் ஊர்' என வந்திருத்தலால், இன்னை சாரியையாக்கி நெல்லூர் என்பாருமுளர். இதனை நச்சினார்க்கினியரும் குறித் துள்ளார். அவர் 'இன்னை' அசை என்றார்: பிற்காலத்தார் சாரியை என்பர். பேஎம்-அச்சம்: "பேநா முருமென வரூஉங் கிளவி, ஆமுன்ற மூன்றும் அச்சப்பொருள" என்றது தொல் காப்பியம். கொடும்புணரி - வளைந்த திரை; ஈண்டு கொடுமை- வளைவின்மேலது. புணரி-கடல்: திரைக்கு ஆகிவந்தது. நாவா யின் பாய்மரத்தின்மேலே கொடிகட்டுதலை "ஆடுகொடியுச்சியணி கூம்பு" என்ற தொடராலும், நாவாய் ஓடும்போது முரசம் முழங்கப்படுதலை "முந்நீர்க்கோடு பறையார்ப்ப" என்ற தொடரா லும் (சிங் : 501) நாம் அறியலாம். நெய்தல் நிலத்துப்பறை நாவாய்ப்பறை என்பதும் ஈண்டு நினைவுகூர்க. (82) நன்கு - வாணிகம் வாய்த்துவந்து என நச்சினார்க்கினியர் பொருள் கண்டது பெரிதும் மெச்சத்தக்கது. துறைமுற்றிய என்ற விடத்து, துறை-கடலுக்கு ஆகுபெயர். 'சரக்குப்பறித்தற்குக் கடலில்நின்ற மரக்கலங்கள் அக்கடல் சூழநின்றதற்கு—மழை முற்றியமலை உவமமாயிற்று' எனப் பொருத்தங் கண்டனர் நச்சினார்க்கினியர். இது கொள்ளத்தக்கதே.

---

*புறம்—செ. 6.

அடிகள் 89—105:—பலவகை ஓசைகள் மாறாமல்நின்ற தன்னாட்டிலூர்களிலிருந்து நெடுஞ்செழியன் கொடுக்கின்ற சிறப்புக்கூறும்.

நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பும் இசையேற்றத்
தோடுவழங்கும் அகலாம்பியிற்
கயனகைய வயனிறைக்கும்
மென்றொடை வன்கிழாஅர்
அதரி கொள்பவர் பகடுபூண் டெண்மணி
இரும்புள் ஓப்பும் இசையே என்றும்
மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற்
பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப
ஒருசார், விழவுநின்ற வியலாங்கண்
முழவுத்தோள் முரட்பொருநர்க்கு
உருகெழு பெருஞ்சிறப்பின்
இருபெயர்ப் பேராயமொடு
இலங்குமருப்பிற் களிறுகொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியும்
நலஞ்சான்ற கலஞ்சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே!

பதவுரை:—(92) *வயல் அகைய நிறைக்கும்-வயல்கள் தழைக்கும்படி நீரை நிறைத்தற்குக்காரணமான, கயன் - குளங்களில், (89) நீர் தெவ்வு-நீரை [இடாவால்] முகந்துகொள்ளுகின்ற, நிரை தொழுவர் (90) பாடு - வரிசையாகநின்று தொழில் செய்வாரிடத்தே, சிலம்பும் இசை - ஒலிக்கும் ஓசையும், ஏற்றத் (91) தோடு வழங்கும் அகல் ஆம்பியின் (90) இசை-ஏற்றத்துடனே உலாவும் அகன்ற பன்றிப்பத்தரின் ஓசையும், (93) மெல் தொடை வல் கிழாஅர் (95) இசை-மெத்தென்ற கட்டுக்களையுடைய வலிய பூட்டைப்பொறியின் ஓசையும், (94) அதரி கொள்பவர் (95) இசை - கடாவிடுகின்றவர் ஓசையும், பகடு பூண் தெள் மணி (95) இசை - எருதுகள்பூண்ட தெள்ளிய மணியின் ஓசையும், (95) இரும் புள் ஓப்பும் இசை-பயிர்களிற் பெரிய கிளி முதலிய பறவைகளை ஓட்டும் ஓசையும், என்றும்-எந்நாளும், (96) மணி பூ முண்டகத்து மணல் மலி கானல் (97) பரதவர் மகளிர் குரவையொடு - நீலமணிபோலும் பூக்களையுடையவாகிய கழிமுள்ளிகளையுடைய மணற்குன்றுகள்மிக்க கடற்கரையிலிருக்கும் பரதவருடைய மகளிராடும் குரவைக்கூத்தின் ஓசையோடேகூடி, ஒலிப்ப-ஆரவாரியாநிற்ப, (98) ஒருசார்-ஒருபக்கம், விழவு நின்ற வியல் ஆங்கண் - விழாக் கொண்டாடுதலாற் பிறந்த ஓசைகள் மாறாமல்நின்ற அகலத்தையுடைய ஊர்களிடத்தேயிருந்து, (99) முழவு தோள் முரண்பொருநர்க்கு-முழவுபோலும் [திரண்ட] தோளினையுடையராய்க் கல்வியால் மாறுபடுதலையுடைய தடாரிப்*

பொருநர்க்கு, (100) உருகெழு பெரு சிறப்பின் (101) இரு பெயர் பெரு ஆயமொடு-அச்சம்பொருந்திய பெரிய தலைமையை யுடைய கன்றும் பிடியும் என்னும் இரண்டு பெயரையுடைய பெரிய திரளுடனே, (102) இலங்கு மருப்பின் களிறு கொடுத்து உம்-விளங்குகின்ற கொம்பினையுடைய களிறுகளைக் கொடுத்தும், (103) பொலம் தாமரை பூ சூட்டிஉம்-பொன்னாற்செய்த தாமரைப் பூவைச் சூட்டியும், (104) நலம் சான்ற கலம் சிதறும்-நன்மை யமைந்த பேரணிகலங்களை எல்லார்க்கும் கொடுக்கும், [(105) கோவே—!]. (105) பல் குட்டுவர் வெல் கோவே-பலவாகிய குட்ட நாட்டிலுள்ளாரை வெல்லும் கோவே! (எ-று.)

முடிபு காட்டல்:—(92) கயன் (89) நீர்த்தெவ்வு தொழுவர்(90) பாடு சிலம்பும் இசை; (91) ஆம்பியின் (90) இசை; (93) கிழாஅர் (95) இசை; (94) அதரிகொள்பவர் (95) இசை; (94) தெண் மணி (95) இசை; என முன்பின் கூட்டிப் பொருள்கொள்க. ஈண்டு 90-ஆம் வரியிலுள்ள 'இசை' என்பது ஆம்பியின் பின்னரும், 95-ஆம் வரியிலுள்ள 'இசை' என்பதை 'கிழாஅர், அதரி கொள்பவர், தெண்மணி' என்பவற்றின் பின்னரும் கூட்டி யுள்ளமை நோக்கத்தக்கது. இது நச்சினார்க்கினியர் காட்டிய வழி. இருமுறை 'இசை' வந்ததற்கேற்பப் பயன்காட்டியபடி. இனி, (89-90) தொழுவர்பாடு சிலம்பும் இசை தொடங்கி (95) இரும்புள்ளோப்பும் இசைவரை கூறிய ஓசைகள், (97) குரவை யொடு (95) என்றும் (97) ஒலிப்ப என இயைந்து, மேல் (98) ஒருசார் விழவுநின்ற ஊர்என முடியும். (104) கலஞ் சிதறும் என்பது (105) கோவே என்பதனோடு முடியும். (105) 'பல் குட்டுவர்வெல்' என்பது கோவுக்கு அடை.

கருத்துரை:—குளங்களின்நீரை இடாவால் முகந்துகொண்டு நிரையாகநின்று தொழில் செய்வாரிடத்தே ஒலிக்கும் ஓசை, ஏற்றத்துடனே உலாவும் பன்றிப்பத்தரின் ஓசை, கிழாஅரின் ஓசை, கடாவிடுகின்றவர் ஓசை, எருதுகள்பூண்ட மணியின் ஓசை, புள்ளோப்பும் ஓசை ஆகியவை எந்நாளும் மணல்மலி கானல் பரதவர்மகளிர் குரவைக்கூத்தின் ஓசையோடுகூடி ஒலியாநிற்ப, ஒருபக்கம் விழாக் கொண்டாட்டத்தினோசைகள் மாறுமல்நின்ற ஊர்களிலேயிருந்துகொண்டு, தடாரிப்பொரு நர்க்கு யானைக்கன்றும் பிடியும் களிறும் கொடுத்தும், பொற் றாமரைப் பூச்சூட்டியும் சிறப்புச்செய்தலோடு, எல்லாருக்கும் பேரணிகலங்களைச் சிதறும் கோவே, பல்குட்டுவரையும் வென்ற கோவே! என நெடுஞ்செழியன் சிறப்புத்தோன்ற விளித்தமை கருத்து.

இதனால், நெடுஞ்செழியன் தன்நாட்டிலுள்ள ஊர்களில் தங்கியிருந்து கொடுக்கின்ற சிறப்புக்கூறப்பட்டது.

விசேடவுரை:—தெவ்வுதல்-கொள்ளுதல்; இடா-இறைகூடை. தொழுவர்-தொழில்செய்வார்; மேல், 'சிறுகுடிப் பெருந்தொழுவர்' (122) என வருதலுங் காண்க. ஆனால், இச்சொல் உழவர்க்குப் பெருவரவிற்றாய்வருதலை 'நெல்லரியும் இருந்தொழுவர்' (புறம், 24), 'நெல்லரிதொழுவர்' (புறம், 209), 'நெல்லரிதொழுவர்' (நற்றிணை, 195) என வந்தவாற்றால் உணரலாம். ஆம்பி - பன்றிப்பத்தர். கிழார் - பூட்டைப்பொறி. அகைய - தழைக்க; அகைதல் - தழைத்தல் என்ற பொருளில்வருதலை 'எரி அகைந்தன்ன ஏடில் தாமரை' (பொருந : 159) என்ற விடத்தும் காணலாம். இனி, 'கயன் அகைய'—குளம் அற்றற்று நீர்வடிய எனப் பொருள்கூறினாரும் உளர். அதரிகொள்பவர்-கடாவிடுகின்றவர்; அதரி-கடாவிடுதல். முண்டகம்-கழிமுள்ளி: இதன்பூ நீலமணிபோன்றிருக்கும்; 'கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்' (148) என்றது சிறுபாண்: குரவை-குரவைக் கூத்திற்ஙேசைக்கு ஆகிவந்தது. பொருநர் - தடாரிப்பொருநர். தடாரி - கிணைப்பறை. இப்பறைக்கு ஆமைவயிறு உவமை கூறப்படும். பொருநர் விடியற்காலத்தே சென்று தடாரி கொட்டிப் பாடுதலும், அதனைக்கேட்ட வள்ளியோர் அப்பொருநர்க்கு வேண்டுமவற்றை யளித்தலும் பண்டைய வழக்கம் என்பதை "வெள்ளி முளைத்த விடியல் வயல்யாமை, அள்ளகட்டன்ன வரிக்கிணை—வள்ளியோன், முன்கடை தட்டிப் பகடுவாழ்கென்னுமுன், என்கடை நீங்கிற் றிடர்" என்ற புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளாலும் (206), "கைக்கச டிருந்தவென் கண்ணகன் தடாரி, இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர், வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல், ஒன்றியான் பெட்டா வளவையின்" என்ற பொருநராற்றுப்படையாலும் (70-73) தெளியலாம். உரு-அச்சம்: 'உரு உட்காகும்', 'உருகெழு பெருஞ்சிறப்பின்' என்ற அடைக்கேற்ப, இருபெயர் என்பதற்கு-கன்றும் பிடியும் என்னும் இரண்டு பெயர் என்றனர் நச்சினார்க்கினியர். இனி, 'இருபெயர்க்கு ஆடும்மாடும் என்பாருமுளர்' என்று அவரே குறித்துள்ளார். பொருநர் பாணர் முதலியோர்க்குப் பொற்றாமரைப் பூச்சூட்டிச் சிறப்பித்தல் மரபு. இதனை, "எரியகைந்தன்ன ஏடில் தாமரை, சுரியிரும்பித்தை பொலியச்சூட்டி" என்றதால் உணர்க. (பொருந : 159-160).

இலக்கணக் குறிப்பு:—'தொழுவர்பாடு' என்றவிடத்து 'பாடு' ஏழனுருபின் பொருளது. 93-ஆம் வரியில் முரணழகு காண்க. பூண் + தெள் + மணி = பூண்டெண்மணி. (95) இசையே என்றவிடத்து ஏகாரம்-ஈற்றசை.

அடிகள் 106—130:—தலையாலங்கானத்து வென்றமை கூறும்.

> கல்காயுங் கடுவேனிலொடு
> இருவானம் பெயலொளிப்பினும்
> வரும்வைகல் மீன்பிறழினும்
> வெள்ளமா றாது விளையுள் பெருக

நெல்லி னோதை யரிநர் கம்பலை
புள்ளிமிழ்ந் தொலிக்கும் இசையே என்றும்
சலம்புகன்று சுறவுக்கலித்த
புலவுநீர் வியன்பௌவத்து
நிலவுக்கானல் முழவுத்தாழைக்
குளிர்ப்பொதும்பர் நளித்தூவல்
திரைதிமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை
இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொடு
ஒலியோவாக் கலியாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
வியன்மேவல் விழுச்செல்வத்து
இருவகையான் இசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு
தொன்றுமொழிந்து தொழில்கேட்பக்
காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட வெரிபரப்பி
ஆலங்கானத் தஞ்சுவரவிறுத்து
அரசுபட அமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
அடுதிறலுயர் புகழ்வேந்தே!

பதவுரை:— (*106*) கல் காயும் கடு வேனிலொடு - மலைகள் காய்தற்குக் காரணமான கடிய முதுவேனிலாலே, (*107*) இரு வானம்-பெரிய மேகம், பெயல் ஒளிப்பின்உம் - மழையைத் தன்னிடத்தே மறைத்துக் கொள்ளினும், (*108*) வைகல் வரும் மீன் பிறழின்உம் - தான் தோன்றுதற்குரியநாளிலே தோன்றும் வெள்ளிக்கோள் [திசைதிரிந்து] தென்திசையிலே எழினும், (*109*) வெள்ளம் மாறாது - யாறுகளில் வெள்ளம் மாறாமல் வந்து, விளையுள் பெருக-விளைச்சல் பெருகுகையினாலே, (*110*) நெல்லின் ஓதை-முற்றின நெல்லு(க் காற்றடித்து) அசைதலாலே எழுந்த ஓசையும், அரிநர் கம்பலை-அதனை அறுப்பாருடைய ஓசையும், (*111*) புள் இமிழ்ந்து ஒலிக்கும் இசை-பறவைகள் கத்துகையினாலே ஆரவாரிக்கும் ஆரவாரமும், (*112*) சலம் புகன்று சுறவு கலித்த-தம்முள் மாறுபாட்டை விரும்பிச் சுறாமீன்கள் செருக்கித் திரிகின்ற, (*113*) புலவு நீர் வியல் பௌவத்து-புலால் நாற்றத்தை யுடைத்தாகிய நீரையுடைய அகன்ற கடலிடத்து [எழுகின்ற], (*114*) நிலவு கானல் முழவு தாழை (*115*) குளிர் பொதும்பர்-நிலாப் போலும் மணலையுடைய கரையினில் குடமுழாப்போலும் தாளை யுடைய தாழையை வேலியாகவுடைய குளிர்ச்சி பொருந்திய இளமரக்காவின்கண்ணே, நளி தூவல் - (வந்து) செறிதலையுடைய துவலையின் ஓசையும், (*116*) திரை திமில் வேட்டுவர் கரை சேர்

கம்பலை-வரிசையாயமைந்த மீன் படகாலே வேட்டையாடுவார் வந்து கரையைச்சேரும் ஆரவாரமும், (117) இரு கழி செறுவின் வெள் உப்பு பகர்நரொடு-பெரிய கழியிடத்து உப்புப்பாத்தியிலே வெள்ளிய உப்பை விற்கும் அளவர் ஆரவாரத்தோடே, (122) சிறுகுடி பெருந்தொழுவர் (118) ஒலி-சிறிய குடிகளாய்ப் பெரிய தொழில்களைச் செய்வாருடைய ஆரவாரமும், (111) என்றும்-எந்நாளும், (118) ஓவா கலி யாணர்-ஒழியாத பெருக்கினையுடைத்தாகிய புது வருவாயினையுடைய, (119) முதுவெள்ளிலை - முது வெள்ளிலையென்னும் ஊர், மீ கூறும் - (உலகத்துப் பல தொழில்களினும்) மேலாகச் சொல்லப்படுகின்ற, (121) இரு வகையான்-உழவு வாணிகம் என்கின்ற இரண்டு கூற்றாலே, (120) வியல் மேவல் விழு செல்வத்து - அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே, (121) இசை சான்ற-புகழ் நிறைந்த, (123) குடி கெழீஇய நானிலவரொடு-குடிமக்கள் பொருந்தின நான்குநிலத்து வாழ்வாருடனே, (124) தொன்று மொழிந்து தொழில் கேட்ப-பழமை கூறிநின்று ஏவலைக் கேட்கும்படியாக, (125) கால் என்ன கடிது உராஅய் - காற்றென்னும்படி கடிதாகப் பரந்துசென்று, (126) நாடுகெட-பகைவர்நாடு கெடும்படி, எரி பரப்பி-நெருப்பைப் பரப்பி, (127) ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து-தலையாலங் கானம் என்கின்ற ஊரிலே பகைவர்க்கு அச்சந்தோன்றும்படி தங்கி, (128) அரசு பட அமர் உழக்கி-நெடுநிலமன்னர் இருவரும் குறுநிலமன்னர் ஐவரும் படும்படி போரிலேவென்று, (129) முரசு கொண்டு களம் வேட்ட - அவர் முரசைக் கைக்கொண்டு கள வேள்விவேட்ட, (130) அடு திறல் உயர் புகழ் வேந்தே-கொல்லுகின்ற வலி யுயர்ந்த புகழையுடைய வேந்தே! (எ-று.)

(110) நெல்லின் ஓதையும், அரிநர் கம்பலையும், (111) புள்ளொலிக்கும் இசையும், (113) பௌவத்து (115) நளித்தூவலின் ஓசையும், (116) திமில்வேட்டுவர் கம்பலையும், (117) உப்புப்பகர்நரொடு (122) சிறுகுடிப் பெருந்தொழுவர் (118) ஒலியும் (111) என்றும்(118) ஓவா (119) முதுவெள்ளிலையென்னுமூர் (123) குடி கெழீஇய நானிலவரொடு, (124) தொழில் கேட்கும்படியாக, (127) ஆலங்கானத்து இறுத்து (128) உழக்கி, (129) களம்வேட்ட (130) புகழ்வேந்தே! என இயையும்.

கருத்துரை:—பல்வகை யொலிகளும் ஓவாக் கலியாணரையுடைய முதுவெள்ளிலையென்னும் ஊர் நானிலவரோடே பழமை கூறி ஏவல்கேட்கும்படி தலையாலங்கானத்துச் செருவென்ற புகழ்வேந்தே! என நெடுஞ்செழியன் சிறப்புத்தோன்ற விளித்தமை கருத்து.

விசேடவுரை:—இந்த முதுவெள்ளிலை என்னும் ஊர் குறுநில மன்னரின் இருப்பாகும். குறுநிலமன்னர் ஐவரையும் [திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன்] நெடு

நிலமன்னர் இருவரையும் [சேரன், செம்பியன்] ஆலங்கானத்து வென்றமை பிரசித்தம். இதனை "இயறேர்ச் செழியன், நேரா எழுவர் அடிப்படக் கடந்த, ஆலங்கானத்து", (அகம் : 175), "தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து........வென்வேற் செழிய" (புறம் : 19) என்றவிடங்களிலும் காணலாம்.

மீன்பிறழ்தல் - வெள்ளியாகிய மீன் [சுக்கிரன்] தான்நிற்றற் குரிய வடதிசையில் நில்லாமல் திசைமாறித் தென்றிசை யெழுதல். உலகம் இனிதுநடத்தற்குக் கருவியாகிய மழைக்கு உரிய கோளாதலின், வெள்ளியைச் சிறப்புற எடுப்பது மரபு. வெள்ளிமீனுக்குச் சிறிது வடபுறஞ் சாய்ந்தாற்போலிருத்தல் இயல்பு: இதனை, "வறிதுவடக்கிறைஞ்சிய சீர்சால்வெள்ளி" என்ற பதிற்றுப்பத்தினால் அறியலாம். வெள்ளி அந்நிலைமாறித் தென்புறஞ் சாய்ந்தாற்போலிருப்பின் தீயநிமித்தமாகிப் பஞ்சத் துக்கு அறிகுறியாகும். "வெள்ளி தென்புலத் துறைய விளை வயற், பள்ளம் வாடிய பயனில் காலை" என்ற புறமும் (388) காண்க. அக்காலத்தும் யாறுகள் வெள்ளம் மாறாது விளையுள் பெருகும் என்றது கோல் செம்மை குறித்தபடி. புகன்று-விரும்பி. 'செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி' (திருமுருகு : 67) என்றவிடத்துங் காண்க. (113) பௌவத்து (115) நளித்தூவல் என முடியும். கானல் - கடற்கரைச் சோலைக்காயினும், மேல் 'பொதும்பர்' என வருதல்நோக்கி, மணற்கரைக்காயிற்று. தூவல் - துவலையின் ஓசைக்காயிற்று; துவலை - துளி. முழவு தாழை-குடமுழாப்போலும் காயையுடைய தாழை எனினுமாம். தாழை வேலியாக அமைதலை, "கொழுமடற்றாழை.........வேலி யாகும்" (குறுந் : 245), "கண்டல்வேலி கழிசூழ்படப்பை" (நற் : 207) என்பவற்றாலறியலாம். நளி - செறிவு: "நளியென் கிளவி செறிவுமாகும்". திமில்வேட்டுவர் - வலைஞர். பகர்நர் - பகர்நரது ஒலிக்கு ஆகிவந்தது. யாணர்-புதுவருவாய்: "புதிது படற் பொருட்டே யாணர்க் கிளவி". விழுச்செல்வத்திருவகை - உழவும் வாணிகமும். 126-127 வரிகள் "எரிபரந்தெடுத்தல்" என்னும் துறை கூறிற்று. அமருழக்கி முரசுகொள்ளலை "அருஞ் சமஞ் சிதையத்தாக்கி முரசமொடு, ஒருங்கு அகப்படேஎ னாயின்" என்ற புறப்பாட்டாலும் உணர்க. களம்வேட்டலாவது-போரிற் பகைவர்களைக் கொன்று பேய்கட்கு விருந்தூட்டல்.

இலக்கணக்குறிப்பு :—கல் - மலைக்கு இலக்கணை. ஓதை, கம்பலை இசை, ஒலி என்பவை ஒரு பொருளில் வந்த பல சொற்கள். பகர் நர், -ந், பெயரிடைநிலை. 122-இல், முரணழகு காண்க.

அடிகள் :—**131-132.**—நெடுஞ்செழியனது அளியும் துணிவுடைமையும் கூறும்.

நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவர் அரசுபெயர்க்குவை

பதவுரை :— (131) நட்டவர் - (நின்னுடனே) நட்புக்கொண்டவருடைய, குடி உயர்க்குவை - குடியை உயர்த்தலைச் செய்குவை; அதற்குமாறாக (132,) செற்றவர் - நின்னால் செறப்பட்டவரது, அரசு - அரசுரிமையை, பெயர்க்குவை - வாங்கிக்கோடலைச் செய்குவை; (எ-று.)

கருத்துரை :— நட்டவரைக் குடியுயரச் செய்தலும், பகைத்தவரை அரசிழக்கச் செய்தலும் வல்லன் செழியன் என்றது.

விசேடவுரை :— வரி 131-ஆல், தலையளி செய்தலும், வரி 132-ஆல் துணிவுடைமை நீங்காதிருத்தலும் பெறவைக்கப் பட்டது. இறைமாட்சியில் இக்குணங்கள் அரசற்கு வேண்டுவனவாக வள்ளுவரால் பேசப்பட்டிருத்தல் நினைவு கூர்க. இனி, பின்னர் 189-ஆம் வரியில் 'செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப' என்று கூறியுள்ளபடி, நின்னாற் சிறிது செறப்பட்ட பகைவர் நின்ஏவல் கேட்டு நின்வழிநடக்கையினாலே, அவ்வழி நட்டவர் குடியை நீயுயர்க்குவை என்றும்; பின்னர் 175-176-ஆம் வரிகளில் "வாழா மையின் வழிதவக் கெட்டுப், பாழா யினநின் பகைவர் தேஎம்'' என்று கூறியுள்ளபடி, நின்ஏவல்செய்து வாழாமையினால் மிகக்கெட்டு நின்பகைவர் நாடுகள்பாழாயின: அங்ஙனம் பாழாயின பின்பு, மேலும் நீ செற்றவர் அரசு பெயர்க்குவை என்றும், கூட்டிப் பொருள் காணவேண்டும் என்பது நச்சினார்க்கினியர் போக்காதல் உணரலாம். "செற்றோரை வழிதபுத்தனன், நட்டோரை யுயர்பு கூறினன்'' என்ற புறமும் (239) ஈண்டு இவ்வடிகளோடு ஒப்பு நோக்கத்தக்கது.

அடிகள் 133-138 :— **நெடுஞ்செழியன் கொற்கைக்கு உரியோன் எனக் கூறும்.**

பேருலகத்து மேஎந்தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்துமுதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப்பொருந!

பதவுரை:— (133) பெரு உலகத்து-பெரிய நன்மக்களிடத்தே, மேம் தோன்றி-மேலாய்த்தோன்றுகையினாலே, (134) சீர் உடைய- புகழையுடைய, விழு சிறப்பின்-விழுமிய தலைமையினையும், (135) விளைந்து முதிர்ந்த- சூல் முற்றி ஒளி முதிர்ந்த, விழு முத்தின்-சீரிய முத்தையும், (136) இலங்கு வளை-விளங்குகின்ற சங்கையுமுடைய, இரு சேரி-(சங்கு குளிப்பாரது) பெரிய இருப்பினையும், (137) கள் கொண்டி-கள்ளாகிய உணவினையுடைய, குடி பாக்கத்து-இழிந்த குடிகளைக்கொண்ட சிறு ஊர்களினையுமுடைய, (138) நல் கொற்கையோர்-நன்றாகிய கொற்கை நகரிலுள்ளோர்,நசை பொருந-நச்சு தலைச் செய்யும் பொருநனே!(எ-று.)

(134) சிறப்பினையும் (136) சேரியினையும் (137) பாக்கத்தினையும் உடைய (138) கொற்கை என இயையும்.

கருத்துரை:— நன்மக்கள் கொண்டாடும் விழுச்சிறப்பினையும், முத்தையும் சங்கையும் குளிப்பாரது இருப்பினையும், கள்ளுண்ணும் இழிகுடிகள் வாழும் சீறூர்களினையும் கொண்டது கொற்கைமாநகர். அத்தகைய கொற்கையில் உறைவாரால் விரும்பப்படும் பொருநனே! என நெடுஞ்செழியன் சிறப்புத் தோன்ற விளித்தமை கருத்து.

விசேடவுரை :— முத்தையும் வளையையும் உடைய சேரி என்க. பாக்கம்-சீறூர்கள், இவை கொற்கையைச் சூழவுள்ளன. கொற்கை முத்துக்குப் பேர்போனதென்பதை, "முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை" (நற் : 23) என்பதாலுமறியலாம். கொண்டி-கொள்ளப்படுவது; காரணப்பெயர். எனவே, ஈங்கு உணவாயிற்று, இனி, கொண்டி-கொள்ளையும் என்ப: அஞ்ஞான்று கள்ளைக் கொள்ளைகொண்டுண்ணும் என்பது பொருள்.

அடிகள் 139—144:—தென்பரதவரைத் தனக்குப் படையாகும்படி நெடுஞ்செழியன் அடிப்படுத்தினமை கூறும்.

செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று
அஞ்சுவரத் தட்கும் அணங்குடைத் துப்பின்
கோழூன்குறைக் கொழுவல்சிப்
புலவுவிற் பொலிகூவை
ஒன்றுமொழி யொலியிருப்பின்
தென்பரதவர் போரேறே!

பதவுரை:—(139) செற்ற தெவ்வர் கலங்க-தங்களால் கோபிக்கப்பட்ட பகைவர்மனம் கலங்கும்படி, தலை சென்று-அவரிடத்தே சென்று, (140) அஞ்சுவர தட்கும் - அவர்க்கு அச்சந்தோன்றத் தங்கும், அணங்கு உடை துப்பின்-வருத்தத்தையுடைத்தாகிய வலியினையும், (142) புலவு வில்-(முன்னர் எய்த அம்பை மீண்டும் தொடுத்தலின்) புலால் நாற்றத்தையுடைய வில்லினையும், (141) கொழு ஊன் குறை கொழு வல்சி-கொழுத்த இறைச்சியையுடைய கொழுத்திருக்கின்ற சோற்றினையும், (142) பொலி கூவை - பொலிந்த கூவைக்கிழங்கினையும், (143) ஒன்றுமொழி-வஞ்சினங்கூறுதலையும், ஒலி இருப்பின் - ஆரவாரத்தையுடைய குடியிருப்பினையும் உடைய, (144) தென் பரதவர் - தென்திசைக் கண்வாழும் பரதவர்க்கு, போர் ஏறே-போர்த் தொழிலைச்செய்யும் சிங்கம் ஆயவனே! (எ-று.)

(140) துப்பு (141) வல்சி, (142) வில், கூவை, (143) மொழி, இருப்பு—இவைகளையுடைய (144) பரதவர் என்க,

கருத்துரை:—தம்மைப் பகைத்தவர்க்கு அச்சம்வரத் தங்கும் வலியினையும், புலவுவில்லினையும், இறைச்சிகலந்த கொழுசோற்றினையும், கூவைக்கிழங்கினையும், வஞ்சினஞ்சாற்றி ஆரவாரித்தலையும் உடைய தென்பரதவரைப் போரில்தனக்கு அடிப்படுத்திப் படையாகும்படி செய்துகொண்ட போரேறே! என நெடுஞ்செழியன் சிறப்புத்தோன்ற விளித்தமை கருத்து.

விசேடவுரை:—பரதவர் - தென்திசைக்கட் குறுநிலமன்னர். இதனை, 'தென்பரதவர் மிடல்சாய, வடவடுகர் வாளோட்டிய" என்னும் புறநானூற்றால் (378) உணரலாம். இவர்களைத் தனக்குப் படையாகும்படி அடிப்படுத்தினனென்பது எங்ஙனம் பெறப்படுகின்றதென்னில், 139—140 - ஆம் அடிகளைநோக்க. தெவ்வரும் அஞ்சும்படிதங்கும் துப்பினையுடையராதலின், இப்பரதவர்க்குப் போரேறாய நெடுஞ்செழியன் அவர்களைத்தனக்குப் படையாக ஆக்கிக்கொண்டான் என்னத் தட்டில்லை. இவ்வுரை நுணுக்கம் நச்சினார்க்கினியர் காட்டக் கண்டது. கொழுவல்சி-வல்சிக்குக் கொழுமையாவது, ஊனைக்கூட இட்டு ஆக்குதலின் என்க. இனி, கொழு வல்சி-கொழுவினால் (கலப்பை முனையினால்) ஆகிய வல்சியென்றுமாம். அஞ்ஞான்று, கொழு என்பது—கொழுவினாலாகிய வேளாண்மைக்கு ஆகுபெயர். கூவை-கூவைக்கிழங்கு. கூவையென்பது — மஞ்சளைப்போல்வதொரு புதல் என்றும், அது தென்னாட்டுள்ள மலைப்பக்கங்களிற் காணப்படுகின்றது என்றும் கூறுப. கூவையிலைகொண்டு பந்தல் வேய்வதை "கூவை துற்ற நாற்கால் பந்தர்ச், சிறுமனை" (புறம் : 29) என்றதால் அறியலாம். இனி, கூவை - திரளுமாம். ஒன்றுமொழி - வஞ்சினம்: இரண்டுரையாமல் ஒன்றையே மொழிதல் என்பதுபற்றி வஞ்சினத்திற்கு இப்பெயர் வந்ததெனலாம். "இரண்டா காதவன் கூறிய தெனவே" என்றது புறமும் (304). வஞ்சினமாவது—இன்னது செய்யேனாயின் இன்னனாவேனென்று சபதஞ்செய்தல்.

இலக்கணக்குறிப்பு:—கோழ் - முதனீண்டது. 'பரதவர்' என்றதன்பின் நான்கனுருபு தொக்கது. ஏறு-உருவகம்.

அடிகள் **145—151**:—**நெடுஞ்செழியன் பகைவர் நாட்டைத் தன்னுடாக்கினமை கூறும்.**

அரியவெல்லாம் எளிதினிற்கொண்டு
உரிய வெல்லாம் ஓம்பாது வீசி
நனிபுகன் றுறைதும் என்னா தேற்றெழுந்து
பனிவார் சிமையக் கானம் போகி
அகநாடு புக்கவ ரருப்பம் வௌவி
யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குருசில்!

பதவுரை :— (*145*) அரிய எல்லாம்-பிறர்க்கு அரிய நுகர் பொருளெல்லாம், எளிதினின் கொண்டு-எளிதாக நின்னூரிடத் தேயிருந்து மனத்தாற் கைக்கொண்டு, (*146*) உரிய எல்லாம்-அங் ஙனம் நினக்குரித்தாய அப்பொருளையெல்லாம், ஓம்பாது-நினக் கென்று பாதுகாவாது, வீசி- ஊரிடத்தேயிருந்து பிறர்க்குக் கொடுத்து, (மேலும்,) (147) நனி புகன்று உறைதும் என்னுது-மிக விரும்பி ஊரின்கண்ணேயிருந்து உறையக்கடவேம் என்று கருதாதே, ஏற்று எழுந்து-பகைவர்மேற் செல்லுதலை ஏறட்டுக்கொண்டு போக்கிலே ஒருப்பட்டு, (148) பனி வார் சிமையம் கானம் போகி-பனியொழுகுகின்ற மலையிடத்தனவாகிய காடு களைக் கடந்து, (149) அகம் நாடு புக்கு-அவர்கள் உள்நாடு களிலே புகுந்து, அவர் அருப்பம் வெளவி-அப்பகைவர் அரண் களைக் கைக்கொண்டு, (அதனாலும் அமையாமல் மேலும்) (150) வேண்டு புலத்து-நீயழித்த நாடுகளிற் கொள்ளவேண்டும் நிலங் களிலே, பல யாண்டு கழிய இறுத்து-பல வருடங்களும் போம்படி தங்கி, (151) மேம்பட மரீஇய-அந்நிலங்கள் பண்டையின் மேலா தற்கு அடிப்படவிருந்த, வெல் போர் குருசில்-வெல்லும் போரினையுடைய தலைவனே! (எ-று)

(145) கொண்டு, (146) வீசி, (147) எழுந்து, (148) போகி, (149) புக்கு, வெளவி, (150) இறுத்து, (151) மேம்பட மரீஇய குருசில் என இயையும்.

கருத்துரை :— தன்னூரிலிருந்துகொண்டே அரிய பொருளெல்லாம் எளிதினில் மனத்தாற் கைக்கொண்டு, அவற்றையெல்லாம் வேண்டியோர்க்குக் கொடுத்து, மேலும் 'ஊரில் நனியுறைவோம்' என்று அமையாமல், போரேற்றெழுந்து மலையிடத்த காடுகளைக் கடந்து, பகைவரது நாட்டுள் புகுந்து அவரது அரண்களை வெளவி, அதனாலும் அமையாமல், தான் அழித்த நாடுகளின் நிலங்கள் பண்டையின் மேலாதற்கு அடிப்படத் தங்கியிருந்த குரிசிலே! என நெடுஞ்செழியன் சிறப்புத் தோன்ற விளித்தமை கருத்து. இதனால், நெடுஞ்செழியன் பகைவர் நாட்டைத் தன்னுடாக்கிக் கொண்ட சிறப்புக் (annexation) கூறப் பட்டது.

விசேடவுரை :— வரிகள் 145-146-இல் 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்'' கூறப்பட்டது. கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமாவது- பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் [தன்னூரிலிருந்து கொண்டே] கொண்டான்போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக்குறித்த வெற்றி யென்றபடி. இராமன் இலங்கை கொள்வதன்முன் வீடணற்குக் கொடுத்தமையும் "ஒன்னார், ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதெனப், பாண்கட னிறுக்கும் வள்ளியோய்!'' என்ற புறமும் (*203*) இத்துறையனவே என்பதை நினைவு கூர்க. வரி *147*-இல் 'வஞ்சி' கூறப்பட்டது. 'வஞ்சியாவது-மண்ணசையாற்

பகைமேற் சேறல். வரி-149-இல் 'அகநாடுபுக்கு' என்றதால் "தொல்லெயிற்கு இவர்தல்" கூறப்பட்டது. தொல் எயிற்கு இவர்தலாவது-ஒருகாலத்தும் அழிவில்லாத மதிலை இற்றைப் பகலுள் அழித்துமென்று கூறி அஃது அழித்தற்கு விருப்பஞ் செய்தல். அதே வரியில் (149) 'அவர் அருப்பம் வெளவி' என்றதால், 'குடுமிகொண்ட மண்ணுமங்கலம்' கூறப்பட்டது. குடுமி கொண்ட மண்ணுமங்கலமாவது-இகல்செய்த பகைவர்மதிலை யழித்து அங்கேயிருந்த மன்னவருடைய முடிக்கலம் முதலியன வாங்கிக்கொண்டு, பட்ட வேந்தர் பெயரானே வீரமுடிபுனைந்து நீராடும் மங்கலம். இங்குக் குறித்தது, புறத்தோன் மண்ணுமங்கலம். 'கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும் வென்றி' (451-52) என்றது பெரும்பாணும். இதனால், நெடுஞ்செழியன் பகையரசர் அரண்களை அழித்தமை கூறினார். இனி, வரிகள் 150-151 இல், அழித்த நாடுகளிலுள்ள நிலங்கள் பண்டையின் மேலாதற்குப் பலயாண்டுகள் அவன் தங்கியிருந்த இருப்புக் கூறினார்.

இலக்கணக்குறிப்பு:—*சிமையம்—மலைக்கு, ஆகுபெயர்.*

அடிகள் **152—176**:—நெடுஞ்செழியன் ஏவல்வழி வாழாது அவனொடு பகைத்தவர் நாடுகள் பாழாயினமை கூறும்.

உறுசெருநர் புலம்புக்கவர்
கடிகாவின் நிலைதொலைச்சி
இழிபறியாப் பெருந்தண்பணை
குரூஉக்கொடிய வெரிமேய
நாடெனும்பேர் காடாக
ஆசேந்தவழி மாசேப்ப
ஊரிருந்தவழி பாழாக
இலங்குவளை மடமங்கையர்
துணங்கையஞ்சீர்த் தழூஉமறப்ப
அவையிருந்த பெரும்பொதியிற்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட
அணங்குவழங்கும் அகலாங்கண்
நிலத்தாற்றுங் குழூஉப்புதவின்
அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவக்
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரலக்
கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக்
களிறுமாய் செருந்தியொடு கண்பமன் றூர்தர

நல்லேர் நடந்த நசைசால் விளைவயற்
புன்மயிர்ப் பிணவொடு கேழல் உகள
வாழா மையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎம்

பதவுரை :— (152) *உறு செருநர் புலம் புக்கு-தொன்று தொட்டுவந்த பகைவர் நிலத்தே புகுந்து தங்கி, அவர்* (153) *கடி காவின் நிலை தொலைச்சி-அவரது காவலையுடைய பொழில்களின் நிற்கின்ற நிலைகளைக் கெடுத்து [பொழில்களை வெட்டி],* (154) *இழிபு அறியா பெரு தண் பணை-வளப்பங் குன்றுதலை ஒருகாலத்தும் அறியாத பெரிய மருதநிலங்களை,* (155) *குரூஉ கொடிய எரி மேய-நிறத்தையுடைய ஒழுங்கினையுடைய நெருப்பு உண்ண,* (156) *நாடு எனும் பேர் காடு ஆக-நாடென்னும்பெயர்போய்க் காடென்னும் பெயரைப்பெற,* (157) *ஆ சேந்த வழி மா சேப்ப-பசுத்திரள் தங்கின இடமெல்லாம் புலி முதலியன தங்க,* (158) *ஊர் இருந்த வழி பாழ் ஆக-ஊராயிருந்த இடங்களெல்லாம் பாழாய்க்கிடக்க,* (159) *இலங்கு வளை மடம் மங்கையர்-விளங்குகின்ற வளையினையும் மடப்பத்தினையுமுடைய மகளிர்,* (160) *துணங்கை-துணங்கைக் கூத்தினையும், அம் சீர் தழூஉ-அழகினையுடைய தாள அறுதியையுடைய குரவைக் கூத்தினையும், மறப்ப-,* (161) *அவை இருந்த பெரு பொதியில்-சான்றோரிருந்த பெரிய அம்பலங்களிலே,* (*162*) *கவை அடி கடு நோக்கத்து*(*163*) *பேய் மகளிர் -இரட்டையான அடிகளையும் கடிய பார்வைகளையுமுடைய பேயாகிய மகளிர், பெயர்பு ஆட-உலாவியாட,* (*164*) *அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்-இல்லுறைதெய்வங்கள் உலாவும் அகன்ற ஊரிடத்து,* (*165*) *நிலத்து ஆற்றும்-நிலத்திலுள்ளாரையெல்லாம் போகச்செய்யும், குழூஉ-வாசல்காப்பாரையுடைய, புதவின்-வாசலின் கண்ணேயிருந்து,* (*166*) *அரந்தை பெண்டிர் இனைந்தனர் அகவ-மனக்கவற்சியையுடைய பெண்டிர் வருந்திக்கூப்பிட,* (*167*) *கொழு பதிய குடி தேம்பி-வளவிய ஊர்களிடத்தனவாகிய குடிகளெல்லாம் பசியால் உலர்ந்து,* (*168*) *செழு கேளிர் நிழல் சேர-புறநாட்டிலிருக்கும் வளவிய சுற்றத்தார் தமக்குப் பாதுகாவலாகவமையச் சென்று சேர,* (*169*) *நெடுநகர் வீழ்ந்த-பெரிய மாளிகைகளிலே வெந்துவீழ்ந்த, கரி குதிர் பள்ளி -கரிந்த குதிரிடங்களிலே,* (*170*) *குடுமி கூகை குராலொடுமுரல-சூட்டினையுடைய கூகைச்சேவல் பேட்டுடனேயிருந்து கதற,*(*171*) *கழுநீர்பொலிந்தகண் அகல்பொய்கை-செங்கழுநீர்மிக்க இடமகன்ற பொய்கைகளிடத்தே,* (*172*) *களிறு மாய் செருந்தியொடு கண்பு அமன்று ஊர்தர-யானை நின்றால்மறையும் வாட்கோரையுடனே சண்பங்கோரையும் நெருங்கிவளர,* (*173*) *நல் ஏர் நடந்த நசை சால் விளை வயல்-நன்றாகிய எருதுகள் உழுத நச்சுதலமைந்த விளைகின்ற வயலிடத்தே,* (*174*) *பல் மயிர் பிணவொடு கேழல் உகள-பல மயிரினையுடைய பெண்பன்றியுடனே ஆண்பன்றி ஓடித்திரிய,* (*175*) *வழி வாழாமையின் தவ கெட்டு-நின் ஏவல்*

செய்து வாழாமையினாலே மிகக்கெட்டு, (176) நின் பகைவர் தேஎம் பாழ் ஆயின-நின்னொடு பகைத்தலைச் செய்தவருடைய நாடுகள் பாழாய்விட்டன; (எ-று.)

(152) புக்கு (153) தொலைச்சி (153) மேய (156) ஆக (157) சேப்ப (158) ஆக (160) மறப்ப (163) ஆட (166) அகவ (168) சேர (170) முரல (172) ஊர்தர (174) உகள (175) கெட்டுப் (176) பாழாயின தேஎம் என வினைமுடிக்க.

கருத்துரை :—செழியனே! நின் ஏவல்செய்து வாழாமையினாலே நின்பகைவர்நாடுகள் நின்னால் பாழ்பட்டன என்பது கருத்து. பாழ்பட்ட வகை:—கடிகாவினை வெட்டுதல், தண்பணைகளை எரியூட்டல், நாடு காடாதல், பசுதங்கின இடமெல்லாம் புலி தங்குதல்; ஊர் பாழாதல், மகளிர் கூத்தினை மறத்தல், சான்றோரிருந்த அம்பலங்களில் பேய்மகளிர் உலாவியாடல், ஊரிடத்துள்ளாரையெல்லாம் வாசல்காப்பார்வெளியேற்ற அவ்வாசலின்கண் நின்று பெண்டிர் வருந்தி அரற்றல், ஊர்க்குடிகளெல்லாம் பசியால் வாடித் தம சுற்றத்தார் பற்றுக்கோடாகச் சென்று சேரல், மாளிகைகளில்எரியுண்டுவெந்துவீழ்ந்த கரிந்த குதிரிடங்களிலே கூகைகள் கதறல், நீர்மிக்க பொய்கைகளில் வாட்கோரையும் சண்பங்கோரையும் வளரல், கழனிகளில் பன்றிகள் ஓடித் திரிதல். இங்ஙன் தவக்கெடுத்தான் நெடுஞ்செழியன் என அவன் புகழ்கிளந்தவாறு.

விசேடவுரை :—பணைக்கு இழிபு அறியாமையாவது என்றும் வளப்பங் குன்றாதிருத்தல். ஊர் இருந்த வழி-ஊரார் இருந்த இடம் எனினுமாம். துணங்கை-இரு கைகளையும் விலாப் புடைகளில் ஒற்றியடித்துக்கொண்டு அசைந்தாடுங் கூத்து: "பழுப்புடை யிருகை முடக்கியடிக்கத்துடக்கிய நடையது துணங்கையாகும்." சீர்-தாளவறுதி. தழூஉ-குரவைக்கூத்துக்கு ஆகுபெயர். கலித்தொகையிலும் " ஆங்கண் அமர்வர் தழூஉ " (செ: 104 வரி.62) என்றவிடத்து இங்ஙனமே பொருள் கூறினர் நச்சினார்க்கினியர். அவை-சான்றோரிருந்த அவை. சான்றோர்-குடிப்பிறப்பு முதலிய எட்டுக் குணங்களமைந்தோர். "எட்டு வகை நுதலிய அவையத்தானும்" என்றது தொல்காப்பியம். எட்டாவன:-"குடிப்பிறப்புக்கல்வி குணம் வாய்மை தூய்மை, நடுச்சொல்லு நல்லணியாக்கம்-கெடுக்கும், அழுக்கா றவாவின்மை யவ்விரண்டோ டெட்டும், இழுக்கா வகையின்க ணெட்டு" என்றது புறப்பொருள்வெண்பாமாலை. அணங்கு-இல்லுறை தெய்வம். ஆற்றும்-போக்கும், போகச்செய்யும், வெளியேற்றும். 'மையலாற்றிய குணத்து மாதவர்' (அரிச். பு. விவாக. 42) என்றவிடத்தும் இப்பொருளதாதல் காண்க. குழூஉ-கூட்டம்: ஈண்டு, வாசல் காப்பாருக்கு ஆகிவந்தது; ஆகுபெயர். புதவு-கதவு: வாசல். கைப்பற்றிய நிலத்திலுள்ளாரையெல்லாம் வாசல் காப்பாரைக்கொண்டு வெளிப்போக்கினான் என்பது கருத்து.

இனி, நிலத்து ஆற்றும்-(நிலத்திலே உராய்தலால்) மண்ணைக் கொழித்துவரும் எனவுமாம். அஞ்ஞான்று, கதவின் குடுமி தேய்ந்துபோதலின் மண்ணைக் கொழித்து வரும் எனக் கொள்க. குடுமியாவது-கதவைத் தாங்கி நிற்பதாயுள்ள ஓர் உறுப்பு. "திருகுங் குடுமி விடுவளவுந் தேயும் கபாடம்" என்ற கலிங்கத்துப் பரணியும், "தாய ரடைப்ப மகளிர் திறந்திடத், தேயத்திரிந்த குடுமியவே...கதவு" என்ற முத்தொள்ளாயிரமும் நினைவுகூர்க. குரால்-கூகையின் பேடு. கூகை-கோட்டான். "மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்" (தொல்), "சாவோர்ப் பயிருங் கூகையின் குரலும், புலவூண் பொருந்திய குராலின் குரலும்" என்ற மணிமேகலையும் (6: 75-76), "அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்" என்ற புறமும் (280:5) காண்க. கண்பு-சண்பங்கோரை: 'கண்புமலி பழனம்' என்றது மலைபடுகடாம்(454). கண்பு என்பது சண்பு எனவும் வழங்கும். செருந்தி-வாட்கோரை: நெட்டிக்கோரையுமாம். பிணவு-ஈண்டு, பெண்பன்றி: "பன்றி புல்வாய் நாயென மூன்றும், ஒன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" என்றார் தொல்காப்பியனார். வரி-175-இல் 'தவ வழி வாழாமையின்' என முன்னர்க் கொண்டு கூட்டி-மிக நின் ஏவல் செய்து வாழாமையினாலே எனப் பொருள் கண்டனர் நச்சினார்க்கினியர்.

இலக்கணக்குறிப்பு:—குரூஉ - நிறம்; 'குருவுங் கெழுவு நிறனாகும்மே'. பிணவொடு - பிண + ஒடு: பிணவென்னும் அகர வீற்றுச் சொல் வகரவுடம்படுமெய் பெற்றது.

அடிகள் 177—196:—நெடுஞ்செழியன் சோழமண்டல தொண்டை மண்டலங்களைத் தன்னவாக வளைத்துக்கொண்டு அறநெறிகாட்டிய பெற்றிமை கூறி, அவனை வாழ்த்தியபடி கூறும்.

எழாஅத்தோள் இமிழ்முழக்கின்
மாத்தாள் உயர்மருப்பின்
கடுஞ்சினத்த களிறுபரப்பி
விரிகடல் வியன்றானையொடு
முருகுறழப் பகைத்தலைச்சென்று
அகல்விசும்பின் ஆர்ப்பிமிழப்
பெயலுறழக் கணைசிதறிப்
பலபுரவி நீறுகைப்ப
வளைநரல வயிரார்ப்பப்
பீடழியக் கடந்தட்டவர்
நாடழிய எயில்வௌவிச்
சுற்றமொடு தூவறுத்தலின்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழின் மண்டிலம் முற்றி
அரசியல் பிழையா தறநெறி காட்டிப்

பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்
குணமுதற் றோன்றிய வாரிருண் மதியின்
தேய்வன கெடுகநின் தெவ்வ ராக்கம்

பதவுரை:—(177) *இமிழ் முழக்கின் - முழங்குகின்ற ஓசையையும்,* (178) *மா தாள்-பெருமையையுடைய கால்களையும், உயர் மருப்பின் - தலைகளேந்தின கொம்புகளையுமுடைய,* (179) *கடு சினத்த களிறு - கடிய கோபத்தையுடையனவாகிய யானைகளை, பரப்பி-எங்கும் பரப்பி,* (177) *எழா தோள்* (180) *விரிகடல் வியல் தானையொடு - முதுகிட்டார்மேற் செல்லாத தோளினையுடைய விரிகின்ற கடல்போலும் அகற்சியையுடைய படையோடே,* (181) *முருகு உறழ பகை தலை சென்று-முருகன் (பகைவர்மேற் செல்லுமாறு) போலத் தடையறப் பகைவரிடத்தே சென்று,* (182) *அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழ - அகன்ற ஆகாயத்தின் கண்ணே படையெழுந்த ஆரவாரம் ஒலிப்ப,* (183) *பெயல் உறழ கணை சிதறி - மழையோடே மாறுபடும்படி அம்புகளைத்தூவி,* (184) *பல புரவி நீறு உகைப்ப - பல குதிரைத்திரள் ஓடுகின்ற விசையால் துகள்களை எழுப்ப,* (185) *வளை நரல-சங்கம் முழங்க, வயிர் ஆர்ப்ப-கொம்புகள் ஒலிப்ப,* (186) *பீடு அழிய கடந்து அட்டு-பெருமை கெடும்படி வென்று கொன்று, அவர்* (187) *நாடு அழிய எயில் வௌவி - அவருடைய நாடுகள் அழியும்படியாக அவரிருக்கின்ற மதிலைக் கைக்கொண்டு,* (188) *சுற்றமொடு தூ அறுத்தலின் - (அவர்களுக்கு உதவிசெய்யும்) சுற்றத்தாரோடே கூட (அவர்கள்) வலியைப் போக்குதலாலே,* (189) *செற்ற தெவ்வர்-நின்னாற் சிறிது செறப்பட்ட பகைவர், நின்வழி நடப்ப-நின் ஏவல்கேட்டு நடக்கையினாலே,* (190) *வியல் கண் முது பொழில் மண்டிலம் முற்றி - அகன்ற இடத்தையுடைய பழைய நாவலந்தீவின்கண் உளவாகிய சோழமண்டலம் தொண்டை மண்டலம் என்கின்ற மண்டலங்களை நின்னவாக வளைத்துக் கொண்டு,* (191) *அரசு இயல் பிழையாது - நூல்களிற்கூறிய அரசிலக்கணத்தில் தப்பாமல்,* (192) *பெரியோர் சென்ற அடிவழி பிழையாது - நின்குலத்திற் பெரியோர்நடந்த அடிப்பாட்டின் வழியைத் தப்பாமல்,* (191) *அறம் நெறிகாட்டி-தரும மார்க்கம் இருக்கும்படி இதுவென்று அவர்களுக்கு விளக்கி, (மேம்படும்),* (194) *நின் வலம் படு கொற்றம்-நின்னுடைய வெற்றியாலே (நின் பின்னுள்ளோர்க்கு) உண்டாம் கொற்றம்,* (193) *குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்-மேல்திசைக்கண் தோன்றிய நின்குலத்திற்குப் பழைதாகிய எல்லாரும் தொழும் பிறை நாடோறும் சிறக்குமாறு போல,* (194) *வழிவழி சிறக்க-அவர்கள் வழிமுறை வழிமுறையாக மிகுவதாகுக; [அதே சமயத்து],* (196) *நின் தெவ்வர் ஆக்கம்-நின் பகைவருடைய ஆக்கம்,* (195) *குணமுதல் தோன்றிய ஆர் இருள் மதியின்-*

கீழ்திசைக்கண்தோன்றிய நிறைந்த இருட்பக்கத்து (கிருஷ்ண பட்சத்து) மதி நாடோறும் தேயுமாறுபோல, (196) தேய்வன கெடுக- தேய்வனவாய்க் கெடுவனவாகுக; (எ-று.)

(179) களிறுபரப்பி (180) தானையொடு (181) பகைத் தலைச் சென்று (182) இமிழ (183) சிதறி (184) உகைப்ப (185) நரல, ஆர்ப்ப (186) கடந்து அட்டு (187) அழியவெளவி (188) அறுத்த லின் (189) நின்வழி நடக்கையினாலே (190) மண்டிலம் முற்றி (191) பிழையாது (192) பிழையாது (191) அறநெறி காட்டி (மேம்படும்) (194) நின் வலம்படு கொற்றம் (193) பிறையின் (194) வழிவழிச் சிறக்க; (196) நின்தெவ்வர் ஆக்கம் (195) இருண்மதியின் (196) தேய்வன கெடுக என இயைத்து வினைமுடிக்க.

கருத்துரை:—களிறு எங்கும் பரப்பி அறப்போர் செய்யும் மறவர் படையோடே முருகனைப்போற் பகைமேற் சென்று விசும்பிலார்ப்பிமிழ அவரைக் கடந்தட்டு, அவர் நாடழிய எயில் வெளவி, அவர் சுற்றமொடு அவர் வலியையும் போக்குதலின், செற்ற தெவ்வர் ஏவல் கேட்டு நடக்கையினாலே சோழமண்டல தொண்டைமண்டலங்களைத் தன்னவாக்கிக்கொண்டு, அரசியல் பிழையாமலும் பெரியோர் சென்ற அடிவழி பிழையாமலும் அற நெறி இப்பெற்றித்தென அவர்க்கு விளக்கி, மேம்படும் நின் வலம்படு கொற்றம் பிறைச்சந்திரன்போல் நாடோறும் வளர்ந்து வழிவழிச் சிறக்குமாக; நின்தெவ்வராக்கம் இருட்பக்கத்து மதி நாடோறும் தேய்ந்திறுவதுபோலத் தேய்ந்து கெடுவனவாக என நெடுஞ்செழியன் பெருமைகிளர்ந்து வாழ்த்தியமை கருத்து.

விசேடவுரை:—எழாத்தோள் தானை என்றதால் தழிஞ்சிகூறிய படி. தழிஞ்சியாவது - அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச் சாத், கழிதறுகண்மை. உயர் மருப்பு-தலையிடத்து ஏந்தி எடுத் தாற்போலே நிற்கும் கொம்பு. முருகு - தெய்வத்தன்மை: அத் தன்மையுடைய முருகனுக்கு ஆகுபெயர். 'முருகு உறழ' எனத் தேவசேனுபதியை உவமை குறிக்கவே, விசும்பு-ஆகுபெயராய்த் தேவருலகை யுணர்த்திற்று என்பது நச்சினார்க்கினியர் கருத்துப் போலும். வரி-183-இல், 'பாய மாரிபோற் பகழி சிந்தினர்' (சிந்தாமணி-421) 'கார்த்துளி கடுப்பக் கடுங்கணை சிதறி' (பெருங் கதை 3.27: 98-99) முதலியன ஒப்புக் காண்க. புரவிநீறு உகைத் தலை-'மாவெடுத்த மலிகுரூஉத்துகள்' (வரி-49) என்றதாலும் உணரலாம். வளையும் வயிரும் இணைத்துச் சொல்லப்படுதலை 'வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல' (திருமுருகு-120), 'பயிர் வளை யர்வமொடு வயிரெடுத்தூதி' (பெருங்கதை 1.38: 4), 'வளைகள் வயிரியம்பும் வாட்டானை' (புற. வெ. 207) 'வயிரும் வளையும் ஆர்ப்ப' (முல்லை-92) என்றவாற்றாலும் உணரலாம். தூ- வலிமை. 'வியலென் கிளவி யகலப் பொருட்டே'. வியல்கண் முதுபொழில்-நாவலந் தண்பொழில் என்றபடி. ஜம்பூத்வீபம் எனப்படுதலால் 'நாவலந்தீவு' எனப்படும். மண்டிலம் = மண்ட

லம்: மண்டலம் மண்டிலமென மருவிற்றென்றனர் நச்சினார்க்கினியர். ஈண்டு, சோழமண்டலம், தொண்டைமண்டலங்களைக் குறிப்பன, மண்டலம் என்ற பெயர்ப் பொருத்தத்திற்கு அவை ஏற்பன நோக்கி. அரசியல் பிழையாது அடிவழிப் பிழையாது அறநெறி காட்டி எனக் கூட்டிப் பொருள்கண்டனர் நச்சினார்க்கினியர். அஃது பொருந்துவதே. பெரியோர்-செழியன் குலமுதல்வோராகிய வடிம்பலம்ப நின்ற பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிபோன்றோர். தோன்று பிறை என்றது-பாண்டியர் குலமுதலாகலின். பாண்டியர் தொன்று தொட்டு வருதலை, 'சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்' என்ற பரிமேலழகர் வாக்கால் தெளிக. இந்தப் பாண்டியர் திங்கள் குலத்தினர் என்பதை 'திங்கட் செல்வன் திருக்குலம் விளங்க' (சிலப்:11: 23), 'செருமாண் தென்னர் குலமுத லாகலின், அந்தி வானத்து வெண்பிறை தோன்றி' (சிலப். 4: 22-23) என்பவற்றாலறிக. பிறை தொழப்படுதலை 'தொழுது காண் பிறையிற் றோன்றி' (குறுந்: 178), 'அப்பிறை, பதினெண் கணனும் ஏத்தவும் படுமே' (புறம்: 1), "அந்தி யாரண மந்திரத் தன்புடன் இவனை, வந்தி யாதவர் மண்ணினும் வானினும் இல்லை" (வில்லிபாரதம்: குருகுலச்: 6) என்பவற்றாலறிக. இருண்மதி-இருட்பக்கத்து மதி: கிருஷ்ணபட்சத்துச் சந்திரன்; இது நாடோறும் தேய்தலுண்மை தேற்றம். 195-96 அடிகளை மேற்கோளாகக் காட்டினர் அடியார்க்குநல்லார் 'காரிருணின்ற கடைநாட் கங்குல்' என்ற உரைவிளக்கத்தினிடத்து (சிலப்: 10: 3). பிறை-ஒளிப்பக்கத்தது: சுக்லபட்சத்தது: நாடோறும் வளர்தலுண்மை தேற்றம்.

இலக்கணக்குறிப்பு:—முருகு உறழ, உறழ-உவமவுருபு. சிறக்க, கெடுக-வியங்கோள் முற்றுக்கள்.

இனி, நச்சினார்க்கினியர் காரண காரியத் தொடர்பு பற்றிக் காட்டும் வினைமுடியும் போற்றத் தக்கதே. அவர் போக்குபின் வருமாறு:—(147) நணிபுகன்றுறைதும் என்றனது ஏற்றெழுந்து (197) களிறுபரப்பித் (180 தானையோடே (181) தலைச்சென்று (190) அரசமண்டில முற்றிச் (189) செற்றதெவ்வர் நின்வழி நடக்கையினாலே (181) நீ நட்டவர் குடியுயர்க்குவை யாகையினாலே அவர்களுக்கு (191) அறநெறி காட்டி [ப்பின்னர் அம்மண்டலங்களைச்சூழவிருந்தகுறுநிலமன்னர் அரண்களிலுள்ளனவற்றை] (145) எளிதினிற் கொண்டு (146) வீசிப் (148) போகிப் (149) புக்கு அவரருப்பங்களை வௌவிப் (125) பின்னர் உறுசெறுநர் (175) நின்வழி வாழாமையினாலே (142) அவர் புலம்புக்கு (63) நீ நரையுருமேறனையை யாகையினாலே (191) அரசியல் பிழையாமல் (182) ஆர்ப்பெழ (184) நீறுஉகைப்ப (184) நரல ஆர்ப்பக் (183) கணைசிதறித் (153) தொலைச்சி (186) அவரைக் கடந்துஅட்டு (187) அவரெயிலைவௌவி (188) அவரைத் தூவறுத்தலின் (176) அப்புகைவர் தேஎம் (155) எரிமேயக் (156) காடாக (157) மாசேப்பப்

(158) பாழாக (160) மறப்ப (163) ஆட (166) அகவச் (168) சேர (170) முரல (172) ஊர்தர (174) உகளக் (175) கெட்டுப் (176) பாழாயின; அங்ஙனம் பாழாயினபின்பு நீ (132) செற்ற வரசு பெயர்க்குவை யாகையினாலே (150) வேண்டுபுலத்திறுத்து அந்நாடுகள் (152) மேம்படுதற்கு மருவின குருசில் என வினைமுடிக்க என்பது.

அடிகள் 197-209:—நெடுஞ்செழியனின் பண்புகளைப் பாராட்டிக் காஞ்சி கூறுவது கூறும்.

உயர்நிலை யுலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொடு
உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி
ஈத லுள்ளமொடு இசைவேட் குவையே
அன்னாய்! நின்னொடு முன்னிலை யெவனோ
கொன்னொன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்!
கேட்டிசின் வாழி கெடுகநின் அவலம்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை

பதவுரை:—(197) உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறின்உம்- [ஒரு பொய்யாலே] உயர்ந்த நிலையையுடைய தேவருலகை அவர் நுகரும் அமுதத்தோடே பெறுவையாயினும், (198) பொய் சேண் நீங்கிய-அவற்றைத் தருகின்ற பொய் நின்னை அறக் கைவிட்டு நீங்கும்படி, வாய் - மெய்யுடனே, நட்பினையே-நட்புச் செய்தலையுடையை; (199) முழங்கு கடல் ஏணி - ஒலிக்கின்ற கடலாகிய எல்லையையுடைய, மலர் தலை உலகமொடு-அகன்ற இடத்தையுடைய உலகத்துள்ளாருடனே, (200) உயர்ந்த தேஎத்து விழுமியோர்-உயர்ந்த தேவருலகத்துத் தேவரும், வரின்உம்-பகைவராய் வரினும், (201) பகைவர்க்கு அஞ்சி-, பணிந்து ஒழுகலையே-தாழ்ந்து நடத்தலைச் செய்யாய்; (202) தென் புலம் மருங்கின்-தென்றிசை நிலத்தின், விண்டு நிறைய-மலைகளெல்லாம் நிறையும்படி, (203) வாணன் வைத்த-வாணன் என்னும் சூரன் வைத்த, விழுநிதி பெறின்உம்-சீரிய பொருள் திரள்களினைப் பெறுவையாயினும், (204) பழி நமக்கு எழுக என்னாய்-பிறர்கூறும் பழி நமக்கு வருவதாக என்று கருதாய்; விழுநிதி-சீரிதாகிய பொருளை, (205) ஈதல் உள்ளமொடு-கொடுத்தலை யுடைத்தாகிய நெஞ்சுடனே, இசை வேட்குவையே-புகழை விரும்புவாய்; (206) அன்னாய்-அத்தன்மையையுடையாய்! (208) நின் அவலம் கெடுக-நின்னிடத்துண்டாகிய மாயை இனிக் கெடுவதாக; (207) அடுபோர் அண்ணல்-அம்மாயையைக் கொல்

இன்ற போர்த்தொழிலில் வல்ல தலைவனே! கொன் ஒன்று கிளக்குவல்-பெரிதாயிருப்பதொரு பொருளை யான் கூறுவன்; (கூறுதலேயன்றி) அஃது என்னாற் காட்டுதற்கரிது; (ஆதலின்) (208) கேட்டிசின் - அதனை [நிலந்தருதிருவின் நெடியோன்போல வுள்ள] தொல்லாணை நல்லாசிரியரிடத்தே கேட்பாயாக; [இனி, யான்கிளக்கவந்த பொருள் என்னையெனில்], (206) முன்னிலை நின்னொடு எவனோ-ஐம்பொறிகளுக்கும் நுகரப்படுவனவாய் முன்னிற்கப்படுவனவாகிய இந்நுகர் பொருள்கட்கு நின்னோடு என்ன உறவுண்டு?(209) சேண் விளங்கு நின் நல் இசை கெடாது நிலைஇயர் - சேட்புலமெல்லாம் சென்று விளங்கும் நின்னுடைய நல்லபுகழ் ஒருகாலமும் கெடாதே நிலைபெறுவதாக. (எ-று.); (208) வாழி- அசை; வாழ்த்துமாம். இனி, 'வாழி' யென்பதனை (770) 'சுற்றமொடு பொலிந்து விளங்கி' என்பதன் பின்னே கூட்டுக என்றனர் நச்சினார்க்கினியர்.

(198) வாய்நட்பினையே, (201) ஒழுக்கலையே, (204) என்னாய் (205) இசைவேட்குவையே; (206) அன்னாய்! (208) நின் அவலம் கெடுக (207) அண்ணல்! ஒன்று கிளக்குவல்; (208) கேட்டிசின்; (206) நின்னொடு முன்னிலை எவனோ? (209) நல்லிசை கெடாது நிலைஇயர் என வினைமுடிக்க.

கருத்துரை:- பொய்யொன்று கூறுதலால் தேவருலகம் அமிழ்தொடு பெறுவதாயிருப்பினும், அப் பொய்யைஅறக் கைவிட்டு நீங்கி மெய்யொடு நட்புச்செய்தலையுடையை; பகையாய்த் தேவர் வரினும் பகைவர்க்கு அஞ்சித்தாழ்ந்து ஒழுகுதலையுடையையல்லை; வாணன் என்ற சூரன் வைத்த விழுநிதி பெறுவதாயிருப்பினும் பழியொடு படர்வாயல்லை; சிறியபொருளை ஈத்துவக்கும் உள்ளமொடு புகழை விரும்புதலுடையாய். அப் பெற்றித்தாய நினக்கு ஒரு பெரும்பொருளை [தத்துவப்பொருளை] இன்னதெனக் கிளப்பதன்றி இப்பெற்றித்தெனத் திறம்படக்காட்டுதல் எனக்கரிது; ஆதலின், தொல்லாணை நல்லாசிரியரையடுத்து அதனைக் கேட்பாயாக; யான் இன்னதெனக் கிளப்பது — ஐம்பொறிகளால் நுகரப்படுவனவாய் முன்னிற்கும் இந் நுகர்பொருள்கட்கும் நினக்கும் என்ன உறவுஉண்டு? நின்னிடத்துண்டாம் மாயை கெடுவதாகுக; நின்புகழ் என்றும் நிலைபெறுவதாகுக என்று செழியனுக்குக் காஞ்சியைச் சுருங்க உணர்த்தியமை கருத்து.

விசேடவுரை:—காஞ்சியாவது - "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும், நில்லா வுலகம் புல்லிய நெறித்தே" என்பது. இதன் விரிவு முகவுரையிற் கூறினம். முன்னிலை நின்னொடு எவனோ? (206) என்றவிடத்து இக் காஞ்சியுணர்த்தியபடி. என்னையெனில், ஐம்பொறியால்நுகர் பொருள்கட்கும் சீவான்மாவுக்கும் என்ன உறவு உண்டு? என்று வினவியமையால் என்க: ஒரு உறவும் இல்லை என்றபடி. இங்ஙன், சுருங்கக்கூறி நிலையாமையுணர்த்திய

தால், காஞ்சியாயிற்று. ஈண்டு முன்னிலை என்றது-[முன் நிலை]-முன்னிற்கப்படுவன வாகிய நுகர்பொருள்கட்கு ஆகுபெயர். 'நின்' என்றது-சிவான்மாவை. சிவான்மா நுகர்பொருள்களோடு ஒட்டற்று நிற்பவன் என்ற உண்மை உணரவேண்டுவது. இந்த உண்மையை யுணரவொட்டாது மறைப்பது மாயை அல்லது அவலம். அந்த அவலம் கெடுதற்குப் பெரிதாயிருப்பதொரு [தத்துவப்] பொருளைக் கூறுதலைச் செய்தலேயன்றிக் காட்டுதல் என்னலரிது என்கிறார் மருதனார். அப் பெரியபொருள்-கந்தழி யாதலின், அது தொல்லாணை நல்லாசிரியரையடுத்து அவரிடத்தே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுவதாயிருப்பதொன்று. என்னை? கந்தழியாவது ஒருபற்றுமற்று அருவாய்த் தானேநிற்கும் தத்துவங்கடந்த பொருள்; அது, "சார்பினுற் றோன்றாது தானருவாய் எப்பொருட்கும், சார்பெனநின் றெஞ்ஞான்றும் இன்பந் தகைத்தரோ, வாய்மொழியான் மெய்யான் மனத்தான் அறிவிறந்த, தூய்மையதா மைதீர்சுடர்" என்பதாம். இதனை "உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமல ரெழுதரு நாற்றம்போற், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" என அதனையுணர்ந்தோர் கூறியவற்றான் உணர்க" என்று நச்சினார்க்கினியர் கூறியவாறு காண்க. மருதனார், 'கொன்ஒன்று கிளக்குவல்' என்றது - சிவான்மாவுக்கும் ஐம்பொறிநுகர் பொருள்கட்கும் தொடர்பில்லை என்ற சிந்தனையைப் பிறப்பிப்பதற்காக. அச்சிந்தனை கந்தழியில் கொண்டுவிடும் என்பது அறியவேண்டுவது.

இனி, வரி 198-இல் "பொய்சேண் நீங்கிய வாய்நடப் பினையே" என்பது பாடமாயின், வாய் நடப்பினை என்பதற்கு-மெய்யை நடத்தலைச் செய்தனை எனப் பொருள்கொள்க. வாய்-வாய்மை. ஏணி-எல்லை; 'ஙளியிருமுந்நீர் ஏணியாக' (புறம். 35) என்றவிடத்தும் காண்க. உலகம்-உலகத்துள்ளார்க்கு ஆகுபெயர். உயர்ந்த தேஎம்-உயர்ந்த தேவருலகம். விண்டு-மலை. வாணன் என்னுஞ் சூரனொருவன் மலைகளில் நிதியை வைத்தமை தெரியவருகின்றது. வரிகள் 206, 208-இவற்றுக்கு நச்சினார்க்கினியர் 'வலிந்து பொருள்கூறினர்' என்றும், 'வேண்டாது கூறினர்' என்றும் குறைகூறினருமுளர். கொன் - பெருமை; "அச்சம் பயமிலி காலம் பெருமையென்று, அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே" என்றது தொல்காப்பியம். 'கிளக்குவல்' என்றமையாற் 'காட்டுதற்கரிது' என்பது பெறப்படும்.

இலக்கணக்குறிப்பு:—நடப்பினை, வேட்குவை—முன்னிலை வினைமுற்றுக்கள். ஒழுகலை, என்னாய்—முன்னிலை எதிர்மறை வினைமுற்றுக்கள். கிளக்குவல் — தன்மையொருமை வினைமுற்று. கேட்டிசின்-இசின், முன்னிலைக்கண்வந்தது. நிலைஇயர்—வியங்கோள் வினைமுற்று.

அடிகள் 210—237 :— பெருந்திறல் மன்னர்பலர் புகழுடன் உலக மாண்டும், பிறப்பற முயலாமையின் பயனின்றிமாண்டமை கூறும்; காஞ்சி திறம்பட வலியுறுத்துவதுமாகும்.

தவாப்பெருக்கத் தருயாணர்
அழித்தானாக் கொழுந்திற்றி
இழித்தானாப் பலசொன்றி
உண்டானாக் கூர்நறவின்
தின்றானா வினைவைகல்
நிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப்
பயனற வறியா வளங்கெழு திருநகர்
நரம்பின் முரலு நயம்வரு முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாணர் உவப்பக் களிறுபல தரீஇக்
கலந்தோர் உவப்ப எயில்பல கடைஇ
மறங்கலங்கத் தலைச்சென்று
வாளுழந்ததன் தாள்வாழ்த்தி
நாளீண்டிய நல்லகவர்க்குத்
தேரோடு மாசிதறிச்
சூடுற்ற சுடர்ப்பூவின்
பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்ற மாகக்
கள்ளின் இரும்பைக் கலஞ்செல வுண்டு
பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்
பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப்
படுகண் முரசங் காலை யியம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணைகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்
கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலகம் ஆண்டுகழிந் தோரே
அதனால்

பதவுரை:—*(216) பயன் அறவு அறியா - எக்காலமும் பயன் கெடுதல் அறியாத, (210) தவா பெருக்கத்து அரு யாணர் - கெடாத பெருக்கத்தினையுடைய நீங்காத புதுவருவாயாலே,* (216) *வளம் கெழு திருநகர் - செல்வம் பொருந்திய அழகிய நகரிடத்திலேயிருந்து,* (214) *வைகல்-நாடோறும்,* (217) *நரம்பின் முரலும் நயம் வரு முரற்சி* (218) *விறலியர் - யாழ் வாசித்தாற் போலப் பாடும் நயப்பாடுதோன்றும் பாட்டினையுடைய விறல்பட ஆடுதலையுடைய மகளிர், வறு கை குறு தொடி செறிப்பு-*

தம்முடைய பூணணியாத கைகளிலே குறிய தொடிகளையிட, (க்கொடுத்து, மேலும்)— (211) அழித்து ஆறு கொழு திற்றி-அழிக்கப்பட்டு விருப்பு அமையாத கொழுவிய தசையை, (214) தின்று—, (212) ஆறு பல சொன்றி இழித்து (213) ஆறு கூர் நறவின் உண்டு-விருப்பமையாத பலவகைப்பட்ட சோற்றைத் தீதென்று (இழித்துக்) கூறிக் களிப்பமையாத மிக்க கள்ளையுண்டு, (214) ஆறு இடம் (219) பாணர்-[தசை, கள் என்ற] அவ்விரண்டிலும் விருப்பமையாத இரட்சியையுடைய பாணர்கள், உவப்ப-மகிழும்படி, [(214) வைகல்-நாடோறும்], (215) நிலன் எடுக்கல்லா ஒள் பல் வெறுக்கை-நிலம் சுமக்க மாட்டாத ஒள்ளிய பலவாகிய பொருட்டிரள்களையும், (219) களிறு பல-யானைகள் பலவற்றையும், தரீஇ-கொடுத்து,—(220) கலந்தோர் உவப்ப-தம்முடன் நட்புக்கொண்டோர் மனமகிழும்படி, எயில் பல கடைஇ-அழித்த அரண்களிற் கொண்ட பல பொருள்களையும் அவர்க்குச் செலுத்திக் கொடுத்து, (221) மறம் கலங்க தலை சென்று-பகைவரது மறம் நிலைகுலையும்படி அவர்களிடத்தே சென்று, (222) வாள் உழந்து-அவர்களோடு செய்த வாட்போரிலே வருந்தினபடியாலே, அதன் தாள் வாழ்த்தி-(அவ்வருத்தத்தினாற் பின்பும்) அதன்கட் பிறக்கின்ற முயற்சியை வாழ்த்தி, (223) நாள் ஈண்டிய-விடியற்காலத்தே வந்து திரண்ட, நல் அகவர்க்கு-அரசரால் விரும்பப்பட்ட சூதர்க்கு, (224) தேரோடு மா சிதறி-தேருடனே குதிரைகளையும் பலவாகக் கொடுத்து, (229) பணிந்தோர் தேஎம் தம்வழி நடப்ப-தம்மை வழிபட்டோருடைய தேசங்கள் தம்மேவலைக் கேட்டு நடக்கையினாலே, (230) பணியார் தேஎம் பணித்து திறை கொண்மார்-தம்மை வழிபடாதோருடைய தேசங்களைத் தம் ஏவல் கேட்கும்படி பணியவைத்து அவர்களைத் திறை வாங்குதற்கு, (228) கள்ளின் இரு பைக்கலம் செல உண்டு-கள்ளினையுடையவாகிய பெருமையினையுடைய பச்சைக் குப்பிகள் வற்றும்படியாகக் கள்ளினையுண்டு, (225) சூடு உற்ற சுடர் பூவின்-சூடுதலுற்ற விளக்கத்தையுடைத்தாகிய வஞ்சிப் பூவினையும், (226) பாடு புலர்ந்த நறு சாந்தின்-பூசினபடியே புலர்ந்த நறிய சந்தனத்தினையும் உடைய, (227) விழுமிய பெரியோர் சுற்றம் ஆக-சீரிய படைத்தலைவரைத் தமக்குச் சுற்றத்தாராகக் கொண்டு, (231) பருந்து பறக்கல்லா பார்வல் பாசறை-உயரப் பறக்கும் பருந்துகளும் பறத்தலாற்றாத உயர்ச்சியையுடைய அரண்களையுடைய பாசறைக் கண்ணே, (232) படுகண் முரசம் காலை இயம்ப-ஒலிக்கின்ற கண்ணையுடைய பள்ளியெழுச்சிமுரசம் நாட்காலத்தே ஒலிப்ப இருந்து, (233) வெடிபட கடந்து-பகைவர் படைக்குக் கேடுண்டாக வென்று, வேண்டு புலத்து இறுத்து-பின்னும் அழிக்க வேண்டுமென்ற நிலங்களிலே சென்று தங்கின, (234) பணை கெழு பெரு திறல் பல் வேல் மன்னர்-வெற்றிமுரசு பொருந்தின பெரியவலியினையும் பல வேற்படையினையும் உடைய அரசர்கள், (236) உரை செல (237) மலர் தலை உலகம் ஆண்டு

கழிந்தோர்-புகழ் எங்கும் பரக்கும்படி அகன்ற இடத்தையுடைய உலகங்களைத் தமது ஏவல்வழி நடத்தியாண்டு [ஆனால்] மனனுணர்வின்மையிற் பிறப்பற முயலாது பயனின்றி மாண்டோர், (235) கனை இரு முந்நீர் கரை பொருது இரங்கும்-செறிதலையுடைய கரிய கடலிற் கரையைப் பொருது ஒலிக்கும், (236) திரை இடு மணலினும் பலரே-திரை குவிக்கின்ற மணலினும் பலராவர்; அதனால்-அப்பயனின்மையாலே (எ-று); - 'அதனால்' என்றதனை 'கொன்னொன்று கிளக்குவல்' (207) என்றதனோடு முன்னர்ச் சென்று இயையும்.

(216) பயனற வறியா[த] (210) அறாயாணர் (216) வளங்கெழு திருநகரிலேயிருந்து (214) வைகலும் (218) விறலியர் தொடி செறியா நிற்ப(க் கொடுத்து மேலும்) (211) திற்றி (214) தின்று (213) நறவு உண்டு (214) ஆனா இனப் (219) பாணர் உவப்ப (214) வைகலும் (215) வெறுக்கையையும் (219) களிற்றினையும் தரீஇக் (220) கலந்தோர் உவப்ப [எயிலிற் கொண்ட பொருள்களைக்] கடைஇ (222) வாழ்த்தி (223) ஈண்டிய அகவர்க்குத் (224) தேரோடு மாசிதறி (229) பணிந்தோர் தேஎம் தம்வழி நடக்கையினாலே (230) பணியார் தேஎம் பணித்துத் திறைகொள்ளுதற்குக் (228) கள்ளுண்டு (225) பூவினையும்(226) சாந்தினையும் உடைய (227) பெரியோரைச் சுற்றமாகக் கொண்டு (231) பாசறையிலே (232) முரசியம்ப இருந்து (233) கடந்து இறுத்த (234) மன்னர் (237) உலகம் ஆண்டு கழிந்தோர் (236) திரையிடு மணலினும் பலர் ஆவர் என முடிக்க.

கருத்துரை:—எக்காலமும் பயன் கெடுதலறியாததும் நீங்காத புது வருவாயாலே செல்வம் பொருந்தியதுமான நகரிலேயிருந்து கொண்டு [அரண்மனையிடத்தே யிருந்துகொண்டு] நாடோறும் விறலியர்க்குக் குறுந்தொடிகளை அவர் கைச்செறிப்பக்கொடுத்து, (மேலும்) பலவகைப்பட்ட சோற்றையும் தீதென்று கூறி வெறுக்கும்படி தசையையும் கள்ளையும் மிகவுண்டும் விருப்பமையாத பாணர்கூட்டத்திற்கு அவருவப்ப நாடோறும் பல பொருட்டிரள்களையும் யானைகளையும் கொடுத்து, தம்முடன் நட்புச் செய்தோர்க்குத்தாம்அழித்த அரண்களிற்கைக்கொண்ட பொருள்களை அவர் வேண்டாவென்று மறுத்தபோதும் தாமே வலியக் கொடுத்து,வாட்போரில் முயல்கின்ற தம்முடைய வீரச் சிறப்பினை வாழ்த்தி வைகறையிலே பாசறைக்கண் வந்து திரண்ட சூதர்க்குத் தேரும் குதிரைகளும் பல கொடுத்து, தம்மைப் பணிந்தோர் மேற் செல்லாது பணியாதார் தேசங்களின்மேற் சென்று திறை வாங்குதற்காகச் சீரிய படைத்தலைவரைத் துணையாக் கொண்டு சென்று, பருந்தும் பறக்கவில்லா மிகவுயர்ந்த அரண்களையுடைய பாசறையிலே தங்கி, காலை முரசம் இயம்ப எழுந்து பகைவர் படைக்குக் கேடுண்டாக நடந்து வென்று, பின்னும் அழிக்க வேண்டிய நிலங்களிலே சென்று தங்கி, இங்ஙன் வீறு

பெற்ற பெருந்திறல் வேன்மன்னர் தம்புகழ் எங்கணும் பரக்கும் படி இவ்வுலகத்தை அடிப்படுத்தி ஆண்டும், மக்கட்குரிய மன னுணர்வின்மையின் பிறப்பற முயலாது பயனின்றி மாண்டு போயினர்; அங்ஙனம் கொன்னே கழிந்தோர் தொகை கூறப் புகின், கடற்றிரை குவிக்கின்ற மணலினும் பலராவர்; ஆதலின், அவர் போற் சிறுற்ற மன்னனாகிய நீயும் இனி பிறப்பற முயலலே தக்கது எனக் காஞ்சி அறிவுறுத்தியமை கருத்து.

விசேடவுரை:—(210) அருயாணர் (216) வளங்கெழு திருநகர் என இயையும். திருநகர்-திருமகளையுடைய நகர் என்றனர் நச்சி னார்க்கினியர். அழித்து - தின்று என்றபடி: இதனையறிய "ஆட ழிக்க என்ப" என மேற்கோள் காட்டினர் நச்சினார்க்கினியர். ஆடு அழிக்க-ஆடு தின்ன என்பது; இஃது உலக வழக்குக் காட்டிய படி. திற்றி-தசை. சொன்றி-சோறு. இழித்து-இழிவாகப் பேசி: எனவே தீதென்று கூறி என்றது. ஆறு நறவு-களிப்பு அமையாத கள்: மேலும் மேலும் உண்ண வேண்டுமென்ற விருப் பொடு திருப்தி பிறவாத கள். 214-ஆம் வரியில் வந்துள்ள 'ஆறு' என்பது, (211) திற்றி (213) நறவு என்ற அவ்விரண்டிலும் விருப் பமையாத எனப் பொருள்பட்டது. எனவே, பாணரினம் சோற் றையும் வெறுத்துத் தசையையும் கள்ளையுமே பெரிது உண்பர் என்றது பெறவைக்கப் பட்டது: வெறுக்கை-செல்வம்: 'வேந்தன் வெறுக்கையுள் எல்லாந் தலை' என்றவிடத்துப் போல. ஈண்டு, பாணர்க்களிக்கும் பூண்களையும், பொன்னையும் குறிக்கும். மூறசி- பாட்டு. விறலியர்-விறல்பட [சத்துவம்பட] ஆடுமகளிர்; இவர் பாடுதலுஞ் செய்வர் என்பதை 'பாடல் நல்விறலியர்' என்ற பரி பாடலால் (17) உணரலாம். இவர்யாழ்வாசித்தாற் போலப் பாடும் நயமுடையர் என்றனர் இங்கு. "நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ வென்று நைந்தார்" என்றார் சிந்தாமணியாரும். இனி விறலியர் யாழோசையோடு ஒன்றிப் பாடுதலை "சீறியாழ், நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக், கடவ தறிந்த வின் குரல் விறலியர்" என்ற மலைபடுகடாத்தாலும்(534-36) அறியலாம். 'கடைஇ' என்ற சொல்லாற்றலால், 'அவர் வேண்டாவென்று மறுக்கவும் தாம் வலியப் போகவிட்டு' என்பது பெறப்பட்டது. இதனை நச்சினார்க்கினியர் கூறக் கண்டோம். 'வாள் உழந்து' என்றவிடத்து, 'உழந்து' என்னுஞ் செய்தெனெச்சம் காரணப் பொருட்டு: 'உழந்ததனாலே' என்றபடி. இங்ஙன் கொள்ளாது, 'உழந்த தன் தாள்வாழ்த்தி' எனப்பிரித்து 'உழந்த' என்பதைப் பெயரெச்சமாக்கின், அஞ்ஞான்று 'தன்' என்னும் ஒருமையானது மேலே 234-ஆம் வரியில் வருகின்ற 'மன்னர்' என்னும் பன்மை யோடு பொருந்தாமையுணர்க. இந்நுணுக்கம் நச்சினார்க்கினியர் காட்டியது. எனவே, 'உழந்து அதன் தாள்வாழ்த்தி' எனப் பிரித்துப் பொருள் காணவேண்டும். பகைவரோடிட்ட வாட் போரிலே விழுப்புண்பட்டு வருந்தியபடியாலே அவ்வருத்தத்தி னால் பின்னும் அவ்விழுப்புண் பெறும் இனிமையை விரும்பி

அப்போரிலே முயல்கின்றூர் என மன்னரின் (234) வீரச் சிறப்புக் கூறியபடி. வள்ளுவரும் "விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக் கினுள், வைக்குந்தன் னாளை யெடுத்து" என்று கூறியுள்ளமை ஈண்டுக் கொள்ளத்தக்கது. தாள் வாழ்த்தி—வாழ்த்துபவர் அகவர்: அகவர்-சூதர்: [அகவல்-அழைத்தல்.] ஒரு மன்னனின் குலத்தோ ரெல்லோரையும் அழைத்துப் புகழ்வரென்பது பற்றி 'அகவர்' என்றூர்: இது ஆகுபெயர். இவர் விடியற்காலத்தே பாசறைக்கண் வந்து துயிலெடை பாடுவர். நச்சினர்க்கினியர், "தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச், சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்" என்னும் விதியாற் சூதர் இருசுடர் (சூரிய சந்திரர்) தொடங்கி இன்றுகாறும் வருகின்ற தம் குலத்துள்ளோர் புகழை அரசர் கேட்டற்கு விரும்புவ ரென்று கருதி விடியற்காலத்தே பாசறைக்கண் வந்து துயிலெடை பாடுவரென்பது ஈண்டுக் கூறிற்றும் எனச் செவ்வன் பெறவைத்தார். இனி, நாள் ஈண்டிய நல்அகவர்-வைகறை பாடும் பாணர் என்பாருமுளர். பூ-வஞ்சிப்பூ: இது, கூடார்மண் கொளல்குறித்துச் சூடுவது. பாடுபுலர்ந்த நறுஞ்சாந்து-பூசின படியே புலர்ந்த நறுஞ்சந்தனம்: பூசி வரும்போதே புலர்வது சிறந்த சந்தனத்தின் இயல்பு போலும். பெரியோர்-ஈண்டு, படைத்தலைவர். பைக்கலம்-பச்சைக் குப்பிகள். கள்ளைக் குப்பி யிலே இட்டுவைத்தலை "திரள்கால், சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன, நீலப் பைங்குடம் தொலைச்சி" என்ற பெரும்பாணாற்றுப் படையடியாலும் (380-382) அதன் உரையாலும் அறியலாம். பார்வல்-[அரசர், தம்பகைவர் செய்மைக்கண் வருதலைப்] பார்த்தி ருத்தற்குரிய உயர்ச்சியையுடைய அரணுக்கு, ஆகுபெயர். வெடி-கேடு: ஓசையுமாம். 'கழிந்தோர்' என்றது - மக்கட்குரிய மனனுணர்வின்மையிற் பிறப்பறமுயலாது பயனின்றி மாண்டமை பற்றி. "மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்றதனல், 'மனனுணர் வின்மையின்' என்று கொண்டு கூட்டப்பட்டது. இது, "மாற்ற ருங் கூற்றஞ் சாற்றிய பெருமை" அன்றிப் பிறவியற முயலாமை யிற் கழிந்தமை கூறிற்று என்று கூறினர் நச்சினர்க்கினியர். [இதன் விளக்கம்:—பிறரால் தடுத்தற்கரிய கூற்றம் வருமெனச் சான்றோர் சாற்றிய பெருங்காஞ்சியையும் காதால் கேட்டனரே யன்றிப் பிறவியறுக்க முயலாமையின் கொன்னே கழிந்தொழிந் தனர் என்பது கூறிற்றென்பது]: இதனல், மருதனர் தாம் காஞ்சி கூறப்புகுந்ததனைக் கேட்டு நெடுஞ்செழியன் பிறவியற முயலல் வேண்டும் எனக் குறிப்பிற்றெரித்தபடி.

இலக்கணக்குறிப்பு:—"தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும், தன்மை முன்னிலை யாயீ ரிடத்த" என்ற விதிக்கு மாறாக, 'பாணர்க்குத் தரீஇ' (219) எனப் படர்க்கைக்கண் வந்ததாலோ எனின், "செலவினும் வரவினும் தரவினும் கொடையினும், நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும், அம்மூவிடத்தும் உரிய வென்ப" என்ற

பொதுச்சூத்திரத்தால் அமைத்துக் கொள்க. உண்டு (228) என்னும் செய்தெனெச்சம் [பூவினையும் சாந்தினையும்] உடைய என்னும் வினைக் குறிப்பொடு முடிந்தது. 'திரையிடு மணலினும் பலரே' என்றவிடத்து, அவர்களைப்போல் நீயும் அவ்வாறு கழியலாகாது என்று செழியனைப் பிரித்தலிற் பிரிநிலை யேகாரம் எனக் கொள்க. கழிந்தோரே, ஏகாரம்-ஈற்றசை.

அடிகள் **238-326** வரை:—பாண்டிமண்டலத்து ஐம்பாற்றிணையும் இருத்தலை வகைசெய்து விரிவுறக் கூறும்.

அவற்றுள், அடிகள் **238-270**:—பாண்டிமண்டலத்தின் ஒருசார் மருதஞ் சான்ற தண்பணை சுற்றப்பட்டிருத்தல் கூறும்.

[அவற்றுள், அடிகள் **238-244** —பெருமழை பொழிதலின் சிறப்புக் கூறும். **245-270**:—மருதநிலத்தெழும் பல்வகை ஓசைகளைக் கூறும்.]

குணகடல் கொண்டு குடகடன் முற்றி
இரவு மெல்லையும் விளிவிட னறியாது
அவலு மிசையும் நீர்த்திரள் பீண்டிக்
கவலையங் குழும்பின் அருவி யொலிப்பக்
கழைவளர் சாரற் களிற்றினம் நடுங்க
வரைமுத லிரங்கும் ஏறொடு வான்ஞெமிர்ந்து
சிதரற் பெரும்பெயல் சிறத்தலிற் றாங்காது
குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுந்தி
நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க்கழனி
ஒளிறிலஞ்சி யடைநிவந்த
முட்டாள சுடர்த்தாமரை
கட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழவிழ்நீலம்
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கைக்
கம்புட் சேவல் இன்றுயில் இரிய
வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழி லாட்டுக்
கரும்பி னெந்திரங் கட்பி னோதை
அள்ளற் றங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே
ஒலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞர் அரிபறை யின்குரல்
தளிமழை பொழியுந் தண்பரங் குன்றிற்
கலிகொள் சும்மை யொலிகொ ளாயம்

தளைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னாடும் இசையே அனைத்தும்
அகலிரு வானத் திமிழ்ந்தினி திசைப்பக்
குருகுநரல மனைமரத்தான்
மீன்சீவும் பாண்சேரியொடு
மருதஞ் சான்ற தண்பணை சுற்றி யொருசார்

பதவுரை:—(243) வான்-மேகமானது,(238) குணகடல்கொண்டு-கீழ்திசைக் கடலிடத்தே நீரை முகந்துகொண்டு, குடகடல்-மேற்றிசைக் கடலருகின், (243) வரைமுதல்-மலையிடத்தே, (238) முற்றி-தங்கி,(242)கழைவளர் சாரல் களிறுஇனம் நடுங்க-மூங்கில் வளர்ந்த மலைப்பக்கத்திலே யானைத்திரள் நடுங்கும்படி, (243) இரங்கும் ஏறொடு ஞெமிர்ந்து-ஒலிக்கும் உருமேற்றோடே பரந்து, (240 அவல்உம் மிசைஉம் நீர்திரள்பு ஈண்டி-பள்ளமும் மேடுமாகிய பலநிலத்துண்டாகிய நீரினாலே திரண்டு சேரக் குவிந்து, (241) கவலை அம் குழும்பின் அருவி ஒலிப்ப-கவலைக் கிழங்கு கல்லின அழகிய குழியிலே வீழ்ந்து அருவியொலிக்கும்படி, (244) சிதரல் பெரு பெயல்-சிதறுதலையுடைய பெருமழை, (239) இரவுஉம் எல்லைஉம் விளிவு இடன் அறியாது-இரவும் பகலும் முடிவெய்தும் இடத்தை அறியாது (காலை இது மாலை இதுவென அறியமுடியாதபடி), (244) சிறத்தலின்-மிகுகையினாலே,—தாங்காது-யாறுகள் தாங்காமல், (245) குணகடற்கு இவர்தரும்-கீழ்திசைக் கடலுக்கு [கடலை நோக்கி]ப் பரந்து செல்லும், குரூஉ புனல்-நிறத்தையுடைய நீராலே, உந்தி-யாற்றிடைக்குறையிலே, (246) நிவந்து செல் நீத்தம்-ஓங்கிச் செல்கின்ற பெருக்கை, குளம் கொள சாற்றி-குளங்கள் கொள்ளும்படி நிறைத்து, (247) களிறு மாய்க்கும் கதிர் கழனி-யானைகள் நின்றால் அவற்றை மறைக்கும்படி விளைந்த கதிரையுடைய கழனிகளிலும், (:48) ஒளிறு இலஞ்சி-விளங்கும் மடுக்களிலும், அடை நிவந்த (249) முள்தாள சுடர் தாமரை-இலைக்கு மேலான முள்ளையுடைய தாள்களையுடையவாகிய ஒளியினையுடைய தாமரைப் பூவினையும், (250) கள் கமழும் நறு நெய்தல்-தேன் நாறும் நறிய நெய்தற் பூவினையும், (251) வள் இதழ் அவிழ் நீலம்-பெருமையையுடைய இதழ் விரிந்த நீலப்பூவினையும், (252) மெல் இலை அரி ஆம்பலொடு-மெல்லிய இலையினையும் வண்டுகளையுமுடைய ஆம்பற்பூவோடே, (253) வண்டு இறைகொண்ட கமழ் பூ பொய்கை-வண்டுகள் தங்குதல் கொண்ட மணநாறும் பிற பூக்களையுமுடைய பொய்கைகளிலும், (254) கம்புள் சேவல் இன் துயில் இரிய (255) வள்ளை நீக்கி வயமீன் முகந்து-கம்புட்கோழி இனிய உறக்கங் கெடும்படி வள்ளைக்கொடிகளைத் தள்ளி வலியையுடைய மீன்களை முகந்துகொண்டு, (256) கொள்ளை சாற்றிய கொடு முடி வலைஞர்-விலைகூறிவிற்ற கொடிய முடிகளையுடைய வலையால் மீன்பிடிப்பார், (275) வேழம் பழனத்து நூழிலாட்டு (258) ஓதை-கொறுக்

கைச்சியையுடைய மருதநிலத்து மீனைக் கொன்று குவித்தலாற் பிறந்த ஓசை, (258) கரும்பின் எந்திரம் ஓதை-கரும்பிற்கு இட்ட ஆலையிடத்து ஓசை, கட்பின் ஓதை-களைபறிப்பிடத்து ஓசை, (259) அள்ளல் தங்கிய பகடு உறு விழுமம் (260) கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பு-[மூத்தலான்] சேற்றிலே வலியற்றுத் தங்கிய எருது உற்ற வருத்தத்தைக் கள்ளையுண்ணும் களமர் பெயர்க்கும் ஆரவாரம், (261) ஒலிந்த பகன்றை விளைந்த கழனி (262) வல் கை வினைஞர் அரிபறை-தழைத்த பகன்றையினையுடைய நெல்லுமுற்றிய கழனியில் வலிய கையினாலே அறுப்பாருடைய அரித்தெழுகின்ற பறையோசை, இன்குரல் (263) தளி மழை பொழியும் தண் பரங்குன்றில் (264) கலி கொள் சும்மை-இனிய ஓசையினையுடைய துளிகளைக்கொண்ட மேகம் தங்கும் குளிர்ந்த திருப்பரங்குன்றில் விழாக்கொண்டாடும் ஆரவாரம், (264) ஒலிகொள் ஆயம் (265) ததைந்த கோதை தாரொடு பொலிய (266) புணர்ந்து உடன் ஆடும் இசை-[புதுநீர் விழவின்] ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட மகளிர்திரள் தம்மிடத்து நெருங்கின கோதை தம் கணவர் மார்பின்மாலையுடனே அழகுபெறக் கூடி அவர்களுடனே நீராடும் ஓசை, [ஆகிய] அனைத்தும்-[மேற்கூறிய] அவ்வோசை முழுவதும், (268) குருகுநரல மனை மரத்தான் (269) மீன் சீவும் பாண் சேரியொடு-குருகென்னும் பறவைகள் கூப்பிடும்படி மனையிடத்து மரங்கள்தோறும் மீனைத்திருத்தும் பாணர்குடியிருப்பிற் பாடலாடலால் எழுந்த ஓசையோடே, (267) அகல் இரு வானத்து இமிழ்ந்து இனிது இசைப்ப-தன்னை யொழிந்த பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய பெருமையையுடைய ஆகாயத்தே சென்று முழங்கி ஆண்டு வாழ்வார்க்கு இனிதாக ஒலிக்கும்படி, (270) மருதம் சான்ற-ஊடலாகிய உரிப்பொருள் அமைந்த, தண் பணை சுற்றி-மருதநிலஞ் சூழப்பட்டு, ஒருசார்-ஒரு பக்கம் [இருப்ப]; (எ-று.)

(243) வான் (238) முற்றி (243) ஞெமிர்ந்து (241) அருவியொலிக்கும்படி (244) பெரும்பெயல் (239) விளிவிடனறியாது (241) சிறத்தலின் (244) தாங்காது (245) புனல் (246) நீத்தம் குளங்கொளச் சாற்றி [வைப்ப, அங்ஙன் நீர் நிறைதலால்] (247) கழனியிலும் (248) இலஞ்சியிலும் (253) பொய்கைகளிலும் (255) மீன்முகந்து (256) கொள்ளைசாற்றிய வலைஞர் (257) நாழிலாட்டு [ஓதையும்] (258) கரும்பினெந்திர [ஓதையும்], (258) கட்பின் ஓதையும் (260) களமர் பெயர்க்கும் ஆர்ப்பும் (262) அரிபறையோசையும் (264) கலிகொள் சும்மையும் (266) உடனாடும் இசையும் ஆகிய அனைத்தும் (269) பாண்சேரியிலோசையோடே (267) இசைக்கும்படி (270) தண்பணை சுற்றப்பட்டு, ஒருசார்[இருப்ப] என முடியும்.

கருத்துரை:— மேகம் கீழ்திசைக் கடலிடத்து நீரை முகந்து மேற்றிசைவரையிடத்துத் தங்கி, இரவு பகலறியாவாறு திரண்டுருண்டு கவிந்து, களிற்றினம் நடுங்க இடித்து, அருவி பெருகி

யொலிப்பப் பெருமழை சிதறி மிகுகையினாலே, யாறுகளில் நீர் குணகடல் நோக்கிப் பெருக்கெடுத்தோடி, வழியில் குளங்களை [ஏரிகளை] நிறைப்ப, அந்நீர் கழனிகளிலும், மடுக்களிலும், பொய்கைகளிலும் நிரம்ப, அவற்றில் வசிக்கும் மீன்களை முகந்து விலைகூறி விற்கும் வலைஞர், அம் மருதநிலத்து மீன்களைக் கொன்று குவித்தலாற் பிறந்த ஓசையும், கரும்பின் ஆலையிடத்தெழுகின்ற ஓசையும், களைபறிப்பிடத்து எழுகின்ற ஓசையும், களமர் சேற்றில் காலழுந்தித் தங்கிய எருதினைப் பெயர்க்கும் பேரோசையும், நெல்லறுப்பாருடைய அரிபறையோசையும், திருப்பரங்குன்றில் விழாக் கொண்டாடும் பேரோசையும், மகளிர் திரள் தம் கணவருடன் நீராடும் ஓசையும் ஆகிய அவ்வோசைகள் முழுவதும் பாணர் சேரியில் அவர்தம் பாடலாடலால் எழுந்த ஓசையோடு கூடி இசைக்கும்படி தண்பணைகள் சூழவிருப்பது பாண்டிமண்டலத்து ஒருசார் மருதஞ்சான்ற மருத நிலப் பகுதி என்பது கருத்து.

விசேடவுரை:— விளிவு இடன்-ஒழிந்த இடம்; அதாவது, முடிவெய்தும் இடம். குழும்பு-குழி. "ஆழ்ந்த குழும்பில் திருமணி கிளர" (273) என்பர் மேலும். ஞெமிர்தல்-பரத்தல். குளம்-Irrigation Tanks; ஏரி எனப்படுவன. மாய்தல்-மறைத்தல்: இதனை 'களிறு மாய் செருந்தியொடு' (172) என்றவிடத்தும் கூறினேம். இலஞ்சி-மடு: இஃது ஆழமுடைத்தாதலை "குண்டு நீரிலஞ்சி" (குறுந்:91) என்ற வழக்கால் உணரலாம். பொய்கை-மானிடராக்காத நீர்நிலை. இஃது ஊர்க்கு அணித்தே இருக்குமென்பதை "ஊர்க்கு அணித்தே பொய்கை" (குறுந்: 113) என்றமையால் அறியலாம். 'அரி ஆம்பல்' என்றவிடத்து, அரி - மென்மையுமாம். வயமீன்-'வய வலியாகும்'. கொள்ளை சாற்றுதல்-விலை கூறி விற்றல்: 'வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி' என்றது பட்டினப்பாலையும். 'கொடுமுடி'-வலைக்கு அடை. வேழம்-கொறுக்கைச்சி, கொறுக்காந்தட்டை; எருவை, பஞ்சாய்க்கோரை என்னவுமாம். நாழிலாட்டு-கொன்று குவித்தல். 'ஓதை' (258) என்பது நாழிலாட்டு (257) எந்திரம் (258) என்பனவற்றின் பின்னர்க் கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. கட்பு-களைபறித்தல்; தொழிற்பெயர். "செறுவின் வல்வாயுருளி கதுமென மண்ட, அள்ளற் பட்டுத் துள்ளுபு துரப்ப, நல்லெருது முயலும் அளறு போகு விழுமத்துச் சாகாட்டாளர் கம்பலை" என்ற பதிற்றுப் பத்து அடிகளை, ஈண்டு, 259-260-வரிகளோடு ஒப்பிடுக. பெயர்க்கும்-தூக்கிவிடும். ஒலித்தல்-தழைத்தல்: 'ஒலிமென் கூந்தல்' (குறிஞ்: வரி. 2) என்றவிடத்தும் காண்க. அரிபறை-நெல்லரிகிணை: பறை-பறையோசைக்கு ஆகிவந்தது. இன்குரல் தளிமழை-மேகம் இனிய ஓசையையுடையது என்பதற்கு 'வயிரியர், முழவதிர்ந்தன்ன முழக்கத்தேறோடு" என்ற அகநானூற்று அடியை (செ. 328) மேற்கோள் காட்டினர் நச்சினார்க்கினியர். "முரசதிர்ந்தன்ன இன்குரல் ஏற்றொடு" (வரி. 49) என்றது குறிஞ்சிப்பாட்டும். திருப்பரங்குன்று

மதுரைக்கு மேற்கே மருதத்துக்கு அணித்தாக இருத்தலைத் திருமுருகாற்றுப்படையாலும் (வரிகள்-71-77) தெளியலாம். அகலிரு வானம்-தன்னை யொழிந்த நான்கு பூதங்களும் [நிலம், நீர், தீ, வளி] தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெருமையை யுடைய ஆகாயம் என்றபடி. மனைமரத்தான் மீன்சீவும் என்ற விடத்து-மனையிடத்து மரங்கடோறும் மீனைத் திருத்தும் என்பது பொருளாதலின், மரம் என்றது, சண்டு, மனைகளில் மீனையறுத்துத்திருத்தும் பட்டடைமரங்களைக் காட்டிற்று. பாண்சேரி-பாணர் குடியிருப்பு; ஆங்கு எழும் ஓசைக்கு ஆகிவந்தது. 'மருதஞ்சான்ற தண்பணை' என்புழி, மருதம் என்றது ஊடியும் கூடியும் போகம் நுகருந்தன்மையை; 'மருதஞ்சான்ற மருதத் தண்பணை' என்றது சிறுபாண்.

இலக்கணக்குறிப்பு:—(247) கழனி (248) இலஞ்சி (253) பொய்கை என்பனவற்றின்பின் எண்ணும்மை கொள்க. ஓதை, ஆர்ப்பு, குரல், கம்மை, ஒலி, இசை-ஒருபொருண்மேல் வந்த பல சொற்கள்.

அடிகள் 271-285:—பாண்டிமண்டலத்தின் ஒருசார் முல்லைசான்ற காடு தழுவப்பட்டிருத்தல் கூறும்.

சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகின் இருங்குரல் புலர
ஆழ்ந்த குழும்பில் திருமணி கிளர
எழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப்
பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி
மடக்கட் பிணையொடு மறுகுவன வுகளச்
சுடர்ப்பூங் கொன்றை தாஅய நீழற்
பாஅ யன்ன பாறை யணிந்து
நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து
சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்
மணிமரு ணெய்தல் உறழக் காமர்
துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர
வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப
முல்லை சான்ற புறவணிந் தொருசார்

பதவுரை:—(277) சுடர் பூ கொன்றை தாஅய நீழல்-ஒளியினை யுடையவாகிய பூக்களையுடைய கொன்றை பரந்த நிழலிடத்தே, (278) பாஅயன்ன பாறை அணிந்து-பரப்பினையொத்த பாறை அழகுபெற்று, (279) நீலத்து அன்ன பைம்பயிர் மிசைதொறும்-நீல மணியையொத்த பசிய பயிர்களினிடங்கள் தோறும், (281) சுரி முகிழ் முசுண்டையொடு-முறுக்குண்ட அரும்புகளையுடைய முசுண்டையுடனே, முல்லை-முல்லையினுடைய, (280) வெள்ளி

அன்ன ஒள் வீ உதிர்ந்து-வெள்ளியின் நிறத்தையொத்த ஒள்ளிய பூக்கள் உதிர்ந்து, (281) தாஅய்-பரந்து, (284) வல்லோன் தைஇய வெறி களம் கடுப்ப-இழைத்தல் வல்லவன் இழைத்த வெறிக்கூத்தையுடைய களத்தையொப்ப [ஒத்திருப்ப என்றபடி], (ஆங்கு மற்றும்)—(271) சிறு தினை கொய்ய-சிறிய தினையை அறுக்க, கவ்வை கறுப்ப-எள்ளிளங்காய் முற்ற, (272) கரு கால் வரகின் இருங்குரல் புலர-கரிய தாளினையுடைய வரகினது கரிதாகிய கதிர் முற்ற, (273) ஆழ்ந்த குழும்பில் திரு மணி கிளர-ஆழ்ந்த குழியிலே திருவினையுடைய மணி கிடந்து விளங்க, (275) பெருகவின் பெற்ற சிறு தலை நௌவி-பெரிய அழகைப்பெற்ற சிறிய தலையினையுடைய நவ்விமான், (274) எழுந்த கடற்றில் நல் பொன் கொழிப்ப-வளர்ந்த [தழைத்த] காட்டில் மாற்றற்ற பொன் மேலே கிளம்பும்படி, (276) மடம் கண் பிணையொடு மறுகுவன உகள-மடப்பத்தையுடைத்தாகிய கண்ணினையுடைய பிணையோடே சுழல்வனவாய்த் துள்ள, (282) காமர்-விருப்பத்தையுடைய,(283) துணி நீர் மெல் அவல்-தெளிந்த நீரையுடைத்தாகிய நெகிழ்ந்த பள்ளத்திலே, (282) மணி மருள் நெய்தல்-நீலமணியென்று மருளும் நெய்தல், (283) தொய்யிலொடு-தொய்யிற் கொடியோடே, (282) உறழ-மாறுபட, (2‑3) மலர—; (285) முல்லை சான்ற புறவு அணிந்து-இருத்தலாகிய உரிப்பொருளமைந்த காடு சூழப்பட்டு, ஒருசார்-ஒருபக்கம் [இருப்ப]; (எ-று.)

(277) நீழல் (278) பாறை அணிந்து (279) பைம்பயிர் மிசை தொறும் (280) உதிர்ந்து (281) தாஅய் (284) கடுப்ப-(271) கொய்ய கறுப்ப (272) புலர (273) கிளர, (276) உகள (283) மலர (285) புறவு சூழப்பட்டு, ஒருசார் [இருப்ப] என முடியும். (274) கொழிப்ப (276) உகள என இயையும்.

கருத்துரை:—பொன் போன்ற பூக்களையுடைய கொன்றை மரங்களின் பரந்தநிழலிடத்தே பரப்பினாற்போற்கிடந்த பாறைகள் அக்கொன்றைப் பூக்களுதிர்தலால் அழகுபெற, நீலமணியை யொத்தபசிய பயிர்களினிடங்கள் தோறும் வெள்ளிபூசுண்டைப் பூக்களுடனே முல்லைப் பூக்களும் உதிர்ந்து பரத்தலால், அவ்விடங்கள் வெறியாடுகளம் கடுக்கும்; மற்றும், ஆங்கு சிறு தினை கொய்ய, எள்ளிளங்காய்முற்ற, வரகு கதிர் முற்ற, ஆழ்ந்த குழிகளிலே மணிகள் கிடந்து விளங்க, நவ்விமான் கடற்றிடை நன்பொன் மேலாம்படி பிணையோடு துள்ள, நீலமணி போன்ற நெய்தல் தொய்யிற்கொடியோடே நீரையுடைய நெகிழ்ந்த பள்ளத்திலே மலர, இங்ஙன் பல காட்சி வழங்கும்: அத்தகைய புறவு சூழப்பட்டிருப்பது பாண்டிமண்டலத்து ஒருசார் முல்லை சான்ற முல்லைநிலப் பகுதி என்பது கருத்து.

விசேடவுரை:—கொன்றைப்பூ பொன்போலிருக்கும் என்பதை "முறியிணர்க் கொன்றை நன்பொன்கால" (முல்லைப்பாட்டு-94)

என்பதாலறியலாம். அந்தப் பூக்களுதிர்தலால் பாறைகள் அழகுற்றன எனக் கொள்க. முசுண்டைப்பூ வெள்ளியது என்பதை "வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை" (மலைபடுகடாம்-101) என்றதாலறியலாம். பொன்னிறக் கொன்றைப் பூக்கள் உதிர்தலால் அழகுற்ற பாறைகள் பரந்து கிடப்ப, வெள்ளிய முசுண்டைப் பூக்களும் முல்லைப் பூக்களும் உதிர்தலால் பசிய பயிர்களினிடங்களெல்லாம் அழகுற்றிருப்ப, அப்புறவு நிலம் வெறிக்களம்போன்றிருந்தது என்றபடி. பல மலர்கள் பரந்த இடம் வெறிக்களம் போலத் தோன்றுதலை "நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய் வெறியயர்களத்தினிற்றோன்றும்" (குறுந்: 318), "நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய், வெறிக்களங் கடுக்கும் வியலறை தோறும்" (மலைபடு: 149-150),' வெறியயர் களத்துச் சிறுபல தாஅய, விரவுவீ யுறைத்த வீர்நறும் புறவின்" (அகம்: 114) என்பவற்றாலுணர்க. கவ்வை-எள்ளிளங்காய். நௌவி= நவ்வி: இங்கு, பெண் மான்குட்டியைக் காட்டும். என்னை? 'பிணையென்னும் பெண்பெயர்க்கு உரியன இவைநான்கும்' என்று மரபியற் சூத்திரத்து எடுத்தோதியிருப்பவற்றுள் 'நவ்வி'யுமொன்றாதலின்: என்னை சூத்திரம் என்றார்க்கு "புல்வாய் நவ்வி யுழையே கவரி, சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே" என்பது. மற்றும், "பன்றி புல்வாய் உழையே கவரி, என்றிவை நான்கும் ஏறெனற் குரிய" என்ற மரபியற் சூத்திரத்திலும் நவ்வியை விட்டிருத்தலைக் கூர்ந்து நோக்குக. மேலும், 'சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை' (புறம்-2), 'சிறுதலை நவ்விப் பிணையிற் றிரிந்த, நெறிகோட்டிரலைமான்', (குறுந்: 183), 'கொவ்வையிதழ் மடநவ்வியலமரல்' (வில்லிபாரதம்: ஆதி: வேத்திரகீய: 46), 'நவ்வித் தோகையர்' (கம்பரா: மாரீச: 14) என்ற பிரயோகங்களும் 'நவ்வி' என்பது பெண் பெயர்க்குரியதென்றே வற்புறுத்துவன. அங்ஙனிருப்பவும், "பிணை எனப் பின்வருதலால் நௌவி ஆண்மான் என்க" என்றாருமுளர். மான்கள் துள்ளிக் குதித்தலால் அவைகளின் குளம்புகளால் கிண்டிக் கிளரப்பட்டுப் பொன் மேலேயாயின என்க. துணிநீர்-தெளிந்த நீர். முல்லை சான்ற புறவு-இருத்தலாகிய உரிப்பொருள் அமைந்த புறவு: அதாவது, கணவன் கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்தாற்றியிருந்த தன்மையமைந்த புறவு என்றபடி: 'முல்லைசான்ற முல்லையம் புறவு' என்றது சிறுபாண்.

இலக்கணக்குறிப்பு:—"பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி, சொன்முறை முடியா தடுக்குந வரினும், முன்னது முடிய முடியுமன் பொருளே" என்றதால், வினையெச்சம் பன்முறையானும் அடுக்கி ஒருசொல்லான் முடியுமெனவே, ஈண்டு, (271) கொய்ய, கறுப்ப (272) புலர (273) கிளர (276) உகள (283) மலர என்ற வினையெச்சங்கள் விராஅய் அடுக்கி (285) 'அணிந்து' என்னும் வினைகொண்டு முடிந்தன,

அடிகள்-286-301:—பாண்டிமண்டலத்தின் ஒருசார் குறிஞ்சிசான்ற மலை தழுவப்பட்டிருத்தல் கூறும்.

நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை நெடுங்கா லையவி
ஐவன வெண்ணெலொ டரில்கொள்பு நீடி
இஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டித்
தினைவிளை சாரற் கிளிகடி பூசல்
மணிப்பூ அவரைக் குரூஉத்தளிர் மேயும்
ஆமா கடியுங் கானவர் பூசல்
சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழல் அட்ட பூசல்
கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூசல் இருங்கேழ்
ஏறடு வயப்புலிப் பூசலொ டனைத்தும்
இலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்து
அருங்கடி மாமலை தழீஇ யொருசார்

பதவுரை:—(299) இலங்கு வெள் அருவியொடு-*விளங்குகின்ற வெள்ளிய அருவி வீழ்கின்றவாற்றாலே*, (300) கரு கால் வெற்பு அணிந்து-*கரிய நீரோடுங்கால்களையுடைய பக்கமலைகள் சூழ்ந்து*, [ஆங்கு], (286) நறு காழ் கொன்று கோட்டின் வித்திய-*நறிய அகிலையும் சந்தனத்தையும் வெட்டி மேட்டு நிலத்தே விதைத்த*, (287) குறு கதிர் தோரை-*குறிய கதிர்களையுடைய தோரை நெல்லும்*, நெடு கால் ஐயவி-*நெடிய தாளினையுடைய வெண்சிறு கடுகும்*, (288) ஐவனம் வெள் நெல்லொடு அரில் கொள்பு நீடி-*ஐவன நெல்லென்னும் வெள்ளிய நெல்லோடே பிணக்கங் கொண்டு வளரப்பட்டு*, (289) இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும் (290) பல் வேறு தாரமொடு- *இஞ்சியும் மஞ்சளும் பசுத்த மிளகு கொடியும் ஒழிந்த பலவாய் வேறுபட்ட பண்டங்களும்*, கல் அகத்து ஈண்டி-*கற்றரையிடத்தே குவியப்பட்டு*,—(291) தினை-*தினையும்*, விளை-*விளையப்படுகின்ற*, சாரல்-*மலைப்பக்கத்திற்படியும்*, கிளி கடி பூசல்-*கிளியை ஓட்டும் ஆரவாரம்*, (292) மணி பூ அவரை குரூஉ தளிர் மேயும்-*பன்மணிபோலும் பூவினையுடைய அவரையின் நிறம்பொருந்திய தளிரைத் தின்னும்*, (293) ஆமா கடியும் கானவர் பூசல்-*ஆமாவையோட்டும் கானவருடைய ஆரவாரம்* (294) சேணோன் அகழ்ந்த மடி வாய் பயம்பின்-*மலைமிசையுறையுங் குறவன் கல்லப்பட்ட மூடின வாயையுடைய பொய்க்குழியிலே*, (295) வீழ் முகம் கேழல் அட்ட பூசல் - *விழும் பக்குவத்தினையுடைய ஆண்பன்றியைக் கொன்றதனாலுண்டான ஆரவாரம்*, (296) கரு கால் வேங்கை இரு சினை பொங்கர் நறு பூ கொய்யும் பூசல்-*கரிய தாளினையுடைய வேங்கையிடத்துப் பெரிய கவடு*

களிற் றேன்றிய சிறிய கொம்புகளிற் பூத்த நறிய பூவைப் பறிக்கும் மகளிர் புலிபுலியென்று கூறும் ஆரவாரம் ஆகிய, (298) அனைத்துஉம்-[ஆரவாரங்கள்] முழுவதும், (297) இரு கேழ் (298) ஏறு அடு வய புலி பூசலொடு-கரியநிறத்தையுடைய பன்றியைக் கொல்லுகின்ற வலியினையுடைய புலியினது ஆரவாரத்தோடே, (299) சிலம்பு அகத்து இரட்ட-மலையிடத்தே மாறிமாறி யொலிப்ப, (300) குறிஞ்சிசான்ற-புணர்ச்சியாகிய உரிப்பொருளமைந்த, (301) அரு கடி மா மலை தழீஇ-பெறுதற்கரிய சிறப்பினையுடைய பெரிய மலை தழுவப்பட்டு, ஒருசார்-ஒருபக்கம் [இருப்ப] (எ-று.)

(299) அருவியொடு (300) கருங்காலையுடைய வெற்பு அணிந்து [ஆங்கு] (287) தோரையும் ஐயவியும் (288) ஐவன நெல்லொடு நீடி (289) பிறவும் (290) தாரமொடு ஈண்டி (291) தினையும் விளையுஞ் சாரலிற் கிளிகடிபூசல் (293) கானவர்பூசல்(295) கேழல் அட்ட பூசல் (297) பூக்கொய்யும்பூசலாகிய (298) அனைத்துப் பூசலும் புலிப்பூசலோடே (299) சிலம்பகத்து இரட்ட (300) குறிஞ்சிசான்ற (301) அருங்கடியினையுடைய மலை தழுவப்பட்டு, ஒருசார் [இருப்ப] என முடியும்.

கருத்துரை:—அருவி வீழ்வதனால் நீரோடுங்கால்களைப்பெற்ற பக்கமலைகள் சூழ்ந்திருப்ப, ஆங்கு அகிலையும் சந்தனத்தையும் வெட்டிப் பண்படுத்திய மேட்டு நிலத்திலே தோரைநெல்லும் ஐயவியும் ஐவனநெல்லும் வளர்க்கப்பட்டு, இஞ்சியும் மஞ்சளும் மிளகுகொடியும் மற்றும் பல்வேறு பண்டங்களும் கல்தரையிலே குவிக்கப்பட்டு இருக்கின்றன: தினை விளைக்கின்ற மலைச்சாரலிலே மகளிர் கிளிகடியும் பூசலும், அவரையின் தளிரை மேயும் ஆமாவையோட்டும் கானவர் பூசலும், மலைமிசைக் குறவன் பொய்க்குழியிலே வீழ்ந்த ஆண்பன்றியைக் கொன்றதனாலுண்டான பூசலும், வேங்கைப் பூக்களைப் பறிக்கும் மகளிர் புலிபுலியென்று கூவும் பூசலும் ஆகிய அனைத்துபூசலோடே பன்றியைக் கொல்லும் வலியுடைய புலியினது பூசலும் கூடிச் சிலம்பகத்து மாறிமாறியொலிப்ப, இங்ஙன் மலைசூழப்பட்டிருப்பது பாண்டிமண்டலத்து ஒருசார் குறிஞ்சிசான்ற குறிஞ்சி நிலப்பகுதி என்பது கருத்து.

விசேடவுரை:—(300) கால்-நீரோடுங்கால்வாய்கள். வெற்பு-பக்கமலைகள். அருவி வீழ்தலால் நீரோடுங்கால்களைப் பெற்றுப் பக்கமலைகளிருத்தலாலே, மேட்டுநிலத்தில் தோரையும் ஐயவியும் ஐவனமும் வித்துதலும், இஞ்சியும் மஞ்சளும் கறியும் பிறபண்டங்களும் கல்லகத்துக் குவித்தலும் நிகழ்கின்றன என்க. இதனை, 'மைபடுசிலம்பின் ஐவனம்வித்தி, அருவியின் விளைக்கும் நாடன்' (குறுந்: 371) 'அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி' (குறுந்: 100) என்பவற்றானும் உணரலாம். நறுங்காழ்-நறிய அகிலும் சந்தனமும். இந்நறியமரங்களை வெட்டியெறிந்து தினை தோரை முதலியவற்றைக் குறிஞ்சிநிலத்து வித்துவர் குறவர் என்பதை "நறைபடர் சாந்த மறவெறிந்து நாளால், உறையெதிர்ந்து வித்தியவூ

மேனல்' (திணைமாலை-1), 'நறுந்தண் டகரம் வகுளமிவற்றை, வெறும்புதல்போல் வேண்டாது வெட்டி—எறிந்துழுது, செந் தினை வித்துவார்'' (திணைமாலை,-224) என்பவற்றால் ஒருவாறு ஈண்டு நோக்குக. கொன்று-வெட்டிப் போகட்டு: "காடுகொன்று நாடாக்கி'' என்றது பட்டினப்பாலையும். ஐவனம்-மலைநெல்: இஃது வெள்ளிய நிறமுடையதாதலின், ஐவனமாகிய வெண்ணெல் என்று உரைவகுக்கப்பட்டது. கலித்தொகைச் செய்யுள் 43-இலும் இங்குப் போலவே நச்சினார்க்கினியர் உரையெழுதியுள ளார். இனி, மலைபடுகடாத்து வரி 115-இல், 'ஐவனநெல்லும் வெண்ணெல்லும்' என எண்ணும்மை கொடுத்து நச்சினார்க் கினியர் உரைவகுத்திருப்பது, அங்கு, "வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெல்'' என்று பன்மைவினைவந்திருத்தல்பற்றி. எனவே, அங்கு இருவகை நெற்களைக் குறித்தபடி. 'வெண் ணெல்' என்பது ஒருவகையதென்பதை 'வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ' (மலைபடு, 471) என்றதாலும் 'தொண்டி முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு' (குறுந்: 210) என்றதாலும், 'யாயும் உப்பை மாறி வெண்ணெல் தரீஇய...... சென்றனள்' (குறுந்: 269) என்றதாலும் தெளியலாம். மற்றும், வெண்ணெல்லை மருதக் கருப்பொருளாக் கூறும் நம்பியகப் பொருள்விளக்கம். அரில்-பிணக்கம். தாரம்-பண்டம். ஈண்டு, மலைப்பஃறாரம் குறித்தபடி. குறித்த பூசல் பலவற்றுள் 'கிளிகடி பூசலும் வேங்கை நறும்பூக்கொய்யும் பூசலும் குறிஞ்சிநில மகளிர் செய்வன: ஏனைய குறிஞ்சிநில ஆடவர் செய்வன என அறிய வேண்டுவது. 'கிளிகடி மகளிர் விளிபடு பூசல்' என்ற மலைபடு கடாமும் (329), 'கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப், பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள், இன்னா இசைய பூசல் பயிற்றலின்' என்ற அகப்பாட்டும் (52) நோக்குக இனி, வேங்கைப்பூக் கொய்யும் மகளிர் 'புலிபுலி' என்று பூசலிடுவர் என்றது, அவ்வேங்கைமரம் மலர்கொய்யத் தாழ்ந்து கொடுக்கு மென்றோர் பேதைத்தன்மையால். அதுவும் மலையில் வாழ் வார்க்கு உள்ளதோர் பண்பு என்ப. அங்ஙனமே கூறியது அக நானூற்றுக் குறிப்புரை. "ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப், புலிபுலியென்னும் பூசல்தோன்ற'' என்றது அகம். (செ. 48). அவரையின் பூ பன்னிற மணிபோன்றிருக்கும். ஆமா-காட்டுப்பசு. சேணோன் - உச்சியில் தூரத்திருப்போன்: எனவே மலைமிசையுறையுங் குறவன் என்றார். சேணோன் என்பதற்கு-பரணின்மேலோன் என்பர் சிலப்பதிகாரத்து அரும்பதவுரை யாசிரியர். இனி, சேணோன் இழிகுலத்தோன் என்பாருமுளர். பயம்பு-குழி. முகம்-பக்குவம். கேழல்-பன்றியில் ஆண். கேழ்-நிறம். ஏறு-பன்றியேறு; ஆனேறு எனினுமாம். இரட்டுதல்-மாறிமாறியொலித்தல். குறிஞ்சி சான்ற மலை-புணர்தலாகிய உரிப்பொருள் அமைந்த மலை.

இலக்கணக்குறிப்பு:—(288) நீடி (290) ஈண்டி என்னுஞ் செய்தெ னெச்சங்கள் (291) விளையும் என்னும் பிறவினை கொண்டன,

"அம்முக்கிளவி" என்னுஞ் சூத்திரவிதியால் [தொல்:வினை.சூ.34] என்றனர் நச்சினார்க்கினியர்.

அடிகள் 302-314:—பாண்டிமண்டலத்தின் ஒருசார் பாலைசான்ற சுரம் சேரப்பட்டிருத்தல் கூறும்.

இருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப
நிழத்த யானை மேய்புலம் படரக்
கலித்த வியவர் இயந்தொட் டன்ன
கண்விடு புடையூஉத் தட்டை கவினழிந்து
அருவி யான்ற வணியின் மாமலை
வைகண் டன்ன புன்முளி யங்காட்டுக்
கமஞ்சூழ் கோடை விடரக முகந்து
காலுறு கடலின் ஒலிக்குஞ் சும்மை
இலைவேய் குரம்பை யுழையதட் பள்ளி
உவலைக் கண்ணி வன்சொல் இளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப
நிழலுரு விழந்த வேனிற்குன் றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்

பதவுரை:—(302) இரு வெதிர் கூர் எரி - பெரிய மூங்கிலிற் பிறந்த மிக்கநெருப்பு, பைந்தூறு நைப்ப - பசியதூறுகளைச் சுடுகையினாலே, (மலைப்புலங்களில் பயிரின்றிப்போகவே), (305) கண் விடுபு உடையூ (304) கலித்த இயவர் இயம் தொட்டன்ன (305) தட்டை கவின அழிந்து - மூங்கிலின் கண் திறக்கப்பட்டு உடைந்து மகிழ்ந்த வாச்சியக்காரர் தம் வாச்சியத்தை வாசித்தாலொத்த ஓசையையுடைய தட்டை அழகு அழிய, (303) நிழத்த யானை மேய் புலம் படர - ஓய்ந்த யானைகள் தமக்கு மேயலாமிடங்களிலே போக, (306) அருவி ஆன்ற அணி இல் மாமலை - அருவிகளில்லையான அழகில்லாத பெரியமலையிடத்து, [உள்ள], (308) விடர் அகம்-முழைஞ்சிடங்கள், (307) வை கண்டன்ன புல் முளி அம் காட்டு - வைக்கோலைக் கண்டாற்போன்ற ஊகம் புல்லுலர்ந்த அழகிய காட்டிடத்தில், (308) கமம் சூழ் கோடை முகந்து - நிறைவினையுடைய சூறவளியை முகந்துகொள்கையினாலே, (309) கால் உறு கடலின் ஒலிக்கும் சும்மை - காற்றுமிகுந்த கடல்போல் ஒலிக்கும் ஆரவாரத்தையுடையதாய, (313) நிழல் உரு இழந்த வேனில் குன்றத்து-நிழல் தன் வடிவையிழத்தற்குக் காரணமான முதுவேனிற்காலத்தையுடைய மலையிடத்து, (310) இலை வேய் குரம்பை உழை அதள் பள்ளி (311) உவலை கண்ணி வல் சொல் இளைஞர் - குழையாலே வேய்ந்த குடிலிலிருக்கும் மான்தோலாகிய படுக்கையினையும் தழைவிரவின கண்ணியினையும் கடிய சொல்லினையுமுடைய இளையோர், (312) சிலை உடை கையர் கவலை காப்ப-வில்லையுடைய கையினராய்ப் பழ

வழிகளில் ஆறலைகள்வரைக் காக்கும்படி, (314) பாலை சான்ற சுரம் சேர்ந்து - பிரிவாகிய உரிப்பொருள் அமைந்த அருநிலஞ் சேரப்பட்டு, ஒருசார்-ஒருபக்கம் [இருப்ப]; (எ-று.)

(302) எரி நைக்கையினாலே [பயிரின்றிப்போகவே] (305) தட்டைகவினழிய (303) யானை மெய்புலம்படர (306) அருவியில்லாத மலை (308) விடரகங்கள் (307) அங்காட்டுக் (308) கோடை முகக்கையினாலே (309) கடலிறொலிக்குஞ் சும்மையையுடையதாய் (313) வேனிற்குன்றத்து (311) இளைஞர் (312) கவலைகாப்பப் (314) பாலைசான்ற சுரம் சேரப்பட்டு, ஒருசார் [இருப்ப] என முடியும்.

கருத்துரை:—மூங்கிலிற் பிறந்த நெருப்பு பசிய தூறுகளைச் சுடுகையினாலே மலைப்புலங்களிற் பயிரின்றிப்போகவே, கிளிகடி கருவியாகியதட்டை பயனின்றிக் கவினழிய, யானைகள் மேய்ச்சலிடங்களை நாடிப்போக, அருவிகளின்றி அணியிழந்த மலையிடத்து விடரகங்களில், [அணித்தாய] ஊகம்புல் லுலர்ந்த காட்டிடத்திருந்து சூறுவளிக்காற்று முகக்கப்பட்டுக் காற்றுமிக்க கடல்போல் ஒலிப்ப, நிழலேயில்லாத முதுவேனில்முற்றிய அம்மலையிடத்து ஆறலைகள்வர் அலைக்காதபடி கவலையிடங்களில் இளைஞர்நின்று காப்ப, இங்ஙன் அருநிலஞ்சேரப்பட்டிருப்பது பாண்டிமண்டலத்து ஒருசார் பாலைசான்ற சுரநிலப்பகுதி என்பது கருத்து.

விசேடவுரை:—மூங்கில் உராய்தலால் பிறந்தநெருப்பு பசிய தூறுகளையழித்தலேயன்றி அம்மூங்கில்களையே அழித்துவிடும் என்பதை "வான்தொடர் மூங்கில் தந்த வயங்குவெந் தீயிதென்னத், தான்தொடர்குலத்தை யெல்லாந் தொலைக்குமா சமைந்து நின்றான்" (கரன் வதைப்படலம்-66) எனக் கம்பர் கூறுதலாலும் அறிக. 'மூளிகழை இழைந்த காடுபடு தீயின்' (248) என்றது மலைபடுகடாம். மூங்கிலிற் பிறந்த நெருப்பால் பசியதூறுகளும் புலங்களும் கரிந்தமையால் பயிரின்றிப்போகவே, தினைப்புனங்களில் தட்டையாகிய கிளிகடிகருவி புடைப்பாரின்றிக் கவினழிய, மேயலற்று ஓய்ந்த யானைகள் மேயலாமிடங்களைநாடிப் படரலாயின. இயங்தொட்டன்ன ஓசையுடைத்தாகிய தட்டைஎன இயைக்க. தட்டப்படுதலின் தட்டையென்றார். இந்தத் தட்டையென்பது-மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவியாதலின், 'கண் விடுபு உடையூத் தட்டை' என்றது. ஆன்ற-நிறைந்த என்ற பொருளில் வருவது, ஈண்டு, சொல்லுவான் குறிப்பினாலே எதிர்மறையிலக்கணையால் 'இல்லையான' என்ற பொருளில்வந்தது. நச்சினார்க்கினியரும் எதிர்மறையிலக்கணையாகவே பொருள்கொண்டனர். ஈண்டு "ஏவின்தலைவந்த விருந்கணையின், மேவுங் குளிர்மெல்லணை மேவினையோ" (சீதை களங்காண் படலம் செ.19) என்றவிடத்து 'குளிர்மெல்லணை' என்றது

சொல்லுவாள் குறிப்பினுலே எதிர்மறையிலக்கணையால் 'வெவ்விய அம்புகளாலாய வலிய அணை' என்று பொருள்படுதலை ஒப்புநோக்குக. மற்றும், குறிஞ்சிப்பாட்டில் 'அல்லாந்து' (143) என்றவிடத்து அடியேன் உரைவிளக்கத்தையும் ஒப்புநோக்குக. இனி, 'ஆன்றல்' என்ற சொல் 'நீங்கல்' என்ற பொருளில்வருதலை "ஆன்றல்வேண்டும்..........கானவர் மடிந்த கங்குல், மானதர்ச் சிறுநெறி வருதல் நீயே'' என்ற அகநானூற்றுல் (செ. 168) அறியலாம். அதனபடிநோக்க, ஆன்ற-நீங்கின எனப் பொருள் கொண்டாலும் இழுக்கின்று. ஒலியான்று-ஒலிநீங்கி (கலி:செ 121) என்பதும் காண்க. இனி 'அருவி ஆன்ற அணி' என ஒருசேர எடுத்து,—அருவிகள் நிறைந்திருத்தலாலாகிய அழகு, இல்-இல்லாத, மாமலை எனினுமாம்.

முதுவேனிற் காலத்து ஊகம்புல்உலர்ந்த காட்டிடத்து நிறைந்துநின்று சுழன்றுவீசும் காற்றினை மலையிடத்து விடரகங்கள் முகந்துகொள்ளும் என்றது குறிக்கொண்டு இன்புறற்பாலது. கோடை-மேல்காற்று: இஃது கோடைகாலமாகிய முதுவேனிற்காலத்து வீசுவதென்பதை "கோடையொடுபுகுந்து கூடலாண்ட, வேனில் வேந்தன்'' (சிலப் : 14 : 1:3-24) என்றதால் அறியலாம். கமம்-நிறைவு; உரிச்சொல். 'கமம்நிறைந்தியலும்' என்றது தொல்காப்பியம். உழை அதள்-மானதோல். உவலை-தழை. முதுவேனிற்காலத்து நடுப்பகலில், தம் நிழல் மேல் தாமே நடக்கும்படி நிழல் வீழுமாதலின், 'நிழல் தன் வடிவையிழந்தது' என்ற பொருளில், 'நிழல் உரு இழந்த வேனில்' என்றார். இஃது பெரிதும் இன்புறற்பாலதே. 'பாலைசான்ற சுரஞ்சேர்ந் தொருசார்' என்று சங்கத்துச் சான்றோராய மாங்குடிமருதனர் கூறியிருத்தலின், பாலையென்பது, ஒரு தனிநிலமாகவைத்துப் புலனெறி வழக்கஞ் செய்யப்படுவதுண்டெனக்கொள்க. பாலைக்கு 'நடுவணது' என்னும் பெயரிருத்தலானும், "முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்'' என[நிலமாகிய] முதற்பொருள்பற்றிப் பாலை நிகழ்தலானும் பாலையையும் வேறோர் நிலமாக்கிக் கூறியபடி. சேக்கிழாரும் திருக்குறிப்புத்தொண்டர் புராணத்து, ஐந்திணை வளமும் தெரித்துக் காட்டுமிடத்து, குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடையில் ஒருபாடலில் பாலையைப்பற்றி "கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்த சில்லிடங்கள், நீல வாட்படை நீலி கோட்டங்களும் நிரந்து,கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப,பாலையுஞ் சொலலாவனவுள பரல்முரம்பு'' என்று பேசியுள்ளார்.* மற்றும், பாலை நின்ற பாலை நெடுவழிச்சுரன்' என்ற

*சிலர், நான்கு நிலங்களிலும் மழைகுன்றி நிலவளம் பாழ்பட்டு ஒன்றும் விளையாத வறண்ட நிலமாக மாறினல், அது பாலைநிலமாகும் என்ற கருத்துடையராவர். நம்மாழ்வார் தம் திருவிருத்தத்து "நானிலம் வாய்க்கொண்டு நன்னீரறமென்று கோதுகொண்ட, வேனிலஞ்செல்வன் சுவைத்துமிழ்பாலை'' என்று அருளிச்செய்துள்ளார்.

சிறுபாணாற்றுப்படை வரிக்கு, 'பாலைத்தன்மை நிலைபெற்றமையாற் பிறந்த பாலைநிலமாகிய தொலையாத வழியினையுடைய சுரன்' என்ற நச்சினார்க்கினியருரையாலும் தெளியலாம். பாலைத் தன்மையாவது-காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலைதேம்பிக் கூவல்மாறி நீரும்நிழலுமின்றி நிலம்பயந்துறந்து புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவது' என்றனர் நச்சினார்க்கினியரே. மேலும், இலக்கணவிளக்கத்து அகத்திணையியல் 10-ஆம் சூத்திரத்து உரையில் "அவற்றுள், 'நடுவணைந்திணை நடுவண தொழியப், படுதிரை வையம் பாத்திய பண்பே' என்பவாகலின், பாலைத்திணைக்கு நிலங்கூறுதல் மலைவாம் பிறவெனின், மதுரைக்காஞ்சியுட் 'பாலைசான்ற சுரஞ்சேர்ந் தொருசார்' என்பதனானும் பிறவாற்றானும் மலைவாகாது அமைவுடைத் தென்க" என்று கூறியிருத்தலும் குறிக்கொள்க.

அடிகள் 315-325—பாண்டிமண்டலத்தின் ஒருசார் நெய்தல்சான்ற வரைப்பு வளம்பயின்றிருத்தல் கூறும்.

முழங்குகடல் தந்த விளங்குகதிர் முத்தம்
அரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவில் தீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப
நெய்தல் சான்ற வளம்பல பயின்று

பதவுரை:— (321) விழுமிய நாவாய் - சீரிய மரக்கலங்களை, பெரு நீர் ஓச்சுநர்-பெரிய கடல்களிலே செலுத்தும் மீகாமர், (323) புணர்ந்து - பலருங்கூடி, (322) நல் கலன் உய்ம்மார் - இவ்விடத்துண்டாகிய பேரணிகலங்களை ஆண்டுச் செலுத்துதற்கு, [அதாவது பேரணிகலங்களைப் பெறுதற்கு விலையாக], நனந்தலை தேஎத்து-அகன்ற இடத்தையுடைய யவனம் முதலிய தேயத்தினின்றும், (323) உடன் கொணர்ந்த புரவியொடு-சேரக்கொண்டு வந்த குதிரைகளோடே, [இப் பாண்டிநாட்டு] (315) முழங்கு கடல்

"நிலந்தான் காலென்பாரும் அஞ்சென்பாருமாயிருக்கும்: ஐந்தென்கிறவர்கள் பாலை நிலத்தையும் தன்னிலே ஒன்றாக்கிச் சொல்லுவார்கள்; காலென்றவர்கள், இப்பா நிலந்தான் மற்றதை நாலிலும் உண்டென்கிறார்கள்; அதாகிறது—நீரும் நிழலும் இல்லாதவிடம், பாலையாமத்தனையிறே" என்ற நம்பிள்ளையீட்டையும் காண்க. 'நீரின்றி வேனில்தெறுநிலம் பாலை' என்றபடி நீரின்மையே இந்நிலத்திற்குச்சிறப்பாதல் காண்க. கம்பரும், 'பருதிவானவன் நிலம்பசையறப் பருகுவான்' என்றார் (பால-தடாகை: 5). எனவே, நடுவுநிலைத்திணையாகிய பாலை நானிலத்திற்கும் பொதுப்படக் கூறும் வழக்காற்றையும் காண நேர்கின்றது.

தந்த விளங்கு கதிர் முத்தம்-ஒலிக்குங்கடல் தந்த விளங்குகின்ற ஒளியினையுடைய முத்துக்கள், (316) அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை-வாளரம் கீறியறுத்த இடம் நேரிதாகிய விளங்கும் வளைகள், (317) பரதர் தந்த பல் வேறு கூலம்-செட்டிகள் கொண்டுவருதலால் மிக்க பலவாய் வேறுபட்ட பண்டங்கள், (318) இரு கழி செறுவின் வெள் உப்பு-கரிய கழியிடத்துப் பாத்தியில் விளைந்த வெள்ளிய உப்பு, தீம் புளி - கரும்பின் வெல்லக்கட்டி கூட்டிப் பொரித்த புளி, (319) வல் கை திமிலர் (320) கொழு மீன் குறைஇய துடி கண் துணியல்-வலிய கையினையுடைய திமிலர் கொழுவிய மீன்களையறுத்த துடியின் கண் போலுருண்ட துணிகள், [ஆகிய] (323) அனைத்துஉம் - இவை முழுவதும், [ஏற்றின (321) நாவாய்கள்] (324) வைகல் தோறும் வழி வழி சிறப்ப-நாடோறும் முறைமையே முறைமையே மிகுகையினலே, (325) நெய்தல் சான்ற (319) பரந்து ஓங்கு வரைப்பின்-இரங்கலாகிய உரிப்பொருளமைந்த மணற்குன்று பரந்துயரும் கானலிடத்தே, (325) வளம் பல பயின்று-பல செல்வங்களும் நெருங்கப்பட்டு, [(314) ஒருசார்-ஒரு பக்கம்] [இ நப்ப]; (எ-று.)

(321) பெருநீரோச்சுநர் (323) புணர்ந்து (322) கலனுய்ம்மார் தேஎத்துக் (323) கொணர்ந்த புரவியோடே (315) முத்தம் (316) வளை (317) கூலம் (318) வெள்ளுப்பு, தீம்புளி (320) துணியல் ஆகியவை (323) அனைத்தும் ஏற்றின (321) நாவாய்கள் (324) வைகல்தோறும் வழிவழிச் சிறப்ப (325) நெய்தல் சான்ற (319) பரந்தோங்கு வரைப்பின் கண்ணே (325) வளம்பல பயிலப்பட்டு, (314) ஒருசார் [இருப்ப] என முடியும்.

கருத்துரை:— பெரிய கடல்களிலே நாவாய்களைச் செலுத்தும் மீகாமர் பலரும் ஒருங்குகூடி யவனம் முதலிய தேயங்களினின்றும் குதிரைகளைக் கொணர்ந்து பாண்டிநாட்டுப் பேரணிகலங்களுக்கு மாற்றி வாணிபஞ் செய்யாநிற்ப, அப்பாண்டிமண்டலத்து விளைவிக்கும் முத்து, சங்குவளை, கூலம், வெள்ளுப்பு, தீம்புளி, கொழுமீன் துணிகள் [கருவாடுகள்] ஆகியவற்றை ஏற்றின நாவாய்கள் நாடோறும் [நாளுக்குநாள்] முறையே பெருக, அதனல் வளம் பல பயிலப்பட்டுச் சிறப்புற்ற கானலிடம் சேரப்பட்டிருப்பது பாண்டிமண்டலத்து ஒருசார் நெய்தல்சான்ற பரந்தோங்கு வரைப்பு என்பது கருத்து.

விசேடவுரை:— முத்துக்கள் பலவற்றுள் கடல்முத்து சிறந்ததாகலின், 'விளங்கு கதிர் முத்தம்' என அதனைச் சிறப்பித்தது. வளை - சங்கு வளையல்கள்: சங்கினைப் போழ்ந்து அறுத்து நேரிதாகச் செய்யப்படுவன இவ் வளையல்கள். 'சங்கறுப்பதெங்கள் குலம்' என்ற பாடலையும், "வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த, வளைகளைந் தொழிந்த கொழுந்தி னன்ன, தளை பிணி யவிழாச் சுரிமுகப் பகன்றை" என்ற அகப்பாட்டடிகளையும் நினைவு கூர்க. மற்றும் 'சிறந்த கொள்கையொடு, அணிவளை

போழுநர் அகன்பெரு வீதியும்' (இந்திர: 46-47) என்ற சிலப்பதிகாரத்தையும், ஆங்கு, 'வளைபோழுநரென்றது சங்கறுப்பாரை' என்ற உரையையும் நோக்குக. பரதர் - செட்டிகள்; வணிகர். 'அரசகுமரரும் பரத குமரரும்' (இந்திர: 158) என்ற சிலப்பதிகாரம் காண்க. திமில்-மீன்படகு; எனவே, திமிலர். திருக்கோவையாரில் 'கொழுமீனுண்ட வன்னங்களே' (188) என்பதனுரையில், பேராசிரியர் 'கொழுமீனென்பது ஒரு சாதி' என எழுதியிருத்தலின், இது ஒருவகை மீனின் பெயரெனத் தெரிகிறது. 'கொழுமீன் குறைய வொதுங்கி' (சிறுபாண் : 41), 'நுளையர்கள் கொடுப்பன கொழுமீன்' (பெரிய புராணம் : திருக்குறிப்புத்: 55) என்பனவும் காண்க. 'மீன் குறைஇய துணியல்' என்றது, கருவாடுகளை. இன்றும் வழக்கிலுள்ள இச் சொல்லை நச்சினார்க்கினியர் பிரயோகித்திருத்தல் காணத்தக்கது. பெருநீர் ஓச்சுநர்-மரக்கல மீகாமர் என்றனர் நச்சினார்க்கினியர். 'உடன் கொணர்ந்த புரவியொடு' (323) என்றவிடத்து 'நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்' என்ற பட்டினப்பாலை ஒப்பு நோக்கத்தக்கது. நெய்தல் சான்ற வரைப்பு - இரங்கலாகிய உரிப்பொருளமைந்த நிலப்பகுதி. இரங்கலாவது ஆற்றுமை: அஃது, கடலுங் கானலுங் கழியுங் காண்டொறும் இரங்கல்.

இலக்கணக்குறிப்பு:— உய்ம்மார்-மாரீற்று வினையெச்சம்.

அடிகள் 325-326:— பாண்டிமண்டலத்து ஐம்பாற்றிணையும் கவினியிருத்தலைத் தொகை செய்து கூறும்.

325 ஆங்கு
ஐம்பாற் றிணையுங் கவினி யமைவர

பதவுரை:— (325) ஆங்கு - அப் பாண்டிமண்டலத்தின் கண்ணே, (326) ஐம்பால் திணையும் கவினி - ஐந்து கூற்றினையுடைய நிலங்களும் அழகுபெற்று, அமைவர - பொருந்துதல் தோன்ற; (எ-று.)

அடிகள் 236-முதல் 326-வரை தொகுதிப்பட்ட முடிபு வருமாறு:- (270) ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (285) ஒருசார் புறவு [காடு] தழுவப்பட்டு (301) ஒருசார் மலை தழுவப்பட்டு (314) ஒருசார் சுரஞ் சேரப்பட்டு (325) ஒருசார் நெய்தல்சான்ற (319) வரைப்பின் கண்ணே (325) வளம்பல பயிலப்பட்டு ஆங்கு (326) ஐம்பால் திணையுங் கவினி அமைவர—என்பது.

கருத்துரை:— பாண்டிமண்டலம் கீழே விரித்துச் சொன்ன ஐவகைநிலங்களும் அமையப்பெற்றது என்பது கருத்து.

அடிகள் 327-331:—பாண்டிமண்டலத்துப் பாடல்சான்ற நன்னாட்டின் சிறப்புக்கூறும்: [அதன் நடுவண் மதுரையுள்ளது எனமேல் இயையும்]

முழவிமிழும் அகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகில்
துணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி

இன்கலி யாணர்க் குழூஉப்பல பயின்றங்குப்
பாடல் சான்ற நன்னாட்டு நடுவண்

பதவுரை:—(327) முழவு இமிழும்-முழவு முழங்குகின்ற, (328) விழவு நின்ற வியல் மறுகின்-திருநாள் நிலைபெற்ற அகற்சியை யுடைய தெருவினையும், (329) துணங்கை-துணங்கைக் கூத்தினை யும், அம் தழூஉவின்-அழகினையுடைய குரவைக்கூத்தினையும், மணம் கமழ் சேரி-மணநாறுகின்ற பரத்தையர் சேரியினையும்,(330) இன் கலி யாணர்-இனிய செருக்கினையுடைத்தாகிய புதுவருவா யினையுமுடைய, (327) அகல் ஆங்கண்-அகன்ற ஊரிடத்தே, (330) பல குழூஉ பயின்று-பல குடித்திரள் நெருங்கி, ஆங்கு-அந்தப் பாண்டிமண்டலத்தில்,(331)பாடல்சான்ற நல்நாட்டுநடுவண்-புலவ ராற்பாடுதல் முற்றுப்பெற்ற நல்லநாட்டிற்கு நடுவணதாய்; (எ-று.)—நடுவணதாய் உள்ளது(429) மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடலையுடைய (699) மிக்குப்புகழெய்திய பெரும்பெயர் மதுரை என மேல் இயையும்.

(328) மறுகினையும் (329) துணங்கையினையும் தழூஉவினையும் சேரியினையும் (330) யாணரினையும் உடைய (327) அகலாங்கண் என முடிக்க.

கருத்துரை:—விழாநின்ற தெருவினையும், துணங்கை குரவை முதலிய கூத்தினையும், மணம் வீசும் பரத்தையர் சேரியினையும், புதுவருவாயினையும் உடைய ஊரின்கண் பல குடிமக்கள் திரண்டு நெருங்கியிருக்கப்பெற்றது செந்தமிழ்ப்பாண்டி நன்னாடு. அந்நன் னாடு பாண்டிமண்டலத்தைச் சார்ந்தது; அந்நன்னாட்டின் நடுவ ணது மதுரை என்பது கருத்து.

விசேடவுரை:—பாடல்சான்ற நன்னாடு-பாண்டியநாடு: அதா வது, "சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும், சவுந்தர பாண் டியனெனுந் திருநாடனும், சங்கப் புலவரும் தழைத்தினி திருக் கும், மங்கலப் பாண்டி வளநாடு". இஃது பாண்டிமண்டலத்தது. மண்டலம் என்பது பெரும் பகுதி: அதற்குட்பட்டது நாடு என்க. அப்பாண்டிமண்டலத்துட்பட்ட நாடுகள் பல அகன்ற ஊர்களைக்கொண்டுள்ளன. அந்த ஊர்களின் சிறப்பு 327-330-வரி களில் கூறப்பட்டது. அந்நாட்டு ஊர்களுக்குள் நடுவணதாய் நடுநாயகமாய் இலங்குவது மாடமலிகூடல் மதுரை என்பது. ஆங்கண்-ஊரிடம். துணங்கை, தழூஉ-160-ஆம் வரியுரையிற் காண்க.

இலக்கணக்குறிப்பு:— யாணர் - உரிச்சொல்: 'புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி'.

[**கவனிப்பு:—இனி, 332 அடிமுதல் 699-ஆம் அடிவரையில், வருவன அனைத்தும் மதுரைமாநகர்ச்சிறப்பினைக் குறிப்பனவாம்.** அவற்றுள்],

அடிகள் 332 - 342: — வையைத்துறைகடோறும் இருந்த பெரும்பாணிருக்கை கூறும்.

கலைதாய வுயர்சிமையத்து
மயிலகவு மலிபொங்கர்
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவின்
இயங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழில் தழீஇய அடைகரை தோறும்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையி னொழுகும் விரிநீர் நல்வரல்
அவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரள் தண்டலை சுற்றி
அழுந்துபட் டிருந்த பெரும்பாண் இருக்கையும்

பதவுரை:—(332) கலை தாய-முசுக்கலைகள் தாவின, (333) மலி பொங்கர்-மிக்க கொம்புகளிலே, (334) மந்தி ஆட-மந்திகள் விளையாடாநிற்ப, மா விசும்பு உகந்து-பெரிய ஆகாயத்தே செல்ல வுயர்கையினாலே, (335) முழங்கு கால் பொருத மரம்-முழங்குகின்ற பெருங்காற்றடித்த மரங்கள், பயில்-நெருங்கியிருக்கின்ற, (333) மயில் அகவும் (335) காவின்-மயில்கள் ஆரவாரிக்கின்ற காவோடே, (332) உயர் சிமையத்து (336) இயங்குபுனல் கொழித்த-உயர்ந்த மலையுச்சியிடத்தினின்றும் வீழ்ந்தோடுகின்ற நீர்கொழித்து ஏறட்ட, வெள் தலை குவவு மணல்-வெள்ளிய தலையினையுடைத்தாகிய திரட்சியையுடைய மணற்குன்றிடத்து, (337) கான் பொழில் - மணத்தையுடைய பொழில், தழீஇய அடைகரை தோறும் - சூழ்ந்த நீரடையும் கரைகள் தோறும், (338) தாது சூழ் கோங்கின்பூ மலர் தாஅய்-தாதுக்கள் சூழ்ந்த கோங்கினுடைய பூவும் ஏனை மலர்களும்பரந்து, (339) கோதையின் ஒழுகும் விரிநீர் நல்வரல்-மாலையொழுகினாற்போல ஓடும் பெருநீர் நன்றாகி வருதலையுடைய, (340) வையை-வையையிடத்து, அவிர் அறல் துறை துறை தோறும்-விளங்குகின்ற அறலையுடைய துறைகடோறும் துறைகடோறும், (341) பல் வேறு பூ திரள் தண்டலை சுற்றி (342) அழுந்துபட்டிருந்த பெரும்பாண் இருக்கையும்-பலவாய் வேறுபட்ட பூத்திரளையுடைய பூந்தோட்டங்கள் சூழப்பட்டு நெடுங்காலம் அடிப்பட்டிருந்த பெரிய பாண்சாதியின் குடியிருப்பினையும்; (எ-று.)

(334) மந்திஆட, மா விசும்பு உகந்ததனால், (335) முழங்குகால் பொருதமரம்பயில் (333) மயிலகவும் (335) காவினோடே (337) பொழில்தழீஇய அடைகரைதோறும் (339) ஒழுகும் விரிநீர் நல்வரல் (340) வையைத் துறைதுறை தோறும் (342) இருந்த பெரும்பாணிருக்கையும் என முடிக்க.

(332) உயர்சிமையத்து (336) இயங்குபுனல் கொழித்த என இயைக்க.

கருத்துரை:—முசுக்கலைகள் தாவின கொம்புகளிலே மந்திகள் விளையாடாநிற்ப, பெருங்காற்றடிக்கும்படி ஆகாயத்தே மிக வோங்கிய மரங்கள் நெருங்கியிருப்ப, மயில்கள் அகவும் சோலைகள் உள்ளன: அச்சோலைகளோடே, [மலையுச்சியினின்றிழிந்தோடும் நீர்கொழித்ததனு லேற்பட்ட மணற்குன்றுகளிடத்துப்] பொழில்கள் சூழ்ந்துள்ளன. அங்ஙன் சூழ்ந்த கரைகள்தோறும் கோங்கம் பூவும் ஏனைமலர்களும் பரந்து கிடப்பக் கோதைபோல் ஒழுகி வரும் நீரினைக்கொண்ட வையையாற்றினிடத்துத் துறைகள் தோறும் பூந்தோட்டங்கள்சூழப்பட்டுத் தொன்று தொட்டுநிலவி வரும் பெரும்பாணரது குடியிருப்பினையும் [உடையது மதுரை] என்பது கருத்து.

விசேடவுரை:—பொங்கர்-கொம்பு: 296-ஆம் வரியிலுங் காண்க. கலை-ஆண்முசு: "கலையென் காட்சி யுழைக்கு முரித்தே, நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்', என்றது சூத்திரம். மந்தி-பெண் குரங்கு. உகந்து-உயர்ந்து. 'கோதையினொழுகும்......வையை' என்றவிடத்து 'கோதைபோற் கிடந்த கோதாவிரி' என்ற கம்பர் வாக்கையும் நினைக. பெரும்பாணிருக்கை-"குழலினும் யாழினும் குரன்முத லேழும், வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும், அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கை" என்ற சிலப்பதிகாரமும் ஆங்கு அடியார்க்குநல்லாருரையும் கவனிக்கத்தக்கது.

அடிகள் 343-351:— மதுரையின் மணிநீர்க் கிடங்கு கூறும்.

நிலனும் வளனுங் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் மான விறல்வேள்
அழும்பில் அன்ன நாடிழந் தனரும்
கொழும்பல் பதிய குடியிழந் தனரும்
தொன்றுகறுத் துறையுந் துப்புத்தர வந்த
அண்ணல் யானை யடுபோர் வேந்தர்
இன்னிசை முரசம் இடைப்புலத் தொழியப்
பன்மா ரேட்டிப் பெயர்புறம் பெற்று
மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்

பதவுரை:—(343) நிலன்உம் வளன்உம் கண்டு அமைகல்லா-நிலத்தையும் அதிற்பயிர்களையும் பார்த்தபார்வை மாறுதலமையாத, (344) விளங்கு பெரு திருவின் மானவிறல்வேள்-விளங்கும் பெரிய செல்வத்தினையுடைய மானவிறல்வேளென்னும் குறுநில மன்னனுடைய, (345) அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்-அழும்பில் என்னும் ஊரையொத்த நாடுகளை யிழந்தவர்களும், (346) கொழு பல் பதிய குடி இழந்தனரும்-செல்வத்தினையுடைய பல ஊர்களிடத்தனவாகிய குடிகளையிழந்தவர்களும், (347) தொன்று கறுத்து உறையும் துப்பு தர வந்த - பழையதாய செற்றங்கொண்டு தங்கும்வலி தம்மைக் கொண்டுவருகையினாலே எதிராய்வந்த [எதிரிட்டுவந்த], (348) அண்ணல் யானை அடு

போர் வேந்தர்-தலைமையினையுடைய யானையினையும் பகைவரைக் கொல்லும் போர்த்தொழிலினையுமுடைய வேந்தரை, (350) பல் மாறு ஓட்டி-பலவாய் நெஞ்சிற்கிடந்த மாறுபாடுகளை முதலிற் போக்கி, [பின்னர்], (349) இன் இசை முரசம் இடை புலத்து ஒழிய - இனிய ஓசையினையுடைய முரசம் உழிஞைப்போர்க்கு இடையே கிடக்கும்படி, (350) பெயர் புறம் பெற்று - மீளுகையினுண்டான முதுகைப்பெற்று [முதுகுகாட்டி ஓடும்படிசெய்து] (காத்த), (351) மண் உற ஆழ்ந்த மணி நீர் கிடங்கின் - மண் ணுள்ளளவும் ஆழ்ந்த நீல்மணிபோலும் நீரையுடைய கிடங் கினையும்; (எ-று.)

(345) நாடிழந்தனரும் (346) குடியிழந்தனருமாய் (347) துப்புத்தர எதிராய்வந்த (348) வேந்தரை (350) பல்மாறோட்டி (349) முரசம்ஒழிய (350) பெயர்புறம்பெற்று (351) ஆழ்ந்த கிடங் கினையும் எனமுடிக்க.

கருத்துரை:—அழும்பில் என்னும் ஊரைப்போல் பெருஞ் செல்வத்தினைக்கொண்ட நாடுகளையிழந்தவர்களும், வளப்ப முள்ள பல ஊர்களிடத்தனவாகிய குடிகளையிழந்தவர்களும் ஆகிய வேந்தர்கள் தங்கள் மனத்திடத்துக்கொண்ட பழைய தீய செற்றம் வலிகொடுத்து உய்த்தலாலே எதிர்த்துவர, அவர்கள் நெஞ்சிற்கிடந்த மாறுபாடுகள் பலவற்றையும் முதலிற் போக்கிப் பின்னர் நிகழ்ந்த புறத்துழிஞைப்போரிலே அந்த அரசர்கள் தங்கள் முரசங்களை இடையே கிடக்கும்படி போகட்டுப் புறங்காட்டியோடும்படி காத்த ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கினையும் [உடையது மதுரை] என்பது கருத்து.

விசேடவுரை:—கண்டமகல்லா - 'கண்டு தண்டாக் கட்கின் பத்து' (வரி : 16) என்றார் முன்னரும். அழும்பில் ஊர் பெரிதும் வளனுடைத்தென்பதை 'பெரும்பூட் சென்னி அழும்பிலன்ன வறுஅ யாணர்' (அகம் : 44) என்ற தொடரால் அறியலாம். சென்னி என்பது சோழனைக் காட்டுமாகலின் இந்த அழும்பில் ஊர் சோழநாட்டது எனத்தெரிகிறது. இனி, அழும்பில்-பாண்டி நாட்டூர் என்றனர் அகநானூற்றுரைகாரர். சிலப்பதிகாரத்து வருகின்ற 'அறைபறை யென்றே அழும்பில்வே ளுரைப்ப' (25 : 177), 'அழும்பில் வேளோ டாயக் கணக்கரை' (28 : 205) என்ற தொடர்களை நோக்கும்போது அழும்பில் என்ற பெயரொடு ஊரொன்று சேரநாட்டிலுமுண்டென்று தோன்றுகிறது. கறு- செற்றம்: அஃதாவது, பகைமை நெடுங்காலம் நிகழ்வது. 'பல் மாறுஓட்டி' (350) என்பதை முதலிற் கூட்டிப் பொருளுரைத் தது—செற்றங்கொண்டமையால் நெஞ்சிற்கிடந்த மாறுபாடு களையெல்லாம் முதலிற் போக்கினபடியைத் தெரித்தற்காக. முதுகுகாட்டியோடியவர் போரிடையே முரசங்களைப்போகட்டு ஓடினர் என்பது 349-50 வரிகளில் குறித்தபடி. போர்க்களத்து முரசை ஒழியவிட்டு ஓடுதலை 'இரங்கிசை முரசம் ஒழியப் பரந்

தவர், ஓடுபுறங் கண்ட ஞான்றை, ஆடுகொள் வியன்களத் தார்ப் பினும் பெரிதே' என்ற அகநானூற்றாலும் (செ. 116) அறிக. கிடங்கு-அகழி; இவ்விடத்து நச்சினார்க்கினியர், 'உழிஞைப்போர் செய்யவந்த அரசர் குடுமிகொண்ட மண்ணுமங்கலமெய்தாது இடையே மீளும்படி காத்தகிடங்கு' என்று உரைவிளக்க மிட்டார். ஈண்டு, 'உழிஞைப்போர் - புறத்துழிஞைப்போரை. புறத்துழிஞைப்போர் - வேற்று வேந்தருடைய மதிலின்புறத் தைச் சூழ்ந்துசெய்யும் போர். குடுமிகொண்ட மண்ணுமங்கலம் இன்னதென்பதை முன்னர்வந்த 149-ஆம் அடியின் விசேட வுரையிற் காண்க. கிடங்குகாத்ததென்றது - கிடங்கினையும் பகைவர் கடக்கமுடியாதபடி அங்குள்ள படை தடுத்தோட்டி யமை காட்டும். படையின்தொழில் கிடங்கின்மேலேற்றியபடி.

அடி 352:—மதுரையின் புரிசை கூறும்.

விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசை

பதவுரை:—(352) விண் உற ஓங்கிய-தேவருலகிலே செல்லும் படி உயர்ந்த, பல் படை புரிசை - பல கற்படைகளையுடைய மதிலினையும்; (எ-று.)

கருத்துரை:—மிகவோங்கிய கற்படைகளோடு கூடிய மதிலினை யும் [உடையது மதுரை] என்பது கருத்து.

விசேடவுரை :—கற்படை - சுவரின் கல்வைப்பு.

அடிகள் 353-356:—மதுரையின் வாயில் கூறும்.

தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
355 மழையாடு மலையி னிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்

பதவுரை:—(355) மழை ஆடும் மலையின் நிவந்த மாடமொடு-மேகமுலாவும் மலைபோலே ஓங்கின மாடத்தோடே,(353) அணங்கு உடை நெடு நிலை-தெய்வத்தை யுடைத்தாகிய நெடிய நிலையினை யும், (354) நெய் பட கரிந்த திண் போர் கதவின்-நெய் பலகாலு மிடுதலாற் கருகின திண்ணிய செருவினையுடைய கதவினையும், (356)வையை அன்ன வழக்கு உடை-வையையாறு இடைவிடாது ஓடுமாறுபோன்ற மாந்தரும் மாவும் இடையறுமல் வழங்குதலை யுடைய, (353) தொல் வலி நிலைஇய (356) வாயில்-பழையதாகிய வலி நிலைபெற்ற வாயிலினையும்; (எ-று.)-உடையது (699) மதுரை என முடியும்.

(355) மாடத்தோடே (353) நிலையினையும் (354) கதவினையும் (356) வழக்கினையும் உடைய வாயில் என இயையும்.

342-முதல் 356-வரை தொகுதிப்பட்ட முடிபு:—(342) பெரும்பாணி ருக்கையினையும் (351) கிடங்கினையும் (352) புரிசையினையும் (356) வாயிலினையும் உடையது (699) மதுரை என்க.

கருத்துரை:—ஓங்கின மாடத்தோடே தெய்வத்தையுடைத்தாகிய நெடிய நிலையினையும், நெய் பலகாலுமிடுதலாற் கருகின திண்கதவினையும், வையையாறு இடையறாது ஓடுமாறுபோல மக்களும் மாவும் இடையறாது வழங்குதலையுடைய தொல்வலி நிலைபெற்ற வாயிலினையும் [உடையது மதுரை] என்பது கருத்து.

விசேடவுரை:—போர்க்கதவு-பலகைகள் தம்மிற் சேர்தலையுடையகதவு. கலித்தொகையிலும்(செ-90)'போரார் கதவம்'என்பதற்கு'பலகைபொருந்தநிறைந்தகதவம்' என நச்சினார்க்கினியர்உரை கூறியுள்ளார்.பொருத-கிட்டுதலமைந்தஎன்றபடி.நெடுநல்வாடையிலும் போரமைபுணர்ப்பின் நெடுநிலைஎன்பதற்கு-பல மரங்களும் தம்மிற் கிட்டுதலமைந்த கூட்டத்தினையுடைய நெடுநிலை என்றது உரை. ஆகலின், செருவினையுடைய கதவு என்பதற்கு-கிட்டுதலமைந்த கதவு என்பதே உரை. வாயிலில் தெய்வம் உறையுமாகலின், அதற்கு நெய்யணிதலுமுண்டு. இதனை 'ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை' (நெடுநல்: 86) என்பதனானுணரலாம். 'கோபுரமன்றி வாசலை மாடமாகவும் சமைத்தலின் மாடமென்றார்' என்பர் நச்சினார்க்கினியர்.

அடிகள் 357-364:—மதுரையின் அகநெடுந்தெருவினைக் கூறும்.

> வகைபெற வெழுந்து வான மூழ்கிச்
> சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
> யாறுகிடந் தன்ன அகனெடுந் தெருவில்
> பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப
> மாகா லெடுத்த முந்நீர் போல
> முழங்கிசை நன்பணை யறைவனர் நுவலக்
> கயங்குடைந் தன்ன இயந்தொட் டிமிழிசை
> மகிழ்ந்தோ ராடுங் கலிகொள் சும்மை

பதவுரை:—(357) வகைபெற எழுந்து வானம் மூழ்கி (358) சில் காற்று இசைக்கும் பல் புழை நல் இல்-கூறுபாடாகிய பெயர்களைத் தாம் பெறும்படி யுயர்ந்து ஆகாயத்து ஓங்கித் தென்றற் காற்று ஒலிக்கும் பல சாளரங்களையுடைய நன்றாகிய வீடுகளையுடைய, (359) யாறு கிடந்தன்ன அகல் நெடு தெருவில்-யாறு கிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருக்களிலே, (360) பல் வேறு குழாஅத்து இசை எழுந்து ஒலிப்ப-[நாளங்காடியிற் பண்டங்களைக் கொள்ளும்] பல சாதியாகிய பாஷை வேறுபாட்டையுடைய மக்களின் திரளிடத்து ஓசைமிக்கு ஒலிக்க, (361) மா கால் எடுத்த முந்நீர் போல(362) முழங்கு இசை நல் பணை அறைவனர் நுவல-பெருமையையுடைய காற்றெடுத்த கடலொலிபோல முழங்கும் ஓசையையுடைய நன்றாகிய முரசைச் சாற்றினராய் விழவினை நாட்டிலுள்ளார்க்குச் சொல்ல, [அவ்வொலிகளாலே ஆர்த்திருத்தலோடு], (363) கயம் குடைந்தன்ன இயம் தொட்டு இமிழ் இசை (364)மகிழ்ந்தோர் ஆடும் கலி கொள் சும்மை-நீர்நிலை

யைக் கையாற் குடைந்து விளையர்டுந் தன்மையவாக[விளையாடுங் கால் நீர்மேற் பலவோசைகளைப் பிறப்பிப்பதுபோல] வாச்சியங் களைச் சாற்றலான் முழங்கின ஓசையைக் கேட்டு மகிழ்ந்தவர்க ளாடுஞ் செருக்கினைக் கொண்ட ஆரவாரத்தினையும் [உடையது மதுரை] (எ-று.)

(360) ஒலிப்ப (362) நுவல (364) கலிகொள் சும்மையுடைய தாய் (358) நல்லில் உடைய (359) அகனெடுந்தெரு என முடிக்க.

கருத்துரை:—பல கூறுபாடுகளைக்கொண்டு மேலோங்கித் தென்றற்காற்றொலிக்கும்படி சாளரங்கள் பலவற்றையுடைய வீடுகளையுமுடைய,தாய் யாறு கிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருக்களில் நாளங்காடியிற்பண்டங்களைக் கொள்ளவும் விற்கவும் பலசாதியினராய பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள்திரண்டு ஒலிக்கின்றனர்; கடலொலிபோல முழங்கும் முரசையறைந்து விழவினை நாட்டிலுள்ளார்க்குத் தெரிவிக்கும் ஓசை ஒலிக்கின் றது; நீர்நிலையில் நீரைக் கையாற் குடைந்து விளையாடுங்கால் பல ஓசைகளைப் பிறப்பிப்பது போல வாச்சியங்களைச் சாற்றலான் முழங்கின ஓசையைக் கேட்டு மகிழ்ந்து ஆடும் செருக்கினைக் கொண்ட ஆரவாரத்தினையுமுடையது அம் மதுரை என்பது கருத்து.

விசேடவுரை:—மண்டபம் கூடம் தாய்க்கட்டு அடுக்களை யென் றாற்போலும் பெயர்களைப் பெறுதலின் 'வகைபெறவெழுந்து' என்றார். [தாய்க்கட்டு-வீட்டின் நடுப்பகுதி.] வானம் மூழ்கி-தேவ ருலகிலே சென்று என்றார் நச்சினார்க்கினியர் வீடுகளின் மிக்க வுயர்ச்சி தெரித்தற்கு. இருகரையும்போல இரண்டுபக்கத்து மனைகளும்; யாற்றைப்போல அகன்ற நீடிய தெருவும் இருத்த லின், 'யாறு கிடந்தன்ன அகனெடுந் தெரு' என்றது. 'யாறெனக் கிடந்த தெரு' என்றது மலைபடுகடாம் (வரி: 481). நாளங்காடி-காலைக்கடை. சோனகர் யவனர் போன்ற பலதேயத்தினராய வாணிகமாக்கள் திரண்டு பல மொழிகளிலும் பேசுதலின், 'பல் வேறு குழாஅத்து இசையெழுந்தொலிப்ப' என்றார். முரசு கொட்டி விழவினை நாட்டிலுள்ளார்க்குத் தெரிவித்தல் மரபு. 'அறைவன நுவல' என்று பாடமாயின், அறையப்படுவனவாய் விழாவைச் சொல்ல என்க. முந்நீர்-ஆக்கல் அளித்தல் அழித் தல் என்னும் மூன்று தன்மையுடையது: கடல். கயத்து நீரைக் கையாற் குடைந்து விளையாடும்போது, நீரில் வாத்திய ஓசைகளை யுண்டாக்கலை, "அருவி நுகரும் வானர மகளிர்.....குடைதொ றும், தெரியிமிழ் கொண்ட நும் இயம்போல் இன்னிசை" என்ற மலைபடுகடாத்தாலும் (வரி: 294-96) அறிக. மற்றும், சிந்தாமணி குணமாலையாரிலம்பகத்துச் செய்யுள் 115-இன் உரையில் 'ஆட வர், ஓவாராய்த் தண்ணுமை முதலியவற்றினோசைகளையும் பிறவும் எண்ணிய வாச்சியங்களினோசைகளையும் விரலினாலும்

அகங்கையினாலும் புறங்கையினாலும் தெறித்தும் கொட்டியும் குடைந்தும் இசையும்படி நீரிலே பிறப்பித்து' என்று நச்சினார்க்கினியர் கூறுதலும் நோக்கத்தக்கது.

இலக்கணக்குறிப்பு.—முந்நீர்-கடலுக்குப் பண்புத்தொகையன் மொழி; அறைவனர் —வினையெச்சம். சும்மை-உரிச்சொல்.

அடிகள் 365-374:—மதுரையிடத்துள்ள பலவகைக் கொடிகள் கூறும்.

ஓவுக்கண் டன்ன இருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கின் அருவியி னுடங்க

பதவுரை:— (365) ஓவு கண்டன்ன இரு பெரு நியமத்து - சித்திரத்தைக் கண்டாற்போன்ற கண்ணுக்கு இனிமையை யுடைய இரண்டாகிய பெரிய அங்காடித் தெருவில், (372) கள்ளின் களி நவில் கொடியொடு - கள்ளினது களிப்பு மிகுதியைச் சாற்றுகின்ற கொடியோடு, (366) சாறு அயர்ந்து எடுத்த உருவம் பல் கொடி - கோயில்களுக்கு விழாக்களை நடத்திக் கட்டின அழகினையுடைய பல கொடிகளும், (367) வேறு பல் பெயர ஆர் எயில் கொள கொள - வேறுபட்ட பல பெயர்களையுடையவாகிய அழித்தற்கரிய அரண்களைத் தண்டத்தலைவர் அரசனேவலாற் சென்று கைக்கொள்ளக் கைக்கொள்ள, (368) நாள் தோறு எடுத்த நலம் பெறு புனை கொடி - அவர்களின் அவ் வெற்றிக்கு (சின்னமாக மதுரையில்) நாடோறுமெடுத்த நன்மையைப் பெற்ற சயக்கொடியும், (369) நீர் ஒலித்தன்ன நிலவு வேல் தானையொடு - கடலொலித்தாற்போன்ற நிலைபெறுதலையுடைய வேற்படையோடே சென்று, (370) புலவுபட கொன்று மிடை தோல் ஓட்டி - பகைவரைப் புலால் நாற்றமுண்டாகக் கொன்று பின்னர் அணியாய் நின்ற யானைத்திரளையுங் கெடுத்து, (371) புகழ் செய்து எடுத்த விறல் சால் நல் கொடி - தமக்குப் புகழை யுண்டாக்கி எடுத்த வெற்றியமைந்த நன்றாகிய கொடியும், (372) நல் பல (373) பல் வேறு குழூஉ கொடி-நன்றாகிய பலவற்றினாலே பலவாய் வேறுபட்ட திரட்சியையுடைய கொடிகளும், பதாகை - பெருங் கொடிகளும், நிலைஇ-நிலைபெற்று, (374) பெரு வரை மருங்கின் அருவியின் நுடங்க - பெரிய மலையிடத்து அருவி யசையுமாறு போல அசைய, [இலங்குவது மதுரை]; (எ-று.)

(365) இருபெரு நியமத்து (372) களிநவில் கொடியொடு (366) பல்கொடி (368) புணைகொடி (371) நன்கொடி (373) குழூஉக் கொடி, பதாகை ஆகியவை நிலைஇ [அனைத்தும்] (374) அருவி யின் நுடங்க என முடிக்க.

கருத்துரை:— இருகூறுபட்ட பெரிய அங்காடித் தெருவில் கள் விற்றலைத் தெரிவிக்கும் கொடிகளோடு கோயில்களுக்கு விழாக்களை நடத்திக்கட்டின பல கொடிகளும், சேனைத்தலைவர் அரசனேவலாற் சென்று அரண்களைக் கைப்பற்றிய அவ் வெற்றிக்குச் சின்னமாக நாடோறும் எடுத்த சயக்கொடிகளும், பகைவர்மேல் வேற்படையோடு சென்று அவரைக் கொன்று அவர் யானைத்திரளையும் கெடுத்துத் தம் புகழ்க்கு அறிகுறியாக எடுத்த வெற்றிக் கொடிகளும், இன்னும் பலவாய் [கல்வி, கொடை, தவம் முதலியவற்றால்] வேறுபட்ட திரட்சியையுடைய கொடிகளும், பதாகைகளும் [பெருங்கொடிகளும்] நிலைபெற்று மலையிடத்து அருவியசைவதுபோல அசையப்பெற்றது மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடலாகிய மதுரை என்பது கருத்து.

விசேடவுரை:— ஓவு-ஓவியம். நியமம்-அங்காடித் தெரு, கடைத் தெரு. இச் சொல் இப் பொருளதாதலை 'திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து மாடமலி மறுகிற் கூடல்' (திருமுருகு-70-71) என்றவிடத்தும் காண்க. இந்த அங்காடித்தெரு நாளங்காடி, அல்லங்காடியாகிய இரு கூற்றை யுடைத்து. இதனைமேல் 'நாளங்காடி நனந்தலைக் கம்பலை' (430), 'அல்லங்காடி யழிதரு கம்பலை' (544) என வருதலாலும் தெளியலாம். நாளங்காடி-காலைக்கடை; அல்லங்காடி - மாலைக்கடை. அங்காடியிற் பலவகைக் கொடிக ளிருத்தலை "கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும், மாலைச்சேரி" (சிலப்: 6: 132-3), "பகலங் காடியிற் பல்லவ ரெடுத்த, பல்வேறு கொடியும் படாகையும் நிரைஇ" (பெருங்: 2: 6: 20-21) என்பவற் றாலும் அறியலாம். விழாத் தொடக்கத்துக் கோயில்களில் கொடி யேற்றஞ்செய்தல் இன்றும் மரபிலுளது. "விழவரு வியலா வணத்து, மையறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய, மலரணி வாயிற் பலர்தொழு கொடி" என்றது பட்டினப்பாலையும். 'சாறயர்ந் தெடுத்த கொடி' என்றதன்மூலம் மருதனார் அறங் கூறினார். இனி, 'ஆரெயில் கொளக் கொள எடுத்த கொடி' என்றதன் மூலம் மருதனார் புறத்துழிஞைப்போர் கூறினார். மற்றும், 'வேல்தானையொடு சென்று [பகைவரைக்] கொன்று தோல் ஓட்டிப் புகழ்செய்தெடுத்த விறல்சால் நன்கொடி' என்றதன்மூலம் மருதனார் தும்பைப்போர் கூறினார். இந்நயம் நச்சினார்க்கினியர் கண்டது. வெற்றிக்கு அறிகுறியான வெல்கொடியை உயர வெடுத்தலை "வென்று பிறர், வேண்டுபுலங் கவர்ந்த ஈண்டு பெருந் தானையொடு, விசய வெல்கொடி யுயரி வலனேர்பு" என்ற முல்லைப்பாட்டாலும் அறிக. கள்விற்பேர் கடையிற் கொடி கட்டுதலை 'நறவு நொடைக் கொடியொடு' (பட்டின: 180), "கட்

கொடி நுடங்கும் ஆவணம் புக்கு" (பதிற் : 68), 'நெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகில்' (அகநா: 126) என்பவற்றாலுமறிய லாம். 'நன் பல கொடி' என்றதால் கல்வி, கொடை, தவம் முதலியவற்றைக் குறித்து எடுத்த கொடிகள். கல்விக்குக் கொடி கட்டுதலை "பல் கேள்வித் துறைபோகிய, தொல்லாணை நல்லாசிரியர், உறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடி" என்ற பட்டினப்பாலையாலும், கொடைக்குக் கொடி கட்டுதலை "தியாகக் கொடியொடும் ஏற்பவர் வருகென்று நிற்ப" என்ற வீரராஜேந் திரதேவர் மெய்க்கீர்த்தியாலும் தெளியலாம். கொடைக்குக் கட்டும் கொடியைத் தியாகக் கொடி என்பர். தவத்திற்குக் கொடி கட்டுதலை வந்துழிக் காண்க. பதாகை-பெருங்கொடி. பல கொடி களும் அருவிபோல நுடங்குதலை, அருவி பல கொடிகள்போல் நுடங்கும் என்ற திருமுருகாற்றுப்படையாலும் அறியலாம்; 'வேறுபல் துகிலின் நுடங்கி......இழுமென இழிதரும் அருவி' என்றது திருமுருகு. (296...316).

அடிகள் **375-406**:—மதுரையிடத்து நால்வகைப் படைகளும் பல்காலும் வருவனவும் மீள்வனவுமாய் இருத்தலாலே, பண்டம் விற்போர் பூ பூமாலை சுண்ணம் பாக்கு வெற்றிலை சுண்ணம்பு விற்போர் ஆகியவர்கள் அஞ்சி ஏங்கு வனராயிருந்து அவைநீங்கிய பிறகு மாடநிழலிலே தங்கியிருந்தலைக் கூறும்.

பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்குபிணி நோன்கயி றரீஇ யிதைபுடையூக்
கூம்புமுதன் முருங்க எற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல
இருதலைப் பணில மார்ப்பச் சினைஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணது காழ்சாய்த்துக்
கந்துநீத் துழிதருங் கடா யானையும்
அங்கண்மால் விசும்பு புதைய வளிபோழ்ந்து
ஒண்கதிர் ஞாயிற் றூறளவாத் திரிதரும்
செங்கா லன்னத்துச் சேவ லன்ன
குருஉமயிர்ப் புரவி யுராலிற் பரிநிமிர்ந்து
காலெனக் கடுக்குங் கவின்பெறு தேரும்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின்
அடிபடு மண்டிலத் தாதி போகிய
கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்
வேழத் தன்ன வெருவரு செலவிற்
கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமும்
அரியவும் பெரியவும் வருவன பெயர்தலின்
தீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர்
பூந்தலை முழவி னேன்றலை கடுப்பப்

பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகுபு இடித்த தாதுகு சுண்ணத்தர்
தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்
நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றினர்
இருதலை வந்த பகைமுனை கடுப்ப
இன்னுயி ரஞ்சி யின்னா வெய்துயிர்த்து
ஏங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்
மலைபுரை மாடத்துக் கொழுநிழல் இருந்தர

பதவுரை:— (394) அரியவும் பெரியவும்-ஈண்டுப் பெறுதற்கு அரியனவுமாய் அவைதாம் சிறிதின்றி மிகவுள்ளனவுமாய், (405) பல் வேறு பண்ணியம் தழீஇ திரி விலைஞர் - பலவாய் வேறுபட்ட பண்டங்களைத் தம்மிடத்தே சேர்த்துக்கொண்டு திரிகின்ற விற்பாரும், (395) தேம்புழல் வல்சி (396) பூ தலை (395) கழல் கால் மழவர் (396) முழவின் நோன் தலை கடுப்ப (397) பிடகை பெய்த கமழ் நறு பூவினர் - இனிய பண்ணியாரங்களாகிய உணவினையும் பொற்பூக்களையுடைய தலையினையும் வீரக்கழலணிந்த காலினையும் உடைய மழவர் முன்கொட்டும் வீரமத்தளத்தினது வலிய கண்ணை யொக்க உருண்ட பூந்தட்டிலே இட்டுவைத்த மிகவும் நாறுகின்ற நறிய பூவினையுடையாரும், (398) பல வகை விரித்த எதிர் பூ கோதையர் - பலவகையாக விரித்து வைத்த ஒன்றற் கொன்று மாறுபட்ட பூமாலைகளையுடையாரும், (399) பலர் தொகுபு இடித்த தாது உகு சுண்ணத்தர் - இடிக்கவல்லார் பலரும் திரண்டு இடித்த பூந்தாதுக்கள்போலப் பரக்குஞ் சுண்ணத்தையுடையாரும், (400) தகைசெய் தீ சேறு இன் நீர் பசு காய் (401) நீடு கொடி இலையினர் - உடம்பிற்கு அழகைக் கொடுக்கும் இனிய கருங்காலி சீவிக் காய்ச்சின களிக் கலந்த இனிய நீரினையுடைய பசியபாக்குடனே வளர்ந்த கொடியின்ற வெற்றிலையினையுடையாரும்; கோடு சுடு நூற்றினர் - சங்கு சுடுதலா லுண்டான சுண்ணாம்பையுடையாரும்,—(375) பனிமீன் வழங்கும் வளை மேய் பரப்பின் - பனிமீன் என்னுஞ் சாதி உலாவுஞ் சங்கு மேய்கின்ற கடலிடத்தே, (376) வீங்கு பிணி நோன் கயிறு அரீஇ- இறுகும் பிணிப்பினையுடைய வலியினையுடைய பாய்கட்டின கயிற்றையறுத்து, இதை புடையூ-பாயையும் பீறி, (377) கூம்பு முதல் முருங்க எற்றி-பாய்மரம் அடியிலே முறியும்படி அடித்து, (378) கடு காற்று (377) உடன் காய்ந்து (378) எடுப்ப-கடியகாற்று நாற்றிசையினும் சேரக்கோபித்து எடுக்கையினாலே, (378) கல் பொருது உரைஇ-நங்கூரக்கல் கயிற்றுடனே நின்றுபொருது உலாவி, (379) நெடு சுழி பட்ட நாவாய் போல-நெடிய சுழியிலே அகப்பட்டுச் சுழலாநின்ற மரக்கலத்தைபொக்க, (380) சினம் சிறந்து-கோபம்மிக்கு, (381) கோலோர் கொன்று மேலோர் வீசி-

பரிக்கோற்காரரைக் கொன்று பாகரை வீசிப்போகட்டு, (382) மெல் பிணி வல் தொடர் பேணாது காழ் சாய்த்து-மெல்லிய பிணிப்பினையுடைய வலிய நீர்வாரி யென்று காலிற்கட்டுஞ் சங்கிலியை நமக்குக் காவலென்று பேணாதே அதுகட்டின தறியை முறித்து, (383) கந்து நீத்து-கம்பத்தைக் கைவிட்டு, (380) இரு தலை பணிலம் ஆர்ப்ப-முன்னும் பின்னுஞ் சங்கொலிப்ப, (383) உழிதரும் கடாம் யானைஉம்-சுழலும் மதத்தையுடைய யானையும்,- (384) அம் கண் மால் விசும்பு புதைய வளிபோழ்ந்து-அழகிய இடங்களைத் தன்னிடத்தேயுடைய பெரிய ஆகாயம் மறையக் காற்றைப் பிளந்து, (385) ஒள் கதிர் ஞாயிறு ஊறு அளவா திரிதரும் (386) செங்கால் அன்னத்து சேவல் அன்ன-ஒள்ளிய கிரணங்களையுடைய ஞாயிற்றைத் தாம் சேர்தலை நெஞ்சாலே கருதிக்கொண்டு பறக்குஞ் சிவந்த காலையுடைய அன்னத்தினது சேவலையொத்த, (387) குரூஉ மயிர் புரவி உராலின்-நிறவிய பல மயிர்களையுடைய குதிரைகள் ஓடுதலின், பரி நிமிர்ந்து-செலவு மிக்கு, (388) கால் என கடுக்கும் கவின் பெறு தேர்உம்-காற்றெனக் கடுக ஓடும் அழகினைப் பெறுகின்ற தேரும்,(389) கொண்டகோலன்கொள்கை நவிற்றலின்-கையிலேயெடுத்தமத்திகையையுடைய வாசிவாரியன் ஐந்து கதியையும் பதினெட்டுச் சாரியையும் பயிற்றுகையினாலே, (390) அடிபடு மண்டிலத்து ஆதி போகிய-குரங்களழுந்தின வட்டமான இடத்திலும் ஆதியென்னுங் கதியிலும் ஓடின, (391) கொடி படு சுவல இடு மயிர் புரவிஉம்-ஒழுங்குபடும் கேசாரியையுடையனவாக இட்டவாசங்களையுடைய குதிரைகளும், (392) வெருவரு வேழத்து அன்ன செலவின் (393) இரு செரு மயக்கம் கள் ஆர் களமர்உம்-அச்சந்தோன்றுகின்ற யானையையொத்த போக்கினையும் தம்மிற் பெரிய போரைச் செய்யும் கலக்கத்தினையும் உடைய கள்ளினையுண்ணும் வீரர்களும், [ஆகிய நாற்படையும்],(394) வருவன பெயர்தலின்-பல்காலும் வருவனவாய் மீளுகையினாலே,—(402) இரு தலை வந்த பகை முனை கடுப்ப-இரண்டுபக்கத்தானும் படை வந்த பகைப்புலத்தையொக்க, (403) இன் உயிர் அஞ்சி (404) ஏங்குவனர் இருந்து-தம்முடைய இனியவுயிருக்கு அஞ்சி ஏங்குவாராயிருந்து, அவை நீங்கியபின்றை (403) இன்னா வெய்து உயிர்த்து-அந்நாற்படையும் போனபின்னர் அவற்றானெய்திய பொல்லா வெப்பத்தைப் போக்கி, [அதாவது, அச்சத்தால் நெஞ்சிற் பிறந்த வருத்தத்தைப் போக்கி], (406) மலை புரை மாடத்து கொழு நிழல் இருத்தர-மலையையொக்கும் மாடங்களிடத்துக் குளிர்ந்த நிழலிலே இருத்தலைச் செய்ய (எ-று);—அங்ஙன் இருத்தருகையினால் எழுந்த (430) நாளங்காடிக்கம்பலை (427- 8)விழவின் எழுநாளந்தியில் நாடார்த்தது போலும் என மேல்இயையும்.

(394) அரியவும் பெரியவும் (405) பண்ணியம் தழீஇத்திரிவிலைஞரும் (397) பூவினரும் (398) கோதையரும் (399) சுண்ணத்தினரும் (401) இலையினரும் நூற்றினரும் (379) நெடுஞ் சுழிப்ப[illegible]

நாவாய்போல (383) உழிதருங் கடாஅ யானையும், (388) காலெனக்கடுக்குந்தேரும் (390) ஆதிபோகிய(391)புரவியும்(392)வெருவருசெலவின் (393) இருஞ்செருமயக்கக் கள்ளார் களமரும் (394) வருவன பெயர்தலின், (402) பகைமுனை கடுப்ப (403) அஞ்சி (404) ஏங்குவனரிருந்து அவை நீங்கியபின்றை (403) இன்று வெய்துயிர்த்து (406) மாடநிழலிலே இருத்தர எனக் கூட்டி முடிக்க.

கருத்துரை:— அரியபெரிய பண்டங்களைத் தம்மிடத்துச் சேர்த்துக்கொண்டு திரிந்து விற்பவர்களும், பூந்தட்டிலேயிட்டுவைத்த நறியபூ, கட்டியபூமாலை, இடித்த சுண்ணம், பாக்கு வெற்றிலை சுண்ணும்பு இவைகளை விற்பவர்களும், மதம்பிடித்துச் சுழலும் யானைகள், காற்றெனக் கடுகிவரும் தேர்கள், ஆதியென்னுங் கதியில் ஓடிவருகின்ற குதிரைகள், தம்முட்போரிடும் களமர்கள் அடங்கிய நாற்படைகள் பல்காலும் வருவனவும் மீள்வனவுமாயிருத்தலால், அந்நாற்படைக்கும் பகைப்புலத்தையொக்க அஞ்சி ஏங்கியிருந்து, அவை போயபின்னர் வருத்தம் நீங்கி, மலைபுரை மாடங்களின் நிழலிலே தங்கியிருக்கின்றனர் என்பது கருத்து.

விசேடவுரை:— கடுங்காற்றெடுப்ப நெடுஞ்சுழிப்பட்ட நாவாய் தன்னிடத்துள்ள பாய்கட்டின கயிறுஅறுந்து பாயும்பீறிப் பாய் மரமும் முறிந்துபோய்ச் சுழலும்; அதுபோலக் கடாஞ்செருக்கிய யானை சினஞ்சிறந்து பரிக்கோற்காரரைக் கொன்று பாகரை வீசிப் போகட்டுக் காலிற்கட்டிய சங்கிலியைமுறித்துக் கட்டிய கம்பத்தையும் தள்ளிச் சுழன்று ஓடிவரும். காற்றிற்குக் கடாம் உவமிக்கப்படும் பொருள். சினஞ்சிறந்து கோலோரைக்கொன்று மேலோரைவீசிக் காழ்சாய்த்துக் கந்துநீத்து இருதலையும் பணில மார்ப்பச்சுழலுவது கடாத்தின் தொழிலாக வுரைத்துக்கொள்க. யானைக்குமுன் சங்கு ஊதிப்போதலேயன்றி, 'அது ஒருகால் திரும்பி மீண்டாலும் மீளும்' என்றுகொண்டு, அங்ஙனம் மீண்டால் ஊதுதற்கு, அதற்குப் பின்னும் சங்கு செல்லும். எனவே, "இருதலைப் பணிலம் ஆர்ப்ப" என்றது. யானைகட்டுஞ் சங்கிலியை நீர்வாரி என்பர். பனைமீன்-யானையையும் விழுங்க வல்ல ஒருவகைச் சாதிமீன். இதை-கப்பற்பாய். கல்-நங்கூரக் கல். தேவருலகம் முதலியவற்றைத் தன்னிடத்தேயுடைமையின் 'அங்கண்மால் விசும்பு' என்றார் என்றனர் நச்சினார்க்கினியர். அன்னச் சேவல் சிவந்த காலோடு மிகவுயரப் பறப்பது, ஞாயிற்றைத் தான் சேரவேண்டுமென்று நெஞ்சாலே கருதிப்பறப்பது போலும் என்கிறார். அத்தகைய அன்னச் சேவலையொத்த புரவிஎன இயையும். அன்னச்சேவலை உவமைகூறியது-புரவியும் ஆகாயத்திற் பறப்பதுபோலக் கால்களை உயரத்தூக்கி ஓடுதலா லென்க. எனவே, இந்தப் புரவிகள் பூட்டப்பட்டுள்ள தேர்கள் காற்றெனக் கடுகி ஓடிவருவனவாம். குதிரைக்கு அன்னப்புள் உவமையாதலை "நிரைபறை யன்னத் தன்ன விரைபரிப், புல்லுளைக் கலிமா" (அகநா: 234), "பானிறப் புரவி யன்னப் புள்ளெனப்

பாரிற் செல்ல" (கம்பரா: எழுச்சி: 69) என்பவற்றாலும் அறிக. தேருக்குக் காற்றை உவமைகூறியதை வரி. 51 - 52 - இலுங் காண்க. கோலன்-வாசிவாரியன். வாசிவாரியன் என்பவன்-குதிரையைத் தன்வயப்படுத்தி நடத்துவோன். இவன் ஐந்து கதியையும் பதினெட்டுச் சாரியையும் குதிரைக்குப் பயிற்றுவன் என்பர். ஐந்துகதி-ஐவகை நடை; அவை-"விக்கிதம் வற்கிதம் வெல்லுமுபகண்டம், மத்திமஞ் சாரியோ டைந்து" என்பன. விக்கிதம், வற்கிதம், உபகண்டம், ஜவம், மாஜவம் என்னுமிப் பஞ்சதாரையும் என்பர் புறப்பொருள்வெண்பாமாலை யுரையாசிரியர். ஆஸ்கந்திதம், தோரிதகம், ரேசிதம், வல்கிதம், புலுதம் எனவும்படும்; இவற்றுள், நிச்சலமாக அதிவேகமும் அதிமந்தமுமாகாமல் சமமானகதி-ஆஸ்கந்திதம்; அதனினும் அதிகமாய்ச் சதுரமான கதி-தோரிதகம்; தாளகதியுடன் வட்டமிட்ட கதி-ரேசிதம்; வேகத்தினால் முன்னங்கால்களைத் தூக்கி வரும் நடை-வல்கிதம்; அவ்வளவு வேகமாகவும் சமமாகவும்போகுகை-புலுதம், இனி, வேகமும் மெதுவுமின்றிச் சமமான நடை-ஆஸ்கந்திதம், வேகமான சமத்காரமுள்ள நடை-தௌரிதகம், கோணலில்லாத நேர்நடை-ரேசிதம், நாலுகாற்பாய்ச்சல் - வல்கிதம், குதித்துக் குதித்துப் போதல்-புலுதம் என்றும் கூறுவாருமுளர். இனி, மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வாநரகதி, விருஷபகதி என்றலும், பிறவாறு கூறுதலுமுண்டு. இவை-பஞ்சகதி யெனவும், பஞ்சதாரையெனவும்படும். சாரியை-குதிரையின் சுற்றுவரவு. ஆதி - நெடுஞ்செலவு; அதாவது, குதிரையின் நேரோட்டம். கொடி-ஒழுங்கு. கேசாரி-குதிரைக் கழுத்தின் மயிர்: 'புன்மயிர்க் கொய்சுவல்' (கலி: 96) என்பதற்கு, 'கத்திரிகையிடும் கேசாரியின் மயிரினையும்' என்ற நச்சினார்க்கினியருரை ஈண்டு நினைவு கூர்க. இடுமயிர்-இட்டவாசம்: இது குதிரைக் கழுத்தின் புறத்திலும், தலையின் சூட்டிடத்திலும் இடப்படும் கவரிமயிரைக் காட்டும். இதனை, "ஞாங்கர் மயிரணியப் பொங்கி" (புற. வெ: 90) என்ற விடத்து 'பக்கத்தே கவரியிடஎழுந்து' என்று வகுத்த உரையாலும், "முரசுடைச் செல்வர் புரவிச்சூட்டு மூட்டுறு கவரி தூக்கி யன்ன" (அகநானூறு: 156) என்ற தொடராலும் தெளியலாம். வரி 393-இல் 'இருஞ்செருமயக்கக் கள்ளார்களமரும்' என உம்மையைக் களமரோடுகூட்டி அடியேன் பொருள்கண்டது கீழ் (383) யானையும் (388) தேரும் (391) புரவியும் என்பனவற்றோடு செவ்வன் இயைந்து பொருட்பொருத்தமுற்றுச் சிறத்தல் நோக்கி. களமர்-தம்மிற் போரைச்செய்யக் களத்தே சேறலின் களமர் என்றார். இங்குக் களம்-பயிற்சிக்களம் எனினும் ஒக்கும். 'அரியவும் பெரியவும்' (394) என்பதை மேலே 'பல்வேறு பண்ணியம்' (405) என்பதனோடு கூட்டியது பொருளியைபுநோக்கி. [பண்ணியம் - பண்டங்கள்]. தீம்புழல் - இனிய பண்ணியாரம். வல்சி-உணவு. இனி, தீம்புழல் - இருப்பைப்பூவுமாம்: அஃதன்று, வல்சி - சோறு என்று பொருள்படும்: இருப்பைப் பூப்போன்ற வெள்ளிய சோறு என்றபடி: இது, வழக்கில்

இன்றும் உளது என்ப. 'வல்சிப்பூந்தலைக் கழற்கால்மழவர்' என உம்மைத்தொகைபடக் கூட்டப்பட்டது. பூந்தலை-பூத்தலை என்பதன் விகாரம். மழவர்-சில வீரர். மேல் 687-ஆம் வரியிலும் இப்பொருளதாதல் காண்க. "உருவக் குதிரை மழவரோட்டிய" என்றது அகமும் (அகநா: 1). நோன்றலை - வலியகண். தலை-இடம்: ஈண்டு, முழவின் கண்ணைக்காட்டியது. அக் கண்ணையொக்க உருண்ட பிடகை என்றபடி. 'கடுப்ப என்னும் செயவெனெச்ச உவமவுருபிற்கு 'உருண்ட' என ஒருசொல் வருவிக்க' என்றார் நச்சினார்க்கினியர். கடுப்பவுருண்ட பிடகை என இயையும். இனி, சிலர் "வீரமுரசின் கண்ணிறைய மலர்களைக் குவித்து வைத்தாற்போன்று கூடைநிறைய மலரைக் குவித்துவைத்தனர்" எனப் பொருள்கூறிக் 'கடுப்பப் பெய்த' என இயைத்தனர். ஈண்டு, தொழிலுவமம் பேசப்படவில்லை, வடிவுவமையே பேசப்படுவதென்பதை 'நோன்றலைகடுப்ப' என்றவிடத்துக் கூர்ந்தறிதல் வேண்டும். அதனாற்றான் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் 'உருண்ட' என ஒருசொல் வருவித்துப் பொருள்காணச் சொல்கிறார். தாது-பூந்தாதுக்கள்; நீறுமாம். 'பலர்தொகுபு இடித்த' என்றது—நவமணிகளும், பொன்னும் சந்தனமும், கருப்பூர முதலியனவும் புழுகிலும் பனிநீரிலும் நனையவைத்திடித்தலின், இடிக்க வல்லவர் பலரும் வேண்டிற்று என்பதுபட. இங்ஙன் கூறினர் நச்சினார்க்கினியர். சேறு-கருங்காலி மரத்தைச்சீவி ஊறவைத்துக் காய்ச்சின செங்களி. [களி-குழம்பு]. இந்தக் களியைப் பாக்கோடு கலப்பர்; எனவே, களிப்பாக்கு ஆகும். "அங்கருங் காலி சீவி யூறவைத் தமைக்கப்பட்ட, செங்களி விராய காயும்" என்றார் தேவரும் (சிந்: 2473). "பைங்கருங் காலிச் செங்களி யளைஇ, நன்பகற் கமைந்த வந்துவர்க் காயும்" என்றது பெருங்கதை. பூவினர், கோதையர், சுண்ணத்தர், பசுங்காய் இலையினர், நூற்றினர் இவர்களை விதந்தெடுத்தது, மதுரைமாநகரின் இன்பவளம் தெரித்தற்கு. நூறு-சுண்ணாம்பு. 'கைசெய்து கமழு நூறும் காழ்க்கும் வெள்ளிலையும்' என்றார் தேவரும் (சிந்: 2474).

அடிகள் **407 - 423**:—மதுரையிடத்து வனப்புமிக்க இளம்பெண்டிர் இளையோருடனே திளைக்கும்படி தொன்முதுபெண்டிர் பண்ணியம்பூவொடு ஏந்தி மனைகடோறும் மறுகுதல் கூறும்.

இருங்கடல் வான்கோடு புரைய வாருற்றுப்
பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்கண்
ஐஇய கலுழு மாமையர் வையெயிற்று
வார்ந்த வாயர் வணங்கிறைப் பணைத்தோட்

சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத்
தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை
மையுக் கன்ன மொய்ம்பிருங் கூந்தல்
மயிலிய லோரும் மடமொழி யோரும்
கைஇ மெல்லிதின் ஒதுங்கிக் கையெறிந்து
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்பப்
புடையமை பொலிந்த வகையமை செப்பிற்
காம ருருவிற் றாம்வேண்டு பண்ணியம்
கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக

பதவுரை:—(*407*) இருகடல் வான் கோடு புரைய-கரிய கடலில் வெள்ளிய சங்கை யொக்க, வாருற்று (*408*) பின்னிட்ட வால் பெரு நரை கூந்தலர் - கோதிப் பின்னே முடித்துப்போகட்ட வெள்ளிய பெரிய நரைமயிரினையுடையராகிய, (*409*) தொல் முது பெண்டிர்-பழமைமூத்த பெண்டிர்,—நன்னர் நலத்தர் - நன்றாகிய வனப்பினையுடையராய், (*410*) செ நீர் பசும்பொன் புனைந்த பாவை (*411*) செல் சுடர் பசு வெயில் தோன்றியன்ன (*412*) செய்யர் - சிவந்த தன்மையினையுடைய கிளிச்சிறையென்னும் பொன்னாற்செய்த பாவை வீழ்கின்ற கிரணங்களிட்டுண்டாம் பசிய வெயிலிடத்தே தோன்றினாற்போன்ற சிவந்த நிறத்தினை யுடையராய், மட கண் செயிர்த்த நோக்கினர் - மடப்பத்தினை யுடைய கண்கள் ஆடவர்க்கு வருத்தத்தைச் செய்த பார்வை யினையுடையராய், (*413*) ஐஇய கலுழும் மாமையர்-வியப்பினை யுடையவாய் நோக்கினோர் கலங்குதற்குக் காரணமான மாமை நிறத்தினையுடையராய், (*414*) வார்ந்த (*413*) வை எயிறு (*414*) வாயர்-நேரிதாகிய கூரிய பற்களையுடைய வாயினையுடையராய், வணங்கு இறை பணை தோள்-வளைந்த சந்தினையுடைய மூங்கில் போலும் தோளினையும், (*415*) வயக்குறு வந்திகை - விளக்க முற்றிய கைவந்தியினையும், (*416*) தொய்யில் பொறித்த (*415*) சோர்ந்து உகுவன்ன (*416*) சுணங்கு எதிர் இள முலை-தொய்யி லால் வல்லியாக எழுதின நெகிழ்ந்துசிந்துமாறுபோன்ற சுணங்கு தோற்றிய இளையமுலையினையும், (*417*) மை உக்கன்ன மொய் இரு கூந்தல்-மையொழுகினாற்போன்ற செறிந்த கரிய மயிரினையும் உடைய, (*418*) மயில் இயலோர்உம் மடமொழியோர்உம்-மயிலின் தன்மையையுடையோரும் மடப்பத்தையுடைய வார்த்தையினை யுடையோரும், (*419*) கைஇ மெல்லிதின் ஒதுங்கி கையெறிந்து - தம்மைக் கோலஞ்செய்து மெத்தென நடந்து கையைத் தட்டி, (420 கல்லாமாந்தரொடுநகுவனர்திளைப்ப-காமநுகர்ச்சியினையன்றி வேறொன்றையுங் கல்லாத இளையோருடனே மகிழ்ந்தனராய்ப் புணரும்படி,—(*421*) புடை அமை செப்பில்-புடைபடுதலமைந்த செப்பிடத்திலும், பொலிந்த வகை அமை செப்பில்-பொலிவு பெற்ற கூறுபாடமைந்த செப்பிடத்திலும், (422) காமரு உருவின் தாம் வேண்டு பண்ணியம் - விருப்பம் மருவிய வடிவினை

யுடைய நுகர்வார் தாம்விரும்பும் நுகர்பொருள்களை, (423) கமழ் நறு பூவொடு மனை மனை மறுக-மிகவும் வாசனைவீசும் நறிய பூவுடனேயேந்தி மனைகள்தோறும் உலாவிநிற்க; (எ-று)'— அங்ஙன் மறுகுதலினால் எழுந்த (430) நாளங்காடிக்கம்பலை (427-28) விழவின் எழுநாளந்தியில் நாடார்த்ததுபோலும் என மேல் இயையும்.

(409)நலத்தாராய்ச்(412) செய்யராய் நோக்கினராய்(413) மாமையராய் (414) வாயராய்த் தோளினையும் (415) வந்திகையினையும் (416) முலையினையும் (417) கூந்தலினையும் உடைய (418) மயிலியலோரும் மடமொழியோரும் (419) கைஇ ஒதுங்கிக் கையெறிந்து (420) மாந்தரொடு திளைக்கும்படி (409) தொன்முதுபெண்டிர் (421) செப்பில் (422) பண்ணியத்தைப் (423) பூவோடே ஏந்தி மனைமனைமறுக எனக் கூட்டிமுடிக்க.

கருத்துரை:— கரிய கடலில் வெள்ளிய சங்கையொப்பக் கரிய தலையில் வெள்ளிய நரைமயிர் முடிச்சினையுடைய தொன்முது பெண்டிரானவர்கள், நல்வனப்பினையும் கிளிச்சிறை யென்னும் பொன்னாற் செய்த பாவை மாலையந்திப்போதின் பசுவெயிலிடத்தே சிவந்து தோன்றினாற்போன்ற சிவந்த நிறத்தினையும், கண்டோர் வியப்புற்றுக் கலங்குதற்குக் காரணமான மாமை நிறத்தினையும், நேரிதாய்க்கூரிய பற்களையுடைய வாயினையும், மூங்கில்போலும் தோளினையும், விளக்கமுற்ற கைவந்தியினையும், சுணங்கு தோற்றிய இளைய முலையினையும், மையுக்கன்னகரிய கூந்தலினையும், மயிலியலினையும், மடமொழியினையும் உடையராய இளம்பெண்டிர் தம்மைக் கோலஞ்செய்துகொண்டு மெத்தென நடந்து கையைத்தட்டி யழைத்துக் காமநுகர்ச்சியன்றி வேறொன்றையுங் கல்லாத இளையோருடனே மகிழ்ந்தனராய்ப் புணரும்படி, அவர்விரும்பும்நுகர்பொருள்களைச்செப்புகளிலிட்டுக்கொணர்ந்து நறியபூவுடனேயேந்தி மனைகள்தோறும் உலாவிநிற்பர் என்பது கருத்து. [காதலர் காதலியர் விரும்பி நுகரும்பொருள்களைச் செப்புகளில் கொணர்ந்து நறியபூவுடனே மனைகடோறும் சென்று விற்று உலாவுவர் தொன்முதுபெண்டிர் என்றபடி.]

விசேடவுரை:—'நன்னர் நலத்தர்' என்பது மயிலியலோருக்கும் மடமொழியோருக்கும் அடை. நலம்-வனப்பும் இன்பமும் ஆதலின் இங்ஙன் கூட்டியது. (408) பெருநரை யென்றும் (413-14) வார்ந்த வை எயிறு என்றும்(415-16)சோர்ந்துகுவன்ன சுணங்குஎன்றும்பிரித்துக்கூட்டிப்பொருளுரைத்தது பொருத்தம் நோக்கி. செந்நீர்ப் பசும்பொன்-நால்வகைப் பொன்னுட் கிளிச்சிறை யென்பது. நால்வகைப்பொன்-சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்பன. இவற்றுள், மாற்றுனுயர்ச்சி பெற்ற பசியபொன் கிளிச்சிறை என்பர் அடியார்க்குநல்லார். மற்றும்,மாலைக்காலத்துப் பச்சைவெயில் பரத்தலையும் அடியார்க்கு

நல்லார் குறித்துள்ளார்: அவர் 'இக்காலத்து இதனைக் கார்டு கிழாள் வெயிலென்ப' எனவும் குறித்துள்ளார் (சிலப்: 4. 5-8). 'தாவி னன்பொன் றைஇய பாவை, விண்டவ ழிளவெயில் கொண்டுநின் றன்ன மிருகவின்' என்ற அகநானூறும் காண்க. 'ஐ வியப்பாகும்'. கலுழ்தல்-ஒழுகுதலுமாம். மாமைநிறம்-நாறு ரித்த ஆம்பல்தண்டுபோன்ற அழகிய நிறம்; இதனை மாமைக் கவின் என்றும் கூறுப. வந்திகை-கைவந்தி: தோளின் கீழாகக் கையில் அணியப்படும் ஆபரணம்: இது மகளிரணிவது. தொய் யில்-எழுதுங்குழம்பு.கைஇ- கைசெய்து: கைசெய்தல்-அலங்கரித் தல். வரி 421-இல், 'புடையமை வகையமை' என இருமுறை அமைதல் வந்திருத்தலின், 'புடையமை செப்பு' 'வகையமை செப்பு' என இயைத்துப் பொருள்கொண்டது.

இலக்கணக்குறிப்பு:— காமரு-காமர்+மருவு; காமர் என்பது கடைக்குறைந்து நிற்க, மருவு என்பதன் ஈற்றுமிசையுகரம் மெய் யொடுங்கெட்டு மவ்வீறு சந்தியாற் கெட்டது. இங்ஙன் கொள் ளாது, அடியார்க்குநல்லார், 'காமம் வருமென்பது விகாரத்தாற் காமருவெனநின்று கண்டார்க்கு விருப்பம் வரும் என்பதாயிற்று' என்பர். (சிலப்: 4: 40)

அடிகள் 424 - 430:—மதுரையின் நாளங்காடிக்கம்பலை விழவின் நாடார்த்த ஆரவாரத்தைப் போலிருந்தது எனக் கூறும்:

மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட எழுநா ளந்தி
ஆடுதுவன்று விழவின் நாடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாளங் காடி நனந்தலைக் கம்பலை

பதவுரை:— (424) மழை கொளக் குறையாது புனல் புக மிகாது - மேகம் முகக்கக் குறைவுபடாமல் யாறுகள் பாய்தலின் மிகுதலைச் செய்யாமல், (425) கரை பொருது இரங்கும் முந்நீர் போல-கரையைப் பொருது ஒலிக்கும் கடல்போல, (426) கொள கொள குறையாது தர தர மிகாது - பலரும்வந்து கொள்ளக் கொள்ளக் குறையாமற் பலரும் மேன்மேலுங் கொண்டுவரக் கொண்டுவர மிகாமல், [இருக்கின்ற], (429) பிறங்கிய மாடம் மலி புகழ் கூடல் (430) நன தலை நாள் அங்காடி - விளங்குகின்ற (பெரிய) நான்மாடத்தாலே மலிந்த புகழைக் கூடுதலையுடைய மதுரையில் அகற்சியை யுடைத்தாகிய இடத்தினையுடைய நாட்காலத்துக் கடையில், கம்பலை-எழுந்த ஆரவாரம்,-(428) ஆடு துவன்று விழவின் (427) எழுநாள் கழுநீர் கொண்ட அந்தி - வேறோரிடத்தில்லாத வெற்றி நெருங்குந் திருநாளினைத் தன் னிடத்தேயுடைய ஏழாநாள் தீவினையைக் கழுவுதற்குக் காரண

மான தீர்த்தநீரைத் தன்னிடத்தே கொண்ட அந்திக் காலத்தில், (428)நாடு ஆர்த்தன்றே-[அவ்விழாவிற்குத் திரண்ட] நாட்டிலுள்ளார் ஆர்த்த ஆரவாரம் போன்றிருந்தது; (எ-று.)

(425) இரங்கு முந்நீர்போல [இருக்கின்ற] (430) நாளங்காடிக் கம்பலை (428) விழவின் (427) எழுநாளந்தியில் (428) நாடார்த்தன்றே என முடிக்க. நாடார்த்தற்றே என்பது நாடார்த்தன்றே என மெலிந்தது.

கருத்துரை:— மேகம் முகக்கக் குறையாமலும் யாறுகள் பாயப் புனல்மிகாமலும் இருந்தொலிக்கும் கடல்போல், பலரும் பண்டங்களைக் கொளக் குறையாமலும் மேன்மேலும் கொண்டுவர மிகாமலும் இருக்கின்றது மதுரை நாளங்காடி: அந்நாளங்காடியில் எழுந்த பேராரவாரம், எழுநாட்கொண்ட திருவிழாவின் கடைநாளந்தியிலே தீவினைகழுவத் தீர்த்தமாடுதல் செய்யத் திரண்ட நாட்டுமக்கள் எழுப்பும் பேராரவாரத்தை யொத்திருந்தது என்பது கருத்து.

விசேடவுரை:— இரங்கு முந்நீர் - கம்பலைமிக்க நாளங்காடிக்கு உவமை. விழவுக்குக் கால்கொள்ளத் தொடங்கிய ஏழாநாளந்தியிலே தீர்த்தமாடுதல் மரபு. ஏழுநாளிற் செய்யப்பெறுந் திருவிழா 'கணம்' எனப்படும் என்ப என்று குறித்தனர் டாக்டர். உ. வே. சாமிநாதய்யரவர்கள். ஆனால், அவர் குறித்த பாடலின் படி, 'பௌவநம்' எனத் தேறுகிறது. "ஸப்தாஹோ பௌவநஸ்தத:" என்றது அஜித ஆகமமும். (உத்ஸவ விதி படலம்).

மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல் என்றதன் காரணம் வருமாறு:— ஒரு காலத்தில் வருணன் சோமசுந்தரக் கடவுளின் வல்லமையைப் பரிசோதிக்குமாறு எண்ணி ஏழு மேகங்களையும் அளவின்றி மழைபொழிந்து மதுரையையழிக்கும்படி யேவ, அங்ஙனமே வந்த ஏழுமேகங்களையும் தடுக்கும்பொருட்டு அக்கடவுளின் கட்டளையினால் அவரது சடையிலுள்ள நான்கு மேகங்களும் மேலுயர்ந்து நான்கு கூடமாகக் கூடியதனால், மதுரை, நான்மாடக் கூடலென்றும், கூடலென்றும் பெயர் பெறுவதாயிற்றென்பது. இதனை "வன்றிறல் வருணன் விட்ட மாரியை விலக்க வீசன், மின்றிகழ் சடையி னின்று நீங்கிய மேக நான்கும், குன்றுபோ னிவந்து நான்கு கூடமாக் கூட லாலே, யன்றுநான் மாடக்கூட லானதான் மதுரை மூதூர்" என்பதனால் அறியலாம்; இனி, கன்னி கரியமால் காளி ஆலவாய் என்ற நான்கு கடவுளரின் மாடங்கள் கூடியிருத்தலால், மதுரை கூடலென்று பெயருடைத்தாயிற்றென்பது முண்டு.

அடிகள் 431 - 460:— மதுரையிடத்து வளங்கெழு செல்வர் மாசற விளங்கிய யாக்கையராய்த் திகழ்ந்து, மழுவாள் நெடியோன் தலைவனாகக் கொண்ட பல கடவுளர்க்கும் பலிகளைக் கொடுத்தற்குவர, அப் பலி கொடுக்கைக்கு அந்தியிற்கொண்ட விழவிலே வாச்சியங்கள் ஒலித்தமை கூறும்,

[*அவற்றுள், அடிகள்* **431 - 443***வரை:—வளங்கெழு செல்வர் இயல்பு கூறும்;*

அடிகள் **443-447** *வரை:—விழாக்காண்டற்கும் நாயன்மார்களை [கடவுளர்களை]ச் சேவித்தற்கும் மேனிலை மாடத்தரமியத்தினின்றும் சிலம்பொலிப்பக் கிழிழிந்த மகளிர் பூசியிருக்கும் மணம் தெருவெல்லாம் கமழ்வது கூறும்.*

அடிகள் **448 - 452** *வரை:— மேனிலைமாடத் தரமியந்தோறும் விழாக்காணநின்ற மகளிர்முகம் ஆங்குக் கட்டிய கொடிகள் காற்றில் அசைதலால் ஒருகால் தோன்றி ஒருகால் மறைதல் கூறும்.*]

வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்க ரன்ன சிவந்துநுணங் குருவிற்
கண்பொரு புகூஉம் ஒண்பூங் கலிங்கம்
பொன்புனை வாளொடு பொலியக் கட்டித்
திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக்
கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி
மொய்ம்பிறந்து திரிதரும் ஒருபெருந் தெரியல்
மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை
அணிகிளர் மார்பின் ஆரமொ டளைஇக்
காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்
காலோர் காப்பக் காலெனக் கழியும்
வான வண்கை வளங்கெழு செல்வர்
நாண்மகி ழிருக்கை காண்மார் பூணொடு
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழல்
தாவற விளங்கிய வாய்பொன் னவிரிழை
அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ
ஒண்குழை திகழும் ஒளிகெழு திருமுகம்
திண்காழ் ஏற்ற வியலிரு விலோதம்
தெண்கடற் றிரையின் அசைவளி புடைப்ப
நிரைநிலை மாடத் தரமியந் தோறும்
மழையாய் மதியிற் றோன்றுபு மறைய
நீரு நிலனுந் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற வுணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபின் உயர்பலி கொடுமார்
அந்தி விழவிற் றூரியங் கறங்க

பதவுரை:— (*431*) வெயில் கதிர் மழுங்கிய படர் கூர் ஞாயிற்றுச் (4*32*) செக்கர் அன்ன-வெயிலையுடைய கிரணங்கள் மழுங்கிய செலவுமிக்க ஞாயிற்றையுடைய செக்கர் வானத்தை யொத்த, சிவந்து நுணங்கு உருவின் (433) கண் பொருபு உகூஉம் ஒள் பூ கலிங்கம் - சிவந்து நுண்ணிதாகும் வடிவாலே கண்களை வெறியோடப் பண்ணிச் சிந்திவிழுமாறு போன்ற ஒள்ளிய பூத்தொழிலையுடைய ஆடைகளை, (434) பொன் புனை வாளொடு பொலிய கட்டி-பொன்னிட்ட உடைவாளோடே அழகு பெறக் கட்டி, (435) புரளும் தானை-தோளிலே கிடந்தசையும் ஒலியலினையும், (436) கச்சம் தின்ற கழல் தயங்கு திருந்து அடி-கோத்துக் கட்டிய கச்சுக்கிடந்து தழும்பிருந்த வீரக்கழலசையும் பிறக்கிடாத அடியினையும், (437) மொய்ம்பு இறந்து திரிதரும் ஒரு பெரு தெரியல் - உலகத்துள்ளார் வலிகளைக்கடந்து புகழ்ச்சியால் எங்குந்திரியும் ஒன்றாகிய பெரிய வேப்பமாலையினை யும், (439) அணி கிளர் மார்பின் ஆரமொடு அளைஇ (438) மணி தொடர்ந்தன்ன ஒள் பூ கோதை-அழகு விளங்கும் மார்பிற்கிடக் கின்ற ஆரத்தோடே கலந்து மாணிக்கம் ஒழுகினாலொத்த ஒள்ளிய செங்கழுநீர் மாலையினையும் உடையராய், (43*5*) பிரம்பின் திண்தேர்-விளிம்பிலே வைத்த பிரம்பினையுடைய திண்ணிய தேரிற்பூண்ட, (*440*) கால் இயக்கன்ன கதழ பரி கடைஇ-காற்றி னுடைய செலவினையொத்த விரைந்த குதிரைகளைச் செலுத்தி, (44I) காலோர் காப்ப கால்என கழியும்-காலாட்கள் சூழ்ந்து காப் பக் காற்றென்னும்படி கடிதிற் செல்லும், (443) நாள் மகிழ் இருக்கை (442) வானம் வள் கை வளம் கெழு செல்வர்-நாட் காலத்து மகிழ்ந்திருக்கின்ற இருப்பிலே மேகம்போலே வரையா மற் கொடுக்கும் வளவிய கையினையுடையராகிய வளப்பம் பொருந்தின செல்வர், (45*6*) மாசு அற விளங்கிய யாக்கையர்- தீர்த்தமாடிய வடிவினையுடையராய்,-[மழுவாள் நெடியோன் தலைவ னாக உருகெழுபெரியோர்க்கு உயர்பலி கொடுமார் அந்திவிழவில் தூரியங்கறங்க (459-*60*) என மேல்வருவதனோடு இயைத்துப் பொருள் முடிபு கொள்ளவேண்டும்].

[கவனிப்பு:—இனி, இடைப்பிறவரலாய் வந்த அடிகள் 443-முதல் 452-வரையுள்ள பகுதிக்குப் பதவுரை தனிப்பட எடுத்துக் கூறுவல் விளக்கத்திற்காக.]

(443) காண்மார் பூணொடு (444) தெள் அரி பொன் சிலம்பு ஒலிப்ப-விழாவைக் காண்டற்குப் பூண்களோடே தெள்ளிய உள்ளின் மணிகளையுடைய பொன்னாற்செய்த சிலம்புகளொலிக் கும்படி மேன்மாடத்தரமியத்தினின்றும் இழிதலால், [சிலம் பொலிப்ப என்றதொடராற்றலால் மேனிலத்தினின்றும் இழிதல் பெற்றாம்], (446) அணங்கு வீழ்வு அன்ன-வானுறை தெய்வங் களின் வீழ்ச்சியையொத்த, (444) ஒள் அழல் (445) தா அற விளங்கிய ஆய் பொன் அவிர் இழை (446) பூ தொடி மகளிர் - ஒள்ளிய நெருப்பிலே வலியற விளங்கிய அழகிய பொன்னாற்

செய்த விளங்கும் பூண்களையும் பூத்தொழிலையுடைய தொடியினை யுமுடைய மகளிர், (வீதியே வரும் கடவுளரைச் சேவித்தற்கு வரும்போது, தம்மேற் பூசியிருக்கும்), (447) மணம் கமழ் நாற்றம் தெரு உடன் கமழ-புழுகுமுதலியன நாறுகின்ற நாற்றம் தெருவு களெல்லாம் மணக்க,—

[இனி, கடவுளர் எழுந்தருளுங்கால் மேன்மாடத்தரமியந் தோறுமிருந்தே விழாக்காணும் மகளிரின்] (448) ஒள் குழை திகழும் ஒளி கெழு திருமுகம்-ஒள்ளிய மகரக்குழையை உள்ளடக் கிக்கொண்ட ஒளிபொருந்திய அழகினையுடைய முகம், (449) திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம் (450) அசை வளி தெள் கடல் திரையின் புடைப்ப - திண்ணிய கொடித்தண்டுகளிலேற்ற அகலத்தினையுடைய பெருங்கொடிகளை அசைக்கின்ற காற்றுத் தெளிந்த கடற்றிரை போல எழுந்து விழும்படி அடிக்கையினாலே, (451) நிரை நிலை மாடத்து அரமியம் தோறும்-ஒழுங்குபட்ட நிலைமையினையுடைய மாடங்களின் நிலாமுற்றங்கடோறும், (452) மழை மாய் மதியின் தோன்றுபு மறைய-மஞ்சிலே மறையுந் திங்களைப்போல ஒருகால்தோன்றி ஒருகால் மறைய; [(447) கமழ, (452) மறைய என்பன மேல் (460) கறங்க என்பதனோடு இயையும்.]

(454) மாகம் விசும்பொடு (453) வளியும் தீயும் நீரும் நிலனும் (454) ஐந்து உடன் இயற்றிய - திக்குக்களையுடைய ஆகாயத் துடனே காற்றும் நெருப்பும் நீரும் நிலனுமாகிய ஐந்தினையும் சேரப்படைத்த, (455) மழுவாள் நெடியோன் தலைவன் ஆக-மழுவாகிய வாளையுடைய பெரியோன் ஏனையோரின் முதல்வ னாகக்கொண்டு, (456) சூழ் சுடர் (457) வாடா பூவின் இமையா நாட்டத்து (458) நாற்றம் உணவின் உரு கெழு பெரியோர்க்கு-தெய்வத்தன்மையாற் சூழ்ந்த ஒளியினையுடைய வாடாத பூக்களை யும் இதழ்குவியாத கண்ணினையும் அவியாகிய உணவினையும் உடைய அச்சம்பொருந்திய மாயோன் முருகன் முதலாகிய தெய்வங்கட்கு, (459) மாற்றரு மரபின் உயர் பலி கொடுமார்-விலக்குதற்கரிய முறைமையினையுடைய உயர்ந்த பலிகளைக் கொடுத்தற்கு, (460) அந்தி விழவில் - அந்திக்காலத்துக்கு முன்னாக எடுத்த விழாவிலே, தூரியம் கறங்க - வாச்சியங்கள் ஒலிப்ப; (எ-று).

(433) கலிங்கம் (434) வாளொடுகட்டித் (435) தானையினையும் (436) திருந்தடியினையும் (437) தெரியலினையும் (439) ஆரமொடு அளைஇய (438) கோதையினையும் உடையராய்த் (435) திண்தேரிற் பூட்டிய (440) பரிகடைஇ (441) கழியும் (442) செல்வர் (456) மாசற விளங்கிய யாக்கையராய் (455) மழுவாள் நெடியோன் தலைவனாக (458) உருகெழு பெரியோர்க்கு (459) உயர்பலி கொடுக்கைக்கு (460) அந்தியிற்கொண்ட விழவிலே தூரியங்கறங்க—என வினை

முடிக்க. அங்ஙன் அந்தி விழவிலே தூரியங்கறங்குகையினால் (544) அல்லங்காடி யழிதருகம்பலை (543) பல்வேறு புள்ளின் இசை யெழுந்தற்றே என மேல்இயையும்.

(443) [விழாக்] காண்மார் [மாடத்து அரமியத்தினின்றும் இழிந்த] (446) அணங்கு வீழ்வன்ன பூந்தொடி மகளிரின் (447) மணங்கமழ்நாற்றம் தெருவுடன் கமழ, (451) மாடத்து அரமியந் தோறுமிருந்தே (448) [விழாக்காணும்] மகளிர் முகம் (449) விலோதத்தை (450) வளி புடைக்கையினாலே (452) மழைமாய் மதியின் தோன்றுபு மறைய (460) தூரியங் கறங்க என வினை முடிக்க.

கருத்துரை:—அந்திக்காலத்துச் செக்கர்வானத்தையொத்துச் சிவந்து நுண்ணிதாகிய பூத்தொழிலமைந்த ஆடைகளைப் பொன்னிட்ட உடைவாளோடே அழகுபெறக் கட்டி, தோளிலே கிடந்தசையும் ஒலியலினையும், கச்சுக்கிடந்து தழும்பிருந்த வீரக் கழலையும் பிறக்கிடாத அடியினையும், உலகிலுள்ளார் வலி களைக்கடந்து புகழ்பெற்ற வேப்பமாலையினையும், அழகிய மார்பி னூரத்தோடேகலந்து ஒள்ளிய செங்கழுநீர் மாலையினையும் உடை யராய் விளிம்பிலே பிரம்புவைத்துக்கட்டின திண்ணிய தேரிற் பூண்ட காற்றுப்போலும் செலவினையுடைய குதிரைகளைச் செலுத்திக் காலாட்கள் சூழ்ந்துகாப்பக் கடிதிற்செல்லும் வளங் கெழு செல்வர் தமது நாண்மகிழிருக்கையிலே வானம்போல் வரையாதுகொடுக்கும் கையினையுடையராயவர், இஞ்ஞான்று தீர்த்தமாடியதால் மாசற விளங்கிய யாக்கையராய் மழுவா ணெடியோனாகிய சிவபிரானை முதல்வனாகக் கொண்டுள்ள மாயோன் முருகன் முதலாகிய தெய்வங்கட்கு உயர்பலிகளைக் கொடுத்தற்கு எடுத்த அந்திக்காலத்துக்கு முன்னான விழவிலே வாச் சியங்கள் ஒலிப்ப, [அங்ஙன் ஒலிப்பதால் அல்லங்காடிக் கம்பலை பல்வேறு புள்ளின் இசையெழுந்த தன்மைத்தாயிற்று] என்பது கருத்து.

இனி, இடைப்பிறவரலாய் வந்த அடிகளின் கருத்து பின் வருமாறு:—

மேன்மாடத் தரமியத்தினின்றும் விழாக் காண்டற்குக் கீழிழிந்த பூந்தொடிமகளிர், பூமியின்மேல் இழிதருதலைச்செய்த வானுறை தெய்வங்களை யொத்திருப்ப, அம்மகளிர் வீதிவரும் கடவுளரைச் சேவித்தற்குவரும்போது தமமேற்பூசியுள்ள புழுகு முதலியவற்றான் தெருவுகளெல்லாம் நன்மணம் கமழாநின்றது; இனி, கடவுளர் எழுந்தருளுங்கால் மேன்மாடத் தரமியந் தோறுமிருந்தே விழாக்காணும் மகளிரின் அழகிய திருமுகங்கள், அம்மாடங்களிற் கட்டியுள்ள பெருங்கொடிகள் காற்றால் அசைத லாலே மஞ்சிலேமறையுந் திங்களைப்போலே ஒருகால்தோன்றி

ஒருகால் மறைதலையுடையன வாயின என்பன கருத்து. கடவுளர் [நாயன்மார் எனவும்படுவர்] எழுந்தருளுங்கால் கொடியெடுத்து மாடங்களிற்கட்டுதல் இயல்பு.

விசேடவுரை:—கண் பொருபு-கண்களை வெறியோடப்பண்ணி; அதாவது, மயக்கி என்றபடி. ஒலியல்-ஆடை: இங்கே மேலாடையைக் குறிக்கவந்தது. திருந்தடி-பிறக்கிடாத அடி; 'கழல் தயங்கு திருந்தடி' என்றவிடத்து 'கழல்துயல்வருந்தோறும் திருந்தடிக் கலாவ' என்ற குறிஞ்சிப்பாட்டடியினை நினைவுகூர்க. தெரியல்-வேப்பமாலை; மதுரைப் பாண்டியர்க்குரித்தாய மாலை மதுரைச் செல்வர்க்குமுரித்தாயிற்று; 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்றல் வழக்கு. 'மொய்ம்பு இறந்து திருதரும்' என்றது— ஏனைய மன்னர்களின் வலிகளையொடுக்கிக் கடந்தமைகருதி. கோதை-செங்கழுநீர் மாலை. பிரம்பினை விளிம்பிலே வைத்துக் கட்டுதல் மரபாதலை, 'விளிம்பு பிரம்புகட்டின வட்டிலில்' (சீவக: 2700, உரை) என்ற தொடராலும் உணரலாம். மாடங்களிற் கொடிகளைக்கட்டுதலை 'நிரம்பிய மாடத்தும்பர் நிரைமணிக் கொடிகளெல்லாம்' என்ற கம்பர்வாக்காலும் தெளிக. நிலனும் நீரும் என்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள்நோக்கிப் பிறழ வைத்தார். மழுவாணெடியோன்-சிவபிரான். வாடாதபூ, இமையாத நாட்டம், அவியாகிய உணவு இவற்றினையுடையவர்— தேவர்கள். "வாடாப் பூவின் இமையா நாட்டத்து, நாற்ற வுணவி னோரும்" என்றது புறமும் (62). அந்திவிழவு—இதனை அந்திக்காப்பு என்பர்.

இலக்கணக்குறிப்பு:—(447) மணம்-மணமுடைய பொருட்கு ஆகுபெயர். (443) காண்மார், (459) கொடுமார்-வினையெச்சங்கள். காண்மார் சிலம்பொலிப்ப [இழிதர] என்றும், கொடுமார் கறங்க என்றும் இயையும். 440-41—மோனையழகு காண்க.

அடிகள் 461-488:—மதுரையிடத்துள்ள பௌத்தப்பள்ளி, அந்தணர் பள்ளி, அமணப்பள்ளி இவற்றினைக் குறிக்கும். [கவனிப்பு:—இந்தப் பள்ளியிடங்களில் எழுகின்ற ஓசை கோதையினுடைய [சேரனுடைய] நாளோலக்க இருப்பிலே 'விழுமிய பெருநீர் விழைவுகொள் கம்பலைகடுப்ப' என மேல் இயையும் (524-26)] அவற்றுள்.—

அடிகள் 461-467:—பௌத்தப்பள்ளி கூறும்.

திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியும்

பதவுரை:—(461) திண் கதிர் மதாணி-திண்ணிய ஒளியினையுடைய பேரணிகலங்களையுடையராய், (465) காமர் கவினிய பெரு இள பெண்டிர்-விருப்பம் அழகுபெற்ற பெரிய இளமையினையுடைய பெண்டிர், (462) தாம் முயங்கி புணர்ந்து ஓம்பினர்த் தழீஇ-தாம் முயங்குதலைச் செய்துகூடிப் பாதுகாக்குங் கணவரையுங் கூட்டிக்கொண்டு, (463) தாது அணி தாமரைப்போது பிடித்தாங்கு - தாதுசேர்ந்த செவ்வித்தாமரைப்பூவைப் பிடித்தாற்போல், (461) ஒள் குறு மாக்களை (462) தழீஇ-ஒள்ளிய சிறுபிள்ளைகளையும் எடுத்துக்கொண்டு, (464) தாமும் அவரும் ஓராங்குவிளங்க - தாமும் கணவரும் பிள்ளைகளும் சேரச் சீலத்தாலே விளங்கும்படியாக, (466) பூவினர் புகையினர் தொழுவனர் - பூசைக்கு வேண்டும் பூவினையுடையராய்த் தூபங்களையுடையராய் வணங்கினராய், (467) சிறந்து (466) பழிச்சி - மிகுத்துத் துதித்து, (467) புறங்காக்கும் கடவுள் பள்ளி-உம்-பாதுகாத்து நடத்தும் பௌத்தப்பள்ளியும்; (எ-று.)

(465) பெண்டிர் (462) ஓம்பினர்த்தழீஇ (461) குறுமாக்களைத் (462) தழீஇ, அனைவரும் (464) ஓராங்கு விளங்கப் (466) பழிச்சிப் (467) புறங்காக்கும் கடவுட்பள்ளியும் என முடிக்க.—(462) தழீஇ என்பது ஈரிடத்தும் கூட்டப்பட்டது.

கருத்துரை:—மதாணியணிந்த பேரிளம்பெண்டிர் தம் கணவரையுடன்கொண்டும், செவ்வித் தாமரைப்போது பிடித்தாற்போல் ஒள்ளிய சிறுபிள்ளைகளை இடுப்பில் எடுத்துக்கொண்டும் சென்று, அனைவரும் ஒருசேரச் சீலத்தாலே விளங்கும்படி, பூக்கொண்டு அருச்சித்துத் தூபமேற்றி வணங்கி மிகத்துதித்துப் பாதுகாத்துநடத்தும் சிறப்புப்பெற்றது பௌத்தப்பள்ளி என்பது கருத்து. இந்தப் பௌத்தப் பள்ளியிடத்து எழும் ஓசை கோதையிருக்கையில் 'விழைவுகொள் கம்பலை கடுப்ப' (526) என மேல்இயையும்.

விசேடவுரை:—மதாணி - கழுத்தணியின் தொங்கல்: இதனையணிந்தனர் இளம்பெண்டிர். இனி, குறுமாக்கள் இதனையணிந்திருந்தனர் என்றலும் பொருந்தும்; "ஐம்படை மார்பிற் காணேன்..............மொய்ம்பிடை மதாணி காணேன்" என்ற திருவிளையாடற்புராணச் செய்யுள் கொண்டறிக (மாமனாக வந்து வழக்குரைத்த படலம்: செ-25). ஓம்பினர்-கணவர். 'ஓம்பினர்த் தழீஇ' என்றதில், உயர்திணையிடத்து ஐயுருபு தொக்கது. 'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்' என்றதால் (தொகை மரபு: 15) ஒரோவழி ஒழிந்துவரும்; 'அவர்க்கண்டு' எனவும் 'ஒன்னார்த்தெறலும்' எனவும் இவை உயர்திணையுள் ஒழிந்து வந்தன என்றனர் இளம்பூரணர். ஈண்டும் அங்ஙனே கொள்ள வேண்டுவது. 'இகழ்வார்ப் பொறுத்தல்' 'கேட்டார்ப் பிணிக்கும்' 'பீடில்மன்னர்ப் புகழ்ச்சிவேண்டி' (புறம்: 148) என்ற விடங்களிலுங் காண்க. இந்நுணுக்கம் குறிக்கொள்ளத்தக்கது.

சிறு குழந்தைகளுக்குத் தாமரைப்போதை உவமைகூறுதலை 'போதவிழ் தாமரையன்னநின், காதலம் புதல்வன்' (ஐங்: 424), "பொய்கையுண் மலரென வளர்ந்து" (சீவக: 2756) என்பவற்றால் அறிக: மற்றும், "நீருள், அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட, குடைநிழற் றோன்றுநின் செம்மலை" என்ற கலித்தொகையடிகளுக்கு (செ. 84) உரையிடுமிடத்து 'இலையும் பூவும் குடைக்கும் புதல்வற்கும் உவமையாய் விரவிநின்றது' என்று நச்சினார்க்கினியர் கூறியதும் நோக்கத்தக்கது. ஓராங்கு விளங்க-ஒருசேரச் சீலத்தாலே விளங்க: சீலம்-பௌத்தநூற்படி பஞ்ச சீலம் குறிப்பதெனலாம். இல்லறத்தார்க்கு உரிய பஞ்சசீலம்-கொல்லாமை, திருடாமை, வியபிசரியாமை, பொய்கூறாமை, கள்ளுண்ணாமை யென்னுமிவை. சிறுபிளைகளுக்குச் செல்லுமிடத்து, வியபிசரியாமை நின்றவிடத்திற் காமமின்மை கூறிக்கொள்க.

அடிகள் 468-474:—அந்தணர்பள்ளி கூறும்.

சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
உயர்நிலை யுலக மிவணின் றெய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையும்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும்

பதவுரை:—(474) அந்தணர் - வேதாந்தத்தை எக்காலமும் பார்ப்பார், (468) சிறந்த வேதம் விளங்க பாடி - அதர்வவேதம் ஒழிந்த முதன்மைப்பட்ட வேதங்களைத் தமக்குப் பொருள் தெரியும்படியோதி, (472) அறம் நெறி பிழையா அன்புடை நெஞ்சின்-தருமத்தின்வழி ஒருகாலமுந் தப்பாத பல்லுயிர்கட்கும் அன்புடைத்தாகிய நெஞ்சாலே, (471) உயர்நிலை உலகம் இவண் நின்று எய்தும் - உயர்ந்த நிலைமையையுடைய தேவருலகத்தை இவ்வுலகிலேநின்றுசேரும், (469) விழு சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து - விழுமிய தலைமையோடு பொருந்தின யாகங்கள் முதலிய தொழில்களோடே சிலகாலம் பொருந்தி, [பின்னர் வேதாந்தத்தை யுணர்ந்து], (473) பெரியோர் மேஎய் - சீவன் முத்தராயிருப்பாரிடத்தே சிலகாலம் பொருந்திநின்று, (470) நிலம் அமர் வையத்து ஒரு தாம் ஆகி-நால்வகை நிலங்களமர்ந்த உலகத்தே ஒன்றாகிய பிரமம் தாங்களேயாய், (473) இனிதின் உறையும் - ஆண்டு [அச்சீவன்முத்தரிடத்து]ப் பெற்ற வீட்டின்பத்தாலே இனிதாகத் தங்கும், (474) குன்று குயின்றன்ன பள்ளிஉம்-மலையை உள்வெளியாகவாங்கி இருப்பிடமாக்கினாற் போன்ற பிரமவித்துக்களிருப்பிடமும்; (எ-று).

(474) அந்தணர் (468) வேதம்பாடி (472) அன்புடை நெஞ்சாலே (471) தேவருலகத்தை இவ்வுலகில்நின்றே எய்தும் (469)

விழுமிய ஒழுக்கத்தோடே சிலகாலம்நின்று [பின்னர் வேதாந்தத்தையுணர்ந்து] (473) பெரியோரை மேஎய் (470) வையத்தே ஒருதாமாகி, (473) இனிதின் உறையும் (474) பள்ளியும் என முடிக்க.

கருத்துரை:—அந்தணர் அதர்வவேதமொழிந்த ஏனையவற்றைத் தமக்குப் பொருள்தெரியவோதி தருமவழி பிறழாத அன்புடை நெஞ்சாலே உயர்ந்த தேவருலகை இந்த உலகத்திலேயிருந்தே எய்தும் சிறப்புப்பொருந்தி, யாகங்கள் முதலியவற்றோடே சிலகாலம் பொருந்திநின்று, பின்னர் வேதாந்தத்தையுணர்ந்து, சீவன்முத்தராயிருப்பாரிடத்தே சிலகாலம் மேவியிருந்து இவவுலகத்து ஒன்றாகியபிரமம் தாங்களேயாய் அச்சீவன்முத்தரிடத்துப் பெற்ற வீட்டின்பத்தாலே இனிதினுறைவர். இத்தகைய பிரமவித்துக்களினிருப்பிடம் மலையை உள்வெளியாகவாங்கி இருப்பிடமாக்கினாற்போற் பொலிவன என்பது கருத்து. இந்த அந்தணர் பள்ளியிடத்தெழும் ஓசை கோதையிருக்கையில் 'விழைவுகொள் கம்பலை கடுப்ப' (526) என மேல் இயையும்.

விசேடவுரை:—சிறந்தவேதம் - அதர்வமொழிந்த இருக்கும் யசுரும் சாமமும். இவை தலையாய வேதங்கள். இவை வேள்வி முதலியவற்றை விதித்தலின் இலக்கணமுமாய், வியாகரணத்தாற் காரியப்படுதலின் இலக்கியமுமாயின. அதர்வமும், ஆறங்கமும் தருமநூலும் இடையாயவை. அதர்வம் ஒழுக்கங்கூறுது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமேயன்றிக் கேடுசூழும் மந்திரங்களும் பயிறலின் அவற்றோடு கூறப்படாதாயிற்று. ஒழுக்கமொடு புணர்ந்து - யாகங்கள் முதலிய தொழில்களோடே சிலகாலம் பொருந்தி. சிலகாலம் பொருந்தி என்றது - தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணேநின்று பின்னர்த் துறத்தலை மேற்கொள்ளுதலாலாகும். இதன் விளக்கத்தை 'ஒழுக்கத்து நீத்தார்' (குறள். 21) என்பதற்குப் பரிமேலழகர் கூறும் உரைவளத்தால் தெளியலாம். 470-71 வரிகளில், அந்தணரைப் பூசுரர் என்றும் பூதேவர் என்றும் வழங்குதலை நினைவுகூர்க. இனிதின் உறையும்- வீடுபேறடைந்தாற்போன்ற இன்பத்தோடு உறையும் என்றபடி. அந்தணர் - வேதாந்தத்தை எக்காலமும் பார்ப்பார். "அந்தத்தை அணவுவார் அந்தணர்; என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பாரென்றவாறு" (கலி. கடவுள் வாழ்த்து-நச்சி. உரை.)

அடிகள் 475-488 :—அமணப்பள்ளி கூறும்.

வண்டுபடப் பழுநிய தேனூர் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉ மமயமும்

இன்றிவட் டோன்றிய ஒழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணரும்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற

பதவுரை:—(484) கயம் கண்டன்ன - குளிர்ச்சியாற் கயத்தைக் கண்டாற்போன்ற [தண்ணிழலினையுடைத்தாய்], (485) செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து - செம்பாற் செய்தாலொத்த செவ்விய சுவர்களைச் சித்திரமெழுதி, (486) நோக்கு விசை தவிர்ப்ப மேக்குஉயர்ந்து - கண் பார்க்கும்விசையைத் தவிர்க்கும்படி மேல்நிலமுயர்ந்து, (488) குன்று பல குழீஇ பொலிவன தோன்ற (486) ஓங்கி - மலைகள் பலவும் திரண்டு விளங்குவன போலத் தோன்ற உயர்ந்து,—(475) வண்டு பட பழுநிய தேன் ஆர் தோற்றத்து (476) பூவும் புகையும் சாவகர் பழிச்ச-வண்டுகள் படியும்படி பருவமுதிர்ந்த தேனிருந்த தோற்றத்தையுடைய பூக்களையும் புகையினையுமேந்தி விரதங்கொண்டோர் துதிக்க, (484) வயங்கு உடை நகரத்து - விளங்குதலையுடைய (அருகதேவனின்) கோயிலிடத்து,— (480) சான்ற கொள்கை - தமக்கமைந்த விரதங்களையும், சாயா யாக்கை - அவ்விரதங்களுக்கு இளையாத உடலினையும் உடையராய், (479) வானமும் நிலனும் தாம் முழுது உணரும்-தேவருலகையும் அதன் செய்கைகளையும் எல்லா நிலங்களின் செய்திகளையும் தாம் நெஞ்சால் அறிதற்குக் காரணமான, (481) ஆன்று அடங்கு அறிஞர்-கல்விகளெல்லாம் நிறைந்து களிப்பின்றி அடங்கின அறிவினையுடையார், (477) சென்ற காலம்உம் வரூஉம் அமயம்உம்-சென்ற காலத்தையும் வருகின்ற காலத்தையும், (478) இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து - இன்று இவ்வுலகில் தோன்றி நடக்கின்ற ஒழுக்கத்தோடே மிகவுணர்ந்து, (483) நல்குவர-உலகத்தார்க்குச் சொல்லுதல் வரும்படி, (481) நோன்மார் - நோற்கைக்கு, (482) கல் பொளிந்தன்ன இட்டுவாய் கரண்டை (483) பல் புரி சிமிலி நாற்றி - கல்லைப் பொளிந்தாற்போன்ற இட்டிய [சிறிய] வாயையுடைய குண்டிகையைப் பல வடங்களையுடைய நாலுறியிலே தூக்கி, (481) செறிந்தனர் - நெருங்கினவருடைய, (487) இறும்பூது சான்ற நறு பூ சேக்கையும்-அதிசயம் அமைந்த நறிய பூக்களைச் சூழவுடைய அமணப்பள்ளியும்; (எ-று.)

(484) கயங் கண்டன்ன [நிழலினையுடைத்தாய்], (485) செஞ் சுவர் புனைந்து (486) மேக்குயர்ந்து, (488) பொலிவன தோன்ற (486) ஓங்கிச் (476) சாவகர் பழிச்ச (484) வயங்குதலையுடைய நகரத்திடத்து—(480) கொள்கையினையும் யாக்கையினையுமுடைய ராய் (479) தாம் முழுதுணரும் (481) அறிஞர் (477) சென்ற காலமும் வருஉம் அமயமும் (478) நன்குணர்ந்து (483) நல்குவர (481) நோன்மார் (483) சிமிலியிலே நாற்றிச் (481) செறிந்தன ருடைய (487) சேக்கையும் எனப் பொருட்பொருத்தமுற முன் பின் கூட்டி முடிக்க.

கருத்துரை:—குளிர்ச்சியாற் குளத்தைக் கண்டாற்போன்ற தண்ணிழலினையுடைத்தாகி, செம்பாற் செய்தாலொத்த சுவர் களிலே சித்திரமெழுதப்பெற்று, கண்பார்வை விசையைத் தவிர்க்கும்படி மேனிலமுயர்ந்து, குன்றுகள் பல திரண்டு பொலிவனபோற் றோன்றவோங்கி, சாவகர் பூவும் தூபமும் ஏந்தித் துதித்து வழிபடும்படி விளங்குதலையுடையது அருக தேவனின் கோயில். அக்கோயிலிடத்துத் தமக்கெனவகுத்த விரதங்களையும் அவ்விரதங்களால் இளையாத மெய்யினையுமுடை யராய், வானும் நிலனுமுட்பட்ட எல்லாச் செய்திகளையும் தம் மனத்தாலறிதற்குக் காரணமான கல்விகளனைத்தும் நிறைந்து செருக்கின்றி அடங்கினவராயுள்ள அறிஞர்கள், இறப்புஎதிர்வு என்ற இருவகைக் காலத்தையும் இன்றைய உலகநடையினொடு மிகவுணர்ந்து உலகத்தார்க்குச் சொல்லுமாற்றல் தமக்கு வரும் படி நோன்புநோற்கைக்குக் குண்டிகையை உறியிலே தூக்கியுள் ளனர். அத்தகைய ஆன்றடங்கறிஞர் செறிந்திருத்தலையுடை யது அமணப்பள்ளி என்பது கருத்து. இந்த அமணப்பள்ளி யிடத்தெழும் ஓசை 'கோதையிருக்கையில் விழைவுகொள் கம்பலை கடுப்ப' (526) என மேல் இயையும்.

விசேடவுரை:—அருகதேவனின் கோயில் குளிர்ந்த தண்ணிழ லினையுடைத்தாய் செம்பாற் செய்தாலொத்த சுவர்களை யுடையது; அச்சுவர்களிற் சித்திரமெழுதப் பெற்றுள்ளது; அவை கண்பார்வைக்கு மெட்டாது மேனிலத்து உயர்ந்துள் ளன; அச்சுவர்கள் குன்று பல திரண்டுள்ளனபோல் தோன்றுகின்றன. அக் கோயிலுள் பூவும் புகையுமேந்திச் சாவகர் துதிக்கின்றனர். 'செம்பியன்றன்ன செஞ்சுவர்' என்ற விடத்து 'செம்புகொண்டன்ன இஞ்சி' (சிங்: 439), 'செம்புறழ் புரி சைச் செம்மல் மூதூர்' (புறம்: 37), 'செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்' (நெடுநல்: 112) என்பன ஒப்புக் காண்க. சாவகர் - சைனரில் விரதங்காக்கும் இல்லறத்தார். 'வானமும் நிலனும்' என்றது ஆங்கு நிகழும் செய்திகளைக் குறிப்பன. முக்காலமு முணர்ந்து உலகத்தார்க்குச் சொல்லுதல் வரும்படி ஆன்றடங் கறிஞர் நோற்கின்றனர்; அந்நோன்புக்கு உபகரணமாகக் குண் டிகையை நாலுறியிலே தூக்கியுள்ளனர். சமண முனிவர்

உறியிலேவைத்த குண்டிகையையுடைய ரென்பதை "சிமிலிக் கரண்டையன்...தவலருஞ் சிறப்பின் அராந்தாணத்துளோன்" (மலர்வனம்-86-87) என்ற மணிமேகலையாலுமுணரலாம். சேக்கை-அமணப்பள்ளி; சேக்கப்படும் இடத்தைச் சேக்கை என்றார். 'இவர்கள் வருத்தமறப் பறித்து வழிபடுதற்குப் பல பூக்களைச் சூழ ஆக்குதலின், 'நறும்பூஞ் சேக்கை என்றார்' என்றனர் நச்சினார்க்கினியர். 'ஆன்றடங்கறிஞர்' என்றது முற்றத்துறந்த சமணமுனிவரை.

அடிகள் 489-499:—மதுரையிடத்துள்ள அறங்கூறவையமும் காவிதி மாக்களும் பற்றிக் குறிக்கும்.

[**கவனிப்பு:—**இந்த அறங்கூறவையத்திடத்தும் காவிதி மாக்களிடத்தும் எழுகின்ற ஓசை 'கோதையினுடைய நாளோலக்க இருப்பிலே விழுமியோர் குழீஇ விழைவுகொள் கம்பலைகடுப்ப' என மேல் இயையும் (524-26).]

அவற்றுள், அடிகள் 489-492:—அறங்கூறவையம் கூறும்.

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன் கோலன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூ றவையமும்

பதவுரை:—(489) அச்சம்உம்-வழக்குட்பட்ட இருகூற்றினரும் [இவர்கள்] நடுவாகக் கூறுவரோ கூறுரோவென்று அஞ்சி வந்த அச்சத்தையும், அவலம்உம்-அவர்க்குத் தோல்வியால் நெஞ்சில் தோன்றும் வருத்தத்தையும், ஆர்வம்உம்-அவர்தம் நெஞ்சு கருதின பொருள்கண்மேல் தோன்றும் பற்றுள்ளத்தினையும், நீக்கி-போக்கி [அதாவது, அவர்கள் நெஞ்சுகொள்ள விளக்கி என்றபடி], (490) செற்றம்உம் உவகைஉம் செய்யாது காத்து-ஒருகூற்றிற் செற்றஞ்செய்யாமல் ஒருகூற்றில் உவகைசெய்யாமல் நெஞ்சினைப் பாதுகாத்து, (491) ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகி-துலாக்கோலையொத்த நடுவுநிலைமையையுடைத்தாய், (492) சிறந்த கொள்கை அறம் கூறு அவையம்உம்-இக்குணங்களாற் சிறந்த விரதங்களையுடைய தருமநூலைச்சொல்லுந்திரளும்: (எ-று.)

[இருதரப்பினருடைய] (489) அச்சம் முதலியவற்றை நீக்கிக் (490) காத்துச் (491) செம்மைத்தாகிச் (492) சிறந்த அறங்கூறவையம் எனமுடிக்க.

கருத்துரை:—வழக்குட்பட்ட இருகூற்றினரும் 'இந்த அறங்கூறவையத்தார் நடுவாகக் கூறுவரோ கூறுரோ' என்று அஞ்சி வந்த அச்சத்தையும், அவ்விரு கூற்றில் ஒருகூற்றினர்க்குத் தோல்வியால் நெஞ்சில் தோன்றும் வருத்தத்தையும், அவர்க்குப் பொருள்கண்மேற்றோன்றும் வெஃகுதலையும் போக்கச் செய்து, அவர் நெஞ்சுகொள்ள அறம்விளக்கி, காய்தலுவத்த

லகற்றி,ஒருபாற்கோடாது சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் செம்மைத்தாகிச் சிறந்த குணங்களையுடைய தருமநூன் முறைமையின் அறங்கூறும் தருமாசனத்தார் திரளையுடையது அறங்கூறவையம் என்பது கருத்து. இந்த அவையத்திடத் தெழும் ஓசை 'கோதைதயிருக்கையில் விழைவுகொள் கம்பலை கடுப்ப' (526) என மேல் இயையும்.

விசேடவுரை:—ஆர்வம்-பற்றுள்ளம்; பிறர்பொருளை வெஃகல். 491-92 வரிகளில், சமன்செய்து சீர்தூக்கி இலக்கணங்களானமைந்து ஒருபாற்கோடாத துலாக்கோல்போல, சமன்செய்து சீர்தூக்கி இலக்கணங்களானமைந்து ஒருபாற்கோடாதவர் அறங்கூறவையத்தார் எனப் பொருள்கொள்க. "துலைநாவன்ன சமநிலை", "துலாக்கோலியல்பே தூக்குங்காலை, மிகினுங் குறையினு நில்லா தாகலும், ஐயந் தீர்த்தலும் நடுவு நிலைமையோ, டெய்தக் கூறுப வியல்புணர்ந் தோரே", "ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும், மெய்ந் நடுநிலையும் மிகும் நிறைகோற்கே" என்பவற்றை இங்கே அறிக. ஒருபாற்கோடாமைக்கு ஏது-செற்றமும் உவகையுஞ் செய்யாது காத்தல். "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண், ஆய்தல் அறிவுடையார் கண்ணதே-காய்வதன் கண், உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண், குற்றமும் தோன்றாக் கெடும்" என்ற அறநெறிச்சாரம் ஈண்டு நினைவு கூர்க. சிறந்த கொள்கை அறங்கூறவையம்-நவைநீங்க நடுவுகூறும் அவை மாந்தர். இந்த அவைமாந்தர் "எட்டின், வழிபடர்தல் வல்லு தவை" என்றபடி, எண்வகை யியல்பினையுடையராயிருத்தல் வேண்டும்: எட்டாவன:—"குடிப்பிறப்புக் கல்வி குணம் வாய்மைதூய்மை, நடுச்சொல்லு நல்லணி யாக்கம்-கெடுக்கும், அழுக்கா றவாவின்மை யவ்விரண்டோ டெட்டும், இழுக்கா வவையின்க ணெட்டு" என்பதனுணறிக. அவையத்தாரியல்பு கூறுமிடத்துப் பெருந்தொகையிலும், "அழுக்கா றிலாமை யவா வின்மை தூய்மை, ஒழுக்கங் குடிப்பிறப்பு வாய்மை-இழுக்காத, நற்புலமை யோடு நடுவு நிலைமையே, கற்புடைய வெட்டுறுப்புக் காண்" என்றும், "குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி, விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற, வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையிற், காத லின்பத்துத் தூங்கித் தீதறு, நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும், அழுக்கா றின்மை யவாஅ வின்மை யென, இருபெரு நிதியமு மொருதா மீட்டுந், தோலா நாவின் மேலோர் பேரவை" என்றும் கூறப்பட்டிருத்தல் காண்க. இனி, ஒருசிலர், 'அறங்கூர் அவையம்' என இடையினரகரம் பெய்து மேற்கொண்டு அதற்கு உரையும் வகுத்துள்ளார், 'அறங்கூர் அவையம்-அறம் தலைசிறந்து நிற்கின்ற சபை என்று. இனி, இத்தொடர் 'அறங்கூறு அவையம்' என வல்லின றகரமாகவே இருத்தல் தகுதியுடைத்து என்பதனைச் சிலப்பதிகாரத்து இந்திர விழவூரெடுத்த காதை வரி 135-36-ஆல் அறியலாம். அவ்வரி

"அறங் கூறவையத்து உரைநூல் கோடியொருதிறம் பற்றினும்" என்பது. ஆங்கு அடியார்க்குநல்லார், 'தருமநூன் முறைமையின் அறங்கூறும் தருமாசனத்தார்' என்று உரையெழுதி அதனோடு அமையாது கீழ் "அறங்கூறவையம் - தருமாசனத்தார் வழக்குரைக்கும் இடம்" எனத்தனியே எடுத்து எழுதியுள்ளார். மற்றும், 'நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து' (மலைபடு: 77), 'நிறையவை யென்பது நினையுங்காலை, எல்லாப் பொருளுந் தன்னகத் தடக்கி, எதிர்வருமொழிகளை யெடுத்துரைப்பதுவே" (யா.வி.ஒழிபு.சூ. 3,மேற்)என்ற இன்னோரன்ன தொடர்களை நோக்குங்காலத்து 'அறங் கூறவையம்' என்றிருத்தலே நேரிது.

அடிகள் 493-499:—காவிதிமாக்கள் கூறும்.

நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்து
ஆவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களும்

பதவுரை:—(493) நறு சாந்து நீவிய கேழ் கிளர் அகலத்து-நறிய சந்தனத்தைப் பூசிய நிறம் விளங்கும் மார்பினையுடையராய், (494) ஆவுதி மண்ணி-யாகங்களைப் பண்ணி, (495) மா விசும்பு வழங்கும் பெரியோர் போல - பெரிய சுவர்க்கத்து ஏறப்போம் அந்தணர் அரசனை [மெய்ப்பொருள் காட்டி] அடக்குமாறுபோல, (496) நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி-அரசனிடத்துள்ள நன்மையும் தீமையும் நெஞ்சத்தாலேகண்டு அத்தீங்குகளையாராய்ந்து [மெய்ப்பொருள் காட்டி] அத்தீங்குகளிலே ஒழுகாமலடக்கி, (497) அன்புஉம் அறன்உம் ஒழியாமல் காத்து-சுற்றத்திடத்துச் செல்லும் அன்பும் எவ்வுயிர்க்கண்ணும் நிகழும் தருமமும் ஒருகாலமும் (தம்மைவிட்டுப்) போகாமல் தம்மிடத்தே பரிகரித்து, (498) பழி ஒரீஇ உயர்ந்து-பழி தம்மிடத்து வாராமல் நீக்கி அதனானே ஏனையோரினும் உயர்ச்சியெய்தி, பாய் புகழ் நிறைந்த-பரந்த புகழ் நிறைந்த, (494) அவிர் துகில் முடித்து-விளங்குகின்ற மயிர்க்கட்டுக்கட்டி, (499) செம்மை சான்ற காவிதி மாக்கள்உம் - தலைமையமைந்த காவிதிப்பட்டங்கட்டின அமைச்சரும்; (எ-று.)

(493) சாந்து நீவிய அகலத்தினராய், (494) ஆவுதிமண்ணி (495) மாவிசும்பு வழங்கும் பெரியோர் (அரசனை அடக்குமாறு) போல (496) (அரசனை) அடக்கி, (497) [தம்மிடத்து] அன்பும் அறனும் ஒழியாது காத்து (498) பழியொரீஇ உயர்ந்து புகழ் நிறைந்த, (494) துகில்முடித்துச் (499) செம்மை சான்ற காவிதி மாக்கள் என முடிக்க.

கருத்துரை :—சந்தனம்பூசிய மார்பினையுடையராய் யாகங்களைப் பண்ணிச் சுவர்க்கத்து ஏறப்போகும் அந்தணச்சிரேட்டர்கள் அரசனை மெய்ப்பொருள் காட்டி அடக்குமாறுபோல, அமைச்சர் தாம் பணிசெய்யும் அரசனிடத்துள்ள நன்மைதீமைகளைக்கண்டு அத்தீங்குகளையாராய்ந்து மெய்ப்பொருள் இன்னதெனக் காட்டி அத்தீங்குகளிலே ஒழுகாமல் அரசனை அடக்கித் தம்மாட்டு அன்பும் அறனும் ஒருபோதும் நீங்காமல் காத்துப் பழிநீக்கி, அதனானே ஏனையோரினும் உயர்ச்சிபெற்றுப் பரந்த புகழ் நிறைந்த தலைமைசான்ற காவிதிப்பட்டங் கட்டினராய்த் திகழ் கின்றனரென்பது கருத்து. இந்தக் காவிதிப்பட்டங்கட்டின அமைச்சரிடத்தெழும் ஓசை 'கோதைதயிருக்கையில் விழைவு கொள் கம்பலை கடுப்ப' (526) என மேல் இயையும்.

விசேடவுரை :—அகலத்துப் பெரியோர் என இயையும். யாகத்திற்குச் சந்தனம் பூசுதல் மரபு. யாகங்களைச் செய்து சுவர்க்கத்து ஏறப்போதலை, பாலைக்கௌதமனார் சரிதையால் உணரலாம். 'யானும் என்பார்ப்பனியும் சுவர்க்கம் புகல்வேண்டும்' என, பார்ப்பாரிற் பெரியோரைக்கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பித்துப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்' என்ற பதிற்றுப்பத்து மூன்றும்பத்தின் இறுதி வாக்கியத்தையும், "வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த,திண்டிறல் நெடுவேற்சேரலன்" (சிலப் : 23 : 63 - 64), "நான்மறையாளன் செய்யுட்கொண்டு, மேனிலை யுலகம் விடுத்தோன்" (சிலப்: 28: 137-138), என்ற சிலப்பதிகாரத்தையும் ஈண்டு நினைக. 'போல' என்ற உவம வுருபு மேல்வரும் 'அடக்கி' என்பதனோடு இயையும்; பெரியோர் அரசனை அடக்குமாறுபோலக் காவிதிமாக்கள் அரசனை அடக்கி என்பது பொருள்; இது வினையுவமை. அன்பு-சுற்றத்திடத்துச் செல்லும் நேயம்; 'அன்பாவது—மனைவியர்கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் மனநிகழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்துநிற்கும் நேயம்' என்பது, பொருளதிகார வுரை. துகில் - ஈண்டு துகிலினுடைய மயிர்க்கட்டு: மயிர்க்கட்டு-தலைப்பாகை. "துகில் முடித்துப்போர்த்த.........பெருமூதாளர்" என்றவிடத்தும் (முல்லைப்பாட்டு: 53) "பைந்துகின்முடி யணிந்து அவர்பின் உலவு காஞ்சுகியவர்" (சிந்: 1558) என்றவிடத்தும் இப்பொருளதாதல் காண்க. காவிதிமாக்கள் - காவிதிப் பட்டங் கட்டின அமைச்சர். "பாண்டிநாட்டுக் காவிதிப்பட்டம் எய்தினோரும்...........முதலியோருமாய் முடியுடைவேந்தர்க்கு மகட் கொடைக்கு உரிய வேளாளராகுப" (தொல்: அகத்: சூ. 30. ந) என்ற நச்சினார்க்கினியத்தால், இப்பட்டம் உயர்ந்த வேளாளர்க் குப் பாண்டியர் கொடுத்துவந்ததென்பது தெரியவருகிறது. அப் பட்டத்துடன் அரசர் அளிக்கும் பொற்பூ 'காவிதிப்பூ' எனப்படு மென்பதும், அக் காவிதியர்க்கு அரசராற் கொடுக்கப்பட்ட ஊர் 'காவிதிப்புரவு' எனப்படுமென்பதும் அறியக்கிடக்கின்றன.

அடிகள் 500-522:—மதுரையிடத்துள்ள பண்ணியம்பகர்நரும் நாற்பெருங்குழுவும் கோடுபோழ்கடைநர்முதலாகக் கண்ணுள்வினைஞரேகவுள்ளாரும் பிறருங்கூடிக் கம்மியருங்குழீஇ நால்வேறு தெருவினும் நெருங்கிநிற்றலைக் கூறும்.

[கவனிப்பு:—*இங்குக்குறித்த பல்லோரிடத்து எழுகின்ற ஓசை 'பட்டினத் தொல்லெனிமிழிசை மான' (537-38) என மேல் இயையும்.*] *அவற்றுள்,*

அடிகள் 500-506:—பண்டங்களை விற்கும் வணிகரைப் பற்றிக் கூறும்.

அறநெறி பிழையா தாற்றி னொழுகிக்
குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்
பல்வேறு பண்டமொ டூண்மலிந்து கவினி
மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்

பதவுரை:—*(503) பல் வேறு பண்டமொடு ஊண் மலிந்து கவினி-பலவாய் வேறுபட்ட பண்டங்களோடே பலவுணவுகளும் மிக்கு அழகுபெற்று, (501) குறு பல் குழுவின் குன்று கண்டன்ன (502) பருந்து இருந்து உகக்கும் பல் மாண் நல் இல்-அண்ணிய பல திரட்சியையுடைய மலைகளைக் கண்டாற்போன்ற பருந்து இளைப்பாறியிருந்து பின்பு உயரப்பறக்கும் பலதொழிலின் மாட்சிமைப்பட்ட நல்ல இல்லில் [இருந்துகொண்டு], (500) அறன் நெறி பிழையாது ஆற்றின் ஒழுகி-இல்லறத்திற்குக் கூறிய வழியைத்தப்பாமல் இல்லறத்திலே நடந்து, (506) சிறந்த தேஎத்து-(மணிகளும் முத்தும் பொன்னும் பிறத்தற்குச்) சிறந்த தேசத்தினின்றும் வந்த, (505) பல் வேறு திரு மணி முத்தமொடு பொன் கொண்டு-பலவாய் வேறுபட்ட அழகினையுடைய மணியினையும் முத்தினையும் பொன்னையும் வாங்கிக்கொண்டு, [அவையிற்றுக்குப் பண்டமாற்றாக], (504) மலையஉம் நிலத்தஉம் நீரஉம் பிறஉம்-மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் நீரிடத்தனவும் பிற இடத்தனவுமாகிய, (506) பண்ணியம் பகர்நரும்-பண்டங்களை விற்கும் வணிகரும்; (எ-று.)*

(503) பண்டமொடு ஊண்மலிந்து கவினிக் (501) குன்று கண்டன்ன (502) நல்ல இல்லிலேயிருந்துகொண்டு (500) ஆற்றினொழுகிச் (506) சிறந்த தேஎத்து வந்த (505) திருமணி முத்தமொடு பொன்கொண்டு (504) மலையவும்...பிறவுமாகிய (506) பண்ணியம் பகர்நரும் என முடிக்க.

கருத்துரை:—*பலவகைப் பண்டங்களோடே பலவுணவுகளும் மிக்கு அழகுபெற்று, பருந்தும் இளைப்பாறிப் பின்பு உயரப் பறக்கும்படி யோங்கியுள்ள மாட்சிமைமிக்க நல்ல மனையிலே இருந்து*

கொண்டு, இல்லறநெறி வழுவாது ஒழுகி, பிறநாட்டினர் கொணர்ந்த பல்வகை மணியினையும் முத்தினையும் பொன்னையும் வாங்கிக்கொண்டு, அவையிற்றுக்கு மாற்றாக மலையிடத்தும் நிலத்திடத்தும் நீரிடத்தும் [இவை நீங்கலாய] பிறவிடத்தும் உண்டான பண்டங்களை விற்கும் வணிகருளரென்பது கருத்து. இந்த வணிகரிடத்தெழும் ஓசை 'பட்டினத்து ஒல்லெனிமிழிசை மான' (537-38) என மேல் இயையும்.

விசேடவுரை:—குறுமை-ஈண்டு, அண்மைமேலது. மலிந்து, கவினி மாட்சிமைப்பட்ட நல்இல் என முடியும். பருந்து இருந்து உகக்கும் இல் என்றது-இல்லின் ஓக்கத்தைத் தெரிப்பதற்கு. பருந்து மிக வுயரப்பறப்பது கண்கூடு. உகத்தல்-உயரப்பறத்தல். 'அறநெறிபிழையாது ஆற்றினொழுகி' என்றவிடத்து, திருக்குறளின் 'இல்வாழ்க்கை' அதிகாரக் கருத்துக்களை நினைக. இனி, 'ஆற்றின் ஒழுக்கி' என்று பாடமிருப்பினும் சிறக்கும். அஞ்ஞான்று, ஆற்றின் ஒழுக்கி-(தவஞ்செய்வாரையும் தத்தம்) நெறியின்கண் ஒழுகப்பண்ணி, என்பது பொருளாகும். 'ஆற்றி னொழுக்கி அறனிழுக்கா வில்வாழ்க்கை' என்றது குறளும். சிறந்த தேஎம் என்றவிடத்துச் சிறப்பாவது-மணியும் முத்தும் பொன்னும் பிறப்பித்தற் சிறப்பு. வணிகர், மலைபடுபொருள் கடற்படுபொருளொடு நிலத்துண்டாம் பொருள்களையும் பிறவிடத்துண்டாம் பொருள்களையும் விற்கின்றனர் என்றபடி. இதனை 'வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும், தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும், கங்கை வாரியும் காவிரிப் பயனும், ஈழத் துணவும் காழகத் தாக்கமும்'' என்ற பட்டினப் பாலையாலும் ஒருவாறு தெளியலாம். பண்ணியம்-பண்டங்கள்.

அடிகள் 507-510:—நாற்பெருங் குழு கூறும்.

மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவும்

பதவுரை:—(507) அறாஅ ஒழுக்கு மழை-இடைவிடாமற் பெய்கின்ற மழையால், பிழையா விளையுள்-தவறாத விளைச்சலையுடையதாகிய, (508) பழையன் மோகூர்-பழையனென்னுங் குறுநில மன்னனுடைய மோகூரிடத்து, அவை அகம்-நன்மக்கள் திரளிடத்தே, விளங்க-விளங்கும்படி அறியக்கூறிய, (509) நால்கோசர் மொழி தோன்றி அன்ன-நால்வகையாகிய கோசர் வஞ்சின மொழியாலே விளங்கினாற்போன்ற, (510) தாம் மேஎந்தோன்றிய நால் பெரு குழுவும்-தமது மொழியால் தாம் மேலாய் விளங்கிய நால் வகைப்பட்ட பெரியதிரளும்; (எ-று.)

(507) விளையுளையுடைய (508) மோகூரிடத்து அவையகம் விளங்க (509) நாற்கோசர் மொழி தோன்றியன்ன (510) மேஎந் தோன்றிய நாற்பெருங்குழுவும் என முடிக்க.

கருத்துரை:—பொய்யாது பெய்யும் மழையால் தவறாத விளைச்சலையுடையது பழையனென்னும் குறுநில மன்னனுடைய மோகூர்; அந்த மோகூர்ப் பழையனுடைய அவையிடத்திருந்தவர் நான்கு பிரிவினராகிய கோசர் என்னும் ஒருவகை வீரர். அவ் வீரர் தாம் சாற்றிய வஞ்சினமொழியாலே விளங்கினாற் போல, மதுரையிடத்துள்ள நாற்பெருங் குழுவும் தமது மொழியால் தாம் மேலாய் விளங்கினரென்பது கருத்து. இந்த நாற்பெருங்குழுவிடத்தெழும் ஓசை 'பட்டினத்து ஒல்லெனிமிழிசை மான' (537-38) என மேல் இயையும்.

விசேடவுரை:—பழையன்-இவன் மோகூர் என்னும் ஊரினிலாண்ட சிற்றரசன். இவன் பாண்டியமரபினனென்பது 'பழையன் காக்கும் குழைபயி னெடுங்கோட்டு வேம்பு' என்ற சிலப்பதிகாரத்தாலும், 'பழையன்மாறன்' என்ற தொடர் வழக்காலும் உணரலாம். இந்தப் பழையன் 'மாறன்' எனப்படுதலை மேல் 772-ஆல் வரியிலும் காணலாம். பழையன் என்போன் மாறன் எனப்படுதலை 'வித்தை யாண்ட விளம் பழையன் மாறனையும்' என்ற பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகத்திலும் காண்க. இந்த மோகூர்ப் பழையன் காக்கும் வேம்பினைச் சேரன் செங்குட்டுவன் துமித்து வாகைசூடினனென்பதை "பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின், முழாரை முழுமுதல் துமியப்பண்ணி...கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனை" என்ற பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகத்தாலும், "மோகூர் மன்னன் முரசங்கொண்டு, நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து" (பதிற்: 44) என்ற அடிகளாலும், "வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து, மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர், வலம்படு குழூஉநிலை யதிர மண்டி,...குருதி...ஒழுகப், படுபிணம் பிறங்கப் பாழ் பல செய்து, படுகண் முரசம் நடுவட் சிலைப்ப, வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக், கருஞ்சினை விறல்வேம் பறுத்த, பெருஞ்சினக் குட்டுவன்" (பதிற்:49) என்ற அடிகளாலும் தெற்றென வுணரலாம். செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகளும் "பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு, வேம்பு முதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப், போந்தைக் கண்ணிப் பொறைய!" என்றார். சிலப்: (27: 124-126). இவனது மோகூரின்மேல் மோரியர் சென்றதையும் அகநானூறுகூறும் (251).

இந்த மோகூர்ப்பழையனின் அவையகத்திருந்த ஒருவகை வீரர் கோசர் என்பார். இவர் பழையனைத் தலைவனாகக் கொண்டமையை, "பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப், பெரும்பெயர் மாறன் தலைவ னாகக், கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்" என மேல் வருதலாலும் (771-773) தெரியலாம். இவர் நான்கு பிரிவினர்களென்பது 'நாற்கோசர்' என்பதால் தெரிகின்றது. 'நாலூர்க் கோசர்' என்றதும் காண்க (குறுந்:15). இந்தக்கோசர் தொன்மூதாலத்துப்பொதுவிடத்துப் பகை சிதைத்தனர் என்ற

விடயம் "கோசர்,தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில், இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத், தெம்முனை சிதைத்த ஞான்றை"(அகம். 251)என்றதாலும், "பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு, தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய, நாலூர்க் கோசர் நன்மொழி போல, வாயாகின்றே" (குறுந்: 15) என்றதாலும் பெறப்படுகின்றது. இந்தக்கோசர், இரண்டுரையாமல் ஒன்றையே மொழிவர்என்பது பிரசித்தமாக நூல்களிற் காண்கிறது. 'ஒன்றுமொழிக்கோசர்' (குறுந்:73), 'வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை, வளங்கெழு கோசர்' (அகம்:205) என்பனவுங் காண்க. அதுபற்றியே நச்சினார்க்கினியரும் 'நான்மொழிக் கோசர் தோன்றியன்ன' என்றவிடத்து 'நாற்கோசர் மொழி தோன்றியன்ன' எனப்பிரித்துக்கூட்டிப் பொருள்கொண்டார். மற்றும், கோசர்மொழியினை ஒப்புமை காட்டினமைக்கேற்ப,'மொழியால் மேந்தோன்றியநாற்பெருங்குழு' எனப்பொருள்கண்டார். ஐம்பெருங்குழுவில் அமைச்சரைப்பிரித்துக் 'காவிதிமாக்கள்' (499) என முற்கூறினமையின், ஈண்டு ஏனை நாற்பெருங்குழுவையுங் கூறினார். ஐம்பெருங்குழுவாவன "அமைச்சர் புரோகிதர் சேனா பதியர்,தூதர் ஒற்றர் இவரென மொழிப". இங்குக் குறித்தோர் 'ஐம்பெருங்குழு'எனப்படுதலை "ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்" என்ற இளங்கோவடிகள் வாக்கினாலுணர்க.

அடிகள் 511-518:—கோடுபோழ்கடைநர்முதலாகக் கண்ணுள்வினைஞர்ருகவுள்ளாரும் பிறரும் கூடியிருத்தல் கூறும்.

கோடுபோழ் கடைநரும் திருமணி குயினரும்
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மரும் கலிங்கம் பகர்நரும்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையும் ஆயு மாக்களும்
*எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறருங் கூடி

பதவுரை:—(511) போழ் கோடு கடைநர்உம்-அறுத்த சங்கை வளை முதலியனவாகக் கடைவாரும், (512) சூடு உறு நல் பொன் சுடர் இழை புனைநர்உம்-சுடுதலுற்ற நன்றாகிய பொன்னை விளங்கும் பணிகளாகப் பண்ணுந் தட்டாரும், (513) பொன் உரை காண்மர்உம்-பொன்னையுரைத்தவுரையை அறுதியிடும் பொன் வாணிகரும், கலிங்கம் பகர்நர்உம்-ஆடைகளை விற்பாரும், (514) செம்பு நிறை கொண்மர்உம்-செம்பு நிறுக்கப்பட்டதனை வாங்கிக் கொள்வோரும்,வம்பு நிறை முடிநர்உம் - கச்சுக்களைத் தம்

*எவ்வகைச் செய்தியும் என்றது பிரதிபேதம்.

தொழின்முற்றுப்பட முடிவாரும், (515) பூஉம் புகைஉம் ஆயும் மாக்கள்உம்-பூக்களையும் சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும், (516)எ வகை (517)நுண்ணுதின் உணர்ந்த (516)செய்தியும்-பலவகைப்பட்ட கூரிதாகவுணர்ந்த தொழில்களையும், உவமம் காட்டி-ஒப்புக் காட்டி,(517)நுழைந்த நோக்கின்-கூரிய அறிவினையுடைய, (518) கண்ணுள் வினைஞர்உம் - சித்திரகாரிகளும், பிறர்உம்-[மற்றும்] யான் கூறப்படாதோரும், கூடி- இரண்டு; (எ-று.)-(522) காலுற நிற்றர என மேல் வருதலோடு இயையும்.

(511) கோடுபோழ்கடைநர்முதலாகக் (518) கண்ணுள் வினைஞரீறாகவுள்ளாரும் பிறருங்கூடி (522) காலுற நிற்றர என முடிக்க.

கருத்துரை:—சங்கையறுத்து வளைமுதலியனவாகக் கடைவாரும், அழகிய மணிகளைத் துளையிடுவாரும், பொன்தட்டாரும், பொன்வாணிகரும், ஆடைகள் விற்பாரும், செம்பு வாங்குநரும், வம்புமுடிநரும், பூவும் சாந்தும் விற்பாரும், பலவகைத் தொழில்களையும் ஒப்புக்காட்டிச் சித்திரம் வரையும் சித்திரகாரிகளும், இன்னோரைத் தவிர்த்த ஏனையோரும் திரண்டு [நால்வேறு தெருவினும்] நெருங்க நிற்கின்றனரென்பது கருத்து. இந்தக் கூட்டத்தெழும் ஓசை 'பட்டினத்து ஒல்லெனிமிழிசை மான' (537-38) என மேல் இயையும்.

விசேடவுரை:—சங்கையறுத்து வளைமுதலியவாகக் கடைதலை, கீழ் 316-ஆம் வரியிலும் காணலாம். அவ்விடத்துரையில் விவரம் காண்க. பொன்னுரை காண்மர்-'பொலங்தெரி மாக்கள்' என்றது சிலப்பதிகாரம். அவ்விடத்து 'பொற்பேதத்தைப் பகுத்தறியும் பொன்வாணிகர்' என அடியார்க்குநல்லாரிட்ட உரை பொன்வாணிகரியல்பை நன்கு விளக்கும். புகை-புகையுறுப்பு: புகைக்கப்படும் உறுப்பாகிய சாந்து என்றபடி, சாந்து-சந்தனக்கட்டை. செய்தி-தொழில்; சித்திரமெழுதுவார்க்குத் தாம் எழுதுகின்ற வடிவத்தின் தொழில்கள் தோன்றும்படி எழுதுதல் அரிதாகலின், அவ்வருமை குறித்துச் 'செய்தியும்' என்றார். கண்ணுள் வினைஞர் - சித்திரகாரிகள்; நோக்கினோர் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்தலிற் கண்ணுள் வினைஞரென்றார் என்றனர் நச்சினார்க்கினியர். பிறர்-கோடுபோழ்கடைநர்முதலாகக் கண்ணுள்வினைஞரீறாகக் கூறப்பட்டோர் தவிர்த்த ஏனையோர் என்றபடி. நுழைந்த நோக்கு-Sharp acumen.

இலக்கணக்குறிப்பு:—எண்ணும்மைகள் அடுக்கி 'கூடி' என்ற வினையெச்சத்தோடு இயைந்தன. சூடு-முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

அடிகள் 519-521:—நெய்தற்றொழில்செய்யும் கம்மியர் குழீஇயிருத்தல் கூறும்.

தெண்டிரை யவிரறல் கடுப்ப வொண்பல்
520 குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியருங் கம்மியர் குழீஇ

பதவுரை:—(519) தெள் திரை அவிர் அறல் கடுப்ப-தெளிந்த அலையில் விளங்குகின்ற கருமணலையொப்ப [மடிப்புகளையுடைய], ஒள் பல் (520) குறியவும் நெடியவும் மடி தரூஉ விரித்து-ஒள்ளிய பலவாகிய சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்புடைவைகளைக் கொண்டு வந்து விரித்து, (521) சிறியர்உம் பெரியர்உம் கம்மியர் குழீஇ - சிறியோரும் பெரியோருமாகிய நெய்தற்றொழிலைச் செய்வார் திரண்டு; (எ-று.) (522) காலுற நிற்றர என மேல் வருதலோடு இயையும்.

(520)மடிதரூஉ விரித்துக் (521) கம்மியர் குழீஇக் (522) காலுறநிற்றர என முடிக்க.

கருத்துரை:—அறலையொப்ப மடிப்புகளையுடையனவாய்ச் சிறியனவும் நெடியனவுமாய புடைவைகளைக் கொணர்ந்து விரித்துக் கம்மியர் திரண்டு [நால்வேறு தெருவினும்] நெருங்க நிற்கின்றனரென்பது கருத்து. இந்தக் கம்மியர் குழுவினிடத்தெழும் ஓசை 'பட்டினத்து ஒல்லெனிமிழிசைமான' (537-38) என மேல் இயையும்.

விசேடவுரை:—புடைவைகளை மடித்தது-அறலுக்கு உவமை. கம்மியர்-கர்மியர் என்பதன் சிதைவு; தொழில் செய்வோர் என்பது பொருள் [கர்மம்-தொழில்]; ஈண்டு, நெய்தல் தொழில் செய்வோரைக் குறித்தது. இவர்கள், அந்திக்கடையில், தெருவிற் புடைவை விற்பாராவர்.

அடி 522:—[மதுரையிடத்துள்ள பண்ணியம்பகர்நர் முதலாகக் கம்மியரீருகவுள்ளாரனைவரும் கூடி ஒருசேர] நால்வேறு தெருவினும் நெருங்கி நிற்றலைக் கூறும்.

நால்வேறு தெருவினுங் காலுற நிற்றர

பதவுரை:—(522) நால் வேறு தெருவினும் கால் உற நிற்றர-நான்காய் வேறுபட்ட தெருவுகள்தோறும் ஒருவர் காலோடு ஒருவர்கால் நெருங்க நிற்றலைச் செய்ய; (எ-று.)

கருத்துரை:—பண்ணியம்பகர்நர் முதலாகக் கம்மியரீருகவுள்ளாரனைவரும் ஒருசேரத் திரண்டு நான்காய் வேறுபட்ட தெருக்கள்தோறும் நெருங்கி நின்றனரென்பது கருத்து. இங்ஙன், நெருங்கி நின்றோரிடத்தெழுந்த ஓசை "பட்டினத்து ஒல்லெனிமிழிசைமான" (537-38) என மேல் இயையும்.

விசேடவுரை:—கோயிலைச் சூழ்ந்த ஆடவர்தெரு நான்காதலின், 'நால்வேறுதெரு' என்றார். நால்வேறுதெரு-அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனச் சொல்லப்பட்டாரிருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்கள். இனி, பொன்னும் மணியும் புடைவைகளும் கூலங்களும் விற்கும் நால்வகைப்பட்ட வாணிகர்தெருவென்றுமாம்.

அடிகள் 523-526:—சேரனது நாளோலக்கவிருப்பிலே எழும் கம்பலை, உவமையாவது கூறும்.

[கவனிப்பு:— மதுரையிடத்துள்ள பௌத்தப் பள்ளியிடத்தும் அந்தணர் பள்ளியிடத்தும் அமணப்பள்ளியிடத்தும் அவையத்திடத்தும் காவிதிமாக்களிடத்தும் எழுகின்ற ஓசைக்கு இக்கம்பலை உவமையாகும்: இது கீழேயும் குறிக்கப்பட்டுள்ளது.]

கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்
***தண்கட னாட னொண்பூங் கோதை**
பெருநா ளிருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்ப

பதவுரை:—(523) கொடும் பறை கோடியர்-கண்கள் வளைந்த பறையினையுடைய கூத்தருடைய, கடும்பு உடன் வாழ்த்தும்-சுற்றம் சேர வாழ்த்தும், (524) தண் கடல் நாடன்-குளிர்ந்த கடல் சேர்ந்த நாட்டையுடையவனாகிய, ஒள் பூ கோதை-ஒள்ளிய பனந்தாரையுடைய சேரனுடைய, (525) பெரு நாள் இருக்கை-பெரிய நாளோலக்க இருப்பிலே, விழுமியோர்-எல்லாக் கலைகளையுமுணர்ந்த சீரியோர், குழீஇ-திரண்டு, (526) விழைவுகொள் கம்பலை கடுப்ப-[அவன் கேட்பத் தருக்கங்களைக் கூறி] விரும்புதல் கொண்ட ஆரவாரத்தையொப்ப; (எ-று).—(538) கல்லென [-கல்லென்ற ஒலியுடனே நடக்க] என மேல் இயையும்.

(524) கோதை (525) இருக்கையில் குழீஇ (526) விழைவுகொள் கம்பலை கடுப்ப என முடிக்க.

கருத்துரை.—கூத்தருடைய சுற்றம் சேர வாழ்த்தும் தண்கடனாடனாகிய சேரனுடைய பெரிய நாளோலக்க விருப்பிலே எல்லாக்கலைகளையுமுணர்ந்த சீரியோர் திரண்டு, அவன் கேட்பத் தருக்கங்களைக் கூறியெழுப்பும் ஆரவாரம் மதுரையிடத்துள்ள பலபள்ளியிடத்தும் அவையத்திடத்தும் காவிதிமாக்களிடத்தும் எழுகின்ற ஓசையைக் கடுக்கும் என்பது கருத்து.

விசேடவுரை:—'விழுமியோர் குழீஇ' எழுப்பும் விழைவுகொள் கம்பலையாகலின், அக்கம்பலை-கடவுட்பள்ளியிடத்தும் அந்தணர் பள்ளியிடத்தும் அமணப்பள்ளியிடத்தும், அவையத்திடத்தும் காவிதிமாக்களாகிய அமைச்சரிடத்தும் எழும் ஓசைக்கு உவமமா

* பி—ம். தெண்கடனாடன்.

யிற்று. இவ்வுவமைநயமும் பொருத்தமும் நச்சினார்க்கினியர் காட்டக்கண்டோமேயன்றிமற்றியாம்காணுந்தரத்ததோ? சேரனவைக்களத்துச் சிறியோர் அவன் கேட்பத் தருக்கங்களைக் கூறுவரென்பதை 'சேரனவையுந் தருக்கமும்'(26:63-4) என்ற மணிமேகலையாலும் உணரலாம். 'பல சமயத்தோரும் தம்மிற்றும் மாறுபட்டுக் கூறும் தருக்கத்தைச் சேரக் கூறக் கேட்டிருக்கின்ற கம்பலை போலவென்றார்' என்றனர் நச்சினார்க்கினியர். 'கல்வியிற் றிகழ் கணக் காயர் கம்பலை' என்றார் கம்பரும். கோதை-சேரமன்னரைக் காட்டும் பெயர்; சேரமான்பெருமாணாயனாரை "மாக்கோதையார்" என்பதும் காண்க.

அடிகள் 526-535:—சோறிடுஞ்சாலைகளில் இன்சோறு பிறவும் தருநர் பற்றிக் கூறும்.

பலவுடன்
***சேறு நாற்றமும் பலவின் சுளையும்**
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வே றுருவிற் காயும் பழனும்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடகும்
அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேரூன் சோறும்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்
இன்சோறு தருநர் பல்வயி னுகர

பதவுரை:—(526) பலவுடன்-கூறுதன பலவற்றுடனே, (527) சேறும் நாற்றமும் பலவின் சுளைஉம்-தேனும் நாற்றமும் உடையவாகிய பலாப்பழத்தின் சுளையையும், (528) வேறு பட கவினிய தேம் மா கனிஉம்-வடிவுவேறுபட அழகுபெற்ற இனிய மாவிற் பழங்களையும், (529) பல் வேறு உருவின் காய்உம்-பலவாய் வேறுபட்ட வடிவினையுடைய பாகற்காய் வாழைக்காய் வழுதுணங்காய் முதலிய காய்களையும், பழன்உம்-வாழைப்பழம் முந்திரிகைப்பழம் முதலிய பழங்களையும், (530) கொண்டல் வளர்ப்ப கொடி விடுபு கவினி-மழை பருவத்தே பெய்து வளர்க்கையினாலே கொடிகள் விட்டு அழகுபெற்று, (531) மெல் பிணி அவிழ்ந்த-மெல்லிய சுருள் விரிந்த, குறு முறி அடகுஉம்-சிறிய இலைகளையுடைய இலைக்கறிகளையும், (532) தீம் சேறு-இனிய பாகினாற் கட்டின, அமிர்து இயன்றன்ன கடிகைஉம்-அமிர்தம் தேருக[துண்டமாக] நீண்டாற்போன்ற கண்டசருக்கரைத்தேற்றையும், (533) புகழ் பட பண்ணிய பெரு ஊன் சோறுஉம்-புகழ்ச்சிகள் உண்டாகச் சமைத்த பெரிய இறைச்சிகளையுடைய சோற்றையும், (534) கீழ் செல வீழ்ந்த கிழங்கொடு-நிலத்தின்கீழ் செலும்படி பாறையள

* "சேறு நாற்றமும் வேறுபடக் கவினிய
பலவின் சுளையும் தேமாங்கனியும்" என்றும் பாடம்.

வாக வீழ்ந்த கிழங்குடனே, (534) பல் வயின்-பலவிடங்களினும், நுகர-அநுபவிக்கும்படி, இன் சோறு-இனிய பாற்சோற்றையும், (534) பிறஉம்-பால் முதலிய பிறவற்றையும், (535) தருநர்-கொண்டுவந்து இடுவாரும் [இடுவாரிடத்து எழுந்த ஓசையும் என்றபடி]; (எ-று).

(526) கூருந்தனபலவுடன் (527) சுளையும் (528) கனியும் (529) காயும்பழனும் (531) அடகும் (532) கடிகையும் (533) ஊன்சோறும் (534) கிழங்கொடு (535) நுகரஇன்சோறு (534) பிறவும் (535) தருநர் என முடிக்க.

கருத்துரை:—ஈண்டுக் கூருத உணவுப்பொருள் பலவற்றுடனே தேனும் மணமும் உடையவாய பலாச்சுளையையும், தேமாம் பழங்களையும், பல்வேறு உருவினையுடைய காய்களையும் பழங்களையும், மழைபெய்தலாலே கிளைவிட்டுவளர்ந்து அழகுற மெல்லிய சுருள்விரிந்த சிறிய இலைகளையுடைய இலைக்கறிகளையும், கண்ட சருக்கரைத் தேற்றையும், பெரிய இறைச்சிகளையுடைய சோற்றையும், கிழங்குகளையும், இனியபாற்சோறு பால் முதலியவற்றையும் பலவிடங்களினும் நுகரும்படி கொண்டுவந்து இடுவாருளரென்பது கருத்து. அங்ஙன் இடுவாரிடத்தெழும் ஓசை 'பட்டினத்து ஒல்லெனிமிழிசைமானக்கல்லென' (537-38) என மேல் இயையும்.

விசேடவுரை:—சேறு-சுளையிலிருக்கின்ற தேன். வழுதுணங் காய்-கத்தரிக்காய். 'கொடி விடுபு' என்றவிடத்துக் 'கொடி' என்றது-ஒழுங்குபட விடுகின்ற கிளைகளை. தேறு-துண்டம். கண்டசருக்கரை-கற்கண்டு. வீழ்ந்த கிழங்கு-கீழே வளர்ந்த கிழங்கு. 'இன்சோறுபிறவும்தருநர்' என்றமையால் சோறிடுஞ் சாலைகள் குறிக்கப்பட்டன வென்பது போதரும்.

அடிகள் 536 542:—வங்கம்கொணர்ந்த பண்டம் இழிதரும் பட்டினத்து ஒல்லென முழங்குகின்ற ஓசை, உவமையாவது கூறும்.

[கவனிப்பு:—மதுரையிடத்துள்ள பண்ணியம் பகர்நரிடத்தும் நாற்பெருங் குழுவிடத்தும் கோடுபோழ்கடைநர் முதலாகக் கண்ணுள்வினைஞரீறுகவுள்ளாரும் பிறருங்கூடிய கூட்டத்திடத்தும் நெய்தற்றொழில்செய்யும் கம்மியர்கூட்டத்திடத்தும் சோறிடுஞ் சாலைகளில் இன்சோறுபிறவும் தருநரிடத்தும் எழுகின்ற ஓசைக்கு இந்தப் பட்டினத்து ஒல்லெனிமிழிசை உவமையாகும். இது கீழேயும் குறிக்கப்பட்டுள்ளது].

வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்
தொல்லெ னிமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்

540 பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோதம்
இருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்து
உருகெழு பாஅள் வருவன

பதவுரை:—(539) நன தலை வினைஞர்-அகன்ற இடத்தை யுடைய தேசங்களில் வாணிகர், கலம் கொண்டு-ஈண்டுச் செய்த பேரணிகலங்களைக் கொண்டு, மறுக-போதல்காரணமாக, (536) வால் இதை எடுத்த-நன்றாகிய பாய்விரித்த, வளி தரு வங்கம்-காற்றுக் கொண்டுவருகின்ற மரக்கலங்கள்,-(540) பெரு கடல் குட்டத்து புலவு திரை ஓதம்-பெரிய கடல்சூழ்ந்த இடத்தினின்றும் புலால்நாறும் திரையையுடைய ஓதமானது, (541) இரு கழி மருவி பாய-கரிய கழியிற் புகார்முகத்தே யேறிப் பரக்கின்ற அளவிலே, பெரிது எழுந்து-மிக்கெழுந்து, (542) உரு கெழு பால்நாள் வருவன-அச்சம் பொருந்திய நடுவியாமத்தே வருகின்றவற்றின் [ஏற்றியுள்ள], (537) பல் வேறு பண்டம் இழி தரும் பட்டினத்து-பலவாய் வேறுபட்ட சரக்குகள் இறங்குதலைச் செய்யும் பட்டினத்து, (538) ஒல்லென் இமிழ் இசை மான-ஒல்லென முழங்குகின்ற ஓசையையொக்க, கல்லென-கல்லென்ற ஒலியுடனே நடக்க; (எ-று.)—கல்லென என்பது, மேல் 'பல்வேறு புள்ளின் இசையெழுந்தற்றே' (543) என்பதனோடு முடியும்.

(539) வினைஞர் அணிகலங்கொண்டு போதல்காரணமாக (536) வந்த வங்கங்கள் (540) ஓதம் (541) கழியிற்பாய்தலால் பெரிதெழுந்து (542) பாஅள் வருவனவற்றில் [ஏற்றியுள்ள] (537) பல் வேறுபண்டங்கள் இழிதரும் பட்டினத்து(538) ஒல்லெனிமிழிசை மானக் கல்லென என முடிக்க.

கருத்துரை:—வாணிபஞ்செய்வோர் இத்தமிழகத்துச் செய்த பேரணிகலங்களை அயல்தேசங்களுக்குக் கொண்டுபோதல் காரணமாகத் தாம் மரக்கலங்களில் ஏற்றிவந்த சரக்குகளை, ஓதப் பெருக்குப் புகார்முகத்தேயேறிப்பரக்கின்ற நடுவியாமத்தே இறக்குமதி செய்ய, அங்ஙன் சரக்குகளை இறக்குங்கால் பட்டினத்தெழுந்த ஒல்லென முழங்குகின்ற வோசையையொத்துக் கல்லென்ற ஒலியுடனே கூடியிருந்தது என்பது கருத்து.

விசேடவுரை:—வணிகர் தாம்கொணர்ந்த சரக்குகளை நடுவியாமத்தே இறக்குதற்குக்காரணம்-அந்நடுவியாமத்திலே தான் திரையையுடையஓதப்பெருக்கு கழிமூலம்புகார்முகத்தேறிப் பரக்கின்றதாலாகும். இவ்வோதப்பெருக்கில், மரக்கலங்கள் பெரிதெழுந்து இலேசாகப் புகார்த்துறையுள் புகமுடியும். இதுபற்றியே நச்சினார்க்கினியரும் "பெரிதெழுந்தென்றார், பாயும்வாங்கிச் சரக்கும் பறியாமல் வருகின்றமை தோன்ற. ஓதமருவிப்பாயவென்றார், அவ்வோதவேற்றத்திலே கழியிலே வருமென்பதுணர்த்தற்கு" என்று விளக்கமிட்டார். ஓத ஏற்றம் - Tides. புகார்-ஆற்று முகம்: துறை Port. இச்சொல் இப்பொருளதாதலை "புகாஅர்ப்

புகுந்த பெருங்கலம்'' (புறம். 30) என்றவிடத்துங் காண்க. மற்றும், ஈண்டு, ''மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது, புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்'' (புறம். 30) என்ற அடிகளையும், 'பாய்களையாது பரந்தோண்டாதென்பதனால் துறை நன்மை கூறியவாறும்' என்ற அதன் விசேடவுரையையும் நினைவுகூர்க. வணிகர் தாம்கொணர்ந்த சரக்குகளைவிற்றுத் தமிழகத்துச் செய்யப்பட்டுள்ள பேரணிகலங்களை அயல்நாடுகளுக்குக் கொண்டு போவர். வரி 322-உரை ஒப்புநோக்குக. பேரணிகலங்கள் முத்து முதலியவற்றாலாயவை எனக் கொள்க. இதை-பாய். Sails. வளிதரு வங்கம் - Vessels wafted by the wind. திரைஓதம் - மடிதலையுடைய ஓதப்பெருக்கு. ஒல்லென், கல்லென - ஒலிக்குறிப்புச் சொற்கள். கல்லென்ற ஒலி, ஒல்லென்ற ஓசையையொக்கும்படி யெழுந்ததென்றபடி.

அடிகள் 542-544:—அல்லங்காடியினோசை பல்வேறு புள்ளினிசை யெழுந்ததையொக்குமெனக்கூறும்.

பெயர்தலின்
பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே
அல்லங் காடி யழிதரு கம்பலை

பதவுரை:-(544)அல் அங்காடி அழிதரு கம்பலை-அந்திக்காலத்துக்கடையில் மிகுதியைத்தருகின்ற ஓசை, (542) பெயர்தலின்-(இரையை நிறைய மேய்ந்து பார்ப்பிற்கு இரைகொண்டு அந்திக் காலத்து) மீளுதலின், (543) பல் வேறு புள்ளின் இசை எழுந்தற்று-பல சாதியாய் வேறுபட்ட பறவைகளினோசை எழுந்த தன்மைத்து; (எ-று.)

(544) கம்பலை (543) இசையெழுந்தற்று என முடிக்க.

இனி, இங்ஙன் முடித்த பின்னர், (365) இருபெருநியமத்து [ஒரு கூறுகிய] (544) அல்லங்காடியில் அழிதரு கம்பலை (460) [தெய்வங்கட்குப் பலிகொடுக்கைக்கு அந்தியிற்கொண்ட விழவிலே] தூரியங்கறங்குகையினாலும், (524-26) கோதையின் பெருநாளிருக்கையில் விழைவுகொள் கம்பலைகடுப்பக் (538) கல்லென்கையினாலும், (537-38) பண்டம் இழிதரும் பட்டினத்து ஒல்லெனிமிழிசைமானக் கல்லென்கையினாலும் (543) பல்வேறு புள்ளினிசையெழுந்தற்றே எனச் சேரப்பொருந்தும்படி வினைமுடிக்க வேண்டுவர் நச்சினார்க்கினியர். 538-ஆம் வரியில் வந்துள்ள 'கல்லென' என்பது மேல் 526-ஆம் வரியிலுள்ள 'விழைவுகொள் கம்பலைகடுப்ப' என்பதன் பின்னர்க் கூட்டிப் பொருள்கொள்ளப் பட்டது.

கருத்துரை:—அந்திக்காலத்துக்கடையில் மிகுகின்ற ஓசை, இரைகொண்டு அந்திக்காலத்து மீளும் பலவகைப் பறவைகள் எழுப்பும் ஓசையை யொத்திருந்தது என்பது கருத்து.

விசேடவுரை:—அல்லங்காடியில் எழுகின்ற இவ்வோசைகளின் வேறுபாடுகளைநோக்கிப் பல்வேறு புள்ளோசைகளை உவமங்கூறினர். கம்பரும், "களனவி லன்னமே முதல கண்ணகன், றளமலர்ப் புள்ளொடு தயங்கி யின்னதோர், கிளவியென் றறிவருங் கிளர்ச்சித் தாதலான், வளநகர்க் கூலமே போலு மாண்பது" (பம்பைப்படலம்-7) என்று கூறியதும் காண்க. 'பெயர்தலின்' என்றது அந்திக்காலத்துப் புள்பெயர்தலைக் காட்டுவது; பெயர்தல் - மீளுதல். அந்திப்போதினில் பல்வகைப் பறவையும் தம்குஞ்சுகளுக்கு இரை கொண்டு மீளுதலை "ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து, அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை, இறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த, பிள்ளை யுள்வாய்ச் செரீஇய, இரைகொண் டமையின் விரையுமாற் செலவே" என்ற குறுந்தொகைச்செய்யுளால் (92) அறியலாம். அங்ஙனம் மீளும் பறவைகள் பல்வேறு ஓசைகளையெழுப்பும். இக்காலத்தும், இக்காட்சியைச் செங்கற்பட்டு மாவட்டத்து 'வேடந்தாங்கல்' என்னும் ஊரிலுள்ள ஏரிக்கரையில் அந்திப்போது கண்டு காணலாம். [Vedanthangal Bird Sanctuary]

'அழிதரு' என்றவிடத்து, அழி-மிகுதியைக் குறிக்கும்; அழிபசி' (குறள், 226) என்றவிடத்துப்போல.

அடிகள்:—545-558—மாலைப்போது வந்துநீங்கிய பெற்றிமை அழகுறக் கூறும்.

ஒண்சுடர் உருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்பகற் கொண்டு
குடமுதற் குன்றஞ் சேரக் குணமுதல்
நாண்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற இரவுவர நயந்தோர்
காத லின்றுணை புணர்மார் ஆயிதழ்த்
தண்ணறுங் கழுநீர் துணைப்ப இழைபுனையூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்பப்
பெண்மகிழ் வுற்ற பிணைநோக்கு மகளிர்
நெடுஞ்சுடர் விளக்கங் கொளீஇ நெடுநகர்
எல்லை யெல்லா நோயொடு புகுந்து
கல்லென் மாலை நீங்க

பதவுரை:—(556) நெடு நகர் (557) எல்லை எல்லாம்-பெரிய ஊரினெல்லையாகிய இடமெல்லாம், (555) பெண் மகிழ்வு உற்ற பிணை நோக்கு மகளிர்-குணச்சிறப்பால் உலகத்துப் பெண் சாதியினரும் விரும்பும்படி பொருந்திய மான்பிணைபோலும் நோக்கினையுடைய

மகளிர், (556) நெடு சுடர் விளக்கம் கொளீஇ - நெடிய ஒளியினை யுடைய விளக்கினையேற்றி, (550) காதல் இன் துணை புணர்மார்- தம்மேற் காதலையுடைய தமக்கு இனிய கணவரைக் கூடுதற்கு, (551) இழை புனையூஉ - அணிகலையணிந்து, (550) ஆய் இதழ் (551) தண் நறு கழுநீர் துணைப்ப - ஆராய்ந்த இதழ்களையுடைய குளிர்ந்த நறிய செங்கழுநீர்களை மாலைகட்டும்படியாக, (552) நல் நெடு கூந்தல் நறு விரை குடைய - நன்றாகிய நெடிய மயிரிற் பூசின நறிய மயிர்ச்சந்தனத்தை அலைத்து நீக்கும்படியாக, (553) நரந்தம் அரைப்ப - கத்தூரியை அரைக்கும்படியாக, நறு சாந்து மறுக - நறிய சந்தனம் அரைக்கும்படியாக, (554) மெல் நூல் கலிங்கம் கமழ் புகை மடுப்ப - மெல்லிய நூலாற் செய்த ஆடைகளுக்கு மணக்கின்ற அகிற்புகையை ஊட்டும்படியாக, (547) குணமுதல் (548) நாள் முதிர் மதியம் தோன்றி நிலா விரிபு (549) பகல் உரு உற்ற இரவு வர - கீழ்திசையிடத்தே பதினைறுநாட் சென்று முதிர்ந்த நிறைமதி எழுந்து நிலாப் பரக்கையினாலே பகலின் வடிவையொத்த இராக்காலம் வரும்படி, (545) ஒள் சுடர் உருப்பு ஒளி சினம் தணிந்து மழுங்க (546) சென்ற ஞாயிறு - ஒள்ளிய கிரணங்களையுடைய வெப்பத்தை யுடைய ஒளி சினம் மாறிக்குறையும்படி ஒழுகப்போன சூரியன், நல் பகல் கொண்டு (547) குடமுதல் குன்றம் சேர-பின்னர் நன்றாகிய பகற்பொழுதைச் சேரக்கொண்டு மேற்றிசையிடத்து அத்தகிரியைச் சேருகையினாலே, (558) கல்லென் மாலை-கல்லென் னும் ஓசையையுடைய மாலை, (549) நயந்தோர்-(கணவர் பிரிதலிற்) கூட்டத்தை விரும்பியிருந்தார்க்கு, (557) நோயொடு புகுந்து (558) நீங்க-நோயைச் செய்தலோடே புகுந்து (பின்னர்) போகை யினாலே; (எ-று.) (558) 'நீங்க' என்ற இதனை (620) 'முந்தையாமஞ் சென்றபின்றை' என்பதனோடு கூட்டி இயைக்க.

(556) நெடுநகர் (557) எல்லையெல்லாம் (555) மகளிர் (556) விளக்கங் கொளீஇக் (550) காதலின்றுணைபுணர்தற்குப் (551) புனையூஉத் துணைப்பக் (552) குடைய (553) அரைப்ப மறுக (554) மடுப்ப (549) இரவுவரும்படி (546) ஞாயிறு (547) குன்றஞ் சேருகையினாலே (558) மாலை (549) நயந்தோர்க்கு (557) நோயொடு புகுந்து (558) [பின்னர்] நீங்க என முன்பின்கூட்டி முடிக்க. துணைப்ப, குடைய, அரைப்ப, மறுக, மடுப்ப என்பன 'சேர' என்பதோடு இயைந்தன.

கருத்துரை:— நெடுநகரினிடமெல்லாம் மான்பிணைபோலும் நோக்கினையுடைய மகளிர் ஒளிவிளக்கினையேற்றித் தம் கணவ ரைக் கூடுதற்பொருட்டு அணிகலையணிந்து செங்கழுநீர்ப் பூக்களை மாலை கட்டும்படியாகவும், கூந்தலிற் பூசின மயிர்ச் சந்தனத்தை அலைத்து நீக்கும்படியாகவும், கத்தூரியையும் நறிய சந்தனத்தையும் அரைக்கும்படியாகவும், மெல்லிய நூலாடை களுக்கு அகிற்புகையூட்டும்படியாகவும் இன்னோரன்ன தொழில் நிகழ்த்தும்படி ஞாயிறு அத்தமிக்க, கல்லென்னும் ஓசையொடு

மாலைக்காலம் வந்து, கணவரைப் பிரிந்தோர்க்கு நோய்செய்து பின்னர் நீங்கியது என்பது கருத்து. அந்த மாலைக்குப்பின் வந்த இரவு - பௌர்ணமி இரவாகும் என்பது 547—549-ஆம் வரிகளால் தெளியலாம்.

விசேடவுரை:—பெண் மகிழ்வுற்ற பிணைநோக்கு மகளிர் என்ற விடத்துப் பெண்டிரும் விரும்பும் கண்ணழகும் நோக்கும் பெற வைத்தபடி. மகளிர் மாலைக்காலத்து விளக்கேற்றுதலை "வளமனைப் பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி அந்தியயர (குறிஞ்சிப்பாட்டு, 223-225), "மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற் கோர், கோலங் கொடியிடையார் தாங்கொள்ள" (சிலப்: 9: 3-4) என்பவற்றாலும் அறியலாம். நரந்தம்-கத்தூரி. ஆடைகளுக்குக் கமழ்புகை யூட்டுதலை "பூந்துகில் கழும ஊட்டும் பூம்புகை" (ஐங்-71) என்றதாலும் அறிக. ஞாயிறுக்குச் சினந்தணிதல்-வெம்மை தணிதல். பகல் கொண்டுசேர என்றது, தான் மறையப் பகல் மாய்தலால். பகல்மறைய மாலை புகுதலியல்பு; 'பகன் மாய்ந்த மாலை' என்றார் இளங்கோவடிகளும். (சிலப்: 9: 2-3). காதலரைப் பிரிந்தார்க்கு மாலை நோய்செய்து புகுதலை "பொழுது கண்டிரங்கல்" என்ற திருக்குறள் அதிகாரத்திற் பரக்கக் காணலாம்.

இலக்கணக்குறிப்பு:— விரிபு - செய்பு என்னும் எச்சம். நயந்தோர் என்பதன்பின் நான்கனுருபு தொக்கது.

அடிகள் 558 - 589:—வரைந்துகொண்ட மகளிர் கணவரைப்புணர்ந்து நாணுக்கொண்டிருப்ப, பரத்தையர் மனைதோறுஞ்சென்று இளையரொடு பொய்தலயர்தல் கூறும்.

நாணுக்கொள
ஏழ்புணர் சிறப்பின் இன்றொடைச் சீறியாழ்
தாழ்பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து
வீழ்துணை தழீஇ வியல்விசும்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்டு
ஆய்கோ லவிர்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிகுநல மெய்திப்
பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர்
திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்துக்
கொண்டன் மலர்ப்புதன் மானப்பூ வேய்ந்து
நுண்பூ ணகம் வடுக்கொள முயங்கி
மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரு நணியரு நலனயந்து வந்த
இளம்பல் செல்வர் வளந்தப வாங்கி
நுண்டா துண்டு வறும்பூத் துறக்கும்

மென்சிறை வண்டினம் மானப் புணர்ந்தோர்
நெஞ்சே மாப்ப வின்றுயில் துறந்து
பழந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய
மணம்புணர்ந் தோங்கிய அணங்குடை நல்லில்
ஆய்பொன் னவிர்தொடிப் பாசிழை மகளிர்
ஒண்சுடர் விளக்கத்துப் பல்ருடன் துவன்றி
நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நாப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனித்துறைக் குவவுமணன் முனைஇ மென்றளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி
மணங்கமழ் மனைதொறும் பொய்த லயர

பதவுரை :—(577) கொழு குடி செல்வரும் பிறரும் மேஎய-வளவிய குடியிற் பிறந்த செல்வரும் அவர்கள்பாற்றோன்றிய பிறசெல்வரும் பொருந்தியுள்ள, (578) அணங்கு உடை நல் இல்-இல்லுறை தெய்வங்களையுடைய நன்றாகிய அகங்களில், (578) மணம் புணர்ந்து ஓங்கிய (579) ஆய் பொன் அவிர் தொடி பசு இழை மகளிர் - வரைந்துகொள்ளப்பட்டு உயர்ச்சிபெற்ற ஓட்டைவைத்த பொன்னாற் செய்த விளங்குகின்ற தொடியினையும் பசியபூணினையுமுடைய மகளிர், (580) ஒள் சுடர் விளக்கத்து-ஒள்ளிய விளக்கினுடைய ஒளியிலே, (559) ஏழ் புணர் சிறப்பின் இன் தொடை சிறு யாழ் (560) பண்ணு பெயர்த்து-இசையேழும் தன்னிடத்தேகூடின தலைமையினையுடைய இனிய நரம்பினையுடைய சிறியயாழைப் பண்களை மாறிவாசித்து, (561) வீழ் துணை தழீஇ-தம்மை விரும்பின கணவரைப் புணர்ந்து, (558) நாணு கொள-புணர்ச்சி நீங்கிற்றாகத் தமக்கு உயிரினுஞ் சிறந்த நாணைத் தம்மிடத்தே தடுத்துக்கொள்ள,

(இங்ஙன் ஒருபாலாக அதற்கு நேர்மாறாக)

(581) நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும் (582) வானவ மகளிர் மான-நீலநிறத்தையுடைய ஆகாயத்தே நெஞ்சமர்ந்து விளையாடும் தெய்வமகளிர் வருத்துமாறுபோல, கண்டோர் (583) நெஞ்சு நடுக்கு உறாஉ கொண்டி மகளிர்-தம்மைக் கண்டோருடைய நெஞ்சை வருத்தமுறுவித்துப் பொருள் வாங்குதலையுடைய பரத்தையர், (580) பலர் உடன் துவன்றி-பலருஞ் சேர நெருங்கி, (585) குண்டு நீர் (586) பனி துறை குவவு மணல்-ஆழ்ந்த நீரினையுடைய குளிர்ந்த துறையிடத்துக் குவிந்த மணலிலே, (584) யாமம் நல் யாழ் நாப்பண் (560) தாழ்பு அயல் கனை

குரல் கடுப்ப (584) நின்ற (585) முழவின் மகிழ்ந்தனர் ஆடி - முதற் சாமத்தில் வாசித்தற்குரிய நன்றாகிய யாழ்களுக்கு நடுவே அவற்றிற்கேற்பத் தாழ்ந்து தம்வயிற்செறிந்த ஓசையையொக்க நின்ற முழவாலே மனமகிழ்ந்து (கூத்து) ஆடி, (586) முனை இ - [அதனை] வெறுத்து, (587) கொழு கொம்பு (586) மெல் தளிர் (587) கொழுதி-கொழுவிய கொம்புகளினின்ற மெல்லிய தளிர்களைப் பறித்து, (588) குவளை-குவளைப் பூக்களை, (587) நீர் நனை மேவர - நீர்க்கீழரும்புகளோடே பொருந்துதல்வரக் கட்டின, (588) நெடு தொடர் வடிம்பு உற அடைச்சி-நெடியதொடர்ச்சியை வடிம்பிலே விழும்படி உடுத்து, (562) நீர் திரண்டன்ன கோதை - நீர்திரண்டாற் போன்ற வெள்ளியபூக்களாற்செய்த மாலைகளை. (561) வியல் விசும்பு கமழ - அகற்சியையுடைய விசும்பிலே சென்று நாறும்படி, (562) பிறக்கு இட்டு-கொண்டையிலே முடித்து, (571) சேயரும் நணியரும் நலன் நயந்து வந்த (572) இள பல் செல்வர்-புறமண்டலத்தாரும் உள்ளூரிலுள்ளாருமாய்த் தம்முடைய வடிவழகை விரும்பிவந்த இளையராகிய பல செல்வத்தையுடையாரை, (570) பல மாயம் பொய் கூட்டி-பல வஞ்சனைகளையுடைய பொய்வார்த்தைகளாலே முதற்கூட்டிக்கொண்டு, (569) நுண் பூண் ஆகம் வடு கொள முயங்கி - அவருடைய நுண்ணிய பூண்களையுடைய மார்பைத் தம்மார்பிலே வடுப்படும்படியாக முயங்கி, [பின்னர்], (570) கவவு கரந்து (572) வளம் தப வாங்கி- [அங்ஙனம் அன்புடையார்போலே முயங்கின] முயக்கத்தை அவர்பொருள் தருமளவும் மறைத்து அவருடைய செல்வமெல்லாம் கெடும்படியாக வாங்கிக்கொண்டு, (573) நுண் தாது உண்டு வறு பூ துறக்கும் (574) மெல் சிறை வண்டு இனம் மான - பூ அலருங்காலமறிந்து அதன் நுண்ணிய தாதையுண்டு தாதற்ற வறுவியபூவைப் பின்னர் நினையாமல் துறந்துபோம் மெல்லிய சிறகையுடைய வண்டின்திரளையொப்ப, புணர்ந்தோர் (575) நெஞ்சு ஏமாப்ப இன் துயில் துறந்து - தம்மை நுகர்ந்தோருடைய நெஞ்சுகலக்கமுறும்படி அவரிடத்து இனிய கூட்டத்தை நோராகக் கைவிட்டு, [பின்னரும்], (565) மே தகு தகைய மிகு நலம் எய்தி - (முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியாற் குலைந்த ஒப்பனைகளைப் பின்னும்) பெருமைதருகின்ற அழகினையுடைய மிகுகின்ற நன்மையுண்டாக அலங்கரித்துக்கொண்டு, (567) திறந்து மோந்தன்ன சிறந்து கமழ் நாற்றத்து-அலர்கின்ற பருவத்தே கையாலலர்த்தி மோந்து பார்த்தாலொத்த மிக்கு நாறுகின்ற வாசனையையுடைய, (556) பெரு பல் குவளை சுரும்பு படு பல் மலர் - பெரிய பலவாகிய செங்கழுநீரிற் சுரும்புகளுக்கு அலர்கின்ற பலபூக்களையும், (568) பூ - ஏனைப்பூக்களையும், கொண்டல் மலர் புதல் மான வேய்ந்து - மழைக்கு மலர்ந்த மலரையுடைய சிறுதூற்றையொக்கச் சூடி, (564) போது அவிழ் புது மலர் தெரு உடன் கமழ - அலரும்பருவமாக மலர்ந்த புதிய விடுபூக்கள் தெருவுகளெங்கும் நாற, (563) ஆய் கோல் அவிர் தொடி விளங்க வீசி-அழகிய திரட்சியையுடைய விளங்குகின்ற

தொடி மிகவிளங்கும்படி கையை வீசி, (589) மணம் கமழ் மனை தொறும் - மணநாறுகின்ற மனைதோறும், (576) பழம் தேர் வாழ்க்கை பறவைபோல-பழுமரமுள்ள இடந்தேடிச்சென்று அவற்றின் பழத்தையே ஆராய்ந்து வாங்கி நுகர்தலைத் தமக்குத் தொழிலாகவுடைய புள்ளினம்போல [ச்சென்று], (589) பொய்தல் அயர-[பொருள் தருதற்குரிய இளையரோடு] விளையாடுதலைச் செய்ய; (எ.று.)

(577)செல்வரும் பிறரும் மேவப்பட்ட (578) அணங்குடை நல்ல இல்லிலே மணம்புணர்ந்தோங்கிய (579) பாசிழைமகளிர் (580) ஒண்சுடர் விளக்கத்தொளியிலே (559)சீறியாழைப் (560) பண்ணுப்பெயர்த்து (561) வீழ்துணை தழீஇ (558) நாணுக் கொள - என முன்பின்கூட்டிப் பொருட்பொருத்தமுற முடிக்க. [கவனிப்பு:—இது வரைந்துகொண்ட மகளிரைப்பற்றிய பொருண் முடிபு. இனி, கொண்டிமகளிரைப்பற்றியபொருண் முடிபு மேலே வருவது.]

(581) விசும்பிலாடும் (582) வானவமகளிர்மானக் கண்டோர் (583) நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டிமகளிர் (580) பலருடன் துவன்றிக் (586) குவவுமணலிலே [(584) நல்யாழ்நரப்பண் (560) தாழ்பயற் கனைகுரல் கடுப்ப (584) நின்ற] (585) முழவின் மகிழ்ந்தனராடி (586) அதனை முனைஇ மென்றளிர்களைக் (587) கொழுதி (588) குவளையயடைச்சிக் (563) கோதையை (561) விசும்புகமழப் (562) பிறக்கிட்டுச் (571) சேயரும் நணியருமாய் வந்த (572) இளம்பல் செல்வரைக் (570) கூட்டி (569) முயங்கிப் (570) பின்னர்க் கவவுக் கரந்து (572) வளந் தப வாங்கித் (573) தாதுண்டு துறக்கும் (574) வண்டினமான (575) இன்றுயில் துறந்து, பின்னரும், (565) மிகுநலமெய்திச் (567) சிறந்துகமழ் நாற்றத்துச் (566) சுரும்புபடு பன்மலரையும் (568) ஏனைப்பூக்களையும் புதன்மான வேய்ந்து (564) புதுமலர் தெருவுடன் கமழத் (565) தொடிவிளங்கக் கையை வீசிக்கொண்டு, (589) மணங்கமழ் மனைதொறும் (576) பழந்தேர் வாழ்க்கைப் பறவைபோலச் [சென்று] (589) பொய்தலயர—எனமுன்பின் கூட்டிப் பொருட் பொருத்தமுற முடிக்க. இவ்வரியபொருண் முடிபுகள் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் காட்டக்கண்டோமேயன்றி மற்றி யாம் காணுந் தரத்தனவோ?

கருத்துரை :—செல்வர் மனைகளில், வரைந்துகொள்ளப்பட்ட மகளிர் விளக்கினொளியிலே சீறியாழைக்கொண்டு பண்களை மாறி வாசித்துத் தம்கணவரைப் புணர்ந்து, அப்புணர்ச்சி நீங்கியவுடனே தமக்கு உயிரினுஞ்சிறந்த நாணைத் தம்மிடத்தேகொண்டு திகழாநிற்ப, [அதற்கு நேர்மாறாகப்] பரத்தையர் பலருஞ்சேர நெருங்கி, வானவ மகளிர் வருத்துமாறு போலத் தம்மைக் கண்டோரை வருத்தமுறுவித்துப்பனித்துறையிடத்துக் குவிந்த

மணலிலே யாமயாழ்களுக்கு நடுவே தாழ்ந்தொலியாநின்ற முழ வொடுமகிழ்ந்தனராய்க்கூத்தாடி, பின் அதனைவெறுத்துக் கொழு வியகொம்புகளினின்ற மென்தளிர்களைப் பறித்துக் குவளையை அரும்புகளோடே கட்டின நீண்டதொடர்ச்சி காலடியிலே விழும் படி உடுத்து, வெள்ளியபூக்களாற் செய்த மாலைகளை விசும்பு கமழும்படி கொண்டையிலே முடித்து, தம் வடிவழகை நயந்து வந்த சேயரும் நணியருமாய இளம்பல் செல்வரைப் பல வஞ்சனை வார்த்தைகளாலே முதலிற் கூட்டிக்கொண்டு அவர் பொருள் தருமளவும் அவரது மார்பைத் தம் மார்பு வடுக்கொளும்படி முயங் கிப் பின்னர், அவர் செல்வமெல்லாம் கெடும்படி வாங்கிக் கொண்டு, தாதையுண்டபின் வறுவிய பூவைத் துறக்கும் வண்டி னம்போலத் தம்மைப்புணர்ந்த அவ்விளஞ்செல்வர் கலக்கமுறும் படி அவரை நேரே கைவிட்டுப் பின்னரும் குலைந்த ஒப்பனைகளைச் சீர்செய்து மேலும் அழகுமிகும்படி அலங்கரித்துக் கொண்டு, மிகநாறும் குவளைப்பூக்களையும் ஏனைப்பூக்களையும் சிறுதூற்றை யொக்கக் கூந்தலிற்சூடி, புதியவிடுபூக்கள் தெருவுகளெங்கும் மணம் வீசத் தொடிவிளங்கும் தம் கைகளை வீசிக்கொண்டு, மண நாறும் மனைதோறும் பழுமரந்தேரும் பறவைபோலச் சென்றேறி, ஆங்குப் பொருள்தருதற்குரிய இளையரோடு விளையாட்டயரா நிற்பர் என்பது கருத்து.

விசேடவுரை:—'குடிச்செல்வர் என்றார் நான்கு வருணத்தை; பிறரென்றார், அவர்களாற்றோன்றிய ஏனைச்சாதிகளை' என்றார் நச்சினார்க்கினியர். சேக்கிழாரும் திருக்குறிப்புத் தொண்டநாய னார் புராணத்தில் நான்கு வருணத்தையும் அவர்களாற்றோன் றிய ஏனைச் சாதிகளையும் குறித்துள்ளார்' (செய்-99-103) மணம் புணர்ந்தோங்கிய பாசிழைமகளிர் வீழ்துணை தழீஇ நாணுக் கொள என இயைத்தலாற் பொருட்சிறப்புறுதல் தேற்றம். என்னை? உயிரினுஞ்சிறந்தநாண் வரைந்துகொண்ட மகளிரிடத் துத்தங்கிச் சிறத்தல் நோக்கி. வீழ்துணை-தம்மை விரும்பின கணவர்: வீழ்தல்-விருப்பம்: 'வீழ்கனி' என்றவிடத்துப் போலே. கணவரைப் புணர்ந்த குலமகளிர் அப்புணர்ச்சி நீங்கிற்றாகத் தம்மாட்டு உயிரினுஞ் சிறந்த நாணை நிறுத்துக்கொள்வர் என்பது, 'நாணுக்கொள' என்பதாற் பெறவைக்கப்பட்டது. யாழை வாசித்த பின்னர் வீழ்துணை தழீஇயது-பாட்டுக் காமத்தை விளைவித்தலின்: இதனை "கிளைநரம் பிசையுங் கூத் துங் கேழ்ந்தெழுந் தீன்ற காம, விளைபயன்" (சிந் : 2598) என்பத னாலும், "இசையுங் கூத்தும் காமத்திற்குத் தீபனமாகலின்" (சிந்: 2597: நச்சி-உரை) என்பதனாலும் தெளியலாம். ஏழ்-ஏழிசை குறித்தது: அவையாவன:-குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. தொடை-நரம்பிற்கு ஆகுபெயர். பண்ணுப் பெயர்த்தல்-பண்களை மாறிவாசித்தல்: இங்ஙனம் மாறி வாசிக் கும்போது அப்பண்கள் ஒன்றையொன்றெவ்வாது இனிதா யிருக்கும்; இதனை "நல்லியாழ்ப் பண்ணுப்பெயர்த்தன்ன...நன்பல

வுடைத்தவன் தண்பணை நாடே'' (மலைபடு: 450-53) என்பதனாலும், ''.....பாலைப்பண்கள் பலவற்றையும் ஒரோவொன்றாகப் பெயர்த்து வாசிக்குமாறு போலே ஒன்றையொன்று ஒவ்வாத இன்பத்தை உண்டவர்க்குக் கொடுக்கும் பலதிறத்து மதுவெனவுரைக்க'' என்ற பதிற்றுப்பத்தின் உரையினாலும் [பதிற்: 65: 15, உரை] அறியலாம்.

கண்டோருடைய நெஞ்சை நடுக்குறுத்தலில் வானவமகளிர் கொண்டிமகளிர்க்கு ஒப்பு. கொண்டிமகளிர்-பரத்தையர். யாம யாழ்-முதற்சாமத்தில் வாசித்தற்குரிய யாழ்: இங்ஙன் கொண்டது, மேல் 'முந்தையாமஞ்சென்ற பின்றை (620) என வருதனோக்கி, இந்த யாழினிசைகளுக் கேற்பத் தாழ்ந்த ஒலியொடு நின்றது முழவு: அந்த முழவிசைக்கு மனமகிழ்ந்து இப்பரத்தையர் ஆடினர். 560-ஆம வரியில் வந்த 'தாழ்பு அயல் கனைகுரல் கடுப்ப' என்ற தொடர் 584-ஆம் வரியிலுள்ள 'யாமநல்யாழ் நாப்பண்' என்பதற்குப்பின் கூட்டப்பட்டது. அங்ஙன் கூட்டியதால் பொருட்பொருத்தமுறல் தேற்றம். அஞ்ஞான்று 'கடுப்ப நின்றமுழவு' என இயையும். அயல்-இடப பொருளது கனை-செறிதல்; 'கனையிருள்' என்றவிடத்துப்போல. நனை-அரும்பு. பறித்த மெல்லிய தளிர்களோடு குவளைப்பூக்களையும் சேர அரும்புகளோடே மேவரக்கட்டின நீண்ட தொடர்ச்சியைக் காலடிவரையிலே விழும்படி உடுத்துள்ளனர் கொண்டி மகளிர் என்க. அடைச்சி-உடுத்து. பிறக்கு-பின்புறம்: ஈண்டு கொண்டைக்கு ஆயது. சேயர்-சேய்மையிலுள்ளார், புறமண்டலத்தார். நணியர்-அண்மையிலுள்ளார், உள்ளூரிலுள்ளார். கவ்வு-அகத்திடு; 'கவ்வகத்திடுமே' என்றது தொல்காப்பியம். ஈண்டு, முயக்கம் குறித்தது. பரத்தையர்க்கு வண்டு உவமை கூறப்படுதலை ''நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத் துறக்கும் வண்டுபோல்குவம்'' (மணி:18:19-20), ''பயன்பலவாங்கி வண்டிற் றுறக்குங், கொண்டி மகளிர்'' (மணி: 18: 108-9) என்பவற்றாலுமறிக. 'வண்டினம் மான' என்றவிடத்து உவமம்-தொழிலுவமம். இன்றுயில்-அவையல்கிளவி: 'அவையல்கிளவி மறைத்தனர் கிளத்தல்' என்றது விதி (தொல்: எச்சவியல்: 46). 'மலர்ப புதன் மானவேய்ந்து' என்றவிடத்துள்ள உவமை பெரிதும் பாராட்டத்தக்கது. (564) புதுமலர்-புதிய விடுபூக்கள்; விடுபூ-கட்டாத பூ. பூக்கள் விடுபூ, தொடைப்பூ, கட்டுப்பூவென மூவகைப்படுமென்பர். 'பழந் தேர் வாழ்க்கை' என்றவிடத்து, வாழ்க்கை-தொழில் குறிப்பது; 'தம்முயிரைப் பாதுகாக்கின்ற வாழ்க்கைத்தொழிலை வாழ்க்கை என்றார்' என்றனர் நச்சினார்க்கினியரும். பறவை-வௌவால்; பிற புட்களுமாம். பொய்தல்-விளையாடுதல். அங்ஙனம் மனைதொறுஞ் சென்று இளையரொடு விளையாடி வசிகரித்து உறவுகொண்டு பொருள்வாங்குதல் பரத்தையர்க்கு இயல்பு. பரத்தையரியல்பினை மருதனார் வரைந்த பெற்றிமை சாலப் போற்றத்தக்கது.

அடிகள் 590-599:—ஓணநாளில் மறவர்செயல் கூறும்.

கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள்
கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறா துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்
கடுங்களி றோட்டலிற் காணுநர் இட்ட
நெடுங்கரைக் காழக நிலம்பர லுறுப்பக்
கடுங்கட் டேறன் மகிழ்சிறந்து திரிதர

பதவுரை:—(590) கணம் கொள் அவுணர்க்கடந்த-திரட்சியைக் கொண்ட அவுணரை வென்ற, பொலம் தார்-பொன்னாற் செய்த மாலையினையுடைய,(591)மாயோன் மேய ஓணம் நல் நாள்-மாமையையுடையோனாகிய திருமால் பிறந்த ஓணமாகிய நன்னாளில் ஊரிலுள்ளாரெடுத்த விழவிடத்தே, (594) மறம் கொள் சேரி மாறு பொரு செருவில்-['இற்றைநாட் போர்செய்தும்' என்று கருதி] மறத்தைக் கொண்டிருக்கின்ற சேரித்தெருவுகளில் தம்மிற்றாம் மாறாய்ப்பொருகின்ற போரின்கண்ணே, (595) மாறாது உற்ற வடு படு நெற்றி-நின்ற அடி மாறாமையாற்பட்ட வடுவழுந்தின நெற்றியினையும், (596) சுரும்பு ஆர் கண்ணி-சுரும்புகள் நிறைந்த போர்ப்பூவினையும், பெரு புகல்-பெரிய விருப்பத்தினையும் உடைய, மறவர்-, (599) கடு கள் தேறல் மகிழ்சிறந்து-கடிய கள்தெளிவையுண்டு மகிழ்ச்சிமிக்கு, [அதனால்]-(592) கோணம் தின்ற வடு ஆழ் முகத்த-தோட்டி வெட்டின வடு அழுந்தின முகத்தையுடையவாய், (593) சாணம் தின்ற சமம் தாங்கு தடகை-(கொலைபழக்கும் போர்யானை பலகாலுமெடுத்தலால்) தழும்பிருந்த போரைத் தாங்கும் பெரிய கையினையுடைய, (597) கடு களிறு ஓட்டலின்-கடியகளிற்றை ஓட்டுகையினாலே, காணுநர்-அவ்வியானைக்கு முன்னேயோடி அதன் விசையைக் காணும் பரிக்காரர், (598) நெடு கரை காழகம் (597) இட்ட (598) பரல்-[அவ்வியானையைப் பிடித்துக் கொள்ளுங்காலத்து அது தம் மேல் வாராமல் அஞ்சி மீளுதற்குச் சித்தஞ்செய்து] நெடிய கரையையுடைய நீலநிறத்தையுடைய புடைவைகளிலே வைத்துச் சிந்தின கப்பணங்கள், நிலம் உறுப்ப-நிலத்தே கிடந்து காலைப் பொதுக்கும்படி, (599) திரிதர-திரிதலைச்செய்ய; (எ-று)—மறவர் திரிதர என இயையும்.

(591) ஓணநன்னாளிற் (594) சேரி மாறுபொரு செருவில் (595) பொருது வடுப்படும் நெற்றியினையும் (596) கண்ணியினையும் புகலினையும் உடைய மறவர் (599) மகிழ்சிறந்து [அதனால்] (598) பரலுறுப்பத் (599) திரிதர என முடிக்க.

(592) வடு ஆழ்முகத்தவாய் (593) தடக்கையினையுடைய (597) கடுங்களிற்றினை யோட்டலின், அதன் விசையைக் காணுநர் (598)[அது தம்மேல் வாராமல் அஞ்சி மீளுதற்காகக்]காழகத்தில் வைத்து இட்ட பரல் உறுப்ப என இயைக்க. மற்றும், (592) முகத்த (597) களிறு எனவும், (593) சாணந்தின்ற தடக்கை, சமந் தாங்கு தடக்கை எனவும் இயையும். இனி, வடுவாழ்முகத்தை யும் தடக்கையையும் வடுப்படு நெற்றியையும் யானைக்கேற்றுக என்றுருமுளர்; அன்னோர், 'வடுவாழ்முகத்தையும் வடுப்படு நெற் றியையும்' என்றவிடத்துக் கூறியது கூறலாகுவது நோக்கிற் றிலர்.

கருத்துரை:—அவுணரை வென்ற திருமால் பிறந்த ஓண நன் னாளில் ஊரார்எடுத்த விழவிலே, சேரித் தெருவுகளிலே தம்மிற் றும் மாறுய்ப்பொருத போரின்கண் வடுவழுந்தின நெற்றியினை யும் போர்ப்பூவினையும் போரிற் பெருவிருப்பத்தினையுமுடைய மறவர், கடிய கள்தெளிவையுண்டு மகிழ்ச்சிமிக்கு, அக்களிப்பி னால், நிலத்திற் சிந்திக்கிடந்த கப்பணங்கள் காலைப் பொதுக்கும் படி திரிவர் என்பது கருத்து. இந்தக் கப்பணங்கள் பரிக்காரரால் யானை தம்மேல் வாராமல் அஞ்சி மீளுதற்காகச் சிந்தப்பட்டன.

விசேடவுரை:- மாயோன் - மாமையையுடையோன்; மாமை - கருமை: எனவே, திருமால். திருமாலின் அவதாரம் திருவோணத் தில். இதனை "நின்ற மராமரம் சாய்த்தாய்! நீபிறந்த திருவோணம், இன்றுநீ நீராடவேண்டும் எம்பிரான்! ஓடாதே வாராய்" (2-4-2); "ஆணைப்பார் இவன் நேரில்லைகாண் திரு,வோணத்தா னுலகா ளுமென்பார்களே" (1-1-3) என்ற பெரியாழ்வார் திருமொழிகளா லும் உணரலாம். அத்திருவோணத் திருவிழவில், மறவர் பொரும் சேரிப்போர் கூறினர், அவ்வூர்க்கு இயல்பென்று. அச் சேரிப்போரிற் பெருவிருப்புடையராய், போர்ப்பூவாகிய தும்பை யைச் சூடிப் பொருது, அடிபிறக்கிடாமையாற்பட்ட வடுபடு நெற்றியொடு திகழ்வர் மறவர் என்க. போர்ப்பூ-தும்பை. பின்னர் அம்மறவர் கள்ளையுண்டதால் மகிழ்ச்சிமிக்கு, அக்களிப்பினால் கப்பணங்கள் காலிலுறுத்தத் திரிவர் என்க. கப்பணம்-இரும் பால், ஆனைநெருஞ்சி முள்ளாகப் பண்ணியது. இது பரல்போலி ருத்தலின் பரல் என்றது. ஓட்டுதல்-ஈண்டு, செலுத்திக்கொண்டு போதல்; அங்ஙன் கொள்ளாது போர்செய்ய ஏவுதல் என்றுரு முளர். களிற்றினையோட்டுங் காலத்து அது சற்று வேகமாகப் போகும் விசையைக் காணும் பரிக்காரர் அதனைப் பிடித்து நிறுத் தும்போது தம்மேல் வாராமல் அஞ்சி மீளுதற்காகத் தம் மடியில் கட்டிவைத்துள்ள கப்பணங்களைச் சிந்திச் சிதறுவர். இக்கருத் துப்படவே, நச்சினார்க்கினியர், "நெருஞ்சிமுள்ளுப்போல முனை பட இரும்பால் இரளச் சமைத்துத் தாவற்கு யானையஞ்சுமென்று அவர் மடியிலேவைத்த கப்பணத்தைப் பரல்போறலிற் பரலென் றார்; 'வேழங், 'காய்ந்தனன் கடுக வுந்திக் கப்பணஞ் சிதறினானே' என்றார் பிறரும்" எனக் கூறி, மேற்கோள்காட்டினர். கோணம்-

தோட்டி. சாணம்-தழும்பு. (598) 'பரலுருப்ப' என்பதனினும் 'பரலுறுப்ப' எனல் நேரிது; "செஞ்சுளைப் பல்வின் பரற்பகை யுறுக்கும்" என்ற சிலப்பதிகாரவடியும் காண்க. (சிலப்-10:75)

அடிகள் 600-610:—வளமனைமகளிரும் கடுஞ்சூன்மகளிரும் ஆற்றுஞ் செயல் கூறும்.

கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து
பணைத்தேந் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீர் அயரத்
திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுடன்
ஒண்சுடர் விளக்க முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல வியலிக்
கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப

பதவுரை:—(603) வளம் மனை மகளிர் - செல்வத்தையுடைய இற்பிறந்த மகளிர் சிலர், (600) கணவர் உவப்ப புதல்வர்ப் பயந்து-தம் கணவர் இம்மைமறுமையிற் பெரும்பயன் பெற்றேமென்று மகிழும்படி பிள்ளைகளைப்பெற்று, (602) புலவு புனிறு தீர்ந்து-புலால் நாற்றத்தையுடைய ஈன்றணிமை நீங்கி, (601) பணைத்து ஏந்து இள முலை அமுதம் ஊற-பாலால் இடங்கொண்டேந்திய இளையமுலை பால்சுரக்கும்படி, (603) குளம் நீர் அயர-(தெய்வத்தினருளால் ஓரிடுக்கணுமற்றுக்) குளத்து நீரிலே குளிக்கையினாலே, [அதுகண்டு], (609) கடு சூல் மகளிர் பேணி-முதற்சூல்கொண்ட மகளிர் [இவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வரைப் பயத்தல் வேண்டுமென்று] தெய்வத்தைப் பரவி[க் குறை தீர்ந்தபின்], (602) பொலிந்த சுற்றமொடு - மிக்க சுற்றத்தாருடனேயும், (606) பல உடன்-பூசைக்கு வேண்டும் பொருள்கள் பலவற்றுடனேயும், (610) பெரு தோள் சாலினி - பெரிய தோளினையுடைய தேவராட்டியுடனேயும் (இருந்து), (604) திவவு மெய் நிறுத்து செவ்வழி பண்ணி-வலிக்கட்டினை யாழிற்றண்டிலே கட்டிச் செவ்வழியென்னும் பண்ணை வாசித்து, (605) குரல் புணர்-குரலென்னும் நரம்பு கூடின, நல் யாழோடு-வன்னம் நன்றாகிய யாழுடனே, முழவு ஒன்றி - முழவும் பொருந்தி, (606) நுண் நீர் ஆகுளி இரட்ட - மெல்லிய நீர்மையினையுடைய சிறுபறையொலிப்ப, (607) ஒள் சுடர் விளக்கம் முந்துற-ஒள்ளிய சுடர் விளக்கம் முற்பட, (608) நல் மா மயிலின் மென்மெல இயலி-நன்றாகிய பெருமையையுடைய மயில்போலே மெத்தென மெத்தென நடந்துசென்று, (609) கைதொழுது - கையாற்றொழுது, (607) மடையொடு - பாற்போனக முதலிய சோறுகளை, (610) மடுப்ப-எடுத்துக்கொடுப்ப, (எ-று.)

(603) ஏளமனை மகளிர்சிலர் (600) புதல்வர்ப்பயந்து (602) புனிறுதீர்ந்து (601) இளமுலை அமுதமூற (603) குளநீராடுதலாலே [அதுகண்டு] (609) கடுஞ்சூல் மகளிர் பேணி[க் குறை தீர்ந்தபின்] (602) பொலிந்த சுற்றத்தோடே (606) பலவோடே (610) சாலினியோடே [இருந்து], (604) செவ்வழிபண்ணி (605) யாழோடு முழவுஒன்றி (606) ஆகுளியிரட்ட (607) விளக்கமுந்துற (608) மயிலின் இயலிச்சென்று (609) கைதொழுது (607) மடையை (610) மடுப்ப எனக்கூட்டி முடிக்க.

கருத்துரை:— செல்வத்தையுடைய மனையிடத்து நற்குடி மகளிர் கணவருவக்கும்படி புதல்வரைப் பெற்றுத் தெய்வத்தினருளால் ஓரிடுக்கணுமற்று ஈன்றணிமை நீங்கி இளமுலை பால் சுரக்கும்படி குளத்துநீரிலே குளிக்கையினாலே, அதுகண்டு முதற் சூல்கொண்ட மகளிர் தாமும் அவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வரைப் பயத்தல்வேண்டுமென்று தெய்வத்தைப் பரவிக் குறை தீர்ந்தபின், சுற்றஞ்சூழ, தேவராட்டி உடன்வர, பூசனைப் பொருள்கள் பலவற்றுடனே, யாழிற் செவ்வழிப் பண்ணை வாசித்துக்கொண்டு, முழவுஒன்ற ஆகுளிஇரட்ட விளக்கம் முந்துற மயில்போல் மெத்தென நடையிட்டுச்சென்று கை தொழுது பாற்போனகம் முதலாய மடைகளை எடுத்துக் கொடுப்பர் என்பது கருத்து.

விசேடவுரை :—மனைமகளிர்-இல்லிருக்குங் குடிப்பிறந்த மகளிர். புதல்வர்ப் பேற்றுக்குக் கணவருவத்தல் - இம்மையிலும் மறுமையிலும் பெரும்பயன் பெறுதலால். இவ்வுண்மையை, "இம்மையுலகத்திசையொடும்விளங்கி, மறுமையுலகமு மறுவின்றெய்துப, செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச், சிறுவர்ப் பயந்த செம்மலோரெனப், பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம், வாயேயாகுதல்" என்ற அகப்பட்டாலும் (செ. 66), "உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி, இருமை யும்பெறற் கென்பது பெரியவ ரியற்கை" என்ற கம்பர்வாக்காலும் (கம்ப: அயோத்: மந்திரப்: 63), திருக்குறளிற் 'புதல்வர்ப்பேறு' அதிகாரத்துப் பரிமேலழகருரையாலும் தெளியலாம். ஈன்றணிமை நீங்கியக்கால் குளத்து நீரிலே குளித்தலால் பால் நன்கு ஊறிச் சுரக்கும் என்ப. மணிமேகலையிலும், புனிறுதீர்மகளிர் நீராடுதலை, "புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கந், தீர்வினை மகளிர் குளனா டரவமும்" (7:75-76) என்று சாத்தனார் கூறியுள்ளார். அவ்விடத்து "புதல்வரைப்பெற்ற மகளிர் எழுந்துசென்று பத்தாவது இரவில் நீராடவேண்டுமென்று ஆபஸ்தம்பக்ருஹ்யத்தின் 15-ஆம் கண்டத்துள்ள 8-ஆம் சூத்திரத்தாலும், அந்நூலை அநுசரித்துத் தோழப்பரென்று வழங்குகிற வைதிக ஸார்வபௌமரியற்றிய க்ருஹ்யரத்னத்தில் 6-ஆம் கண்டத்தில் நாமகரணப் பிரகரணத்திலுள்ள "தசமேஹநி" என்னும் சூத்திரத்தாலும் தெரிகின்றதென்பர்" எனக் குறிப்பெழுதியுள்ளார் டாக்டர்.

ஐயரவர்கள். ஆபஸ்தம்ப க்ருஹ்ய சூத்திரம் "தசம்யாமுத்திதா யாம் ஸ்நாதாயாம் புத்ரஸ்ய நாமததாதி பிதாமாதேதி" (படலம்: 6, கண்டம் 15, சூத்திரம் 8) எனக் காண்கிறது. ஆங்கு தாத்பரிய தர்சநம் என்ற உரையின்படி, பத்தாவது நாள் இரவில் புதல்வனைப் பெற்றவள் பிரசவக்ருஹத்திலிருந்து கிளம்பி ஸ்நாநஞ் செய்வளெனத் தெரியவருகிறது. இனி, "தசமேஹநி அபரராத்ரே ஸூதிகாக்ருஹாத் நிஷ்க்ரம்ய ஸ்நாயாத்; தத: ப்ரபாதே பிதாமாதாச......நாமதாஸ்யாவ இதி ஸங்கல்ப்ய" என்ற க்ருஹ்ய ரத்ன சூத்திரத்தின் உரையாலும் "பத்தாவது நாளின் பாதிராத்திரிக்குப் பிரசவக்ருஹத்திலிருந்து வெளிக்கிளம்பி ஸ்நாநஞ் செய்ய வேண்டும்; பொழுது விடிந்தவுடன் தந்தையும் தாயும்......பெயரை வைக்கிறோம் என்று ஸங்கற்பிப்பர்" எனத் தெரிய வருகிறது. ஆகவே, இச்சூத்திரங்களால், இரவின் முதற்சாமத்தில் குளிப்ப தென்பது பெறவைக்கப்படவில்லை; ஆனால், மதுரைக்காஞ்சியில் வந்துள்ள சந்தர்ப்பத்தை நோக்கும்போது இரவின் முதற்சாமம் எனத் தேறுகிறது. ஒருகால், மருதனார் காலத்திய தேசாசாரம் குறிக்கப்பட்டது எனக் கோடலும் நேரிதே.* இரவில் குளித்தன ரென்பது (558) கல்லென்மாலை நீங்கக் (603)குளநீரயர (620) முந்தையாமஞ் சென்ற பின்றைஎன வருதலால் தெளியலாம். ஒரு யாமம் என்பது- $7\frac{1}{2}$ நாழிகைகொண்ட காலவளவை என்றது பிங்கலந்தை. ஒரு நாழிகை = 24 நிமிடங்கள். எனவே, ஒரு யாமம் என்பது 3 மணி காலவளவையுடையது. அங்ஙனம் நோக்க, முதல்யாமம்—இரவு 6 முதல் 9 மணி வரையாகிறது (6 to 9 P.M.)

கடுஞ்சூல் - முதற்சூல்: கடுமை புதுமை மேலது. சாலினி - தேவராட்டி: தெய்வமேறப் பெற்றவள்; இவளைக்கொண்டு மடை மடுத்தனர் என்க. தேவராட்டியைக் கொண்டு பலியூட்டுதலைக் கண்ணப்பநாயனார் புராணத்து, "காடு பலி மகிழ வூட்டத், தலைமரபின் வழிவந்த தேவ ராட்டி தனையழைமின்" (செ-47) என்றும், வந்த தேவராட்டியை நோக்கி நாகன் "காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி யுண்ணக் காடுபலி ஊட்டென்றான்" என்றும் வருதல் நோக்கித் தெளிக. திவவு - வார்க்கட்டு. திவவுக் கூறவே, அதின் நரம்பும் கூறியபடி. 'யாழோடு முழவு ஒன்றி' என ஓடு பிரித்துக் கூட்டப்பட்டது. மகளிர் நடைக்கு மயிலின்நடையை உவமை கூறும் வழக்கமுண்டென்பதை "அணிமயி லன்ன அசைநடைக் கொடிச்சியை" (ஐங்-258), "பீலி மஞ்ஞையி னியலி"(பெரும்பாண்: 331), "வருநல மயிலன மடநடை மலைமகள்" (தேவாரம்) என்பவற்றால் அறியலாம். மடை-சோறு, பலி.

*ஆபஸ்தம்ப க்ருஹ்யசூத்திரங்களைத் தவிர ஏனைய க்ருஹ்ய சூத்திரங்கள் பல வுளவாகலின், அவற்றை யாராயின் மருதனார் காலத்திய ஆசாரமும் நிலவியிருக்குமோ எனத் தோற்றுகிறது. இஃது ஆய்வுக்குரியதே.

அடிகள் 610—620 :—[ஒரு சார் வேலன் நெடுவேட் பேணுகையாலும், ஒருசார் மன்றுதொறும் நின்ற குரவை, சேரிதொறும் நின்ற உரை பாட்டு ஆட்டு இவைகளாலும், எழுந்து] **வேறுவேறு கம்பலையொடு முதற்சாமம் சென்றமை கூறும்.**

ஒருசார்;

அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறும்
உரையும் பாட்டு மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை நன்னன் பெறும்பெயர் நன்னாள்
சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு
முந்தை யாமஞ் சென்ற பின்றை

பதவுரை:—(610) ஒருசார்-ஒருபக்கம், (611) அரு கடி வேலன் முருகொடு வளைஇ-அரிய அச்சத்தைச் செய்யும் வேலன் இவ்விடுக்கண் முருகனால் வந்ததெனத் [தான் கூறிய சொல்லின் கண்ணே கேட்டோரை] வளைத்துக்கொண்டு, (612) அரி கூடு இன் இயம் கறங்க-அரித்தெழும் ஓசையையுடைய சல்லி கரடி முதலியவற்றோடே கூடின இனிய ஏனைவாச்சியங்கள் ஒலியாநிற்க, (613) கார் மலர் குறிஞ்சி சூடி-கார்காலத்தான் மலர்தலையுடையவாகிய குறிஞ்சிப்பூவைச் சூடி, கடம்பின் (614) சீர் மிகு நெடுவேள்-கடம்பு சூடுதலால் அழகு மிகுகின்ற முருகனை, (612) நேர் நிறுத்து-செவ்விதாகத் தன் மெய்க்கண்ணே நிறுத்தி, (614) பேணி-வழிபடுகையினாலே,—

(610) ஒருசார்-ஒருபக்கம், (614) தழூஉ பிணையூஉ-மகளிர் தம் முட்டழுவிக் கைகோத்து, (615) மன்றுதொறும் நின்ற குரவை-மன்றுகடோறும் நின்ற குரவைக்கூத்தும், சேரிதொறும்-சேரிகடோறும் நின்ற, (616) உரைஉம் பாட்டுஉம் ஆட்டுஉம்-புனைந்துரைகளும் பாட்டுக்களும் பலவகைப்பட்ட கூத்துக்களும், விரைஇ-தம்மிற் கலக்கையினாலே,—

(617) வேறு வேறு கம்பலை-வேறுவேறாகிய ஆரவாரம், (618) பேர் இசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்-பெரிய புகழையுடைய நன்னன்கொண்டாடுகின்ற பிறந்தநாளிடத்து, (619) சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு-சேரிகளிலுள்ளார் கொண்டாடுகின்ற விழாவாலே ஆரவாரமெழுந்தாற்போல, (617) வெறி கொள்பு மயங்கி-ஒழுங்குகொண்டு மயங்கப்பட்டு, (620) முந்தை யாமம் சென்ற பின்றை-முற்பட்ட சாமம் நடந்தபின்பு; (கூறு)

(610) ஒருசார் (611) வேலன் வளை இ (612) கறங்க (613) சூடி (614) நெடுவேட் பேணுகையினாலே (610) ஒருசார் (615) மன்று தொறு நின்ற குரவையும் சேரிதொறு நின்ற (616) உரையும் பாட்டும் ஆட்டும் விரவுகையினாலே (617) வேறுவேறுபட்ட கம்பலை (619)சேரிவிழவின் ஆர்ப்பெழுந்தாங்கு(617)வெறிகொள்பு மயங்கப் பட்டு (620) முந்தையாமஞ்சென்ற பின்றை எனக் கூட்டி முடிக்க.

கருத்துரை:— ஒருசார், வேலன் குறிஞ்சிசூடி வாச்சியங்கள் ஒலிப்ப முருகனைத் தன்மெய்க்கண்ணே நிறுத்தி வழிபடுகையினாலேயும், ஒருசார், மன்றுதோறும் மகளிர் கைகோத்துக் குரவையாட, சேரிதோறும் பாட்டும் புனைந்துரையும் கூத்தும் தம்மில் விரவுகையினாலேயும் எழுந்தவேறுவேறுபட்டஆரவாரம், நன்னனது பிறந்தநாட்கொண்டாட்டத்துச் சேரிகளிடத்தே எழுகின்ற ஆரவாரம்போலே மயங்கித் தோன்ற, முன்சாமம் சென்றது என்பது கருத்து.

விசேடவுரை:— கடி-அச்சம்; கடி வேலன்-அச்சத்தைச் செய்யும் வேலன்; தலைவிக்கு அச்சத்தைச் செய்தலைக் குறிப்பித்தபடி. வேலன்-பிள்ளையார்வேலை யெடுத்தலின், வேலனென்றார். பிள்ளையார்-முருகன். 'வேலன்' என முற்கூறியபின் 'முருகொடு வளை இ' என இருத்தலின், தொடக்கத்து வேலன் கழங்குவைத்துப் பார்த்து இவ்விடுக்கண் முருகனால் வந்ததென முற்கூறிப் பின்முருகற்கு வெறியாடுவனென்று ஆடும் முறைமை கூறியபடி. வேலன் கழங்குவைத்துப் பார்த்தலை "வேலன், கழங்கினானறிகுவ தென்றால்" (ஐங்: 248) என்ற ஐங்குறுநூற்றாலறிக. அரிக்கூடின்னியம்-சல்லி, கரடிபோன்ற வாச்சியங்கள் சல்லி-சல்லென்ற ஓசையுடைத்தாதலாற் பெற்ற பெயர்; சல்லிகை எனவும் படும். கரடி-கரடி கத்தினாற் போலும் ஓசையுடைத்தாதலாற் பெற்ற பெயர்; கரடிகை எனவும்படும். குறிஞ்சி-ஈண்டு, குறிஞ்சிப் பூ குறிப்பது; கரிய கொம்புகளையுடைய குறிஞ்சி மரத்தில் மலரும் பூ: இந்தப்பூ-குங்குமத்திற்கு உவமை. கடம்பமாலை முருகனுக்குகந்தது. கடம்பமரம் முருகக்கடவுளுக்கு இடமுமாகும்; இதனை "சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பும் மன்றமும்" என்ற திருமுருகாற்றுப்படையாலும் (225), 'கடம்பமர் நெடுவேள்' என்ற பெரும்பாணாலும் (75) உணரலாம். நன்னன்-ஒரு குறுநில மன்னன். நன்னன்நாள் = நன்னாள் என்ற பாவந் தோற்ற, "அவன் பெயரை அந்நாள் பெறுதலின், பெயரைப்பெற்ற நன்னாளென்றார்" என நச்சினார்க்கினியர் அழகுற வரைந்தார். வெறி-ஒழுங்கு: இச்சொல் இப்பொருளில் வருதலை "வெறிநிரை வேறுகச் சாரச்சாரலோடி" (கலித்:12) என்றவிடத்துங் காண்க. முந்தையாமம்-ஏழரை நாழிகையை முடிவாகக்கொண்ட கங்குல்; எனவே 6 to 9 P. M.

[**கவனிப்பு:—** மேல் (630) 'பானாட் கொண்ட கங்குல்' என்பது இரண்டாம் யாமத்தையும், (651) 'கடவுள் வழங்குங் கையறு கங்குல்' என்பது மூன்றும் யாமத்தையும் குறிப்பதை ஈண்டே நினைவிற் கொள்க.]

இனி 558-ஆம் வரி முதல் 620-ஆம் வரி வரையிலுள்ள பகுதியின் தொகுத்துப்பட்ட முடிபு பின் வருமாறு:—

(579) பாசிழைமகளிர் (561) வீழ்துணை தழீஇ (558) நாணுக்கொள (583) *கொண்டிமகளிர் (589) பொய்தலயர* (596) *மறவர் (599) மகிழ்சிறந்து* திரிதர [*புதல்வர்ப்பயந்த வளமனைமகளிர் குளநீரயரக்கண்ட*] (609) *கடுஞ்சூன் மகளிர் கைதொழுது* (610) மடுப்ப, *ஒருசார்* (611) *வேலன்* (614) *நெடுவேட்*பேணுகையினாலே (610) *ஒருசார்* (615) *மன்றுதொறுநின்ற குரவையும் சேரிதொறுநின்ற* (616) *உரையும் பாட்டும் ஆட்டும்* விரவுகையினாலே (617) *வேறுவேறுபட்ட* கம்பலை (619) *சேரிவிழவின் ஆர்ப்பெழுந்தாங்கு* (617) *வெறிகொள்பு* மயங்கப்பட்டு (620) *முந்தையாமஞ்* சென்றபின்றை— *என்பது.*

அடிகள் 621-653 :—பானாட்கொண்ட கங்குல்யாமத்திலும் [அதாவது, இரண்டாஞ் சாமத்திலும் (9-12 P.M.)]கடவுள் வழங்குங் கையறு கங்குல்யாமத்திலும் [அதாவது, மூன்றாஞ் சாமத்திலும் (12 to 3 A.M.)] நிகழும் நிகழ்ச்சிகள் கூறி, அவையிற்றை இராப்பொழுது கழிக்கின்றமை கூறும்.

பணிலங் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து
நொடைநவில் நெடுங்கடை அடைத்து மடமதர்
ஒள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை
அயிருருப் புற்ற வாடமை விசயங்
கவவொடு பிடித்த வகையமை மோதகம்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க
விழவி னாடும் வயிரியர் மடியப்
பாடான் றவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்பப்
பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயும் அணங்கும் உருவுகொண் டாய்கோற்
கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப
இரும்பிடி மேஎந்தோ லன்ன இருள்சேர்பு
கல்லும் மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடி
சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூல் ஏணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக வுளியர் கலனசைஇக் கொட்கும்
கண்மா றாடவர் ஒடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்

அறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
ஊர்காப் பாளர் ஊக்கருங் கணையினர்
தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைந் துற்ற அரைநா ளமயமும்
அசைவில ரெழுந்து நயம்வந்து வழங்கலின்
கடவுள் வழங்குங் கையறு கங்குலும்
அச்ச மறியா தேம மாகிய
மற்றை யாமம் பகலுறக் கழிப்பி

பதவுரை:—(653) மற்றை - (முந்தையாமஞ் சென்றபின்றை அதனையடுத்து) மற்றையதாகிய, (631) பால் நாள் கொண்ட கங்குல் (653) யாமம்-பதினைந்தாம் நாழிகையை முடிவாகக் கொண்ட கங்குல்யாமத்தையும் [இரண்டாஞ் சாமத்தையும்], (653) மற்றை-(இரண்டாஞ் சாமத்தையடுத்து) மற்றையதாய், (631) இடையது - இரண்டாஞ் சாமத்திற்கும் நான்காஞ்சாமத்திற்கும் நடுவிடத்ததாய் இருக்கின்ற, (651) கடவுள் வழங்குங் கை அறு கங்குல் (653) யாமம்-தெய்வங்களுலாவுஞ்செயலற்ற கங்குல்யாமத்தையும் [மூன்றாஞ் சாமத்தையும்], (621) பணிலம் கலி அவிந்து அடங்க - சங்குகள் ஆரவாரமொழிந்து அடங்கிக்கிடக்க, காழ் சாய்த்து (622) நொடை நவில் நெடு கடை அடைத்து-சட்டக்காலே வாங்கிப் பண்டங்களுக்கு விலைகூறும் நெடியகடையை அடைத்து, (622) மட மதர் (623) ஒள் இழை மகளிர் பள்ளி அயர-மடப்பத்தினையும் செருக்கினையும் ஒள்ளிய அணிகலன்களையுமுடைய மகளிர் துயிலுதலைச் செய்ய, (625) விசயம் ஆடு அமை-பாகிலே சமைத்தலமைந்த, (624) நல் வரி இறால் புரையும் மெல் அடை-நல்ல வரிகளையுடைய தேனிறாலையொக்கும் மெல்லிய அடையினையும், (626) கவவொடு-பருப்பும் தேங்காயுமாகிய உள்ளீடுகளோடே, (625) அயிர் (626) பிடித்த-கண்டசருக்கரை கூட்டிப்பிடித்த, வகை அமை-வகுப்பமைந்த (625) உருப்பு உற்ற-வெம்மை பொருந்தின, (626) மோதகம்-அப்பங்களையும், (627) தீ சேறு-இனிய பாகோடு சேர்த்துக் கரைத்த மாவினையும் உடைய, கூவியர்-அப்பவாணிகரும், தூங்குவனர் உறங்க-(அவற்றோடே யிருந்து) தூங்குவனரா யுறங்க, (628) விழவின் ஆடும் வயிரியர் மடிய - திருநாளின்கண்ணே கூத்தாடுங் கூத்தர் அதனையொழிந்து துயில்கொள்ள, (632) பேய்உம் அணங்குஉம் உருவு கொண்டு-பேய்களும் வருத்துந்தெய்வங்களும் வடிவுகொண்டு, (633) கழுதொடு கொட்ப-கழுதுடனே சுழன்றுதிரிய, - (634) இருபிடி மேனத்தோல் அன்ன இருள் சேர்பு-கரிய பிடியின்கண்ணே மேவின தோலையொத்த கருமை தமக்கு இயல்பாகச் சேரப்பட்டு, (636) தொடுதோல் அடியர்-செருப்புக்கோத்த அடியினையுடையராய், (638) சிறந்த கருமை நுண்வினை நுணங்கு அறல்-மிக்க கருமையினையுடைய நுண்ணிய தொழில்களையுடைய நுண்மை

தன்னிடத்தே பற்றுதலையுடைய ஆடையை [க்கட்டின மருங்கில்], (637) குறங்கிடை பதித்த கூர் நுனை குறு பிடி-(செருகி, அவை) துடையிடத்துத் தெரியாமற் கிடக்கும்படியழுத்தின கூரிய முனையினையுடைய சிலசொட்டைகளின் [மேலே கட்டின], (639) நிறம் கவர்பு புனைந்த நீலம் கச்சினர்-பலநிறங்களைத் தன்னிடத்தே கைக்கொண்டு கைசெய்யப்பட்ட நீலநிறத்தையுடைய கச்சினையுடையராய், (640) மெல் நூல் ஏணி பல் மாண் சுற்றினர்-மெல்லிய நூலாற்செய்த ஏணியை அரையிலே பலவாய் மாட்சிமைப்படச் சுற்றிய சுற்றினையுடையராய், (634) கல்லும் மரனும் துணிக்கும் கூர்மை (641) நிலன் அகழ் உளியர்-கல்லையும் மரத்தையும் அறுக்கும் கூர்மையையுடைய நிலத்தையகழும் உளியையுடையராய், (636) தொடலை வாளர் - தூக்கிட்ட வாளினையுடையராய், (641) கலன் நசைஇ கொட்கும் - பேரணிகலங்களை நச்சுதலாலே அவற்றை எடுத்தற்கு இடம்பார்த்துச் சுழன்றுதிரியும், (642) கண் மாறு ஆடவர்-விழித்தகண் இமைக்குமளவிலே மறைகின்ற கள்வர், ஒடுக்கம்-ஒதுங்கியிருக்கின்ற இடத்தை, (643) வய களிறு பார்க்கும் வய புலி போல-வலிய களிற்றை இரையாகப் பார்க்கும் வலிய புலியைப்போலே, (642) ஒற்றி-வேய்கையினாலே, (646) நுணங்கு (644) செறிந்த (646) நூல்வழி பிழையா நுண் தேர்ச்சி (647) ஊர் காப்பாளர் - நுண்மைசெறிந்த நூலின் வழியைத்தப்பாத நுண்ணிய ஆராய்ச்சியையுடையராய் ஊர்காத்தற்றொழிலை ஆளுதலையுடையவர், (644) துஞ்சா கண்ணர்-துயில் கொள்ளாத கண்ணையுடையராய், அஞ்சா கொள்கையர் - பேய் முதலியவற்றிற்கு அஞ்சாத கோட்பாட்டையுடையராய், (645) அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்-களவிற்றொழிலை யறிந்தவர்களாலே புகழப்பட்ட களவிற்றொழிலை ஆளுந்தன்மையுடையராய், (647) ஊக்க அரு கணையினர் - தப்பக்கருதி முயல்வார்க்குத் தப்புதற்கரிய அம்பினையுடையராய், (648) தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக (649) மழை அமைந்துற்ற அரை நாள் அமயமும்-தேரோடுந் தெருவின்கண்ணே நீர்திரண்டொழுகும்படி மழை மிகப்பெய்த நடுநாளாகிய பொழுதிலும், (650) அசைவிலர் எழுந்து நயம் வந்து வழங்கலின் - காவலில் தப்பிலராய்ப் போந்து விருப்பந்தோன்றி உலாவுகையினாலே, (629) பாடு ஆன்று அவிந்த பனி கடல் புரைய - ஒலிநிறைந்து தடங்கின குளிர்ந்த கடலையொக்க, (630) பாயல் வளர்வோர் கண் இனிது மடுப்ப-படுக்கையிலே துயில்கொள்ளுவோர் கண் இனிதாகத் துயில்கொள்ள, (653) பகல் உற கழிப்பி-இங்ஙனம் பகுந்தறுலும்படி போக்கி ; (எ-று.)

[கவனிப்பு:— 632-33-இல் உள்ள "ஆய்கோல் கூற்றக் கொல் தேர்" என்ற தொடரும் 652-இல் உள்ள "அச்சம் அறியாது ஏமமாகிய" என்ற தொடரும் ஈண்டுப் பொருட் பொருத்தமுறச் செவ்வுன் இயைதலின்மையான், அவையிற்றை மாட்டேறுபூட்டி 699-

இல் உள்ள 'மதுரை'யொடு கூட்டி உரையிட்டார் நச்சினார்க்கினியர்; யாமும் அவ்வழி கூறுவோம். பின்னர்க் காண்க.]

முடிபுகாட்டுமாறு:—(620) முந்தையாமஞ் சென்ற பின்றை (653) மற்றைப் (631) பாணாட் கொண்ட கங்குல் (653) யாமத்தையும் [இரண்டாஞ் சாமத்தையும்], (653) மற்றை (631) இடையதாகிய (651) கடவுள் வழங்குங் கையறு கங்குல் (653) யாமத்தையும் [மூன்றாஞ் சாமத்தையும்] (621) பணிலங் கலிய விந்தடங்க (623) மகளிர் பள்ளியயர (627) கூவியர் உறங்க (628) வயிரியர்மடியப் (632) பேயும் அணங்கும் உருவுகொண்டு (633) கழுதொடுகொட்பக் (641) கலனசைஇக் கொட்கும் (642) கண்மாறாடவர் ஒடுக்கம் (643) புலிபோல (642) ஒற்றுகையினாலே (647) ஊர்காப்பாளர் (644) கண்ணராய்க் கொள்கையராய் (645) ஆண்மையராய்க் (647) கணையராய் (649) அரைநாளமயமும் (650) எழுந்து நயம்வந்து வழங்கலினாலே (629) பனிக்கடல்புரையப் (630) பாயலில்வளர்வோர் கண் இனிது மடுப்பப் (653) பகலுறக் கழிப்பி-என முடிக்க. 'கழிப்பி' என்பதற்கு எழுவாய் இராப் பொழுது. இராப்பொழுது இங்ஙனம் சாமங்களாகப் பகுத்த லுறும்படி கழிக்கின்றது என்றுணர்க. 653-இல் உள்ள 'மற்றை' என்றசொல் 620-இல் உள்ள 'முந்தையாமஞ்சென்ற பின்றை' என்பதன் பின்னும், 651-இல் உள்ள 'கடவுள் வழங்குங் கையறு கங்குல்' என்பதன்முன்னும் கூட்டப்பட்டது. அங்ஙனமே, 653-இல் உள்ள 'யாமம்' என்ற சொல் 631-இல் உள்ள 'பாணாட்கொண்ட கங்குல்' என்பதன் பின்னும், 651-இல் உள்ள 'கடவுள் வழங்குங் கையறு கங்குல்' என்பதன் பின்னும் கூட்டப்பட்டது.

கருத்துரை:—இரவின் இரண்டாஞ்சாமமும் மூன்றாஞ்சாமமும் கழிந்தமை கூறும். சங்குகள் ஒலியடங்க, நெடிய கடையைமூடி மகளிர் துயில, மெல்லிய அடை மோதகம் இவையிற்றோடு அப்ப வாணிகர் உறங்க; கூத்தர் கூத்திளையொழிந்து துயில, பேயும் அணங்கும் கழுதொடு சுழன்று திரிய, இருள்போன்ற கரிய மெய்யொடு, செருப்பைக் காலிற்றொடுத்து, நுண்ணிய கரிய ஆடையைக் கட்டிய இடுப்பில் செருகிய சொட்டைகள் பிறருக்குத் தெரியாதபடி துடையொடு சேர்ந்து பதித்துவைத்தாற் போன்றிருப்ப அவற்றின்மேல் நீலக்கச்சினைக் கட்டி, மெல்லிய நூலேணியை அரையிற்சுற்றி, உளியையெடுத்து வாளைப் பிடித்து அணிகலங்களை நச்சிக் களவாடுதற்குக் கள்வர் இடம் பார்த்துச் சுழன்று திரிய, அக்கள்வர் ஒதுங்கியிருக்கின்ற இடத்தைத் தேய்க்கையினாலே, ஊர்காப்பாளர் துயிலாத கண்ணை யுடையராய், பேய் முதலியவற்றிற்கு அஞ்சாத கோட்பாட்டை யுடையராய், களவிற்றொழிலையாளுந் தன்மையுடையராய், தப்பு தற்கரிய அம்பினையுடையராய், மழைமிகப்பெய்த நடுநிசியாகிய பொழுதிலும் காவலில் சற்றும் அசைவிலராய் உலாவுகையி னாலே, படுக்கையில் துயில்கொள்ளும் மக்கள் கவலையின்றி இனி தாகத் துயில்கொள்வர் என்பது கருத்து.

விசேடவுரை:—சாமம்-3 மணியளவைகொண்ட காலமாதலின், இரவு நான்கு சாமமாகப் பகுக்கப்பட்டுள்ளது. இடையது-இரண்டாஞ் சாமத்திற்கும் நான்காஞ் சாமத்திற்கும் இடைப்பட்ட மூன்றாஞ்சாமம். இச்சாமத்தில் தெய்வங்களும் உலாவுஞ் செயலற்று உறங்கும் என்ப; நள்ளிரவில் முகூர்த்தகாலம் பேயும் அணங்குகளும் தூங்குமென்பது வழக்கு. 'பேயுந் துயின்றதாற் பேர்யாமம்'', ''தோன்றுங் கழுதுந் துயின்றதே'' என்றார் புகழேந்தியார். கம்பரும் ''கழுதும் விழி துயின்றன'' என்றார், பம்பைப்படலத்து (செ. 41). கழுது-பேயில் ஒரு சாதி. காழ்-சட்டக்கால். நொடை-விலை, விசயம்-பாகு. நல்வரி இறால் புரையும் மெல்லடை-இந்த உவமை இன்புறத்தக்கது. 'தேனிறாலன தீஞ்சுவை யின்னடை' என்றது சிந்தாமணி (செ. 2674): ஆங்கு, நச்சினார்க்கினியர், வடிவினாலும், மென்மையாலும், இனிமையாலும் இறாலையொத்த அடை என்றது ஈண்டும் நோக்கத்தக்கது. கவவு - உள்ளீடு: இங்கு மோதகத்தினுள்ளிட்ட பருப்பும் தேங்காயும் குறிப்பது. மோதகம் - அப்பம்; கொழுக்கட்டையுமாம். அயிர் - கண்டசருக்கரை, கற்கண்டு; இனி, ஒருவகைச் சருக்கரையுமாம். வயிரியர்-கூத்தர். இருள்-கருமை: இது கள்வரின் உடல்நிறம் குறிக்கவந்தது. தொடுதோல் - செருப்பு. நுணங்கு அறல் - நுண்மை [தன்னிடத்தே] அறுதலையுடையது என ஆடைக்கு ஆகுபெயர்; அறுதல்-தங்குதல், பற்றுதல். இடுப்பிலே கட்டின கரிய நுண்ணிய ஆடையிடத்தே செருகித் துடையுடனே சேர்ந்துகிடக்குஞ் சொட்டையின்மேலே கட்டின நீலக்கச்சினையுடையர் கள்வர் என்றவாறு. சொட்டை வெளித்தெரியாமல் துடையுடனே சேர்ந்துகிடத்தலிற் 'குறங்கிடைப் பதித்த' என்றார். சொட்டை-ஒருவகை வளைவுக்கத்தி; உடைவாளுமாம். நூலேணியை அரையிற் சுற்றியது, மதிலேறுதற்காக. "மதிற்றலையிலே உள்ளே விழவெறிந்தாற் கைபோல மதிலைப் பிடித்துக்கொள்ளும்படி இரும்பாற்சமைத்ததனைத் தலையிலேயுடைய நூற்கயிற்றை உள்ளே விழவெறிந்து அதனைப் புறம்பேநின்று பிடித்துக்கொண்டு அம்மதிலை ஏறுவாராகலின், ஏணியென்றார்'' என்றனர் நச்சினார்க்கினியர். 'கல்லும் மரனும் துணிக்கும் கூர்மை நிலனகழ் உளி' என்றது—நிலத்தை அகழுங்காலத்து இடைப்பட்ட கற்களுக்கும் மரங்களுக்கும் வாய்மடியாதென்றபடி. தொடலை - தாக்கு, தொங்கவிடுகை. கள்வர் கலனசை இச்சுற்றுதலை இளங்கோவடிகளும் ''நிலனக முளியன் நீலத் தானையன், கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று'' எனக் குறிக்கின்றார். (சிலப். 16. 204-205). கண்மாறாடவர் - விழித்த கண் இமைக்குமளவிலே மறைகின்ற கள்வர்: இவர் விரைவில் மறைதலை ''மந்திரம் நாவிடை வழுத்துவராயின், இந்திர குமரரின் யாங்காண் குவமோ'' என்ற சிலப்பதிகாரத்தாலும் அறியலாம் (16. 172-173). 'வயவலியாகும்'. ஒற்றுதல் - வேவுபார்த்தல், வேய்த்தல்: அடுத்துநின்று உண்மையையுணர்தல். நூல்வழிப்பிழையா நுண்தேர்ச்சி ஊர்காப்பாளர் என்றது—

களவுகாண்டற்கும் காத்தற்கும் கூறிய நூல்களில் தேர்ச்சி பெற்றவர் என்றபடி. களவு காண்டற்குரிய நூல்-கரவட நூல் எனப்படும். அக்களவுநூலிற் சொல்லுகிற கிரியைகள்-தந்திர கரணம் எனப்படும். இந்தக் களவுநூல் ஸ்தேயசாஸ்திரம் என்று வழங்கப்படும்: இதன் ஆசிரியர் கர்ணீஸுதரென்பவர் என்ப. இனி, நூல்வழிப்பிழையா ஊர் எனக் கூட்டி - சிற்ப நூலிற் சொன்னபடி சமைந்த ஊர் எனினுமாம்: மயமதம் என்றொரு சிற்பநூலுண்மையைச் சிலப்பதிகாரத்து அரும்பத வுரையாசிரியர் கூற்றால் தெரியலாம். (சிலப்: 14: 97). அறிந்தோர் - களவிற்றொழிலையறிந்தோர். அவர்களும் புகழும்படி களவிற்றொழிலின் நுணுக்கங்களையும் அறிந்திருந்தனர் ஊர் காப்பாளர் என்பது 'அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்' என்பதால் பெறவைக்கப்பட்டது. 'திருடனைப் பிடிக்கத் திருடனே' வேண்டுமாதலின் (Set a thief to catch a thief) இவ்வூர் காப்பாளர் களவினையும் கற்றிருந்தனர் என்றபடி. "களவும் கற்று மற" என்பது பழமொழி. அரைநாள்-நடுநிசி; இரவின் நடுநாள் என்றபடி. பாயல் வளர்வோர் என்றது—மதுரை நகரத்து ஏனைய குடிமக்களை. பகல் - பகுத்தல்: அடியார்க்கு நல்லாரும் இந்த 653-ஆம் அடியினை மேற்கோள்காட்டி, 'பகுத்தலிற் பகலாயிற்று' என உரையிட்டார். (சிலப்: 4: 81)

இலக்கணக்குறிப்பு:— (636) அடியர் (639) கச்சினர் (640) சுற்றினர் (641) உளியர் (636) வாளர் என்ற வினைக்குறிப்பு முற்றுக்கள் வினையெச்சப்பொருட்டாய், (636) செருப்பைத் தொட்டுக் (639) கச்சைக்கட்டி (640) நூலேணியைச் சுற்றி (641)உளியையெடுத்து(636)வாளைப்பிடித்து என வந்துநிற்குமாறு காண்க. இங்ஙனம் நிற்குமாறு 'முன்னத்தின் உணருங் கிளவி யும் உளவே" (தொல். எச்சவியல். சூ. 63) என்பதனான் உணர்க. [சூத்திரத்தின் பொருள்-(வினைக்குறிப்புச் சொற்கள் பொருள் தரும் முறைமையிடத்து) அவற்றுள் சில, நுண்ணுணர்வு உடையோர்க்குக் குறிப்பினால் தெரிகிலப்பொருள் உணரப்படும் சொற்களும் உள; அவற்றை உணர்க என்பது. ஈண்டு, திருமுருகாற்றுப்படை, வரிகள் 208-217-நினைவுகூர்க.] (653) மற்றை என்னும் ஐகாரவீற்றிடைச்சொல் (620) 'முந்தையாமம்' என முன்னர்ச் சுட்டப்பட்டதனையொழித்து, அதனினங்குறித்து [ஏனைய சாமங்களைக் குறித்து] நின்றது; "மற்றைய தென்னுங் கிளவி தானே, சுட்டுநிலை யொழிய வினங்குறித் தன்றே" என்பது விதி (தொல்: இடை: 16) (625) ஆடு-அடுதல் என்ற முதனிலைதிரிந்த தொழிற் பெயர். (627) தூங்குவனர் உறங்க - ஒருபொருட்பன்மொழி. (650) வழங்கலின், இன்-ஏதுப்பொருளது.

அடிகள் 654-686:—வைகறை நிகழ்ச்சிகள் சிறப்புறக் கூறும்.

போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் தும்பி போது முரன்றாங்கு

ஓத லந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்
பணைநிலைப் புரவி புல்லுணுத் தெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல இல்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடியல் லெய்த விரும்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
ஒண்பொன் அவிரிழை தெழிப்ப இயலித்
திண்சுவர் நல்லிற் கதவங் கரைய
உண்டுமகிழ் தட்ட மழலை நாவிற்
பழஞ்செருக் காளர் தழங்குகுரல் தோன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல
வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப
இமிழ்முர சிரங்க ஏறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யானையங் குருகின் சேவலொடு காமர்
அன்னங் கரைய அணிமயி லகவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்
கூட்டுறை வயமாப் புலியொடு குழும
வான நீங்கிய நீனிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலந்தனர் பரிந்த
பரூஉக்கா ழாரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன
அம்மென் குரும்பைக் காய்படுபு பிறவும்
தருமணன் முற்றத் தரிஞிமி றார்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சீப்ப
இரவுத்தலைப் பெயரு மேம வைகறை

பதவுரை:—(654) பிணி விட்ட போது கமழ் நறு பொய்கை-தளையவிழ்ந்த பூக்கள் நாறும் நறிய பொய்கைகளிலே, (655) போது தாது உண் தும்பி முரன்றுங்கு-அப்பூக்களில் தாதையுண்ணும் தும்பிகள் பாடுமாற்போல, (656) வேதம் ஓதல் அந்தணர் பாட-வேதத்தை முற்ற ஓதுதலையுடைய அந்தணர் வேதத்தில் தெய்வங்களைத் துதித்தவற்றைச் சொல்ல, (658) யாழோர்-யாழ் வாசித்தலில் வல்லோர், (657) சீர் இனிது கொண்டு-தாளவறுதியை இனிதாக உட்கொண்டு, நரம்பு இனிது இயக்கி-நரம்பை இனிதாகத் தெறித்து, (658) மருதம் பண்ண-மருதப்பண்ணை

வாசிக்க, காழோர்-பரிக்காரர், (659) கடு களிறு கவளம் கைப்ப-கடிய களிற்றைக் கவளத்தை உண்பிக்க, நெடு தேர்-நெடிய தேரிலே பூணும், (660) பணை நிலை புரவி-பந்தியில் நிற்றலையுடைய குதிரைகள், புல் உணா தெவிட்ட-புல்லாகிய உணவைக் குதட்ட, (661) பல் வேறு பண்ணியம் கடை மெழுக்கு உறுப்ப-பண்டம் விற்பார் பலவாய் வேறுபட்ட பண்டங்களையுடைய கடைகளை மெழுகுதலைச் செய்ய, (662)கள்ளோர் களி நொடை நுவல-கள்ளை விற்போர் களிப்பினையுடைய கள்ளிற்கு'விலைசொல்ல, இல்லோர்-கற்புடைமகளிர், (663)நயந்த-தாங்கள் விரும்பின, காதலர்-கணவருடைய, கவவு பிணி துஞ்சி-முயக்கத்திற் பிணிப்பாலே துயில் கொண்டு, (664) புலர்ந்து விரி விடியல் எய்த-இருள்மாய்ந்து கதிர்விரிகின்ற விடியற்காலத்தைப் பெறுகையினாலே, விரும்பி-அக்காலத்து இல்லத்திற் செய்யத் தகுவனவற்றைச் செய்தற்கு விரும்பி, (665) கண் பொரா எறிக்கும் மின்னு கொடி புரைய-கண்ணை வெறியோடப்பண்ணி விளங்கும் மின்னொழுங்கையொப்ப, (666) ஒள் பொன் அவிர் இழை தெழிப்ப-ஒள்ளிய பொன்னாற்செய்து விளங்குஞ் சிலம்பு முதலியன ஒலிப்ப, இயலி-புறம் போதுகையினாலே, (667) திண் சுவர் நல் இல் கதவம் கரைய-திண்ணிய சுவர்களையுடைய நல்ல அகங்களிற் கதவுகள் ஒலிப்ப, (668) உண்டு மகிழ் தட்ட மழலை நாவில் (669) பழ செருக்காளர்-கள்ளையுண்டு களிப்பினைத் தம்மிடத்தே தடுத்துக்கொண்ட மழலைவார்த்தையையுடைய நாவினையுடைய பழைய களிப்பினையுடையாருடைய, தழங்கு குரல் தோன்ற-முழங்குகின்ற குரல்கள் தோன்ற, (670) சூதர் வாழ்த்த-நின்றேத்துவார் வாழ்த்த, மாகதர் நுவல-இருந்தேத்துவார் புகழைச் சொல்ல, (671) வேதாளிகரொடு நாழிகை இசைப்ப-வைதாளிகர் தத்தம் துறைக்குரியனவற்றையிசைப்ப நாழிகை சொல்லுவார் நாழிகைசொல்ல, (672) இமிழ் முரசு இரங்க-ஒலிக்கின்ற பள்ளியெழுச்சிமுரசு ஒலிப்ப, ஏறு மாறு சிலைப்ப-ஏறுகள் தம்முள் மாறுபட்டு முழங்க, (673) பொறி மயிர் வாரணம் வைகறை இயம்ப-பொறியினையுடைய மயிரினையுடைய கோழிச்சேவல்விடியற்காலத்தைஅறிந்து கூவ,(674)யானையங்குருகின்சேவலொடு காமர்(675)அன்னம் கரைய-வண்டாழ்ங் குருகினுடைய சேவல்களோடே விருப்பத்தையுடைய அன்னச் சேவல்களும் தமக்குரிய பேடைகளை யழைக்க, அணி மயில் அகவ-அழகிய மயில்கள் பேடைகளை யழைக்க, (676) பிடி புணர் பெரு களிறு முழங்க-பிடியோடே கூடின பெரிய யானைகள் முழங்க,(677) வய மா-கரடி முதலிய வலிய விலங்குகள், கூடு உறை-கூட்டிலேயுறைகின்ற,(676)முழுவலி-மிக்க வலியையுடைய, (677)புலியொடு குழும-புலியுடனே முழங்க, (678) வானம் நீங்கிய-ஆகாயம் தனக்கு வடிவின்றென்னும் தன்மை நீங்குதற்கு, நீல் நிற விசும்பின்-மேக படலத்தால் நீலநிறத்தையுடைய ஆகாயத்தின் கண்ணே, (679) மின்னு நிமிர்ந்தனையர் ஆகி-மின்னு நுடங்கின தன்மையினையுடையராய், நறவு மகிழ்ந்து-மதுவையுண்டு, (680)

டிரண் இழை மகளிர் புலந்தனர் பரிந்த-மாட்சிமைப்பட்ட பேரணி கலன்களையுடைய மகளிர் கணவரோடே புலந்தனராய் அறுத்த, (681) பரூஉகாழ்ஆரம்சொரிந்த முத்தமொடு - பருத்தலையுடைய வடமாகிய ஆரஞ்சொரிந்த முத்தத்தோடே, (683) பிறவும்-மூத் தொழிந்த மாணிக்கமும் மரகதமும் பொன்னும் மணிகளும், அம் மென் குரும்பை காய்உம்-அழகிய மெத்தென்ற இளைதாகிய பச்சைப் பாக்கும், (684) தரு மணல் முற்றத்து-கொண்டு வந் திட்ட மணலையுடைய முற்றத்தே, (683) படுபு-விழுந்து, [அங்ஙன் விழுகையினாலே அவற்றையும்], (685) மெல் பூ செம்மலொடு நல் கலம்-மெல்லிய பூ வாடல்களுடனே நல்ல பூண்களையும், (684) அரி ஞிமிறு ஆர்ப்ப-வண்டுகளும் மிஞிறுகளும் ஆரவாரிப்ப, (685)சீப்ப-பெருக்கிப் போகடும்படி,(686)இரவு தலை பெயரும் ஏழுழ் வைகறை-இராக்காலம் தன்னிடத்தினின்றும்போகின்ற எல்லா வுயிர்க்கும் பாதுகாவலாகிய விடியற்காலத்தே; (எ-று.)

(656) பாடப் (658) பண்ணக் (659) கைப்பத் (660) தெவிட்ட (661) உறுப்ப (662) நுவல (667) கரையத் (669) தோன்ற (670) வாழ்த்த, நுவல (671) இசைப்ப(672) இரங்க, சிலைப்ப (673) இயம் பக் (675) கரைய, அகவ (676) முழங்கக் (677) குழுமச் (685) சீப்பத் (686) தலைப்பெயரும்—என முடிக்க.

(681) முத்தமொடு(683)பிறவும் காயும்(684)மணல் முற்றத்தே விழுகையினாலே [அவற்றையும்] (685) செம்மலோடே கலங் களையும் (684) அரி ஞிமிறு ஆர்ப்பச் (685)சீப்ப—என இயையும்.

கருத்துரை:—நறியபொய்கைகளிலே தும்பிகள் பாடினாற் போலே அந்தணர் வேதமோத, யாழோர் காலைக்குரிய மருதப் பண்ணை வாசிக்க, பரிக்காரர் களிற்றைக் கவளம் உண்பிக்க, பந்தி யில் நின்ற குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்ட, பண்டம் விற்பார்தம் கடைகளைமெழுக, கள் விற்போர் கள்ளிற்கு விலைகூற, கற்புடை மகளிர் அக்காலத்திற்குரிய மனைக்காரியங்களைச் செய் தற்கு விரும்பிச் சிலம்பொலிப்ப மின்னற்கொடிபோல் புறம் போதுகையினாலே நன்மனைகளில் கதவுகள் ஒலிப்ப, மேன்மேலும் கள்ளுண்டுகளித்துக்கிடந்த செருக்காளர் குழறிப்பேசும் குரல்கள் முழங்கித்தோன்ற, நின்றேத்துவார் வாழ்த்த, இருந்தேத்துவார் புகழ,வேதாளிகர் தத்தம் துறைக்குரியவற்றையிசைப்ப, நாழிகை சொல்லுவார் நாழிகை சொல்ல, பள்ளியெழுச்சிமுரசு ஒலிப்ப, ஏறுகள் தம்முள் மாறுபட்டு முழங்க, கோழிச்சேவல் பொழுது விடியலையறிந்து கூவ, வண்டாழ்ங்குருகுச் சேவல்களும் அன்னச் சேவல்களும் தத்தமக்குரிய பேடைகளையழைக்க, அணி மயில் களும் தத்தம பேடைகளையழைக்க, பிடிபுணர்ந்த பெருங்களி றுகள் முழங்க, கரடி முதலிய விலங்குகள் கூட்டிலுறை புலியொடு முழங்க, மாணிழைமகளிர் மதுவுண்டு கணவரொடு புலந்து பரிந்து வீசிய ஆரஞ்சொரிந்த முத்துக்களோடே ஏனைய மாணிக் கம் மரகதம் போன்ற மணிகளும் இளைய பச்சைப்பாக்கும் மணல்

முற்றத்தே விழுகையினாலே, அவற்றையும் பூவாடல்களுடனே யும் நல்ல அணிகலன்களுடனேயும் வண்டும் மிஞிறும் ஆர வாரிப்ப ஒருசேரத் தொகுத்துப்பெருக்கிப் போகடும்படியாக; வைகறையெய்தியது என்பது கருத்து. [இப்பகுதி பெரிதும் சுவைத்து இன்புறற்குரித்து.]

விசேடவுரை:—பொய்கை-மானிடராக்காத நீர்நிலை என்பர் நச்சி னார்க்கினியர் (சீவக: 337 உரை காண்க.) மதுரையில் அந்தணர் விடியலில் வேதம்பாடுதலை "காலை முரசக் கனைகுர லோதையும், நான்மறை யந்தணர் நவின்ற வோதையும்......கார்க்கட லொலி யிற் கலிகெழு கூடல்" என்று சிலப்பதிகாரமும் (13: 140-149) "பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த, நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப, ஏம வின்றுயிலெழுத லல்லதை, வாழிய வஞ்சியுங் கோழியும்போலக், கோழியி னெழாதெம்பேரூர் துயிலே" என்று பரிபாடலும் குறிக்கின்றன. திருவாப்பனூர்ப் புராணத்து வரும் "கோதி லாதசெஞ் சூட்டுடை வாரணங் கூவ, ஓத ஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பர், ஈத லேற்றலோ டறு தொழி லிருபிறப்பாளர், வேதநாதத்தின விழிப்பதவ் வியனகர் மாக்கள்" என்ற செய்யுளும விடியலில் அந்தணர் வேதமோது தலைக் குறிப்பது. மருதபபண் காலைக்குரிய பண் என்பதைத் "மாலை மருதம பண்ணிக் காலைக், கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி, வரவெமர் மறந்தனர்" என்ற புறப்பாட்டாலும் (149), "மங்கையர் பண்ணிய மருத யாழ்...கங்குல்போய் நாட்கடன் கழிந்த தென்பவே" என்ற சிந்தாமணியாலும் (1991) தெளிய லாம். காழோர் - பரிக்காரர், குத்துக்கோற்காரர். கைப்ப-உண் பிக்க; தீற்ற என்பர் நச்சினார்க்கினியர். நெடுதேர்...புரவி என்ற விடத்து-தேரிலேபூட்டப்படும் இயல்பு கூறியபடி. தெவிட்ட - குதட்ட, அசையிட; 'புரவி புல்லுணாத் தெவிட்டும்' என்றது நெடுநல்வாடையும் (93-94); வன்கலை தெவிட்டும் அருஞ்சுரமிறந் தோர்க்கு' என்ற புறமும் (161) காண்க. மெழுகுதல் - சாண மிட்டுமெழுகுதல்; "புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு என்றார் நாவுக்கரசரும். "திருவலகும் திருமெழுக்கும் தோண்டி யுங்கொண்டு" என்றது பெரிய புராணம். (திருநாவுக்: 68). களி-களிப்பினையுடைய கள்ளுக்கு ஆகுபெயர். இல்லோர்-இல் லிருப்போர்; எனவே, கற்புடைமகளிர். 'கவவுப்பிணிதுஞ்சி' என்றது - புடைபெயரின் அவ்வளவில் அள்ளிக்கொள்வறறே பசப்பாதலின் என்க. அதாவது, தொட்ட கைவிட்ட வளவிலே மனைவியின் உடம்பு நிறம்மாறி வெளுக்குமென்றபடி. 'விரும்பி' என்றது-விடியற்காலத்து இல்லத்திற் செய்யத் தகுவனவாய காரியங்களைவிரும்பி என்றபடி: அவையாவன-அலகிட்டு மெழுக் கிட்டுக்கோலமிட்டுக் கணவன் முதலானார்க்கு உண்டிமுதலியன சமைத்தல் போல்வன. கண்பொரா - கண்ணைவெறியோடப் பண்ணி; கண்ணை மயக்கி 'கண்பொருபு உகூஉம் ஒள்பூங் கலிங்கம்' என்றார் முன்னரும். (வரி-433). 'இயலி' என்றதால், இழை -

சிலம்பு குறித்தது. கரைதல்-ஒலித்தல், அழைத்தல் என்ற பொருள்களில் வந்தது. தட்ட-தளைத்த, தடுத்த; தம்மிடத்தே நீங்காமல் நிறுத்திக்கொண்ட என்றபடி. மழலை-ஈண்டு குழறலைக்குறிப்பது. சூதர்-நின்றேத்துவார். மாகதர் - இருந்தேத்துவார். வேதாளிகர் - வைதாளியாடுவார்: அரசரைப் புகழ்ந்துபாடுவோருள் ஒருவகையினர். வைதாளி-புகழ்ந்து பாடும் பாட்டு; Panegyric. 'நாழிகை இசைப்ப' என்றவிடத்து 'நாழிகை-நாழிகை சொல்லுவார்க்கு ஆகுபெயர். இவர்கள் நாழிகைக்கணக்கர், கடிகையார் என வழங்கப்படுவர். இவர்கள் 'அரசனுக்குச் சென்ற நாழிகைக்குக் கவிசொல்லுவார்' என அடியார்க்குநல்லார் கூறி, "பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு, காமன் திரியுங் கருவூரா-யாமங்கள், ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையும், ஒன்றுபோ யொன்று போயொன்று" என மேற்கோட்கவியும் காட்டுவர். முரசு - காலைமுரசம்: எனவே, பள்ளியெழுச்சிமுரசு என்றது; 'காலை முரசக் கனைகுரலோதை' (சிலப்: 13: 140) என்றதும் காண்க. யானையங்குருகு-இதனை வண்டாழ்ங்குருகு என்றனர் நச்சினார்க்கினியர்: இதனைச்சோதிடநூலார் திருவோணநட்சத்திரத்திற்குரிய புள்ளாகக் கூறுவர். அகநானூற்றில் (செய்யுள் 145) 'குஞ்சரக்குரல குருகு' என ஒரு பறவை பேசப்பட்டுள்ளது. அக்குருகே யானையங்குருகாயின், யானையைப்போன்ற குரலையுடைமையால் இப்பெயர் பெற்றுள்ளதென்று கொள்ள வகையுண்டு. திருப்பாவையில் கோதையார் 'ஆனைச்சாத்தன்' என்று ஒருபறவையைக் குறிக்கின்றார், அது விடியற்காலத்துக் 'கீசுகீசு' என்று கத்தும் என்பதும் தெரியவருகின்றது. ஆங்கு அச்சொற்கு பரத்வாஜபக்ஷிகள், வலியன் குருவிகள் என்று வியாக்யாநமிட்டருளியுள்ளனர். இந்த யானையங்குருகு அந்த ஆனைச்சாத்தனென்னும் பறவைபோலும். குழுமுதல் - கூடி முழங்குதல். வானம் நீங்கிய-வானத்திற்குரிய தன்மை நீங்கிய; வானத்திற்குரிய தன்மை - வடிவின்மையாயிருத்தல் [அருபியாயிருத்தல்]. அத்தன்மைநீங்கியது-மேகபடலத்தால் நீலநிறத்தையுடையதாயினமையின். இனி, வானம் நீங்கிய விசும்பு என்பதற்கு-செக்கர் வானம்போன விசும்பு என்பாருமுளர். மகளிர் புலவிக்காலத்துத் தாம் அணிந்துள்ள அணிகளையும் பூமாலைகளையும் அறுத்துச் சிந்துவரென்பதை "கெழுவு துணைமேவு மாதர், அற்புமுதிர் புலவியினிற் பரிந்து சிந்தும் அணிமணி" (பெரியபுராணம்: திருக்குறிப்புத்: 94), 'பண்டரு கிளவி யார்தம் புலவியிற்பரிந்தகோதை'(கம்ப:பால:மிதிலைக்காட்சி:7)என்பவற்றாலும், அங்ஙனம் அறுத்துச் சிந்திய அணிமணிகளை விளக்குமாறு கொண்டு கூட்டுவர் என்பதை "......அணிமணிச் சேடியர் தொகுக்குமவையுமாகி" (திருக்குறிப்புத்: 94) என்பதனாலும் அறிக. சிப்ப-பெருக்க. பொன்சுடுநெருப்பு உக்கநிலம், கரியும் தழலும் பொன்னுஞ் சிந்திக்கிடக்கும். அதுபோல, பலநிற மணிகளும் பொன்னும் பச்சைப்பாக்கும் விழுந்துகிடக்கும் மணல்முற்

றம் என்க. செம்மல்-வாடற்பூ; "குயில் குடைந்துதிர்த்த புதுப் பூஞ் செம்மல்" என்றது சிறுபாண்.

இலக்கணக்குறிப்பு:—'பாட' முதல் 'சீப்ப' வரையுள்ள வினையெச்சங்கள் அடுக்கி 'தலைப்பெயரும்' என ஓர் முடிபு கொண்டன. இரவுத்தலை, தகரவொற்று விகாரம்.

அடிகள் 687-699:—மதுரையம்பதி மிக்குப்புகழெய்திய பான்மை கூறும்.

மைபடு பெருந்தோண் மழவ ரோட்டி
இடைப்புலத் தொழிந்த வேந்துகோட் டியானை
பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோ லாக ஆள்செல நூறிக்
காய்சின முன்பிற் கடுங்கட் கூளியர்
ஊர்சுடு விளக்கிற் றந்த வாயமும்
நாடுடை நல்லெயில் அணங்குடைத் தோட்டி
நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி
நாடர வந்த விழுக்கல மனைத்தும்
கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்கு
அளந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரை

பதவுரை:—(697) வளம் கெழு தாரமொடு-வளப்பம் பொருந்தின அரும் பண்டங்களோடே, (687) மை படு பெரு தோள் மழவர் ஓட்டி-பிறர்தோள் குற்றப்படுதற்குக் காரணமான பெரிய தோளையுடைய மழவரைக் கெடுத்து, (688) இடை புலத்து ஒழிந்த-(அவர்விட்டுப் போகையினாலே) போர்க்களத்தே நின்ற, ஏந்து கோடு யானை-ஏந்தின கொம்பினையுடைய யானைகளும், (689) பகை புலம் கவர்ந்த பாய் பரி புரவி-பகைவர் நாட்டிலே கைக்கொண்டுவந்த பாய்ந்துசெல்லும் செலவினையுடைய குதிரைகளும், (691) காய் சினம் முன்பின் கடுங்கண் கூளியர்-எரிகின்ற சினத்தையுடைத்தாகிய வலியினையும் தறுகண்மையினையுமுடைய ஆயக்கரையிலிருந்த வேட்டுவர், (692) ஊர் சுடு விளக்கின்-பகைவரூரைச் சுடுகின்ற விளக்கிலே, (690) ஆள் செல நூறி-நிரைகாத்திருந்த வீரரை மாள வெட்டி, வேல் கோல் ஆக-வேலைக் கோலாகக்கொண்டு, (692) தந்த ஆயம்உம்-அடித்துக்கொண்டு வந்த பசுத்திரளும், (693) நாடு உடை நல் எயில்-அகநாட்டைச் சூழவுடைத்தாகிய முழுவரண்களிலிட்ட, அணங்கு உடை தோட்டி-வருத்தத்தையுடைய கதவுகளும், (694) நாள் தொறும் விளங்க கை தொழூஉ பழிச்சி-நாடோறும் தமக்குச் செல்வமிகும்படியாகக் கையாற் றொழுதுவாழ்த்தி, (695) நாள் தர வந்த விழுகலம்-நாட்காலத்தே திறையாகக் கொண்டுவர வந்த சீரிய கலங்

களும், அனைத்துஉம்-அத்தன்மையன பிறவும், (696) கங்கை அம் பெரு யாறு கடல் படர்ந்தாங்கு (697) அளந்து கடை அறியா-கங்கையாகிய அழகிய பெரியயாறு ஆயிரமுகமாகக் கடலிலே சென்றாற்போல அளந்து முடிவறியாததும், (632-33) ஆய் கோல் கூற்றம் கொல்தேர் (652) அச்சம் அறியாது ஏமமாகிய-[யாக்கை நிலையாதென்றறிந்து மறுமைக்குவேண்டுவனசெய்துகொண்டமை யின்] அழகிய கோலையுடைய கூற்றத்தின் கொல்லுங் காலசக்க ரத்திற்கு அஞ்சாமற் காவலுண்டாயிருக்கின்றதும், (698) புத்தேள் உலகம் காண்வர கவினி-தேவருலகம்வந்து காணுதலுண்டாகத் தான் அழகைப்பெற்று, (699) மிக்கு புகழ் எய்திய - மிகுத்துப் புகழைப்பெற்றதும், பெரு பெயர்-பெரும்பொருளை [வீட்டினை] யுடையதும் ஆகிய, மதுரை-மதுரையிலே; (எ-று.)

(697) வளங்கெழு தாரத்தோடே (688) யானையும் (689) புரவி யும் (692) ஆயமும் (693) தோட்டியும் (695) கலமும் அனைத்தும் (696) கங்கையாறு கடற்படர்ந்தாற்போல (697) அளந்து முடிவறி யாததும் (652) ஏமமாகியதும் (698) கவினிப் (699) புகழெய்தியதும் பெரும் பெயரினையுடையதும் ஆகிய மதுரை என முடிக்க.

கருத்துரை:—மழவரென்ற வீரரைக் கெடுத்து அவரிடத் திருந்து கொணர்ந்த யானைகளும், பகைப்புலத்திருந்து கவர்ந்து வந்த குதிரைகளும், வேட்டுவர் பகைவருரைச் சுடுகின்ற விளக் கிலே நிரைகாத்திருந்த வீரரை மாளவெட்டிக் கவர்ந்து வேல் கோலாகக்கொண்டு அடித்து ஓட்டிவந்த பசுத்திரளும், முற்றுகை யிட்டுப்பற்றின முழுவரண்களிலிட்டிருந்த கதவுகளும், தினந் தோறும் இறையாகக்கொணர்ந்து கொடுத்த சீரிய கலங்களும், அன்ன பிறவும் வளங்கெழு பண்டங்களோடே அளந்து முடிவறி யாதபடியுள்ளது மதுரை; யாக்கைநிலையாமையைத் தெளிந்து மறுமைக்கு வேண்டுவன ஈண்டே செய்துகொண்டமையின் கூற் றத்தின் உயிர் கவர்தலுக்கு அஞ்சாது காவலையிட்டுக் கொண் டுள்ளது மதுரை; மற்றும், தேவர்களும் வந்து காணுமாறு அழகுபெற்று மிக்க புகழையெய்தியுள்ளது மதுரை; பெரும் பொருளாகிய வீடுபேற்றினையுடையது மதுரை என்பது கருத்து.

விசேடவுரை:—'மை படு' என்றது மழவர்வலி தெரிப்பது. மழவர்-சில்வீரர்; 395-ஆம் வரி உரையுங் காண்க. கூளியர்-(நாடு காக்கும்) வேடர்: இதனை 'கூப்பிடு கடக்குங் கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்' என்ற மலைபடுகடாத்தால் (421-22) அறிக. ஆய்க்கரை-'கூப்பிடு' என்றவிடத்துப்போல், ஓரெல்லை குறிப்பது. நாடு-அகநாடு. தோட்டி-அரண்கதவுகள். கங்கையாறு கடல்படர்ந் தாங்கு என்றது-பலமுகமாகப் படர்தலை நோக்கி. இதனை, "இறு வரை யிமயத் துயர்மிசை யிழிந்து, பன்முகம் பரப்பிப் பௌவம் புகூஉம், நன்முகக் கங்கை" (பெருங்: 2: 17: 33-4) என்றதாலும் அறியலாம். கடை-முடிவு. "(632-33) ஆய்கோல் கூற்றக்கொல்தேர் என்ற தொடரும் (652) அச்சம் அறியாது ஏமமாகிய" என்ற தொட

ரும் ஈண்டுள்ள (699) மதுரையொடு மாட்டேறு பூட்டப்பட்டன. இது முன்னர்க்குறித்தோம் (பக்.123-24). கூற்றத்தின் கோலைக்கு அஞ்சாமல் ஏமமாகியது மதுரை என்றதன் பொருளைச் செவ்வன் புலப்பட வைத்தற்கு, நச்சினார்க்கினியர் "கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார், துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்,வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம், வருங்காற் பரிவதிலர்" என்ற நாலடியார்ச் செய்யுளை மேற்கோள்காட்டினர். [கரும்பு-உடம்புக்கும், அதனை ஆட்டுதல்-விரதங்களால் உடம்பை வருத்துதற்கும், கருப்பஞ்சாற்றுக்கட்டி-உடம்பின் பயனுக்கும், சிறுகாலை-இளமைப்பருவத்துக்கும், கருப்பங்கட்டி கொண்டார்-யாக்கைப் பயன் கொண்டவர்க்கும், துரும்பெழுந்து வேதல்-யமன் வரவினால் உடம்பு அழிதற்கும், கருப்பங்கட்டி கொண்டார் துயருழவாமை-யாக்கைப் பயன்கொண்டவர் வருந்தாமைக்கும் உவமையெனக்காண்க.] (632) கொஃறேர்-கொல் + தேர்: கால சக்கரம். மதுரை மிக்குப்புகழெய்தியது, (342) பெரும்பாணி ருக்கை (351) கிடங்கு (352) புரிசை (356) வாயில் முதலியவற்றை யுடைமையால். இது நச்சினார்க்கினியர் கருத்துப்பற்றிக் கூறியது; என்னை? "(699) புகழெய்திய (342) பெரும்பாணிருக்கை முதலியவற்றையுடைய (699) மதுரை என்க" என்பது அவர் உரைப்போக்காதலின். பெரும்பெயர்-பெரும்பொருள்: எனவே, வீடுபேறு. பெரும்பொருள் என்றது, வீட்டினை என்றார் நச்சினார்க்கினியரும். பெயர்-பொருள் என்ற அருத்தத்தில் வருதற்கு மேற்கோள்"பெற்ற பெரும்பெயர் பலர் கையிரீஇய"(பதிற்:90:23) என்பது. வீடுபேறு பெரும்பொருளாதலை "சிறுகா லையிலா கிலையோர் திரியா, குறுகா நெடுகா குணம்வே றுபடா, உறுகால் கிளர்பூ தமெலா முகினும், மறுகா நெறி" என்ற கம்பர் வாக்கா லும் உணர்க (ஆரணிய: சரபங்க:20). வீட்டினையுடையது மதுரையென்றது, வீடலா லவாயிலா விழுமியார்கள் உறைதலி னென்க. மற்றும் ஆலவாயினவிர்சடைக்கடவுள் வீடுபேற்றினை வழங்குதலினுமாம் என்க.

இனி, அடிகள் 331 முதல் 699 வரையுள்ள பகுதியின் முக்கிய தொடர்பு வருமாறு காட்டப்படும்:—

(331) பாடல்சான்ற நன்னாட்டு நடுவணதாய் (365) இருபெரு நியமத்து (430) நாளங்கர்டிக்கம்பலை (428) நாடார்த்தன்றேயாய் (544) அல்லங்காடி அழிதருகம்பலை (543) புள்ளின் இசையெழுந் தற்றேயாய் (546) ஞாயிறு (547) குன்றஞ்சேருகையினாலே (558) மாலை (557) புகுந்து (558) பின்னர்நீங்க (620) முந்தையாமஞ் சென்ற பின்றை (653) மற்றைப் (631) பாணாட்கொண்ட கங்குல் (653) யாமத்தையும் [இரண்டாஞ் சாமத்தையும்] மற்றை (631) இடையதாகிய (651) கடவுள்வழங்குங் கையறு கங்குல் (653) யாமத்தையும் [மூன்றாஞ்சாமத்தையும்] பகலுறக் கழிப்பிச் (685) சீப்ப(686) இரவுத்தலைப் பெயரும் ஏம வைகறையிலே (697) வளங்கெழுதாரத்தோடே (688) யானையும் (689) புரவியும் (692)

ஆயமும் (693) தோட்டியும் (695) கலமும் அனைத்தும் (696) கங்கையாறு கடற்படர்ந்தாற்போல (697) அளந்து முடிவறியாத (699) மதுரை என்பது.

அடிகள் 700-714:—[*அத்தகைய மிக்குப்புகழெய்திய பெரும்பெயர்*] **மதுரையில் நெடுஞ்செழியன் துயிலெழுதல் கூறும்.**

சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ
ஒண்பூம் பிண்டி யவிழ்ந்த காவிற்
சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்று
இலங்குகதிர் இளவெயிற் றோன்றி யன்ன
தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்து
மயிலோ ரன்ன சாயன் மாவின்
தளிரே ரன்ன மேனித் தளிர்ப்புறத்து
ஈர்க்கி னரும்பிய திதலையர் கூரெயிற்று
ஒண்குழை புணரிய வண்டாழ் காதிற்
கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாதுபடு பெரும்போது புரையும் வாண்முகத்து
ஆய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயி லெடுப்ப இனிதி னெழுந்து

பதவுரை:—(700) *சினை தலை மணந்த* (701) *பிண்டி-கொம்புகள் தம்மிற்றலைகூடின அசோகினுடைய,* (700) *சுரும்பு படு செந்தீ* (701) *ஒள் பூ அவிழ்ந்த காவில் - சுரும்புகளுண்டாகுஞ் செந்தீப் போலும் ஒள்ளிய பூவிருந்த பொழிலிடத்தே,* (702) *சுடர் பொழிந்து ஏறிய விளங்கு கதிர் ஞாயிறு - ஒளியைச்சொரிந்து அத்தகிரியிலே போக விளங்குகின்ற கிரணங்களையுடைய ஞாயிற்றினுடைய,* (703) *இலங்கு கதிர் இள வெயில் தோன்றி அன்ன-விளங்குங் கிரணங்களின் இளவெயில் தோன்றினாலொத்த நிறத்தையுடையராய்,* (705) *நிலம் விளக்கு உறுப்ப மேதக பொலிந்து - நிலத்தையெல்லாம் விளக்கமுறுத்தும்படி கற்புமேம்படப் பொலிவுபெற்று,* (707) *தளிர் புறத்து* (708) *ஈர்க்கின் அரும்பிய திதலையர் - தளிரினது புறத்தில் ஈர்க்குப் போலத் தோன்றிய திதலையையுடையராய்,* (704) *தாவு இல் தமனியம் - ஓட்டற்ற பொன், வளைஇய - (நடு அழுத்தின மணிகளைச்) சூழ்ந்த, விளங்கு இழை - விளங்குகின்ற பேரணிகலங்களையும்,* (706) *மயில் ஓர் அன்ன சாயல்-மயிலோடு ஒருதன்மைத்தாகிய மென்மையினையும், மாவின்* (707) *தளிர் ஏர் அன்ன மேனி - மாவின் தளிரினது அழகையொத்த நிறத்தினையும்,* (708) *கூர் எயிறு-கூரிய எயிற்றினையும்,* (709) *ஒள் குழை புணரிய வள் தாழ் காதின் - ஒள்ளிய மகரக்குழை பொருந்திய வளவிய தாழ்ந்த காதினையும்,* (710) *கயத்து அமன்ற கடவுள் சுடர் இதழ்*

தாமரை - குளத்திலே நெருங்கின தெய்வங்கட்குரிய நெருப்புப் போலும் இதழ்களையுடைய தாமரையினது, (711) தாது படு பெரும் போது புரையும் வாள் முகத்து - தாதுண்டாம் பெரிய பூவையொக்கும் ஒளியினையுடைய முகத்தினையும், (712) ஆய் தொடி - நன்றாக ஆராய்ந்த தொடியினையும் உடைய, மகளிர் - மகளிருடைய, நறு தோள் புணர்ந்து - நறிய தோளை முயங்கி, (713) கோதையின் பொலிந்த சேக்கை துஞ்சி - தூக்குமாலைகளாற் பொலிவுபெற்ற படுக்கையிலே துயில்கொண்டு, (714) திருந்து - (செல்வத்தை நினைந்து இன்புறுகின்ற) பற்றுள்ளம், துயில் எடுப்ப - உறக்கத்தையுணர்த்துகையினாலே, இனிதின் எழுந்து - (அது நினைத்து) இனிதாகப் பின் எழுந்து; (எ-று.)

(703) இளவெயில் தோன்றியன்ன நிறத்தினையுடையராய் (705) பொலிந்து (705) திதலையராய் (704) இழையினையும் (706) சாயலினையும் (707) மேனியினையும் (708) எயிற்றினையும் (709) காதினையும் (711) முகத்தினையும் (712) தொடியினையும் உடைய மகளிரின் தோள்புணர்ந்து (713) துஞ்சி (714) திருந்து துயிலெடுப்ப எழுந்து என முடிக்க. 'எழுந்து' என்பது 'உருவினையாகி' (724) என்பதனோடு தொடரும்.

கருத்துரை:—பூத்த அசோகம் பொழிலிடத்தே அந்திப் போதில் இளவெயில் எறித்தாற்போலப் புணர்ச்சியாற் பெற்ற நிறத்தையுடையராய், கற்பு மேம்படப் பொலிவு பெற்றுத் திதலையையுடையராய், பொன்சூழ்ந்த பேரணிகலங்களையும் மயில் போன்ற சாயலினையும் மாந்தளிர்போன்ற மேனி நிறத்தினையும் கூரிய எயிற்றினையும் குழையணிந்த தாழ்ந்த காதினையும் தாமரைமலர்போன்ற முகத்தினையும் தொடியினையும் உடையராய் இலங்கும் மகளிருடைய நறியதோளை முயங்கித் தொங்கல்களாற் பொலிவுபெற்ற படுக்கையிலே துயில்கொண்டு, செல்வத்தை நினைந்து இன்புறுகின்ற பற்றுள்ளம் துயிலுணர்த்துகையினாலே இனிதாக எழுந்திருப்பன் நெடுஞ்செழியன் என்பது கருத்து.

விசேடவுரை:—பூத்த அசோகம் பொழிலிடத்தே அந்திப் போது இளவெயில் எறித்தாற்போலப் புணர்ச்சியாற் பெற்ற நிறத்தையுடைய மகளிர் என்றபடி. மகளிர் புணர்ச்சியால் நிறம் பெறுவரென்பதை 'தேசு மொளியுந் திகழ நோக்கி' (பரி-12:21) என்றவிடத்துப் பரிமேலழகர் 'தேசு - செயற்கையழகு, ஒளி - கலவியால் வந்த நிறம்' என உரையிட்டமையால் அறியலாம். கற்புமேம்பாட்டால் நிலம்விளக்குறுதல் பெறவைக்கப்பட்டது. சாயல்-மென்மை: "சாயலென்னுஞ் சொல், மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறியானும் நுகரும் மென்மையையுணர்த்தும்" (தொல். உரி. சூ. 27, நச்சி). மகளிர்மேனிக்கு மாந்தளிர் உவமையாதலை "தேமா மேனிச் சில்வளை யாயம்" (சிறுபாண் 176), "கழிகவின் இளமாவின் றளிரன்ன" (கலி.57), "மாந்தளிரே

மாமேனி'' (சிந்: 652) என்பவற்றாலுமுணர்க. 'தளிர்ப்புறத்திற் கின் அரும்பிய திதலையர்'—இவ்வுவமை பெரிதும் பாராட்டத் தக்கது. "ஈன்றவள் திதலைபோல் ஈர்பெய்யுந் தளிரோடும்" என்றது கலியும் (32). திதலை-துத்தி, தேமல். அமன்ற-நெருங் கின; அமலுதல்-நெருங்கல். சுடரிதழ்த்தாமரை, தாமரைக்கு நெருப்பு உவமித்தலை 'எரியகைந்தன்ன தாமரை'' (அகம்: 6) என் பதனானும் அறிக. 'புணர்ந்து' என்றபின் 'துஞ்சி' என்றது—புணர்ந்து பின்னைத் துயிலுங்காலத்துத் தனியேதுயிலுதல் இயல்பென்பது தோன்ற. "ஐந்துமூன் றடுத்த செல்வத் தமளியி னியற்றி'' என்றார் பிறரும். (சிந்.838) [இதன் பொருள்,—ஐந்தாய் ஒன்று மும்மூன்றாகப்படுத்த. ஐந்தாவன—சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம், உறுதூவி சேக்கையோரைந்து". இருவரும் துயில்கோடற்கு இரண்டும் போகநுகர்தற்கு ஒன்றும் வேண்டுதலின், அமளி மூன்றாயின என்பது—நச்சினார்க் கினியருரை] திருந்து-'திரு+உந்து' என்பன சேர்ந்து சிதைந்து, 'திருந்து' என்றாகி, செல்வத்தால் உந்தப்படுவது எனப்பொருள் பட்டுப் பற்றுள்ளத்திற்காகியது. இப்பற்றுள்ளம் துயிலெடுப்ப என்றது-செல்வத்தைநினைத்துத் துயிலெழுதல் என்றபடி. தன் செல்வம் இடையறாது ஒழுகுதற்கு வேண்டுங் காரியங்களைவிடியுங் காலத்தே மனத்தானாராயவேண்டுதலின், துயிலெடுப்புக்கு இது காரணமாயிற்று; "வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும், நல்லறனும் ஒண்பொருளுஞ் சிந்தித்து''என்றார் ஆசாரக்கோவை யில். இனி, திருந்து துயில்-நன்றாகிய துயில் என்றுமாம். இனி, சூதர் திருந்து துயிலெடுப்ப என்றாருமுளர்: முன்னர் 'சூதர் வாழ்த்த'(670) என ஒருமுறை வந்திருத்தலின், மீண்டும் அதனையே கொள்ளல் சிறவாதென்க.

அடிகள் 715-724:—நெடுஞ்செழியன் கோலங்கொள்ளல் கூறும்.

திண்கா ழார நீவிக் கதிர்விடும்
ஒண்கா ழாரங் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப
எருத்தந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற்
பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்
வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்
சோறமை வுற்ற நீருடைக் கலிங்கம்
உடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன வுருவினை யாகி

பதவுரை:—(723) வல்லோன் தைஇய வரி புனை பாவை-சித் திரகாரி பண்ணப்பட்ட எழுதிக் கைசெய்த பாவையிடத்தே, (724) முருகு இயன்றன்ன உருவினை ஆகி-தெய்வத்தன்மை நிகழ்ந்தாற்போன்ற வடிவினையுடையையாய், (718) எருத்தம்

தாழ்ந்த விரவு பூ தெரியல்-கழுத்திடத்தினின்றும் தாழ்ந்த விரவு தலையுடைய பூமாலையையுடைத்தாகியதும்,(715) திண் காழ் ஆரம் நீவி கதிர் விடும் (716) ஒள் காழ் ஆரம் கவைஇய-திண்ணிய வயிரத்தையுடைய சந்தனத்தைப்பூசி ஒளிவிடும் ஒள்ளிய வடமாகிய முத்துச்சூழ்ந்ததும் ஆகிய, மார்பின்-மார்பிலே, (717) வரி கடை பிரசம் மூசுவன மொய்ப்ப-வரியையுடைத்தாகிய பின்புறத்தை யுடைய தேனினமும் மற்றும் மொய்க்கப்படுவனவாகிய வண்டு முதலியனவும் மொய்ப்ப, (719) பொலம் செய பொலிந்த நலம் பெறு விளக்கம்-பொன்னாற்செய்கையினாலே பொலிவுபெற்ற மணிகளழுத்தின மோதிரம், (720) வலி கெழு தட கை தொடியொடு சுடர் வர-வலிபொருந்தின பெரியகையில் வீரவளையோடு விளக்கம் வர, (721) சோறு அமைவு உற்ற நீர் உடை கலிங்கம் - சோறு தன்னிடத்தே பொருந்துதலுற்ற நீரையுடைய துகிலை, (722) உடை அணி பொலிய குறைவு இன்று கவைஇ-உடைக்கு மேலணியும் அணிகலங்களாலே அது பொலிவுபெறும்படி தாழ்வின்றாக வுடுத்து; (எ-று.)

(721) உருவினையாகி (718) பூந்தெரியலையுடையதும் (716) ஆரம் கவைஇயதும் ஆகிய மார்பிலே (717) பிரசமும் மூசுவனவும் மொய்ப்ப (719) விளக்கம் (720) தொடியொடு சுடர்வரக் (721) கலிங்கத்தைக் (722) கவைஇ என முடிக்க.

கருத்துரை:—கழுத்தினின்றும் தாழ்ந்த பூமாலை (மார்பில்) அசைய, முத்துவடம்புரளும் சந்தனம்பூசிய மார்பிலே தேனும் வண்டு முதலியனவும் மொய்ப்ப, மணிகளழுத்தின பொன்மோதிரம் வலியபெரியகையில் அணிந்துள்ள வீரவளையோடு விளங்க, கஞ்சிபிட்ட துகிலை அதற்குமேலணியும் அணிகலங்களாலேபொலிவுபெறும்படியுடுத்து, புனைந்த சித்திரப்பாவையிடத்தே தெய்வத்தன்மை நிகழ்ந்தாற்போன்ற வடிவினையுடையையாய் நீ திகழ்கின்றாய் என நெடுஞ்செழியனை நோக்கிக் கூறியமை கருத்து.

விசேடவுரை:—723-24-வரிகளால், சித்திரப்பாவை முதலில் எழுதப்பட்டுப் பின் கைசெய்யப்பட்டுப் பின் தெய்வத்தன்மை ஏறிடப்பட்டாற்போலே, நாட்காலையில் செழியன் எழுந்த வடிவொடு பின் கோலங்கொண்டு அரசர்க்குரிய கடன்கள் கழித்துத் தெய்வவழிபாட்டோடிருந்தமை கூறினர். எழுதப்பட்ட பாவையிடத்தே தெய்வத்தன்மை நிகழ்தலை "மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும், கண்ணிய தெய்வதங் காட்டுநர் வருக்க, வர்ங்கத் தெய்வதம் அவ்விட நீங்கா" (மணி: 21: 125-127) என்பதாலும், "கேழ்கொளக், காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப், பாவையும் பலியெனப் பெறூஉ" (அகம்: 369) என்பதாலும் அறியலாம். கடை-பின்; பின்புறம்; பிற்பகுதி என்றபடி. விளக்கம்-மோதிரம். 'தொடி' என்ற சொல், (712) முதலிர்க்காகும்போது, 'வளை' என்ற பொருளிலும், (720) ஆடவர்க்

காகும்போது 'வீரவனை' என்ற பொருளிலும் வருமென்பது உணர்க. சோறு அமைவுபெற்ற நீர்-கஞ்சி. அந்த நீரையுடைய துகில் என்றது-கஞ்சியிட்ட துகிலை. "காடி கொண்ட கழுவுறு கலிங்கம்" என்றது நெடுநல்வாடை (134) உடை அணி-உடைக்கு மேலணியும் அணிகள். இவ்வணிகளால் கலிங்கம் பொலிவுபெற்றதென்றபடி.

இலக்கணக்குறிப்பு:—நீவியென்னுஞ்செய்தெனெச்சம் கண்ணிய என்ற பிறவினை கொண்டது. பிரசம் மூசுவன-உம்மைத் தொகை. மூசுவன-பலவின்பாற் பெயர்.

அடிகள் 725-748:—[வீரஞ்செறிந்தோரையும் ஏனையோரையும் 'கொணர்மின்' எனக்கூறி வரவழைத்து, 'வாயில் தங்கயாவர்ம் பிறரும் யாவரும் வருக' எனக்கூறி] நாளோலக்கமண்டபத்து நெடுஞ்செழியன் காட்சிக்கெளியனுயிருந்த தன்மை கூறும்.

வருபுனற் கற்சிறை கடுப்ப இடையறுத்து
ஒன்னு ரோட்டிய செருப்புகன் மறவர்
வாள்வலம் புணர்ந்தநின் தாள்வலம் வாழ்த்த
வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழ்த்தோள் மறவர்த் தம்மின்
கல்லிடித் தியற்றிய இட்டுவாய்க் கிடங்கின்
நல்லெயி லுழந்த செல்வர்த் தம்மின்
கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரசம் ஓவில கறங்க
எரிநிமிர்ந் தன்ன தானை நாப்பண்
பெருநல் யானை போர்க்களத் தொழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யார் என்னுது முறைகருதுபு சூட்டிக்
காழ்மண் டெஃகமொடு கணையலைக் கலங்கிப்
பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து
வானத் தன்ன வளநகர் பொற்ப
நோன்குறட் டன்ன ஊன்சாய் மார்பின்
உயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின்
நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியற்
பெருஞ்செ யாடவர்த் தம்மின் பிறரும்
யாவரும் வருக ஏனோருந் தம்மென
வரையா வாயிற் செறுஅ திருந்து

பதவுரை:—(725) வரு புனல் கல் சிறை கடுப்ப-மிகுந்துவருகின்ற யாற்றுநீரிடத்துக் கல்லணைநின்று தாங்கினாற்போல, இடை அறுத்து-(தம்படையைக்கெடுத்து மிக்குவருகின்ற பகைவரி

படையை) நடுவே தவிர்த்து, (726) ஒன்னார் ஓட்டிய-அப்பகைவரைக்கெடுத்த, செரு புகல் மறவர்-போரைவிரும்பும் படைத்தலைவர், (727) வாள் வலம் புணர்ந்த நின் தாள் வலம் வாழ்த்த-வாள் வெற்றியைப் பொருந்தின நினது முயற்சியின் வெற்றியை வாழ்த்த, (728) வில்லை கவைஇ கணை தாங்கும் மார்பின் - வில்லை நிரம்பவலிக்கையினாலே தன்னுள்ளே யடக்கிக்கொண்ட அம்பின் விசையைத்தாங்கும் மார்பினையும், (729) மா தாங்கு எறும் தோள்-குதிரையைச் செலுத்தி வேண்டுமளவிலே பிடிக்கும் வலியையுடைய தோளினையும் உடைய, மறவர்த் தம்மின்-வீரரைக் கொணர்மின்; (730) கல் இடித்து இயற்றிய இட்டு வாய் இடங்கின்-கற்றரையைப் பொளிந்துபண்ணின இட்டிதாகிய நீர் வரும்வாயையுடைய கிடங்கினையுடைய, (731) நல் எயில் உழந்த-மூழுமுதலரணத்தே நின்று வருந்தின, செல்வர்த் தம்மின்-வீரச் செல்வத்தையுடையாரைக் கொணர்மின்; (732) கொல் ஏறு பைந் தோல் சீவாது போர்த்த (733) மா கண் முரசம் ஓவு இல கறங்க-மாறுபாட்டையேற்றுக் கோறற்றொழிலையுடைய ஏற்றினது செவ் வித்தோலை மயிர் சீவாமற்போர்த்த பெரிய கண்ணினையுடைய முரசம் மாறாமல் நின்று ஒலியாநிற்க, (734) எரி நிமிர்ந்தன்ன தானை நாப்பண்-நெருப்பு நடந்தாற்போன்ற பகைவர் படைக்கு நடுவேசென்று, (735) பெரு நல் யானை போர்க்களத்து ஒழிய (736) விழுமிய வீழ்ந்த-பெரிய நல்ல யானையைப் போர்க்களத்தே பட வெட்டிச் சீரிய புண்ணினால் வீழ்ந்த, குரிசிலர்த் தம்மின்-தலைவரைக் கொணர்மின்; (738) முறை கருதுபு-(தனக்கு) முன்னுள்ளோர் காத்த முறைமையை நாளும் உட்கொண்டு, (737) புரையோர்க்கு-நட்பிற் குற்றந்தீர்ந்தோர்பொருட்டு, தொடுத்த பொலம் பூ தும்பை (738) சூட்டி-கட்டப்பட்ட பொன்னாற் செய்த பூவினையுடைய தும்பையைச் சூட்டி ஏவுகையினாலே, (739) காழ் மண்டு எஃகமொடு கணை அலை கலங்கி-காம்பு குழைச்சினுள்ளே செருகின வேல்களுடனே அம்புகளுஞ் சென்று நிலைகுலைத்தலின் நிலைகலங்கி, (740) பிரிபு இணை அரிந்த நிறம் சிதை கவயத்து-பலவாய்ப்பிரிந்து இணைந்த சந்துவாய்களற்ற பழையநிறங்கெட்ட கவசத்தோடே, (742) ஊன் சாய்-ஊன்கெட்ட, நோன் குறடு அன்ன மார்பின்-வலிய சகடையின் குறட்டையொத்த மார்பினையுடையராகிய, (741) வானத்து அன்ன வளம் நகர் பொற்ப (743) உயர்ந்த உதவி ஊக்கலர்த் தம்மின்-தேவருலகையொத்த செல்வத்தையுடைய ஊர்கள் விளங்க [முன்புபோலே நட்புக்கொண்ட அகத்துழிளையோர் ஆளும்படி] உயர்ந்த உதவியைச் செய்த முயற்சியையுடையாரைக் கொணர்மின்; (744) நிவந்த யானை கணம்நிரை கவர்ந்த-உயர்ந்த யானைத்திரளினொழுங்குகளைக்கைக் கொண்ட,(745)புலர்ந்த சாந்தின் விரவு பூ தெரியல்(746)பெருசெய் ஆடவர்த்தம்மின்-பூசிப்புலர்ந்த சாந்தினையும் விரவுதலையுடைய பூமாலையினையும் பெரிய செய்கைகளையும் உடைய மண்டலங்களை ஆள்கின்றவரைக் கொணர்மின்; (747) ஏனோரும் தம் என (748) வரையா - முண்டபத்தாரையும் அறங்கூறவையத்தாரையுங்

கொணர்மின் என வரைந்து கூறி, வாயில் செறுஅது-வாயிலிடத்துத் தகையாமல், (746) பிறர்உம்-இவர்களைப்போல்வாரும், (747) யாவர்உம்-படையாளர் முதலியோர் யாவரும், வருக என-வருவாராக என (ப் பொதுப்பட)க் கூறி, (748) இருந்து - இங்ஙனம் [நாளோலக்க மிருக்குமண்டபத்தே] எளியையாயிருந்து; (எ-று.)

(726)மறவர் (727)தாள்வலம் வாழ்த்த (729) மறவர்த்தம்மின் (731) செல்வர்த்தம்மின்(736)குரிசிலர்த்தம்மின் (743) ஊக்கலர்த் தம்மின் (746) பெருஞ்செயாடவர்த்தம்மின் (747) ஏனோரும் தம்மெனச் (748) சிலரை வரைந்து கூறி, வாயிலிடத்துத் தகையாமல் (746) பிறரும் (747) யாவரும் வருக எனப் பொதுப்படக் கூறி (748) [நாளோலக்கமிருக்குமண்டபத்தே] இருந்து-என முடிக்க.

[கவனிப்பு:— (738) 'நீர்யாரென்னாது' என்பது, மேல் 751-ஆம் வரிக்குப்பின் கூட்டிப் பொருந்தப் பொருளுரைக்கப்படும்.]

கருத்துரை:—மிக்குவருபுனலைக் கற்சிறைதாங்கினாற்போலே மிக்குவந்த பகைஞர் படையைத் தாங்கி அவரையோட்டிய் படைத்தலைவர்கள் நின் முயற்சியின் வெற்றியை வாழ்த்தாநிற்ப, நீ நாளோலக்க மண்டபத்தே வீற்றிருந்து "அம்பின் விசையைத் தாங்கும் மார்பினையும், குதிரையைச் செலுத்தி வேண்டுமளவிலே பிடிக்கும் வலிய தோளினையும் உடைய வீரரைக் கொணர்மின்; நல்லரணிடத்தே பகை தடுத்து நின்று வருந்தின வீரச்செல்வத்தை யுடையாரைக் கொணர்மின்; முரசம் மாறாது கறங்கப் பகைநடுவேசென்று களிற்றினைவெட்டி வீழ்த்திச் சீரிய புண்ணினால் வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்; எனக்கு முன்னுள்ளோர் காத்த முறைமையை நாளும் மறவாது உட்கொண்டு, நானும் என் நட்பினர் பொருட்டு உதவ என் படை வீரர்களுக்குத் தும்பைப்பூவைச் சூட்டிப் பகைவர்மேல் ஏவுகையினாலே, அவர்களும் சென்று, வேல்களும் அம்புகளும் தம்மேல் தைத்தலால் நிலைகலங்கி, இட்ட கவசம் நிறங்கெட, குறடும் அதில் தைத்த ஆர்களும்போல் மார்பகம் தோன்றப் பொருது வென்றிகொண்டு, வளப்பம்பொருந்திய ஊர்களை என் நட்பினர்கிய அகத்துழினையோர்க்கு அவர்களாளும்படி மீட்டுக் கொடுத்து உயர்ந்த உதவியைச் செய்துள்ளனர்: அத்தகைய் முயற்சியுடையாரைக் கொணர்மின்; யானைத்திரளின் ஒழுங்குகளைக் கைக்கொண்ட மண்டலாதிபர்களைக் கொணர்மின்; மண்டபத்தாரையும் அறங்கூறவையத்தாரையும் கொணர்மின்" என வரைந்து கூறி, "இவர்களைப்போல்வார் பிறரும் படையாளர் முதலியோர் யாவரும் வாயில் தகையுறாது உள்ளே வருவாராக" எனப் பொதுப்படக் கூறி, காட்சிக்கு எளியையாயிருக்கின்றாய் என நெடுஞ்செழியனை நோக்கிக் கூறியமை கருத்து.

விசேடவுரை:—'செருப் புகன்மறவர்' என்றது-ஏண்டு ஏனாதிப் பட்டம் முதலிய சிறப்புப்பெற்ற படைத்தலைவரைக் குறிக்கும்; ஏன்னை?'வருபுனற் கற்சிறை கடுப்ப இடையறுத்து ஒன்னோர்

டிய' என அடைகொடுத்திருத்தலின். இந்த அடையால் "வரு விசைப் புனலைக் கற்சிறை போல, ஒருவன் தாங்கிய பெருமை யானும்" என்னும் வஞ்சித்துறை கூறியமை தேற்றம். இது கூறவே, முன்னர் மாராயம் பெற்றவர்களே இவ்வஞ்சித்துறைப் போரைச் செய்வரென்பது தொல்காப்பியத்து நச்சினார்க்கினியருரையால் பெறப்படுதலின், ஈண்டு 'மறவர்' என்பதும் அத்தகைய மாராயம் பெற்ற படைத்தலைவரைக் குறிப்பதாகும். [மாராயம்-வேந்தனாற் செய்யப்பெறும் சிறப்பு;சிறப்பாவன:—ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதல்]. வாள்வெற்றியை வாழ்த்துதற்கு வீரரே உரியரென்பது "அஞ்சினர்க்களித்தலும் வெஞ்சின மின்மையும் ஆணணிபுகுதலும் அழிபடைதாங்கலும், வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்த" என்ற சிறுபாணாற் (210-212) அறியப்படும். மா தாங்குதல்-செலவினையுடைய குதிரையைக் குசைதாங்கி வேண்டுமளவிலே பிடித்தல்; இதற்குத் தோள்வலி வேண்டுவது. 'மாதாங்கு எறுழ்த்தோள் மறவர்' என்றமையின், இது தும்பைத் திணையைச் சார்ந்த குதிரைநிலை கூறியபடி. இனி, 'கணை தாங்குமார்பு' என்று கூறவே, 'கணை துணையுறமொய்த்த'லும் கூறியபடி. அதாவது, தான் வலித்து விடும் அம்பின் விசையைத் தாங்கும் மார்பு என்று கூறியதால், பிறர் தன்மேல் விடும் அம்புகள் தீண்டிச்செறிதலையும் தாங்கும் மார்பு என்பதும் கூறப்பட்டபடி. 'கணை துணையுறமொய்த்தல்' என்ற இது, "கணையும் வேலுந் துணையுறமொய்த்தலின்' என்றவிடத்து (தொல்: புறத்: 16) வருவதுகொண்டு கூறியது. இட்டுவாய்-இட்டிதாகிய நீர்வரும் வாய்: இட்டிது-சிறியது: 'ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை' (குறள், 478) என்றவிடத்துப்போலே.'இடங்கின் நல்லெயில்' என்றமையால், உழிஞைபெற்றும். 'நல்லெயில் உழந்த செல்வர்' [=முழுமுதலரணத்தே நின்று வருந்தின வீரச் செல்வத்தையுடையார்] என்றமையால், மதிற்புறத்தன்றி ஊரகத்துப்போரை விரும்பிய பாசிமறன் பெற்றும். ஆகவே, இஃது "ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்" என்னும் புறத்துழிஞைத்துறை கூறிற்று என்றனர் நச்சினார்க்கினியர். கொல்லேறு பைந்தோல் சீவாது போர்த்த மாக்கண் முரசம்=மயிர்க்கண்முரசம். அதாவது,புலியைப் பொருது கொன்றுநின்று சிலைத்துக்கோட்டுமண்கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர்சீவாமற்போர்த்த முரசு; என்னை? "புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கனைகுர லுருமுச் சீறக் கதழ்விடை யுரிவை போர்த்த, துனைகுரன் முரசம்", என்றார் தேவரும் (சிந்: 2899) 'யானை போர்க்களத்தொழிய விழுமிய வீழ்ந்த குரிசிலர்' என்றமையால் இது "களிறெதிர்ந் தெறிந்தோர் பாடு" என்னும் தும்பைத்துறை கூறியபடி. பாடு என்பது ஈண்டுப் பெருமை குறிப்பதாகலின், அக்களிறெறிந்த பெருமை தோன்றக் 'குரிசிலர்' என்றார். புரையோர்க்கு-நட்பினர் பொருட்டு: ஈண்டு, நான்கனுருபு பொருட்டுப்பொருள்து: முறை-முன்னுள்ளோர் காத்தமுறை: அதாவது, நட்பினர்க்கு

உற்றுழி யுதவல். 'தும்பை சூட்டி' என்றதனாலும் "எஃகமொடு கணை அலைக் கலங்கி" என்றதாலும் தும்பைத் திணை பெற்றும்: என்னை? "கணையும் வேலும் துணையுற மொய்த்தலிற், சென்ற வுயிரின் நின்றயாக்கை" கூறுதல் தும்பைக் காவதோர் இலக்கணமாதலின். 'புரையோரின் பொருட்டு' என்றதாலும் 'வானத்தன்ன வளநகர்பொற்ப உயர்ந்த உதவி' என்றதாலும் அரணுக்குள் முற்றகப்பட்டோராகிய நட்பினர் பொருட்டு முற்றுவிடுவித்தற்குச் சென்று உதவியமை பெற்றும். [வானத்தன்ன வளநகர்-அரண்கொண்ட ஊர்கள்.] எனவே, உழிஞையும் பெற்றும். ஆகவே, இது உழிஞைப்புறத்துத் தும்பையாயிற்று. எனவே, நெடுஞ்செழியன் தனக்கு நட்பாய் முற்றகப்பட்டோரை முற்றுவிடுவித்தற்பொருட்டுத் தானே தன் படைவீரரைத் தும்பைசூட்டி உதவலின், அவர்களும் மைந்துபொருளாகச் சென்று அம்முற்றுகையை விடுவித்து அவ்வரண்கொண்ட ஊர்களை அந்நட்பினர்க்கு மீட்டுக்கொடுத்தமை கூறப்பட்டது என்றபடி. நெடுஞ்செழியனால் ஏவப்பட்டோர் சென்று பொருங்கால், பகைவர் விட்ட வேல்களும் அம்புகளும் பட்டுக் கவசம் பிளக்கஎங்கும்உருவிநிற்றலின், அவருடையமார்புகள்குறடும்அதிற்றைத்த ஆர்களும்போல் தோற்றமளித்தன; அஞ்ஞான்றும் ஊக்கத்தைக் கைவிடாராய்ப் பொருதுவென்று நட்பினராய முற்றுகையிடப் பட்டோர்[அகத்துழிஞையோர்]ஆளும்படி அவர்களுக்கு ஊர்களை மீட்டுக்கொடுத்தனராதலின், அத்தகைய உயர்ந்த உதவியைச் செய்த ஊக்கலரைக்கொணர்மின் என நெடுஞ்செழியன் வரைந்து கூறுகிறான் எனவறிக. வேற்படைகளாலும் அம்புகளாலும் தைப் புண்ட வீரனுக்கு ஆரக்கால் சூழ்ந்த குறடு உவமை. 'ஆர் சூழ் குறட்டின் வேல் நிறத்திங்க' (புறம்: 283). குறடு-வண்டியுருளையின் குடம்; பட்டடை மரமுமாம். பெருஞ்செய்ஆடவர்-மண்டலாதிபர். ஏனோர்-மண்டபத்தார், அறங்கூறவையத்தார். மண்டபத்தார்-பட்டிமண்டபத்தார் எனலாம். பட்டிமண்டபம்-வித்யாமண்டபம்: "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" என்றார் கம்பரும். (பால: நகர:62.) தம்மின்-முன்னிலை முற்றுவினைத் திரிசொல். "ஏனோருந் தம்மென" என்புழித் தம்மென்பது தாரும் என நின்றது; இதனை, பொருநராற்றுப்படை 101-ஆம் வரியுரையில் நச்சினார்க்கினியர் மேற்கோள் எடுத்தலால் அறியலாம்.

அடிகள் **749-752**:-காட்சிக்கெளியனாயிருந்த நெடுஞ்செழியன் பாணர் கூத்தர் முதலானோரை யழைத்துத் தேர்களையும் யானைகளையும் வழங்கியமைகூறும்.

பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென
இருங்கிளை புரக்கும் இரவலர்க் கெல்லாம்
கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி

பதவுரை:—(750) யாணர் புலவரொடு-கவியாகிய புதுவருவாயினையுடைய புலவரோடே, (749) பாணர் வருக-பாணர் வருவா

வருக, பாட்டியர் வருக-பாணிச்சியர் வருவாராக, (750) வயிரியர் வருக-கூத்தர் வருவாராக, என-என்றழைத்து, (751) இரு கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்-அவர்கள் சுற்றத்தாராய் அவர்களை பாதுகாக்கும் பெரிய இரவலர்க்கெல்லாம், (738) நீர் யார் என்னாது-நீர் யாவரென்று அவர்களைக் கேளாமலே அவர்கள் காட்டின அளவைக்கொண்டு, (752) கொடுஞ்சி நெடு தேர் களிற்றொடும் வீசி-கொடுஞ்சியையுடைய நெடிய தேர்களை யானைகளோடும் கொடுத்து; (எ-று.)

(750) புல்வரொடு (749) பாணர் வருக பாட்டியர் வருக (750) வயிரியர் வருக என அழைத்து(751) இரவலர்க்கெல்லாம்(738) நீர் யார் என்னாது (752) தேர் களிற்றொடும் வீசி என முடிக்க. (738) நீர் யாரென்னாது என்பது ஈண்டுக் கூட்டப்படுதலை முன்னர்க் குறித்தோம். (பக்-141)

கருத்துரை:—புதிதாகக் கவிபாடிக்கொணர்ந்த புலவரையும், பாணரையும் பாணிச்சியரையும் கூத்தரையும் வருகென வழைத்து, அவர்கள்பாதுகாக்கும் சுற்றத்தாராயஇரவலர்க்கெல்லாம்'நீர்யார்' என்றுகூட அவர்களைக்கேட்டறியாமலே அப்பாணர் முதலியோர் காட்டின அளவைக்கொண்டு நெடிய தேர்களையும் யானைகளையும் அவர்களுக்கு வழங்குகின்றாய் என நெடுஞ்செழியனை நோக்கிக் கூறியமை கருத்து.

விசேடவுரை:—'நீர்யார் என்னாது'—பாணர் முதலியோர் கூறும் வார்த்தையிடத்து வைத்த மதிப்பையும், வரையாது வழங்குந் தன் வள்ளற்றன்மையையும் காட்டும். கொடுஞ்சி-தாமரைப் பூவாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது.

அடிகள் 753-758:—நெடுஞ்செழியனுடைய அரண்மனையின் [இராசகிருகத்தின்]உணவுச் சிறப்புக் கூறும்.

> களந்தோறுங் கள்ளரிப்ப
> மரந்தோறு மைவீழ்ப்ப
> நிணவூன்சுட் டுருக்கமைய
> நெய்கனிந்து வறையார்ப்பக்
> குரூஉக்குய்ப்புகை மழைமங்குலிற்
> பரந்துதோன்ரு வியனகரால்

பதவுரை:— (753) களம் தோறும் கள் அரிப்ப-இடந்தோறும் கள்ளையரிப்ப, (754) மரம் தோறும் மை வீழ்ப்ப - மரத்தடிகள்தோறும செம்மறிக்கிடாயைப் படுப்ப, (755) நிணம் ஊன் சுட்டு உருக்கு அமைய - நிணத்தையுடைய தசைகள் சுடுதலாலே அந்நிணம் உருகுதல் பொருந்த, (756) நெய் கனிந்து வறை ஆர்ப்ப-நெய்நிறையப்பெற்றுப் பொரிக்கறிகள் ஆரவாரிப்ப, (757) குரூஉ குய் புகை-நிறத்தையுடைய தாளிப்பிலெழுந்த புகை, மழை மங்குலின் (758)

பரந்து தோன்று-மங்குலையுடைய திசைகள்போலப் பரந்து தோன்றப்பட்டு, (758) வியல் நகரால்-அகற்சியையுடைய அரண்மனையிடத்து; (எ-று.)

(753) அரிப்ப (754) வீழ்ப்ப (755) அமைய (756) ஆர்ப்பத் (758) தோன்றப்பட்டு அகற்சியையுடைய என உடைமையொடு முடிக்க. அந்த உடைமை நகரொடு முடியும்.

கருத்துரை:—இடந்தோறும் கள்ளையரிப்ப, மரந்தோறும் செம்மறிக்கிடாயைப்படுப்ப, நிணத்தசைகளைச் சுடுதலாலே அந்நிணம் உருகியமைய, நெய்கனிந்து பொரிக்கறிகள் ஆரவாரிப்ப, தாளிப்பிலெழுந்த புகை மேகபடலம்கவிந்த திசைகள்போலப் பரந்துதோன்ற, நெடுஞ்செழியனின் அரண்மனை உணவுச்சிறப்பொடு திகழ்ந்தது என்பது கருத்து. [அத்தகைய அரண்மனையிடத்திருந்து, நெடுஞ்செழியன் (766) 'அரியதந்து குடியகற்றி' என மேல் தொடரும்.]

விசேடவுரை:—கள் அரிப்ப-கள்ளைக் கடைய: கள்ளைக் கடைதலை "கடையுங் கட்குரல்" என்ற சிந்தாமணியாலும் அறியலாகும் (செ-1202). கடைதல்-தேன்போலச் சொட்டுச் சொட்டாக விழும்படிசெய்தல்; அரித்தல். நகர்-அரண்மனை: "நிதிதுஞ்சு வியனகர்" என்ற சிலப்பதிகாரமும் காண்க (சிலப்: 27:200). இனி, நகர்-வீடுகள் எனப் பொருள்கூறி, நச்சினார்க்கினியர் (699) மிக்குப் புகழெய்திய மதுரை என முன்னே கூட்டுக என்றார்.

இலக்கணக்குறிப்பு:—நகரால்-நகரிடத்து; வேற்றுமைமயக்கம்.

[கவனிப்பு:—இனி 759-முதல் இறுதிவரையுள்ள அடிகள் பாடற்போக்கு அமைந்திருத்தலையொட்டி ஈண்டு வரையப்படுகின்றன. எனினும், உரைவகுக்குங்கால் கருதியபொருளைச் செவ்வன் அறிவித்தற்காக, முதலில் வரிகள் 766-770 வரையுள்ள பகுதிக்கும், இரண்டாவதாக, வரிகள் 771-780-வரையுள்ள பகுதிக்கும், இறுதியாக வரிகள் 759-765, 780-782 வரையுள்ள பகுதிக்கும் உரைவிளக்கஞ் செய்யப்படும்.]

அடிகள் 759—782:—

பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றேன்றி
அரியதந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறுபோலவும்

பன்மீ னடுவட் டிங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் தலைவ னாகக்
கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர்
அவரும் பிறருந் துவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.

முதலாவதாக, வரிகள் 766-770.—அரண்மனையிடத்து நெடுஞ்செழியன் சுற்றமொடு பொலிந்தினிது விளங்குதல் கூறும்.

"அரியதந்து.........இனிது விளங்கி"

பதவுரை:— (766) அரிய தந்து-இவ்விடத்திற்கு அரியவாய் வேற்றுப்புலத்திலுள்ள பொருள்களைக் கொணர்ந்து எல்லார்க்குங் கொடுத்து; குடி அகற்றி-நாட்டில்வாழும் குடிமக்களைச் செல்வத்திற் பெருக்கி, (767) பெரிய கற்று-நற்பொருள்களை விளங்கக் கூறிய நூல்களைக்கற்று, இசை விளக்கி - தன்மாட்டுளதாய புகழை எவ்வுலகத்தும் நிறுத்தி, (768) முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்-கடல்நடுவே தோன்றுகின்ற ஞாயிற்றை யொக்கவும், (769) பல் மீன் நடுவண் திங்கள் போலவும்-பல நட்சத்திரங்களுக்கு நடுவே தோன்றுகின்ற நிறைமதியைப்போலவும், (770) பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கி-நீ பொலிவுபெற்ற சுற்றத்தாருடனே பொலிவு பெற்று இனிதாக விளங்கி ; (எ.று). (770) விளங்கி (781) மகிழ்ந்து என இயையும்.

[(758) வியனகரிடத்து] (766) தந்து, அகற்றிக் (767) கற்று விளக்கி (768) ஞாயிறுபோலவும் (769) திங்கள் போலவுஞ் (770) சுற்றமொடு பொலிந்து விளங்கி—எனமுடிக்க.

கருத்துரை :— இம்மதுரையிடத்துக்கிடைத்தற்கு அரியவாய வேற்றுப்புலத்துள்ள பொருள்களைக்கொணர்ந்து எல்லார்க்குங் கொடுத்து, நாட்டில்வாழும் குடிமக்களுக்குச் செல்வம் பெருக்கி, உறுதிபயக்கும் நல்ல நூல்களைப்பயின்று, தன்மாட்டுளதாம் புகழை எவ்வுலகத்தும் நிறுத்திக் கடல்நடுவே தோன்றும் ஞாயிற்றையொப்பவும் பலவிண்மீன்களுக்கிடையே தோன்றும் மதியையொப்பவும், நீ சுற்றத்தாருடனே பொலிவுபெற்று இனிது விளங்குகிறாய் என்பது கருத்து.

விசேடவுரை :—குடியகற்றி என்றது, செல்வமுண்டாக்கி என்றபடி. அரிய, பெரிய-பலவின்பாற்பெயர்கள். 'மண்டிலமாக்கள் தண்டத்தலைவர் முதலிய சுற்றத்தோர்க்கு நடுவே ஞாயிறுபோல விளங்கி, பலகலைகளைக் கற்றோரிடத்தே மதிபோல விளங்கி யென்க' என்றனர் நச்சினார்க்கினியர். "பன்மீ னாப்பட் டிங்கள் போலப், பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை" என்றது பதிற்றுப்பத்தும் (90).

இரண்டாவதாக, வரிகள் **771 - 780**.—நெடுஞ்செழியனின் அறம் பொருள் இன்பம் பற்றிய சிறப்புக் கூறும்.

"பொய்யா நல்லிசை.........தேறன்மடுப்ப"

பதவுரை :— (778) பொற்பு விளங்கு புகழ் அவை - பொலிவு விளங்குகின்ற புகழினையுடைய அறங்கூறவையத்தார், (777) துவன்றி-நெருங்கி, (778) நின் புகழ்ந்து ஏத்த-நின்னுடைய அறத்தின் தன்மையைப் புகழ்ந்து வாழ்த்த, [இதனால் அறத்தின் சிறப்புக் கூறியபடி], (771) பொய்யா நல் இசை நிறுத்த - உண்மையான நல்ல புகழை உலகிலே நிறுத்தின, புனை தார் (772) பெரு பெயர் மாறன் தலைவனாக-கைசெய்த மாலையினையும் பெரிய பெயரினையுமுடைய மாறன் முதலாக,(773) கடந்து அடு வாய் வாள் இள பல் கோசர்-பகைவரை வென்று கொல்லும் தப்பாத வாளினையுடைய இளைய பலராகிய கோசரும், (775) புகழ்ந்த பொலம் பூண் ஐவர் உட்பட-எல்லாராலும் புகழப்பட்ட பொன்னாற்செய்த பேரணி கலங்களையுடைய ஐம்பெருங்கேளிரும் உட்பட, (776) மறம் மிகு சிறப்பின் குறுநிலமன்னர் (777) அவரும் - மறமிக்க நிலைமையினையுடைய குறுநிலமன்னராகிய அவரும், பிறரும் - கூறு தொழிற்றோரும், (774) இயல் நெறி மரபின் நின் வாய்மொழி கேட்ப-நடக்கின்ற நெறிமுறைமையினாலே நின்னுடைய உண்மையான மொழியைக் கேட்டு அதன்வழியே நடக்க, [இதனாற் பொருட் சிறப்புக் கூறியபடி], (779) இலங்கு இழை மகளிர் பொலம் கலத்து ஏந்திய-விளங்குகின்ற பூணினையுடைய மகளிர் பொன்னாற்செய்த வட்டில்களிலேயெடுத்த, (780) மணம் கமழ் தேறல் மடுப்ப-மணநாறுகின்ற காமபானத்தைத் தர நீ அதனையுண்டு, (781) மகிழ்ந்து - மகிழ்ச்சியெய்தி, [இதனால் இன்பச் சிறப்புக் கூறியபடி]. (எ.று).

கவனிப்பு :— 781ஆம் வரியிலுள்ள 'மகிழ்ந்து' என்ற சொல் பொருட்பொருத்தமுறுதற்காக ஈண்டுக்கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

(778) புகழவை (777) துவன்றி (778) நிற்புகழ்ந்தேத்த (772) மாறன்தலைவனாகக் (773) கோசரும் (775) ஐம்பெருங்கேளிரும் உட்படக் (776) குறுநிலமன்னராகிய (777) அவரும் பிறரும் (774) நின் வாய்மொழிகேட்ப, (779) மகளிர் ஏந்திய (780) தேறல் மடுப்ப நீ அதனையுண்டு (781) மகிழ்ந்து எனமுடிக்க.

கருத்துரை:— புகழினையுடைய அறங்கூறவையத்தார் நெருங்கி நின்னுடைய அறத்தின் சிறப்பினைப் புகழ்ந்து வாழ்த்த, உலகில் நல்லிசைநிறுத்திய மாறன் முதலாகப் பகைவெல்லும் தப்பாத வாளினையுடைய இளம் பல் கோசரும் பேரணிகலங்களையுடைய ஐம்பெருங்கேளிரும் உட்பட மறமிக்க குறுநிலமன்னரும் ஏனையோரும் நெறிமுறைபிறழாது நடக்கையினாலே நின்னுடைய வாய்மொழிகேட்டு அதன்வழியேயொழுக, இலங்கிழைமகளிர் பொன்னாற்செய்த வட்டில்களிலேயெடுத்து மணநாறுகின்ற காமபானத்தைத்தர அதனை நீ பருகி மகிழ்ச்சியெய்துகிறாய் என்பது கருத்து.

விசேடவுரை:— புகழவையே புகழ்ந்து ஏத்தும்படி நீ இருக்கிறாய் என்றதால் **அறத்தின் சிறப்பு** தோற்றம். நல்லிசை நிறுத்திய மாறன் முதலாகப் பல்லோரும் நெறிமுறைமையின் நடந்து நின் வாய்மொழிப்படியே ஒழுகுகின்றனர் என்றதால் **பொருட் சிறப்பு** தோற்றம். ஈண்டு, பொருட் சிறப்பு என்றது-அரசியற் செல்வச் சிறப்பை. இலங்கிழை மகளிர் பொற்கலத்தேந்திய தேறலை நீ யுண்டு மகிழ்கிறாய் என்றதால் **இன்பச் சிறப்பு** தோற்றம். [ஆகவே, நெடுஞ்செழியனின் அறம் பொருளின்பச் சிறப்பினை அவனுக்குத் தொகுத்துச் சுருங்க எடுத்துக் காட்டி, இனி **வீடுபேறென்ப**தொன்றுண்டு என்பதனை இறுதியாக வரிகள் *759-765, 780-782* இவைகளால் தெரிவித்துத் தெளிவிக்கின்றார் **எனை** அறிக].

'மாறன்-இவன் குடியிலுள்ள பாண்டியன்; அன்றி, ஒருகுறுநில முன்னன் என்றலுமொன்று' என்றனர் நச்சினார்க்கினியர். ஆனால், இந்த மாறன், பழையன் மாறனாயிருக்கலாமென்பதும் அவன் அவையகத்திருந்த ஒருவகை வீரர் கோசர் என்பாரென்பதும் முன்னர் 508-510 வரிகளின் விசேடவுரையிற் காட்டப்பட்டன. அவையிற்றை ஈண்டு நினைவு கூர்க. ஐம்பெருங்கேளிர்-ஐம்பெருங்குழு. ஐம்பெருங்குழுவாவன—"அமைச்சர் புரோகிதர் சேனா பதியர், தூதர் ஒற்றர் இவரென மொழிப". 'மணங்கமழ் தேறல் என்றதனாற் காமபானமாயிற்று' என்றனர் நச்சினார்க்கினியர். பானம் காமபானம் வீரபானம் என இருவகைப்படும்: மட்டு; நறவு-காமபானம்.

இறுதியாக, வரிகள் 759-765,780-782:— இந்தமிழின் அதிசயத்தையும் அதனாற் பின்பு விளையும் அமைதியையும் நல்லாசிரியரிடத்துப் பெற்று, சான்றோர் பல்லோரும் வாயாரப் புகழ வாணாள் முழுதும் இனிதாக இருப்பாயாக என நெடுஞ்செழியனை வாழ்த்தியமை கூறும்.

(759-765) "பல்சாலை முதுகுடுமியின்.......சிறப்பிற்றோன்றி"
(780-782) "....நாளும்,....இனிதுறைமதி பெரும....நல்லூழியையே"

பதவுரை:—(763) நிலம் தரு திருவின் நெடியோன் போல-எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ் செல்வத்தையுடைய மாயோனைப் போல, (761) தொல் ஆணை நல் ஆசிரியர்-பழைய ஆக்கினைகளையுடைய நல்ல ஆசிரியர், (762) புணர் கூட்டு-தாங்கள் பின்பு கூடின கந்தழியாகிய கொள்ளையை, உண்ட-அவரிடத்தே பெற்று அனுபவித்த, (760) நல் வேள்வி துறை போகிய-நல்ல யாகங்கட்குக் கூறிய துறைகளெல்லாம் முன்னர் முற்ற முடித்துவிட்ட,(762)புகழ் சால் சிறப்பின்-புகழ்ச்சியமைந்த தலைமையினையுடைய, (759) பல்சாலை முதுகுடுமியின்-பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் போல, [நீயும் நல்லாசிரியரிடத்தே] (208) கேட்டிசின்-கேட்பாயாக. [அஃது என்னாற் காட்டுதற்கரிது]. [அங்ஙனம் நீ கேட்டு அவ்வாசிரியரிடத்துப் பெற்ற], (764) வியப்புஉம்-கந்தழியின் அதிசயமும், சால்புஉம்-பினபு பெற்றமைந்த அமைதியும், (765) புகர் அறு சிறப்பின் (764) செம்மை சான்றோர் (765) பலர் வாய் தோன்றி-குற்றமற்ற சிறப்புக்களையுடைய தலைமைகளெல்லாம் அமைந்தோர் பலருடைய வாயினாற் பேசப்பட்டு, (781) பெரும-பெருமானே! (782) நல் ஊழியை-நன்றாகிய ஊழிக்காலத்தை, வரைந்து நீ பெற்ற (780) நாளும்-(இத்துணைக்காலம் இருத்தியெனப் பால்வரை தெய்வத்தாலே) வரையப்பட்டு நீ அறுதியாகப் பெற்ற நாள் முழுதும் (அதாவது, வாணாள் முழுதும்), (781) இனிது உறைமதி-இனிதாக இருப்பாய்; (எ-று.)

(763) நெடியோன் போல (761) நல்லாசிரியர் (762) புணர் கூட்டை யுண்ட (760) வேள்வித் துறைபோகிய (762) சிறப்பின் (759) பல்சாலை முதுகுடுமியைப் போல, [நீயும் நல்லாசிரியரிடத்தே] (208) கேட்டிசின்; அங்ஙனம் கேட்டுப் பெற்ற (764) வியப்பும் சால்பும் சான்றோரின் (765) பலர் வாய்த்தோன்றி, (781) பெரும! (782) நல்லூழியை வரைந்து நீ பெற்ற (780) நாளும் (781) இனிது உறைமதி என முடிக்க.

கருத்துரை:—எல்லா நிலங்களையும் தன்னுள்ளே யடக்கிக் காட்டின மாயோனைப் போன்ற தொல்லாணை நல்லாசிரியர்கள் தாங்கள் அநுபவத்திலடைந்த கந்தழியாகிய கொள்ளைப் பொருளை [மிகுதியாயிருக்கும் பொருளை] யூட்ட அவரிடத்தே அக்கந்தழியைப் பெற்று அநுபவித்த [நல்வேள்வித் துறைகளெல்லாம் முற்ற முடித்துப் புகழமைந்த சிறப்பினையுடைய] பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப்போல, நீயும் நல்லாசிரியரிடத்தே கிட்டி நற்பொருளைக் கேட்பாயாக. அஃது என் போன்றாராற் காட்டுதற்கரிது. அங்ஙனம் நீ கேட்டு அவ்வாசிரியரிடத்துப் பெற்ற கந்தழியின் அதிசயத்தையும் அதனை யுணர்ந்ததனாற் பின்பு பெற்றமையும் அமைதியையும் நின்பாற் கண்ட சான்றோர் பலரும் [தவத்தோராய சான்றோர் பலரும்] தம் வாயார நின்னைப் புகழ்ந்துபேச, பெருமானே! நீ உனக்கென

வரையப்பட்டுள்ள ஆயுட்காலமுழுதும் நல்லூழிக்காலத்துப் போலே நன்மைகளோடு இனிது இருப்பாயாக என வாழ்த்தி அறிவுறுத்தியமை கருத்து.

விசேடவுரை:— நிலம் தரு-நிலங்களைத் தன்னிடத்தே தந்த: ஈண்டுத் தருசொற் கிளவி தன்மையிடத்தது. மாயோனாகிய திருமால் ஸ்ரீ கிருஷ்ணனாகத் திருவவதரித்து ஸ்ரீ பகவத் கீதையை அருச்சுனனுக்கு உபதேசித்தபோது, எப்பொருளும் தானாயிருக்கின்றபடியை [விச்வரூபத்தை]க் காட்டியுள்ளான். ஆதலின், நிலந்தரு திருவின் நெடியோன் என்றது. அங்ஙனம் ஸ்ரீ கீதையை அருச்சுனனுக்கு அருளிச்செய்து அதன் மூலம் எல்லாரையும் போதித்தாற்போல, எல்லாரையும் போதிக்கவல்லராகிய நல்லாசிரியர் என்பது "நெடியோன்போல நல்லாசிரியர்" என்ற உவமையாற் பெறப்பட்டது. அத்தகைய நல்லாசிரியரை யண்டி நின்குலத்து முன்னோனாகிய பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதி, அவர்கள் தங்கள் அநுபவத்திற் பெற்று அநுபவித்து வந்த கொள்ளைச் செல்வமாகிய கந்தழியைத் தரத் தானும் அவரிடத்தே பெற்று அநுபவித்து வீட்டின்பத்தை யெய்தினான். அவன் போலே நீயும் தொல்லாணை நல்லாசிரியரையண்டி நற்பொருள் கேட்டுக் கந்தழியினைப்பெற்று அமைதிகொண்டு சான்றோர் புகழ இனிதிருப்பாய் என்றபடி. தொல் ஆணை-பழைய ஆக்கினை: அதாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாதொழுகுதலாகிய ஆக்கினை. ஆகவே, அங்ஙனம் தடைக்கென வகுத்த கருமங்களை முடித்துப் பின்னர்த் தத்துவங்களையாராய்ந்து மெய்ப்பொருளுணர்ந்து வீட்டின்பமெய்திய ஆசிரியரைத் 'தொல்லாணை நல்லாசிரியர்' எனக் குறித்தார். அத்தகைய ஆசிரியரிடத்து முதுகுடுமி தானும் அம்முறையே சென்று கந்தழிபெற்றமைந்து வீட்டின்பத்தைப் பெற்றான் என்றார். கந்தழியாவது-(கந்து அழி-பற்றுக்கோடு அழிந்தது) ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள். அது, "சார்பினுற் றோன்றாது தானருவாய் எப்பொருட்கும், சார்பெனநின் றெஞ்ஞான்றும் இன்பந் தகைத் தரோ, வாய்மொழியான் மெய்யான் மனத்தான் அறிவிறந்த, தூய்மையதா மைதீர் சுடர்" என்பதாம். இதனை, "உற்ற வாக்கையி னுறுபொருள் நறுமல ரெழுதரு நாற்றம்போற், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்"(திருவாசகம், அதிசயப்பத்து,9) என அதனையுணர்ந்தோர் கூறியவாற்றானுணர்க" என்று நச்சினார்க்கினியர் கூறியவாறு காண்க. இத்தகைய கந்தழியை [பற்றற்றபெருநிலையை]எய்துகின்றமை அதிசயமாதலின் அதனை "வியப்பு" என்றது. சால்பு-கந்தழிபெற்றபின் ஏற்படும் அமைதி: சாந்தி நிலை. புகாறு சிறப்பின் செம்மை சான்றோர்-தாபதமுனிவர். புகாறு சிறப்பிற் செம்மையாவன-'நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்' (தொல். புறத். சூ. 20) என்புழிக் கூறப்பட்டவை. நாலிரு வழக்கின் தாபதப் பக்கம்-எண்வகை மார்க்கத்துத் தவம்

புரியும் பகுதி. அந்நாலிரண்டும் தவம்புரிவார்க்கு உரியனவும் தவஞ்செய்து யோகஞ்செய்வார்க்கு உரியனவும் என இருவகைய. அவற்றுள், தவஞ்செய்வார்க்கு உரியன-ஊணசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டுமொழிதல், வாய்வாளாமை என எட்டு. இனி, இளம்பூரணர் நீராடல், நிலத்திடை கிடத்தல், தோலுடுத்தல், சடைபுனைதல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டிலுள்ள உணவுகோடல், தெய்வபூசையும் அதிதிபூசையும் செய்தல் என எட்டுக் கூறினர். இதனை, "நீஇ ராடல் நிலக்கிடை கோடல், தோஒ லுடுத்தல் தொல்லெரி யோம்பல், ஊரடை யாமை யுறுசடை புனைதல், காட்டி லுணவு கடவுட் பூசை, ஏற்ற தவத்தின் இயல்பென மொழிப" என வருதலாலும் உணர்க. புறப்பொருள் வெண்பாமாலையும், "நீர்பலகான் மூழ்கிநிலத்தசைஇத் தோலுடீஇச்,சோர்சடை தாழச் சுடரோம்பி ஊரடையார், கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல், வானகத் துய்க்கும் வழி" என்று தாபதவாகையிற் கூறியது. இனி, யோகஞ்செய்வார்க்கு உரியன-இயமம் நியமம் ஆசனம் வளிநிலை தொகைநிலை பொறைநிலை நினைதல் சமாதி என எட்டும். கந்தழியும் அதனாற் பெறும் அமைதியும் ஒருவர்க்கு ஏற்பட்ட பின்னர் அவர்க்கு வாழவேண்டி வரையப்பட்டுள்ள நாட்கள் அறத்தின்வழியே கழியும் நல்லடிக் காலமாதலின், நல்லூழியென்றது. நல்லூழியென்றது-கலியூழியல்லாத ஊழியை. கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற யுகம் நான்கனுள், கலியுகம் வேதசாத்திரங்கட்கு விலக்கான தீய செயல்கள் நிகழ இடனாவதென்பது, வெளிப்படை. "ஊர்தரு குரங்கின் மாடே, கலியது காலம் வந்து பார்ததோ" என்றான் வாலியும். தருமம் கிருத யுகத்தில் நான்கு பாதமும், திரேதா யுகத்தில் மூன்று பாதமும், துவாபரயுகத்தில் இரண்டு பாதமும், கலியுகத்தில் ஒரு பாதமுமாக நிகழ்ந்து,அதன் முதிர்வில் வரவரக் குறைந்திடுமென்ப.நாளும்-உம்மை, முற்றும்மை.

மதுரைக்காஞ்சியில் தொகுதிப்பட்ட வினைமுடிபு காட்டுமாறு:—

(23) உயர்ந்தோர் மருக! (42) பொருந! (61) நெடியோன் உம்பல்! (74) கொற்றவர் தங் கோனாகுவை; (88) கொற்றவ! (105) வெல்கோவே! (130) புகழ்வேந்தே! (138) நசைப்பொருந! (144) போரேறே! (189) செற்ற தெவ்வர் நின்வழி நடக்கையினாலே (131) நீநட்டவர் குடியுயர்க்குவை; (152) பின்னர் உறு செறுநர் (175) நின்வழி வாழாமையினாலே (176) பாழாயின அவர்தேஎம்; (132) அங்ஙனம் பாழாயினபின்பு நீ செற்ற அரசு பெயர்க்குவை; (151) வெல்போர்க்குருசில்! (194) நின் வலம்படுகொற்றம் (193) பிறையின் (194) வழிவழிச்சிறக்க; (196) நின் தெவ்வர் ஆக்கம் (195) இருண்மதியின் (196) தேய்வனகெடுக.

(270) ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (285) ஒருசார் புறவு [காடு] தழுவப்பட்டு (301) ஒருசார் மலை தழுவப்பட்டு (314) ஒரு

சூர் சுரஞ்சேரப்பட்டு (325) ஒருசார் நெய்தல்சான்ற (319) வரைப்பின் கண்ணே (325) வளம்பல பயிலப்பட்டு ஆங்கு (326) ஐம்பால் இணையுங்கவினி அமைவரப்(331)பாடல்சான்றநன்னாட்டு நடுவணதாய் (364) கவிகொள் சும்மையுடையதாய் (359) அகனெடுந் தெருக்களில் (365) இருபெரு நியமத்து (373) பல்வேறு குழூஉக் கொடி பதாகை ஆகியவை நிலைஇ [அனைத்தும்] (374) அருவியி னுடங்க, (383-393) காற்படையும் (394) வருவன பெயர்தலின், (405) பண்ணியந் தழீஇத்திரி விலைஞரும். (397) பூவினரும் (398) கோதையரும் (399) சுண்ணத்தினரும் (401) இலையினரும் நூற்றினரும் (403) அஞ்சி (404) ஏங்குவனரிருந்து அவை நீங்கிய பின்றை (403) இன்னு வெய்துயிர்த்து (406) மாடநிழலிலே இருத்தர, (409) தொன்முது பெண்டிர் (421) செப்பில் (422) பண்ணியத்தைப் (423) பூவோடே ஏந்தி மனைமனை மறுக, (430) நாளங்காடிக் கம்பலை (426) விழவின் நாடார்த்தன்றேயாய்

(455) மழுவாள் நெடியோன் தலைவனாக (458) உருகெழு பெரியோர்க்கு(459)உயர்பலி கொடுக்கைக்கு (460) அந்தியிற்கொண்ட விழவிலே தூரியங் கறங்குகையினும், (467) கடவுட்பள்ளியும் (474) அந்தணர் பள்ளியும் (487) அமணப் பள்ளியும் ஆகிய இப் பள்ளியிடங்களிலெழும் ஓசையும், (492) அறங்கூறவையத்திடத்தும் (499) காவிதி மாக்களிடத்தும் எழும் ஓசையும் (524-26) கோதையின் பெருநாளிருக்கையில் விழைவுகொள் கம்பலை கடுப்பக் (538) கல்லென்கையினும்

(506) பண்ணியம் பகர்நரும் (510) நாற்பெருங்குழுவும் (511-18) கோடுபோழ்கடைநர் முதலாகக் கண்ணுள் வினைஞரீருகவுள்ளாரும் பிறரும் கூடிய கூட்டத்திடத்தும் (519-21) நெய்தற்றொழில் செய்யும் கம்மியர் கூட்டத்திடத்தும் (526-35) [சோறிடுஞ்சாலைகளில்] இன்சோறு பிறவும் தருநரிடத்தும் எழுகின்ற ஓசையும் (537-38) பண்டமிழிதரும் பட்டினத்து ஒல்லெனிமிழிசை மானக் கல்லென்கையினும் (544) அல்லங்காடி அழிதருகம்பலை (543) பல்வேறு புள்ளின் இசையெழுந்தற்றேயாய்

(556) நெடுநகர் (557) எல்லையெல்லாம் (558) மாலை (557) புகுந்து (558) பின்னர் நீங்க (579) வரைந்து கொண்ட பாசிழை மகளிர் (561) வீழ்துணை தழீஇ (558) நாணுக்கோள (583) கொண்டி மகளிர் (589) பொய்தலயர (596) மறவர் (599) மகிழ்சிறந்து திரிதர (603) [புதல்வர்ப் பயந்து] வளமனை மகளிர் குளநீரயரக்கண்ட (609) கடுஞ்சூன் மகளிர் கைதொழுது (607) மடையை (610) மடுப்ப, ஒருசார் (611) வேலன் (614) நெடுவேட் பேணுகையினுலே (610) ஒருசார் (615)மன்றுதொறுநின்ற குரவையும் சேரிதொறுநின்ற (616) உரையும் பாட்டும் ஆட்டும் விரவுகையினுலே(617) வேறு வேறுபட்ட கம்பலை (619) சேரிவிழவின் ஆர்ப்பெழுந்தாங்கு (617) வெறி கொள்பு மயங்கப்பட்டு (620) முந்தையாமஞ் சென்ற பின்றை

(653) மற்றைப் (631) பானுட்கொண்ட கங்குல் (653) யாமத்தையும்[இரண்டாஞ் சாமத்தையும்] (653) மற்றை (631) இடையதாகிய (651) கடவுள் வழங்குங் கையறு கங்குல் (653) யாமத்தையும் [மூன்றாஞ் சாமத்தையும்] இராப்பொழுது பகலுறக்கழிப்பி, (656) வேதம்பாடப் (658) பண்ணக் (659) கைப்பத் (660) தெவிட்ட (661) உறுப்ப (662) நுவல (667) கரையத் (669)தோன்ற (670) வாழ்த்த, நுவல (671) இசைப்ப (672) இரங்க, சிலைப்ப (673) இயம்பக் (675) கரைய, அகவ (676) முழங்கக் (677) குழுமச் (685) சீப்ப (686) இரவுத்தலைப்பெயரும் ஏமவைகறையிலே,

(697) வளங்கெழு தாரத்தோடே (688) யானையும் (689) புரவியும் (692) ஆயமும் (693) தோட்டியும் (695) கலமும் அனைத்தும் (696) கங்கையாறு கடற்படர்ந்தாற்போல (697) அளந்து முடிவறியாததும் (652) ஏமமாகியதும் (698) காண்வரக் கவினிப் (699) புகழெய்தியதும் பெரும் பெயரினையுடையதும் ஆகி,

(340) வையைத் துறைதுறைதோறும் (342) இருந்த பெரும் பாணிருக்கையினையும் (351) கிடங்கினையும் (352) புரிசையினையும் (356) வாயிலினையும் உடைய (699) மதுரையில்,

(712) மகளிரின் நறுந்தோள் புணர்ந்து (713)சேக்கைத்துஞ்சி (714) திருந்து துயிலெடுப்ப எழுந்து (724) முருகியன்றன்ன உருவினையாகி, (716) மார்பிலே (717) பிரசமும் மூசுவனவும் மொய்ப்ப, (719) விளக்கம் (720) தொடியொடு சுடர்வரக் (721) கலிங்கத்தைக் (721) கவைஇ (726) மறவர் (727) நின் தாள் வலம் வாழ்த்த (729) மறவர்த் தம்மின் (731) செல்வர்த் தம்மின் (736) குரிசிலர்த் தம்மின் (743) ஊக்கலர்த் தம்மின் (746) பெருஞ்செயடாவர்த்தம்மின் (747) ஏனோருந் தம்மெனச் (748) சிலரை வரைந்துகூறி, வாயிலிடத்துத் தகையாமல் (746) பிறரும் (747) யாவரும் வருக எனப் பொதுப்படக் கூறி, (748) [நாளோலக்கமிருக்கு மண்டபத்தே] இருந்து,

(750) புலவரொடு (749) பாணர் வருக பாட்டியர் வருக (750) வயிரியர் வருக என அழைத்து (751) அவர் காட்டின இரவலர்க் கெல்லாம் (738) நீர் யார் என்னாது (752) நெடுந்தேரைக் களிற்றொடும் வீசி,

(758) வியனகரிடத்து [அரண்மனையிடத்து] (766) அரிய தந்து குடியகற்றிப் (767) பெரியகற்று இசைவிளக்கி (768)ஞாயிறு போலவும் (769) திங்கள் போலவுஞ் (770) சுற்றமொடு பொலிந்து விளங்கி (778) புகழவை (777) துவன்றி (778) நிற்புகழ்ந்தேத்த (772) மாறன் தலைவனாகக் (773) கோசரும் (775) ஐம்பெருங்கேளிரும் உட்படக் (776) குறுநில மன்னராகிய (777) அவரும் பிறரும் (774) நின் வாய்மொழி கேட்ப (779) மகளிர் ஏந்திய (780) தேறல் மடுப்ப நீ அதனையுண்டு (781) மகிழ்ந்து,

(198) வாய் நட்பினையே; (210) பணிந்தொழுகலையே; (204) பழிநமக்கெழுகவென்னாய் (205) இசைவேட்குவையே; (206) அன்னாய்! (207) அண்ணலே! (234) மன்னர் (237) உலகம் ஆண்டு கழிந்தோர் (236) திரையிடு மணலினும் பலராவர்; ஆதலின், இவ்வுசாழ்விற் பெரியதாயிருப்பது (207) ஒன்று இளக்குவல்; அஃது ஏன்னுற் காட்டுதலரிது; அதனை (763) நெடியோன் போலத் (761) தொல்லாணையினையுடைய நல்லாசிரியர் (762) புணர் கூட்டை அவரிடத்தே பெற்று உண்ட சிறப்பினையுடைய (760) வேள்வித் துறைபோகிய(759)பல்சாலை முதுகுடுமியைப் போல, [நீயுநல்லா சிரியரிடத்தே] (208) கேட்டிசின்; அங்ஙனம் கேட்டுப்பெற்ற (764) கந்தழியின் வியப்பும் சால்பும்(765) புகாறுசிறப்பிற் (764) செம்மை சான்றோர்(765)பலர்வாய்த்தோன்றி(781)பெரும!(782)நல்லூழியை வரைந்து நீபெற்ற(780)நாண்முழுதும்(781)இனிது பேரின்பத்தை நுகர்ந்து உறைமதி; அதனை நுகர்ந்துறையாது (206) முன்னிலை நின்னொடு எவனோ? [ஐம்பொறிகட்கும் முன்னிற்கப்படுவனவாகிய இந்நுகர்பொருள்கட்கும் நின்னொடு என்ன உறவுண்டு?] (208) நின் அவலம் கெடுக [இனி, நின்னிடத்துண்டாகிய மாயை கெடுவதாக]; (209) நின் சேண்விளங்கு நல்லிசை கெடாது நிலைஇயர் (208) வாழி-என வினைமுடிபு செய்க.

இங்ஙனம் மாட்டுறுப்பானும் எச்சவுறுப்பானும் வினைமுடிபு செய்தமை "அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும், இயன்று பொருள் முடியத் தந்தன ருணர்த்தல், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" (தொல்: செய்: 207) என்ற சூத்திரத்தாலும், "சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லியகிளவி யெச்சமாகும்" என்னுஞ் சூத்திரத்தாலும் (தொல். செ:276) கூறப்பட்ட இலக்கணப்படி யமையும். மாட்டுறுப்பாவது:—அகன்றும் அணுகியும் கிடந்த பொருள்களைக்கொண்டு வந்து தொடராகக்கூட்டி முடித்தல்; மாட்டுதலென்பது கொண்டு வந்து கொளுத்துதல். எச்சவுறுப்பாவது-கூற்றினானும் குறிப்பினானும் முடிக்கப்படும் இலக்கணத்தோடு பொருந்தியகிளவி. இவையிற்றை 'நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பு' (தொல்.செ:1) எனத் தொல்காப்பியனார் கூறினமையின், இவரும் நல்லிசைப் புலவராதலின், இங்ஙனம் செய்யுள் செய்தாரென்றுணர்க என்றனர் நச்சினார்க்கினியர்.

இதிலுள்ள உவமைகள் பின் வருமாறு:—(52-53) கடுந்திண் தேர் காற்றென்னக்கடிது கொட்ப, (63) நரையுருமின் ஏறனையை, (84-85) சரக்குப் பறித்தற்குக் கடலில் நின்ற மரக்கலங்கள் அக்கடல் சூழ நின்றதற்கு × மழை முற்றிய மலை, (125) காலென்னக் கடிதுராய், (181) முருகுறழப் பகைத்தலைச் சென்று, (193-94)பிறை யின் சிறக்க, (195-96) இருண்ட ரயின் தேய்வன கெடுக, (217) நரம்பின் முரலும் நயம்வரு முரற்கை, (278) பாஅயன்ன பாறை, (279) நீலத்தன்ன பைம்பயிர், (280) வெள்ளியன்ன ஒள்வீ, (282) மணிமருள் நெய்தல், (284) வல்லோன் தைஇய வெறிக்களம்

கடுப்ப,(304-5) இயங்கொட்டன்ன ஓசையையுடைய தட்டை, (307) வை கண்டன்ன புல், (309) காலுறு கடலின் ஒலிக்குஞ் சும்மை, (339) கோதையின் ஒழுகும் விரிநீர், (345) அழும்பிலன்னநாடு, (356) வையையன்ன வழக்குடை வாயில், (359) யாறுகிடந்தன்ன அகனெடுந்தெரு,(361-62) மாகாலெடுத்த முந்நீர்போலமுழங்கிசை நன்பணை, (363) கயங்குடைந்தன்ன இயங்கொட்டிமிழிசை, (365) ஓவுக்கண்டன்ன இருபெருநியமம், (369) நீரொலித்தன்ன தானை, (374) [கொடிகள்]அருவியினுடங்க, (379) காற்றெறுத்த நாவாய்× கடாம்பெருகு யானை, (386-87) அன்னச் சேவல்×புரவி, (388) கால் [காற்று]×தேர், (392) தேவழத்தன்ன செலவு, (396-97) முழவின்னோன்றலை[கண்]கடுப்பவுருண்ட பிடகை, (402-403) இருதலை வந்த பகைமுனை கடுப்ப இன்னுயிரஞ்சி, (406) மலைபுரை மாடம், (407-8) வான்கோடு×வால்நரைக் கூந்தல், (410-12) செந்நீர்ப் பசும் பொன் புனைந்தபாவை செல்சுடர்ப் பசுவெயிற்றோன்றி யன்ன செய்யர், (415-16) சேர்ந்துகுவன்ன சுணங்கெதிரிள முலை, (417 மையுக்கன்ன மொய்யிருங்கூந்தல், (424-30) மண்ணுழ கொளக்குறையாது புனல்புகமிகாது கரைபொரு திரங்குமுந்நீர்× கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது இருக்கின்ற கூடல் நாளங்காடி, (428-30) நாளங்காடிக் கம்பலை × விழவின் நாடார்ப்பு, (432-33) செக்கர்×சிவந்த கலிங்கம், (438) மணிதொடர்ந் தன்ன வொண் பூங்கோதை, (440) காலியக்கன்ன கதழ்பரி, (441-42) காலெனகழியும் செல்வர்,(446) அணங்கு × மகளிர்,(452) மழைமாய்மதி ×பெருங் கொடிகளை வளி புடைக்கையினாலே ஒருகால் தோன்றி ஒருகால் மறையும் மகளிர் முகம், (461-63) தாதுண்ணி தாமரைப் போது பிடித்தாங்கு ஒண்குறுமாக்களைத்தழீஇ, (474) குன்று குயின்றன்ன அந்தணர்பள்ளி, (482) கல் பொளிந்தன்ன இட்டு வாய்க் கரண்டை, (484) கயங்கண்டன்ன நகரம் [=அருகன் கோயில்], (485) செம்பியன்றன்ன செஞ்சுவர், (491) ஞெமன் கோலன்ன செம்மை, (495-99) மாவிசும்புவழங்கும் பெரியோர்× செம்மைசான்ற காவிதிமாக்கள், (501-2) குன்றுகண்டன்ன நல் இல், (509-10) நாற்கோசர்×நாற்பெருங்குழு, (519-20) ஆட்டையின் மடிப்பு×அறல், (524-26) கோதையிருக்கையில் விழைவுகொள் கம்பலை × பௌத்தப்பள்ளி அந்தணர்பள்ளி அமண்பள்ளிஆகிய விடத்தும் அவையத்திடத்தும் காவிதிமாக்களிடத்தும்எழுகின்ற ஓசை, (532) தீஞ்சேறு அமிர்தியன்றன்ன கடிகை, (537-38) பட்டினத்து ஒல்லெனிமிழிசை கல்லெனல்×பண்ணியம் பகர்நரிடத்தும் நாற்பெருங்குழுவிடத்தும் கோடுபோழ்கடைநர் முதலாகக் கண்ணுள் வினைஞரிருகவுள்ளாரும் பிறருங்கூடிய கூட்டத்திடத்தும் நெய்தற்றொழில்செய்யும் கம்மியர் கூட்டத்திடத்தும் சோறிடுஞ்சாலைகளில் இன்சோறு பிறவும் தருநரிடத்தும் எழுந்த ஓசை கல்லெனல், (543-44) அல்லங்காடி அழிதரு கம்பலை×பல்வேறு புள்ளின் இசை, (562) நீர்திரண்டன்ன கோதை, (566-67) திறந்து மோந்தன்ன சிறந்துகமழ் நாற்றத்துமலர், (568) கொண்டல் மலர்ப்புதல்மானவேய்ந்து,(573-74) நுண்தாது உண்டு வறும்பூத்

துறக்கும் வண்டினம்×கொண்டிமகளிர், (576) பழந்தேர் வாழ்க்கைப்பறவை×கொண்டிமகளிர், (582) வானவமகளிர்×கொண்டிமகளிர், (608) மயிலின் மென்மெல இயலி, (617-19) சேரிவிழவின் ஆர்ப்பெழுதல்×வேறுவேறுபட்ட கம்பலை வெறிகொள்பு மயங்கல், (624) நல்வரியிருஅல் புரையும் மெல்லடை, (629-30) பனிக்கடல்×பாயல், (634) இரும்பிடி மேஎந்தோல்×இருள், (643) வயக்களிறு பார்க்கும் வயப்புலிபோல, (655-56) தும்பிமுரலல்×அந்தணர் வேதம்பாடல், (662-65) மின்னுக்கொடி×இல்லோர் [கற்புடை மகளிர்], (682-84) பொன்சுடுநெருப்பு உக்க நிலம்×பலநிறமணிகளும் பொன்னும் பச்சைப்பாக்கும் விழுந்து கிடக்கும் மணல்முற்றம், (696-99) கங்கையம்பேரியாறு கடற்படர்ந்தாற்போல அளந்து முடிவறியாத மதுரை, (701-3) பூத்த அசோகம் பொழிலிடத்தே இளவெயில் எறித்தாற்போலப் புணர்ச்சியாற் பெற்ற நிறத்தையுடைய மகளிர், (706) மயில்×சாயல்,(706-7)மாவின் தளிர்ஏர்×மேனிநிறம், (707-8)தளிர்ப்புறத்துஈர்க்கு× திதலை, (710-11) தாமரைப்போது×மகளிரின் முகம்,(724)முருகியன்றன்ன உருவினையாகி, (725-26) வருபுனற் கற்சிறை×இடையறுத்து ஒன்னுரோட்டிய மறவர், (734) எரிநிமிர்ந்தன்ன தானை, (741) வானத்தன்ன வளநகர், (742) நோன்குறடு×வேலும் அம்பும் பட்டு எங்கும் உருவிநிற்கும் மார்பு, (757) குய்ப்புகை×மழை மங்குல், (761-63) நிலந்தரு திருவின் நெடியோன்×தொல்லாணை நல்லாசிரியர், (768) முந்நீர் நாப்பண் ஞாயிறு போல விளங்குதல்×மண்டிலமாக்கள் தண்டத்தலைவர் முதலிய சுற்றத்தோர்க்கு நடுவே நெடுஞ்செழியன் விளங்குதல், (769) பன்மீன் நடுவண் திங்கள்போல விளங்குதல்×பலகலைகளைக் கற்றோரிடத்தே நெடுஞ்செழியன் விளங்குதல்.

மதுரைக்காஞ்சியால் அறியலாகும் பொருள்கள்:—

மன்னர்கள் தருமத்தில் தப்பாமல் நடத்தினால் மழை நாண்மீன் ஞாயிறு திங்கள் முதலியனவும் நெறி தப்பாமல் நடக்குமென்பது, யானையின் நிணத்தைப் பேய்மகள் தின்னுதல், துணங்கைச்சீர்க்கு யூபம் எழுந்தாடல், அகத்தியர் இராவணனைத் தமிழ் நாட்டையாளாதபடி போக்கினமை, உருமு மரங்களைச் சுட்டு மலைகளை நீறுக்குமென்பது, மரக்கலத்தின் பாய்மரத்தின் மேலே கொடியாடுதல், சரக்குப்பறித்தற்குக் கடலில் மரக்கலங்கள் நிற்றல், சாலியூரை நெடுஞ்செழியன் கொண்டமை, நீரை இடாவான் முகத்தல், பயிர்களிற் கிளி முதலியவற்றையோப்புதல்,பரதவர்மகளிர் குரவையாடல், தடாரிப்பொருநர்க்குக் களிறு கொடுத்துப் பொற்றாமரைப் பூவைச் சூட்டுதல், புலவு நாறும் கடலிடத்துச் சுறுக்கள் செருக்கித்திரிகின்றமை, கழியிடத்து உப்புப்பாத்தியிலே வெள்ளுப்பை அளவர் விற்றல், முதுவெள்ளிலை யென்னும் ஊர் ஓவாக் கலி யாணருடைத்தாயிருத்தல், உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லுபவை உழவும் வாணிக

மும், நாடுகெட எரிபரப்புதல், தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் எழுவரைச் செருவென்றமை, பகைவரைப்போரிலேவென்று அவர் முரசைக் கைக்கொண்டு களவேள்வி வேட்டல், நட்டவர் குடி யுயர்த்தல், செற்றவர் அரசுபெயர்த்தல், முத்து சங்கு குளித்தல், நெடுஞ்செழியன் கொற்கைக்குரியோன் எனல், ஊனைக் கூடஇட்டுச் சோருக்குதல், பரதவர் தென்றிசைக்கட் குறுநிலமன்னர் எனல், பகைவரின் அகநாடுபுக்கு அவருருப்பம் வெளவல், பகைவர் நாட்டைத் தன்னுடைாக்கிக்கோடல், பகைவர் கடிகாவினை வெட்டுதல், நாடெனும் பேர்காடாதல், ஆசேந்தவழி புலிதங்கல், அம்பலங்களில் பேய்மகளிர் உலாவல், ஊரிடத்து இல்லுறைதெய்வங்கள் உலாவல், வருந்திய குடிகள் கேளிர் நிழல் சேரல், குதிரிடங்களிலே கூகைச்சேவல் பேட்டுடன் கதறல், முதுகிட்டார்மேற் செல்லாமை, பெரியோர் சென்ற அடிவழிப்பிழையாது அறநெறியொழுகல், விழுநிதிபெறினும் பழிசெய்யாமை, ஈதலுள்ளமொடு இசைவேட்டல், அரசர்க்குச் செவியறிவுறுத்தல், அரசரை வாழ்த்துக்கூறல், விறலியர்க்குக் குறுந்தொடிகளையும் பாணர்க்குக் களிறுகளையும் தரல், வாட்போரின்கட் பெற்ற இனிமையைப் பின்னும் விரும்பி அதிலே முயலல், சூதர்க்குத் தேருடனே குதிரைகளையும் கொடுத்தல், பச்சைக் குப்பிகளில் கள்ளினையூற்றிவைத்தல், பணியாதாரைப் பணியவைத்துத் திறைவாங்குதல், பள்ளியெழுச்சிமுரசம் ஒலித்தல், உருமேற்றுக்கு யானைத்திரள் நடுங்குதல், யாறுகள் குளங்களை நிறைத்துக் கீழ்திசைக் கடலுக்குப் பரந்துசெல்லல், கழனிகள் களிற்றினை மறைக்கும்படி கதிர்களையுடையனவாதல், கரும்பின் எந்திரம் இருந்தமை, மூத்தலான் அள்ளலிலே எருது வலியற்றுத்தங்க அதனைக் களமர்பெயர்த்தல், திருப்பரங்குன்றில் விழாக் கொண்டாடுதல், புதுநீர்விழவில் மகளிர் தம் கணவருடன் நீராடுதல், பாணர்குடியிருப்பில் மனையிடத்து மரங்கள்தோறும் மீனைத்திருத்தல், குழியிலேமணிவிளங்கல், கடற்றில் நன்பொன் கொழிப்ப மான் உகளல், அகிலையும் சந்தனத்தையும் வெட்டி தோரைநெல் விதைத்தல், பல்வேறு பண்டங்களையும் கற்றரையிடத்தே குவித்தல், ஆமா அவரையின் தளிரைத் தின்னுதல், சேணோன் அகழ்ந்த பொய்க்குழியில் கேழல் வீழ்தல், வேங்கைப் பூவைப் பறிக்கு மகளிர் ['புலிபுலி' என்று] ஆரவாரஞ் செய்தல், பன்றியைக் கொல்லும் வலியினையுடையது புலி எனல், மூங்கிலிற்பிறந்த நெருப்பு பசியதூறுகளைச் சுட்டெரித்தல், மலைக்கு அழகு அருவியெனல், முழைஞ்சிடங்கள் சூருவளியை முகத்தல், இளையோர் கவலை காத்தல், வளைகளை வாளரங் கொண்டு கீறியறுத்தல், செட்டிகள் [பரதர்] கூலத்தைக் கொணரல், தீம்புளியினையும் உப்பினையும் கருவாட்டினையும் நாவாயிலேற்றுதல், யவனம் முதலிய தேசங்களுக்கு இவ்விடத்து உண்டாகிய பேரணிகலங்களை யெடுத்துப் போதல், மரக்கலமீகாமர் குதிரைகள் கொணரல், ஓர் நாட்டில் ஐம்பால் திணையும் கவினியமைவரல், நன்னாட்டைப் புலவர் பாடுதல்,

வையைத்துறைதொறும் பெரும்பாணிருக்கையிருந்தமை, அழும்பில் என்னும் ஊர் மானவிறல்வேள் என்னும் குறுநிலமன்னனுடைய தெனல், அழும்பில் நிலனும் வளனும் சிறந்திருத்தல், முதுகிடுவோர் முரசத்தை இடையே போகட்டு ஓடுதல், மதில் பல கற்படைகளையுடையதாதல், வாயிலில் தெய்வமுறையுமெனல், யாறு கிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருக்களிருந்தமை, நாளங்காடியிற் பாஷை வேறுபாட்டையுடைய பலசாதி மக்கள் திரளல், முரசறைந்து விழவினை நாட்டிலுள்ளார்க்குச் சொல்லுதல், கயத்தைக் கையாற்குடைந்து விளையாடுதல், பெரிய அங்காடித்தெரு நாளங்காடி, அல்லங்காடி என இரு கூற்றையுடையதெனல், கோயில்விழாக்களிற் கொடிக்கள் கட்டுதல், வெற்றிக்கு அறிகுறியாகச் சயக்கொடிநாட்டுதல், கள் விற்றலைக் கொடிசாற்றுதல், கல்வி கொடை தவம் முதலியவற்றுக்குக் கொடி கட்டல், யானைக்கு முன்னும் பின்னும் சங்கொலித்தல், யானையை நீர்வாரியென்னுஞ் சங்கிலிகொண்டு காலிற் கட்டுதல், வாசிவாரியன் ஐந்து கதியையும் பதினெட்டுச் சாரியையும் குதிரைக்குப் பயிற்றுதல், குதிரைகளுக்கு இட்டவாசமிடுதல், நவமணிகள் பொன் சந்தனம் கருப்பூரம் முதலியவற்றைப் புழுகிலும் பனிநீரிலும் நனையவைத்திடித்தல், இனிய கருங்காலி சீவிக்காய்ச்சின களியைப் பசியபாக்குடனே கலத்தல், பாக்கு வெற்றிலை சங்குசுட்ட சுண்ணும்பு இவற்றினையுடையராயிருத்தல், தெருக்களில் நாற்படையும் போதல், விழாக் கால் கொள்ளத்தொடங்கிய ஏழாநாளந்தியிலே தீர்த்தமாடுதல், நாளங்காடிக்கம்பலை விழவின் நாடார்த்ததுபோலிருப்பது, கலிங்கம் ஒள்ளிய பூத்தொழில்களையுடையதாயிருத்தல், தேரின் விளிம்பிலே பிரம்பினை வைத்துத் தைத்தல், கடவுளர் எழுந்தருளுங்கால்கொடியெடுத்தல், மழுவாணெடியோன் ஏனைக் கடவுளரின் முதல்வனாகக் கோடல், அந்திவிழவில் உயர்பலி கொடுத்தல், அதர்வவேதமொழிந்த வேதங்களை விளங்க ஓதல், பௌத்தப்பள்ளி அந்தணர்பள்ளி அமணப்பள்ளி இவை நிலவல், சென்றகாலமும்வருங்காலமும் தாம்முழுதுணர்ந்த அறிஞர்கூறல், அறங்கூறவையம் ஞெமன்கோலன்ன செம்மைத்தாதல், யாகத்திற்குச்சந்தனம் பூசுதல், காவிதிமாக்கள் மயிர்க்கட்டுக் [தலைப்பாகை] கட்டுதல், பிறதேசங்களினின்றும் வந்த வணிகர் தம்பண்டங்களை விற்றல், பழையன் என்னும் குறுநில மன்னனுடையது மோகூர் எனல், அவன் அவையகத்து நாற்கோசர் திகழல், கோசர் வஞ்சினமொழியாலே விளங்குதல், சங்கையறுத்து வளை முதலியனவாகக்கடைதல்,மணிகளைத் துளையிடல்,எவ்வகை நுண்ணிதினுணர்ந்த செய்தியும் உவமங்காட்டி வெழுதும் கண்ணுள்வினைஞர் இருந்தமை, சிறியனவும்பெரியனவுமாகிய மடிப்புடைவைகளைக் கொண்டுவந்து விரித்தல், அந்திக்கடையில் தெருவிற் புடைவைவிற்றல், கோயிலைச் சூழ்ந்த ஆடவர்தெரு நான்காதல், சேரனுடைய பெரிய நாளோலக்கவிருப்பிலே எல்லாக் கலைகளையுமுணர்ந்தசிரியோர்திரண்டு அவன் கேட்பத்தருக்கங்களைக்கூறல்,

பண்டமேற்றிய மரக்கலங்கள் ஓதவேற்றத்திலேகழியிலேவருதல்,
அல்லங்காடிக்கம்பலை பல்வேறு புள்ளினிசை யெழுந்ததுபோ
லிருத்தல், கலிங்கங்களுக்கு மணக்கின்ற அகிற்புகையை யூட்டு
தல், வெள்ளிய பூக்களாற்செய்த மாலைகளைக் கொண்டையிலே
முடித்தல், கொண்டிமகளிர் தம் கூந்தலிற் பல பூக்களையும்
கொண்டல் மலர்ப்புதல்மான வேய்தல், கொண்டிமகளிர் தொடி
விளங்கக் கைவீசி மனைதொறுஞ் சென்று பொய்தலயரல், முதற்
சாமத்தில் யாழ்வாசித்தல், மாயோன்பிறந்த ஓணநன்னாளில்
ஊரிலுள்ளார் விழவெடுத்தல், போரில் நெற்றி வடுப்படல்,
ஓணத்திருநாளில் சேரிப்போர் பொருதல் இயல்பெனல், யானை
மேல்வாராமல் அஞ்சி மீளுதற்குக் கப்பணம் சிதறல், புதல்வர்ப்
பேறு இம்மைமறுமைப்பயன்களையடைவிக்குமெனல்,ஈன்றணிமை
நீங்கியக்கால் குளத்துநீரிலே குளித்தலால் பால் நன்கு
ஊறிச் சுரக்குமென்பது, முதற்சூல்கொண்ட மகளிர் இடுக்கணின்
றிப் புதல்வரைப் பயத்தல் வேண்டுமென்று தெய்வத்தைப்
பரவிக் குறைதீர்தல், வேலன் கழங்குவைத்துப் பார்த்துப்
பிள்ளையாரால் [முருகனால்] வந்ததெனமுற்கூறிப் பின்: வெறி
யாடுவனென்பது, மன்றுதொறும் குரவைக்கூத்து நிகழல்,
நன்னன் பிறந்த நன்னாள் விழவில் சேரியிடத்துப் பேராரவாரம்
எழுதல், காழ்சாய்த்துக் கடையடைத்தல், பாகிலே மெல்லடை
சமைத்து விற்றல், பருப்புந் தேங்காயுமாகிய உள்ளீடுகளோடே
கண்டசருக்கரை கூட்டிப்பிடித்த அப்பங்களை விற்றல், நள்ளிர
வில் பேயும் அணங்கும் கழுதும் சுழன்றுதிரிதல், மெல்லிய
நூலேணியைக் கள்வர் அரையிலே சுற்றியிருத்தல், கள்வர்
பேரணிகலங்களை நச்சித்திரிதல், ஊர்காப்பாளர் கள்வர் ஒதுங்கி
யிருக்கின்ற இடத்தை வேய்த்தல், ஊர்காப்பாளர் களவுகாண்டற்
கும் காத்தற்குங் கூறிய நூல்களில் வல்லரெனல், நடுநிசியிலும்
ஊர்காப்பாளர் காவலிலசைவிலராய் உலாவுதல், இரவு மூன்றுஞ்
சாமத்தில் தெய்வங்களுலாவாது செயலொழிதல்; வைகறையில் அந்
தணர்வேதம்பாடல், யாழோர் மருதப்பண்ணை வாசித்தல்,பரிக்கா
ரர் களிற்றைக் கவளம் உண்பித்தல், குதிரைகள் புல்லுணவைக்
குதட்டல், கடைகளைமெழுகுதல், கள்ளோர் கள்விலை பகரல், கற்
புடைமகளிர் மனைக்காரியங்களைச் செய்தல், சூதர்வாழ்த்தல்,
மாகதர் புகழை நுவலல், வேதாளிகர் புகழ்ந்துபாடல், நாழிகைக்
கணக்கர் நாழிகையறிந்து சொலல், கோழிச்சேவல் கூவல்,
வலைடாழ்ங்குருகின் சேவலும் அன்னச்சேவலும் ஆண்மயிலும்
தமக்குரிய பேடைகளை யழைத்தல், களிறுகளும் கரடிமுதலிய
விலங்குகளும் கூட்டிலேயுறைகின்ற புலியுடனே முழங்கல்; மகளிர்
கணவரொடு புலந்து முத்தாரம் அணிமணி முதலியவற்றைப்
பரிந்து சிதறல், அவையிற்றைச் சேடியர்பெருக்கித் தொகுத்
தல், வேட்டுவர் நிரைகாத்திருந்த வீரரை மாள வெட்டி வேல்
கோலாகக்கொண்டு பசுத்திரளையடித்து ஓட்டிவருதல், கங்கை
யாறு பலமுகமாகக் கடலிலே சென்று சேரல், வளங்கெழு தார
மொடு மதுரைநிகழல், தெய்வங்கட்குரியது தாமரைப்பூவெனல்,

எழுதப்பட்ட பாவையிடத்தே தெய்வத்தன்மை நிகழ்தல், துகிலுக்குக் கஞ்சியிடுதல், யாற்றுநீரைக் கல்லணையால் தடுத்தல், வீரர் தம் அரசனின் வாள்வலம் வாழ்த்துதல், குதிரையை விரையச் செலுத்தி வேண்டுமளவிலே பிடித்தல், கல்லிடித்தியற்றிய இட்டிதாகிய நீர்வரும்வாயையுடையது கிடங்கு எனல், ஏற்றினது தோலை மயிர்சீவாமல் முரசுக்குப் போர்த்தல், நட்பாய் முற்றகப்பட்டோரை முற்றுவிடுவித்தற்கு உதவல், அரண்மனைவாயிலிடத்துத் தகையாமை, புலவர் பாணர் பாணிச்சியர் கூத்தர் முதலானோர்க்கும் அவர்சுற்றத்தார்க்கும் நீர்யாவரென்று அவர்களைக் கேளாதே தேர்களையும் யானைகளையும் கொடுத்தல், பொரிக்கறிகளை நெய்யில் வறுத்தல், தொல்லாணை நல்லாசிரியர் தம் சீடர்பெற்றமையும்படி கந்தழியைப் போதித்தல், பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி தொல்லாணை நல்லாசிரியரிடத்தே வீட்டினபத்தைப் பெற்றமை, மாயோன் எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடையவனெனல், மாயோன் தொல்லாணை நல்லாசிரியராய் அருச்சுனனுக்கு ஸ்ரீ கீதையையருளிச்செய்தமை, தாபதராய சான்றோர் தம் வாயாற்புகழ்தல் ஓர் தனிச்சிறப்பாதல், மன்னன் குடிமக்களின் செல்வத்தைப் பெருக்குதல், மாறன் பொய்யா நல்லிசை நிறுத்தினவனெனல், மகளிர் பொன்வட்டில்களிலே மணங்கமழ்தேறல் தருதல், புலவர் மன்னரை வாழ்த்துதல்—முதலிய இன்னோரன்ன பொருள்கள் இந்த மதுரைக்காஞ்சியால் அறியலாகும்.

ஏறக்குறைய மூவாயிரத்து மூந்நூற்றைம்பது சொற்களுக்கு மேற்பட்ட இந்த மதுரைக்காஞ்சியில், யூபம், மண்டிலம், எந்திரம், பதாகை, பிடகை, பண்ணியம், பலி, தூரியம், வேதம், சாவகர், கரண்டை, ஆவுதி, அமிர்து, மோதகம், சூதர், மாகதர், வைதாளிகர், ஆரம், தமனியம், கவயம், கணம் முதலியவாகச் சில வடசொற்களே வந்துள்ளன.

இந்த மதுரைக்காஞ்சியிற் கூறிய விடயத்தின் சுருக்கம் வருமாறு:—

கடலை யெல்லையாக் கொண்டு ஓங்கிய மலைநாறிய இவ்வியன் ஞாலத்து,விசும்பின்கண் வலமாகக்காற்றுச் சுழலுதலாலே மழை வேண்டுங்காலத்துப் பெய்தலைச் செய்து உதவ, அதனாலே திசைகளெல்லாம் தழைப்ப, வித்தியது ஆயிரமாக விளைய, நிலனும் மரனும் பயன்தழைப்ப, அசுவினி முதலிய நாண்மீன்கள் தாம் செல்லும் நெறியிலே ஒழுக,ஞாயிறும் மதியும் குற்றமற்றுத் தோன்றி விளங்க, மக்கட்குப் பசியும் பிணியும் நீங்கி அழகு விளங்க, உலகந்தாங்கும் அட்டதிக்கயங்கள் பொறைநீங்கி மேதகவுற, நல்லமைச்சருடனே ஊழிக்காலமெல்லாம் தமக்கு அடிப்பட்டுநடக்கும்படி பல்லாண்டு பல்லாண்டாகச் செங்கோலோச்சிய சிறப்பை மீக்கூறும்படி இவ்வுலகத்தையாண்ட உயர்ச்சிபெற்ற பாண்டியர் குடியில் உதித்தவனே! போர்க்களத்துக் களவேள்வி

செய்யும்படி வெல்லுந் தானையையுடைய பெருந! தமிழ்நாட்டை யாளாதபடி இராவணனைப் போக்கின அகத்தியனார்க்கு அடுத்த படி வைத்து எண்ணப்படும் சால்புடைப் பெருந! மலையென் றிருளும் உயர்ந்த தோற்றத்தையுடையனவாய்ப் போரிற் பயின்ற யானைகள் மேலும் சினம் மிக்குக் களத்தூ வீரரைக் கொன்று திரியவும், குதிரைப்படை எழுப்பிய தூளி ஆகாயத்திடத்தே வெயிலை மறைப்பவும், தேர்ப்படைகள் கடிதாகச் சுழலவும், காலாட்படை வீரர்கள் தம் தோள்வலியால் வெற்றியை முற்றுப் பெறவும், இருபெருவேந்தரொடு குறுநிலமன்னர் சாயப் பொருது போர்வென்றும் திருப்திபிறவாதவனாய் மேலும் மலையை அரணாக்கக்கொண்டிருந்த குறிஞ்சிநில மன்னர்களையும் காட்டையரணாக்கக் கொண்டிருந்த பகையரசர்களையும் வென்று அழித்த நின் வலி கண்டு அஞ்சியதாலே நாட்டிலிருக்கின்ற அரசர்களும் தத்தம நிலங்களை விட்டுவிட, அவற்றையெல்லாம் கைக்கொண்டு வேப்பலந் தார்மார்பினையுடையவனாய்த் திகழ்ந்து, வடிம்பலம்பநின்ற பாண்டியன் வழியில்வந்தோனே!

செழிய! நீ உருமின் ஏறனையை; அருமிளையினையும் குண்டு கிடங்கினையும் நிரைப்புதவினையும் நெடுமதிலினையும் நிரை ஞாயி லினையும் உடையனவாய் அம்புகளையுமிழும் அரண்களை அவை யுள்ள விடங்களிலே சென்று கைப்பற்றி ஆங்கினின்றும் நீங்கிய விழுச்சிறப்பினையுடையாராயும் வடவிமயம் தென்குமரி குணகடல் குடகடல் எல்லையாகக் கொண்ட நிலப்பகுதிக்கிடையில் வாழும் மக்களெல்லாம் தம்மொடு பழமைபாராட்டி ஏவல்கேட்கும்படி வெற்றியோடே செறிந்து ஒழுகுஞ் சிறப்பினையுடையராயும் திகழ்ந்த மன்னவர்கட்கெல்லாம் நீ தலைவனாகுவை; கடலி டையே திரைகிழியவோடப் பாய்விரித்து முரசம் முழங்கச் சரக்கு களை ஏற்றிவந்து கரைசேர்ந்து வாணிகம் வாய்த்தலாலே அச் சரக்குகளை இறக்குமதி செய்யும் பெருநாவாய்கள் அக்கடல்சூழ நிற்றலாலே மழைமுற்றிய மலைபுரைவனவாய்த் துளங்குகின்ற இருப்பினையும், அக்கடலையே அகழியாகக்கொண்டுள்ள இருப்பி னையும் உடைய சாலியூர் என்னும் ஊரைக் கைப்பற்றிக் கொண்ட கொற்றமுடையோனே!

குளங்களின் நீரை இடாவால் முகந்துகொண்டு நிரையாக நின்று இறைப்பாரிடத்தேயெழும் ஓசை, ஏற்றத்துடன் உலாவும் பன்றிப்பத்தரின் ஓசை, கிழாஅரின் ஓசை, கடாவிடுகின்றவர் ஓசை, எருதுகள் பூண்ட மணியினோசை, புள்ளோப்பும் ஓசை ஆகியவை மணல்மலிகானல் பரதவர்மகளிர் குரவைக்கூத்தி னோசையோடு கூடி எந்நாளும் ஒலியாநிற்ப, ஒருபால் விழாக் கொண்டாட்டத்தினோசைகள் மாறாமல் நின்ற ஊர்களிலேயிருந்து கொண்டு, தடாரிப்பொருநர்க்கு யானைக்கன்றும் பிடியும் களிறும் கொடுத்தும், பொற்றாமரைப் பூச்சூட்டியும் சிறப்புச்செய்தலோடு எல்லாருக்கும் பேரணிகலங்களைச் சிதறுங்கோவே! பல்குட்டு வரையும் வென்ற கோவே! பல்வகையொலிகளும் ஓவாக்கலி

யாண்மையுடைய முதுவெள்ளிலை யென்னும் ஊர் நானிலவரோடே பழமைகூறி ஏவல்கேட்கும்படி தலையாலங்கானத்துச் செரு வென்ற புகழ்வேந்தே! நீ நட்டவர் குடியுயர்க்குவை; செற்றவர் அரசு பெயர்க்குவை. முத்தும் சங்கும் குளிப்பாரது இருப்பினைக் கொண்ட கொற்கையிலுறைநரால் நச்சப்படும் பொருநனே! தென்பரதவரைப் போரில் தனக்கு அடிப்படுத்திப் படையாகும் படி செய்துகொண்ட போரேறே! தன்னூரிலிருந்து கொண்டே அரியபொருளெல்லாம் எளிதினில் மனத்தாற் கைக்கொண்டு, அவற்றையெல்லாம் வேண்டியோர்க்குக் கொடுத்து, மேலும் "ஊரில்நனியுறைவேம்" என்று அமையாமல், போரேற்றெழுந்து மலையிடத்த காடுகளைக்கடந்து பகைவரது நாட்டுள் புகுந்து அவரது அரண்களை வெளவி, அதனாலும் அமையாமல், தானழித்த நாடுகளின் நிலங்கள் பண்டையின் மேலாதற்கு அடிப்படத் தங்கியிருந்த குரிசிலே!

நின் ஏவல்செய்து வாழாமையினாலே நின்பகைவர் நாடுகள் நின்னால் பாழ்பட்டன; நீ கடிகாவினை வெட்டித் தண்பணைகளை எரியூட்டி, நாடு காடாக்கினாய்; பசுதங்கின இடமெல்லாம் புலி தங்க, மகளிர் கூத்தினைமறக்க, சான்றோரிருந்த அம்பலங்களில் பேய்மகளிர் உலாவியாட, ஊரிடத்துள்ளாரையெல்லாம் வாசல் காப்போர் வெளியேற்ற அவ்வாசலின்கண் நின்று பெண்டிர் வருந்தியரற்ற, ஊர்க்குடிகளெல்லாம் பசியால்வாடித் தம் சுற்றத்தார் பற்றுக்கோடாகச் சென்று சேர, மாளிகைகளில் எரியுண்டு வெந்து வீழ்ந்த கரிந்த குதிரிடங்களிலே கூகைகள் கதற, நீர் மிக்க பொய்கைகளில் வாட்கோரையும் சண்பங்கோரையும் வளர, கழனிகளில் பன்றிகள் ஓடித்திரிய நீ தவக்கெடுத்தாய்.

களிறு எங்கும் பரப்பி அறப்போர் செய்யும் மறவர்படையோடே முருகனைப்போற் பகைமேற்சென்று விசும்பிலார்ப்பிமிழ அவரைக் கடந்து அட்டு, அவர் நாடழிய எயில்வெளவி, அவர் சுற்றமொடு அவர் வலியையும் போக்குதலின், செற்ற தெவ்வர் ஏவல்கேட்டு நடக்கையினாலே சோழமண்டலம் தொண்டைமண்டலங்களைத் தன்னவாக்கிக்கொண்டு, அரசியல் பிழையாமலும் பெரியோர் சென்ற அடிவழிப்பிழையாமலும் அறநெறி இப்பெற்றித்தென அவர்க்கு விளக்கி, மேம்படும் நின்வலம்படு கொற்றம் பிறைச்சந்திரன்போல் நாடோறும் வளர்ந்து வழிவழிச்சிறக்க; நின்தெவ்வராக்கம் இருட்பக்கத்துமதிநாடோறும் தேய்ந்திறுவது போலே தேய்ந்து கெடுக.

இனி, நின் பாண்டிமண்டிலத்துச் சிறப்புத்தான் என்னே! மேகம் கீழ்திசைக் கடலிடத்து நீரைமுகந்து மேற்றிசைவரையிடத்துத் தங்கி, இரவு பகலறியாவாறு திரண்டிருண்டு கவிந்து, களிற்றினம் நடுங்க இடித்து, அருவி பெருகியொலிப்பப் பெருமழை சிதறி மிகுகையினாலே, யாறுகளில் நீர் குணகடல் நோக்கிப் பெருக்கெடுத்தோடி, வழியில் ஏரிகளை நிறைப்ப, அந்நீர் கழனி

களிலும் மடுக்களிலும் பொய்கைகளிலும் நிரம்ப, அவற்றில் வசிக்கும் மீன்களை முகந்து விலைகூறி விற்கும் வலைஞர் அம்மருத நிலத்து மீன்களைக் கொன்று குவித்தலாற் பிறந்த ஓசையும், கரும்பின் ஆலையிடத்தே எழுகின்ற ஓசையும், களைபறிப்பிடத்தெழுகின்ற ஓசையும், களமர் சேற்றில் காலழுந்தித் தங்கிய எருத்தினைப் பெயர்க்கும் பேரோசையும், நெல்லறுப்பாருடைய அரிபறையோசையும், திருப்பரங்குன்றில் விழாக்கொண்டாடும் பேரோசையும், மகளிர்திரள் தம கணவருடன் நீராடும் ஓசையும், ஆகிய அவ்வோசைகள் முழுவதும் பாணர்சேரியில் அவர்தம் பாடலாடலால் எழுந்த ஓசையோடே கூடி இசைக்கும்படி தண்பணைகள் சூழவிருப்பது,ஒருசார் மருதஞ் சான்ற மருதநிலப் பகுதி.

பொன்போன்ற பூக்களையுடைய கொன்றைமரங்களின் பரந்த நிழலிடத்தே பரப்பினாற்போற்கிடந்த பாறைகள் அக்கொன்றைப் பூக்களுதிர்தலால் அழகுபெற, நீலமணியையொத்த பசிய பயிர்களினிடங்கள்தோறும் வெள்ளிய முசுண்டைப் பூக்களுடனே முல்லைப்பூக்களும் உதிர்ந்து பரத்தலால், அவ்விடங்கள் வெறியாடுகளம் கடுத்திருப்ப, மற்றுஞ் சிறுதினை கொய்ய, எள்ளிளங்காய் முற்ற, வரகு கதிர்முற்ற, ஆழ்ந்த குழிகளிலே மணிகள் கிடந்து விளங்க, கடற்றிடை நவ்விமான் நல்பொன் மேலாம்படி பிணையொடு உகள, நீலமணி போன்ற நெய்தல் தொய்யிற்கொடியோடே பள்ளத்தில் மலர, இங்ஙன் பலகாட்சிகள் வழங்கவிருப்பது, ஒருசார் முல்லைசான்ற முல்லைநிலப் பகுதி.

அருவி வீழ்வதனால் நீரோடுங்கால்களைப் பெற்ற பக்கமலைகள் சூழ்ந்திருப்ப, ஆங்கு அகிலையும் சந்தனத்தையும் வெட்டிப் பண்படுத்திய மேட்டு நிலத்திலே தோரைநெல்லும் ஐயவியும் ஐவனநெல்லும் வளர்க்கப்பட்டு, இஞ்சியும் மஞ்சளும் மிளகுகொடியும் மற்றும் பல்வேறு பண்டங்களும் கற்றரையிலே குவியப்பட்டு இருப்ப, மலைச்சாரலிலே தினைப்புனத்து மகளிர் கிளிகடியும் பூசலும், அவரையின் தளிரைமேயும் ஆமாவையோட்டும் கானவர்பூசலும், மலைமிசைக்குறவன் பொய்க்குழியிலே வீழ்ந்த ஆண் பன்றியைக் கொன்றதனாலுண்டான பூசலும், வேங்கைப்பூக்களைப் பறிக்கும் மகளிர் 'புலிபுலி' யென்று கூவும் பூசலும் ஆகிய அனைத்துப் பூசலோடே பன்றியைக் கொல்லும் வலியுடைய புலியினது பூசலும் கூடிச் சிலம்பகத்து மாறிமாறியொலிப்ப, இங்ஙன் மலை சூழப்பட்டிருப்பது, ஒருசார் குறிஞ்சிசான்ற குறிஞ்சிநிலப் பகுதி.

மூங்கிலிற் பிறந்த நெருப்பு பசிய தூறுகளைச் சுடுகையினாலே மலைப்புல்ங்களிற் பயிரின்றிப்போகவே, கிளிகடிகருவியாகிய தட்டைபயனின்றிக்கவினழிய, யானைகள் மேய்ச்சலிடங்களை நாடிப் போக, அருவிகளின்றி யணியிழந்த மலையிடத்து விடரகங்களில் அணித்தாய ஊகம் புல்லுலர்ந்த காட்டிடத்திருந்து சூறவளிக் காற்று முகக்கப்பட்டுக் காற்றுமிக்க கடல்போல் ஒலிப்ப, நிழலே

யில்லாத முதுவேனில் முற்றிய அம்மலையிடத்து ஆறலைகள்வர் அலைக்காதபடி கவலையிடங்களில் இளைஞர் நின்றுகாப்ப, இங்ஙன் அருகிலஞ்சேரப்பட்டிருப்பது, ஒருசார் பாலைசான்ற சுரநிலப் பகுதி.

பெரிய கடல்களிலே நாவாய்களைச் செலுத்தும் மீகாமர் பலரும் ஒருங்குகூடி யவனம் முதலிய தேயங்களினின்றும் குதிரைகளைக் கொணர்ந்து பாண்டிநாட்டுப் பேரணிகலங்களுக்கு மாற்றி வாணிபஞ்செய்யாநிற்ப, அப்பாண்டிமண்டலத்து விளைவிக்கும் முத்து சங்குவளை கூலம் வெள்ளுப்பு தீம்புளி கருவாடுகள் ஆகியவற்றை ஏற்றின நாவாய்கள் நாளுக்குநாள் முறையேபெருக, அதனால் வளம்பல பயிலப்பட்டுச் சிறப்புற்ற கானலிடம் சேரப்பட்டிருப்பது, ஒருசார் நெய்தல்சான்ற பரந்தோங்கு வரைப்புப் பகுதி.

இங்ஙனம், ஐம்பாற்றிணையும் கவினியமைவரப் பெற்றது நின் பாண்டிமண்டலம். அப்பாண்டிமண்டலத்தைச் சார்ந்ததாய், விழாநின்ற தெருவினையும், துணங்கை குரவை முதலிய கூத்தினையும், மணம்வீசும் பரத்தையர் சேரியினையும் புதுவருவாயினையும் உடையதாய்ப் பலகுடிமக்கள் திரண்டு நெருங்கியிருக்கப்பெற்றது செந்தமிழ்ப்பாண்டிநன்னாடு. அந்நன்னாட்டின் நடுவணதாய் நடுநாயகமாய் இலங்குவது மாடமலி கூடல் மதுரை.

அம்மதுரையின்சிறப்புத்தான்என்னே! முசுக்கலைகள் தாவின கொம்புகளிலே மந்திகள் விளையாடாநிற்ப, பெருங்காற்றடிக்கும்படி ஆகாயத்தே மிகவோங்கிய மரங்கள் நெருங்கியிருப்ப, மயில்கள் அகவும் சோலைகளோடே பொழில்கள் சூழ்ந்த கரைகள்தோறும் கோங்கம்பூவும் ஏனைய மலர்களும் பரந்துகிடப்ப, கோதைபோல் ஒழுகிவரும் நீரினைக்கொண்ட வையையாற்றினிடத்துத் துறைகள்தோறும் பூந்தோட்டங்கள் சூழப்பட்டுத் தொன்றுதொட்டு நிலவிவரும் பெரும்பாணரது குடியிருப்பினையும், பகைவர் அஞ்சிப் புறங்காட்டியோடும்படிசெய்து காக்கின்ற மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கினையும், மிகவோங்கிய கற்படைகளோடு கூடிய மதிலினையும், வையையாறு இடையறாது ஓடுமாறுபோல மக்களும் மாவும் இடையறாது வழங்குதலையுடைய வாயிலினையும் உடைத்தாயிருப்பது அந்நகரம். அந்நகரத்திடத்து, பலகூறுபாடுகளைக் கொண்டு மேலோங்கித் தென்றற்காற்றொலிக்கும்படி சாளரங்கள் பலவற்றையுடைய வீடுகளையுடையதாய் யாறு கிடந்தாற்போல் அகன்ற நெடிய தெருக்கள் உள்ளன; அந்நெடிய தெருக்களில், நாளங்காடியிற் பண்டங்களைக் கொள்ளவும் விற்கவும் பலசாதியினராய பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் திரண்டு ஒலிக்கின்றனர்; கடலொலிபோல முழங்கும் முரசையறைந்து விழவினை நாட்டிலுள்ளார்க்குத் தெரிவிக்கும் ஓசை ஒலிக்கின்றது; வாச்சியங்களைச் சாற்றலான் முழங்கின ஓசையைக் கேட்டு மகிழ்ந்து ஆடும் செருக்கினையுடையன அத்தெருக்கள்,

அம்மதுரையிடத்து, இருகூறுபட்ட பெரிய அங்காடித் தெருவில் கள்விற்றலைத் தெரிவிக்கும் கொடிகளோடு கோயில்களுக்கு விழாக்களை நடத்திக்கட்டின பல கொடிகளும், சேனைத் தலைவர் அரசனேவலாற் சென்று அரண்களைக் கைப்பற்றிய அவ்வெற்றிக்குச் சின்னமாக நாடோறும் எடுத்த சயக்கொடிகளும், பகைவர்மேல் வேற்படையோடுசென்று அவரைக் கொன்று அவர் யானைத்திரளையும் கெடுத்துத் தம் புகழ்க்கு அறிகுறியாக எடுத்த வெற்றிக்கொடிகளும், இன்னும் கல்வி கொடை தவம் முதலியவற்றால் வேறுபட்ட திரட்சியையுடைய கொடிகளும் பதாகைகளும் நிலைபெற்று மலையிடத்து அருவியசைவது போல அசைகின்றன.

அம்மதுரையிடத்து அரியபெரிய பண்டங்களைத் தம்மிடத்துச் சேர்த்துக்கொண்டு திரிந்து விற்பவர்களும், பூந்தட்டிலேயிட்டுவைத்த நறியபூ, கட்டியபூமாலை, இடித்த சுண்ணம், பாக்கு வெற்றிலை சுண்ணம்பு இவைகளை விற்பவர்களும், மதம்பிடித்துச் சுழலும் யானைகள், காற்றெனக் கடுகிவரும் தேர்கள், ஆதியென்னுங்கதியில் ஓடிவருகின்ற குதிரைகள், தம்முட் போரிடும் களமர்கள் அடங்கிய நாற்படைகள் பல்காலும் வருவனவும் மீள்வனவுமாயிருத்தலால், அந்நாற்படைக்கும் பகைப்புலத்தைபொக்க அஞ்சிஏங்கியிருந்து, அவைபோயபின்னர்வருத்தம் நீங்கி, மலைபுரைமாடங்களின் நிழலிலே தங்கியிருக்கின்றனர். தொன்முதுபெண்டிர், காதலர்காதலியர் விரும்பிநுகரும்பொருள்களைச் செப்புகளில் கொணர்ந்து நறிய பூவுடனே மனைகடோறும் சென்று விற்று உலாவுகின்றனர். மதுரை நாளங்காடியோ, மேகம் முகக்கக் குறையாமலும் யாறுகள்பாயப் புனல்மிகாமலும் இருந்தொலிக்கும் கடல்போல, பலரும் பண்டங்களைக் கொளக் குறையாமலும், மென்மேலும் கொண்டுவர மிகாமலும் இருக்கின்றது; அந் நாளங்காடியில் எழுந்த பேராரவாரம் ஏழுநாட்கொண்ட திருவிழாவின் கடைநாளந்தியிலே தீவினைகழுவத் தீர்த்தமாடுதல் செய்யத் திரண்ட நாட்டுமக்கள் எழுப்பும் பேராரவாரத்தை யொத்திருக்கின்றது. இனி, அல்லங்காடியிலெழுந்த பேராரவாரம் அந்திக்காலத்துக்கு முன்னுள விழவிலே தூரியங் கறங்குகையினாலும், பௌத்தப்பள்ளி அந்தணர்பள்ளி அமணப்பள்ளி அறங்கூறவையம் இவைகளிடத்தும் காவிதிமாக்களிடத்தும் எழுகின்ற ஓசை கோதையிருக்கையில் விழைவுகொள் கம்பலைகடுப்பக் கல்லென்கையினாலும், பண்ணியம் பகர்நரிடத்தும் நாற்பெருங்குழுவிடத்தும் கோடுபோழ் கடைநர் முதலாகக் கண்ணுள்வினைஞரீறாகவுள்ளாரும் பிறருங்கூடிய கூட்டத்திடத்தும் நெய்தற்றொழில் செய்யும் கம்மியர் கூட்டத்திடத்தும் சோறிடுஞ்சாலைகளில் இன்சோறு பிறவும் தருநரிடத்தும் எழுகின்ற ஓசை இந்தப்பட்டினத்து ஒல்லெனிமிழிசைமானக் கல்லென்கையினாலும், பல்வேறுபுள்ளின் இசையெழுந்தற்றேயாயிருந்தது.

பின்னர், நெடுநகரினிடமெல்லாம் மான்பிணைபோலும் நோக்கினையுடைய மகளிர் ஒளிவிளக்கினையேற்றித் தம் கணவரைக் கூடுதற்பொருட்டு அணிகளையணிந்து செங்கழுநீர்ப் பூக்களை மாலைகட்டும்படியாகவும், கூந்தலிற்பூசின மயிர்ச்சந்தனத்தை யலைத்து நீக்கும்படியாகவும், கத்தூரியையும் நறிய சந்தனத்தையும் அரைக்கும்படியாகவும் மெல்லிய நூலாடைகளுக்கு அகிற்புகையூட்டும்படியாகவும் இன்னோரன்ன தொழில்நிகழ்த்தும்படி ஞாயிறு அத்தமிக்க, கல்லென்னுமோசையோடு மாலைக்காலம் வந்து, கணவரைப் பிரிந்தோர்க்கு நோய்செய்து பின்னர் நீங்கியது.

இனி முதற்சாமத்து, செல்வர் மனைகளில் வரைந்துகொள்ளப்பட்ட மகளிர் விளக்கினொளியிலே சீறியாழைக்கொண்டு பண்களை மாறிவாசித்துத் தம் கணவரைப் புணர்ந்து, அப்புணர்ச்சி நீங்கியவுடனே தமக்கு உயிரினுஞ் சிறந்த நாணைத் தம்மிடத்தே கொண்டு திகழாநிற்ப, பரத்தையர் பலருஞ்சேர நெருங்கித் தம் வடிவழகை நயந்துவந்த சேயரும் நணியருமாய இளம்பல் செல்வரைப் பல வஞ்சனை வார்த்தைகளாலே முதலிற் கூட்டிக்கொண்டு அவர் பொருள்தருமளவும் அவரது மார்பைத் தம் மார்பு வடுக்கொளும்படி முயங்கிப் பின்னர், அவர் செல்வமெல்லாம் கெடும்படி வாங்கிக்கொண்டு, தாதையுண்டபின் வறுவிய பூவைத் துறக்கும் வண்டினம்போலத் தம்மைப்புணர்ந்த அவ்விளஞ்செல்வர் கலக்கமுறும்படி அவரை நேரே கைவிட்டுப் பின்னரும் குலைந்த ஒப்பனைகளைச் சீர்செய்து மேலும் அழகு மிகும்படி அலங்கரித்துக்கொண்டு, மிகநாறும் குவளைப்பூக்களையும் ஏனைப் பூக்களையும் சிறுதூற்றையொக்கக் கூந்தலிற் சூடி, புதிய விடுபூக்கள் தெருவுகளெங்கும் மணம்வீசத் தொடிவிளங்கும் தம் கைகளை வீசிக்கொண்டு, மணநாறும் மனைதோறும் பழுமரந்தேரும் பறவைபோலச் சென்றேறி, ஆங்குப் பொருள்தருதற்குரிய இளையரோடு விளையாட்டயரா நிற்பர். இஃது இங்ஙனமாக, அவுணரை வென்ற திருமால் பிறந்த ஓணநன்னாளில் ஊரார் எடுத்தவிழவிலே, மறவர்கடிய கள்தெளிவையுண்டுமகிழ்ச்சிமிக்கு, அக்களிப்பினால் நிலத்திற்பரிக்காரரால் சிந்தப்பட்ட கப்பணங்கள் காலைப் பொதுக்கும்படி திரிகின்றனர்; செல்வத்தையுடையமனையிடத்து நற்குடிமகளிர் கணவருவக்கும்படி புதல்வரைப் பெற்றுத் தெய்வத்தினருளால் ஓரிடுக்கணுமற்று ஈன்றணிமை நீங்கி இளமுலை பால்சுரக்கும்படி குளத்துநீரிலே குளிக்கையினாலே, அதுகண்டு முதற்சூல்கொண்ட மகளிர் தாமும் அவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வரைப் பயத்தல் வேண்டுமென்று தெய்வத்தைப் பரவிக் குறைதீர்ந்தபின், சுற்றஞ்சூழ, தேவராட்டி உடன்வரப் பூசனைப்பொருள்கள் பலவற்றுடனே, யாழிற் செவ்வழிப் பண்ணை வாசித்துக்கொண்டு, முழவுஒன்ற ஆகுளியிரட்ட, விளக்கம் முந்துற மயில்போல் மெத்தென நடந்துசென்று, கைதொழுது பாற்போனகம் முதலாய மடைகளை எடுத்துக் கொடுக்

இன்றனர். இனி, ஒருசார் வேலன் குறிஞ்சிசூடி வாச்சியங்கள் ஒலிப்ப முருகனைத் தன்மெய்க்கண்ணே நிறுத்தி வழிபடுகையினாலேயும், ஒருசார் மன்றுதோறும் மகளிர் கைகோத்துக் குரவையாடச் சேரிதோறும் பாட்டும் புனைந்துரையும் கூத்தும் தம்மில் விரவுகையினாலேயும் எழுந்த வேறுவேறுபட்ட ஆரவாரம், நன்னனது பிறந்தநாட் கொண்டாட்டத்துச் சேரிகளிடத்தே எழுகின்ற ஆரவாரம் போலே மயங்கித் தோன்றுகின்றது. இவ்வாறு முன்சாமம் சென்றது.

இனி இரவின் இரண்டாஞ்சாமத்திலும் மூன்றாஞ்சாமத்திலும் சங்குகள் ஒலியடங்க, நெடிய கடையை மூடி மகளிர் துயில, மெல்லிய அடை மோதகம் இவையிற்றோடு அப்பவாணிகர் உறங்க, கூத்தர் கூத்தினையொழிந்து துயில, பேயும் அணங்கும் கழுதொடு சுழன்று திரிய, இருள்போன்ற கரிய மெய்யொடு, செருப்பைக் காலிற்றொடுத்து, நுண்ணிய கரிய ஆடையைக் கட்டிய இடுப்பில் செருகிய சொட்டைகள் பிறருக்குத் தெரியாதபடி துடையொடு சேர்ந்து பதிந்துவைத்தாற்போன்றிருப்ப அவற்றின்மேல் நீலக்கச்சினைக் கட்டி, மெல்லிய நூலேணியை அரையிற்சுற்றி, உளியையெடுத்து வாளைப்பிடித்து அணிகலங்களை நச்சிக் களவாடுதற்குக் கள்வர் இடம்பார்த்துச் சுழன்றுதிரிய, அக்கள்வர் ஒதுங்கியிருக்கின்ற இடத்தை வேய்க்கையினாலே, ஊர்காப்பாளர் துயிலாத கண்ணையுடையராய், பேய் முதலியவற்றிற்கு அஞ்சாத கோட்பாட்டையுடையராய், களவிற்றொழிலை யாளுந் தன்மையையுடையராய், தப்புதற்கரிய அம்பினையுடையராய், மழை மிகப்பெய்த நடுநிசியாகிய பொழுதிலும் காவலில் சற்றும் அசைவிலராய் உலாவுகையினாலே, படுக்கையில் துயில்கொள்ளும் மக்கள் கவலையின்றி இனிதாகத் துயிலுகின்றனர்.

இனி, வைகறைப்போதில் அந்தணர் வேதமோத, யாழோர் காலைக்குரிய மருதப்பண்ணை வாசிக்க, பரிக்காரர் களிற்றைக் கவளம் உண்பிக்க, பந்தியில் நின்ற குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்ட, பண்டம்விற்பார் தம் கடைகளை மெழுக, கள் விற்போர் கள்ளிற்கு விலைகூற, கற்புடைமகளிர் கணவருடைய பிணிப்பிற்றுயின்று விடியற்காலமெய்தலாலே அக்காலத்திற்குரிய மனைக்காரியங்களைச் செய்தற்கு விரும்பிச் சிலம்பொலிப்ப மின்னற்கொடிபோல் புறம்போதுகையினாலே நன்மனைகளில் கதவுகள் ஒலிப்ப, மேன்மேலும் கள்ளுண்டு களித்துக் கிடந்த செருக்காளர் குழறிப்பேசும் குரல்கள் முழங்கித்தோன்ற, நின்றேத்துவார் வாழ்த்த, இருந்தேத்துவார் புகழ, வேதாளிகர் தத்தம் துறைக்குரியவற்றை யிசைப்ப, நாழிகைக் கணக்கர் நாழிகை சொல்ல, பள்ளியெழுச்சிமுரசம் ஒலிப்ப, ஏறுகள் தம்முள் மாறுபட்டு முழங்க, கோழிச்சேவல் பொழுதுவிடியலை யறிந்துகூவ, வண்டாழ்ங்குருகுச்சேவல்களும் அன்னச்சேவல்களும் தத்தமக்குரியபேடைகளையழைக்க, அணிமயில்களும் தத்தம

பேடைகளையழைக்க, பிடிபுணர்ந்த பெருங்களிறுகள் முழங்க, கரடி முதலிய விலங்குகள் கூட்டிலுறை புலியொடு முழங்க, மாணிழைமகளிர் மதுவுண்டு கணவரொடு புலந்து பரிந்து வீசிய ஆரஞ்சொரிந்த முத்துக்களோடே ஏனைய மாணிக்கம் மரகதம் போன்ற மணிகளும் இளைய பச்சைப்பாக்கும் மணல்முற்றத்தே விழுகையினாலே, அவற்றையும் பூவர்டல்களுடனேயும் நல்ல அணிகலன்களுடனேயும் ஒருசேரத் தொகுத்துப் பெருக்கிப் போகட, இவ்வாறு விடியற்காலநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இனி, மழவரென்ற வீரரைக் கெடுத்து அவரிடத்திருந்து கொணர்ந்த யானைகளும், பகைப்புலத்திருந்து கவர்ந்துவந்த குதிரைகளும், வேட்டுவர் பகைவரூரைச் சுடுகின்ற விளக்கிலே நிரைகாத்திருந்த வீரரை மாளவெட்டிக் கவர்ந்து வேல் கோலாகக்கொண்டு அடித்து ஓட்டிவந்த பசுத்திரளும், முற்றுகையிட்டுப் பற்றின முழுவரண்களிலிட்டிருந்த கதவுகளும், தினந்தோறும் திறையாகக் கொணர்ந்து கொடுத்த சீரிய கலங்களும், அன்ன பிறவும் வளங்கெழு பண்டங்களோடே அளந்து முடிவறியாதபடியுள்ளது நினது மதுரை. மற்றும், யாக்கை நிலையாமையைத் தெளிந்து மறுமைக்கு வேண்டுவன ஈண்டே செய்து கொண்டமையின், கூற்றத்தின் உயிர்கவர்தலுக்கு அஞ்சாது காவலையிட்டுக் கொண்டுள்ளது நினது மதுரை; மேலும், தேவர்களும் வந்து காணுமாறு அழகுபெற்று மிக்க புகழையெய்தியுள்ளதோடு பெரும்பொருளாகிய வீடுபேற்றினையுமுடையது நினது மதுரை.

பூத்த அசோகம் பொழிலிடத்தே அந்திப்போதில் இளவெயிலெறித்தாற்போலப் புணர்ச்சியாற் பெற்ற நிறத்தையுடையராய், கற்புமேம்படப் பொலிவுபெற்றுத் திதலையையுடையராய், பொன்சூழ்ந்த பேரணிகலங்களையும் மயில்போன்ற சாயலினையும் மாந்தளிர்போன்ற மேனி நிறத்தினையும் கூரிய எயிற்றினையும் குழையணிந்த தாழ்ந்த காதினையும் தாமரைமலர்போன்ற முகத்தினையும் தொடியினையும் உடையராய், இலங்கும் மகளிருடைய நறிய தோளைமுயங்கித் தொங்கல்களாற் பொலிவுபெற்ற படுக்கையிலே துயில்கொண்டு, செல்வத்தை நினைந்து இன்புறுகின்ற பற்றுள்ளம் நின்னைத் துயிலுணர்த்துகையினாலே நீ இனிதாகத் துயிலெழுந்திருக்கின்றாய்.

காலைக்கடன்களைக் கழித்தபின்னர், கழுத்தினின்றும் தாழ்ந்த பூமாலை மார்பிலசைய, முத்து வடம் புரளும் சந்தனம்பூசிய மார்பிலே தேனும் வண்டு முதலியனவும் மொய்ப்ப, மணிகளழுத்தின பொன்மோதிரம் வலிய பெரிய கையில் அணிந்துள்ள வீரவளையோடு விளங்க, கஞ்சியிட்ட துகிலை அதற்கு மேலணியும் அணிகலங்களாலே பொலிவுபெறும்படி யுடுத்து, புனைந்த சித்திரப் பாவையிடத்தே தெய்வத்தன்மை நிகழ்ந்தாற்போன்ற வடிவினையுடையையாய் நீ கோலஞ்செய்து திகழ்கின்றாய்.

பின்னர் நாளோலக்க மண்டபத்தே வீற்றிருந்து, படைத் தலைவர்கள் நின் முயற்சியின் வெற்றியை வாழ்த்தாநிற்ப, "அம்பின் விசையைத்தாங்கும் மார்பினையும் குதிரையைச் செலுத்தி வேண்டுமளவிலே பிடிக்கும் வலிய தோளினையும் உடைய வீரரைக்கொணர்மின்; நல்லரணிடத்தே பகைதடுத்து நின்று வருந்தின வீரச்செல்வத்தையுடையாரைக் கொணர்மின்; முரசம் மாறாது கறங்கப் பகைநடுவே சென்று களிற்றினை வெட்டி வீழ்த்திச் சீரிய புண்ணினால் வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்; வேல்களும் அம்புகளும் தம்மேல் தைத்தலால் நிலைகலங்கி, இட்ட கவசம் நிறங்கெட, குறடும் அதில் தைத்த ஆர்களும்போல் மார்பகம் தோன்றப் பொருது வென்றிகொண்டு, வளப்பம் பொருந்திய ஊர்களை என் நட்பினராகிய அகத்துழிஞையோர்க்கு அவர்களாளும்படி மீட்டுக்கொடுத்து உயர்ந்த உதவியைச் செய்துள்ள பெருமுயற்சியுடைய என் படைவீரர்களைக் கொணர்மின்; யானைத்திரளின் ஒழுங்குகளைக் கைக்கொண்ட மண்டலாதிபர்களைக் கொணர்மின்; மண்டபத்தாரையும் அறங்கூறவையத்தாரையும் கொணர்மின்" என வரைந்து கூறி, "இவர்களைப்போல்வார் பிறரும் படையாளர் முதலியோர் யாவரும் வாயில் தகையுறாது உள்ளே வருவாராக" எனப் பொதுப்படக் கூறி, காட்சிக்கு எளியையாயிருக்கின்றாய். 'புலவரொடு பாணர் வருக, பாட்டியர் வருக, வயிரியர் வருக' என அழைத்து, அவர்கள் பாதுகாக்கும் சுற்றத்தாராய இரவலர்க்கெல்லாம் 'நீர் யார்?' என்றுகூட அவர்களைக் கேட்டறியாமலே அப்பாணர் முதலியோர் காட்டின அளவைக்கொண்டு நெடிய தேர்களையும் யானைகளையும் அவர்களுக்கு வழங்குகின்றாய். நினது அரண்மனையோ இடந்தோறும் கள்ளையரிப்ப, மரந்தோறும் செம்மறிக்கிடாயைப் படுப்ப, நிணத்தசைகளைச் சுடுதலாலே அந்நிணம் உருகியமைய, நெய்கனிந்து பொரிக்கறிகள் ஆரவாரிப்ப, தாளிப்பிலெழுந்த புகை மேகபடலம் கவிந்த திசைகள்போலப் பரந்து தோன்ற உணவுச்சிறப்பொடு திகழ்கின்றது.

நீ கிடைத்தற்கரியவாய வேற்றுப்புலத்துள்ள பொருள்களைக் கொணர்ந்து எல்லார்க்குங்கொடுத்து, நாட்டில் வாழும் குடிமக்களுக்குச் செல்வம் பெருக்கி, உறுதிபயக்கும் நல்ல நூல்களைப் பயின்று, தன் மாட்டுளதாம் புகழை எவ்வுலகத்தும் நிறுத்தி, கடல்நடுவே தோன்றும் ஞாயிற்றை யொப்பவும் பல விண்மீன்களுக்கிடையே தோன்றும் மதியொப்பவும் சுற்றத்தாருடனே பொலிவுபெற்று இனிது விளங்குகிறாய். புகழினையுடைய அறங்கூறவையத்தார் நெருங்கி நின்னுடைய அறத்தின் சிறப்பினைப் புகழ்ந்து வாழ்த்த, உலகில் நல்லிசை நிறுத்திய மாறன் முதலாகப் பகைவெல்லும் தப்பாத வாளினையுடைய இளம்பல்கோசரும் பேரணிகலங்களையுடைய ஐம்பெருங்கேளிரும் உட்பட மறமிக்க குறுநிலமன்னரும் ஏனையோரும் நெறிமுறை பிறழாது நடக்கையினாலே நின்னுடைய வாய்மொழிகேட்டு

அதன்வழியேயொழுக, இலங்கிழைமகளிர் பொன்னாற்செய்த வட்டில்களிலே யெடுத்து மணநாறுகின்ற காமபானத்தைத்தர அதனை நீ பருகி மகிழ்ச்சியையெய்துகிறாய்.

பொய்யொன்று கூறுதலால் தேவருலகம் அமிழ்தொடு பெறுவதாயிருப்பினும் அப்பொய்யை அறக் கைவிட்டு நீங்கி மெய்யொடு நட்புச்செய்தலையுடையை; பகையாய்த் தேவர்வரினும் பகைவர்க்கு அஞ்சித் தாழ்ந்து ஒழுகுதலையுடையையல்லை; வாணன் என்ற சூரன் வைத்த விழுநிதிபெறுவதாயிருப்பினும் பழியொடு படர்வாயல்லை; சிரிய பொருளை ஈத்துவக்கும் உள்ளமொடு புகழை விரும்புதலுடையாய்; அப்பெற்றித்தாய அண்ணலே!

எக்காலமும் பயன்கெடுதலறியாததும் நீங்காத புதுவருவாயாலே செல்வம் பொருந்தியதுமான அரண்மனையிடத்தேயிருந்து கொண்டு நாடோறும் விறலியர்க்குக் குறுந்தொடிகளை அவர் கைச்செறிப்பக் கொடுத்து, மேலும் பலவகைப்பட்டசோற்றையும் தீதென்று கூறி வெறுக்கும்படி தசையையும் கள்ளையும் மிக வுண்டும் விருப்பமையாத பாணர்கூட்டத்திற்கு அவருவப்ப நாடோறும் பலபொருட்டிரள்களையும் யானைகளையும் கொடுத்து, தம்முடன் நட்புச்செய்தோர்க்குத் தாம் அழித்த அரண்களிற் கைக்கொண்ட பொருள்களை அவர் வேண்டாவென்று மறுத்த போதும் தாமே வலியக்கொடுத்து, வாட்போரில் முயல்கின்ற தம்முடைய வீரச்சிறப்பினை வாழ்த்தி வைகறையிலே பாசறைக் கண் வந்து திரண்ட சூதர்க்குத் தேரும் குதிரைகளும் பல கொடுத்து, தம்மைப் பணிந்தோர்மேற் செல்லாது பணியாதார் தேசங்களின்மேற் சென்று திறைவாங்குதற்காகச் சிரிய படைத் தலைவரைத் துணையாக்கொண்டு சென்று, பருந்தும் பறக்கவில்லாத மிகவுயர்ந்த அரண்களையுடைய பாசறையிலே காலைமுரசம் இயம்ப எழுந்து பகைவர்பகைக்குக் கேடுண்டாக நடந்து வென்று, பின்னும் அழிக்கவேண்டிய நிலங்களிலே சென்று தங்கி இங்ஙன் வீறுபெற்ற பெருந்திறல்வேன்மன்னர் தம்புகழ் எங்கணும் பரக்கும்படி இவ்வுலகத்தை அடிப்படுத்தி ஆண்டும், மக்கட்குரிய மனனுணர்வின்மையின் பிறப்பற முயலாது பயனின்றி மாண்டுபோயினர்; அங்ஙனம் கொன்னே கழிந்தோர் தொகை கூறப்புகின், கடற்றிரை குவிக்கின்ற மணலினும் பலராவர். ஆதலின், இல்வாழ்விற் பெரியதாயிருப்பது ஒன்று கிளக்குவல்; அஃது என்னாற் காட்டுதலரிது; எல்லா நிலங்களையும் தன்னுள்ளேயடக்கிக் காட்டின மாயோனைப் போன்ற தொல்லாணை நல்லாசிரியர்கள் தாங்கள் அநுபவத்திலடைந்த கந்தழியாகிய கொள்ளைப்பொருளையூட்ட அவரிடத்தே அக்கந்தழியைப் பெற்று அநுபவித்த பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியைப்போல, நீயும் நல்லாசிரியரிடத்தே கிட்டி அந்நற்பொருளைக் கேட்பாயாக; அங்ஙனம் நீ கேட்டு அவ்வாசிரியரிடத்துப் பெற்ற கந்தழியின் அதிசயத்தையும் அதனையுணர்ந்ததனால் பின்பு

பெற்றமையும் அமைதியையும் நின்பாற்கண்ட தாபதராய சான்றோர் பலரும் தம் வாயார நின்னைப் புகழ்ந்துபேச, பெருமானே! நீ உனக்கென வரையப்பட்டுள்ள ஆயுட்காலமுழுதும் நல்லூழிக் காலத்துப்போலே இனிது பேரின்பத்தை நுகர்ந்து இருப்பாயாக; அப்பேரின்பத்தை நுகர்ந்து உறையாது ஐம்பொறிகளால் நுகரப்படுவனவாய் முன்னிற்கும் இந்நுகர்பொருள்கட்கும் நினக்கும் என்ன உறவு உண்டு? நின்னிடத்துண்டாம் மாயை கெடுவதாகுக; நின் சேண்விளங்கு புகழ் என்றும் நிலைபெறுவதாகுக; வாழி—என்றுநெடுஞ்செழியனுக்குக் காஞ்சியை உணர்த்தினர் மாங்குடி மருதனர் என்பது.

வெண்பா

1. பைங்க ணிளம்பகட்டின் மேலானைப் பான்மதிபோல்
திங்க ணெடுங்குடையின் கீழானை—அங்கிரந்து
நாம்வேண்ட நன்னெஞ்சே நாடிப்போய் நானிலத்தோர்
தாம்வேண்டுங் கூடற் றமிழ்.

(இ-ள்) நல் நெஞ்சே - நல்ல மனமே! பை கண் இளம் பகட்டின் மேலானை - பசிய கண்களையுடைய இளைய எருதின்மேல் அமர்ந்திருப்பவனும், பால் மதி போல்-அட்டமி சந்திரன்போல், திங்கள் நெடு குடையின் கீழானை-நீண்ட சந்திரவட்டக் குடையின் கீழெழுந்தருளியிருப்பவனும் ஆகிய ஆலவாயானை, அங்கு-அவ்வாலவாயிடத்து, நாம் இரந்து வேண்ட-நாம் யாசித்து வேண்டுதலால் [அவன் அருள் சுரக்க, அதுகொண்டு], நானிலத்தோர் தாம் வேண்டும்-இவ்வுலகத்துள்ளோர் தாம் விரும்புகின்ற, கூடல் தமிழ் - கூடலிடத்துப் பிறந்த தமிழாகிய மதுரைக்காஞ்சியை, போய் நாடுதி-செவ்வன் ஆராய்ந்துபார்; (எ-று).

இது நெஞ்சை முன்னிலைப்படுத்தியது. ஆலவாயானருளைப் பெற்று மதுரைக்காஞ்சியை நாடுதி என்றதால், அவனருளின்றிச் செவ்வன் முற்றும் பொருளுணரலாகாமை பெறவைக்கப்பட்டது. 'சங்கத் தமிழ்மூன்றும் தா' என்பது போலவும், "தங்கு மனம் நீயெனக்குத் தா' என்பது போலவும், கூடற்றமிழையறிந்து அதனை முற்றுமுணர்ந்து மனத்து இருத்துதற்கு இறைவனருள் வேண்டப்பட்டது. கூடற்றமிழ்—மதுரைக்காஞ்சி. கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து பசுந்தமிழை ஆய்ந்தனனாதலின், அவனருளை முன்னிட்டுக்கொண்டு கூடற்றமிழை ஆராய்ந்து பார் என்றதும். இதனால் மதுரைக்காஞ்சியின் சொற்பொருள் நயங்களின் பெருமை தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்த வெண்பாவிலும் காணலாம்.

பான்மதி என்றதால்-அட்டமி சந்திரன்; பால்-பகுதி. சந்திரவட்டக்குடை அர்த்த சந்திரன்போல் இருப்பதென்றபடி. திங்கள் குடை - சந்திரவட்டக்குடை "வெண் சந்திரவட்ட மேலாட

மதுரைக்காஞ்சியின்

அரும்பதவகராதி முதலியன.

அ

அ-அழகிய, 683
அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்தமை, 41-42
அகலம்-மார்பு, 493
அகலிருவானம் - தன்னையொழிந்த பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய பெருமையையுடைய ஆகாயம், 267
அகவ-அழைக்க, 675
அகவர்-சூதர், 223
அகவல்-கூப்பிடல், 166
அகவுதல்-ஆரவாரித்தல், 333
அகைதல்-தழைத்தல், 92
அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்குதல், 489
அசோகின் பூ செந்தீப்போலும், [701
அட்டு-கொன்று, 186
அடகு-இலைக்கறி, 531
அடி-குரம், குளம்பு, 390
அடிபடரல்-அடிப்பட்டு நடத் [தல், 21
அடியொதுங்கிப் பின்பெயரா படையோர், 37-38
அடுதல்-கொல்லுதல், 298, 773
அடை-இலை, 248
அடைச்சி-உடுத்து, 588
அண்ணல்-தலைமை, 348
அண்ணல்யானை, 348
அணங்கு-வருத்தும், 140, 693; இல்லுறை தெய்வம், 164, 578; தெய்வம், 353, 446; வருத்துந் தெய்வம், 632
அணங்குடை நெடுநிலை, 353
அணங்குவீழ்வு, 446
அணிந்து-அழகுபெற்று, 278
அதரிகொள்பவர்-கடாவிடுகின் [றவர், 94
அதள்-தோல், 310
அந்தணர்பள்ளி, 474
அந்தணர் வேதம்பாடல், 656
அந்திவிழவில் தூரியங்கறங் கல்[460
அமன்று-நெருங்கி, 172, 710
அமிர்தியன்றன்ன கடிகை, 532
அயர, 589
அயிர்-கண்டசருக்கரை, 625
அயில்-கூர்மை, 67
அரந்தை-மனக்கவற்சி, 166
அரம்போழ்ந்தறுத்த வளை, 316
அரமியம்-நிலாமுற்றம், 451
அரி-வண்டு, 252, 684; மென்மை, 252; உள்ளிடுபரல், 444;
அரிக்கூட்டின்னியம், 612
அரிநர்கம்பலை, 110
அரிபறை, 262
அரில்-பிணக்கம், 288
அரீஇ-அறுத்து, 376
அருப்பம்-அரண், 67, 149
அரைநாளமயம் - நடுநிசியாகிய பொழுது, 649
அல்லங்காடி, 544
அவரைப் பூ மணிபோன்றிருப் [பது, 292
அவல்-பள்ளம், 283
அவலம்-மாயை, 208
அவலும் மிசையும், 240
அவுணர், 590
அவுணர்க்கடந்த மாயோன், [590-91
அவை-சான்றோர், குடிப்பிறப்பு முதலியஎண்குணங்களமைந்தோர், 161; அறங்கூறவை [யத்தார், 778
அழிதரு-மிகுதியைத்தருகின்ற, 544 [அழி-மிகுதி]
அழுந்துபட்டிருத்தல் - நெடுங்காலம்அடிப்பட்டிருத்தல், 342

அழும்பில்-ஓர்ஊர், 345
அள்ளல்-சேறு, 259
அள்ளல்தங்கியபகடு, 259
அளவா - நெஞ்சாலே கருதிக் [கொண்டு, 385
அளை இ-கலந்து, 439
அறங்கூறவையம், 492
அறல், 519
அறலையுடைய துறை, 340
அறவு-கெடுதல், 216
அன்பும் அறனும் ஒழியாது [காத்தல், 497

ஆ

ஆகம் வடுக்கொள முயங்கல், [569
ஆகுளி-சிறுபறை, 606
ஆங்கண்-ஊர்கள், 98, 164
ஆசேந்தவழி மாசேப்பல், 157
ஆட்டு-கூத்து, 616
ஆடு-வெற்றி, 428; சமைத்தல், [635
ஆடும்இசை-நீராடும் ஓசை, 266
ஆதிபோதல், 390 [ஆதி-நெடுஞ்செலவு]
ஆம்பி-பன்றிப்பத்தர், 91
ஆமா, 293
ஆய்-அழகிய, 445, 563; [ஆராய்ந்த, 550
ஆய்கோல் கூற்றம், 632-33
ஆயிரம்விளைய, 11
ஆர்தல்-நுகர்தல், 82
ஆரம்-சந்தனம், 715; முத் [தாரம், 716
ஆரெயில் கொளக்கொள நாடோறும் சயக்கொடியெடுத்தல், 367-68
ஆலங்கானம், 127
ஆவுதிமண்ணி - யாகங்களைப் [பண்ணி, 494
ஆற்றிநெழுகுதல் - இல்லறத்திலே நடத்தல், 500
ஆற்றும்-போக்கும், வெளியேற் [றும், 165
ஆன்ற-இல்லையான, 306
ஆன்றடங்கறிஞர், 481
ஆன்று-நிறைந்து, 629
ஆனு-விருப்பமையாத, 211-14

இ

இசின், முன்னிலைக்கண் வரு [தல், 208
இசைவேட்டல், 205
இஞ்சி, 289
இட்டுவாய்-இட்டிய[சிறிதாகிய] [வாய், 482
இட்டுவாய்க் கிடங்கு, 630
இடுமயிர்-இட்டவாசம், 391
இடைப்புலத்தொழிதல், 688
இதை-கப்பற்பாய் (Sails) 79, [376, 536
இமிழ்தல்-கத்துதல்,ஒலித்தல், 111, 182; முழங்குதல், 207, 327, 672
இமையா நாட்டம், 457
இயக்கி-தெறித்து, 657
இயந்தொடுதல் -வாச்சியத்தை [வாசித்தல், 304
இயந்தொடுதல் கயங்குடைந் தாற்போலிருத்தல், 363
இயம்-வாச்சியம், 304, 612
இயவர்-வாச்சியக்காரர், 304
இயலி-நடந்து, 608, 666
இரங்க-ஒலிப்ப, 672
இரங்கும் ஏறு-ஒலிக்கும் உரு [மேறு, 243
இரட்டல் - மாறிமாறி யொலித் [தல், 299
இரவுத்தலைப்பெயர்த்தல், 686
இரவுமெல்லையும் விளிவிடன், [239
இரு-பெரிய, 75, 95, 107, 117, 136, 296, 302, 449; கரிய, 76, 235, 272, 297, 318, 407, 417, [541, 634

இருஞ்செருமயக்கம், 393
இருடிகளையும் கடவுளெனல், [41-42
இருண்மதி - இருட்பக்கத்துச் சந்திரன் [கிருஷ்ண பட்சத் துச் சந்திரன்], 195
இருதலைவந்த பகைமுனை, 402
இருபெயர்ப்பேராயம், 101
இருபெருவேந்தரொடு வேளிர் சாயப்பொருதமை, 55-56
இருபெருநியமம், 365
இருவகை - உழவு, வாணிகம் என்கின்ற இரண்டுகூறு,121
இல் வகைபெறவெழுதல், 357
இலஞ்சி-மடு, 248
இலை-குழை, 310
இலைவேய்குரம்பை, 310
இவர்தரும் - பரந்து செல்லும், [245
இழை-அணி, 551, 704
இழைபுனைநர், 512
இளவெயில், 703
இருல்-தேனிருல், 624
இறுத்தல்-தங்குதல், 150
இறும்பூது- அதிசயம், 487
இறைகொள்ளல்-தங்குதல்,253
இன்னீர்ப்பசுங்காய், 400
இனைதல்-வருந்தல், 166

ஈ

ஈண்டி-குவியப்பட்டு, 290
ஈதலுள்ளம், 205
ஈர்க்கின் அரும்பிய திதலையர், [708

உ

உகக்கும்-உயரப்பறக்கும், 502
உகந்து-உயர்ந்து, 334
உகளல்-ஓடித்திரிதல், 174; துள் [ளுதல், 276
உகூஉம் ஒண்பூங்கலிங்கம், 433
உந்தி - யாற்றிடைக்குறை, 245
உம்பல்-வழியில்வந்தோன்,61
உம்மார்-செலுத்துதற்கு, 322
உயர்நிலையுலகம்-தேவருலகம் [471
உராய்-பரந்துசென்று, 125
உரால்-ஓடுதல், 387
உரு-அச்சம், 100, 458, 542
உருப்பு-வெப்பம், 545, 625
உரை-புனைந்துரை, 616
உரைசெலவுலகம்ஆளல்236-37
உலகம் - நன்மக்கள், உயர்ந் [தோர், 133
உவலை-தழை, 311
உழை-மான், 310
உழையதள்-மான்தோல், 310
உழையதள்பள்ளி, 310
உறழ்தல்-மாறுபடல், 282
உறழ-போல, 181; மாறுபட,183
உறுப்ப-பொதுக்க, 598

ஊ

ஊக்கலர், 743
ஊண்-உணவு, 503
ஊர்காப்பாளர், 647
ஊர்சுடுவிளக்கு, 692
ஊர்தரல்-வளரல், 172
ஊரிருந்தவழி பாழாதல், 158
ஊறு-உறுதல், சேர்தல், 385
ஊனைக் கூடஇட்டுச் சோறு ஆக்குதல், 141

எ

எஃகம்-வேல், 739
எடுக்கல்லா - சுமக்கமாட்டாத, [215
எதிர்தல்-தோற்றுதல், 416
எதிர்புகந்தல் - ஏறட்டுக் கொண்டு தழைத்தல், 12
எதிர் பூ - ஒன்றற் கொன்று மாறுபட்ட பூ, 398
எரிநிமிர்ந்தன்ன தானை, 734
எருத்தம்-கழுத்து, 718
எவ்வகைச் செய்தியும் உவமங் [காட்டல், 516

எழாத்தோள்-போரில் முதுகிட்டார்மேற் செல்லாத தோள், [177
எழுக-வருவதாக, 204
எற்றி-அடித்து, 377
எறுழ்-வலி, 729
என்னும்-என்று கருதாய், 204

ஏ

ஏணி-எல்லை, 199
ஏந்துகோட்டியானை, 688
ஏமாப்ப-கலக்கமுறும்படி, 575
ஏர்-அழகு, 707
ஏர்நடத்தல்-எருதுகளுழுதல், [173
ஏழ்புணர்சிறப்பினின்றொடைச் [சீறியாழ், 559
ஏறு மாறுசிலைப்ப, 672

ஐ

ஐஇய, 413 [ஐ-வியப்பு]
ஐம்பால் திணையும் கவினுதல், [326
ஐயவி-வெண்சிறுகடுகு, 287
ஐவர்-ஐம்பெருங்கேளிர், 775
ஐவனம்-ஒருவகைநெல், 288

ஒ

ஒடுக்கம்-ஒதுங்கியிருக்கின்ற இடம், 642
ஒரீஇ-நீக்கி, 498
ஒல்லெனிமிழிசை, 538
ஒலிந்த-தழைத்த, 261
ஒற்றி-வைத்து, பிறர்தெரிந்து கொள்ளாதபடி அறிந்து, 642
ஒன்றுமொழி-வஞ்சினங் கூறு [தல், 143

ஓ

ஓடை-பட்டம், 43
ஓணநன்னாளில் மாயோன் அவதரித்தமை, 591

ஓம்பாதுவீசல், 146
ஓவு-ஓவியம், சித்திரம், 365

க

கங்கையம் பேரியாறு, 696
கச்சந்தின்னல், 436
கஞ்சியிட்டதுகில், 721
கட்பு-களைபறிப்பு, 258
கடக்கும்-வெல்லும், 39
கடந்த-வென்ற, 590, 773
கடந்து-வென்று, 186
கடம்பின் சீர்மிகு நெடுவேள் [613-14
கடவுட்பள்ளி பௌத்தப் [பள்ளி, 467
கடற்குட்டம், 540
கடற்படர்தல், 696
கடறு-காடு, 274
கடாத்து அளறுபட்ட நறுஞ் சென்னியன யானைகள், 44-47
கடாம்-மதம், 44, 383
கடி-அச்சம், 611
கடிகா-காவலையுடைய பொழில், [153
கடிகாவினை வெட்டுதல், 153
கடிகை-கண்ட சருக்கரைத் துண்டு [கண்டசருக்கரை-கற்கண்டு], 532
கடிதல்-ஓட்டுதல், 291, 293
கடுக்கும்-கடுக ஓடும், 388
கடுங்கட்டேறல், 599
கடுஞ்சூன் மகளிர் - முதற்சூல் கொண்டமகளிர், 609 [கடுமை-ஈண்டு, புதுமை]
கடுப்ப, உவமவுருபு, 284
கடும்பு-சுற்றம், 523
கடை-முடிவு, 697; பின்பாகம், [717
கடைஇ-செலுத்திக்கொடுத்து, 220; செலுத்தி, 440
கடையடைத்தல், 622
கண்-இடம், 190, 316; கணு, 305
கண்டன்மகல்லா, 343

கண்ணுள் வினைஞர்-சித்திரகாரி [கள், 518
கண்பு-சண்பங்கோரை, 172
கண்பொரா வெறிக்கும், 665
கண்பொருபு, 433
கண்மடுப்ப, 630
கண்மாறுடவர்-கள்வர், 642
கண்விடுபுஉடையூ தட்டை, 305
கணை தாங்குமார்பு, 728
கதவங்கரைய, 667
கந்து-கம்பம், 383
கப்பலில் முரசம் முழங்குதல், [80
கம்பலை-ஓசை, 110, 116, 430, [526, 544, 617
கம்புட்சேவல்-சம்பங்கோழி, 254
கம்மியர் - நெய்தற்றொழிலைச் [செய்வார், 521
கம - நிறைவு, 308 [உரிச்சொல்]
கயங்கண்டன்ன வயங்குடை [நகரம், 484
கயங்குடைந்தன்ன இயந் [தொட்டு, 363
கரண்டை-குண்டிகை, 482
கருங்கால்வரகு, 272
கருங்கால்வெறப்பு, 300
கருங்கால் வேங்கை, 296
கரும்பின் எந்திரம், 258
கரையு-ஒலிப்ப, 667; அழைக்க, [675
கல்-நங்குரக்கல், 378
கல்காயுங்கடுவேனில், 106
கல்பொளிதல், 482
கல்லாமாந்தர், 420
கல்லென, 538
கலஞ்சிதறல், 104
கலம்-குப்பி; 228; பூண், அணி கலன், 685, 695
கலன்-பேரணிகலங்கள், 322, 539
கலி-விழா, 264; ஆரவாரம், 621
கலிங்கம்-ஆடை, 433; புடைவை [513, 554, 721
கலிங்கம் கமழ்புகைமடுத்தல், [554
கலிங்கம்பகர்நர், 513
கலித்தல் - செருக்கித்திரிதல், 112; மகிழ்தல், 504
கலியவிதல், 621
கலை-முசுக்கலை [குரங்கு], 332
கவ்வை-எள்ளிளங்காய், 271
கவலை - கவலைக்கிழங்கு, 241; கவர்த்தவழி, 312
கவலைகாத்தல், 312
கவவு-உள்ளீடு, 626
கவவுக்கரத்தல், 570
கவவுப்பிணிதுஞ்சி, 663
கவ்ளங்கைப்ப-கவளத்தை [யுண்பிக்க, 659
கவை-இரட்டை, 162
கவைஇ-உடுத்து, 722; அடக்கிக் கொண்ட, 728
கவைஇய-சூழ்ந்த, 716
கவையடி, 162
கழிச்செறுவு-கழியிடத்து உப்புப்பாத்தி, 117, 318
கழிந்தோர் - பயனின்றி மாண் டோர், 237
கழிமருவிப்பாய்தல், 541
கழுது-பேயில் ஒருசாதி, 633
கழுநீர்கொண்ட அந்தி, 427
கழை-மூங்கில், 242
கள -தேன், 250
கள்ளரிதல், 753
கள்ளார்களமர், 260, 393
கள்ளின களிநவில்கொடி, 372
கள்ளினைக் குப்பிகளில் வார்த்து வைத்தல், 228
களனுழுதல், 48
களி-செருக்கு, 330, 364; கள் [ஆகுபெயர்] 662
களிறு-திக்கயங்கள், 15
களிறுபார்க்கும் புலி, 643
களிறுமாய்க்கும் கதிர்க்கழனி, [247
களிறுமாய்செருந்தி, 172
கற்சிறை-கல்லணை, 725
கறி-மிளகு, 289
கறுப்ப-முற்ற, 271

கா

காமர்-விருப்பம், 282 465, 674
காமரு-விருப்பம் மருவிய, 422
காய்-பச்சைப்பாக்கு, 683
கார்காலத்தான் மலர்வது [குறிஞ்சி, 613
கால்-தாள், 272, 287, 296; காற்று, 335, 361 441
கால்கொள்ளத் தொடங்கிய ஏழாநாளந்தியிலே தீர்த்த [மாடுதல் மரபு, 427 - 28
கால்பொருதமரம்பயில்கா, 335
காலியக்கன்ன கதழ்பரி, 440
காலியக்கு - காற்றினுடைய [செலவு, 440
காலுறநிற்றல், 522
காலுறுகடலின் ஒலிக்கும், 309
காலோர்-காலாட்கள், 441
காவிதிமாக்கள், 499
காழ்-அகில் முதலியன, 286; தறி, 382; கொடித்தண்டு, 449; சட்டக்கால், 621; வயிரம், 715; வடம், 716; காம்பு [739
காழகம்-நீலநிற உடை, 598
காழோர்-பரிக்காரர், 658

கி

கிழர்அர்-பூட்டைப்பொறி, 93
கிளக்குவல்-கூறுவன், 207
கிளக்குவலென்றமையாற் காட்டுதற்கரிது என்றபடி, 207
கிளிகடிபூசல், 291
கிளை-சுற்றத்தார், 751

கீ

கீழ்செலவீழ்ந்த கிழங்கு, 534

கு

குடமுதல்தோன்றியபிறை, 193
குடிச்செல்வர், 577
குடியகற்றி - குடிமக்களைப் பெருக்கி [செல்வமுண்டாக்கி], 766
குடுமிக்கூகை-சூட்டினையுடைய கோட்டான், 170
குடுமிகொண்ட மண்ணுமங்கலம் கூறியது, 149
குண்டு-ஆழம், 64, 86
குண்டுநீர்-ஆழ்ந்தநீர், 585
குணகடல் கொண்டு குடகடல் வரைமுதல் முற்றல், 238-43
குணகடற்கு இவர்தரும்புனல், [245
குணமுதல் தோன்றிய இருண் [மதி, 195
குணமுதல் நாண்முதிர் மதியம் தோன்றுதல், 547-48
குதிர் - நெல் முதலிய தானியம் வைக்குங்கூடு, 169
குய்-தாளிப்பு, 757
குய்ப்புகை, 757
குயினர்-துளையிடுவார், 511
குரம்பை-குடில், 310
குரல்-கதிர், 272
குரல்புணர்நல்யாழ், 605
குரால்-கூகையின்பேடு, 170
குருகுநரலல், 268
குருதியை உலையாகப்பெய்தல், [30
குரும்பை, 683
குரூஉ-நிறம், 49, 155, 292, 387, [757
குரூஉ மயிர்ப்புரவி, 387
குவவு-திரட்சி, 336
குவவுமணல் - குவிந்தமணல், [586
குழும்பில் மணிகிளர்தல், 273
குழும்பு-திரள், 24; குழி, 241,273
குழுமு-முழங்க, 677
குழூஉ-குடித்திரள், 330; திரட்சி, [373
குளங்கொளச்சாற்றுதல், 246
குறங்கு-துடை, 637

குறடு, 742
குறிஞ்சிசான்ற வெற்பு, 300
குறியவும் நெடியவும், 520
குறுகதிர்த்தோரை, 287
குறும்பிடி, 637
குறுமாக்கள் - சிறுபிள்ளைகள், [461
குறுமுறி-சிறிய இலை, 531
குன்றுகுயின்றன்ன பள்ளி, 474
குன்றுபல குழீஇப்பொலிதல், [48

கூ

கூட்டு-கொள்ளை, 762
கூடற்றமிழ் - மதுரைக்காஞ்சி [இறுதிவெண்பா]
கூம்பு-பாய்மரம், 377
கூவியர்-அப்பவாணிகர், 627
கூவை - கூவைக்கிழங்கு, 142 [திரளுமாம்]
கூளியர், 691
கூற்றம் தோலையுடையது, [632-33

கே

கேழ்கிளர்நிறம், 297, 493
கேழ்கிளரகலம், 493
கேழல்-ஆண்பன்றி, 174, 295
கேளிர் நிழல்சேரல், 168

கை

கைஇ-கோலஞ்செய்து, 419
கைதுடுப்பாக ஆடுற்ற ஊன் சோறு, 34-35
கைப்ப-செலுத்த, 659
கையெறிதல் - கையைத் தட்டுதல், 419

கொ

கொட்டேற்றி-காலசக்கரம், 633
கொட்ப-சுழல, 5, 53; சுழன்று திரிய, 633, 641
கொடி-ஒழுங்கு, 155, 391
கொடிகள் அருவியினுடங்குதல், 374
கொடிஞ்சி-தாமரைப் பூவாகப் பண்ணித் தேர்த் தட்டின் முன்னே நடுவது, 752
கொடியிலை-வெற்றிலை, 401
கொடிவிடுபு கவினுதல், 530
கொடு-வளைந்த, 77, 523
கொடும்பறை, 523
கொடும்புணரி, 77
கொடுமுடிவலை, 56
கொண்டல்-மழை, 530, 568
கொண்டல் வளர்த்தல், 530
கொண்டி-உணவு, 137
கொண்டிமகளிர் - பரத்தையர், [583
கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த மாக்கண் முரசம், 732-33
கொழித்தல்-மேலேயாம்படி [செய்தல், 274
கொழுங்கொம்பு, 587
கொழுத்தல்-தழைத்தல், 10
கொழுதி-பறித்து, 587
கொள்கை நவிற்றல், 389
கொள்ளைசாற்றல் - விலைகூறி [விற்றல், 256
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது இருப்பது நாளங்காடி, 426-30
கொன்-பெருமை, 207
கொன்னொன்று என்றது-கந்தழியினை, 207

கோ

கோங்கு, 338
கோசர்-773
கோடியர்-கூத்தர், 523
கோடு-மேட்டுநிலம், 286; சங்கு, [401, 407, 511,
கோடுகடைநர், 511
கோடை-குருவளி, 308
கோடையை விடர்கம் முகத்தல், 308

கோணம்-தோட்டி, 592
கோதை-சேரன்: 524
கோதை பெருநாளிருக்கை, [524-25
கோதையினொழுகும் நீர், 339
கோல்-திரட்சி, 563
கோலன் - மத்திகையையுடைய வாசிவாரியன், 389[வாசிவாரியன்-குதிரையைத் தன்வயப்படுத்தி நடத்துவோன்]
கோலோர்-பரிக்கோற்காரர், 380

ச

சங்குசுட்ட சுண்ணாம்பு, 401
சமந்தாங்கு நடக்கை, 593
சலம் - மாறுபாடு, 112

சா

சாணம் - தழும்பு, 593
சாயல் - மென்மை, 705
சாயா யாக்கை, 480
சால்பு - அமைதி, 764
சாலினி - தேவராட்டி, 610
சாவகர்-விரதங்கொண்டோர், [476
சாற்றி - நிறைத்து, 246
சாறயர்தல், 366
சாறயர்தற்குக் கொடியெடுத்தல், 366
சான்ற-அமைந்த, 480, 487, 499
சான்ற கொள்கை, 480

சி

சிமிலி - நாலுறி, 483
சிமையம் - உச்சி, 3; மலை [ஆகுபெயர்], 148
சில்காற்றிசைக்கும் பல்புழை நல்லில், 358
சில்காற்று - தென்றற்காற்று, 358
சிலம்பகத்திரட்டல், 299
சிலைப்ப - முழங்க, 672
சிறந்த வேதம் - அதர்வம் ஒழிந்தவை, 468
சிறுகுடிப்பெருந்தொழுவர், 122
சிறுதலை நௌவி, 275
சிறை - சிறகு, 574
சினத்தீயின் பெயர்பு பொங்கல், 31
சினை-கவடு, 296; கொம்பு, 700

சீ

சீப்ப - பெருக்க, 685
சீர் - தாளவறுதி, 160, 657

சு

சுண்ணத்தைப் பலர் திரண்டு இடித்தல், 399
சும்மை - ஆரவாரம், 264, 309, 364
சுரம் போழ்ந்த சிறப்பு, 58 - 59
சுரி - முறுக்கு, 281
சுரிமுகிழ்முசுண்டை, 281
சுரும்புபடு மலர், 566

சூ

சூதர் - நின்றேத்துவார், 670
சூர்ப்பு - கொடுந்தொழில், 33
சூழ்சுடர் - தெய்வத்தன்மையாற் சூழ்ந்தஒளி, 456
சூழி - முகபடாம், 43

செ

செக்கர் - செவ்வானம், 432
செங்காலன்னத்துச் சேவல், 386
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை, 410
செம்பியன்றன்ன செஞ்சுவர், 485
செம்புநிறை கொண்மார், 514
செம்மல் - வாடல், 685
செம்மை - நடுவுநிலைமை, 491

செய்தல் - உண்டாக்குதல், 7, 8
செய்தி - தொழில், 516
செய்யர் - சிவந்த நிறத்தினை யுடையயர், 412
செயிர்த்த நோக்கினர், 412
செருந்தி - வாட்கோரை, நெட்டிக்கோரை, 172
செல்சுடர்ப் பசுவெயில், 411
செவ்வழி, 604
செற்றமும் உவகையும் செய்யாது காத்தல், 490
செற்றவர் அரசு பெயர்த்தல், 132
செறு - பாத்தி, 318
சென்றகாலம், 477

சே

சேக்கை - அமணப்பள்ளி, 487; படுக்கை, 713
சேண் விளங்கல், 209
சேணீங்குதல், 198
சேஞேன், 294
சேத்தல் - தங்குதல், 157
சேயர், 571
சேறு- களி, 400; பலவின்சுளை யிலிருக்கின்றதேன், 527; பாகு, 532

சொ

சொன்றி - சோறு, 212

சோ

சோர்ந்துகுவன்ன சுணங்கு, 415 - 16
சோறு அமைவுற்ற நீருடைக் கலிங்கம், 721
சோறுதருநர், 535

ஞா

ஞாயில்-சூட்டு, மதிலுறுப்பு, 66 [அஃதுஎய்தால் மறைதற்கு உயரப்படுப்பது]
ஞாயிறு குடமுதற்குன்றஞ்சேரல், 546-47

ஞி

ஞிமிறு-மிஞிறு [வண்டின் சாதி பேதம்], 684

ஞெ

ஞெமன்கோல் - துலாக்கோல், 491
ஞெமிர்தல் - பரத்தல், 243

த

தகை - அழகு, 400
தட்கும் - தங்கும், 140
தட்ட-தடுத்துக்கொண்ட, 668
தட்டை, 305
தட்டை கவினழிதல், [பயிரின் திப்போகையினுலே], 305
தடாரிப்பொருநர்க்குக் களிறு கொடுத்தல், 102
தடாரிப்பொருநர்க்குப் பொலந் தாமரைப்பூச்சூட்டுதல், 103
தண்டலை - பூந்தோட்டங்கள், 341
தண்டா - அமையாத, 16, 17
தண்டாது - அமையாமல், 68
தண்பணை-மருதநிலங்கள், 154
தப - கெடும்படி, 572
தம்-கொணர்மின், 747
தம்மின், 729, 731 736, 743, 746
தமனியம் - பொன், 704
தரூஉ-கொண்டுவந்து, 520
தலையாலங்கானத்து நெடுஞ் செழியன் கொற்கைக்குரி யோன் எனல், 138
தலையைப்பேய்கள் அடுப்பாகக் கோடல், 29
தலைமணந்த, 700
தவ - மிக[உரிச்சொல்], 175
தவா - கெடாத, 210
தழீஇய - சூழ்ந்த, 337

தழூஉ - குரவைக்கூத்து [ஆகு பெயர்], 160, 329
தளி - துளி, 263
தளிர்ப்புறத்தீர்க்கின் அரும்பிய [திதலையர், 707-8

தா

தா - வலி, 445
தாஅய் - பரந்து, 338
தாஅய - பரந்த, 277, 281
தாதுண்டும்பி, 655
தாய - தாவின, 532
தாரம் - பண்டம், 290, 697
தாழ்காது, 709
தாள் - முயற்சி, 222
தாள்வலம் - முயற்சியின் வெற்றி, 727
தானை-ஒலியல், மேலாடை, 435

தி

திதலை - தேமல், 708
திமில் - மீன்படகு, 116
திமிலர் கொழுமீன்குறைத்தல், [319 - 20
திருந்தடி - பிறக்கிடாத அடி, [436
திருந்து-பற்றுள்ளம், சிந்தனை, [714
திருந்து, துயிலெடுப்ப இனிதினெழுதல், 714
திரையிடுமணல், 236
திவவு - வலிக்கட்டு, 604
திவவுமெய்ந்நிறுத்தல், 604
திற்றி - தசை, 211

தீ

தீஞ்சேறு - இனிய பாகு, 627
தீம்புழல்-இனிய பண்ணியாரம், இருப்பைப்பூவுமாம், 395
தீம்புளி, 318

து

துகில்-மயிர்க்கட்டு, 494
துணங்கை, 26, 160, 329
துணி - தெளிந்த, 283
துணைப்ப - மாலைகட்ட, 551
துப்பு - வலி, 32, 40, 140, 347
துயிலிரிதல், 254

தூ

தூ - வலி, 188
தூங்கும் - தொங்கும், 3

தெ

தெரியல்-மாலை [இங்கே, வேப்பமாலையைக்குறிப்பது], 437; [மாலை, 745
தெருவுடன் கமழ்தல், 564
தெவ்வுதல் - [இடாவால்] முகந்துகொள்ளுதல், 89
தெவிட்ட - குதட்ட, 660
தெழிப்ப - ஒலிப்ப, 666
தென்னவன் - இராவணன், 40

தே

தேஎம் - நாடுகள், 176, 200
தேம்புதல் -பசியால் உலர்தல், [167
தேமாங்கனி, 528
தேரொடு மாசிதறல், 224
தேன் - தேனிறால், 3

தை

தைஇய - இழைத்த, 284

தொ

தொடர் - சங்கிலி, 382
தொடர்ந்தன்ன - ஒழுகினலொத்த, 438
தொடலைவாளர், 636
தொடி - வீரவளை, 34, 720
தொடுதோல் - செருப்பு, 636
தொடுப்பு - விதைப்பு, 11
தொய்யில் - தொய்யிற்கொடி, 283; எழுதுங்குழம்பு, 416

தொல்லாணை நல்லாசிரியர், 761
தொல்லெயிற்கிவர்தல்கூறி
யது, 149
தொழுவர் - தொழில்செய்வார், [89
தொன்று கறுத்து உறைதல், [347
தொன்று தொழுபிறை, 193
தொன்றுமொழிந்து தொழில் கேட்டல், 72, 124 [தொழில்-ஏவல்]

தோ

தோட்டி-கதவு, 693
தோரை-தோரைநெல், 287
தோல்-யானை, 370

ந

நகர்-மாளிகை, 169; அரண்மனை, 758
நகரம்-கோயில், 484
நகுவனர்-மகிழ்ந்தனர், 420
நகுவனர்இனைப்ப, 420
நட்டவர் குடியுயர்த்தல், 131
நணியர், 571
நயம்-விருப்பம், 650
நயம்வருமுறற்சி, 217
நரந்தம்-கத்தூரி, 553
நரம்பியக்குதல் - நரம்பைத் தெறித்தல், 657
நரலல்-முழங்கல், 185; கூப்பிடு [தல், 268
நரை-பெருமை, 63
நல்கு வர-சொல்லுதல் வரும் [படி, 483
நல்லூழி, 782
நல்வரியிறால் புரையும் மெல்லடை, 624
நலம்-வனப்பு, 409
நவிலல்-பயிலல், 47
நளி-செறிவு, 115
நறவு-கள், 215
நறுவிரைகுறைதல், 552
நன்றுந்தீதும் கண்டாய்ந்தடக்குதல், 496
நன்னன், 618
நன்னன் பிறந்தநாளைச் சேரிகளிலுள்ளார் கொண்டாடுதல், 618-19
நனந்தலை-அகன்ற இடம், 430, [539
நனை-அரும்பு, 587

நா

நாடுகெட எரிபரப்பல், 126
நாடெனும்பேர் காடாதல், 156
நாண்மகிழிருக்கை 443
நாண்மீன் நெறியொழுகல், 6
நாப்பண்-நடு, 584, 734, 768
நால்வேறுதெரு, 522
நாழிகை-நாழிகைசொல்லுவார் (ஆகுபெயர்), 671
நாழிகையிசைத்தல், 671
நாளங்காடி, 430
நாளீண்டுதல் - விடியற்காலத்தே வந்து திரளல்,223
நாற்கோசர்மொழி, 509
நாற்பெருங்குழு, 510
நாற்றம் தெருக்களிற்கமழ்தல், [447
நாற்றவுணவு-அவியுணவு, 458
நாற்றுதல்-தூக்குதல், 483
நாறிய-தோன்றிய, 4
நானிலவர், 123

நி

நியமம்-அங்காடித்தெரு, 365
நிரைநிலைமாடம், 451
நிலந்தருதிருவின் நெடியோன், [763
நிலவுக்கானல், 114
நிலனகழுளியர், 641
நிவந்த-ஓங்கின, உயர்ந்த, 355
நிவந்துசெல் நீத்தம் - ஓங்கிச் செல்கின்ற பெருக்கு, 246

நிழத்த-ஒய்ந்த, 303
நிழலிருத்தரல், 406
நிழலுருவிழந்தவேனில், 313
நின்-சிவான்மாவைக் குறித்து வந்தது, 206

நீ

நீரொலித்தன்னதானை, 369
நீலக்கச்சினர், 639
நீலத்தன்ன பைம்பயிர், 279
நீலம்-நீலப்பூ, 251; நீலமணி, 279
நீவி-பூசி, 715
நீவிய-பூசிய, 493
நீறு உகைத்தல்-துகள்களை யெழுப்பல், 14

நு

நுழைந்தநோக்கு-கூரிய அறிவு, 517

நூ

நூல்வழிப் பிழையா நுண் தேர்ச்சி, 646
நூழிலாட்டு - கொன்றுகுவித் [தல், 257
நூறு-சுண்ணும்பு, 401

நெ

நெடியோன்-வடிம்பலம்ப நின்ற பாண்டியன், 61; திருமால், [763
நெடுஞ்சுழிப்பட்ட நாவாய், 379
நெய்தல்சான்ற வளம், 325
நெய்தல் தொய்யிலொடு உறழ மலர்தல், 282-83
நெய்படக்கரிந்த திண் போர்க் கதவு, 354
நெல்லின் ஊர்-சாலியூர் [நெல் லூர் என்பாருமுளர்], 87-88
நெல்லின் ஓதை, 110

நை

நைப்ப-சுட, 302

நொ

நொடை-விலை, 622, 662

நோ

நோக்கு-அழகு, 13
நோக்கு விசைதவிர்ப்ப மேக் குயர்தல், 486
நோன்-வலிய [376, 742
நோன்குறட்டன்ன மார்பு, 742
நோன்மார், 481

ப

பகட்டின் மேலான், (இறுதி வெண்பா)
பகடு-எருது, 94; (இறுதி வெண்பா)
பகலுருவுற்றவிரவு, 549
பகன்றை, 261
பகைவர்நாட்டைத் தன்னுடாக் கினமை கூறியது, 151
பசும்பொன் - கிளிச்சிறையென் னும் பொன், 400
படர்கூர்தல்-செலவுமிகல், 431
படு-ஒலிக்கின்ற, 232
படுபு-விழுந்து, 683
படை-கற்படை, 352
பண்ணியம்-பண்டம், 506, 661
பண்ணியக்கடைகளை விடியற் காலையில் மெழுகுதல், 661
பண்ணியந்தழீஇத் திரிவிலை [ஞர், 405
பண்ணுப்பெயர்த்தல், 560
பணித்து-பணியவைத்து, 230
பணிலம்-சங்கு, 621
பணை-வெற்றிமுரசு, 234; முரசு 362; பந்தி, 660
பணைநிலைப்புரவி, 660
பணைமீன், 375
பதாகை-பெருங்கொடி, 373
பயம்பு-குழி, 294
பயனெதிர்பு நந்தல், 12

பயிலுதல்-நெருங்குதல், 330
பரல்-கப்பணம், 598
பரங்குன்று, 263
பரதர்-செட்டிகள், 317
பரதர்பல்வேறு கூலம்தருதல், [317
பரதவர்-தென்றிசைக்கட் குறுநில மன்னர், 144
பரதவர்மகளிர்குரவையாடல், 97
பரிபிமிர்தல்-செலவுமிகல், 387
பருந்துபறக்கல்லாப் பார்வல் பாசறை, 231
பல்சாலைமுதுகுடுமி, 759
பல்வேறு குழாஅத்துஇசை, [360
பல்வேறு புள்ளினிசையெழுந் தற்று, 543
பழந்தேர் வாழ்க்கைப்பறவை, [576
பழன்-பழம், 529
பழிச்சல்-துதித்தல், 466, 476
பழுநிய-பருவமுதிர்ந்த, 475
பழையன், 508
பள்ளிமயரல், 623

பா

பாஅயன்னபாறை-பரப்பினை லொத்த பாறை, 278
பாக்கம்-சீறூர், 137
பாட்டியர்-பாணிச்சியர், 749
பாடல்சான்ற நாடு, 331
பாடான்றவிந்த பனிக்கடல், [629
பாடு - ஏழாம்வேற்றுமையுரு பாக வருவது, 90; ஒலி, 629
பாண்டியர்குலத்திற்குப் பழை தாகிய பிறை, 193
பாணருவப்பக் களிறுபலதரல், [219
பாய்-பரந்த, 498
பாய்பரிப்புரவி, 689
பாயல்வளர்வோர்-படுக்கை யிலே துயில்கொள்ளுவோர், [630
பார்வல்-அரண் (ஆகுபெயர்), [231
பாலைசான்ற சுரம், 314
பாணாட்கொண்டகங்குல், 631
பாணாள்-நடுவியாமம், 542

பி

பிடகை-பூந்தட்டு, 397
பிடகையில் நறும் பூப்பெய்து வைத்தல், 397
பிடிமேளந்தோலன்ன இருள், 634
பிண்டி-அசோகு, 701
பிணவு-பெண்பன்றி, 174
பிணியவிழ்தல்-சுருள்விரிதல், [531
பிணிவிட்டபோது, 654
பிரசம்-தேனினம், 717
பிரம்பின் திண்டேர் - விளிம் பிலே வைத்த பிரம்பினை யுடைய திண்ணிய தேர், 435
பிழையாவிளையுள், 507
பிறக்கிடுதல் -கொண்டையிலே முடிதல், 562
பின்னிட்ட வானரைக்கூந்த [லர், 408

பு

புகர்-குற்றம், 765
புகராறு சிறப்பு, 765
புகல்-விருப்பம், 596; விரும்பும், [726
புகன்று-விரும்பி, 112, 147
புகை-சார்ந்து, 515
புகையினர், 466
புடையமைசெப்பு, 421
புத்தேளுலகம், 698
புதல்-சிறுதூறு, 568
புதல்வர்ப்பேற்றால் கணவரு வத்தல், 600
புதவு-வாயில், 65, 165
புரவிப்புல்லுணதெவிட்ட, 660
புரி-வடம், 483

புரிசை-மதில், 352
புரையோர், 737
புல்-ஊகம்புல், 307
புல்முளியங்காடு, 307
புலர-முற்ற, 272
புலவுத்திரையோதம், 540
புலவுநீர்வியன்பௌவம், 113
புலவுப்புணிறு, 602
புழல்-பண்ணியாரம், 395
புழை-சாளரம், 358
புள்ளோப்பும் இசை, 95
புனிறுதீர்ந்து மகளிர் குளநீராடுதல், 602-3

பூ

பூசல்-ஆரவாரம், 291, 293,295, [297, 98
பூரிமம்-தெருவின் சிறகு, தெருவின் இருபுறத்துமுள்ள வீடுகளின் வரிசை, 18 [சாந்திட்ட தொட்டியுமாம்]
பூவும் புகையும் ஆயும் மாக்கள், [515
பூவொடு மணமனைமறுகல், 423

பெ

பெண்மகிழ்வுற்ற பிணைநோக்கு மகளிர், 555
பெயர்-பொருள், 699
பெயர்புறம்பெறுதல், 350
பெயரிய-போக்கின, 40
பெயல்-மழை, 183
பெயலொளித்தல், 107
பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாமை, 192
பெருஞ்செயாடவர், 746
பெருநீரோச்சுநர், 321
பெரும்பாணிருக்கை, 342

பே

பேஎம்-அச்சம், 76
பேரிசைநன்னன், 618
பேருன்சோறு, 533

பை

பைச்சலம் - பச்சைக்குப்பிகள், [228
பைந்தோல்-செவ்விதத்தோல், [732

பொ

பொங்கர் - சிறிய மரக்கொம்பு, 296, 333
பொதியில் - அம்பலம், 161
பொதியிலில் பேய்மகளிர் பெயர்பாடல், 161-63
பொதுர்பர் - இளமரக்கா, 115
பொய்தல் - விளையாடுதல், 589
பொருநர்-தடாரிப்பொருநர், 99
பொருநன் - ஒப்பற்றவன், 42 (தான் பிறர்க்கு உவமிக்கப் படுவான் என்னும் பொருளது.)
பொருப்பின் கடவுள் - பொதியின்மலையிலிருக்கும் அகத்தி [யன், 41-42
பொருப்பு - மலை, 42
பொலந்தார், 590
பொலம்-பொன், 719, 737, 775, [779
பொழில் - நாவலந்தீவு, 190
பொறிமயிர்வாரணம், 673
பொன்னுரை காண்மர், 513

போ

போழ்கோடு-அறுத்தசங்கு, 511

பௌ

பௌவம் - கடல், 76, 113

ம

மகளிர் கணவரோடே புலந்து ஆரம் முதலியன பரிந்து சித [றுவர், 680 - 81
மஞ்சள், 289
மட்மொழியோர், 418
மடி - மடிப்புடைவைகள், 520
மடி வாய் - மூடின வாய், 294

மடிவாய்ப்பயம்பு, 294
மடுப்ப - எடுத்துக்கொடுப்ப, [610, 780
மடை - சோறு, 607
மண்டிலம் - மண்டலம், 190; [வட்டம், 390
மண்ணுறஆழ்ந்த மணி நீர்க் கிடங்கு, 351
மணங்கமழ்சேரி, 329
மணங்கமழ்தேறல், 780
மணல்மலிகானல், 96
மணல்முற்றம், 684
மணிகுயினர், 511
மணிமருள்நெய்தல், 282
மதர் - செருக்கு, 622
மதாணி, 461
மயிலியலோர், 418
மயிலின்மென்மெலஇயலி, 608
மரந்தின்னூம்உருமு, 62-63
மருகன் - குடிப்பிறந்தவன், 23
மருதஞ்சான்ற தண்பணை, 270
மருதம் பண்ண - மருதத்தை [வாசிக்க, 658
மருப்பு - யானைக்கொம்பு, 178
மலர்தலையுலகம், 237
மலைக்கு அணியாவது அருவி, [306
மலைபுரைமாடம், 406
மலையாத தண்டாரான் (இறுதி வெண்பா)
மழுவாணெடியோன் பஞ்ச பூதங்களையும் சேரப்படைத் தவன், 454 - 55
மழை - மேகம், 84, 263, 452
மழைகொளக்குறையாது புனல் புகமிகாது கரைபொருதிரங் கும் முந்நீர், 424 - 25
மழைதொழிலுதவல், 10
மழைமுழாய்மதி, 452
மழைவிளையாடுதல்-மேகமுலாவுதல், [355
மழையொழுக்கறு அமை, 507
மறங்கொள்சேரி, 594
மறுக-போக, 539; அரைக்க, 553
மறுகுதல் - சுழலுதல், 276
மன்றுதொறுநின்றகுரவை, 615
மனைமரத்தான்மீன் சேவுதல், [268 - 69

மா

மா-புலி, 157; பெருமை, 178
மாகதர்-இருந்தேத்துவார், 670
மாகம் - திக்கு, 454
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் [கூடல், 429
மாதாங்கு எறுழ்த்தோள், 729
மாதிரங்கொழுத்தல், 10
மாதிரம்-ஆகாயம், 5; திசை, 10
மாமையர், 413
மாய்தல்-மறைதல், 172, 247, 452
மாயப்பொய்பலகூட்டுதல், 570
மாயோன், 591
மாயோன்மேயஓணநன்னாள், 591
மால் - பெரிய, 384
மால்விசும்பு, 384
மாலைநோயொடுபுகுதல், 557-58
மாலையில்மகளிர் விளக்கினை யேற்றுதல், 555 - 58
மாவிசும்பு வழங்கும்பெரியோர், [495
மாவெடுத்த துகள், 49
மாறன், 772
மாறேற்றுதல், 350
மானவிறல்வேள், 344

மி

மிகுநலமெய்தல், 565
மிளை - காவற்காடு, 64

மீ

மீக்கூறல்- மேலாகச்சொல்லல், [22, 119
மீன்களையறுத்த துணிகள் துடியின்கண்போலுருண் [டிருத்தல், 320
மீன்சீவும்பாண்சேரி, 269
மீன்பிறழல் - வெள்ளி தென் றிசையிலே எழல், 108

மு

முகம்-பக்குவம், 295
முகிழ்-அரும்பு, 281
முட்டாளதாமரை, 249
முண்டகம்-கழிமுள்ளி, 96
முண்டகம் நீலமணிபோலும் பூக்களையுடையது, 96
முத்தினையும் சங்கினையுமுடைய சேரி, 135-36
முதல்-அடி, 377
முதுவெள்ளிலை, ஓர்ஊர், 119
முந்தையாமம், 620
முந்நீர்-கடல், 2, 75, 235, 361, [768
முரசம்இடைப்புலத்தொழிதல், [349
முரசம் காலையியம்பல், 232
முரசுகொண்டு களம்வேட்டல், [129
முரலும்-பாடும், 217
முரற்சி-பாட்டு, 217
முருகயர்தல்,38
முருகியன்றன்னவுரு, 724
முருகு-முருகன் [முருகு - தெய்வத்தன்மை, ஆகுபெயராய் முருகனுக்காயிற்று] 181; தெய்வத்தன்மை, 724
முருகுறழப்பகைமேற்செல்லல், [181
முருகொடு வளைஇ, 611
முருங்க-முறிய, 377
முல்லைசான்ற புறவு, 285
முழவுத்தாழை, 114
முழவின் கண்ணைஒக்க உருண்டபிடகை, 396-97
முற்றிய-சூழ்ந்த, 84
முற்றுதல் - வளைத்துக்கொள் [ளல், 190
முறி-இலை, 531
முன்பு-வலிமை, 691
முன்னிலை- முன்னிற்கப்படுவனவாகிய நுகர்பொருள்கள் (ஆகுபெயர்), 206
முனைஇ-வெறுத்து, 586

மூ

மூங்கிலிற்பிறந்தநெருப்புதூறுகளைச் சுடுதல், 302
மூன்றாஞ்சாமத்தில் தெய்வங்கள் உலாவுஞ்செயலறுதல், [651

மெ

மெல்லடை தேனிறாலை யொக்கும், 624
மெல்லவல்-நெகிழ்ந்த பள்ளம், [283
மெழுக்குறுத்தல்-மெழுகுதலைச் செய்தல், 661
மென்னூலேணி, 640
மென்னூலேணியை அரையிலே சுற்றியிருப்பர் கள்வர் எனல், 640
மென்றோடைவன்கிழாஅர், 93

மே

மேஎய், 473
மேக்கு-மேல்நிலம், 486
மேம்படமருவுதல்- மேலாதற்கு அடிப்படவிருத்தல், 151
மேவர-பொருந்துதல்வர, 587

மை

மை-குற்றம், 9, 686; செம்மறிக்கிடாய், 754
மையுக்கன்ன மொய்யிருங்கூந் [தல், 417

மொ

மொய்ம்பிறந்து திரிதரும் தெரி [யல், 437
மொழி-வஞ்சினமொழி, 509

மோ

மோகூர், 508
மோதகம்-அப்பம், 626

யா

யாணர்-புதுவருவாய், 118, 210, [330, 750
யாணர்ப்புலவர், 750
யாமயாழ், 584
யாறுகிடந்தன்ன அகனெடுந் [தெரு, 359
யானைக்குக் காலிற் கட்டுஞ் சங்கிலியை நீர்வாரி யென்பது, 382 உரை
யானைக்கு முன்னும்பின்னுஞ் சங்கொலித்தல்,380
யானைகந்து நீத்தல், 383
யானைகாழ்சாய்த்தல், 382
யானை மேய்புலம்படரல், 303
யானையங்குருகு, 674

யூ

யூபம்-குறைத்தலைப்பிணம், கவந்தம், 27
யூபமெழுந்தாடல், 27

வ

வகையமைசெப்பு, 421
வகையமைமோதகம், 626
வஞ்சிகூறியது, 147
வடபெருங்கல்- இமயம்,மேரு,70
வடுப்படுநெற்றி, 595
வணங்கிறைப்பணைத்தோள், [414
வந்திகை - கைவந்தி [கையில் தோளின்கீழ் அணியப்படும் ஆபரணம்], 415
வம்பு-கச்சு, 514
வம்புநிறைமுடிநர், 514
வய-வலி, 255, 298, 643, 677
வயிர்-ஊதுகொம்பு, 185
வயிரியர்-கூத்தர், 628, 750
வயிரியர் விழவின்கண் ஆடு [வர், 628
வரம்பு-எல்லை, 2
வரிக்கடைப் பிரசம், 717
வருவனபெயர்தல், 394
வரூஉம் அமயம், 477
வரைநீந்தல்-குறிஞ்சிநில மன்னரை வெல்லல், 57
வரையுதிர்க்கும் உருமு, 62-63
வல்சி-சோறு, 141; உணவு, 395
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை, 723
வலம்படுகொற்றம், 194
வல்மாதிரத்தான் வளிகொட்ப, [5
வழங்கல்-உலாவல், 164
வழிநடத்தல்-ஏவல் கேட்டு நடக்கை, 189, 229
வழிவழிச்சிறத்தல். 194, 324
வள்ளை-வள்ளைக்கொடி, 255
வளந்தப வாங்கல், 572
வளி-காற்று, 5, 450
வளி கொடிகளைக் கடற்றிரையின் புடைத்தல், 450
வளிதருவங்கம், 536
வளிபோழ்தல், 384
வளை-சங்கு, 185, 375
வளைமேய்பரப்பு, 375
வறும்பூ, 573
வறை-பொரிக்கறிகள், 756
வன்சொல் இளைஞர், 311

வா

வாடாப்பூ, 457
வாணன் வைத்த விழுநிதி, 203
வாம்பரிய கடுந்திண்டேர், 51
வாய்ப்பெய்தல்-தின்னல், 25
வாய்மொழி-உண்மையான மொழி, 774
வாய்வாள்-தப்பாத வாள், 773
வாயிற்செருந்து, 748
வார்ந்த-நேரிதாகிய, 414
வாரணம்-கோழிச்சேவல், 673
வாரணம்வைகறையியம்ப, 673
வாரும்று-கோதி, 407
வால்-வெண்மை,407-8; நன்மை [536
வாலிதை, 536

வாலுவன்-பேய்மடையன், 36
வாள்வலம்-வாள்வெற்றி, 727
வான்-மேகம், 107
வானமும்நிலனும் முழுதுண்ரும் அறிஞர், 479-81
வானவண்கை, 442
வானவமகளிர் நீனிறவிசும்பிலாடுவர், 581-82

வி

விசயம்-பாகு, 625
விசும்பு-தேவருலகு (ஆகுபெயர்), 182
விசும்புகமழ, 561
விண்டு-மலை, 202
விண்ணுறவோங்கிய புரிசை, [352
வியப்பு-அதிசயம், 764
வியல்-அகலம், 1, 4, 6, 39, 98, 118, 120, 180, 190, 328 449, 561, 758
விலங்கு-குறுக்கே, 77
விலோதம்-பெருங்கொடி, 449
விழவுநின்ற வியன்மறுகு, 328
விழவின் எழுநாளந்தி, 427-28
விழுச்சீரெய்திய ஒழுக்கம், 469
விழுமம்-வருத்தம், 259
விழுமியவீழ்ந்த குரிசிலர், 736
விளக்கம்-மோதிரம், 719
விளையுள்-விளைச்சல், 607
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறித்தல், 218

வீ

வீ-பூ, 280
வீழ்துணை, 561 [வீழ்தல்-விரும்புதல்]
வீறு-வெற்றி, 54

வெ

வெடி-கேடு, ஓசை, 233
வெண்ணெல், 288
வெதிர்-மூங்கில், 302
வெள்ளம்-ஒருபேரெண், 42
வெள்ளியன்ன வொள்வீ, 280
வெற்றம்-வெற்றி, 73
வெற்றிலைபாக்கு சுண்ணும்பு, [400-1
வெறி-ஒழுங்கு, 617
வெறிக்களம், 284
வெறுக்கை-பொருட்டிரள், 215
வெறுத்து-செறிந்து, 73

வே

வேங்கைப்பூவைப் பறிக்கும் மகளிர் புலிபுலியென்று பூசலிடுதல், 296-97
வேட்டல்-விரும்பல், 205
வேதாளிகர், 671
வேல்கோலாகப் பசுத்திரளையடித்துக்கொண்டு வருதல் [690-92
வேலன், 611
வேழத்தன்ன வெருவருசெலவு [392
வேழம்-கொறுக்கைச்சி, 257
வேள்வித்துறைபோதல், 760

வை

வை-வைக்கோல், 307
வைகல்-நாடோறும், 214, 324
வைகறை-விடியற்காலம், 673, [686
வையெயிற்றுவாயர், 413-14,
வையையன்ன வழக்குடை வாயில், 356

நெடுநல்வாடை.

நெடுநல்வாடை என்ற தொடர் - நெடிய நல்லவாடை எனப் பண்புத்தொகையாய் விரியும். இத்தொடரின் இறுதிச்சொல் லாகிய வாடையென்பது-வாடைக்காற்று வீசுங்காலமாகிய கூதிர்க் காலத்துத் தோன்றின கூதிர்ப்பாசறையை ஆகுபெயரா லுணர்த்திற்று: தொல்காப்பியத்தின்படி, இது பிறந்தவழிக்கூறலென்னும் ஆகுபெயரென்ப.

ஆகவே, இத்தொடர்-தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந் தலைவிக்கு ஒருபொழுது ஓரூழிபோல **நெடியதாகிய** வாடையாகி, போகம் நுகர்வதில் மனமற்று வேற்றுப்புலத்துப் பொரச்சென்ற மன்னவனுக்கு **நல்லதாகிய** கூதிர்ப்பாசறையைக்குறித்துக் கூறுகின்ற பாட்டு என்ற பொருளைத் தரும்.

பிரிந்துவருந்துந்தலைவிக்கு நெடிதாகத் தோன்றும் வாடையைக் கூறலின், பாலையாகிய உரிப்பொருள் உணர்த்திற்றும்: பின்பு, போகம் வேண்டிப் பொதுச்சொற்பெற்றிராமல் வேந்தன் போகத்தில் மனமறும்படி வென்று வேற்றுப்புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகிய வாகைகூறலின், அவ்வரசனுக்கு நல்லதாகிய வாடையாயிற்று. (அகத்து ஒடுங்கிப் போகம் நுகர்வார்க்கு வாடை நல்லதாயினும், அக்கருத்துப்பற்றி, நல்வாடை யென்று கூறிற்றிலர், ஆசிரியர்.) இவ்வண்ணம் அரசன் காமத்திடத்து வெற்றியெய்தியதைத் தெரிவிப்பதால், பாலைக்குப்புறனாகிய வாகைத்திணையாகும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மண்ணசையாற் சென்றுபொருதலால், இப்போர் வஞ்சியாம்: தொல்காப்பியனார் கொற்றவைநிலையை வெட்சித்திணையிற் கூறினாரேனும், போர்மேற் செல்வோர்க்கும் கொற்றங்குறித்துக் கொற்றவையைப் பரவுதல் வேண்டுமாதலால், வஞ்சிக்கும் **கொற்றவைநிலை** யுள்ளதாகும்: அதுபற்றியன்றே, ஐயனாரிதனார் புறப்பொருள்வெண்பாமாலையில் வஞ்சித்திணையிற் கொற்றவைநிலை கூறினா ரென்க. வாகைத்திணையின் அகமான பாலைக்குத் தெய்வம் கொற்றவையாதலால், பாலைக்கும் கொற்றவைநிலையேற்றலறிக: **கொற்றவைநிலை**யினிலக்கணம் 'நீடோளான் வென்றி கொள்கென நிறைமண்டைவலனுயரிக், கூடாரைப் புறங்காணுங் கொற்றவைநிலையுரைத்தன்று' என்பது: (167-168) **'விறல்தந்து** இன்னேமுடிக' என்றதனுல் இவ்விலக்கணத்துள், நீடோளான் வென்றிகொள்கெனவேண்டுதல் வந்தது. இதனுல், கொற்றவையைப் பரவியமை பெறப்படுமென்ப. (இந்தச் செய்யுள் - வஞ்சித்திணையை முக்கியமாகக் கொண்டு வந்திருப்ப, அத்திணைக்கு அங்கமாக அகத்திணையான பாலையும் புறத்திணையான வாகையும் இயைந்தன என்க: இங்ஙனம் ஒன்று முதன்மையானதாக அமைய, அதற்கு உறுப்பாக ஏனைய சில வருதலைப் பத்துப்பாட்டில் மற்

றைப்பாடல்களிலும் காணலாம். இச்செய்யுளில் வாகை அங்கியாக, பாலை வஞ்சிகள் அங்கமென்பாருமுளர்.)

இப்பாட்டில், தலைவனைப் பிரிந்ததலைவியின் துயர்தீரும் பொருட்டே தலைவன் பகைவென்று விரைவில் மீண்டுவருமாறு கொற்றவையைப் பரவுவது கூறப்படுதலின், அகத்திணையிற் சேர்ந்த பாலையே தலைமையானதென்று கூறலாகாதோ? எனின்,— "வேம்புதலையாத்த நோன்காழெஃகம்" எனப் பாண்டியனுடைய அடையாளப்பூக் கூறியிருத்தலாலும், அது பெயர் கூறியதை யொக்குமாதலாலும், "மக்கணுதலிய வகனைந்திணையும், சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்" என்று அகனைந்திணையிற் பெயர் கூறுதலை இலக்கணம் மறுத்தலாலும் பாலையே தலைமை யானதெனற் காகா தென்க.

இந்த நெடுநல்வாடை, நக்கீரனார் முதலிய கடைச்சங்கப்புலவர்களால் இயற்றப்பட்ட பத்துப்பாட்டுக்களுள் ஏழாவது; (பத்துப் பாட்டுக்களாவன:--திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன: இவைகளை, பத்துப்பாட்டு என ஒன்றுகத் தொகுத்தவர் இன்னுரென்பது விளங்கவில்லை.) இது-188 அடிகளைக்கொண்ட நேரிசையாசிரியப்பாவால் இயன்றது.

கூதிர்க்காலத்தே மாற்றுரைவென்று புவிகொளவிரும்பிக் காமத்தை வென்று தலைவன்பகைமேற்சென்றுனுக, அத்தலைவனைப் பிரிந்த தலைவி, கூதிர்க்காலத்து நடுயாமத்தே (கற்புடையமனைவியர் கணவனைப்பிரிந்த நிலையில் இன்னவாறிருப்பரென்று நூல்களிற் கூறிய முறைப்படியே) குழை முதலிய அணிகலன்களைத் துறந்து மங்கலத்தாலிமாத்திரம் பூண்டு சங்குவளையலுடனே காப்பு நாணணிந்து மாசுடையுடுத்து அரண்மனையிலிடையேயுள்ள தந் தக்கட்டிலிற் படுக்கைமேல் சேடியர் அடிவருட, செவிலித்தாயர் பொய்ம்மையும் மெய்ம்மையுமான உரைகள் பலவற்றையுஞ் சொல்லி 'துணைவர் இன்னே வருவர்' என்று தேற்றவும் தேருளாய், விதானத்திற் சந்திரனேடு உரோகிணி சித்திரிக்கப்பட்டிருந் ததை நோக்கி 'நாம் இந்த உரோகிணியைப்போற் பிரிவின்றியிருக் கப்பெற்றிலோமே!' என்று சிந்தித்து நெட்டுயிர்த்துக் கண்களில் ததும்பிப்பெருகுகின்ற நீரைக் கைவிரலால் தெறித்து வருத்தத் துடன் வதிகின்றுளாதலால் அவ்வரிவையின் பிரிவுத்துயர் தீரும் படி, 'தன்படைவீரரிடத்து அன்பு கொண்டு தன்னிடத்தினின்று வெளிப்போந்து சேனுபதி முன்னே வழிகாட்ட, அவன்பின்னே இடத்தோளிலிட்ட உத்தரீயம் நழுவிவிழ அதை யணைத்தவண்ணம் வாளேந்தியவீரனது வலத்தோண்மேற் கையை வைத்துக் கொண்டு விழுப்புண்பட்ட வீரரை விசாரிக்குமாறு பள்ளிகொள்ளாது திரியுமவனுன வேந்தனுடைய பாசறைத்தொழில் வெற்றியைத் தந்து இன்னே முடிவதாக' என்று தலைவியினிடத்து அன்

புடையாளொருத்தி கொற்றவையைப் பரவியதாகச் செய்யப்பட்டது, இச்செய்யுள். கூதிர்க்காலத்தின் தன்மையும், மதில் வாயில் முதலியவற்றுடன் கூடிய அரண்மனையும், அதிற் கருப்பகிருகமும் அதனிடத்துத் தந்தக் கட்டிலும் அக்கட்டிலிற் சேக்கையும் என்பவை அமைந்த வகையும், அக்காலத்துப் பிரிந்து தனித்திருக்குந் தலைவியிருக்கும் இயல்பும், தலைவன் பாசறையிருப்பும் முதலியன இதில் நன்கு கூறப்பட்டுள்ளன: பண்டைக்காலச் செய்திகள் பலவும் இந்நூலிற் காணப்படும். உயர்வுநவிற்சியணியில்லாமல்,இயற்கையைத் தன்மைநவிற்சியணியினாலும்உவமையினாலும் சித்திரமெழுதிக் காட்டினாற்போலக் கற்போர் மனத்துப் பதியுமாறும், கற்றோர் அகமகிழுமாறும் இதனிற் கூறியிருத்தல் காண்க.

இதனை இயற்றியவர்-**மதுரைக் கணக்காயனார் மகனாரான நக்கீரனார்:** இவர் தந்தையார் மதுரையிற் பலர்க்கும் நூலையோதுவிப்பவராயிருந்ததனால், மதுரைக்கணக்காயனா ரென்றே பேர் பெற்றார்: கீரங்கொற்றனாருடையதந்தை இவர். இவருடைய குலம்-சங்கறுக்குந்தொழிலைச்செய்துவந்த ஒரு வகை வேதியர் குலமென்பது, ஒரு சாரார் கொள்கை. கடைச்சங்ககாலத்தில் சங்கப்பலகையில் முதலிடம் பெற்றவர் இவரே. பத்துப்பாட்டுள் **திருமுருகாற்றுப்படையும்,** இவர் இயற்றியதே. மற்றும், நற்றிணையில் 7 - உம், குறுந்தொகையில் 8-உம், அகத்தில் 17-உம், புறத்தில் 3-உம், ஆக மொத்தம் 37-பாடல்கள் இவர் இயற்றினவாகத் தொகை நூல்களுள் உள்ளன. **நக்கீரர் நாலடி நாற்பது என்னும் நூலொன்று** இவர்இயற்றினரென்று யாப்பருங்கலவிருத்தியால் தெரிகின்றது. திருவள்ளுவமாலையில் இவர்பாடிய பாடல் ஒன்று உள்ளது. இவருடைய பாடல்கள் இயற்கையைத் தெரிவிப்பனவாய் மிக அழகு வாய்ந்தன. இறையனாரகப்பொருளுக்கு உரைகண்டவர் இவரே: (இப்பொழுதுவழங்குகின்ற அவ்வுரை இந்நக்கீரர்கூறியதனை வரன்முறையாகப்பாடங்கேட்டுவந்து ஈற்றில்இளம்பூரணர் எழுதிவைத்ததாயிருக்கலாமென்று ஊகிக்கின்றனர்.*) **கைலைபாதிகாளத்திபாதியந்தாதி** முதலிய 10-பிரபந்தங்களையும் **திருக்காளத்தி ஞானப்பூங்**

*அங்ஙனம் ஊகிக்கின்றவர், அதற்கேற்ப ஏதுக்களும் காட்டியுள்ளார். எனினும், அவ்விருவரும் வேறுவேறாவர் எனக்கருதத் தக்கசான்று ஒன்றுஉளது. "மூன்றுறுப்படக்கிய தன்மைத்தாயின், தோன்றுமொழிப்புலவர் அதுபிண்டமென்ப" என்ற செய்யுளியற் சூத்திரவுரையில் இளம்பூரணர் "அவற்றுட் சூத்திரத்தாற் பிண்டமாயிற்று இறையனார்களவியல்......அதிகாரத்தாற்பிண்டமாயிற்று இந்நூலெனக்கொள்க" என்றதனோடு நில்லாமல், அக்களவியல்நூலைச் 'சிறுநூல்' என்ற வகையுள்ளும்படும்என்று பொருள்பட எழுதியுள்ளார். எனவே, உண்மையில்,இளம்பூரணர் இறையனார் களவியலுரைகாரராயிருப்பின் சரதம், தொல்காப்பிய வுரையில்தாம்கண்ட இவ்வரும்விடயங்களை ஆங்குக்களவியலுக்கு உரைவகுக்குங்கால் எழுதியேயிருப்பர். ஆதலின், இருவரும் வெவ்

கோதை ஸஹஸ்ரநாமம் என்றவடமொழி நூலொன்றையும் இவர் செய்தன ரென்று கூறுவதும் உண்டு. நக்கீரனர் சங்கத்து இருந்த காலத்திலே கொண்டானென்னுங் குயவன் மதுரைப்பட்டிமண்ட பத்தில் [பட்டி மண்டபம்-வித்தியா மண்டபம்.] வந்து 'வடமொழியே சிறப்பு உடையது, தென்மொழி இழிந்தது' என்று இழித்துக் கூற, அவனை இவர், "முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி, பரணகபிலரும் வாழி-அரணிலா, ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான், ஆனந்தஞ் சேர்க சுவாகா" [ஆனந்தம்-மரணம்] என்று கூறலும் அவன் இறந்தானாக, அதனைக்கண்ட அங்கிருந்த மற்றையோர்வந்து இவரை வேண்டியதனால் "ஆரிய நன்று தமிழ் தீதெனவுரைத்த, காரியத்தாற் காலக் கோட்பட்டானைச்-சீரிய, அந்தண்பொதியி னகத்தியனாராணையினாற், செந்தமிழே தீர்க்க சுவாகா" என்று ஒரு வெண்பாவைப் பாடி மீள அவனை உயிர்ப்பித்தன ரென்பர். "கொங்குதேர் வாழ்க்கை" என்று தொடங்கும் இறையனாரியற்றியசெய்யுளுக்கு இவர் குற்றங்கூறி, அச்சிவபிரானால் வாதுசெய்யமுடியாமல் நெற்றிக்கண்ணைத்திறந்து வெருட்டப்பட்டதனால், உடல்வெந்து பொற்றாமரைவாவியில் வீழ்ந்து அக்கடவுளைத் துதித்துப் பின்னர் அப்பரமசிவனது அருளைப் பெற்றன ரென்பர். திருமுருகாற்றுப் படையைப் பாடியதைப்பற்றி ஒரு சரித்திரம்கூறப்படுவதுமுண்டு. திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி பக்கத்தே இவருருவம் இருக்கின்ற தென்கின்றனர்: மதுரையில் மேலைமாசிவீதியின் மேற்சிறகிலே இவருடைய கோயிலொன்று உள்ளது; அது சங்கத்தார்கோயி லெனவும் வழங்கும்.

இந்நூற்கு நச்சினார்க்கினியர் சிறந்தஉரை இயற்றியிருக்கின்றார்: பெரும்பாலும் அவ்வுரையை யாதாரமாகக்கொண்டு எளிய நடையில் இவ்வுரை எழுதப்படுகின்றது.

நெடுநல்வாடையில் கூறும் அரசன்போர்ப்பாசறை கூதிர்ப் பாசறையென்பது விளங்கக் கூதிர்க்காலத்தியற்கையை முதல் 72 - அடிகளால் விவரிப்பார்: கூதிர்க்காலமென்பது - மழைக்காலமாகிய ஆவணி புரட்டாசி மாதங்கட்கு அடுத்துள்ள ஐப்பசி கார்த்திகை யென்ற இரண்டுமாதங்களைக் கொண்ட காலம். (பாசறையில் வேனிற்பாசறை கூதிர்ப்பாசறை என இரண்டு கூறுவர், தொல்காப்பியர்.)

வேறானவர் என்பது வெளிப்படை. ஈண்டு, ஒருவினாஎழுப்பலாம். 'அதிகாரத்தாற் பிண்டமாயிற்றுஇத்தொல்காப்பிய நூல்' என்று சொன்னாரே! இக்குறிப்பை ஏன்தமது தொல்காப்பியவுரைத் தொடக்கத்து எழுதவில்லையென்று. இதனை, "இந்நூலிலேயே தாம்பிரயோகித்ததன் குறிப்பினால் அவ்விதியைப்பெறவைத்தாற் போல்வதோர் தந்திரவுத்தியாகக் கொண்டால் இழுக்கொன்றுமில்லையே! மற்றும், இருவர் உரைகதியும் ஒரேமாதிரியின்று.

[ஸி. ஜெகந்நாதாசார்யர்.]

அடிகள் 1-2: மழைபொழிதல் கூறும்.

1—2: வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென

(இ-ள்.) (2) பொய்யா வானம்-(தனக்குஉரிய பருவத்தில் பெய்தலைத்)தப்பாத மேகம், (1) வையகம் பனிப்ப-உலகமெல்லாங் குளிரும்படி, வலன் வளைஇ-(தான் தங்கிய மலையை) வலப்புறமாக வளைத்துக்கொண்டு, ஏர்பு-(வானத்தில்) எழுந்து, (2) புது பெயல்-(கார்காலத்துப் பெய்யும்) புதியமழையை, பொழிந்தென - பொழிந்ததாக,—(எ - று.)

அடிகள் 3-8: வெள்ளம் வெறுத்த கோவலர்நிலை கூறும்.

ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

(இ-ள்.)(3) ஆர்கலி முனைஇய-வெள்ளத்தை வெறுத்த,கொடு கோல் கோவலர்-வளைந்த கோலினையுடைய இடையர், (7) பலர்—, உடன்-ஒருசேர, (4) ஏறு உடை இனம் நிரை-ஏற்றைக்கொண்ட தொகுதியாகவுள்ள (எருமை ஆடு பசு என்ற மூன்று) நிரைகளையும், வேறு புலம் பரப்பி-வேறாகிய மேட்டுநிலத்திலே மேயவிட்டு, (5) புலம் பெயர் புலம்பொடு-(தாம் பழகிய) நிலத்தைக் கைவிட்டுப் போகின்ற தனிமையினாலே, கலங்கி-வருத்தமடைந்து,—கோடல் (6) நீடு இதழ் கண்ணி-காந்தளின் நீண்ட இதழினாற் கட்டின முடிமாலை, நீர் அலை கலாவ-நீர் அலைத்தலாலே கசங்க,— (7) மெய் கொள் பெரு பனி நலிய-(தம்) உடம்பிடத்தேகொண்ட பெரிய குளிர்ச்சி வருத்துகையினாலே, (8) கை கொள் கொள்ளியர் - கையிடத்திலேகொண்ட நெருப்பையுடையராய், கவுள் புடையூஉ-உட்புறமான கன்னத்திற் பற்பறைகொட்டி, நடுங்க - நடுங்கவும்,—

மழைமிகுதியாகப்பெய்தமையால் அம்மழைக்காலத்துக்குப் பின் கோவலர் யாவரும் வெள்ளத்தை வெறுத்து, தாம் மேய்க்கும் இனநிரையை மேட்டுப்பாங்கான நிலத்திலே மேயவிட்டு, தாம் பழகின இடத்தை விட வேண்டி வந்தமைக்கு வருந்தி, தாம் தொடுத்த காந்தளிதழ்க்கண்ணிகள் நீரால் அலைக்கப்பட்டுக் கசங்கிவிட்டனவாகக் கைக்கொள்கொள்ளியராய்க் குளிர்மிகுதியால் பற்களோடு பற்களிடித்து ஒலிசெய்ய நடுங்கலானார்களென்க. ஆர்கலி-மிக்க ஓசையையுடையது; வெள்ளம்: வினைத்தொகையன்மொழி: (இச்சொல், கடல் என்ற பொருளிற் பெரும்பாலும் வரும்.)

பசுத்திரள் எருமைத்திரள் ஆட்டுத்திரள் என்ற இவை மூன்றும் நிரையெனப்படுதலால், 'இனநிரை' என்றார்: "முந்நிரையு

முடையேன்" என்று பெரியபுராணத்து வருவது [சிறுத்தொண்டர்: 49], இங்குக் காணத்தக்கது. நச்சினார்க்கினியர், எருமையையும் ஆட்டையும் இனம் என்றதாற்கொண்டு, நிரை-ஆநிரை எனப் பொருள் கூறினர். அவர்க்கு, இனநிரை உம்மைத்தொகை. ஊர்க்குச் சமீபமான இடத்திலே வெள்ளமாயிருத்தலால் அங்கு மேய்த்து ஊரிலே தங்கமுடியாமற்போயினமையை 'புலம் பெயர் புலம்பு' என்று விளக்கினார். கையை நெருப்பிலேகாட்டிக் காய வைத்து அக்கைகொண்ட வெம்மையைக்கவுளிலேயொற்றுதலால், 'கைக்கொள் கொள்ளியர்' என்றது: பெருங்குளிருள்ள இடத்து நெருப்பிற் கையைக் காயவைத்துத் தாடையிலொற்றிக்கொள்ளும் வழக்கம், இப்போதும் இருத்தல் அறியத் தக்கது. குளிர்காலத்து இடையர் தம்மைக்குளிர்வருத்தாதிருத்தற்கெனக் கையில்நெருப்புடையராயிருத்தலை "வானம் பருவஞ்செய்த பானாட்கங்குல்,..., கடைகோற்சிறுதீ யடைய மாட்டித்,..., நுண்பஃறுவலையொருதிறநனைப்பத், தண்டுகாலூன்றிய தனிநிலையிடையன்" (274) என்ற அகநானூற்றடிகளாலுணர்க.

அடிகள் 9-12: விலங்கு பறவை இவற்றின்நிலை கூறும்.

மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்

(இ-ள்.) (9) மா மேயல் மறப்ப-விலங்குகள் மேய்தற்றொழிலை மறந்தொடுங்கவும்,—மந்தி கூர-குரங்குகள் குளிர்ச்சி மிகவும்.—(10) படிவன-(மரங்களிலே) தங்குவனவாகிய, பறவை-பறவைகள், வீழ-(காற்று மிகுதியால் நிலத்திலே) வீழவும்,—கறவை-பசுக்கள், (குளிரின் மிகுதியாலே), (11) கடிய வீசி-(கன்றுகள் ஊட்ட வரும்போது அவற்றைக்) கொடுமையுடையனவாய் உதைத்து, கன்றுகோள்-(அந்தக்) கன்றுகளை (ஊட்டுமாறு) ஏற்றுக்கொள்ளுதலை, ஒழிய - தவிரவும்,— (12) குன்று குளிர்ப்பு அன்ன - மலையைக் குளிர்ச்சிசெய்வதையொத்துத்தோன்றுகின்ற, கூதிர் - கூதிர்க் காலத்து, பால் நாள் - நடுயாமத்தே,—(எ - று.)

'கூதிர்ப்பானாள்' என்ற இது, (166) புலம்பொடு வதியும் அரிவைக்கு எனத் தொடரும். (2) பொழிந்தென, (3) கோவலர் (5) கலங்கி (6) கலாவ, (8) நடுங்க, (9) மறப்ப, கூர, (10) வீழ, (11) ஒழிய, (12) அன்ன கூதிர்ப்பானாள் என்க. 'குன்று குளிர்ப் பன்ன கூதிர்' என்றது-**தற்குறிப்பேற்றம்.**

இங்கு 'கூதிர்ப்பானாள்' என்று கூறியஆசிரியர், இனி, அந்தக் **கூதிர்ப்போது** இன்னபடி யிருந்ததென்று அதன் **இயல்புகளை அறுபது அடிகளால்** விரிவாகக்கூறுவர். [இங்ஙனம் ஒரு விஷயத்தைத் தொடர்புபடக் கூறிச்செல்லும்போது, இடைப்பிறவரலாகப் புகுத்திக் கூறுதல் புலவர்களியற்கையே: பேசிக்கொண்டு

செல்லும்போதும் இடையே இங ஙனம் புகுத்திச் சொல்வது இயல்பாதல் அறிக. மேலும் இவ்வாறே காண்க.]

அவற்றுள், அடிகள் 13-28, கூதிர்ப்பருவத்து நிகழ்வன கூறும்.

13—14: **புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதல் மலர**

(இ - ள்.) (13) புல் கொடி முசுண்டை-புல்லிய கொடியாகிய முசுண்டையின், பொறி புறம் வால் பூ-திரண்ட புறத்தையுடைய வெள்ளிய பூ, (14) பொன் போல் பீரமொடு-பொன் போன்ற நிறத்தையுடைய பீர்க்க மலருடனே, புதல்புதல்-புதல்கள்தோறும், மலர-மலரவும்,—(எ - று.)—பீரம், அம்-சாரியை.

**பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையொ டெவ்வாயுங் கவர
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்**

(இ - ள்.) (18) கயல் - கயல்மீன்கள், கடும் புனல் சாஅய் - விரைவாயோடின நீரினின்றும் ஒதுங்கி, அறல் எதிர-அற்ற நீர்க்கு எதிராகச் செல்லுகையினாலே,—(15) பைங் கால் கொக்கின்-பசிய காலையுடைய கொக்கு என்ற,மெல் பறை-மெல்லிய பறவைகளின், தொழுதி-கூட்டம், (17) செவ் வரி நாரையொடு - சிவந்த வரியினையுடைய நாரைகளுடனே, (16) இருங் களி பரந்த ஈரம் வெண் மணல் - கரிய வண்டலிட்ட சேறு பரவிய ஈரத்தினையுடைய வெள்ளிய மணலிடத்தே, (17) எ வாய்உம் - எல்லாவிடத்துமிருந்து, கவர - (அக்கயலைக்) கவர்ந்து தின்னவும்,—(எ - று.)

**பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பிற் றுவலை கற்ப**

(இ - ள்.) (19) பெயல் - பெய்வது, உலந்து - தவிர்ந்து, எழுந்த—, பொங்கல் - பொங்குதலையுடைய, வெள் மழை - வெண்ணிறமுள்ளமேகம், (20) அகல் இரு விசும்பில் - அகன்ற பெரிய ஆகாயத்திலே, துவலை கற்ப - சிறுதிவலையாகத் தூவுவதைப் பயிலவும்,—(எ - று.)

மேகத்திற்கு மிகுதியாகப் பெய்தலே இயல்பாதலால் 'துவலை கற்ப' என்றார். கூதிர்க்காலத்துச் சிறிதுதூறுதல் இயல்பு. "பெய்துபுறந்தந்து பொங்கலாடி, விண்டுச் சேர்ந்த வெண்மழை," "பெய்து புறந்தந்த பொங்கல் வெண்மழை" என்பன காண்க. மழைக்காலத்திற்கு முந்திப்போல மழைபெய்த காலத்திற்குப் பின்னும் வெண்மழையிருத்தல் காண்க.

21—22: **அங்க ணகல்வய லார்பெயல் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க**

(இ-ள்.) (21) அம் கண்-அழகிய இடத்தையுடைய, அகல் வயல்-அகன்றுள்ள வயலில், ஆர் பெயல்-நிறைந்த மழைபெய்த

தனுல், கலித்த - மிகுதியாக எழுந்த, (22) வள் - வளப்பமுள்ள, தோடு - இலையினையுடைய, நெல்லின் - நெல்லினின்று, வரு-புறப் பட்ட, கதிர்—, வணங்க - (முற்றி) வளையவும்,—(எ - று.)

நெல்லானது புல்வகையிற் சேர்ந்த தாதலால், அதனுடைய இலையை 'தோடு' என்றார்.

முழுமுதற் கமுகின் மணியுற மெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற

(இ - ள்) (23) முழு முதல் - பெரிய அடியினையுடைய, கமுகின் - பாக்குமரத்தினது, மணி உறழ் எருத்தின் - நீலமணியையொத்த கழுத்திலே, (24) கொழு மடல் - செழிப்புள்ள மடலினிடத்து, அவிழ்ந்த - பாளைவிரிந்த, குழூஉ கொள் - திரட்சியைக் கொண்ட, பெருங் குலை - பெரியதாறுகளிலே, (26) தெள் நீர் பசுங்காய் - தெளிந்தநீரை உள்ளேயுடைய பசியகாய், (25) நுண் நீர் தெவிள வீங்கி - நுண்ணிய நீர் திரளும்படியாகப் பருத்து, புடை திரண்டு - பக்கந்திரண்டு, (26) சேறு கொள - இனிமை கொள்ளும்படி, முற்ற - முற்றவும்,—(எ - று.)—''தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்' என்பது, மதுரைக்காஞ்சி.

27—28: நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க

(இ - ள்.) 27) நளி கொள் - செறிதலைக் கொண்ட, சிமையம் - உச்சியிலே, விரவு மலர் - (மழைக்கு முன்னர்ப்) பொருந்திய மலர்களையுடைய, வியல் கா - அகன்ற பொழில்கள்,—(28) குளிர்கொள் - குளிர்ச்சியை (த்தம்மிடத்தே) கொண்ட, சினைய - கிளைகளையுடையனவாகி (நிற்க), குரூஉ துளி - (அக்கிளைகளில் ஏற்றுநின்ற) நிறத்தையுடைய மழைத்துளி, தூங்க - மாறுமல் வீழவும்,—(எ - று.) —'நளியென் கிளவி செறிவுமாகும்'; 'குருவும் கெழுவும் நிறனுகும்மே' என்பன தொல்காப்பியம்.

அடிகள் 29—35: மூதூர் முழுவலிமாக்கள் செயல்கூறும்.

மாட மோங்கிய மல்லன் மூதூர்
ஆறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணர் பகலிறந்து
இருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர

(இ - ள்.) (29) மாடம் ஓங்கிய - மாடங்களுயர்ந்த, மல்லல் - வளப்பத்தையுடைய, முது ஊர் - பழைய வூரிலே, (30) ஆறு கிடந்து அன்ன அகல் நெடுந் தெருவில் - ஆறு கிடந்தாற்போன்ற

அகன்ற நெடிய தெருவிலே,—(31) படலை கண்ணி-தழை விரவின மாலையினையும், பரு ஏர் எறுழ் திணி தோள்-பருத்த அழகினையுடையனவாகிய வலிமையைக் கொண்ட இறுகினதோளையும், (32) முடலை யாக்கை - முறுக்குண்ட உடம்பினையும், முழு வலி - நிரம்பின உடல்வலிமையையுமுடைய, மாக்கள் - மனிதர், (33) வண்டு மூசு தேறல்-வண்டுகள் மொய்க்குங் கள்ளை, மாந்தி-குடித்து, மகிழ் சிறந்து-மகிழ்ச்சி மிகுந்து,—(34) துவலை தண் துளி பேணார்-சிறு தூரலாகிய குளிர்ந்த மழைத்துளியை இலட்சியஞ் செய்யாதவராகி, பகல் இறந்து - பகற்பொழுதைக் கடந்து, (35) இரு கோடு அறுவையர் - முன்புறமும் பின்புறமும் தொங்கலாக(த் தொங்கவிட்ட) ஆடையுடையராய், வேண்டுவயின் - வேண்டின இடத்தே, திரிதர - திரியவும்,—(எ-று.)

மாக்கள் கள்ளையுண்டதனால் மகிழ்சிறந்து துளி பேணார் தெருவிலே திரிதர என்க. முழுவலி மாக்கள் - மிலேச்சரென்றும், (34) பகலிறந்து என்பதை (41) 'அவ்விதழ்' என்பதன்பின் கூட்டியும் உரைப்பர் நச்சினார்க்கினியர். இருபக்கத்து மனைகளும்கரை போன்றிருக்கப் பரந்த தெரு ஆறு போன்றிருக்குமென்க. "யாறு கிடந்தன்ன அகனெடுந்தெரு" என்று மதுரைக்காஞ்சியிலும்(359), "யாறெனக்கிடந்ததெரு" என மலைபடுகடாத்திலும் (481)--வருவனவும் காண்க.

அடிகள் 36—44: மாலைக்காலத்து மகளிர் இல்லுறை தெய்வத்தைக் கைதொழுதல் கூறும்.

வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவல்
பூங்குழைக் கமர்ந்த வேந்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து
அவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கி னீர்ந்திரி கொளீஇ
நெல்லும் மலருந் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர

(இ - ள்.) (36) வெள்ளி வள்ளி - வெள்ளியினாலியன்ற வளை, வீங்கு - இறுகின, இறை - முன்னங்கையைக் கொண்ட, பணை தோள்-மூங்கில்போலும் தோளினையும், (37) மெத்தென் சாயல் - மெத்தென்று (கண்ணுக்குத்)தோன்றுகின்ற சாயலினையும்,முத்து உறழ் முறுவல்-முத்தையொத்த பல்லினையும், (38) பூங் குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழை கண் - பொலிவினையுடைய குழையென்னுங் காதணிவரையிற் சென்று பொருந்திய உயர்ந்து தோன்றுகின்ற அழகினைக்கொண்ட மழைபோற் குளிர்ச்சியையுடைய கண்களையுமுடைய, (39) மடவரல் மகளிர்-மடப்பம் வருதலையுடைய பெண்கள்,—பிடகை - பூந்தட்டிலே, பெய்த - இட்டு வைத்த, (40) பைங் கால் பித்திகத்து-பசிய காம்பையுடைய பிச்சியின், செவ்வி அரும்பின்-மலரும் பருவத்தைக்கொண்ட அரும்

பின், (41) அ இதழ்-அழகிய இதழ்கள், அவிழ் பதம் - விரியுஞ் செவ்வியில், கமழ-மணக்கையினுலே, பொழுது அறிந்து-அந்திக் காலமென்றறிந்து, (42)இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிகொளீஇ-இரும்பாற்செய்த தகளியிலே நெய்தோய்ந்த திரியைக்கொளுத்தி, (43) நெல்உம் மலர்உம் தூஉய் - நெல்லையும் மலரையுஞ் சிதறி, கைதொழுது-(இல்லுறை தெய்வத்தை) வணங்கி, (44) மல்லல் ஆவணம் மாலை அயர-வளப்பத்தையுடைய கடைத்தெருமுழுதிலும் மாலைக்காலத்தைக் கொண்டாட,—(எ -று.)

(36) தோள் (37) சாயல்முறுவல் (38) கண் (இவற்றையுடைய) (39) மகளிர் என்க: பிடகையிற் பெய்த பித்திகத்து அரும்புகள் அவிழ்ந்து மணங்கமழவே, பொழுது சென்றமையையறிந்து ஆவணமுழுதும் மகளிர் திரிகொளீஇ நெல்லும்மலருந்தூய் மாலையை யயர்ந்தன ரென்க.

குழைக்கு என்பது வேற்றுமைமயக்கமாய், குழையில் என்ற பொருளைத் தந்தது; இனி, குழைக்கு அமர்ந்த என்பதற்கு-மகரக் குழையிட்ட அழகிற்குப் பொருந்தின எனினுமாம். விளக்கு - தானியாகுபெயர். மகளிர் நெல்லொடு மலரைக்கலந்து தூவி மாலையை யயர்தல், அக்காலத்து மரபு: "அகனகரெல்லா மரும் பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப்பகன் மாய்ந்த, மாலை" எனவருவதுங்காண்க.

அடிகள் 45-48: சேவற்புறவின் செயல் கூறும்.

மனையுறை புறவின் செங்காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணுது
இரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்ப

(இ-ள்.) (45) மனை உறை புறவின் செங்கால்சேவல்-வீட்டில் வசிக்கின்ற புருவின் செந்நிறக்காலையுடைய சேவல்கள், (46) இன்புறுபெடையொடு-(தாம்)இன்பம் நுகர்கின்ற பேடையுடனே,மன்று தேர்ந்து உண்ணுது-வெளியான இடத்து (ச் சென்று இரையை)த் தேடியுண்ணுமல், (47) இரவும் பகலும் மயங்கி-இராப்போதும் பகற்போதுந் தெரியாது மயக்கங்கொண்டு, கையற்று-செயலற்று, (48) மதலைப்பள்ளி-கொடுங்கையைத்தாங்குதலையுடைய பலகைகளிலே, மாறுவன இருப்ப - (பறக்காமையினுல் கடுப்பெடுத்தகால் ஆறும்படி) மாறிமாறியிருப்ப,—(எ - று.)

குளிரினுல் வெளிச்சென்று இரைதேர்ந்துண்ணுமையால் சேவற்புறவுகள் பெடைகளுடனே செயலற்றுக் கொடுங்கைப் பலகையிலே தாளை மாறமாறவைத்துக்கொண்டிருப்பனவாயின.

அடிகள் 49-50: குறுந்தொழுவர் செயல் கூறும்.

கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக

(இ - ள்.) (49) கடி உடை வியல் நகர்-காவலையுடைய அகன்ற மனைகளில், சிறு குறு தொழுவர் - தாழ்ந்தோராகிய குற்றேவலாளர், (50) கொள் உறழ் நறு கல் - கருங்கொள்ளின் நிறத்தையொத்த சாத்தம்மியிலே, பல கூட்டு மறுக-(கத்தூரிமுதலிய) பல சேர்ந்த பசுங்கூட்டுக்களை யரைக்க,— (எ - று.)

குறுந்தொழுவர் அக்காலத்துக்குஏற்பத் தம் தலைவர் அணியும்படி பசுங்கூட்டுக்களை யரைப்பாராயின ரென்க. சாத்தம்மி = சாந்து அம்மி.

அடிகள் 51-56: மகளிரின் குளிர்காலத்துச் செயல் கூறும்.

வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்ப
கூந்தன் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரிநெருப் பமைத்து
இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப

(இ - ள்.) (51) வடவர் - வடநாட்டிலுள்ளவர், தந்த-கொண்டுவந்த, வான்கேழ்வட்டம் - வெள்ளிய நிறத்தையுடைய சிலாவட்டம், (52) தென்புலம் மருங்கில் - தென்திசையினிடத்து, சாந்தொடு - சந்தனத்தோடு, துறப்ப - பயன்படாமலிருக்க,— (53) கூந்தல் மகளிர் - குழற்கற்றையையுடைய மகளிர், கோதை புனையார் - (தம்மயிரிடத்து) மலர்மாலையை முடியாராய், (54) பல் இரு கூந்தல் - (தமது) பலவாகிய கரிய மயிரிடத்தே, சில் மலர் பெய்ம்மார் - சிலவாகிய மலர்களையிட்டு முடிக்க (வேண்டி), (55) தண் நறு தகரம் - குளிர்ந்த நறியவான மயிர்ச்சந்தனமாகிய, முளரி - விறகிலே, நெருப்பு அமைத்து-நெருப்பை யுண்டாக்கி, (அதிலே), (56) இரு காழ் அகிலொடு - கரிதாகிய வயிரத்தையுடைய அகிலோடே, வெள் அயிர் - வெண்ணிறமுள்ள கண்டசர்க்கரையை (யுங்கூட்டி), புகைப்ப—,— (எ - று.)

குளிர்ச்சியாயிருத்தலால், சிலாவட்டத்தோடு சாந்தும் துறக்க வேண்டுவதாயிற்று. "வடமலைப்பிறந்த வான்கேழ்வட்டத்துத், தென்மலைப்பிறந்த சந்தனம் மறுக" என்ற சிலப்பதிகாரத்தாலும், வடமலையினின்று கொணர்ந்த வெள்ளிய சிலாதலத்திலே பொதியமலையிற் பிறந்த சந்தனம் அரைக்கப்படுதல் வழக்கமாதலறிக.

மற்றும், குளிர்ச்சியாயிருத்தலால், கோதை புனைய விரும்பாமல் மகளிர் சில மலரை மங்களத்தின்பொருட்டுக் கூந்தலிற்பெய்து முடிக்கவேண்டிக் கூந்தலை யுலர்த்துதற்குத் தகர விறகிலே அகிலையும் அயிரையும் இட்டுப் புகைப்பாராயினரென்க. தகரம் என்பது-மயிர்ச்சாந்து எனப்படும் ஒருவகை வாசனை மரமென்பர். தலையீரத்தைப்புலர்த்த இங்ஙனம் புகையுண்டாக்கல் முற்காலத்து வழக்கம்.

அடிகள் 57-59: விசிறி வேண்டாது கிடத்தல் கூறும்.

கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க

(இ - ள்.) (57) கை வல் கம்மியன் - கையாற் புனைதல்வல்ல கம்மாளனால் [உருக்குத்துகின்றவனால்], கவின் பெற புனைந்த - அழகுபெற(ப் புதிதாக)ச் செய்த, (58) செங்கேழ் வட்டம் - சிவந்த நிறத்தையுடைய ஆலவட்டங்கள், சுருக்கி - உறையிடப்பட்டு,— கொடு தறி - வளைந்த முளைக்கோலிலே, (59) சிலம்பி வால் நூல் வலந்தன - சிலந்தியினது வெள்ளிய நூலாற் சூழப்பட்டனவாய், தூங்க - தொங்க,—(எ - று.)

செந்நிறலோஹத்தைக்கொண்டு கம்மியன் செய்த ஆலவட்டத்தால் விசிறிக்கொள்ளுதல், பண்டைக்கால வழக்கம் போலும்; குளிர்காலத்து விசிறிக்கொள்ளுதல் வேண்டாமையால், சிலம்பி நூல் சூழ முளைக்கோலிலே அவ்விசிறிகள் உறையிலிட்டு மாட்டப்பட்டுள்ளன வென்க.

அடிகள் 60-63: சாலேகத்தின் கதவு தாளிட்டுக் கிடத்தல் கூறும்.

வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய் கதவந் தாழொடு துறப்ப

(இ-ள்.) (60)வான் உற நிவந்த-வானத்தையளாவ ஓங்கிய,மேல் நிலை மருங்கின்-மேன்மாளிகையிலே, (61) வேனில் பள்ளி-இளவேனிற் காலத்துத்துயிலும்படுக்கைக்கு, தென் வளி தரூஉம் - தென்றற்காற்றைத்தருகின்ற, (62) நேர்வாய்க்கட்டளை - சாலேகத்திலே (நின்று), திரியாது-உலாவாமல், திண்நிலை(63) போர் வாய் கதவம்- சிக்கென்ற நிலையினையுடைய (இரண்டுகதவும்) தம்முட்பொருதல் வாய்த்த கதவு, தாழொடு துறப்ப-தாழிட்டுக்கிடக்க,—(எ - று.)

காற்றைவேண்டாமையால், சாலேகத்தின் கதவைத்தாளிட்டு வைத்திருக்கின்றனரென்க. தென்வளிதரூஉஞ்சாலேகத்தைத் தாழிட்டு மூடியமை மாத்திரம் கூறினமையால், மேனிலையில் வடபுறத்தில் சாளரம் வைத்தல், அக்காலத்து இல்லைபோலும். மேனிலை-மேலாம்நிலை.

அடிகள் 64-66: தண்ணீரில் நசையற்றுக் குளிர்காய்ந்தமை கூறும்.

கல்லென் துவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்
பகுவாய்த் தடவின் செந்நெருப் பார

(இ - ள்.) (64) கல்லென் துவலை தூவலின்-கல்லென்கிற ஓசையினையுடைய சிறு துவலையை (வாடைக்காற்று) எங்கும்

பரப்புகையினுல், யாவரும் - (இளையோரும் முதியோருமாகிய) எல்லாரும், (65) தொகுவாய் கன்னல் தண்ணீர் உண்ணுர் - குவிந்த வாயினையுடைய கரகத்திலுள்ள தண்ணீரைக் குடியாதவராய், (66)பகுவாய் தடவின்-பகுத்தாற்போன்ற வாயையுடைய கும்மட்டியிலேயிட்ட, செந்நெருப்பு-சிவந்த நெருப்பின் வெம்மையை, ஆர-நுகர,—(எ - று.)

குளிர்காலமாதலால் தண்ணீரில் விருப்பமற, யாவரும் குளிர் காயுமாறு இந்தளத்துச் செந்நெருப்பின்வெம்மையை விரும்பி நுகர்ந்தனரென்க. ''எரிசுடர் நெருப்பை நீரென்ன வேட்டனர், தரு குளிர் நீரினைத்தழலி னஞ்சினுர்'' என்றது சீகாளத்திப்புராணமும். கல்லென் - ஒலிக்குறிப்பு. 'தொகுவாய் பகுவாய்' என்றவிடத்தும் 'தண்ணீர் செந்நெருப்பு' என்றவிடத்தும் முரணழகு பெறப்படும்.

அடிகள் 67-70: ஆடன்மகளிரின் செயல் கூறும்.

ஆடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇக்
70 கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப

(இ-ள்.) (67) ஆடல் மகளிர் - ஆடற்றொழிலையுடைய மகளிர், பாடல் - (தாம்பாடுகின்ற) பாடலை, கொள - (யாழ்தன்னிடத்தே) கொள்ளும்படி, புணர்மார்-(நரம்பைக்) கூட்டுதற்கு, (68) தண்மையின் திரிந்த இன்குரல் தீ தொடை-குளிர்ச்சியாலே (தன்) நிலை குலைந்தஇனிய குரலையுடைய நரம்பை, (69) கொம்மை வருமுலை வெம்மையில் - பெரிய எழுகின்றமுலையின் வெப்பத்தே, தடைஇ - தடவி, (70) கருகோடு சிறு யாழ் - கரியதண்டினையுடைய சிறிய யாழை, பண்ணுமுறைநிறுப்ப-பண்நிற்கும் முறையிலே நிறுத்த,-

தொடை-தொடுத்தல்: தீந்தொடை - ஆகுபெயர். 'ஆடன்மகளிர்' என்றவிடத்து,ஆடற்றொழில் நுட்பங்களைச் சிலப்பதிகாரத்து அரங்கேற்றுகாதை ஆடலாசிரியன்அமைதி கூறுமிடத்து உரையா னுணர்க.

அடிகள் 71-72: கூதிர்க்காலமாய் நிலைபெற்றமை கூறும்.

காதலர்ப் பிரிந்தோர் புலம்ப

(இ-ள்.) (71) காதலர் பிரிந்தோர்-கணவரைப்பிரிந்தமகளிர், புலம்ப-வருந்த,—(எ-று.) இரண்டாம்வேற்றுமைத்தொகையாதலால் உயர்திணையில் விகாரமாயிற்று: ''இயல்பின் விகாரமும்'' என்பது சூத்திரம்.

பெயல் கலைந்து
கூதிர்நின் றன்றாற் போதே

(இ - ள்.) (71) பெயல் கலைந்து-காலமழை செறிந்து, (72) போது - அந்தப்போது, கூதிர்நின்றன்று - கூதிர்க்காலமாய் நிலை பெற்றது; (எ - று.)

(17) கவர, (20) கறப, (22) வணங்க, (26) முற்ற, (28) தூங்க, (35) திரிதர, (44) அயர, (48) இருப்ப, (50) மறுக, (52) துறப்ப, (56) புகைப்ப, (59) தூங்க, (63) துறப்ப, (66) ஆர, (70) நிறுப்ப, (71) புலம்ப, பெயல் கனைந்து (72) கூதிர் நின்றன்று என முடிக்க.

(3-8) குளிரலைப்பக் கோவலர் இனநிரை வேறு புலம்பரப்பிக் கலங்குதல், கோவலர் கவுள்புடையூநடுங்கக் கையை நெருப்பிற்காய்ச்சிக் கன்னத்தில் ஒற்றிக்கொள்ளுதல், (9—10) மாமேயல் மறத்தல், மந்தி கூர்தல், பறவை வாடைக்காற்றுமிகுதியால் மரத்தினின்றுவீழ்தல், (10-11) கன்றுகளைக் கறவைகள் ஊட்டவொட்டாது உதைத்தல், (13-14) முசுண்டை பீர்க்குடனே புதல்தோறும் மலர்தல், (15-18) கயலெதிரக் கொக்கு நாரையுடனே சேறுபரந்த ஈர வெண்மணலிலே அவற்றைக்கவர்தல், (19-20) வெண்மழை விசும்பில் துவலைதூவுதல், (21 - 22) கலித்தநெற்கதிர் வணங்குதல், (23-26) கமுகுகாய்முற்றுதல், (27-28) பொழில்களில் மரக்கிளைகளினின்று துளிவீழ்தல், (29-35) தழைவிரவினமாலை சூடிய முழுவலி மாக்கள் தேறல் மாந்தித்துவலைபேணாது இருகோட்டறுவையராய் வேண்டுமிடத்துத் திரிதல், (36 - 44) மகளிர்பிடகையிற்பெய்த அரும்புகள் அவிழ்ந்து மணங்கமழ்வதனால் பொழுதுதெரிந்து விளக்கேற்றி ஆவணம்முற்றிலும் மாலையயர்தல், (45-48) மாடப்புறுப்பேடையுடனே வெளிச்சென்று இரைதேராது மனைக்கொடுங்கைப்பலகையிற் செயலற்றுக் காலைக் கடுப்பினால் மாறமாற வைத்துக்கொண்டிருத்தல், (49-50) ஏவலாளர் தம்தலைவர் அணியுமாறு பசுங்கூட்டையமைத்தல், (51-52) சிலாவட்டம் சாந்தொடு பயனற்றனவாதல், (54 - 56) மகளிர் கோதைபுனையாது சின்மலர் புனையப் புகைத்தல், (57 - 59) ஆலவட்டம் சிலம்பி வானூல் தூங்க முளையில் தூங்குதல், (60-63) மேன்மாடங்களில் தென்றல் தரும் சாலேகத்தினிடத்து எவரும் உலாவாமல் தாழிட்டுக் கதவடைத்தல், (64 - 66) யாவரும் தண்ணீர் வேட்கையின்றிக் கும்மட்டியிலிட்ட நெருப்பின் வெம்மையை யார்தல், (67 - 70) தண்மையினால் திரிந்த யாழ்நரம்பைப் பாடல் கொள்ளும்படி மகளிர் முலைவெம்மையால்தடவிப் பண்ணுமுறையிலே நிறுத்தல், (71) காதலரைப் பிரிந்தோர் புலம்புதல் எனக் **கூதிர்க்காலத்து இயற்கை** இந்த எழுபத்திரண்டு அடிகளிற் கூறப்பட்டிருத்தல் காண்க.

(13) "புன்கொடி முசுண்டை" என்று தொடங்கி இதுவரையும் இடைப்பிறவரலாக கூதிர்ப்பருவம் இன்னவாறு இருப்பது என்பதைக்கூறி, இனி 42-அடிகளால் தலைவி தங்கியிருக்குங் கோயிலுள் இல்லத்தைக் கூறுவர்: அவற்றுள் (72) "மாதிரம்" என்று தொடங்கி (100) "சிலம்புங்கோயில்" என்பதுவரையில் **28-அடிகளால்** தலைவி தங்கியிருக்கும் இல்லமுள்ள கோயிலைக் கூறுவர்.

அவற்றுள், அடிகள் 72-75: கோயிலை [அரண்மனையை]க் கட்டுதற்கு ஆரம்பஞ் செய்தவேளை கூறும்.

மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
ஒருதிறஞ் சாரா வரைநா ளமயத்து

(இ - ள்.) (72) மாதிரம்-திசைகளிலே, (73) விரி கதிர் பரப்பிய-விரிந்த கிரணங்களைப் பரப்பின, வியல் வாய் மண்டிலம் - அகன்ற இடத்தையுடைய ஞாயிறு, (74) குடக்கு ஏர்பு-மேற்குத்திசைக்குச் செல்ல எழுந்து, இருகோல் - (இரண்டிடத்து நாட்டின) இரண்டு கோலிடத்தும், குறிநிலை - (சாயாத நிழலால் தாரைபோக ஓடுகின்ற நிலையைக்) குறித்துக் கொள்ளுந் தன்மை, வழுக்காது - தப்பாதபடி, (75) ஒருதிறம் சாரா- (தான்) ஒருபக்கத்துச் சேராத, அமயத்து அரை நாள்-காலமாகிய சித்திரைமாதத்தின் நடுவினிற் பத்தினின்றநாளில் பதினைந்தா நாழிகையிலே,—(எ - று.) மனை கட்டுவதற்கு ஆரம்பஞ்செய்து என வருவிக்க.

கோயிலை [அரண்மனையை]க் கட்டுவதற்கு நல்லநாளில் தொடங்கவேண்டுமாதலால், அதற்கு ஏற்பச் சித்திரை மாதத்து இடைப்பத்துநாளில் ஏற்றதான ஒருநாளில் பகலின் நடுப்போதில் அங்குரார்ப்பணஞ் செய்தனர். பகலின் பதினான்கு நாழிகைக்கு மேற்பட்ட இரண்டு நாழிகை - அபிசித்து முகூர்த்தமென்று கொண்டாடப்படுமாதலாலும், அந்த முகூர்த்தம் எல்லாக்குற்றங்களையும் போக்குமென்பது சோதிடநூலார் கொள்கையாதலாலும், அம்முகூர்த்தத்தில் அங்குரார்ப்பணஞ் செய்தனர்; இவ்வடிகளால் மனைகட்ட அங்குரார்ப்பணஞ் செய்த வேளை இன்னதென்று கூறினாராயிற்று.

அடிகள் 76-79: கோயிலுக்கு மதிளமைந்தமை கூறும்.

நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து
ஒருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பின்

(இ - ள்.) (76) நூல் அறி புலவர் - சிற்பநூலை யறிந்த புலவர், நுண்ணிதின் கயிறு இட்டு - கூரிதாக நூலை நேரே பிடித்து, (77) தேஎம் கொண்டு - திசைகளைக் குறித்துக்கொண்டு, தெய்வம் நோக்கி - (அவ்வத்திசைகளில் நிற்கும்) தெய்வங்களையும் குறைவறப்பார்த்து, (78) பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப - பெரும் புகழையுடைய அரசர்க்கு ஒப்ப, மனைவகுத்து - மனையை (வாயில் மண்டபம் முற்றம் கூடம் முதலியனவாகக்) கூறுபடுத்து, (79) ஒருங்கு உடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பின் - (இவ்விடங்களை யெல்லாம்) ஒரு சேரக் கவிய வளைத்து உயர்ந்த நிலையையுடைய மதிலின், (எ-று.)—(88) "வாயில்" என இயையும்.

கட்டவேண்டிய இடத்தையெல்லாம் அளந்து இன்ன இன்ன இடத்து இன்னகோள்க ளுள்ளன வென்பது முதலியவற்றைக் குறித்துக்கொண்டு எந்த இடத்து எந்தத்தெய்வம் நிற்பின் நன்மைவிளையுமோ அந்தந்தஇடத்து அந்தந்தத்தெய்வம் நிற்கும்படி நூலறிபுலவர் வகுத்தன ரென்க. நூல் - சிற்பநூல்: கிருஹநிர்மாண சாஸ்திரம்: இக்காலத்தும் மனையடிசாஸ்திரம் முதலியன வுணர்ந்தவர் அங்காரகன் இராகு முதலிய தீக்கோள்கள் நிற்குமிடத்து வாயினிலையமைத்தலைத்தவிர்த்துச் சந்திரன் முதலிய நற்கோள்களுள்ள விடத்து அமைத்தல் முதலியன செய்தல் காண்க.

இவ்வடிகள் - கோயிலுக்கு மதிளமைந்தமையைக் கூறின: மேல் ஒன்பது அடிகளால் மதிளமைந்த கோபுரவாயிலைக் கூறுவர்.

அடிகள் 80-88: கோபுரவாயிலியன்றமை கூறும்.

பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து
ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயில்

(இ-ள்.) (80) பரு இரும்பு பிணித்து - (ஆணிகளும் பட்டங்களுமாகிய) பரிய இரும்புகளாலே கட்டப்பட்டு, செவ் அரக்கு உரீஇ-சாதிலிங்கம்வழித்து, (84) தாழொடு குயின்ற (81) துணை மாண் கதவம் பொருத்தி - தாழொடு பொருந்தி இரண்டாய் மாட்சிமைப்பட்ட கதவைச் சேர்த்தி,—(82) நாளொடு பெயரிய விழு மரத்து கோள் அமை - உத்தரமென்னும் நாளின் பெயர் பெற்ற சிறப்புற்ற [உத்தரக்கற்கவியென்கின்ற]குறுக்குக்கட்டையிலே கொள்ளுதல் பொருந்திய, (81) இணை மாண்டு - இரண்டாக மாட்சிமைப்பட்டு, (83) போது அவிழ் குவளை - பேரரும்பாய் அவிழ்ந்த குவளைப்பூவோடே, புது பிடி - புதிதான பெண்யானைகளையும், கால் அமைத்து - தன்னிடத்தே பண்ணி, (85) கைவல் கம்மியன் முடுக்கலின் - கைத்தொழில்வல்ல தச்சன் கடாசுகையினாலே, (84) போர் அமை புணர்ப்பின் - (பலமரங்களும் தம்மிற்) கிட்டுதலமைந்த கூட்டத்துடனே, (85) புரை தீர்ந்து-வெளியற்று [சந்து தெரியாமலியன்று], (86) ஐயவி அப்பிய - வெண்சிறுகடுகு அப்பிவைத்த, நெய் அணி நெடுநிலை - நெய்யணிந்த நெடிய நிலையினையுடைய, (87) வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக - வெற்றியைக்கொண்டு எழுகின்ற கொடியுடனே யானைகள் சென்று புகும்படி, (88) குன்று குயின்று அன்ன-மலையை நடுவே வெளியாகத் திறந்தாற்போன்ற, ஓங்கு நிலை வாயில் - உயர்ந்த தன்மையினையுடைய கோபுரவாயில்களையும்,—(எ - று.)

கோபுரவாயில்கள் இயன்றமைமையைக் கூறத்தொடங்கிய ஆசிரியர், (80-81-அடிகளால்) இரட்டைக்கதவுகளும், (82-83 அடிகளால்) நெடுநிலையின் உத்தரமரத்துக் கஜலக்ஷ்மியும், (84-86-அடிகளால்) நெடுநிலையும் அமைந்த வகையைக் கூறி, (87-88-அடிகளால்) கோபுரவாயிலைக் கூறினரென்க. (84) 'தாழொடுகுயின்ற' என்பது (81) 'துணைமாண்கதவம்' என்பதனோடும், (81) 'இணைமாண்டு' என்பது அவிழ்குவளை, புதுப்பிடி என்பவற்றோடும் இயையும். வேண்டும்போது சாத்தித் திறக்கும்படி கோபுரவாயில்களிலே இரண்டு கதவுகளுள்ளமையையும், வாயிற்படியின் மேற்பக்கமான உத்தரக்கற்கவியிலே திருமகளின் உருவமும் அத்திருமகளின் இருமருங்கிலும் குவளைமலரைக் கையிற்கொண்ட பெண்யானைகளும் இருப்பது போல மரத்திற் செதுக்கி வைத்திருத்தலையும், பலமரங்கொண்டு புணர்த்துச் செய்யப்படினும் நெடுநிலை அங்ஙனம் இணைத்துச் செய்யப்பட்டமை தோன்றாதபடி அமைந்திருத்தலையும், வாயிலின் உயரம் வெற்றிக்கொடியுடனே யானைகள் தடையின்றிச் செல்லுமாறு உள்ளமையையும், நெடுநிலை தம்மிடத்துள்ள தெய்வத்தின் பொருட்டு ஐயவியும் நெய்யும் அணிந்திருத்தலையுங் கூறினரென்க. வாயிற்படியின் முகப்பில் கஜலக்ஷ்மியமைத்தல், இக்காலத்தும் வழக்கத்திலிருத்தலைக் காணலாம். "வருநுதலெழில் வேழம் பூநீர்மேற் சொரிதரப், புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித் திருநயந்திருந்தன்ன" என்ற கலித்தொகையும் (செ. 44:5-7) சீவகசிந்தாமணியில், (செ. 2595) 'இரண்டானை பக்கத்தே நின்று நீரைச்சொரிய நடுவே தாமரைப்பூவிலேயிருந்த திருமகள்' என்ற நச்சினார்க்கினியருரையும் இக்கருத்தை வலியுறுத்துவனவாம். இனி, ஒரு சிலர், 'புதுப்பிடி' என்றதற்கு - புதியகைப்பிடிகள் எனப்பொருள் கண்டனர். நெடுநிலையிடத்துத் தெய்வம் உறையுமென்பதும், அதற்கு ஐயவி யப்பி நெய்யணிதல் மரபு என்பதும்,"தொல்வலி நிலை இயஅணங்குடை நெடுநிலை நெய்படக் கரிந்த திண்போர்க்கதவின்" என்ற மதுரைக்காஞ்சியடிகளானும் "நெய்யோ டிமைக்கு மையவித் திரள்காழ், விளங்கு நகர்விளங்க" என்ற நற்றிணைச்செய்யுளடிகளானும் (370) விளங்கும். ஓங்குநிலை-கோபுரம்: வினைத்தொகையன்மொழி.

அடிகள் 89-100: கோயிலின் திருநிலைபெற்ற சிறப்பு, முற்றம், முன்கடை, ஒலிச்செறிவு இவை கூறும்.

திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்

(இ-ள்.)(89) திரு-திருமகள், நிலைபெற்ற-, தீதுதீர்-குற்றமற்ற, சிறப்பின் - தலைமையினையும், (எ - று.)

தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து

(இ-ள்.)(90) தரு மணல் ஞெமிரிய-கொண்டுவந்திட்ட மணல் பரந்த, திருநகர் முற்றத்து-அழகிய மனையின் முன்னிடத்தையும்,

நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடை

(இ - ள்.) (91) நெடு மயிர் எகினம் - நெடிய மயிரையுடைய கவரிமானின், தூநிறம் ஏற்றை - தூயநிறத்தையுடைய ஆண், (92) குறுங்கால் அன்னமோடு-குறிய காலினையுடைய அன்னத் தோடே, உகளும் - தாவித்திரிகின்ற, முன்கடை (வாயிலின்) முன்னிடத்தையும்,—(எ - று.)

அன்னப்பறவையும் ஓங்கி வானத்துப் பறவாது தாவிச்செல் லுதலால், கவரிமாவின் தொழிலோடு சேர்த்து 'எகின வேற்றை அன்னமோடு உகளும்' என்றார். ஏற்றை - ஆண்; "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கெல்லாம், ஏற்றைக்கிளவி உரித்தென மொழிப". முன்கடை-கடைமுன்: மரூஉ-முடிபு; இலக்கணப்போலி யின்பாற்படும். (79) வரைப்பின் (88) வாயில்களையும் (90) முற்றத் தினையும் (92) முன்கடையினையும் (89) சிறப்பினையுமுடைய (100) கோயில் என்க.

பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலுழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
ஒலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்

(இ-ள்.) (93) பணை நிலை முனைஇய-பந்தியிலே நிற்றலை வெறுத்த,பல் உளை-பலவாகிய பிடரிமயிரினையுடைய, புரவி-குதிரைகள், (94) புல் உணா தெவிட்டும் - புல்லாகிய (தம்முடைய) உணவைக் குதட்டுவதனாலான,புலம்பு விடுகுரலொடு-தனிமையைத் தோற்று விக்கின்ற குரலோடே,—(95) நிலவு பயன்கொள்ளும் நெடு வெள் முற்றத்து-நிலாவின் பயனை(அரசன்) நுகர்கின்ற நெடிய வெள்ளிய நிலாமுற்றத்திலுள்ள, (96) கிம்புரி பகுவாய் அம்பணம் நிறைய-மகரவாயாகப் பகுத்த வாயையுடைய பந்தல் நிறைகையினாலே, (97) கலுழ்ந்து வீழ் - கலங்கி விழுகின்ற, அருவி பாடு - அருவியி னோசையும்,—அயல - (அந்த அம்பணத்திற்கு) அயலிலேயுள்ள, (98) ஒலிநெடும்பீலி ஒல்க - தழைத்த நெடிய பீலி ஒதுங்க, மெல் இயல் (99) கலி மயில் அகவும் - மெல்லிய இயல்பினையுடைய செருக்கின மயில் ஆரவாரிக்கின்ற, வயிர் மருள் இன் இசை - கொம்பு என்னும் ஊதுகருவியின் இசையோ என்று மயங்குவதற்குக் காரணமான இனிய இசையும், (97) விறந்து - செறிந்து, (100) நளி மலை சிலம்பின்-செறிந்த மலையின் ஆரவாரம்போல, சிலம்பும்-ஒலிக் கப்பெற்ற, கோயில் - கோயிலினுடைய,—(எ-று.) (114) 'நல்லில்' எனத் தொடரும்.

(93) புரவி (94) புலம்பு விடுகுரலோடே (97) அருவிப்பாடு (99) மயில் இசை (97) விறந்து, (100) மலைச்சிலம்பிற் சிலம்புங்

கோயில் என்க. புரவியின் புலம்பு விடுகுரல் - மழை மெத்தென முழங்கினாற்போலுதலாலும், அருவியும் மயிலும் மலையினிடத் திருத்தலாலும் இவ்வாறு உவமை கூறியது. மயில் இசை வயி ரென்னும் ஊதுகொம்பின் இசையை யொத்திருத்தலால், 'மயிலகவும் வயிர் மருளின்னிசை' என்றார். மயில் கூவும்போது சிறகாகிய பீலி குவிந்துவிடுதல் இயல்பு. இனி, புலம்புவிடு குர லோடே அம்பணம் நிறையக் கலுழ்ந்து வீழ் அருவியின் பாடும் மயிலின் இசையும் செறிந்து, சிலம்பின் - மலையிலே, சிலம்பும் - எதிரொலியெழுகின்ற, கோயில் என்று கூறுதலும் ஒன்று. அம்பணம் - லோஹத்தாற் குழாய்வடிவு ஆகச் செய்தது: இது - பந்தல் எனவும் படும். குழாய் நிரம்பி நீரருவி வெளிவிழும்போது ஒலிக்குமென்க.

கோயிலைக் கூறிய ஆசிரியர் இனிமேல் **பதினான்கு அடிகளால்** *தலைவியிருக்கும் கருவொடு பெயரிய இல்லத்தைக் கூறுவார்: அவற்றுள்*

அடிகள் 101—107: அருங்கடி வரைப்பினைக்கூற,
அடிகள் 108—114: கருப்பக்கிருகத்தினைப் பற்றிக் கூறும்.

யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையகல் நிறைய நெய்சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குருஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்லது
ஆடவர் குறுகா வருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல் வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லில்

(இ-ள்.) (101) யவனர் இயற்றிய - சோனகர் செய்த, வினை மாண் - தொழில் மாட்சிமைப்பட்ட, பாவை - பிரதிமைகள், (102) கை ஏந்து - (தம்) கையிலேந்திய, ஐ அகல் - வியக்கத்தக்க தகளி, நிறைய - நிறையும்படி, நெய் சொரிந்து - நெய் வார்க்கப்பட்டு, (103) பருஉ திரி கொளீஇய - பருத்த திரிகளைக் கொளுத்தி வைத்த, குருஉ தலை நிமிர் எரி - நிறத்தை யுடைத்தாகிய தலையினையுடைய மேனோக்கியெரிகின்றவிளக்குக்களை, (104) அறு அறு காலை தோறு - (நெய்) வற்றின காலந்தோறும் (ஒளி) மழுங் கின காலந்தோறும், அமைவர பண்ணி - (நெய்) பொருந்தச் செய்து தூண்டி, (105) பல் வேறு பள்ளிதொறும் பாய் இருள் நீங்க - பலவாய் வேறுபட்ட இடங்கள்தோறும் பரந்த இருள் நீங்கும்படி, (106) பீடு கெழு - பெருமை பொருந்திய, சிறப்பின் -

தலைமையினையும்,—பெருந்தகை அல்லது - பாண்டியனைத் தவிர, (107) ஆடவர் குறுகா - (சிறு குறுந்தொழில் செய்யும்) ஆண் மக்களும் அணுக முடியாத, அருங் கடி-அரியகாவலினையுமுடைய, வரைப்பின் - கட்டுக்களையுடைய,—(108) வரை கண்டு அன்ன தோன்றல - மலைகளைக் கண்டாற் போன்ற உயர்ச்சியினையுடைய னவாய், வரை சேர்பு (109) வில் கிடந்து அன்ன கொடிய - மலைக ளைச் சேர்ந்து இந்திரதனுசு கிடந்தாற் போன்ற (பல நிறமாய்த் தொங்கிக் கிடக்கும்) கொடிகளையுடையனவான, பல்வயின் - பல இடங்கள் தோறும், (111) மணி கண்டு அன்ன மா திரள் திண் காழ் - நீலமணியைக் கண்டாற்போன்ற கருமையினையும் திரட்சி யினையுமுடைய திண்ணிய தூண்களையுடைய, (112) செம்பு இயன்று அன்ன - செம்பினாலே பண்ணினாலொத்த, செய்வுறு - (வேலைப்பாடுகள்) செய்யப்பெற்ற, நெடுஞ் சுவர்-நெடிய சுவரிலே, (110) வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ - வெள்ளியை யொத்த விளங்குகின்ற சுண்ணும்பு வாரி,—(113) உருவம் பல் பூ ஒரு கொடி வளை இ - வடிவழகினையுடையதாகிப் பல மலர்களைக் கொண்ட ஒப்பற்ற பூங்கொடி யெழுதப்பெற்று, (114) கருவொடு பெயரிய-கருப்பமென்ற சொல்லோடுபெயர்பெற்ற, காண்பு இன்-காட்சிக்கு இனிய, நல் இல் - நல்ல இல்லிலே,—(எ - று.)

101-107: அரண்மனை நல்லில்லின் கட்டுக்கள் - ஏற்றிய பாவை விளக்கால் இருள் நீங்கும்பெருமையுடன் கெழுவுவதோடு, ஆடவர் குறுகாக் காவலையுமுடையனவென்க. பரூஉத்திரி கொளீஇய என்பதற்கு-பருத்த திரியாகிய பந்தங்களாற் கொளுத் தப்பட்ட, விளக்கின் எரி என்றலும் உண்டு. ஈண்டு, "வேண்டிடந் தோறும் தூண்டுதிரிக் கொளீஇ, கைவயிற் கொண்ட நெய்யகற் சொரியும், யவனப்பாவை அணிவிளக் கழல" என்ற பெருங்கதை யடிகள் நோக்குக. ஐஅகல் - ஐவியப்பாகும் என்பது தொல்காப் பியம்.

108—114: இவ்வடிகள் - அரண்மனையின் கருப்பகிருகம் அமைந்த தன்மையைக் கூறுவன. கருப்பகிருகம் - கோயிலின் நடுவிடம்: கரு - கர்ப்பம். வரைகண்டு அன்ன உயர்ச்சியையுடை யனவாய் வரைசேர்ந்து இந்திரவில் கிடந்தாற்போன்ற பல கொடிகளை [துவசங்களை] யுடையனவான பல இடங்களிலும் தூண்களைக்கொண்டு, வெண்ணிறச்சுண்ணும்பை வாரி ஒப்பற்ற உருவப்பூங்கொடி எழுதப்பெற்ற (செம்பினாலியன்றதன்ன) சுவ ரைக்கொண்டது அந்தக் கருப்பகிருகமென்க. (110) உரீஇ (113) வளைஇ, (114) பெயரிய இல்என்க. இல்லின் சுவர்களினிடையே தூண்களமைத்தலும் உண்டு என்க. பல் நிறக்கொடிகளைக் கட்டு தலும், பலவிடங்களிலும் சுவரிற் பூங்கொடியெழுதுதலும் அக்கா லத்தியற்கையென்பது, இங்கு விளங்கும். 'செம்பியன்றன்ன செஞ்சுவர்புனைந்து' என்ற மதுரைக்காஞ்சியடி (485) 112-ஆம் அடியோடு ஒப்பு நோக்கத்தக்கது. (107) வரைப்பினையுடைய (114) நல்இல் என்க.

கருப்பகிருகத்தைக்கூறிய ஆசிரியர் இனிப் **பதினைந்து அடிகளால் அங்குக் கட்டிலியன்றுள்ள தன்மையைக்**கூறுவர்: *அவற்றுள்:*

அடிகள் 115—123: அந்தக் கருப்பகிருகத்தில் தலைவியிருக்குங்கட்டிலைக் கூறும்.

தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்
இகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதல்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்டு
உள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்

(இ-ள்.) (115) நான்கு தசம் எய்திய-நாற்பது வருடஞ்சென்ற, பணை மருள்நோன் தாள்-முரசென்று மயங்குமாறுள்ள வலிய கால்களையும், (116) ஏந்து எழில்-உயர்ந்த அழகினையும், வரி நுதல்-புள்ளிநிறைந்த நெற்றியையுமுடையதாகி, இகல் மீக்கூறும்-போர் செய்வதில் மேலாகச்சொல்லப்பட்ட, (117) பொருது ஒழி-போர் செய்து உயிரொழிந்த, நாகம்-யானையினுடைய, ஒழி-(தானே) வீழ்ந்த, எயிறு-தந்தத்தை, (118) சீர்உம் செம்மைஉம் ஒப்ப-கனமும் நேர்மையும் ஒத்திருக்க, (117) அருகு எறிந்து - இரண்டு புறத்தையுஞ் செதுக்கி, (118) வல்லோன் (119) கூர் உளி குயின்ற-தச்சன் கூரிய சிற்றுளியாலே பண்ணின, ஈர் இலை-பெரிய இலைத்தொழிலை, இடை இடுபு-நடுவேயிட்டுப் பொறித்து,—(120) தூங்கு இயல் மகளிர்-(கருப்பம் முதிர்தலால்) அசைந்த இயல்பினையுடைய மகளிரின், வீங்கு முலை-(பால் கட்டுதலாற்) பருத்த தனங்களை, கடுப்ப-ஒப்ப, (121) புடை திரண்டு இருந்த - பக்கம் உருண்டிருந்த,குடத்த-குடத்தையுடையனவாகி, இடை திரண்டு-(குடத்திற்கும் கச்சுக்கொண்டு கட்டிய கட்டிற்கும்) நடுவாகிய இடம் (ஒழுக மெல்லிதாய்த்) திரண்டு, (122) உள்ளி முதல்-உள்ளிப்பூடுபோலும், நோன்-வலியினையுடையனவான, அடி-கால்களை, அமைத்து பொருத்தி-(தன்னிடத்தே) தைத்துப்பொருத்தி,(123) பேர் அளவு எய்திய-பேரளவையடைந்த, பெரும் பெயர்-(தந்தக் கட்டிலென்று) பெரும் பெயர் படைத்த, பாண்டில் - வட்டக் கட்டிலில்,—(எ - று.)

முதிர்ந்த யானைத் தந்தமென்றற்கு 'தசநான்கெய்திய நாகம்' என்றார். (117) நாகத்து எயிறு எறிந்து (118) சீருஞ் செம்மையும் ஒப்ப, வல்லோன் (119) குயின்ற (123) பாண்டில் என்க. தலைவி வதியும் கட்டில் இலைத்தொழிலையிடையிட்டுக் குடத்தையுடையனவாய் உள்ளிப்பல்போலும் வலியகால் அமைந்து பேரளவெய்திப் பெரும்பெயர் பெற்றுள்ளதென்க. இதனாற் கட்டிலியன்றமை

கூறியதாயிற்று. (110-முதல் 130-வரையிலுள்ள அடிகட்கு மிகவும் மாற்றிப்பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.)

பாண்டிலைக் கூறியவர் அந்தப் பாண்டிலிற் செய்திருக்கும் சில அலங்காரங்களை, (124) 'மடைமாண்' என்று தொடங்கி, (129) 'வேட்டம் பொறித்து' என்பது வரையிலும் கூறுவர்.

அடிகள் 124—129: கட்டிலின் அலங்காரங்கள் கூறும்.

மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந்து
ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து

(இ - ள்.) (124) நுண் இழை பொலிய-மெல்லிய நூல் அழகு பெறும்படி, தொடை மாண்டு-கோத்தல் மாட்சிமைப்பட்டு, மடை மாண்-மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட, (125) முத்து உடை-முத்தைக் கொண்ட, சாலேகம்-சாளரம்போல இருப்பவற்றை, குத்துறுத்து நாற்றி-(அந்தக்கட்டிலைச்சுற்றி நாற்புறமும்) நேராயிருக்கத் தொங்க விட்டு,—(126) புலி பொறி கொண்ட-புலியின் வரியை(த் தன்னிடத்தே) கொண்ட, பூ கேழ்-பொலிவுபெற்ற நிறத்தையுடைய, தட்டத்து-கச்சினாலே, (127) தகடு கண் புதைய கொளீஇ-(அக் கட்டிலின்) சட்டங்கள் மறையும்படி கோக்கப்பெற்று, துகள் தீர்ந்து-குற்றமற்று, (128) பல் ஊட்டுஉறு-பலநிறம் பிடித்த, மயிர்-மயிர்களை, விரைஇ - உள்ளே வைத்து, (அங்ஙன் வைத்ததன் மேலே), வய மான் (129) வேட்டம் பொறித்து-சிங்கம் முதலியவற்றை வேட்டையாடுகின்ற தொழில்களைப்பொறித்த தகடுகளை வைத்து,—(எ - று.)

மூட்டுவாய் இனிதுபொருந்த நூலிழையிற் கோத்த முத்துத் தொடையல்கள் அந்தத் தந்தக்கட்டிலின்நாற்புறமும்சாளரம்போல இடைவெளிதோன்ற நேர்மையாகத் தொங்கவிட்டிருத்தலை, 124, 125-அடிகள் கூறுமென்க. புலிவரிபோலப் பொலிவுபெற்ற நிறத்தைக்கொண்ட கச்சாலே அப் பாண்டில் கட்டப்பட்டிருத்தலை, (126)'புலிப்பொறி' என்று தொடங்கி, (127)'கண்புதையக்கொளீஇ' என்பது வரையிலுள்ள பகுதிகூறும்: அதற்குமேல் (129) 'பொறித்து' என்பது வரையிலுள்ள பகுதி-அந்தக் கட்டிலில் உரிய இடத்துச் சிங்கம் முதலியவற்றை வேட்டையாடுந்தொழில் பொறித்த தகடுகள் வைக்கப்பட்டிருத்தலைக் கூறும்: ஆகவே, அந்தத் தந்தக்கட்டில் கச்சுப்பட்டையாற் கட்டப்பட்டு வயமான் வேட்டம்பொறித்த தகடுகள் அமைந்து சாளரமாக நாற்புறமும் முத்துச்சரங்கள் நேராகத் தொங்கவிடப்பெற்றிருந்த தென்க. வேட்டம் பொறித்த தகட்டினுள்ளே மயிர் விரவியது-புலி முதலியவற்றின் வரி தோன்றுதற்கு என்பர். இந்த அடிகளிலுள்ள வினையெச்சங்கள் அடுக்கி (135) விரித்து என்று தொடருமென்னலாம்.

இங்ஙனம் பாண்டிலில் அமைந்தன கூறிய ஆசிரியர், இனி, அந்தப்பாண்டிலின்மீது அமைந்த சேக்கையைப்பற்றி, (129) 'வியன்கட்கானத்து' என்று தொடங்கி, (135) 'தோடமை சேக்கை' என்பது வரையிலும் கூறுவர்.

அடிகள் 129-135: கட்டிலின் சேக்கை கூறும்.

வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுண ரன்னத் தூநிறத் தூவி
இணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை

(இ - ள்.) (129) வியல் கண் - அகற்சியை யிடத்தேயுடைய, கானத்து - காட்டிடத்துத்தோன்றுகின்ற, (130) முல்லை போது - முல்லைப்பூவுடனே, உறழ - மாறும்படி, பல் பூ நிரைத்து - ஏனைய பல பூக்களையும் நிரைத்து, (131) மெல்லிதின் விரிந்த சேக்கை - மெல்லிதாக விரிந்த படுக்கைக்கு, மேம்பட - மேலாக, (132) துணை புணர் அன்னம் தூ நிறம் தூவி (133) இணை அணை - (தம்) பேட்டைப்புணர்ந்த ஆணன்னத்தின் தூயநிறத்தையுடைய தூவியுடனே யிணைந்த படுக்கைகளையும், மேம்பட - (அதனினும்) மேலாக, பாய் அணை - பரவிய அணையையும், இட்டு—,—(134) காடி கொண்ட கழுவுறு கலிங்கத்து - கஞ்சியைத் (தம்மிடத்திலே) கொண்ட கழுவுதல் பொருந்திய துகிலினாலியன்ற, (135) தூ மடி விரித்த - தூய்மையான மடித்ததுவிரித்த, தோடு அமை—செங்கழுநீர் முதலியவற்றின் இதழ்கள் பொருந்திய, சேக்கை - படுக்கையிலே,—(எ - று.)

முல்லை மலர்களுடனே பல மலர்களையும் நிரைத்து விரிந்த சேக்கையின்மீது சிறுபூளைமுதலியவற்றாலான பஞ்சசயனங்களை யிட்டு, அவற்றிற்கு மேலே அணையிட்டுக் கலிங்கத்தூமடிவிரித்துத் தோடமைந்திருந்தது தலைவி வதியுஞ் சேக்கை யென்க. "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம், முறுதூவிசேக்கை யோரைந்து" என்றவாறு சிறுபூளை முதலியவற்றாலியன்ற நான்கு படுக்கையோடு அமைந்தது அன்னத்தூவியினாலியன்ற சேக்கை யென்பது தோன்ற **'இணையணை'** *என்றார். கலித்தொகையில்* **'இணைபட நிவந்த நீல மென்சேக்கையுட்...துணைபுண ரன்னத்தின் தூவிமெல் அணை அசைஇ'** *(செய். 72) என்றவிடத்து நச்சினார்க்கினியர்* **ஐந்துவகைப்படப்படுத்தலால்** *உயர்ந்த நிலைப்பட்டாற்செய்த மெல்லிய படுக்கையிடத்து ..என்று உரை வகுத்தது ஈண்டு நினைத்தற்குரியது. என்பு உருகி மிக்க அன்போடு புணர்தலால், அன்னத்தின் தூவிக்கு மென்மைசிறக்கு மென்பது தொனிக்க, 'துணைபுணரன்னத் தூநிறத் தூவி' என்றது. தூவி - சூட்டு.*

இங்ஙனம் கட்டிலிற் சேக்கை யியன்றமையைக் கூறிய ஆசிரியர், இனி முப்பத்தோரடிகளால் ஆங்குத் தலைவி தங்கியிருக்கும் நிலையைக் கூறுவர். அவற்றுள்:

அடிகள் 136—147: துணை துறந்துறையுந் தலைவியின் தன்மைகூறும்.

ஆரந் தாங்கிய வலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து

(இ - ள்.) (137) துணை துறந்து-கணவனைப் பிரிகையினாலே, (136) ஆரம் தாங்கிய - (கணவனைப்பிரிதற்கு முன்பு) முத்துச் சரத்தைத் தாங்கிய, அலர் முலைஆகத்து-பரந்த முலையையுடைய மார்பிலே, (137) பின்-பின்பு, அமை-அமைந்த, நெடு வீழ்-நீண்ட தாலிநாணொன்றுமே, தாழ- தொங்க,—(எ - று.)—(156) மிகக் கலுழ்ந்து, (166) வதியும் அரிவைக்கு என்க.

கணவனைப் பிரிகையினாலே, தலைவி, மங்கலத்தின் பொருட்டுத் தாலியொன்றைமாத்திரம் பூண்டு மற்றையணிகளைத் துறந்திருக்கின்றாளென்க. வீழ்ந்துகிடத்தலின், தாலியை, 'வீழ்' என்றார். பின்னமை-குத்துதலமைந்த எனினுமாம்; இனி, பின்னமை நெடுவீழ்தாழ என்பதற்கு - பின்னுதலமைந்த மயிர் தொங்க என்பாருமுளர்: அப்பொருளில், பிரிவுக்காலத்து ஒற்றைப்பின்னலாகக் கூந்தலைப் பின்னி அதனை மார்பிடத்திலே தொங்கவிட்டிருக்கின்றனள் தலைவியென்க.

நன்னுத லுலறிய சின்மெல் லோதி

(இ - ள்.) (183) நல் நுதல்-அழகிய நெற்றியினிடத்தே, உலறிய-(எண்ணெய் முதலியன இட்டு வாரியலங்கரித்தல் செய்யாமல்) உலறிக்கிடந்த, சில் மெல் ஓதி-சிலவாகிய மெல்லிய மயிரினையும்,—(எ - று.)

நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின்

(இ - ள்) (139) நெடு நீர் வார் குழை - மிகுதியாக ஒளியொழுகின மகரக் குழையை, களைந்தென - வாங்கி விடவே, (துளை தூராமலிருக்கும் பொருட்டு), குறுங் கண் - சிறியனவான துவாரத்திலே, (140) வாயுறை - வாயுறையை, அழுத்திய - அழுத்தமாகச் சேர்க்கப்பட்ட, வறிது வீழ் - வெறிதாய்த் தொங்குகின்ற, காதின் - காதினையும்,—(எ - று.)

கூடிய நிலையில் அணியும் அணிகலங்களை யெல்லாம் கணவனைப் பிரிந்த கற்புடைமகளிர் களைந்திருத்தல் இயல்பாதற்கு ஏற்ப, இந்தத் தலைவியும் காதின்குழைகளைக் களைந்திட்டு, அந்தக் காதின் துளை தூராமலிருக்கும் பொருட்டு வாயுறை யிட்டிருக்க, அந்தக்காது அணிகலன் பூணாமையால் வெறிச்சென்று உள்ளதென்க. இனி, 'வறிது வீழ்' - சிறிதே தாழ்ந்த எனினு

மாம்: "வறிது சிறிதாகும்". வாயுறை - காது தூராமலிருக்கும் பொருட்டுச் செவித்தொளையிலே இடப்பட்டுப் பொருந்தியது: தென்னையோலை பனையோலை சடை போல்வது. வாயுறை-தாளுருவி யென்பர், நச்சினார்க்கினியர். (தாளுருவி - சிறுகுழை.) இனி, "வாயுறவென்று பாடமாயின், கடுக்கனை வாயுறும்படி யழுத்தினகாதென்க" என்பர் நச்சினார்க்கினியர்.

பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து

(இ - ள்.) (141) பொலம் தொடி தின்ற - (முன்னர் அணிந்திருந்த) பொன்னாலியன்ற தொடியினாலே தழும்பிருந்த, மயிர் வார் முன் கை-மயிர் ஒழுங்குபட்டுக் கிடந்த முன்னங் கையிலே, (142) வலம்புரி வளையொடு - வலம்புரிச்சங்கை யறுத்துப் பண்ணின வளையுடனே, கடிகை நூல் யாத்து - காப்பு நாணைக் கட்டி,— (எ - று.)—(156) கலுழ்ந்து (166) புலம்பொடு வதியும் அரிவைக்கு என்க.

கணவனைப் பிரிந்திருத்தலால், தலைவி பொன்தொடியை யணிதலைவிட்டு, மங்களத்தின்பொருட்டுச் சங்குவளையலையும் காப்புநாணையும் பூண்டுள்ளாளென்க.

வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து

(இ - ள்.) (143) வாளை - வாளைமீனின், பகுவாய் கடுப்ப - திறந்தவாயை யொத்திருக்கும்படி, வணக்குறுத்து-முடக்கத்தை யுண்டாக்கி, (144) செம் விரல் கொளீஇய - சிவந்த விரலிடத்தே யிட்ட, செங்கேழ் விளக்கத்து - செம்மை விளங்கும் முடக்கென்னும் மோதிரத்தையும்,—(எ - று.)—"வாளைப்பகுவாய்வணக்குறு மோதிரம்" என்றது காண்க (சிலப், 6: 95). விளக்கம் - மோதிரம் என்னும் பொருளில்வருதலை "பொலஞ்செய்ப் பொலிந்த நலம்பெறு விளக்கம்" என்ற மதுரைக்காஞ்சியடியினும் (719) காண்க.

145 பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்குல்
அம்மா சூர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு

(இ-ள்.) (முன்பு), (145) பூ துகில் மரீஇய-பூத்தொழிலையுடைய துகில் கிடந்த, ஏந்து கோடு-உயர்ந்த வளைவினையுடைய, அல்குல்- இடையிலே, (146) அ மாசு ஊர்ந்த - அப்படிப்பட்ட [மிக்க] மாசு படிந்த,அவிர் நூல் கலிங்கமொடு - விளங்குகின்ற நூலாற் செய்த புடைவையுடனே,—(எ - று.)

துகில்-சிறந்த வஸ்திரம்: வெண்பட்டு என்னும் பொருளுள்ள துகூல மென்ற வடசொல்லின் திரிபு என்னலாம்.'அ மாசு ஊர்ந்த' என்பதற்கு - அழகிய மாசேறிய என்றார் நச்சினார்க்கினியர். மாசுக்கு அழகாவது, தலைவியின் கற்புத்தெரித்தலின் என்க.

புனையா வோவியங் கடுப்ப

(இ-ள்.) (147) புனையா-(வண்ணங்களைக் கொண்டு) எழுதாத, ஓவியம் கடுப்ப-வடிவைக்கோட்டின சித்திரத்தை யொத்திருப்ப,-(எ - று.) —(147)கடுப்ப (156) கலுழ்ந்து என்க.

மாசுபடிந்த நிலையில் தலைவி புனையாவோவியத்தை யொத் திருந்தன ளென்க. ஆபரணங்களையணியாத தலைவிக்கு, அணி கலனையிட்டு அணியாத ஓவியத்தை யுவமையாகக் கூறிய தெனக் கொள்ளினுமாம்.

அடிகள் 147—151: சேடியரின் செயல் கூறும்.

புனைவில்
தளிரேர் மேனித் தாய சுணங்கின்
அம்பணைத் தடைஇய மென்றோண் முகிழ்முலை
வம்புவிசித்து யாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியன் மகளிர் நல்லடி வருட

(இ-ள்.) (147) புனைவு இல்-(செம்பஞ்சூட்டிப்) புனைதலில்லாத,—(148) தளிர் ஏர் மேனி - மாந்தளிரையொத்த நிறத்தையும், தாய சுணங்கின் - பரந்த தேமலையும், (149) அம் பணை தடைஇய மெல்தோள் - அழகிய மூங்கில்போலத் திரண்ட மெல்லிய தோளினையும், (150) வம்பு விசித்து யாத்த-கச்சினால் வலித்துக்கட்டின, (149) முகிழ் முலை - தாமரைமொட்டுப்போலும் முலைகளையும், (150) வாங்கு சாய் நுசுப்பின் - வளைந்து அசையுந்தன்மையுள்ள இடையினையும், (151) மெல் இயல் - மெத்தென்ற தன்மையையு முடைய, மகளிர் - (சேடியராகிய) மகளிர், நல் அடி வருட-அழகிய பாதங்களை (த் துயிலுண்டாகுமோ? என்று) தடவ,—(எ - று.) 'புனைவில்' என்பது (151) நல்லடி என்பதனோடு இயையும்.—அடிதடவ (156) கலுழ்ந்து என்க. மேனிமுதலியவற்றை யுடைய சேடியரான மகளிர் தலைவியின் பாதங்களை வருடுகின்றன ரென்க.

அடிகள் 152—156: செவிலியர் தேற்றரவு கூறவும், அவள் கலுழ்தல் கூறும்.

நரைவிராவுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவ ரின்றுணை யோரென
உகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து

(இ-ள்.) (152) நரை விராவுற்ற-நரைத்தமயிர் கலந்துள்ள, நறு மெல் கூந்தல் - நறிய மெல்லிய கூந்தலையுடைய, (153) செம் முகம் செவிலியர் - செம் முகத்தையுடைய செவிலித்தாயர், கை மிக - (பிரிவுத்துயரத்தால்) (ஆற்றுமையாகிய) ஒழுக்கம் (இவளுக்கு) மிகுதலாலே, குழீஇ - திரண்டு, (154) குறியவும் நெடியவும்

உரை பல - (பொருளில்லாத) பொய்ம்மொழியும் மெய்ம்மொழியு மாகிய உரைகள் பலவற்றையும், பயிற்றி - பலகாற் சொல்லி, (155) 'இன் துணையோர் இன்னே வருகுவர் - (நினக்கு) இனிய துணைவர் இப்பொழுதே வருவர்', என - என்று, (156) உகத்தவை மொழியவும் - மனத்துக்கு இனிய வார்த்தைகளைக் கூறவும், ஒல்லாள் - (அதற்குப்) பொருந்தாளாய், மிக கலுழ்ந்து - மிகக்கலங்கி,—

(163) உயிரா (166) வதியும் அரிவைக்கு என்க. செவிலியர் தலைவி உகந்தவை கூறவும், அத்தலைவி அவற்றால் ஆறுதலடையாது மிகக்கலுழ்ந்தனளென்க.

அடிகள் 157—166: தலைவியின் ஆற்றாமை வதியும் நிலை கூறும்.

> நுண்சேறு வழித்த நோன்நிலைத் திரள்கால்
> ஊறு வறுமுலை கொளீஇய கால்திருத்திப்
> புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
> திண்ணிலை மருப்பி னாடு தலையாக
> விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
> முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
> உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா

(இ - ள்,) (157) நுண் சேறு வழித்த - சாதிலிங்கம் பூசின, நோன் நிலை திரள் கால் - வலிய நிலையினையுடைய திரண்ட கால்கள், (158) ஊறு வறுமுலை கொளீஇய - குடத்தைக் கொண்டவைகளை, கால் திருத்தி - கட்டிற் கால்களுக்கு அருகாக நிற்கும்படி (அக்கட்டிற்காலிடத்தே) கட்டி, (159) புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை - புதிதாக இயன்ற மெழுகுவழித்த மேற்கட்டியின் மேலே, (160) திண் நிலை மருப்பின் ஆடு தலை ஆக - திண்மையான நிலையினையுடைய கொம்பையுடைய மேடராசி முதலாக, (எல்லா ராசிகளிலும்), (161) விண் ஊர்பு திரிதரும் - வானத்தினிடத்துச் சென்று திரிகின்ற, வீங்கு செலல் மண்டிலத்து - மிக்க செலவினையுடைய சூரியமண்டலத்தோடு, (162) முரண் மிகு - மாறுபாடு மிகுந்த, சிறப்பின் - தலைமையினையுடைய, செல்வனொடு - சந்திரனொடு, நிலைஇய - நிலையாகநின்ற, (163) உரோகிணி - உரோகிணி யென்பவளை, நினைவனள் நோக்கி - நினைத்தவளாய்ப் பார்த்து, நெடிது உயிரா - பெருமூச்சு எறிந்து,—(எ - று.)—உயிரா (165) தெறியா (166) வதியும் அரிவைக்கு என்க.

குடவடிவங்கள் அமையச்செதுக்கிவைத்து அக்குடவடிவமானவற்றின் மீது கால்களாகச் செய்தவற்றைக் கட்டிற்காலையடுத்து நிறுத்திக் கட்டி அக்கால்களின்மீது கட்டிய மேற்கட்டியிலே சந்திரனைவிட்டுப்பிரியாது உரோகிணி யென்பவளிருப்பதை யெழுதியிருந்ததாக, தனக்கு அவ்வாறு கணவனைவிட்டுப் பிரியாத்நிலை நேர்படவில்லையே யென்பதை நினைதலால், தலைவிபெருமூச்சுவிடலாயினளென்க. "உறுவுகொள் உரோகிணியொடு உட்னிலை புரிந்த, மறுவுடை மண்டிலக் கடவுளை" என்ற பெருங்கதையடிகளும், திங்களும் உரோகிணியும் உடனுறையப் பெறு

தலைத்தெரிக்கும். (160) 'திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக (161) விண்ணூர்பு திரிதரும் மண்டிலம்' என்றது-சூரியனை: சூரியன் மேல்விதானத்தில் எழுதப்பட்டுள்ளதாகக் கொள்ளற்க: 'திண் ணிலை...மண்டிலத்து முரண்முகு சிறப்பின்' என்றது-செல்வனுக்கு அடைமொழி: சூரியன் பகலிற் பிரகாசிக்க, இரவில் சந்திரன் ஒளிர்கின்றானென்று வழங்குமாறு இருத்தலால்,மண்டிலத்தோடு செல்வன் முரண்மிகு சிறப்பினனாவன்.செல்வன் உரோகிணியோடு நிலைத்துள்ளானாக அந்தமேற்கட்டியி லெழுதியுள்ளதென்க. முலைபோன்றிருத்தலால், குடவடிவத்தை முலையென்றார்; உவம வாகுபெயர். ஊறா வறுமுலை - பால்சுரத்தலில்லாத வறியமுலை: எனவே, குடவடிவத்தைக் காட்டும். படம் - ஆடை: விதானமாக வமைந்த ஆடை: புதுவதாக இயன்ற அது மெழுகு வழித்துள்ள தென்பார் 'மெழுகு செய் படம்' என்றார்.

மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
165 செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியா

(இ - ள்.) (164) மா இதழ் - கறுத்த இதழையுடைய நீல மலர், ஏந்திய - தாங்கிய, மலிந்து வீழ் அரி பனி-மிக்கு வீழ்கின்ற நுண்ணியதாகிய பனிநீரைப்போன்ற, (165) சில-சொற்பமான கண்ணீரை, செவ் விரல்-(தன்னுடைய)செவ்விய விரலை, கடைக் கண் - கடைக்கண்ணிலே, சேர்த்தி-, தெறியா - தெறித்து,—

பிரிவுத்துயரால் கண்களினின்று வழியுஞ் சொற்பமான கண் ணீரைத் தலைவி கைவிரலால் தெறிக்கின்றன ளென்க.

புலம்பொடு வதியும் நலங்கிள ரரிவைக்கு

(இ-ள்.) (166) (இங்ஙனம்), புலம்பொடு-(கணவனைப் பிரிந்த) தனிமையோடு, வதியும் - வசிக்கின்ற, நலம் கிளர் அரிவைக்கு- அன்புமிகுகின்ற பெண்ணுக்கு,—(எ-று.)

எல்லாச் சுற்றத்தார்க்கும் இடைநின்றேயும், 'புலம்பொடு வதியும்' என்றது, 'பல்கிளை நாப்ப ணில்கிளை போல' என்றபடி, 'புலம்பித்தோன்றல்' ஆகும்.

(137) (கணவன் பிரிகையினாலே) நெடுவீழ் தாழ, (142) நூல் யாத்து, (138) ஓதியினையும் (140) காதினையும் (144) விளக்கத் தினையும் உடையவளாய் (146) மாசூர்ந்த கலிங்கத்தோடே (147) ஓவியங்கடுப்ப, (156) மிகக்கலுழ்ந்து (163) உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிர்த்து, (165) தெறியா, (166) வதியும் அரி வைக்கு என்க.

கோயிலிலே நல்லில்லில் கட்டிலிற் சேக்கையிலே புலம்பொடு வதிதலைக் கூறிய கவி, மேல் இருபத்திரண்டடிகளால் அவ்வரிவை யின் இடர் தீர, அரசனுக்கு வெற்றியை விளைக்கக் கொற்றவை யைப் பரவுதலைக் கூறுவர். அவற்றுள்,

அடிகள் 167—168: கொற்றவையை வெற்றிவேண்டிப் பரவுதல் கூறும்.

இன்னு அரும்படர் தீர விறல்தந்து
இன்னே முடிகதில் லம்ம

(இ-ள்.) (167) இன்னு - தீதாக இருக்கின்ற, அரும் படர் - (ஆற்றுதற்கு) அரிய துன்பம், தீர - தீரும்படி, விறல் தந்து - (அரசனுக்கு) வெற்றியைக் கொடுத்து, (168) இன்னே - இப்பொழுதே, முடிக தில்-முடிவதாக: இஃது எனக்கு விருப்பம்: அம்ம - கேட்பாயாக; (எ - று.)—

(167) முடிகதில் என்பதற்கு - "பாசறைத்தொழில்" என மேல் 188 - ஆம்அடியில்வருவது எழுவாயாம். தில் - விழைவின் கண் வந்தது. 'முடிகதில்லம்ம' என்ற இது - இந்தத் தலைவியின் வருத்தமிகுதி தீரவேண்டிக் கொற்றவையை நோக்கிப் பரவுகின்றவளின் கூற்று, "அம்ம கேட்பிக்கும்" என்ற தொல்காப்பியத்தால், அம்ம என்ற சொல்-கேட்பாயாகஎன்ற பொருளைக் குறிப்பிக்கும். அரிவையின் படர் தீர அரசனது போர்ச்செயல் இனிது முடிந்து மீளுமாறு திருவருள்புரியக் கொற்றவையைப் பரவுவதை இந்த 167, 168-அடிகள் தெரிவித்தலால், இவை, இச்செய்யுளின் உயிர்நிலை போல்வனவாம். இனி, முடிகதில் என்றதற்கு எழுவாயான வேந்தனது பாசறைத்தொழிலைக் கூறுவர்.

அடிகள் 168—188: வேந்தனது பாசறைத்தொழில் கூறும்.

மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறு களம்படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து

(இ - ள்.) (168) மின் அவிர் (169) ஓடையொடு-ஒளி விளங்குகின்ற நெற்றிப்பட்டத்துடனே, பொலிந்த - பொலிவு பெற்ற, வினை நவில் - போர்த் தொழிலிற் பயின்ற, யானை - யானையினுடைய, (170) நீள் திரள் தட கை - நீண்ட திரண்ட பெருமையினையுடைய கை, (அற்றுப்போய்), நிலம் மிசை புரள-பூமியின்மீது புரளும்படி, (171) (இங்ஙனம்), களம் களிறு படுத்த-களத்திலே யானையை (முன்னேர்க்) கொன்ற, பெருஞ் செய் - பெரிய செயலையுடைய, ஆடவர் - வீரருடைய, (172) ஒளிறு வாள் - விளங்குகின்ற வாளினுலேபிளந்த, விழு புண் - சிறந்த புண்ணை, காணிய - காணும் பொருட்டு, புறம்போந்து, (தான் இருக்குமிடத்திற்குப்) புறமாகிய இடத்தே வந்து,—(எ-று.)—(187) 'திரிதரும்வேந்தன்' என இயையும்.

யானையைக் கொன்ற வீரரின் விழுப்புண்ணைக் காண வேந்தன் தன்னிடத்தினின்று புறம்போந்தமையை இவற்ருற் கூறினர்.

விழுப்புண்-முதுகு கொடாமல்எதிர்நின்றுபொருதலால் முகத்திலும் மார்பிலும் பட்ட புண். வேந்தன் விழுப்புண்காணிய புறம்போந்தது - தன்நோக்கும் சொல்லும் புண்பட்ட வீரர்க்கு மருந்தாவதற்கென்க. "...பாசறை வேந்தன்-விழுச்சிறப்பிற், சொல்லிய சொல்லே மருந்தாகத் தீர்ந்தன, புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்" என்றது காண்க.

வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல

(இ - ள்.) (173) வடந்தை தண் வளி - வாடையாகிய குளிர்ந்த காற்று, எறிதொறும்-அடிக்குந்தோறும், நுடங்கி - அசைந்து, (174) நல் பல் (175) பாண்டில் விளக்கில் - நன்றாகிய பல கால் விளக்கி லெரிகின்ற, (174) தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய-தென்புறம் எழுந்து வணங்கிய தலையினையுடையவாய, (175) பரூஉ சுடர்-பருத்த சுடர்க் கொழுந்துகள், அழல-எரிய,—(எ-று.) நெடுநல்வாடை யென்ற பெயர்க்குஏற்ப வாடை கூறினர்.

ஆங்கு விழுப்புண்பட்ட வீரரை வேந்தன் காணும்படி ஏற்றப்பட்டிருக்கும் விளக்குக்கள் வாடைக்காற்று அடிக்குந்தோறும் தீபச்சுவாலைகள் தென்புறமாகச் சாய்ந்து எரியுமென்க. விளக்கு-தீபம்ஏற்றுதற்கு உபகரணமானது: ஆகுபெயர்.

வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாட்டோட் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்

(இ-ள்.) (176) வேம்பு-வேப்பம்பூமாலையை, தலையாத்த - தலையிலே கட்டின, நோன் காழ் எஃகமொடு - வலிய காம்பினையுடைய வேலோடே, (177) முன்னோன் - முன்னேசெல்கின்ற சேனாபதி, முறை முறைகாட்ட - (புண்பட்ட வீரரை) அடைவேயடைவே காட்ட,—பின்னர் - பின்னாக, (178) மணி புறத்து இட்ட - மணிகளைத் தன்னிடத்தே யிட்ட, மா தாள் பிடியொடு - பெருமையையுடைய தாளினையுடைய குசையோடே, (179) பருமம் களையா பாய் பரி கலிமா - சேணத்தைக் கழற்றப்பெறாத பாய்ந்துசெல்லுஞ் செலவினையுடைய செருக்கின குதிரைகள், (180) இரு சேறு தெருவின் - கரியசேற்றினையுடைய தெருவிலே, எறி துளி விதிர்

ப்ப-(தம்மேலே) வீசுந் துளிகளை யுதறிக்கொண்டிருக்க, (181) புடை - இடத்தோளினின்றும், வீழ்-நழுவிவீழ்ந்த, அம் துகில்-அழகினையுடைய உத்தரீயத்தை, இடவயின் தழீஇ - இடப்பக்கத்துத் தழுவிக்கொண்டு, (182) வாள் தோள் கோத்த - வாளைத் தோளிலேகோத்த, வன் கண் காளை - தறுகண்மையையுடைய காளையாகிய அந்த வாளெடுப்பானது,(183)சுவல்மிசை-தோளிலே, அமைத்த - வைத்த, கையன் - கையையுடையவனும், முகன் அமர்ந்து - (புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற) முகம் பொருந்தி, (184) நூல் கால் யாத்த மாலை வெண் குடை - நூலாலே சட்டத்தைக் கட்டியமுத்தமாலையினையுடைய கொற்றக்குடை, (185) தவ்வென்று அசைஇ - தவ்வென்னு மோசைப்பட்டு அசைந்து, தா துளி - பரக்கின்ற மழைத்துளியை, மறைப்ப - மறைக்க,—(186) நள்ளென் யாமத்துஉம் - நள்ளென்னும் ஓசையையுடைய நடுயாமத்தும், பள்ளிகொள்ளான் - படுக்காதவனாய், (187) சிலரொடு - சிலவீரரோடே, திரிதரும் - (புண்பட்டோர்க்குப் பரிகாரஞ் செய்துகொண்டு) திரிபவனான, வேந்தன்-நெடுஞ்செழியனென்னும் அரசன்,—(எ - று.)

(172) புண் காணிய புறம்போந்து, (175) சுடரழல, (177) காட்ட, பின்னர், (180) விதிர்ப்ப, (181) தழீஇ, (183) கையனாய் அமர்ந்து (185)மறைப்ப, (186) பள்ளிகொள்ளானாய்த் (187) திரியும் வேந்தன் என்க. (177) பின்னர் (187) திரிதரும் என இயையும். (185) தாழ்துளி எனவும் பாடம்.

தாள் பிடி என்றவிடத்து, தாள் என்றது - வாய்க்கருவியிற் கோத்து முடியுங் குசையிற்றலையை. இங்ஙனங் கூறினார் நச்சினார்க்கினியர். இனி, பிடியொடு என்பதற்கு, 'பெண்யானையோடே' என உரைவகுத்தாருமுளர். (முன்னர்ப் பதிப்பில் உரை அங்ஙனமே யுள்ளது): பாசறையில் களிறு கூறுதல் மரபே யன்றி,பிடி கூறுதல் சிறவாது. 'பிடிக்கண மறந்த வேழம்' என்றது முல்லைப்பாட்டும்.*

*ஈண்டு, ஒரு சிலர், புறம் 308-இல் ''மற்றவன், புன்றலைமடப் பிடிநாணக், குஞ்சரமெல்லாம் புறக்கொடுத்தனவே''என்றவிடத்து 'பிடி - பெண் யானை; அது வேந்தனூர்தி' என உரை வகுத்துள்ளனரே; ஆதலின், பிடி போரில் வருதலுண்டு எனச் சாதிக்க முயல்வர். அப்பாட்டில், வேந்தூர்யானை பிடியாயின் அதன் ஏந்து முகத்து வேலெறிந்தது வீரனுக்கு இழுக்காகும்; 'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'என்றது புறம். ஆதலின், இப்புறப் பாட்டில் 'புன்றலைமடப்பிடிநாண, அவன் குஞ்சரமெல்லாம் புறக்கொடுத்தனவே' எனஇயைத்துக் கவி, தன் கற்பனைக்குறிப் பேற்றிப் பொதுப்பட 'புன்றலைமடப்பிடி நாண' எனக்கூறியதாகக் கொள்ளவேண்டுமேயன்றி, வேந்தனூர்தி பிடியெனவும், அதன் மேல் எஃகம் எறிந்தானெனவும் பொருள் காணுதல் சிறவாது. இனி, 'அவன்', என்றவிடத்து 'அவண்' என்றபாடமிருக்குமோ எனத் தோற்றுகின்றது.

[ஸி. ஜெகந்நாதாசார்யர்.]

இனி, ஒரு சிலர், 'பிடி என்பது ஈண்டுப் பெண்யானையைக் குறிக்காமல் பொதுவில் யானையென்னும் பொருட்டாய் நின்றது என்றனர். பெண்பாற் சொல்லாகிய 'பிடி' என்றது, ஆண்பாலை யும் உளப்படுத்தியது என நலிந்து கோடல் வேண்டியிருத்தலின், ஈண்டு அவ்வளவு சிறவாதாகலான், அஃதும் பொருந்துமாறில்லை. மற்றும், நச்சினார்க்கினியர், யானையை யொழித்துக் குதிரைக்கு ஏற்றிக் கூறியது, உதறுந்தொழில் யானையினும் குதிரைக்குச் சிறத்தலின் என்க. கம்பரும் "ஏயவரு நுண்பொடி படிந்துடன் எழுந்தொண், பாய்பரி விரைந்துதறி நின்றன பரந்தே" என்றது காண்க. சேனாபதி முன்னே வழிகாட்ட, அவன் பின்னே, கலிமா தம்மீது விழுந்துளியைத் தெறியாநிற்கையில் தோளி னின்று உத்தரீயம்விழ வாளேயேந்திய காளையின் தோளிலே வலக் கையை வைத்துக்கொண்டு குடை துளி மறைப்ப முகனமர்ந்து நள்ளிருள் யாமத்தும் பள்ளிதுஞ்சானாய் வேந்தன் திரியலாயின னென்க. யஜ்ஞோபவீதம்போல் உத்தரீயத்தை யணியவேண்டு மென்பது நூற்கொள்கையாதலால், அது விழும்பொழுது இட வயிற் றழுவவேண்டுவதாயிற்று. இடக்கை உத்தரீயத்தைத் தழு வியதனால், வாளேந்திய காளையின் தோளில் வைத்தது வலக்கை யெனப்பட்டது.

பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

(இ-ள்.) (188) பலரொடு முரணிய-சேரன் செம்பியன் திதியன் எழினி எருமையூரன் இருங்கோவேள்மான் பொருநன் என்ற எழுவரோடே மாறுபட்டுப் பொருகின்ற, பாசறை தொழில் - பாச றையிடத்துத் தங்கிச்செய்யும் போர்த்தொழில்; (எ - று.)—(167) விறல்தந்து (168) இன்னே முடிகஎன்க. 'பலரொடு முரணிய' என்றவிடத்து, புறம் 19, 76-ஆம் பாடல்களும், அகம் 36-ஆம் பாடலும் காண்க.

(168) அம்ம: (2) வானம் புதுப்பெயல் பொழிந்தென (72) (பின்னர் நிகழ்ந்த) போது கூதிர்க்காலமாய் நிலைபெற்றது; (12) அக்கூதிர்க்காலத்து நடுவியாமத்தே (88) வாயிலினையும் (90) முற்றத்தினையும் (92) முன் கடையினையும் (89) சிறப்பினையுமுடைய (100) கோயிலின் (107) வரைப்பினையுடைய (114) காண்பின் நல் லில்லில் (123) பாண்டிலில் (135) சேக்கையின் (166) வதியும் அரி வைக்கு (167) படர்தீரும்படி (187) வேந்தன் (188) பலரொடு முரணியபாசறைத்தொழில் (167) விறல்தந்து (168) இன்னே முடிவ தாக: இஃது எனக்கு விருப்பம் எனக் கொற்றவையைப் பரவிற் றாக வினைமுடிக்க.

(12) குன்று குளிர்ப்பன்ன கூதிர், (23) மணியுறழ் கமுகி னெருத்து, (30) ஆறுகிடந்தன்ன தெரு, (37) முத்துறழ்முறுவல், (50) கொள்ளுறழ் நறுங்கல், (88) குன்றுகுயின்றன்ன வோங்கு நிலைவாயில், (93—100) கோயிலிலே புரவிவிடுகுரலினோடு அருவி பாடும் மயிலினிசையுஞ் செறிந்து மலைச் சிலம்புபோலச்சிலம்புதல்

(99) மயிலின்குரல் வயிரினிசைபோலுதல், (108) வரை கண்டன்ன தோன்றல, (108, 109) வரைசேர்பு வில்கிடந்தன்னகொடிய, (110) வெள்ளியன்ன விளங்குஞ்சுதை, (111) மணிகண்டன்ன மா, (112) செம்பு இயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர், (115) பணை மருள் நோன்குரள், (164) நீலமலரேந்திய பனிநீர்போலும்கண்ணீர் என்பவை முதலிய இடத்து **உவமைகள்** காண்க. **இவற்றுள்,** குன்று குளிர்ப்பன்ன கூதிர், செம்பியன்றன்ன சுவர் முதலியன **தற்குறிப்பேற்றம்** என்று இக்காலத்துக் கூறப்படும்.

நெல்லையும் மலரையும் கலந்து தூவி மாலையயர்தல், மகளிர் தகரமுளரியில் நெருப்பமைத்து அகிலொடு அயிர் புகைத்தல், கத வத்திற்குச் செவ்வரக்கு வழித்தல், நெடுநிலைக்கு ஐயவியப்பி நெய் யணிதல், அரண்மனைகளிற் பல்நிறக் கொடிகளைக் கட்டுதல், பல விடங்களிலும் பூங்கொடி யெழுதுதல், கட்டிலையடுத்துக் குடவடி வமைத்தவற்றின்மேற் கால்வைத்துக் கட்டிற்காலோடு பிணித்து அக்கால்களின்மேல் மெழுக்கு வழித்துச் சித்திரமமைந்த விதா னத்தைக் கட்டுதல், கூதிர்க்காலத்துப் போர்க்கு எழுதல், சேனா பதி தன் படைக்கலத்துக்குத் தலைவனுடைய அடையாளப் பூ மாலையைச்சூட்டுதல் முதலியன பண்டைக்கால வழக்கங்களா மென்று இந்நெடுநல்வாடையால் அறியலாகும்.

இந்த நெடுநல்வாடை அச்சாகுங்கால் **இம்மூன்றும் பதிப்பினைப்** பார்வையிட்டுப் பிழைதிருத்திச் செம்மையுற ஆக்கியதோடு தமக்குத் தோன்றிய நுண்ணிய கருத்துக்களையும் சேர்த்து உதவி யவர், சென்னை விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேரா சிரியர் **வித்வான். C. ஜெகந்நாதாசார்யர், M.A., L.T., Dipl. Geog.** ஆவர்.

நெடுநல்வாடையின்

அரும்பதவகராதி முதலியன.

அகவும்-ஆரவாரிக்கின்ற, 99
அடி-கட்டிற்கால்கள், 122
அம்பணம்-லோகக்குழாய், 96
அமைத்துப் பொருத்துதல் - தைத்துப் பொருத்துதல், 122
அயர-கொண்டாட, 44
அயிர்-கண்டசருக்கரை, 56
அரி-நுண்ணியது, 164
அருகு-பக்கம், 117
அருவிப்பாடு-அருவியினோசை, 97
அவிழ்பதம்-விரியும் பக்குவகாலம், 41
அறல்-அற்றநீர், ஓடும்வெள்ளத்திற்கு அப்பாற்பட்ட நீர், 18
அறுவை-ஆடை, 35
ஆடவர்-வீரர், 171
ஆடு-மேடராசி, 160
ஆர்கலி-வெள்ளம், 3
ஆரம்-முத்துச்சரம், 136
ஆவணம் - கடைத்தெருவு முழுதுமுள்ள கடைக்கு உரியவர், 44
இகல்-போர், 116
இருங்களி-கரிய வண்டல், 16
இழை-நூல், 124
இறை-முன்னங்கை, 36
இறைஞ்சிய-சாய்ந்த, 174
உகளும்-தாவித்திரிகின்ற, 92
உளை-பிடரிமயிர், 93
உறழ்தல்-ஒத்தல், 23: மாறுபடுதல், 130
ஊருவறுமூலை-சூடமென்னும் உறுப்பு, 158
எஃகம்-வேல், 176
எகினம்-கவரிமான், 91
எயிறு-தந்தம், 117
எருத்து-கழுத்து, 23
எழில்-அழகு, 38
எறிந்து-செதுக்கி, 117
எறுழ்-வலிமை, 31
ஏர்-அழகு, 31
ஏற்றை, 91
ஐ-வியப்பு, 102
ஐயவி-வெண்சிறுகடுகு, 86
ஒல்க-குவிந்து ஒதுங்க, 98
ஓடை - நெற்றிப்பட்டம், 169
ஓதி-கூந்தன் மயிர், 138
ஓவியம்-சித்திரம், 147
கடி-காவல், 49
கடிகை நூல்-காப்பு நாண், 142
கடும்புனல் - விரைவாயோடு புனல், 18
கண்ணி-மாலை, முடிமாலை, 6, 31
கயிறிடுதல்-நூலை நேரேபிடித்தல், 76
கரு-கர்ப்பம், நடு, 114
கல்லென்-ஒலிக்குறிப்பு, 64
கலாவ-கசங்க, 6
கலி-செருக்கு, 99
கலிங்கம்-துகில், 134
கலித்தல்-மிகுதியாக எழுதல், 21
கலிமா-செருக்கின குதிரை, 179
கலுழ்ந்து-கலங்கி: (கலிழ்ந்து எனவும் எழுதுவர்) 97
கவின்-அழகு, 57
களைந்தென - செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சம், 139
கன்னல்-கரகம், 65
கனைந்து - செறிந்து, 71
காடி-கஞ்சி, 134
காண்பு-காட்சி, 114
காழ்-வயிரம், 56, தூண், 111: காம்பு, 176
கிம்புரி-மகரம், 96
குரூஉ-நிறம், 103
குழூஉ-திரட்சி, 24 [49
குறுந்தொழுவர் - குற்றேவலாளர்,
கேழ்-நிறம், 51
கைம்மிக-ஆற்றாமை மிகுதலால், 153
கையற்று-செயலற்று, 47
கைவல்கம்மியன், 57, 85
கோடல்-காந்தள், 5

கோடு-பக்கம், 35: தண்டு, 76: வளைவு, 145
சாஅய்-ஒதுங்கி, 18
சாலேகம்-சாளரம், 125
சிமையம்-உச்சி, 27
சிலம்பி-சிலந்திப்பூச்சி, 59
சிலம்பு-ஒலி, 100
சிறப்பு-தலைமை, 89
சுதை-சுண்ணாம்பு, 110
சுவல்-தோள், 183
செய்-செயல், முதனிலைத் தொழிற்பெயர்: 171
செவ்வரக்கு-சாதிலிங்கம், 80
சேக்கை-படுக்கை, 131, 135
சேவல் - ஆண்பறவை, இங்கே ஆண்புறா, 45
சேறு-இனிமை, 26
ஞெகிழிய-பரந்த, 90,
தக்கு-சட்டம், 127
தகரம்-மயிர்ச்சாந்தின் மரம், 55
தசம்-பத்து, 115
தட்டம்-கச்சு, 126
தடவு-கும்மட்டி, 66
தடைஇ-தடவி, 69
தடைய-திரண்ட, 146
தலை-ஆரம்பம், முதல்: 160
தவ்வெனல்-ஒலிக்குறிப்பு, 185
தறி-முளைக்கோல், 58
திரு-இலக்குமி, 89
திருநகர்-மனை, 90
தில்-விழைவின்கண்வந்த இடைச்சொல், 168
தின்ற-தழும்பிருந்த, 141
துணை-மனைவி அல்லது கணவன், 132, 137: இரட்டை, 81.
தூங்க-மாறுமல் வீழ, 28: தொங்க, 59
தூவி-சூட்டுமயிர், இறகுமயிரென்பாருமுளர், 132
தெவிட்டுதல்-குதட்டுதல், 94
தெவிள்-திரள, 25
தேஎம்-திசை, 77
தேறல்-கள், 33
தொகுவாய்-குவிந்தவாய், 65
தொடை-கோப்பு, 124
தொழுதி-கூட்டம், 15
தொழுவர்-ஏவலாளர், 49
தோடு-இலை, 22: இதழ், 125
நகர்-அரண்மனை, 49
நரை-வெண்மயிர், 152
நலம்-அன்பு, 166
நவில்-பயின்ற, 169
நளி-செறிவு, 27, 100
நறுங்கல்-நறியசாத்தம்மி, 50
நாகம்-யானை, 117
நாளொடு பெயரிய விழுமாம்-உத்தரம், 82 [130
நிரைத்து - ஒழுங்குபடச் சேர்த்து,
நிலவுப்பயன், இட்க்காடக்கல், 95
நுசுப்பு-இடை, 150
நுண்சேறு வழித்தல்-சாதிலிங்கம் பூசுதல், 157
நுதல்-நெற்றி, 116
நெடு நீர்-மிக்கவொளி, 139
நெடுமயிரெகினம்-கவரிமா, 91
நேர்வாய்க்கட்டளை-சாலேகம், 62
நோன்-வலிமை, 157
பசுங்காய்-பச்சைப்பாக்கு, 26
படம்-ஆடை, 159
படர்-துன்பம், 167
படலை-தழை, 31
பண்ணுமுறை, 70
பணை-மூங்கில், 36 149: பந்தி, 93: முரசம், 115
பயிற்றி-பலகாற்சொல்லி, 154
பரி-செல்கை, போதல், 179
பருமம்-சேணம், 179
பரேர்-பருத்த அழகிய, 31
பள்ளி-படுக்கை, 62: இடம், 105
பறை-பறவை, 15
பனி-குளிர்ச்சி, 7
பனிப்ப-குளிர, 1
பாசறை-படைவீடு, 188
பாடு-ஓசை, 97
பாண்டில்-வட்டக்கட்டில், 123
பாண்டில் விளக்கு - கால்விளக்கு 175
பாவை-பிரதிமை, 101
பானாள்-நடுயாமத்திலே, 12
பிடகை-பூந்தட்டு, 39

பித்திகம்-பிச்சியென்னும்மலர், 40
பீடு-பெருமை, 106
பீரம்-பீர்க்கு, 14
புதல்-செடிகொடி படர்ந்த இடம், 14
புரவி-குதிரை, 93
புரை-இடைவெளி, 85
புலம்பு-தனிமை, 5, 166
புல்லுறை-புல்லாகியஉணவு, 94
பூ-பொலிவு, 38
பெயர்-புகழ், 78
பெருந்தகை-பெரியதகுதி யுடையான், பாண்டியன்: பண்புத்தொகையன்மொழி, 106
பொங்கல்-பொங்குதல்: (விரைந்து செல்லுதல்), 19
பொழிந்தென-செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சம், 2
மடை-மூட்டுவாய், 124
மதலைப்பள்ளி - கொடுங்கையைத் தாங்குதலையுடைய பலகை,கபோதகத்தலை, 48
மருப்பு-விலங்கின் கொம்பு, 160
மல்லல்-வளம், 44
மறுக-அரைக்க, 50
மன்று-திறந்த வெளியான இடம், 46
மா-விலங்கு, 9
மாயிதழ் - கறுத்த இதழையுடைய நீலமலர், அடையடுத்த வாகுபெயர், 164
மீக்கூறுதல் - மேலாகச் சொல்லப்படுதல், 116
முடலையாக்கை-முறுக்குண்ட உடம்பு, 82
முரண்-மாறுபாடு, 162
முழுமுதல்-பருத்த அடி, 23
முளரி-விறகு, 55
முற்றம்-முன்னிடம், 90
முறுவல்-பல், 37
முனைஇய-வெறுத்த, 3
மூசு-மொய்க்கும், 33
யவனர்-சோனகர்,101
வட்டம்-சிலாவட்டம்,51: ஆலவட்டம், 58
வடந்தை-வடதிசையிலுள்ளது, 173
வணக்குறுத்து - முடக்கத்தை யுண்டாக்கி, 143
வம்பு-கச்சு, 150
வயமான்-சிங்கம், 128
வயிர்-கொம்பென்னும் ஊதுகருவி 99
வரி-புள்ளி, 116
வரைப்பு-கட்டு, 107
வலந்தன-சுற்றப்பட்டன, 59
வள்ளி-வளை, 36
வளி-காற்று, 173
வளைஇ-வளைவாகஎழுதப்பெற்று,113
வன்கண்-தறுகண்மை, அஞ்சாமை, 182
வாயுறை-காதின் துவாரத்திலேசெருகுவது, 140
வான்பூ-வெள்ளியபூ (வான்மை+பூ என்க.) 13
விண்-ஆகாயம் 161
விண்ணூர்புதிரிதரும் மண்டிலம்-சூரியன், 161
வியல்-விசாலம், 49:அகற்சி, 129
விழுப்புண்-முகத்திலும் மார்பிலும் பட்ட புண், 172
விளக்கம்-மோதிரம், 144
விறந்து-செறிந்து, 97
விறல்-வெற்றி, 167
வீங்குசெலல் - மிகச்செல்லுகை 161
வீழ்-தாலி, 137
வெண்மழை - வெண்ணிற முள்ள மேகம், 19
வேட்டம்-வேட்டைத்தொழில் 129
வேனில் 61

ஆனந்தாபார்வதி அச்சகம், 30, இடைப்பாளையம் தெரு, சென்னை-3.

குறிஞ்சிப்பாட்டு.

குறிஞ்சிப்பாட்டு என்றதொடர் - குறிஞ்சித் திணையைப்பற்றிய பாடல் என்று இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையாகவிரியும். குறிஞ்சி யென்பது - புணர்தலை உரிப்பொருளாகக் கொண்ட திணை. (திணை - ஒழுக்கம் நிகழும் இடம்).

குறிஞ்சி யென்றதன் பொருள் :—குறிஞ்சி என்றது குறிஞ்சிப்பூ, குறிஞ்சி மரம் முதலியவற்றைக் காட்டி, பிறகு அக்குறிஞ்சியின் மிகுதி அல்லது சிறப்புப்பற்றி, அந்நிலத்துக்குப் பெயராக வழங்கிப் பின்னர் புணர்தல் என்ற ஒழுக்கத்தையும் குறிப்பதாயிற்று. இவ்வாறே முல்லை முதலியனவும் முல்லைப்பூ அல்லது முல்லைக் கொடி முதலியவற்றைக் காட்ட, பிறகு அம்முல்லை முதலியவற்றின் மிகுதி அல்லது சிறப்புப்பற்றி, அவ்வந் நிலங்களுக்குப் பெயராக வழங்கிப் பின்னர் (ஆற்றி) இருத்தல் முதலிய ஒழுக்கங்களையும் குறிப்பனவாயின. (புறத்திணை யொழுக்கமாகிய நிரை கவர்தல், நிரை மீட்டல் முதலியனவும் - வெட்சி கரந்தை முதலிய பூக்களைக் குறியாகக் கொண்டிருத்தலுங் காண்க). **குறிஞ்சிக்கு நிலம்** :—மலையும் மலைசார்ந்த இடமும். இனி, **நச்சினார்க்கினியர் கருத்தாவது** :—இந்நிலப் பெயர்கள் அவ்வவற்றின் ஒழுக்கமாகக் கூறிய உரிப்பொருள்களினடியாக வழங்கின என்பது. அதன்படி நோக்கின், குறிஞ்சிக்குரியதாகப் புலனெறி வழக்கஞ் செய்யப்பட்ட ஒழுக்கம் "புணர்தல்" என்பது; அப்புணர்தற்கே குறிஞ்சி யென்பது ஒரு பெயர் என்பதாம். விளக்காகிய சுடரிருந்த இடமே விளக்கெனப் பட்டதுபோல, குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சியெனப்பட்டது என்றார் களவியலுரைகாரரும். **பாட்டு**-கற்போருள்ளத்தே கற்கப்படும் பொருள் நன்கு பதியுமாறு இன்னோசை பொருந்தக் கவினுறச் செய்யப்படுவது. இக்குறிஞ்சிப்பாட்டில், குறிஞ்சிக்குரிய *உரிப்பொருள் முக்கியமாக உட்பொதிந்திருத்தலால், இது **குறிஞ்சிப்பாட்டு** எனப்பட்டது. ஈண்டு, "இதற்குக் குறிஞ்சி யென்று பெயர் கூறினார், இயற்கைப் புணர்ச்சியும், பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறுதலின் : அன்றியும் முதலானும் கருவானும் குறிஞ்சிக் குரியனவே கூறுதலானும் அப்பெயர் கூறினார்" என்ற நச்சினார்க்கினியர் கூற்று நினைக்கத்தக்கது.

தலைவியின் நற்கவின் தொலைவும் தளர்வும் நோயும் அறிந்து, செவிலித்தாய், அவற்றிற்குக் காரணம் அறியாளாய்,

---

*தமிழிலக்கண நூல்களில் **குறிஞ்சி**, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்திணைகள் பகுக்கப்பட்டுள்ளன; இவை முதற்பொருள், கருப்பொருள், **உரிப் பொருள்** என்ற மூன்று பொருள்களாற் கூறப்படும். முதற்பொருள் - நிலமும் காலமும்; கருப்பொருள் - தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் முதலியன. **உரிப்பொருள்** - உரிய வொழுக்கம்; அவை **புணர்தல்**, பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்ற இவையும் இவற்றின் நிமித்தமுமெனக் குறிஞ்சி முதலியவற்றிற்கு முறையே காண்க.

குறி முதலாயின கேட்டும் கடவுட் பூசனை நிகழ்த்தியும் அலவுற்றிருக்கையில், தோழி, தலைவிக்குற்ற நோய்க்குக் காரணம் ஈது என்று அறத்தொடுநிற்றலை அழகுற விரிவாகக் கூறுவது இக் குறிஞ்சிப்பாட்டு.

தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்குங் காலத்து, அதற்கு இலக்கணம் வகுத்த "எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல், கூறுதலுசாதல் ஏதீடு தலைப்பாடு, உண்மைசெப்புங் கிளவி யொடு தொகைஇ, அவ்வெழு வகைய தென்மனார் புலவர்" என்ற சூத்திரத்து ஏழனுள், கூறுதலுசாதல் ஒழிந்த ஆறும் கூறி அறத்தொடு நிற்கின்றாள். இதனை உரையிடத்துக் காட்டுதும்.*

இந்தக் குறிஞ்சிப்பாட்டு, நக்கீரனார் முதலிய கடைச்சங்கப் புலவர்கள் இயற்றிய பாக்களைக்கொண்டு தொகுக்கப்பட்ட பத்துப் பாட்டுக்களுள் எட்டாவது. பத்துப்பாட்டுக்களாவன:—திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. பத்துப்பாட்டு என இவை பத்தையும் ஒன்று தொகுத்தவர் இன்னாரென்பது விளங்கவில்லை. இந்தக் குறிஞ்சிப்பாட்டு—261 அடிகளைக் கொண்ட நேரிசையாசிரியப்பாவால் இயன்றது. ஆரிய வரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடியது. இதனில் மலை வளமும், பன்மலர் விசேடமும், தலைவன் தலைவியாய இருவர் மாட்டுக் காணும் கழிபேரன்பும், இல்லற முறைமையும், கற்பின் இன்றியமையாமையும், பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் முறைகளும் சிறப்புறக் கூறப்பட்டுள்ளன. இதனைப் பெருங்குறிஞ்சி† யென்றும் வழங்குப. உயர்வுநவிற்சியணியில்லாமல், இயற்கையை உவமையாலும், தன்மைநவிற்சியாலும் சித்திரமெழுதிக் காட்டினாற்போலக் கற்போர் மனத்திற் பதியுமாறு கூறுவது சங்கச் செய்யுளிலுள்ள ஒரு சிறந்த தன்மையாதலால், இதனிலும் அவ்வாறான தன்மையுள்ளது என்பது கூறாமலே பெறப்படும்.

இந்தக் குறிஞ்சிப்பாட்டை இயற்றிய நூலாசிரியர் கபிலர் என்பவர். இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர்; இவர் பிறந்த ஊர் பாண்டிய நாட்டிலுள்ள வாதவூரென்று திருவாலவாயுடை

---

*வரிகள் 24-26 இல் தலைப்பாடும்; வரிகள் 107-136 இல் ஏத்தலும்; வரிகள் 137-138 இல் ஏதீடும்; வரிகள் 143-15- இல் எளித்தலும்; வரிகள் 185-186 இல் வேட்கை யுரைத்தலும்; வரிகள் 212-214இல் உண்மை செப்புங் கிளவியும் வந்துள்ளன. உரையினிடத்து விவரம் காண்க.

†'கபிலர் பாடிய பெருங்குறிஞ்சியில்' என்றது நச்சினார்க்கினியம் (தொல்-அகத்-சூ-19). கபிலர்பாடிய பெருங்குறிஞ்சியினும் வந்தது என்றனர் பரிமேலழகர் (பரி:19 : 77).

யார் திருவிளையாடற்புராணம் கூறும். "யானே பரிசிலன் மன்னு மந்தணன்" என இவர் பாடிய செய்யுளில் (புறம்-200) வந்திருத்தலாலும், இவரை "புலனழுக்கற்ற அந்தணாளன்" (புறம்-126) என்று மாறோக்கத்து நப்பசலையார் குறித்திருத்தலாலும், இவர் பிராமணரென்பது பெறப்படும். இவர் வேள்பாரியினுடைய உயிர் நண்பரும் அவைக்களப் புலவருமாக விளங்கினார். ஐங்குறுநூற்றில் குறிஞ்சியைப் பொருளாகவுடைய மூன்றாவது நூறு, இவர் இயற்றியவை. கலித்தொகையில் குறிஞ்சிக்கலியும் இவர் பாடியதே. இவர் குறிஞ்சித்திணை பாடுவதில் மிக வல்லவரென்பது ஏற்படுகின்றது. மற்றும் பல பாடியுள்ளார். இவருடைய பாடல்களும் நூல்களும் கடைச்சங்க முத்தொகுதி நூல்களிலும் காணப்படுதல் இவருக்குத் தனி ஏற்றம். இவர் காலம் கடைச்சங்க காலமாகும்; ஆகவே, இவர் ஆயிரத்தெண்ணூறு வருடங்கட்கு முந்தியவராவர்.

மாந்தர்க்கு இம்மையில் உறுதிபயக்கும் பொருள்கள்-அறம், பொருள், இன்பம் என்பன: இம்மூன்றனுள் இன்பம் - அகம் எனப்படும்; மற்றவை புறம் எனப்படும்.

இந்த அகப்பொருளைச் சொல்லுமிடத்துத் தலைவர் பெயர் சொல்லக்கூடாதென்பது "மக்க ணுதலிய வகனைந் திணையுஞ், சுட்டி யொருவர் பெயர் கொளப்பெறாஅர்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாற் பெறப்படும். இவ்வாறு வரம்பு கட்டியதற்குக் காரணம்—இன்பத்தைப்பற்றிச் சொல்லுமிடத்து ஒருவனிடத்து நிகழ்ந்ததென யாவர்க்கும் புலனாக வெளிப்படுத்திக் கூறாது மறைத்தற்கு உரிய சில பொருள்களும் வருதல் கூடுமென்ற காரணம் பற்றி யிருக்கலாம். இந்தக் குறிஞ்சிப்பாட்டும் அகனைந் திணையிற் சேர்ந்ததாதலால் தலைவன் இன்னானென்று பெயர் குறிக்கப்படவில்லை. முல்லைப்பாட்டிலும் இங்ஙனமே தலைவன் பெயர் குறித்துச் சொல்லாதிருத்தலைக் காணலாம்.

இந்நூற்கு நச்சினார்க்கினியர் சிறந்த உரை இயற்றி யிருக்கின்றார். ஆயினும், மாணவர்போன்றார்க்குப் பொருள் விளங்குவது அருமையாயிருத்தலால், பெரும்பாலும் அவ்வுரையை ஆதாரமாகக் கொண்டு எளிய நடையில் இவ்வுரை யெழுதப்படுகின்றது. ஆங்காங்கு நச்சினார்க்கினியர் உரைப்போக்கும் அழகும் காட்டப்பட்டுள்ளன.

அடிகள் 1-34 ஒரு தொடர். அவற்றுள் 1-12 வரையுள்ள கீழ்வரும் அடிகள்—தலைவிக்குற்ற நோய்நோக்கிச் செவிலி கடவுட்பேணுதற் கண்டு தோழி கூறுவன தெரிக்கும்.

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுதல்
ஒலிமென் கூந்தலென் தோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய்
அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்

பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் தொலையவும் நறுந்தோள் நெகிழவும்
புட்பிறர் அறியவும் புலம்புவந் தலைப்பவும்
உட்கரந் துறையும் உய்யா அரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்

பதவுரை:—(1) *அன்னாய்-தாயே! வாழி-வாழ்வாயாக; அன்னை-தாயே! வேண்டு-யான் கூறுகின்றதை விரும்பிக் கொள்வாயாக: ஒள் நுதல் - ஒளிபொருந்திய நெற்றியினையும்,* (2) *ஒலி மெல் கூந்தல்-தழைக்கும் மெல்லிய மயிரினையும்,* (3) *விறல்* (2) *மேனி-பிறரெழிலினை வென்ற வெற்றியொடு கூடிய உடலினையுமுடைய, என் தோழி-என்னுடைய தோழி, (அதாவது தலைவி),* (11) *உள் கரந்து உறையும் - தன் மனத்துள்ளே மறைந்து தங்கியுள்ள, உய்யா அரு படர்-தன் உயிரைத் தரித்திருக்க மாட்டாமைக்குக் காரணமாகிய பொறுத்தற்கரிய நினைவு,* (3) *இழை நெகிழ்த்த-தான் அணிந்திருந்த ஆபரணங்களை நெகிழப்பண்ணின, வீவு அரு கடு நோய் - (மருந்துகளாற்) கெடுத்தற்கரிய கொடிய நோயானது,* (12) *செப்பல் வன்மையின்-(நினக்குச்) சொல்லுதற்கு (எளிதாகாமல்) வலிய தன்மையை யுடைமையினாலே, யான்—, செறித்து-(அதனை) என்னுள்ளேயே அடக்கிக்கொண்டு, (அவளுடைய)* (9) *நல்கவின் தொலையஉம்-நன்றாகிய அழகு கெடவும், நறு தோள் நெகிழஉம் - நறிய தோள்கள் மெலியவும்,* (10) *புள் பிறர் அறியஉம் - வளை கழலுதலைப் பிறர் அறியவும், புலம்பு வந்து அலைப்பஉம்-தனிமை மேலும் மேலும் வந்து வருத்தவும், [நினக்கு யான் அவையிற்றைப்பற்றி அறிவுறாமல்]* (12) *கடவலின் - (என்னுள்ளத்தைச்) செலுத்துகையினாலே,* (8) *நீயும்—,* (7) *அலவுற்று-மனஞ் சுழன்று,* (4) *அகலுள் ஆங்கண் - அகன்ற இடத்தையுடைய ஊரினிடத்து, அறியுநர் வினாய்-(கட்டினாலும் கழங்கினாலும் எண்ணி) அறிவாராகிய கட்டுவிச்சி வேலன் இவர்களை வினாவி (அவர் தெய்வத்தான் வந்த நோய் என்றலின்),* (6) *வேறு பல் உருவின் கடவுள்-வேறு வேறாகிய பல வடிவினையுடைய தெய்வத்தை,* (7) *நறைஉம் விரைஉம் ஓச்சிஉம்-வாசனைத் தூபங்களும் சந்தனம் முதலியனவும் கொடுத்தும்,* (5) *பரவிஉம்-வாயால் துதித்தும், தொழுதுஉம்-மெய்யால் வணங்கியும், விரவு மலர் தூய்உம் - பலநிறப் பூக்களைக் கலந்து சிதறியும்,* (6) *பேணிஉம்-வழிபட்டும், (அவ் வழிபாட்டினால் தீராமையின்),* (8) *எய்யா மையலை-(இந் நோய் இன்னதென) அறியமாட்டாத மயக்கத்தையுடையையாய், வருந்துதி-வருந்தாநின்றாய்; (எ-று.)*

(2) *என் தோழியின்,* (11) *அரும்படர்,* (3) *இழை நெகிழ்த்த நோய்,* (12) *நினக்குச் செப்பல் வன்மையின் யான் செறித்து,*

(9) தலைவியின் கவின் தொலையவும் தோள் நெகிழவும், (10) புள் பிறர் அறியவும் புலம்பு அலைப்பவும், (நினக்கு அறிவுறுத்தாமல்) (12) கடவலின், (8) நீயும், (7) அலவுற்று, (4) அறியுநர் வினாய், (6) கடவுட் பேணியும், (5) எய்யா மையலையாய் வருந்துதி என வினைமுடிவு செய்க.

கருத்துரை:—தலைவியின் உட்கரந் துறையும் அரும்படர் வீவருங் கடுநோய் செய்ய, அதனால் தலைவி நிறம் வேறுபட்டு வருந்தியும், யான் நினக்கு நோய்க்குக் காரணம் அறிவிக்காமல் இருத்தலினால், நீயும் அலவுற்று, அஃது தெய்வத்தான் நிகழ்ந்ததெனக் கொண்டு கடவுளை வழிபட்டும், அது தீராதது கண்டு வருந்துகின்றாய் எனத் தோழி செவிலிக்குக் கூறுகின்றாள்.

விசேடவுரை:—(11) படர் (3) நெகிழ்த்த என இயையும். (12) கடவலின் (7) அலவுற்று என இயையும். வீவருங் கடுநோய் என்றது—மருந்துகளாற் போக்குதற்கரியது இந்நோய் என்றபடி; "மருந்திற் றீராது......நீதர வந்த நிறையழி துயரம்" என்றது இலக்கண விளக்க உதாரணச் செய்யுள். அறியுநர்—கட்டினாலும் கழங்கினாலும் குறிபார்த்து அறிபவர். கட்டு—சிறு முறத்திற் பரப்பிய நெல் கொண்டு பார்க்கும் ஒருவகைக் குறி. "கட்டுவிச்சி கட்டேறிச், சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா" என்றார் திருமங்கை மன்னனும். கழங்கு—கழற்சிக்காய். வேறு பல்லுருவிற் கடவுள் என்றவிடத்து, "வணங்கும் துறைகள் பல பலவாக்கி மதிவிகற்பால், பிணங்கும் சமயம் பலபல வாக்கி அவை யவைதோறும், அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பி வைத்தாய்" என்பது போலக் கொள்ளக் கடவது. புள்—வளையென்னும் பொருளில் வருதலை 'புட்கை போகிய புன்றலை மகார்' என்ற மலைபடுகடாத்து வரி 253-இனாலும், 'புள்ளும் யாழுங் குழலுமேங்க' என்ற சிந்தாமணிச் செய்யுளினாலும் (2591) அறியலாம். 'புலம்பே தனிமை'. எல்லாச் சுற்றத்தார்க்கும் இடை நின்றேயும் 'புலம்பு வந்தலைப்ப' என்றது, 'பல்கிளை நாப்பணில் கிளைபோல' என்றபடி 'புலம்பித் தோன்றல்' ஆகும். படர்-நினைவு: அஃதாவது, பிரிவாற்றாளாய தலைமகள் தானுறு கின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலாலாகிய நினைவு. இப் பொருளதாதலை 'படர்மெலிந்திரங்கல்' என்றவிடத்துங் காண்க. செறித்தல் - அடக்குதலாதலை 'இற்செறிப்பு' என்ற விடத்துங் காண்க.

இலக்கணக்குறிப்பு:—வினாயும் என்பதிலுள்ள உம்மை பிரித்து 'பேணி' என்பதனோடு கூட்டப்பட்டது. அஞ்ஞான்று பேணியும் என்னும் உம்மை சிறப்பு. ஏனைய எண்ணும்மை. அதாவது, பரவியும், தொழுதும், தூயும் என உம்மை கொடுத்து எண்ணப் பட்டவை கடவுட் பேணுதலுக்கு அங்கங்களாக இயையும். இங்ஙன் கொள்ளாது 'வினாயும்' என்பதிலுள்ள உம்மையையும் பிரித்துக் கூட்டாது எண்ணும்மையாக் கொண்டாருமுளர்.

‘அலவுற்று எய்யா’ என்றவிடத்து ‘அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி’, ‘எய்யாமையே அறியாமையே’ என்பன நினைக்கத்தக்கன. செறித்தியான் - குற்றியலிகரம்: ‘யவ்வரி னிய்யாம்’.

அடிகள் **13 - 26**:—**தோழி, தலைவிகூற்றினைக் கொண்டுகூறுதல் தெரிக்கும்:** (*தலைவி கூற்றென்பது 24-ஆம் அடியால் பெறப்படும்.*)

முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்
சால்பும் வியப்பும் இயல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப
நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாமறி வுருவிற் பழியு முண்டோ
ஆற்றின் வாரா ராயினும் ஆற்ற
ஏனையுல கத்தும் இயைவதால் நமக்கென
மானமர் நோக்கங் கலங்கிக் கையற்று
ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்

பதவுரை:—(13) அத்துணை-(கூறிய இலக்கணங்களுக் கேற்ற) அவ்வளவாகிய, முத்தின்உம்-முத்துக்களினாலும், மணியின்உம்-மாணிக்கங்களினாலும், பொன்னின்உம் - பொன்னினாலும், (14) நேர்வரும்-பொருந்துதல் கொண்ட, கலம்-அணிகலன், கெடின்-(யாதொரு காரணத்தாற்) கெடுமாயின், புணரும் - (கலஞ்செய் தட்டாரால்) மறுபடியும் முன்பிருந்தது போலவே வந்து கூடும்; (அதுபோலன்றி), (15) சால்புஉம் - (தத்தங் குலத்திற்கேற்ற) குணங்களின் அமைதியும், வியப்புஉம்-மேம்பாடும், இயல்புஉம்-ஒழுக்கமும், குன்றின் - (யாதொரு காரணத்தாற்) பண்டைத் தன்மையிற் கெடுமாயின், (16) மாசு அற கழீஇ-(அஞ்ஞான்று தோன்றிய) அழுக்கைப் போகும்படி கழுவி, வயங்கு புகழ்-விளங்குகின்ற புகழை, (17) அ நிலை - (குன்றுதற்கு முன்னிருந்த) அந்தப் பண்டைநிலை யேற்படும்படி, (16) நிறுத்தல்-தூக்கி நிற்கச்செய்தல், (18) தொல் மருங்கு அறிஞர்-பழைதாகிய நூலின் கூறுபாட்டினையறிந்த பெரியோர், (17) ஆசு அறு காட்சி ஐயர்க்குஉம்-குற்றமற்ற மெய்யுணர்வினையுடைய தெய்வப் பதவி மேலோர்க்கும், (18) எளிய என்னார்-எளியதொரு காரியம் என்று சொன்னாரல்லர் (செயற்கரிய செயலே என்றபடி); (ஆதலின்)—

(19) “மாதர்உம்-(தாய் தந்தையராகிய இரு முதுகுரவரும் தாம் இசைந்தோர்க்கு எனைக் கொடுப்போம் என்றிருக்கின்ற அவரது) காதலும், மடன்உம்-(எனது) மடனும், ஓராங்கு

தணப்ப-ஒருசேரப் போகும்படி, (20) நெடு தேர் எந்தை - நீண்ட பெரிய தேரினையுடைய என் தந்தையின், அரு கடி நீவி-கடத்தற் கரிய காவலைக் கடந்து, (21) 'இருவேம்-தலைவனும் யானுமாகிய இருவேமும், ஆய்ந்த-தெரிந்து மேற்கொண்ட, மன்றல்-கந்த ருவ மணம், இது என-இந்தமணம் என்று, (22) நாம் அறிவுறு லின்-நாமே யாய்க்கு அறிவுறுத்துவோமாயின், பழிஉம் உண்டோ - (அதனால் வருவதோர்) பழியுமுளதோ? (இல்லை; புகழேயாம் என்றபடி இம்மணம் மறைநூல் விதித்ததாகலான்) [இங்ஙனம் யாய்க்கு அறிவுறுத்துதலின்மூலம் அறத்தொடு நின்ற பின்னரும்], (23) ஆற்றின்-நமது நெறிப்படி, வாரார் ஆயின்உம்-தலைவர்க்கே நம்மை நேர்ந்திலராயினும், ஆற்ற-(யாம் உயிர்போமளவும் இந்த வருத்தத்தைப்) பொறுத்திருக்க, (24) நமக்கு—, ஏனை உலகத்துஉம் - மறுபிறப்பிலும், இயைவதால்- இக்கூட்டம் பொருந்துவதொன்றா யிருந்தது', என-என்று கூறி, (25) மான் அமர் நோக்கம் கலங்கி-மான்பார்வை போன்ற பார்வை மாறி (மையல் நோக்கங்கொண்டு), கையற்று-செயலற்று, (26)ஆனா சிறுமையள்-நீங்காத (ஆற்றுந் தன்மைத்தல்லாத) நோயினையுடையளாய், இவள்உம் தேம்பும்-இவளும் அயர்ந்து மெலிகின்றாள்; (எ-று.)

(26) இவளும், (25) கலங்கி, (14) கலங்கெடிற் புணரும், (15) அதுபோலன்றிச் சால்பு முதலியன குன்றின் (16) புகழ்நிறுத் தல் (18) எளியவென்னார் அறிஞர்; ஆகலின், (21) இது இருவே மாய்ந்த மன்றலென, (22) நாம் அறிவுறலிற் பழியுமில்லை; (23) ஆற்றின்வாராராயினும் ஆற்ற (24) ஏனையுலகத்தும் இயைவ தால் எனக்கூறித் (26) தேம்பும் என வினைமுடிவு செய்க.

கருத்துரை :—களவுக்கூட்டம் நிகழ்த்திய தலைவி, "முத்து மணி இவற்றாலாகிய அணிகலன் கெடினும் மீண்டும் திருத்திப் புணர்க்கவும் கூடும். ஆனால், சால்பு முதலிய நற்பண்புகள் குன்றின், மீண்டும் அம்மாசு போக்கிப் பண்டுபோல் புகழ்நிறுத் தல் மெய்யுணர்வினார்க்கும் இயலாது. ஆதலின், தலைவனும் யானும் எம்முட் கூடிய களவுக்கூட்டத்தை யானே யாய்க்கு அறத்தொடுநிற்றலால் வரும் பழியொன்று மில்லை. அங்ஙனம் அறத்தொடுநின்ற பின்னரும் ஒருகால் இருமுது குரவர் என்னைத் தலைவனுக்கே நேர்ந்திடாமலிருப்பின், அஞ் ஞான்று யான் என் உயிர் போமளவும் அவ்வருத்தத்தைப் பொறுத்திருந்து மறுபிறப்பினும் இக்கூட்டம் கூடுவதாகுக என்று இருப்பேன்" என்று கூறிச் செயலற்று அயர்ந்து மெலியா நின்றாள். அந்தத் தலைவிகூற்றினைத் தோழி கொண்டு கூறினள் என்பது. இதனால், தோழி தலைப்பாடு கூறினாள். (தலைப்பாடு கூறலாவது-தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டார், யான் அறிந்திலேன் எனக் கூறுதல்.)

விசேடவுரை :—தலைவி தானே கூறுதல் தகுமோ என்னில், "தானே கூறுங் காலமுமுளவே" என்றது விதி. (தொல்: களவு:

சூ-21). இனி, "செறிவும் நிறையுஞ் செம்மையும் செப்பும், அறிவும் அருமையும் பெண்பாலான" என்றதனால் தலைவி மறைபுலப்படுத் தாமலொழுகுதல் இலக்கண மென்றாராயினும், "உற்றுழியல்லது சொல்லலின்மையின், அப்பொருள் வேட்கை கிழவியின் உணர்ப" என்பதனால், மறைபுலப்படுத்தலுமாம் என வழுவமைக்கின்று ராதலின், இங்ஙனம் தலைவி தானே கூறியது தகும். அத்தலைவி கூற்றினைக் கொண்டுகூறினாள் தோழி என்றுணர்க.

அத்துணை என்று சுட்டியது, முத்து மணி முதலியவற்றிற் குக் கூறிய இலக்கணங்களை. இனி, இதனை அவ்வத்துணை என் பதன் இடைக்குறை யென்றுருமுளர். சால்பு - குணங்களின் அமைதி; அஃதாவது, அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மைஎன்னும் ஐம்பெருங்குணங்களான் நிறைந்து நிலைபெறல். வியப்பு-மருட்கை, அதிசயம்; ஈண்டு அதிசயிக்கத்தக்க மேம்பாடு குறித்தது. "வியப்பும் சால்புஞ் செம்மை சான்றோர், பலர் வாய்ப்புகரறு சிறப்பிற் றோன்றி" என்றது மதுரைக்காஞ்சியும் (வரி - 764-5). ஆசறு காட்சி ஐயர்-மெய்யுணர்வினர்: தத்துவ ஞானிகள். இவர்களை 'மாசறு காட்சியவர்' என்று வள்ளுவரும் குறித்துள்ளார் (குறள் - 352); இதற்குத் தெய்வ இருடிகள் எனப் பொருள் கொண்டனர் நச்சினார்க்கினியர். 'மாதர் காதல்' என்றது தொல்காப்பியம். ஈண்டு மாதர் என்றது-இருமுதுகுர வர்மாட்டுக் காணும் விருப்பம். மடன்-கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை; இது மகளிர் பண்பினுள் ஒன்று. ஆய்ந்த மன்றல் என்பதற்கு-பெருமையும் உரனும் அச்சமும் நாணும் நுணுகிய நிலையாற் பிறந்த கந்தருவ மணம் என்று உரை கண்டனர் நச்சினார்க்கினியர். ஈண்டு, பெருமையும் உரனும் தலை வன் குணங்களெனவும், அச்சமும் நாணும் தலைவியின் குணங்க ளெனவும் காண்க. பழியுமுண்டோ என்றவிடத்து, ஓகாரம் எதிர் மறை: பழியில்லை என்றது கந்தருவ மணம் மறைநூல் விதித்த தாதலின்; என்னை? "மறையோர் தேஎத்து மன்றலெட்டனுள், துறையமை நல்யாழ்த் துணைமையோரியல்பே" என்றது தொல் காப்பியம். "அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது, அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள், கந்தருவ வழக்கம்" என்றது இறையனாரகப்பொருள். ஏனையுலகம் என்றது - இம்மை மாறி யெடுக்கும் மறுபிறப்பினை. வரி 24-இல், "இம்மைமாறி மறுமை யாயினும், நீயாகியர் என் கணவனை, யானாகியர் நின்னெஞ்சு நேர்பவளே" என்ற குறுந்தொகைச் செய்யுட் கருத்துக் காணலாம்.

இலக்கணக்குறிப்பு :—குரைய - அசை. பழியும் - உம்மை எச்ச வும்மை. தேம்பும்-செய்யுமென்முற்று பெண்பாலுக்கு வந்தது.

அடிகள் 27-29 :—செவிலிக்குத் தோழி தன்னிலை இஃதெனச் செப்பல்.

இகன்மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
இருபே ரச்சமோ டியானும் ஆற்றலேன்

பதவுரை :—(27) இகல் மீ கடவும்-மாறுபாட்டின் மிகுதியைச் செலுத்தாநின்ற, இரு பெரு வேந்தர் - இரண்டு பேரரசரை, (28) வினை-சந்து செய்விக்குந் தொழிலிலே, இடைநின்ற-நடுநின்ற, சான்றோர் போல - அறிவுடையோரைப் போல, (29) இருபேர் அச்சமொடு - நினக்கும் இவள்படும் வருத்தத்திற்கும் அஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தாலே, யானும்—,ஆற்றலேன்-வருந்தாநின்றேன் ; (எ - று.)

விசேடவுரை :—ஓரரசற்கு இப்பாட்டு கூறப்பட்டதாகலின், அவனுக்கேற்ப உவமை கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வடிகளில் வந்துள்ள உவமை பாராட்டத்தக்கது. முரண்மிகுதியான் மாறுபட்ட இருவேந்தரிடை நின்று சந்து செய்விக்குஞ் சான்றோர் போல, முரணுற்ற நினைவுடைய நினக்கும் தலைவிக்கும் இடைநின்று நற்செயலாற்ற நின்றேன் என்கின்றனள் தோழி. அங்கன் நிற்குங்கால்,மானமர் நோக்கங் கலங்கிக் கையற்று ஆறுஞ் சிறுமையளாகிய தலைவிக்கு என்ன நிகழுமோ என்ற அச்சம் ஒருபாலும், மறை புலப்படுத்தோமாயின் அன்னையாகிய நீ சினப்பாயோ என்ற அச்சம் ஒருபாலும் உடையேனாய் ஆற்றலேன் என்கின்றாள். வினை - ஈண்டுச் சந்து செய்வித்தல்: அஃதாவது பிரிந்தார்ப் பொருத்தல்.

இலக்கணக்குறிப்பு :—அச்சமொடியானும் - குற்றியலிகரம்.

அடிகள் 30-34 :—தோழி 'களவுப்புணர்ச்சி நிகழ்ந்தபடி கூறுவேன் : வெருவேல்' எனல்.

கொடுப்பின் நன்குடைமையும் குடிநிர லுடைமையும்
வண்ணமுந் துணையும் பொரீஇ எண்ணாது
எமியேம் துணிந்த ஏமஞ்சால் அருவினை
நிகழ்ந்த வண்ணம் நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ

பதவுரை:—(30) கொடுப்பின்-மகளை ஒருவற்குக் கொடுக்குங் காலத்து, நன்கு உடைமைஉம்-எல்லா வகையினும் நன்றாகி முடிதலையும், குடி நிரல் உடைமைஉம்-பிறந்த குடியும் புக்க குடியும் ஒத்திருத்தலுடைமையையும், (31) வண்ணம்உம் - (தலைவி தலைவன் இருவரது) குணத்தையும், துணைஉம் - அவர்களின் சுற்றத்து உதவிகளையும், பொரீஇ-(ஒன்றோடொன்று)ஒப்பிட்டுப் பார்த்து, (பின்னரும்), எண்ணாது - பலரோடு உசாவாமலே, (32) எமியேம்-(நும்மையின்றித்) தமியேமாய் யாங்களே, துணிந்த-துணிவொடு செய்த, ஏமம் சால்-(எம்முயிர்க்குப்) பாதுகாவலாய் அமைந்த, அருவினை-(செய்தற்கு) அரிய இந்தக் கந்தருவமணம், (33) நிகழ்ந்தவண்ணம் - முன்பு நடந்த வாற்றை, நீ நனி உணர-நீ நன்கு அறியும்படி, (34) செப்பல் ஆன்றிசின் - சொல்லுதற்கு

அமைந்தேன்: சினவாதீமோ-(அதுகேட்டு) வெகுளாதிருப்பாயாக; (எ-று.)

கருத்துரை:—ஒருவற்கு மகட்கொடுப்போர், நன்மை குடிப்பிறப்பு குணம் சுற்றம் இவையிற்றை ஒப்பிட்டுப்பார்த்து, அதன்மேலும், பலருடன் உசாவியறிந்த பின்னரே மணம் நேர்வர்; யாங்களோ நின்னையும் கேளாது இக்களவுமணத்திற்குத் துணிந்தேம்; இக்களவுமணம் நிகழ்ந்தபடியைக் கூறுவேன்; சினவாதே கொள் என்றனள் தோழி என்பது.

விசேடவுரை:—'எமியேம் துணிந்த' என்று தோழி தன்னையும் உளப்படுத்திக் கொண்டது, தானும் புணர்ச்சிக்குப்பின் உடம்படுதலை நோக்கி. இனி, தான் அவள் என்னும் வேற்றுமையின்மையான் இங்ஙன் உளப்படுத்தியது எனினுமாம். அருவினை-பொரீஇ எண்ணிச் செயினும் இவ்வகையதோர் மன்றல் அரிது என்றபடி. 'கொடுப்பின்' என்பதற்கு 'கொடுத்தபின்பு' என உரைகண்டனர் நச்சினார்க்கினியர், மேல்வரும் 'குடிநிரல் உடைமை' என வருதல் நோக்கி. கொடுத்தபின்பன்றோ இரு குடியாகும்: இருகுடியாயினன்றோ நிரலுடைமை[ஒத்தலுடைமை] இயையும். 'ஒருகுடியாகாமல்' என்று நச்சினார்க்கினியர் கூறியது, ஒரே கோத்திரமாயிருத்தலாகாமை பற்றி. இஃது நுண்ணிதின் அறியவேண்டுவது.

இலக்கணக்குறிப்பு: ஆன்றிசின்-இசின், தன்மைக்கண் வந்தது. சினவாதீமோ-கேட்டிமின் என்பதுபோல, ஒருசொல்: வினைத்திரிசொல் எனலாம். இனி, ஈயும் ஓவும் முன்னிலையில் வந்த அசைகள் என்றுருமுளர். அடிகள் 1-34-க்கு **வினைமுடிவு:**— (1) அன்னாய் வாழி; அன்னை! வேண்டு: (8) நீயும் எய்யாமையலையாகி வருந்துதி; (26) இவளும் (24) ஏனையுலகத்தும் இயைவதாலெனக் கூறித் (26) தேம்பும்; (29) யானும் (28) இடைநின்ற சான்றோர் போல (29) ஆற்றலேன்; (31) எண்ணாது (32) எமியேம் துணிந்த அருவினை (33) நிகழ்ந்தவண்ணம் நீயுணரச் (34) செப்பல் அமைந்தேன்: அது கேட்கச்சினவாதீமோ-என வினைமுடிக்க.

இனி, அடிகள் 35 முதல் 106 வரை ஒரு தொடர். அவற்றுள், அடிகள் 35-39:—'தினைப்புனம் காத்து எற்பட வருதியர்' எனச் செவிலி விடுத்தமை கூறும்.

நெற்கொள் நெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பின் இறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோட் சிறுதினைப் படுபுள் ஓப்பி
எற்பட வருதியர் எனநீ விடுத்தலின்

பதவுரை:—(35) நெல்கொள் நெடுவெதிர்க்கு-நெல்லைத் தன்னிடத்தே கொண்டுள்ள நீண்ட மூங்கிலைத் தின்றதற்கு, அணந்த-மேனோக்கி நின்று (அங்ஙன் நிற்றலால் வருந்தின), யானை—,

(அவ்வருத்தந்தீர), (36) முத்து ஆர் மருப்பின் - முத்துக்கள் நிறைந்த தந்தத்திலே, இறங்கு கை கடுப்ப-இறங்கத் தொங்க விட்டிருந்த துதிக்கையை யொப்ப, (37) துய் தலை வாங்கிய-துய்யையுடைய தலை வளைந்த, புனிறு தீர்-ஈன்றணிமை நீங்கின [முதிர்ந்த], பெரு குரல்-பெரிய கதிர்களை, (38) நல் கோள்-நன்றாகத் தன்னிடத்திலே கொள்ளுதலையுடைய, சிறு தினை-சிறிய தினைப் பயிரிலே, படு-வீழ்கின்ற, புள் ஓப்பி-கிளி முதலிய பறவைகளையோட்டி, (39) எல் பட வருதியர்-பகற்பொழுது கழியும் போது (நீர்) வருவீராக, என-என்று கூறி, நீ—, விடுத்தலின்-(எம்மைப்) போக விடுகையினாலே [யாங்களும் போய்];(எ-று.)

கருத்துரை:—முதிர்ந்து வளைந்த கதிர்களையுடைய தினைப் புனத்தே தினைகவர வரும் பறவைகளையோட்டிப் பகற்பொழுது கழியாநிற்க நீர் வருவீர் என நீ போகவிட்டமையால் நாங்கள் சென்றேம் என்கின்றாள் தோழி செவிலியை நோக்கி என்பது.

விசேடவுரை:—யானையின் இறங்குகை கடுப்ப வாங்கிய என இயையும். யானையின் வளைந்த கை-வளைந்த தினைக் குரலுக்கு உவமை. தினைக்கதிருக்கு யானையின் கையினை உவமை கூறுதலை 'பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக், கொய்பத முற்றன குலவுக் குரல் ஏனல்'' என்ற மலைபடுகடாத்தாலும் (107-108), 'பிடித் தடக்கையன்ன பைங்குரல்' என்ற குறுந்தொகையாலும் (செ. 198) அறியலாம். அவ்வளவே ஈண்டுக் கொள்ளவேண்டுவதாயிருப்ப, உரையாசிரியரொருவர், 'உவமை கூறும் மாத்திரையன்றிக்கே கருப்பொருளை நிலைக்களனாகக்கொண்டு கூறும் உள்ளுறையுவமம் கூறலே தோழியின் கருத்தாகும்' எனக்கூறி, தமக்குத் தோற்றிய உள்ளுறையுவமமுங்காட்டுகின்றனர். ஆனால் வரிகள் 35-36 இல் வந்துள்ள குறிஞ்சிநிலக் கருப்பொருட்கு உள்ளுறை கூறி அமைத்தல் ஈண்டுச் செவிலி கூற்றைக் கொண்டு கூறுதலின் சிறவாது. ஆதலின், ஆசிரியர் நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டிற்றிலர். துய்-பஞ்சின் நுனிபோன்றிருப்பது. புனிறு உரிச்சொல்: 'புனிறென்கிளவி ஈன்றணிமைப் பொருட்டே' என்பது விதி. புள்ளோப்பி என்றவிடத்து, புள்-கிளியெனக் கொண்டார் நச்சினார்க்கினியர், மேல் 'கிள்ளையோப்பியும்' (101) என வருதலின்.

இலக்கணக்குறிப்பு:—வருதியர்-வியங்கோள் வினைமுற்று.

அடிகள் 40-45:—தினைக்காவல் புரிந்துவர, வெம்மைப்பொழுதாயினமை கூறும்.

கலிகெழு மரமிசைச் சேணோன் இழைத்த
புலியஞ் சிதணம் ஏறி அவண
சாரற் சூரல் தகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவும்
கிளிகடி மரபின ஊழூழ் வாங்கி
உரவுக்கதிர் தெறூஉம் உருப்பவிர் அமயத்து

பதவுரை:—(40)கலிகெழு மரம் மிசை - ஆரவாரம் பொருந்தின மரத்தின் உச்சியில், சேணோன்-(இராக்காலம் வர) ஆகாயத்திருப்போன், இழைத்த-பண்ணின, (41) புலி அஞ்சு-புலி யஞ்சுதற்குக் காரணமானதும், அவண (42) சாரல் சூரல் - அவ்விடத்தனவாகிய மலைப்பக்கத்துள்ள பிரம்பாலே, தகைபெற - அழகுற, வலந்த-பின்னினதுமான ,(41) இதணம் ஏறி-பரணிடத்தேஏறி,(43) தழல்உம் தட்டைஉம் குளிர்உம் -தழல் தட்டை குளிர் என்னும் கருவிகளும், பிறஉம்-(அவைபோன்ற) ஏனையவும் ஆகிய, (44) கிளி கடி மரபின-கிளியோட்டும் முறைமையினையுடையவற்றை, ஊழ் ஊழ்வாங்கி-முறையே முறையே கையிலே எடுத்துஒட்டி,(45) உரவு கதிர் தெறூஉம்-மிகுதலையுடைய சூரியனின் கிரணங்கள் சுடுகின்ற, உருப்பு அவிர் அமயத்து-வெப்பம் விளங்குகின்ற உச்சிப் பொழுதிலே; (எ-று.)—(55) அருவி (56) ஆடி (106) தண்ணிழலிருந்தனமாக என இயையும்.

கருத்துரை:—மரமிசைச் சேணோனியற்றிய பரணிலேறித் தழல் தட்டை முதலிய கிளிகடிகருவிகளை முறை முறையே கையிற் கொண்டு கிளிகளை யோட்டியிருப்ப வெம்மைமிக்க உச்சிப் போது ஆயிற்று என்பது.

விசேடவுரை:—சேணோன் என்பதற்கே பரணின் மேலோன் என்றனர் சிலப்பதிகாரத்து அரும்பதவுரையாசிரியர். ஈண்டு ஆகாயத்திருப்போன் என்றது, அவன் உச்சியில் வானிடத்திருத்தல் நோக்கி. சூரலாலே வலந்த தழல் என்னவுமாம். சூரல்-சூரற்கொடி யென்பதுமாம். தழல், தட்டை, குளிர்-கிளி கடிகருவியிற் பேதங்கள். **தழலாவது**-கையாற் சுற்றின் காலத்துத் தன்னிடத்து ஓசைபிறக்குமதோர் கருவியென்றும், **தட்டையாவது**-மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவியென்றும், **குளிராவது** - மூங்கிலை வீணைபோற் கட்டித் தெறிக்கும் கருவியென்றும் கூறுப. ஆனால், 'குளிரிப் **புடைப்பொலியாற்** கிள்ளை போயின' (செ. 73) என்று தஞ்சைவாணன்கோவையாசிரியர் கூறுதலை நோக்கின், குளிர் என்னும் கருவியும் தட்டைபோல் புடைப்பதோர் கருவியெனத் தோற்றுகிறது. குளிர் எனினும் குளிரியெனினு மொக்கும். தட்டப்படுதலின் தட்டை யென்றார்: (மதுரைக் காஞ்சி 305, நச். உரை) (44) வாங்கி என்பதை (101) ஒப்பி என்பதனோடு இயைப்பினுமாம். இனி, நச்சினார்க்கினியர், 'ஊழூழ்வாங்கி' என்பதை 'உருப்பவிரமயத்து' என்பதற்குப் பின் கூட்டிக்கொள்ளச் சொன்னது-உரவுக்கதிர்தெறூஉம் உச்சிப் போதுக்குச் சற்றுமுன்னர்வரை கிளியோப்பியமை பெறவைத்தற்காக.

இலக்கணக்குறிப்பு: மரபின-பலவின்பாற் பெயர்.

அடிகள் **35-45**க்கு **வினைமுடிவு**:-(38) தினையிற் படுபுள்ளோப்பி (39) வருதியரென நீபோகவிடுதலின் [யாங்களும் போய்] (41) இதண

மேறிக் (44) இளிகடி மரபினவற்றை வாங்கி [ஓட்டி] என வினை முடிக்க.

அடிகள் **46-61:**—மேகம் மழைபொழிய இழிதரு மலையருவியிலாடிச் சுனைகுடைந்து பாயம்பாடிக் கூந்தலினீரம் புலர்த்தியமை கூறும்.

விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்டு
அகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன இன்குரல் ஏற்றொடு
நிரைசெலல் நிவப்பிற் கொண்மூ மயங்கி
இன்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎய்
ஒன்னார்க் கேந்திய இலங்கிலை எஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
அண்ணல் நெடுங்கோட் டிழிதரு தெண்ணீர்
அவிர்துகில் புரையும் அவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
உள்ளகஞ் சிவந்த கண்ணேம்

பதவுரை:—(46) விசும்பு ஆடு பறவை - ஆகாயத்தே பறக்கும் பறவைகளெல்லாம், வீழ் பதி படர - தாம் விரும்பித் தங்கும் கூடுகளிலே சென்றடங்கும்படி, (47) நிறை இரு பௌவம் - நீர் நிறைந்த கரிய கடலை, குறைபட முகந்துகொண்டு - குறைந்து போகும்படி அதன் நீரை மொண்டுகொண்டு, (49) முரசு அதிர்ந்து அன்ன இன்குரல் ஏற்றொடு - முரசம் (சிறிது) முழங்கினாற் போன்ற இனிய குரலையுடைய இடியேற்றோடே, (50) நிரைசெலல் நிவப்பின் கொண்மூ - நிரல்படச் செல்லும் மேலெழுச்சியினை யுடைய மேகமானது,— (51) இன் இசை முரசின்-இனிய ஓசை யையுடைய முரசினையும், சுடர் பூண் சேஎய்-ஒளியைவிடுகின்ற அணிகலன்களையும் உடைய முருகக் கடவுள், (52) ஒன்னார்க்கு-பகைவராகிய அசுரரைக் கொல்லுதற்கு, ஏந்திய-உயரத்தூக்கி யெடுத்த, இலங்கு இலை எஃகின்-விளங்குகின்ற இலைத்தொழில் பொருந்திய வேல்போல, (53) மின் மயங்கு கருவிய-மின்னல் பிறழ் கின்ற தொகுதிகளையுடையவாய், (48) அகல் இரு வானத்து வீசு வளி - ஏனைப் பூதங்கள் விரிதற்குக் காரணமான கரிய ஆகாயத்திடத்தே வீசுகின்ற காற்று, கலாவலின்-தன்னிடத்தே கூடுகையினாலே, (50) மயங்கி - நிரல்படவிருந்த நிரைபோய்க் கலங்கி, (53) கல்மிசை பொழிந்தென-மலைமேல் பெய்தவாக,—

(54) அண்ணல் - தலைவனுடைய, நெடு கோடு-நெடிய மலைச் சிகரத்தினின்றும், இழிதரு - குதிக்கின்ற, தெள் நீர் - தெளிந்த

நீரையுடைய, (55) அவிர் - விளங்குகின்ற, துகில் புரையும் - வெள்ளிய ஆடையைப் போலும், அ வெள் அருவி - அழகிய வெள்ளிதாகிய அருவியிலே, (56) தவிர்வு இல்-நீங்குதலில்லாத, வேட்கையேம் - விருப்பத்தையுடையேமாய், தண்டாது - அமையாமல், ஆடி-விளையாடி,— (58) நளிபடு சிலம்பில்-செறிவுண்டான மலையிடத்தே, (57) பளிங்கு சொரிவு அன்ன - பளிங்கைக் கரைத்துச் சொரிந்து வைத்தாற்போன்ற, பாய் சுனை-பரந்த சுனையை, குடைவுழி-குடைந்தாடுமிடத்தே, (58) பாயம் பாடி-எங்கள் மனத்திற்குப் பிடித்தமானவற்றைப் பாடி, (பின்) (59) பொன் எறி மணியின் - பொன்னிலே யழுத்தின நீலமணி போல, சிறுபுறம் தாழ்ந்த - சிறிய முதுகிடத்தே தாழ்ந்துகிடந்த, எம் (60) பின் இரு கூந்தல் - எம்முடைய பின்னியுள்ள கரிய கூந்தலை, பிழிவனம் - நீரைப் பிழிந்து, துவரி - ஈரத்தைப் புலர்த்தி, (61) உள் அகம் சிவந்த கண்ணேம்-உள்ளிடமெல்லாம் சிவப்பேறிய கண்களை யுடையேமாய்; (எ-று.)

(50) கொண்மூ (53) மின்மயங்கு கருவியவாய் (48) வளிகலாவலின் (50) மயங்கிப் (46) பறவை படரப் (53) பொழிந்தென (54) இழிதரும் (55) அருவி (56) ஆடிச் (57) சுனை குடைவுழிப் (58) பாயம் பாடிக் (60) கூந்தல் பிழிவனந் துவரிச் (61) சிவந்த கண்ணேமாய் — என வினைமுடிக்க. இது, மேல் (97) மலிவன மறுகி என்பதோடு இயையும்.

கருத்துரை:— பறவைகள் கூடுகளிலொடுங்கும்படி கடல் குறைய நீர்முகந்துகொண்டு நிரல்படவெழுந்த மேகம் வானத்து வளிகலாவலின் கலங்கி, முரசுபோல் முழங்கும் இடியேற்றோடு முருகனின் வேல்போல்மின்னும் மின் முதலிய தொகுதியையுடையனவாய்த் தலைவன் மலையிடத்தே பொழிந்தன; ஆதலின், அம் மலையுச்சியினின்று இழிதந்த வெள்ளிய அருவியிலே ஆடியும், சுனைநீரிற் குடைந்தும், மன விருப்பின்படி பாடியும் மகிழ்ந்து சிவந்த கண்ணேமாய், எம் கூந்தலினீரத்தைப் புலர்த்தியிருந்தோம் என்பது.

விசேடவுரை:— வீழ் - விருப்பம்; வீழ்துணை தழீஇ என்ற இடத்துப்போலே (மதுரைக்காஞ்சி, 561). அகலிரு வானம்- தன்னையொழிந்த நான்கு பூதங்களும் [நிலம், நீர், தீ, வளி] தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெருமையையுடைய ஆகாயம் என்றபடி. 'சேய் எஃகின்மின்' என்று மின்னலுக்கு முருகக் கடவுளின் வேலை உவமை கூறியது, அவன் குறிஞ்சிநிலக் கடவுளாதலின்: 'சேயோன்மேய மைவரையுலகமும்' என்றது தொல்காப்பியம். அண்ணல் மலையின் அருவி எனவே, தலைவன் நிலமும் தம் நிலமும் ஒன்றென்றாள்: அவனும் குறிஞ்சி நிலத்தோன் என்றபடி. இனி, அண்ணல் - தலைமை எனக்கொண்டு நெடுங்கோட்டினுக் கியைப்பினுமாம். அருவிக்குத் துகில் உவமை கூறியதும், சுனைநீர்க்குப் பளிங்கு உவமை கூறியதும் இன்புறத் தக்கன. இழிதரு தெண்ணீராதலின்

அருவியிலாடி என்றும், சொரிவன்ன நீராதலின் சுனை குடைந்து என்றும் கூறினார். இனி, உரையாசிரியர் ஒருவர், 'நளிபடு சிலம்பு' என்ற குறிப்பால் எதிரொலி செய்யும் மலை என்பது பெறப்படவே, தோழியும் தலைவியும் பாயம் பாடியதற்குக் காரணம் அச்சிலம்பின் எதிரொலி கேட்கும் விருப்பமே என்று கூறியுள்ளார்: அதனோடமையாது, பாயம் பாடுதற்குக் காரணம் இன்னதாதலைக் கருதாது நச்சினார்க்கினியர் நளிபடு சிலம்பைப் பிரித்துப் பிறிதோரிடத்தே இயைத்தார் எனவும் குறை கூறியுள்ளார். பாயம் - மனவிருப்பமாதலின், பாயம் பாடியதற்குக் காரணம் அவர்களின் மனவெழுச்சியே யன்றி, எதிரொலி கேட்கும் விருப்பம் எனக் குறிப்பிற் கொள்ளவேண்டுவதின்று எனத் தோற்றுகிறது. மற்றும் எதிரொலி கேட்பதற்காகப் பாடினார் என்று கொள்ளுதலாற் சிறப்பொன்றும் காண்கிலேம். பாய் சுனை-பரந்த சுனை; பாயிருள் என்பது போல.

இலக்கணக்குறிப்பு :— *பிழிவனம் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எச்சப் பொருட்டாயது.*

அடிகள் **61-98** :— மலைபடுபூக்கள் பலவற்றைத் திரிந்து பறித்துப் பாறையிற் குவித்தமை கூறும்.

வள்ளிதழ்
ஒண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சம்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
உரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிளம்
எரிபுரை எறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடசம்
எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமலர் ஆவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகம்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்தல்
தாழை தளவம் முட்டாட் டாமரை
ஞாழல் மௌவல் நறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்

பாங்கர் மராஅம் பல்பூந் தணக்கம்
ஈங்கை யிலவம் தூங்கிணர்க் கொன்றை
அடும்பமர் ஆத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரம்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவம் நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
ஆரம் காழ்வை கடியிரும் புன்னை
நரந்தம் நாகம் நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவும்
அரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய அகல்றைக் குவைஇ

பதவுரை:—(61) வள் இதழ் (62) ஒள் செம் காந்தள்-வளவிய இதழையுடைய ஒளிபொருந்திய சிவந்த கோடற்பூவும், ஆம்பல்-ஆம்பல் பூவும், அனிச்சம் - அனிச்சப் பூவும், (63) தண் கயம் குவளை-குளிர்ந்த குளத்திற் பூத்த செங்கழுநீர்ப் பூவும், குறிஞ்சி-குறிஞ்சிப்பூவும், வெட்சி-வெட்சிப் பூவும், (64) செங்கொடுவேரி-செங்கொடுவேரிப் பூவும், தேமா - தேமாம் பூவும், மணிச்சிகை-செம்மணிப் பூவும், (65) உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ்-தனக்கு உரித்தாக நாறும் விரிந்த கொத்தினையுடைய பெருமூங்கிற் பூவும், கூவிளம் - வில்வப் பூவும், (66) எரி புரை எறுழம் - நெருப்பை யொத்த எறுழம் பூவும், சுள்ளி-மராமரப் பூவும், கூவிரம்-கூவிரப் பூவும், (67) வடவனம் - வடவனப் பூவும், வாகை-வாகைப் பூவும், வால் பூ குடசம்-வெண்மையான பூவினையுடைய வெட்பாலைப் பூவும், (68) எருவை - பஞ்சாய்க் கோரையும், செருவிளை-வெண்காக்கணம் பூவும், மணி பூ கருவிளை-நீலமணி போலும் பூக்களையுடைய கருவிளமும், (69) பயினி-பயினிப் பூவும், வானி-வானிப் பூவும், பல் இணர் குரவம்-பல இதழ்களையுடைய குரவம் பூவும், (70) பசும்பிடி - பச்சிலைப் பூவும், வகுளம் - மகிழம் பூவும், பல் இணர் காயா - பல கொத்துக்களையுடைய காயாம் பூவும், (71) விரி மலர் ஆவிரை - விரிந்த பூக்களையுடைய ஆவிரமும், வேரல் - சிறுமூங்கிற் பூவும், சூரல் - சூரைப் பூவும், (72) குரீஇப்பூளை - சிறுபூளையும், குறுநறுங்கண்ணி - குன்றிப் பூவும், (73) குருகிலை-முருக்கிலையும், மருதம்-மருதப் பூவும், விரி பூ கோங்கம் - விரிந்த பூக்களையுடைய கோங்கமும், (74) போங்கம்-மஞ்சாடிப் பூவும், திலகம்-மஞ்சாடி மரத்தின் பூவும், தேன் கமழ் பாதிரி-தேன் நாறும் பாதிரிப் பூவும், (75) செருந்தி - செருந்திப் பூவும், அதிரல் - புனலிப் பூவும், பெரு தண் சண்பகம் - பெரிய குளிர்ந்த சண்பகப் பூவும், (76) கரந்தை-நாறு கரந்தையும், குளவி-காட்டு மல்லிகைப்பூவும், கடி கமழ் கலி மா-வாசனைவீசும் தழைத்த மாம்பூவும், (77) தில்லை-தில்லைப் பூவும், பாலை-பாலைப் பூவும், கல்

இவர் முல்லை-கல்லிலே படர்ந்த முல்லைப் பூவும், (78) குல்லை-கஞ்சங்குல்லைப் பூவும், பிடவம்-பிடவம் பூவும், சிறுமாரோடம் - செங்கருங்காலிப் பூவும், (79) வாழை - வாழைப் பூவும், வள்ளி-வள்ளிப் பூவும், நீள் நறு நெய்தல் -நீண்ட நறிய நெய்தற் பூவும், (80) தாழை-தெங்கின் பாளையும், தளவம் - செம்முல்லைப் பூவும், முள் தாள் தாமரை - முள்ளையுடைத்தாகிய நாளத்தையுடைய தாமரைப் பூவும், (81) ஞாழல்-ஞாழற் பூவும், மௌவல்-மௌவற் பூவும், நறு தண் கொகுடி - நறிய குளிர்ந்த கொகுடிப் பூவும், (82) சேடல்-பவழக்கால் மல்லிகைப் பூவும், செம்மல்-சாதிப் பூவும், சிறுசெங்குரலி - கருந்தாமக்கொடிப் பூவும், (83) கோடல் - வெண்கோடற் பூவும், கைதை-தாழம் பூவும், கொங்கு முதிர் நறு வழை - தாது முதிர்ந்துள்ள நறிய சுரபுன்னைப் பூவும், (84) காஞ்சி - காஞ்சிப் பூவும், மணி குலை கள் கமழ் நெய்தல் - நீலமணி போலும் கொத்துக்களையுடைய தேன் நாறும் கருங்குவளைப் பூவும், (85) பாங்கர்-பாங்கர்க்கொடிப் பூவும், மராஅம்-மரவம் பூவும், பல் பூ தணக்கம்-பல பூக்களையுடைய தணக்கம் பூவும், (86) ஈங்கை-இண்டம் பூவும், இலவம்-இலவம் பூவும், தூங்கு இணர் கொன்றை-தொங்குகின்ற பூங்கொத்தினையுடைய கொன்றைப் பூவும், (87) அடும்பு-அடும்பம் பூவும், அமர் ஆத்தி-பொருந்தின ஆத்திப் பூவும், நெடு கொடி அவரை - நீண்ட கொடியினையுடைய அவரைப் பூவும், (88) பகன்றை - பகன்றைப் பூவும், பலாசம் - பலாசம் பூவும், பல்பூ பிண்டி - பல பூக்களையுடைய அசோகமும், (89) வஞ்சி - வஞ்சிப் பூவும், பித்திகம்-பிச்சிப் பூவும், சிந்துவாரம்-கருநொச்சிப் பூவும், (90) தும்பை-தும்பைப் பூவும், துழாஅய் - திருத்துழாய்ப் பூவும், சுடர் பூ தோன்றி-விளக்குப் போலும் பூவினையுடைய தோன்றிப் பூவும், (91) நந்தி-நந்தியாவட்டப் பூவும், நறவம் - நறைக்கொடியும், நறு புன்னாகம்-நறிய புன்னாகப் பூவும், (92) பாரம் - பருத்திப் பூவும், பீரம்-பீர்க்கம் பூவும், பைங்குருக்கத்தி-பசிய குருக்கத்திப் பூவும், (93) ஆரம் - சந்தனப் பூவும், காழ்வை-அகிற் பூவும், கடி இரு புன்னை-மணத்தையுடைய பெரிய புன்னைப் பூவும், (94) நரந்தம்-நாரத்தம் பூவும், நாகம் - நாகப் பூவும், நள்ளிருணாறி - இருவாட்சிப் பூவும், (95) மா இரு குருந்துஉம்-கரிய பெரிய குருந்தம் பூவும், வேங்கைஉம்-வேங்கைப் பூவும், (97) அங்கு மால் உடைய-அம் மலைச்சாரலிடத்துத் தம்மில் மயங்கினவாய், (96) அரக்கு விரித்தன்ன - சாதிலிங்கத்தைப் பரப்பினாற் போன்ற, (95) பிறஉம்-பிறபூக்களும், (96) பரு ஏர் அம் புழகுடன்-பருத்த அழகினையுடைய மலையெருக்கம்பூவுடனே, (97) மலிவனம்-(பூக்களிடத்து) மனவேட்கை மிக்கேமாய், மறுகி-பலகாலும் திரிந்து [பறித்து], (98) வான்-மழைபெய்து, கண் கழீஇய-தன்னிடத்தைக் கழுவித் தூய்தாக்கின, அகல் அறை - அகன்ற பாறையிலே, குவைஇ-அப் பூக்களைக் குவித்து; (எ - று.)

(61) சிவந்த கண்ணேமாய், (97) மலிவனம் மறுகிப் (96) பரேரம்புழகுடனே (62-95) ஒண் செங்காந்தள் முதல் வேங்கைவரை

குறித்தவற்றையும் பிறவற்றையும் [பறித்து] (98) பாறையிலே குவித்து—என வினைமுடிவு செய்க.

விசேடவுரை:—ஆற்றொழுக்காய் உரை கூறாது, 95 - 97 வரிகளுக்கு முன்பின் கூட்டி உரை வகுத்ததென்னை யெனில்:— (62) செங்காந்தள் தொட்டு (95) வேங்கை வரை தனிப்பட்ட பூக்கள் கூறப்பட்டிருத்தலால், தனிப்பட்ட பூவாகக் கூறப்பட்ட (96) பரேரம்புழகையும் அவையிற்றோடுசேர வைத்திருக்கலாமே; அங்ஙன் தொடுக்காது மூன்றனுருபுகொடுத்துப் பிரித்து, இடையே (95) 'பிறவும்' என்ற சொல்லால் பிறபூக்களையும் விராய்த்தொடுக்க வைத்தமையின் என்க. அஞ்ஞான்று 'உடைய' என்ற பலவின்பாற் சொல்லை 'பிறவும்' என்பதனோடு இயையவைத்து, 'அரக்கு விரித்தன்ன பிறவும்' என்று கொண்டுகூட்டிப் பொருள் கண்டனர் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர். இஃது போற்றத்தக்கதே. இங்ஙன் ஆசிரியர் கருத்தறிந்து உரை வகுக்குந் திறம் அவர்க்கே தகும். இங்கு வந்துள்ள பூக்களுக்கு அவர் வகுத்த உரையை, "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர் மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்பதற்கேற்பக் கொண்டு கூறுதலல்லது வேறு என்செய்யுந் தரத்தேம்? உதாரணமாக, (69) 'இணர்க்குரவம்' என்பதற்கு - இதழ்களையுடைய குரவம்பூ என்றும் (70) 'இணர்க்காயா' என்பதற்கு - கொத்துக்களையுடைய காயாம்பூ என்றும், (74) 'போங்கம் திலகம்' என்பதற்கு, போங்கம் மஞ்சாடிப்பூ, திலகம்-மஞ்சாடி மரத்தின் பூ என்றும், வேறுபாடு தெரிப்ப உரை வகுத்த பெற்றிமை, அவரது நுண்மாண் நுழை புலத்தைக் காட்டுவதாகும்.

இனி, ஒருசில மலர்களைத் தெரிந்தமை குறிப்பாம். செங்காந்தள்-கார்காலத்துப் பூப்பது: கைபோல் பூக்குமோர் பூ—"கைபோற் பூத்த கமழ்குலைக் காந்தள்" (பரிபாடல், 19), "செழுங் குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்" (சிறுபாண்) என்பன காண்க. கம்பரும், "சேயிதழ்க் காந்தட் செம்பூ, வேனிலை வென்றதம்மா காரென வியந்து நோக்கி, மாநிலக் கிழத்தி கைகள் மறித்தன போன்ற" என்றார். காந்தளை முதலிற் கூறியது - குறிஞ்சிநிலக் கடவுளாகிய முருகனுக்கு அடையாளப் பூவாதலின்: 'வெறியாட் டயர்ந்த காந்தளும்' என்பதனாலறிக. ஆம்பல் - பெரும்பாலும் காலையிற் கூம்பி மாலைக் காலத்து மலர்வதோர் பூ: "ஓம்பு திங்களுலந்து சுடர்கண்ட ஆம்பலாய் மலர்க்காடொத் தழிந்ததே" என்றது சிந்தாமணி. அனிச்சம் - மோப்பக் குழையும் மிகவும் மென்மையதோர் பூ: 'நன்னீரை வாழி யனிச்சமே நின்னினும், மென்னீரள் யாம்வீழ்பவள்", 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்ற குறள்களால் தெளியலாம். குவளை-செங்கழுநீர்ப்பூ: மருத நிலத்தது; காலையில் மலர்வது: 'செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய்கூம்பினகாண்' என்றது திருப்பாவை. குறிஞ்சி-கரிய கொம்புகளையுடைய குறிஞ்சி மரத்தில் மலரும் பூ: இந்தப்பூ-குங்குமத்திற்கு உவமை: "குறிஞ்சிப்பூங் கோதை போலுங்

குங்கும முலையினுள் என்றது சிந்தாமணி. இஃது மைவரையுலகிற்குச் சிறந்த பூ. வெட்சி—காட்டில் தழைத்து வளர்வது: "கடற்றிற் கலித்த முடச்சினை வெட்சி" என்றது குறுந்தொகை. இந்தப் பூவின் மொட்டு சிவலின் கால் முள்ளைப்போன்றிருக்கும் என்பதை 'இதல் முள்ளொப்பின் முகை முதிர்வெட்சி' என்ற அகநானூற்றடியால் அறிக. வாகை-இந்த மரத்தின் வெள்ளிய நெற்றுக்கள் கோடைக்காற்றால் பறைபோல் ஒலிக்கும்: இந்த நெற்றுக்களின் விதை அரியார் சிலம்பின் ஆர்க்கும். இதன்பூ மயிலின் உச்சிச்சூட்டு போன்றிருக்கும்: "வாகை யொண்பூப் புரையும் உச்சிய தோகை" என்றது பரிபாடல். எருவை-கொறுக்கைச்சி என்பதுமாம். கருவிளை-மயிற்பீலியின் கண்போன்றது: 'பீலியொண்பொறிக் கருவிளை' (குறுந். 110), "தண்புனக் கருவிளைக் கண்போன் மாமலர், ஆடுமயிற் பீலியின் வாடையொடு துயல்வர" (நற்றிணை. 262) என்பன காண்க: 'விழியொத்த விளையின் மென்பூ' என்றார் கம்பரும். குரவம்-வாடை தொடங்கின காலத்தே பூக்கும் என்ப. (சிந்: நச்சி - உரை: 2690). கையிலே பிடித்த குறும்பூழின் கால்போல் இதன் முகையிருக்கும் (சிந்: 1651). காயா-கருநிறப் பூ: மயிலெருத்து போன்றிருக்கும்: 'கரிபரந்தன்ன காயா' (அகம்: 133), 'செறியிலைக் காயா வஞ்சன மலர(முல்லைப்பாட்டு),'கருநனைக்காயா கணமயிலவிழவும்' (சிறுபாண்: 165) என்பன காண்க: இது, திருமாலின் நிறத்திற்கு ஒப்புக்கூறப்படும்: "காயாமலர்காள்! திருமால் உருவொளி காட்டுகின்றீர்" என்றார் நாச்சியாரும். ஆவிரை - பொன்போற் பூப்பது: 'பொன்னேராவிரைப் புதுமலர்' (குறுந்: 173), 'அடர் பொன் னவிரேய்க்கும் ஆவிரங் கண்ணி' (கலி: 140) என்பன காண்க. மருதம்-இதன்பூ, நிறத்தால் சந்தனத் தேய்வையையொத்திருக்குமென்பதை 'நறுங் குறடுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை, தேங்கமழ் மருதிணர் கடுப்ப' என்ற திருமுருகாற்றுப்படையாலுணரலாம். கோங்கம் - இதன் அரும்பை நகிலுக்கு உவமை கூறுவர்: 'கோங்கின் குவிமுகிழ் இளமுலை' (முருகு: 35), 'கோங்கு முகைத்தன்ன குவிமுலை' (அகம்: 240), 'கோங்கின் முகைவனப்பேந்திய முற்றாவிளமுலை' (புறம்: 336) என்பன காண்க. திலகம் - மரமென்பதை 'ஓங்கலின்' என்ற இளங்கோவடிகள் சொல்லாலுணரலாம். (புறஞ்சேரி: 152-153). பாதிரி-இம்மரம், 'சித்திரையிற் பாதிரி பூத்தது' என்றபடி இளவேனிற் பருவத்தே பூப்பதாகும்: கார்காலத்து மலரின்றிக் கிடக்கும் என்பதை 'பாடலம் வறுமைகூர' என்ற கம்பர் வாக்காலுணர்க. இந்தப் பாதிரிப்பூ நறுமணங் கமழுமென்பதை 'பாதிரி கமழும் ஓதி' (புறம்-70) என்பதாலும் 'ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு, தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு' (நாலடி-139) என்பதாலும் அறியலாம். செருந்தி - நெய்தல் நிலத்திற்குரிய மரம்: இதன் பூ காலைப்பொழுதில் மலருமென்பதை அகம் 240-ஆம் பாடலாலறியலாம். 'பொன்னடர்ந்த ஒள்ளிணர்ச் செருந்திப் பன்மலர்' (அகம்: 280) என்றதால், பொன் போன்ற

நிறமுடையது எனத் தெரிகிறது. அதிரல்-புனலிப்பூ என்றனர் நச்சினார்க்கினியர்: முல்லை நிலத்தது (முல்லைப்பாட்டு: 51): இதனைக் காட்டுமல்லிகை என்று அரும்பதவுரையாசிரியரும், மோசிமல்லிகை என்று அடியார்க்குநல்லாரும் குறித்தனர். (சிலப்: 13: 156): "குயில்வாயன்ன கூர்முகையதிரல்" என்றது புறம் (269). சண்பகம் - கோழி கான்முள்போல் அரும்பும் (சிந்: 1650). கரந்தை—'நாகுமுலையன்ன நறும்பூங்கரந்தை' என்றது (புறம்: 261). தில்லை—இஃதோர் மரம். இதன் தளிர் சடை போன்றிருக்கு மென்பது, 'தில்லையன்ன புல்லென் சடையோடு' (புறம்-252) என்பதால் பெறப்படும். இந்த மரங்கள் அடர்ந்த காடாயிருந்தமைபற்றிச் சிதம்பரத்துக்குத் 'தில்லை' என்ற பெயர் வந்ததென்பர். பிடவம்-ஓர் செடி: கார்காலத்தே பூப்பது: குட்டிப் பிடவம் என்னுங் கொடி யென்றலுமுண்டு. இது மிக்க வாசனையுடையது என்பதை 'சேண்நாறு பிடவம்' என்ற முல்லைப்பாட்டாலறிக. இந்தப் பூ—பாலின் நுரையை யொத்திருக்கும் என்பதை 'ஆய்ச்சியர் முழவில்பிழிந்த பால்வழி நுரையினைப் பொருவுவ பிடவம்' என்ற கம்பர் கூற்றாலறியலாம். நெய்தல் - கழியிடை பூப்பது: "பாசடைநிவந்த கணைக்கால் நெய்தல்......இருங்கழியோத மல்குதொறும் கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" என்றது குறுந்தொகை (9). தளவம்-செம்முல்லை: இதன் முகைக்குச் சிரலின் [சிரல்-மீன்கொத்திப் பறவை] வாய் உவமை: 'பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை' என்றது ஐங்குறுநூறு (447). ஞாழல் - புலிநகக் கொன்றை என்பர்: ஞாழற்பூச் சிறியதென்பதும் வெண்சிறுகடுகுபோன்றதென்பதும், 'ஐயவியன்ன சிறுவீ ஞாழல்' (குறுந்: 50) என்பதால் தெளியலாம். கொகுடி - முல்லை வகையது என்ப. சேடல்-ஒரு மரம்: உச்சிச்செலுந்தில் எனக் கூறினர் அடியார்க்குநல்லார் (சிலப்: 13 : 153). இதனைநோக்க மிக ஓங்கி வளருவதோர் மரமெனத் தெரிகிறது. கோடல்-வெண்காந்தள்: கார்த்திகைக் கொடியென்றும், கார்த்திகைப் பூவென்றும் வழங்கும்படி இது மழைக்காலத்திற் பூத்தல் இயல்பு: 'கோடல்கள் பெருமைகூர' என்றார் கம்பரும் கார்காலப்படலத்து. இந்த வெண்காந்தள் பாம்பின் படம்போன்ற மலர்களையுடையன என்பதை "காந்தளும் பாந்தளைப் பாரித்தலர்ந்தனவே", "வெய்யவாய், அரவுபைத் தாவித்தன்னவங்காந்தளவிழ்ந்தலர்ந்தன", "பைந்நாகப் பள்ளி மணிவண்ணனிற் பாயல்கொண்டு, கைந்நாகந்துஞ்சுங் கமழ் காந்தளஞ்சாரல்" என்பவற்றால் அறியலாம். 62-ஆம் வரியில் செங்கோடற்பூ கூறியுள்ளபடியால், ஈண்டு, கோடல்-வெண்கோடற் பூவாயிற்று. வழை-சுரபுன்னை மரம்: இதன் காய் குடத்தையொத்திருக்கும்: 'குடம்புரைகாய்வழை' என்றார் சிந்தாமணியாரும். காஞ்சி-குறுங்காலையுடையதோர் மரம்; மருத நிலத்திற்குரியது. 'மணிக்குலைக்கட்கமழ் நெய்தல்' என்றது நீணறுநெய்தலின் (79) வேறு கூறியபடி. பாங்கர்-ஓமை என்றனர் நச்சினார்க்கினியர்: இஃது பாலைக்குரியதோர் மரம். இனி,

பாங்கர் என்பது ஒரு கொடியுமாம்: 'பாங்கரும் முல்லையுந்தாய' (கலி: 111) என்றவிடத்து நச்சினார்க்கினியரே 'பாங்கர்க்கொடியும் முல்லைக்கொடியும் பரந்த' என உரை கண்டுள்ளனர். மராஅம்-கடம்பு: பொரிஅரையினையுடையது: இளவேனிலில் மலரும்: இதன் கண் தெய்வம் இருத்தல் கூறப்படுவதுண்டு: 'மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்' (குறுந்: 87), 'நல்லரை மராஅத்த கடவுள்' (மலைபடு: 395-6) என்பன காண்க. ஈங்கை-நுண்ணிய முள்ளை யுடையது: இதன் பூ துய்யையுடையது: வாடைக்காற்றில் உதிர்ந்துபோம். இலவம்-இதன் பூ தகர்க்கப்பட்ட ஊன் போன் றும், எரிபலவாய் முளைப்பன போன்றும் தோன்றும் (சிந்: 1701) கொன்றை—கார்காலத்தில் நீண்ட கொத்தாக மலர்ந்து தொங் கும்: பொன் போன்றிருக்கும்: இதனை 'கொன்றைகள்மேல், தூங்குபொன் மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்' என்ற நாச்சியார்திருமொழியாலும் உணரலாம். அடும்பு-நெய் தல் நிலத்திற்குரிய கொடி; மணற்கோட்டில் படரும்: மானினது அடியன்ன கவட்டிலை கொண்டது; தார்மணியன்ன ஒண்பூக் கொண்டது (குறுந்: 243). பகன்றை-சிவதைக் கொடி: பெருங் கையால் என்னுங் கொடி என்றனர் அடியார்க்குநல்லார் (சிலப்: 13: 157): பகன்றை மலர் வெண்ணிறமுடைத்தாய் நறுமண மில் லாதது என்பதை 'பேரிலைப் பகன்றைப் பொதியவிழ்வான்பூ, இன்கடுங் கள்ளின் மணமில கமழும்'' என்ற குறுந்தொகையால் (330) அறிக. பலாசம்-செம்முருக்கமரம்: இது பங்குனி மாதத்துப் பூப்பூத்து மிக்க செந்நிறமுடைத்தாயிருக்கும்: "பங்குனி மலர்ந் தொளிர்பலாசவனம்" என்றார் கம்பரும். வஞ்சி-ஆண்டு முழுதும், பச்சை நிறமுடையதாக உள்ள ஒருவகைக் கொடியின் மஞ்சள் நிறப்பூ என்பர், டாக்டர் போப். பிந்திகம்-பிச்சிப்பூ: இதன் அரும்பு சிவந்திருக்கும்: மாரிக்காலத்து மலரும்: அந்திக்காலத்து மலரும்: இதனை, "பெருந்தண்மாரிப் பேதைப் பித்திகத்து, அரும்பே முன் னும் மிகச் சிவந்தனவே'' (குறுந்:94) என்றதால் அறியலாம். துழாய்-திருத்துழாய் எனச் சிறப்புற அடைகொடுத்து நச்சினார்க் கினியர் உரை வகுத்தது, அஃது திருமாலுகந்ததாதலின். பீரம்-பீர்க்கம்பூ: பொன்போன்ற நிறமுடையது: 'பொன்போற் பீர மொடு புதல்புதல் மலர' என்றது நெடுநல்வாடை. குருந்து-கார் காலத்தில் மலரும். வேங்கை-'கருங்காற் பொன்னிணர் வேங்கை' என்றது நற்றிணை: இந்த வேங்கைப்பூப் பரந்த பாறை புலிபோற் றோன்றும் என்பது 'கருங்கால் வேங்கை வீயுகு துறுகல், இரும் புலிக் குருளையிற்றோன்றும்' (குறுந்:47) என்றதால் உணரலாம். வேங்கை மலரைப் பறிக்கக் கருதுவோர் புலிபுலியென்று ஆரவா ரிப்பர் என்பதை "ஒலிசினைவேங்கை கொய்குவஞ் சென்றுழிப், புலிபுலியென்னும் பூசல்தோன்ற'' என்ற அகநானூற்றால் (48) அறிக. பரேரம்புழகு-செம்பூ எனினுமாம்: புனமுருங்கை என்பாரு முளர்.

இலக்கணக்குறிப்பு:—(62) செங்காந்தள் முதல் (94) நள்ளிரு ளறிவரையுள்ளவற்றிற்கெல்லாம் இரண்டனுருபும் உம்மையும்

விரித்துப் பொருள்கொள்க. (95) குருந்தும் வேங்கையும் பிறவும் என்ற மூன்றற்கும் உம்மை விரித்திருத்தலால், இரண்டனுருபு மட்டும் விரித்துப் பொருள்கொள்க. அரக்குவிரித்தன்ன பிற வும் என்றவிடத்து உவமம், விரிந்தல் தொழில்பற்றி வந்தது. மலிவனம்-தன்மைப் பன்மை.

இனி, இக்குறிஞ்சிப்பாட்டில், குறிஞ்சித் திணைக்குரிய வல்லாத பிறதிணைக்குரிய பூக்களும் கூறப்பட்டுள்ளனவே எனின், "எந்நிலமருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்,வந்தநிலத்தின்பயத்தவாகும்" என்ற புறனடைச் சூத்திரத்தால் அமையும் என்க. "கபிலர் பாடிய பெருங்குறிஞ்சி யில் (குறிஞ்சிப்பாட்டு) வரைவின்றிப் பூ மயங்கியவாறு காண்க" என்றது நச்சினார்க்கினியம். செங்காந்தட் பூ முதல் பரேரம்புழகு வரை மொத்தம் தொண்ணூற்றொன்பது பூக்கள் கூறப்பட்டுள்ளன.

அடிகள் 99-106:—தோழியும் தலைவியும் கோலஞ்செய்துகொண்டு அசோகின் தண்ணிழலிருந்தமை கூறும்.

புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்
கிள்ளை யோப்பியும் கிளையிதழ் பறியாப்
பைவிரி யல்குற் கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
எரியவிர் உருவின் அங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழல் இருந்தன மாக

பதவுரை:—(99) புள் ஆர் இயத்த-பறவைகளின் ஓசையாகிய நிறைந்த வர்ச்சியங்களையுடைய, விலங்கு மலை சிலம்பின்-ஒன்றற் கொன்று குறுக்கிட்டுக் கிடக்கின்ற மலைப்பக்கத்திற் புனத்தே, (100) வள் உயிர் தெள்விளி-பெரிய ஓசையினையுடைய தெளிந்த சொற்களை, இடைஇடைபயிற்றி-நடுவேநடுவே சொல்லி, (101) கிள்ளை உம் ஓப்பி-கிளியையும் ஓட்டி, கிளை இதழ் பறியா-புறவிதழ் களை நீக்கிப் போகட்டு, (102) பை விரி அல்குல்-பாம்பின் படத்தைப்போலே பரந்த அல்குலுக்கு, கொய் தழை தைஇ-கொய்து செப்பஞ்செய்த தழையைக் கட்டியுடுத்து, (103) பல்வேறு உருவின் - பலவாய் வேறுபட்ட நிறத்தினையுடைய, வனப்பு அமை கோதை - அழகமைந்த மாலைகளை, எம் (104) மெல் இரு முச்சி-எம்முடைய மெல்லிய கரிய (மயிர்) முடியிலே, கவின் பெற கட்டி-அழகுபெறச் சுற்றி, (105) எரி அவிர் உருவின் - நெருப்புப்போல விளங்கும் நிறத்தையுடைய, அம் குழை செயலை-அழகிய தளிரை யுடைய அசோகினது, (106) தாது படு தண் நிழல்-மலர்த்தாது விழுகின்ற குளிர்ந்த நிழலிலே, இருந்தனம் ஆக - இருந்தவள

விலே, (எ-று.)—(100) தெள்விளி பயிற்றி (101) கிள்ளையும் ஓப்பி (102) தழை தைஇ [உடுத்துக்] (103) கோதையை (104) முச்சிக் கவின்பெறக் கட்டிச் (105) செயலைத் (106) தண்ணிழலிலே யிருந்தனமாக—என வினைமுடிக்க. (199) குன்றுகெழு நாடனாகிய எம்விழைதருபெருவிறல், (136) அணிபெற வந்து, (141) இளையீர்! இறந்த (142) கெடுதியுமுடையேனென்றனன்—என இயையும்.

(100) பயிற்றி, (101) ஓப்பி, பறியா, (102) தைஇ, (104) கட்டி என்ற வினையெஞ்சுகிளவிகள் (106) இருந்தனமாக என்பதோடு முடியும்.

கருத்துரை:— பறவைகளின் இன்னோசை நிறைந்த தினைப் புனத்தில், சொற்கொண்டு கிளியோப்பி, அல்குலிடத்தே கொய்த தழையைக் கட்டியுடுத்து, பல்வேறு நிறத்தவாய மாலைகளை முடியிலே அழகுபெறச்சுற்றி, அசோக மரத்தினது தண்ணிழலில் இருந்தேம் என்று தோழி கூறினாள் என்பது.

விசேடவுரை:— இயம்-வாச்சியம்: பறவைகளின் ஒலி இனிமை கூறியபடி. விலங்கு-குறுக்கிட்டிருப்பது; [குறுக்காக வளர்தலால் தான் மிருகத்திற்கு 'விலங்கு' என்று பெயராயிற்று என்பதை நினைக.] 'மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயின்' என்ற சிலப்பதிகார அடியிலும் இப்பொருள் காண்க. விளி-சொல்; இங்கு 'ஆயோ' என்னும் கிளியையோட்டுஞ் சொல்லை அது குறிக்கும். 'ஆயோ' என்பது கிளியை யோட்டுவதற்குக் கூறப்படுவதென்பதை 'வல்வினையேனும் கிளியும் எள்கும் ஆயோ' என்ற நம்மாழ்வார் வாக்கால் உணரலாம். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாதலின் தெளிவாகச் சொன்னார்கள் என்பது 'தெள்விளி' என்பதாற் பெறப்படும். இதனை "வெஞ்சொற் பேசும் வேடர் மடவாரி தணமதுவேறி, அஞ்சொற்கிளிகள் ஆயோவென்னும் அண்ணாமலையாரே" என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தாலறிக. கிளை இதழ் பறியா என்றது-பறித்த மலர்களின் புறவிதழ்களை எனக் கொள்க. கொய்தழை என்றது-மிகுதிப்பட்ட இடங்களை நறுக்கிச் செப்பஞ்செய்த தழை. பலவகைப்பட்ட மாலைகள் என்றவை-நிணந்தவை, கோத்தவை, நெய்தவை, தூக்கமணந்தவை போல்வன: அவையாவன முறையே- மலர் நிறைந்து தெற்றின மாலைகள், நிறம் மாறுபடக் கோத்த மாலைகள், பூக்களை இடையிட்டுத் தொடுத்த மாலைகள், பூக்களை நெருங்கவைத்துத் தூக்கிக் கட்டின மாலைகள்.

இலக்கணக்குறிப்பு:— 'கிள்ளையை யோப்பியும்' என்றவிடத்து, உம்மை சிறப்பும்மை: கிள்ளையையும் ஓப்பி எனக்கொள்க. பறியா-உடன்பாட்டெச்சம்.

அடிகள் 107-142: ஒரு தொடர்: அவற்றுள், அடிகள் 107-127:—தலைவன் பூண்ட கோலம் கூறும்.

எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
ஈரம் புலர விரலுளர்ப் பவிழாக்

காழகி லம்புகை கொளீஇ யாழிசை
அணிமிகு வரிமிஞி றார்ப்பத் தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பித்திகத் தாயிதழ் அலரி
அந்தொடை யொருகாழ் வளைஇச் செந்தீ
ஒண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
அந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி அம்புதெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
இயலணிப் பொலிந்த ஈகை வான்கழல்
துயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ

பதவுரை:—(107) எண்ணெய் நீவிய-பலகாலும் எண்ணெய் வார்த்த, (116) நலம்பெறு சென்னி-நன்மையைப்பெற்ற தலையில், [தலையினிடத்துக் குஞ்சியில் என்றபடி] (108) தண் நறு தகரம்-குளிர்ந்த நறிய மயிர்ச்சந்தனத்தை, கமழ மண்ணி-வாசனை வீசும்படி பூசி, (109) ஈரம் புலர-அந்த ஈரம் உலரும்படி, விரல் உளர்ப்பு-விரலாலே அலைத்து, [மேலும் நன்கு புலர்த்துதற்பொருட்டு], அவிழா-பிணிப்பை அவிழ்த்து விடுத்து, (அதனை) (107) நறுகாழ் (110) காழ் அகில் அம்புகை கொளீஇ-நறிய கரிய வயிரமுற்றின அகிலினது அழகிய புகையையூட்டி (அங்ஙன் புகைகொளுவுகையினாலே), யாழ் இசை (111) அணிமிகு-யாழினது ஓசைபோல் அழகுமிகுகின்ற, வரிமிஞிறு ஆர்ப்ப-பாட்டினையுடைய வண்டுகள் ஆரவாரிக்கும்படி, தேன் கலந்து-அகிலினது நெய்கலந்து,—(அதனோடு) (117) பைங் கால் பித்திகத்து-பசிய காம்பினையுடைய பிச்சியினுடைய, ஆய் இதழ் அலரி-அழகிய இதழ்களையுடைய பூவால் தொடுக்கப்பட்ட, (118) அம் தொடை-அழகிய தொடையலாகிய, ஒருகாழ்-ஒரு வடத்தை, வளைஇ-சுற்றி, (112) மணிநிறம் கொண்ட-நீல மணியினது நிறத்தைத் தன்னிடத்தேகொண்ட, (107) சுரிவளர்-கடைகுழன்று வளர்ந்த, (112) மா இரு குஞ்சியின்-கரிய பெரிய மயிரின்கண்ணே,

(113) மலையஉம்-மலையிடத்துள்ளனவும், நிலத்தஉம்-நிலத்திடத்துள்ளனவும், சினையஉம்-கொம்புகளிற் பூத்தனவும், சுனையஉம்-சுனைகளிற் பூத்தனவும் ஆகிய, (114) வண்ணம் வண்ணத்த மலர்-பலநிறங்களையும் பல சாதிகளையுமுடைய மலர்களை, ஆய்பு-

ஆராய்ந்து, விரைஇய-தொடுத்த, (115) தண் நறு தொடையல்-குளிர்ச்சி பொருந்திய நறிய தொடையலினையும், வெள் போழ் கண்ணி-வெள்ளிய தாழை மடலிஞலேயாகிய கண்ணியினையும், (116) நாம் உற மிலேச்சி-முருகன் என்று அச்சமுறும்படி சூடி,—-[112)குஞ்சியின் கண்ணே (116) [மிலேச்சிஎன இயையும்.]

(120) குவவு மொய்ம்பு அலைப்ப - திரளுதலையுடைய தோளிலே வீழ்ந்து அலைக்கும்படி, (118) செம் தீ-சிவந்த நெருப்பைப் போன்ற, (119) ஒள் பூம் பிண்டி - ஒள்ளிய பூக்களையுடைய அசோகினது, (120) அம் தளிர் - அழகிய தளிரை, (119) ஒரு காது செரீஇ - ஒரு காதிலே செருகி, (120) சாந்து அருந்தி - சந்தனத்தைப் பூசி, (121) மைந்து இறைகொண்ட - வலிமை தங்குதல்கொண்ட, (123) செமபொறிக்கு ஏற்ற - மூன்று வரியாகிய உத்தமவிலக்கணத்திற்குப் பொருந்தின, (121) மலர்ந்து ஏந்து அகலத்து - அகன்று உயர்ந்த மார்பிடத்தே, (122) தொன்றுபடு பூணெடு-பழமை தொடங்கிவருகின்ற பேரணிகலங்களோடே, நறு தார் பொலிய - நறிய மாலை விளக்கமுற,—(123) வீங்கு இறை தட கையின் - பூண் இறுகின முன்னங்கையைக் கொண்ட பெரிய கையிலே, (124) வண்ணம் வரிவில் ஏந்தி-அழகிய வரிந்து கட்டப்பட்ட வில்லையெடுத்து, அம்பு தெரிந்து-அம்புகளை ஆராய்ந்து பிடித்து, (125) நுண் வினை கச்சு-நுண்ணிய தொழிற்பாடு அமைந்த ஆடையினை, தயக்கு அற கட்டி-துளக்கமில்லாதபடி கட்டி, (126) ஈகை-பொன்ஞல், இயல்-செய்யப்பட்ட, அணி - பூண்களில், பொலிந்த - பொலிவு பெற்ற, வான் கழல் - சிறந்த வீரக்கழல், (127) துயல்வருந்தோறும்-[அடிவைத்துப்] பெயரும் பொழுதெல்லாம், திருந்து அடி கலாவ - பிறக்கிடாத அடியிலே ஏறுவதும் இறங்குவதுமாய் அசைய,—(எ-று.)

(108) தகரங் கமழுமண்ணி (109) அவிழா (110) புகை கொளுவுகையிஞலே (111) [அகிலினது] தேங்கலந்து (118) பித்திகத்து அலரி அந்தொடை ஒருகாழ் வளைஇ (112) மணி நிறங்கொண்ட குஞ்சியின்கண்ணே (116) மிலேச்சிப் (119) பிண்டியொருகாது செரீஇ (122) பூணெடு தார் பொலியக் (126) கழல் (127) கலாவக் (125) கச்சை கட்டி (124) வில் ஏந்தி அம்பு தெரிந்து—(136) விடையின் அணிபெற வந்து என முன் பின் கூட்டிப் பொருளியைபு நேர்வர வினைமுடிக்க.

விசேடவுரை:—117 - 118-ஆம் வரிகளை 111-ஆம் வரியில் வந்துள்ள 'தேங்கலந்து' என்பதற்குப்பின் கூட்டிப் பொருள் காணுமாறு நச்சிஞர்க்கினியர் வற்புறுத்தற்கு அவர் காட்டிய காரணம நுண்ணிதின் நோக்கற்பாலது. "இஃது அந்திக்காலத்து மலரும் பூவாதலின்" என்ற தொடர் அக்காரணம் காட்டுவது. இதனைச் சற்று விவரிப்போம். பித்திகை என்ற பிச்சிப்பூ—அந்திக்காலத்து மலர்வது. இவ்வுண்மையை "செவ்வி யரும்பின்

பைங்காற் பித்திகத்து, அவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழு தறிந்து......மாலையயர'' என்ற நெடுநல்வாடையா லுணரலாம். அந்திக்காலத்து மலரவேண்டிய இப்பிச்சிப் பூவை * ஒரு காழ் வளை இத் தலைவன், (45) உரவுக்கதிர் தெறூஉம் உருப்பவி ரமயத்து (யாங்கள்), (106) தண்ணிழ லிருந்தனமாக வந்தான் என்று கூறுதல் பொருத்தமின்றாகலானும், மேல் (214) 'பூமலி சோலை அப்பகல் கழிப்பி' என வருதலால், இந் நிகழ்ச்சிகளனைத் தும் பகற்பொழுதே நிகழ்ந்தவை என்பது தெற்றென உணரப் படுதலானும், ஆற்றொழுக்காகப் பொருள் கூறின், பொருத்த முறாது எனக்கொண்டு, முற்கூட்டச் செய்து பொருள் காணச் சொன்னார். அஞ்ஞான்று, முன்னை எந்நேரத்துப் பூத்த பிச்சிப் பூவின் தொடையாகிய ஒரு வடத்தைச் சுற்றியுள்ள மணிநிறங் கொண்ட குஞ்சியின்கண்ணே, இதுபோது மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவுமாகிய வண்ண வண்ணத்த மலர் களை மிலைச்சி எனப் பொருட்பொருத்தமுற்றுப் பேரின்பம் விளைத்தல் காண்க. இவ்வுரை நுணுக்கம் எம்மனோர்க்குப் படாததுவே, அவர் காட்டாராயின். அஃதேபோல் (107) சுரி வளர், நறுங்காழ் என்பனவற்றை—'நறுங்காழ் (110) காழகில்' என்றும், 'சுரிவளர் (112) மாயிருங் குஞ்சியின்' என்றும் இயைத் துப் பின்னே கூட்டிப் பொருளின்பம் பயக்கச் செய்தார். இனி, (110) 'அகில் அம் புகை கொளீஇ' என்பது (111) 'தேங்கலந்து' என்பதனோடு இயையும் நுணுக்கத்தையும் காணவேண்டும். அகிலினது அழகிய புகையூட்டுகையினாலே, அந்த அகிலினது நெய் கலந்து எனப் பொருள்பட்டுச் சிறக்கும். இதனை 'தேக்கண் இன்னகில் தேனொடு கூட்டமைத்து, ஆக்கப்பட்ட அளவில் கொழும்புகை' என்றவிடத்து (சிந்: 534) நச்சினார்க்கினியார் 'தேக்கணின்னகில்' என்பதற்கு - நெய்யைத் தன்னிடத்தே யுடைய நாற்றமினிய அகில் என உரைத்ததாலறியலாம். மற்றும் 'தேக்கணின் னகிலி னாவி தேக்கிடுங் குழலினாளை' (சிந்: 2495), 'தேனாரகிலின் புகைசேர்த்தி' (சிந்: 2692) என வந்துள்ளனவும் நோக்குக. (114) வண்ண வண்ணத்த என்ற விடத்து - ஒன்று நிறமும் ஒன்று சாதி வேறுபாடுங் கூறியது என்றனர். பிண்டித்தளிரைக் காதிலே செருகுதலை 'வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்' என்று திருமுருகாற்றுப்படை யிலுங் காணலாம். இனி, (122) தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலிய என்றவிடத்து நச்சினார்க்கினியர், 'தொன்றுபடு' என் னுஞ் சொல்லைப் பிரித்துப் 'பூணொடு' கூட்டிப் பொருள் கூறினர். இங்ஙன் கொள்ளாது, ஆற்றொழுக்காக் கூறுதலே நேர் எனக் கொண்டு உரையாசிரிய ரொருவர், 'தொன்றுபடு நறுந்தார்' என்றது, தொன்றுதொட்டு அணியும் மரபிற்றாய உரிமையுடைய மலர்மாலை என்க. என்னை? ''படையும் கொடியும்......தாரும்... ......பிறவும், தெரிவு கொள் செங்கோல் அரசற்குரிய'' என...... உரிமை கூறியாங்கு, இன்னார்க்குரிய எனத் தொன்றுதொட்டு

*89-ஆம் வரியில் பித்திகம் என்றது பித்திக அரும்பினை.

வழங்கும்உரிமையையுடைய தார் என்றவாறு" என உரை கண்டுள்ளார். இதனால் வரும் இழுக்கு என்னையெனில், 'இன்னார்க்குரிய தார்' என்று தெரிந்துவிட்டால், அப்போது அடையாளத் தார் கூறினமையின் அகமாகாது போய், களவித்தலைவன் பெயர் கூறியதையு மொக்குமாகும். ஆனால், 'மக்கணுதலிய வகனைந் திணையும், சுட்டியொருவர் பெயர்கொளப் பெறுஅர்' என்று அகனைந்திணையிற் பெயர் கூறுதலை இலக்கணம் மறுக்கின்றது. இனி, 'செம்பொறிக்கு ஏற்ற' என்ற அடையை (அகலம்) மார்புக்கு ஏற்றி நச்சினார்க்கினியர் கூறியிருப்ப, ஆற்றொழுக்காக் கொண்டு 'வீங்கிறைத் தடக்கை' என்பதில் இறைக்கு ஏற்றினாரு முளர். ஆனால், 'பொறியுடை மார்ப' (பெருங்கதை), 'பொறி குலாய்க் கிடந்த மார்பிற் புண்ணியன்' (சிந்: *1706*) 'மார்பிடை வரியு மூன்றுள' (சிந்: *1462*) என்பவற்றை நோக்குமிடத்தும் "ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பின், செம்பொறி வாங்கிய......... தோள்" என்ற திருமுருகாற்றுப்படை யடிகளை நோக்குமிடத்தும் மார்புக்கு ஏற்றிக் கூறுதலே பெற்றி என்பது விளங்காநிற்கும். இதனைக் காணாது, "இவ்வாறு கொண்டு கூட்டுதல் நூலாசிரியர் கருத்தைத் தவிர்த்துத் தம் கருத்தையே கூறுதலன்றிப் பிறிதென்னும்?" என்று வினவினால், அவர்க்கு என் கூறுவது!:பொருள்கோள் வகைகளுள் கொண்டுகூட்டையும் ஒன்றாக வைத்து விதி வகுத்த தெப்பயன் நோக்கியோ அறிகிலேம்.

இலக்கணக்குறிப்பு :—நாம்-அச்சம். 'பே நாம் உருமென வரூஉங் கிளவி, ஆமுறை மூன்றும் அச்சப் பொருள' என்பது விதி.

அடிகள் 128 - 136 :— வேட்டைநாய்கள் மேல்வர நடுங்கித் தாம் வேற்றுப்புலம்பட, தலைவன் வந்தமை தோழி கூறினமை கூறும்.

முனைபாழ் படுக்கும் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வேல் இளைஞரின்
உரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளும்
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவனம் எழுந்து நல்லடி தளர்ந்தியாம்
இடும்பைகூர் மனத்தேம் மருண்டு புலம்பட்ட
மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்து
ஆகாண் விடையின் அணிபெற வந்து

பதவுரை:—(*128*) முனை பாழ் படுக்கும் - பகைப்புலத்தைப் பாழாக்குகின்ற, துன் அரு துப்பின்-கிட்டுதற்கரிய வலிமையினையுடைய, (*129*) பகை புறம் கண்ட - பகைவர்களை முதுகு காட்டியோடச்செய்த, பல் வேல் இளைஞரின் - பல வேலினையுடைய வீரரைப்போல, (*130*) உரவு சினம் செருக்கி - பரக்கின்ற சினத்தாலே செருக்குற்று, துன்னு தொறுஉம்-(தம்மேல் ஒன்று) நெருங்குந்தோறும், வெகுளும் - கோபிக்கும், (*131*) முளை வாள் எயிற்ற-மூங்கிலின் முளை போன்று ஒளியை யுடைத்தாகிய பல்லினை

யுடையனவாய், வள் உகிர் ஞமலி - பெரிய நகத்தையுடைய நாய்கள், (132) திளையா கண்ண-இமையாக் கண்களை யுடையன வாய், வளைகுபு - (எம்மை) வளைத்துக்கொண்டு, நெரிதர-மேலே மேலே வருகையினாலே, (133) யாம் - யாங்கள், நடுங்குவனம் எழுந்து-அஞ்சினேமாய் (அசோகின் கீழிருந்த இருப்புக் குலைய) எழுந்து, நல் அடி தளர்ந்து - கடிதிற் செல்லவியலாமல், (134) இடும்பை கூர் மனத்தேம் - வருத்தம் மிக்க மனத்தையுடையே மாய், மருண்டு-மயங்கி, புலம் படர-வேற்றுப்புலத்துப் போகா நிற்க, (135) மாறு - தனக்குப் பகையாகிய விடைகளை யெல்லாம், பொருது ஓட்டிய-தாக்கிக் கெடுத்த, புகல்வின்-மனச் செருக்கினை யுடைய, வேறு புலத்து (136) ஆ காண் விடையின்-தானறியாத வேற்று நிலத்திற் புதிய பசுவைக் காணும் ஏறுபோல, அணிபெற வந்து-அழகுபட வந்து, (எ - று.).

(129) இளைஞர் போலச் (130) செருக்கி வெகுளும் (131) [தான் உடன் கொண்டுவந்த] ஞமலி (132) வளைந்து நெரிதருகையினாலே (133) எழுந்து அடி தளர்ந்து யாம் (134) மருண்டு வேற்றுப் புலம் படராநிற்க (136) விடையின் அணிபெற வந்து - என முடிபு கொள்க.

கருத்துரை :—பகைப்புலத்தைப் பாழாக்கிப் பகைவரைப் புறங் கண்ட பல்வேல் இளைஞர்போன்று சினஞ்செருக்கி வெகுளும் வேட்டைநாய்கள் எம்மை வளைத்து நெருங்குகையாலே, யாங்கள் அஞ்சி வேற்றுப்புலத்துப் போகாநிற்க, ஆங்குத் தலைவன் வந்தான் என்பது கருத்து.

விசேடவுரை :—ஈண்டும், 128-129 வரிகளில் வந்துள்ள உவமை [ஆரிய] அரசற்கேற்பக் கொடுக்கப்பட்டுள்ளது. இளைஞரின் சினஞ் செருக்கி என இயையும். வரி 133—ஈண்டுப் பிறந்த அச்சம் விலங்குபற்றியது. வேறு புலத்து ஆ கூறியது-வேட்கை மிகுதி புலப்படுத்தற்கு. ஆ காண் விடையின் என்றவிடத்து, மேல் 'துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து' (235) என வருதலையும் ஒப்பு நோக்குக.

வரிகள் 107 முதல் இத்துணையும் தோழி ஏத்தல் கூறினாள். (ஏத்தல் கூறலாவது-தலைவனை உயர்த்துக் கூறுதல்).

இலக்கணக்குறிப்பு :— இளைஞரின், விடையின் - இன், ஒப்புப் பொருளது. நடுங்குவனம் - முற்றெச்சம். தளர்ந்தியாம்-குற்றிய லிகரம்.

அடிகள் 136-142 :—வந்த தலைவன் அச்சந்தவிர்த்து நலம் பாராட்டிக் கெடுதி வினாயினமை கூறும்.

எம்
அலமரல் ஆயிடை வெரூஉதல் அஞ்சி
மெல்லிய இனிய மேவரக் கிளந்தெம்
ஐம்பால் ஆய்கவின் ஏத்தி ஒண்டொடி

அசைமென் சாயல் அவ்வாங் குந்தி
மடமதர் மழைக்கண் இளையீர் இறந்த
கெடுதியும் உடையேன் என்றனன்

பதவுரை.—(137) ஆயிடை-யாங்கள் போகின்றபோது, (136) எம் (137) அலமரல் வெரூஉதல்-எம் மனச் சுழற்சியாலே (யாங்கள்) அஞ்சுதற்கு, அஞ்சி-(தான்) பயந்து, (138) மெல்லிய இனிய-மென்மையனவாய் இனியனவாய் இருக்கின்ற சொற்களை, மேவரகிளந்து-எமக்குப் பொருந்துமாறு சொல்லி, எம் (139) ஐம்பால் ஆய் கவின்-எம்முடைய ஐந்து வகைப்பட்ட கூந்தலின் [பலரும்] ஆராய்ந்த அழகை, ஏத்தி-புகழ்ந்து,-ஒள் தொடி-ஒளி பொருந்திய வளையலினையும், (140) மெல் சாயல்-மெல்லிய சாயலினையும், அவ்வாங்கு உந்தி-அழகிய வளைந்த கொப்பூழினையும், (141) மடம் மதர் மழை கண்-மடப்பத்தையுடைய மதர்த்த குளிர்ந்த கண்ணினையும் உடைய, (140) அசை-அசைகின்ற, (141) இளையீர்-இளையீரே! இறந்த-இவ்விடத்தே கடந்து போந்த, (142) கெடுதியும் உடையேன்-கெடுதிகள் பலவும் உடையேன், எனறனன்-என்று (எங்களை நோக்கிக்) கூறினான்; (எ - று.).

(137) ஆயிடை (136) எம் (137) அலமரல் வெரூஉதலஞ்சிக் (138) கிளந்து (139) ஏத்தி (141) இளையீர் இறந்த (142) கெடுதியுமுடையேன் என்றனன்-எனக்கூட்டி வினைமுடிக்க.

கருத்துரை:—வந்த தலைவன் யாம் அஞ்சினதற்குத் தான் அஞ்சினவனாய், மெல்லிய இனிய சொற்களை எமக்குப் பொருந்தச் சொல்லி, எம் நலம் பாராட்டிக் 'கெடுதியுமுடையேன்' எனக் கூறினன் என்பது.

விசேடவுரை:—**வரிகள் 137-138—இவற்றால் தோழி ஏதீடு கூறினள்.** (ஏதீடு கூறலாவது-காரணமிட்டுரைத்தல்: அஃதாவது-ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன காத்து எம்மைக் கைக்கொண்டானெனவும், பூத்தந்தான் தழைதந்தானெனவும் இவை முதலிய காரணமிட்டுணர்த்தல்), ஈண்டு, வேட்டைநாய்கள் வளைகுபு நெரிதர எம் அலமரலாயிடை எம்மைக் கிட்டி, எம் அச்சந் தவிர்த்து மெல்லிய இனிய மேவரக் கிளந்து தலைவன் தலையளி செய்தமை கூறல் தோழி குறிப்பாதலின், அவள் ஏதீடு கூறியபடியாம். ஐம்பால்-ஐவகைப்பட்ட மயிர்: ஐவகையாவன—குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன; குழலையும் அளகத்தையும் வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும், பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும் முடித்தல் என்ப. சாயல்-மென்மை: இதனுள், ஐம்பொறியாலும் நுகரும் மென்மையெல்லாம் அடங்கும். அசை இளையீர் என வேறு பிரித்துக் கூட்டியது-அவர்கள் மருண்டு வேற்றுப்புலம்படர்தல் நோக்கி; அன்றி, இயல்பாய நடுக்கத்தால் அசைகின்ற எனினுமாம். இனி, பிரித்துக் கூட்டாது அசைகின்ற சாயல் என்பாருமுளர்.

மதர்த்தல்-கதிர்த்தல். கெடுதியும் உடையேன் என்றது-அவன் யானை கலை பன்றி முதலியன கெடுத்தமை வினையினமை தெரிக்கும்.

அடிகள் 142-152 :—தலைவன் எளியனாயொழுகி நாய்காத்து நின்றமை கூறும்.

அதனெதிர்
சொல்லே மாதலின் அல்லாந்து கலங்கிக்
கெடுதியும் விடீஇ ராயின் எம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீரென
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பின் இம்மென இமிரும்
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவிழ் அலரித் தாசினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குரல் அவித்தெம்
சொல்லற் பாணி நின்றன னாக

பதவுரை :—(*143*) *அல்லாந்து - (அவன் கூற்றிற்கு யாங்கள்) மகிழ்ந்து, (142) அதன் எதிர் (143) சொல்லேம் ஆதலின்-அதற்கு மறுமொழி கொடேமாகையினால், கலங்கி-நெஞ்சழிந்து, [எங்களை நோக்கி], (145) 'மெல் இயலீர் - மெல்லிய இயல்பினையுடையீர் !, (144) கெடுதி விடீஇராயின்உம் - (யான்) கெடுத்தவற்றைக் காட்டித் தாரீராயினும், எம்மொடு-எம்முடன், (145) சொல்லல்உம் பழிஓ - ஒரு வார்த்தை சொல்லுதலும் நுமக்குப் பழியாமோ?' என - என்ச் சொல்லி,— (146) நைவளம் பழுநிய - நட்டராகம் முற்றுப்பெற்ற, பாலை - பாலையாழை, வல்லோன் - வாசிக்க வல்லவன், (147) கை கவர் நரம்பின் - தன் கையாலே வாசித்த நரம்புபோல, இம் என இமிரும் - இம்மென்னும் ஓசையுண்டாக ஒலிக்கும், (148) மாதர் - காதலையுடைய, வண்டொடு-வண்டினத்தோடு, நயந்து இறுத்த-தன்னிடத்து(ப் பல நறு நாற்றங்களும் தானுடைமையின் அம்) மணத்தை விரும்பித் தங்கின, சுரும்பு-சுரும்பினங்களை, (149) தாது அவிழ் அலரி-தாதுகள் விரிந்த பூக்களையுடைய, தா சினை-தழைத்துப் பரந்த தொரு கொம்பை, பிளந்து - முறித்து, (150) தாறு அடு களிற்றின்-(தன்னைச் செலுத்துகின்ற) பரிக்கோலைக் கைகடந்த மதக் களிறுபோல, வீறு பெற ஓச்சி - வெற்றியுண்டாக ஓட்டி (151) கல் என் சுற்றம்-கல்லென்னும் ஓசைபடக்கத்தும் வேட்டை நாய்களுடைய, கடு குரல்-கடிய குரல்களை, அவித்து-(அடித்து) மாற்றி, எம் (152) சொல்லல் பாணி-யாங்கள் வார்த்தை சொல்லுதலையுடையதோர் காலத்தை யெதிர்பார்த்து, நின்றனனாக-நிற்கும்போது;(எ-று.)-(165) வேழம் எதிர்தர எனமேல் இயையும்.*

(142) கெடுதியுமுடையே னென்றனன்; என்றதற்கு (143) அல்லாந்து (142) அதனெதிர் (143) சொல்லேமாதலின் கலங்கி (145) மெல்லியலீர், சொல்லலும் பழியோ எனச் சொல்லி (148) வண்டொடு சுரும்புகளை (150) ஓச்சி (151) சுற்றக் கடுங் குரலவித்துச் (152) சொல்லற்பாணி நின்றனனாக—எனக் கூட்டி வினைமுடிக்க.

கருத்துரை :— அவன் கூற்றிற்கு மகிழ்ந்து மறுமொழி கொடாமல் இருந்தனமாதலின், அவன் நெஞ்சழிந்து மெல் லியலீர்! கெடுதி காட்டித்தாரீராயினும் எம்மொடு ஒரு வார்த்தை பேசுதலும் நுமக்குப் பழியோ என்று கூறி, இம்மென ஒலிக்கும் காதலையுடைய வண்டினத்தோடே தன்மாட்டுப் பல நறுநாற்றங் களும் தானுடைமையின் சூழவிறுத்த சுரும்பினங்களையும் பூங் கொம்பொன்றை முறித்து அதனாலோட்டிப் பின் கத்தும் வேட்டைநாய்களை அப் பூங்கொம்பாலடித்து அதன் கடிய குரல்களை மாற்றி, யாங்கள் மறுமொழி சொல்லுங் காலத்தை எதிர்பார்த்து நின்றனன் என்பது.

விசேடவுரை :— வரிகள் 142-152 :— இவற்றால் தோழி எளித்தல் கூறினாள். (எளித்தல் கூறலாவது—பெருந்தகையாய தலைவன் எம்மாட்டு எளியனாவன் எனக் கூறுதல்). ஈண்டு, அவன் கூற் றிற்கு எதிர் சொல்லேமாயினும், அவன் எம் சொல்லற்பாணி நின்றனன் என்று தோழி கூறியது காண்க. 'அல்லாந்து' என்பதற்கு மகிழ்ந்து என்று பொருள்கொண்டு நச்சினார்க் கினியர் அதனை மகளிர்க்கேற்றி உரை கண்டனர்; அவ்வுரை சிறப்புடைத்தாதலின் யாமும் அவ்வழி கூறினேம். இனி ஒரு சிலர் 'அல்லாந்து' என்பதற்கு 'ஏமாற்றம் அடைந்து' என்பதே பொருளாகுமெனக் கொண்டு, அதனைத் தலைவற்கேற்றிக் கூறு வர். இவ்விரு உரையினும் முதலதன் சிறப்பு என்னையெனில்,— மகளிர் எதிர் சொல்லாமைக்கு ஏது காட்டுவதே: பின்னருரை யில் அவ்வேது பெறப்படாது. வந்த தலைவன், 'மடமதர் மழைக்கண் இளையிர்!' என்று நலம் பாராட்டி, 'இறந்த கெடுதி யும் உடையேன்' என்று வினவியபோது, அவன் கூற்றுக்குப் பெருமகிழ் வெய்தியமையே யாங்கள் எதிர் கூறாமைக்குக் காரண மாகும் என்று தோழி கூறுகின்றாள். இந்த நயம் பின்னருரை யிற் பெறப்படுமோ? யாம் எதிர் சொல்லேமாதலின் தலைவன் ஏமாற்றமடைந்தான் என்பதனினும், அவன் கூற்றுக்கு யாம் பெரிதும் மகிழ்ந்ததனால் அம் மகிழ்வில் எதிர்கொடேமாயினேம் என்பது சீரிய வுரையன்றோ! 'இனி ஓடிப்போ' என்ற வள்ளி மொழிகேட்டு, நீடு மகிழ்வெய்தி நின்றான் குமரேசன் என்றது கந்தபுராணம். ஆங்குத் தலைவி மொழிகேட்டு 'நம்பால் அன் புடைமை தோற்றுவதன்றோ இப் பேச்சு' எனத் தலைவன் மகிழ்ந் தான்; ஈங்குத் தலைவன் மொழிகேட்டுத் தலைவி தோழியர் மகிழ்ந்தனர். 'மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றோ'. இனி, 'அல்லாந்து' என்ற சொல் வருத்தத்தைக்

குறிக்குஞ் சொல்லாய்ப் பலவிடத்தும் வந்திருப்ப, இங்குமட்டும் 'மகிழ்ந்து' என்று பொருள் கொள்ளப்போமோ; ஒருகால் 'மயங்கி' என்றற் போன்றதோர் சொல் ஏடெழுதுவோரால் பிழைபட 'மகிழ்ந்து' என மாற்றப்பட்டதோ என இங்ஙன் கருதி னருமுளர். 'அல்லாந்து' என்பதற்கு 'அலமந்து' (சிந் : 2963) என்று உரைவகுத்த நச்சினார்க்கினியரே ஈண்டு உரைவளஞ் சிறப்ப எதிர்மறையிலக்கணையாய் 'மகிழ்ந்து' என்று அச்சொற்கு உரைவகுத்தனர் எனல் இழுக்காது. [இலக்கணை—ஒரு சொல் உரிய பொருளைவிட்டு அப்பொருளுக்கு இனமான பொருளை உணர்த்துவது. எடுத்துக்காட்டாக, அழுக்கு அறு என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்து ஒரு சொல் தன்மைப்பட்டு, எதிர் மறையிலக்கணையால் குற்றத்தை நீக்கு என்னும் பொருளைத் தராமல் குற்றத்தையுடையவனுகு எனப் பொருள்பட்டு, பொறு மையைக் குறித்தல் காண்க.] 'கலங்கி' என்பதனாலேயே 'அலமந்து' என்பது பெறப்படுதலின், 'அல்லாந்து' என்பதற்கு இங்ஙன் உரை கண்டனர் எனலுமாம். இனி, 'அவன் கூற்றிற்கு யாங்கள் மயங்கி' என்று பாடமிருப்பினும் 'மகிழ்ந்து' என்ற பொருளே சித்திக்கும்; என்னை? மயங்கியதற்குக் காரணம் மகிழ்வேயாதலின் என்க.

'எம்மொடு சொல்லலும் பழியோ' என்றவிடத்து 'மொழி யாமை வினுதல்' என்னும் துறை பெறப்படும். 'கெடுதியும் விடீராயின்' என்றவிடத்து உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. நைவளம்—நட்டராகம்; நட்டபாடை என்றும் உரை கூறினர் நச்சினார்க்கினியர் சிந்தாமணியில். எனவே, இரண்டும் ஒரே பண்ணைக் காட்டும். இது மிக்க மென்மையான ராகம் என்பதை 'நைவள மிருசாயல் நங்கை' (சிந் : 2435) என்ற தேவர் வாக்கா லும் அவ்விடத்து 'நட்டபாடையினும் மிக்க மெல்லிய மொழி யினையுடைய' என்ற நச்சினார்க்கினியருரையாலும் தெளியலாம். இதனைப் பகற் பண்களுள் ஒன்று என்பர்; ஆதலின் நிறை நரம்பிற்றுதல் வேண்டும். என்னை? 'நிறை நரம்பிற்றே பண் ணெனலாகும்' என்றது திவாகரம். திவாகரத்திலே இந்த நைவளம் 'குறிஞ்சி யாழ்த்திறனு'கப் பேசப்பட்டுள்ளது. சிறுபா ணாற்றுப்படையிலும் 'நைவளம் பழுநிய நயந்தெரி பாலை' எனத் தொடர் வந்துள்ளது. இந்தப் பண்ணின் பெருமையைத் திரு மங்கை மன்னனும் திருநெடுந்தாண்டகத்துப் பேசியுள்ளமை யால் அறியலாம். 'நைவள மொன்றாராயா' என்ற அவ்விடத்து "நைவளம்—கேட்டாரோடு சொன்னாரோடு வாசியற நைவிக்கும் படியான அழகையுடைத்தான பண்ணை நுணுங்கி; நட்ட பாஷை யைக் குணயோகத்தால் நைவளம் என்று பேரிடுகிறது" என்று அருளிச் செய்தனர் பெரியவாச்சான்பிள்ளை. நட்டபாடையை இக்காலத்து நாட்டை என்ப.

வரி. 147-150 :—இம்மென இமிரும் மாதர் வண்டொடு நமர் இறுத்த சுரும்புகளைத் தாசினை பிளந்து ஓச்சி என உரை

கண்டனர் நச்சினார்க்கினியர். அவர் உரையின்படி மாதர்-காதலை யுடைய, வண்டு-வண்டினம் என்றும், சுரும்பு-சுரும்பினம் என்றும் கொள்ளவேண்டும். அவருரைமீது குற்றங் கூறவந்த ஒருத்தர் "மாதர் - காதல்: இக்குறிப்பால் வண்டு என்பது பெடை வண்டைக் காட்டும். சுரும்பு-ஆண் வண்டு. வண்டொடு என்ற தனானும் வண்டு பெடை வண்டாதல் அறிக. ஆகவே, 'நயந்து இறுத்த' என்பதற்கு - புணர்ச்சியை விரும்பித் தங்காநின்ற எனப் பொருள் கொள்ள வேண்டும்" எனக்கூறி, அதற்கும் மேலாக "நச்சினார்க்கினியர் பொருந்தாப் பொருள் கூறி இடர்ப் படுவாராயினர்" என்றும் குறித்துள்ளார். எவ்வுரை பொருந்து வது எனக் காண்போம். வண்டு, சுரும்பு என்பன சாதிபேதம் என்பதைச் சிந்தாமணி 892-ஆஞ் செய்யுளால் தெற்றென உணர லாம். அச்செய்யுளின்படி, வண்டு தேன் சுரும்பு மிஞிறு என்பன நான்கு சாதிபேதங்களாம. அவற்றுள் வண்டும் தேனும் ஒரு குணத்தன; மற்றை யிரண்டும் ஒரு குணத்தன. இவ்வுண்மை யைச் சிந்தாமணி 894-ஆம் பாடலால் தெளியலாம். "தூங்கிசை வண்டுந் தேனும் சுரும்பொடு மிஞிறும் பாட" என்ற நடைதத் தாலும் இந்த உண்மை தேற்றம். இங்ஙனிருப்ப, வண்டு-பெண் வண்டு, சுரும்பு-ஆண்வண்டு என உரைகாணல் தகுமோ? ஆதலின் நச்சினார்க்கினியர், வண்டு-வண்டினம், சுரும்பு-சுரும்பினம் என உரை வகுத்தார். இனி, வேறொருத்தர், "பூங்கொம்பிலுள்ள வண்டுகளையும் சுரும்புகளையும் ஓச்சி வெற்றி பெறுதல் ஈண்டைக் குரிய செய்தியன்று: ...வண்டுகளோடு சுரும்புகளும் இறுத்த பூங் கொம்பினை முறித்து ஓச்சி நாய்களின் கடுங்குரலை யவித்து எனச் செம்பொருள படுதல் காண்க" என எழுதினர். ஈண்டு நச்சி னார்க்கினியர் உரைப்போக்கை மிக நுட்பமாகக் கவனிக்க வேண்டு கிறேன். அவர் உரையின்படி வண்டுகளும் சுரும்புகளும் பூங் கொம்பிலே இறை கொள்ளவில்லை; தலைவன் பல நறு நாற்றங் களும் தானுடைமையின், வண்டு சூழ் நிலை*யினனாயினன்; ஆகவே, தன்மாட்டு மாதர் வண்டினம் இம்மென இமிரவும், சுரும்பு நயந் திறுப்பவும், அவைகளை ஓச்சப் பூங்கொம்பு முறித்தனன்; முறித்த பூங்கொம்பைக் கொண்டு அவைகளை யெல்லாம் ஓச்சி அப்புறப் படுத்தவே அவ்வெற்றி நோக்கி 'வீறுபெற' என்றார். வண்டு களையும் சுரும்புகளையும் 'வீறுபெற ஓச்சி'யவிடத்து 'களிற்றின்' என மதக்களிற்றை உவமை கூறியது மிகவும் பொருந்தும். ஏனெனில், மதக் களிற்றிற்குத் தன்மாட்டுப் பெருகும் மதக்களிச் சுவையை யுண்ணவரும் வண்டினங்களையும் சுரும்பினங்களையும் ஓச்சி நிற்றல் இயல்பு. இதனை, "அயறசும்பிருந்த வந்த ணாற்றத்து, மதக்களி சுவைக்கு மணிநிறப் பறவைத், தொகைத் தொழில் ஒப்புந் தகைச்செவி" என்ற பெருங்கதை யடிகளாலும் உணர லாம். இதனால், "தாறடுகளிற்றின் வீறுபெற ஓச்சி" என்று கபிலர்

*"கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்"
—97, பொருநராற்றுப்படை

கொடுத்த உவமையின் நயத்தை அடிப்படையாக் கொண்டு நச்சினார்க்கினியர் அவ்வுவமையின் பெருமை கெடாதவாறு உரைவகுத்திருக்குந் திறன் பெரிதும் மெச்சத்தக்கதே. ஏனையோர் உரைப்படி இந்த உவமையின் நயம் பெறப்படுமோ? அன்னாருரைப்படி, வண்டு தங்கிய பூங்கொம்பைத் தாறடு களிறுபோல வீசித் தன்நாய்களின் கடுங்குரலை அவித்தான் என்பதே ஏற்படும். மற்றும், முற்குறித்தோ ரொருவரின் உரைப்படி நோக்கின், பெடைவண்டினோடே ஆண்வண்டு புணர்ச்சியை விரும்பித் தங்காநின்ற பூங்கொம்பை முறித்தான் தலைவன் என்பது பெறப்படுமாதலின், அவன் அருளின்மையும் பெற்றவாறாகும். "பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த, தாதுண் பறவை பேதுறலஞ்சி, மணிநா யாத்த மாண்வினைத் தேரன்" (அகநா: 4) என்றல்லவோ தலைவன் பேசப்படுவன். இதுகாறும் கூறியவாற்றால், ஆசிரியர் கருத்தையும் அவர் கொடுத்த உவமை இனிமையையும் நோக்கியே நச்சினார்க்கினியர் பொருந்தப் பொருளுரைத்துள்ளார் என்பது பெறவைக்கப்பட்டது.

இனி, தலைவனுக்குத் தாறுஅடு களிற்றினை உவமங் கூறியது— தனக்குக் காவலாகிய பெருமையினையும் உரனையும் கைகடந்து வேட்கை மீதூர்ந்து நிற்றலால் என்றனர் நச்சினார்க்கினியர். சுற்றம் என்றது நாய்களை. பாணி-காலம்: 'தெரியிழை மகளிர் பாணி பார்க்கும்' என்றவிடத்தும் காண்க.

இலக்கணக்குறிப்பு:—மாதர்-உரிச்சொல். 'மாதர் காதல்' என்றது தொல்காப்பியம். வண்டொடு-ஒடு,எண்ணொடு. இம்மென, கல்லென்-ஒலிக்குறிப்பு.

அடிகள் **153** முதல் **183** வரை ஒரு தொடர்:—அவற்றுள், அடிகள் **153-169**:—தினைப்புனத்தை யழித்த களிற்றைக் கானவர் துரத்த அது கூற்றுவனைப்போல் தங்கள்மேல் வர அதுகண்டஞ்சித் தலைவன்பாற்பொருந்தி நடுங்கியமை தோழி கூறினமை கூறும்.

இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையேர் நோக்கின் மனையோள் மடுப்பத்
தேம்பிழி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்து
இரும்புன நிழத்தலிற் சிறுமை நோனது
அரவுறழ் அஞ்சிலை கொளீஇ நோய்மிக்கு
உரவுச்சின முன்பால் உடற்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்*
கார்ப்பெயல் உருமிற் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கிமரங் கொல்பு

* வெடிபடுத்தார்த்து எனவும் பாடம்.

மையல் வேழம் மடங்கலின் எதிர்தர
உய்விடம் அறியே மாகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையின் நடுங்க

பதவுரை:— (*153*) *இருவி வேய்ந்த - தினையரிந்த தாளாலே வேய்ந்த, குறு கால் குரம்பை - குறிய கால்களையுடைய குடிலில் இருக்கும், (154) பிணை ஏர் நோக்கின் - மான்பிணையின் பார்வையினை யொத்த பார்வையினையுடைய, மனையோள்-மனைவி, மடுப்ப-எடுத்துக்கொடுப்ப, (155) தேன் பிழி தேறல் மாந்தி - தேனாற் சமைத்த கள்தெளிவினை யுண்டு, மகிழ் சிறந்து-மகிழ்ச்சி மிக்கு, (அதனால், தினைப்புனங் காக்கவந்த கானவன்) (156) சேமம்-காவற்றொழிலை, மடிந்த பொழுதின் - மறந்த காலத்தே, (157) இரும் புனம் - பெரிய தினைப்புனத்தை, (156) வாய் மடுத்து - (யானை) தின்று, (157) நிழத்தலின்-நொக்குகையினாலே [குறையச் செய்கையினாலே], சிறுமை நோனாது-மிச்சமாய் நின்றது விளையும் சிறுமையைப் பொறாமல், (158) நோய் மிக்கு - (இப்படியும் தினையழிவதே என) வருத்த மிக்கு, (159) உரவு சினம் (158) அரவு உறழ் - பரக்கின்ற சினத்தையுடைய பாம்பையொத்த, அம் சிலை கொளீஇ-அழகிய வில்லை நாணேற்றி, (159) முன்பால் - உடல் வலிமையோடே, உடல் சினம் செருக்கி - மாறுபாட்டாற் பிறந்த சினத்தாலே மயங்கி, (160) கணை விடுபு - அம்பை எய்து, புடையூ-(மேலும்) தட்டையைப் புடைத்து, கானம் கல் என - காடு முழுவதும் 'கல்'லென்னும் ஓசை பிறக்கும்படி, (161) மடி விடு வீளையர்-வாயை மடித்து விடுகின்ற சீழ்க்கையராய், வெடிபடுத்து-மிக்க ஓசையை யுண்டாக்கி, எதிர - (புனத்தினின்றும்) ஓட்டுகையினாலே, (164) சினம் திகழ் கடாஅம் செருக்கி - சினம் விளங்குதற்குக் காரணமாகிய மதத்தாலே மனஞ்செருக்கி, (165) மையல் வேழம் - மயக்கத்தை யுடைத்தாகிய யானை, (164) மரம் கொல்பு-மரங்களை முறித்து, (162) கார் பெயல் உருமின் பிளிறி - கார் காலத்து மழையின் இடியேறுபோல முழங்கிக்கொண்டு, சீர் தகதன் தலைமைக்குத் தக்கதாக,(163) இரு பிணர் தட கை-கரிய சருச்சரையை யுடைய பெரிய கையை(ச் சுருட்டி), இரு நிலம் சேர்த்தி-பெரிய நிலத்தே எறிந்து, (166) ஒய்யென-விரைவாக, (165) மடங்கலின் எதிர்தர - கூற்றுவனைப் போலே எங்கள்மேல் வருகையினாலே, (166) உய்வு இடம் அறியேம் ஆகி - உயிர்கொண்டு பிழைத்தற்கோர் இடத்தை (அப்போது) வேறு உணரேமாகி, (168) விதுப்பு உறு மனத்தேம் - நடுக்கமுற்ற மனத்தையுடைய யாங்கள், (167) நாணு மறந்து-உயிரினுஞ் சிறந்த நாணைப் பாதுகாத்தலையும் மறந்து, திருந்து கோல் எல்வளை தெழிப்ப-திருந்திய திரட்சியை யுடைத்தாகிய ஒளிபொருந்திய வளையல்கள் ஒலிப்ப (168) விரைந்து-வேகமாய்ச் சென்று, அவன் பொருந்தி-அவனைச்*

சேர்ந்து, (169) சூர் உறு மஞ்ஞையின் நடுங்க - தெய்வம் ஏறின மயிலைப்போலே நடுங்கா நிற்க; (எ - று.)—(170) 'பகழி வாங்கி' என மேல் இயையும்.

(154) மனையோள் மடுப்ப (155) மாந்தி மகிழ் சிறந்து (156) மடிந்த பொழுதின் (157) புனம் நிழத்தலின் நோனாது (158) நோய் மிக்குச் சிலை கொளீஇ, (159) சினஞ் செருக்கிக் (160) கணைவிடுபு புடையூ (161) வீளையராய் எதிர, (164) கடாஅஞ்செருக்கி (165) வேழம் (164) மரங்கொல்பு (162) பிளிறி (163) கை நிலஞ் சேர்த்தி (166) ஓய்யென (165) எதிர்தர (166) அறியேமாகி (168) மனத்தேம் (167) நாணு மறந்து வளை தெழிப்ப (168) விரைந்து அவற்பொருந்தி (169) நடுங்க—எனக்கூட்டி வினை முடிக்கவும். இங்ஙன் முன்பின் கூட்டுதலாற் பொருட் சிறப்புறுதல் தேற்றம்.

கருத்துரை:— இருவியால் வேயப்பட்ட குடிலின்கண் மனையோள் வாக்கிய கள்ளையுண்டு அக்களிப்பு மிகுதியால் தினைப் புனங்காத்தற் றொழிலைக் கானவன் மறந்திருந்த பொழுதத்து, வேழமொன்று புகுந்து தினைப்புனத்தை நொக்குகையினாலே, சினமிக்குச் சிலையாற் கணையேவி, தட்டை புடைத்துக் கானமெல்லாம் கல்லென்னும் ஒலிபடச் சீழ்க்கையிட்டு அதனை யோட்டுகையாலே, அது மதஞ்செருக்கி மரமுறித்துப் பிளிறிக் கையைத் தரையிலெறிந்து கடுகக் கூற்றுவனைப் போல் எங்கள்மேல் வர, யாங்கள் உய்விடமறியாது விதுப்புற்று உயிரினுஞ் சிறந்த நாணும் மறந்து வளையொலிப்ப விரைந்து சென்று தலைவனைப் பொருந்தி நடுங்கி நின்றேம் என்பது.

விசேடவுரை:—"ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி, பன்மைக் காகுமிடனுமாருண்டே" என்ற விதிப்படி, மனையோள் என்னும் ஒருமை சுட்டிய பெயர், மேல் 'வீளையர்' (161) என வருதலால் பன்மை சுட்டியவாறுமாம்: 'ஏவலிளையர் தாய் வயிறு கரிப்ப' என்பதுபோல. நிழத்தல்-நொக்குதல்; அதாவது, குறையச் செய்தல். "ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயி னான்கும் உள்ளதன் நுணுக்கம்" என்றது தொல்காப்பியம். வெருமனே 'அரவுறழ்சிலை' என்பதனினும் 'உரவுச் சினம் அரவு உறழ்சிலை' எனக் கூட்டின் சிறத்தல் காண்க. அரவு, வடிவிற்கும் கொல்லுந் தொழிலுக்கும் வில்லுக்கு உவமை. 'அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த உரவுவில்' என்றது கலித்தொகை. முன்பு-வலிமை. உடல் சினம்-உடலும் சினம்: உடல்-மாறுபாடு: என்னை; 'உடல்வேலழுவம்' என்றது புறப்பொருள்வெண்பா மாலை (வாகை: 1). இந்த 159-ஆம் வரிக்கு 'பரக்கின்ற சினத்தின் வலியோடே உடலிடத்தே சினத்திற்குரிய மெய்ப்பாடுகள் தோன்ற மயங்கி' என உரைகண்டாருமுளர்: பொருந்துமேற் கொள்க. வீளை-சீழ்க்கை: அதாவது, நாவினது நுனியை மடித்து எழுப்பும் ஒலி; 'சீட்டியடித்தல்' என இக்காலத்து வழங்குப. பிணர்-சருச்சரை: சரசரப்பு. சிலர், 'இறந்த கெடுதியுமுடையேன்' (142) என்றவிடத்துக் குறித்த கெடுதி இந்த மையல்

வேழம் (165) எனக்கொண்டு கூறுவர். அது பொருந்துமேற் கொள்க. மடங்கல்-கூற்றுவன்: 'மடங்கல்போல் சினைஇ' என்று கலித்தொகையிலும் காண்க (கலி: 2). நாணு மறந்து என நாணைச் சிறப்புற எடுத்தோதியது—'உயிரினுஞ் சிறந்தன்று நாணே'யாதலின். உயிரோம்புகைக்காக உயிரினுஞ்சிறந்த நாணையும் மறந்தேம் என்றது நயம். மறந்து தலைவனைப் பொருந்தி உய்விட மறிந்தேம் என்றது தொனி. 'மஞ்ஞை'யின் என்றது, குறிஞ்சிநிலக் கருப்பொருள் கூறியபடி. 191-ஆம் வரியிலும் இது காண்க.

இலக்கணக்குறிப்பு :—கணைவிடு என்றவிடத்து 'விடுபு' என்ற செய்பு என் எச்சம் 'விடு' என விகாரப்பட்டு நின்றது. புடையூ-செய்யூ என் எச்சம். கல்லெலன-ஒலிக்குறிப்பு. ஒய்யென-விரைவுக் குறிப்பு.

அடிகள் 169-183 :—களிறு காத்த பின்னரும் யாம் கைபிணி விடேமாய் நடுங்க 'அஞ்சலோம்பு நின் அணிநலம் நுகர்வேன்' என்று தலைவன் தலையளி செய்தமை கூறும்.

வார்கோல்
உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
அண்ணல் யானை அணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லாது
அயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவேள்
அணங்குறு மகளிர் ஆடுகளங் கடுப்பத்
திணிநிலைக் கடம்பின் திரளரை வளைஇய
துணையறை* மாலையிற் கைபிணி விடேஎம்
நுரையுடைக் கலுழி பாய்தலின் உரவுத்திரை
அடுங்கரை வாழையின் நடுங்கப் பெருந்தகை
அஞ்சி லோதி அசையல் யாவதும்†
அஞ்ச லோம்புநின் ‡னணிநலம் நுகர்கென
மாசறு சுடர்நுதல் நீவி நீடுநினைந்து
என்முகம் நோக்கி நக்கனன்

பதவுரை :—(169) வார் கோல் - நீண்ட கோலையுடைய, (170) உடு உறும்-உடுச்சேர்ந்த, கடு விசை-கடிய வேகத்தினையுடைய, பகழி-அம்பை, வாங்கி-(நிரம்ப) வலித்து, (171) அண்ணல் யானை-தலைமையினையுடைய யானையினது, அணி முகத்து அழுத்தலின்-அழகிய முகத்தே அழுந்த எய்கையினாலே, (173) புள்ளி வரி

*துணையமை மாலை என்ற பாடமும் ஐயரவர்களால் காட்டப்பட்டுள்ளது. சிறுபாண்-69 அடிக்குறிப்பும், சிந்தாமணி-990 அடிக்குறிப்பும் காண்க.

†எனைய தூஉம் என்ற பாடமும், ‡நனிநலங் காக்கென என்ற பாடமும் உள.
(தொல்: பொருளியல் சூ. 13. நச்சினார்க்கினியம்)

நுதல் சிதைய - நிறைந்த புள்ளியினையுடைய மத்தகம் அழகழியும்படி, (172) புண் உமிழ் குருதி - (அம்புபட்டு உருவின) புண்களால் உமிழப்படும் இரத்தம், முகம் பாய்ந்து - (அதன்) முகத்திலே பரந்து,— (174) நெடுவேள் - முருகக் கடவுளால், (175) அணங்கு உறு மகளிர் - வருத்தமுற்ற மகளிர்க்கு, (அவ்வருத்தம் தீர்தற்காக), ஆடுகளம்-(மறியறுத்து) வெறியாடுங் களத்தை, கடுப்ப - ஒத்திருப்ப, (அதாவது, மறியறுத்தாடுங் களத்திற் குருதி குதிக்குமாறு போலக் குதிக்கையினாலே), (174) அயர்ந்து-தன்னை மறந்து, நில்லாது-(அங்கு) நிற்றலாற்றாது, புறம் கொடுத்த பின்னர்-முதுகிட்டுப் போனபின்பு,—

(176) திணி நிலை கடம்பின் - திண்ணிய நிலையினையுடைய கடம்ப மரத்தினது, திரள் அரை - திரண்ட அடிப்பாகத்தை, வளைஇய - நெருங்கச் சூழ்ந்த, (177) துணை அறை மாலையின் - (மகளிரொழுங்கிற்கு) ஒப்புச் சொல்லுதலையுடைய மாலைபோலே, கை பிணி விடேஎம்-கைகோத்தலை விடேமாய், [யாங்கள்] (178) நுரை உடை கலுழி பாய்தலின் - நுரையையுடைய பெருக்குப் பாய்தலினாலே, உரவு திரை-பரக்கின்ற அலைகள், (179) அடும்-மோதுகின்ற, கரை - இடிகரையில் நின்ற, வாழையின்-வாழை போலே, நடுங்க-நடுங்காநிற்ப, (அதுகண்டு) பெருந்தகை-பெரிய தகுதிப்பாடுடைய அத்தலைவன் (தலைவியை நோக்கி), (180) அம் சில் ஓதி-அழகிய சிலவாகிய கூந்தலினையுடையாய்! அசையல்-நடுங்கவேண்டா: யாவதுஉம் - (நின்னை நீங்குவேனென்று) சிறிதும், (181) அஞ்சல் ஓம்பு-அஞ்சுதலைப் பரிகரி, நின் அணி நலம் நுகர்கு - (யான்) நின் அழகிய நலத்தை நுகர்வேன், என-என்று சொல்லி, (182) மாசு அறு சுடர் நுதல் நீவி-குற்றமற்ற ஒளியினையுடைய நெற்றியினைத் துடைத்து, நீடு நினைந்து-நெடுநாள் இக் களவொழுக்கம் நிகழவேண்டுமென்று நினைந்து, (183) என் முகம் நோக்கி - (அவளுக்கு உயிர்த் தோழியாகிய) என் முகத்தைப் பார்த்து, நக்கனன்-சிரித்தான்; (எ-று.)

(170) பகழி வாங்கி (171) யானைமுகத் தழுத்தலின் (173) நுதல் சிதைய (172) குருதி முகம்பாய்ந்து (175) ஆடு களங்கடுப்ப (172) இழிதர (174) அது புறம்கொடுத்த பின்னரும் (177) கை பிணி விடேஎமாய் (179) வாழையின் நடுங்கினமாக (அதுகண்டு) பெருந்தகை (180) அசையல் (181) அஞ்சலோம்பு நின் அணி நலன் நுகர்கெனச் சொல்லி (182) நுதல் நீவி நீடு நினைந்து (183) என் முகநோக்கி நக்கனன் என வினைமுடிக்க.

கருத்துரை:—எங்கள்மேல் வந்த யானையின் முகத்தழுந்தத் தலைவன் பகழி விடுத்தலின், நுதல் சிதையக் குருதிசோர அது புறங்கொடுத்தது; புறங்கொடுத்த பின்னரும், யாங்கள் தலைவனை நெருங்கச் சூழவிருந்து கைகோத்தேமாய் நடுக்கத்துடனிருந்தேமாக, அதுகண்டு தலைவன், தலைவியை நோக்கி 'நடுங்காதே கொள்; நின்னைப் பிரிவேன் என்று அஞ்சுதல் வேண்டா; நின்

அண்ணிநலன் நுகர்வேன்' என்று நுதல் துடைத்து, இக் களவொழுக்கம் நெடுநாள் நீட்டித்தல் வேண்டுமென்ற குறிப் பொடு தோழி முகம் நோக்கிச் சிரித்தனன் என்பது.

விசேடவுரை:—நச்சினார்க்கினியர் (172) புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து (174) நெடுவேள் (175) அணங்குறு மகளிராடு களங்கடுப்ப (172) இழிதர (174) அயர்ந்து (173) நில்லாது (174) புறங்கொடுத்த பின்னர் என முன்னும் பின்னுங் கூட்டிப் பொருளுரைத்தனர். 'புறங்கொடுத்த பின்னர்' என ஒரு நிகழ்ச்சியைக் கூறி முடித்தபின், வேறு நிகழ்ச்சிபோல 'ஆடு களங்கடுப்ப......கைபிணி விடேஎம்......நடுங்க' முதலியன கபில ராற் கூறப்பட்டிருத்தலின், நச்சினார்க்கினியர் 'ஆடுகளங் கடுப்ப' என்பதனை முன்னர்க் கொண்டு கூட்டியது பொருத்தமின்று எனத் தோற்றும். ஆனால், 'கடுப்ப' என்ற உவமவுருபு 'இழிதர' என்ற சொல்லொடு பொருட் பொருத்தமுறுதல் போல, ஆற் றொழுக்காக் கொள்ளும் உரைகளிற் பெறப்படாது. அதனாற் றான் நச்சினார்க்கினியரே 'மகளிராடுங் களத்தைக் கடப்பமாலை வளைத்தாற்போல மிகவும் கடப்பமாலை வளைத்த என்பாருமுளர்' என இரண்டாந்தரமாக்கிக் கூறினர். சிலர் 'ஆடுகளம் கடுப்ப' அப்பொழிலிடம் தோன்றிற்றாக என உரைகொண்டு, 'யானையின் குருதியான் நனைந்த அவ்விடம், மறியின் குருதியான் நனைந்த களத்தை யொத்துத் தோன்றிற்றென்க' என்றனர். பகழி யழுத்தலின் நில்லாது புறங்கொடுத்தது என்று ஆசிரியர் கூறி யதை நோக்கும்போது அவ்விடம் மறியறுத்து வெறியாட்டயரும் களம் போன்று குருதியால் நனைந்தது என்று கூற வகை யில்லையே! ஆதலின், நச்சினார்க்கினியர் கூறியபடி யானையின் முகத்தே புண்களால் உமிழப்படுங் குருதி பரந்து கொப்புளித் துப் பெருகுவது—மறியறுத்தாடுங் களத்திற் குருதி கொப்புளித் துப் பெருகுவது போலாகும் எனப் பொருட் பொருத்தமுற்றுச் சிறக்கும்.

இனி, களிறு போய பின்னரும் யாங்கள் தலைவனை நெருங்கச் சூழ்ந்து கைபிணிவிடேமாய் இடிகரையில் நின்ற வாழையின் நடுங்கினேம் என்றது அச்சச் சுவையைச் செவ்வன் புலப்படுத்தற்காக. சுவையாவது - காணப்படுபொருளாற் காண் போரகத்தின் வருவதோர் விகாரம். ஈண்டு, அச்சத்திற்கேது வாகிய வேழம் சுவைப்படுபொருள்; அதனைக் கண்ட காலந் தொட்டு நீங்காது நின்ற அச்சம் சுவை. அச்சமென்னுஞ் சுவை பிறந்ததன் பின்னர் அதன்வழித் தோன்றிய நடுக்கம் அச்சத் தாற் றோன்றிய நடுக்கமாமென்பது என்றனர் பேராசிரியர். இங்ஙன் கொள்ளாது சிலர், 'களிற்றச்சம் தீர்ந்த பின்னர்த் தலைவி நடுங்கியதற்குக் காரணம், இவன் என்னைப் பிரிவானோ என்னும் புதிய எண்ணத்தாற் றோன்றிய பிரிவச்சம்; அதனை யுணர்த்தற்கன்றே கபிலர் நுரையுடைக் கலுழி எனப் புதி தாகப் பெருகிய கலங்கனீரை உவமை கூறியதூஉம்' என்கின்றனர். ஈண்டு; 'நுரையுடைக் கலுழி' என்பது புதுவெள்ளத்தைக்

குறிப்பதாலும், அத்தொடரில் உவமை அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. 'வாழையின்' என்றவிடத்துக் கபிலர் உவமை குறித்துள்ளாரேயன்றிக் 'கலுழி' என்றவிடத்து உவமை கூறியதாக் கொள்ள வகையுண்டோ? ஆய்க. மற்றும், இப்பிரிவச்சத்தையே கபிலர் 'யாவதும் அஞ்சலோம்புமின்' என்றவிடத்துக் காட்டிப் போந்துள்ளார்.

இனி வரிகள் 176 முதல் 183 வரையுள்ள பகுதியில் புனல் தருபுணர்ச்சி குறிப்பதாக் கொண்டு, நச்சினார்க்கினியர் உரை கண்டனர். அவர் உரைப்போக்கு பின்வருமாறு:- (177)...கைபிணி விடேஎம்-கைகோத்தலை விடேமாய், (178) நுரை உடை கலுழி பாய்தலின் - யாற்றின் நுரையையுடைய பெருக்கிலே குதிக்கையினாலே, (178) உரவு திரை (179) அடும் கரை-அதனிடத்துப் பரக்கின்ற திரைமோதி இடிகரையில் நின்ற, வாழையின் நடுங்க-வாழை போலே கால் தளர்ந்து பின்னர் ஒழுகினேனாக, (அது கண்டு) பெருந்தகை-பெரிய தகுதிப்பாடுடையவன், (180) அம் சில் ஓதி-அழகிய சிலவான மயிரினையுடையாய்! அசையல்-இங்ஙனம் கால் தளர்ந்தொழுகாதே என்றெடுத்து, (181) நின் அணி நலம் நுகர்கு-யான் நின் அழகிய நலத்தை நுகர்வேன்: (180) யாவதுஉம்-(நின்னை நீங்குவேனென்று)சிறிதும், அஞ்சல் ஓம்புமின் -அஞ்சுதலைப் பரிகரிமின் என்று சொல்லி, (182) மாசு அறு சுடர் நுதல் நீவி-குற்றமற்ற ஒளியினையுடைய நுதலைத் துடைத்து, நீடு நினைந்து-நெடுநாள் இக்களவொழுக்கம் நிகழவேண்டுமென்று நினைந்து, (183) என் முகம் நோக்கி நக்கனன்-என் முகத்தைப் பார்த்துச் சிரித்தான் (எ-று.).

இப்பகுதியில், 'வாழையின் நடுங்க' என்ற உவமையில் வாழையை விதந்தெடுத்திருத்தலும், 'அசையல்' என்ற சொற்பிரயோகமும் நச்சினார்க்கினியர் உரைக்கு ஏதுக்கள் எனலாம். வாழையை மகளிர் குறங்கினுக்கு ஒப்புச் சொல்லுதலாதலின், அன்னார் தொடை நடுங்கின் என்பதைப் பெறவைப்பதாகும் இவ்வுவமை: ஆகவே 'கலுழிபாய்தலின்' என்பதற்கு - பெருக்கிலே குதிக்கையினாலே என்றார். மற்றும், அசைதல் என்ற சொல் 'ஓய்தல்' என்ற பொருளில் வருதலுண்டாதலின், (உ-ம்: 'நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி'-சிறுபாண்: 32) ஈண்டு, 'அசையல்' என்பது 'கால் ஓய்ந்து ஒழுகாதே கொள்' என்று பொருள் பட நிற்கும். இங்ஙனம், புனல்தருபுணர்ச்சியையும் களிறுதரு புணர்ச்சியொடு சேர வைத்து நச்சினார்க்கினியர் உரை வகுத்தது, ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டாதலின் இழுக்கொன்றுமில்லை. இங்ஙன் கொள்ளின், மேல் (214) பூமலிசோலை யப்பகல் கழிப்பி என்றவிடத்துப் பூத்தரு புணர்ச்சியும் குறிப்பிற்றெரித்தபடி எனக் கொள்ளலும் இழுக்காது. 'புணர்தல் நறுங்குறிஞ்சி' யாதலின், இக்குறிஞ்சிப்பாட்டகத்து அறத்தொடுநிற்குங்காலை களிறுதருபுணர்ச்சி, புனல் தருபுணர்ச்சி, பூத்தருபுணர்ச்சி மூன்றும் வெளிப்படையாகவும் கரந்தும் கூறப்பட்டுள்ளன எனலாம். ["பூவே புனலே களிறே

என்றிவை, ஏதுவாகத் தலைப்பாடியம்பும்'' என்றது அகப் பொருள் விதி.] அவற்றுள், களிறுதருபுணர்ச்சியே வெளிப் படையாக நிகழ்ந்த செய்தியென்பதை (212) 'அருவிட ரமைந்த களிறுதருபுணர்ச்சி' என்றமையால் தெளியலாம். இது நிற்க.

இனி, 'அசையல்' என்பதற்கு 'நடுங்கவேண்டா' என்று அடி யேன் உரை கண்டேன்; அது பெரிதும் பொருந்துவது காண்க: அசைதல் நடுங்குதலாதலை''பொன்னிவளநாடன் கைவேல் பொழி நிலவான், முன்னர் அசைந்து முகுளிக்கும்-தன்னேர், பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை, யரவிந்தநூறுயிரம்'' என்ற தண்டி யலங்காரப் பொருளணியியல் மேற்கோட்செய்யுளாற்றெளியலாம்.

உடு - நாணைக்கொள்ளுமிடம். வரி - புகர்: புள்ளிவரி - ஒரு பொருட்பன்மொழி. வரி 176-177: கடம்பு பூத்தமாலை தொடர்ப் பட்டு இருக்கும்: இதனை, 'கொன்றையுங் கடம்பும் போல நின்ற வாறே நின்று தொடைப்பொலிவு செய்யும்' என்ற பேராசிரியர் கூற்றாலறியலாம்(தொல்: செய்யுளியல்: சூ-94 உரை). மாலை போல் பூத்தலின் மாலையென்றார். இதனை,'' துறுநீர்க் கடம்பின் துணையார் கோதை'' என்றது (சிறுபாண். 69) கொண்டறிக. இனி, ''கடம்பு சூடிய கன்னி மாலைபோல், தொடர்ந்து கைவிடாத் தோழிமாரொடும்'' என்றது சிந்தாமணி(990) யாகலின், 'மகளி ரொழுங்கிற்கு ஒப்புச்சாற்றுதலையுடைய' என இவ்விடத்துக் கொண்டு கூறினார் நச்சினார்க்கினியர். கடம்பமரம் முருகக் கடவுளுக்கு இடமாகும்; இதனை, 'சதுக்கமும் சந்தியும் புதுப் பூங்கடம்பும் மன்றமும்' என்ற திருமுருகாற்றுப்படையாலும் (225), 'கடம்பமர் நெடுவேள்' என்ற பெரும்பாணாலும் (75) உணரலாம். நீடு நினைந்து என்பதற்கு -'தமர்க்கு அறிவித்து இவளை நாடறி நன்மணஞ் செய்து கோடல் எவ்வாறென நீண்டநேரம் ஆராய்ந்து' என்று குறிப்புக் கண்டாருமுளர். இது பொருந்துவதாகத் தோன்றவில்லை. என்னை? களவினுள் தங்கி யொழுகும் ஒழுக்கத்தையே தலைவன் நீட்டித்து நிகழ வேண்டுமென நினைவன் என்பதனாலன்றோ ''களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம், திங்களிரண்டின் அகமென மொழிப'' என்று இறையனார் சூத்திரமும் ஏற்பட்டது. மற்றும், மேல் 231-233ஆம் வரிகளில் ''நேரிறை முன்கை பற்றி நுமர்தர, நாடறி நன்மணம் அயர்கம் சின்னாள், கலங்கலோம்புமின் இழையீர்'' என்றவிடத் துச் ''சின்னாள் கலங்கலோம்புமின்'' என்றதால் தலைவன் தான் களவொழுக்கத்தாற் பெறும் பேரின்பத்தினைச் சிறிது நாளாவது நுகர்தற்கு விழைகின்றான் என்பது பெறப்படுகின்றதன்றோ! மற்றும், மேல் 200-ஆம் வரியில் 'உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு' என்றவிடத்து 'இவள் உள்ளத்து நிகழுந்தன்மை மேல் வரைந்துகொண்டு இல்லறம் நிகழ்த்துதலா யிருக்குமென்று நினைந்தவனாய் அதனை உட்கொண்டு' என வருதலின், அவளுள் ளத்து நிகழ்ந்த தன்மையை ஈண்டு 182ஆ-ம் வரியில் தலைவன் 'நீடு

நினைந்து' என்றவிடத்து ஏற்றி எழுதுதல் சிறப்பின்றாத லறியலாம். தோழிமுகநோக்கி நக்கது-வாயில் பெறுதற்காக.

வரிகள் 169-175:—இவற்றால் தலைவன் களிறு காத்தமை கூறினளாதலின், தோழி ஈண்டும் ஏதீடு கூறினளாயிற்று. [முன்னர் ஏதீடு கூறியது, வரிகள்-137-138-இல்.]

அடிகள் 183-186:—தலைவன் வேட்கையொடு தலைவியை முயங்கியமை கூறும்.

அந்நிலை
நாணும் உட்கும் நண்ணுவழி யடைதர
ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கலைஇ
ஆகம் அடைய முயங்கலின்

பதவுரை:—(184) நண்ணுவழி-(அங்ஙனம் அவன்) அணுகின விடத்து, நாண்உம்-தனக்கு இயல்பாகிய நாணமும், உட்குஉம்-அச்சமும், அடைதர-(அவ்விடத்தே வந்து) தோன்றுகையினாலே, (185) ஒய்யென-விரைவாக, பிரியவும்-இவள் தன்னிடத்தி னின்றும் நீங்க முயலவும், விடாஅன்-விடானாய், (183) அந்நிலை-அங்ஙனம் நின்ற நிலையிலே, (185) கலைஇ-கையாலே இறுக அணைத்து, (186) ஆகம் அடைய-இவள் மார்பு தன் மார்பிலே ஒடுங்கும்படி, முயங்கலின்-தழுவுகையினாலே; (எ-று).

(184) நண்ணுவழி நாணும் உட்கும் அடைதருகையினாலே (185) இவள் பிரியவும் விடாஅனாய் (183) அந்நிலை (186) முயங்கலின் என வினைமுடிக்க.

கருத்துரை:— 'நின் அணிநலன் நுகர்வேன்' எனக் கூறித் தலைவன் அணுகிய வழி, தலைவி தனக்கு இயல்பாகிய நாணமும் அச்சமும் தோன்ற, விரைய அவனை விட்டு நீங்கமுயலவும், அவன் அவளை விடானாய் அந்நின்ற நிலையிலேயே கையாலணைத்து மார்போடு இறுகத் தழுவினன் என்பது.

விசேடவுரை:—ஈங்கு, நாணம் என்றது - காமக்குறிப்பு நிகழ்ந்த வழிப் படுவதோர் உள்ளவொடுக்கமென்பதையும், உட்கு என்றது-அன்பு காரணத்திற்றோன்றிய அச்சம் என்பதையும் குறிக்கும். இதனை நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையால் அறியலாம். இவை "நிச்சமும் பெண்பாற் குரியவென்ப." ஆகம் அடைய முயங்கலின் என்றதால், தோழி வேட்கையுரைத்தல் கூறினளாயிற்று. (வேட்கை யுரைத்தலாவது-தலைவிமாட்டுத் தலைவன் கொண்டுள்ள வேட்கையை மிகுத்துரைத்துக் கூறல்).

அடிகள் 186-214:—ஒரு தொடர். அவற்றுள், அடிகள் 186-200:—தலைவனது குன்றுகெழுநாட்டின் நலங்கூறும்.

அவ்வழிப்
பழுமிளகு உக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் தீங்கனி உதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொடு ஈண்டிப் பலவின்

நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட் டின்னியங் கறங்க ஆடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தள்
தண்கமழ் அலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிறல்
உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு

பதவுரை :—(187) பழு மிளகு உக்க-பழுத்த மிளகுகள் சிந்திக் கிடக்கின்ற, பாறை நெடு சுனை - கற்பாறையினிடத்து நீண்ட சுனையிலே, (188) முழு முதல் கொக்கின் - பெரிய அடியினைக் கொண்ட மாமரத்தினுடைய, தீம் கனி-இனிய பழங்கள், உதிர்ந்தென - உதிர்ந்தனவாக அப்பழத்தாலும், (189) பலவின் (190) நெகிழ்ந்து உகு நறு பழம்-பலா மரத்தினுடைய விரிந்து தேன் சொரிகின்ற நறிய பழத்தாலும், விளைந்த தேறல்-உண்டான கள் தெளிவானது, (189) புள் எறி பிரசமொடு-(தான் நிரம்பியிருத்தலால்) தன்னை நுகரவந்த ஈயினைத் தள்ளியுகுத்த தேன்பெருக்கினாலே, ஈண்டி-வந்து திரளுகையினாலே, (191) நீர் செத்து-(தனக்கு எளிதிற் கிடைத்த) நீராகக்கருதி, அயின்ற தோகை-அத்தேறலைப் பருகிய மயில், (192) சாறுகொள் ஆங்கண் - விழாக்கொள்ளுதற்குரிய அவ்விடங்களையுடைய (அதாவது, கோயில்களையுடைய), (191) வியல் ஊர்-அகன்ற ஊர்களில், (192) விழவு களம் நந்தி- விழாக்கொள்ளுதலையுடைய களத்தே மிக்கு, (193) அரி கூட்டு இன் இயம் கறங்க-அரித்தெழும் ஓசையைக் கூட்டுதலையுடைய இனிய வாச்சியங்கள் ஒலிப்ப, ஆடும் மகள்-ஆடுகின்ற மகள், (194) கயிறு ஊர் பாணியின் - கழாய்க்கயிற்றிலே ஏறி ஆடுகின்ற தாளத்தினால் (தான் ஆற்றாது) தளருமாறு போல, தளரும்-(தேறலிற் பிறந்த களிப்பால்) தளரும், சாரல் - சாரலையுடையதும்,—(196) விண் பொரும் சென்னி கிளைஇய காந்தள்-ஆகாயத்தைத் தீண்டுகின்ற சிகரங்களில் கிளைத்த செங்காந்தளினுடைய, (197) தண் கமழ் அலரி-குளிர்ந்த மணம் வீசுகின்ற பூக்கள், (195) வரை அர மகளிரில்-(தம் கீழே) வரையரமகளிர் பரந்து விளையாடுதலாலே, சாஅய்-(தந்நலம்) சிறிது கெட்டு, விழை தக-விரும்புதல் தரும்படி [விரும்புமாறு], (197) தாஅய்-கீழ்நிலத்தே வந்து பரந்து, நன் பல (198) வம்பு விரி களத்தின்-நல்ல பலவாகிய கச்சுப் பரந்த களம் போல, கவின் பெற பொலிந்த-அழகுபெறப் பொலிவு பெற்றதும் ஆகிய, (199) குன்றுகெழு நாடன் - மலைபொருந்திய நாட்டினை யுடைய தலைவன், எம் விழைதரு பெருவிறல்-எம்மை எப்பொழுதும் விரும்புதலைத் தருகின்ற [விரும்புகின்ற] பெரிய வெற்றியை

யுடையவன், (186) அவ்வழி-தான் முயங்கிய அப்பொழுது, (200) உள்ளத்தன்மை-இவளுள்ளத்து நிகழுந்தன்மை மேல் வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துதலாயிருக்குமென்று, உள்ளினன்-நினைந்தவனாய், கொண்டு-அதனையுட்கொண்டு; (எ - று.)—(207) என்று (208) தேற்றி என மேல் இயையும்.

(187) சுனையிலே, (188) கொக்கின் தீங்கனி யுதிர்ந்தென அப் பழத்தாலும் (189) பலவின் (190) நறும் பழத்தாலும் விளைந்த தேறல், (189) பிரசமொடு ஈண்டுகையினாலே, (191) அயின்ற தோகை (193) ஆடுமகள் (194) பாணியின் தளருஞ் சாரலினையுடையதும், (196) சென்னிக் கிளைத்த காந்தள் (197) அலரி (195) சாஅய் (197) தாஅய் (198) வம்புவிரி களத்தின் பொலிவினையுடையதும் ஆகிய (199) குன்றினையுடைய நாடன், எம் பெருவிறல் (186) [முயங்கலின்] அவ்வழி (200) இவளுள்ளத் தன்மை உள்ளினனாய் அதனையுட்கொண்டு—என வினைமுடிக்க.

கருத்துரை:—பழுத்த மிளகுகள் சிந்திக் கிடக்கின்ற பாறையிடத்துள்ள சுனையிலே, உதிர்ந்து வீழ்ந்த இனிய மாம்பழத்தாலும் வெடித்துத் தேன் உகுக்கின்ற நறிய பலாப் பழத்தாலும் விளைந்த கள் தெளிவானது தேனடையினின்று பெருக்கெடுத்த தேனோடு கூடிவந்து திரளுகையினாலே, அதனை நீரென்று மாறுகக் கருதி அந்தக் கட்டெளிவினையுண்ட மயில், இன்னியங் கறங்க ஆடும் மகள் கழாய்க்கயிற்றிலே தாளத்தினாலாற்றாது தளருமா போலே, தேறலிற் பிறந்த களிப்பால் தான் கூத்தாட ஆற்றாது தளரும் சாரலினையுடையது அத் தலைவன் குன்று; அன்றியும், ஓங்கிய சிகரங்களிலே கிளைத்த செங்காந்தட்பூக்கள் வரையர மகளிர் பரந்து விளையாடுதலால் கீழ்நிலத்திலே வீழ்ந்து பரந்து தம் நலஞ் சிறிது கெடினும், கச்சுப் பரந்த களம்போலே அழகு பெற்று விளங்கும் பொலிவினையுடையது அத் தலைவன் குன்று. அத்தகைய குன்றுகெழு நாடன், இவளுள்ளத் தன்மை வரைந்துகொண்டு இல்லற நிகழ்த்துதலாயிருக்கும் என நினைந்தனன் என்பது.

விசேடவுரை:—பிரசமொடு என்றவிடத்து ஒடு ஆலாக்குக. [மேல் 207-ஆம் வரியில் 'நின்னோடு' என்றவிடத்தும் காண்க.] செத்து - கருதி என்ற பொருளது: 'அரவு நீருணல் செத்து' என்றவிடத்தும் (குறிஞ்சிக் கலி, 45) காண்க. வியல் - அகற்சி: "வியலென் கிளவி அகலப் பொருட்டே", சாறுகொள் ஆங்கண் என்றது கோயில்களை. சாறு - விழா: மேல் 'விழவுக் களம் நந்தி' என மீண்டும் வருதல் நோக்கி 'சாறுகொள் ஆங்கண் வியலூர்' எனக் கூட்டிப் பொருள்கொண்டது. அரிக்கூட்டின்னியம்—சல்லி, கரடி போன்ற வாச்சியங்கள்: (மதுரைக்காஞ்சி: 612 - நச்சி. உரை பார்க்கவும்). சல்லி—சல்லென்ற ஓசையுடைத்தாதலாற் பெற்ற பெயர்; சல்லிகை எனவும்படும். கரடி—கரடி கத்தினாற்

போலும் ஓசையுடைத்தாதலாற் பெற்ற பெயர்; கரடிகை எனவும் படும். (சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லார் உரை, ந: 27) பாணியின் - இன், ஏதுப்பொருளது. வரையர மகளிரில் - இல், ஏதுப்பொருளது. சாஅய் - தந்நலஞ் சிறிது கெடுதல்: "ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயி னான்கும் உள்ளதன் நுணுக்கம்" என்றது தொல்காப்பியம். தந்நலஞ் சிறிது கெடினும் காந்தள் விழைதக இருப்பது - பல வம்பு விரிகளத்தின் கவின் பெறப் பொலிதலாலே என்க. பெருவிறல் - அன்மொழித் தொகை; எம் விழைதரு பெருவிறல் என்றவிடத்து ஒருசிலர் மூன்றனுருபு விரித்துப் பொருள்கோடலும் வேண்டுவர். அது நானு உடைதருவதாகும். மற்றும் அன்னார், "ஒரு தலையான் இன்னது காமம் காப்போல, இருதலையானும் இனிது" என்ற கற்பியலின்பாற்பட்ட குறளைக் களவுகைகோளிடத்து மேற்கோள் காட்டுதல் சிறவாதென்க. 186-ஆம் வரியிலுள்ள 'அவ்வழி' என்பதை 200-ஆம் வரியிலுள்ள 'உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு' என்பதனோடு கூட்டும்போது ஆற்றொழுக் காக் கொள்ளுதலினும் பொருள் சிறப்புறுதல் காணலாம்.

இனி வரிகள் 187 முதல் 194 வரையுள்ள பகுதியால் உச்சி மேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் காட்டிப்போந்த உள்ளுறை யுவமம் பாராட்டத்தக்கது. அஃது பின்வருமாறு:— "மிளகு உக்க பாறை-அந்நிலத்து மாக்கள் உறைகின்ற ஊராகவும், நெடுஞ் சுனை-தலைவன் குடியாகவும், மாம்பழத்தாலும் பலாப்பழத்தாலும் விளைந்த தேறல்-தந்தையாலும் தாயாலும் உளனாகிய தலைவனாக வும், பிரசம்-இவரைக் கூட்டின பால்வரை தெய்வமாகவும், அதனை [அத்தேறலை] யுண்டமயில் - உயர்ந்த தலைவனைத் தன் குலத் திற்கு ஒத்தானாகக் கருதி நுகர்ந்த தலைவியாகவும், அத்தேறலிற் பிறந்த களிப்பு - களவொழுக்கத்தாற் பிறந்த பேரின்பமாகவும், மயில் ஆடவாற்றாத தன்மை-வருந்திக் குறைந்த தன்மையாகவும் உள்ளுறை யுவமங் கொள்க" என்பது.

[உள்ளுறையுவமம் இன்ன இயல்பிற்றென்பதை "உள் ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருண் முடிகென, உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்" என்ற தொல்காப்பியத்தாலும், "உள்ளுறையுவமம் உய்த்துணர் வகைத்தாய்ப், புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்" என்ற நம்பியகப்பொரு ளாலும் தெளியலாம்.]

நச்சினார்க்கினியர் அவ்வாறே வரிகள் 195 முதல் 199 வரை யுள்ள பகுதியாலெய்திய உள்ளுறையுவமத்தையும் தெரிவித்துள் ளார். அவர் தெரிவிக்கும் விதம் பின்வருமாறு:— "உயர்ந்த நிலத்தேநின்று மணக்கின்ற காந்தள் வரையரமகளிராற் கீழ் நிலத்தே பரந்து அவ்விடத்தைக் கச்சுவிரித்தாற்போல அழகு பெறுத்து மென்றதனால், நம்மில் உயர்ச்சியையுடைய தலைவன் நமது நல்வினையால் தனது பெருமைதானும் ஒழிந்து இவ்

விடத்தே வந்துகூடி நமக்கும் உயர்ச்சியுளதாக்கி நம்மை அழகு பெறுத்துகின்றனென்று உள்ளுறையுவமம் எய்திற்று" என்பது.

அடிகள் 201-214 :—தலைவன் தலைவியை இல்லறம் புணையாகத் தேற்றிப் பிரியேன் எனச் சூளுற்றுப் பூமலி சோலையில் அப்பகல் களிறுதருபுணர்ச்சி கழிப்பியமை கூறும்.

சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்கு
அறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது
ஏமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
அந்தீந் தெண்ணீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து*
அருவிடர் அமைந்த களிறுதரு புணர்ச்சி
வானுரி யுறையுள் வயங்கியோர் அவரவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி

பதவுரை:—*(203) பலர் உண-பலரும் வந்து உண்ணும்படி, மலர திறந்த வாயில்-அகலக் கதவு திறந்து கிடக்கின்ற வாசலை யுடையதும், (201) மிடாஅ சொன்றி-மிடாச்சோற்றை, (202) வருநர்க்கு-வருவோர்க்கெல்லாம், வரையா-வரையாமலிடுகின்ற, (201) சாறு அயர்ந்தன்ன-விழாக் கொண்டாடினாற் போன்ற, (202) வளம்-செல்வத்தை யுடையதுமான, நகர்-இல்லம், பொற்ப-பொலிவு பெறும்படி, (204) பை நிணம் ஒழுகிய-பசுத்த நிணம் ஒழுகின, நெய் மலி அடிசில்-நெய்மிக்க சோற்றை நீ இடுகையினாலே, (205) வசைஇல்-குற்றமற்ற, வான் திணை புரையோர்-உயர்ந்த குலத்திற் பிறந்த உயர்ந்தோர், கடும்பொடு (206) விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்-தமது சுற்றத்தோடு விருந்துண்ட பின்னர் மிக்க அடிசிலை, (207) நின்னொடு உண்டல்உம் புரைவது என்று-நீ இடுகையினாலே யான் உண்டலும் உயர்ந்தது என்று சொல்லி, ஆங்கு-அப்பொழுது, (208) அறம் புணையாக தேற்றி-இல்லறம் தங்களைக் கரையேற்றுவதாகத் தெளிவித்து, (206) பெருந்தகை-பெரிய தகைமைப்பாடுடைய தலைவன், (208) பிறங்கு மலை (209) மீமிசை கடவுள் வாழ்த்தி-விளங்குகின்ற [பெரிய] மலையில் மிக உயர்ந்த இடத்தே யுறைகின்ற முருகக் கடவுளையும் வாழ்த்தி, கை தொழுது-கைகூப்பி வணங்கி, (210) ஏம் உறு வஞ்சினம்-(அம் முருகன் முன்னே) இவள் மயக்கமுறுதற்குக் காரணமான சூளுறவை, வாய்மையின் தேற்றி-உண்மை*

*நெஞ்சமைந்து என்றும் பாடம்.

யால் தெளிவித்து, (பின்னரும்) (211) அம் தீம் தேள் நீர் குடித்தலின்-[அம்மலையிலுள்ள] அழகிய இனிய தெள்ளிய அருவிநீரை அவன் குடிக்கையினாலே, நெஞ்சு அமர்ந்து-இவளது நெஞ்சு (அவனிட்ட) சூளுறவிலே பொருந்தி, (213) வான் உரி உறையுள் வயங்கியோர் அவாவும்-ஆகாயத்தில் தமக்குரிய இருப்பினையுடைய[ராய்] விளங்கும் தேவர்கள் விரும்பும், (212) அரு விடர் அமைந்த-அரிய குகைகளினிடத்தே பொருந்தின, (214) பூ மலி சோலை-பூக்கள் மிக்க சோலையிலே, (212) களிறு தரு புணர்ச்சி - களிறு கூட்டின கூட்டத்தை, (214) அ பகல் கழிப்பி - அன்றைய மிகுந்த பகற் பொழுதெல்லாம் போக்கி ; (எ-று).

(203) பலருணத்திறந்த வாயிலையும் (201) சாறயர்ந்தன்ன (202) வளத்தையும் உடைய நகர் பொற்ப (204) நெய்ம்மலி யடிசிலை நீ இடுகையினாலே (205) புரையோர் கடும்பொடு (206) விருந்துண்டெஞ்சிய மிச்சிலை (207) நீ இடுகையினாலே யானுண்டலும் புரைவதென்று சொல்லி (208) தேற்றிப் (206) பெருந்தகை (209) கடவுள் வாழ்த்திக் கைதொழுது (210) வஞ்சினம் வாய்மையிற் றேற்றித் (211) தெண்ணீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து (213) வயங்கியோர் அவாவும் (214) பூமலி சோலையிலே (212) களிறுதரு புணர்ச்சியைக் (214) கழிப்பி-என வினை முடிக்க.

சாறயர்ந்தன்ன வளம் என இயையும்.

கருத்துரை :—பலரும் வந்து உண்ணும்படி முன்னரே செல்வச் சிறப்போடு கூடிய இல்லம் பின்னரும் பொலிவு பெறும்படி நீ நெய்மிக்க அடிசிலை இடுகையினாலே, உயர்ந்தோர் தமது சுற்றத்தோடு விருந்துண்பர் : அங்ஙன் விருந்துண்டு எஞ்சிய அடிசிலை யானும் நீ இடுகையினாலே உண்ணுதல் உயர்ந்ததே என்று கூறி, அத்தகைய இல்லறம் நமக்குப் புணையாகுக எனத் தெளிவித்து, மலையுறை கடவுளாம் முருகனையும் வாழ்த்தி வணங்கி அவன் முன்னர் வஞ்சினமும் சாற்றி, பின்னும் தலைவி நெஞ்சு தான் செய்த சூளுறவிலே பொருந்த அருவிநீரைக் குடித்துக் களிறு தருபுணர்ச்சியை அன்றைய பகற்போதெல்லாம் பூமலி சோலையிலே போக்கினான் தலைவன் என்பது.

விசேடவுரை :—வளநகர் பொற்ப என ஆசிரியர் கூறியிருத்தலின், 201-203 வரிகளில் 'முன்புள்ள இயல்பு கூறிற்று' என்றனர் நச்சினார்க்கினியர். இவ்வுரைநயம் கண்டு இன்புற வேண்டுவதே. வகையில் வான்திணைப் புரையோரை விருந்தாகச் சொன்னது-அறப்பயன்தான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால், வான் சிறிதாப்போர்த்து விடுமாதலின். "விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன்" என்றார் வள்ளுவனாரும். "புரை உயர்பாகும்." விருந்துண்டெஞ்சிய மிச்சில் நீ இடுகையினாலே யான் உண்டலும் உயர்ந்தது என்றது-விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று என்பது குறித்தற்கு. நின்னோடு என்றவிடத்து 'நின்னால்' என்பது பொருள்: ஓடு

ஆலாயிற்று. "காதன் மனையாளும் காதலனும் மாறின்றித், தீதிலொரு கருமஞ் செய்பவே" என்றதற்கேற்ப வேறுகாத அன்புடையிருவர் கூடியல்லது இவ்விருந்தோம்பல் கூடாததனால் 'நின்னோடு உண்டலும் புரைவது' என்றான். இவ்வுண்மையை 'தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' என்ற கண்ணகி வாய்மொழியாலும், 'விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்' என்ற கவிச் சக்கரவர்த்தி வாக்காலும் உணர்க. பெருந்தகை-ஆணறிசொல்: என்னை? "பெருமையும் உரனும் ஆடூஉமேன" என்றது விதி. ஆதலின் நச்சினார்க்கினியர் "அறம் புணையாகத் தேற்றி, பெருந்தகை......கடவுள் வாழ்த்தி" என இயைத்துப் பொருள் கொண்டார்: அது பொருந்துவதே. அங்ஙன் கொள்ளாது சிலர், 'பெருந்தகை' என்றது அண்மைவிளி எனக்கொண்டு, தலைவியைப் பாராட்டித் தலைவன் விளித்ததாக் கொண்டனர்; கொண்டதுமன்றி, 'பெருந்தகைப் பெண்' என்று கண்ணகியை மதுராபதி தெய்வம் விளித்தமையையும் மேற்கோள் காட்டினர். ஈண்டு கவனிக்கவேண்டுவது :- பெருந்தகை என்ற சொல் யாண்டும் ஆணையே காட்டி இலக்கியங்களிற் பயின்று வரும் : 'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே' என்ற தேவாரமும், 'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்" என்ற கம்பன் வாக்கும் நோக்குக. ஏன்! இக்குறிஞ்சிப்பாட்டிலேயே வரி 179-இல் 'பெருந்தகை' எனத் தலைமகனுக்குக் கபிலர் கூறியுள்ளமை காண்க. மற்றும், மதுராபதி தெய்வம் பெருந்தகை என்று விளிக்கவில்லை; பெருந்தகைப் பெண் என்று விளித்திருக்கிறது. பெருந்தகை என்ற சொல் பெண்ணுக்கு வரும் சொல்லாயின், மேல் 'பெண்' என்பது வேண்டுவதின்று; எனவே, தெய்வம் வேற்றுமை யுருபும் பயனுமுடன்றொக்க தொகையாக மொழிந்தது, அன்மொழித்தொகையாகவன்றி. மலைமிசைக் கடவுள் - சேயோன்: முருகன். என்னை?-சேயோன்மேய மைவரையுலகமாதலின். வஞ்சினம்-சூளுறவு: அஃதாவது, 'பிரியின் அறனல்லது செய்தேனாவேன்' என்னும் மொழி என்றனர் நச்சினார்க்கினியர். இது 'தெளிவகப்படுத்தல்.' இம்மொழி கேட்ட தலைவி, புணர்ச்சிக்கினமாகிய பிரிவுநிலை யென்பதொன்றுண்டு என மயங்குவள். அம்மயக்கந் தீர்தற்கு நீர்குடித்துச் சூளுற்றான்; எனவே இத்தேற்றமும் வேண்டிற்று. ஆனால் பின்னது 'தீராத்தேற்றம்' ஆகாது; என்னை? அஃது இடந்தலைப்பாட்டுக்கு உரித்தாகலின் என்க. அந்தீம் தெண்ணீர் குடித்தலினால் தலைவி நெஞ்சமர்ந்தாள் எனப் 'பின்னர் வருதற்கொப்ப, முன்னர் வஞ்சினம் சாற்றி வாய்மையில் தேற்றினும் [அதாவது, தெளிவகப்படுத்தினும்] தலைவி நெஞ்சு அமர்ந்தாளல்லள் என்பது பெறப்படுதலின், 'ஏமுறு வஞ்சினம்' என்பதற்கு - இவள் மயக்கமுறுதற்குக் காரணமான வஞ்சினம் என உரைவகுத்தார் நச்சினார்க்கினியர்: ஏம்-மயக்கம், "வேனிலத்த மென்னுது ஏமுற்று" (அகநா: 69) என்றவிடத்துங் காண்க.

தாம் கொண்ட இவ்வரிய கருத்தை ‘முன்தேற்று ஆதலின் ஏமுறு வஞ்சினம் என்றார்’ எனக் குறித்துப் போந்தார். முன்தேற்று - தெளிவகப்படுத்தல்; பின்தேற்று - தீராத்தேற்றம்; தெளிவகப்படுத்தல் - இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவற்கு உரியது என்பதும், தீராத்தேற்றம்-இடந்தலைப்பாட்டில் தலைவற்கு உரியது என்பதும் காணவேண்டுவது. ஈண்டு இயற்கைப்புணர்ச்சிக்குப்பின் கூறிய வஞ்சினமாதலின் முன்தேற்றாகிய தெளிவகப் படுத்தலாயிற்று. இந்நயம் காணாது சிலர், ‘இவ் வஞ்சினமொழியால் தலைவி தேறி இன்னாமை யொழிதலின் ஏமுறு வஞ்சினம் என்றார்’ எனக் கூறினர். நீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து என்றதால், நீர் குடித்தலும் ஒரு சூளுறவு என்பது கருதத்தக்கது. விடர்-மலைப்பிளப்பு, மலைக்குகை: மேல் ‘குழுமலை விடரகம்’(261)என வருதலும் இப்பொருளதே: மற்றும், ‘நெடுவரை யருவிடர்’ (புறம்: 135); ‘பெருமலை விடரகத்து’ (புறம்: 37) முதலியனவும் காண்க. இதனைக் கொள்ளாது, விடர்-காடு என்றாருமுளர். உரிய உறையுள் என்பது-உரியுறையுள் என விகாரப்பட்டது. வரிகள் 212-214-இல், தோழி உண்மை செப்பும் கிளவி கூறினளாயிற்று. (உண்மை செப்புங் கிளவி கூறலாவது - தோழி அறத்தொடு நிற்குங்கால் படைத்து மொழியாது பட்டாங்கு கூறுதல்.)

அடிகள் 215-230 :—ஞாயிறு மறைய மாலைப்போது வந்தமை கூறும்.

எல்லை செல்ல வேழூர்பு இறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
மான்கண மரமுதல் தெவிட்ட ஆன்கணம்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
ஏங்குவயிர் இசைய கொடுவாய் அன்றில்
ஓங்கிரும் பெண்ணை யகமடல் அகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவலர்
ஆம்பலந் தீங்குழல் தெள்விளி பயிற்ற
ஆம்பல் ஆயிதழ் கூம்புவிட் வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயரக் கானவர்
விண்தோய் பணவை மிசைஞெகிழி பொத்த
வானமா மலைவாய் சூழ்புகறுப்பக் கானம்
கல்லென் றிரட்டப் புள்ளினம் ஒலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணூஉ

பதவுரை :—*(216) பல் கதிர் மண்டிலம்-பல கிரணங்களையுடைய ஞாயிறு, (215) ஏழ் ஊர்பு-ஏழு குதிரைகள் பூண்ட தேரையேறி, எல்லை செல்ல இறைஞ்சி-பகற்பொழுது போம்படி தாழ்ந்து, (216) கல்சேர்பு மறைய-அத்தவெற்பினைச் சேர்ந்து மறைகையினாலே, (217) மான் கணம்-மானின் திரள், மரம் முதல் தெவிட்ட-மரத்தடி*

களிலே திரளவும், ஆன் கணம்-பசுவினுடைய திரள், (218) கன்று பயிர் குரல்-கன்றுகளை யழைக்குங் குரலையுடையவாய், மன்று நிறை புகுதர-மன்றுகள் நிறையப் புகுதலைச் செய்யவும், (219) ஏங்கு வயிர் இசைய-ஊதுகின்ற கொம்புபோன்ற ஓசையை யுடைய, கொடு வாய் அன்றில்-வளைந்த வாயையுடைய அன்றில், (220) ஓங்கு இரும் பெண்ணை-உயரும் பெரிய பனையில், அகமடல்-உள்மடலிலேயிருந்து, அகவ-(தன்) பேட்டை யழைக்கவும், (221) பாம்பு மணி உமிழ-பாம்பு தான் மேய்தற் காரணமாகத் தன்னிடத்துள்ள மாணிக்கத்தை உமிழவும், கோவலர்-இடையர்கள், பல் வயின்-பல இடங்களினும் நின்று, (222) ஆம்பல் அம் தீம் குழல்-ஆம்பல் என்னும் பண்ணினுடைய அழகிய இனிய குழலிடத்து, தெள்விளி பயிற்ற-தெளிந்த ஓசையைப் பலகாலும் எழுப்பவும், (223) ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட-ஆம்பலினது அழகிய இதழ்கள் தளையவிழவும், (225) அந்தி அந்தணர் அயர-பார்ப்பார் அந்திக்காலத்துச் செய்யுந் தொழில்களை நிகழ்த்தவும், (223) வளம் மனை-செல்வத்தையுடைய மனைகளில், (224) பூ தொடி மகளிர் சுடர் தலை கொளுவி-பொலிவுபெற்ற தொடியினையுடைய மகளிர் விளக்கை அவ்விடத்தே கொளுத்தி, (225) அந்தி அயர-அந்திக் காலத்தில் தமக்குரித்தாய தொழிலை நிகழ்த்தவும், கானவர்-அக்காட்டில் வாழ்வோர், (226) விண்தோய் பணவைமிசை-வானைத் தீண்டுகின்ற பரணின்மேலே, ஞெகிழி பொத்த-தீக்கடை கோலாலே நெருப்பைப் பிறப்பித்து எரிப்பவும், (227) வானம்-மேகமானது, மா மலைவாய் சூழ்பு-பெரிய மலையிடத்தைச் சூழ்ந்து, கறுப்ப-கறுத்துத் தோன்றவும், (227) கானம்-காட்டிலுள்ள விலங்குகளெல்லாம், (228) கல் என்று இரட்ட-கல்லென்னும் ஓசையை யுடையவாய் ஒன்றற்கொன்று மாறிக் கூப்பிடவும், புள் இனம் ஒலிப்ப-பறவைகள் கூட்டின்கண்ணே நின்று ஆரவாரிக்கையினாலே, (229) சினை இய வேந்தன்-(பகைவரது நிரைகோடல் கருதிச்) சினந்த அரசன், செல்சமம் கடுப்ப-முனையிடத்துச் செல்ல வெழும் அரவத்தை (அந்த ஆரவாரம்) நிகர்ப்பவும், (230) துனை இய மாலை-விரைதலையுடைய மாலைப்பொழுது, துன்னுதல் காணூஉ-நெருங்குதலைக் கண்டு; (எ-று.)—(233) இலங்கிழையீர் கலங்கலோம்புமின் என மேல் இயையும்.

(216) பல்கதிர் மண்டிலம் மறைகையினாலே (217) மான் கணம் தெவிட்ட (218) ஆன் கணம் புகுதர (219-20) அன்றில் அகவ (221) பாம்பு உமிழ (221-22) கோவலர் பயிற்ற (223) ஆம்பல் கூம்புவிட (225) அந்தணர் அயர (224-25) மகளிர் கொளுவி அயர (225-26) கானவர் பொத்த (227) வானம் கறுப்ப (227-28) கானம் இரட்ட, (228-29) புள் ஒலிப்பச் செல்சமங் கடுப்ப (230) மாலை துன்னுதல் கண்டு என முடிக்க.

கருத்துரை:—ஞாயிறு மறைகையினாலே மான்கள் மரத்தடிகளிலே திரள, பசுவின்திரள் கன்றுகளைப் பயிரும் குரலவாய் மன்றுகளில் புகுதர, அன்றில் தன் பேட்டை யழைக்க, பாம்பு

மேயும் பொருட்டுத் தன் மாணிக்கத்தை உமிழ, கோவலர் ஆம்பற் பண்ணைக் குழலிடத்தே எழுப்ப, ஆம்பலிதழ்கள் தளையவிழ, பார்ப்பனர் அந்திக்கடன் நிகழ்த்த, பூந்தொடிமகளிர் மனை தொறும் விளக்கம் கொளுவ, கானவர் தீக்கடைந்து எரிப்ப, மேகம் மலைசூழ்ந்து கறுப்ப, காட்டு விலங்கினங்கள் கல்லென் றிரட்ட, குடம்பைக்கண் நின்று புள்ளினங்கள் ஒலிப்பதனா லெழுந்த ஆரவாரம் சினந்த வேந்தனது படையரவம் கடுப்ப, அந்திமாலை விரைய நெருங்கியமையைத் தலைவன் கண்டு என்பது.

விசேடவுரை :—ஏழ் - ஆகுபெயரால், ஏழுகுதிரைகளைக் காட்டிற்று. ஞாயிறு ஏழுகுதிரை பூண்ட தேருடையான் என்பது மரபு: கம்பரும் "பச்சைமா ஏழுமேறப் போய் ஆறும் ஏறினர்" என்றது காண்க. ஒற்றைச் சக்கரமுடைய சூரியனது தேர்க்குதிரைகள் ஏழென்றும் காயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் ப்ருஹதீ பங்க்தி த்ரிஷ்டுப் ஜகதீ என்ற ஏழு சந்தசுகளுமே அக்குதிரைகளாக அமைந்துள்ளனவாதலால், அவை அப்பெயர்பெறு மென்றும், அக் குதிரைகளின் நிறம் பசுமை யென்றும் புராணம் கூறும். கல்-மலை; ஈண்டு அத்தவெற்பு. தெவிட்டல்-அசையிடல் எனினு மாம். பயிர்-மிருகங்களுள் ஒன்று மற்றொன்றை அழைக்கும் ஓசைக்குறிப்பு. மன்று - பசுத்தொழு. அன்றில் என்பது, ஒரு பறவை. அது, எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணை பிரியாது நிற்கும். கணப்பொழுது ஒன்றை ஒன்று விட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறாமல் ஒன்றையொன்று இரண்டுமூன்றுதரம் கத்திக்கூவி அதன்பின்பும் தன்துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடும். இதனை வடநூலார் 'க்ரௌஞ்சம்' என்பர். ஆணும் பெண்ணுமான அன்றில் இணைபிரியாமல் நெருங்கி ஒன்றோடொன்று வாயலகைக்கோத்துக்கொண்டு உறங்கும்பொழுது அவ்வுறக்கத்திலே வாயலகு தன்னில் நெகிழ்ந்த வளவிலே துயிலுணர்ந்து அப்பிரிவைப் பொறாமல் மெலிந்து கத்தும். மற்றும், "அன்றில் ஒருகண் துயின்றொருகண் ஆர்வத்தால், இன்றுணைமேல் வைத்துறங்கும்" என்றார் புகழேந்தியும். ஆகவே, இரவின் தொடக்கமாகிய மாலைப் பொழுது வந்தபோது ஆணன்றில் தன் பேட்டை அழைத்த தென்றார் நச்சினார்க்கினியர். இனி, பெண்அன்றில் தன் ஆணை யழைத்ததென்றலும் இழுக்காது. "அன்றிற்பேடை யரிக்குரல் அழைஇச், சென்றுவீழ் பொழுது சேவற்கு இசைப்ப" என்ற மணிமேகலையாலும், 'அன்றில் ஒருதரங் கத்தும்பொழுதும் பொறாஅள் என் ஒருவல்லியே' என்ற திருவேங்கடத்தந்தாதி யாலும் இதனை அறியலாம். அன்றில், பனையில் வசிப்பதென் பதை "மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத், துணைபுணரன்றில்" (நற்: 303); "மன்றவம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை, அன்றில்" (குறுங்: 177) என்பவற்றாலும் அறியலாம். பாம்பு தான் இரைதேரும் காரணமாகத் தன்னிடத்துள்ள மாணிக்கத்

தைக் கக்கி, அதனொளியையே விளக்காகக் கொண்டு செல்லும் என்பர். இதனை 'அராக் கதிர்பட வுமிழ்ந்த மேய்மணி விளக்கின்' என்றது அகநானூறு. (செ: 72). ஆம்பல் - ஓர் பண் எனக் கொண்டனர் நச்சினார்க்கினியர். 'பையுள் செய் ஆம்பலும்' (செ: 1314), 'உயிர்மேல் ஆம்பல் உலாய் நிமிரும்' (செ: 1662) என்ற சிந்தாமணித் தொடர்களைக் காணும்போது அஃது ஓர் பண் என்பது விசதம். ஆயினும் அடியார்க்குநல்லார், சிலப்பதிகாரத்து 'ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ' என்றவிடத்து 'ஆம்பலந் தீங்குழல்' என்றது கருவியாகும் பண்ணன்று எனக் காரணங்கூறி மறுத்தது, ஆங்குக் 'கொன்றையந் தீங்குழலையும்' ஒருசேர வைத்த பெற்றிமையும் அடைவும் நோக்கியேயன்றி வேறன்று. ஆம்பல் என்பதோர் பண் உண்டு என்பது, அடியார்க்குநல்லார்க்கும் கருத்து என்பதை "இனி, அவற்றைப் பண்ணென்று கூறுபவெனின், அங்ஙனம் கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண்ணாதற்குப் பொருந்தக் கூறினல்லது கொன்றையென ஒரு பண்ணில்லையாதலானும்" என்ற அவரது உரைப் போக்காலேயே அறியலாம். இக் கருத்துடையார் அவர் என்பதைக் கீழ் 'முல்லைத் தீம்பாணி பாடுதும்' என்றவிடத்து 'முல்லையாகிய இனிய பண்ணாலே' என உரை வகுத்திருத்தலாலும் தெளியலாம். முல்லையைப் பண்ணாக் கொண்டவர் ஆம்பலையும்பண்ணாக் கொண்டவரே: எனினும், சிலப்பதிகாரத்து இச்சந்தர்ப்பம் நோக்குமிடத்து, பண்ணாகாது கருவியே ஆகும் கொன்றையையும் ஒருசேர வைத்துப் பேசியிருத்தலின், ஆம்பலையும் கருவியாக் கொள்ளவேண்டுவதே முறையாயிற்று அவருக்கு. இந்த உண்மை காணவேண்டுவது. இது நிற்க: இனி, ஆற்றொழுக்காப் போகாது (225) 'அந்தி அந்தணர் அயர' என்ற தொடர்க்கு முன்னர் உரைவகுத்து, பின்னர் (223-224) 'வளமனைப் பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி அந்தி அயர' என்ற தொடர்க்கு நச்சினார்க்கினியர் உரைவகுத்த தென்னையெனில், மேல் வரும் 225-26-ஆம் வரியிலுள்ள பொருளோடு அடைவுபட்டுச் சிறத்தலின் என்க. எங்ஙனெனின், மகளிர் மனைகளில் விளக்கைக் கொளுத்தாநிற்ப, கானவர் காட்டில் ஞெகிழியால் நெருப்பையுண்டாக்கிக் கொளுத்தாநிற்பர் என்பது. ஆற்றொழுக்காக் கொள்ளின் பொருட்டொடர்பு இடையீடுபடுதல் காணலாம். 'அந்தி அயர' என்பது 'மகளிர் சுடர்தலைக் கொளுவி' என்பதனோடும் கூட்டப்பட்டது. மகளிர் விளக்கேற்றி மாலை அயர்தலை "இரும்பு செய்விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ, நெல்லும் மலருந் தூஉய்க் கைதொழுது, மல்லல் ஆவணம் மாலையயர" என்ற நெடுநல்வாடை யடிகளாலும் (42-44) தெளியலாம். 224-225-ஆம் வரிகளோடு "அந்தி அந்தணர் செந்தீப் பேண, பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப" என்ற மணிமேகலையடிகளை ஒப்பு நோக்குக. கானம் - ஆகுபெயராய்க் காட்டிலுள்ள விலங்குகளைக் காட்டிற்று. ஒலிப்ப என்றது காரணப்பொருட்டு. 'சினைஇய வேந்தன்' என்பதற்கு, நிறைகோடல்

கருதிச் சினந்த அரசன் எனப் பொருள் கொண்டது 'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' என்றது கருதி. வேந்தன் செல் சமம் என்றதால் மன்னுறு தொழிலாயிற்று. சமம் - போர்; இங்குப் போர் குறித்தெழும் அரவத்திற்கு ஆகிவந்தது; வெட்சி யரவம் ஈண்டுக் குறிக்கப்பட்டது. பறவைகள் குடம்பைக் கண்ணே நின்று ஆரவாரிக்கை—வேந்தன் படையினர் பாடிக் கண்ணே நின்று எழுப்பும் அரவத்தைக் கடுக்கும். இனி, ஒருவர் 'பூமலி சோலைக்கண் உறையும் காதலரைப் பிரித்து ஏதஞ்செய்ய இவ்வந்திமாலை வருதலின், அக்கொடுமை கருதிச் சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்ப என உவமை எடுத்தோதினர்' என்றுகூறி, "காதலர் இல்வழி மாலை கொலைக் களத்து, ஏதிலர் போல வரும்" என்ற கற்பியலின் பாற்பட்ட குறளையும் மேற்கோள் காட்டினர்; பொருந்துமேற் கொள்க.

முல்லைக்குரிய மாலையைக் குறிஞ்சியிற் கூறியதென் என்ற வினாவிற்கு விடையிறுப்பார்போல் நச்சினார்க்கினியர் "நிலனொருங்கு மயங்குதலின்றென மொழிப", எனவே காலமிரண்டு மயங்கு மென்றலிற் குறிஞ்சியின் மாலைக்காலங் கூறினார் என்றார்.

இலக்கணக்குறிப்பு :—'தெவிட்ட' முதல் 'கடுப்ப' ஈறாக வந்துள்ள எச்சங்கள் எதிர்காலம் உணர்த்தின. நச்சினார்க்கினியரும் 'கடுப்ப' – என்பதை எச்சமாகக் கொண்டுள்ளதைக் காணலாம். கடுப்ப–கடுப்பவும் என்றபடி. காணூஉ–செய்யூ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

அடிகள் 231-237 :—மாலை வரவே, தேறுதல் மொழிகூறித் தலைவன் தலைவியை ஊர்வாயிலில் உண்துறை நிறுத்திப் பெயர்தல் கூறும்.

நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மணம் அயர்கம் சின்னாள்
கலங்கல் ஓம்புமின் இலங்கிழை யீரென
ஈர நன்மொழி தீரக் கூறித்
துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயில்
உண்டுறை நிறுத்துப் பெயர்ந்தனன்

பதவுரை :—(233) இலங்கு இழையீர் - விளங்குகின்ற பூணினையுடையீர்! (231) நுமர் நேர்இறை முன்கை பற்றி தர-நும்முடைய சுற்றத்தார் நுமது நேரிய இறையினையுடைய [நுண்ணிய மூட்டுவாயையுடைய] முன்கையைப் பிடித்து எமக்குத்தர, (232) நாடு அறி நல் மணம் -நாட்டிலுள்ளார் எல்லாம் அறியும் நன்றாகிய கலியாணத்தினை, அயர்கம்-பின்பு நிகழ்த்துவேம், சில் நாள்-அது நிகழ்தற்கிடைப்பட்ட சில நாட்கள், (யாம் இக் களவொழுக்கத்தாற் பெறும் பேரின்பம் நுகர்தற்கு இங்ஙனம் ஒழுகாநின்றேமென்று கொண்டு) (233) கலங்கல் ஓம்புமின்-நெஞ்சு கலங்குதலைப் பாதுகாப்பீராக, என-என்று, (234) ஈரம் நல் மொழி-அரு

ளுடைத்தாகிய நல்ல வார்த்தையை, தீர கூறி-இவள் நெஞ்சில் வருத்தம் தீரும்படி சொல்லி, (235) துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து - ஆவைப் புணர்ந்த ஏறுபோலே விடாமல் எம்முடனே கூடவந்து, (236) துஞ்சா முழவின் முது ஊர் வாயில் (237) உண் துறை நிறுத்து - ஓசையை ஒருகாலும் அறாத முழவினையுடைய பழைய நம்மூர் வாசலில் பலரும் நீருண்ணும் துறையிலே எம்மை நிறுத்தி, பெயர்ந்தனன் - மீண்டுபோனான்; (எ - று.)

(233) இலங்கிழையீர்! (231) நுமர்தர (232) நன்மணம் அயர்கம்; சின்னாள் (233) கலங்கலோம்புமின் என (234) ஈர நன் மொழி கூறி (235) எம்மொடு வந்து (237) உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன் என முடிக்க.

கருத்துரை :—'நுமர் நினது முன்கை பற்றித்தர யாம் நாடறி நன்மணம் பின்னர் அயர்கம்: அதற்கிடைப்பட்ட சில நாட்கள் இக்களவொழுக்கத்தாற் பெறும் பேரின்பம் நுகர்தற்கா இங்ஙனம் ஒழுகாநின்றேம் என்று கொண்டு நெஞ்சு கலங்குதலைப் பரிகரிமின்' என்று தலைவியின் வருத்தந்தீர நல்வார்த்தை கூறி, தலைவன் ஆவைப்புணர்ந்த ஏறுபோலே விடாமல் அவள்கூடவே வந்து, அவள் மூதூர் வாயில் நீருண்ணும் துறையிலே நிறுத்தி மீண்டுபோனான் என்பது.

விசேடவுரை :—'நுமர்தர நாடறி நன்மணம் அயர்கம்' என்று தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டிற் காணப் படுதலின், மணமகளினை அவள் சுற்றத்தார் தரக் கொழுநன் பெறுதலே மணமரபாத லுணரலாம். தமர் நமக்கு ஈத்த தலைநாள்' என்ற தலைவன் கூற்றுங் காண்க. (அகம், 136.) இதனை 'அற்றார்க்கொன்றாற்றாதான் செல்வம் மிகுநலம், பெற் றாள் தமியள்மூத் தற்று' என்ற குறளாலும் அதனிடத்து வள்ளுவர் அமைத்துள்ள உவமையாலும் தெற்றெனத் தெளிய லாம். உவமேயத்தில் மூன்று கூறியிருத்தற்கேற்ப உபமானத் திலும் மூன்று கொள்ளவேண்டுவது; எனவே, ஆங்கு, மிகு நலம் பெற்றாள் கொடுப்பாரின்மையின் கொழுநனின்றித் தமிய ளாய் மூத்த தன்மைத்தென்றது காணவேண்டுவது. முன்கை பற்றித் தருதல்-கன்னியைக் கொழுநனது வலக்கையிலீதல். "சின்னாள் கலங்கலோம்புமின் இலங்கிழையீர்!" என்ற தலைவன் கூற்று, கீழ் 182-ஆம் வரியில் வந்துள்ள 'நீடு நினைந்து' என்றவிடத்து நச்சினார்க்கினியர் வகுத்த உரைக்கு அரண் செய்து நிற்றலை முன்னர்க் கூறினேம். இங்ஙன் கொள்ளாது, 'யாய் முதலியோர்க்கு அறிவுறுத்து அவர் உடம்பாடு பெறற்கும், சுற்றத்தார்க்கு அறிவுறுத்தற்கும், பிறவும் நிகழ்தற்கும் இடையே சில நாட்கள் வேண்டுமன்றே, அந்நாட்களில் நீயிர் கலங்க வேண்டா' என்று தலைவன் கூறியதாக உரை கண்டாருமுளர்; இது பொருந்துமேற் கொள்க. 'துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து' என்ற உவமை பெரிதும் பாராட்டற்பாலது. துணைபுணர்

ஏற்றைக் கூறியது—தொனி. இனி, துணைபுணர் ஏறுபோலே விடாமல் எம்முடனே கூடவந்து மூதூர் வாயில் உண்டுறை நிறுத்துப் பெயர்ந்தனன் என்றதால், தோழி மீண்டும் வேட்கையுரைத்தல் கூறினாளாயிற்று. (முன்னர் வேட்கையுரைத்தல் கூறியதை 186-ஆம் வரியுரையிற் காண்க.) மூதூர் வாயில் உண்துறை நிறுத்திப் பெயர்ந்தது - யாம் இனி அச்சமின்றி இருட்டுமுன் இல்புகுவோம் என்ற கருத்துப்பற்றியும், தம்மைப் பிறர்கண்டு ஐயுறுமை பற்றியுமாம்.

அடிகள் 237-245 :-இரவுக்குறி வந்தொழுகும் தலைவன் இடையீடுபட்டுப் போயினும், முனியலுறுத பெருந்தகையன் என்று கூறும்.

அதற்கொண்டு
அன்றை யன்ன விருப்போ டென்றும்
இரவரன் மாலைய னேவரு தோறும்
240 காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும்
நீதுயில் எழினும் நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றேள் இன்துயில் என்றும்
பெருஅன் பெயரினும் முனியல் உருஅன்
இளமையின் இகந்தன்றும் இலனே வளமையின்
245 தன்னிலை தீர்ந்தன்றும் இலனே

பதவுரை.— *(237) அதன்கொண்டு-அப்புணர்ச்சி தொடங்கி, (238) அன்றை அன்ன விருப்போடு-அம் முதல்நாள் போன்ற விருப்பத்தோடே, என்றுஉம்-எந்நாளும்,(239) இரவரல் மாலையன்-இரவுக்குறியிலே வருதலைத் தனக்கு இயல்பாக உடையவன்; வருதோறுஉம்-அங்ஙனம் வரும்போதெல்லாம், (240) காவலர் கடுகின்உம் - ஊர்காப்போர் கடுகிக் காத்தாராயினும், கதம் நாய் குரைப்பின்உம்-கோபத்தையுடைய நாய் குரைத்ததாயினும்,(241) நீ துயில் எழின்உம்-நீ துயிலுணர்ந்தாயாயினும், நிலவு வெளிப் படின்உம்-நிலவு வெளியாக எறித்ததாயினும், (242) வேய்புரை மெல்தோள் இன் துயில் (243) பெருஅன் - மூங்கிலையொத்த மெல்லிய தோளிற்பெறும் இனிய துயிலைப் பெறுதுபோவன்: பெயரின்உம - (அதுவேயன்றி) யாங்கள் குறியல்லதனைத் தலைவன் செய்த குறியாகக் கருதிச் சென்று மீண்டு மனையிடத்தே புகினும், முனியல் உருஅன்-அதற்கு வெறுத்தலைச் செய்யான்; (244) இளமையின் இகந்தன்றும் இலன்-அவன்றான் இளமைப் பருவத்தைக் கடந்ததுமிலன்; வளமையின்-(நற்குணங்களைத் திரித்தற்குரிய) செல்வச் செருக்கால், (242) என்றுஉம்-எந்நாளும், (245) தன் நிலை தீர்ந்தன்றும் இலன்-தன் குலத்திற் குரிய நற்குணங்களை மேற்கொண்டொழுகும் நிலையினின்றும் நீங்கியதுமிலன்; (எ-று.) (239) மாலையனே (244) இலனே (245) இலனே என்றவிடத்து வந்துள்ள ஏகாரங்கள்-ஈற்றசை.*

(237) அதற்கொண்டு (238) என்றும் (239) இரவில்வரு மாலையன்: வருதோறும் (240) கடுகினும் குரைப்பினும் (241) துயிலெழினும் வெளிப்படினும் (242) இன்றுயில் (243) பெறாது போவன்; [அதுவேயன்றி யாங்கள் அல்லகுறிப்பட்டுப்] பெயரினும் முனியலுறான்; (244) இளமையில் இகந்தன்றுமிலன் (242) என்றும் (245) தன்னிலை திரிந்தன்றுமிலன்—என வினை முடிக்க.

கருத்துரை :—அக் களிறுதருபுணர்ச்சி தொடங்கி, அந்த நாளன்றிருந்தது போலவே குன்றாத விருப்பத்தையுடையனாய் இரவுக்குறிவருதலை யியல்பாக் கொண்டிருந்த தலைவன், வருந் தொழிற்கருமையானும் அல்லகுறியானும் இடையீடுபட்டுக் கருதிய இன்பம் பெறாதுபோயினும் அதற்காக வெறுத்தலைச் செய்யான்; அவன்றான் இளமைப் பருவத்தைக் கடந்தானு மல்லன்; செல்வச் செருக்கால் தங்குலத்திற்குரிய நற்குணங் களிற் றிரிந்தானுமல்லன் என்பது.

விசேடவுரை :— அன்றை அன்ன விருப்போடு - களிறுதரு புணர்ச்சி தொடங்கிய அத் தலைநாள் போன்ற விருப்பினன் என்றபடி. இரவரல்-இரவுக் குறியில் வருதல். இரவுக்குறி இல் வரையிகவா இயல்பிற்றாகும். குறியாவது-பகலினும் இரவினும் இன்னதென்று எய்துதற்குரியதாய்க் குறிக்கப்படும் இடம். 240-41 வரிகளில் வருந்தொழிற்கருமை கூறியபடி. 243-ஆம் வரியில், அல்லகுறி கூறியபடி. என்னை? "அல்லகுறி வருந் தொழிற்கருமை யென்றாங்கு, எல்லிக்குறி யிடையீடு இருவகைத் தாகும்". வருந்தொழிற்கருமையாவது :—தலைவன் வருகின்ற தொழிற் கருமையாம்: அங்ஙனம் அவன் வருந்தொழிற்கருமைக்குப் பொருந்துதலுரியன — தாய்துஞ்சாமை, நாய்துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறுதல், கோழி குரல் காட்டுதல் என்பன. அவற்றுள் நான்கு ஈங்குக் கபிலராற் கூறப்பட்டன. ஏழும் வந்துள்ளதை அக நானூறு—122-ஆம் பாடலிற் காண்க. இனி, அல்லகுறியாவது :— தலைவனால் நிகழ்த்தப்படுவனவாகிய புள்ளெழுப்பல், புன்னைக் காய் நீரிலிடுதல் முதலியன பிறிதொன்றான் நிகழ்தல். இரு வகைப்பட்ட இரவுக்குறியிடையீட்டையும் காட்டிப்போந்து உரைவகுத்த நச்சினார்க்கினியர் பெற்றிமை பெரிதும் போற்றத் தக்கதே. (243) 'பெயரினும்' என்று கபிலர் கூறிய ஒரு சொல்லிற் பொதிந்துகிடந்த அல்லகுறிப்படுதல் என்னும் அருங் கருத்தினை நச்சினார்க்கினியர் கூறக் கண்டோமேயன்றி வேறு யாம் காணுந்தரத்ததோ? இங்ஙனிருப்பவும், (243) பெறாஅன்- என்பதை முற்றாகக் கொள்ளாது, எச்சமாக் கொண்டு, இனிய துயிலைப்பெறாது, பெயரினும்-வறிதே மீள்வான் எனினும், முனியல் உறாஅன் என உரை கண்டாருமுளர்: இவருரையில் அல்லகுறி நயம் பெறப்படுமோ? காண்க. காவலர் கடுகுத

லாவது - ஊர்காப்போர் துடியடித்துக்கொண்டு ஊர்சுற்றிக் கடுகிவருதல்: ஊர் காவலர் ஊரிடங்களின் பகுதிகளைக் காத்தற் பொருட்டு விளக்கினேடு இரவிற் செல்பவராய் உலாவிவருத லுண்டு. ஊர்காப்பாளர் தன்மையை மதுரைக்காஞ்சி 642 முதல் 650 அடி வரையிலுள்ள பகுதியால் நன்குணரலாம். இன் துயில் என்றது - தாமரைக்கண்ணனுலகினும் இனிய துயில் என்றபடி. இளமை-இளமைப் பருவம்: அது ஈண்டு ஈரெட் டாண்டகவை குறித்தது. 'இவனும் பதினாட்டைப் பிராயத் தாளுய்' என்றது களவியலுரை. வளமையின் - வளமை காரண மாக என்றபடி. செல்வச் செருக்கால் நற்குணங்கள் திரிதலுண் டாதலை, "செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிதும் பேணார், சொல்வன வறிந்துசொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார், வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார், வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்" என்ற வில்லிபாரதச் செய்யுளால் தெளியலாம். கவிச் சக்கரவர்த்தியும் "அறம் நிரம்பிய அருளுடை யருந்தவர்க் கேனும், பெறலருந்திருப் பெற்றபின் சிந்தனைபிறிதாம்" என்றார். இனி, 231-ஆம் வரி முதல் 245-ஆம் வரி வரையிலுள்ள பகுதி யாலும் தோழி உண்மை செப்புங் கிளவி கூறினள் என்பர் நச்சினார்க் கினியர் தமது தொல்காப்பிய வுரையில். (பொருளியல்-சூ: 13.) (முன்னர் உண்மை செப்புங் கிளவி கூறியதை 212-14 வரி யுரையிற் காண்க.)

இலக்கணக்குறிப்பு :—'இரவரல்' என்றவிடத்து 'இரா' என்பது 'இர' என வந்தது; "குறியதன்கீழ் ஆக்குறுகலும்......ஆம் தூக் கின்" என்றது நன்னூல்.

அடிகள்:— **245-248 :—தலைவியின் கண்கள் கலுழ்தல் கூறும்.**

கொன்னூர்
மாய வரவின் இயல்புநினை இத் தேற்றி
நீரெறி மலரிற் சாஅ யிதழ்சோரா
ஈரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண்

பதவுரை :—(245) கொன்ஊர் - அலர் முதலியவற்றால் அச் சத்தையுடைய இவ்வூரின் கண்ணே, (246) மாயம் வரவின் இயல்பு-தனக்குப் பொய்யாயிருக்கின்ற இரவுக்குறியிலே கூடுதற்கு வரு கின்ற வரவினது தன்மையை, நினை இ-இஃது ஒழுக்கமன்றென்று நினைத்து, தேற்றி-அவன் வரைந்துகொள்ள இல்லறம் நிகழ்த்து தலே நல்லொழுக்கமென்று துணிகையினாலே, (248) இவள் பெரு மதர் மழை கண்-இவளுடைய பெரிய மதர்த்த குளிர்ந்த கண்கள், (247) நீர்எறி மலரின் சாஅய்-பெரு மழைத்துளி யெறிந்து பெய்த மலர்போலே அழகுகெட்டு, இதழ்சோரா-இமை சோர்ந்து, (248) ஈரிய கலுழும்-ஈரத்தினையுடையவாய்க் கலங்காநிற்கும்;

[(245) தன்னிலை தீர்ந்தன்று மிலாதவன்] (246) மாயவரவி னியல்பு நினைந்து துணிகையினாலே (248) இவள் மழைக்கண் கலுழும் என முடிக்க.

கருத்துரை :—'அலர் தூற்றுமோ இவ்வூர்' எனத் தலைவியை யஞ்சுவிக்கும் இவ்வூரின்கண் இரவுக்குறி வந்தொழுகுதல் ஒழுக்க மன்றென்று நினைத்து அவன் வரைந்துகொள்ள இல்லறம் நிகழ்த்துதலே நல்லொழுக்கமாகுமென்று துணிகையினாலே, அவ் வரைவு நீட்டிக்க, இவள் மதர் மழைக்கண் மழைப்பெருந்துளி தன்மேல் எறிந்து பெய்த மலர்போலக் கவினிழந்து இமை சோர்ந்து நீர் துளிப்பக் கலங்கும் என்பது.

விசேடவுரை :—கொன் - அச்சம்: இடைச்சொல். ஈங்கு, தலைவிக்கு அச்சம், அலர் முதலியவற்றான் வருவது; அலராவது-பலரறிந்து கூறும் பழிமொழி: "பலரறிந் தலர் தூற்றல்...அலர்" என்றது பிங்கலந்தை. இறையனார்களவியலுரையில் 'அலரென்பது-இன்னானோடு இன்னாளிடையது போலும் பட்டது என விளங்கச் சொல்லி நிற்பது' என்றும், 'அலரென்பது-[அப்]பெரும் போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமை' என்றும் கூறியிருப்பன காண்க. கொன் ஊர்-கௌவை எடுக்கும் ஊர் என்றபடி. இனி, கொன் - பெருமை எனினும் இழுக்காது: 'கொன்னூர் துஞ்சினும் யாம் துஞ்சலமே' (குறுந்: 138) என்புழிப் பேரூர் துஞ்சினும் எனச் சேனாவரையர் பொருள் கொண்டதும் காண்க. மாயம் வரவு - தலைவனுக்குப் பொய்யாயிருக்கின்ற இரவுக்குறி வரவு: அஃதாவது இரவுக்குறியிடத்துத் தலைவியைக் கூடுவோம் என்ற நிச்சயமற்ற தலைவன் வரவு: நிச்சயமின்றி யிருத்தலின் மாயம் என்றபடி. மாயமாகுதற்குக் காரணம் மேற்குறித்த இருவகையிடையீடுகள். இவள் கண்கலுழ்தற்குக் காரணம் - இல்லறம் நிகழ்த்தற்கான வரைவு உடன்கூடப் பெறவில்லையே என்ற ஏக்கம். நீரெறி மலரின் சாஅய் என்ற உவமைநயம் பாராட்டத்தக்கது. சாஅய்தல்- உள்ளது நுணுகுதல்: "ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயினான்கும் உள்ளதன் நுணுக்கம்" என்றது தொல் காப்பியம்.

அடிகள் **249-261** :—தலைவன் வரும்வழியுளதாம் ஏதம் நினைந்து இவள் கலுழ்வள் என்று தோழி கூறுவது கூறும்.

ஆகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையின் நலஞ்செலச் சாஅய்
நினைத்தொறும் கலுழுமால் இவளே கங்குல்
அளைச்செறி யுழுவையும் ஆளியும் உளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியும் களிறும்
வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து

உருமும் சூரும் இரைதேர் அரவமும்
ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்
நூழிலும் இழுக்கும் ஊழடி முட்டமும்
பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலை விடரகம் உடையவால் எனவே.

பதவுரை :—[இவள் அங்ஙனம் கண் கலுழ்கின்றதற்குமேலே] (251) கங்குல் - இராக்காலத்து, (252) அளை செறி உழுவை உம்-முழைஞ்சிடத்திலே மறைந்திருக்கும் புலிகளும், ஆளி உம்-யாளிகளும், உளியம் உம் - கரடியும், (253) புழல் கோடு ஆமான் புகல்வி உம்-உள்ளுப்பொய்யான [உள்ளே தொளை பொருந்திய] கொம்பையுடைய ஆமானில் ஏறும், களிறு உம்-யானையும், (254) வலியின் தப்பும்-வலியினாற்கெடுக்கும், வன் கண்-தறுகண்மையை யுடைத்தாகிய, வெம் சினத்து - வெவ்விய சினத்தையுடைய, (255) உரும் உம்-இடியேறும், சூர் உம்-கொடுந்தெய்வமும், இரை தேர் அரவம் உம் - இரைதேடித்திரியும் பாம்பும், (256) ஒடுங்கு இரு குட்டத்து-புடைபட்ட கரிய ஆழத்திடத்து, அரு சுழி வழங்கும்-போதற்கரிய சுழியிடத்தே திரியும், (257) கொடு தாள் முதலை உம் இடங்கர் உம் கரா அம் உம் - வளைந்த கால்யுடைய முதலையும் இடங்கரும் கராமும், (258) நூழில் உம்-வழிபறிப்போர் கொன்று குவிக்கும் இடங்களும், இழுக்கு உம்-வழுக்கு நிலமும், ஊழ் அடி முட்டம் உம் - முறையடிப்பாடாய்ப் பின்பு வழிமுட்டா யிருக்கும் இடங்களும், (259) பழு உம்-பிசாசும், பாந்தள் உம்-பெரும் பாம்பும், உளப்பட பிறவும் - (ஆகிய) இவை யெல்லா முட்பட வேறும், (260) வழுவின் வழாஅ விழுமம்-தப்புஞ்செயலிற்றப்பாத இடும்பை தருவனவற்றை, அவர்-தலைவருடைய, (261) குழுமலை விடர் அகம் உடைய ஆல் என-தொகுதியை யுடைத்தாகிய மலையின் முழைஞ்சிடம் உடையவாயிருக்குமென்று, (251) இவள்-இத் தலைவி, நினைத்தொறு உம் - நினைக்குந்தோறும், (250) வலைப்படு மஞ்ஞையின் நலம்செல சாஅய் - வலையில் அகப்பட்ட மயில் போலே தன்னலம் போம்படி நுணுகி, (249) அரி பனி நாளும் ஆகத்து உறைப்ப-கண்ணில் அரித்துவீழ்கின்றநீர் நாள்தோறும் மார்பிலே துளிப்ப, (251) கலுழும்-கலங்காநிற்கும்; (எ-று.)

அங்ஙனம் கண் கலுழ்கின்றதற்கு மேலே (260) அவர் வருகின்ற (261) குழுமலை விடரகம் (252) உழுவையும் ஆளியும் உளியமும் (253) ஆமான் புகல்வியும் களிறும் (255) உருமும் சூரும் அரவமும் (257) முதலையும் இடங்கரும் கராமும் (258) நூழிலும் இழுக்கும் முட்டமும் (259) பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும் (260) விழுமம் (261) உடையவென (251) நினைத்தொறும் (250) சாஅய் (249) பனிநாளும் உறைப்ப (251) இவள் கலுழும்; இது காண் நல்வினை நிகழ்ந்தவண்ணமென்றாள் என வினைமுடிக்க.

கருத்துரை :—[இரவுக்குறியிடத்தே வரும்] தலைவரது மலையின் முழைஞ்சிடங்கள் உழுவை முதல் பாந்தளீருகச் சொல்லப்பட்டுள்ளவை யெல்லாமுட்படப் பிறவும் இடும்பை தருவன வற்றை உடையவாயிருக்கின்றன என நினைக்குந்தோறும் இவள் நலனழிந்து கண்ணினீர் மார்பிலே துளிப்ப நாளும் கலங்கா நிற்பள் என்பது.

விசேடவுரை .— 'இவள் பெருமதர் மழைக்கண் கலுழும்' (248) என்று கூறியபின், மீண்டும், நினைத்தொறும் இவள் கலுழும்' (251)என்றது-முன்னர் கண் கலுழ்தலையும் [அழுதலையும்]பின்னர் மனம் கலுழ்தலையும் [கலங்குதலையும்] பெறவைத்தற்கு. வலைப்படு மஞ்ஞையின் என்ற உவமை இற்செறிப்புக் குறிப்பினது. 252 முதல் 259 வரையுள்ள பகுதி கங்குலில் வரும்வழி யுள்தாம் ஏதம் கூறும். புகல்வி - விலங்கின் ஏறு குறிப்பது. 'வலியிற்றப்பும்' என்றவிடத்து, தப்பல்-கொல்லுதல் என்ற பொருளது; 'ஆளன் றென்று வாளிற்றப்பார்'. (புறம்: 74) என்றவிடத்துங் காண்க. 'ஒடுங்கு இருங்குட்டம்' என்றவிடத்து ஒடுங்குதல்-புடைபடுதல் எனப் பொருள் கூறினர் நச்சினார்க்கினியர்: அதாவது, மிகுதியாதல்: 'அரசனும் புடைபடக் கவன்று' என்ற இறையனார் களவியலுரைத் தொடரிலும் காண்க. ஈண்டு, மிகுதியாவது-ஆழக் குவிந்து கீழ்போதல். முதலையும் இடங்கரும் கராமும் என்றது சாதிவிசேடம்பற்றி. நூழில்-நூழிலாட்டும் இடங்களுக்கு ஆகி வந்தது: நூழிலாட்டுதல் - கொன்று குவித்தல். இனி, நூழில் என்பதற்கு - நூழிலென்னும் கொடிப்பிணக்கு என்பாரு முளர்; இந்த நூழிற்கொடி மணங்கமழு மென்பதை "நூழில் விரையாற் கமழும் விறன்மலை நாடன்" (புற. வெ. மாலை: 321) என வருதலால் உணரலாம். இழுக்கு-வழுக்குநிலம்;வழுக்குதல்-சறுக்குதல். ஊழடி முட்டம்-முதலிற் பாதைபோல் தோன்றிப் பின் செல்லச் செல்ல வழி முட்டாயிருக்கும் இடங்கள். பாந்தள்-பெரும்பாம்பு. இவை பனைபோற் கிடப்பன என்பதை "பனை மடிந்தனையன கானிடைப் பாந்தள்" என்ற சிந்தாமணியால் உணரலாம். வழுவின் வழர் - கேடு செய்தலில் தவறாத; வழு-கேடு. விழுமம்-விழுமஞ் செய்வனவற்றுக்கு ஆகுபெயர். உடைய வால், ஆல்-அசை.

குறிஞ்சிப்பாட்டில் தொகுதிப்பட்ட வினைமுடிபு காட்டுமாறு:—

(1) அன்னாய்! வாழி; அன்னை! யான் கூறுகின்றதனை விரும்பிக் கொள்வாயாக: (8)நீயும் எய்யா மையலையாகி வருந்துதி. (26) இவளும் (24) ஏனையுலகத்தும் இயைவதாலெனக் கூறித் (26) தேம்பும்; (29) யானும் (28) இடைநின்ற சான்றோர்போல (29) ஆற்றலென்; (31) எண்ணாது (32) எமியேம் துணிந்த அருவினை (33) நிகழ்ந்தவண்ணம் நீயுணரச் (34) செப்பல் அமைந்தேன்: அதுகேட்கச் சினவாதீமோ; (38) தினையிற் படுபுள் ளோப்பி, (39) எற்பட வருதியரென நீ போக விடுத்தலின் [யாங்

களும் போய்] (41) இதணமேறிக் (44) கிளிகடி மரபினவற்றை வாங்கி [யோட்டி] (50) கொண்மூப் (53) பொழிந்தென (54) நெடுங் கோட்டிழிதரும் தெண்ணீர் (55) அருவி (56) யாடிப் (57) பாய் சுனைக் குடைவுழிப் (58) பாயம்பாடிக் (60) கூந்தல் பிழிவனம் துவரிச் (61) சிவந்த கண்ணேமாய் (97) மலிவனம் மறுகிப் (96) பரேரம்புழகுடனே (62-95) ஒண் செங்காந்தள் முதல் வேங்கை வரை குறித்தவற்றையும் பிறவற்றையும் பறித்துப் (98) பாறையிலே குவித்துத் (100) தெள்விளி பயிற்றிக் (101) கிள்ளையும் ஓப்பி (102) தழை தைஇ [உடுத்துக்] (103) கோதையை (104) முச்சியிற் கவின்பெறக் கட்டிச் (105) செயலைத் (106) தண்ணிழலிலே யிருந்தனமாக (199) குன்றுகெழு நாடனாகிய எம் விழைதரு பெருவிறல் (136) ஆகாண் விடையின் அணிபெற வந்து (141) இளையீர்! இறந்த (142) கெடுதியுமுடையே னென்றனன்; என்றதற்கு (143) அல்லாந்து (142) அதனெதிர் (143) சொல்லேமாதலின் கலங்கி (145) மெல்லியலீர்! சொல்லலும் பழியோவெனச் சொல்லி (148) வண்டொடு சுரும்புகளை (150) ஓச்சி (151) சுற்றங் கடுங்குரல் அவித்துச் (152) சொல்லற்பாணி நின்றனனாக, (165) வேழம் (166) ஒய்யென (165) எதிர்தர (167) நாணுமறந்து வளைதெழிப்ப (168) விரைந்து அவற் பொருந்தி (169) நடுங்க, (170) பகழி வாங்கி (171) யானை யணிமுகத் தழுத்தலின் (173) நுதல் சிதைய (172) குருதி முகம் பாய்ந்து (175) ஆடுகளங்கடுப்ப (172) இழிதர, (174) அது புறங்கொடுத்த பின்னரும் (177) கைபிணி விடேஎமாய் (179) வாழையின் நடுங்கினமாக, (அதுகண்டு) பெருந்தகை (180) அசையல் (181) அஞ்சலோம்பு நின் அணிநலன் நுகர்கெனச் சொல்லி (182) நுதல்நீவி நீடுநினைந்து (183) என்முகம் நோக்கி நக்கனன்; [நகுதல் செய்து அவன்] (184) நண்ணுவழி நாணும் உட்கும் அடைதருகையினாலே (185) இவள் பிரியவும் விடாஅனாய் (183) அந்நிலை (186) முயங்கலின், அவ்வழி (200) இவளுள்ளத் தன்மையுள்ளினனாய் அதனையுட்கொண்டு (205) புரையோர் கடும்பொடு (206) விருந்துண்டெஞ்சிய மிச்சிலை (207) நீ இடுகையினாலே யானுண்டலும் புரைவதென்று சொல்லித் (208) தேற்றிப் (206) பெருந்தகை (209) கடவுள் வாழ்த்திக் கைதொழுது (210) வஞ்சினம் வாய்மையிற் றேற்றித் (211) தெண்ணீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து (214) பூமலி சோலையிலே (212) களிறுதரு புணர்ச்சியைக் (214) கழிப்பி, (216) பல்கதிர் மண்டிலம் மறைகையினாலே, (230) மாலை துன்னுதல் கண்டு (233) இலங்கிழையீர்! (231) நுமர்தர (232) நன்மணம் அயர்கம்; சின்னாள் (233) கலங்கலோம்புமின் என (234) ஈரநன்மொழி கூறி (235) எம்மொடு வந்து (237) உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன்; அதற்கொண்டு (238) என்றும் (239) இரவில் வருமாலையன்: வருதோறும் (240) கடுகினும் குரைப்பினும் (241) துயிலெழினும் வெளிப்படினும் (242) இன்றுயில் (243) பெறாது போவன்; [அதுவேயன்றி யாங்கள் அல்லகுறிப்பட்டுப்] பெயரினும் முனிய

லூரன்; (244) இளமையில் இகந்தன்றுமிலன்; (242) என்றும் (245) தன்னிலை திரிந்தன்றுமிலன்; [அத்தகையனது] (246) மாய வரவினியல்பு நினைந்து [அவன் வரைந்துகொள்ள இல்லற நிகழ்த்துதலே நல்லொழுக்கமென்று] துணிகையினாலே (248) இவள் மழைக்கண் கலுழும்; [அங்ஙனம் கண் கலுழ்கின்றதற்கு மேலே] (260) அவர் வருகின்ற (261) குழுமலை விடரகம் (260) விழுமம் (261) உடையவென (251) நினைத்தொறும் (250) சாஅய் (249) பனிநாளும் உறைப்ப(251) இவள் மனம் கலுழும்; இதுகாண் நல்வினை நிகழ்ந்த வண்ணமென்றாள் என வினைமுடிபு செய்க.

இதிலுள்ள உவமைகள் பின் வருமாறு :— (27 - 28) இருபெரு வேந்தர் வினையிடை நின்ற சான்றோர் X இருபேரச்சமொடு ஆற்றா நின்ற தோழி, (35 - 36) நெற்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை முத்தார் மருப்பின் இறங்கு கைகடுப்பத் துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல் சிறுதினை, (49) முரசதிர்ந்தன்ன இன் குரல் ஏறு, (52 - 5ஃ) இலங்கு இலை எஃகு X மின், (55) அவிர் துகில் X அவ்வெள்ளருவி, (57) பளிங்கு சொரிவன்ன பாய்சுனை, (59-60) பொன்னெறி மணி X சிறுபுறந் தாழ்ந்த பின்னிருங் கூந்தல், (66) எரிபுரை எறுழம், (68) மணி X கருவிளம்பூ, (84) மணி X நெய்தற் குலை (90) சுடர் X தோன்றிப்பூ (95 - 96) அரக்கு விரித்தன்ன பிற பூக்கள் (102) பை X அல்குல், (105) எரி X செயலையின் குழை, (129 - 131) இளைஞர் X ஞமலி, (135 - 136) வேறு புலத்து ஆகாண் விடை X வேற்றுப் புலத்து ஏறச்சென்ற தலைவியைக் காணும் தலைவன், (147-148) கைகவர் நரம்பு X இம்மென விமிரும் வண்டு, (150) தாறடு களிறு X பெருமையும் உரனும் கைகடந்து வேட்கை மீதூர்ந்து நின்ற தலைவன் (154) பிணை X நோக்கு, (158) அரவு X சிலை, (162) கார்ப்பெயல் உருமு X வேழத்தின் பிளிறல், (165) மடங்கல் [கூற்றுவன்] X வேழம், (169) சூருறு மஞ்ஞை X விதுப்புறு தோழி தலைவி (172 - 175) புண்ணுமிழ் குருதி முகம் பாய்ந்து ஆடுகளங்கடுப்ப இழிதர, (176-177) கடம்பின் திரளரை வளைஇய மாலையிற் கைபிணி விடேம், (178 - 179) உரவுத்திரை அடுங்கரை வாழையின் நடுங்க, (191 - 194) தோகை ஆடுமகள் கயிறார் பாணியின் தளருஞ்சாரல், (197 - 199) நல்பல வம்புவிரி களத்தின் பொலிந்த குன்று, (201 - 202) சாறயர்ந்தன்ன வளம் (228 - 229) சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பப் புள்ளினம் ஒலித்தல் (235) துணைபுணரேற்றின் எம்மொடுவந்து, (247) நீரெறி மலரின் சாஅய், (250) வலைப்படு மஞ்ஞையின் நலஞ்செலச் சாஅய் என்பன.

இக்குறிஞ்சிப்பாட்டால் அறியலாகும் பொருள்கள் :— கடுநோய் நீங்கப் பல கடவுளரை நறையும் விரையும் ஓச்சிப் பரவித் தொழுது விரவு மலர் தூவிப் பேணுதல், சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின் முன்னரிருந்த புகழை மீண்டும் அந்நிலை நிறுத்தல் ஆசறு காட்சி ஐயர்க்கும் எளியவன்றுதல், இகல் மீக்கடவும் இருபெரு வேந்தர் வினையிடை சான்றோர் சந்தி செய்விக்க நிற்றல், மண

நேர்ந்து மகளைக் கொடுக்குங்காலத்து நன்குடைமை, குடிநிரலுடைமை வண்ணம் துணை இவற்றை யொப்பிட்டுப் பார்த்து எண்ணுதல், புனிறுதீர் பெருங் குரல்தினை துய்த்தலை வளைதல், சிறுதினைப் படுபுள்ளோப்பி எற்படவருதல், மரமிசைச் சேணோன் இயற்றிய பரணிலேறித் தழல் தட்டை குளிர் முதலிய கிளிகடி கருவிகளைக்கொண்டு கிளிகளைக் கடிதல், வெம்மை மிக்க உச்சிப்போதில் அருவியாடுதல் சுனை பாய்தல், சுனை குடைவுழிப் பாயம் பாடுதல், மகளிர் கூந்தலை நீரைப் பிழிந்து ஈரத்தைப் புலர்த்திப் பல்வகைப் பூக்களை அக் கரிய முடியிலே கவின்பெறச் சூடல், பறித்த பூக்களைப் பாறையில் குவித்தல், குஞ்சியின் ஈரம் புலரும்படி விரலாலலைத்துப் பிணிப்பை விடுத்து அகிற்புகை யூட்டுதல், மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும் ஆகிய வண்ண வண்ணத்த மலர்களைத் தொடுத்த தொடையலைக் குஞ்சியில் அணிதல், வெள்ளிய தாழை மடலிலே யுடைத்தாகிய கண்ணியினை யணிதல், அசோகினது அழகிய தளிரைக் காதிலே செருகுதல், வேட்டை நாய்கள் உரவுச் சினஞ்செருக்கித் துன்னுதொறும் வெகுளுதல், தலைவன் கெடுதி வினுதல் மொழியாமை வினுதல், வேட்டைநாய்களின் கடிய குரல்களை [க் கொம்பினால் அவைகளை] அடித்து மாற்றல், மனையோள் மடுப்பக் கானவன் தேறல் மாந்தல், தேறல் மாந்தி மகிழ் சிறந்து தினைக்காவற்றொழிலை மறத்தல், கானம் கல்லென மடிவிடு வீளையர் வெடிபடுத்துத் தினையுண்ண வந்த களிற்றினை யோட்டுதல், அணங்குறு மகளிர்க்கு மறியறுத்தாடல், கடம்பின் திரளரையை மாலை வளைதல், பழுத்த மிளகு கற்பாறையிடத்துச் சிந்திக் கிடத்தல், வியலூர்க் கோயில்களில் சாறு கொள்ளுதல், கழாய்க் கயிற்றிலே ஏறி இன்னியங் கறங்க ஆடுமகள் பாணியின் தளர்தல், விழாக்காலத்து மிடாச் சோற்றை வருவோர்க்கெல்லாம் வரையாமலிடுதல், புரையோர் கடும்பொடு விருந்துண்டல், விருந்துண்டெஞ்சிய அடிசிலை மனைவியிடக் கணவன் உண்டல், நீர் குடித்தல் ஒரு கூறுறவாதல், அந்திப்போதில் மான்கணம் மரத்தடிகளிலே திரளலும், ஆன்கணம் கன்றுபயிர் குரல மன்று நிறை புகுதரலும், அன்றில் பெண்ணை அகமடல் அகவலும், பாம்பு மேய்தல் காரணமாக மணி யுமிழ்தலும், ஆம்பற் பூவின் இதழ்கள் தளையவிழ்தலும், கோவலர் ஆம்பலந் தீங்குழல் தெள்விளி பயிற்றலும், அந்தணர் அந்தி அயர்தலும், மகளிர் வளமனைச் சுடர் கொளுவி அந்தி அயர்தலும், கானவர் பணைவமிசை ஞெகிழி பொத்துதலும், காட்டு விலங்குகள் ஒன்றற்கொன்று மாறிக் கூப்பிடலும், புள்ளினம் குடம்பைக்கண் ஒலித்தலும் நிகழ்தல், மணமகளின் சுற்றத்தார் அந்த மணமகளின் நேரிறை முன்கை பற்றித்தர நாடறி நன்மணம் அயர்தல், மூதூர் வாயிலில் உண்டுறையமைதல், ஊர்காப்போர் இராக்காலத்து ஊர்சுற்றிக் கடுகி வருதல், குழுமலை விடரகம் விழுமம் பல உடைத்தாதல் முதலிய இன்னோரன்ன பொருள்கள் இக்குறிஞ்சிப்பாட்டால் அறியலாகும்.

ஏறக்குறைய ஆயிரத்துமுந்நூறு சொற்களுக்கு மேற்பட்ட இந்தக் குறிஞ்சிப்பாட்டில், வண்ணம், மனம், முகம், மண்டிலம், முதலியவாகச் சில வடசொற்களே வந்துள்ளன.

இந்தக் குறிஞ்சிப்பாட்டிற் கூறிய விடயத்தின் சுருக்கம் வருமாறு:—

தாயே! வாழி! யான் கூறுகின்றவற்றைக் கேட்க விரும்புவாயாக!

நீ என் தோழியாகிய தலைவியின் வீவருங் கடுநோயைப் பற்றி அறியுநர் வினவிக் கடவுளர்ப் பேணியும் இவள் நோய்க்குக் காரணத்தை யறியாது வருந்தா நின்றாய்; யானோ, அவளது உட்கரந்துறையும் துன்பம் வெளியிடற்கு அரியதாதலின், என்னுள்ளே அடக்கி அறிவியாமல் இருக்கின்றேன். தலைவியோ "முத்து மணி பொன் முதலியவற்றான் அமைந்த பூண் கெட்டவாயிற் பின்னும் வந்து கூடும்; அதுபோ லன்றித் தத்தம் குலத்திற்கேற்ற சால்பும் மேம்பாடும் ஒழுக்கமும் கெட்டவாயின், தெய்வ இருடிகளுக்கும் அக்குறை நீக்கிப் புகழை முன்புபோலே நிலைநிறுத்தல் எளியதன்று; ஆதலின், எந்தையின் காவலினைக் கடந்து யானும் தலைவனுமாக ஆய்ந்த கந்தருவ மணம் இது வென்று யாய்க்கு அறிவுறுத்தலான் நமக்கு வரும் பழியுளதோ? அவ்வாறு செய்தல் புகழேயாகும்: இங்ஙனம் அறிவித்த பின்னரும் அத் தலைவர்க்கே நம்மை நேர்ந்திலராயின், நாம் உயிர்போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருந்து 'மறுபிறப்பினும் இக்கூட்டம் நமக்குக் கூடுவதாருக' என்று கூறி யிருப்போம்" எனக் கலங்கிக் கையற்றுத் தேம்புகிறாள்: நானும், போர் குறித்து நின்ற இருபெரு வேந்தரிடைச் சந்து செய்வித்தலை மேற்கொண்ட சான்றோர் போலே, நினது காவற்கும் இவள் அரும்படர்க்கும் இடையே அஞ்சி வருந்தாநிற்கின்றேன்: நன்மையுடைமை, குடிநிரலுடைமை, குணம், உதவி முதலியவற்றை ஒப்பித்துப் பார்த்துப் பின்னரும் பலருடன் உசாவாது யாங்களே துணிந்து எங்களுயிர்க்குப் பாதுகாவலாகச் செய்து கொண்ட இக்கந்தருவ மணம் முன்பு நடந்தபடியை நீ நன்கு அறியும்படி சொல்லுகின்றேன்; அதுகேட்டு நீ சினவாதிருப்பாயாக.

ஒருநாள் நீ எம்மை நோக்கி 'யானை மருப்பின் இறங்குகை கடுப்பத் துய்த்தலை வாங்கிய பெருங்குரல் சிறுதினைப்படு புள்ளோப்பி அத்தமனத்து வருவீராக' எனச்சொல்லி விடுத்தாயன்றோ! அவ்வாறே யாங்கள் தினைப்புனஞ் சென்று இதணமேறிக் குளிரி முதலியன புடைத்துக் கிளிகளையோப்பி ஞாயிற்றின் வெம்மை உறுத்தும் உச்சிப்போதின்கண் அருவியிலாடிச் சுனைகுடைந்து பாயம் பாடிக் கூந்தலைப் பிழிந்து உலர்த்திச் சிவந்த கண்ணேமாய் செங்காந்தள் முதலிய பல்வேறு மலர்களை மலையெருக்கம்பூவுடனே

பறித்து அகன்ற பாறையிலே குவித்துவிட்டு, மலைப்பக்கத்துப் புனத்தே கிளிகளை யோப்பி, கொய்தழையை அல்குலுக்குக் கட்டியுடுத்துப் பல்வகை நிறத்தையுடைய அழகமைந்த மாலைகளை எம் கூந்தலிலே அழகுறச் சுற்றி அசோக மரத்தினது தண்ணிழலிலிருந்தோம்.

அஞ்ஞான்று ஒரு தோன்றல் வந்தான். எண்ணெயும் மயிர்ச் சாந்தும் பூசி விரலாலலைத்துப் புலர்த்தி, அகிற்புகையூட்டியதால் வண்டுகள் மொய்க்கப்பெற்ற தன் குஞ்சியில் அவன் மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும் ஆகிய வண்ண வண்ணத்த மலர்கள் பலவற்றை மிலைச்சி, முன்னுளந்நேரத்துப் பறித்த பிச்சி மலராற் செய்த ஒரு வடத்தைச் சுற்றிக்கொண் டிருந்தான்; அசோகினது அழகிய தளிரை ஒரு காதிலே செருகியிருந்தான்; தன் மார்பிடத்தே பூணோடு நறியமாலை பொலியத் தடக்கையில் வில்லேந்தி அம்புதெரிந்து பிடித்து, இடையிலே கச்சைகட்டி, காலில் கழல் துயல் வருந்தோறும் கலாவ வந்தான். அவனுடன் வந்த வேட்டைநாய்கள் எம்மை வளைத்துக்கொண்டு மேலே மேலே வருகையினாலே யாங்கள் அஞ்சி மயங்கி வேற்றுப்புலத்தேரு நிற்க, அவ்விடத்து 'வேறுபுலத்து ஆகாண் விடையின் அணிபெற வந்து' எம்மைப் பலபடிப் பாராட்டித் தான் கெடுத்தவை போந்தனவோ எனக் கெடுதி வினவி நின்றான். யாங்கள் அவன் கூற்றிற்கு மகிழ்ந்து மறுமொழி கொடாதிருந்தேமாகையால், 'கெட்டனவும் காட்டித்தாரீராயினும் எம்முடன் ஒரு வார்த்தை சொல்லுதலும் நுமக்குப் பழியாமோ?' எனச்சொல்லி, பூங்கொம்பொன்றை முறித்துத் தன்னைச் சூழவிறுத்த வண்டினங்களையும் சுரும்பினங்களையும் ஓட்டிப் பின், வேட்டைநாய்களின் கடிய குரலை அவற்றை அடித்து அவித்து, யாங்கள் வார்த்தை சொல்லுஞ்செவ்வி பார்த்து நின்றான்.

அஞ்ஞான்று, குரம்பையில் மனைவி வார்ப்பக் கள்ளுண்டு வந்த கானவன் மகிழ்சிறந்து தினைபுனக் காவற்றொழிலை மறந்த காலத்து, வேழமொன்று புகுந்து அத்தினையை நொக்கிவிடுகையினாலே கானவர் சினமிக்கு அம்பெய்து தட்டையைப் புடைத்து வாய்மடித்துச் சீழ்க்கையிட்டு மிக்க ஓசையை யுண்டாக்கி அக்களிற்றைப் புனத்தினின்றும் ஓட்ட, அது கடாஞ்செருக்கி மரமுறித்துப் பிளிறித் தன் தடக்கையைச் சுருட்டி நிலத்தே எறிந்து கடுகக் கூற்றுவனைப் போலே எங்கள்மேல் வந்தது. யாங்கள் உய்விடமறியேமாகி விதுப்புறு மனத்தராய் நாணு மறந்து வளையொலிப்ப விரைந்து அத்தோன்றலைப் பொருந்தி நின்று சூருறு மஞ்ஞைபோல் நடுங்கினேம். அதுகண்டு, அவன் அம்பை யானைமுகத் தழுத்தவே அஃது நுதல் சிதையப் புண்ணுமிழ்குருதி முகம்பாய்ந்திழிதர, அயர்ந்து நில்லாது புறங்கொடுத்தோடியது. அது போன பின்னரும் யாம் அச்சத்தால் கைகோத்தலை விடேமாய் இடிகரை நின்ற வாழைபோல நடுங்கினேம்; அது கண்டு, அப்பெருந்தகை தலைவியை நோக்கி

" அஞ்சிலோதி! அசையல், நின் அணி நலம் நுகர்வேன்; நின்னை நீங்குவேனென்று சிறிதும் அஞ்சாதே" எனச்சொல்லி, அவள் சுடர் நுதல் நீவி, இக்களவொழுக்கம் நெடுநாள் நீட்டித்திருக்க வேண்டுமென்று நினைந்து என் முகநோக்கிச் சிரித்தான். அப்போது, தனக்கு இயல்பாகிய நாணமும் அச்சமும் தோன்றுகையினாலே இவள் அவனிடத்தினின்றும் நீங்க முயலவும், அவன் விடானாய்க் கையாலே யணைத்து இவள் மார்பு தன் மார்பிலே ஒடுங்கும்படி தழுவினான். பின்னர், அக் குன்றுகெழு நாடன், எம்விழைதருபெருவிறல் 'இவளுள்ளத்து நிகழ்ந்த தன்மை இல்லறம் நிகழ்த்துதலா யிருக்கும்' என்று நினைந்தனனாய், 'விருந்தினர்களுக்கு இட்டு மிக்க அடிசிலை நீ இட யான் உண்டல் உயர்ந்தது' என்று சொல்லி, அத்தகைய இல்லறமே தங்களைக் கரையேற்றுவதாகத் தெளிவித்து, முருகனை வாழ்த்தி வணங்கி அவன் முன்னர்ப் 'பிரியேன்' என வஞ்சினம் சாற்றி, மற்றும் அருவிநீர் குடித்துச் சூளுறவு செய்யவே, அவள் நெஞ்சு பொருந்தி அவனோடு களிறுதருபுணர்ச்சியை அன்றைப் பகற்பொழுதெல்லாம் போக்கினாள்: சூரியனும் அத்தமித்தான்; அப்போது மான்கணம் மரத்தடியில் திரள, ஆன்கணம் கன்றுபயில் குரலவாய் மன்றுநிறைபுகுதர, கொடுவாய் அன்றில் அகவ, பாம்பு இரை தேடல் கருதி மணியுமிழ, கோவலர் ஆம்பற் பணணைக் குழலிடத்தெழுப்ப, ஆம்பலினிதழ்கள் தளையவிழ, அந்தணர் அந்தி அயர, மகளிர் மனைதொறும் விளக்கையேற்ற, கானவர் பரணின்மேல் நெருப்பைப் பிறப்பித்து எரிப்ப, மேகங்கள் மலையைச் சூழ்ந்து கறுப்ப, காட்டுவிலங்குகள் கல்லென்றிரட்ட, பறவைகள் குடம்பைக் கண்ணேயொலிப்ப மாலைக்காலம் வந்தது; மாலை வருதல் கண்ட அவன், இவளை நோக்கி " நுமர் நேரிறைமுன்கை பற்றித்தர நாடறி நன்மணம் அயர்வேன்; சின்னாள் கலங்காதே கொள்" என ஈர வார்த்தைகள் அவள் வருத்தந் தீரும்படி கூறி, துணைபுணரேறுபோலே விடாமல் எம்மோடு கூட வந்து நம்மூர் வாயில் நீர்த்துறையில் எம்மை விட்டுவிட்டு மீண்டு போனான்.

அன்றுமுதல் அவன், இவளைக்கண்ட தலைநாள் போன்ற விருப்பினனாய், இராப்பொழுது வருதலை மேற்கொண்டிருக்கின்றான். அங்ஙன் வருங்கால், ஊர்க்காவலர் கடுகினும் நாய் குரைப்பினும் நீதுயிலொழியினும் நிலவு வெளிப்படினும் இடையீடுபட்டு இவள் மென்றோள் இன்துயில் பெறாது போவன்; இனி, யாங்கள் அல்லகுறிப்படுதலால், இடையீடுபட்டு வீணே மீளநேரினும், அதற்காக அவன் வெறுத்தலைச் செய்வானல்லன்; அவன் இளமைப் பருவத்தைக் கடந்தவனுமல்லன்; செல்வச் செருக்கால் தன் குலத்திற்குரிய நற்குணங்களில் நீங்கியவனுமல்லன். அலர் முதலியவற்றான் அச்சத்தையுடைய இவ்வூரின்கண்ணே இரவில் அவனது மாயவரவினியல்பு நினைந்து இவள்கண்கள், பெருந்துளியெறிந்துபெய்தமழையினாற்சிதைந்த மலர்போலே அழகுகெட்டுக் கலங்காநிற்கும்; மற்றும், அவன் இரவில் வருகின்ற வழியில் மலை

யின் முழைஞ்சிடங்களில்,புலியும் யாளியும் கரடியும் ஆமானும் களிறும் உருமேறும் சூரும் பாம்பும் முதலையும் இடங்கரும் கராஅமும் நாழிலும் இழுக்கும் ஊழடிமுட்டமும் பிசாசும் பெரும்பாம்பும் உட்பட ஏதம் செய்வன பலவும் இருக்குமென்று நினைக்குந்தோறும் இவள் வலைப்பட்ட மஞ்ஞைபோல் நலம்கெட்டுக் கண்ணினீர் மார்பிலே துளிப்பக் கலங்காநிற்கும்; இதுகாண் நிழ்ந்தவண்ணம் என்பது.

வெண்பா

1. நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடையள்
என்குற்றம் யானும் உணர்கலேன்—பொன்குற்
றருவி கொழிக்கும் அணிமலை நாடன்
தெரியுங்காற் றீய திலன்.

(இ-ள்.) [அன்னையே!] நின்குற்றம் இல்லை-(தினைப்புனத்துப் படுபுள்ளோப்பி எற்பட வருதியர் என நீ எம்மைச் செலவிடுத்தமை குற்றமாயிற்றோ வென்னில் அஃது) உன்பால் குற்றமுடைத்தாகாது; (இனி களவுப்புணர்ச்சிக் கிசைந்த தலைவி குற்றமுடையளாவளோ வென்னில்) நிரை தொடிஉம்-ஒழுங்காக வளையலையணிந்த இவளும், பண்பு உடையள்-பெண்மைக்குரிய அச்சம் நாணம் மடன் முதலிய குணங்களும் (சிறப்புற) உடையள்; என் குற்றம்-(தோழியாகிய என்னிடத்து யாதேனும் குற்றமுளதோ வென்னில்) என்னிடத்துளதாம் குற்றம், யானும்—, உணர்கலேன்-தெரிவதில்லை; (இனி ஒருகால் களிறுதருபுணர்ச்சி கழிப்பிக் களவொழுக்கம் நிகழ்த்திய தலைவன் குற்றமுடையனுவனோவென்னில்), தெரியுங்கால் - ஆராயுமிடத்து, பொன் குற்று-பொன்னையிடித்துப் பொடியாக்கி, அருவி கொழிக்கும்-அருவிநீர் வாரிவரும், அணிமலை நாடன்-அழகுள்ள மலைநாட்டையுடையவன், தீயது-ஒரு குற்றமும், இலன்-இல்லாதவனுவன்; (எ-று.)

இது, தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் காட்டும். இதனுல் தோழி, தன்னிடமோ தலைவியிடமோ தலைவனிடமோ குற்றமில்லை என்பதைக் கூறி, தினைப்புனஞ் செலவிடுத்துப் பின்னர் தலைவி நோய்கண்டு கடவுட்பேணும் செவிலிமாட்டும் குற்றமில்லை என்பதைக் குறிக்கின்றுள். யாவர்மாட்டும் குற்றமில்லை யெனவே பால்வரை தெய்வம் கூட்டுவித்த திறன் இது; இங்ஙன் நல்வினை நிகழ்ந்தவண்ணம் காண் என்றபடி. நிரை தொடியும் பண்புடையள் என்றது—நிச்சமும் பெண்பாற்குரிய அச்சமும் நாணமும் மடனும் முதலியனகொண்டு நிற்றலோடு, இரவுக்குறிவரும் தலைவற்கு வழியேதம் நினைந்து கலுழும் கற்புக் கடம்பூண்ட பெற்றியுளாதலின். 'யானும் உணர்கலேன்' என்றது-குற்றம் இருந்தாலன்றோ உணர்வது என்றபடி. அருவி பொன் கொழிக்கும் நாடன் எனவே, வண்மையிற் குறைவிலன்

என்றபடி. மலைநாடன்-குறிஞ்சிநிலத் தலைவன். தெரியுங்கால்-ஆராய்ந்து பார்க்குமிடத்து: ஆராயுங்கால் ஏற்படுவதென்னை யெனில், பால்வரை தெய்வத்தின் [ஊழினது] ஆணையாலே ஒத்தகிழவனும் கிழத்தியும் எதிர்ப்பட்டுக் கண்டனர் என்பது. 'தீயது' என ஒருமை கூறியது யாதொரு குற்றமுமில்லாத பெருந்தகை எனப் பெறவைத்தற்கு.

இவ்வாறு, தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்க, செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள்; நற்றாய் தன் கணவற்கும் புதல்வர்க்கும் குறிப்பின் அறத்தொடு நிற்பப் பின்னர் இருமுதுகுரவர் தலைவியை நேரிறைமுன்கை பற்றித்தர நாடறி நன்மணம் நிகழ்ந்தது என முடிபு கொள்ள வேண்டுவது.

2. ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே—தேற்ற
மறையோர் மணமெட்டின் ஐந்தா மணத்திற்
குறையாக் குறிஞ்சிக் குணம்.

(இ-ள்.) தேற்ற - தெளிந்த அறிவினையுடைய, மறையோர்-வேதம்வல்ல அந்தணராலோதப்பட்ட, மணம் எட்டின் - மணவகை எட்டனுள், ஐந்தாம மணத்தின் குறையா-ஐந்தாவதாகிய காந்தருவம் என்ற மணத்திற் குறைபடாத, குறிஞ்சிக் குணம்-(இக்) குறிஞ்சிப்பாட்டின் தன்மை, (யாவதோவெனில்)— ஆற்றல் சால் கேள்வி - அறிவின் வலிமிக்க மந்திரம்போல் [போற்றத்தக்க], அறம் பொருள் இன்பத்தை-அறம் பொருள் இன்பம் என்ற மூன்று உறுதிப் பொருள்களையும், போற்றி புனைந்த-சிறப்புறக் கொண்டாடிப் பண்ணப்பட்ட, பொருளிற்று-பொருளையுடையது (எ-று.)

இதனால், இக் குறிஞ்சிப்பாட்டில் பொய்யா நாவிற் கபிலர் மாந்தர்க்கு உறுதிபயக்கும் நாற்பொருளுள் [அறம் பொருள் இன்பம்] மூன்றனைப் போற்றி யுரைத்துள்ளார் என்றபடி. எடுத்துக்காட்டாக, "நெய்ம்மலியடிசில் வசையில் வான்திணைப் புரையோர் கடும்பொடு விருந்துண்டெஞ்சிய மிச்சில் நின்னோ டுண்டலும் புரைவதென்றாங்கு அறம்புணையாகத் தேற்றி" என்ற விடத்து அறமும், "வளமையிற் றன்னிலை தீர்ந்தன்று மிலன்" என்றவிடத்துப் பொருளும், "அருவிடரமைந்த களிறுதரு புணர்ச்சி, வானுரியுறையுள் வயங்கியோர் அவாவும் பூமலி சோலையப்பகல்கழிப்பி" என்றவிடத்து இன்பமும் கூறியுள்ளபடி காணலாம். அறத்தினாற் பொருளாக்கி அப்பொருளான் இன்பம் நுகர்தல் சிறப்பு. இவ்வின்ப நுகர்தல்-மனையறத்தார்க் கெய்துவது. இதனை 'நேரிறை முன்கைபற்றி நுமர்தர நாடறி நன்மண மயர்கம் சின்னாள் கலங்கலோம்புமின்' என்றதனால் தெளியலாம். மறையோர்-மணமெட்டாவன:—பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம்,

தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. [இவற்றின் விரிவைத் தொல்காப்பியப் பொருளதிகாரக் களவியல் முதற் சூத்திரவுரையிற் காண்க]. இவற்றுள் ஐந்தாம் மணம் என்றது - காந்தருவத்தை. காந்தருவமாவது—ஒத்த இருவர் தாமே கூடும் கூட்டம். அஃதாவது, கந்தருவ குமாரரும் கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்ததுபோலத் தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது:—"அதிர்ப்பில் பைம் பூணரு மாடவருந் தம்முள், எதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப—கதிர்ப்பொன்யாழ், முந்திருவர் கண்ட முனிவறு தண் காட்சிக், கந்திருவர் கண்ட கலப்பு" என்றது வெண்பா. ஐந்தாம் மணத்திற் குறையாக் குறிஞ்சிக் குணம் என்றது - அக் காந்தருவமண ஒழுகலாறேடொத்து மக்கள்மாட்டு நிகழ்வதெனக் கூறிய இக் குறிஞ்சிப்பாட்டின் தன்மை. இக் குறிஞ்சிப்பாட்டில் உள்ளப்புணர்ச்சி தெற்றெனவிருத்தலின், 'இருவர் கண்ணுற்றுக் காதல்கூர்ந்த வழியெல்லாம் கந்தருவமென்பது வேத முடிபாதலின், இவ்வுள்ளப்புணர்ச்சியும் கந்தருவமாம்' என்றபடி. ஆற்றல்-வலி; ஈண்டு அறிவின் வலிகுறிப்பது; அவ்வலியால் தோற்றுவது கேள்வி அல்லது மந்திரம். "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும் மறைமொழிதானே மந்திரம் என்ப" என்றது தொல்காப்பியம். ஆற்றல்-அறிவின்வலி குறிப்பதை "இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும்" (மலைபடு: 75) என்றவிடத்தா லுணரலாம். கேள்வி - மந்திரம்; இதனை "ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி" என்ற திருமுருகாற்றுப்படை யடியால் (186) தெளியலாம். கேள்வி என்றதன்பின் உவம உருபு தொக்கது. 'அறம்பொரு ளின்பத்தைப் போற்றிப்புனைந்த பொருளிற்று" என்றது—இக் குறிஞ்சிநூலின் பொருட்பயன் கூறியவாறு.

ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டிற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த வுரையைத் தழுவி ஜெகந்நாதாசார்யர் செய்த உரை முற்றும்.

குறிஞ்சிப்பாட்டின்

அரும்பதவகராதி முதலியன.

அ

அ-அழகிய, 55, 140
அகமடல்-உள்மடல், 220
அகலம்-மார்பு, 121
அகலுள்-அகன்ற இடம், 4
அகவல்-அழைத்தல், 220
அகிற்புகையூட்டுதல், 110
அசோகந்தளிர் எரிபோன்றது [105, 118-19
அசோகந்தளிரைக் காதிலே [செருகிக்கொள்ளுதல், 119
அசையல்-நடுங்காதே, 180
அஞ்சலோம்பு, 181
அஞ்சிலோதி, 180
அடிதளர்தல்-இருப்புக்குலை [தல், 133
அடுகளிறு, 150
அடுங்கரை-இடிகரை, 179
அடும்பு-அடம்பம்பூ, 87
அடைதரல்-தோன்றல், 184
அண்ணல்-தலைமை, 171
அண்ணல் யானை, 171
அணங்குறுமகளிர், 175
அணந்த-மேனோக்கி நின்று [வருந்தின, 35
அணந்தயானை, 35
அதிரல்-புனலிப்பூ, 75
அந்தி அயர்தல்-அந்திக் காலத்துச் செய்யுந் தொழில்களை நிகழ்த்தல், 223
அயர்கம்-நிகழ்த்துவேம், 232
அரக்கு-சாதிலிங்கம், 96
அரவம்-பாம்பு, 255
அரவுறழஞ்சிலை, 158
அரி - அரித்தெழுகின்ற ஓசை, [193
அரிப்பனி, 249
அல்லாந்து-மகிழ்ந்து, 143
அலமரல்-மனச்சுழற்சி, 137 (அலமா-பகுதி)
அலரி-பூக்கள், 117, 149, 197
அலவுற்று-மனஞ்சுழன்று, 7
அவண-அவ்விடத்தனவாகிய, [41
அவரை-87
அளை-முழைஞ்சு, 252
அறம்புணையாகத் தேற்றல், [208
அறியுநர்-அறிவோர், 4
அறிவுறல்-அறிவுறுத்தல், 22
அறை-பாறை, 98
அன்றில், 219
அனிச்சம், 62

ஆ

ஆகம்-மார்பு, 186, 249
ஆகம் அடையமுயங்கல், 186
ஆசு-குற்றம், 17
ஆடு-பறக்கும், 46
ஆடுமகள், 193
ஆத்தி-ஆத்திப்பூ, 87
ஆம்பல் - ஆம்பற்பூ, 62, 223; ஒருபண், 222
ஆம்பலந்தீங்குழல், 222
ஆமான், 253
ஆய்-அழகிய, 117, 223
ஆய்பு-ஆராய்ந்து, 114
ஆயிடை-அப்பொழுது, 137
ஆயிதழ்-117
ஆரம்-சந்தனப்பூ, 93
ஆவிரை-ஆவிரம்பூ, 71
ஆளி, 252
ஆற்ற-பொறுத்திருக்க, 23
ஆன்றிசின்-அமைந்தேன், 34
ஆனா-ஆற்றுந்தன்மைத்தல் [லாத, 26

இ

இகத்தல்-கடத்தல், 244
இகல்-மாறுபாடு, 27
இசின் - தன்மைக்கண் வந்தது, [34

இசை-ஓசை, 51, 219
இடங்கர், 257
இடும்பை-வருத்தம், 134
இணர்-இதழ், 69 ; கொத்து, [70, 86
இதணம்-பரண், 41
இம்மென, 147
இமிரும்-ஓசைபட ஒலிக்கும், [147
இயத்த-வாச்சியங்களையுடை [யனவாகிய, 99
இயம்-வாச்சியம், 193
இயல்பு-ஒழுக்கம், 15
இரட்டுதல்-மாறிமாறிக் கூப் [பிடுதல், 228
இரவரல்-இரவுக்குறியிலே [வருதல், 239
இரு-கரிய, 47, 104, 163; பெரிய, [157, 163, 220
இருபேரச்சம், 29
இருவி-தினையரிந்ததாள், 153
இலவம்-இலவம்பூ, 86
இலையெஃகு, 52
இழிதருதல்-இழிதல், குதித் [தல், 54
இழுக்கு-வழுக்குநிலம், 258
இழை-அணிகலன், 3
இளைஞர்-வீரர், 129
இறங்குகை-நான்றகை, 36
இறந்த-கடந்துபோன, 141
இறைகொள்ளுதல் - தங்குதல், [121
இறைஞ்சி-தாழ்ந்து, 215

ஈ

ஈகை-பொன், 126
ஈங்கை-இண்டம்பூ, 86
ஈண்டுதல்-திரளுதல், 189
ஈரம்-அருள், 234
ஈரிய - ஈரத்தினையுடையவாய், [248

உ

உகிர்-நகம், 131
உட்கு-அச்சம், 184
உடற்சினம் - உடலுஞ்சினம், [159
உடு - நாணைக்கொள்ளுமிடம், [170
உண்டுறை, 237
உந்தி-கொப்பூழ், 140
உந்தூழ்-பெருமூங்கிற்பூ, 65
உரவு-மிகுதி, 45
உரவுக்கதிர், 45
உரவுச்சினம் - பரக்கின்ற சினம், [130, 159
உரவுத்திரை, 178
உரி-உரிய என்பதன் விகாரம், [213
உரிது-உரித்தாக, 65
உரு-நிறம், 103, 105
உருப்பு-வெம்மை, 45
உருமின் பிளிறல், 162
உருமு, 255
உழுவை-புலி, 252
உள்ளுதல்-நினைத்தல், 200
உளர்ப்பு-அலைத்தல், 109
உளியம்-கரடி, 252
உறையுள்-இருப்பிடம், 213

ஊ

ஊர்பு-ஊர்ந்து, ஏறி, 215
ஊர்வாயில், 236
ஊழடிமுட்டம், 258
ஊழூழ்-முறைமுறையே, 44

எ

எஃகு-வேல், 52
எதிர்தல்-ஒட்டுதல், 161
எம்விழைதருபெருவிறல், 199
எமியேம்-யாங்கள், 32
எய்யா-அறியாத, 8 (எய்யாமை -அறியாமை)
எரிபுரையெறுழம், 66
எருவை-பஞ்சாய்க் கோரை, [கொறுக்கைச்சி, 68
எல்-ஒளி, 167
எல்லை-பகற்பொழுது, 215

எற்படுதல் - பகற்பொழுது கழி
[தல், அத்தமித்தல், 39
எறிதல்-அழுத்துதல், 59

ஏ

ஏங்குதல்-ஊதுதல், 219
ஏங்கு வயிர், 219
ஏம்-மயக்கம், 210
ஏமஞ்சாலருவினை - காந்தருவ
[மணம், 32
ஏமம்-பாதுகாவல், 32
ஏழ்-ஏழுகுதிரைபூண்டதேர்க்கு
[ஆகுபெயர், 215
ஏறு-உருமேறு, 49, எருது, 235
ஏனையுலகம்-மறுபிறப்பு, 24

ஐ

ஐம்பால் - ஐவகைப்பட்ட கூந்
தல், 139
ஐயர்-தெய்வ இருடிகள், 17

ஒ

ஒடுங்கிருங்குட்டம், 256
ஒய்யென-கடுக, விரைய, 166;
ஒலி-தழைக்கும், 2 [185
ஒன்னார் - பகைவராகிய அசுரர்,
[52

ஓ

ஓச்சி-கொடுத்து, 7; ஓட்டி, 150
ஓதி-கூந்தல், 180
ஓப்பி-ஓட்டி, 38, 101
ஓராங்கு-ஒருசேர, 19

க

கடம்பு-கடம்பமரம், 176
கடவல்-செலுத்துகை, 12
கடாஅம்-மதம், 164
கடி-காவல், 20
கடிதல்-ஓட்டுதல், 43
கடுங்குரலவித்தல், 151
கடுநோய், 3
கடுப்ப - ஒப்ப, உவமவுருபு, 36;
எதிர்கால முணர்த்தும் எச்ச
மாய் வந்தது, 229
கடும்பு-சுற்றம், 205
கண்-இடம், 98
கண்ணி-முடிமாலை, 115
கணம்-திரள், 217
கதநாய், 240
கதிர்மண்டிலம்-ஞாயிறு, 216
கயிறு-கழாய்க்கயிறு 194
கயிறார்பாணி- 194
கரந்தை-நாறுகரந்தைப்பூ, 76
காஅம்-முதலைவகை, 257
கருவிய - தொகுதிகளை யுடைய
கருவிளை, 68 [வாய், 53
கல்-அத்தகிரி, 216
கல்லென் சுற்றம், 151
கல்லென, 160
கல்லிவர் முல்லை, 77
கலன்-பூண், 14
கலாவ-ஏற்றிழிவு செய்ய, 127
கலி-ஆரவாரம், 40; தழைத்த,
[76
கலுழி-பெருக்கு, 178
கலுழும்-கலங்காநிற்கும், 248;
[251
கவின்-அழகு, 9, 198
கவை இ-அணைத்து, 185
கழிப்பி-போக்கி, 214
கள்-தேன், 84
களிறுதருபுணர்ச்சி, 212
கறங்க-ஒலிப்ப, 193

கா

காஞ்சி-காஞ்சிப்பூ, 84
காட்சி-அறிவு, 17
காந்தள்-கோடற்பூ, 62
காயா, 70
கார்ப்பெயல்-கார்காலத்து
[மழை, 162
கால்-காம்பு, 117
காழ்-கரிய, 107; வயிரம், 110;
[வட்டம் 118
காழ்வை-அகிற்பூ, 93

கி

கிள்ளை-கிளி, 101
கிளத்தல்-சொல்லுதல், 138
கிளையிதழ்-புறவிதழ், 101

கு

குஞ்சியில் ஈரம்புலர விரலா [லகோத்தல், 109
குட்டம்-ஆழம், 256
குடசம்-வெட்பாலைப்பூ, 67
குடிநிரலுடைமை, 30
குரல்-கதிர், 37
குரவம், 69
குரீஇப்பூளை-சிறுபூளை, 72
குருக்கத்தி, 92
குருகிலை-முருக்கிலை, 73
குருந்து-குருந்தம்பூ, 95
குரைய [அசை], 14
குல்லை-கஞ்சங்குல்லைப்பூ, 78
குவவு-திரண்ட, 120
குவளை-செங்கழுநீர்ப்பூ, 63
குவைஇ-குவித்து, 98
குழுமலை, 261
குழை-தளிர், 105
குளவி-காட்டுமல்லிகைப்பூ, 76
குளிர்-கிளிகடிகருவி, 43
குறிஞ்சி-குறிஞ்சிப்பூ, 63
குறுங்கால் குரம்பை, 153
குறுநறுங்கண்ணி - குன்றிப்பூ, [72

கூ

கூம்புவிடுதல் - தளையவிழ்தல், [223
கூவிரம்-கூவிரப்பூ, 66
கூவிளம்-வில்வப்பூ, 65

கெ

கெடுதி-கெட்டபொருளை 142
கெழு-பொருந்தின, 40

கை

கைகவர்நரம்பு, 147
கைதை-தாழம்பூ, 83
கையற்று-செய்வதொழிந்து, 25

கொ

கொக்கு-மாமரம, 188
கொகுடி-கொகுடிப்பூ, 81
கொங்கு-தாது, 83
கொடுந்தாள் முதலை, 257
கொடுவரிய-வளைந்தவரிய, 219
கொண்மூ-மேகம், 50
கொய்தழை-மிக்க இடங்களை [நறுக்கின தழை, 102
கொளுவி-கொளுத்தி, 224
கொன்-அச்சம், 245
கொன்றை, 86

கோ

கோங்கம்-கோங்கம்பூ, 73
கோடல்-வெண்கோடற்பூ, 83
கோடு-மலைச்சிகரம், 54
கோதை-மாலை, 103
கோல்-திரட்சி, 167
கோள்-கொள்ளுதல், 38

ச

சண்பகம்-சண்பகப்பூ, 75
சமம்-போர், 229

சா

சாஅய்-நுணுகி, 250
சாஅய்தல்-கெடுதல், 195
சாந்தருந்துதல், 120
சாந்து-சந்தனம், 120
சாயல்-மென்மை, 140
சால்பு-குணங்களினமைதி, 15
சாறயர்தல்-விழாக்கொண்டாடு [தல், 201
சாறு-விழா, 192, 201

சி

சிந்துவாரம்-கருநொச்சிப்பூ, 89
சிலம்பு-மலை, 58
சிலைகொளீஇ - வில்லைநாணேற் [றி, 158
சிறுசெங்குரலி-கருந்தாமக் [கொடிப்பூ, 82
சிறுமாரோடம்-செங்கருங்கா [லிப்பூ, 78
சிறுமையள்-நோயினையுடை [யள், 26
சின்வாஈமா, 34
சினைய்-கொம்பிட்டதன, 113

சு

சுடர்-விளக்கு, 224
சுரி-கடைகுழன்று, 107

கரும்பு - வண்டின் சாதிபேதம், [148
கள்ளி-மராமரப்பூ, 66
கனைகுடைதல், 57
கனைய-கனையிடத்தன, 113

கூ

கூர்-தெய்வம், 169, 255
கூரல்-பிரம்பு, 42; கூரைப்பூ, 71
குருறுமஞ்ஞையின் நடுங்க, 169

செ

செங்கோடுவேரி-ஒரு பூ, 64
செத்து-கருதி, 191
செப்பல்வன்மை, 12
செம்பொறி - உத்தமவிலக்க [ணம், 123
செம்மல்-சாதிப்பூ, 82
செயலை-அசோகு, 105
செருக்கி-மயங்கி, 159
செருந்தி-செருந்திப்பூ, 75
செருவிளை-வெண்காக்கணம் பூ, [68
செறுத்து-அடக்கி, 12
சென்னி-தலை, 115 சிகரம், 196

சே

சேஎய்-முருகன், 51
சேடல்-பவழக்கான் மல்லிகைப் [பூ, 82
சேஞேன், 40
சேமம்-காவற்றொழில், 156

சொ

சொன்றி-சோறு, 201

ஞ

ஞமலி-நாய், 131

ஞா

ஞாழல்-புலிநகக்கொன்றை, 81

ஞெ

ஞெகிழி-தீக்கடைகோல், 226

த

தகரம்-மயிர்ச்சந்தனம், 108
தகை-அழகு, 42
தட்டை-கிளிகடிகருவி, 42
தண்டாது-அமையாமல், 56
தணக்கம்-தணக்கம்பூ, 85
தணப்ப-போக, 19
தப்புதல்-கெடுத்தல், 254
தயக்கு-துளக்கம், 125
தழல்-கிளிகடிகருவி, 42
தளவம்-செம்முல்லை, 80

தா

தாஅய்-பரந்து, 197
தாதிணை - தழை பரந்தகோர் [கொம்பு, 149
தாழை-தெங்கிற்பாளை, 80
தாறு-பரிக்கோல், 150

தி

திரளரை - திரண்ட முதல் (முதல்-அடிமரம்), 176
திருந்தடி - பிறக்கிடாத அடி, [127
தில்லை-தில்லைப்பூ, 77
திலகம்-மஞ்சாடிமரத்தின் பூ, 74
திளையா-இமையாத, 132
திணைப்படுபுள், 38

து

துகில், 55
துஞ்சா முழவு, 236
துணை-உதவி, 31
துணைபுணரேறு, 235
துணையறைதல்-ஒப்புச்சொல் [லுதல், 177
துணையறைமாலை, 177
துப்பு-வலிமை, 128
தும்பை-தும்பைப்பூ, 90
துய்-இளைதான பருவத்துப் பஞ்சின் நுனிபோன்றிருப் பது, 37
துயல்வருதல்-பெயர்தல், 127
துவரி-புலர்த்தி, 60
துழாஅய்-திருத்துழாய்ப்பூ துளசிப்பூ, 90
துன்னருந்துப்பு, 128
துன்னுதல் - இட்டுதல், நெருங் குதல், 128, 130,230
துனைஇய-விரைந்த, 230

தூ

தூங்குதல்-தொங்குதல், 86
தூய்-தூவி, சிதறி, 5

தெ

தெவிட்ட-திரள, அசையிட, 217
தெழிப்ப-ஒலிப்ப, 167
தெறுதல்-சுடுதல், 45

தே

தேம்பிழி தேறல், 155
தேம்பும்-மெலியும், 26
தேமா-தேமாம்பூ, 64
தேற்றுதல்-துணிதல், 246
தேறல்-கட்டெளிவு, 155, 190
தேன்-அகிலினது நெய், 111

தை

தைஇய-கட்டியுடுத்து, 102

தொ

தொத்து-கொத்து, 65

தோ

தோகை-மயில், 191
தோன்றி-தோன்றிப்பூ, 90

ந

நகர்-அகம், வீடு, 202
நந்தி-நந்தியாவட்டப்பூ, 91
நந்துதல்-மிகுதல், 192
நரந்தம்-நாரத்தம்பூ, 94
நள்ளிருணாறி - இருவாட்சிப் பூ, 94
நளி-செறிவு, 58
நறவம்-நறைக்கொடி, 91
நறை-தூபம், 7
நன்குடைமை- நன்றாகிமுடிதல், 30

நா

நாகம்-நாகப்பூ, 94
நாடறிநன்மணம், 232
நாணுமறத்தல், 167
நாம்-அச்சம், 116

நி

நிரைசெலல், 50
நிலத்த-நிலத்திடத்தன, 113
நிவப்பு-ஓக்கம், 50
நிழத்தல்-நொக்கிவிடுகை, 157

நீ

நீடுநினைத்தல், 182
நீர்குடித்தல் ஒரு சூளுறவு, 211
நீரெறிமலரிற்சாஅய், 247
நீவி - கடந்து, 20; துடைத்து, 182
நீவிய-வார்த்த, 107

நு

நுகர்கு-நுகர்வேன், 181
நுண்வினைக்கச்சை, 125
நுதல்-நெற்றி, 1
நுமர், 231

நூ

நூழில், 258

நெ

நெகிழ்தல்-மெலிதல், 9
நெகிழ்ந்துகுநறும்பழம், 190
நெஞ்சமர்தல் - நெஞ்சு பொருந்துதல், 211
நெய்தல்-நெய்தற்பூ, 79; கருங்குவளை, 84
நெய்ம்மலியடிசில், 204
நெரிதருதல்-மேலே மேலே வருதல், 132

நே

நேர்வரும்- பொருந்துதல் வரும், 14
நேரிறை - நுண்ணிய மூட்டுவாய், 231

நை

நைவளம்-நட்டராகம், 146

நோ

நோஞ்து-பொருமல், 157

ப

பகன்றை - பகன்றைப்பூ, சிவதை, 88

பசும்பிடி-பச்சிலைப்பூ, 70
படர்-நினைவு, 11
படர்தல்-செல்லுதல், 46, 134
பணவை-பரண், 226
பயிர்தல் - அழைத்தல், (விலங்கினங்கட்கு வரும்), 218
பயிற்றி-சொல்லி, 100
பயிற்றுதல் - பலகாலும் எழுப்புதல், 222
பயினி-ஒரு பூ, 69
பரேரம்புழகு, 96
பலாசம்-பலாசம்பூ, 88
பழு-பிசாசு, 259
பழுநிய-முற்றுப்பெற்ற, 146
பழுமிளகு, 187
பளிங்கு செரிவன்ன பாய்சுனை, 57

பா
பாங்கர்-ஓமை, 85
பாணி-காலம், 152, தாளம், 194
பாதிரி, 74
பாந்தள்-பெரும்பாம்பு, 259
பாய்-பரந்த, 57
பாயம்-மனவிருப்பம், 58
பாயம்பாடுதல், 58
பாரம்-பருத்திப்பூ, 92
பாலை-பாலைப்பூ, 77; பாலையாழ், 146

பி
பிடவம்-பிடவம்பூ, 78
பிண்டி - அசோகம்பூ, 88; அசோகு, 119
பிணர்-சருச்சரை, 163
பிணையேர் நோக்கு, 154
பித்திகம் - பிச்சிப்பூ, 89, 117; [இஃது அந்திக்காலத்து மலர்வது].
பிரசம்-தேன், 189
பின்னிருங்கூந்தல், 60

பீ
பீரம்-பீர்க்கம்பூ, 92

பு
புகல்வி-ஆமானின் ஏறு, 253
புகல்வு-மனச்செருக்கு, 135
புடையூ-புடைத்து, 160
புண்ணுமிழ் குருதி, 172
புரையோர் - உயர்ந்தோர் [புரைமை-உயர்ச்சி], 205
புரைவது-உயர்ந்தது, 207
புலம்-இடம், நிலம், 134, 135
புலம்பு-தனிமை, 10
புழகு - மலையெருக்கம்பூ, 96 [செம்பூ, புனமுருங்கையுமாம்]
புழற்கோடு- உள்தொளையுள்ள கொம்பு, 253
புள்-வண்டு, 10; ஈ, தேனீ, 189
புள்ளொறிபிரசம், 189
புள்ளிவரிநுதல், 173
புறங்காணல்-முதுகுகாட்டியோடச்செய்தல், 129, 174
புறம்-முதுகிடம், 59
புன்னாகம்-புன்னையின் விசேடம், 91
புன்னை-புன்னைப்பூ, 93
புனிறு-ஈன்றணிமை, 37

பெ
பெண்ணை-பனை, 220
பெருந்தகை, 179, 206

பே
பேணுதல்-வழிபடுதல், 6

பை
பைந்நிணம், 204
பைவிரியல்குல், 102

பொ
பொத்த-தீமூட்ட, 226

போ
போங்கம்-மஞ்சாடிப்பூ, 74
போழ்-தாழைமடல், 115

பௌ
பௌவம்-கடல், 47

ம
மகிழ்-மகிழ்ச்சி, 155
மஞ்ஞை-மயில், 169
மடங்கல்-கூற்றுவன், 165
மடன், 19

மடிந்த-மறந்த, 156
மடிவிடுவிளையர், 161
மடுப்ப-எடுத்துக்கொடுப்ப, 154
மண்ணுதல்-பூசுதல், 108
மணி - நீலமணி, 68, 84, 112; மாணிக்கம், 221
மணிச்சிகை-செம்மணிப்பூ, 64
மதர்-களிப்பு, செருக்கு, 141
மதர்மழைக்கண், 248
மரங்கொல்பு, 164
மரமுதல்-மரத்தடி, 217
மராஅம்-மராம்பூ, 85
மருங்கு-நூல், 18
மருப்பு - யானைக்கொம்பு, (தந்தம்) 36
மருதம்-மருதப்பூ, 73
மலர்ந்தேந்தகலம், 121
மலரத்திறந்த வாயில், 203
மலிவனம் - மனவேட்கை மிக்கேம் (தன்மைப்பன்மை), 97
மலைமிசைக் கடவுள் - முருகன், 208-209
மலைய-மலையிடத்தன, 113
மழைக்கண், 141
மறுகி-திரிந்து, 97
மன்றல்-மணம், 21
மன்று-பசுத்தொழு, 218

மா

மா-மாம்பூ, 76; கரிய, 95
மாதர்-காதல், 19, 148
மாயவரவு, 246
மாயிருங்குஞ்சி, 112
மால்-மயக்கம், (மயங்குதல்-கலத்தல்), 97
மாலையன் - இயல்பாக வுடையவன் (மாலை-இயல்பு), 239

மி

மிச்சில், 206
மிஞிறு - வண்டின் சாதிபேதம், [111
மிடாச்சொன்றி - மிடாச்சோறு, [201

மீ

மீக்கடவும்-மிருதியைச் செலுத் [தும், 27

மு

முச்சி-முடி, 104
முட்டாட்டாமரை, 80
மூத்தார்மருப்பு, 36
முழுமுதல்-பெரிய அடி, 188
முளைவாளெயிற்றருமலி, 131
முன்பு-வலிமை, 159
முனியல்-வெறுத்தல், 243
முனை-பகைப்புலம், 128

மெ

மென்றோளின்றுயில், 242

மே

மேவரக்கினத்தல், (மேவர-பொருந்த), 138

மை

மைந்து-வலிமை, 121
மையல்-மயக்கம், 165
மையலை -மயக்கத்தையுடையை [8

மொ

மொய்ம்பு-தோள், 120

மௌ

மௌவல்-மல்லிகை விசேடம, [81

வ

வகுளம்-மகிழம்பூ, 70
வஞ்சி-வஞ்சிப்பூ, 89
வஞ்சினம், 210
வடவனம்-ஒரு பூ, 67
வண்டு, 148
வண்ணம்-குணம், 31; நிறம், [சாதி, 114
வண்ணவண்ணத்தமலர், 114
வம்பு-கச்சு, 198
வயங்கியோர்-விளங்கிய தேவர். 213
வயிர்-ஊதுகொம்பு, 219
வயின்-இடம், 221
வரி-பாட்டு, 111; புகர், 173
வரிமிஞிறு, 111
வருதியர், (வியங்கோண்முற்று) [39

வரையரமகளிர், 195
வலந்த - தெற்றின, பின்னின, [42
வலைப்படு மஞ்ஞையின், 250
வழுவின்வழாஅ விழுமம், 260
வழை-சுரபுன்னைப் பூ, 83
வள்-பெரிய, 100, 131
வள்ளி-வள்ளிப்பூ, 79
வள்ளுயிர்த்தெள்விளி, 100
வளநகர், 202
வளம்-செல்வம், 202
வளி-காற்று, 48
வளைகுபு-வளைத்துக்கொண்டு, [132

வா

வாகை-ஒரு பூ, 67
வாங்கி-வலித்து, 170
வாங்கிய-வளைந்த, 37
வாங்கு-வளைந்த, 140
வாய்-இடம், 227
வாய்மடுத்தல்-தின்னல், 156
வால்-வெள்ளிய, 67
வான்-மழை, 98
வான்றிணை-உயர்ந்தகுலம், 205
வானம்-மேகம், 227
வானி-வானிப்பூ, 69

வி

விசும்பாடு பறவை, 46
விடர்-முழைஞ்சு, 212
விடரகம், 261
விடு-விடுபு என்பதன் விகாரம், [160
விடை-எருது, 136
விதுப்பு-நடுக்கம், 168
வியப்பு-மேம்பாடு, 15
வியல்-அகற்சி, 191
விரவுமலர்-கலந்த பூக்கள், 5
விரை-வாசனைப்பொருள் (சந்தனம் போல்வன), 7
விரைஇய-தொடுத்த, 114
விலங்குமலை - ஒன்றற்கொன்று குறுக்கிட்டுக் கிடக்கின்றமலை 99, (விலங்கு-குறுக்கிடுதல்)
விழவுக்களம், 192
விழுமம்-துன்பம் : துன்பந் தருவனவற்றுக்கு ஆகுபெயர், [260
விளி-சொற்கள், 100; ஓசை, [222
விறல்-வெற்றி, 3

வீ

வீங்கிறை-பூண்இறுகின முன்கை, 123
வீவு-கெடுத்தல், போக்குதல், 3
வீழ்-விரும்பும், 46
வீளை-சீழ்க்கை, 161
வீறு-வெற்றி, 150

வெ

வெட்சி, 63
வெடிபடுத்தல்-மிக்க ஓசையை [யுண்டாக்கல், 161
வெதிர்-மூங்கில், 35

வே

வேங்கை-வேங்கைப்பூ, 95
வேட்கை-விருப்பம், 86
வேண்டு-விரும்புவாயாக (வியங்கோள் முற்று),
வேய்-மூங்கில், 242
வேரல்-சிறுமூங்கிற்பூ, 71
வேள்-முருகன், 174
வேறுபுலத்தாகாண்விடை, [135 - 136.

முற்றிற்று.

பட்டினப்பாலை

பட்டினப்பாலையென்ற தொடர் - பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத்திணையைப்பற்றிய செய்யுள் என்று பொருள்படும்: இரண்டாம் வேற்றுமை யுருபும்பயனு முடன்றொக்க தொகை. பாலை-பாலைத்திணையைக் கூறும் பாடலுக்கு, ஆகுபெயர். பாலையென் பதை ஆகுபெயராகக் கொள்ளாமல், பட்டினப்பாலையென்ற தொடரை வேற்றுமைத்தொகையின்மேல்வந்தஅன்மொழித்தொகை யெனக் கூறினுமாம். 'முல்லைப்பாட்டு,' 'குறிஞ்சிப்பாட்டு' என்று பெயரிட்டாற்போலப் பாலைப்பாட்டு என்று இந்நூற்குப் பெயரிடாது பட்டினப்பாலை என்று பெயரிட்டது, பாலைத்திணையைக் கூறும் பகுதி மிகச் சிறியதாயிருப்பப் பட்டினத்தின்சிறப்பைக் கூறும் பகுதியே மிக்கிருத்தலா லாகும். இத்தொடரில் பட்டினம் என்பது-காவிரிப்பூம்பட்டினத்தை.

பொருளைத்தேடும்பொருட்டு வேற்றுநாட்டிற்குச் செல்லக்கருதிய தலைவன் தான் செல்லும் நாட்டிற்கு இடைவழியிலுள்ள கானம் வெய்ய தாதலால் தலைவியை உடன்கொண்டு செல்லவும் துணியா மல் அவளைப்பிரிந்துசெல்லவும்துணியமாட்டானாய்த் தனதுநெஞ்சை நோக்கி, 'நெஞ்சமே! என்காதலி இங்கே தனியளாயிருப்ப, நான் காவிரிப்பூம்பட்டினத்தையே பரிசிலாகப்பெறுவேனாயினும், திருமா வளவனுடைய செங்கோலைப் போற் குளிர்ந்த தோள்களையுடைய தலைவியைப் பிரிந்து, அவ்வரசன் பகைவர்மேலோச்சிய வேலைக் காட்டிலும் மிக்கவெம்மையையுடைய கானத்தைக் கடந்து வாரேன்' என்று செலவழுங்கியதாகிய அகப்பொருள் இப்பாட்டினுற் கூறப் படுகின்றது. இங்ஙனம் இதில் தலைவியைப் பிரிந்துசெல அழுங்கு தலாகிய பாலையின் உரிப்பொருள் அமைந்திருத்தலால், இது பாலையாயிற்று. (பிரிதலும் பிரிதல்நிமித்தமும் பாலையெனப்படு மென்பது இங்கே அறியத்தக்கது.)

அகப்பொருட்பாட்டாகிய இந்தப்பட்டினப்பாலைக்குப் பாட்டு டைத் தலைவன் - திருமாவளவன். கிளவித்தலைமகன், பெயர்கூறப் படான்: அகப்பொருளில் "சுட்டியொருவர் பெயர்கொளப்பெறஅர்" என்பது இலக்கணமாதலினென்க. இந்த அகப்பொருட் பாட்டின் திணை, பாலைத்திணை: தலைவியைப் பொருள்வயிற்பிரியக்கருதிய தலைமகன் செலவழுங்குதல் என்பது இதிலுள்ள துறையாம்: பாட்டுடைத் தலைவன் - திருமாவளவன் என்று கூறப்பட்டுள்ளான்: அத்தொடர் கரிகாற்பெருவளத்தானைக் குறிப்பது என்று நச்சினார்க் கினியர் கூறியுள்ளார்: அதையொட்டியே பலபுலவர்களும் கூறிவந்துள் ளார்: திருவாளர் வழக்கறிஞர் சோமசுந்தரபாரதியார், பல காரணங் காட்டித் திருமாவளவன் என்பது கரிகாற்பெருவளத்தானைக் காட்டாது: அவன் வழித்தோன்றலாகிய ஒரு சோழ மன்னவனைக் காட்டுமென்று

செந்தமிழ்ப் பத்திரிகை முப்பத்தொன்பதாந்தொகுதியில் எழுதியுள்ளார்: அதன் தகுதியைப் பின்னர் ஆராய்வோம்.

இந்தப்பட்டினப்பாலை-நக்கீரனார் முதலிய கடைச்சங்கப்புலவர்களாலியற்றப்பட்ட பத்துப்பாட்டுக்களுள் ஒன்பதாவது. பத்துப்பாட்டுக்களாவன - திருமுருகாற்றுப்படை பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை முல்லைப்பாட்டு மதுரைக்காஞ்சி நெடுநல்வாடை குறிஞ்சிப்பாட்டு பட்டினப்பாலை மலைபடுகடாம் என்பன: இப்பத்தையும் பத்துப்பாட்டு என ஒன்றாகத் தொகுத்தவர் இன்னாரென்பது, விளங்கவில்லை.

இது-ஆசிரியவடிகள் இடையிடையே விரவிவரப்பெற்ற 301-அடிகளைக்கொண்ட வஞ்சிப்பாவாகும்: இது இங்ஙனமிருத்தல் பற்றியே, யாப்பருங்கலவிருத்தியில்"பட்டினப்பாலையென்னும் வஞ்சி நெடும்பாட்டு, ஆசிரியவடிவிரவிவந்த ஏந்திசைத்தூங்கல்விரவியற் குறளடி வஞ்சிப்பா" என்று கூறியது. யாப்பருங்கலத்தில் வஞ்சிப்பாவிற்கு இலக்கணம் கூறுமிடத்து "தூங்கலிசையன வஞ்சி மற்றவை, யாய்ந்த தனிச்சொலோ டகவலின்றுமே" என்று கூறியிருத்தற்கு ஏற்ப, இந்தப்பட்டினப்பாலையில் தனிச்சொல் வந்து பின் சுரிதகம் வரவில்லையெனில்,—"மிக்குங்குறைந்தும் வரினு மொருபுடை, ஒப்புமைநோக்கி யொழிந்தவுங் கொளலே", என்ற யாப்பருங்கலப் புறநடைச்சூத்திரத்தில் 'சுரிதகத்தருகு தனிச்சொலின்றி வந்ததாயினும் வஞ்சிப்பா என்றே வழங்கப்படும்' என்பது முதலாகக் கூறியிருப்பதும், "வஞ்சித்தூக்கே செந்தூக்கியற்றே" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தி னுரையில் "ஈண்டுத் தனிச்சொல் வேண்டுமென்று பிற்காலத்து நூல்செய்தாருமுளர்: அது சான்றோர் செய்யுளெல்லாவற்றோடும் பொருந்தாமையானும், பிற்காலத்திற்செய்த நூல்பற்றி முற்காலத்துச் செய்யுட்கெல்லாம் இலக்கணஞ்சேர்த்துதல் பயமின்றாதலானும், அஃது அமையாதென்பது," "வஞ்சிப்பாவின் ஈற்றடி வரைந்தோதவே இடையாயின எல்லாவடியும்வரப்பெறுமென்பதாம்" என்று பேராசிரியர் கூறியதும் கொண்டு, "வஞ்சிப்பாவிற்குஎல்லாவடியும் விரவிவரலாம்: தனிச்சொல் வரவேண்டுவதில்லை" என்று பெறப்படுதல் காண்க. உரையாசிரியரான இளம்பூரணரும் தொல்காப்பியத்துச் செய்யுளியலில் 111-ஆஞ் சூத்திரத்து உரையில் இதனை வஞ்சிப்பா எனக் கூறியுள்ளார். (இந்தப்பாடலை வஞ்சி விரவிவந்த அகவற்பாவெனக் கூறினருமுளர்: இப்பட்டினப்பாலையுள் நூற்றுமுப்பத்தெட்டடிகளே அகவலோசை தழுவிய ஆசிரியப்பாவிற்குரிய அளவடிகொண்டு அமைந்திருப்ப, ஏனைய நூற்றறுபத்துமூன்றடிகள் வஞ்சிப்பாவிற்கு உரிய குறளடியாய்ச் செல்வதால், அவர்கூற்றுப் பொருந்துமெனத் தோன்றவில்லை. இங்ஙனம் ஆசிரியர் தேனும்பாலுங்கலந்தாற்போலினிமைபெற இந்தச்செய்யுளை அமைத்த திறம் மிகவும்பாராட்டுதற்கு உரியது).

இதனை யியற்றியவர் - கடியலூர் உருத்திரங்கண்ணனார். இவர் பத்துப்பாட்டுக்களுள், இந்தப்பட்டினப்பாலையையேயன்றிப் பெரும்பாணாற்றுப்படையையும் இயற்றியவர்: குறுந்தொகையிலுள்ள "நெடுநீராம்பல்" என்ற செய்யுளும், அகநானூற்றிலுள்ள "வயங்குமணிபொருத" என்ற செய்யுளும் இவரால் இயற்றப்பெற்றனவென்பர். கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்று இவர்பெயர் கூறப்பட்டிருத்தலால், இவருடைய ஊர் - கடியலூரென்றும், உருத்திரங்கண்ணனாரென்றதொகையை உருத்திரன்மகனாராகியகண்ணனாரென்று விரித்தற்கு இடமிருத்தலால் இவருடைய தந்தையாரின் பெயர் உருத்திரனா ரென்று இருக்கலா மென்றும் கருதுகின்றனர். (உருத்திரனாரென்று குறுந்தொகைச்செய்யுளியற்றிய ஆசிரியருள் ஒரு புலவர்காணப்படுகின்றார்.) "ஊரும்பெயருமுடைத் தொழிற் கருவியும், யாருஞ்சார்த்தி யவையவைபெறுமே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினுரையிற் பேராசிரியர் 'உறையூர் ஏணிச்சேரிமுடமோசி, பெருங்குன்றூர்ப்பெருங்கௌசிகன், கடியலூர் உருத்திரங் கண்ணன் என்பன, அந்தணர்க்குரியன' என்று உரைத்திருத்தலால், இவர் அந்தணரெனக் கருதப்படுகின்றாரென்று தெரிகிறது. "இருநிலங்கடந்த திருமறுமார்பின், முந்நீர்வண்ணன்", "காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந்தாங்குப், பாம்பணைப் பள்ளியமர்ந்தோனாங்கண்" என்று திருமாலையும், "நீனிறவுருவினெடியோன் கொப்பூழ், நான்முக வொருவற்பயந்த பல்லிதழ்த், தாமரைப்பொகுட்டு" என்று அத்திருமாலினுந்திக்கமலத்தையும் பாராட்டிக்கூறியிருத்தலின், இவர் திருமாலினிடத்து அன்புடையரெனக் கூறுதற்கு இடனுண்டு. இவரை யாதரித்தவர்கள்-தொண்டைமானிளந்திரையனும், சோழன் திருமாவளவனும். திருமாவளவன் இந்தப்பட்டினப்பாலையைக் கேட்டு மகிழ்ந்து பதினாறுநூறாயிரம்பொன் பரிசு அளித்தானென்பது "தழுவுசெந்தமிழ்ப் பரிசில்வாணர்பொன், பத்தொடாறு நூறாயிரம் பெறப், பண்டுபட்டினப்பாலை கொண்டதும்," "பாடியதோர் வஞ்சி நெடும் பாட்டாற்பதினாறுகோடிபொன்கொண்டது நின் கொற்றமே" என்பவற்றா லுணரப்படும்.

இவர் காலம் - கடைச்சங்கத்தார்காலம் என்பது வெளிப்படை.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இந்தப்பட்டினப்பாலைக்கும் உரை எழுதியுள்ளார்: பெரும்பாலும் அவ்வுரையை யாதாரமாகக்கொண்டு மாணாக்கர்க்கு விளங்குமாறு எளியநடையில் இவ்வுரை எழுதப்படும்.

நூல்

பட்டினப்பாலையென்று பெயரிட்ட ஆசிரியர் தாம்இட்ட பெயர்க்கு ஏற்ப, முதல் 218 - அடிகளால் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினைக் கூற விரும்பி அக்காவிரிப்பூம்பட்டினமுள்ள நாடு ஆகிய

சோழவளநாட்டின் வளத்துக்குக் காரணமாகிய காவிரியின்சிறப்பை, முதல் 7 - அடிகளாற் கூறுகின்றார்:—

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்

பதவுரை:—(1) வசை இல் புகழ் - குற்றமில்லாத புகழுடனே, வயங்கு - விளங்குகின்ற, வெள் மீன்-வெள்ளியாகிய மீன் [சுக்கிரன்], (2) திசை திரிந்து-(தான் நிற்றற்குஉரிய) வடதிசையில் நில்லாமல் மாறுபட்டு, தெற்கு ஏகின்உம்-தெற்குத்திக்கிலே போனாலும், (3) தளி உணவின்-(வானத்தினின்றுவிழும்) நீர்த்துளியையே யுணவாக வுடைய, தன் பாடிய (4) புள் - தன்னைப்பாடிய வானம்பாடியென்னும் பறவை, தேம்ப - (உணவில்லாமையால்) வருந்தும்படி, புயல் மாறி-மழைபெய்தலைத் தவிர்ந்து, (5) வான்-மேகம், பொய்ப்பின்உம்-பொய்த்துப் பஞ்சமுண்டானாலும், தான் பொய்யா-தான் தவறாமற் காலந்தோறும் பெருக்குளடுத்துவருகின்றதும், (6) மலைத்தலைய-குடகுமலையினிடத்தே தலையை [ஆரம்பத்தை] யுடையதும், கடல்-கடலினிடத்துச் சேர்வதுமான, காவிரி - காவேரிநதி, (7) புனல் பரந்து - நீர்பரவி, பொன் கொழிக்கும் - பொன்னைக்(கரையிலே) கொழிக்கப்பெற்றதும்,—(என்றவாறு.)

விசேடவுரை:—உலகம் இனிது நடத்தற்குக் கருவியாகிய மழைக்கு உரிய கோளாதலின், சுக்கிரனென்னுங்கோளுக்கு 'வசையில்புகழ்' என்று அடைமொழி கொடுக்கப்பட்டது. சுக்கிரனுக்குச் சிறிது வடபுறஞ் சாய்ந்தாற்போலிருத்தல் இயல்பு: இதனை "வறிதுவடக்கிறைஞ்சிய சீர்சால்வெள்ளி" என்ற பதிற்றுப்பத்தினாலும் அறிக: வெள்ளி அந்நிலைமாறித் தென்புறஞ் சாய்ந்தாற்போலிருப்பின் உற்பாதமாகிப் பஞ்சத்துக்கு அறிகுறியாம்: அக்காலத்தும் காவிரி தவறாது நீரைப் பெருக்குமெனக: "தென்றிசைமருங்கின் வெள்ளியோடினும்,...பெயல்பிழைப்பறியா", "இலங்குகதிர் வெள்ளிதென்புலம்படரினும், அந்தண்காவிரி வந்து கவர்பூட்ட" என்பவை முதலியன காண்க. திசை - வடசொல்.

மேல் 'வான்' என வருதலால், 'தற்பாடிய' என்பது வானத்தைப் பாடிய என்ற பொருளைத் தந்தது: வானம்பாடிப்புள் வானினின்று விழும் மழைநீர்த்துளியையே யுண்ணுமென்ப ஆதலால், வானம் பொய்ப்பின் அப்புள் தேம்புவதாகும்: வானம்பாடியை வடநூலார் சாதகம் என்பர். வற்கட காலத்திலும் வளனுண்டாக நீரொழுகுந்தன்மையதான காவிரி பொன் கொழிக்கும் என்பது, இவ்வடிகளாற் கூறப்பட்ட பொருள்.

8-28:—இனி, காவிரி பாயப்பெற்ற சோணாட்டைக்கூறக்கருதி, அஃது பாக்கம் ஊர் என்ற இவைகளையுடைமையைக் கூறுகின்றார்:—

விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவின் நீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கண்
காய்ச்செந்நெற் கதிரருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழல் துயில்வதியும்

(இ - ள்.) (8) விளைவுஅறா வியல்கழனி - விளைதல்தொழில் மாறாத அகற்சியையுடைய கழனியிடத்திலேதோன்றிய, (9) கார் கரும்பின் - பசிய கரும்பினுடைய, கமழ் ஆலை-நறுமணம்வீசுகின்ற பாகுகாய்ச்சுங்கொட்டிலில், (10) தீ - நெருப்பின்புகை, தெறுவின்-சுடுதலினாலே, கவின்வாடி - அழகுகெட்டு, (11) நீர் செறுவின் நீள் நெய்தல் (12) பூ-நீரையுடைய வயலில்தோன்றிநின்ற நீண்டநெய்தற்பூ, சாம்பும்-வாடப்பெற்ற, புலத்துஆங்கண் - விளைநிலங்களைக் கொண்ட அவ்விடத்திலே, (13) காய் செந்நெல் கதிர் - காய்த்த செந்நெற் கதிரை, அருந்தும் - தின்னுகின்ற, (14) மோடு - பருத்த வயிற்றையுடைய, எருமை முழு குழவி - எருமையீன்ற பருத்த கன்றுகள், (15) கூடு நிழல் - நெற்கூட்டினுடைய நிழலிலே, துயில் வதியும்-உறக்கத்தைக் கொள்ளப்பெற்றதும்,— (எ - று.)

விசேடவுரை:—*'வதியும்' என்ற பெயரெச்சம், 'பாக்கத்து' (27) என்பதனோடு இயையும். காவிரியின் நீர் பரத்தலால் விளைவு குறையாத கழனிகளில் தோன்றிய கரும்பினுடையசாற்றைக் காய்ச்சுகின்ற ஆலையினின்று வெளிவீசும் தீப்புகையினால் நெய்தற்பூ வாடப்பெற்ற விளைநிலத்திலே நெற்கதிரைத் தின்று எருமைக் கன்றுகள் நெற்கூடுகளின் நிழலிலே துயிலப்பெற்றது, பாக்கமென்க: பாக்கம்-நெய்தல் நிலத்தூர் என்பர். நெற்கூடு-நெற்களஞ்சியம். வதியும் என்பதை ஊருக்கும் (28) கூட்டுக. மேல்வரும் விசேடணங்களையும் பாக்கத்துக்குமாத்திரங் கூட்டாமல் ஊருக்குங் கூட்டுக.*

16-19. கோள்தெங்கின் குலைவாழைக்
காய்க்கமுகின் கமழ் மஞ்சள்
இனமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி

பதவுரை:—*(16) கோள் தெங்கின்-குலைகளையுடைய தெங்கினையும், குலைவாழை - குலைகளையுடைய வாழையினையும், (17) காய் கமுகின் - காயையுடைய கமுகினையும், கமழ் மஞ்சள் - மணம் வீசுகின்ற மஞ்சளினையும், (18) இனம் மாவின் - இனமான மாமரங்களினையும், இணர் பெண்ணை - குலைகளையுடைய பனையினையும், (19*

முதல் சேம்பின் - அடிபரந்த சேம்பினையும், முளை இஞ்சி-முளையினை யுடைய இஞ்சியினையுமுடையதும்,—(எ - று.)

தெங்குமுதலியவற்றைக் கொண்டுள்ளது பாக்கமென்க. கமுகு —க்ரமுகம் என்ற வடசொல்லின் சிதைவென்பர் ஒருசாரார்.

அகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதல் மடநோக்கின்
நேரிழை மகளி ருணங்குணுக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்

பதவுரை—(20) அகல் நகர் - அகன்ற மனையின், வியல் முற்றத்து - பரந்தமுன்னிடத்தில், (21) சுடர் நுதல் மடம் நோக்கின் (22) நேர் இழை மகளிர் - ஒளியையுடைய நெற்றியினையும் மடப்பமுள்ள பார்வையினையும் பொருந்தின அணிகலன்களையுமுடைய மகளிர்,—உணங்கு - (வெய்யிலில்) உலருகின்ற, உணு - நெல்லை, கவரும் - தின்னுகின்ற, (23) கோழி - கோழிகளை (ஓட்டுமாறு), எறிந்த - வீசியெறிந்த, கொடுங்கால் கனம் குழை - வளைந்த இடத்தையுடைய பொன்னாற்செய்த மகரக்குழைகள், (24) பொன் கால் புதல்வர்-அழகிய கால்களையுடைய சிறுவர், புரவி இன்று உருட்டும் - குதிரைபூட்டப்பெறுமல் (கையினுல்) உருட்டிச்செலுத்து கின்ற, (25) முக்கால் சிறுதேர் - மூன்று சக்கரங்களையுடைய சிறு தேரினது, முன்வழி விலக்கும் - வழியின் முன்னிடத்தை விலக்கு தற்கு இடனுனதும்,—(எ - று.)

விசேடவுரை :—பின்னும் ஆங்குள்ள வீடுகளின்வாசலில் உலர்த்திய நெல்லைத் தின்பதற்குவருகின்ற கோழிகளையோட்டு மாறு காவல்காக்கின்ற மகளிர் தம்காதிலணிந்திருக்கும் பொற் குழைகளைக் கழற்றியெறிந்து வீசினராக, தெருவிற்கிடக்கின்ற அக்குழைகள் சிறுவர் சிறுதேர்களை உருட்டும்போது அவற்றைச் செல்லவொட்டாதபடி தடுத்தற்கு இடனுனது அப்பாக்க மென்க. மகளிர் குழைகொண்டு கோழியெறிவரென்றதனுல், அங்குள் ளாரது செல்வச்சிறப்பு விளங்கும்: 'குழைகொண்டுகோழியெறியும் வாழ்க்கையர் என்றவழி, கோழியெறிவாரென்று உணரற்பால தன்று; ஒன்றுனும் முட்டில் செல்வத்தாரென்றவாறு' என்று மயிலைநாதர் கூறியிருத்தல், இங்கே காணத்தக்கது: இங்ஙனஞ் செல்வச்சிறப்பை யுணர்த்துதலைப் பிற்காலத்து அணிநூலார் வீறு கோளணி என்பர். (22-25) = "பொற்சிறுதேர்மிசைப் பைம்பொற் போதகம், நற்சிறுரூர்தலி னங்கைமார்விரீஇ, யுற்றவர் கோழிமே லெறிந்த வொண்குழை, மற்றத்தேருருள்கொடா'வளமைசான்றவே" என்ற சீவகசிந்தாமணி, இங்கு அறியத்தக்கது. மடம்-ஒன்றையும் அறியாததுபோன்று இருக்கும் குணம். கனம் - கனகமென்ற வட சொல்லின் விகாரமென்பர். இன்று - இன்றியென்ற வினையெச்சம் திரிந்துவந்தது.

26-27 விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து

பதவுரை:—(26) விலங்குபகை அல்லது-(அச்சத்தினால்)விலகிச் சென்று விடுகின்ற பகையையல்லாமல், கலங்கு பகை அறியா - கலங்கி (த் தத்தம்) இருப்பிடத்தை விட்டு எழுந்து ஓடிச்செல்வதற்குக் காரணமான பகையையறியாத, (27) கொழு பல்குடி-செழிப்பினையுடைய பலகுடிகளைக்கொண்டதுமான, பாக்கத்து - பாக்கங்களையும்;

காவிரி (6) பொன்கொழிப்பதும் (7), எருமைக்குழவி (14) கூட்டு நிழலில் துயில்வதியப்பெற்றதும் (15), தெங்குமுதல் இஞ்சியீறான பொருளைக்கொண்டதும் (16-19), மகளிர் (22) எறிந்தகுழை (23) தேர் முன்வழிவிலக்குவதும் (25), பகையறியாததுமான (26) பாக்கம் (27) என்க. பாக்கம்-கடற்கரையிலுள்ள ஊர். பாக்கத்திற்குவந்த விசேடணங்கள் யாவும் ஊர்க்கும் இயையுமென்பதைக் கருதுக. விலக்கும் (25) என்பதை, பாக்கத்து என்பதனோடு இயைக்காமல் விலக்குகின்ற, விலங்குபகை அல்லது - எளிதில் விலக்கக்கூடிய பகையன்றி என்று இயைத்து உரைப்பாருமுளர்.

28. குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு

பதவுரை—(28) குறு-(ஒன்றற்கு ஒன்று) அண்ணிய, பல்ஊர்-பல ஊர்களையுமுடைய, நெடு-பெரிய, சோணாட்டு-சோழநாட்டில்,—(எ - று.)—பட்டினம் (218) என்பதனோடு தொடரும். பாக்கத்தையும் (27) பல்லூர்களையுமுடைய சோணாட்டிலுள்ள (28) பட்டினம் (218) என்க.

சோழநாட்டின் சிறப்பைக்கூறிய கவி, இனி, அந்நாட்டின் இராசதானியாயுள்ள காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை 217 - அடிவரையிற் கூறுவர்.

29 - 32 :—காவிரிப்பூம்பட்டினம் படப்பைதண்டலைகளையுடைமை கூறப்படுகின்றது:—

வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
30. நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணை நிலைப் புரவியி னணைமுதற் பிணிக்கும்
கழிசூழ்படப்பை

பதவுரை:—(29) வெள்ளை உப்பின்-வெண்ணிறமுள்ள உப்பின், கொள்ளை-விலையை, சாற்றி-சொல்லி (விற்று), (30) நெல்லொடு வந்த - நெல்லைக் கொண்டுவந்த, வல் வாய் பஃறி-வலிய இடத்தையுடைய படகை, (31) பணை நிலை-குதிரைச்சாலையிலேநிற்றலையுடைய, புரவியின்-குதிரைகளை(ப் பிணிப்பது) போல, அணை-சார்ந்த, முதல்-தறிகளிலே, பிணிக்கும்-கட்டுதற்கு இடமான, (32) கழி-கழிகளாலே, சூழ்-சூழப்பெற்ற, படப்பை-பக்கத்தினையும்,—(எ - று.)

விசேடவுரை:—உப்பை உள்நாட்டுக்குக் கொண்டுபோய் நெல்லுக்குவிற்று, உப்பின் விலையாகப் பெற்ற அந்தநெல்லை யேற்றிக் கொண்டுவந்த படகுகள் தறிகளிலே கட்டப்பெற்றது கழிசூழ் படப்பையென்க, உப்பை நெல்லுக்கு விற்றல், பண்டைக்காலத்து நிகழ்ச்சி: இது, "உப்பு நொடைநெல்லின்", "நெல்லு முப்பு நேரே யூரீர், கொள்ளீரோவெனச் சேரிதொறு நுவலும்" என்பவற்றாலும் பெறப்படும். வரிசையாகக் கழிக்கரைகளில் தறிகளிற் படகுகள் கட்டப்படுவதற்குக் குதிரைச் சாலையிற் குதிரைகள் தறிகளிலே கட்டப் பெறுதல் உவமையாம்: குதிரை படகிற்கு உவமையாதலை "இளையவர், நெறிதருபுரவியின் மறிதருந் திமில்" என்ற இடத்துங் காணலாம்.

பஃறி-படகு. படப்பை என்பதற்கு-தோட்டம் எனப் பொருள் கூறலுமாம். அணைமுதல்-அணையிடத்துத்தறியுமாம்: அணை - தறி என்பாருமுளர்.

32-33. கலியாணர்ப்
பொழிற்புறவின் பூந்தண்டலை

பதவுரை:—(32) கலி - மனச்செருக்குளழுதற்குக் காரணமான, யாணர் - புதுவருவாயினையுடைய, (33) பொழில் - தோப்புகளுக்கு, புறவின்-புறம்பாகிய, பூந் தண்டலை - பூஞ்சோலைகளையும்,—(எ-று.)

மா பலாப் போன்றவை காய்த்துப்பழுத்தலால், பொழிலுக்கு 'கலியாணர்' என அடைமொழி கொடுக்கப்பட்டது.

34-39:—காவிரிப்பூம்பட்டினம் பொய்கை ஏரி இவைகளை யுடைமை கூறப்படுகின்றது.

மழைநீங்கிய மாவிசும்பின்
35. மதிசேர்ந்த மகவெண்மீன்
உருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை

(இ-ள்.) (34) மழை நீங்கிய மா விசும்பில்-மழைமாசு நீங்கிய பெரிய ஆகாயத்தினிடத்து, (35) மதி சேர்ந்த-சந்திரனைச் சேர்ந்த, மகம் வெள்மீன் - மகமாகிய வெள்ளியமீனினது, (36) உரு கெழு - வடிவு பொருந்திய, திறல்-வலியையுடைய, உயர் கோட்டத்து-உயர்ந்த கரையையும், (37) முருகு அமர்-மணம்பொருந்தின, பூ-மலர்களின், முரண் - (நிறத்தால் தம்முள்) மாறுபட்ட, கிடக்கை-பரப்பினால், (38) வரி-பலநிறத்தை, அணி-கொண்ட, சுடர்-ஒளியையுமுடைய, வான் பொய்கை - பெரியபொய்கையினையும்,—(எ - று.)

விசேடவுரை :—கோட்டத்தையும் சுடரையுமுடைய பொய்கை யென்க. இங்கு, மதி சேர்ந்த மகமீனைப் பொய்கையைச்சேர்ந்த கோட்டத்திற்கு உவமை கூறினார்: மகநாள் முடநுகம்போல்வ தாதலின்,

கிரைக்கு உவமையாயிற்று. "ஏரிவளாவிக்கிடந்ததுபோலு மிளம் பிறையே" எனவும், "தேய்பிறையுருவக்கேணி" எனவும் நீர்நிலைக்குப் பிறைச்சந்திரனை உவமைகூறுப. இனி உயர்கோட்டம் - மதியைச் சேர்ந்த மகவெண்மீனைப் பார்க்கைக்கு இடமாகிய சிறந்த கோயில் என்றுகொண்டு, கோயிலும் பொய்கையும் எனப்பொருளுரைப்பினு மாம்: "நிலாக்கோட்டம்புக்கு" என்று வருஞ் சிலப்பதிகாரத்தால், காவிரிப்பூம்பட்டினத்தில் மதிக்குக் கோயிலிருந்தமை பெறப்படுத லால், இவ்வாறு கூறிய தென்க. அன்றி, கோட்டம்-பொய்கைக்கரை யிலேயுள்ள கோவில்: கோயிலும், பொய்கையும் - மகவெண்மீனும், மதியும் போலுமெனினுமாம்.

39. இருகாமத் திணையேரி

(இ-ள்.) (39) இரு காமத்து-இம்மையிலும் மறுமையிலு முண் டாகிய காமவின்பத்தினைக்கொடுத்தற்கு உரிய, இணை - இணைந்த, ஏரி - ஏரியினையும்,—(எ - று.)

விசேடவுரை:—இருமையின்பத்தினையுந் தரவல்ல ஏரிகளின் பெயர், சோமகுண்டம் சூரியகுண்டம்என்பன: இந்த விவரத்தை 'சோமகுண்டஞ் சூரியகுண்டந் துறைமூழ்கிக், காமவேள்கோட்டந் தொழுதார் கணவரொடு, தாமின்புறுவருலகத்துத்தையலார், போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்" என்ற சிலப்பதிகாரத் தாலும் உணர்க. இதற்கு இன்னும் வேறுவேறுவகையாகவும் நச்சினார்க்கினியர் பொருளுரைத்திருக்கின்றனர்.

40-50:—காவிரிப்பூம்பட்டினம் காப்பினையும் அட்டிலினையும் உடைமை கூறப்படுகின்றது:—

40. புலிப்பொறிப் போர்க்கதவின்
திருத்துஞ்சுந் திண்காப்பின்

பதவுரை:—(40) புலி பொறி - புலியாகிய அடையாளத்தினைக் கொண்ட, போர் கதவின்-(பலகைகள் தம்மிற்) சேர்தலையுடைய கதவினையுடைய, (41) திரு துஞ்சும் திண்காப்பின் - திருமகள் தங்கு கின்ற வலிய மதிலினையும்,—(எ - று.)

விசேடவுரை:—அரசர் தமது அடையாளத்தைக் கோட்டைக் கதவு முதலிய இடங்களிற்பொறித்தல் மரபு ஆதலை "மன்னநம் பொன்னங்கயற்குறி, மாற்றியுத்தரவாயிற்கதவதில், ஏற்றிலச்சினை யிட்டனர்யாரை," "ஏழெயிற் கதவமெறிந்து கைக்கொண்டுநின், போர்வாயுழுவை பொறிக்குமாற்றலை" என்றாற்போன்று வருவன வற்றாலும் அறியலாகும். சோழன்கரிகாலனுக்குப் புலிப்பொறி உரியதென்க. துஞ்சுதல் - தங்குதல்.

புகழ்நிலைஇய மொழிவளர
அறநிலைஇய வகனட்டில்

சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும்

பதவுரை:—(44) சோறு வாக்கிய - சோற்றை வடித்து ஒழுக்கிய, கொழு கஞ்சி-கொழுவிய கஞ்சி, (45) யாறுபோல பரந்து ஒழுகி - ஆறுகள்போல (எங்கும்) பரவிச்சென்று, (அங்ஙனஞ்சோற்றுக் கஞ்சி பரந்தொழுகிய இடம்), (46) ஏறு பொர-இடபங்கள் (தம்மிற்) பொருவதனாலே, (பின்பு), சேறு ஆகி-சேறாய்,—(47) தேர் ஓட துகள் கெழுமி-(பல) தேர்களும் ஓடுவதனால் (அச்சேறு) தூளியாய்ப் பொருந்தி, (49) வேறுபட்ட வினை-வேறுபட்ட தொழில்களையுடைய, ஓவத்து-சித்திரங்களைக்கொண்ட, (50) வெள் கோயில் - வெள்ளிய கோயில்களை, (48) நீறு ஆடிய களிறுபோல (50) மாசு ஊட்டும் - புழுதியை மேலே பூசிக்கொண்ட யானையைப்போல அழுக்கு ஏறப் பண்ணும், (42) புகழ் நிலை இய மொழி-(இம்மையிற்) புகழ்நிலைபெற்ற சொல், வளர-(எங்கும்) பரவாநிற்க,—(43) அறம் நிலை இய -(மறுமையில்) அறப்பயன் நிலைபெறுதற்குக் காரணமான, அகல் அட்டில் - அகன்ற சமையலறைகளையும்,—(எ - று.)

விசேடவுரை:—அட்டிலில் வடிக்கப்படும் கஞ்சி யாறு போலத் தெருக்களில் ஓடும்: ஆங்கு எருதுகள் செருக்குக்கொண்டு ஒன்றோடொன்று போர் புரியும்: அப்போது எருதுகள் துகைத்தலினால் கஞ்சியாற்றைக் கொண்ட தெரு சேறாகி விடும்: அங்கே தேரோடுவதனால் ஈரம்புலர்ந்து துகள் தோன்றும்: அத்துகள் அடுத்து நிற்கும் கோயிலிற்படிய, அக்கோயில் நீறாடியகளிறு போலத்தோன்றுமென்க. (50) மாசூட்டும் (43) அட்டில் என்க. உருத்திரங்கண்ணனார் உவமையணி தன்மைநவிற்சியணி என்ற இவைகளையேயன்றி, உயர்வு நவிற்சியணி படவும் அறச்சாலையை வருணித்திருத்தல் காண்க: இங்ஙனம் பண்டைக்கவிஞர் பாடல்களில் உயர்வுநவிற்சியணி வருதல் அரியதொன்றாகும். கோயில்களில் வெவ்வேறு வகைப்பட்ட சித்திரங்களை யமைத்தல் மரபு. தேரோடிய துகளால் மாசுண்ட வெண்கோயிலுக்கு, நீறாடிய களிறு உவமை: நீறாடுதல், களிற்றுக்கு இயல்பு.

புகழ் நிலை இய மொழி - நிலைத்த புகழ்ச்சொல். அறச்சாலைகளிற் சமைக்கப்படுஞ் சோற்றை வறிஞர்க்கு அளித்தலால், இம்மையிற் புகழும் மறுமையில் அறப்பயனும் விளையுமென்க. நிலை இய - பிறவினைப்பெயரெச்சம். அறநிலை இய என்ற இடத்து 'நிலை இய' என்றபெயரெச்சம், காரணப் பொருளது. வளர நிலை இய அட்டில் என இயையும்.

51—76:—காவிரிப்பூம்பட்டினம் சாலை தவப்பள்ளி களரி புறச்சேரி இவைகளையுடைமை கூறப்படுகின்றது:—

51-52: தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலை

பதவுரை:—(51) *தண் கேணி தகை முற்றத்து* - குளிர்ந்த சிறிய குளங்களை யுள்ளேயடக்கின முற்றத்தினையுடைய, (52) *பகடு எருத்தின்* - பல பெரிய எருதுகளைக்கொண்ட, *பல சாலை*-பலவகைச்சாலைகளையும்,—(எ - று.)

விசேடவுரை:—எருதுகள் பருகுதல் முதலியனசெய்தற்கு முற்றத்தில் கேணி அமைந்துள்ளது. சிறுகுளத்தை 'கேணி' என்பது-அருவாநாட்டுத் திசைச்சொல். பகடு - பெருமை. இனி, பகடுஎன்பதற்கு, எருது என்னும் பொருளும் உள்ளதனால், பகட்டெருது என்ற தொடர் - மீமிசைச்சொல்லாய், பெரிய எருதுகளெனினுமாம். எருத்தின் பல சாலை - எருத்துக்களுக்கு வைக்கோலிடும் பல சாலை யென்பர்.

53. தவப்பள்ளி

பதவுரை :—(53) *தவம் பள்ளி* - தவஞ்செய்யும் அம்மண்பள்ளி பௌத்தப்பள்ளிகளையும்,—(எ - று.)—இவ்விருவகைப் பள்ளிகளும் காவிரிப்பூம்பட்டினத்து உள்ளன என்பது மணிமேகலையாலும் அறியப்படும். பள்ளியென்பது முனிவர்தவச்சாலை, கோயில், சிறியஊர், மக்கள்வாழிடம் முதலிய பலபொருள்களை யுடையது. தவம் = தபஸ்: வடசொல்.

தாழ்காவின்
அவிர்சடை முனிவ ரங்கி வேட்கும்
55. ஆவுதி நறும்புகை முனைஇக் குயில்தம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்
தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்
முதுமரத்த முரண்களரி

பதவுரை:—(53) *தாழ் காவின்* - (ஓங்கிவளராது) தாழவளர்ந்த இளமரக்காவில், (54) *அவிர் சடை முனிவர்* - விளங்குகின்ற சடையினையுடைய இருடிகள், *அங்கி வேட்கும்* - தீயின்கண்ணே ஓமஞ்செய்கின்ற, (55) *ஆவுதி* - (நெய் முதலிய) ஓமஞ் செய்யும் பொருளால் தோன்றுகின்ற, *நறு புகை* - நறுமணமுள்ள புகையை, *முனைஇ* - வெறுத்து, *குயில்* - (அவ்விளமரக்காவில் உறைகிற) குயில்கள், *தம்* (56) *மா இரு பெடையோடு* - கருமையையும் பெருமையையுமுடைய தம் பெட்டைகளுடனே, *இரியல் போகி* - நிலைகெட்டுப்போய், (57) *பூதம் காக்கும்* - பூதங்கள் காவல் செய்கின்ற, *புகல் அரு*-புகுவதற்கு அருமையான, *கடி நகர்* - அச்சந்தருகின்ற காளிகோயிலிலேயுள்ள, (58) *தூது உண் அம் புறவொடு*-கல்லைத் தின்னுகின்ற அழகியபுறுக்களுடனே, *துச்சில்* - (தாம்) ஒதுங்கும் இடமாக, *சேக்கும்* - தங்கு

கின்ற, (59) முதுமரத்த-பழமையான மரத்தினைக்கொண்ட, முரண் - மேடும்பள்ளமுமான, களரி - இடத்தினையும்,—(எ - று.)

விசேடவுரை :—இளமரக்காவில் தங்குங் குயில் ஆங்கு முனிவர் தீயில் ஆவுதி செய்வதனால் ஓம்புகை மிகுதியாகத் தோன்ற, அந்தப்புகையைத் தாங்கமாட்டாது தம்பேடைக ளுடனே எழுந்து தூதுணம்புறவுகள் தங்குவதும் காளிகோயிலி லிருப்பதுமான முதுமரத்தில் தாமும் ஒதுங்குதற்கு உரிய களரி யென்க. (58) சேக்கும் என்பது (59) மரத்த என்பதிலுள்ள மரம் என்பதனோடு இயையும். 'பூதங்காக்கும்' என்று கடி நகர்க்கு அடைமொழி கொடுத்ததனால் 'கடிநகர்' என்பதற்குக் காளி கோயில் என்பது உரைக்கப்பட்டது. பூதம்=பேய்: காளிக்குப் பேய்கள் பரிவாரங்களாகும். தூது - கல். புறுக்கள் பரற்கற்களைத் தின்னு மென்பதை "பொறிவரிப்புறவின் செங்காற்சேவல்,...அரி மணலியவிற் பரல்தேர்ந்துண்டு," "கல்லுண்டு கடியவெம்புங் கானுறை புறவமெல்லாம்" என்பவை முதலியவற்றாலும் அறியலாம்: இங்ஙனம் கற்களையுண்ணும் புறுக்கள் தூதுணம்புறவு என வழங்கப் பெறும். இனி, (55) குயில் தம் (56) பெடையோடு இரியல் போகித் (58) தூதுணம்புறவொடு துச்சிலாகத் தங்குதற்கு இடனான, (57) கடிநகர் - கடிநகரையும் என்று கூட்டிஞருமுளர். (53) தாழ் காவின் என்பதைத் தனியே எடுத்து - தாழ்ந்த காவினையுமுடையது பட்டினம் (218) என்றுஉரைத்தலுமொன்று. நறும்புகைமுனை இ என்பதற்கு-நறுவியபுகையை மேகமென்று கருதி வெறுத்து என்று கருத்து விரிப்பாருமுளர். ஜடா, முனி. அக்நி, ஆஹுதி, பூதம், நகரம் - வடசொற்கள்.

வரிமண லகன்திட்டை
இருங்கிளை யினனொக்கல்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியும்
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரும்
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினும் மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅது
இருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி

பதவுரை :—(60) வரி மணல் அகல் திட்டை - கருநிறமுள்ளமண லின் பரந்த மேட்டிலே, (61) இரு கிளை இனன் ஒக்கல்-பெரியகிளைகு

ரோடு கூடிய ஓரினமாயுள்ள சுற்றத்தினையும், (62) கருந்தொழில் - வலிய தொழிலினையுங் கொண்ட, கலி - செருக்கையுடைய, மாக்கள் - பரதவர், (63) கடல் இறவு இன் சூடு தின்றுஉம் - கடலிலுள்ள இருல் மீன்களின் இனிய சுட்டப்பட்ட தசையினைத் தின்றும், (64) வயல் ஆமை புழுக்கு உண்டுஉம் - வயலிலுள்ள ஆமையைப் புழுக்கின இறைச்சியைத்தின்றும், (65) வறள் அடும்பின் மலர் மலைந்துஉம் - வறண்ட மணலிலேபடர்ந்த அடும்புக்கொடியின் மலரைச்சூடியும், (66) புனல் ஆம்பல் பூ சூடிஉம் - நீரினின்ற ஆம்பற்பூவைப் பறித்துச் சூடியும்,—(67) நீல் நிறம் விசும்பின் - நீலநிறத்தையுடைய ஆகாயத்தே, வலன் ஏர்பு திரிதரும் - வலமாக எழுந்துதிரியும், (68) நாள் மீன் விராய கோள் மீன்போல - நாள்களாகிய மீன்களோடே கலந்த கோள்களாகிய மீன்கள்போல, (69) மலர்தலை மன்றத்து - அகன்ற இடத்தையுடைய ஊர் வெளியிடத்தே, பலருடன் குழீஇ - பலருடன்சேர இருந்து,—(70) கையினும் கலத்தினும் மெய் உற தீண்டி - கையினாலும் போர்ப்படைகளாலும் (பொருது) உடல் (ஒன்றோடொன்று) நன்குபொருந்தத் தீண்டி, (71) பெருஞ் சினத்தால் - மிக்கசினத்துடனே, புறக்கொடாஅது - முதுகுகொடாமல் [பின்வாங்காதிருந்து என்றபடி], (72) இருஞ்செருவின் இகல் மொய்ம்பினோர் - பெரும்போரில் மாறுபடுந்தன்மையையுடைய வலியினராய், (73) கல் எறியும் - கல்லையெறிகின்ற, கவண் - கவணுக்கு, வெரீஇ - அஞ்சி, (74) புள் இரியும் - (தம்மிடத்துவாழும் அன்றில் முதலிய) பறவைகள் அஞ்சிக் கெட்டுப்போகப்பெற்ற, புகர் போந்தை - நிறத்தையுடைய பனையையும், (75) பறழ் பன்றி - குட்டிகளையுடைய பன்றிகளையும், பல் கோழி - பலசாதியாகிய கோழிகளையும், (76) உறை கிணறு - உறைவைத்த கிணறுகளையுங்கொண்ட, புறச்சேரி - இழிகுலத்தாரிருக்கும் இருக்கையினையும்,—(எ - று.)

விசேடவுரை :—இவ்வடிகளால் புறச்சேரியின் தன்மை கூறப்படுகின்றது. மணல்திட்டான இடங்களிலே குடியிருப்பவராய்க் கொடுந்தொழிலையும் மனச்செருக்கையுமுடைய பரதவர் இறைச்சிதின்றும், மலர்களைச்சூடியும், பலருடன் பெருஞ்சினத்தோடு மெய்யுறத்தீண்டி, கையினுங்கலத்தினும் பொருது ஒருவர்க்கொருவர் பின்வாங்காது நின்று அவற்றால் தம்வலியடங்காமையாலே பின்னும் போட்டிபோட்டுக்கொண்டு கவண்கல்லை யெறிய, அக்கவண்கல்லிற்கு அஞ்சி, அன்றில்முதலிய பறவை இரிகின்றபனைமரங்களையும் பன்றிப்பறழையும் கோழியையும் உறைகிணற்றையுங்கொண்டது புறச்சேரி என்க. புறச்சேரியையுடைய (218) பட்டினம் என்க.

கருந்தொழில் - மீனைப்பிடித்துக் கொல்லுதல் நண்டைப் பிடித்துக் கொல்லுதல் போன்ற கொடுந்தொழில். புனலில்தோன்றும் ஆம்பல்போல அன்றி நீரற்ற மணலிற் படருந் தன்மையதாதலால், 'வறளடும்பு' என்றார்: இது அடம்புஎனவும் வழங்கப்படும். நாண்மீன் - அசுவினிமுதலிய நட்சத்திரங்கள்: கோண்மீன் - செவ்வாய் புதன் முதலிய கிரகங்கள். வானத்தில் நாண்மீன் கோண்மீன் முதலிய குழுமுதற்கு, கருந்தொழிற் கலிமாக்கள் பலர் மன்றத்திலே

குழுமுதல் உவமையாம். போந்தை-பனை. அன்றில் தூக்கணங்குருவி என்ற இவை பனைமரத்துவாழ்வனவாதலை "பெண்ணைக், கொழுமடலிழைத்த சிறுகோற்குடம்பைக், கருங்காலன்றில்", "பெண்ணை மீமிசைத்தொடுத்த, தூங்கணங்குரீஇ" என்பவை முதலியவற்றாலும் அறிக. உறைக்கிணறு-அகழ்ந்தநிலத்தில் உறைவைத்து அமைத்த கிணறு; உறை-மண்ணால் வட்டமாக வனைந்து சூளையிற் சுடப்படுவது; குடலையெனவும் வழங்குமென்பர். (69) குழீஇ (73) வெரீஇ - குழுமி, வெருவி என்ற வினையெச்சங்கள் திரிந்து அளபெடுத்ததனால், சொல்லிசையளபெடை.

77 - 105:—காவிரிப்பூம்பட்டினம் பரதவர் பழகுகின்ற பெருந்துறையுடைமை கூறப்படுகின்றது:—

மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்பண்
நிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினால்
மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லாது
உவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானல்
மாமலை யணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கும்
மலியோதத் தொலிகூடல்
தீதுநீங்கக் கடலாடியும்
மாசுபோகப் புனல்படிந்தும்
அலவ னாட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபின் பூமலி பெருந்துறை

பதவுரை:—(77) மேழகம் தகரொடு-ஆட்டுக்கடாவுடனே, சிவல்-கௌதாரிப்பறவைகளும், விளையாட - விளையாடாநிற்கையில்,—

(78) கிடுகு நிரைத்து-கேடகத்தை வரிசையாக அமைத்து, எஃகு ஊன்றி-(அந்தக் கேடகத்திலே) வேற்படைகளை யூன்றவைத்து (இவ்வாறு), (79) நடுகல்லின் அரண் போல - நடுகல்தெய்வத்திற்கு அரண் அமைப்பதுபோல,—(80) நெடுந் தூண்டிலில் காழ் சேர்த்திய-நெடியதூண்டில்களில் காம்புகள் சார்த்திவைத்த, (81) குறுங் கூரை குடி - குறிய இறப்பையுடைய குடியிருக்குமிடத்திற்கு, நாப்பண்-நடுவில், (82) நிலவு அடைந்த இருள்போல - நிலவைச்சேர்ந்த இருளைப்போல, (83) வலை உணங்கும் மணல் - வலை கிடந்து உலரும் மணலையுடைய, முன்றில் - முன்றிலிலே, (84) வீழ் தாழை தாள் தாழ்ந்த-விழுதையுடைய தாழையின் அடியிடத்தே நின்ற, (85) வெண் கூதாளத்து-வெண்டாளியின், தண் பூ - குளிர்ந்த பூவினுல் தொடுத்த, கோதையர் - மாலையையணிந்தவராய்,—(86) சினை சுறவின் கோடு நட்டு-சினையையுடைய சுறுமீனின் கொம்பை நட்டு, (87) மனை - தங்குமிடமாக, சேர்த்திய - (அந்தக்கொம்பிற்) சேர்க்கப்பெற்ற [ஆவாகனஞ்செய்யப்பெற்ற], வல் அணங்கினுல் - வலிய தெய்வங்காரணமாக, (88) மடல் தாழை மலர் மலைந்துஉம் - மடலையுடைய தாழையினது மலரைச் சூடியும், (89) பிணர் பெண்ணை பிழி மாந்திஉம் - சருச்சரையையுடைய பனைமரத்தின் கள்ளையுண்டும், (90) புல் தலை இரு பரதவர் - சிவந்த தலையினையுடைய பெரிய பரதவர்—(92) பாய் இரு பனி கடல் வேட்டம் செல்லாது - பரந்த கருமையையுடைய குளிர்ந்தகடலிலே மீன்பிடித்தற்குப் போகாது, (93) மடிந்து - (அத்தொழிலில்) ஊக்கங்குன்றி, (91) பைந் தழை மா மகளிரொடு - பசிய தழையினையுடுத்த கரிய மனைவிமாருடனே, (93) உவவு - உவாநாளிலே, உண்டு - (தாம் விரும்பியவற்றை) உண்டு, ஆடிஉம் - விளையாடியும்,—(பின்பு), (94) புலவு மணல் - புலால்நாற்றத்தையுடைய மணலையுடைய, பூ கானல் - மலர்களையுடைய கடற்கரைச் சோலையையடுத்துள்ள, (95) மா மலை அணைந்த கொண்மூ போலஉம் - கரியமலையைச்சேர்ந்த (செவ்) வானம் போலவும், (96) தாய் முலை தழுவிய குழவி போலஉம்-தாயின் முலையைத் தழுவிய பிள்ளையைப் போலவும், (97) தேறு நீர் - தெளிந்த நீரையுடைய கடலின், புணரியொடு - அலையுடனே, யாறு - காவிரிநதி, தலைமணக்கும் - சேரப்பெற்ற, (98) மலி ஓதத்து - மிக்கநீர்ப்பெருக்கினுல், ஒலி-ஒலிக்கின்ற, கூடல் - சங்கமத் துறையிலே (99) தீது நீங்க கடல் ஆடிஉம் - (தமது) தீவினை போகச் சமுத்திரத்திலே மூழ்கியும்,—(100) மாசு போக புனல் படிந்து உம் - உப்புபோக நல்ல நீரிலே குளித்தும், (101) அலவன் ஆட்டிஉம் - ஞெண்டுகளை யாட்டியும்,—உரவு திரை உழக்கிஉம்-பரக்கின்ற திரையிலே விளையாடியும்,—(102) பாவை சூழ்ந்துஉம் - (பஞ்சாய்க் கோரையாற்) பாவைகளைப் பண்ணியும், பல் பொறி மருண்டுஉம் - ஐம்பொறிகளால் நுகரும் பொருள்களை நுகர்ந்துமயங்கியும், (103) அகலா காதலொடு பகல் விளையாடி-நீங்காத விருப்பத்துடனே பகற்பொழுதெல்லாம் விளையாடுதற்குக் காரணமாகி, (இங்ஙனம்) (104) பெறற்குஅரு தொல் சீர் - பெறுதற்கு அரிய பழமையான சிறப்பையுடைய, துறக்கம் ஏய்க்கும் - சுவர்க்கத்துடனே ஒத்திருக்கின்ற,

(105) பொய்யா மரபின் - நீர்வற்றாத முறைமையினையுடைய, பூ மலி - பொலிவு மிக்க, பெருந்துறை - பெருநீர்த்துறையையும்,—(எ-று.)—கானலை யடுத்துள்ள (94) கூடல் (98) என்க. கூடல் - காவிரி கடலொடு கூடும் இடமென்ற பொருளில் வந்தது.

விசேடவுரை:—(77) பரதவர் குடியிருக்குமிடத்தின் முன்றிலில் சிலர் ஆட்டுக்கிடாயோடு ஆட்டுக்கிடாயையும் சிவலோடு சிவலையும் பொரவிட்டு வேடிக்கை காணுதலால், அவை விளையாடு மென்க. இங்ஙனம் ஆடு போர்புரிந்து பெறும் வெற்றி - தகர்வென்றி யென்றும், சிவல்கள் பொருது பெறும் வெற்றி - சிவல்வென்றி யென்றும் கூறப்படும். மேழகத்தகர் - துருவாடு என்பர். மேழகம், ஏழகம் - ஒரு பொருளன: மேழகம் - ஆட்டுப்பொது : தகர் - கடா: ஏழகத்தகர் (141) என்ற இடத்தும் இப்படியே.

(78-81) நடுகல் - போரிற்புறங்கொடாது இறந்து வீரசுவர்க்கம் பெற்ற வீரனுடைய உருவத்தைச் செதுக்கி நிலத்தில்ஊன்றிய கல்: இங்ஙனம் இறந்த வீரனுக்குச் சிறப்புச்செய்தல், பண்டைக்காலத்து வழக்கு. அங்ஙனமுள்ள நடுகல்லிற்கு அரணுகக் கேடகத்தை வரிசையாக இட்டு வேலை அக்கேடகத்தி லூன்றுதலும் முற்கால வழக்கு. எஃகுஊன்றிய கிடுகு, தூண்டிலிற் சார்த்திய காழ்க்கு உவமை.

(82, 83) நிலவு மணலுக்கும், இருள் வலைக்கும் உவமை. மணலில் உணங்குமாறுபரப்பிவைத்துள்ள வலை, நிலவையடைந்த இருளைப் போலும்.

(83) முன்றில் என்பது (84) தாழையென்பதனோடேனும், (86) நட்டு என்பதனோடேனும் இயைதற்கு உரியது.

(85-90) பரதவர் பூங்கோதையராய்ச் சுறவின்கோட்டைநட்டு அதனையே யிருப்பிடமாக ஆவாகனஞ்செய்த கடவுளுக்குத் தாழை மலரை யணிந்து கள்ளை நிவேதித்துப் பிறகு அந்தக்கடவுளின் நைவேத்தியப் பொருளான தாழையைச் சூடிக் கள்ளையும் பருகுவரென்க. சுறாமீனின் கொம்பை நட்டு அதில் கடல்தெய்வத்தை ஆவாகனஞ்செய்து வழிபடுதல் நெய்தல் நிலத்தார்க்கு மரபு: "நெய்தல் நிலத்து நுளையர்க்கு வலைவளந் தப்பின் அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக்கோடு நாட்டிப் பரவுக்கடன்கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும்" என்று நச்சினார்க்கினியர் பொருளதிகாரத்து உரையிற் கூறியிருத்தலுங் காண்க. பூச்சூடுதற்குஉரிய தாழை வீழ்த்தாழை யெனப்படுதற்கு ஏற்ப, தென்னை விழுதில்தாழை யெனப்படும்.

(91-94) தழை-தளிர்கள் தழைகள் மலர்கள் இவற்றாலாகிய உடை விசேடம்: பண்டைக்காலத்தில் தழையென்னும் உடையை மகளிர் அணிந்துவந்தனரென்பது, நூல்களாற்பெறப்படும்: தழை விருப்புரைத்தல் என்று ஒருதுறை திருக்கோவையாரில் வந்திருத்தலுங்காண்க. நிலவையுடைய உவாக்காலங்களில் சோம்பல் கொண்டு கடலின்மீன்பிடித்தற்குச் செல்லாது பரதவர் மனைவிமாருடனே உண்டு ஆடுவரென்க. கடற்கரையிலிருத்தலால்,

சோலையை, 'புலவுமணற் பூங்கானல்' என்றார். உவா என்பது - பூர்ணிமை அமாவாசை யென்ற இரண்டிற்கும் பொதுவாதலால், தீதுநீங்கக்கட லாடியும் என்று வருதற்கு ஏற்ப, உவா - அமாவாசை யாகிய புண்ணிய நாள் எனினுமாம்.

(95-97) கடலைச்சாரும் காவிரியாற்றுக்கு, மலைதழுவிய கொண்மூ வையும், தாய்முலைதழுவிய குழவியையும் உவமை கூறினார். தெளிந்த கடல்நீரிலே செந்நிறமுள்ள காவிரிநீர் சேர்வதனால் 'கொண்மூ' என்பதற்கு - செக்கர்வானம் எனப்பட்டது. தாய்முலை தழுவிய குழவி ஒன்றுபட்டிருத்தலில் உவமை.

(98-105) சங்கமத்துறையில் நீராடுவதனால் தீவினையகலு மென்பது, நூற்கொள்கை. சாய்க்கோரையால் பாவைசெய்தலை "பைஞ் சாய்ப்பாவையீன்றனன்யானே," "பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவை தந்தனைத்தற்கோ' என்பவை முதலிய இடங்களிலும் காண்க. சங்கமத்துறை, இங்ஙனம் பெருமகிழ்ச்சியோடு பொழுது போக்கப் பரதவர்க்கு உதவுதலால் துறக்கமேய்க்கும்.

106 - 141:—காவிரிப்பூம்பட்டினம் முன்றிலையுடைமை கூறப் படுகின்றது:—

துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்து
மட்டுநீக்கி மதுமகிழ்ந்து
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்
மகளிர் கோதை மைந்தர் மலையவும்
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும்
பாட லோர்த்தும் நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்தும்
கண்ணடைஇய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டுந்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவின்
நல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகறொறு மசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்

நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
ஏழகத் தகரோ டுகளு முன்றில்

பதவுரை:—(107) பட்டு நீக்கி துகில் உடுத்துஉம்-பட்டு உடுத்தவற்றை நீக்கி(ப் புணர்ச்சிக்காலத்துக்கு நொய்யவாகிய) வெள்ளுடையை யுடுத்தும், (108) மட்டு நீக்கி மது மகிழ்ந்துஉம் - கள்ளுண்டலைக் கைவிட்டுக் காமவின்பச்சுவையை நுகர்ந்தும், (106) துணை புணர்ந்த மடம் மங்கையர்-கணவரைக் கூடின மடப்பத்தையுடைய மங்கைமார், (கூடியபின்), (109) மைந்தர் கண்ணி மகளிர் சூடஉம் - கணவர் சூடிய மாலையை (த்தமதென்று) மகளிர் சூடிக்கொள்ளவும், (110) மகளிர்கோதை மைந்தர் மலையஉம் - மகளிர் சூடிய மாலையை (த்தமதென்று) ஆடவர் சூடிக்கொள்ளவும்,—(அக்காலை), (111) நெடுகால் மாடத்து ஒள் எரி நோக்கி-நீண்ட தூண்களையுடைய மாடத்தே ஒள்ளியவாகிய தீபச்சுவாலையைநோக்கி, (112) கொடுந் திமில் பரதவர் குரூஉ சுடர் எண்ணஉம் - வளைந்த கட்டுமரத்திலேயேறிச் சென்ற பரதவர் ஒளியுள்ள அந்தச்சுடரை எண்ணுகிறகவும், (மற்றும் அந் நகரத்திலுள்ளார்), (113) பாடல் ஓர்த்துஉம் - பாட்டைச் செவி தாழ்த்துக் கேட்டும், நாடகம் நயந்துஉம்-கூத்துக்களை விரும்பிப் பார்த்தும், (114) வெள் நிலவின் பயன் துய்த்துஉம் - வெள்ளிய நிலவிற்பெறுதற்கு உரிய இன்பப்பயனை யனுபவித்தும், (115) கண் அடைஇய-கண் துயின்ற, கடைக் கங்குலான் - கங்குலின் கடையாமத்திலே,—(116) மாஅ காவிரி-பெரிய காவிரிநதியினுடைய,மணம் கூட்டும்-(பலவிடங்களிலுமுள்ள மலர்களின்) மணங்களைக் கொண்டு வந்து திரட்டுகின்ற, (117) தூஉ எக்கர் - தூய [வெண்ணிறமான] இடுமணலிலே, துயில் மடிந்து-உறக்கமயக்கத்தாலே சோர்ந்திருந்து, (118) வால் இணர் மடல் தாழை-வெள்ளிய பூங்கொத்துக்களையும் மடலினையுமுடைய தாழையினைக்கொண்ட, (119) வேலை ஆழி வியன் தெருவின் - கரையையுடைய கடலருகிலிருக்கும் அகன்ற (பண்டசாலைத்) தெருவில், (120) நல்இறைவன் பொருள்காக்கும் - நல்ல அரசனுக்கு வரவேண்டிய சுங்கப்பொருளை (ப் பிறர் கொள்ளாமல்) பாதுகாக்கின்ற, (121) தொல் இசை தொழில் மாக்கள்-பழமையான புகழையுடைய சுங்கங்கொள்வோர்,— (122) காய் சினத்த கதிர் செல்வன்(123) தேர் பூண்ட மாஅ போல-எரிகின்ற சினத்தையுடைய சூரியனது தேரிற்பூட்டிய குதிரைகளைப்போல, (124) வைகல்

தொறும் - தினந்தோறும் [எந்நாளிலும்], அசைவு இன்றி-இளைப்பு இல்லாமல், (125) உல்குசெய - சுங்கங் கொள்ளாநிற்க,—குறை படாது - குறைதலின்றி, (126) வான் முகந்த நீர் மலைபொழியவும் (127) மலைபொழிந்த நீர் கடல் பரப்பவும் (128) மாரி பெய்யும் பருவம் போல - மேகம் (தான்) முகந்த நீரை மலையிடத்தே சொரிதற்காகவும் மலையிற்சொரிந்த நீரை மீண்டு கடலிலே பரப்புதற்காகவும் மாரிக் காலத்தே பெய்கின்ற செயல் போல, (129) நீரில் நின்று நிலத்து ஏற்றவும் - (மரக்கலத்திலே வேற்றுநாடுகளினின்று) கடல்வழி யாகக் கொண்டு வரப்பட்ட பொருள்களை அங்கிருந்து நிலத்திலே ஏற்றும்படியும் [இறக்குமதி செய்யவும்], (130) நிலத்தில் நின்று நீர் பரப்பவும் - உள்நாடுகளிலிருந்து (ஏற்றுமதி செய்யும்படி வந்து கடற்கரையிலிருப்பவைகளை) நீரில் [மரக்கலத்தில்] ஏற்றுமதி செய்யவும், (131) அளந்து அறியா பல பண்டம், (132) வரம்பு அறியாமை வந்து ஈண்டி-அளவிட்டு அறியமுடியாத பல்வகைப் பண்டம் எல்லையறிய முடியாதபடி வந்து திரள, (133) அரு கடி பெருங்காப்பின் - அரிய காவலையுடைய அகன்ற சாலையில் [சுங்கச் சாவடியில்], (134) வல் அணங்கினோன் - வலிய வருத்துந் தொழிலை யுடையோன் [காவற்காரன்], வலி உடை (135) புலி பொறித்து - வலியையுடைய (சோழ மன்னரின் இலாஞ்சனையாகிய) புலியை அடையாளமாக இட்டு, புறம் போக்கி - (பின்பு அவற்றை) வெளியே போக்கினமையால், (136) மதி நிறைந்த மலி பண்டம்-மதித்தற் றொழிற்குக் குறைவற்ற (அந்த) மிக்க பண்டங்களும், (137) பொதி-பொதிந்த, மூடை - மூட்டைகளாகிய, போர் - போரிலே, ஏறி—, (138) மழை ஆடு சிமையம் மால் வரை கவாஅன்-மழை யுலாவுஞ் சிக ரத்தையுடைய பெரிய மூங்கிலையும் பக்கமலையினையுமுடைய, (139) வரை-மலையிடத்தே, ஆடு-செல்லுகின்ற, வருடை - வருடை மானின், தோற்றம்போல - தோற்றரவுபோல, (140) கூர் உகிர் ஞமலி கொடு தாள் ஏற்றை-கூரிய நகத்தையுடைய நாயின் வளைந்த காலையுடைய ஏருனவை, (141) ஏழகம் தகரோடு - ஆட்டுக்கடா வோடு, உகளும்-குதிக்கப்பெற்ற, முன்றில் - (பண்டசாலை) முற்றத் தினையும்,—(எ - று.)

விசேடவுரை :—பண்டசாலை முற்றத்தினைக் கூற விரும்பிய ஆசிரியர், 106-115 அடிகளாற் கடைக்கங்குலின் தன்மையைக் கூறி, 116-125 அடிகளால் அந்தக் கடைக்கங்குலிலும் சுங்கங் கொள்வோர் உறக்கத்தினுற் சோர்வு உண்டாகவும் சூரியன்குதிரை போல நாடோறும் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கட்குச் சுங்கப்பொருளை வசூலிப்பதிற் சோர்வு கொள்ளாமல் சுங்கம் வாங்குவதையும் கூறி,பின் பதினுறு அடிகளால் ஏற்றுமதி யிறக்குமதிச் சரக்குகளுக்குக் காரி யக்காரர் அரசசின்னமான புலிப்பொறியை யிட, அங்ஙனம் பொறி யிட்ட சரக்குகள்பொதிந்த மூட்டைகளின்மீது ஞமலியேற்ருேடு ஏழகத்தகரும் ஏறி விளையாடப் பெற்றது, பண்டசாலை முன்றிலென் கிருர். ஞமலி - நாய். ஏழகத்தகர் - ஆட்டுக்கிடாய்; ஒருபொருட்பன் மொழி யென்பர் ஒருசாரார். ஏற்றை - ஆண்பெயர் : " ஆற்றலொடு

புணர்ந்த ஆண்பாற் கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென் மொழிப'' என்பது, தொல்காப்பியம்: ஏறு, ஏற்றை இரண்டும் வெவ் வேறு பதம் என்பது தொல்காப்பியனார் கொள்கை.

(108) மட்டு என்பது சாதாரணமான கள்ளை யென்றும், மது என்பது - காமத்தை வளர்ப்பதற்கு உரிய காமபானத்தை யென்றும் உரை கூறுவதும் உண்டு. பானம் - வீரபானம் காமபானம் என்று இருவகைப்படுமென்றும், வீரபானம் - வீரத்தை வளர்க்குமாறு அதற்கு ஏற்பப் பருகுவது என்றும், காமபானம் - காமவின்பத்தை நுகருமாறு அதற்குஏற்பப் பருகுவது என்றும் கூறுவர்.

(111-112) கடலில் மீனைப் பிடித்தற்குச் சென்ற பரதவர் மீண்டு கரை நோக்கி வருகையில் மைந்தரும் மகளிரும் காமவின்பந் துய்க்கும் மாடங்களில் எரியும் விளக்குகள் சிலவே தோன்றுவதால் அவை அவர்களால் எண்ணும்படியாகின்றன வென்க.

சூடவும் (109), மலையவும்(110), எண்ணவும்(112),கண்ணடைஇய கங்குலான் (115) என்க. கங்குலான் - கங்குலில்: உருபுமயக்கம். கங்குலான் (115) மடிந்து (117) தெருவின் (119) பொருள்காக்கும் (120) மாக்கள் (121) என்க.

(117 - 125) எக்கர் - ஆற்றுநீர் கொணர்ந்து திரட்டிய மணல். வேலை ஆழி என்ற சொற்கள் விகாரத்தால் ஐ கெட்டு, 'வேலாழி' என வந்தன. இனி, வேலா ஆழி என்ற இரண்டுசொற்கள் வட மொழித் தீர்க்கசந்திபோல வந்தன வென்பாரும், 'ஆழி' என்ற சொல்லின் முதலெழுத்தோ 'வேலா' என்ற சொல்லின் ஈற்றெழுத் தோ, தொக்கு வந்த தென்பாருமுளர். வேலா - கடற்கரையென்ற பொருளுள்ள வடசொல். உல்கு - சுங்கம்.

(126 - 135) வான் முகந்த நீர் மலைப் பொழிதல்-நீரில் நின்றவை நிலத்தேறுதற்கும், மலைப்பொழிந்த நீர் கடற்பரப்புதல்-நிலத்தினின் றவை நீர்ப்பரப்புதற்கும் உவமையாம். அருங்கடிப் பெருங்காப்பு என் பது-சுங்கச்சாவடியை. சுங்கச்சாவடியில் ஏற்றுமதிச் சரக்குகளுக்கும் இறக்குமதிச் சரக்குகளுக்கும் புலிப்பொறியைச் சாவடிப்பணியாளர் பொறிப்பரென்க. உடல் வலியோடு மனவலியையு முடையராகிச் சுங்கம் கொடாமலே ஏற்றவும் இறக்கவும் முயல்வார்க்கு அச்சத்தை விளைத்தலால், அரசனுடைய புலிப்பொறியைப் பொறிக்கும் பணி யாளனை 'வலியுடை வல்லணங்கினோன்' என்றுருமாம்: வல்அணங் கின் நோன் எனப்பிரித்து - (தான் வலியுடைமையால் வீணாக) மிக வருத்தும் தன்மையமைந்த வலிய புலிப்பொறிஎன்று புலிப்பொறிக்கு அடையாக்கிக் கூறுவாருமுளர்.

(136-141) மிக்கபண்டங்கள் ஏற்றப்பட்டும் இறக்கப்பட்டும் உள்ளவற்றைப் புலிப்பொறியடையாளமிட்டுத் தனித்தனியேபெரும் போர்போல் அடுக்கிவைத்திருக்க, அங்ஙனம் அடுக்கிவைக்கப்பட்ட போர்போன்ற மூட்டைகளின்மீது ஞமலியேற்றையும் ஏழகத் தகரும் உகளும்: அங்ஙன் உகளுவதற்கு வரையாடுவருண்டைய

உவமை கூறினர். பெரும்போர்கள் மலைக்கும், அப்போர்களின்மீது உகளும் ஞமலியேறு ஏழகங்கள் - வருடைக்கும் முறையே உவமையாக அமைவது காண்க. வருடை என்பது - எட்டுக்காலையுடையதும் மலையில் வாழ்வதுமான ஒருவிலங்கு என்ப. இது, முதுகிற்காலுடைய தென்றும் கூறப்படும். மூடை - மூட்டை. (132) ஈண்டி = ஈண்ட: எச்சத்திரிபு.

மாக்கள் (121) உல்குசெய (125) ஏற்றவும் (129) பரப்பவும் (130) பலபண்டம் (131) வந்தீண்டி [வந்தீண்ட], (132) வல்லணங்கினோன் (134) புலிபொறித்துப் புறம்போக்கி [போக்குதலாலே] (135) நிறைந்த மலிபண்டம் (136) பொதி(ந்த) மூட்டைப் போரில்ஏறி (137) ஞமலியேற்றை (140) தகரோடு உகளும் முன்றில் (141) என்க.

142 - 158 :—காவிரிப்பூம்பட்டினம் ஆவணத்தையுடைமை கூறப்படுகின்றது:—

குறுந்தொடை நெடும்படிக்காற்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயும் உயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழைப் பகட்டல்குல்
தூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மானோக்கின்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
ஓங்குவரை மருங்கின் நுண்தா துறைக்கும்
காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவரு வியலாவணத்து

பதவுரை: —(142) குறுந் தொடை - குறிய [அணுகின] படிகளையுடைய, நெடும் படிக்கால்-நெடிய ஏணிகள் சார்த்தின, (143) கொடுந் திண்ணை-வளைந்த சுற்றுத்திண்ணைகளையும், பல் தகைப்பின் - பல கட்டுக்களையும், (144) புழை-சிறுவாயில்களையும், வாயில்-பெரிய வாயில்களையும், போகு இடைகழி - பெரிய இடைகழிகளையுமுடைய, (145) மழை தோயும் உயர் மாடத்து - மேகங்கள் படிகின்ற உயர்ந்த மாடங்களிலே, (151) வளி நுழையும் வாய்-தென்றற்காற்று நுழையும் இடமாகியசாளரத்தினை,—(146) சே அடி - சிவந்த பாதங்களையும், செறி குறங்கின் - நெருங்கின துடைகளையும், (147) பசு இழை - பசும்பொன்னாற் செய்த அணிகலங்களையும், பகடு அல்குல்-பெரிய

அல்குலினையும், (148) தூசு உடை - தூசு எனப்படுகிற நுண்ணிய ஆடையினையும், துகிர் மேனி-பவளம்போன்ற நிறத்தினையும், (149) மயில் இயல்-மயிலினது தோற்றத்தினையும், மான் நோக்கின் - மான் போலும் பார்வையினையும், (150) கிளி மழலை - கிளிபோலும்மழலை மொழியினையும், மெல் சாயலோர் - மெல்லிய சாயலினையுமுடைய மகளிர், (151) பொருந்தி-சேர்ந்திருந்து, (152) ஓங்கு வரை மருங்கின்-உயர்ந்த மலைப்பக்கத்திலே, நுண் தாது உறைக்கும்-நுண்ணிய மகரந்தப்பொடிகள் சிறுசிறுதுளியாகச் சிந்தப்பெற்ற, (153) காந்தள் அம் துடுப்பின் கவி குலை - செங்காந்தளினது அழகியகணுக்களிடத்துக் கவிந்து [ஒன்றோடொன்றுசேர்ந்து] தோன்றுகின்ற பூங் குலையை, அன்ன-ஒத்த, (154) தொடி செறி முன்கை - தொடி நெருங்கிய முன்னங்கையை, கூப்பி - குவியாநிற்க, செவ்வேள் (155) வெறி ஆடு மகளிரொடு செறிய-செந்நிறமுள்ள முருகப்பிரானுக்கு வெறியாட்டெடுக்கும் மகளிர்க்குப் பொருந்த, தாஅய்-பரந்து, (156) குழல் அகவ-புல்லாங்குழல் இசையையுண்டாக்கவும், யாழ்முரல-யாழ் வாசிக்கவும், (157) முழவு அதிர - முழவுமுழங்கவும், முரசு இயம்ப-முரசு ஒலிக்கவும், (158) விழவு அறு - திருநாள் நீங்காத, வியல் ஆவணத்து - பெரிய அங்காடித்தெருவையும்,—(எ - று.)

விசேடவுரை :—மாடங்களிலுறையும் மகளிர் சாளரவாயிலில் வந்துபொருந்திக் கை கூப்புமாறு சிலமகளிர் வெறியாடுகையில், அவ்வெறியாட்டு மகளிர்க்கு ஏற்பக் குழல்முதலியனஒலிக்கப்பெற்று விழாநீங்காது நிற்கும்ஆவணம் என்க.

மகளிர் வசிக்கும் மாடங்கள், சுற்றுத்திண்ணைகள் பலகட்டுக்கள் சிறுவாசல்பெருவாசல்கள் இடைகழிகள் இவற்றையுடையனவாய், மழைதோயுமாறு ஓங்கிநிற்குமென்றார்: இடைகழியென்பது - இக்காலத்து ஒருசாராரால் 'ரேழி' என்றும், மற்றொரு சாராரால் 'நடை' என்றும் வழங்கப்படுகின்றது. படிக்கால்-ஏணி: படுகால் எனவும் வழங்கும். படிக்கால் சார்த்தியது திண்ணையென்று, திண்ணையை விசேடித்துக் கூறினர். ஏணிகொண்டு ஏறுமாறு திண்ணை யமைத்தல், அக்காலவழக்கம்போலும். பல்+தகைப்பு= பஃறகைப்பு: தனிக்குறிலைச் சேர்ந்த லகரம் தகரம் வர ஆய்தமாகவும், லகரத்துப் பின் தகரம் றகரமாகவும் திரிந்தன.

(146-158) 146 முதல் 150 வரையில் மகளிரின் வருணனை. "பவழப் பாவைபரிசெனத்திகழுமேனி" என்ப ஆதலின், 'துகிர் மேனி' என்றது. 'வரைமருங்கின் நுண்தாது உறைக்கும் (152)' என்பது காந்தளுக்கு அடைமொழி. குவிந்த கை, காந்தளின்முகை இரண்டு சேர்ந்ததையொக்கு மென்க. தாது-தேன் என்று உரைத்தலும் உண்டு. செறிதொடி என்பது, கைக்கு இயற்கையடைமொழி: உவமைக்குஏற்ப வந்ததன்று. செவ்வேள் எனவே, பசுநிறமுள்ள காமவேளை விலக்கி, முருகவேளைக் காட்டிற்று. ஆவணம்= ஆபணம்.

156-157 அடிகளில், "குழல்வழி நின்றதியாழே யாழ்வழித், தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப், பின்வழிநின்றது முழவே" என்ற சிலப்பதிகாரம் காணத்தக்கது.

இனி, 193 - வரையில் காவிரிப்பூம்பட்டினமாகிய நகரத்தி னெல்லையி னுட்பட்ட மறுகினை வருணிக்கத்தொடங்கி, 159 முதல் 183 வரையில் அந்நகரவரைப்பு பலவகைக்கொடிகளைக் கொண் டிருத்தலைக் கூறுகின்றார்:—

மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்

பதவுரை:—(159) மை அறு சிறப்பின்-குற்றமற்ற சிறப்பை யுடைய, தெய்வம் சேர்த்திய-தெய்வத்தைப்பிரதிஷ்டை செய்துள்ள, (160) மலர் அணி வாயில் - மலர்களால் அலங்கரிக்கப்பெற்றுள்ள (கோயில்களின்) வாயில்களையடுத்து, பலர் தொழு-(அடியார்) பலரும் தொழுமாறு நாட்டியுள்ள, கொடிஉம் - (பிரதிஷ்டைசெய்துள்ள கடவுளுக்கு) ஏற்ற துவசமும்,—(எ-று.)

விசேடவுரை:—சிவன்கோயில் விட்டுணுகோயில் கந்தசாமி கோயில்முதலிய கோயில்களிலே கோபுரவாயிலையடுத்துத் தெய் வத்தைஆவாகனஞ் செய்த துவசத்தம்பம் அமைந்திருத்தலும், ஆங்கு அடியவர்கள் கீழ்வீழ்ந்து கும்பிட்டுச் செல்லுதலும், கருதுதற்குஉரியன. மைஅறு சிறப்பு - பிறப்பைப்போக்கவல்ல சிறப்பு என்று கருத்து விரிப்பாருமுளர்.

வருபுனல் தந்த வெண்மணல் கான்யாற்று
உருகெழு கரும்பி னொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கின்
காழூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற்கொடியும்

பதவுரை :—(161) வரு புனல் தந்த வெள் மணல் கான் யாறு - வருகின்ற நீரால் திரட்டப்பெற்ற வெள்ளியமணலையுடைய காட்டாற் றுக்கரையில் நின்ற, (162) உரு கெழு கரும்பின் ஒள் பூ போல- அழகு பொருந்தின கரும்பினது ஒள்ளிய பூவையொப்ப, (163) கூழ் உடை - உணவுப்பொருள்களையுடைய, கொழு மஞ்சிகை-கொழுவிய பேழைகளின்மேலே, (164) தாழ் உடை-தாழ்ப்பாளையுடைய [தாழ்ப் பாளிட்டுப் போற்றின], தண் பணியத்து-குளிர்ந்த பலபண்டங்களின் மேலே, (165) வால் அரிசி பலி சிதறி - வெள்ளிய அரிசியைப் பூசை யாகத்தூவி, (166) பாகு உகுத்த பசு மெழுக்கின் - பாகு போலக் காய்ச்சி வார்த்த பசியமெழுக்கைப்பூசிய, (167) காழ் - கோலை, ஊன் றிய-நட்டு வைத்த, கவி - கவிந்த, கிடுகின் (168) மேல்-சட்டத்தின்

மேலே, ஊன்றிய - பதியவைத்த, துகில் கொடிஉம் - வெள்ளிய பட்டாடைக் கொடியும்,—(எ - று.)

விசேடவுரை :—கரும்பினெண்பூப்போல (162) ஊன்றிய துகிற் கொடி (168) என்க. உணவுப்பொருள்களை மஞ்சிகையில்வைத்துத் தாழிட்டு, சட்டத்தை நாட்டி அந்தச் சட்டத்திற் கோலையூன்றித் துகிற்கொடி நாட்டியுள்ளன ரென்க. கொடி நடும்போது வாலரிசிப் பலிகளைச் சிதறினர்: சிதறி (165) ஊன்றிய (168) என இயையும். கடைத்தெருவின் இரண்டுபுறத்துக்கு யாற்றங்கரையும், கோலி லெடுத்த கொடிக்குக் கருப்பம்பூவும் உவமை. கான்யாறு-மணமுள்ள யாறு எனினுமாம். பணியம் - பண்ணப்படும் பணியாரம்.

பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்

பதவுரை :—(169) பல் கேள்வி - பலவாகிய கேள்விகளையுடைய, துறை போகிய - கல்வித்துறையாகிய நூல்களின் திரளை முற்றக் கற்ற, (170) தொல் ஆணை - பெரிய ஆக்கினையையுடைய, நல் ஆசிரியர்—, (171) உறழ் குறித்து எடுத்த - வாதுசெய்யக்கருதிக் கட்டின, உரு கெழு - அச்சம் பொருந்தின, கொடியும்,—,—(எ-று.)

விசேடவுரை :—கேள்வியறிவோடு கல்வித்துறையில்வல்ல பேரறிவாளர் 'இன்னது இத்தகையதுதான்' என்று அறுதியிட்டுக் கூறி அன்னது அற்றன்றுஎன்று மாறுபட்டாரைத் தாம் எதிர்க்க வல்லோம் என்பது தோன்றக் கொடிகட்டிக்கொண்டுள்ளாரென்க. தொல்ஆணை - தொன்றுதொட்டுக்கூறும் உறுதிமொழி: தொன்று தொட்டுப் பிறரையேவிக் கொள்ளும் உரிமை யென்பாரு முளர். அங்ஙனம் அவரெடுத்தகொடி, நிரம்பிய அறிவில்லார்க்கு அவர்முன் வாய்திறக்கவும் கூசுமாறு அச்சம் தருவ தாதலின் 'உருகெழுகொடி' என்றது.

வெளிலிளக்குங் களிறுபோலத்
தீம்புகார்த் திரைமுன்றுறைத்
தூங்குநாவாய்த் துவன்றிருக்கை
மிசைக்கூம்பின் நசைக்கொடியும்

பதவுரை :—(173) தீம் புகார் - (கண்ணுக்கு) இனிய புகாரி னிடத்து, திரை - அலையினையுடைய, முன்துறை - துறைமுன்னே, (174) துவன்று இருக்கை - நிறைந்த இருப்பினையுடையதும், (172) வெளில் இளக்கும் களிறு போல - (அசையாத) கம்பத்தினை அசைக் கும் யானைபோல நின்று, (174) தூங்கு - அசைகின்றதுமான, நாவாய் - மரக்கலத்தினுடைய, (175) கூம்பின்மிசை - பாய்மரத்தின் மேலே கட்டிய, நசை கொடிஉம்-விரும்புதலையுடைய கொடிகளும்,—

விசேடவுரை :—புகார்த்துறையில் நங்கூரத்திற்கட்டப்பட்டு அசைந்துநிற்கும் நாவாய்க்கு, வெளிலிற் கட்டப்பட்டு அசையுந் தன்மையுள்ள களிறு உவமையாம். "வெளிலிளக்கும்" என்பது,

களிற்றுக்கு இயற்கையடைமொழி: கட்டுத்தறியை அசைத்துப் பார்த்தல், மதயானையின் தன்மை யென்க. வேற்றுநாடுகளிற் சென்று பண்டங்களை யிறக்குதல் ஏற்றுதல்செய்யும் வணிகர், கொடியினால் தமதுமரக்கலமென்று கண்டு மகிழ்வ ராதலின், 'நசைக் கொடி' என்றது.

மீன்தடிந்து விடக்கறுத்து
ஊன்பொரிக்கு மொலிமுன்றில்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவின்
நறவுநொடைக் கொடியோடு

பதவுரை:—(176) மீன் தடிந்து - மீனை யறுத்தும், விடக்கு அறுத்து - இறைச்சியை யறுத்தும், (177) ஊன் - அவ்வூன்களை, பொரிக்கும் - (நெய்யிலே) பொரிக்கின்ற, ஒலி - ஆரவாரத்தினை யுடைய, முன்றில் - முற்றத்தினைக்கொண்டதும், (178) மணல் குவைஇ - மணலைக் குவித்து, மலர் சிதறி - மலரைத்தூவாநிற்க, (179) பலர் புகும் - (கள்ளுண்பார்) பலரும் நுழையப் பெற்ற, மனை - (கள் விற்கும்) வீட்டிலே, பலி புதவின் - (தெய்வத்திற்குக் கொடுக்கும்) பலியினையுடைய வாசலிலே கட்டப்பெற்ற, (180) நறவு நொடை கொடியோடு-கள்விற்றலைத் தெரிவிக்கின்ற கொடியுடனே,—(எ-று.)

(178) சிதறி - சிதறஎன்ற எச்சத்தின்திரிபு. சிதற (178) புகும் (179) என்க. மலர் சிதறுதல், தெய்வத்திற்குக் கொடுக்கும் பலியைச் சேர்ந்ததாகும்: பலி - பூஜை: வடசொல்.

181-183: பிறபிறவும் நனிவிரைஇப்
பல்வே றுருவின் பதாகை நீழல்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பின்

பதவுரை:—(181) பிற பிறஉம் - இன்னும் வேறுவேறுவகைக் கொடிகளும், (இங்ஙனம்), (182) பல்வேறு உருவின் பதாகை - பல வேறுஉருவாற் சிறந்த பெருங்கொடிகளும், (181) நனி விரைஇ மிகக் கலவாநிற்கையினாலே, (182) நீழல் - (இவற்றின்) நிழலிலே, (183) செல் கதிர் நுழையா - (வானத்துச்) செல்கின்ற (ஞாயிற்றின்) கிரணங்கள் நுழையமாட்டாத, செழு - வளப்பத்தையுடைய, நகர் வரைப்பின் - ஊரெல்லையினிடத்துள்ள,—(எ - று.)

வரைப்பின் (183) மறுகு (193) என இயையும். பலர்தொழு கொடி முதலியன விரவுதலால் வானத்துச்செல்லுஞ் சூரியனது கிரணம் உள்ளே புகுதமாட்டாத பெருவளம்படைத்தது, புகார்நகரத் தின் வரைப்பு என்க; இது - உயர்வுநவிற்சியணி. பதாகை - பெருங்கொடி.

184 - 193 :—காவிரிப்பூம்பட்டினம் மறுகின் யுடைமை கூறப்படுகின்றது:—

செல்லா நல்லிசை யமரர் காப்பின்
நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்

பதவுரை :—(184) செல்லா நல் இசை - கெடாதநல்லபுகழை யுடைய, அமரர் - தேவர்களின், காப்பின்-பாதுகாவலினாலே, (யாதோரிடையூறுமின்றி), (185) நீரின்வந்த நிமிர் பரி புரவிஉம் - (வேற்று நாட்டிலிருந்து) கடல் வழியே (மரக்கலங்களின் மூலமாகக்கொண்டு) வந்து நிமிர்ந்துள்ளனவும் விரைந்தநடையினையுடையனவுமான குதிரைகளும், (186) காலின் வந்த கருங்கறி மூடைஉம் - வண்டியின்மூலமாகவந்த கருநிறமுள்ள மிளகின்மூட்டையும், (187) வடமலை பிறந்த மணிஉம் பொன்உம் - வடதிசையிலுள்ள (இமயம் மேரு என்றாற் போன்ற) மலைகளில் தோன்றிய பலவகையிரத்தினங்களும் பொன்னும்—, (188) குடமலை பிறந்த ஆரம்உம் அகில்உம் - குடகுமலையிலே தோன்றிய சந்தனக்கட்டையும் அகிற்கட்டையும், (189) தென்கடல் முத்துஉம் - தெற்குக்கடலிற்பிறந்த முத்துஉம், குணகடல் துகிர் உம் - கீழ்கடலிற்பிறந்த பவழமும், (190) கங்கை வாரிஉம் - கங்கையாற்றிற்பிறந்த பொருள்களும், காவிரி பயன்உம் - காவிரியாற்றிற் பிறந்த பொருள்களும், (191) ஈழத்து உணவுஉம் - ஈழநாட்டில் தோன்றிய உணவுப்பொருள்களும், காழகத்து ஆக்கம்உம்-கடாரத்தினுண்டான நுகரும்பொருள்களும், (192) அரியஉம் - மற்றும் சீனம் முதலிய நாடுகளினின்றுவந்த அரியனவான கருப்பூரம் பனிநீர் குங்குமம் முதலியனவும், (இவையொழிய), பெரியஉம் - பெரியனவாகிய பல பொருள்களும், நெரிய - நெரியும்படி, ஈண்டி - நெருங்கினமையால், (193) வளம் தலைமயங்கிய-பலவகைப்பட்ட வளமுள்ள பொருள்களும் ஒன்றோடொன்றுகலந்த, நனந்தலை - அகன்ற இடத்தையுடைய, மறுகின் - தெருக்களையும்,—(எ - று.)

விசேடவுரை :—கால் - உருளையையுடைய வண்டிக்கு, ஆகுபெயர். வடமலை - மேரு என்றேகொள்வாருமுளர். குடமலை - காவிரிப்பூம்பட்டினத்துக்கு [தென்] மேற்கேயுள்ள பொதியமலையென்றலுமொன்று: '' அந்தண்பொதியிற்சந்தன மரமும்'' என்றதுங் காண்க. பொதியமென்னும் மலைய மலைக்கு 'சந்தநாசலம்' என்றே ஒரு பெயரிருத்தலும் கருதத்தக்கது. ''தென்பௌவத்துமுத்துப் பூண்டு,'' ''தென்கடன்முத்தும்'' சிலப்: 8:19 என்பவை முதலிய இடங்களிலும் தென்கடலின் முத்து எடுத்துக்கூறப்பட்டிருத்தல் காண்க. தென்

கடலென்றது-தாமிரபர்ணிநதி கலக்கப்பெற்ற கடலென்றும், அந்தப் பகுதி கொற்கைத்துறை யென்று கூறப்படு மென்றும் சொல்வர். ஈழம் - இலங்கைத்தீவுஎன்றும், கடாரம் - பர்மா என்றும் கூறுவர்.

194 - 212 :—காவிரிப்பூம்பட்டினம் வர்த்தகம் நிகழ்வதற்கு இன்றியமையாதவரான வணிகரின் குடிவாழ்க்கையையுடைமை கூறப்படுகின்றது:—

நீர்நாப் பண்ணும் நிலத்தின் மேலும்
ஏமாப்ப வினிதுதுஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர்முன்றின் மீன்பிறழவும்
விலைஞர்குரம்பை மாவீண்டவும்
கொலைகடிந்துங் களவுநீக்கியும்
அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
நல்லானொடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்
புண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறை கொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கை

பதவுரை:—(194) (முறையே), நீர்நாப்பண்உம் - நீரின்நடுவிலும், நிலத்தின் மேல்உம்-பூமியின்மீதும், (195) ஏமாப்ப-மனம்கிழ, (மீன்களும் விலங்குகளும்) இனிது துஞ்சி-இனிதாகவுறங்கி, (196) கிளை கலித்து-(தம்) இனத்தோடு செருக்கி, பகை பேணாது-'(இந்த வலைஞரும் விலைஞரும் நமக்குப்) பகையாவர்' என்று கருதாது, (197) வலைஞர் முன்றில் மீன் பிறழஉம்-வலைகொண்டு பிடிக்குந்தன்மையுள்ள செம்படவரின் முற்றத்திலே மீன்கள் பாய்ந்து பிறழ்ந்துதிரியவும், (198)விலைஞர்குரம்பை மா ஈண்டஉம் - (இறைச்சியை)விலைக்குவிற்பவரின் குடிசையிலே மிருகங்கள் திரண்டுநிற்கவும், (இவ்வாறு), (199) கொலை கடிந்துஉம்-கொலைத்தொழிலை (அந்தவலைஞர் விலைஞர்களிடத்தினின்று) நீக்கியும்,-களவு நீக்கிஉம்-களவு (காண்பாரை அத்தொழிலினின்று) போக்கியும்,-(200) அமரர் பேணிஉம்-தேவரை வழிபட்டும்,—ஆவுதி அருத்திஉம் - (வேள்விகளில் அக்கினியிற்செய்யும்) ஆகுதிகளால் இந்திரன்முதலியதேவர்களை நுகர்வித்தும், - (201) நல்ஆனொடு பகடு ஓம்பிஉம்-சிறந்த பசுக்களோடு எருதுகளைப் பாதுகாத்தும்,—(202) நால் மறையோர் புகழ் பரப்பிஉம்-நான்குவேதங்களில் வல்லரான அந்தணர்க்குஉளவாம் புகழை

(அவர்கட்கு) நிலைபெறச் செய்தும்,—(203) பண்ணியம் அட்டியும் - (விருந்தினர்க்குப் பலவகைத்) தின்பண்டங்களைக் கொடுத்தும், பசும் பதம் கொடுத்தும் - பசிய[புதிய] சோற்றைக் கொடுத்தும்,— (204) (இங்ஙன்), புண்ணியம் முட்டா - அறத்தொழில் முட்டுப்படாமல், தண்நிழல் வாழ்க்கை-குளிர்ந்த அருளுடனே வாழும் வாழ்க்கையையுடைய,(205)கொடுமேழி நசை உழவர்-வளைந்த மேழித்தொழிலை விரும்பும் உழவு வாணிகர், (206) நெடு நுகத்து பகல் போல (207) நடுவு நின்ற நல் நெஞ்சினோர்-நெடிய நுகத்தில் தைத்த பகலாணி போல நடுவுநிலையென்னுங் குணம் நிலைபெற்ற நல்ல நெஞ்சினையுடையராகி,-(208) வடு அஞ்சி வாய் மொழிந்து - (தாம்பொய்கூறின் தமதுகுடிக்கு) வடுவாமென்றுபயந்து மெய்யையே கூறி, (209) தமவும் பிறவும் ஒப்பநாடி-தம்முடைய பண்டங்களையும் பிறருடைய பண்டங்களையும் ஒருதன்மையவாக மதித்து, (210) கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது-(தாம்) கொள்ளுஞ்சரக்கையும் (தாம்கொடுக்கும் பொருட்கு) அதிகமாகக்கொள்ளாமலும் (தாம்) கொடுக்குஞ்சரக்கையும் (தாம் வாங்கும்பொருட்குக்) குறைவாகக்கொடாமலும், (இவ்வாறு), (211) பல்பண்டம் பகர்ந்து வீசும் - பலபண்டங்களையும் (இலாபத்தை வெளிப்படையாகச்) சொல்லிக் கொடுக்கின்றதனாலான, (212) தொல்கொண்டி - பழமையான மிக்கபொருளுடனே, துவன்று - நெருங்கியிருக்கின்ற, இருக்கை-குடியிருப்பினையுமுடையதான,—(எ - று.)

விசேடவுரை:—தம்மைப்பிடித்துக் கொல்லுவாரில்லாமையால் நீரின்மீதும் நிலத்தின் மீதும் ஏமாப்ப இனிது உறங்கி, தஞ் சுற்றத்தோடும் பல்கிச் செருக்கி, வலைஞர் மனைகளின் முன்னே நீரில் மீன்கள் அச்சமற்றுத் திரியவும், விலைஞர்களின் குடிசைகளில் ஆடு முதலிய விலங்குகள் அச்சமற்றுத் திரியவும், கொலைபுரிந்து ஊன் தின்பவரும் ஊன்விற்பவருமான வலைஞர் விலைஞராகிய மாக்களைக் கொலைத்தொழில் புரியாதிருக்குமாறு அறிவுகொளுத்தி அன்னாரைக் கொலைத்தொழிலினின்று நீக்குவர் வணிகரென்க: அன்றியும் களவுசெய்வோரையும் அங்ஙனமே அக்களவுத்தொழிலினின்றி நீங்கச் செய்வர்: பின்னும் அன்னார், தேவர்களை வழிபட்டும், வேள்வி புரிந்தும், பசுக்களைக் காத்தும், அந்தணரை யோம்புதல்செய்தும், விருந்தினரை யுபசரித்தும், புண்ணியத்தொழிலே புரிபவராய் அருளுடனே கூடித் தமக்கு உரிய உழவினை விரும்பிச் செய்வர்: நடுவுநிலையுள்ளநெஞ்சத்துடனே குற்றமுண்டாகாதவாறு வாய்மையையேமொழிந்து தம்சொத்தைப்போலவே பிறர்சொத்தையும் கருதித், தாம் கொள்ளும்போது பிறரையேமாற்றிப் பண்டத்தை அளவினும் மிகக்கொள்வதாவது பிறர்க்குத் தரும்போது அவர்கட்குத் தரவேண்டிய அளவினும்குறைத்துத்தருவதாவது செய்யாமல் வெளிப்படையாகத் தமது இலாபத்தைச் சொல்லிப்பண்டங்களைவிற்று இங்ஙன் நெடுநாளாகப் பெற்று வருகிற மிகுந்த பொருளுடனேயிருப்பார்; இப்படிப்பட்ட வணிகர்குடி நெருங்கியிருக்கும்

இருப்பினையு முடையது அந்தப் பட்டினமென்க. இங்கு வணிகரின் தன்மையை இனிது ஒழுங்குறக் கூறியிருத்தல் காண்க.

வணிகர்க்கு, ஓதல் வேட்டல் கொடுத்தல் பசுக்காத்தல் உழுது பயிர்செய்கை வாணிகம் என்ற அறுதொழிலுரியன என்பதை "இருமூன்றுமரபினேனோர் பக்கமும்" என்று தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் வருவதற்கு "ஓதலும் வேட்டலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமுமாகிய அறுவகையிலக்கணத்தை யுடைய வணிகர் பக்கமும்" என்று கூறிய உரையாலும், "ஓதல் வேட்டலுப காரமன்றியும் வாணிகம் பசுக்காவலுழவுதொழிலெனப், புகன்றவை யாறும்பூவைசியர் தொழிலே" என்றநிகண்டினாலும் அறியலாம். (200) ஆவுதியருத்தியும் என்பதற்கு - அந்தணரைக்கொண்டு வேள்விசெய்வித்து அவ்வழியாகத் தேவர்களை நுகர்வித்தும் என்று உரைகூறியுள்ளனர். கொலைகடிதலும் களவுநீக்குதலும் ஓதலின் பயனென்க. நுகம் - நுகத்தடி: பகல்-அதன் இடையில் தைத்த ஆணி. பசும்பதம்-புதிய அரிசிகொண்டு சமைத்தசோறு. பசும்பதங் கொடுத்து என்பதற்கு-விளைந்தநெல்லையும் கமுகையும் உணவாகக் கொடுத்து என்றும், அரிசியுங் கறியுங் கொடுத்து என்றும் உரை கூறியுள்ளனர். "வைசிகன்பெறுமேவாணிகவாழ்க்கை", "மெய்தெரிவகையினெண்வகையுணவின், செய்தியும் வரையா ரப்பாலான" என்ற தொல்காப்பியச் சூத்திரங்களால் வணிகர்க்கு உழவுத் தொழில் உரித்தாகலின், 'பகடோம்பியும்' என்றது. நான்மறையோர் புகழை வணிகர்பரப்புவது - அந்த நான்மறையாளர் புரிதற்கு உரிய வேள்விமுதலிய நற்கருமங்கள் நிகழ்தற்குவேண்டிய பொருள்களை யளித்தலின் மூலமாக. நிழல் - அருள்.

213 - 218:—வெவ்வேறு மொழி பேசும் மக்கள் கலந்து பழகி யுறைவதும் காவிரிப்பூம்பட்டினம் என்று கூறப்படுகின்றது:—

பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கல்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்

பதவுரை:—(214) வேறு வேறு உயர்ந்த முது வாய்-வேருவேருகச் சிறந்த அறிவு வாய்த்த, ஒக்கல்-சுற்றத்தினையுடையநன்மக்கள்,(215) சாறு அயர் முது ஊர் - திருவிழாக்கொண்டாடும் பழையவூரிலே, சென்று தொக்காங்கு-போய்த்திரண்டாற்போல,—(216) மொழி பல பெருகிய - பாஷைகள் பலவற்ருல் மிக்க, பழி தீர் தேஎத்து - குற்ற மற்ற தேசங்களில் (தோன்றி), (217) புலம் பெயர் மாக்கள் - (தமது) நிலத்தைவிட்டுவந்த மாக்கள், (213) பல் ஆயமொடு - பலவகைப் பட்ட கூட்டத்தோடு, பதி - ஊரிலுள்ளாரோடு, பழகி—, (217) கலந்து இனிது உறையும் - கூடி இனிதுவாழ்கின்ற, (218) முட்டா

சிறப்பின் - குறையாத சிறப்பினையுடைய, பட்டினம் - காவிரிப்பூம் பட்டினத்தையே,—(எ - று.)

திருவிழாநடக்கும்ஊரிலே வேறுவேறாகச் சிறந்த அறிவுவாய்ந்த சுற்றத்தினையுடைய மக்கள் சென்று கூடிஞற்போல, வெவ்வேறு பாஷைகளைப் பேசும் பலநாட்டுமனிதரும் இந்தக் காவிரிப்பூம்பட்டினத்தில் வந்துசேர்ந்து அதன்கணுள்ள நன்மக்கள் கூட்டத்தோடு பழகிக் கலந்து இனிது உறைவார்களென்க.

சோணாட்டில் (28) படப்பையினையும் (32) தண்டலையினையும் (33) பொய்கையினையும் (38) ஏரியினையும் (39) இண்காப்பினையும் (41) அட்டிலினையும் (43) சாலையினையும் (52) தவப்பள்ளியினையும் (53) களரியினையும் (59) புறச்சேரியினையும் (76) பெருந்துறையினையும் (105) முன்றிலினையும் (141) ஆவணத்தையும் (158) மறுகினையும் (193) நன்னெஞ்சினோர் (207) துவன்றிருக்கையினையுமுடைய (212) பட்டினம் (218) என்க.

218 - 220 :—கிளவித்தலைவன் செலவு அழுங்குதலைத் தெரிவிக்கும்:—

பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
220. வாரேன் வாழிய நெஞ்சே !

பதவுரை:—(218) பெறின்உம் - (பொருள்தேடச்சென்ற இடத்து எனக்கு உரிய பொருளாகப்) பெற்றாலும், (219) வார் இருங் கூந்தல் வயங்கு இழை ஒழிய - நீண்ட கரியகூந்தலையுடைய விளங்குகின்ற ஆபரணங்களையுடையாள் (இங்கே) பிரிந்திருக்க, (220) வாரேன் - (யான் நின்னோடுகூட) வரமாட்டேன்: நெஞ்சே - (என்) நெஞ்சே ! வாழிய - (நீ போய்) வாழ்வாயாக: (எ - று.)

விசேடவுரை :—இப்படிப்பட்ட பட்டினமே பொருள்தேடும் எனக்குக் கிடைப்பதாஞலும் நான் தலைவியை விட்டுவாரேனென்று தன்நெஞ்சினைநோக்கிக் கூறுகின்றான், கிளவித்தலைவ னென்க. 'வாரேன்' என்றான், தலைவியையாற்றுவித்துப் பின்பு பிரிதல்கருதி: இவ்வாறு கருத்துக் கொண்டால்தான் பாலைத்திணை யாதற்கு ஏற்கும்: நச்சிஞர்க்கினியர் இவ்வாறே கூறியுள்ளார்.

'நெஞ்சே ! வாரேன்வாழிய' என்று கூறியதில், 'யாரை விட்டு வாரேன்?' என்றும் 'எங்கு வாரேன்?' என்றும், 'ஏன் வாரேன்?' என்றும் மூன்று விஞக்களுக்கு விடையிறுக்க வேண்டியிருத்தலின், 'வயங்கிழையை விட்டு வாரேன்' என்று முதல்விஞவுக்கு விடையும், கானம்வாரே னென்று இரண்டாம்விஞவுக்குவிடையும், தான் விரும்பியதோள் தண்மையா யிருத்தலால் வாரேன் என்று மூன்றும் விஞவுக்கு விடையும் இறுக்கின்றான், இரண்டாம் விடையிலுள்ள கானத்தை திருமாவளவனது வேலினும் வெய்து எனக் கூறலுறுகின்றான்.

'கூருகிர்' (220) என்பது தொடங்கி 'முருக்கி' (238) என்பது வரையும் திருமாவளத்தான் தான் அகப்பட்ட சிறையினின்று மீண்டு பகைவரை யழித்தமையைக் கூறும்:—

கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்து
உருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்
கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றாள்
உகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகல் போலப் போர்வேட்டு
வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரசம்
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கி

பதவுரை:—(220) கூர்உகிர் (221) கொடு வரி குருளை - கூரிய உகிரையும் வளைவான உடற்கோடுகளையுமுடைய புலிக்குட்டி, கூட்டுள் வளர்ந்த ஆங்கு-கூட்டிடத்தே (அடைக்கப்பட்டிருந்து) வளர்ந்தாற்போல, (222) பிறர் பிணியகத்து இருந்து - பகைவரின் சிறையிடத்தே தங்கியிருந்து, பீடு காழ் முற்றி-(அதனால் தன்) பெருமைக் குணம் வயிரமேறி முற்றுப்பெற்று,—(224) பெருங் கை யானை - பெரிய கையினையுடைய யானை, (223) அருங் கரை கவிய குத்தி - (தன்னை யகப்படப்பண்ணின குழியினின்று ஏறுதற்கு) அரியதான கரையை இடியும்படி (கோட்டாலே) குத்தி, குழிகொன்று-குழியைத் தூர்த்து, (224) பிடி புக்காங்கு - (தன்) பிடியிடத்தே சென்று சேர்ந்தாற்போல, (225) நுண்ணிதின் உணர நாடி - (தன்) கூரிய உணர்வு கொண்டு கூர்த்தறிவதனால் (இதுவே இப்போதைக்குச் செய்யத்தக்க (காரியம் என்று) பார்த்து, நண்ணார் (226) செறிவு உடை திண் காப்பு ஏறி - அப்பகைவருடைய நெருக்கத்தையுடைய திண்ணிய காவலைக் கடந்து, வாள்கழித்து - வாளை யுறையினின்று கழித்து, (ஆங்கு எதிர்த்தவர்களை வெட்டி வீழ்த்தி), (227) உரு கெழு தாயம் ஊழின் எய்தி - அச்சம் பொருந்தின தன்னரசவுரிமையை முறையிலே பெற்று, (228) பெற்றவை மகிழ்தல்செய்யான் - (தான் அங்ஙனம்) பெற்றவைகளால் மகிழ்தலையுடையானாய்,— (பின்னும் பகைவரது

மண்ணைக் கொள்ளவேண்டுமென்று எழுந்தவிருப்பினால்), செற்றோர் - பகைவருடைய, (229) கடி அரண் - காவலமைந்த அரண்களை, தொலைத்த - அழித்தனவும், கதவுகொல் மருப்பின் - கதவை முறிக்குங் கொம்போடு, (230) முடிஉடை கருந்தலை புரட்டும் முன் தாள் (231) உகிர் உடை அடிய - (பகைவரின்) முடியையுடைய கரிய தலைகளை யுருட்டும் முன்காலின் உகிரைக் கொண்ட பாதமுள்ளனவுமான, ஓங்கு எழில் - உயர்ந்த அழகினையுடைய, யானை - யானைகளோடும், (232) வடி மணி புரவியொடு-வடித்த [தெளிவான ஓசையையுடைய] மணிகட்டிய குதிரைகளோடும், வயவர்-(பகைமன்னரின்) வீரர், வீழ-(போர்க்களத்து) வீழவும், (233) பெரு நல் வானத்து பருந்து உலாய் நடப்ப - (போர்க்களத்துச்சிந்திய தசையையுண்ண விரும்பிப்) பெரிய நல்லவானினிடத்தே பருந்துகள் உலாவித்திரியவும்,—(234) போர் வேட்டு-போரை விரும்பியதனால், (அதற்கு அடையாளமாக), தூறு இவர் துறுகல்போல - தூறுபடர்ந்த நெருங்கின குன்றுகள்போல, (235) வேறு பல் பூளையொடு உழிஞை சூடி-வேறுபட்ட பல பூளைப் பூவுடனே உழிஞை மலரையுஞ்சூடி, (236) பேய்க்கண் அன்ன பிளிறு கடி முரசம் (237) மாக்கண் அகல் அறை அதிர்வன முழங்க-பேயின் கண்ணை யொத்தனவும் முழங்குகின்றனவுமான காவலையுடைய முரசம் பெருமையையுடைய இடத்தையுடைய அகன்ற பாசறையிலே நடுங்குவனவாய் முழங்கவும்,— (238) (இங்ஙனம்), முனை கெட சென்று - பகைப்புறம் கெடும்படி போய், முன் சமம் முருக்கி - முதற்போரிலே (அப்பகைவரை) அழித்து,—(எ - று.)

விசேடவுரை :—திருமாவளவன் தான் பகைவராற் சிறையுண்டதினின்று தன்னுராய்ச்சியால் முயன்று தப்பி எதிர்ந்தவரை வெட்டிவீழ்த்திச் சிறைமீண்டு தன்தாயத்தைப்பெற்றுப் பகைவர் மண்ணைக் கைக்கொள்ள விரும்பிப் படையெடுத்துச் சென்று எதிர்ந்த வீரரை வீழ்த்திப் பருந்துலாவவும் முரசு முழங்கவும் பகைவரை யொழித்தானென்க. திருமாவளவன் சிறையிலகப்பட்டு வீரம் முற்றியதற்கு - புலிக்குருளை கூட்டில் வளர்வதும், திண்காப்பேறித் தாயமெய்தியதற்கு - பெருங்கையானை குழிகொன்று பிடிபுக்கமையும் உவமை. (226) செறிவுடைத்திண் காப்பு - மதிள் என்றும், வாள் - அம்மதிலையொட்டிக் காவலாயிருந்த வாட்படையென்றும் கூறினுமாம். (234, 235) வேறு பல்சூடிய உழிஞை துறுகல்போலத் தோன்றுமென்க. துறுகல்-ஒருவகைக்கல். இனி, நச்சினார்க்கினியர், வேறு இடங்களில் யானைக்குத் துறுகல் உவமைகூறியிருத்தல்பற்றி, துறுகல்போல (234), உழிஞைசூடி (235), செற்றோர்கடியரண் தொலைத்த (228, 229) யானையொடு (231) எனக்கூட்டுவர். உழிஞை-சிறுபூளை: இதனை வேற்றரசரின் அரணை முற்றுவோர் சூடுவரென்று கூறுவது தமிழ்க் கவிஞரின் மரபு: உழிஞையென்ற சிறுபூளையுடனே அதற்கு இனமான வேறு பல் பூளைகளையுஞ் சூடினனென்க.

பெற்றவை மகிழ்தல் செய்யான் (228) போர்வேட்டு (234) குடி (235) யானை (231) புரவியோடு (232) (படையெடுத்துச்)சென்று (238) முழங்க (237) வயவர்வீழ (232) பருந்துலாய்நடப்ப (233) முருக்கி (238) என்க.

இனி முப்பத்திரண்டடிகளால், திருமாவளவன் பகைவரின் விளைநிலம் முதலியவற்றைப் பாழ்படுத்தினமையைக் கூறுகின்றனர்: ஈற்றடி - கோலின் தண்மை கூறுவது:—

தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலித்த கண்ணகன் பொய்கை
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்று
அறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவும்

பதவுரை :—*(239) தலை - அந்தப்பகைவ ரரணிடத்தே, தவ சென்று-மிகநடந்து, தண் பணை எடுப்பி-குளிர்ந்த மருதநிலத்தி லுள்ள குடிகளையோட்டி, (இங்ஙனம் மருதநிலத்தாரை யோட்டினமையால் அங்கே முன்னிருந்தனவான), (240) வெள் பூ கரும்பொடு செந்நெல் நீடி - வெள்ளிய பூவினையுடைய கரும்புடனே செந்நெற் பயிரும் நீண்டு வளரப்பெற்று, (241) மா இதழ் குவளையொடு நெய்தல்உம் மயங்கி - கருமையையுடைய இதழ்களைக் கொண்ட குவளை மலருடனே நெய்தற்பூவும் சேரப்பெற்று, (242) கராஅம் கலித்த - முதலைகள் செருக்கித் திரியப்பெற்ற, கண் அகல் பொய்கை - இடமகன்ற பொய்கைகள்,—(நீரற்று), (243) கொழுங் கால் புதவமொடு செருந்தி நீடி - கொழுவிய தண்டுகளையுடைய அறுகம்புற்களோடு வாட்கோரையும் வளரப்பெற்று (இருக்க), (244) செறுஉம் வாவிஉம் நீர் அற்று மயங்கி - செய்களும் வாவிகளும் நீரற்றுத் தம்மிலொன்றுகி, (245) அறுகோடு இரலையோடு - அறல் பட்ட கொம்பினை யுடைய ஆண்மானுடனே, மான் பிணை - பெண்மான், உகளஉம் - துள்ளி விளையாடுமாறு ஆகவும்,—(எ - று.)*

விசேடவுரை :—*திருமாவளவன் பகைவரின் மருதநிலத்துக் குடிகளை யோட்டி அவ்விடத்தைப் பாழ்படுத்தினமையால், அங்கு முன்னர்க் கரும்பும் செந்நெல்லும் நீண்டு வளர்தற்குக் காரணமாகிக் குவளையும் நெய்தலும் நிரம்பி முதலைகள் செருக்கித் திரியப்பெற்றிருந்த பொய்கைகள் நீரற்றுப் புதவமும் செருந்தியும் முளைக்கப் பெற்றன: செறுவும் வாவியுமோ நீரற்றுத் தம்முள் வேறுபாடற்றனவாய் இரலையொடு மான்பிணை யுகளுமாறு ஆயினவென்க. 'நீரற்று' என்பது பொய்கை என்பதனோடும், செறுவாவி என்பவற்றோடும் இயையும். வென்றவர் பகைவரின் நாட்டைப் பாழ்படுத்தக் கருதி அந்தப்பகைவர் நாட்டு நீர்நிலைகளை யுடைப்பது வழக்கமாதலால்,*

திருமாவளவன் அங்ஙனஞ் செய்யவே, பொய்கையும் வாவியும் நீரற்றன: தம்மிடம் நீர்பாய்தற்குக் காரணமான பொய்கைவாவிகள் நீரறவே, பாய்ச்சலில்லாமையால் செறுவும் நீரற்றதென்க. பகைவரின் நீர்நிலைகளையுடைப்பது வழக்கமாதலை "துறைநீர்க் கைமான் கொள்ளுமோவென, உறையுண்முனியுமவன் செல்லுமூரே" "பெரும் புனல் வாய்திறந்தபின்னும்," "எண்ணூட்டிங்களனைய கொடுங் கரைத், தெண்ணீர் சிறுகுளங் கீள்வதுமாதோ" என்பவற்றாலும் அறியலாம். வாவி - வாபீ: வடசொல்: துரவுஎன்று பொருளென்பர்.

கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவும்

பதவுரை:—(246) கொண்டி மகளிர் - (பகைவர் மனைவியராய்ப்) பிடித்துவந்த மகளிர் பலரும், உண்துறை மூழ்கி-நீருண் துறையிலே மூழ்கி (த் தூயராய்), (247) அந்தி மாட்டிய - அந்திக்காலத்திலே யேற்றிய, நந்தா விளக்கின் - அவியாத விளக்கினையும், (248) மலர் அணி மெழுக்கம் - மலர்கொண்டு அணிந்த மெழுகிய இடத்தினையுமுடைய, பலர் ஏறி தொழ- (ஊரார்) பலரும் ஏறித்தொழ, (249) வம்பலர் சேக்கும்-புதியவரும் தொழுது தங்குதற்குக் காரணமான, கந்து உடை பொதியில் - தெய்வமுறையும் இடத்தினையுடைய அம்பலத்தில் நின்ற, (250) பரு நிலை நெடுந்தூண் - பருத்த நிலையினையுடைய நெடியதூண், ஒல்க - சாயும்படி, தீண்டி-உராய்ந்து, (251) பெருநல் யானையொடு பிடி புணர்ந்து உறையஉம் - பெரியநல்ல ஆண்யானைகளுடனே பெண்யானைகள் கூடித் தங்கும்படியாகவும்,—

விசேடவுரை:—கீழ் விளைநிலம் பாழ்பட்டமையைக் கூறிய ஆசிரியர், இங்குப் பொதியில் பாழ்பட்டமையைக் கூறுகின்றார். வென்றமன்னவர் பகைவரின் மனைவியரைச் சிறைபிடித்து அவர்களைப் பணிப்பெண்களாக வைத்துக் கொள்ளுதல் தம்க்கு மேன்மையை விளக்கு மென்று கருதியதனால், முந்தி வெற்றிபெற்றிருந்த திருமாவளவனுடைய பகைமன்னவர், கொண்டி மகளிரை மூழ்கி நந்தா விளக்கிடவும் அம்பலத்தில் மெழுகவும் வைத்தாரென்க. மெழுகிய இடங்களிற் பூக்கொண்டு அணிசெய்தல் பண்டைக்காலத்தியமரபு ஆதலால், 'மலரணிமெழுக்கம்' என்றது. அவ்வாறு மெழுகி மலரணிந்து நந்தா விளக்கிடும் பெண்களைக் கொண்ட பொதியில் பாழ்பட்டமையால், அவ்விடங்களிலுள்ள தூண்களையொல்கத் தீண்டி ஆண்யானையோடு பெண்யானைகள் புணர்ந்து உறைவனவாயின. கந்து - ஸ்கந்தம்: வடசொல்: தெய்வமுறைதற்கு ஆதாரமான இடம்: தெய்வமுறையுந் தறியென்பர், நச்சினார்க்கினியர்: அருட்குறிநிற்குஞ் சிவலிங்கமென்பர், ஒருசாரார்.

பொது + இல் = பொதியில்: இலக்கணப்போலி: பொதுவான இடமென்பது பொருள்: அஃதாவது - தெய்வம் உறையும் மன்றம்.

அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
அழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவும்
அழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவும்
கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவும்

பதவுரை:—(252) அரு விலை நறும் பூ தூஉய்-விலை கூறுதற்கு அரிய நறுமணமுள்ள மலரைத் தூவி, தெருவின் - தெருவிலே, (253) முது வாய் கோடியர் - அறிவு வாய்த்தலையுடைய கூத்தரின், முழவொடு புணர்ந்த - மத்தளத்தின் தாளத்தோடே கூடின, (254) திரி புரி நரம்பின் தீந் தொடை - முறுக்குதல்புரிந்த நரம்பின் இனிதாகிய கட்டினையுடைய யாழினிசை, ஓர்க்கும் - (பலராலும்) செவிதாழ்த்துக்கேட்கப்படும், (255) பெரு விழா-பெரிய திருநாள்,கழிந்த-இன்றாகிப்போன, பேஎம் முதிர் மன்றத்து - அச்சம் முதிர்ந்த மன்றத்தினிடத்தே, (256) சிறு பூ நெருஞ்சியோடு அறுகை பம்பி-சிறிய பூக்களையுடைய நெருஞ்சியுடனே அறுகம்புல் பரவப்பெற்று, (257) அழல் வாய் ஓரி - அழல்கின்ற [கொடிய] வாயையுடைய நரிகள், அஞ்சுவர - (பிறர்க்கு) அச்சந்தோன்றுமாறு, கதிர்ப்பஉம் - மிக்கு முழங்கவும்,—(258) அழுகுரல் கூகையோடு - அழுவது போல் தோன்றுகின்ற குரலையுடைய ஆந்தைகளுடனே கூடி, ஆண்டலை விளிப்பஉம்-ஆண்டலைப்புள்ளுக் கூப்பிடவும்,—(259) கணம் கொள் கூளியொடு - கூட்டங்கொண்ட [தொகுதியான] ஆண்பேய்களுடனே, கதுப்பு இகுத்து அசைஇ - மயிரைத் தொங்கவிட்டு இருந்து, (260) பிணம் தின் - பிணத்தைத் தின்னுகின்ற, யாக்கை-வடிவையுடைய, பேய் மகள் - பெண் பேய்கள், துவன்றஉம் - நெருங்கவும்,—(எ - று.)

விசேடவுரை:—மன்றம் - பலரும் கூடுமிடம். முன்பு விழாக் காலங்களில் தெருக்களில் பெருவிலையுள்ள மலர்களைத் தூவிக் கூத்தருடைய முழவொடு ஒலிக்கும் யாழிசை மன்றத்துக் கேட்கபடும்: இப்போது விழாக்கள் செய்வாரின்மையால் அவ்வாறன மன்றம் பாழ்பட்டுப்போக, அங்கே ஓரி அச்சம்மிகக் கதிர்த்தலும், கூகையொடு ஆண்டலைவிளித்தலும்,கூளியொடு பேய்மகள் துவன்றலும் உண்டாயினவென்க. தொடை - கட்டுதலையுடைய யாழுக்கு ஆகுபெயர். அறுகை, ஐ - சாரியை. (258) ஆண்டலை-ஆண்மக்களின் தலைபோன்ற தலையையுடையதொரு பறவை. (259) அசைஇ-இளைத்துஎன்றலும் உண்டு. (260) பிணங்களைப்பிடுங்கித் தின்னும் பேய் இடாகினி எனப்படும். தூஉய் (252) ஓர்க்கும் (254) என்க.

கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண் டானுப் பெருஞ்சோற் றட்டில்
ஒண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
உணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவும்

பதவுரை :—(261) கொடுங் கால் - வளைந்த கால்களையுடைய, மாடத்து - மாடத்தின், நெடுங்கடை-பெரிய தலைவாயிலில், துவன்றி-(முதலில்) நெருங்கியிருந்து (பின் உள்ளேசென்று), (262) விருந்து - விருந்தினர், உண்டு - புசித்தும், ஆனு - குறையாது மிக்குக்கிடக்கின்ற, பெருஞ் சோறு - பெரிய சோற்றையுடைய, அட்டில்-அடுப்புகளுடனே, (263) ஒள் சுவர் - ஒள்ளிய [சிறந்தசுண்ணச்சாந்துபூசிய] சுவரைக்கொண்ட, நல் இல் - நன்ருகிய வீட்டின், உயர் திணை இருந்து - உயர்ந்த திண்ணைகளிலேயிருந்து, (264) பைங்கிளி மிழற்றும்-பசிய கிளி இன்சொல் சொல்லுதற்குக் காரணமான, பால்ஆர்-பால் நிறைந்த, செழுநகர் - வளவியநகரின்,—(265) தொடு தோல் அடியர் - அணிந்த தோலைக்கொண்ட [செருப்புப்பூண்ட] அடியரான, (266) கொடு வில் எயினர் - வளைந்த [அல்லதுகொடிய] வில்லினையுடைய வேடர், (265) துடி பட குழீஇ - துடியென்னும் பறையொலி ஒலிப்பத் திரண்டு, (266) கொள்ளை உண்ட-கொள்ளையாகக்கொண்டு உண்டிட்ட, (267) உணவு இல் - நெல் இல்லையான, வறுங் கூடு - வறுவிய [ஒன்றுமில்லாத] நெற்கூட்டின், உள் அகத்துஇருந்து - உள்ளாகிய இடத்தேயிருந்து, (268) வளைவாய் கூகை - வளைந்த வாயினையுடைய கூகை, நல் பகல் - நடுப்பகலிலே, குழறஉம்-ஒலிக்கவும்,—(எ - று.)

விசேடவுரை:—மாடங்களின் திண்ணைகளில் பைங்கிளிகளிருந்து பாலுண்டு இன்மொழியைக் கொஞ்சிப்பேசும் நகரின் நெற்கூடுகளிலுள்ள தானியங்களை எயினர் கொள்ளைகொண்டு உண்டுவிட, அங்குநடுப்பகலிலும் கூகையிருந்து குழறுமென்று நகர்பாழ்பட்டமையைக் கூறியவாறு: "நெடுநகர்வீழ்ந்த கரிகுதிர்ப்பள்ளிக், குடுமிக் கூகை குராலொடுமுரல" என்றதுங் காண்க. இராப்போதே கூகை குழறுவதற்கு ஏற்ற சமயமாதலால் நன்பகலிலும் குழறு மென்ருர், பாழ்பட்ட கொடுமையினைப் பெறவைப்பதற்காக.

அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற

பதவுரை:—(இங்ஙனம்), (269) அரு கடி வரைப்பின் ஊர் - அரிய காவலைக்கொண்ட மதிலையுடைய (பகைவருடைய இராசதானியாகிய) ஊர்கள், கவின் அழிய-அழகு அழிய, (270) மருங்கு அற - (அப்பக்க

யரசரின்) குலம் இன்றுகும்படி, பெரும்பாழ் செய்தும் - பெரிய பாழாகச் செய்தும், அமையான் - (சினம்) அடங்காதவனாய்,—(எ-று.)

271 - 299 :—திருமாவளவன் பகைவரூரைப்பாழ்படுத்தியும் அமையாது பின்னும் ஒளியர் அருவாளர் முதலியோரைவென்று உறையூரைப் பெருக்கியமை கூறப்படுகின்றது:—

மலையகழ்க் குவனே கடல்தூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலின்
பல்லொளியர் பணிபொடுங்கத்
தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் திறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவும் மதனுடை நோன்றாள்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேண் மருங்குசாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்து
ஒருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயில்
மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்கால்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவும்
முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூண்
அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்
திருமா வளவன்

பதவுரை:—'(இவன் தெய்வத்தன்மையுடையவனாதலின்), (271) மலை அகழ்க்குவன்-மலைகளையெல்லாம் அகழ்தலைச் செய்வான்: கடல் தூர்க்குவன்-கடல்களையெல்லாம் தூர்த்தலைச்செய்வான்: (272) வான் வீழ்க்குவன் - தேவருலகைக் கீழேவீழ்த்துதலைச்செய்வான்: வளி மாற்றுவன் - காற்றை (இயங்கவொட்டாமல்) விலக்குவான்', என - என்று (உலகத்தோர்) சொல்லும்படி, (273) தான் முன்னிய துறை போகலின் - தான் கருதிய போர்த்துறைகளெல்லாம் பொருது முடித்

தாகுதலால், (274) பல் ஒளியர் பணிபு ஒடுங்க - பலராகிய ஒளிநாட்டார் தாழ்ந்து (தமது) வீரங்குறையவும், (275) தொல் அருவாளர் தொழில் கேட்ப - பழைய அருவாளநாட்டினரசரும் (தாங்கள் செய்ய வேண்டிய) தொழிலை வந்துகேட்பவும், (276) வடவர் வாட-வட நாட்டிலுள்ள அரசர் வாட்டமடையவும், குடவர் கூம்ப-குடநாட்டிலுள்ளார் மனமகிழ்ச்சி குறையவும், (277) தென்னவன் திறல் கெட - பாண்டியன் வலிகெடவும், சீறி - கோபித்து,—மன்னர் (278) மன் எயில் கதுவும் மதன்உடை நோன் தாள் (279) மா தானை - மன்னவரின் நிலைபெற்ற மதிலைக் கைப்பற்றும் செருக்கினையுடைய வலிமையுள்ள தாளையுடைய யானைச்சேனையுடனே, மறம் மொய்ம்பின் - வீரத்தைக் காட்டுதற்குஉரிய வலிமையையுங்கொண்டு, (280) செங் கண்ணால் செயிர்த்து நோக்கி - (சினத்தினால்) சிவந்த கண்களாற் கோபித்துப் பார்த்து, (281) புல் பொதுவர் வழி பொன்ற - புல்லிய இடையராய் அரசுபுரிபவரின் சந்ததி முழுதுங்கெட்டுப்போகவும், (282) இருங்கோவேள் - இருங்கோவேளரசனுடைய, மருங்கு-குலம், சாய-கெடவும், (283) காடு கொன்று - (சோழமண்டலத்திற்) காடாகிய இடங்களை வெட்டிப்போகட்டு, நாடு ஆக்கி - (அவ்விடங்களை) நாடாகச்செய்து, (284) குளம் தொட்டு - குளங்களை (ப் பண்டுபோல) த் தோண்டி, வளம்பெருக்கி - (நாட்டிற்குச்) செல்வத்தை மிகுவித்து, (285) பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி-பெரியநிலைகளைக்கொண்ட மாடங்களையுடைய உறந்தையென்னுந் தன்னூரை விரிவுறச்செய்து, (286) கோயிலொடு குடிநிறீஇ - கோயில்களோடே பழைய குடிகளையும் (பண்டுபோல அங்கு) நிலைநிறுத்தி, (287) வாயிலொடு புழை அமைத்து - பெரியவாசல்களோடே சிறிய வாசல்களையுமுண்டாக்கி, (288) ஞாயில்தொறும் புதை நிறீஇ - ஞாயிலென்னும் மதிலுறுப்புக்கள்தோறும் அம்புக்கட்டுகளையும் கட்டிவைத்து, (289) பொருவேம் என பெயர்கொடுத்து - '(பல அரசர்கள் திரண்டு பொருமாறு எதிர்த்து வந்தால் அவர்களுடன்) பொரக்கடவேம்' என்று வஞ்சினத்தைச் சொல்லி, (அங்ஙனம் பகையரசர் பலர் திரண்டுபொருமிடத்து உறுதி நிலைபிறழ்ந்து), (290) ஒருவேம் என புறக்கொடாது-(யாம்) தமியமாயிருக்கின்றேமென்று முதுகுகொடாது (எதிர்த்து), (291) திரு நிலைஇய - வீரலட்சுமியை(த் தன்னிடத்து) நிலைபெறச் செய்தவனும், பெரு மன் எயில் (292) மின் ஒளி எறிப்ப - பெருமை நிலைபெற்ற மதிள் மின்னின்ஒளி வீசுதலால், தம் ஒளி மழுங்கி - தம்முடைய முகவொளி மழுங்கப்பெற்று, (293) விசி பிணி முழவின் வேந்தர் - இறுகவலித்த வார்க்கட்டினையுடைய முழவினையுடைய வேந்தர், சூடிய - (தம்) சிரமேற்கொண்ட, (294) பசு மணி பொருத பரு ஏர் எறுழ் கழல்கால்-பசிய [சிறந்த பொன்னாலியன்ற] மணிகள் ஒலிக்கப்பெற்றுப் பருத்த அழகிய வலியினையுடைய வீரக்கழலையணிந்த காலினையும், (295) பொன் தொடி புதல்வர் ஓடி ஆடஉம் (296) முற்று இழை மகளிர் முகிழ் முலை திளைப்பஉம் (297) செஞ் சாந்து சிதைந்த மார்பின் - பொன்னாற்செய்த தொடியினையுடைய பிள்ளைகள்ஓடிவந்துஏறி விளையாடுகையினாலும் மெய்ம்முழுதும்

அணிந்த அணிகலங்களையுடைய மகளிரின் தாமரைமுகைபோலும் முலைகள் புணர்தலினாலும் சிவந்த சந்தனமழிந்த மார்பினையும், ஒள் பூண்-ஒள்ளிய பேரணிகலங்களையும், (298) அரிமா அன்ன அணங்கு உடை துப்பின் - சிங்கவேற்றையொத்துப் பகைவர்க்கு வருத்தத்தைச்செய்தலுடைய வலியினையுமுடைய, (299) திருமாவளவன்,—

விசேடவுரை:—பகைவரின் மருதநிலம் முதலியவற்றைப் பாழ் படுத்தினமையைக் கூறியபின், அந்தத் திருமாவளவனது வெற்றித் திருவை இங்குக் கூறுகின்றாரென்க. கீழ்க் கூறியவாறு பகைவரின் ஊரைப் பாழ்படுத்தியும் அச்செயலோடு மனத்திருத்தி பிறவாதவனாகிய இவன் 'மலையகழ்க்குவன்; கடல்தூர்க்குவன்; வான் வீழ்க்குவன்: வளிமாற்றுவன்' என்று தன்வலிமைமிகுதியைப் பிறர் கூறுமாறு தான் வெற்றித்துறையில் முற்றியதனால், ஒளிநாட்டார் அருவாளர் வடவர் குடவர் இவர்கள்யாவரும் அடங்கிவிடவும், தென்னவர் திறல்கெடவும், பொதுவர் வழிபொன்றவும், இருங்கோவேள் மருங்கு சாயவும் வென்று, காடாக இருந்த இடங்களை நாடு ஆக்கியும் அந் நாட்டை வளம்படுத்தற்குக் குளங்களை வெட்டியும் வைத்தவனும், உறையூரை விரிவுறவமைத்துக் கோயில்களையும் குடிகளையும் பண்டு போல ஆங்கு நிலைநிறுத்திப் பெரியவாயில்களையும் சிறியவாயில்களையும் அமைத்து மதில்களில் அம்புக்கட்டுகளையும் வைத்தவனும், பகையரசர் பலர்திரண்டுவரினும் தான் தனிமையாயிருப்பதனால் அஞ்சிப் புறங்கொடாது வஞ்சினங்கூறிப் பொருது வீரலட்சுமியைத் தன்னிடம் நிலைநிறுத்தியவனும், தம்மொளிகெட்டு வேற்றுவேந்தர் வணங்கும் வீரக்கழலணிந்த பாதங்களையும், மைந்தர்விளையாடுவதனாலும் மகளிர்முயங்குதலாலும் சந்தனம்மழியப்பெற்ற மார்பினையும் சிங்கத்தையொத்த வலிமையையுமுடையவனும் ஆவன் அந்தத்திருமாவளவனென்க. உறந்தைபோக்கி என்பதற்கு - உறந்தையைக் கைவிட்டு என்று உரைத்து, திருமாவளவன் உறையூர் இராசதானியாக இருந்ததனைவிடுத்துக் காவிரிப்பூம்பட்டினத்தைக் கைக்கொண்டானென்பர் ஒருசாரார்: அவ்வுரை பொருந்துமெனத் தோன்றவில்லை.

இந்தப்பட்டினப்பாலையில் தலைமைப்பொருளாகிய பாலைத்திணையைச் சேர்ந்த செலவழுங்குதல் - (219, 220) "வாரிருங்கூந்தல் வயங்கிழையொழிய, வாரேன்வாழியநெஞ்சே...(299-301) திருமாவளவன் றெவ்வர்க்கோக்கிய, வேலினும்வெய்யகானம் அவன், கோலினுந் தண்ணிய தடமென்றோளே" என்ற துணையானே கூறப்பட்டிருக்க, இதற்கு அங்கமாக இந்தப்பட்டினப்பாலைக்குப் பாட்டுடைத்தலைவனாகிய திருமாவளவனது இராசதானியான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் அத்திருமாவளவனது இளமையின் இடர்ப்பாட்டையும் பின்னர் வெற்றியென்னும் புறப்பொருளானவாகையையும் அமைத்த திறம், நுண்ணுணர்வுடையோரால் மெச்சத்தக்கது: "வாகைதானே பாலையதுபுறனே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால், வாகை, பாலைத்திணைக்குப் புறனுமென்பது பெறப்படும். வாகையென்பது -

"தாவில்கொள்கைத் தத்தங்கூற்றைப் பாகுபடமிகுதிப்படுத்தல்" ஆதலாலும், அங்ஙன்மிகுதிப்படுத்துவது பெரும்பாலும் வெற்றியினாலேயே நிகழுமாதலாலும், பாலையென்பதும் தான் புகழ்பெறக் காதலை வென்று தலைவியைப்பிரிந்துசெல்வதாதலாலும், வாகையைப் பாலைக்குப் புறனென்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். "மக்களுதலியவகனைந்திணையுஞ், சுட்டியொருவர் பெயர்கொளப்பெறாஅர்" என்பது அகத்திற்கேயாதலால், பாலையென்னும் அகத்திணைப்பொருட்குஉரிய கிளவித்தலைவன் பெயரை வெளிப்படையாக ஓதாது திருமாவளவன் என்று பாட்டுடைத்தலைவன் பெயரையே வெளிப்படையாக ஓதினாரென்று அறிக.

இருங்கோவேள்-திதியன்முதலிய ஐம்பெருவேளிருள் ஒருவனாக இருக்கலாம். ஒளிநாடு, அருவாநாடு - செந்தமிழ்நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நிலத்துள்ளவை. ஞாயில் - எய்துமறையுஞ்சூட்டு.

299 - 301: திருமாவளவன் பகைவர்க்கு ஓக்கிய வேலும் கோலும் போலும், செல்ல நினைத்த கானமும் தலைவியின் தோளும் எனல்.

தெவ்வர்க் கோக்கிய
300. வேலினும் வெய்யகானம் அவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

பதவுரை:—(299) தெவ்வர்க்கு ஓக்கிய - பகைவரைக் கொல்லுதற்கு உயரவெடுத்த (300) வேலின்உம் - வேற்படையைக் காட்டிலும், கானம் - (யான் பொருள்தேடுமாறுசெல்லவேண்டிய நாட்டின் இடைவழியிலுள்ள) காடுகள், வெய்ய - கடியனவாயிருந்தன: (301) தட மெல் தோள் - (இவளுடைய) பெரிய மெல்லியதோள்களோ, (300) அவன் - அந்தத்திருமாவளவனுடைய, (301) கோலின்உம் - செங்கோலினும், தண்ணிய - குளிர்ந்திருந்தன;—(எ - று.)

பாட்டின் தலைமைப்பொருள், 'பட்டினம்பெறினும், வாரிருங்கூந் தல்வயங்கிழையொழிய, வாரேன்' என்பது: வாரேன்என்பதற்குக் காரணத்தைத் தெரிவித்தற்காக, "திருமாவளவன் தெவ்வர்க்கோக்கிய, வேலினும்வெய்யகானம் அவன், கோலினுந்தண்ணியதடமென் றோளே" என்ற இறுதி மூன்றடிகள் வந்துள்ளன: பட்டினத்தைச் சிறப்பித்தற்காக - முதல் இருநூற்றுப்பதினேழடிகளும், கானின் வெம்மையையும் தோளின் தண்மையையும் தெரிவித்தற்காக - திருமாவளவன் பகைவரைவென்று அவர்நாட்டைப் பாழ்படுத்தியமையையும் தன்நாட்டைச் சிறப்புறச்செய்தமையையும் விளக்குவனவாய் மற்றையடிகளும் வந்துள்ளன.

இங்ஙனம் 301 - அடிகளையுடைய இந்தப்பட்டினப்பாலையில் கூறும்பொருள், அகன்றுகிடப்பினும் ஊன்றிப்பார்க்குமிடத்து ஒன்றோடொன்று இயைபுற்றுக் கற்போர்மதிக்கு இயலுமாறு

அணுகித்தோன்ற அமைந்தது - மாட்டு என்னும் உறுப்பாம்: "அகன்று பொருள் கிடப்பினு மணுகிய நிலையினும், இயன்று பொருள்முடியத்தந்தன ருரைத்தல், மாட்டெனமொழிப பாட்டியல் வழக்கின்" என்ற தொல்காப்பியத்தாலறிக. ஒருபொருளைக்கூறு மிடத்து முன்னும்பின்னும் ஒன்றோடொன்று தொடர்புபட இன மான பொருள்களை உரிய இடங்களிற் சேர்த்து, இவ்வாறு கூறும் பொருளை ஒழுங்குபட உரைப்பது நல்லிசைப் புலவரின் இயல் பாகும்.

கொடுவரிக்குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு (221) இருந்து... முற்றி (222) யானைபிடிபுக்காங்கு (224) நண்ணார் (225) காப்பேறி வாள்கழித்து (226) தாயம் எய்தி (227), பெற்றவை மகிழ்தல் செய் யான் (228) போர் வேட்டு (234) உழிஞைசூடி (235), யானை (231) புரவியொடு (232) முரசம் (236) முழங்கச் (237) சென்று (238) வயவர் வீழ (232) நடப்பச் (233) சமம் முருக்கி (238), சென்றுதண்பணை யெடுப்பி (239), மான்பிணையுகளவும் (245) யானையொடுபிடிபுணர்ந் துறையவும் (251), ஓரி கதிர்ப்பவும் (257), ஆண்டலை விளிப்பவும், (258), பேய்மகள் துவன்றவும் (260), கூகை குழறவும் (268), ஊர் கவினழியப் (269) பெரும்பாழ்செய்தும் அமையானாய் (270) முன்னிய துறைபோகலின் (273), ஒடுங்க (274) கேட்ப (275) வாட, கூம்ப (276) திறல்கெட, சீறி (277) நோக்கி, (280) பொன்ற (281) சாய (282) காடு கொன்று நாடு ஆக்கி (283), பெருக்கி (284) போக்கி (285), குடிநிறீஇ (286) அமைத்து (287), புதை நிறீஇப் (288) பெயர் கொடுத்துப் (289) புறக்கொடாது (290) அரிமாவன்ன துப்பின் (298) திருமாவளவன் (299) என்க.

(இவளை உடன்கொண்டு செல்வோமெனின்) நெஞ்சே! (220) கானம் (300), திருமாவளவன் தெவ்வர்க்கு ஓக்கிய (299) வேலினும் வெய்ய (300): (இவளுடைய) தடமென்தோள், (301) அவன் (300) கோலினும் தண்ணிய (301): (ஆகையால்), முட்டாச்சிறப்பிற்பட்டி னம்பெறினும் (218) வார்இருங்கூந்தல் வயங்கிழையொழிய, (219) (நின்னுடன் யான்) வாரேன் (இனி, நீ அங்கேபோய்) வாழ்வாயாக (220) என முடிபு காண்க.

இம்மையில் மாந்தர்க்கு உறுதிபயக்கும் அறம்பொருளின்பங்க ளுள் இன்பம் அகமெனப்படும்.அகப்பொருளின்பகுதியாகியகுறிஞ்சி பாலைமுதலிய *ஐந்திணைகளும் முதல் கரு உரி என்று மூன்று

---

* தமிழிலக்கண நூல்களில் ஐந்திணைகட்கும் பகுக்கப்பட்ட முதல்கருஉரி என்ற மூன்றுபொருள்களுள் முதற்பொருள் நிலமும் காலமும்: கருப்பொருள் - தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ்முதலியன: உரிப்பொருள் - உரியவொழுக்கம்: அவை குறிஞ்சிக்குப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல்நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தல்நிமித் தமும், மருதத்துக்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தற்கு இரங்கலும் இரங்கல்நிமித்தமுமாம்.

பொருள்களாற் கூறப்படும். "முதல் கருவுரிப்பொருளென்ற மூன்றே; நுவலுங்காலை முறைசிறந் தனவே, பாடலுட்பயின் றவைநாடுங்காலை" என்ற தொல்காப்பிய வகத்திணைச்சூத்திரத்தையுங் காண்க. இச் சூத்திரத்தினுரையில் "முதலிற் கருவும் கருவினுரிப்பொருளும் சிறந்துவரும்' என்று கூறியவாறு முதற்பொருள் கருப்பொருள்களி லும் உரிப்பொருள் சிறத்தலால், இந்தப்பட்டினப்பாலையில் முதலும் கருவும்கூறாது உரிப்பொருளே கூறினார்: எங்ஙனமெனின்? வாரே னென்று தலைவன் முதலிற் கூறியது - தலைவியையாற்றுவித்துப் பின்பு பிரிதல் கருதி: "செலவிடையழுங்கல் செல்லாமையன்றே, வன்புறைகுறித்தல் தவிர்ச்சியாகும்" என்றசூத்திரத்தால், ஆசிரியர் தொல்காப்பியனார் 'தலைவன்செலவிடையழுங்குதல், பிரிந்துசெல்லா மைப் பொருட்டன்று: பின் எற்றுக்கு எனின்? தலைவியை யாற்று வித்துப் பிரிதற்குத் தவிர்ந்த தவிர்ச்சியாகும்' என்று கூறியிருத்தல் காண்க. ஆகவே, இங்குப்பிரிதல் நிமித்தமாகிய பாலையினுரிப் பொருள் வந்ததென்க.

ஏறக்குறைய ஆயிரத்துநானூறு சொற்களுக்கு மேற்பட்ட இந்தப் பட்டினப்பாலையில், கமுகு, நகர், கனம், சாலை, தவம், முனி, அங்கி, சடை, ஆவுதி, பூதம், வேலை, பருவம், தெய்வம், மஞ்சிகை, பலி, பதாகை, அமரர், புண்ணியம், தேஎம், சமம், கராம், கணம் முதலியவாக வடசொற்கள் வந்துள்ளன.

இதிலுள்ள உவமைகள் வருமாறு :—(30 - 31) பணைநிலைப்பிணிக் கும் புரவிகள் X அணைமுதற் பிணிக்கும்பஃறி: (35 - 38) மதிசேர்ந்த மகவெண்மீன் X உயர்கோட்டத்துப் பொய்கை: (48 - 50) நீருடிய களிறு X துகள்செழுமி மாசூட்டிய வெண்கோயில்: (66-69) நாண்மீன் விராய கோண்மீன் X பலருடன் குழீஇய பரதவர்: (78-81) நிடுகு நிரைத்துளஃகூன்றிய நடுகல்லி னரண் X நெடுந்தூண்டிலிற் காழ் சேர்த்திய குறுங்கூரை: (82 - 83) நிலவடைந்தவிருள் X மணன்முன் றிலில் உணங்கும் வலை: (95 - 97) மலையணைந்தகொண்மூ, தாய்முலை தழுவியகுழவி X தெறுநீர்ப்புணரியொடு தலைமணக்கும் யாறு: (104- 105) துறக்கமேய்க்கும் பெருந்துறை: (120 - 123) கதிர்ச்செல்வன் தேர்பூண்டமா X அசைவின்றி உல்குசெய்து இறைவன் பொருள் காக்கும் தொழின்மாக்கள்: (126 - 130) வான்முகந்தநீர் மலைப்பொழி தலும் மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பலும் X பலபண்டம் நீரினின்று நிலத்தேற்றலும் நிலத்தினின்று நீர்ப்பரப்பலும்: (136 - 141) வரைக் கவாஅன் வரையாடுவருடை X முன்றிலில் பண்டம் பொதி மூடைப் போரேறியுகளும் ஞமலியேழகத்தகர்: (148 - 150) துகிர் மேனி, மயி லியல், மானோக்கு, கிளிமழலை: (153-154) காந்தளந்துடுப்பிற்கவிகுலை X கூப்பிய (மென்சாயலோரின்) முன்கை: (161 - 168) கான்யாற்றுக் கரும்பினெண்பூ X மஞ்சிகைப் பணியத்துக் காழூன்றிய நிடுகின் துகிற்கொடி: (172 - 174) வெளிவிளக்குங்களிறு X புகார்த்திரைமுன் றுறைத்தூங்கு நாவாய்: (206-207) நெடுநுகத்துப்பகல் X நடுவுநின்ற நன்னெஞ்சு: (214 - 218) ஒக்கல்சென்றுதொக்க சாறயர்மூதூர் X

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப் புலம்பெயர்மாக்கள் கலந்தினி துறையும் பட்டினம்: (221 - 222) கொடுவரிக்குருளைகூட்டுள்வளர்தல் X திருமாவளவன்பிறர்பிணியகத்திருத்தல் : (223 - 227) பெருங்கை யானை குழிகொன்றுபிடிபுகுதல் X திருமாவளவன் திண்காப்பேறித் தாயமெய்தல்; (234 - 235) தூறிவர்துறுகல் X வேறு பல்பூளையொடு உழிஞைசூடிய யானை: (236) பேய்க்கணன்ன முரசம்: (298) அரிமா வன்ன வணங்குடைத்துப்பு: (299 - 300) திருமாவளவன் தெவ்வர்க்கு ஓக்கியவேல் X தலைவன் செல்லக்கருதிய கானம்: (300 - 301) திருமா வளவன்செங்கோல் X தலைவியின் தோள்.

இதில் தன்மை நவிற்சியாகக்கூறப்பட்டன வருமாறு:—(3-5) பஞ்ச காலத்தின் தன்மை, (5-7) காவிரியின் தன்மை, (8-12) புலத்தின் தன்மை, (13-15) சிறியஊர்களில் எருமைக்குழவி நெற்கதிருந்தி நெற் போர் நிழலிலே துயில்வதிதல், (16-19) ஊர்கள் தெங்குமுதலியவற் றைப் பெற்றிருத்தல், (20-25) முற்றத்து உலர்த்திய நெல்லைப் புட் கள் கவர மகளிர் அவற்றினைக் குழைகொண்டு எறிதலும், அங்ஙனம் எறிந்தவை சிறுவர்உருட்டுந் தேரைச் செல்லாமல்தடுத்தலும், (54-59) களரியின் தன்மை, (63-64) பரதவர் உணு, அணி, செயல் முதலியன, (74-76) பரதவரிருக்கும் புறச்சேரிவருணனை, (77-83) பரதவரின் முன்றிலின்தன்மை, (94) புலவுமணற்பூங்கானல், (98-100) தீதுநீங்கக் கடலிற் கடலாடுதல், மாசுபோகப் புனல்படி தல், (98-103) பரதவரின் பகல்விளையாட்டு, (106-115) கடைக்கங் குலின் தன்மை, (117-121) துயிலாற்சோர்ந்தநிலையிலும் சுங்கம் கொள்வோர் வேலாழி வியன்தெருவில் இறைவன்பொருளைக் காத்தல், (136-141) முன்றிலின் தன்மை, (142-145) உயர்மாடத்தின் தன்மை, (146-150) மகளிரின் வருணனை, (155-158) ஆவணத்தின் தன்மை, (159-183) பல்கொடிகள் விரவியிருக்கும் நகர்வரைப்பின் தன்மை, (184-193) மறுகின்வருணனை, (194-242) வாணிகரின் தன்மை, (229-231) யானையின் வருணனை, (239-270) திருமாவளவன் பகைவர் நாட்டைப் பாழ்படுத்தியதன் வருணனை முதலியன.

இதிலுள்ள பண்டைக்காலச்செய்திகள் வருமாறு: (20-25) மனை முன்னிடத்தி லுலர்த்திய நெல்லைப் புட்கவர மகளிர் குழை கொண்டு எறிதலும், எறிந்த அக்குழைகள்சிறுருருட்டும் முக்காற் சிறுதேரைச் செல்லவொட்டாது தடுத்தலும், (29-30) உப்பைக் கொடுத்து நெல்லைப்பெற்றுக்கொண்டு படகுவருதல், (40-41) மதிட்கதவில் அரசனது பொறியைப் பொறித்தல், (43) அறநிலைஇய அகனட்டிலிருத்தல், (51 - 52) எருத்தின்பல்சாலையிருத்தல், (54) சடைமுனிவரங்கிவேட்டல், (79) வீரர்க்குக் கல்நடுகை, (85-93) பரதவர் தன்மனைவிமாரொடு சுறவின்கோடு நட்டுத் தெய்வ வழிபாடு செய்து நிவேதித்த பொருளைத் தாம் கொள்ளல், (91) மகளிர் தழை யுடுத்தல், (110-125) சுங்கமாக்கள் சுங்கங்கொள்ளுதல், (133-136) ஏற்றுமதி இறக்குமதி சரக்குகளுக்கு அரசமுத்திரையிட்டுப் புறம் போக்குதல், (154-155) செவ்வேளுக்கு வெறியாடுதல், (163-168) பண்ணியத்து மஞ்சிகைக்குக் கொடி கட்டுதல்,வாலரிசிப் பலிசிதறுதல்,

(170 - 175) நாவாயிற் கொடிகட்டுதல், (176 - 180) கள்ளுக் கடையிற் கொடி கட்டுதல், (241) வென்றவர் மாற்றாரின் நாட்டு நீர் வாவியை நீர் தங்கவொட்டாது செய்தல், (252-254) கோடியர் நறும் பூத்தூஉய்த் தெருவில் முழவொடு நரம்பின் தீந்தொடையோர்த்தல் முதலியன.

வெண்பா.

முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால்—செய்ச்செய்
அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

(இ - ள்.) செய் செய் - வயல்கடோறும், அரி கால்மேல் - நெல்லரிந்த தாளின்மேல், தேன் தொடுக்கும் - (வண்டுகள் அருகே யிருந்த தாமரை முதலிய மலர்களிலிருந்து) தேனைக்கொணர்ந்து கூடுகட்டப்பெற்ற, ஆய் புனல் நீர் நாடன் - ஆராயத்தக்க மிக்க நீர்வளத்தையுடைய சோணாட்டிற்கு உரியவனான, கரிகாலன் - கரிகாற் சோழனுடைய, கால் - பாதம், நெருப்பு உற்று - (இளமையில்) நெருப்பைப் பொருந்தியதனால், மு சக்கரம்உம் அளப்பதற்கு நீட்டிய கால் - மூன்று லோகங்களையும் அளப்பதற்கு நீட்டிய அந்தக் காலானது, இ சக்கரம்ஏ அளந்தது - இந்நிலவுலகத்தையே யளந்தது; (எ - று.)

இப்பாட்டால், கரிகாலன் மூவுலகாளுந் தகுதியுடையோன் என்பது பெறவைக்கப்பட்டது. 'இச்சக்கரமே யளந்தது' என்றதால், இந்நிலவுலகமுற்றும் கரிகாலனின் ஒருகுடைக்கீழாயினமை பெறவைக்கப்பட்டது. இது அவன் வென்றிச் சிறப்புக் கிளந்தபடி. சக்கரம் - வட்டம்: வட்டவடிவுடைய உலகத்திற்கு, ஆகுபெயர். கழனிகளிலே நெல்லரிந்த தாளின்மேல் வண்டுகள் தேன் கூடு கட்டுமென அவன் நாட்டுவளனைச் சிறப்பித்துக் கூறியவாறு. நீர் நாடு - சோழநாடு: 'வான்பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத் தலைய கடற்காவிரி, புனல்பரந்து பொன்கொழித்த'லால் நீர்நாடாயிற்று: புனனீர்-ஒருபொருட்பன்மொழி. இந்த இறுதிவெண்பாவே, இப்பட்டினப்பாலைக்குப் பாட்டுடைத்தலைவன் திருமாவளவனெனப் படும் கரிகாற்சோழனே யென்பதை அறுதியிடுவதை நோக்க வேண்டுவது. மற்றும், கரிகாற்பெருவளத்தானைத் தலைவனாக் கொண்ட பொருநராற்றுப்படையின் இறுதியிலும் இந்த வெண்பா காணப்படுதலும் நோக்கத்தக்கது.

[ஸி. ஜெகந்நாதாசார்யர்.]

பட்டினப்பாலையின்

அரும்பதவகராதி முதலியன

அ

அகவுதல் - இசைத்தல், 156
அங்கி - அக்கினி, 54
அசைதல் - சோர்தல், இளைத்தல், 259
அட்டி - கொடுத்து, 203
அட்டில் - சமைக்குமிடம், அடுப்பு, 43
அடும்பு - ஓர் கொடி, 65
அணங்கு - தெய்வம், 187
அணங்குதல் - வருத்துதல், 298
அணைமுதல்-சார்ந்த தறி, அணையிடத்துத் தறி, தறியினிடம், 31
அதிர்தல் - எதிரொலியுண்டாக ஒலித்தல், 237
அந்தி - பகலும் இரவும் கூடும் காலம், 247
அமர்தல் - பொருந்துதல், 37
அமரர் - தேவர், 184
அயர்தல் - கொண்டாடுதல், 215
அரண் - காவலாயிருப்பது, 79
அரிகால் - நெல்லரிந்ததாள், (வெண்பா)
அரிமா - சிங்கம், 298
அருந்துதல் - உண்ணுதல், 13
அருவாளர் - அருவாளநாட்டார், 275
அலவன் - நண்டு, 101
அவிர்தல் - விளங்குதல், 54
அறுகை—அறுகு: ஐ-சாரியை, 256
அறு கோடு - அறுப்புள்ள கொம்பு, 245
அறை - பாசறை: மலைப்பக்கம், 237

ஆ

ஆண்டலை-ஆண்மக்களின் தலை போன்ற தலையையுடையதோர் பறவை, 258
ஆணை-ஆக்கினை: ஆஜ்ஞாஎன்ற வடசொல் பிராகிருதவழியாகச் சிதைந்து தமிழில் வந்த தென்பர் ஒரு சாரார்; 170
ஆயம் - கூட்டம், 213
ஆரம் - சந்தனம், 188
ஆலை - கருப்பஞ்சாறுகாய்ச்சுங் கொட்டில், 9
ஆவணம் - ஆபணம்: கடைத்தெரு, 158
ஆவுதி = ஆஹுதி: வடசொல், 55, 200

இ

இகல் - மாறுபாடு, 72
இகுத்தல் - விரித்தல், 259
இடைகழி - ரேழி அல்லது நடையெனப்படும், 144
இணர் - குலை, 18
இணைதல் - பொருந்துதல், 39
இயம்புதல் - ஒலித்தல், 157
இயல் - தன்மை, 149
இரலை - கலைமான், 245
இரியல்போதல் - நிலைகெட்டு ஓடிப்போதல், 56
இருமை-பெருமை, 72; கருமை, 90
இவர்தல் - படர்தல், 234
இளக்குதல் - அசைத்தல், 172
இறவு - ஒருமீன், 63
இறைவன் - அரசன், 120
இனம் - தொகுதி: வகுப்பைச் சேர்ந்தவர், 61

ஈ

ஈழம் - சிங்களம், 191

உ

உகளல் - குதித்தல், 245
உகிர் - நகம், 231
உகுத்தல் - உதிர்த்தல், வார்த்தல், 166
உணங்குதல் - உலர்தல், 22, 83
உணா - உணவு: நெல், 22
உரவுதல் - பரத்தல், 101
உரு - வடிவம், அழகு: இப்பொருள்களில் ரூபமென்ற வடசொல்லின் சிதைவு என்பர்: 36, 162; அச்சம். "உருவுட்காகும்" என்பது, தொல்காப்பியம், 171, 227
உல்கு - சுங்கம்: உல்குசெய்தல்- சுங்கப்பொருளை வசூலித்தல், 125
உவவு - பூர்ணிமை, 93
உழக்குதல் - கலக்கிவிளையாடுதல், 101
உழிஞை - சிறுபூளை: கொத்தானென்பர் புறப்பொருள் வெண்பாமாலை யுரையாசிரியர், 235
உற - நன்றாக, 70
உறந்தை - உறையூர், 285
உறழ் - வாது, 171
உறைத்தல் - துளித்தல், 152

எ

எஃகு - வேல், 78
எக்கர் - இடுமணல், 117
எடுப்புதல் - ஓட்டுதல், 239
எயில் - அரண், 278, மதில், 291
எயினர் - வேடர், 266
எழில் - எழுச்சி, அழகு, 231
எறுழ் - வலி, 294

ஏ

ஏமாத்தல் - மகிழ்தல், 195
ஏய்க்கும் - ஒக்கும், 104
ஏர் - அழகு, 294
ஏர்பு - எழுந்து: செய்புஎன்னும் வாய்பாட்டெச்சம், 67
ஏழகத்தகர் - ஆட்டுக்கிடாய், 141, மேழகத்தகர் என்பதும் இப்பொருளதே, ஏழகம் — ஏடகம்: வடசொல்.
ஏற்றை - அஃறிணையாண்பாற் பெயர், 140
ஏறு - இடபம், 46

ஒ

ஒக்கல் - சுற்றம், 214
ஒடுங்குதல் - வீரங்குறைதல், 274
ஒப்ப - ஒருதன்மையாக, 209
ஒருவேம் - தமியேம், 290
ஒல்குதல் - சாய்தல், 250
ஒளியர் - ஒளிநாட்டார், 274

ஓ

ஓதம் - நீர்ப்பெருக்கு, 98
ஓர்க்கும் - கேட்கும், 254
ஓரி - நரி, 257
ஓவம் - சித்திரம், 49

க

கடி - காவல், அச்சம் 229, 236
கடை - வாசல், 261
கடைக்கங்குல் - இரவின் கடையாமம், 115
கண்ணடைஇய - கண்ணடைத்த, 115
கண்ணி - முடிமேற்சூடும்மாலை, 109
கணம் - கூட்டம்: வடசொல், 259
கதிர்ச்செல்வன் - சூரியன், 122
கதிர்த்தல் - ஊளையிடுதல், "ஓரி அஞ்சுவரக் கதிர்ப்பவும்", 257
கதுப்பு - மயிர், 259
கதுவுதல் - கைப்பற்றுதல், 278
கந்து - தெய்வமுறையுந் தானம், 249
கமுகு - பாக்கு: க்ரமுகமென்ற வடசொல்லின் சிதைவு, 17

கராம் - முதலை: க்ராஹமென்ற வடசொல்லின் சிதைவென்பர், 242
கரிகாலன், (வெண்பா)
கருந்தொழில் - கொடுந்தொழில், 62
கலம் - படைக்கலம், 70
கலி - மனச்செருக்கு, 32
கலித்தல் - செருக்குதல், 62
கவண்கல் - கயிற்றில்வைத்து எறியுங் கல், 73
கவாஅன் - பக்கமலை, 138
கவிதல் - இடிதல், 223
கவின் - அழகு, 269
களரி - இடம், 59
கறிமூடை - மிளகுமூட்டை, 186
கனம்—கநகம்: (வடசொல்) பொன், 23

கா

காந்தள் - கார்த்திகைச் செடி, 153
காப்பு, பாதுகாவலாயிருப்பது, மதிள், காவலுள்ள இடம், 184, 226
காய்சினம் - காய்கின்ற வெகுளி, 122
கார்க்கரும்பு - பசுங்கரும்பு, 9
கால்-தூண், 111, 268; சக்கரம், வண்டி, 186; இடம், 23
காழ் - கோல், 80, 167; வயிரம், 222
காழகம் - கடாரம், 191
கானம் - காடு, 300
கானல் - கடற்கரைச்சோலை, 94

கி

கிடக்கை - பரப்பு, 37
கிடுகு - கேடகம், சட்டம், 78
கிளை - சந்ததி, 196

கு

குடவர் - மேல்நாட்டார், 276
குணகடல் - கீழ்கடல், 189
குரம்பை - சிறுவீடு, 198
குருளை - குட்டி, 221
குரூஉச்சுடர்-ஒளியுள்ள சுவாலை, 112
குழிகொல்லுதல் - குழியைத் தூர்த்தல், 223
குழீஇ - சேர்ந்து: குழுவுதல் சேர்தல், 69, 265
குழை - ஒருகாதணி, 23
குறங்கு - துடை, 146
குறுந்தொடை - அணுகவமைக்கை, 142

கூ

கூகை - கோட்டான்: கூகம்-வடசொல், 258
கூடல் - காவிரிகடலொடுகூடும் சங்கமத்துறை, 98
கூடு - நெற்கோட்டை, 15
கூதாளம் - வெண்டாளி யென்னும் செடிவகை, 85
கூம்பு - பாய்மரம், 175
கூம்புதல் - மனவெழுச்சி குறைதல், 276
கூழ் - உணவுப்பொருள், 163
கூளி - ஆண்பேய், 259

கெ

கெழு - பொருந்திய, 136, 162, 171
கெழுமி - பொருந்தி, 47

கே

கேணி - சிறுகுளம், திசைச்சொல், 51

கொ

கொடு - வளைவான, 23, 112, 140
கொடுவரி - புலி, 221
கொண்டி - மிக்கபொருள், 212
கொண்டிமகளிர் - சிறையாகக் கொள்ளப்பட்ட மகளிர், 246
கொண்மூ - மேகம், 95

கொள்ளை - விலை, 29, 266

கோ

கோட்டம் - கரை, கோயில், 36
கோடியர் - கூத்தர், 253
கோடு - கொம்பு, 86
கோண்மீன் - கிரகங்களாகிய நட்சத்திரம்: சூரியசந்திரரும் சாயாகிரகங்களான இராகு கேதுக்களும் நீங்க மற்றவை, 68
கோதை - மகளிரணியும் மாலை, 110
கோள் - குலை, 16

ச

சக்கரம் - உலகம் [ஆகுபெயர்], (வெண்பா)
சடை - ஜடா: வடசொல், 54
சமம்—ஸமரம்: வடசொல்: போர்: 238

சா

சாம்புதல் - வாடுதல், 12
சாய்தல் - குறைதல், 282
சாலை—ஶாலா: வடசொல், 52
சாறுஅயர்தல் - விழாநடத்தல், 215

சி

சிமையம் - உச்சி, 138
சிவல் - கௌதாரி, 77
சினை - கரு, 86

சீ

சீர் - சிறப்பு, 104

சு

சுடர் - ஒளி, 21

சூ

சூடு - சுடப்பட்ட இறைச்சி, 63
சூழ்தல் - பண்ணுதல், 102

செ

செய் - வயல், (வெண்பா)
செயிர்த்தல்-கோபித்தல், 280
செரு - போர், 72
செருந்தி - கோரை, 243
செவ்வேள் - முருகக்கடவுள், 154
செற்றோர் - பகைவர், 228
செறிதல்-நெருங்குதல், 146
செறிவு - நெருக்கம், 226
செறு - வயல், 244

சே

சேக்கும் - தங்கும், 58, 249

ஞ

ஞமலி-நாய்: பூழிநாட்டுத் திசைச்சொல், 140

ஞா

ஞாயில் - ஒரு மதிலுறுப்பு, 288

த

தகர் - யாட்டின்கடா, 141
தகைதல்- தன்னிடத்திலேகொள்ளுதல், 51
தகைப்பு - கட்டு, 143
தட - பெரிய, 301
தடிதல் - அறுத்தல், 176
தண்டலை - சோலை, 33
தலைமணத்தல் - கூடுதல்: [தலை- தமிழுபசருக்கம்], 97
தவ - மிக, 239
தழை - தளிர்முதலியவற்றாலியன்ற மகளிருடைவிசேடம், 91
தளி - நீர்த்துளி, 3

தா

தாது - மகரந்தப்பொடி, 152
தாஅய் - தாவி, பரந்து, 155
தாயம் - வமிசபரம்பரையாற் கிடைக்கும் பொருள், 227
தாழ் - தாழ்ப்பாள், 164
தாழ்தல் - தங்குதல், 53
தாள் - அடிப்பகுதி, 84; முயற்சி, 278
தானை - சேனை, 279

தி

திட்டை - மேடு, 60
திமில் - ஓடம், 112
திரிபுரிநரம்பு - திரித்து முறுக்கின நரம்பு, 254

திரு - இலக்குமி, 41, 291
திரை - அலை, 173
திளைப்ப - தழுவ, 296
திறல் - வலிமை, 277

தீ

தீது - பாவம், 99
தீந்தொடை - இனியஇசை, 254
தீம் - இனிய, 173

து

துகிர் - பவழம், 189
துகிற்கொடி - வெண்ணிறமுள்ள ஆடையினாலியன்ற கொடி, 168
துச்சில் - ஒதுக்கிடம், 58
துஞ்சுதல் - தங்குதல், 41; தூங்குதல், 195
துடி - ஒருபறை, 265
துடுப்பு - கணு, 153
துணை - கணவன், 106
துப்பு - வலிமை, 298
துய்த்தல் - அனுபவித்தல், 114
துயில்வதிதல் - உறங்குதல், 15
துவன்றுதல் - நெருங்குதல், 260
துறக்கம் - சுவர்க்கம், 104
துறுகல் - ஒருவகைக்கல், சிறுகுன்று, 234
துறைபோதல் - முற்றக்கற்றல், முற்ற முடித்தல், 169

தூ

தூ - தூய்மையான, 117
தூங்குதல் - அசைதல், 174
தூசு - ஆடை, 148
தூண்டில் - மீன்பிடிக்கும் பொருட்டு வலையுடன் இடப்படுவது, 80
தூது - கல், 58
தூறு - புதர், 234

தெ

தெவ்வர் - பகைவர், 299
தெறுதல் - சுடுதல், 10
தென்னவன் - பாண்டியன், 277

தே

தேஎம் - தேயம்: வடசொல், 216
தேம்ப - வாட, 4

தொ

தொகுதல் - கூடுதல், 215
தொடி-ஒருகையணி, 154, 295
தொடுதல் - தோண்டுதல், 284
தொடுதோல் - செருப்பு, 265
தொடை-படிகள், 142; யாழ், 254
தொல்லிசை - பழமையான கீர்த்தி, 121

ந

நகர் - மனை, 20, 57, 183
நசை - விருப்பம், 175, 205
நடுகல் - பொருது இறந்த வீரரின் பெருமை தோன்றுமாறு அவருருவம் செதுக்கப்பெற்று ஊன்றியகல், 79
நடுவு - பட்சபாதமில்லாத தன்மை, 207
நண்ணார் - பகைவர், 225
நந்துதல் - அவிதல், 247
நயந்தும் - விரும்பிப் பார்த்தும், 113
நறவு - கள், 180
நனை - அகலமுணர்த்தும் உரிச்சொல், 193
நனந்தலை - பரந்தஇடம், 193
நன்பகல் - பகலின் உச்சிவேளை, 268

நா

நாண்மீன்-அசுவினிமுதலிய நட்சத்திரங்கள், 68
நாப்பண் - நடு, 81
நாவாய் - மரக்கலம், 174

நி

நிரைத்து-வரிசையாக வைத்து, 78
நிழல்-நிழல், 15; அருள், 204

நீ

நீழல் - நிழலென்பதன் நீட்டல்; சாயை, 182

நு

நுகம்-வண்டிமாடுகளின் கழுத்தி லிடுங் குறுக்குக் கட்டை, 206

நே

நேரிழை - பொருந்தின அணிக லம், 22

நொ

நொடை - விலை, 180

நோ

நோன்தாள் - வலியமுயற்சி, 278

ப

பஃறகைப்பு - பல்தகைப்பு எனப் பிரிக்க, 143
பஃறி - ஓடம், 30 [201
பகடு-பெருமை, 52, 147; எருது,
பகர்ந்து-வெளிப்படையாக விலை கூறி, 211 [ஆணி, 206
பகல் - நுகத்தின்நடுவில்தைத்த
பசும்பதம் - புதியசோறு, 203
படப்பை - பக்கம், தோட்டம், 32
படிக்கால் - ஏணி, 142
பண்ணியம்-தின்பண்டம், 203
பணிபு-வணங்கி, 274 [சாலை, 31
பணை-மருதநிலம், 239; குதிரைச்
பணைநிலை-பந்தி [குதிரைச்சாலை] யிலே நிற்றல், 31
பதாகை-பெருங்கொடி: பதாகை - வட்டச்சொல், 182
பதி - ஊர்: ஊரிலுள்ளார்க்கு, ஆகுபெயர், 213
பம்பி - நெருங்கி, 256
பயன் - பிரயோசனம், 114; பொருள், 190
பரதவர் - நெய்தனிலத்து மாக்க ளில் ஒருசாரார், 112
பரி - செல்லுகை, 185
பருவம் - காலம், 128
பலி-தேவர்பொருட்டு இடப்படு வது: வடசொல், 165, 179 [53
பள்ளி - தவத்தினோருறைவிடம்,
பறழ்-குட்டி: இது, ஒருசார் வில ங்கிற்கு உரியது, 75

பா

பாக்கம் - கடற்கரையூர், 27

பி

பிடி - பெண்யானை, 224
பிணர் - சருச்சரை, 89
பிணி - கட்டு, 31
பிணியகம் - கட்டிப்போடப்பட்ட இடம், 222
பிணை - பெண்மான், 245
பிழி - கள், 89
பிளிறுதல் - ஒலித்தல், 236
பிறங்குதல் - விளங்குதல், 285

பீ

பீடு - பெருமை, 222

பு

புகர் - நிறம், 74
புகார் - காவிரிப்பூம்பட்டினம்,173
புணரி - கடலின்அலை, 97
புதவம் - அறுகம்புல், 243
புதவு - வாசல், 179
புதை - அம்புக்கட்டு, 288
புயல்மாறுதல் - பெய்கைதவிர் தல், 4
புரவி-குதிரை, 24, 31, 185, 232
புலம் - வயல், 12; நிலம், 217
புலவு - புலால்நாற்றம், 94
புழுக்கு - புழுக்கிய இறைச்சி, 64
புழை - சிறுவாயில், 144, 287
புறக்கொடுத்தல் = புறங்கொடுத் தல், அச்சத்தால்முதுகுகொடு த்தோடல், 71
புறச்சேரி-இழிகுலத்தோர் வசிக் கும் இடம், 76
புறவு - புறம்பு, 33
புன்றலை - சிவந்ததலை, 90
புனல் - நீர், 7, 100
புனனீர்நாடன், (வெண்பா)

பூ

பூதம் - [வடசொல்], 57

பெ

பெண்ணை - பனை, 18, 89
பெயர்கொடுத்தல் - வஞ்சினங் கூறுதல்;வஞ்சினத்தை நிறை

வேற்றின் பெயருண்டாமாதலால், வஞ்சினஞ்செய்தல் பெயர்கொடுத்தலெனப்பட்டது, 289

பே

பேஎம் - அச்சம், 255
பேணுதல் - இலட்சியஞ் செய்தல், 196, வழிபடுதல், 200

பொ

பொதிதல் - உள்ளேயிட்டுவைத்தல், 137
பொதியில் - அம்பலம், கோயில்: பொதுவில் என்பதன் மரூஉ, 249
பொதுவர் - இடையரான அரசர் 281; குறிஞ்சி மருதம் என்ற இவற்றிற்கு இடைப்பட்ட நிலமாகிய முல்லைநிலத்தில் வாழ்வதால் ஆயர்க்கு இடையர் பொதுவர் எனப் பெயர் வழங்கலாயிற் றென்பர்.
பொய்கை - மனிதரா லுண்டாக்கப்படாத நீர்நிலை, 242
பொருதல்-மாறுபடுதல், 46, 294
பொறி - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்துஇந்திரியம், 102: இலாஞ்சினை, அடையாளம், 40
பொறித்தல் - அடையாளஞ் செய்தல், 135
பொன்றுதல் - அழிதல், 281

போ

போக்கி-விரிவுறச் செய்து, 285
போகுதல் - நீள இருத்தல், 144
போந்தை - பனை, 74 [கதவு, 40
போர்க்கதவு - தம்முட்சேர்ந்த

ம

மகம் - ஒருநட்சத்திரம்; 35 [மகா-வடசொல்.]
மகிழ்தல் - உண்ணுதல், 108
மகிழ்தல் செய்யான், 228
மஞ்சிகை - பெட்டி, 163
மட்டு - கள், 108 [106
மடம் - அறியாமைக்குணம், 21,
மடிதல் - சோர்ந்திருத்தல், 93
மதன் - செருக்கு, 278
மதி - மதிப்பு, 136; சந்திரன், 35
மது - காமபானம், 108
மயங்குதல் - ஒன்றுதல், 193, 240, 244
மரபு - முறை, 105 [152
மருங்கு - குலம், 270, 282; பக்கம்,
மருண்டு - மயங்கி, 102
மருப்பு - தந்தம், 229
மலிதல் - மிகுதல், 98, 136
மலைதல் - சூடுதல், 65, 88
மழலை - கிரம்பாமென்சொல், 150
மறம் - வீரகுணம், 279
மறுகு - தெரு, 193
மன்றம் - பொதுவிடம், 255

மா

மா - குதிரை, 123; விலங்கு, 198; மாமரம், 18; கருமை, 34, 56, 91, 237, 241; பெருமை, 95, 116, 279
மாசு - அழுக்கு, 100
மாட்டிய - கொளுத்திய, 247
மாந்துதல் - பருகுதல், 89
மால் - பெரிய, 138

மி

மிழற்றுதல் - மென்மையாகச் சொல்லுதல், 264

மு

முட்டுதல் - தடைப்படுதல், குறைதல், 218
முதல் - அடி, 19 [214, 253
முதுவாய் - அறிவுவாய்தல்,
முரண் - மாறுபாடு, 37
முரலுதல் - ஒலித்தல், 156
முருகு - மணம், 37
முழுக்குழவி - பூரணமாக வளர்ந்த குழவி: எனவே, முற்பட்ட கன்று, 14
முற்றம் - முன்னிடம், 20
முற்றுதல் - நிரம்புதல், 296
முன்கை, 154
முன் வழி - முன்னிடம், 25 [197
முன்றில் - இல்லின் முன்னிடம்,

முன்றுள், 230 [டம், 173
முன்துறை - துறையின் முன்னி
முனி=முநி: மநநசீலன்: இருடி: வடசொல், 54
முனை - பகைப்புலம், 238
முனைதல் - வெறுத்தல், 55

மூ

மூடை - மூட்டை, 137

மெ

மெய் - உடல், 70 [248
மெழுக்கம் - மெழுகின இடம்,

மே [77

மேழகத்தகர் - ஆட்டுக்கிடாய்,
மேழி - கலப்பை, 205

மை

மை - குற்றம், 159

மொ

மொய்ம்பு-வலிமை, 72, 279 [216
மொழி - சொல். 42; பாஷை,

மோ

மோடு - வயிறு, 14

யா

யாணர் - புதுவருவாய், 32

வ

வசை - குற்றம், 1
வடவர் - வடநாட்டார், 276
வடிமணி - தெளிந்தமணி, 232
வடு - குற்றம், 208
வம்பலர் - புதியவர், 249
வயங்குதல் - விளங்குதல், 219
வயவர் - வீரர், 232
வரம்பு - எல்லை, 132
வரி - பலநிறம், 38
வரிமணல், 60
வருடை - ஓர்மிருகம், 139
வரை - மூங்கில், 138, மலை, 139
வரைப்பு-எல்லை, 183, மதில்,269
வலன் - வலப்பக்கம், 67
வலைஞர் - வலைகொண்டு மீன் பிடிப்பவர், செம்படவர், 197
வழி - வமிசம், 281
வளி - காற்று, 272
வளிநுழையும் வாய்-சாளரம்,151
வளைவாய்க்கூகை, 268
வறளடும்பு - வறண்ட அடும்பு: இடத்தின் வறட்சி அங்குத் தோன்றிய பொருள்மேலேற்றிக் கூறியது, உபசாரவழக்கு, 65

வா [தல், 208

வாய்மொழிதல் - மெய்ம்மைகூறு
வார் - நீட்சி, 219
வாரி - பொருள், 190
வால் - வெண்மை, 118, 165
வான் - மேகம், 5, 126; பெரிய, 38; விண், 272

வி

விசித்தல் - கட்டுதல்: பிணித்தல் - கட்டுதல்: விசிபிணி - இறுகக்கட்டின: மீமிசைச் சொல், 293
விசும்பு - ஆகாயம், 67
விடக்கு - மாமிசம், 176
வியன் - அகன்ற, 8, 20, 119
விராவுதல் - கலத்தல், 68 [181
விரைஇ-விராவி: விராவு-பகுதி,
விலைஞர்-விலைக்குவிற்போர், 198
விழவு - உற்சவம், 158
விளித்தல் - கூவுதல், 258
வினை - தொழில், 49

வீ [211

வீசுதல் - விலைக்குக்கொடுத்தல்,
வீழ்த்தாழை - விழுதையுடைய தாழை, 84; [வீழில்லாத் தாழை-தெங்கு.]

வெ

வெண்மீன் - வெள்ளியென்ற ஒரு பேரையுடைய சுக்கிரனென்னுங் கோள்: வெண்ணிறமுள்ள நட்சத்திரம், 1
வெளில் - கட்டுத்தறி, 172[155
வெறியாடுதல்- ஆவேசமாடுதல்,

வே

வேட்டம் - வேட்டை, 92
வேட்டு-விரும்பி, 231 [கடல்,119
வேலாழி - கடற்கரையையடுத்த

வை

வைகல் - நாள், 124

பட்டினப்பாலையில்

பாட்டுடைத்தலைவனைப்பற்றிய ஆராய்ச்சி.

இந்தப்பட்டினப்பாலையில் பாட்டுடைத்தலைவனைக் கூறுமிடத்துத் திருமாவளவன் என்று கூறப்பட்டுள்ளது: திருமாவளவன் என்பதற்குக் கரிகாற்சோழன் என்று பொருள் கூறியுள்ளனர் முன்னோர்: அதையொட்டியே பின்னுள்ளோரும் கூறி வருகின்றனர்: இக்காலத்து ஒருசார் ஆராய்ச்சியாளர் அது பொருந்தாது என்கின்றனர்.

அவர் கூறுகின்ற காரணங்கள்:—பிறப்பு. அரசவுரிமையெய்தியது, போரில்வென்றது என்ற இவைமுதலியவற்றைப் பார்ப்போமாயின் கரிகாற்சோழன்பெயர் வந்த இடத்துக் கூறியவற்றைக்காட்டிலும் திருமாவளவன் என்று பெயர்வந்துள்ள இடத்துக்கூறியவை வேறுவகையாக வுள்ளன: பொருநராற்றுப்படையாலும் அகநானூற்றுப் புறநானூற்றுச் செய்யுட்கள் சிலவற்றாலும் கரிகாற்சோழனைப்பற்றி அறியப்படுவன—கரிகாற்பெருவளத்தானாகிய இவன்—(1) உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னியின் புதல்வன்: (2) தாய் வயிற்றிருந்து தாயமெய்தியவன்:(3)பிறந்து தவழ் கற்றதற்றொட்டுச் சிறந்த நன்னாடு செகிற்கொண்டு நாடோறும் வளர்ப்பவன்: (4) பகைவரின் சூழ்ச்சியால் இளமையில் நெருப்புண்டு தப்பிக் கால் கரிந்தவன்: (5) பின்னரும் பகைவர் ஏவல்கேட்ப, ஏவல்செய்யாத பகைவர்நாடு தெருமந்து கவன்று கலங்க, நாடொறும் அருளும் ஆண்மையும் இலங்க ஆண்டவன். (6) வெண்ணிப் பறந்தலையில் சேரமானோடு பொருது அவனையும் ஒரு பாண்டியனையும் பதினொரு வேளிரையும் வென்றவன்: மற்றும், ஒருகால் வாகைப்போர்க்களத்தில் ஒன்பதுமுடிமன்னரை முறியடித்தவன்:

திருமாவளவன் என்ற பெயரோ பட்டினப்பாலையிலன்றி வேறு எங்கும் வரவில்லை: இங்குத் திருமாவளவனைப்பற்றிக்கூறியன வருவன:- வேங்கைக் குருளைக் கூட்டுள்வளர்ந்தாங்குச் சிறு பருவத்துப் பகைவர் சிறையகத்திருந்தான்: பிறகு தறுகண்மை முதிர்ந்து குழியில்வீழ்த்திய களிறு சினந்து கரையைக் கொம்பாற் குத்திக் குறைத்துக் குழியைநிரப்பி வெளியேறித் தன்பிடியோடு கூடுவது போல ஆழச்சூழ்ந்து பகைவரின் வலியகாவலை யடியறுத்துப் பகைவரைப்பொருது அடர்த்து அவர்வெளவிய தனது தாயத்தைத் தன்திறலால் வென்று கொண்டான்: அவ்வாறுமீட்ட நாட்டினாட்சி போதுமென்றுஅமையாதுவெகுண்டு முன் தன்னைத்தளைத்தவர்தம் தண்படப்பை நன்னாட்டில் படையெடுத்தேறி அரண்களை யெறிந்து ஊர்களையழித்து நாடுதொலைத்துப் பெரும்பாழ் செய்தான்: உறந்தையை விரிவுறச்செய்து கோயிலொடு குடிநிறுவினான் என்பவை முதலியன.

(7) மற்றும் அன்னுர், கரிகாற்பெருவளத்தானைத் திருமாவள்வ னென்று எங்கும் கூறியதில்லையென்றும், கலிங்கத்துப்பரணியில் பட்டினப்பாலைக்காகப் பதினுறு நூருயிரம்பொன் கொடுத்தவன் கரி காற்பெருவளத்தானே என்று கூறப்படவில்லையென்றும், பழமொழி யில் "சுடப்பட்டுயிருய்ந்த சோழன்" என்பதே கரிகாற்பெருவளத் தானைக் காட்டாகிற்றலால்,மகன்-அவனது மகனுகிய அல்லது வழித் தோன்றலாகிய திருமாவளவன் ஆவன் என்றும்,மற்றும் சிலவும் கட்டி யுரைக்கின்றனர். இப்பொருளைப்பற்றி எமக்குத் தோன்றுவன காட்டுகிறேம்: அறிஞர் நடுநிலையோடு ஆராய்ந்துதெளிக: மற்றும் எமக்குத் தெரியாதன இருப்பவற்றைத் தெரிவித்து எமது கொள் கையை மாற்றவேணுமென்ருலும் வரவேற்கின்றேம்.

(1) உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியின் புதல்வன் கரிகாற் சோழன் என்று பொருநராற்றுப்படையில் கூறியிருப்பப் பட்டினப் பாலையில் கூறவில்லையே: அன்றியும் (2) தாய்வயிற்றிருந்து தாய மெய்தினேன் என்பதும் இல்லையே யென்பனவற்றைப்பற்றிய ஆய்வு: —கரிகாற்சோழனைப்பற்றி அகநானூறு சிலப்பதிகாரம் பழமொழி முதலிய எத்தனையோ நூல்களில் வந்துள்ளன ஆராய்ச்சியாளரே காட்டியுள்ளார். அங்கெல்லாம் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியின் புதல்வன் கரிகாலன் என்று கூறியுள்ளதா? தந்தையின் பெயரைத் தவருது கூறவேண்டுமென்று யாரேனும் கட்டுப்படுத்தியுள்ளனரா? தாய்வயிற்றிருந்து தாயமெய்தினேன் என்றது, இவன் முன்னேரின் அரசைப் பெறுதற்குஉரியவன் என்ற கருத்தைக் காட்டுவதன்றி, தாய்வயிற்றிலிருந்தபடியே முடிசூடி அரசுபுரிந்தானென்ற கருத்தைக் காட்டுமா? கருவிலே திருவுடையவன் என்று அவனைச் சிறப்பிக்கக் கூறியதன்றி வேறு கருத்துக் கொள்ள முடியுமா? ஒருநூலில் ஒரு வனைப்பற்றிச்சிலபொருள்கள்கூறியுள்ளனவென்ருல்,அப்பொருள்களை இன்னெருநூலிற் கூருவிடின் அந்நூலிற் கூறப்பட்டவன் வேறு, இவன் வேறு என்னவேண்டுமா? கரிகாலனைப்பற்றிச் சிலப்பதிகாரத் தில் இமயத்தே புலிக்கொடி பொறித்தவன், வச்சிரநாட்டரசன் முதலியோரிடத்து முத்துப்பந்தர் முதலிய திறைபெற்றவன் முதலி யன கூறியிருக்க, பொருநராற்றுப்படையில் அவ்வாறு ஒன்றும் கூறவில்லையே! இதற்கு என் சொல்வது? இவையெல்லாம் கரிகால னுடைய பெருஞ்சிறப்பைக் காட்டா என்பரா? (3) பிறந்து தவழ் கற்றதற்றெட்டுச் சிறந்தனைடு செகிற்கொண்டு நாடு வளர்ப்பவ னென்பது பட்டினப்பாலையிலில்லையேயென்பதுபற்றிய ஆய்வு:—இத ஞல் பெறப்படுவது இளமையிலேயே அரசுபெற்றுனென்பது. இது கூறுமையால் திருமாவளவன் வேறுபட்டவனுவனு? கொடுவரிக் குருளை கூட்டுள்வளர்ந்தாங்குப் பிறர் பிணியகத்திருந்து பீடுகாழ் முற்றி...பெருங்கையானை பிடிபுக்காங்கு (பட்டினப்பாலை 221-224) என்றதனுல் திருமாவளவன் இளமையிலெல்லாம் சிறையிலேயே கிடந்தான் என்றுதான் கொள்ளவேணுமா? பழமொழியில் கரிகாலன் கருவூரிலிருக்கையில் கழுமலமென்னும் ஊரிலிருந்த யானையாற் கொண்டுவரப்பட்டு அரசாட்சியை யடைந்தானென்று கூறப்படு

வதால், பிறப்பதற்கு முன்னேயாவது பிறந்தஉடனாவது அரசைப் பெற்றுனென்பது துதிமொழியேயன்றி உண்மைப்பொருளல்ல என்பது பெறப்படுமன்றோ? (4) கரிகாலன் இளமையிலே நாடாண்டு பகைவென்றதல்லாமல் பகைவரால் தளைப்பட்டுத் தப்பின் செய்தி கேட்கப்படாதது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்; அதனைப்பற்றிய ஆய்வு:—அன்னாரே பகைவரின் சூழ்ச்சியால் சிறையுண்டு நெருப்பிலகப்பட்டுக் கால்கரிந்ததோடு தப்பியவன் எனக்கூறுகின்றாரே! இப்பொருளையே உருத்திரங்கண்ணனார் 'கூருகிர்க் கொடுவரிக்குருளை கூட்டுள்வளர்ந்தாங்குப் பிறர் பிணியகத்திருந்து பீடுகாழ் முற்றி, நண்ணார் செறிவுடைத் திண் காப்பேறி' என்று கூறுகின்றாரெனின் வரும் இழுக்கு என்னை? (5, 6) வெண்ணிப்போர் வாகைப்போர் வென்றிகள் குறிக்கப்படவில்லையே என்பதைப்பற்றிய ஆய்வு:—பட்டினப்பாலையில் 228 அடிக்குமேல் பகைவரை வெல்லுதல், அவர்நகரைப் பாழ்படுத்தல் முதலியனவும், " பல்லொளியர்பணிபொடுங்க.......குடவர்கூம்பத்தென்னவன்திறல்கெட,... இருங்கோவேள்மருங்குசாய " என்ற பகுதிகளால் வெண்ணிப்போர்வென்றி வாகைப்போர்வென்றி என்பனவும் கூறப்பட்டன எனின், வரும் இழுக்கு என்னை? முடத்தாமக்கண்ணியார் கூறிய வாறே கூறவேண்டுமென்பது உண்டோ?

இனி, (7) திருமாவளவன் என்பது கரிகாலனுக்குப் பேராக வழங்கவில்லையென்பதுபற்றிப் பார்ப்போம்: சிலப்பதிகாரத்து இந்திர விழவூரெடுத்த காதையில் " இருநிலமருங்கிற் பொருநரைப் பெறுஅச், செருவெங்காதலிற்றிருமாவளவன், வாளுங் குடையும் மயிர்க்கண் முரசும், நாளொடுபெயர்த்து நண்ணார்ப்பெறுக இம், மண்ணகமருங்கின் என்வலிகெழுதேர்ளெனப், புண்ணிய திசைமுகம் போகியவந்நாள்... இமையவருறையும் சிமையப் பிடர்த்தலைக், கொடுவரியொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு" என்ற இடத்து, திருமாவளவன் என்பதற்கு அடியார்க்குநல்லார் கரிகாலன் என்று உரை கூறியுள்ளதை ஆராய்ச்சியாளர் கண்டிலரோ? பொருநராற்றுப்படையின் முடிவிலே காணப்படும் மூன்று வெண்பாக்களில் இடைவெண்பாவில் இங்ஙனே கரிகாற்பெருவளத்தான் கூறப்பட்டிருத்தலும், மேலும் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டுச் சிலப்பதிகார மூலப்பிரதியில் "திருவின் செல்வியொடு பெருநில மடந்தையை, யொருதனியாண்ட செருவடு திண்டோள், கரிகாற் பெரும்பெயர்த் திருமாவளவனைப்,பாலை பாடிய பரிசிலன்றெடுத்த......" என்று இவ்வாருக அடிகள் வந்திருத்தலும் காணலாமே. இனி, கரிகாற்பெருவளத்தான் என்பதில் பெருவளத்தான் என்பதே மாவளவன் எனப்பட்டு, திரு என்பதை அடைமொழியாகப் பெற்று வந்தது என்று கொள்வதில் தவறுண்டோ? கலிங்கத்துப்பரணியில் ஒருசோழருக்கு ஒரு பாடல் வீதமே கூறியுள்ளதென்றற்குவேண்டிய ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. " சுடப்பட்டுயிருய்ந்த" என்ற பழமொழிப்பாட்டிற்கு ஆராய்ச்சியாளருரை ஏற்புடைத்தா என்பதும், அறிஞர் ஆராயவேண்டுவதே. 'பிடர்த்தலையார்' என்ற உறவினரோ

தொடர்புடையவரோ கரிகாற்பெருவளத்தானுக்கு இருந்ததாகத் தெரியவில்லையென்று கூறுகின்றார். ஓர் உரையாசிரியர் 'கரிகால னுக்கு மாமன் அழுந்தூர்வேள்' என்று கூறியதால், இரும்பிடர்த் தலையாரென்று அந்தக்கரிகாலனைச் சேர்ந்தார் எவருமில்லையென்று எப்படிச் சாதிக்கலாம்? அன்றியும், இப்பாடலில் நெடுநாள் இராச்சி யத்தையிழந்திருந்து முதுமையில் அரசு எய்தினன் என்று கூறி யுள்ளதோ? மேலும் சுடப்பட்டு உயிருய்ந்த சோழனாகியகரிகாலனுக்கு மகன் திருமாவளவன் என்று கூறி, அதனைச்சமர்த்திக்க வேற்றுப் பொருள்வைப்பணியாக "இல்லை உயிருடையாரெய்தாவினை" என வந்துள்ளதுஎன்றால், பொருட்பொருத்தமுறும்? சுடப்பட்டு உயி ருய்ந்தகரிகாற்சோழனைவிட அவன் மகன்வேறு ஆனால், இப்பழ மொழியின் ஈற்றடி எதற்காக வந்தது? "சோழன் மகன்" என்ற இடத்து "நகைக்கூட்டஞ் செய்தான் அக்கள்வன் மகன்" என்ற இடத்திற்போல 'சோழனாகிய மகன்' என்று இருபெயரொட்டாகப் பொருள்கொள்ளவேண்டுமேயன்றி 'சோழனுக்கு மகன்' என்று வேற்றுமைத் தொகையாகப் பொருள்கொள்ளலாகாது. கொள்ளின், பொருள் பொருத்தமுறுமாறு இல்லை. ஊன்றிப் பார்க்குமிடத்து, திருமாவளவன் வேறு கரிகாலன் வேறு என்றுகொள்ளவேண்டிய அவசியமிருப்பதாகத் தோன்றவில்லை.

இனி ஆராய்ச்சியாளர் கூறுமாறு திருமாவளவன் என்று சிறப் புறக் கரிகாற்பெருவளத்தானுக்கு மகனாக ஒருவன் இருந்தான் என்று கொள்வதற்கு, அன்னார் நூல்வாயிலாகவோ, கல்வெட்டின் மூலமாகவோ தமது கொள்கையை நிலைநாட்டத்தக்க வலியுடைச் சான்று காட்டவேண்டும்: இப்பொறுப்பை நிறைவேற்றுதவரையில் அன்னார் கூற்று வெற்றுக் கூற்றேயென்று கருதவேண்டிவரும்.

இந்தப் பட்டினப்பாலை அச்சாகுங்கால் இப்பதிப்பினைப் பார்வையிட்டுப் பிழைதிருத்திச் செம்மையுற ஆக்கியதோடு தமக்குத் தோன்றிய நுண்ணிய கருத்துக்களையும் சேர்த்து உதவியவர், சென்னை விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் வித்வான். C. ஜெகந்நாதாசார்யர், M. A. (Hist), M. A. (Tamil), L. T., P. O. L., Dip-in-Geog. ஆவர்.

மலைபடுகடாம்

மலைபடுகடாம் என்ற இது, பத்துப்பாட்டினுள் பத்தாவது.

பத்துப்பாட்டுக்களாவன:—திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. பத்துப்பாட்டு என இவை பத்தினையும் ஒன்று தொகுத்தவர் இன்னாரென்பது விளங்கவில்லை. இந்த மலைபடுகடாம்—583 அடிகளைக் கொண்ட நேரிசையாசிரியப்பாவால் இயன்றது. இதனைக் *கூத்தராற்றுப்படை எனவும் வழங்குப: பரிசில் பெற்று வருமவன் எதிர்ப்பட்ட கூத்தனை, "கண்ணுளர் ஒக்கல் தலைவ!" என விளித்து நன்னன்சேய் நன்னனிடத்து ஆற்றுப்படுத்தியதாகச் செய்யப்பட்டிருத்தலின், இப்பெயர் பொருந்துவதே; இந்தக் கூத்தராற்றுப்படை, புறப்பொருளான பாடாண்திணையின் துறைகளுள் ஒன்று; இதன் இலக்கணம்:—கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்று தொல்காப்பியத்துக் கூறப்பட்டுள்ளது; [இதன் பொருள்:—ஆடல் மாந்தரும் பாடற்பாணரும் கருவிப்பொருநரும் என்ற ஆண்பாலாராகிய இவரும் பெண்பாலாகிய விறலியும் என்னும் நாற்பாலாரும் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர் வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும் என்பது.] "ஏத்திச் சென்ற இரவலன், கூத்தரை யாற்றுப்படுத்தன்று" என்றது புறப்பொருள் வெண்பாமாலைக்கொளு. கூத்தராயினார் - எண்வகைச் சுவையும் மனத்தின்கட்பட்ட குறிப்புக்களும் புறத்துப் போந்து புலப்பட ஆடுவோராவர். இந்நூலுள், "மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப" என்ற வரிக்கு (348) உரை வகுக்குமிடத்து நச்சினார்க்கினியர், "மலைக்கு யானையை உவமித்து அதன்கட்பிறந்த ஓசையை கடாமெனச் சிறப்பித்தவதனால், இப்பாட்டிற்கு மலைபடுகடாம் என்று பெயர் கூறினார்" என்றார். இங்ஙனம், பாட்டொன்றனுள் அமைந்த விழுமிய தொடரால் அப் பாட்டுக்குப் பெயர்வைக்கும் மரபினைப் பதிற்றுப்பத்தினுள்ளுங் காணலாம்.

---

*சேனாவரையர் கூத்தராற்றுப்படை என்றனர் (தொல்: எச்சவியல்: சூ. 66. உரை); இளம்பூரணரும், "திருமழை தலை இய விருணிற விசும்பு" என்னுங் கூத்தராற்றுப்படை பரந்த மொழியான் அடிநிமிர்ந்து வந்தது" (தொல்: செய்யுளியல்: சூ. 230 உரை) என்றார். எனவே, மலைபடுகடாம் தோல் என்னுஞ் செய்யுளாம் என்றுயிற்று.

இந்நூல், பெருங்கௌசிகனார் என்ற நல்லிசைப் புலவர்பெருமானால் இயற்றப்பட்டது. இவர் அந்தணர் என்பதை "ஊரும் பெயரு முடைத்தொழிற் கருவியும், யாருஞ் சார்த்தி யவையவை பெறுமே" என்ற தொல்காப்பிய மரபியற்சூத்திரத்தினுரையிற் பேராசிரியர், "உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூர் உருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரியன" என்று உரைத்திருத்தலாலுணர்க. இவர், இந்நூலையன்றி நற்றிணையில் இரண்டு செய்யுட்கள் (44,139) இயற்றியுள்ளதாகத் தெரிகிறது. இவரது ஊர்—இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் என்பது. இவர் இந்நூல்கத்து, பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனைப் பாடியுள்ளார். இந் நன்னன் வேளிர் குடியினன்; பல்குன்றக்கோட்டம் தொண்டைமண்டலத்தது; செங்கண்மா என்பது இவனது தலைநகரமாகும். சேயாறு பிறக்கும் நவிரமலை இவனுக்குரியது. இந்நூலில், பேரியாழின் இயல்பும், இசைக்கருவிகளும், கடந்த வழியினியல்புகளும், பாணர்விறலியர் இயல்புகளும், ஆற்றுப்படுத்தும் வழியிலுண்டாம் நன்மை தீமைகளும், பெறலாகும் உணவுப்பொருள்களும், தங்குமிடங்களும், மலையிடத்தெழும் பலவகையோசைகளும், மலையூர் வளமும், காரியுண்டிக் கடவுள்பெற்றிமையும், நடுகல்வணக்கமும், ஆயர்வேட்டுவர் காட்டும் உதவியும், சேயாறு, மூதூர் இவற்றினியல்புகளும், நன்னனின் நற்பண்புகளும், நன்னன் முகமன்கூறி வரவேற்றுப் பரிசிலீந்து விடுத்தலும் இன்னோரன்னபலவும் சிறப்புறக் கூறப்பட்டுள்ளன. உயர்வுநவிற்சியணியில்லாமல், இயற்கையை உவமையாலும், தன்மைநவிற்சியாலும் சித்திரமெழுதிக் காட்டினாற்போலக் கற்போர் மனத்திற் பதியுமாறு கூறுவது சங்கச் செய்யுளிலுள்ள ஒருசிறந்த தன்மையாதலால், இதனிலும் அவ்வாறான தன்மையுள்ளது என்பது கூறாமலே பெறப்படும்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இந்த மலைபடுகடாத்துக்கும் சிறந்த உரை எழுதியுள்ளார்; பெரும்பாலும் அவ்வுரையை ஆதாரமாகக் கொண்டு, பயில்வார்க்கு விளங்குமாறு எளிய நடையில் இவ்வுரை எழுதப்படுகின்றது.

அடிகள் 1—50 ஒரு தொடர்: அவற்றுள் 1—13 வரையுள்ள அடிகள்—பரிசில் நாடுங் கூத்தனும் அவன் சுற்றமும் இசைக் கருவிகளைக் கலப்பையிலிட்டுத் தம்மிலொத்த கனத்தவாய்க் காத்தண்டிற் கட்டிக் காவினமை கூறும்.

திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்

இளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவருந் தீங்குழல் துதைஇ
நடுவுநின் றிசைக்கும் அரிக்குரற் றட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வாய் எல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர் ..

(இதன் பொருள்) :—(1) *திரு மழை தலைஇய* - செல்வத்தை யுண்டாக்கும் மழையைப்பெய்த, *இருள் நிறம் விசும்பின்* - இருண்ட நிறத்தையுடைய மேகத்தினது, (2) *விண் அதிர் இமிழ் இசை கடுப்ப* - ஆகாயத்திடத்திலே நடுங்க நின்று முழங்கும் ஓசையை யொப்ப, *பண் அமைத்து* - பண்கள் தன் கண்களிலே உண்டாக்கப் பட்டு, (3) *திண் வார் விசித்த முழவொடு*-திண்ணிய வாரால‌ே இறுக வலித்த மத்தளத்தோடே, *ஆகுளி* - சிறு பறையும், (4) *நுண் உருக் குற்ற விளங்கு அடர் பாண்டில்* - கரைய உருக்குதலுற்ற விளங்கின தகடாகத் தட்டின கஞ்சதாளமும், (5) *மின் இரும் பீலி அணி தழை*- விளங்குகின்ற கரிய பீலியாகிய அழகினையுடைய தழையைக் கட்டின, *கோட்டொடு* - கொம்போடே, (6) *கண் இடை விடுத்த* - கண்களின் நடுவே வெளியாகத் திறந்த, *களிறு உயிர் தூம்பின்* - யானையின் கைபோலும் நெடுவங்கியத்தோடே, (7) *இளி பயிர் இமிரும் குறு பரம் தூம்பொடு* - இளியென்னும் நரம்பினுடைய ஓசையைத் தானொலிக் கும் குறிய மேலாகிய தூம்போடே, (8) *விளிப்பது கவரும் தீ குழல் துதைஇ* - பாட்டைச் சுருதி குன்றாமற் கைக்கொண்டு நிற்கும் இனிய குழலும் நெருங்கப்பட்டு, (9) *நடுவு நின்று இசைக்கும்* - கண் களுக்கு நடுவே நின்றொலிக்கும், *அரி குரல் தட்டை* - தவளையினது குரலையுடைய தட்டைப் பறையும், (10) *கடி கவர்பு ஒலிக்கும்* - விளக் கத்தையுடைத்தாகிய தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும், *வல் வாய் எல்லரி* - வலிய வாயையுடைய சல்லியும், (11) *நொடி தரு பாணிய பதலையும்* - மாத்திரையைச் சொல்லும் தானத்தையுடைய ஒருகண் மாக்கிணையும், *பிறவும்* - கூறாத [ஏனைய] வாச்சியங்களும், (12) *கார்கோள் பலவின் காய் துணர் கடுப்ப* - கார்காலத்தாலே பழுத் தலையுடைய பலாவினது காயை மிகவுடைய தொத்தை யொப்ப, (13) *நேர் சீர் சுருக்கி* - தம்மிலொத்த கனத்தையுடையவாகக் கட்டி, *காய கலம் பையிர்* - காவின வாச்சிய முட்டுக்களையுடைய பையை யுடையிராய்; (எ - று.)

(3) முழவொடு ஆகுளியும் (4) பாண்டிலும் (5) கோட்டொடும் (6) நெடுந்தூம்பொடும் (7) குறுந்தூம்பொடும் (8) குழலும் (9) தட்டை யும் (10) எல்லரியும் (11) பதலையும் பிறவும் (8) துதைஇ (13) அவற் றைச் சுருக்கிக் காய கலப்பையிர் என முடிக்க.—இது, மேல் (20) இயவுக்கொண்டொழுகி என்பதோடு இயையும்.

கருத்துரை :—ஆகாயத்திடத்திலே நடுங்க நின்று முழங்கும் மேகத்தினது ஓசையை யொப்பத் தன் கண்களிலே பண்கள் உண் டாக்கப்பட்டுத் திண்வார் விசிக்கப்பட்ட மத்தளமும், சிறு பறை

யும், நன்கு உருக்கித் தகடாகத் தட்டின கஞ்சதாளமும், மயிற்பீலி கட்டின கொம்பும், கண்களின் நடுவே வெளியாகத் திறந்த யானையின் கைபோலும் நெடுவங்கியமும், இளி நரம்பினோசையைத் தானொலிக் கும் குறுந்தூம்பும், பாட்டைச் சுருதி குன்றுமற் கைக்கொண்டு நிற் கும் இனிய குழலும், தவளையினது குரலையுடைய தட்டைப்பறை யும், தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும் சல்லியும், மாத்திரை யைச் சொல்லும் தானத்தையுடைய ஒருகண்மாக்கிணையும், இன் னோரன்ன ஏனைய வாச்சியங்களும் நெருங்கப்பட்டுப் பலாவினது காயை மிகவுடைய தொத்தையொப்பத் தம்மிலொத்த கனத்தவாய்க் கட்டப்பட்டு, வாச்சிய முட்டுக்களையுடைய பையினைக் காவினராய் வருகின்றனர் கூத்தர் தலைவனும் அவனுடைய சுற்றமும் என்பது கருத்து.

விசேடவுரை:—'திரு' என்றது மங்கலத்தொடக்கம்: "பூமலை கார் திருக்கடனீர்......முதன்மொழிச் சீர்க்காகும்" என்றது சிதம் பரப்பாட்டியல். திருமழை - செல்வத்தையுண்டாக்கும் மழை: வானோர்க்குச் சிறப்பொடு பூசனை செல்வதும், வியனுலகத்துத் தானம் தவம் இரண்டும் தங்குவதும், யார்யார்க்கும் உலகியல் நீரிலைமைவதும் நோக்கித் 'திருமழை' என்றது. விண் அதிர் என்று நடுக்கங்கூறவே, மிக்கவொலியென்பது பெறப்பட்டது. மேகத்தின் முழக்கம் முழவின் கண்ணிடத்தெழும் ஓசைக்கு உவமை: "முழவதிர மழையென்றஞ்சி" (சம்: தேவாரம்), "மந்தமுழ வோசை மழையாக வெழு" (பெரியதிருமொழி: 5:10:7) என்பனவும் ஒப்பு நோக்குக. "இடக்கண் இளியா வலக்கண் குரலா, நடப்பது தோலியற் கருவியாகும்" என்பதனற் 'பண்ணமைத்து' என்றார். ஆகுளி - சிறுபறை. செவ்வன் உருக்கித் தகடாகத்தட்டின கஞ்ச தாளம் என்பார் "நுண்ணுருக்குற்ற விளங்கடர்ப் பாண்டில்' என்றார். அடர் - தகடு. பாண்டில் - கஞ்சதாளம்: கஞ்சம் - வெண்கலம். கோடு - ஊதுகொம்பு. இதனொடு கட்டப்பட்ட பீலித் தழை குஞ்சம் கட்டியதுபோல் அமைந்துளதென்க. தூம்பு - நெடு வங்கியம்: இது, கண் திறக்கப்பட்டு, யானையின் கைபோலும் வடிவையுடையது. "கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்" என்றது புறமும் (152). உயிர் - துதிக்கைக்கு ஆகுபெயர்; உயிர்த் தலையுடைய மூக்காதலின், துதிக்கை இங்கே உயிரெனப்பட்டது. இனி, யானை நெட்டுயிர்ப்புக்கொண்டாற்போலும் ஓசையையுடைய என்னவுமாம். இப்பொருள்கொள்ளுமிடத்து "நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை, இயம்புணர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்" என்ற ஐங்குறுநூறும் (377) "ஒய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை, தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்" என்ற அகமும் (111) ஒப்புநோக்குக. குறுந்தூம்பு இளி நரம்பினோசையைத் தானொலித் தலின், "இளிப்பயிரிமிரும் குறும்பரந்தூம்பு" என்றது. பயிர்தல் - தழைத்தல். விளிப்பது - பாடுவது: எனவே, பாட்டு. விளித்தல் என்ற சொல் இப்பொருள்பட வருதலை "கொம்பரிருங்குயில் விளிப்பது காணாய்" (மணிமேகலை: 4:13) என்பதாலும், "விளித்த வின்னமிர்துறழ்கீதம்" (சீவக: 1941) என்பதாலும் உணரலாம்,

'விளிப்பது கவரும்' என்றது, பாட்டைச் சுருதிகுன்றுமற் கைக்கொண்டு நிற்றல் தெரிப்பது. அரி - தவளை; தவளையின் குரலையுடையது தட்டைப்பறையென்பதை, "இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை, தட்டைப் பறையிற் கறங்கு நாடன்" என்ற குறுந்தொகைச்செய்யுளாலும் அறிக (193). இனி, நடுவு நின்று இசைக்கும் - தாளமானத்திடையே நின்றொலிக்கும், அரி குரல் தட்டை - அரித்தெழுகின்ற ஓசையையுடைய கரடிகை யென்றுமாம். கரடிகை - கரடி கத்தினாற்போலும் ஓசையுடைத்தாதலாற் பெற்ற பெயர் என்ப. எல்லரி - சல்லி; சல்லென்ற ஓசையுடைத்தாதலாற்பெற்ற பெயர்; சல்லிகை எனவும் படும். நொடி - மாத்திரை: காலநுட்பம் தெரிப்பது: "கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை" (தொல். எழுத்: 7) பதலை - ஒருகண் மாக்கிணை; "பதலை யொருகண் பையென இயக்குமின்" என்றது புறம் (152). பிறவும் என்றது - தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி இவ்வகையினவற்றுள் ஈண்டுக் கூறுதொழிந்தனவற்றை. நேர்சீர் சுருக்குதல் - ஒத்த கனமுடையவாய்க் கட்டுதல். காத்தண்டின் பாரம் இருதலைக்கண்ணு மொப்பின் இனிதாதலை "காப்போல இருதலை யானு மினிது" (குறள் 1196) என்றதாலறிக. கலப்பை - வாத்தியம் முதலியன வைக்கும் பை: "காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை" என்றது புறமும். இனி, கலப்பை - யாழ் முதலியவற்றையுமிட்ட பெட்டிகள் என்றனர் நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணியில். (செ. 864).

இலக்கணக்குறிப்பு :—காய, கா என்ற வினைப்பகுதியினடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். கலப்பை என்ற பெயரினொடியையும். கலப்பையிர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று.

அடிகள் 14—20:—கூத்தனும் அவன் சுற்றமும் நடந்து வந்த வழியியல்பு கூறும்.

கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பிற்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்துநிறுத் தன்ன இட்டருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவர்
இடுக்கண் செய்யா தியங்குநர் இயக்கும்
அடுக்கன் மீமிசை யருப்பம் பேணாது
இடிச்சுர நிவப்பின் இயவுக்கொண் டொழுகி

(இ - ள்.) (14) கடு கலித்து எழுந்த - கடுமரம் மிக்கு வளர்ந்த, கண் அகல் சிலம்பில் - இடமகன்ற பக்க மலையில், (15) படுத்து வைத்தன்ன பாறை மருங்கில் - படுத்து வைத்தாற்போன்ற ஒத்த நிலமாகிய கற்பாறையின் பக்கத்தில், (16) எடுத்து நிறுத்தன்ன இட்டு அரு சிறு நெறி - (நிலத்தே கிடக்கின்ற வழியை) எடுத்து நிறுத்தினாற் போன்ற இட்டிய அரிய சிறிய வழியை, (17) தொடுத்த

வாளியர் - தொடுத்த அம்பினையுடையராய், துணை புணர் கானவர் - தம் மனைவியரோடு கூடியிருக்கின்ற கானவர், (18) இயங்குநர் - வழி போவாரை, இடுக்கண் செய்யாது இயக்கும் - வருத்துதலைச் செய்யாமல் வழிபோக்கும், (19) அடுக்கல் மீமிசை-மலையிடத்து மிக்க உயர்ச்சியில், (20) இடி சுரம் நிவப்பின் இயவு - கல்லையிடித்த அருநிலத்தில் உயர்ந்த வழியை, (19) அருப்பம் பேணாது-போதற்கு அரிதாகக் கருதாதே, (20) கொண்டு ஒழுகி - (போதக்கடவே மென்று) நெஞ்சாலே கொண்டு நடந்து; (எ - று.)

(14) சிலம்பிற் (15) பாறைமருங்கிற் (16) சிறுநெறியைக் (17) கானவர் (18) இயக்கும் (20) சுரத்தில் இயவுக் கொண்டொழுகி என முடிக்க.—இது, மேல் (46) நிற்புறஞ்சுற்ற என்பதோடு இயையும்.

கருத்துரை :—கடுமரங்கள் மிக்கு வளர்ந்துள்ள பக்கமலையில் கற்பாறையின் பக்கத்தில், நிலத்தே கிடக்கின்ற வழியை எடுத்து நிறுத்தினாற்போன்ற இட்டிதாகிய அரிய சிறிய வழியைத் தொடுத்த அம்பினராய்த் தம் மனைவியரோடு கூடியிருக்கின்ற கானவர் இயங்குநரைத் துன்புறுத்தாது வழிபோக்கும் மலையிடத்து மிக்க உயரத்திலுள்ள கல்லையிடித்தாக்கிய அருஞ்சுரநெறியைப் போதற்கரிதெனக் கருதாது, போதக்கடவேமென நெஞ்சாலே துணிந்து நடந்தனர் கூத்தனும் அவனது சுற்றமும் என்பது கருத்து.

விசேடவுரை :—கடு - கடுமரம்: கடுக்காய் மரம்: எட்டியுமாம். படுத்து வைத்தன்ன பாறை - சமநிலமாகிய கற்பாறை என்றபடி. பாறை மருங்கிற் செல்லும் செங்குத்தாய சிறுநெறி, சமநிலத்திலே கிடக்கின்ற வழியை நேரே தூக்கிச் செங்குத்தாய் நிறுத்திவைத்தது போலத் தோன்றுகிறது என்பார் "எடுத்து நிறுத்தன்ன இட்டருஞ் சிறுநெறி" என்றார். தேவரும், "செல்வர் மனத்தி னேங்கி......சிறியார் கொண்ட தொடர்பிற் செல்லச் செல்ல அஃகுநெறி" என்றதுங் காண்க. இட்டு-இட்டிதாகிய: சிறிதாகிய. எனவே, இட்டருஞ் சிறுநெறி என்பது - ஏறுதற்கரிய மிகவொடுங்கிய சிறிய வழியைக் குறித்தது. கானவர் வழிபோவாரை இடுக்கண் செய்யாது வழிபோக்குதல் வேள் நன்னனின் செங்கோற் சிறப்புக்குச் சான்றாகும். அருப்பம் - அருமை. இடிச்சுர நிவப்பின் இயவு என்றது - கல்லையிடித்து ஆக்கிய வழியை. இயவு - வழி.

இலக்கணக் குறிப்பு :—இட்டு - இட்டிமை, பகுதி. மீமிசை - ஒருபொருட்பன்மொழி.

அடிகள் 21—40:—கூத்தனுடு சுற்றமாய்வந்த பாணரியல்பு கூறும். அவற்றுள் அடிகள் 21 முதல் 37 வரையுள்ள பகுதி, பேரியாழின் உறுப்பமைப்பைக் கூறும்.

தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவின்
கடிப்பகை யணைத்துங் கேள்வி போகாக்
குரலோர்த்துத் தொடுத்த சுகிர்ப்புரி நரம்பின்
அரலை தீர வுரீஇ வரகின்

குரல்வார்ந் தன்ன நுண்டுளை யிரீஇச்
சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி
இலங்குதுளை செறிய ஆணி முடுக்கிப்
புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால்
மடந்தை மாண்ட நுடங்கெழி லாகத்து
அடங்குமயி ரொழுகிய அவ்வாய் கடுப்ப
அகடுசேர்பு பொருந்தி அளவினிற் றிரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி
நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிளர் உருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்
அமைவரப் பண்ணி அருணெறி திரியாது
இசைபெறு திருவின் வேத்தவை யேற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணரொடு

(இ - ள்.) (21) தொடி திரிவு அன்ன-தொடியினது உறழ்ச்சியையொத்த உறழ்ச்சியையுடைய, தொண்டு படு திவவின்-ஒன்பது என்னும் எண் உண்டான வார்க்கட்டினையும், (22) கேள்வி [அனைத்தும்] போகா - நூற்கேள்வி அடைய முற்றுப்பெற்று, கடிப்பகை யனைத்தும் - வெண்சிறுகடுகளவும், (24) அரலை தீர உரீஇ - கொடும்பு இல்லையாம்படி தீற்றி, (23) குரல் ஓர்த்து தொடுத்த சுகிர் புரி நரம்பின் - ஓசையை ஓர்ந்து பார்த்துக் கட்டின வடித்து முறுக்கின நரம்பினையும், (24) வரகின் (25) குரல் வார்ந் தன்ன நுண் துளை - வரகின் கதிர் ஒழுகின தன்மைத்தாக நெருங்கின நுண்ணிய துளைகளை, இரீஇ - இருத்தி, (27) இலங்கு துளை செறிய ஆணி முடுக்கி - விளங்குகின்ற துளைகள் நிரம்பும்படி சுள்ளாணிகளை இறுகத் தைத்து, (28) புதுவது வெண்கை புனைந்த யாப்பு அமைத்து - புதிதாக யானைக்கொம்பாற் செய்த யாப்பை அமையப்பண்ணி, (26) சிலம்பு அமை பத்தல் - ஒலித்த லமைந்த பத்தலிலே, பசையொடு சேர்த்தி-பிசினோடே கூட்டி, (29) புதுவது போர்த்த பொன்போல் பச்சை - புதிதாகப் போர்த்த பொன்னிறம்போலும் நிறத்தையுடைய தோலினையும், (30) வண்டு-வண்டானது, வதுவை நாறும் - கலியாணம் செய்த மகளுடைய நாற்றத்தை நாறுதற்குக் காரணமான, கமழ் ஐம்பால் - இயல்பான மணத்தைக்கொண்ட மயிரினையுடைய, (31) எழில் நுடங்கு மடந்தை - அழகு கட்புலனாகி நின்றசையும் மடந்தையினது, மாண்ட ஆகத்து - மாட்சிமைப்பட்ட மார்பிடத்தே சென்று, (32) அடங்கு மயிர் - பின்பு [அம்மார்புக்கு மேலே] இல்லையான மயிர், ஒழுகிய - ஒழுங்குபட்டுக் கிடக்கின்ற, அ வாய் கடுப்ப - அழகிய வயிற்றிடத்தை யொக்க, (33) அகடு சேர்பு பொருந்தி - பொல்லம் பொத்துதல் நடுவே சேரப்பட்டு, அளவினில் திரியாது - (கட்கு இனிதாய்த்) தனக்குக் கூறுகின்ற அளவிலே வேறுபடாமல்,

(34) கவடு பட க்கைஇய - பகுத்தலுண்டாக அகத்திட்ட, சென்று வாங்கு உந்தி - உயர்ந்து வளைந்த உந்தியினையும், (35) நுணங்கு அரம் நுவறிய - நுண்ணிய அரத்தாலே அராவின, நுண் நீர் மாமை - நுண்ணிய நீர்மையையுடைய கரியநிறத்தாலே, (36) களங்கனி அன்ன - களம்பழத்தின் நிறத்தையொத்தனவாய், கதழ்ந்து கிளர் உருவின் - கடுகித்தோன்றுகின்ற நிறத்தையுடைய, (37) வணர்ந்து ஏந்து மருப்பின் - வளைந்தேந்தின கோட்டினையுமுடைய, வள் உயிர் பேர்யாழ் - பெரிய ஓசையினையுடைய பேரியாழை, (38) அருள் நெறி திரியாது - தனக்கு நூலினுற்கூறிய வழிகளைத் தப்பாதபடி, அமைவரப் பண்ணி - பொருந்துதல்வரச் சமைத்து, (39) இசை பெறு திருவின் வேந்து அவை ஏற்ப - இசையை எக்காலமும் கேட்கின்ற செல்வத்தினையுடைய அரசர்களின் அவைக்களத்தே அவர்கள் செவிக்கொளும்படி, (40) துறை பல முற்றிய - தாம் வாசிக்கும் துறைகள் பலவற்றையும் வாசித்து முடித்த, பை தீர் பாணரொடு - பசுமை [இளமை]யற்ற பாணரோடே; (எ - று.)

(21) திவவினையும்; (22) கேள்வி [அனைத்தும்] போகா [போகி], (24) உரீஇக் (23) குரலோர்த்துத் தொடுத்த நரம்பினையும்; (25) துளையிரீஇ (27) ஆணி முடுக்கி (28) யாப்பமைத்துச் (26) சிலம்பு தலைமந்த பத்தலிலே (29) போர்த்த பச்சையினையும்; (31) மடந்தை ஆகத்து[ச் சென்று பின்பு] (32) அடங்குமயிரொழுகிய அவ்வாய் கடுப்ப (33) அகடுசேர்பு பொருந்தப்பட்டுக் (34) கவைஇய உந்தியினையும்; (37) வணர்ந்தேந்து மருப்பினையும் உடைய பேரியாழ் என இயைக்க. அந்தப் பேரியாழைத் (38) திரியாது, பண்ணி (39) ஏற்ப (40) முற்றிய பாணரொடு என முடிக்க.—இது, மேல் (46) விறலியர், நிற்புறஞ் சுற்ற என்பதோடு இயையும்.

கருத்துரை :—ஒன்பதென்னும்எண் உண்டான வார்க்கட்டினையும், நூற்கேள்வியனைத்தும் முற்றுப்பெற்றுச் சிறுகடுகளவும் கோடும்பில்லையாம்படி உருவிச் சுருதியோர்ந்து பார்த்துக்கட்டின் வடித்து முறுக்கின நரம்பினையும், வரகின் கதிர் ஒழுகினாற் போன்ற தோற்றத்தையுடையவாக நுண்ணிய துளைகளை நெருங்கவிருத்தி, அத்துளைகள் செறியும்படி சுள்ளாணிகளை யிறுகத்தைத்து, தந்தத்தாற் புதிதாகச் செய்த யாப்பைப் பத்தலிற்குறுக்கே வலிபெறுத்தற்காக அமையவோட்டிப் பத்தலிலே பிசினைக்கூட்டிப் புதிதாகப் போர்த்த பொன்னிறத் தோலினையும், அழகு சொட்டும் மடந்தையின் மார்பிடத்தே சென்று பின்பு இல்லையான மயிர் ஒழுங்குபட்டுக் கிடக்கின்ற வயிற்றிடத்தை யொப்பப் பொல்லம்பொத்துதல் நடுவே சேர்க்கப்பட்டதாய்த் தனக்கு நூலோர் வகுத்த அளவிலே வேறுபடாமல் பகுத்தலுண்டாக அகத்திட்ட உயர்ந்து வளைந்த உந்தியினையும், நுண்ணிய அரத்தாலே நுணுக அராவின கரியநிறத்தாலே களங்கனியினிறத்தை யொத்ததாய் மிக்குத் தோன்றுகின்ற நிறத்தையுடைய வளைந்தேந்தின கோட்டினையும் உடையது பேரியாழ். அத்தகைய பேரியாழை நூனெறி பிறழாது பொருந்துதல்வரச்

சமைத்து அரசவைகளில் மன்னர் செவிக்கொளும்படி வாசிக் குந் துறை பலவும் வாசித்துமுடித்த கல்விமுதிர்ந்த பாணர்கள் சுற்றமாய் உடன்வர [வருகின்றனன் கூத்தன்] என்பது கருத்து.

விசேடவுரை :—தொண்டு - ஒன்பது. இந்த எண் உண்டான வார்க்கட்டு என்றது - வார்க்கட்டு இந்த எண்ணைப்போலே தோற்ற மளித்தல் என்பது: அஃதாவது, ஒன்பது என்ற எண் தமிழ் முறை யில் 'கூ' என்று சுருள எழுதப்படுதல்போல வார்க்கட்டும் சுருள அமைந்திருத்தலைக் குறிக்கும். இஃது அடியனேன் கருத்து; இங்ஙன் கொள்ளாது, ஒன்பது என்னும் தொகையுண்டான வார்க்கட்டு என் றுருமுளர். 'தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ்' என்றது ஆசிரியமாலையும். திவவு - வார்க்கட்டு: இது நரம்புகள் துவக்கும் இடம் என்பதைச் சிறுபாண் - வரி 221-2க்கு நச்சினார்க்கினியர் வகுத்த உரையால் தெளியலாம்; மற்றும், திவவு-இது நரம்பு துவக் கப்படுவது என நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலும் நோக்குக. (பொருந: வரி-15.) இந்த வார்க்கட்டு நெகிழவேண்டுமிடத்து நெகிழ்ந் தும் இறுக வேண்டுமிடத்து இறுகியும் இருத்தற்காக மெலித்தல் வலித்தல் செய்யவேண்டுதலின், உறழ்ச்சி கூறினார். வார்க்கட்டின் உறழ்ச்சி தொடியினது உறழ்ச்சியை யொத்திருத்தலை "மடந்தை முன்கைக், குறுந்தொடி யேய்க்கும் மெலிந்துவீங்கு திவவின்" என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகளாலும் (12-13) ஆங்கு நச்சினார்க்கினிய ருரையாலும் தெரியலாம். இனி, 21-ஆம் வரியிலுள்ள 'அனைத்தும்' என்பது 'கேள்வி' யொடுங் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. அஞ் ஞான்று, 'அனைத்தும்' என்பது-எல்லாமும் என்று பொருள் பட்டது. அங்ஙனன்றி, 'கடிப்பகையனைத்தும்' என்றவிடத்து, 'அனைத்தும்' என்றது - அளவினைக்காட்டும் பொருளதாயிற்று; ஈண்டு, அனைத்து என்பது 'அத்தனைத்து' என்பதன் விகாரம். கடிப்பகை - வெண்சிறுகடுகு; ஐயவி. கடி - பேய். அதற்குப் பகை யாதலின் வெண்சிறுகடுகைக் 'கடிப்பகை' என்றது. போகா - போகி: உடன்பாட்டெச்சம். அரலை - கொடும்பு; கொடும்பாவது - கொடி முறுக்கு; அதாவது, நன்றாக ஏறின முறுக்கு. இஃது முடங்கிப் பரற்றன்மையாயிருத்தலின் இக்கொடும்பை 'அரலை' என்றார். அரலை - சிறுகல்; பொடிக்கல். உரீஇ - உருவி, தீற்றி. இனி, ஒருசிலர் "கேள்வி" என்பதற்கு "இசை" என்ற பொருளி ருத்தலைக்கொண்டு [உ-ம்: "கேள்வி போகிய நீள்விசித் தொடை யல்"—பொருந: 18] "கடிப்பகை யனைத்துங் கேள்வி போகா" என்ற தொடர்க்கு "வெண்சிறுகடுகளவும் கேள்வி தப்பாது" என்று பொருள்கொள்வர். அது வடிவிற்கு உவமையாதலிற் பொருந்தாது என்றனர் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியர் உரைவளம் கூர்ந்து கவனிக்கத்தக்கது. கேள்வி-இசையெனின், அஃது செவிப்புலனாக உணரப்படுவதொன்றேயன்றி இற்றெனக் கண்கூடாக வடிவு காட்டிக் காணவியலாததொன்று: ஆனால், வெண்சிறுகடுகோ வடிவிற்கு உவமையாவது தேற்றம். ஆதலின், வடிவொன்றில் லாத கேள்விக்கு வடிவிற்கு உவமையாகும் வெண்சிறுகடுகை

அளவுகாட்டுதல் சிறவாதாகலின், பொருந்தாதென்றார். இப் பொருத்தமுறுமை நோக்கியே அவர், "கடிப்பகையனைத்தும்" என்பதை "அரலைதீர உரீஇ" என்பதனோடு இயைத்துப்பொருள் கொண்டார். இந்நுணுக்கம் ஒப்பாத ஒருவர் "குணமென்னுங் குன்றேறி நின்றார்" என்புழிக் குன்றின் பெருமை உருவற்ற குணத் தின் பெருமைக்கு உவமையானாற்போன்று இசையின் குற்றத்தின் சிறுமைக்கு வெண்சிறுகடுகின் சிறுமை உவமையாகலின் உருவு வமையாதல் யாண்டையதென்க" என்று எழுதிப்போந்தார். 'குணமென்னுங்குன்று' என்றவிடத்து உருவகமுளதேயன்றி உவமையுளதோ? இல்லை; ஆதலின், உவமைவிரித்து, உருவுற்ற குன்றினது பெருமையை உருவற்ற குணத்தின் பெருமைக்கு உவமைகாட்டப்போமோ? குன்றுக்குப் பெருமை என்றது, வடிவின் பெருமையைத் தெரிப்பது. அஃதபோல், வெண்சிறுகடுகின் சிறுமை - என்றவிடத்தும், சிறுமை என்பது உருவின் சிறுமை யைத் தெரிப்பதேயன்றி வேறில்லை; அங்ஙனாதலின், 'உருவுவமை யாதல் யாண்டையது' என வினவின், அவ்வினா வலியற்றுப்போதல் காண்க. குரலோர்த்துத்தொடுத்தல் - குரல் நரம்பினையும் இளி நரம்பையும் முறப்பட ஆராய்ந்து இசையோர்த்து, அதன் முறையே அல்லாத நரம்புகளையும் ஆராய்ந்து இசையோர்த்துத் தீதின் மையறிந்து தொடுத்தல் என்க. நுண்துளை - இது, பொல்லம் பொத்துமிடத்திற்றுளை. பொல்லம் பொத்துதல் - இரண்டு தலைப் பையும் கூட்டித் தைத்தல். இந் நுண்துளைகள் ஒருங்கவிருத்தல் - வரகின்கதிர் ஒழுகினதன்மைத்தாக நெருங்கவிருத்தலை யொக்கும். இவ்வுவமைநயம் பெரிதும் சுவைக்கற்பாலதே. "பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக், கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை" என்றார் உருத்திரங்கண்ணனாரும் பெரும்பாணாற்றுப்படையில். (7-8) யாப்பு-பத்தலிற் குறுக்கே வலிபெற ஓட்டுவது. வதுவை-கலி யாணம் செய்த மகள். வதுவைநாறும் என்றது, வதுவைக்கு எல்லா மணமும் உளவாதல்பற்றி. ஐம்பால்-ஐவகைப்பட்ட மயிர்: ஐவகையாவன-குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன; குழலையும் அளகத்தையும் வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும், பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும் முடித் தல் என்ப. கமழ் ஐம்பால் - இயல்பான மணத்தையுடைய ஐம்பால் என்றபடி. மடந்தையின் மயிரொழுகிய அழகிய வயிற்றிடம்-பொல் லம் பொத்துதலுக்கு உவமை. இதனை "எய்யா இளஞ்சூல் செய் யோள் அவ்வயிற்று, ஐதுமயி ரொழுகிய தோற்றம் போலப், பொல் லம் பொத்திய பொதியுறு போர்வை" என்ற பொருநராற்றுப்படை யாலும் (வரி. 6-8) உணரலாம். அங்ஙனிருப்பவும், மடந்தையின் வயிற்றிடம் உந்திக்கு உவமை என்றாருமுளர். உந்தி - யாழகத்து ஒருறுப்பு, யாழ்ப்பத்தற்றுளை என்றனர் மயிலைநாதர். மாமை - கரு நிறம். மருப்பு - யாழின் தண்டு. இது கருநிறமுடைய தென்பதை "மணி வார்ந்தன்ன மாயிரு மருப்பு" (வரி. 14) என்ற பெரும் பாணாற்றுப்படையாலும் அறிக. வள்ளுயிர் - பெரிய ஓசை: "வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப்பயிற்றி" என்றது

குறிஞ்சிப்பாட்டும் (வரி. 100). பேரியாழ் - இருபத்தொரு நரம்புகளையுடையது என்று அடியார்க்குநல்லார் உரையாலறிகிறோம். (அரங்: வரி. 26). துறைபல என்றது - வலிவு, மெலிவு, சமம் என்னும் மூன்று தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழு தானம் முடித்துப்பாடும் இருபத்தொரு பாடற்றுறைகளை; "மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பி" என்றது புறம் (152). பை-பசுமை; ஈண்டு, இளமை மேலது. "தன்னுடல் கொடுத்த பைம்புள் (கம்ப. யுத்த: விபீடணனடைக். செ: 112) என்றவிடத்தும் பசுமை இளமை மேலதாதல் ஒப்புக்காண்க. பைதீர் பாணர் என்றது, கல்வி முதிர்ந்தமையின் இளமையற்ற பாணரென்றவாறு.

அடிகள் 41 — 46 :—கூத்தனை விறலியர் சூழவருதல் கூறும்.

உயர்ந்தோங்கு பெருமலை யூறின் றேறலின்
மதந்தபு ஞமலி நாவி னன்ன
துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணங்கொள் தோகையிற் கதுப்பிகுத் தசைஇ
விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்து
இலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்ற

(இ - ள்.) (41) உயர்ந்து ஓங்கு பெருமலை - உயர்ந்து வளர்ந்த கற்கள், ஊறு இன்று ஏறலின் - (ஏறுகின்ற சிரமம் தவிர) வேறோரிடையூறின்றாக ஏறி வருகையினாலே, (43) துளங்கு இயல் மெலிந்த - அசைகின்ற இயல்பினால் இளைத்த, (42) மதம் தபு ஞமலி நாவின் அன்ன - வலிகெட்ட நாயினது நாவினையொத்த, (43) கல்பொரு சீறடி - கல்லுப்பொருகின்ற சிறிய அடியினையும், (45) விலங்கு மலைத்து அமர்ந்த-மாறோடு மாறுபட்டுப் பொருந்தின, சேயரி நாட்டத்து - செவ்வரியையுடைய கண்ணினையும், (46) இலங்கு வளை - விளங்குகின்ற வளையினையுமுடைய, விறலியர் - விறல்படப் பாடியாடுவார், (44) கணங்கொள் தோகையின் கதுப்பு இகுத்து அசைஇ - திரட்சியைக்கொண்ட மயில்போலே மயிரைத் தாழ்த்து இளைத்து, (46) நின்புறம் சுற்ற - நின்னைப் புறத்தே சூழ; (எ - று.)

(43) சீறடியினையும் (45) நாட்டத்தினையும் (46) வளையினையும் உடைய விறலியர் (44) கதுப்பிகுத்து அசைஇச் (46) சுற்ற என முடிக்க. இது, மேல் (49) புலம்புவிட்டிருந்த என்பதோடு இயையும். மற்றும், (41) ஏறலின் (43) மெலிந்த அடி என இயைக்க.

கருத்துரை:—பெரிய மலைகளின்மேல் கல்லுப்பொத்த ஏறுகின்ற சிரமந்தவிர வேறோரிடையூறுமின்றி அசைந்தசைந்து ஏறி வருகையினாலே இளைத்த வலிகெட்ட நாயினது நாவினை யொத்த சிறிய அடியினையும், மாறொடு மாறுபட்டுப் பொருந்தின செவ்வரி யையுடைய கண்ணினையும், இலங்குகின்ற வளையினையுமுடைய

விறலியர் மயிரைத் தாழ்த்து இளைத்து மயிற்கூட்டங்கள் போலே கூத்தனைப் புறஞ்சுற்றி நிற்கின்றனர் என்பது கருத்து.

விசேடவுரை:—பெருமலை ஊறின்றி யேறல், கள்வர் கொடிய விலங்கு இவற்றால் துன்புறாது ஏறல்: இஃது கூறவே, நன்னனது செங்கோன்மைச் சிறப்புத் தெரித்தபடி. ஓடியிளைத்த நாயினது நாவினை மடந்தையரின் மெலிந்த அடிக்குப் பெரிதும் ஒப்பிடுதலை, "உயங்குநாய் நாவின் நல்லெழில் அசைஇ, வயங்கிழை யுலறிய வடி" (சிறுபாண். 17-18), "வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி" (பொருந: 42), "இளைப்புறு ஞமலி நலத்தகு நாவிற், செம்மையும் மென்மையுஞ் சிறந்து வனப்பெய்தி...உறாஉஞ் சேவடி" (பெருங்: 2:19:176-185), "முயல்வேட் டெழுந்த முடுகுவிசைக் கதநாய், நன்னுப் புரையுஞ் சீறடி" (நற்: 252) என்பனவற்றாலும் அறியலாம். மகளிர் கூந்தலுக்கு மயிற்கலாபம் உவமித்தலை "கதுப்பென மணிவயிற் கலாபம் பரப்பிப்பலவுடன், மயின்மயிற்குளிக்குஞ் சாயல்" (சிறுபாண்: 14-15), "கலிமயிற் கலாவத் தன்ன விவள், ஒலிமென் கூந்தல்" (நற்: 264) என்பவற்றாலும் அறியலாம். விறலியர் - விறல்பட [சத்துவம்பட] ஆடுமகளிர்; இவர் பாடுதலுஞ் செய்வர் என்பதை, 'பாடல் நல்விறலியர்' என்ற பரிபாடலால்(17) உணரலாம்.

இலக்கணக்குறிப்பு:—உயர்ந்தோங்கு - ஒருபொருட்பன்மொழி.

அடிகள் 47—50:—குளிர்ந்த நிழலிலே கூத்தனும் சுற்றமும் தங்கியிருந்தமை கூறும்.

> கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற்
> புனல்கால் கழீஇய மணல்வார் புறவிற்
> புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக்
> கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ!

(இ - ள்.) (48) புனல் கால் கழீஇய மணல் வார் புறவில் - பெருகும் நீர் துராலை [குப்பையை] வாரிக்கொண்டுபோன மணலொழுங்குபட்ட சிறுகாட்டிடத்தில், (47) கயம் புக்கன்ன பயம் படு தண் நிழல் - குளத்திலே புகுந்தாலொத்த பயனைத்தருகின்ற குளிர்ந்த நிழலிலே, (49) புலம்பு விட்டிருந்த - வழிவந்த வருத்தத்தைக் கைவிட்டிருந்த, காட்சி - அறிவினையுடைய, (50) கலம் பெறு கண்ணுளர் - பேரணிகலங்களைப்பெறுங் கூத்தராகிய, ஒக்கல் தலைவ - சுற்றத்திற்குத் தலைவனே! (49) புனிறு இல் (50) ஒக்கல் தலைவ - ஈன்றணிமையில்லாத [விறலியராய) சுற்றத்திற்குந் தலைவனே! (எ - று.)

(48) புறவில் (47) தண்ணிழலில் (49) புலம்புவிட்டிருந்த (50) கண்ணுளரொக்கலுக்கும் (49) புனிறில் (50) ஒக்கலுக்கும் தலைவ! என முடிக்க.

கருத்துரை:—பெருகியநீர் குப்பையை வாரிக்கொண்டுபோன மணலொழுங்குபட்ட சிறுகாட்டிடத்தில், குளத்திலே புகுந்தா

லொத்த பயனைத்தருகின்ற குளிர்ந்த நிழலிலே வழிவந்த வருத்தந் தீர இளைப்பாறுகின்ற கூத்தராய் சுற்றத்திற்கும் ஈன்றணிமை யில்லாத விறலியராய சுற்றத்திற்கும் தலைவனே என ஆற்றுப்படுப் போன் விளித்தமை கருத்து.

விசேடவுரை:—'ஒக்கல் தலைவ!' என்ற தொடரை 'கண்ணுளர்' என்பதோடும், 'புனிறில்' என்பதோடும் கூட்டிப்பொருளுரைத்தது, முன்னர்ப் 'பாணரொடு விறலியர் நிற்புறஞ்சுற்ற' என இருபாலா ரையும் உளங்கொண்டு குறித்திருத்தல் நோக்கி. புனிறில் ஒக்கல் என்றது, பிள்ளையைப்பெற்ற விறலியர், பிள்ளையைக்கொண்டு கூடவந்திலர்கள் என்பதைத் தெரிவித்தற்காக: "புனிறென் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே" என்றது விதி. (தொல். உரி: 79) புனல் கால் கழீ இய என்பதற்கு-நீர் பெருகிய காலத்தே ஏறிய இடத் தைத் தூய்தாக்கிப்போன என உரை கண்டனர் நச்சினார்க்கினியர் பெரும்பாணில் (380). ஈங்கும் அதே கருத்தது. துரால் - குப்பை. புலம்பு - வருத்தம். காட்சி - அறிவு. கலம் - பேரணிகலங்கள். பெறு - பெறப்போகும் என்றபடியுமாம். இனி, காட்சிக்கலம் பெறு - அறிவாகிய பேரணிகலனைப்பெற்ற எனினுமாம்.

இனி, அடிகள் 1-முதல் 50 வரை தொகுதிப்பட்ட வினைமுடிபு:— (13) கலப்பையிராய் (20) இயவுக்கொண்டொழுகிப் (37) பேரியாழை (38) அமைவரப்பண்ணித் (40) துறைபல முற்றிய பாணரொடு (46) விறலியர் புறஞ்சுற்றப் (48) புறவில் (47) தண்ணிழலிலே (49) புலம்பு விட்டிருந்த (50) கண்ணுளரொக்கல் தலைவ! என்பது.

(13) 'கலப்பையிர்' என்னும் பன்மை (50) தலைவ! என்னும் ஒருமையோடு முடிந்தது, "ஒருமை சுட்டிய பெயர்நிலைக்கிளவி, பன்மைக்காகுமிடனுமாருண்டே" என்னுஞ் சூத்திரத்தாலாகும் (தொல். எச்ச: 65). ஈண்டு, ஒருமைக்குரிய பெயர்ச்சொல் பன்மைச் சொல்லோடு மயங்கித் தொடர்தற்குப் பொருந்துதல் காண்க. தலைவ - அண்மைவிளி: "அண்மையினியல்பு மீறழிவும்" என்பது விதி.

அடிகள் 51—53 :—ஆற்றுப்படுப்போன் தான் பரிசில் பெற்று வருகின்றமை கூறும்.

> தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
> மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங்கு
> யாமவ ணின்றும் வருதும்

(இ - ள்.) (51) தூ மலர் துவன்றிய கரை பொரு நிவப்பின் (52) மீமிசை - தூய பூக்கள் நெருங்கின கரையைப் பொருகின்ற ஓக்கத் தினையுடைய மலையுச்சியினின்றும், நல் யாறு - இழிந்த நல்ல யாறு, கடல் படர்ந்தாஅங்கு - கடலை நோக்கிப்போனாற்போல, [செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னனை நோக்கிச் சென்று] (53) யாம்—, அவண் நின்றும் - அவ்விடத்தினின்றும், வருதும் - (சில பெற்று) வருகின்றேம்; (எ - று.)

(51) நிவப்பின் (52) மீமிசை யிழிந்த யாறு கடற்படர்ந்தாஅங்கு [நன்னன்பாற் படர்ந்து] (53) யாம் அவணின்றும் வருதும் என இயையும்.

கருத்துரை:—மலையுச்சியினின்றிழிந்த யாறு கடலை நோக்கிச் செல்வது போல நன்னன்சேய் நன்னனை நோக்கிச் சென்று யாம் அவனிடத்தினின்று சில பரிசில்கள் பெற்று வருகின்றோம் என்று ஆற்றுப்படுப்போன் கூறினனென்பது கருத்து.

விசேடவுரை:—கடல் - நன்னனுக்கும், யாறு - பரிசில் பெற்று வரும் கூத்தனுக்கும் உவமை. "மலையி னிழிந்து மாக்கட னோக்கி, நிலவரை யிழிதரும் பல்யாறு போலப், புலவ ரெல்லாம் நின்னோக் கினரே "என்ற புறம் (42) ஒருசார் நினைவு கூர்க.

இனி, மலையிற் பொருள்களை வாரிக்கொண்டு யாறு கடலை நோக்கிப் போனாற்போல நன்னனிடத்துள்ள பொருள்களை வாரிக் கொண்டு வருகின்றேமென்று பொருள்காணினுமாம். அஞ்ஞான்று, நன்னனுக்கு - மலையும், பரிசில் பெற்றுவருங் கூத்தனுக்கு-யாறும், அக் கூத்தன் நோக்கிச் செல்லும் அவனதில்லம்-கடலுக்கும் உவமை யாகும்.

அடிகள் 53—66:—'நன்னன்சேய் நன்னனை யுள்ளினிர்சேறும்' என்று ஆற்றுப்படுப்போன் கூறுதல் கூறும்.

நீயிரும்
கனிபொழி கானங் கிளையொ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளின மானப்
புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்
வனைபுனை யெழின்முலை வாங்கமைத் திரடோள்
மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பின்
இசைநுவல் வித்தின் நசையே ருழவர்க்குப்
புதுநிறை வந்த புனலஞ் சாயல்
மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி
வின்னவில் தடக்கை மேவரும் பெரும்பூண்
நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொடு
உள்ளினிர் சேறி ராயிற் பொழுதெதிர்ந்த
புள்ளினிர் மன்ற வெற்றுக் குறுதலின்

(இ - ள்.) (57) வனை புனை எழில் முலை - ஓவியங்களிலே முலையாகப் பண்ணின கைசெய்த அழகைத் தன்னிடத்தேயுடைய முலையினையும், வாங்கு அமை திரள் தோள்-வளைந்த மூங்கிலை யொத்த திரண்ட தோளினையும், (58) மலர் போல் மழை கண் மங்கையர் - பூப்போலும் குளிர்ச்சியையுடைய கண்ணினையுமுடைய கற்புடை மகளிர்க்கு, (56) புனை தார் பொலிந்த வண்டுபடு மார்பின் (58) கணவன் - கைசெய்த மாலையாற் பொலிவுபெற்ற வண்டுகளை யுண்டாக்குகின்ற மார்பினை

யுடைய கணவனாகி, (59) முனை பாழ் படுக்கும் துன் அரு துப்பின் பகைப்புலத்தைப் பாழுண்டாக்கும் கிட்டுதற்கரிய வலியினையும், (60) நுவல் இசை வித்தின் நசை ஏர் உழவர்க்கு - தாம் பிறரைக் கூறும் புகழாகிய விதையாலே பிறர்பொருள்களை நச்சுதலாகிய ஏருழவினையுடைய பரிசிலர்க்கு, (61) புது நிறைவந்த புனல் அம் சாயல் - புதுப்பெருக்காய்வந்த நீர்போலும் அழகையுடைய மென்மையினையும், (62) மதி மாறு ஓரா நன்று உணர் சூழ்ச்சி-தனதறிவின் ஆக்கத்திற்கு மாறாகிய கேட்டை நினையாது ஆக்கத்தினையே யுணரும் நினைவினையும், (63) வில் நவில் தட கை - விற்றொழிலிலே பயின்ற பெரிய கையினையும், மேவரும் பெரும்பூண் - பொருந்துதல் வரும் பேரணிகலங்களையும் உடைய, (64) நன்னன் சேய் நன்னன் படர்ந்த கொள்கையொடு - (செங்கண்மாத்துவேள்) நன்னன் மகனாகிய நன்னனை நினைத்த கோட்பாட்டுடனே, (54) கனி பொழி கானம் - பழங்களைச் சொரிகின்ற காட்டில், கிளையொடு உணீஇய - பழங்களைச் சுற்றத்தோடே சென்று தின்றற்கு, (55) துனை பறை நிவக்கும்-விரைந்த பறத்தற் றொழிலிலே ஓங்கும், புள் இனம் மான - பறவைத்திரளை யொக்க, (53) நீயிரும்—, (65) உள்ளினிர் சேறிராயின் - அந் நன்னன் தரும் பரிசில்கள் இவையென்று அப்பரிசில்களை நினைந்தனிராய்ச் செல்வீராயின், (66) என் தாக்குறுதலின் - என்னை எதிர்ப்படுகையினாலே, (65) எதிர்ந்த பொழுது (66) புள்ளினிர் மன்ற - நீர் புறப்படுகின்ற பொழுது நுமக்குவரும் ஆக்கத்தை எதிர்கொண்டுநின்ற நன்முகூர்த்தத்தோடே நன்னிமித்தத்தையும் உடையராயிருந்தீர், அறுதியாக; (எ - று.)

(57) முலையினையும் தோளினையும் (58) கண்ணினையுமுடைய மங்கையர்க்கு (56) மார்பின் (58) கணவனாகித் (59) துப்பினையும் (61) சாயலினையும் (62) சூழ்ச்சியினையும் (63) கையினையும் பூணினையும் உடைய (64) [நன்னன்சேய்] நன்னன் எனவ இயையும். அத்தகைய நன்னனை (65) உள்ளினிர் சேறிராயின் (66) என் தாக்குறுதலின் புள்ளினிர் மன்ற—என முடிக்க.

கருத்துரை :—அழகிய முலையினையும் மூங்கிலை யொத்துத் திரண்ட தோளினையும் பூப்போன்ற கண்ணினையுமுடைய கற்புடை மகளிர்க்குக் கணவனாகி, கிட்டுதற்கரிய வலியினையும், பரிசிலரிடம் மென்மையினையும், கேட்டை நினையாது ஆக்கத்தினையே நினையும் சூழ்ச்சியினையும், விற்றொழிலிற் பயின்ற கையினையும், பேரணிகலங்களையும் உடைய செங்கண்மாத்துவேள் [நன்னன்சேய்] நன்னனை யுள்ளினீராய்க் கிளையொடு பழுமரந் தேரும் பறவை போலே சென்று சேர்வீராயின், என்னை எதிர்ப்படுகையினாலே நன்முகூர்த்தத்தோடே நன்னிமித்தத்தையும் தேற்றமாக உடையரானீர் என்று ஆற்றுப்படுப்போன் கூறினமை கருத்து.

விசேடவுரை :—வண்டு மார்பிற் படுதல் தாரிலுள்ள தேனைப் பருக வருதனோக்கி. தார் - மார்பின்மாலை. (56) மார்பினையுடைய (58) கணவன் என்க. மக்களுட் பெண்பால் பாடுதல் சிறப்பின்மையின் 'மங்கையர் கணவன்' என ஆண்மகனொடு படுத்துப் பாடியது. இங்

நன், ஆண் மக்களொடு படுத்துப் பாடுதலை "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறம். 3), "பாவை யன்ன நல்லோள் கணவன்" (பதிற். 61) என்ற விடங்களிலும் காணலாம். நுவலிசை வித்தில் நசையேருழவர் என்றது - பரிசிலரை; தாம் பிறரைக் கூறும் புகழை வித்திப் பொருளை யெடுப்பரென்றவாறு. புது நிறை வந்த புனலஞ் சாயல் என்றது - தண்ணீர் அரிய காலத்தே வந்து பயன் தருமாறு போல இவனும் பயன் தருவனென்றவாறு. 'நீரினுஞ் சாயலுடையன்' (கலி. 42), 'நீரினும் இனிய சாயற் பாரி' (புறம். 105) என்பனவும் காண்க. மதி மாறு ஓரா - அறிவு நன்றுக்கு மாறுனவற்றை ஓரா என்றபடி; எனவே, அறிவு ஆக்கத்திற்கு மாறுகிய கேட்டை நினையாது என்பது பொருளாயிற்று. நன்று-நல்லது, எனவே, ஆக்கம். 'தீதொரீஇ நன்றின்பாலுய்ப்பது அறிவு' என்றார் நாயனாரும். தாக்குறுதல்-எதிர்ப்படுதல், சந்தித்தல். பொழுது-முகூர்த்தம். இதன் பின்னர் 'ஒடு' உருபு தொக்கது. புள்-நிமித்தம்: 'புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்' (புற. வெ. மாலை. 14) என்ற விடத்தும், 'புள்' இப்பொருளதாதல் காண்க. மன்ற-நிச்சயமாக: "மன்றவென்கிளவி தேற்றஞ் செய்யும்" என்றது விதி (தொல். இடை-17)

இலக்கணக் குறிப்பு :—(50) தலைவ! என்ற அண்மைவிளியேற்ற முன்னிலை சுட்டிய ஒருமைப் பெயர், (53) 'நீயிரும் (65) உள்ளினிர் சேறிராயின்' எனப் பன்மையொடு முடிந்தது, "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே, ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" என்ற விதியால் என்க. (தொல்: எச்சவியல்: 66). ஈண்டு, தெய்வச்சிலையார் உரைப் போக்கு பின் வருமாறு:—ஆற்றுப்படை மருங்கிற் போற்றலாவது—****கூத்தராற்றுப்படையுள், "கலம்பெறு கண்ணுள ரொக்கல் தலைவ" (50) என அண்மை விளியேற்று முன்னிலை குறித்து நின்ற ஒருமைப் பெயர் "நீயிரும் நன்னற் படர்ந்த கொள்கையொடு, உள்ளினிர் சேறிராயின்" (65) எனப் பன்மையோடு முடிந்தது. இவ்வாறு வருங்காற் கூத்தரும் பாணரும் விறலியருமாகி யாண்டுச் செல்வார் பலராயுழியே வரப்பெறுவதென்றும், தனியொருவனுயின் மயங்கப் பெறுதென்றும் கொள்க" என்பது.‡ சேனாவரையரும் "பொதுவகை

‡பெரும்பாணாற்றுள், "புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!" (22) என அண்மை விளியேற்று முன்னிலை குறித்து நின்ற ஒருமைப் பெயர், "நீயிரும், பல்வேற்றிரையற் படர்குவிராயின்" (37) எனப் பன்மையொடு முடிந்ததும்; சிறுபாணாற்றுள், "முனிவிகந் திருந்த முதுவாய் இரவல!" என அண்மைவிளியேற்று முன்னிலைகுறித்து நின்ற ஒருமைப் பெயர், "நீயிரும்.....இரும்பேரொக்கல் செம்மலுள்ளமொடு செல்குவிராயின்" (143-145) எனப் பன்மையொடு முடிந்ததும்; பொருநராற்றுள், "வேறு புல முன்னிய விரகறி பொருந!" (3) என அண்மைவிளியேற்று முன்னிலை குறித்து நின்ற ஒருமைப் பெயர், "நின் னிரும்பேரொக்கலொடு (61)...தொழுதுமுன் னிற்குவிராயின்" (150) எனப் பன்மையொடு முடிந்ததும் இவ்விதிபற்றி யமைந்ததை நினைவுகூர்க.

யான் ஆற்றுப்படை மருங்கினென்றாராயினும், சுற்றத்தோடு சுற்றத் தலைவனை ஆற்றுப்படுத்தற்கண்ணது இம்மயக்கமென்பது பாது காத்துணர்கவென்பார் 'போற்றல்வேண்டும்' என்றார்" என்று கூறிய தும் ஈண்டுக் குறிக்கொள்ளத்தக்கது. எனவே, மேல், 157-ஆம் வரியில் "இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்' என்று பன்மைச்சொல் லொடு முடிவதையும் இச்சூத்திரத்தாலமைத்துக் கொள்ளவேண்டு வது. நீயிரும், உம்மை இறந்தது தழீஇயது. உணீஇய-செய்யிய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்; அளபெடுத்தது. துனை - விரைவு குறிக்கும் உரிச்சொல்: "கதழ்வும் துனைவும் விரைவின் பொருள" (தொல்: உரி: 19).

அடிகள் 67—94 :—ஆற்றுப்படுப்போன் நன்னனைப்பற்றிப் பின்னர் விரிசெய்துரைக்க நினைந்தவைகளை முற்படத் தொகுத் துரைத்து, எதிர்ப்பட்ட கூத்தர்தலைவனைக் 'கேள்' எனல்.

அவற்றுள் அடிகள் 67—69:—வழி, தங்குமிடம், நாடு விளைகின்ற உணவு முதலியன குறிக்கும்.

ஆற்றின் அளவும் அசையுநற் புலமும்
வீற்றுவளஞ் சுரக்குமவன் நாடுபடு வல்சியும்
மலையுஞ் சோலையும் மாபுகல் கானமும்

(இ - ள்.) (67) ஆற்றின் அளவும் - வழியினது நன்மையினது அளவும் தீமையினது அளவும், அசையும் நல் புலமும் - நீர் தங்கும் நன்றாகிய இடங்களும், (68) வீறு வளம் சுரக்கும் அவன் நாடு படு வல்சியும் - பிறர்நாட்டுக்கு இல்லாத செல்வத்தை மாறாமற் கொடுக்கும் அவன் நாடுவிளைகின்ற உணவுகளும், [அவன் நாட்டின் வகை கூறுவான்], (69) மலைஉம் - அவனாட்டின் மலைகளின் தன்மையும், சோலைஉம் - அவனாட்டிற் சோலைகளின் தன்மையும், மா புகல் கானம்உம் - விலங்குகள் விரும்பித் திரியுங் காட்டின் தன்மையும்; (எ - று.)

(67) ஆற்றினளவும், புலமும், (68) வல்சியும் (69) மலையும் சோலையும் கானமும் என இயையும்.

கருத்துரை :—கூத்தர்தலைவன் செல்லவிருக்கும் வழியினது நன்மைதீமைகளின் அளவு, தங்குதற்குரிய நீர்மிக்க நல்ல இடங்கள், நன்னன் நாட்டு விளைகின்ற உணவுகள், அவன் நாடு குறிஞ்சி, முல்லை, மருதம் மூன்றினையும் உளப்படுத்தியிருக்குந்தன்மை, இவற்றைத் தொகுத்துக் குறித்தமை கருத்து.

விசேடவுரை:—நாடுபடுவல்சி என்றவிடத்து, 'நாடு' என்றது, மலைநாடும் காட்டுநாடும் தண்பணைநாடும் உளப்படுத்தியது. அதாவது குறிஞ்சி முல்லை மருதம் மூன்றினையும் உளப்படுத்தியது. [கவனிப்பு:—பாலையும் நெய்தலும் நன்னன் நாட்டிலில்லாமையால் கூறப்பட்டிலது]. எங்ஙனம் பெறுதும் என்னில், மேல் 69-ஆம்

வரியால்: ஆங்கு, மலை என்றது - மலைநாட்டையும் [குறிஞ்சி], கானம் என்றது - காட்டுநாட்டையும் [முல்லை], சோலை என்றது-தண்பணை நாட்டையும் [மருதம்] குறிக்கும். மற்றும் மேல் (242) வரைசேர் வகுந்திற் கானத்துப்படினே, (275) குன்றத்துப் படினே, (453) தண்பணை நாடே முதலியனவும் நோக்கவேண்டியது. ஆகவே, 67 - 69 வரிகளில் கூறப்பட்டுள்ளன ஐந்து : ஆற்றினதளவு, அசையுநற்புலம், மலைபடுவல்சி, கானம்படுவல்சி, சோலைபடுவல்சி என்பன. இவ்வைந்தினையும் இங்குக் கூறிய முறையே கூறுமல் மேல் மயங்கக் கூறுவர், கூறும்வழிக்கண் ஆண்டுள்ளன கூற வேண்டுதலின்.

அடிகள் 70—72:—நன்னன் புலவோர்க்குத் தரும் கொடைச் சிறப்புக் குறிக்கும்.

70 தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியும்

(இ - ள்.) (70) தொலையா நல் இசை - கெடாத நல்ல புகழ், உலகமொடு நிற்ப - உலகமுள்ளளவும் நிற்கும்படியாக, (71) பலர் புறம் கண்டு - பகைவர் பலரையும் முதுகுகண்டு, அவர் அருங்கலம்- அவர் திறையாகத் தந்த பெறுதற்கரிய பேரணிகலங்களை, (72) புலவோர்க்கு (71) தரீஇ - (முற்பட) அறிவுடையோர்க்குக் கொடுத்து, (72) சுரக்கும் - (பின்) அவர்க்குச் சொரியும், அவன் ஈகை மாரியும் - அவன் பொன்மழையும்; (எ - று.)

(70) நிற்பத் (71) தரீஇச் (72) சுரக்கும் ஈகை மாரியும் என இயையும்.

கருத்துரை :—உலகமுள்ளளவும் புகழ் நிற்கும்படியாகப் பகைவர் திறையாகத் தந்த பேரணிகலங்களைப் புலவோர்க்கு முற்படக் கொடுத்து, மேலும் அவர்க்குப் பொன்னையும் மிகுதியாகக் கொடுப்பவன் நன்னன் என்று அவன் கொடைச்சிறப்பினைக் குறித்தமை கருத்து.

விசேடவுரை:—"ஒன்ற வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றுது நிற்பதொன் றில்" என்பது மறையாதலின், "தொலையா நல்லிசை வுலகமொடு நிற்ப" என்றார். 'ஈதல் இசைபடவாழ்தல்' என்றதற்கேற்ப, மானிடப்பிறவியெடுத்ததற்குப்பயன் ஈந்து புகழ் பெறுதலேயாமாதலின், அப்பயன் நன்னன்பாலுளதாமென்பது குறிக்கப்பட்டது. தக்கார்க்கீதல் சிறத்தலின், 'புலவோர்க்கு' எனப்பட்டது. பகைவரை வென்று திறையாக் கொண்ட பொருள்களைப் பலர்க்கும் வேந்தர் வழங்குதலைச் சான்றோர் பலர் செய்யுளகத்துங் காணலாம்: ஈகை - பொன்: இஃது இப்பொருளதாதலை 'இயலணிப் பொலிந்த வீகை வான்கழல்' என்ற குறிஞ்சிப்பாட்டடியிலுங்

காண்க. பொன்மாரி பொழிதலென்ற வழக்கினைக் 'காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனகமாரி' (பதினேழாம்: 33) என்ற வில்லி புத்தூரர் வாக்கினாலுந் தெளியலாம்.

இலக்கணக்குறிப்பு:—"தருசொல் வருசொல் ஆயிருகிளவியும், தன்மை முன்னிலை யாயீ ரிடத்த" என்ற விதிக்கு மாறாக, "புலவோர்க்குத் தரீஇ" எனப் படர்க்கைக்கண்வந்ததாலோ எனின், "செலவினும் வரவினும் தரவினும் கொடையினும், நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும், அம்மூவிடத்தும் உரிய வென்ப" என்ற பொதுச் சூத்திரத்தால் அமைத்துக் கொள்க.

அடிகள் 73—75:—அவனது அறிவின்வலியும் நாளோலக்கச் சிறப்பும் குறிக்கும்.

இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு
அரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ னாண்மகி ழிருக்கையும்

(இ - ள்.) (73) இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் - தன்னை இகழ்ந்திருக்கும் பகைவரை அரசுகொடாமற் சுருக்கும் அறிவின் வலியும், புகழுநர்க்கு - சூதர் மாகதர் பாணர் கூத்தர் முதலியோர்க்கு, (74) அரசு முழுது கொடுப்பின்உம் - (தான் புறங்கண்ட) பகைவரரசை முற்றுங்கொடுப்பினும், அமரா நோக்கமொடு-அமைதி பிறவாத அறிவுடனே, (75) தூ துளி பொழிந்த பொய்யா வானின்- தூய துளியைப் பெருகச் சொரிந்த பருவம்பொய்யாத மேகம் பின்னரும் பெய்யுமாறு போல, (76) வீயாது சுரக்கும் அவன் நாள் மகிழ் இருக்கையும்-பின்னரும் மாறாமற் சொரியும் அவனுடைய நாளோலக்கமும்; (எ - று.)

(73) ஆற்றலும், புகழுநர்க்குக் (74) கொடுப்பினும் அமரா நோக்கமொடு (75) வானின் (76) சுரக்கும் நாண்மகிழிருக்கையும் என இயையும்.

கருத்துரை:—தன்னை இகழும் பகைவரை அரசுகொடாமலொடுக்கும் அறிவின் வலியும், அங்ஙனம் புறங்கண்டு கொண்ட பகைவரரசு முழுவதையும் தன்னைப் புகழ்வோர்க்குக் கொடுப்பினும் அமைதி பிறவாத உள்ளத்தோடு பின்னரும் மாறாது கொடுக்கும் நாளோலக்கமும் உடையவன் நன்னன் என்று அவன் சிறப்புக் குறித்தமை கருத்து.

விசேடவுரை:—இகழ்ந்திருக்கும் பகைவரை அரசுகொடாமற் சுருக்கும் என்றதனால், இகழாத பகைவரை யொடுக்கினும், அரசு கொடுத்தும் விடுவன் என்பது பெறும். ஆற்றல்-ஈண்டு அறிவின் வலி குறித்தது, பிணித்தல் நோக்கி. புகழுநர் - சூதர், மாகதர்,

பாணர் கூத்தர் முதலியோர். சூதர் - நின்றேத்துவார்; மாகதர்- இருந்தேத்துவார். நோக்கு - நோக்கமுள்ளக்கம்: (நோக்கு அல் நோக்கம் - கண்ணால் நோக்கும் நோக்கமன்றி மனத்தால் நோக்கும் நோக்கம்; அஃதாவது, கருதுதல்) எனவே, நோக்கு என்பது ஈண்டு, மனக்கருத்துக் குறித்தது. வானின் வீயாது சுரக்கும் என்றமை யால், மேகம் அகலச்சொரிதல்போல, நன்னனும் பல்லோர்க்குங் கொடுப்பனென்றபடி; எனவே, வீயாமை ஈண்டு அகற்சிமேற்று.

இலக்கணக்குறிப்பு :—இகழுநர்ப்பிணிக்கும் - உயர்திணையில் இரண்டாம் வேற்றுமையுருபு தொக, அதன் முன் வலிமிக்கது.

அடிகள் 77—80 :—அவன் [கல்விச்] சுற்றத்தொழுக்கம் குறிக்கும்.

நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
80 நல்லிதின் இயக்குமவன் சுற்றத் தொழுக்கமும்

(இ - ள்.) (77) நா நவில் நல்லோர் குழீஇய அவையத்து-தாம் கற்றவை நாவிடத்தே பயின்ற நல்ல அறிவினையுடையோர் திரண்ட தன் அவைக்களத்திடத்தே, (78) சென்றோரை - சென்ற அறிவுடை யோரை, வல்லாராயினும் - (அவ்வறிவுடையோர்) தாம் கற்ற வற்றை மனங்கொள்ளக் கூறும்மாட்டாரர்யினும், புறம் மறைத்து - (அவர்தம்) மாட்டாமையைத் [தாம்] மறைத்து, (79) சொல்லிக் காட்டி - தாம் பொருளைச் சொல்லிக்காட்டி, சோர்வு இன்றி விளக்கி-அதனைத் தப்பின்றாக எல்லார் மனமுங்கொள்ளும்படி அறிவித்து, (80) நல்லிதின் இயக்கும் - நன்றாக நடத்தும், அவன் சுற்றத்து ஒழுக்கமும் - அவனுடைய சுற்றத்தாருடைய பேரொ ழுக்கமும்; (எ - று.)

(77) அவையத்துச் (78) சென்றோரை, வல்லாராயினும் மறைத் துக் (79) காட்டி, விளக்கி (80) இயக்கும் அவன் சுற்றத்தொழுக் கமும் என இயையும்.

கருத்துரை:—தாம் கற்றவற்றை நாவினாற் பல்காலும் கூறி யடிப்படுத்திய நல்ல அறிவினையுடையோர் திரண்டுள்ள தன் அவைக்களத்திடத்தே சென்ற அறிவுடையோர் தாம் கற்றவற்றை ஆங்குள்ளோர் மனங்கொள்ளும்வகை கூறமாட்டாராயிருப்பினும், அவர்தம் மாட்டாமையை வெளிப்படுத்தாது தாம் மறைத்து, தாம் அப்பொருளைச் சொல்லிக்காட்டி, அதனைத்தப்பின்றாக எல்லார் மனமுங்கொள்ளும்படி அறிவித்து, நன்றாக நடத்தும் பேரொ ழுக்கங்கொண்ட கல்விச்சுற்றத்தை யுடையவன் நன்னன் என்பது கருத்து.

விசேடவுரை:—நா நவில் அவையம் என்றமையால், அறங் கூறவையம் பெறப்பட்டது. நவிலுதல் - கூறியடிப்படுதல். நல்லோர்

குழீஇய அவையம் என்றமையால், நல்லவையும் நிறையவையும் முறையே பெறப்பட்டன. நல்லவை இன்னதென்பதை:—நல்லவை யென்பது நாடுங் காலை, எத்துறை யானும் இருவரு மியம்பும், அத்துறை வல்லோர் அறனொடு புணர்ந்தோர், மெய்ப்பொருள் கண்டோர் மிக்கவை யோர்ப்போர், கற்றவர் கல்விக் கடாவிடை யறிவோர், செற்றமுஞ் சினமுஞ் சேரா மனத்தோர், முனிவொன் றில்லோர் மூர்க்க ரல்லோர், இனிய முகத்தோர் இருந்துரை கேட் போர், வேந்த னொருவர்க்குப் பாங்கு படினும், தாந்தா மொருவர்கட் பாங்கு படாதோர், அன்னோர் முன்னர்க் கூறிய பொழுதில், தொலையு மாயினுந் தொலைவெனப் படாது, வெல்லு மாயினு மிகச்சிறப் புடைத்தே'' என்ற யாப்பருங்கலவிருத்தி மேற்கோட்செய்யு ளாலும், ''புகழுந் தருமநெறி நின்றோர்பொய் காமம், இகழுஞ் சினஞ்செற்ற மில்லோர் - நிகழ்கலைகள், எல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றே, நல்லா யவைக்கு நலம்'' என்ற வெண்பாப்பாட்டிய லாலும் அறிக. இனி, நிறையவை இன்னதென்பதை:—''நிறை யவை யென்பது நினையுங்காலை, எல்லாப் பொருளுந் தன்னகத் தடக்கி, எதிர்வரு மொழிகளை யெடுத்துரைப் பதுவே'' என்ற யாப்பருங்கலவிருத்தி மேற்கோட்செய்யுளாலும், ''நலனடக்கஞ் செம்மை நடுவுநிலை ஞானம், குலனென் றிவையுடையோர் கோதில்- புலனில்லோர், சென்று மொழிந்தனவுங் கேட்போர் செறிந்தவிடம், அன்றே நிறைந்த வவை'' என்ற வெண்பாப்பாட்டியலாலும், ''ஆறுட் பகைசெற் றருங்கலை யோர்ந்து, பாரிற் கீர்த்தி படைத் தோர் வைகுதல், நல்லவை யடக்கம் வாய்மை நடுநிலை, சொல்லு நன்மை யுடையோர் தொகைஇ, வல்லார் மொழியினும் வல்லுநராக்கிக், கேட்போ ருறையவை நிறையவையாகும்'' என்ற இலக்கணவிளக் கத்தாலும் அறிக. 'வல்லாராயினும்' என்றது ஈண்டு, வல்லுநரா யினும் என்பதற்கு எதிர்மறை, புறம் 57-இல் வந்துள்ளதுபோல. வல்லார் - எதிர்மறைவினையாலணையும் பெயர். சுற்றம் - கல்வி யுடையோரைக் குறிக்கும்.

அடிகள் 81—83:—அவன் மலையிடத்து இறைவனது இயல்பு குறிக்கும்.

> நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறற்
> பேரிசை நவிர மேஎ யுறையும்
> காரி யுண்டிக் கடவுள தியற்கையும்

(இ - ள்). (81) நீர் அகம் பனிக்கும் - கடல்சூழ்ந்த உலகு நடுங்கும் [படியிருப்பவனும்], அஞ்சு வரு கடு திறல் - அஞ்சுதல் தோன்றும் கடிய வலியையுடைய [வனும்], (82) பெரு இசை நவிரம் மேஎய் உறையும்-பெரிய புகழினையுடைய நவிரமென்னும் மலையைப் பொருந்தியிருக்கு [மவனும் ஆகிய], காரி உண்டி கடவுளது இயற் கையும் - நஞ்சை ஊணாகவுடைய இறைவனது இயல்பும்; (எ - று.)

(81) பனிக்குங் (83) காரி; (81) திறலினையுடைய (83) காரி என இயையும்.

கருத்துரை :—இறைவணுகிய சிவபெருமான் உலகு நடுங்கும்படி அஞ்சுதல் தோன்றுங் கடிய வலியொடு கோயில் கொண்டிருக்குஞ் சிறப்பினையுடையது நன்னனின் நவிரமலை யென்று குறித்தமை கருத்து.

விசேடவுரை :—காரி-நஞ்சு. நஞ்சை யுண்டியாகக் கொண்டவன் சிவபிரான். சிவபிரானைக் 'காரியுண்டிக் கடவுள்' என்றார் தேவரும். (சிந். 670) நவிரமலை திருவண்ணாமலையின் வாயு திக்கில் உள்ளது. அது, இக்காலத்துத் திரிசூலகிரி யென்றும், பருவதமலை யென்றும் வழங்கப்படுகின்றது; அங்குள்ள இறைவன் திருநாமம் ஸ்ரீ காளகண்டேசுவரர் என்பது. மேஎய்-மேவி: 'நம்பும் மேவும் நசையாகும்மே' என்றது விதி.

அடிகள் 84—85 :—அவன் பகையிருள் கடிந்த சிறப்புக் குறிக்கும்.

பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரு
85 ஞாயி றன்னவவன் வசையில் சிறப்பும்

(இ - ள்.) (84) பாய் இருள் நீங்க - பரந்த இருள்நீங்கும்படி, பகல் செய்யா எழுதரும்-பகற்பொழுதைச் செய்துகொண்டே தோன்றும், (85) ஞாயிறு அன்ன அவன் வசை இல் சிறப்பும் - சூரியனையொத்த அவனுடைய பகையாகிய இருளைக் கடிந்த குற்றமில்லாத தலைமையும்; (எ - று.)

(84) நீங்க எழுதரு (85) ஞாயிறன்ன சிறப்பும் என இயையும்.

கருத்துரை :—இருள்கடியும் ஞாயிறுபோல நன்னன் தன்பகையாகிய இருளைக்கடிதல் குறித்தமை கருத்து.

விசேடவுரை :— செய்யாவெழுதரும் - செய்யாநின்றெழுதரும் என்றபடி. நன்னன் பகையைக் கடிதலுக்கு, ஞாயிறு இருளைக் கடிதல் உவமையாக் குறித்தபடி. "ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள் சீக்குஞ் சுடரேபோல், வேண்டாதார் நெஞ்சுட்க வெருவந்த கொடுமையும்" என்றது கலித்தொகையும் (100). "ஞாயிறனையை நின்பகைவர்க்கு" என்றது புறமும் (59).

அடிகள் 86—89:—அவ்ன் குடியிலுள்ளோர் தோற்றரவு குறிக்கும்.

இகந்தன வாயினுந் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக்
கொடைக்கட னிறுத்தவவன் தொல்லோர் வரவும்

(இ - ள்.) (86) தெவ்வர் தேஎம் இகந்தன ஆயினும்-பகைவர் தேயம் தூரத்திலிருப்பனவாயினும், (87) நூழிலாட்டி நுகம் பட

கடந்து-[ஆண்டுச்சென்று] தூசிப்படையைக் கொன்று குவித்து வலியுண்டாகவென்று, (88) புரை தோல் வரைப்பின்-[பின்னர்] உயர்ச்சியையுடைய யானை அணிந்து நிற்கின்ற அணியிலே (சென்று பொருத), வேல் நிழல் புலவோர்க்கு - வேற்போரின் விளக்கத்தையுடைய அறிவுடைய வீரர்க்கு, (89) கொடை கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும் - கொடுத்தற்குரிய நாடும் ஊரும் முதலியவற்றைக் கொடுத்த அவனுடைய குடியிலுள்ளோர் தோற்றரவும்;

(86) தேஎம் இகந்தனவாயினும் (87) நூழிலாட்டிக்கடந்து (88) தோல்வரைப்பினிற் சென்று பொருதபுலவோர்க்கு, (89) கடனிறுத்த தொல்லோர் வரவும் என இயையும்.

கருத்துரை :—பகைவர் நாடுகள் தூரத்திலிருப்பனவாயினும் ஆண்டுச்சென்று முற்படத் தூசிப்படையைக்கொன்று குவித்து வென்று, பின்னர் யானையணியிலே வேல்கொண்டு புகுந்து பொருது வென்ற வீரர்க்கு, நாடும் ஊரும் முதலியவற்றைக் கொடுத்த நல்ல தோற்றரவையுடைய குடியிலுள்ளோர் வழிவந்தவன் நன்னன் என்பது குறித்தமை கருத்து.

விசேடவுரை :—நூழிலாட்டு-கொன்று குவித்தல். தூசிப்படையென்பது சந்தர்ப்பத்திற்கேற்ப வருவித்துரைக்கப்பட்டது. நுகம்-வலி. புரை-உயர்ச்சி. "புரைஉயர்பாகும் (தொல்:உரியியல். 4). தோல்-யானை. வரைப்பு-எல்லை. தோல் வரைப்பு என்றதால், யானையணியாயிற்று. நிழல்-விளக்கம். வீரரைப் புலவோர் என்றது, காஞ்சி சான்ற வயவராதலின்: [காஞ்சிசான்றவயவர் - நிலையாமையை எப்பொழுதும் உள்ளத்துக் கொண்டிருத்தலமைந்த வீரர்]. தோற்றரவு-பிரபாவம், புகழ்.

அடிகள் 90—94:—அவன் மூதூரியல்பு குறிக்கும்.

இரைதேர்ந் திவருங் கொடுந்தாண் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்றோ யிஞ்சி
உரைசெல வெறுத்தவவன் மூதூர் மாலையும்
கேள்

(இ - ள்.) (90) இரை தேர்ந்து இவரும் கொடு தாள் முதலையொடு-இரையைத் தேடியுலாவும் வளைந்த காலினையுடைய முதலைகளோடே, (91) திரை பட குழிந்த கல் அகழ் கிடங்கின்-திரையுண்டாக ஆழ்ந்த கல்லையகழ்ந்த அகழியினையும், (92) வரை புரை நிவப்பின் - மலையையொத்த உயர்ச்சியையுடைய, வான் தோய் இஞ்சி-வானைத்தீண்டும் மதிலினையும்உடைய, (93) உரை செல வெறுத்த-புகழ்எங்கும் பரக்கும்படி செறிந்த, அவன் மூதூர் மாலையும்-அவனுடைய பழைய ஊரினதியல்பும், (94) கேள்-இருக்கும்படி கேட்பாயாக; (எ - று.)

(90) முதலையொடு (91) குழிந்த கிடங்கினையும் (92) இஞ்சியி னையும் உடைய (93) அவன் மூதூர்மாலையும் என இயையும்.

இனி (67) ஆற்றினதளவு முதலியவற்றை யெண்ணி இன்ன தும் இன்னதும் இருக்கும்படி (94) கேட்பாயாக என முடிக்க. அம்முடிபு பின்வருமாறு :—(67) ஆற்றினதளவும் புலமும் (68) வல்சியும் (69) மலையும் சோலையும் கானமும் (72) ஈகைமாரியும் (73) ஆற்றலும் (76) இருக்கையும் (80) சுற்றத்தொழுக்கமும் (83) கடவுள தியற்கையும் (85) அவன் சிறப்பும் (89) தொல்லோர் வரவும் (93) மூதூர்மாலையும் (94) கேள் [இருக்கும்படி கேட்பாயாக] என்பது. [இவ்விடத்துள்ள உம்மைகள்-எண்ணுப் பொருளன].

கருத்துரை:—திரையுண்டாகும்படி ஆழ்ந்து முதலைகள் உலா வும்படியிருக்கும், கல்லகழ்ந்த கிடங்கினையும், மலைபோலுயர்ந்து வானைத்தீண்டும் மதிலினையும் உடையது நன்னன் மூதூர்; அதன் புகழ் எங்கும் பரந்துளது; அவ்வூரினதியல்பும் முற்குறித்தவைகளும் இருக்கும்படி கேட்பாயாக என்று ஆற்றுப்படுப்போன் குறித்தமை கருத்து.

விசேடவுரை :—கிடங்கு - அகழி: கல்லகழ்கிடங்கு - 'கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கு' என்றார் மதுரைக்காஞ்சியிலும். இஞ்சி - மதில். வெறுத்த - செறிந்த : இப்பொருளில் வருதலை "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறம். 53) என்றவிடத் துங் காணலாம். வெறுப்பு என்னும் உரிச்சொல் செறிவென்னும் பொருளில் வருமென்பதை "விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே" என்பதாலுணர்க (தொல்: உரியியல், 51). மாலை - இயல்பு.

[அடிகள்: 94—144:—'கேள்' எனக் குறித்தவற்றில், நன்ன னைக் கருதிச் செல்கின்ற திசையை [அதாவது, ஆற்றினளவை] விரி வுறக் கூறும்.] அவற்றுள்,

அடிகள் 94—96 :—'நீ முன்னிய திசையைக் கேள்' எனக் கூறி, 'செல்லும்வழியின்பண்பு இது' என மிகச்சுருங்க முற்படக் கூறுவது.

இனி வேளைநீ முன்னிய திசையே
95 மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற்
புதுவ்து வந்தன் றிதுவதன் பண்பே

(இ - ள்.) (94) இனி நீ வேளை முன்னிய திசையே கேள் - அவற் றில் இப்பொழுது நீ நன்னனைக் கருதிச் செல்கின்ற திசையைக் கேள்; (95) மிகு வளம் பழுநிய யாணர் வைப்பின் (96) புதுவது வந் தன்று - மிகுகின்ற செல்வம் முற்றுப்பெற்ற புதுவருவாயையுடைய ஊர்களாலே புதிதாகிய தன்மை வந்தது; அதன் பண்பு இது - அவ் வழியின் செய்தி இத்தன்மைத்து; (எ - று.)

கருத்துரை :—நீ நன்னனைக் கருதிச் செல்கின்ற திசையைக் கேள்; அவ்வழி மிகுவளம்பெற்ற புதுவருவாயையுடைய ஊர்களாலே புது விளக்கம் பெற்று இலங்குவது என்றமை கருத்து.

விசேடவுரை :—வேள் - நன்னன். ‘திசை’ என்றது ஈண்டு, ஆற்றினளவை யுணர்த்தி நிற்றலின், ஆகுபெயராயிற்று. யாணர் - புது வருவாய்: “புதிதுபடற் பொருட்டே யாணர்க்கிளவி”.

இலக்கணக்குறிப்பு :—திசையே - ஏகாரம், பிரிநிலை. வந்தன்று என்ற இறந்தகால முற்றில், அன் - சாரியை, று - விகுதி, த்-இடைநிலை.

அடிகள் 97—144 வரை :—ஆற்றினது நன்மையின் அளவு கூறும். (அதாவது, செல்லும் வழியிலுள்ள புனத்தும், புறவிலும், துடவையிலும், செறுவிலும், நெடுமலையடுக்கத்தும் விளையும் வளன் கூறும்). அவற்றுள்,

அடிகள் 97—113:—புனத்து உண்டாம் வளன் கூறும்.

வானமின்னு வசிவு பொழிய வானாது
இட்ட வெல்லாம் பெட்டாங்கு விளையப்
பெயலொடு வைகிய வியன்க ணிரும்புனத்து
அகலிரு விசும்பி னாஅல் போல
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை
நீலத் தன்ன விதைப்புன மருங்கின்
மகுளி பாயாது மலிதுளி தழாலின்
அகளத் தன்ன நிறைசுனைப் புறவிற்
கௌவை போகிய கருங்காய் பிடியேழ்
நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்
பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
கொய்பத முற்றன குலவுக்குர லேனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை
மேதி யன்ன கல்பிறங் கியவின்
வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி
இரும்புகவர் வுற்றன பெரும்புன வரகே

(இ - ள்.) (97) ஆனாது (98) இட்ட எல்லாம் பெட்டாங்கு விளைய-அமையாதே நிலத்தேயிட்ட விதைகளெல்லாம் இன்னவாறே விளைய வேண்டுமென்று ஆண்டுள்ளார் விரும்பினாற்போலே விளையும்படியாக, (97) வானம் மின்னு வசிவு பொழிய - மேகம் மின்னுகிய பிளந்து வடுப்படுதலோடே பெய்கையினாலே, (99) பெயலொடு வைகிய வியல் கண் இரு புனத்து - அம்மழையோடே தங்கின அகன்ற இடங்களையுடைய பெரிய கொல்லை நிலத்தே, (101)

புல் கொடி முசுண்டை - புல்லிய கொடியினையுடைய முசுண்டை, (100) அகல் அரு விசும்பின் ஆல்போல - ஏனைப்பூதங்கள் தோன்றுதற்குக் காரணமான பெரிய ஆகாயத்திற் கார்த்திகை யாகிய மீன்போல, (101) வாலிதின் விரிந்த-வெள்ளிதாக மலர்ந்தன; (106) பல் கவர் ஈர் எண் - பலவாகக் கிளைத்த பசிய எள்ளுத் தோடுகளெல்லாம், (102) நீலத்து அன்ன விதை புனம் மருங்கின்-நீலமணியையொத்த நிறத்தையுடையவாயெழும்படி அவற்றை விதைத்த கொல்லையின்பக்கத்தில், (104) அகளத்து அன்ன நிறை சுனை புறவின்-நீர்ச்சாலையொத்த நிறைந்த சுனைகளையுடைய காட்டிடத்தே, (103) மகுளி பாயாது மலிதுளி தழாலின்-அரக்குப்பாயாமல் மிக்க துளி தழுவுகையினாலே, (105) கௌவை போகிய-இளங்கா யாகிய தன்மைபோன, கருங்காய்-கரியகாய், பிடி ஏழ்-ஒருபிடியிலே ஏழ்காயாக, (106) நெய் கொள ஒழுகின-நெய் உள்ளே கொள்ளும்படியாக வளர்ந்தன; (107) பொய் பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப-தம்மில் விளையாடிப் பொருகின்ற யானைக்கன்றுகளின் ஒன்றோடொன்று சேர்ந்த கைகளையொப்ப, (108) குலவு குரல் ஏனல்-தம்மிற் பிணையுங்கதிர்களையுடைய தினை, கொய் பதம் உற்றன-அறுக்குஞ் செவ்வியாக முற்றின; (110) அவரை-அவரைகள், (109) இருவி தொறும்-தினையரிதாள் தோறும், விளைதயிர் பிதிர்வின் வீ உக்கு-முற்றின தயிரினது பிதிர்ச்சிபோலும் பூக்களுதிர்ந்து, (110) குளிர் புரை கொடு காய் கொண்டன-[அடியிலே] அரிவாளை யொக்கும் வளைந்த காயைக்கொண்டன; (113) பெரு புனம் வரகு-பெரிய புனத்தில் வரகுகள், (111) மேதி அன்ன கல் பிறங்கு இயவின்-எருமை கிடந்தாற்போன்ற கற்பெருத்த வழியிடத்திலே, (112) வாதிகை அன்ன கவை கதிர் இறைஞ்சி-தருக்கங் கூறுகின்றவன் கையிடத்து இணைந்த விரல்களையொத்த இரட்டித்த கதிர்கள் முற்றிவளைந்து, (113) இரும்பு கவர்வுற்றன-அரிவாளாலே அரிதலுற்றன; (எ - று.)

(98) பெட்டாங்குவிளைய (97) வானம் பொழிகையினாலே (99) பெயலொடு வைகிய புனத்து (101) முசுண்டை விரிந்த(ன) (106) எள் ஒழுகின; (108) ஏனல் கொய்பத முற்றன; (110) அவரை காய் கொண்டன; (113) வரகு கவர்வுற்றன என இயையும்.

கருத்துரை :—நிலத்தே வித்திட்டோர் விரும்பினாற் போலே நல் விளைச்சலுண்டாம்படி வானம் மழை பொழிகையினாலே, அகன்ற பெரிய புனத்திடத்தே முசுண்டை கார்த்திகைமீன்போல வெள்ளிதாக மலர்ந்தன; பசிய எள்ளுத்தோடுகளெல்லாம் அரக்குப்பாயாமல் இளங்காயா யிருந்த தன்மை நீங்கி முற்றிக் கரியகாயாகிஒரு பிடியிலே ஏழ் காயாக நெய்யை உள்ளே கொண்டு வளர்ந்தன; தினைக்கதிர்கள் அறுக்குஞ் செவ்வியையுடையவாய் முற்றின; தினையரிதாள்தோறும் அவரைகள் பூக்களுதிர்ந்து காயைக் கொண்டன; வரகுகள் இரட்டித்த கதிர்கள் முற்றி வளைந்து அரிவாளாலே அரிதலுற்றன-எனச் செல்லும் வழியிலுள்ள புனத்து வளன் குறித்தமை கருத்து.

விசேடவுரை:—விளையும்படி பொழிய எனக் கூட்டப்பட்டது. வசிவு - பிளப்பு. மின் மேகத்தைப் பிளப்பது போலே வீசுதல் இன்றுங் கண்கூடு. அகலிரு விசும்பு - தன்னையொழிந்த நான்கு பூதங்களும் [நிலம், நீர், தீ, வளி] தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெருமையையுடைய ஆகாயம் என்றபடி. ஆல் - ஆரல் என்பதன் விகாரம். ஆரல் - கார்த்திகையாகிய நட்சத்திரம். 'அரவுக் கண்ணணியுறழ் ஆரன்மீன் றகையொப்ப' என்றார் கலியிலும் (64). ஆரல் 'ஆல்' எனக் குறைந்து வருதலை "வடவயின் விளங்குஆல் உறையெழு மகளிருள்" என்ற பரிபாடலிலும் காண்க (5: வரி 43). அகளம்-நீர்ச்சால். மகுளி பாய்தல் - அரக்குப் பாய்தல்: அதாவது, நீரின்மையால் எள்ளுமுதலிய செடிகள் செந்நிறமடைதல். கௌவை- எள்ளிளங்காய். "சிறுதினை கொய்யக் கவ்வைகறுப்ப" என்றவிடத்துங் காண்க. (மதுரைக்: 271). நெய் - எண்ணெய். பொய்தல்-விளையாட்டு; அது விகுதிகெட்டுப் 'பொய்' என வந்தது. இனி, 'பொய் பொரு' என்றதைக் கைக்கு அடையாக்கிக் கூறலுமாம்; அஞ்ஞான்று புரை பொருந்திய கை எனப் பொருள்படும். 'பொய்பொரு முடங்கு கை' (சிலப்: 15:50) என்பதற்கு 'புரைபொருந்திய வளைந்த கை' என அடியார்க்குநல்லார் உரை வகுத்திருத்தலும் காண்க. கயமுனி-யானைக் கன்று; தினைக்கதிர்க்கு யானைக்கை உவமையாதலை "யானை, முத்தார் மருப்பின் இறங்கு கை கடுப்பத், துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல், நற்கோட் சிறுதினை" என்ற குறிஞ்சிப்பாட்டாலும் அறிக. (35-38) இருவி - தினையரிதாள். தினையரிதாளில் அவரை விளைதலை "பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற், கொழுங்கொடியவரை பூக்கும்" என்று குறுந்தொகையிலும் (82); "சிறுதினை கொய்த விருவி வெண்காற், காய்த்த வவரை" என்று ஐங்குறுநூற்றிலும் (286) கூறியிருத்தலும் நோக்கத்தக்கது. உதிர்ந்தபூக்கள் முற்றின தயிரினது பிதிர்ச்சிபோலிருத்தலை "புனிற்று எழுந்த வாம்பிகளிடறின செறிதயி ரேய்த்த" என்ற கம்பன் வாக்காலும் உணரலாம். (கிட்கி: கார்கால: 47) கருங்கல் எருமை கிடந்தாற்போலிருத்தலை 'எருமை யன்ன கருங்கல்' என்ற புறத்தாலும் (5) தெளியலாம். குளிர்- அரிவாள்; கிளிகடி கருவியு மென்ப. இயவு - வழி. வாதி கையன்ன கவைக்கதிர் - இவ்வுவமை பெரிதும் சுவைக்கற்பாலது. இரும்பு - ஈண்டு, அரிவாள்.

இலக்கணக்குறிப்பு:—வரி 105-இல் 'கௌவை' என்ற சீரில், ஔகாரக்குறுக்கமும் ஐகாரக்குறுக்கமும் தனித்தனி நேரசையாயின.

அடிகள் 114—124.—புறவிலும் துடவையிலும் செறுவிலும் உண்டாம் வளன் கூறும்.

பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு
வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல்
வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்னக்
காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக்

குறையறை வாரா நிவப்பி னறையுற்று
ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே
புயற்புனிறு போகிய பூமலி புறவின்
அவற்பதங் கொண்டன வம்பொதித் தோரை
தொய்யாது வித்திய துளர்படுதுடவை
ஐயவி யமன்ற வெண்காற்செறுவின்
மையென விரிந்தன நீணறு நெய்தல்

(இ - ள்.) (*120*) பூ மலி புறவின் - பூ மிக்க காட்டிடத்தே, புயல் புனிறு போகிய - மழையால் ஈன்றணிமை தீர்ந்து முற்றிய, (*121*) அம் பொதி தோரை - அழகிய குலையினையுடைய மூங்கில்நெல், அவல் பதம் கொண்டன-அவலிடிக்குஞ் செவ்வியைக்கொண்டன; (*123*) ஐயவி-வெண்சிறுகடுகு, (*122*) தொய்யாது துளர் படு துடவை வித்திய-உழாதே களைக்கொட்டால் அடிவரைந்து கொத்தும் தோட்டங்களிலே விதைக்கப்பட்டனவாய், (*123*) அமன்ற-நெருங்கி விளைந்தன; வெண் கால் செறுவில்-வெள்ளிய அரிதாள்களையுடைய செய்யிலே, (*115*) ஐவனம் வெண்ணெல்-ஐவனநெல்லும் வெண்ணெல்லும், (*114*) பால் வார்பு கெழீஇ-பால்கட்டிச் சிறிது முற்றி, பல் கவர் வளி போழ்பு-பலவாய்க் கவர்த்த காற்றுஊடறுக்கப்பட்டு, (*115*) வாலிதின் விளைந்தன-நன்றாக விளைந்தன; (*119*) தீம் கழை கரும்பு-இனிய கோலாகிய கரும்பு, (*117*) கவிழ்-தோடு கவிழ்த லோடே, கணைத்து-தண்டுதிரண்டு, (*118*) அறை குறைவாரா நிவப்பின்-பாத்தி குறைபடுதலுண்டாகாத வளர்ச்சியோடே, (*116*) வேல் ஈண்டு தொழுதி இரிவு உற்றென்ன-வேற்படை திரண்ட தானை கெட்டுப்போதலை யுற்றதென்னும்படி, (*117*) கால் உறு துவைப்பின் இறைஞ்சி-காற்று மிகப்படுகின்ற ஆரவாரத்தாலே சாய்ந்து, (*118*) அறை உற்று-வெட்டுதலுற்று, (*119*) ஆலைக்கு அலமரும்-ஆலையிலே சென்று பயன்படுதற்கு அசையாநிற்கும்; (*124*) நீள் நறு நெய்தல் மை என விரிந்தன-நீண்ட நறியநெய்தல் கருமைதான் வடிவுகொண்டதென்னும்படியாக அலர்ந்தன; (எ-று.)

(*120*) புறவிலே (*121*) தோரை அவற்பதங்கொண்டன; (*122*) துடவையிலே, (*123*) ஐயவி யமன்றன; (*123*) வெண்காற் செறுவிலே (*115*) ஐவனநெல்லும் வெண்ணெல்லும் விளைந்தன; (*119*) கரும்பு ஆலைக்கு அலமரும்; (*124*) நெய்தல் விரிந்தன என இயையும்.

மற்றும், (*119*) கரும்பு (*117*) கணைத்து (*118*) நிவப்போடே (*117*) இறைஞ்சி (*119*) அலமரும் என இயையும்.

கருத்துரை:—புறவிடத்தே மூங்கில்நெல் அவலிடிக்குஞ் செவ்வியைக்கொண்டன; துடவைகளிலே விதைக்கப்பட்ட வெண்சிறு கடுகுகள் நெருங்கி விளைந்தன; செய்களிலே ஐவனநெல்லும் வெண்ணெல்லும் பால்கட்டி முற்றி நன்றாக விளைந்தன; கரும்புகள் தண்டு திரண்டு, பாத்தி நிறையும்படி வளர்ந்து காற்றடிக்கின்ற ஆரவாரத் தாலே வேற்படைத்தானை யிரிவதுபோலே சாய்ந்து, ஆலையிலே

சென்று பயன்படுதற்குத்தக முற்றி அசையாநிற்கும்; நீண்ட நறுநெய்தல்கள் கரியநிறத்தொடு அலர்ந்தன-எனச் செல்லும் வழியிலுள்ள புறவு, துடவை, செறு இவையிற்றிலுண்டாம் வளன் குறித்தமை கருத்து.

விசேடவுரை:—'புயல் புனிறு போகிய' என்றவிடத்து, 'புயல்' என்பதற்குப்பின் ஆல்உருபு தொக்கது. பொதி-பொதிந்தகுலை. மூங்கில்நெல் அவல்பதங்கொண்டன-'அவலவலென்கின்றன நெல்' என்றார் சேனாவரையரும் (தொல்: எச்ச: 26): தொய்தல்-உழுதல். துளர்-களைக்கொட்டு. துடவை - தோட்டம், "தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை" என்றார் பெரும்பாணிலும் (201). ஐவனம்-மலைநெல். இம் மலைபடுகடாத்து, 'ஐவன நெல்லும் வெண்ணெல்லும்' என எண்ணும்மை கொடுத்து நச்சினார்க்கினியர் உரைவகுத்திருப்பது, இங்கு, "வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெல்" என்று பன்மை வினைவந்திருத்தல்பற்றி. எனவே, இங்கு இருவகை நெற்களைக் குறித்தபடி. 'வெண்ணெல்' என்பது ஒருவகைபடுதென்பதை 'வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ' எனமேல் வருதலாலும் (471) 'தொண்டிமுழுதுடன்விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு' (குறுந்: 210) என்றதாலும், 'யாயும் உப்பை மாறி வெண்ணெல் தரீஇய......சென்றனள்' (குறுந்: 269) என்றதாலும் தெளியலாம். பால் வார்தல்-பால்கட்டுதல்: வார்தல் ஒழுகுதலாதலிற் கட்டுதலையுணர்த்திற்று. கெழீஇ - முற்றி; கெழுமுதல் ஈண்டு முற்றுதலையுணர்த்திற்று.பல்கவர்வளியெனவே, நாலுகாற்றும் அடித்து முற்றுதல் கூறியபடி; நாலுகாற்று-நான்கு திக்கினின்றும் வீசியகாற்று. கனைத்தல்-திரளுதல்: ஈண்டு, கரும்பின் தண்டு திரளுதல். அறை-பாத்தி. கரும்பின் பாத்தி என வழங்குதலை 'கரும்புநடு பாத்தி' என்ற குறுந்தொகையாலும் (262) அறியலாம். குறைவாரா நிவப்பு-நிறைந்த வளர்ச்சி குறித்தது. நிவப்பு-வளர்ச்சி. காற்றுப்படுகின்ற ஆரவாரத்தோடு முற்றிய கரும்புகள் சாய்தலுக்கு வேற்படைதிரண்டதானை கெட்டுச் சாய்தலை உவமைகூறியமை, பெரிதும் சுவையுடைத்து. கரும்புக் கோலுக்கு வேலை உவமை குறித்தலை "தோடுகொள் வேலின் தோற்றம்போல, ஆடுகட்கரும்பின்" என்ற புறப்பாட்டிலுங் காண்க (35). அறையுற்று - அறைதலுற்று; அறை - முதனிலைத்தொழிற்பெயர். அலமருதல் - ஈண்டு, அசைதல்.

இலக்கணக்குறிப்பு :—ஆலைக்கு அலமரும் - நான்கனுருபு, 'அதற்கு வினையுடைமை'ப்பொருளது; வினை ஈண்டு உபகாரம், 'கரும்பிற்கு வேலி' என்பதுபோல.

அடிகள் 125—144:—நெடுமலையடுக்கத்து உண்டாம் வளன் கூறும்.

125 செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்
காயங் கொண்டன இஞ்சி மாவிருந்து

வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை
காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென
ஊழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத்
துறுகல் சுற்றிய சோலை வாழை
இறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக்கு
ஊழுற் றலமரும் உந்தூழ் அகலறைக்
கால மன்றியு மரம்பயன் கொடுத்தலிற்
காலி னுதிர்ந்தன கருங்கனி நாவல்
மாறுகொள வொழுகின ஊறுநீ ருயவை
நூறொடு குழிஇயின கூவை சேறுசிறந்து
உண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிந்து
அரலை யுக்கன நெடுந்தா ளாசினி
விரலூன்று படுகண் ஆகுளி கடுப்பக்
குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக்
கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச்
சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி
முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே

(இ - ள்.) (140) *விரல் ஊன்று படு கண் ஆகுளி கடுப்ப* - விரல் தீண்டுகின்ற முழங்கும் கண்ணையுடைய சிறுபறையை யொக்க, (141) *குடிஞை இரட்டும் நெடு மலை அடுக்கத்து* - பேராந்தை பேடும் சேவலும் மாறிக் கூப்பிடும் நெடிய மலைப்பக்கத்தே,—(126) *இஞ்சி* - இஞ்சிமுதல், (125) *செய்யா பாவை வளர்ந்து கவின் முற்றி* - ஒருவராற் பண்ணப்படாத பாவைகள் வளரப்பட்டு அழகு முதிர்ந்து, (126) *காயம் கொண்டன*-காழ்ப்பைக் கொண்டன; (128) *கொழு கொடி கவலை*-கொழுவிய கொடியினையுடைய கவலை, (127) *குழிதொறும் வயவு பிடி முழந்தாள் கடுப்ப*-குழிகள்தோறும் வலியபிடியின் மடித்த முழந்தாளை யொக்கும்படி, (126) *மா இருந்து* - முற்றி மாவாந்தன்மை தம்மிடத்தேஉளவாய், (128) *விழுமிதின் வீழ்ந்தன* - சீரிதாகக் கீழே வளர்ந்தன; (129) *காழ் மண்டு எஃகம் களிறு முகம் பாய்ந்தென*-காம்பிலே தைத்த வேல் யானையைக் குத்திற்றென்னும்படியாக, (130) *ஊழ் மலர் ஒழி முகை உயர் முகம் தோய*-முறைப்பட மலர் தலையொழிந்த முகைகளினுடைய உயர்ந்த முகங்கள் சென்று தீண்டும்படியாக, (131) *துறு*-நெருங்கின, *கல் சுற்றிய*-மலைகளைச் சூழ்ந்து நின்ற, *சோலை வாழை*-சோலையாகிய வாழை, (132) *இறுகு குலை முறுக பழுத்த* - காய் நெருங்கின குலை மிகவும் நெகிழும்படி பழுத்தன; (133) *உந்தூழ்*-பெருமூங்கில் நெல், *ஊழுற்று*-முற்றுதலுற்று, (132) *பயம் புக்கு*-பயன்படுந்தன்மையிலே புகுந்து, (133) *அலமரும்* - அசையாநிற்கும்; (134) *மரம் காலம் அன்றியும் பயன் கொடுத்தலின்*-ஆண்டுள்ள மரங்கள்தாம் காலமன்றியும் நிலவிசேடத்தாற் பயனைக் கொடுத்தலின், (135) *நாவல்*-நாவல்மரத்தின், *கருங் கனி*-கரிய பழம், *காலின்*-காற்றாலே, (133) *அகல் அறை* - அகன்ற பாறையிலே, (135) *உதிர்ந்தன*—; (136) *நீர் ஊறு உயவை* - (விடாய்த்த காலத்தில்) வாய் நீரூறுதற்குக் காரணமான உயவைக்கொடி,

மாறு கொள ஒழுகின - நீரோடே மாறுபாடு கொள்ளும்படி படர்ந்தன; (137) கூவை நூறொடு குழி இயின - கூவைக்கிழங்கு நீறுந்தன்மையோடே முற்றித் திரண்டன; (138) தே மா - மாம் பழங்கள், (137) சேறு சிறந்து-சாறு மிக்கு, (138) உண்ணுநர்த் தடுத்தன-உண்பாரை வேறொன்றிற் செல்லவொட்டாமல் தடுத்துக் கொண்டன; (139) நெடு தாள் ஆசினி-நெடிய அடியையுடைய ஆசினிப்பலா, (138) புண அரிந்து-புண்ணும்படி வெடித்து, (139) அரலை உக்கன-உள்ளுள்ள விதைகள் சிந்தின; (144) அலங்கு சினை பலவு-அசைகின்ற கொம்பினையுடைய பலாக்கள், (142) கார் வாய்த்து எதிரி-மழைமிகப் பெய்யப்பட்டு அதனைத்தாம் ஏற்றுக் கொண்டு, (143) சுரம் செல் கோடியர் முழவின்-வழிபோகின்ற கூத்தருடைய மத்தளங்கள்போலே, (142) கீழும் மேலும் (143) தூங்கி-கீழும்மேலும் தொங்கி, (144) முரஞ்சுகொண்டு இறைஞ்சின-முற்றுதல்கொண்டு தாழ்ந்தன; (எ - று.)

(140) ஆகுளி கடுப்ப, (141) இரட்டும் நெடுமலைபடுக்கத்து, (126) இஞ்சி காயங்கொண்டன; (128) கவலை வீழ்ந்தன; (131) வாழை (132) பழுத்த(ன); (133) உந்தூழ் அலமரும்; (135) நாவல் (கனி) உதிர்ந்தன; (136) உயவை ஒழுகின; (137) கூவை குழீ இயின; (138) தேமாத் தடுத்தன; (139) ஆசினி (அரலை) உக்கன; (144) பலவு இறைஞ்சின-என இயையும்.

கருத்துரை:—குடிஞையிரட்டும் நெடுமலையடுக்கத்து இஞ்சிக் கிழங்குகள் அழகு முற்றிக் காழ்ப்பைக்கொண்டன; கவலைக் கிழங்குகள் முற்றி மாவாந்தன்மை தம்மிடத்தே யுளவாய்க் குழிகள்தோறும் சீரிதாகக் கீழே வளர்ந்தன; சோலையிடத்தே முறைப்பட மலர் தலையொழிந்த வாழைப்பூவின் முகங்கள் மலையைத் தீண்டிநிற்க, காய் நெருங்கின குலைகள் மிகவும் நெகிழும்படி பழுத்தன; பெருமூங்கில் நெல்லு முற்றிப் பயன்படும் பக்குவநிலையை யடைந்து அசையாநிற்கும்; ஆண்டுள்ள மரங்கள் காலமல்லாக் காலத்தும் நிலவிசேடத்தாற் பயன்கொடுத்தலின், நாவல்மரம் பழுக்க, அதன் கரிய பழங்கள் காற்றாலே அகன்ற பாறையிலே உதிர்ந்தன; உயவைக்கொடி மிகுதியாகப் படர்ந்தன; கூவைக்கிழங்கு நீறுந்தன்மையோடே முற்றித் திரண்டன; மாம்பழங்கள் சாறு மிக்குச் சிறந்தன; ஆசினிப்பலாப் புண்ணும்படி வெடித்து உள்ளுள்ள விதைகள் சிந்தின; பலாமரங்களில் பலாப்பழங்கள் வழிப்போகின்ற கூத்தருடைய மத்தளங்கள்போலே கீழும் மேலுந் தூங்கி முற்றித் தாழ்ந்தன—எனச் செல்லும் வழியிலுள்ள நெடுமலை யடுக்கத்து உண்டாம் வளன் குறித்தமை கருத்து.

விசேடவுரை:—குடிஞை - பேராந்தை; இரட்டுதல் - மாறிமாறிக் கூப்பிடுதல். பேராந்தை பேடும்சேவலும் மாறிக் கூப்பிடுதல்-ஆகுளியினொலியைக் கடுத்திருந்தது. மலைப்பக்கத்துக் குடிஞை யிரட்டுதலை, 'குடிஞையிரட்டும் குளிர்வரைநாட!' என்ற பழமொழிச் செய்யுள் தொடராலும் (செ. 246), 'நெடுவரைக் குடிஞையோ டிரட்டும் மலை'

என்ற புறநானூற்றுச் செய்யுள் தொடராலும் (செ. 170) அறியலாம். இஞ்சி-இஞ்சிமுதல், இஞ்சிக்கிழங்கு; இஞ்சிக்கிழங்கைப் பாவை யென்றல் மரபு. வயவு-வலி. கவலைக் கிழங்கிற்குப் பிடியின் முழந்தாள் உவமையாயிற்று. கவலைக்கிழங்கு முற்றின் மாவாந்தன்மையடையும் என்பது தெரியவருகின்றது. வேல் யானையைக் குத்தினாற்போல, வாழைப்பூ மலையைத் தீண்டிநின்றதென்பது உணரவேண்டுவது; வாழைப்பூ உதிர்ந்து பின்பு மலராது நிற்றல் இயல்பு என்பவாகலின், 'ஊழ் மலரொழிமுகை' என்றது. உந்தூழ் - பெருமூங்கில் நெல்லு. ஊழ்த்தல்-ஈண்டு, முதிர்தல், முற்றுதல். விடாய்த்த [தாகமெடுத்த] காலத்தில் வாயில் நீரூறுதற்காக உயவைக்கொடியைக் கறித்தல் பெறப்படுதலின், 'நீரூறு உயவை' என்றது. அக்கொடி நீரோடு மாறுபாடு கொள்ளும்படி படர்ந்தன என்றது, தண்ணீர் தேட வேண்டா என்றபடி. அதாவது, தாகமெடுத்தவர் தண்ணீர் தேடவேண்டாதபடி அவ்வளவு பேரளவினதாக உயவைக்கொடி படர்ந்திருந்தன என்பது கருத்து. நூறு - நீறு. சேறு - சாறு. உண்ணுநர்த் தடுத்தன - உண்பாரை வேறொன்றிற் செல்லவொட்டாமல் தன்னையே நின்று தின்னும்படி தடுத்தன எனத் தேமாவின் சுவைமிகுதி கிளந்தவாறு. மேலும் "உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை" என்பர் (வரி. 445). "உண்ணுநர்த் தடுத்த சாரற் பலவின்சுளை" என்றது அகமும் (2.) 'ஆசினி புண் ணரிந்து' என்றவிடத்து, "பலாஅம் பழுத்த பசும்புண்ணரியல்" என்ற பதிற்றுப்பத்து (61) ஒப்புநோக்கத்தக்கது. ஆங்கு, 'பசும் புண்ணென்றது, புண்பட்ட வாய்போலப் பழுத்து விழுந்த பழத் தினை' என்றதும் இங்கு நினைக்கத்தக்கது. "கலைதொடு பெரும் பழம் புண்கூர்ந் தூறலின்" என்பர் மேலும் (292). அரலை-விதை. பலாப்பழம் மத்தளம்போன்றிருத்தலை, மேல் "கானப் பலவின் முழவுமருள் பெரும்பழம்" (511) என்றுங் குறிப்பர். அலங்குசினைப் பலவு சுரஞ் செல் கோடியர் முழவின் கீழும்மேலும் தூங்கித் தாழ்ந்தன என்ற உவமைநயம் பெரிதும் சுவைக்கத் தக்கது. பெருங்கௌசிகனாரின் நுண்ணிதிற்காணும் ஆற்றலுக்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும்.

இலக்கணக்குறிப்பு:—நாவல் கனி உதிர்ந்தன-இது சினைவினை முதலொடு முடிந்தது. உண்ணுநர்த் தடுத்தன-உயர்திணையில் இரண்டனுருபு தொக, அதன் முன் வலிமிக்கது. முரஞ்சு-முதிர்தல், முற்றுதல்: 'முரஞ்சல் முதிர்வே' என்றது தொல்காப்பியம்.

இனி, அடிகள் 94 முதல் 144 வரையுள்ள பகுதிக்கு [நச்சினார்க் கினியர் போக்கைத்தழுவிக் காட்டப்படும்] தொகுதிப்பட்ட முடிபு பின்வருமாறு:—

(94) நீ முன்னிய திசையைக்கேள்: (97) வானம் பொழிகை யினாலே, (99) பெயலொடு வைகிய புனத்து (101) முசுண்டை விரிந்தன; (106) எள் ஒழுகின; (108) ஏனல் கொய்பதமுற்றன; (110) அவரை காய்கொண்டன; (113) வரகு கவர்வுற்றன; (120) புறவிலே

என்ற புறநானூற்றுச் செய்யுள் தொடராலும் (செ. 170) அறியலாம். இஞ்சி-இஞ்சிமுதல், இஞ்சிக்கிழங்கு; இஞ்சிக்கிழங்கைப் பாவை யென்றல் மரபு. வயவு-வலி. கவலைக் கிழங்கிற்குப் பிடியின் முழந்தாள் உவமையாயிற்று. கவலைக்கிழங்கு முற்றின் மரவாந்தன்மையடையும் என்பது தெரியவருகின்றது. வேல் யானையைக் குத்தினாற்போல, வாழைப்பூ மலையைத் தீண்டிநின்றதென்பது உணரவேண்டுவது; வாழைப்பூ உதிர்ந்து பின்பு மலராது நிற்றல் இயல்பு என்பவாகலின், 'ஊழ் மலரொழிமுகை' என்றது. உந்தூழ் - பெருமூங்கில் நெல்லு. ஊழ்த்தல்-ஈண்டு, முதிர்தல், முற்றுதல். விடாய்த்த [தாகமெடுத்த] காலத்தில் வாயில் நீரூறுதற்காக உயவைக்கொடியைக் கறித்தல் பெறப்படுதலின், 'நீரூறு உயவை' என்றது. அக்கொடி நீரோடு மாறுபாடு கொள்ளும்படி படர்ந்தன என்றது, தண்ணீர் தேட வேண்டா என்றபடி. அதாவது, தாகமெடுத்தவர் தண்ணீர் தேடவேண்டாதபடி அவ்வளவு பேரளவினதாக உயவைக்கொடி படர்ந்திருந்தன என்பது கருத்து. நூறு - நீறு. சேறு - சாறு. உண்ணுநர்த் தடுத்தன - உண்பாரை வேறொன்றிற் செல்லவொட்டாமல் தன்னையே நின்று தின்னும்படி தடுத்தன எனத் தேமாவின் சுவைமிகுதி கிளந்தவாறு. மேலும் "உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை" என்பர் (வரி. 445). "உண்ணுநர்த் தடுத்த சாரற் பலவின்சுளை" என்றது அகமும் (2.) 'ஆசினி புண் ணரிந்து' என்றவிடத்து, "பலாஅம் பழுத்த பசும்புண்ணரியல்" என்ற பதிற்றுப்பத்து (61) ஒப்புநோக்கத்தக்கது. ஆங்கு, 'பசும் புண்ணென்றது, புண்பட்ட வாய்போலப் பழுத்து விழுந்த பழத் தினை' என்றதும் இங்கு நினைக்கத்தக்கது. "கலைதொடு பெரும் பழம் புண்கூர்ந் தூறலின்" என்பர் மேலும் (292). அரலை-விதை. பலாப்பழம் மத்தளம்போன்றிருத்தலை, மேல் "கானப் பலவின் முழவுமருள் பெரும்பழம்" (511) என்றுங் குறிப்பர். அலங்குசினைப் பலவு சுரஞ் செல் கோடியர் முழவின் கீழும்மேலும் தூங்கித் தாழ்ந்தன என்ற உவமைநயம் பெரிதும் சுவைக்கத் தக்கது. பெருங்கௌசிகனாரின் நுண்ணிதிற்காணும் ஆற்றலுக்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும்.

இலக்கணக்குறிப்பு:—நாவல் கனி உதிர்ந்தன-இது சினைவினை முதலொடு முடிந்தது. உண்ணுநர்த் தடுத்தன-உயர்திணையில் இரண்டனுருபு தொக, அதன் முன் வலிமிக்கது. முரஞ்சு-முதிர்தல், முற்றுதல்: 'முரஞ்சன் முதிர்வே' என்றது தொல்காப்பியம்.

இனி, அடிகள் 94 முதல் 144 வரையுள்ள பகுதிக்கு [நச்சினார்க் கினியர் போக்கைத்தழுவிக் காட்டப்படும்] தொகுதிப்பட்ட முடிபு பின்வருமாறு:—

(94) நீ முன்னிய திசையைக்கேள்: (97) வானம் பொழிகை யினாலே, (99) பெயலொடு வைகிய புனத்து (101) முசுண்டை விரிந்தன; (106) எள் ஒழுகின; (108) ஏனல் கொய்பதமுற்றன; (110) அவரை காய்கொண்டன; (113) வரகு கவர்வுற்றன; (120) புறவிலே

(121) தோரை அவற்பதங்கொண்டன; (122) துடவையிலே (123) ஐயவி அமன்றன ; (123) வெண்காற்செறுவிலே (115) ஐவன நெல்லும் வெண்ணெல்லும் விளைந்தன; (119) கரும்பு ஆலைக்கு அலமரும்; (124) நெய்தல் விரிந்தன; (141) நெடுமலையடுக்கத்து (126) இஞ்சி காயங்கொண்டன; (128) கவலை வீழ்ந்தன; (131) வாழை (132) பழுத்த(ன); (133) உந்தூழ் அலமரும்; (135) நாவல் உதிர்ந்தன; (136) உயவை ஒழுகின; (137) கூவை குழீ இயின; (138) தேமாத் தடுத்தன; (139) ஆசினி உக்கன; (144) பலவு இறைஞ்சின; இவ்வாறே (95) மிகுவளம் பழுநிய யாணர் வைப்புக்களாலே (96) புதிதாகிய தன்மை வந்தது; அவ்வழியின்பண்பு இத்தன்மைத்து—என வினைமுடிக்க.

இஃது ஆற்றினது நன்மையின் அளவு கூறிற்று என்றனர் நச்சினார்க்கினியர்.

அடிகள் 145-192:—[செல்லும் வழியிலுள்ள மேற்குறித்த வளங்களைக் கண்டு போகுங்கால்] அசையுநற்புலமும் வல்சியும் சேரக் கூறும். அவற்றுள்,

அடிகள் 145—157:—[வழிவளங்களைக் கண்டு போகுங்கால்] சிறுகுடிப்படின் பெறுவன கூறும்.

தீயி னன்ன வொண்செங் காந்தள்
தூவற் கலித்த புதுமுகை யூன்செத்து
அறியா தெடுத்த புன்புறச் சேவல்
ஊஉ னன்மையின் உண்ணு துகுத்தென
நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்
வெறிக்களங் கடுக்கும் வியலறை தோறும்
மணவில் கமழு மாமலைச் சாரல்
தேனினர் கிழங்கினர் ஊனுர் வட்டியர்
சிறுகட் பன்றிப் பழதுளி போக்கிப்
பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்
தூவொடு மலிந்த காய கானவர்
செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே
இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்

(இ - ள்.) (145) தீயின் அன்ன ஒள் செங்காந்தள்-நெருப்பினையொத்த ஒள்ளிய செங்காந்தளினது, (146) தூவல் கலித்த புது முகை-மழையாலே செருக்கி வளர்ந்த புதிய முகையை, ஊன் செத்து-தசையாகக் கருதி, (147) அறியாது எடுத்த-முகையென்றறியாதே எடுத்த, புல் புறம் சேவல்-புற்கென்ற முதுகினையுடைய ஆண் பருந்து, (148) ஊன் அன்மையின் உண்ணாது உகுத்தென-தசையல்லாதபடியாலே தின்னாமல் எவற்றையும் சிந்திப்போகட்டதாக, (149) நெருப்பின் அன்ன பல் இதழ் தாஅய்-நெருப்பினையொத்த பல இதழ்கள் பரந்து, (150) வெறி களம் கடுக்கும் - வெறியாடுகின்ற களத்தையொக்கும், வியல் அறை தோறும்-அகன்ற

பாறைகள்தோறும், (151) மணம் இல் கமழும் மா மலை சாரல்-மணஞ்செய்த மனைபோல மணக்கும் பெரிய மலைப்பக்கத்தில்—(152) தேனினர் கிழங்கினர் ஊன் ஆர் வட்டியர் - தேனினையுடையராய்க் கிழங்கினையுடையராய்த் தசைநிறைந்த கடகத்தையுடையராய், (153) சிறு கண் பன்றி பழுதுளி போக்கி-சிறிய கண்ணையுடைய பன்றியிற்பழுதானவற்றைப்போக்கி, [அதன் தசையையும்], (155) தூவொடு மலிந்த-மற்றுள்ள தசைகளோடே நிறைந்த வட்டிகளையும், (154) பொருது தொலை யானை கோடு சீர் ஆக-பொருது பட்ட யானையினது கொம்புகள் காவுமரமாக, (155) காய-காவிக் கொண்டுவந்த, கானவர்-கானவருடைய, (156) செழு பல் யாணர் சிறுகுடி படினே-வளவிய பல புதுவருவாயினையுடைய சிறிய ஊரிலே தங்கின், (157) இரு பேர் ஒக்கலொடு பதம் மிக பெறுகுவிர்-கரிய பெரிய சுற்றத்தோடே அவ்வுணவுகளை மிகவும் பெறுகுவிர்; (எ-று.)

(145) செங்காந்தள் (146) முகையினை யூன்செத்து (147) எடுத்தசேவல் (148) உகுத்தென (149) பல்லிதழ்தாஅய் (150) வெறிக்களங்கடுக்கும் அறைதோறும் (151) கமழும் மலைச்சாரலிலே (155) கானவர் (156) சிறுகுடிப்படின் (157) ஒக்கலொடும் பதமிகப் பெறுகுவிர் — என இயையும். வரிகள் 152-155 கானவரியல்பு கூறுவது.

கருத்துரை:—நெருப்பினையொத்த செங்காந்தளினது புதிய முகையைத் தசையாக மயங்கக் கருதி யெடுத்த பருந்து, அதைத் தின்னாமல் கீழே சிந்திப்போகட, அச்செங்காந்தளின் செவ்விதழ்கள் பாறைகள் தோறும் வீழ்ந்து பரந்து வெறியாடுகளத்தை யொத்து, மணங்கமழ்தலின் மணவில் போலச்சிறந்து காட்ட, அத்தகைய மலைப்பக்கத்திலுள்ள கானவரது சிறுகுடியில் தங்குவிராயின், ஆங்கு அக்கானவராலே யானைக்கோடு காத்தண்டாகக் காவிக்கொணரப்பட்ட தேனினையும், கிழங்கினையும், பழுதுபோக்கிய பன்றித் தசையினையும் மற்றுள்ள தசைகளோடே நிறைந்த வட்டிகளையும், கரியபெரிய சுற்றத்தோடு உண்ணுமளவு மிகவும பெறுகுவிர் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—'தீயினன்ன' என்பதை 'தீயின் அன்ன' என்று பிரித்தெடுக்காது தீயின் நன்னன் என்று பிறழப் பிரித்தெடுத்துக் குற்றங்கூறினர் **ஆளவந்தபிள்ளையாசிரியர்** என்பது நச்சினார்க்கினியருரையாய்வினால் தெரியவருகின்றது, 'தீயின் நன்னன்' என்று பிரித்தால் வருங்குற்றம் என்னையெனில்,—அஞ்ஞான்று நன்னன்என்னும் இயற்பெயர் தீயோடு அடுத்துவந்த தன்மையினால் ஆனந்தக்குற்றமாகிச் சொல்லானந்தத்தில் அடங்கும். சொல்லானந்தமாவது:—"இயற்பெயர் மருங்கின் மங்கலமழியத், தொழிற்சொல் புணர்ப்பினது சொல்லானந்தம்". ஈண்டு, தீஎன்பது மங்கலமழியவந்தசொல் எனக் கொண்டபடி. ஆளவந்தபிள்ளையாசிரியர்கொண்ட இக்கருத்தினைத் தவறெனப் பலகாரணங்கள்காட்டி மறுக்கின்றனர் நச்சினார்க்கினியர். **அக்காரணங்கள் பின்வருமாறு:**—(1) செய்யுள் செய்த

கௌசிகனர் ஆனந்தக்குற்றமென்னுங் குற்றமுண்டென்பதறியாமல் செய்யுள் செய்தாரேல் இவர் நல்லிசைப்புலவராகார்; (2) இவர்செய்த செய்யுளை நல்லிசைப்புலவர்செய்த ஏனைச்செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனம் நீக்காது கோத்தமையே ஆனந்தக்குற்றமென்பதொரு குற்றம் இச்செய்யுட்கு உருமைக்குச் சான்றாகும். (3) இனி, 'தீயினன்ன' என்ற இச்சொன்னிலையை நோக்குமிடத்தும் ஒருகுற்றமுமின்று; என்னை? 'அன்ன' என்னும் அகரவீற்றுப் பெயரெச்ச உவமவுருபு தீயென்னும் பெயரைச் சேர்ந்து நின்று இன்சாரியை இடையே அடுத்து நிற்றலன்றி வேறில்லை. இதில் 'நன்னன்' என்பது எங்கே வந்துளது? 'நன்னன்' என நகரமுதலும் னகரவொற்றீறுமாய் நிற்குஞ் சொல்லாயினன்றே அக்குற்றம் உளதாவது? எனவே, குற்றம் மறுக்க. (4) இனி, நன்ன! என அண்மைவிளியாய்நின்ற முன்னிலைப்பெயர் வந்ததெனக் குற்றங்கூறுவோர்க்கு இப்பாட்டுப் படர்க்கையேயாய் நிற்றலின் குற்றமின்றென்க. (5) மற்றும், தொல்லாணை நல்லாசிரியராகிய அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் ஆனந்தக்குற்றங்கூறாமையின், சான்றோர் செய்யுட்கு இக்குற்ற முண்டாயினும் கொள்ளக்கூடாதெதன மறுக்க. எனவே, பின்னுள்ளோர் ஆனந்தக்குற்றமென்று நூல்செய்தாரேயொழிய வேறில்லை. அதுகூட வந்தவாறு என்னையெனில்,—"சிதைவெனப்படுபவை வசையற நாடின்" என்று தொடங்கும் தொல்காப்பிய மரபியற்சூத்திரத்துள், நூற்குற்றங் கூறுகின்ற பத்துவகைக் குற்றத்தே, 'தன்னா னொருபொருள் கருதிக் கூறல்' என்னுங் குற்றமொன்றுண்டு; அதனைப் பின்னுள்ளோர் ஆனந்தக் குற்றமென்பதொரு குற்றமென்று நூல் செய்தனராதலி னென்க. மற்றும், ஆளவந்தபிள்ளையாசிரியர், 'இந்த ஆனந்தக்குற்றத்தால், பாடிய கௌசிகனாரும், பாட்டுப்பெற்ற வேள் நன்னனும் இறந்தார்' என்பது படவும் எழுதியுள்ளார் என்பது நச்சினார்க்கினியருரையால் தெரியவருகின்றது. இவையனைத்தும் அறியாது கூறியபடியென விடுக்க.

[கவனிப்பு:—மேற்கூறிய கருத்துக்களும் காரணங்களும் நச்சினார்க்கினியருரையைத் தழுவித் தெளிவுறுத்தும்படி எழுதப்பட்டனவாகலின், அவருரையை அங்ஙனமே கொடுத்திலேன்.]

செத்து - கருதி. செங்காந்தள் முகையை ஊனெனக் கருதிய தென்றவிடத்து மயக்கவணி காண்க. சேவல்-ஆண்டு, பொருணோக்கி ஆண்பருந்தினைக் குறித்தது. "சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்". செங்காந்தட் செவ்விதழ்கள் பரந்து அகன்ற பாறைகடோறும் சிந்திக்கிடப்ப, அவ்விடம் வெறியாடுகளம் கடுக்கும் என்றபடி. மலர்கள் பரந்த இடம் வெறியாடுகளம் போலத் தோன்றுதலை, "நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய் வெறியயர்களத்தினிற்றோன்றும்" (குறுந்: 318) என்பதாலுணர்க. மணஞ்செய்த மனையில் மணங்கமழ்த லியல்பு. வட்டி-கடகப்பெட்டி; அதாவது, பனை அகணியாற்செய்த பெரிய பெட்டி; [அகணி-புறநார்; Palm-fibre].

பழுதுள் = பழுது; உள், பகுதிப்பொருள் விகுதி, 'முறையுளி கழிப்பி' என்றவிடத்துப்போலே (பெரும்பாண், 462). தூ-தசை. மலிந்த- பன்மைப்பெயர்; வட்டிகளைக் குறிக்கும். சீர்-காவுமரம்.

இலக்கணக்குறிப்பு :—தீயினன்ன - ஈகாரவீறு வேற்றுமைக்கண் இன்பெற்று வந்ததற்கும், இரண்டாம் வேற்றுமையுருபு 'அன்ன' வென்பதையுங் கொண்டுமுடியுமென்பதற்கும் மேற்கோளாகும். (157) பெறுகுவிர் என்ற பன்மையோடு (50) தலைவ! என்ற ஒருமைச் சொல் ஆற்றுப்படையுள் முடிவதற்கு, இலக்கணவிசேடம் முன்னரே குறிக்கப்பட்டுள்ளது (பக்கம். 17). ஆண்டுக் காண்க.

அடிகள் 158—169 :—மலைசேர்ந்த பாக்கமெய்தின் பெறுவன கூறும்.

அன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கிக்
கன்றெரி யொள்ளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி
அலங்குகழை நரலு மாரிப் படுகர்ச்
சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி
நோனச் செருவின் வலம்படு நோன்றாள்
மான விறல்வேள் வயிரிய மெனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட்புலம் பகல வினிய கூறிப்
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவிர்

(இ - ள்.) (158) அசைஇ - அவற்றைப் பெற்று இளைப்பாறி, அன்று - அற்றைநாள், அல் சேர்ந்து - இராப்பொழுதும் அவர்களுடனே பொருந்தி, அவண் அல்கி - அவ்விடத்தே தங்கி, (159) கன்று எரி ஒள் இணர் - கன்றின நெருப்புப்போன்ற ஒள்ளிய பூங்கொத்துக்களை, கடும்பொடு மலைந்து - சுற்றத்தோடே சூடி, (160) சேந்த செயலை செப்பம் போகி - சிவந்த அசோக மரத்தையுடைய செவ்விய வழியைப்போய், (161) அலங்கு கழை நரலும்-அசைகின்ற மூங்கிலொலிக்கும், ஆரி படுகர் - அரிதாயிழியும் வழிகளையுடைய, (162) சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி - பக்கமலைகளைச் சேர்ந்திருந்த சீறூர்களைச் சேர்ந்து, (163) நோனு செருவின் வலம் படு நோன் தாள் (164) மானம் விறல் வேள் - பகைவரைப் பொறும்பொறும்போரினையும் வெற்றியுண்டாகும் வலிய முயற்சியினையும் மானத்தையும் வெற்றியையுமுடைய நன்னனுடைய, வயிரியம் எனினே - கூத்தரேமென்று கூறுவீராயின், (165) நும் இல் போல நில்லாது புக்கு-நும்முடைய மனைபோல வாசலில் நில்லாதே உள்ளே சென்று, (166) கிழவிர் போல கேளாது கெழீஇ - முன்பே கிழமையுடையீர்போலே அவரைக் கேளாதே உறவு கொள்ளுகையினலே,

(167) சேண் புலம்பு அகல இனிய கூறி-சேணிடைவந்த நுமது வருத்தம் தீரும்படி இனியமொழிகள் அவர்கூறி, (168) பொழிந்த நெய்க்கண்-மிகச்சொரிந்த நெய்யிடத்தே, பரூஉ குறை வேவையொடு-பருத்த தசைகிடந்து வெந்த பொரியலோடே, (169) குரூஉக்கண் இறடி பொம்மல் பெறுகுவிர்-நிறவிய வடிவினையுடைய தினைச்சோற்றைப் பெறுகுவிர்; (எ - று.)

(158) அசைஇ அன்று அற்சேர்ந்து அவண் அல்கிப், (160) போகிப், (162) பாக்கம் எய்தி, (164) விறல்வேள் வயிரியம் எனினே, (168) வேவையொடு (169) இறடிப் பொம்மல் பெறுகுவிர் என இயையும்.

கருத்துரை:—தேன், கிழங்கு, பன்றித்தசை முதலிய உணவுகளைப்பெற்று இளைப்பாறி, அற்றைநாள் இராப்பொழுது அக்கானவர் சிறுகுடியிற்றங்கி, அசோகம் பூங்கொத்துக்களைச் சுற்றத்தோடே சூடி, அம்மரங்களைக்கொண்ட செவ்விய வழியேபோய், மூங்கில் நரலும் வழிகளையுடைய பக்கமலையினைச் சேர்ந்திருந்த பாக்கத்தினையெய்தி, வேள்நன்னனுடைய கூத்தராவேம் யாம் என்று கூறுவீராயின், அப்பாக்கத்து மனைகளில், நும் மனைபோலே வாசலில் நில்லாதே உட்புக்கு; முன்னிருந்தே உரிமையுடையவர் போலே அப்பாக்கத்து மனையுள்ளாரோடு உறவு கொள்ளுகையினாலே அன்னார் நும்து சேணிடைவந்த வருத்தந்தீரும்படி இனிய மொழிகள் கூறி மிகச்சொரிந்த நெய்யிடத்தே வெந்த பருத்த தசைப்பொரியலோடே, செவ்விய தினைச்சோற்றைப்பெறுகுவிர் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—'செயலை செப்பம் போகி' என வருதலானோக்கி, 'ஒள் இணர்' என்பது, 'அசோகம் பூங்கொத்துக்களை' எனலாம். அசோகம் பூங்கொத்து சிவந்த நெருப்புப்போன்றிருக்குமென்பதை 'செந்தீயொண்பூம் பிண்டி' (மதுரை: 700-701), "எரியவி ருருவின் அங்குழைச் செயலை" (குறிஞ்சி: 105) என்பவற்றாலும் தெளியலாம். செயலை-அசோகு. செப்பம்-செவ்வியவழி. ஆரி-அருமையையுடையது. படுகர்-வழி. சிலம்பு-பக்கமலை. பாக்கம்-பக்கத்திலுள்ளது என்றபடி; சீறூர் குறித்தது. மானம்-'எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயர்வாழாமையுமாம்' என்றனர் பரிமேலழகர். வேள்-நன்னன்: 'வேளை நீ முன்னியதிசையே' (94) என்றார் முன்னரும். வயிரியர்-கூத்தர். குறை-குறைக்கப்பட்டது; தசை. குரூஉ-நிறம்; 'குருவுங் கெழுவு நிறனாகும்மே''. இறடி-தினை. பொம்மல்-சோறு.

இலக்கணக்குறிப்பு:— தாள்மானவிறல் - உம்மைத்தொகை. வயிரியம்- தன்மைப் பன்மைப்பெயர்; கிழவிர் - கிழமையென்ற பகுதியினடியாப்பிறந்த முன்னிலை வினையாலணையும்பெயர். இனிய-பலவின்பால் வினையாலணையும் பெயர்.

அடிகள் 170—192:—நன்னனது மலையினுச்சியிலுள்ள நாட்டில் பெறுவன கூறி, 'ஆங்குப் பன்னாள் நில்லாது நிலநாடு படர்மின்' எனக் கூறும்.

ஏறித் தரூஉ மிலங்குமலைத் தாரமொடு
வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்
குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக் குற்றநும் அனந்தல் தீர
அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனின்
இன்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லின் அரியுலை யூழ்த்து
வழையமை சாரல் கமழத் துழைஇ
நறுமல ரணிந்த நாறிரு முச்சிக்
குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி
அகமலி யுவகை யார்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பிற் குருசின் முன்னிய
பரிசின் மறப்ப நீடலும் உரியிர்
அனைய தன்றவன் மலைமிசை நாடே
நிறையிதழ்க் குவளைக் கடிவீ தொடினும்
வரையர மகளிர் இருக்கை காணினும்
உயிர்செல வெம்பிப் பனித்தலும் உரியிர்
பலநா ணில்லாது *நிலநாடு படர்மின்

(இ - ள்.) (188) அவன் மலைமிசை நாடு அனையது அன்று-அந் நன்னனுடைய மலையினது உச்சியில் நாடு யான் முற்கூறிய தன்மைத் தன்று; [மிகவும் சிறப்புடைத்து; ஆண்டுப் பெறுவனவற்றைக் கேட்பீராக]—(177) பிணவு நாய் முடுக்கிய தடியொடு - பெண்ணாகிய நாய் ஓடிக்கடித்த உடும்பின் தடிகளோடே, (175) வரு விசை தவிர்த்த கடமான் கொழு குறை - ஓடி வருகின்ற விசையைக் கெடுத்துக் கொன்ற கடமானின் கொழுவிய தசையையும், (176) முளவு மா தொலைச்சிய பைந்நிணம் பிளவை-எய்ப்பன்றியைக்கொன்ற பசுத்த நிணத்தையுடைய பிளக்கப்பட்ட தசைகளையும், (177) விரைஇ - கலந்து, [தின்று இடையிடையே], (171) வேய் பெயல் விளையுள் தேகள் தேறல் - மூங்கிற் குழாய்க்குள்ளே பெய்தலையுடைய முற்றிய தேனாற் செய்த கள் தெளிவை, (172) குறைவு இன்று பருகி-குறைவின்றாக நிரம்பவுண்டு, [பின்னர்], நறவு மகிழ்ந்து-நெல்லாற்சமைத்த கள்ளை யுண்டு மகிழ்ந்து, வைகறை - விடியற்காலத்து, (173) பழஞ்

பி - ம்:—நிலனொடு படர்மின், சிலநாள் படர்மின்,

செருக்கு உற்ற நும் அனந்தல் தீர-கள்ளுண்டு மகிழ்ச்சியுற்ற நும் முடைய மதந்திரும்படி,—(182) நறு மலர் அணிந்த நாறு இரு முச்சி (183) குறமகள் - நறியமலரைச் சூடின நாறுகின்ற கரிய மயிர்முடியினையுடைய குறச்சாதியின் மகள், (174) அருவி தந்த பழம் - நீர் கொண்டுவந்த பலாப்பழம், (180) ஊழ்த்து - செவ்வியழிந்து, (174) சிதை வெள் காழ் - உதிர்ந்த வெள்ளிய விதையிலுள்ள, (179) மா-மாவையும், (178) வெள் புடை கொண்ட துய் தலை பழனின் (179) இன் புளி - வெள்ளிய புறத்தைக் கொண்ட ஆர்க்கினை இடத்தேயுடைய புளியம்பழத்தின் இனிய புளிப்பையும், (180) உலை (179) மோர் ஆக - உலையாக வார்த்த மோருக்கு அளவாக, கலந்து—, (180) கழை வளர் நெல்லின் அரி-மூங்கிலிலே நின்று முற்றிய நெல்லின் அரிசியை, (181) வழை அமை சாரல் கமழ துழை இ-சுரபுன்னை நெருங்கிய மலைச்சாரலெல்லாம் நாறும்படியாகத் துழாவி, (183) ஆக்கிய—, வால் அவிழ் வல்சி - வெள்ளிய சோறாகிய உணவை, (184) அகம் மலி உவகை ஆர்வமொடு அளை இ - நெஞ்சுநிறைந்த மகிழ்ச்சியையுடையராய் விருந்தினரைப்பெற்றேமென்னும் ஆசையோடே நெஞ்சுகலந்து, (185) மக முறை தடுப்ப - தத்தம் பிள்ளைகளைக் கொண்டு முறைசொல்லித் தடுக்கையினாலே, மனைதொறும்-மனைகடோறும், (170) ஏறி தரூஉம் இலங்கும் மலை தாரமொடு-தாங்கள் உச்சிமலையிலே ஏறிக் கொண்டுவரும் விளங்குகின்ற மலையிற் பண்டங்களோடே, (185) பெறுகுவிர்—; [ஆண்டுப் பெற்றவற்றாலே], (186) செரு செய் முன்பின் குருசில் முன்னிய-போரைச் செய்கின்ற வலியையுடைய நன்னனிடத்துப் பெறக்கருதிய, (187) பரிசில் மறப்ப நீடலும் உரியிர்-பரிசிலை மறக்கும்படி நீட்டித்திருத் தலும் உரியிர்; [அங்ஙனம் நீட்டிப்பின்], (189) நிரை இதழ் குவளை கடி வீ தொடினும்-நிரைத்த இதழையுடைய குவளையில் தெய்வம் விரும்புதலிற் கடியவாகிய பூக்களைக் கிட்டினும், (190) வரை அரமகளிர் இருக்கை காணினும்-ஆண்டை வரையரமகளிருடைய இருப்பைக் காணினும், (191) உயிர் செல வெம்பி பனித்தலும் உரியிர்-உயிர்போம்படி வெதும்பி நடுங்குதலும் உரியிர்; [ஆகையினாலே], (192) பல நாள் நில்லாது-பலநாட்கள் தாழ்த்து நில்லாமல், நிலநாடு படர்மின் - [மலைமிசை நாடு நீங்கி] நிலத்திலுள்ள நாட்டு வழியே சென்மின் : (எ -று.)

(188) அவன் மலைமிசை நாடு அணையதன்று; [மிகவும் சிறப்புடைத்து: ஆண்டுப் பெறுவனவற்றைக்கேட்பீராக]; ஆண்டுத் (177) தடியொடு (175) கொழுங்குறையையும் (176) பிளவையையும் (177) விரை இ [தின்று இடையிடையே], (171) தேக்கட்டேறலைப் (172) பருகிப் [பின்னர்] நறவை மகிழ்ந்து, வைகறையில் (173) அனந்தல் தீரக் (183) குறமகள் (179) மாவையும் (179) இனிய புளிப்பையும் (179) மோருக்கு அளவாகக் கலந்து, (180) கழைவளர் நெல்லின் அரிசியைத் (181) துழைஇ (183) ஆக்கிய வல்சியை (185) மகமுறை தடுப்ப மனைதொறும் (170) மலைத் தாரத்தோடே (185) பெறுகுவிர்; [ஆண்டுப்பெற்றவற்றால்] (187) பரிசில் மறப்ப நீடலுமுரியிர்;

[அங்ஙனம் நீட்டிப்பின்] (189) கடிவீடுதொடினும் (190) இருக்கை காணினும் (191) பனித்தலு முரியிர்; (192) ஆதலால், பலநாணில்லாது நிலநாடு படர்மின்-என இயைத்து வினைமுடிக்க.

கருத்துரை:—நன்னனுடைய மலையுச்சியிலுள்ள நாடு, முற்கூறிய சிறுகுடியினும் பாக்கத்தினும் மிக்க சிறப்புடைத்து; ஆண்டு, உடும்பின் தடிகளோடு கடமானின் கொழுத்த தசையினையும், எய்ப் பன்றியின் தசையினையும் கலந்து தின்று, இடையிடையே மூங்கிற் குழாய்க்குள்ளே பெய்து முற்றிய தேனாற் செய்த கட்டெளிவை நிரம்பப்பருகிப் பின்னர் நெல்லாற் சமைத்த கள்ளையுண்டு மகிழ்ந்து, அந்த மதமயக்கந்திரும்படி வைகறையில் குறமகள், பலவின் விதை யிலுள்ள மாவையும் புளியம்பழத்தின் இனிய புளிப்பையும் உலை யாக வார்த்த மோருக்கு அளவாகக் கலந்து மூங்கிலினரிசியைக் கொண்டு நறுமணமெங்கும் கமழத் துழாவியாக்கிய வெள்ளிய சோறாகிய உணவை, நுமக்கு, 'விருந்தினரைப் பெற்றேம்' என்ற ஆர்வத்தோடே தத்தம் பிள்ளைகளைக்கொண்டு உறவுமுறை சொல்லித் தடுத்து மனைகடோறும் கொடுக்க, அவ்வுணவோடு மலைபடுபண்டங்களையும் பெறுகுவிர்; பெற்ற அவற்றாலே நன்ன னிடத்துப்பெறக்கருதிய பரிசிலை மறந்து அங்கேயே நீட்டித்திருத் தலும் உரியிர்; அங்ஙனம் நீட்டிப்பின், தெய்வம் விரும்பிய குவளைப் பூக்களைக் கிட்டினும், வரையரமகளிருடைய இருப்பைக் காணினும் நீவிர் உயிர் போம்படி வெதும்பி நடுங்குதலும் உரியிர்; ஆகையி னாலே, அம்மலைமிசைநாட்டில் பலநாட்கள் தாழ்த்து நில்லாமல், நிலநாடு படர்மின் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—'அவன்மலைமிசைநாடு அணையதன்று' என்ற 188-ஆம் வரி முதலிற் கூட்டிப்பொருளுரைக்கப்பட்டது நச்சினார்க் கினியரால்; அவ்வழியே யாமும் கொண்டோம். ஏனெனில், அஞ்ஞான்று, அவன் மலைமிசைநாட்டில் பெறும் வல்சி தெற்றென உணரப்பெறுமென்பது நோக்கி. 'அணையது' என்பது சிறுகுடிப் படினும் பாக்கமெய்தினும் இன்ன பெறுகுவிர் என்று கூறிய தன்மை குறிப்பது. இனி, 188-ஆம் வரிக்கு ஆற்றொழுக்காகப் பொருள் கூறினும் அமையும். அஞ்ஞான்று, அவன் மலைமிசை நாடு, அணையது அன்று-முற்கூறிய அந்தச்சிறுகுடி, பாக்கம் இவைகளின் தன்மைத்தன்று; ஈங்கு, குவளைக் கடிவீடுதொடினும், வரையரமகளிரிருக்கைகாணினும் பனித்தலும் உரியிர் எனப் பொருள் காண்க. பிணவு நாய்-பெண் நாய்; "பன்றி புல்வாய் நாயென மூன்றும், ஒன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" என்றது மரபியற் சூத்திரம். தடி-ஊன், தசை. முளவுமா-முள்ளம் பன்றி; எய்ப்பன்றி. பிளவை-பிளக்கப்பட்ட தசைக்கு, ஆகுபெயர். மூங்கிற் குழாய்க்குள்ளே தேனாற்செய்த கட்டெளிவைப் பெய்து வைத்து முற்றச் செய்தலை, "திருந்தமை விளைந்த தேக்கட்டேறல்" (522) என மேல்வருதனானுக்கியும், 'நீடமை விளைந்த தேக்கட்டேறல்" (திருமுருகு: 195), "அம்பணை விளைந்த தேக்கட்டேறல்" (அகம்.368)

"தூம்பகம் பழுநிய தீம்பிழி" (பதிற்: 81), "வாங்கமைப் பழுநிய தேறல்" (புறம்: 129) முதலியவற்றாலும் அறிக. நறவு - நெல்லாற் சமைத்த கள்: இந்தக் கள் தோப்பி எனப்படும். "தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்" என்ற அகநானூற்றுத் தொடருக்கு, "தோப்பிக்கள்-நெல்லாற் செய்யுங் கள்' என உரையெழுதி யிருப்பதும் காண்க. அனந்தர்-கள்ளின் மயக்கம்: 'அனந்தர் நடுக்கம் அல்லதியாவதும்' (பொருந: 94) என்றவிடத்தும் நச்சினார்க்கினியர், 'அனந்தர் நடுக்கம் - கள்ளின் செருக்காலுண்டான மெய்ந் நடுக்கம்' என உரைவகுத்ததும் ஈண்டு நோக்கத்தக்கது. துய்-ஆர்க்கு; புளியம்பழத்தில் நார்போன்றிருக்கும் காம்பு. மோர் ஆக-மோருக்கு அளவாக. அரி-அரிசி. 'இன்புளிக் கலந்து...குறமகளாக்கிய வல்சி' என்றவிடத்து "எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு" என்ற சிறுபாண் (175) ஒப்பு நோக்குக. முறை தடுப்ப - முறை சொல்லித் தடுப்ப; அதாவது, அண்ணன், அம்மான் என்றாற்போல்வன முறை. 'மகமுறை தடுப்ப' என்றது சிறுபாணும் (192). தாரம்-பண்டம்; மலைத்தாரமாவன - சந்தனம், அகில், பொன், மணி முதலியன.

கடி வீ-கடியவாகிய பூ: கடியென் கிளவி ஈண்டு, வரைவுக் குறிப் புணர்த்தியது: வரைவு - விலக்குதல். தெய்வம் விரும்புதலிற் கடியப்பட்ட பூவாயிற்று. இங்கு, திருமுருகாற்றுப்படையில், "சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தள்" (43) என்பதற்கு நச்சினார்க்கினியர், "தான் விரும்புதலிற் சுரும்பினமும் மொய்யாத...செங்காந்தள்" என உரை வகுத்திருத்தலும் நோக்கத்தக்கது.

[கவனிப்பு :—அடிகள் 193-முதல் 477-வரையுள்ள பகுதியில்-'நிலநாடு படர்மின்' என்று கூறிய ஆற்றுப்படுப்போன், "ஆற்றினளவும் அசையுநற்புலமும் அவன் நாடுபடு வல்சியும் மலையும் சோலையும் மாபுகல்கானமும் இகழுநர்ப்பிணிக்கும் ஆற்றலும்" பலபடக் கூறி, சேயாற்றின் ஒருகரைக் கொண்டனிர்கழிமின் என்று கூறுதல் தெரிக்கும். [கழிந்தால், அவன் மூதூர் நனிசேய்த்தன்று (487) என மேல் தொடரும்].

அவற்றுள்:—

அடிகள்—193 முதல்—224 வரை — ஆற்றினது நீளமையின் அளவும்

,, —225 முதல்—241 வரை—ஆற்றினது அருமையும்

,, —242 முதல்—255 வரை—அசையுநற்புலமும் வல்சியும்

,, —256 முதல்—267 வரை—சோலையும்

* ,, —268 முதல்—383 வரை—மலையும் யாற்றின் தன்மையும்

‡ ,, —384 முதல்—448 வரை—கானமும், கானத்து ஆற்றினது நன்மையும் அசையுநற்புலமும் வல்சியும்

,, —449 முதல்—470 வரை—நாடுபடுவல்சியும் அசையுநற்புலமும் கூறப்படும்;

அடிகள் 471 முதல்—477 வரை—சேயாற்றின் ஒருகரைக் கொண்டனிர் கழிமின் எனும்.

அடிகள் 193—224 :—ஆற்றினது திமையினளவு கூறும்.

அவற்றுள், அடிகள் 193—196 :—பன்றிப்பொறி யிருத்தல் கூறும்.

விளைபுன நிழத்தலிற் கேழல் அஞ்சிப்
புழைதொறு மாட்டிய விருங்கல் அரும்பொறி
உடைய வாரே நள்ளிருள் அலரி
விரிந்த விடியல் வைகினிர் கழிமின்

(இ - ள்.) (195) ஆறே - வழிகள், (193) கேழல் விளை புனம் நிழத்தலின் - பன்றி முற்றின தினைப்புனத்தை நொக்குகையினாலே, அஞ்சி - இதற்குப் பயந்து, (194) புழை தொறும் மாட்டிய - சில்வழிகள்தோறும் கொளுத்திவைத்த, இரு கல் அரு பொறி (195) உடைய - பெரிய அரிய கற்பொறிகளையுடைய; ஆகையினாலே, நள் இருள் - செறிந்த இருட்காலத்தே, (196) வைகினிர் - தங்கினிராய், (195) அலரி (196) விரிந்த விடியல் - ஞாயிற்றின் கதிர்கள் விரிந்த விடியற் பொழுதிலே, கழிமின் - போவீர்; (எ - று.)

(195) ஆறே (194) அரும்பொறி (195) உடைய; ஆகையினாலே, (195) நள்ளிருள் (196) வைகினிராய் விடியல் கழிமின் என இயையும்.

கருத்துரை:—பன்றிகள் தினைப்புனத்தை நொக்குகையினாலே, அவற்றை யகப்படுத்தச் சில்வழிகடோறும் அரிய பெரிய கற்பொறிகளை வைத்திருப்பர்; இரவிற் செல்லுவீரானால், அவை தடுத்து இடையூறு விளைவிக்குமாகலின், விடியற்பொழுதிலே போவீராக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

[முக்கிய கவனிப்பு :—*அடிகள் 292 முதல் 345 வரை பல்வகை ஓசைகளைக் குறிக்கும். அடிகள் 323—325 யாற்றின் தன்மை குறிக்கும்.

‡ 397-98—இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றல் கூறும்.]

விசேடவுரை:—நிழத்தல்-நொக்குதல்; அதாவது, குறையச் செய்தல். "ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயி னான்கும் உள்ளதன் நுணுக்கம்" என்றது தொல்காப்பியம். புழை-சில்வழி. மாட்டுதல்-கொளுத்திவைத்தல், பொருத்துதல்.

இலக்கணக்குறிப்பு:—வைகினிர்-முற்றெச்சம்.

அடிகள் 197—202:—பாம்பு ஒடுங்கும் குழிகளிருத்தல் கூறும்.

நளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்
முரம்புகண் ணுடைந்த பரலவற் போழ்விற்
கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே
குறிக்கொண்டு மரங் கொட்டி நோக்கிச்
செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறிதுநெறி யொரீஇ வலஞ்செயாக் கழிமின்

(இ - ள்.) (197) நளிந்து பலர் வழங்கா செப்பம் துணியின்-செறிந்து பலரும் போகாதவழியைப் போகத் துணிவீராயின், [அவ்விடம்], (198) முரம்பு கண் உடைந்த பரல் அவல் போழ்வில்-மேட்டுநிலம் தன்னிடத்திலே விண்ட பருக்கைக்கற்களையுடைய பள்ள நிலத்திற் பிளப்பிலே, (199) பாம்பு கரந்து ஒடுங்கும் பயம்பும் உளவே-பாம்பு மறைந்துகிடக்கும் குழிகளுமுள; (200) குறிக் கொண்டு மரம் கொட்டி நோக்கி-அக்குழியை மனத்தாலே குறித்தல் கொண்டு விலங்கிற்கு மரங்களிலேயேறிக் கொட்டிப்பார்த்து, (201) செறி தொடி விறலியர் கை தொழூஉ பழிச்ச-செறிந்த வளையினையுடைய விறலியர் அப்பாம்பு மனமகிழும்படி கையாற் றொழுது வாழ்த்த, (202) நெறி வறிது ஒரீஇ - விலங்கு கிடக்கும் வழியைச் சிறிது அகலப்போய், வலம் செயா கழிமின்-வலப்பக்கத்து வழியை நுமக்கு வழியாகச் செய்துகொண்டு போவீராக; (எ - று.)

(197) செப்பம் துணியின், அவ்விடம் (198) போழ்வில் (199) பாம்பு ஒடுங்கும் பயம்புமுள; (200) குறிக்கொண்டு கொட்டி நோக்கி (201) விறலியர் தொழூஉப் பழிச்ச (202) நெறியொரீஇ வலஞ்செயாக் கழிமின் என இயையும்.

கருத்துரை :—பலரும் போகாத வழியிலே போகத் துணிவீராயின், அவ்விடம், பருக்கைக்கற்களையுடைய பள்ளநிலப்பிளப்புக் களிலே, பாம்புகள் மறைந்துகிடக்கும் குழிகளைக்கொண்டுள்ளன; அக்குழிகளுள்ளனவென்பதை மறவாது குறிக்கொண்டு, கொடிய அவ்விலங்குகளுள்ளமையறிய மரங்களிலேயேறிக்கொட்டிப்பார்த்து, உடன்வரும் விறலியர் குழிகளிலுள்ள அப்பாம்புகள் மகிழும்படி கையாற்றொழுது வாழ்த்த, அவ்விலங்குகள் கிடக்கும் அவ்வழி யைச் சிறிது அகலப்போய், வலப்பக்கத்து வழியை மேற்கொண்டு போவீராக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—நளி-செறிவு: 'நளியென் கிளவி செறிவு மாகும்'. செப்பம்-வழியென்றபடி. முரம்பு-பருக்கைக் கல்லாலாகிய மேட்டு

நிலம். அவல்-பள்ளம். போழ்வு-பிளப்பு. பயம்பு-குழி, பாம்பொடுங்கும் பயம்பும் உள-என்றவிடத்து உம்மையாற் புலிமுதலியன வுள்ள குழிகளும் கொள்க. பயம்புமார்-மார், அசை, குறிக்கொண்டு-கவனித்து என்றபடி. கொடிய விலங்குகளிருப்பனவற்றையறிய மரங்களிலேயேறிக் கைகொட்டிப் பார்த்தல் உண்டு எனத் தெரிய வருகிறது. இக்காலத்தும் பாம்பொடுங்கும் வழிகளில் கைகொட்டிப் போதல் இயல்பு. கொட்டுதல்-கையால் தட்டுதல்; 'கொட்டிஞன் றேள்' என்றவிடத்துங்காண்க (கம்பரா. சம்புமா. 18). கூத்தன் கையால் கொட்டி நோக்க, விறலியர் கைதொழுது பழிச்சுகின்றனர் என்பது பொருத்தம். பாம்பினைத் தெய்வமாகக் கருதிப் பழிச்சுதலை இன்றும் காண்கின்றேம். வறிது - சிறிது; 'வறிது சிறிதாகும். வலம் - வலப்பக்கத்து வழிக்கு, ஆகுபெயர்.

அடிகள் 203—210 :—கவண்கற்கள் விசையொடு வருவது கூறும்.

புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவர்
உயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ
அகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப்
† பகனிலை தளர்க்குங் கவணுமிழ் கடுங்கல்
இருவெதிர் ஈர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிர லூகம் பார்ப்போ டிரிய
உயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரமறையாக் கழிமின்

(இ - ள்.) (203) புனிறு போகிய புனம் சூழ் குறவர்-ஈன்றணிமை தீர்ந்து முற்றின தினைப்புனத்தைக் காத்தற்குச் சூழ்ந்த குறவர், புலந்து - தினையழிகின்றதற்கு வெறுத்து, (204) உயர் நிலை இதணம் ஏறி கை புடையூஉ - உயர்ந்த நிலையினையுடைய பரணிலேறிக் கையைக் கொட்டி, (205) அகல் மலை இறும்பில் துவன்றிய யானை - அகன்ற மலையிற் குறுங்காட்டிடத்தே நிறைந்த யானைகளினுடைய, (206) பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடு கல் - பகற்பொழுதே நிற்கின்ற நிலையைக் கெடுக்கும் கவண்காலுகின்ற கடிய கற்கள், (209) உயிர் செகு மரபின் கூற்றத்தன்ன - உயிர்களைப்போக்கும் முறைமையாலே கூற்றத்தையொக்கும்; அவைதாம், (208) கரு விரல் ஊகம் பார்ப்பொடு கல்லென இரிய - கரிய விரலையுடைய குரங்குகள் குட்டிகளோடே கல்லென்னுமோசைபடக் கெடும்படியாக, (207) இரு வெதிர் ஈர்ங்கழை தத்தி-பெரிய மூங்கிலினது பசிய கோலைக் கடந்து, (210) விசை தவிராது வரும் - வருகின்ற விசை மாறாது வரும்; [அதற்கு] மரம் மறையா கழிமின் - மரங்களிலே ஒதுங்கிநின்று போவீராக; (எ - று.)

(203) குறவர் (204) ஏறிக் கைபுடையூஉ (205) யானையின் (206) நிலைதளர்க்குங்கல் (209) கூற்றத்தன்ன; அவை (208) ஊகம்

---

*பி - ம்:—புலர்ந்து. †பகைநிலை.

பார்ப்போடிரியத் (207) தத்தி (210) விசை தவிராது வரும்; அதற்கு மரம்மறையாக் கழிமின் என இயையும்.

கருத்துரை:—முற்றின தினைப்புனத்தைக் காத்தற்குச் சூழ்ந்த குறவர், உயர்ந்த நிலையினையுடைய பரணிலேறிக் கைகொட்டிக் குறுங்காட்டிடத்தேயுள்ள யானைகள் பகற்பொழுதே நிலைகெடும்படி வீசுகின்ற கவண்கற்கள் உயிர்களைப்பறிக்குந் தன்மையவாய் யமனையொத்திருந்து, குரங்குகள் குட்டிகளோடே நிலைகெட்டிரியும்படி பசிய மூங்கிற்கோலைக்கடந்து வெகு வேகமாக வரும்; அக்கவண்கற்கள் மேலே படாதபடி யிருப்பதற்கு மரங்களிலே ஒதுங்கி நின்று போவீராக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—புனிறு-உரிச்சொல்; 'புனிறென் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே' என்பது விதி. 'புலர்ந்து' என்ற பாடத்திற்கு 'முற்றி' என்க. இதணம்-பரண். இறும்பு-குறுங்காடு. 'பகை நிலைதளர்க்கும்' என்ற பாடத்திற்கு பகைத்த நிலைதளர்க்கும் என்பது பொருள். குறவர் கவணெறிந்து யானையை யோட்டுதலை, 'இலங்கொளி மருப்பிற் கைம்மா வுளம்புநர், புலங்கடி கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கும், இலங்குமலை' என்ற கலியாலும் அறியலாம் (செ: 23).

இலக்கணக்குறிப்பு:—அன்ன - பலவின்பால் வினைமுற்று. புடையூஉ - செய்யூ என்னும் வாய்பாட்டெச்சம் அளபெடுத்தது. "கோடுவாழ் குரங்குங் குட்டி கூறுப" என்ற பின், "மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும் அவையு மன்ன வப்பாலான" என்றதனால் குரங்குக்குட்டி 'பார்ப்பு' எனப்படுவது உணர்க.

அடிகள் 211—218 :—காட்டாற்று வழி வழுக்கும் இடங்களையுடையதாயிருத்தல் கூறும்.

உரவுக்களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி
இரவி னன்ன இருடூங்கு வரைப்பின்
குமிழி சுழலுங் குண்டுகய முடுக்கர்
அகழிழிந் தன்ன கான்யாற்று நடவை
வழூஉமருங் குடைய வழாஅ லோம்பிப்
பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித்
துருவி னன்ன புன்றலை மகாரோடு
ஒருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்

(இ - ள்.) (211) உரவு களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி - வலிய யானையை விழுங்கும் முதலைகள் தங்கப்பட்டு, (212) இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின் - இராக்காலத்தையொத்த இருள் செறியும் மிளைகளையும், (213) குமிழி சுழலும் குண்டு கயம் முடுக்கர்-குமிழிகள் சுழன்றுவரும் ஆழ்ந்த நீரறாத மடுக்களையுடைய முடுக்கரையும் உடைய, (214) அகழ் இழிந்தன்ன கான் யாறு நடவை-[ஏறுதற்கும் இறங்குதற்கும் அரியவாகையினாலே] அகழியிலே இழிந்தாற்போன்ற

காட்டாற்றுவழி, (215) வழூஉம் மருங்கு உடைய - காலோடும் இடங்களையுடைய: [அவ்விடத்திற்கு], (217) துருவின் அன்ன புன்தலை மகாரோடு-செம்மறியாட்டினை யொத்த புற்கென்ற தலையினையுடைய பிள்ளைகளோடே, (216) வலந்தபரூஉ கொடி மதலை பற்றி-மரங்களிற் சுற்றிக் கிடக்கின்ற பரிய கொடியாகிய பற்றுக்கோட்டைப் பிடித்து, (215) வழாஅல் ஓம்பி - காலோடுதலைப் பரிகரித்து, (218) ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின் - ஒருவிரை ஒருவர் பாதுகாத்துப் போவீராக; (எ - று.)

(211) இடங்கர் ஒடுங்கி (212) இருள்தூங்குவரைப்பினையும் (213) முடுக்கரினையும் உடைய (214) கான்யாற்று நடவை (215) வழூஉம் மருங்குடைய; அவ்விடத்திற்கு (216) வலந்த பரூஉக்கொடி மதலை பற்றி (215) வழாஅலோம்பி (218) ஒருவிரொருவிரோம்பினிர் கழிமின் என இயையும்.

கருத்துரை :—வலிய யானைகளை விழுங்கும் முதலைகள் தங்கும் இருள்செறிந்த காவற்காடுகளையும், நீர்குத்துதலால் ஆழ்ந்த மடுக்களைக்கொண்ட முடுக்கரையுமுடைய காட்டாற்றுவழி ஏற்றிழிவு அரிதாகி வழுக்கும் இடங்களையுடையது; அவ்விடங்களிற் சிறு பிள்ளைகளோடே போம்போது மரங்களிற் சுற்றிக்கிடக்கின்ற பருத்த கொடிகளைப் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு கால்வழுக்கி வீழ்தலைப்பரிகரித்து ஒருவரையொருவர் பாதுகாத்துக்கொண்டு போவீராக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—முதலை யானையை அடுதலை "களிறட்டு வீழ்க்கும், ஈர்ப்புடைக் கராஅம்" (புறம் - 104) என்பதனுலும் அறிக. இருள்தூங்கு வரைப்பு என்றதனுல் மிளையாயிற்று; மிளை-காவற்காடு. நீரிற் குமிழ்கள் சுழன்று வருதலை, 'வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்' (474) என மேல் வருதனேக்கியும் உணர்க. முடுக்கர்-நீர் குத்தின இடங்கள்; முடுக்கரையுடையது கான்யாறு. அகழி இறங்குதற்கும் ஏறுதற்கும் அரியவாதலை, "அகழி, கன்னிய ரல்குற் றடமென யார்க்கும் படிவருங் காப்பின தாகி" என்ற கம்பன் வாக்காலறிக. நடவை-வழி. வழூஉம்-வழுக்கும். துரு-செம்மறி யாடு. மதலை-பற்றுக்கோடாதலை "மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு" என்ற நாலடியாரிலும் காணலாம்.

இலக்கணக்குறிப்பு:—ஒருவிரொருவிர்-இடையே இரண்டனுருபு தொக்கது. ஓம்பினிர்-முற்றெச்சம்.

அடிகள்: 219—224:—குளங்களுக்கு அருகிலுள்ள பாசி வழுக்குதல் கூறும்.

அழுந்துபட் டலமரும் புழகமல் சாரல்
220 விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா

வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி
அடிநிலை தளர்க்கும் அருப்பமு முடைய
முழுநெறி யணங்கிய நுண்கோல் வேரலோடு
எருவை மென்கோல் கொண்டனிர் கழிமின்

(இ - ள்.) (219) அழுந்துபட்டு அலமரும் புழகு அமல் சாரல் - கிழங்கு தாழவீழ்ந்து அசையும் மலையெருக்கு நெருங்கின பக்கமலையில், (220) விழுந்தோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா - வீழ்ந்தோரை மறைக்கும் ஆழத்தையுடைய குளங்களுக்கு அருகாக, (221) கண் புதைத்த - இடம் மறைதற்குக் காரணமாகிய, நுண் நீர் பாசி வழும்பு - நுண்ணிய நீர்மையையுடைய பாசியினது குற்றம், (222) அடிநிலை தளர்க்கும் அருப்பமும் உடைய-அடி ஊன்றியிட்ட நிலையை ஓடப்பண்ணும்; அதுவுமன்றி அவ்விடம் போதற்கு அருமையையுமுடைய; அதற்குப் பரிகாரமாக, (223) முழுநெறி அணங்கிய நுண் கோல் வேரலோடு - வழி முழுதும் பின்னிவளர்ந்த நுண்ணிய கோல்களையுடைய சிறு மூங்கிலோடே, (224) எருவை மெல் கோல் கொண்டனிர் கழிமின் - வேழத்தினது மெல்லிய கோல்களையும் பற்றுக்கோடாகப் பிடித்துப் போவிர்; (எ - று.)

(219) சாரலில் (220) கயத்து அருகா (221) நுண்ணீர்ப் பாசி வழும்பு (222) அடிநிலை தளர்க்கும்; [அதுவுமன்றி,அவ்விடம்] அருப்பமும் உடைய; [அதற்குப் பரிகாரமாக] (223) வேரலோடு (224) எருவைமென்கோல் கொண்டனிர் கழிமின் என இயையும்.

கருத்துரை :—கிழங்குதாழவீழ்ந்து அசையும் மலையெருக்கு நெருங்கின பக்கமலையில், வீழ்ந்தோரை மறைக்கும் ஆழத்தையுடைய குளங்களுக்கு அருகில் இடம் மறைதற்குக் காரணமாகிய நுண்ணீர்ப்பாசியினது வழும்பு கால் வழுக்கும்; அன்றியும், அவ்விடம் போதற்கு அருமையையுமுடையதாகும். அதற்குப் பரிகாரமாக, வழிமுற்றும் பின்னி வளர்ந்த நுண்ணிய சிறுமூங்கிற்கோல்களையும் எருவையினது மெல்லிய கோல்களையும் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு போவீராக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—புழகு-மலையெருக்கு: 'பரேரம்புழகு' என்றது குறிஞ்சிப்பாட்டும் (வரி: 96). மாய்தல்-மறைதல்: இஃது இப்பொருட்டாதலை "களிறுமாய் செருந்தியொடு", (172), "களிறு மாய்க்கும் கதிர்க் கழனி" (247) என்று மதுரைக்காஞ்சியில் வந்தவிடங்களிலுங் காணலாம். குண்டு-ஆழம். புதைத்த-பெயரெச்சம், காரணப்பொருளது. வழும்பு-குற்றம்: இஃது இப்பொருட்டாதலை "வழும்பறுக்க கில்லாவாம் தேரை-வழும்பில்சீர்" என்ற நாலடியார்ச் செய்யுளிலுங்காண்க (செ: 352). வேரல்-சிறுமூங்கில். எருவை-வேழம், பஞ்சாய்க்கோரை; கொறுக்கைச்சி எனினுமாம்.

அடிகள்:— 225 — 241:— ஆற்றினது அருமை கூறும். அவற்றுள்,

அடிகள் 225—233:—காரியுண்டிக் கடவுளதியற்கையும் நவிரமலையியல்பும் கூறும்.

உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய
மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்
தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சி
* ஓரியாற் றியவின் மூத்த புரிசைப்
பராவரு மரபிற் கடவுட் காணின்
தொழாநிர் கழியின் அல்லது வறிது
நும்மியந் தொடுத லோம்புமின் மயங்குதுளி
மாரி தலையுமவன் மல்லல் வெற்பே

(இ - ள்.) (225) புகர் முகம் புதைய - புகரையுடைய முகம் மறையும்படி, (228) சூழியின் பொலிந்த-முகபடாத்தாற் பொலிவு பெற்ற, (225) உயர் நிலை மா கல்-உயர்ந்த நிலையினையுடைய பெருமையையுடைய மலைபோன்றிருக்கும், (227) வினை நவில் யானை-போர்த்தொழிலிலே பயின்ற யானையினையும், (226) மாரியின் இகுதரு வில் உமிழ் கடு கணை-மழைபோலத் தாழ்ந்து விழும் வில்லுக்கான்ற கடிய அம்பினையும் உடைய, (227) தாரொடுபொலிந்த-தூசிப்படையோடே பொலிவுபெற்றதும், (228) சுடர் பூ இலஞ்சி (229) யாறு ஓர் இயவின்-ஒளியையுடைய பூக்களையுடைய மடுவினையுடைய யாற்றுக்கரையில் ஒருவழியினையுடையதும் ஆகிய, மூத்த புரிசை-பழைய மதில்களையுடைய ஊரிடத்துக்கோயிலில், (230) பராவு அரு கடவுள் காணின்-பராவுதற்கரிய முறைமையினையுடைய கடவுளைக் கண்டீராயின், (231) நீர் தொழா கழியின் அல்லது-நீர் வணங்கிப்போம் அத்தனையல்லது, வறிது-சிறிது, (232) நும் இயம் தொடுதல் ஓம்புமின்-நும்முடைய வாச்சியங்களைத் தீண்டுதலைக் காப்பீராக; அதற்குக் காரணம் என்னையெனின், (233) அவன் மல்லல் வெற்பு-அவனது வளவிய நவிரமென்னுமலை, (232) மயங்கு துளி மாரி தலையும்-மயங்கின துளியையுடைய மழையை இடைவிடாமற் பெய்யாநிற்கும்; (எ - று.)

(225) புதைய (228) பொலிந்த (227) யானையினையும் (226) கணையினையும் உடைய (227) தாரொடு பொலிந்ததும் (229) இயவினையுடையதும் ஆகிய மூத்த புரிசையில் (230) கடவுட் காணின் (231) தொழா கழியினல்லது (232) நும்மியந் தொடுத லோம்புமின்; அதற்குக் காரணம் (233) அவன் வெற்பு மாரி தலையும் என இயையும்.

* பி-ம்:—ஓராற்றியவு.

கருத்துரை:—புள்ளிகளைக்கொண்ட முகம் மறையும்படி முக படாத்தாற் பொலிவுபெற்று மலைபோன்றிருக்கும் போரிற்பழகிய யானைகளையும், வில்பிடித்து மழைபோல அம்பினைப்பொழியும் மறவர்களையும் கொண்ட தூசிப்படையோடே விளங்குவது மூத்த புரிசையிடத்துக்கோயில்; அதனைச் சேர்தற்கு ஒரேவழி யாற்றுக் கரையில் உண்டு; அக்கோயிலிலெழுந்தருளியிருக்கும் கடவுளைக் கண்டீராயின் நீவிர் தொழுதுபோமத்தனையல்லது, வாச்சியங்களை இயக்காதீர்கள்; என்னையெனில், அவனது வளப்பமுள்ள நவிரமலை மழைத்துளியை இடைவிடாது பொழியுமாதலினும் என்று ஆற்றுப் படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—சூழி புகர்முகம் மறைத்தது. கல்-மலைக்கு,- இலக்கணை. இருத்தல்-சொரிதல்; இஃது இப்பொருளில் வருதலை "இருத்த கணணீர்-சொரியப்பட்ட கண்ணீர்" என்ற புறநானூற் றுப்பழையவுரையாலும் தெளியலாம் (செ. 143). தார்-தூசிப்படை. புரிசை=மதில்: ஆகுபெயராய்த் திருப்பதியையுணர்த்திப் பின் அங்குள்ள கோயிலுக்காகியது. ஆகவே, 'தாரொடு பொலிந்த மூத்த புரிசை' என்றது, காரியுண்டிக் கடவுளுடைய படைமிகுதி கூறிற்று என்றனர் நச்சினார்க்கினியர். கீழ் "காரியுண்டிக் கடவுளதி யற்கையும் ...கேள்" என்றதற்கேற்ப இஃது வந்தமையின், இதன் பொருத்தம் விளங்கும். இனி, பகைப்புலத்தை அழித்தற்கும் அந்நிலத்தைக் காத்தற்கும் நன்னன் வைத்த படையெனக் கொள் ளினுமாம். இலஞ்சி-மடு. இயவு-வழி. 'ஓராற்றியவு' என்ற பாடத்துக்கு, ஒருப்பட்ட வழி என்பது பொருள். இனி, (226) கடுங்கணைத் (227) தாரொடு பொலிந்த வினைநவில்யானையினுடைய (228) சூழியின் (225) உயர் நிலை மாக்கல் புகர்முகம் புதையப் (228) பொலிந்த சுடர்ப் பூ விலஞ்சியையுடைய (229) புரிசை எனக் கூட்டி, 'அம்பையுடைய தூசிப்படையோடு பொலிந்த போர்த்தொழிலிலே பயின்ற யானையினுடைய [பூக்களெழுதின] முகபடாம்போலே உயர் நிலை மாக்கற் புகர்முகம் புதையப் பொலிந்த சுடர்ப்பூவைக்கொண்ட இலஞ்சியையுடைய புரிசை' எனக் கூறினுமாம். அன்றி, சூழி-மத்தகம் எனக்கொண்டு, 'சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சிப் புரிசை' என்பதற்கு,-யானையின் மத்தகம்போலே பொலிந்த சுடர்ப் பூவையுடைய இலஞ்சியைக்கொண்ட புரிசை எனினுமாம். சிலர், 'சூழியிற் பொலிந்த சுடர்ப் பூ விலஞ்சி உயர்நிலைமாக்கற் புரிசை' எனக்கூட்டி-யானையின் மத்தகம்போலே பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சியையுடைய உயர்நிலை மாக்கல்லையுடைய புரிசை என்று கூறுவர். அவர் சுனையிடத்து மேலெழுந்த குவளை முதலியவற்றின் அரும்புகள் தலைசாய்ந்து கற்புதையக் கிடந்ததற்கு யானையின் மத்த கத்துப் புகரை உவமையென்று கொள்வர். பராவுதல் - பழிச்சுதல், துதித்தல். 'தொழாஅநிர்' என்றவிடத்து 'நீர்' என்பது 'நிர்' எனக் குறுகிநின்றது. 'வறிது சிறிதாகும்' என்பது விதி. 'அவன் வெற்பு' என்றதால் நவிரமலை பெறப்பட்டது; ஆகவே, ஆங்குக் கோயில் கொண்டிருக்கும் கடவுள் என்றது காரியுண்டிக் கடவுளாயிற்று.

'மல்லல்வளனே'. நவிரமலை மாரி தலைப்பெய்வது - நன்னன் செங்கோன்மை குறிப்பது. மாரி தலைப்பெய்தலின் இயங்கு தொடுதலோம்புமின் என்றதனாற் பயன்-வாச்சியங்களும் நனைந்து நுமக்கும் போதலரிதென்பதாம்.

அடிகள் 234—241:—வழியிடைக்காட்சி கடுகநோக்கின் நெறி மாறுபடுதல் கூறும்.

அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினும்
கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர்க் கடுவன் உகளினும்
நேர்கொள் நெடுவரை நேமியிற் றொடுத்த
சூர்புக லடுக்கத்துப் பிரசங் காணினும்
ஞெரேரென நோக்கல் ஓம்புமின் உரித்தன்று
நிரைசெலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர்

(இ - ள்.) (234) அலகை அன்ன வெள் வேர் - பலகறையை யொத்த வெள்ளிய வேரினையுடைய, பீலி - பீலியைக் கொண்ட, (235) மஞ்ஞை-மயில், கட்சியில் கலவம் தளரினும்-அக்காட்டிடத்தே ஆடுதற்குவிரித்த கலாபத்தினது பாரத்தாலே ஆடியிளைத்து நிற்பினும், (237) நெடு கழை கொம்பர் - நெடிய மூங்கிலின் கவடுகளிலே, (236) கடு பறை கோடியர் மகாஅர் அன்ன (237) கடுவன் உகளினும்-கடிய பறையினையுடைய கூத்தருடைய பிள்ளைகளையொத்த கடுவன் பாயினும், (238) நேர் கொள் நெடு வரை (239) சூர் புகல் அடுக்கத்து-செவ்வையைத் தன்னிடத்தே கொண்ட நெடிய மலையில் தெய்வம் விரும்பின பக்கமலையிலே, (238) நேமியின் தொடுத்த (239) பிரசம் காணினும் - தேருருள்போல் வைத்த தேனிறாலைக் காணினும், (240) ஞெரேரென நோக்கல் உரித்தன்று - கடுகப்பார்த்தல் நுமக்குரிய தொழிலன்று; அதற்குக் காரணமென்னையெனின், (241) மெல் அடி நிரை செலல் நெறி மாறுபடுகுவிர் - மெல்லிய அடியாலே நிரைத்துச் செல்லுதலையுடைய வழிதப்புவிர்; (240) ஓம்புமின் - ஆதலால், அங்ஙனம் நோக்குதலைப் பாதுகாப்பீர்; (எ - று.)

(235) மஞ்ஞை தளிரினும் (237) கடுவன் உகளினும் (239) பிரசங் காணினும் (240) ஞெரேரென நோக்கலுரித்தன்று; (241) நெறிமாறு படுகுவிர் என இயையும்.

கருத்துரை :—பலகறையைப்போல் வெள்ளிய முருந்தினைக் கொண்ட பீலியையுடைய மயில் காட்டிடத்தே கலாபம் விரித்தாடி, அக்கலாபத்தினது பாரத்தாலே ஆடியிளைத்து நிற்பினும், நெடிய மூங்கிலின் கவடுகளிலே கடுவன் பாய்ந்து உகளினும், நெடியவரையிடத்துத் தெய்வம் விரும்பின பக்கமலையிலே தேருருள்போல் வைத்த தேனிறாலைக் காணினும் நீவிர் கடுகப்பார்த்தலைத் தவிர்த்தல்வேண்

டும்; இல்லையேல், வழிதப்புவிர் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—அலகு-பலகறை; சோழி. பறையலகு இக்காலத்துப் பலகறையென மருவிற்று என்றனர் நச்சினார்க்கினியர் (சிந்: 2773). வேர்-அடிக்குருத்து: மயிலிறகினடி முருந்து என வழங்கும். ஈண்டு 'மகாஅரன்ன கடுவன்' என்றது போல, சிறுபாணில் 'மகாஅரன்ன மந்தி' (56) என்றது நினைக. கடுவன் - குரங்கின்ஏறு; 'குரங்கினு ளேற்றைக் கடுவ னென்றலும்' என்றது தொல்காப்பியம். நேர்கொள் நெடுவரை - செங்குத்தான மலையென்றபடி. தேனிறாலுக்குத் தேருருள் வடிவுவமை. 'நெடுவரை நேமியிற் செல்லு நெய்க்கண் இறாஅல்' என்பர் மேலும் (வரி. 524-25). ஞெரேரென - கடுக, விரைவாக.

அடிகள் 242—255:—அசையுநற்புலமும் வல்சியும் சேரக் கூறும்.

வரைசேர் வகுந்திற் கானத்துப் படினே
கழுதிற் சேணோன் ஏவொடு போகி
இழுதி னன்ன வானிணஞ் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பின்
நெறிக்கெடக் கிடந்த விரும்பிண ரெருத்தின்
இருள்துணிந் தன்ன வேனங் காணின்
முளிகழை யிழைந்த காடுபடு தீயின்
நளிபுகை கமழா திறாயினிர் மிசைந்து
துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்
குவளையம் பைஞ்சுனை யசைவிடப் பருகி
மிகுத்துப்பதங் கொண்ட பரூஉக்கட் பொதியினிர்
புட்கை போகிய புன்றலை மகாரோடு
அற்கிடை கழிதி லோம்பி யாற்றநும்
இல்புக் கன்ன கல்லளை வதிமின்

(இ - ள்.) (242) வரை சேர் வகுந்தின் கானத்து படினே-மலையைச் சேர்ந்த வழியினையுடைய காட்டிடத்தே செல்லின், (243) கழுதில் சேணோன்-பரணின்மேலிருந்த [யானைமுதலியவற்றிற்கு] எட்டாதவன் [எய்த], (245) நிறம் புண் கூர்ந்த-மருமத்திற் புண்மிகுதற்குக் காரணமான, (243) ஏவொடு போகி-அம்போடேபோய், (246) நெறிகெடக் கிடந்த-வழிகெட [இறந்து] கிடந்த, (245) நிலம் தின் மருப்பின்-(கிழங்குகளை அகழ்ந்து தின்கையினாலே) மண் தின்று தேய்ந்த கொம்பினையும், (244) இழுதின் அன்ன வால் நிணம் செருக்கி-நெய்விழுதையொத்த வெள்ளிய நிணம் செருக்கும்படி, (246) இரு பிணர் எருத்தின்-கரிய சருச்சரையையுடைத்தாகிய கழுத்தினையும்உடைய, (247) இருள் துணிந்தன்ன ஏனம்-இருள் அற்றுக்கிடந்தாற்போன்ற பன்றியை, காணின்-கண்டீராயின், (248) முளி கழை இழைந்த காடு படு தீயின்-உலர்ந்த மூங்கில் தம்மில்

இழைந்ததனாற் பிறந்த காடெங்கும் உண்டாகிய தீயினாலே, (249) நளி புகை கமழாது-செறிந்த புகை நாறாமல், இருயினிர் மிசைந்து-வக்கி மயிர் போகச் சீவித்தின்று, (251) குவளை அம் பைஞ்சுனை-குவளையால் அழகிய பசிய நிறத்தவாகிய சுனையில், (250) துகள் அற துணிந்த மணி மருள் தெள் நீர்-கலக்கமறத் தெளிந்த பளிங்கென்று மருளும் தெளிந்த நீரை, (251) அசைவு விட பருகி-வழியின் இளைப்புத் தீரும்படி குடித்து, (252) பரூஉக்கண் பதம்-பருத்த இடத்தை யுடைய தசையாகிய உணவை, மிகுத்து கொண்ட பொதியினிர்-முழுதும் தின்னாமல் மிகுத்துவைத்துக் கட்டிக்கொண்ட பொதியின் சுமையினையுடையிராய், (253) புள் கை போகிய புன்றலை மகாரோடு-வளை கையினின்றும் போதற்குக் காரணமான சிவந்த தலையினையுடைய பிள்ளைகளோடே, (254) அற்கு-இராக்காலத்து, இடை கழிதல் ஓம்பி-அவ்விடத்துப் போதலைப் பரிகரித்து, ஆற்ற-வழியிடத்தனவாகிய, நும் (255) இல் புக்கன்ன கல் அளை வதிமின்-நும் வீட்டிலே புக்காலொத்த கன்முழைஞ்சுகளிலே தங்குவிர்;

(242) கானத்துப்படின் (243) சேணோன் [எய்த] ஏவோடுபோகி (246) கிடந்த (247) ஏனம்காணின் (248) தீயின் (249) புகை கமழாது இருயினிர் மிசைந்து (251) சுனையில் (250) தெண்ணீர் (251) பருகிப (252) பொதியினிராய் (253) மகாரோடு (254) அற்குக் கழிதலோம்பிக் (255) கல்லளை வதிமின் என இயையும். (245) மருப்பின் (246) எருத்தின் (247) ஏனம் என இயையும்.

கருத்துரை :—மலையைச் சேர்ந்த வழியினையுடைய காட்டிடத்தே செல்லின், பரணின்மேலிருந்த சேணோன் எய்த அம்போடே போய் வழிகெட இறந்து கிடந்த பன்றியைக் காணநேரிடும்; கண்டீராயின், உலர்ந்த மூங்கில் தம்மில் உராய்ந்ததனாற் பிறந்த காட்டுத்தீயில் புகைநாறுதபடி மயிர்போகச்சீவி அப்பன்றியை வக்கித்தின்று, வழிவந்த இளைப்புத்தீரச் சுனையிடத்துப் பளிங்குபோன்ற தெள்ளிய நீரைக் குடித்துப் பின் முழுதும் தின்னாமல் மிகுதிப்பட்ட தசையுணவைக் கட்டிக்கொண்ட பொதியினையுடையிராய், சிறுபிள்ளைகளோடே இராக்காலத்து அவ்வழியிடத்துப்போதலைத் தவிர்த்து ஆங்குள்ள கன்முழைஞ்சுகளிலே நும் வீட்டிற் புகுவதுபோற் புகுந்து தங்குவிர் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—வகுந்து-வழி. கழுது-பரண். சேணோன் என்பதற்கே பரணின்மேலோன் என்றனர் சிலப்பதிகாரத்து அரும்பத வுரையாசிரியர். "கலிகெழு மரமிசைச் சேணோன் இழைத்த*** இதணம்" என்றது குறிஞ்சிப்பாட்டு. நிறம் - மருமம்; உயிர்நிலை என்றபடி. புறப்பொருள்வெண்பாமாலையில் 'எங்கு மருமத் திடைக்குளிப்ப' (7,23) என்றவிடத்தும் மருமம் என்பதற்கு உயிர்நிலையெனப் பொருள் கண்டுள்ளது நினைக. கூர்ந்த - பெயரெச்சம் காரணப்பொருளது. நிலம் தின் மருப்பு - நிலத்தால் தினப்பட்ட மருப்பு. செருக்கி = செருக்க, எச்சத்திரிபு. பிணர் - சருச்சரை; சரசரப்பு. இருள்துணிந்தன்ன ஏனம்-இவ்வுவமை பெரிதும்

சுவைக்கத்தக்கது; மற்றும், தொல்காப்பியத்து மரபியலில் 'மாற்ற ருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்" என்றவிடத்து 'மாற்ற ருஞ் சிறப்பின்' என்பதற்கு உரை கூறுமிடத்துப் பேராசிரியர் '...... வழக்கொடுபட்ட மரபு பிறழவும், செய்யுளின்பம்படின் அவ்வாறு செய்ப என்பதூஉங் கூறினாராயிற்று' என்று கூறி, இவ்வடியை மேற்கோளாக் காட்டியுள்ளார். மூங்கிலுராய்தலால் நெருப்புப் பிறக்கு மென்பதை 'இருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப' (மதுரை: 302), 'வான்தொடர் மூங்கில் தந்த வயங்குவெந் தீயிதென்ன' (கரன்வதை: 66) என்றவற்றாலும் அறியலாம். இருவுதல்-நெருப்பில் வக்கி மயிர் போக வழித்தல்; வக்குதல்-வாட்டுதல். துணிந்த-தெளிந்த; 'துணி நீர்-தெளிந்தநீர்' என்றார் மதுரைக்காஞ்சியிலும் (283). மணி-பளிக்கு மணி: 'மணிகண் டன்ன துணிகயம்' (அகம்: 56) என்றவிடத்துங் காண்க. சுனைநீர்க்குப் பளிங்கு உவமையாதலை 'பளிங்கு சொரிவன்ன பாய்சுனை' (57) என்ற குறிஞ்சிப்பாட்டாலும் தெளிக. அசைவு + விட = அசைவிட எனவாயிற்று; எனவே, அசைவு விகாரப்பட்டது. புள்-வளை. வளைகாப்பின்போது வளையிட, பிள்ளைப்பேற்றுக்குப்பின் வளை யிடாராகலின், வளைபோதற்குப் பிள்ளைகள் காரணமாயினர் என்றது. இதனையே, நச்சினார்க்கினியரும், 'பிள்ளையைப் பெற்றால் வளையிடா ராகலின், வளைபோதற்குப் பிள்ளைகள் காரணமாயினர்' என்றார். வளை காப்பு என்பது-முதலாவதாகக் கருவுற்ற பெண்ணுக்கு ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் வளையலணியுஞ் சடங்கு. புன்றலை-சிவந்த தலை. பட்டினப்பாலையிலும், 'புன்றலை யிரும்பரதவர்' (90) என்றவிடத்தும் புன்றலையென்பதற்குச் சிவந்த தலை யென்றே நச்சி னார்க்கினியர் உரையெழுதியுள்ளமை காண்க. ஆற்ற-ஆறு என்ற பெயர்ச்சொல்லினடியாப் பிறந்த பலவின்பாற்பெயர். நாம்மில் புக் கன்ன என்றது-இடையூறில்லாது நன்கு வதிதற்கு.

அடிகள் 256—267 :—சோலை கூறும்.

அல்சேர்ந் தல்கி யசைத லோம்பி
வான்கண் விரிந்த விடியலேற் றெழுந்து
கானகப் பட்ட செந்நெறிக் கொண்மின்
கயங்கண் டன்ன வகன்பை யங்கண்
260 மைந்துமலி சினத்த களிறுமத னழிக்கும்
துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி
இகந்துசேட் கமழும் பூவு முண்டோர்
மறந்தமை கல்லாப் பழனு மூழிறந்து
பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னர்
265 இருங்கால் வீயும் பெருமரக் குழாமும்
இடனும் வலனும் நினையினிர் நோக்கிக்
குறியறிந் தவையவை குறுகாது கழிமின்

(இ - ள்.) (256) அல் சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி - இராக் காலத்திற்கு எல்லாருங்கூடித் தங்கி இளைப்பாறி, (257) வான் கண்

விரிந்த விடியல் ஏற்றெழுந்து - வானிடத்தே ஞாயிற்றின் கதிர் விரிந்த விடியற்காலத்தே துயிலுணர்ந்தெழுந்து, (258) கான் அகப் பட்ட செந்நெறி கொண்மின்-காட்டிடத்தே கிடந்த செவ்விய நெறி யைப் போவீராக; (259) அகல் பை அம் கண்-அகன்ற படத்தினையும் அழகிய கண்ணினையும் உடைய [வாய்], (260) மைந்து மலி சினத்த களிறு மதன் அழிக்கும்-வலி மிகுகின்ற சினத்தவாகிய யானையின் வலியைக் கெடுத்து விழுங்கும், (261) துஞ்சு மரம் கடுக்கும் மாசுணம் விலங்கி-விழுந்து கிடக்கின்ற பெருமரங்களை யொக்கும் பெரும்பாம்பு கிடக்கின்ற வழியை விலங்கி,—(264) பெரும் பயம் கழியினும்-(யான் குறிக்கின்ற பூ பழம் முதலிய) அவற்றாற் கொள் ளும் பெரியபயன் கொள்ளாமற்போகிலும், (263) ஊழ் இறந்து-முற் காலந்தொட்டு அடிப்பட்டுப் போந்துள்ள முறைமையைக் கடந்து, (262) இகந்து சேண் கமழும் பூவும்-தாம்நிற்கின்ற இடத்தைக் கடந்து தூரிய நிலத்தே சென்று நாறும் பூவையும், உண்டோர் (263) மறந்து அமைகல்லா பழனும்-நுகர்ந்தவர் மறந்து உயிர்வாழ்த லாற்றாத பழங்களையும், (264) மாந்தர் துன்னார்-தெய்வங்களன்றி மானிடர் அணுகாராகையினாலே, (265) இரு கால் வீயும்-நீளுங் காம்பையுடைய அப்பூக்களையும், [263) பழனும்-பழத்தையும்,] (259) கயம் கண்டன்ன (265) பெரு மரம் குழாமும்-குளத்தைக்கண் டாற்போலும் குளிர்ச்சியையுடைய பெரிய மரக்குழாத்தினையும், (266) நினையினிர்-(யான் கூறியதனை) நினைத்து, (267) குறி அறிந்து- அவற்றின் குறிகளையறிந்து, (266) இடனும் வலனும் நோக்கி- இடத்தினும் வலத்தினும் பார்த்து, (267) அவை அவை குறுகாது கழிமின்-அவையிற்றை அவையிற்றை அணுகாமற் போவீர்;(எ-று.)

(256) அல்கி அசைதலோம்பி (257) விடியலேற்றெழுந்து (258) செந்நெறிக்கொண்மின்; [கொண்டு] (261) மாசுணம் விலங்கி (266) நோக்கிக் (267) குறுகாது கழிமின் என இயையும். மற்றும், (264) பெரும் பயம் கழியினும் (263) ஊழிறந்து (262) பூவும் (263) பழனும் (264) துன்னார் என முடிக்க.

கருத்துரை:—கன்முழைஞ்சுகளிலே இராக்காலத்திற்கு எல்லா ருங் கூடித் தங்கி இளைப்பாறி, விடியற்காலத்துத்துயிலுணர்ந் தெழுந்து காட்டிடத்தே கிடந்த செந்நெறியே போவீராக; அங்ஙன் போகுங்கால், யானையின் வலியினையும் கெடுத்து விழுங்கும் பெரும் பாம்புகள் வீழ்ந்த பெருமரங்கள்போற் கிடக்கின்ற வழியினை விலங் கிச் செல்வீராக; மற்றும், சேண்நாறும் பூக்களையும், உண்டவர் மறக்கலாற்றாத பழங்களையும் காணநேரிட்டால், அவற்றாற் கொள்ளும் பயனைத் தவிர்தல் வேண்டும்; ஏனெனில், அவற்றைத் தெய்வங்களன்றி மானிடர் அணுகார்; இஃது தொன்றுதொட்டு வந்துள்ளதோர் முறைமை. ஆதலின், நீவிரும், ஊழிறந்து அவற் றைத் துன்னுதவராய், அப்பூக்களையும் பழங்களையும் பெருமரக் குழாத்தினையும் அவற்றின் குறிகளை யறிந்து இடனும் வலனும் நோக்கி அகலப் போவீராக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை :—அசைதலோம்புதல் - இளைப்பாறுதல். வான்கண் - ஞாயிறு. சிலப்பதிகாரத்தில் 'வான்கண் விழியா' என்றவிடத்து, வான்கண் என்பதற்கு ஆதித்தனென்று அரும்பதவுரையாசிரியரும், உலகிற்குக் கண்ணாகிய ஆதித்தனென்று அடியார்க்குநல்லாரும் எழுதியுள்ளமை அறிக. துஞ்சுதல் - தூங்குதல்; எனவே, விழுந்துகிடத்தலென்ற பொருளில் இங்கு வந்தது. யானையை விழுங்கும் பாம்பு என்பதை 'வெண்கோட்டியானை விளிபடத் துழவும், அகல்வாய்ப் பாந்தள்' (அகநா: *68*) 'களிறகப் படுத்த பெருஞ்சின மாசுணம்' (நற்: *261*) என்பவற்றாலும் உணரலாம். ஊழ் - முற்காலந் தொட்டு அடிப்பட்டுப்போந்த முறைமை. இறந்து-கடந்து. 'மாந்தர் துன்னார்' எனவே, தெய்வந்துன்னும் என்பது அருத்தாபத்தியாற் பெறப்பட்டது. அருத்தாபத்தியாவது - வெளிப்படையாகவன்றிச் சொல்லின் குறிப்பினால் பொருள்தோன்றுவது; இது குறிப்பெச்சத்திலடங்கும். இரு கால்-நீண்ட காம்பு.

அடிகள் 268—383:—**மலையும் யாற்றின் தன்மையும் கூறும்.**

அவற்றுள் அடிகள் 268—291:—குறவரும் மருளும் குன்றத்துப் படின், நிகழ்வன கூறும்.

கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளின்
நாடுகா ணனந்தலை மென்மெல வகன்மின்
மாநிழற் பட்ட மரம்பயி லிறும்பின்
ஞாயிறு தெருஅ மாக நனந்தலைத்
தேஎ மருளு மமைய மாயினும்
இரூஅவன் சிலையர் மாதேர்பு கொட்கும்
குறவரு மருளுங் குன்றத்துப் படினே
அகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென
இயங்க லோம்பிநும் மியங்கள் தொடுமின்
பாடி னருவிப் பயங்கெழு மீமிசைக்
காடுகாத் துறையுங் கானவ ருளரே
நிலத்துறை வழீஇய மதனழி மாக்கள்
புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
உண்டற் கினிய பழனுங் கண்டோர்
மலைதற் கினிய பூவுங் காட்டி
ஊறு நிரம்பிய வாறவர் முந்துற
நும்மி னெஞ்சத் தவலம் வீட
இம்மென் கடும்போ டினியி ராகுவிர்
அறிஞர் கூறிய மாதிரங் கைக்கொள்பு
குறியவு நெடியவு மூழிழிபு புதுவோர்
நோக்கினும் பணிக்கு நோய்கூ ரடுக்கத்து

அலர்தாய வரிநிழ லசையினி ரிருப்பிற்
பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ

(இ - ள்.) (268) கோடு பல முரஞ்சிய - கொம்புகள் பலவும் முற்றிய, கோளி ஆலத்து - பழத்தைத் தன்னிடத்தே கொண்டதாகிய ஆலமரத்திடத்தே, (269) கூடு - கூடின, இயத்தன்ன குரல் புணர் புள்ளின் - பல வாச்சியங்களையொத்த பல ஓசையுங்கூடின பறவைத் திரளையுடைய, (270) நாடு காண் நனந் தலை - நாடுகளையெல்லாம் காணலாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலையை, மென் மெல அகன்மின் - மெல்ல மெல்லப் போவீர்; (271) மா நிழல் பட்ட மரம் பயில் இறும்பின் - பெரிய நிழலுண்டான மரம் நெருங்கின குறுங் காட்டாலே, (272) மாகம் ஞாயிறு தெரூஅ - ஆகாயத்தில் திரியும் ஞாயிற்றாற் சுடப்படாத, நனந் தலை - அகன்ற இடத்தையுடைய, (273) தேஎம் மருளும் அமையம் ஆயினும் - திசை தெரியாமல் மயங்கும் இராக்காலமாயினும், (274) இரு வன் சிலையர் மா தேர்பு கொட்கும் (275) குறவரும் மருளும் குன்றத்து - முறியாத வலியவில்லையுடையராய் விலங்கு தேர்ந்து நின்று சுழன்று திரியும் குறவருமுட்பட மயங்கும் குன்றத்தே, படினே - நீங்கள் செல்லின், (277) இயங்கல் ஓம்பி - அவ்வழியைப்போதலைப் பரிகரித்து, (276) அகல் கண் பாறை துவன்றி-அகன்ற இடத்தையுடைய பாறையிலே நெருங்கிநின்று, கல்லென-கல்லென்னும் ஓசைபட, (277) நும் இயங்கள் தொடுமின்-நும்முடைய வாச்சியங்களை வாசிப்பீராக; [வாசிப்பீராயின் ஆங்கு], (278) பாடு இன் அருவி பயம் கெழு மீமிசை (279) காடு காத்து உறையும் கானவர் உளர்-ஓசையினிதாகிய அருவியின்பயன் பொருந்திய உச்சிமலையிலே காட்டைக் காத்திருக்குங் கானவர் பலருமுளர்; [அவர்கள்], (280) நிலை துறை வழீஇய மதன் அழி மாக்கள் (281) புனல் படு பூசலின்-நிலையாய்ப் போம் துறையைத்தப்பி ஆழத்திலேபுக்க வலியழிந்த மாக்கள் புனலிலே அழுந்துகின்ற வருத்தங்கண்டு விரைந்தெடுப்பாரைப்போல, (285) நெஞ்சத்து அவலம் வீட-திசைமயக்கத்தாற் கலங்கி அறிவழிந்த [நும்] நெஞ்சிற்கேடு போம்படி, (281) விரைந்து வல் எய்தி-ஓடிக் கடுகவந்து சேர்ந்து, (282) உண்டற்கு இனிய பழனும் கண்டோர் (283) மலைதற்கு இனிய பூவும் காட்டி-எல்லாரும் உண்டற்கு இனியவாகிய பழங்களையும் கண்டவர்கள் சூடுதற்கு இனியவாகிய பூக்களையும் நுமக்குக்காட்டி, [நீர் அவற்றை நுகர்ந்த பின்பு] (284) அவர் ஊறு நிரம்பிய ஆறு முந்துற-அக்கானவர் இடையூறு மிக்க வழியை நுமக்கு முற்படப் போகையினாலே, (285) நும்மின்-நும்முடைய, (286) இம்மென் கடும்போடு இனியிராகுவிர்-இம்மென்னும் ஓசையையுடைய சுற்றத்தோடே மனமகிழ்வீர்; (287) அறிஞர் கூறிய மாதிரம் கைக்கொள்பு - திசைமயக்கம் நாடியறிவார் கூறிய திசையையுட்கொண்டு, (288) புதுவோர்-புதியமாந்தர், (289) நோக்கினும் பனிக்கும் நோய் கூர் அடுக்கத்து-கண்ணால் நோக்கினும் தலைநடுக்கும் நோய்மிக்க பக்கமலையிடத்து, (288) குறியவும் நெடியவும் ஊழ் இழிபு-குறியனவும் நெடியனவுமாகிய குவடுகளை

முறைமைப்பட இழிந்து, (290) அலர் தாய வரி நிழல் அசையினிர் இருப்பின்-பூப்பரந்த பல வரிகளையுடையவாகிய நிழலிலே இளைத்திருப்பின், (291) பல திறம் பெயர்பவை கேட்குவிர்-பல கூறுபாடுகளையுடையவாய் எழுகின்ற ஓசைகளைக் கேட்பீர்; (எ-று).-மாதோ-அசை.

[கழிந்து] (270) நாடுகாணனந்தலை மென்மெல அகன்மின்; [அகன்று] (272) நனந்தலைக் (275) குன்றத்துப்படின் (276) பாறைத் துவன்றி (277) இயங்கள் தொடுமின்; [தொட்டால்] (279) கானவருளர்; [அவர்கள்] (285) அவலம் வீட (281) விரைந்து வல்லெய்தி (282) பழனும் (283) பூவும் காட்டி (284) அவர் முந்துற (286) இனியராகுவிர்; [அங்ஙன் இனியிராய்] (287) அறிஞர் கூறிய மாதிரங் கைக்கொண்டு (289) அடுக்கத்து (288) இழிந்து (290) அசையினிர் இருப்பின் [(348) மலைபடுகடாம் - மலைகளாகிய யானைக்குஉண்டாகின்ற ஒலி: எனவே மலையிடத்துண்டாம் ஓசைகள்] (291) பலதிறம் பெயர்பவை கேட்குவிர் என இயையும்.

கருத்துரை—பழுத்த ஆலமரத்திடத்தே கூடியொலிக்கும் பறவைத்திரளையுடையதாய் அகன்ற இடத்தையுடைய மலையை மெல்ல மெல்லப் போவீர்; பின்னர் ஞாயிற்றாற் சுடப்படாது, மரம் நெருங்கின குறுங்காட்டாலே பெருநிழலுண்டாம்படி அகன்ற இடத்தை யுடையதாயும், திசைமயங்கும் இராக்காலமாயினும் விலங்கினைத் தேர்ந்து நின்று சுழன்று திரியும் குறவரும் மருளும்படியிருப்பதாயும் உள்ள குன்றத்தே நீங்கள் செல்ல நேரிடின், அவ்வழியே போதலைத் தவிர்த்துப் பாறையிடத்தே நெருங்கிநின்று கல்லென்னுமோசைபட நும் வாச்சியங்களை வாசிப்பீராக; அப்போது, ஆங்குக் காடுகாத்து உறையும் கானவர் பலரும், நீரிலே விழுந்தவரை விரைந்தெடுப்பாரைப்போலே நும் நெஞ்சத்து அவலம் வீட விரைந்தெய்தி, உண்ணுதற்கினிய பழங்களையும் சூடுதற்கினிய பூக்களையும் நுமக்குக்கொடுத்து முந்துறச் சென்று நுமக்கு வழிகாட்ட, இடையூறுமிக்க அவ்வழியைக்கடந்து சுற்றத்தோடே மனமகிழ்வீர்; பின்னர், திசைமயக்கம் நாடியறிந்த அவர்கள் கூறிய திசையை மனத்துட்கொண்டு, புதியராய் வந்தார் கண்ணால் நோக்கினும் தலைநடுக்கும் நோய்மிக்க பக்கமலையிடத்துக் குறியவும் நெடியவுமாகிய குவடுகளை முறைப்பட ஏறி இழிந்து பூப்பரந்துள்ள வரிநிழலிலே இளைப்பாறியிருப்பின், பலதிறப்பட்டனவாய் மலையிடத்து எழுகின்ற ஓசைகளைக் கேட்பீர்—என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—முரஞ்சிய-முற்றிய. 'முரஞ்சன் முதிர்வே'. கோளி-பூவாது காய்க்கும் மரம்; என்னை? கோளியாலத்து என்றார்' என்ற அடியார்க்குநல்லாருரை நினைக. பழுத்த ஆலமரத்திடத்துப் பறவைத்திரள் கூடியொலித்தலை 'பழமரத் தீண்டிய பறவையின் எழூஉம், இம்மென் கம்மை' என்ற மணிமேகலையடியாலும் அறிய

லாம். (14: 26-27). பறவைத்திரளையுடைய நாடுகாணனந்தலையென் இயையும்.நாடுகாணனந்தலை-நாடுகளையெல்லாம் காணலாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலை என்றபடி. நனந்தலை - மலைக்கு, ஆகுபெயர். இங்ஙனிருக்கும் மலையுச்சியை சிலநூலில் "outlook-Tower" என்பர். ஈண்டு "நாடுகாணெடுவரை யென்றது தன்மே லேறி நாட்டைக்கண்டின்புறுதற்கு ஏதுவாகிய ஓக்கமுடைய மலை யென்றவாறு" என்ற பதிற்றுப்பத்தின் பழையவுரையும் நினைக்கத் தக்கது (பதிற்: 85: 7). இறும்பு-குறுங்காடு. தேஎம்-திசை. இரு வன் சிலையர்-இருப்போலும் வன்சிலையரெனினுமாம். இரு-இரு மீன். சிலைக்கு இரு வருதலை 'சிலையுமான...பச்சிருப் பிறழும்' (பெரும்பாண்: 269-70), 'இறவுக் கலித்துப், பூட்டறு வல்விலிற் கூட்டுமுதற் றெறிக்கும்' (அகநா: 96) என்ற விடங்களிலும் காண்க. 'வழீஇய' என்பதற்கு,மேல்வரும் 'புனல்படு பூசலின்' என்பது நோக்கி 'தப்பி ஆழத்திலே புக்க' எனப் பொருள் கூறப்பட்டது. அங்ஙனமே, 'நெஞ்சத்து அவலம்' என்பதற்கு-திசைமயக்கத்தாலாம் கலக்கம் எனப் பொருள்கொண்டது கீழ் 'தேஎம் மருளும் அமையம் ஆயினும்' (273) என்றும், மேல் 'மாதிரங்கைக்கொள்பு' (287) என்றும் வருதனோக்கி யென்க.

இலக்கணக்குறிப்பு :—குறவரும் - உம்மை, உயர்வுசிறப்பு. உளரே - ஏகாரம், ஈற்றசை. பூசலின் - இன், ஒப்புப்பொருளது.

அடிகள் 292 - 351—பலதிறம் எழும் மலைபடுகடாம் கூறி, நன்னன் வெற்புத் திருநாளையொத்துச் சிறந்திருக்கும் என்னும். [மலைபடுகடாம் - மலையிடத்துப் பிறந்த பல்வகை ஓசைகள்].

கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந் தூறலின்
மலைமுழுதுங் கமழு மாதிரந் தோறும்
அருவி நுகரும் வானர மகளிர்
வருவிசை தவிராது வாங்குபு குடைதொறும்
தெரியிமிழ் கொண்டநும் மியம்போ லின்னிசை
இலங்கேந்து மருப்பின் இனம்பிரி யொருத்தல்
விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்
சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளின்
எய்தெற விழுக்கிய கானவ ரழுகை
கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்
தலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை
மலைமா ரிடூஉம் ஏமப் பூசல்
கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்குவரம் பாகிய கணவ னோம்பலின்
ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு

நெடுவரை யியம்பும் இடியுமிழ் தழங்குகுரல்
கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
அருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பி னெடுவரை
நிலைபெய் திட்ட மால்பு நெறியாகப்
பெரும்பயன் றொகுத்த தேங்கொள் கொள்ளை
அருங்குறும் பெறிந்த கானவ ருவகை
திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென
நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயருங் குரவை
நல்லெழில் நெடுந்தே ரியவுவந் தன்ன
கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை
நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச்சினந் தணித்துப் *பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை
ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறும்
கிளிகடி மகளிர் விளிபடு பூசல்
இனத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறு மைந்தி னூறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைத் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொருஉங் கல்லென் கம்பலை
காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி
வண்கோட் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுபடு மிச்சிற் காழ்பயன் கொண்மார்
கன்றுகடாஅ வுறுக்கு மகாஅ ரோதை
மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரெனக்
கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமும்
தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையும்
சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகச் சிலம்பும்
என்றிவ் வனைத்தும் இயைந்தொருங் கீண்டி
அவலவு மிசையவுந் துவன்றிப் பலவுடன்
அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்பக்
குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர்
முழவுத்துயி லறியா வியலு ளாங்கண்
விழவி னற்றவன் வியன்கண் வெற்பே

* பி - ம்:—பரூஉவெளில்.

(இ - ள்.) (292) கலை தொடு பெரு பழம் - முசுக்கலை தோண்டின பெரிய பலாப்பழம், புண் கூர்ந்து ஊறலின் - புண்மிக்குத் தேனூறுகையினாலே, (293) மலை முழுதும் கமழும் மாதிரம் தோறும் - மலை முழுதும் அத்தேன் நாறும் திசைகடோறும், (295) வாங்குபு வருவிசை தவிராது - உள்ள பண்டங்களை வாங்கிக்கொண்டு வருகின்ற விசை தவிராது, (296) இமிழ் கொண்ட - ஒலித்தலைக் கொண்ட, (294) அருவி நுகரும் வான் அரமகளிர் - அருவியை ஆடும் தெய்வமகளிர், (295) குடைதொறும் - அதனைக் கையாற் குடையுந்தோறும், (296) நும் இயம் போல் தெரி இன் இசை - நும்முடைய வாச்சியங்களைப்போல் தாளந் தெரிகின்ற இனிய வோசையும், (298) விலங்கல் மீமிசை பணவை கானவர் - மலையின்மேலிட்ட பரணிற் கானவர், (299) புலம் புக்கு உண்ணும் - தினைப்புனத்தைப் புகுந்து தின்னும், (297) இலங்கு ஏந்து மருப்பின் இனம் பிரி ஒருத்தல் - விளங்குகின்ற ஏந்தின கொம்பையுடைய தன்னினத்தைப் பிரிந்த யானைத்தலைவனைப் பிடித்தற்கு, (299) புரி வளை பூசல் - விரும்பின வளைத்தலையுடைய ஆரவாரமும், (300) சேய் அளை பள்ளி (301) எய் - நெடிய முழையாகிய இருப்பிடத்தில் தங்கும் எய்ப்பன்றி, (300) எஃகு உறு முள்ளின் - தனது கூர்மையுறுகின்ற முள்ளால், (301) தெற இழுக்கிய - எய்து கொல்லுகையினாலே பட்ட, கானவர் அழுகை - கானவர் அழுகின்ற அழுகையும், (302) கொழுநர் மார்பில் கொடுவரி பாய்ந்தென - தம் கணவர் மார்பிலே புலிபாய்ந்ததாகப் பட்ட, (303) நெடு வசி விழுப்புண் தணிமார் காப்பென - நெடிய பிளத்தலையுடைய சீரிய புண்ணை ஆற்றுதற்குக் காவலென்று கருதி, (304) அறல் வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல் - அறல் வீற்றிருந்த மயிரினையுடைய கொடிச்சியர் பாடும் பாட்டாலெழுந்த ஓசையும், (305) தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை (306) மலைமார் இடூஉம் - முதல்நாளிலே பூத்த பொன் போலும் கொத்தினையுடைய வேங்கைப்பூவைச் சூடுதற்கு மகளிர் புலிபுலியென்று கூப்பிடும், ஏமம் பூசல் - ஏமத்தையுடைய ஆரவாரமும், (307) கன்று அரைபட்ட கய தலை மட பிடி - கன்று வயிற்றிலே யுண்டான மெல்லிய தலையினையுடைய மடப்பத்தையுடைய பிடியை, (308) வலிக்கு வரம்பாகிய கணவன் ஓம்பலின் - வலிக்கு ஓரெல்லையாகிய களிறு கவழந்தேடிக்கொடுத்துப் பாதுகாத்துப் போகையினாலே, (309) ஒள் கேழ் வய புலி பாய்ந்தென - [அப்போக்கினைக் குறித்து ஒளித்திருந்து] ஒள்ளிய நிறத்தையுடைய வலிய புலி பாய்ந்ததாக, கிளையொடு - அப்பிடி தன்சுற்றத்தோடே, (310) நெடு வரை இயம்பும் இடி உமிழ் தழங்கு குரல் - நெடியமலையிடத்தே கூப்பிடும் இடியோசைபோலும் முழங்குங்குரலும், (311) கை கோள் மறந்த கரு விரல் மந்தி - பார்ப்பைத் தன் கையால் தழுவிக் கோடலை மறந்த கரிய விரலையுடைய மந்தி, (312) அரு விடர் வீழ்ந்த தன் கல்லா பார்ப்பிற்கு - எடுத்தற்கு அரிய ஆழ்ந்த முழையிலே வீழ்ந்திறந்த [தாயின் மார்பை இறுகப்பற்றுதலாகிய தொழிலைக்] கல்லாத தன் குட்டிக்கு, (313) முறி மேய் யாக்கை கிளையொடு துவன்றி (314) சிறுமை உற்ற களையா பூசல் - தளிரை மேய்ந்து வளர்ந்த வடிவினையுடைய சுற்றத்தோடே நெருங்கி நோய்

மிக்க விலக்கப்படாத ஆரவாரமும், (315) கலை கையற்ற காண்பு இன் நெடு வரை-முசுக்கலை ஏறமுடியாதென்று செயலற்ற காட்சி யினிய உயர்ந்தவரையிலே, (316) நிலைபெய்து இட்ட மால்பு நெறி யாக-நிலைபேறுண்டாகக் கூட்டி நட்ட கண்ணேணியே வழியாகச் சென்று, (317) பெரும் பயன் தொகுத்த தேம் கொள் கொள்ளை-பெரிய பயனுண்டாகத் தேனீத் திரட்டிவைத்த தேனையழித்துக் கொண்ட கொள்ளையாலுண்டான ஆரவாரமும், (319) திருந்து வேல் அண்ணற்கு விருந்து இறை சான்மென-திருந்தும் வேலினையுடைய நன்னனுக்குப் புதிதாகக்கொடுத்தற்கு இவற்றிற் கைக்கொண்ட பொருள்கள் அமையுமெனக் கருதிச்சென்று, (318) அரு குறும்பு எறிந்த கானவர் உவகை-அழித்தற்கு அரிய குறும்புகளை யழித்த கானவர் மகிழ்ச்சியிலுண்டான ஆரவாரமும், (320) நறவு நாட்செய்த குறவர்-நறவை நாட்காலத்தே குடித்த குறவர், தம் பெண்டிரொடு-தம் பெண்டிரோடே கூடி, (321) மான் தோல் சிறுபறை கல்லென கறங்க-மான்தோல் போர்த்த சிறுபறை கல்லென்னும் ஓசைபட வொலிப்ப, (322) வான் தோய் மீமிசை அயரும் குரவை-வானைத் தீண்டும் உச்சிமலையிலே ஆடும் குரவைக்கூத்தின் ஆரவாரமும், (323) நல் எழில் நெடு தேர் இயவு வந்தன்ன (324) ஒலிக்கும் கல் யாறு-நல்ல அழகினையுடைய நெடிய தேர்கள் வழியிலே ஓடிவந்த தன்மையவாக ஒலிக்கும் கல்லின்மேல் வரும் யாறுகள், விடர் முழங்கு இரங்கு இசை-முழைஞ்சுகளிலே வீழ்ந்து மாறுதொலிக்கும் ஓசையும் (325) நெடு சுழி பட்ட கடுங்கண் வேழத்து-காட்டாற்றின் நெடிய சுழியிலே வீழ்ந்து அகப்பட்ட தறுகண்மையை யுடைய யானையினது, (326) உரவு சினம் தணித்து - வலிய சினத்தைத் தணியப்பண்ணி, பெரு வெளில் பிணிமார்-பெரிய கம்பத்திலே சேர்த்தற்கு, (327) விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை-தமதேவற்றொழிலைச் செய்தற்குக் காரணமான பேச்சுக்களைப்பேசி அவற்றிலே பயிலப்பண்ணும் பாகருடைய ஆரவாரமும், (328) ஒலி கழை தட்டை புடையுநர்-ஒலிக்கும் மூங்கிலாற் செய்த தட்டையைப் புடைத்து, புனந்தொறும்-புனங்கடோறும், (329) கிளி கடி மகளிர் விளிபடு பூசல்-கிளியையோட்டுகின்ற மகளிர் கூப்பிடுதலாற் பிறந்த ஆரவாரமும், (330) இனத்தின் தீர்ந்த துளங்கு இமில் நல் ஏறு-நிரையினின்றும் பெயர்ந்த அசையும் குட்டேற்றினையுடைய இடபமும், (331) மலை தலைவந்த மரையான் கதழ் விடை-எக்காலமும் போர்செய்து போர்த்தொழில் தன்னிடத்திலே கைவந்த மரையானினது விரைந்த ஏறும், (333) கோவலர் குறவ ரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப - முல்லைநிலத்திற் கோவலரும் குறிஞ்சிநிலத்திற் குறவரும் சேரக்கூடி வென்றதன் வெற்றிதோன்ற ஆரவாரிக்கும்படி, (332) மாறு மைந்தின் ஊறு பட தாக்கி (335) பொரூஉம் கல்லென் கம்பலை - முதுகிடாத வலியுடனே புண்ணுண்டாம்படி முட்டிப் பொரும் கல்லென்கின்ற ஓசையை யுடைய ஆரவாரமும், (335) நல் ஏறு - எருமையேறுகள், (334) வள் இதழ் குளவியும் குறிஞ்சியும் குழைய (335) பொரூஉம் கம்பலை-வள விய இதழையுடைய குளவியும் குறிஞ்சியும் வாடும்படி தம்மிற் பொரு

இன்ற ஆரவாரமும், (337) வள் கோள் பலவின் விளை தீ பழம் சுளை - வளவிய குலைகளையுடைய பலாவினது முற்றின இனிய பழத்திற் சுளையை, (338) உண்டு படு மிச்சில் காழ் பயன் கொண்மார்-விரும்பி னோரெல்லாரும் தின்று கீழ்வீழ்ந்து கிடக்கும் மிகையான பழத்தின் விதையைப் பயன்கோடற்கு, (339) கன்று - கன்றுகளைப் பிணைத்து, (336) காந்தள் துடுப்பின் கமழ் மடல் ஓச்சி (339) கடாவுறுக்கும் மகார் ஓதை - காந்தளினது துடுப்புப்போலும் கமழுகின்ற மடலாலேயடித் துக் கடாவிடும் பிள்ளைகளுடைய ஆரவாரமும், (340) மழை கண் டன்ன ஆலைதொறும் ஞெரேரெனு - [கருப்பஞ்சாறு அடுபுகையால்] மேகத்தைக் கண்டாலொத்த கொட்டில்கள்தோறும் விரைவாக(341), கரும்பின் கழை கண் உடைக்கும் ஏத்தமும்-கரும்பின்கோலைச் சாறு கொள்ளும் ஆலையின் ஓசையும், (342) தினை குறு மகளிர் இசை படு வள்ளையும் - திணையைக் குறுகின்ற மகளிருடைய இசைமிகுகின்ற வள்ளைப்பாட்டும், (343) சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர் (344) பன்றி பறையும்-சேம்பையும் மஞ்சளையும் விதைத்து வளர்ந்தபின்பு பன்றி கிழங்கு அகழாமற் காப்போருடைய பன்றிக்குக் கொட்டும் பறையோசையும், (345) என்ற இவ்வனைத்தும்-என்று யான் கூறிய இவ்வெல்லா ஓசைகளும், குன்று அகம் சிலம்பும் - இவ்வோசை களால் மலையிடத்தெழும் எதிரொலியும், ஒருங்கு இயைந்து ஈண்டி - சேரப்பொருந்தித் திரளப்பட்டு, (346) அவலவும் மிசையவும் பல உடன் துவன்றி - தாழ்வரையிலுள்ளனவும் உச்சிமலையிலுள்ளனவு மாகிய ஒழிந்த பல ஓசைகளும் சேர நெருங்குகையினாலே, (347) எண் அரு திறத்த அலகை தவிர்த்த - எண்ணுதற்கு அரிதாகிய கூறு பாட்டையுடையவாகையினாலே எண்ணையொழிந்த, (348) மலை படு கடாஅம் மாதிரத்து இயம்ப - மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி திசைகளெல்லாமொலிப்ப, [(291) அவற்றைக் கேட்குவிர்:] (351) அவன் வியன் கண் வெற்பு - அந் நன்னனுடைய அகன்ற இடத்தை யுடைய மலை, (349) குரூஉ க்கண் பிணையல் கோதை மகளிர் - பல நிறம் பொருந்தின இடத்தையுடையதாகிய பிணைத்தலையுடைய மாலையினையுடைய மகளிர் ஆடற்கு ஏற்ற, (350) முழவு துயில் அறியா வியலுள் ஆங்கண் (351) விழவின் அற்று - முழவு கண்ணுறக்கமறி யாத அகன்ற ஊரிடத்துக்கொண்ட திருநாளையொத்துச் சிறந்திருக் கும்; (எ - று.)

[(290) வரிநிழலசையினிரிருப்பின்], (296) இன்னிசையும் (299) பூசலும் (301) அழுகையும் (304) பாடலும் (306) பூசலும் (310) குர லும் (314) பூசலும் (317) கொள்ளையும் (318) உவகையும் (322) குர வையும் (324) இசையும் (327) ஓதையும் (329) பூசலும் (335) கம்பலை யும் (339) ஓதையும் (341) ஏத்தமும் (342) வள்ளையும் (344) பறையும் (345) என்றிவ்வனைத்தும் (344) குன்றகச் சிலம்பும் (345) ஒருங்கி யைந் தீண்டப்பட்டு (346) ஒழிந்த ஓசைகளும் உடன் துவன்றுகை யினாலே (348) மலைகளாகிய யானைக்குண்டாகின்றவொலி [(291) பல திறம் பெயர்பவை] (348) மாதிரத்தியம்ப [(291) அவற்றைக் கேட்கு

விர்] என இயையும். மற்றும் (351) அவன் வெற்பு (350) வியலு ளாங்கண் (351) விழவினற்று என இயையும்.

கருத்துரை:—முசுக்கலை தோண்டின பெரிய பலாப்பழம் கனிந்து புண்மிக்குத் தேனூறுகையினாலே மலைமுழுதும் அத்தேன் மண நாற, அங்ஙன் நாறும் திசைகடோறும் உள்ள பண்டங்களை வாரிக் கொண்டு வருகின்ற வேகந் தவிராது ஒலிசெய்யும் அருவியிலாடும் தெய்வமகளிர் அதனைக் கையாற் குடையுந்தோறும் நும்மியம்போல் தாளந்தெரிக்கின்ற இனிய வோசையும், மலையின்மேலிட்ட பரணிற் கானவரிருந்து தினைப்புனத்தைப் புகுந்து தின்னும் யானையொருத் தலைப் பிடித்தற்கு வளைந்த ஆரவாரமும், நெடிய முழையிடத்துத் தங்கும் எய்ப்பன்றி தனது கூரிய முள்ளாலெய்து கொல்லுகையி னாலே இறக்கும் கானவர் அழுகையும், தம் கணவர் மார்பிற் புலி பாய்ந்தறைதலால் அவரிறக்க, அம்மார்பிடத்துண்டாய நெடிய பிளத் தலையுடைய விழுப்புண்ணை யாற்றுதற்குக் காப்பென்று கருதிக் கொடிச்சியர் பாடும் பாட்டாலெழுந்த ஓசையும், முதல்நாளிலேபூத்த பொன்போலும் கொத்தினையுடைய வேங்கைப்பூவைச் சூடுதற்கு மக ளிர் 'புலிபுலி'யென்று கூப்பிடும் ஆரவாரமும், சூலுற்ற மடப் பிடியை வலிய களிறு கவழந் தேடிக்கொடுத்துப் பாதுகாத் துப்போக, அதன் போக்கினைக் குறித்து ஒளித்திருந்த வலிய புலி பாய்ந்ததாக, அப் பிடி தன் சுற்றத்தோடே கூப்பிடும் இடி யோசைபோல் முழங்குங்குரலும், கருவிரல் மந்தி தன் பார்ப்பைத் தன்கையால் தழுவிக்கோடலை மறந்த காரணத்தால் அக்குட்டி எடுத்தற்கரிய ஆழ்ந்த முழையிலே வீழ்ந்திறக்க, அதனால் வருத்த மிக்குச் சுற்றத்தோடே கதறும் விலக்கமுடியாத ஆரவாரமும், முசுக் கலையும் ஏறமுடியாதவாறு உயர்ந்த வரையிலே நிலைபெற நாட்டிய கண்ணேணியின் வழியாகச்சென்று பெரும்பயனுண்டாம்படி தேனீத்திரட்டிவைத்த தேனை யழித்துக்கொண்ட கொள்ளை யாலுண்டான ஆரவாரமும், "நன்னனுக்குப் புதிதாகக் கொடுத்தற்கு இவற்றிற் கைக்கொண்ட பொருள்கள் அமையும்" எனக்கருதிச் சென்று அழித்தற்கரிய குறும்புகளை யழித்த கானவர் மகிழ்ச்சியி லுண்டான ஆரவாரமும், நாட்காலத்தே கட்குடித்த குறவர் தம் பெண்டிரோடே கூடி, மான்தோல் போர்த்த சிறுபறை கல்லெனக் கறங்க உச்சிமலையிலே யாடும் குரவைக் கூத்தின் ஆரவாரமும், நெடியதேர்கள் ஓடிவருவதுபோலக் கல்லின்மேல் ஓடிவந்தொ லிக்கும் யாறுகள் முழைஞ்சுகளிலே வீழ்ந்து மாறுதொலிக்கும் ஓசையும், காட்டாற்றின் நெடிய சுழியிலே வீழ்ந்து அகப்பட்ட கடுங்கண் யானையின் வலிய சினத்தைத் தணியப்பண்ணிப் பெரிய கம்பத்திலே சேர்த்தற்குத் தமதேவற்றொழிலைச் செய்தற்குக் காரண மான பேச்சுக்களைப்பேசி அவற்றிலே பயிலப்பண்ணும் பாகருடைய ஆரவாரமும், தட்டையைப்புடைத்துத் தினைப்புனங்கடோறும் கிளியையோட்டுகின்ற மகளிர் கூப்பிடுதலாற்பிறந்த ஆரவாரமும், நிரையினின்றும் பெயர்ந்துவந்த இடபமும் பொருதலிற் கைவந்த மரையானேறும் ஒன்றற்கொன்று முதுகிடாத வலியுடனே புண்ணும்

படி முட்டிப்பொரும் கல்லென்கின்ற ஓசையையுடைய **ஆரவாரமும்,** அங்ஙன் அவை தம்முட் பொரக்கண்ட முல்லைநிலத்துக் கோவலரும் குறிஞ்சிநிலத்துக் குறவரும் சேரக்கூடி வென்றதன் வெற்றிதோன்ற மிக்கொலிக்கும் **ஆரவாரமும்,** எருமைக்கடாக்கள் வளவிய இதழை யுடைய குளவியும் குறிஞ்சியும் வாடும்படி தம்மிற்பொருகின்ற **ஆரவாரமும்,** பலாவினது முற்றின பழத்தின் இனிய சுளையை விரும் பினோரெல்லாரும் தின்றபின் கீழ்வீழ்ந்து கிடக்கும் மிகையான விதைகளைப் பயன்கோடற்குக் கன்றுகளைப்பிணைத்து மடலோச்சிக் கடாவிடும் பிள்ளைகளுடைய **ஆரவாரமும்,** புகைசூழ்தலால் மேகத் தைக் கண்டாலொத்த கரும்பாலைகடோறும் கரும்பின்கோலைச் சாறு கொள்ளும் **ஓசையும்,** தினையைக் குற்றும் மகளிரின் வள்ளைப்பாட்டும், சேம்பையும் மஞ்சளையும் விதைத்து வளர்த்து அவற்றின் கிழங்கு களைப் பன்றி அகழாமற் காப்போருடைய பறையோசையும் ஆகிய இவ்வெல்லா ஓசைகளும் எழ, அவற்றினால் மலையிடத்தெழும் எதி ரொலியும் ஒருங்கியைந்து ஈண்ட, அவற்றோடு, தாழ்வரையிடத்தும் உச்சிமலையிடத்தும் உள்ளனவாகிய ஒழிந்த பல வோசைகளும் சேர நெருங்குகையினாலே, மலையிடத்துண்டாம் ஒலிகள் எண்ணுதற்கரி யனவாய்த் திசைகளெல்லாமொலிப்ப அவற்றை நீவிர் கேட்பீர்; அந் நன்னனுடைய அகன்ற இடத்தையுடைய மலையோ மகளிர் மகிழ்ந்து ஆடற்கேற்ற விழாவினையொத்துச் சிறந்து காணும் என்று ஆற்றுப் படுப்போன் கூறியமை கருத்து.

[மலைபடுகடாம் கூறும் இப்பகுதி பெரிதும் சுவைத்து இன்புறற் பாலதே. மற்றும், இப்பகுதியிற் காணும் அவலச்சுவை நெஞ்சை யள்ளுகிறது.]

விசேடவுரை:—பழம் புண் கூர்ந்தூறல்—138-39ஆம் அடியின் விசேடவுரையிற் காண்க. நீரைக் கையாற் குடைந்து விளையாடும் போது, அந்நீரில் வாத்தியவோசைகளையுண்டாக்கலை, "கயங்குடைந் தன்ன இயந்தொட் டிமிழிசை" என்ற மதுரைக்காஞ்சியாலும் (வரி: 363) அறிக. மற்றும், சிந்தாமணி குணமாலையாரிலம்பகத்துச் செய் யுள் 115-இன் உரையில், 'ஆடவர், ஓவார்ராய்த் தண்ணுமை முதலிய வற்றினோசைகளையும் பிறவும் எண்ணிய வாச்சியங்களினோசைகளை யும் விரலினாலும் அகங்கையினாலும் புறங்கையினாலும் தெறித்தும் கொட்டியும் குடைந்தும் இசையும்படி நீரிலே பிறப்பித்து' என்று நச்சினார்க்கினியர் கூறுதலும் நோக்கத்தக்கது. ஒருத்தல்-ஒருசார் விலங்கின் ஆண்பெயர்; என்னை? 'புல்வாய் புலியுழை மரையே கவரி, சொல்லிய கராமோ டொருத்த லொன்றும்'; 'வார்கோட் டியானையும் பன்றியு மன்ன'; 'ஏற்புடைத் தென்ப வெருமைக் கண்ணும்' முதலி யன காண்க. ஈண்டு, ஒருத்தல் - யானைத்தலைவனைக் குறிக்கும். தலைமை வாய்ந்த ஆண்யானையை யானைத்தலைவனெனக் கூறுதல் மரபு. பணவை-பரண். கொடுவரி-புலி: பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; ஆகுபெயருமாம். புண்ணையாற்று தற்கு இசைபாடுதல் பாதுகாப்பென்பதை "...கொய்யாக் குறிஞ்சி

பல்பாடி - மொய்யிணர்ப், பூப்பெய் தெரியல் நெடுந்தகைபுண் யாங் காப்ப'', (புற. வெ. 79) ''காஞ்சி பாடி...காக்கம் வம்மோ காதலந் தோழி,...நெடுந்தகை புண்ணே'' (புறம்: 281) என்பவற்றாலு மறிக. கொடிச்சியர் - குறிஞ்சிநிலப் பெண்கள். வேங்கைப்பூக் கொய்யும் மகளிர் 'புலிபுலி' என்று பூசலிடுவர் என்றது, அவ்வேங்கைமரம் மலர்கொய்யத் தாழ்ந்து கொடுக்குமென்றோர் பேதைத் தன்மை யால், அதுவும் மலையில் வாழ்வார்க்கு உள்ளதோர் பண்பு என்ப. அங்ஙனமே கூறியது அகநானூற்றுக் குறிப்புரை. 'ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப் புலிபுலி யென்னும் பூசல் தோன்ற' என்றது அகம் (செ: 48). அரைபடுதல் - வயிற்றிலேயுண் டாதல். கய-மென்மையை யுணர்த்தும் உரிச்சொல்; 'கயவென் கிளவி மென்மையுமாகும்'. கணவனென்பது அஃறிணைக்கும் வரும் என்பதை ''பைங்கட் செந்நாய், மாயா வேட்டம் போகிய கணவன், பொய்யா மரபிற் பிணவுநினைந் திரங்கும்'' (நற்: 103), ''வங்காக் கடந்த செங்காற் பேடை, யெழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது'' (குறுந்: 151), ''நிறைச்சூல் யாமை...முட்டை, பார்ப்பிடனாகுமள வைப் பகுவாய்க் கணவ னோம்பும்'' (அகம்: 160) ''சேற்றவளை தன் கணவன் அருகிருப்பச் சினந்திருகிச், சூற்றவளை நீருழக்குந் துறை கெழுநீர் வளநாடா'' (கம்ப: சூர்ப்ப: 122) என்பவற்றாலு மறிக. பிடிக் குக் களிறு கவளந்தேடிக் கொடுத்து ஓம்புதலை ''கயந்தலை மடப்பிடி யுயங்குபசி களை இயர், பெருங்களிறு தொலைத்த முடத்தாளோமை'' (நற்: 137) ''பிடிபசி களை இய பெருங்கை வேழம், மென்சினை யாஅம் பிளக்கும்'' (குறுந்: 37), ''பெருகுமத வேழம் மாப்பிடிக்கு முன் னின்று, இருகணிளமூங்கில்வாங்கி - அருகிருந்த, தேன் கலந்து நீட் டும்'' (இயற்பா-இரண்டாந் திருவந்தாதி: 75) முதலியவற்றாலுமறிய லாம். அடிகள்: 307-314-இல் சொட்டும் அவலச்சுவை நெஞ்சை யள்ளுகிறது. இடியுமிழ்-இடியோசை: இடியுமிழ்ந்த ஓசையை ஆகு பெயரான் 'உமிழ்' என்றார். 'கல்லாப் பார்ப்பு' என்றவிடத்துக் கல் லாமை-தனக்குரிய தொழிலைக் கல்லாமையென்றபடி: தனக்குரிய தொழிலாவது-தாயின்மார்பை இறுகப் பற்றுதல், சிறுமை-நோய்: 'பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள''. மால்பு - கண்ணேணி: கண்ணேணியாவது - கணுக்களிலேயே அடிவைத்து ஏறிச்செல்லும் படி அமைத்துள்ள மூங்கில்; உச்சியிலுள்ள தேனிறாலை அழிக்கும் பொருட்டுச் செங்குத்தான மலையிலேறிச் செல்வதற்கு அதன் அய லில் இவ்விரண்டு மூங்கில்களைக் கூட்டி நிறுத்தியமைப்பது வழக்கம் என்றனர் டாக்டர். ஐயரவர்கள். திருந்துவேலண்ணல் - இப்பாட்டுக் குத் தலைவனாய நன்னனைக் காட்டியது: மேல் 467-ஆம் வரிப்போக் கும் ஒப்பு நோக்குக. வேலுக்குத் திருத்தமாவது - அழிகுநர்புறக் கொடை யோச்சாமை. விருந்து-புதுமை. இறை - இறுக்கப்படுவது; இறு-பகுதி; ஐ-செயப்படுபொருள்விகுதி. இறுத்தல்-செலுத்துதல். சாலும் என்பது 'சான்ம்' என்று உகரங் கெட்டு மெய்திரிந்து நின் றது. குறும்பு-பகைவரது சிற்றரண். குரவை இருபாலாரும் விரவி யாடுவதாதலின், 'குறவர் தம் பெண்டிரொடு அயருங் குரவை' என் றது. இதனை 'வியலறை வரிக்கு முன்றிற் குறவர், மனைமுதிர் மகளி

ரொடு குரவை தூங்கும்' என்ற அகத்தாலும் (செ. 232) உணரலாம். இனி, கட்குடித்துக் குரவையயர்வரென்பதை "தேறற்,......குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து,...குரவையயர" (திருமுருகு: 195-97), "குறவர் மாக்கள்,...தேறன்மகிழ்ந்து, வேங்கை நீழற் குரவையயரும்" (புறம். 129) என்பவற்றாலு மறிக. அருவியொலிக்குத் தேரொலி கூறப்படுதலை 'குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக' (குறுந்: 189), 'கற்பா லருவியி னொலிக்கு நற்றேர்' (அகநா: 184) என்றவிடங்களிலும் காண்கிறோம்; ஈண்டு, உவமை மாறுடியபடி. பாகர் யானைக்கு மொழிபயிற்றுதலை முல்லைப்பாட்டினாலும் அறிக. யானைப்பேச்சாவன - அப்புது அப்புது, ஆது ஆது, ஐ ஐ என்பன. "அங்கையங் தலத்தினலைப்புதா தையெனக், கொங்கலர் கண்ணியான் கொம்மை தான் கொட்டலும்" என்ற சிந்தாமணிப் பாடலில் (செ. 1834) அப்புது முதலியன யானையைத் தட்டிக்கொடுக்கும்போது சொல்வன என்பது மாத்திரம் ஏற்படுகின்றது. தட்டையாவது-மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி: தட்டப்படுதலின் தட்டையென்றார்: (மதுரைக்காஞ்சி, 305, நச். உரை). இமில் - குட்டேறு; அதாவது எருத்தினுடைய முன்முதுகின்மேல் உருண்டு பருத்துத் தோன்றும் ஒருறுப்பு: திமில் எனவும் கொண்டை எனவும் முசுப்பு எனவும் படும். இமிலேறு முல்லைநிலத்ததாதலானும் மரையான் குறிஞ்சி நிலத்ததாதலானும் இரண்டும் தம்மின் முட்டிப் பொருதபோது முல்லைநிலத்துக் கோவலரும் குறிஞ்சிநிலத்துக் குறவரும் ஒருங்கியைந்து ஆர்த்தனரென்றது. 'இமினல்லேறும் மரையான் விடையும் ஆர்ப்பப் பொரூஉம் கம்பலை' என்றும், 'நல்லேறு பொரூஉம் கம்பலை' என்றும் இருமுறை கூட்டிப் பொருள்கொண்டது 'நல்லேறு' என்ற தொடர் இருமுறை (வரி, 330, 335) வந்தமை நோக்கி. இமினல்லேறு என முன்னர் அடையொடு வந்தமையின், பின்னர் வந்த 'நல்லேறு' என்பது எருமையேறுகளைக் குறித்தன. [எருமையேறு-கடா]. பலாப்பழத்தின் விதைகளைப் பயன்கோடற்குக் கடாவிடுவரென்பது இந்நூலால் தெரிய வருகின்றது. [விதை - கொட்டை]. கோள் - கொத்து, குலை. கருப்பஞ்சாற்றைக் காய்ச்சுவதாலெழும் புகை மேகம் போன்று மிகுமென்பதை 'நகலினாலை நறும்புகை......முகிலின்விம்மி முயங்கின' (கம்ப: பால. நாட்டுப்: 41) என்றதாலுமுணர்க. குறுதல்-குத்துதல். வள்ளைப்பாட்டு - உலக்கைப்பாட்டு. உரற் பாட்டு என்றனர் நச்சினார்க்கினியர் (தொல். புறத்திணை. 8). மகளிர் உரலில் தினை நெல் முதலியவற்றை யிடிக்கும்போது அதனாலுண்டாகும் அயர்வு தோற்றாதிருக்கும்பொருட்டுப் பாட்டுப்பாடுதல் இயல்பு; இங்ஙனம் பாடும் பாட்டு வள்ளைப்பாட்டெனப்படும். பன்றி கிழங்கு அகழாமற் காப்பதற்குப் பறைகொட்டுவர் எனத் தெரிகிறது; இப்பன்றிப்பறை குடப்பறை எனவும் வழங்கும். "பன்றிப்பறையே குடப்பறையாகும்" என்றது பிங்கலந்தை. அவல, மிசைய - பலவின்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்கள். துவன்றி - நெருங்கி: 'துவன்று நிறைவாகும்'. **அலகு-எண். மலைபடுகடாம்** - இவ்வரிய தொடரால் பெயர்பெற்றது **இப்பாட்டு. இத்தொடர்-மலைகளாகிய** யானைக்கு உண்டாகின்ற ஒலி

என்று பொருள்பட்டது. கடாம்-மதநீருமாதலின், மலைகளை யானை யென்றது. ஈங்கு, கடாம் ஆகுபெயராய் அதனாற்பிறந்த ஓசையை யுணர்த்திற்று. [கவனிப்பு:—'கடாம்' என்பதைச் சொல்லிப்பார்ப்பின் ஓசையெழுதல் காண்க.] ஆகவே நச்சினார்க்கினியர் " மலைக்கு யானையை உவமித்து அதன்கட்பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப் பித்தவதனால், இப்பாட்டிற்கு மலைபடுகடாமென்று பெயர் கூறினார்" என்றார். 'கடாம்' என்ற சொல்லமைப்பின் பொருட்சிறப்பும் நயமும் நோக்கியே இம்மலைபடுகடாத்தைக் 'கடாம்' எனவே வழங்கினர், 'முருகு பொருநாறு' என்ற வெண்பாவில்; "பாலை கடாத்தொடும் பத்து" என்றது நினைக. குரூஉ-நிறம். 'குருவுங் கெழுவு நிறனா கும்மே' என்பது விதி: குரூஉக்கண் இறடிப்பொம்மல் பெறுகுவிர் (மலைபடு: வரி: 169) என்பதும் நினைக. வியல்-அகலம்; ' வியலென் கிளவி யகலப்பொருட்டே'.

அடிகள் 352—360:—விழவினையொத்துச்சிறக்கும் நன்னன் வெற்பிடத்து, இனியவற்றைக் கண்டும் கேட்டும் உண்டும் அப்பெரு மலை பிற்பட விறலியரோடு கழிமின் எனக் கூறும்.

கண்ண் டண்ணெனக் கண்டுங் கேட்டும்
உண்டற் கினிய பலபா ராட்டியும்
இன்னும் வருவ தாக நமக்கெனத்
தொன்முறை மரபினி ராகிப் பன்மாண்
செருமிக்குப் புகலுந் திருவார் மார்பன்
உருமுரறு கருவிய பெருமலை பிற்பட
இறும்பூது கஞலிய வின்குரல் விறலியர்
நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்

(இ - ள்.) (352) கண் தண் என கண்டும் கேட்டும் - காண்டற்கு இனியவற்றைக் கண்குளிரக்கண்டும் கேட்கப்படுவனவற்றைச் செவி குளிரக் கேட்டும், (353) உண்டற்கு இனிய பல பாராட்டியும் - உண் டற்கு இனிய பல வுணவுகளைக் கொண்டாடியுண்டும், (354) நமக்கு இன்னும் வருவதாக என (355) தொல் முறை மரபினிர் ஆகி-நமக்கு மேலும் இந்நுகர்ச்சி உண்டாவதாகவென்று விரும்பிப் பழைய உற வான மக்களைப்போலும் முறைமையினையுடையிராய்ச் சிலநாள் தங்கி, பல் மாண் (356) செரு மிக்கு புகலும் திரு ஆர் மார்பன் - பலவாய் மாட்சிமைப்பட்ட வஞ்சி முதலிய போர்த்தொழில் மிக்குநடத்தலாலே உலகம் புகழ்ந்துபேசும் திருமகள் நிறைந்திருந்த மார்பினையுடைய நன்னனுடைய, (357) உரும் உரறு கருவிய பெருமலை பிற்பட- உருமேறு முழங்கும் தொகுதியையுடைய பெரியமலை நுமக்குப் பின்னாகும்படி, (358) இறும்பூது கஞலிய இன் குரல் விறலியர் (359) நறு கார் அடுக்கத்து குறிஞ்சி பாடி-அதிசயம் நெருங்கின இனிய யாழையுடைய விறல்பட ஆடுமகளிர் நறிய கரிய பக்கமலையிலே குறிஞ்சியென்னும் பண்ணைப்பாட, (360) கை தொழூஉ பரவி

பழிச்சினிர் கழிமின்-நீரும் ஆண்டுறையும் தெய்வங்களைக் கையாலே தொழுது எம் குறை முடித்தால் நுமக்கு இவை தருதுமென்று பரவுக்கடன் பூண்டு வாழ்த்திப் போவீர்; (எ - று.)

(352) கண்டும் கேட்டும் (353) பாராட்டியும் (355) தொன்முறை மரபினிராகிப் (359) பாடிப் (360) பரவிப் பழிச்சினிராய்(357) மலைபிற் படக் (360) கழிமின் என இயையும்.

கருத்துரை :—காண்டற்கினியவற்றைக் கண்குளிரக்கண்டும், கேட்டற்கினியவற்றைச் செவிகுளிரக் கேட்டும், உண்டற்கினிய பலவற்றைப் பாராட்டியுண்டும் 'மேலும் இந்நுகர்ச்சி நமக்கு உண்டாவதாகுக' என்று விரும்பிப் பழைய உறவினையுடைய மக்களைப் போன்ற முறைமையினையுடையிராய்ச் சிலநாள் தங்கிப் பின் நன்னனுடைய பெருமலை நுமக்குப் பின்னாகும்படி, விறலியர் குறிஞ்சிப் பண்ணைப்பாட, ஆண்டுறையும் தெய்வங்களைக் கைதொழுது பரவுக் கடன் பூண்டு வாழ்த்திப்போவீராகுக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—"கண் தண்ணெனக் கண்டும் கேட்டும்" என்ற தொடரில் 'கண் தண்ணெனக் கண்டும்' எனவந்ததற்கேற்பச் 'செவி தண்ணெனக் கேட்டும்' என வருவித்துப்பொருளுரைக்கப்பட்டது. புகலல்-பேசுதல்; ஈண்டு, உலகம் புகழ்தலாயிற்று. திருவார் மார்பன் என்றவிடத்து "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும் என்று பெரியாரும் பணித்தார்" என்ற பரிமேலழகருரைப்போக்கு நினைக. "காத்தற்றொழிற்குரிய கடவுளாகிய திருமால்தானே திக்பாலகர் வடிவமாகவும், அரசர்கள் வடிவமாகவும் நின்று, பிராணிகளைக் காத்தலாகிய தனது தொழிலை நடத்துகின்றனன்" என்பது நூல் துணிபு. குரல்-யாழுக்கு, ஆகுபெயர். குறிஞ்சி-அந்நிலத்திற்கேற்ற குறிஞ்சிப்பண். இக்குறிஞ்சிப் பண் சங்கராபரணம் என்னும் கோடிப்பாலையாகும் என்ப. பாடி-பாட; எச்சத்திரிபு.

இலக்கணக்குறிப்பு:—ணகரவொற்றுக் குறிற்கீழ் அளபெய்தி நிற்கும்வழிச் சீர்நிலையாதலேயன்றி அசைநிலையாகலுமுரித்துச் சிறுபான்மை என்றதற்கு உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது 'கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்' என்ற வரி. நச்சினார்க்கினியர் ஈங்கு, "கண்ண் என்பது சீர்நிலையெய்தித் தேமாவாயிற்று. 'தண்ண்ணென' என்றவழித் தட்பத்தின் சிறப்புக் கூறுதற்காக இயற்சீர்க்கண் ணகரவொற்றினை மிகக்கொடுத்து அளபெடுத்துச் செய்யுள் செய்தான். அது, மாசெல்சுரமென்னும் வஞ்சியுரிச் சீராவதனையாகற்க: பாதிரியென முன்னின்ற இயற்சீரேயாகவென வழுவமைத்தவாறு" எனக் குறித்தார் (தொல். செய். சூ-18. நச்சி. உரை). [அதாவது, 'தண்ண்ணென' என்பதை 'தேமாங்கனி' யாக்கொள்ளற்க, 'கூவிளம்'மாய்க்கொள்க என்றபடி]. இனி, "அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்' என்ற செய்யுளியற் சூத்திரத்திற்கும் (219) இவ்வடி உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

அடிகள் 361—372:—மழைத்துளியால் வாச்சியங்கள் நனை யாதபடி காத்துக் குழிகளில் விழுதலைப் பரிகரித்துக் கழிமின் எனக் கூறும்.

மைபடு மாமலைப் பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி
தூஉ யன்ன துவலை துவற்றலின்
தேஎந் தேருக் கடும்பரிக் கடும்பொடு
காஅய்க் கொண்ட நும்மியந்தொய் படாமற்
கூவ லன்ன விடரகம் புகுமின்
இருங்க லிகுப்பத் திறுவரை சேராது
குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து
நின்று நோக்கினுங் கண்வாள் வௌவும்
மண்கனை முழவின் றலைக்கோல் கொண்டு
தண்டுகா லாகத் தளர்த லோம்பி
ஊன்றினிர் கழிமின் ஊறுதவப் பலவே

(இ - ள்.) (361) பனுவலின் பொங்கி - (சூல் முதிர்வதற்கு முன்பு எஃகுறு பஞ்சிபோலப் பொங்கிச்சென்று, மை படு மா மலை - (கார் காலம் வருமளவும்) மேகம் கிடக்கும் பெரியமலையிடத்தில், (362) கை தோய்வு அன்ன கார் மழை தொழுதி - கை சென்று பிடிக்குந் தன்மையையொத்த அணுகுதலையுடைய கரியமேகத்திரள், (363) தூஉய் அன்ன துவலை துவற்றலின்-வலியத் தூவினாலொத்த துவலைகளைத் தூவுகையினாலே, (364) தேஎம் தேரு கடு பரி கடும்பொடு - திசைகளைத் துணிந்து கொள்ளமாட்டாத கடிய செலவினையுடைய சுற்றத் தோடே, (365) காஅய் கொண்ட நும் இயம் தொய்படாமல் - காவிக் கொண்ட நும்முடைய வாச்சியங்கள் நனையாதபடி, (366) கூவல் அன்ன விடரகம் புகுமின்-கிணறுகள்போன்ற முழைஞ்சுகளிடத்தே புகுவீர்; (367) இரு கல் இகுப்பத்து - பெரிய கல்லினது திரட்சியி னிடத்து, இறு வரை சேராது - முறிந்துநின்ற மலைகளைச் சேராதே, (369) நின்று கண் நோக்கினும் வாள் வௌவும் - நின்று கண் ணுற்பார்க்கினும் கண்ணினொளியைத் தன் அழகாலே வாங்கிக் கொள்ளும், (368) இடம் பட்ட குன்று - இடமுண்டாகிய மலையில், அரு இடர் அழுவத்து - பொறுத்தற்கு அரிய வருத்தத்தைச் செய்யும் குழிகளிடத்துப் பிறக்கும், (372) ஊறு தவ பல - இடையூறுகள் மிகப்பல; [அவற்றை], (370) மண் கனை முழவின் தலை (371) தண்டு காலாக (370) கொண்டு - மார்ச்சனை செறிந்த முழவிடத்திற் காமரத்தை நுமக்குக் காலாக வாங்கிக் கொண்டு, (371) தளர்தல் ஓம்பி-அடி உள்ளே விழுதலைப் பரிகரித்து, (370) கோல் (372) ஊன்றினிர் கழிமின்-அத்தண்டாகிய கோலையே ஊன்றிப்போவீர்; (எ - று.)

(361) மலையிடத்து (362) மழைத் தொழுதி (363) துவற்றலின் (364) தேஎம் தேருக் கடும்பொடு (365) இயந் தொய்படாமல் (366)

விடரகம் புகுமின்; புகுந்து, (368) குன்றில் அரிடரழுவத்து (372) ஊறு தவப்பல; [அவற்றைக்] (370) கோல்கொண்டு (372) ஊன்றினிர் கழிமின் என இயையும்.

கருத்துரை :—மேகம் எஃகுறுபஞ்சிபோலப் பொங்கிச்சென்று கிடக்கும் பெரியமலையிடத்தில், கைசென்று பிடிப்பதுபோல் நெருங்குதலையுடைய கரியமேகத்திரள் துவலைகளைத் தூவுகையினாலே திசைகளைத் துணிந்துகொள்ளமாட்டாத சுற்றத்தோடே நும் வாச்சியங்கள் நனையாதபடி கிணறுகள்போன்ற முழைஞ்சுகளிடத்தே புகுவீர்; பின்பு, முறிந்துநின்ற மலைகளைச்சேராதீர்; மற்றும் அழகினால் கண்ணைக் கவரும் இடமகன்ற குன்றில் இடையூறுகள் பல விளைக்கும் குழிகளுள; முழவு தூக்கும் காத்தண்டை நுமக்குக் காலாகவாங்கிக்கொண்டு, அக்குழிகளுள்ளே அடிவிழுதலைப் பரிகரித்து அத்தண்டையே கோலாக ஊன்றிப்போவீராகுக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:— பனுவல்-எஃகுறுபஞ்சி; பன்னிய பஞ்சு. எஃகுதல்-பன்னுதல். மேகம் சூல்முதிர்வதற்கு முன்பு பன்னிய பஞ்சுபோல் பொங்கிச் செல்லுதல் இன்றும் கண்கூடு. இவ்வுவமை பெரிதும் சுவைக்கத்தக்கது. "எழிலி;...எஃகுறு பஞ்சிற் றூகி...நெடுவரை யாடும்" (நற்: 247), "வில்லெறி பஞ்சியின் வெண்மழை தவழும்" (அகநா: 133)", பொங்கல் வெண்மழை, யெஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன, துவலை" (அகநா: 217) என்பனவும் நோக்குக. கரிய மேகத்திரள் மலையிடத்து அணுகிக் கவிதல், கை சென்று பிடிக்கும் பெற்றியை யொத்திருக்கிறதென்றார்; இவ்வுவமையும் பாராட்டத் தக்கதே. 'தூஉய் அன்ன துவற்றல்' என்றவிடத்துத் தொழிலுவமை. தொய்படுதல் - நனைதல். இருப்பம்-திரட்சி. வாள்-ஒளி. கண் நோக்கினும் என்றவிடத்து உம்மை - அவற்றை நுகர மனத்தாற் கருதின் அம்மனத்தையும் வாங்கிக்கொள்ளுமென எச்சவும்மை. அழுவம் - குழி. தவ - மிகுதிப்பொருளில் வரும் உரிச்சொல். தண்டு - காத்தண்டு; காம்பரம்.

அடிகள் 373—375:—கூர்ங்கற்பாறை வழிபோம்போது அந்திப் பொழுதில் கழிமின் எனக் கூறும்.

அயில்காய்ந் தன்ன *கூர்ங்கற் பாறை
வெயில்புறந் தரூஉ மின்ன லியக்கத்துக்
கதிர்சினந் தணிந்த வமயத்துக் கழிமின்

(இ - ள்.) (373) அயில் காய்ந்தன்ன கூர் கல் பாறை-வேல் காய்ந்தாற்போலும் குடுமிக் கூர்ங் கற்களையுடைய பாறையில், (374) வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து-குளிர்ச்சி வாராமல் வெயில் பாதுகாக்கும் இன்னாமை செய்யும் வழியிடத்திற் போம்

பி-ம்:—*கூன்கட்பாறை.

பொழுது, (375) கதிர் சினம் தணிந்த அமயத்து கழிமின்-ஞாயிறு சினம் மாறின அந்திப்பொழுதிலே போவீர்; (எ - று.)

(373) பாறையில் (374) இன்னலியக்கத்து (375) அமயத்துக் கழிமின் என இயையும்.

கருத்துரை:—வேல்போற் கூரிய கற்களையுடைய பாறைவழி வெப்பத்தால் இன்னாமைசெய்யுமாதலின், வெம்மை குறைந்த அந்திப்பொழுதிலே போவீராகுக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—குளிர்ச்சி வாராமல் வெயில் புறந்தரூஉம் என்றது வெப்பத்தின் கொடுமை தெரித்தற்கு, இயக்கம்-வழிக்கு ஆகுபெயர். கதிர்சினம்-ஞாயிற்றின் வெம்மை.

அடிகள் 376—383:—அரண்களின் சிறுகாட்டுச் சிறுவழிகளைக் கடக்கும் உபாயங் கூறும். [குறிப்பு:—இஃது பெரிதும் சுவைக்கத் தக்கது].

உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு
புரைதவ வுயரிய மழைமருள் பஃறோல்
அரசுநிலை தளர்க்கும் அருப்பமு முடைய
பின்னி யன்ன பிணங்கரில் நுழைதொறும்
முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோல்
இன்னிசை நல்யாழ்ப் பத்தரும் விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணு மோம்பிக்
கைபிணி விடாஅது பைபயக் கழிமின்

(இ - ள்.) (376) உரை செல வெறுத்த அவன் நீங்கா சுற்றமொடு - புகழ் பரக்கும்படி செறிந்த நன்னனுடைய நீங்காத படைத்தலைவரோடே, (377) புரை தவ உயரிய மழை மருள் பல் தோல்-உயர்ச்சி மிகவுயர்ந்த மேகமென்று மருளும் பல யானைத்திரளையுங் கொண்டு, (378) அரசு நிலை தளர்க்கும் - பொரவந்த அரசர் நிலையுடைமையைக் கெடுக்கும், அருப்பமும் உடைய - அரண்களையும் அவ்வழியுடைய; (379) பின்னி அன்ன பிணங்கு அரில் நுழைதொறும் - [அவ்வரண்களிற்] பின்னிவைத்தாலொத்த கொடி பிணங்கின சிறுகாட்டையுடைய சிறிய வழிகடோறும், (380) முன்னோன் வாங்கிய கடு விசை கணை கோல் - முன்போகின்றவன் முகத்திலடியாமல் வாங்கிவிட்ட கடியவிசையையுடைய திரண்ட மூங்கிற்கோலானது, (381) இன் இசை நல் யாழ் பத்தரும் விசி பிணி (382) மண் ஆர் முழவின் கண்ணும் ஓம்பி-இனிய இசையைத் தன்னிடத்தே கொண்ட நல்ல யாழின் பத்தரையும் வலித்துக் கட்டின மார்ச்சனை செறிந்த முழவின் கண்ணையும் கெடாதபடி [கெடுக்காதபடி] காத்து, (383) கை பிணி விடாது பைபயக்கழிமின்-அவனைக் கரம்பிடித்துக் கோடலை விடாதே [இருக்கச்செய்து] மெல்லமெல்லப் போவீர்; (எ-று.)

(376) சுற்றமொடு (377) தொலைக்கொண்டு (378) தளர்க்கும் அருப்பமுமுடைய; [அவற்றின்] (379) நுழைதொறும் (380) முன்னோன் வாங்கிய கோல் (381) பத்தரும் (382) கண்ணும் [கெடாது] ஓம்பிக் (383) கழிமின் என இயையும்.

கருத்துரை:—புகழ்செறிந்த நன்னனுடைய படைத்தலைவரோடே பல யானைத்திரளையுங்கொண்டு, பொரவந்த அரசர்களின் நிலையைக்கெடுக்கும் அரண்களும் அவ்வழியிலுள்ளன. அவ்வரண்களிலுள்ள சிறுகாட்டிடத்தில் பின்னிவைத்தாலொப்பக் கொடிகள் பிணங்கின சிறுவழிகளுண்டு; அச்சிறுவழிகளில் போகும்போது, முன்னே போகின்றவன் பின்வருவோர் முகத்திலடியாமலிருக்கக் கடிய விசையையுடைய மூங்கிற்கோலை வாங்கிவிட்டு, அப்படியே நீவிரெல்லீரும் போகும்வரை கையாற்பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்; அங்ஙனிருந்தால், நுமது யாழின் பத்தரையும் முழவின் கண்ணையும் அம் மூங்கிற்கோல் கீறிக்கெடுக்காதபடி காக்கமுடியும்; ஆதலின், முன்போகின்றவனைக் கரம்பிடித்துக்கோடலை விடாதேயிருக்கச் செய்து மெல்லமெல்லப் போவீராகுக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து. [வேறுவகையாகக் கருத்துக் காண்பாருமுளர்; பொருந்துமேற்கொள்க].

விசேடவுரை:—வெறுத்த-செறிந்த; இதன் விளக்கம் 93-ஆம் வரி உரையிடத்துக் காண்க. சுற்றம் - ஈண்டு, படைத்தலைவரைக் குறிக்கும். 'புரையுயர்பாகும்'. தோல் - யானை. அரில் - சிறுகாடு. முன்னோன் - முன்போகின்றவன். பையப்பைய என்பது பைபய என மருவியது.

அடிகள் 384—448:—கானமும் கானத்து ஆற்றினது நன்மையும் அசையுநற்புலமும் வல்சியும் கூறும்.

அவற்றுள் அடிகள்:—384—403:—காடுகளும், கவலை வழிகளும் அச்சுறுத்தும் சுரங்களும் மிகப்பலவாயிருப்பினும், அப்பகைப்புலமும், நன்னனையுள்ளிச் செல்லும் பரிசிலர்க்கு அவன் மூதூராற்கலின், அஞ்சாது கழிமின் எனக் கூறும்.

களிறுமலைந் தன்ன கண்கூடு துறுகல்
தளிபொழி கானந் தலைதவப் பலவே
ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே
இன்புறு முரற்கைநும் பாட்டுவிருப் பாகத்
தொன்றொழுகு மரபினும் மருப்பிகுத்துத் துணைமின்
பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புன்முடிந் திடுமின்

செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவு ளோங்கிய காடேசு கவலை
ஒட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே
தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
ஓம்பா வள்ளற் படர்ந்திகு மெனினே
மேம்பட வெறுத்தவவன் றொஃறிணை மூதூர்
ஆங்கன மற்றே நம்ம னோர்க்கே
அசைவுழி யசைஇ யஞ்சாது கழிமின்

(இ - ள்.) (384) களிறு மலைந்தன்ன கண் கூடு துறுகல் - யானைகள் தம்மிற் சேர்ந்து பொருதாலொத்த ஒன்றினிடத்தே ஒன்று கூடி நெருங்கின கல்லிடத்தே, (385) தளி பொழி கானம் தலை தவ பலவே-மழைபெய்கின்ற காடுகள் அவ்விடத்து மிகப்பல; (386) ஒன்னா தெவ்வர் உலைவு இடத்து-ஏவல் பொருந்தாத பகைவர் முதுகிட்ட வளவிலே, ஆர்த்தென-தமது வெற்றிதோன்ற ஆரவாரித்தாராக, [அது பொறாமல்], (387) நல் வழி கொடுத்த - இவ்விடம் உயிர் கொடுத்தற்கு நல்லகாலமென்று மீண்டு உயிரைக் கொடுத்த, நாண் உடை மறவர்-நாணத்தையுடைய மறவருடைய, (388) செல்லா நல் இசை பெயரொடு நட்ட (389) கல்-கெடாத நல்ல புகழினையுடைய பெயர்களை யெழுதி நட்ட கற்கள், ஏசு கவலை-முதுகிட்டுப் போனவரை இகழும் பலவழிகள், எண்ணு மிக பலவே - எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும்; (390) இன்பு உறு முரற்கை நும் பாட்டு-இன்பமிகுகின்ற தாளத்தினையுடைய நும்முடைய பாட்டு, விருப்பாக-அந்நடுகல்லில் தெய்வத்திற்கு விருப்பமாக [அமையும்படி], (391) தொன்று ஒழுகும் மரபின் நும் மருப்பு இகுத்து-பழமை நடக்கின்ற முறைமையினையுடைய நும்முடைய யாழை வாசித்து, துனைமின்-விரையப்போவீர்; (392) பண்டு நற்கு அறியா புலம் பெயர் புதுவிர்-முற்காலம் நன்மையறியாத தீய நிலத்தை வழியறியாமற் போய் மீண்டுவந்த (நும்முட்) புதியவர்கள், (393) சந்து நீவி புல் முடிந்து இடுமின்-[பின்வருகின்றவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி] சந்தியைக் கையாலே துடைத்து அடையாளமாக ஊகம்புல்லை முடிந்திட்டு வைப்பீர்; (394) செல்லும் தேஎத்து - நீங்கள் போம் தேசத்திலே, (395) கல் எறிந்து-கல்லை இடந்து கொண்டு, (394) மருங்கு-அதனிடத்தே, பெயர் அறிமார்-இவ்வாறே பொருதுபட்ட இன்னனென்று அவன் பெயரை உலகமறிவதற்கு, (395) எழுதிய-, நல் அரை மராஅத்த (396) கடவுள் - நல்ல அரையினையுடைய மராத்திடத்தனவாகிய கடவுளின், ஓங்கிய - தெய்வத்தன்மை மிக்க காடு ஏசு கவலை-தன்கொடுமையாற் பிறகாடுகளை யிகழும் பல களில், (397) ஒட்டாது அகன்ற ஒன்னா தெவ்வர்-நன் பொருந்தாதே நீங்கின அவன் ஏவற்குப் பொருந்தாத ரிருக்கும் (398) சுரம் தவ பலவே-அருநிலங்கள் மிகப்பலவாய் சுட்டினும் பனிக்கும் - தத்தமூர்களிலேயிருந்து நினைப்பி

நடுங்குவிக்கும்; (இங்ஙனம், பகைப்புலமாயினும் நீவிர்), (399) தேம் பாய் கண்ணி தேர் வீசு கவி கை (400) ஓம்பா வள்ளல் படர்ந்திகும் எனினே-தேன் சொரிகின்ற கண்ணியினையும் தேரைச் சிதறும் கொடுத்துக் கவிந்த கையினையுமுடைய தனக்கென்று ஒருபொரு ளும் பேணாத நன்னனை நினைத்துச் செல்கின்றோமென்று கூறுவீரா யின், (402) நம்மனோர்க்கு-நம்மையொக்கும் பரிசிலர்க்கு, ஆங்கனம் - அப்பகைப்புலம், (401) மேம்பட வெறுத்த அவன் தொல் திணை மூதூர் (402) அற்று-எல்லாவூர்களினும் மேலாம்படி செல்வமுண் டான நன்னனுடைய பழைதாகிய உயர்ந்த ஒழுக்கத்தினையுடைய பழையவூர்களையொக்கும்; (403) அசைவுழி அசைஇ - இளைத்த விடத்தே யிளைப்பாறி, அஞ்சாது கழிமின் - அஞ்சாமற்போவீர்;

(385) கானம் தவப்பல; (389) ஆண்டுக் கல் (388) நட்ட (389) கவலை மிகப்பல; (391) அக்கல்லிற்கு மருப்பிகுத்துத் துனைமின்; (392) அப்பொழுது புதுவிர் (393) புல்முடிந்திடுமின்; (394) [இட்டுப் போனுற்] செல்லும் தேஎத்துக் (396) கவலைகளில் (398) சுரந் தவப் பல; அவை சுட்டினும் பனிக்கும்; எனினும், (400) ஓம்பா வள்ளற் படர்ந்திகுமெனின் (402) நம்மனோர்க்கு ஆங்கனம் (401) அவன் மூதூர் (402) அற்று: (403) அசைவுழி யசைஇ அஞ்சாது கழிமின் என இயையும். மற்றும், 'பெயர் அறிமார் எழுதிய கடவுள், மராஅத்த கடவுள்' எனத் தனித்தனி இயைக்க.

கருத்துரை:—[அரண்களின் சிறுவழிகளைக் கழிந்தபின்] அவ் விடத்துத் துறுகற்களைக்கொண்டுள்ள காடுகள் மிகப்பல; அவை களில் மழை பெய்யும்;அக்காடுகளில், வீரமொடு உயிரைக்கொடுத்த நாணுடைமறவர்க்கு அவர்களின் பெயர்களெழுதிய கற்கள் நடப் பட்டிருக்கும்; அவை முதுகிட்டுப் போனவரை இகழ்வனபோலத் தோன்றும்; அத்தகைய வழிகள் மிகப்பலவாயிருக்கும்; அந்நடுகல் லின் தெய்வத்திற்கு விருப்பமாக அமையும்படி நும்முடைய பாட் டினை யாழினிலிசைத்து விரையப் போவீர்;அங்ஙனம் விரையப்போம் பொழுது, நும்முள் வழியறியாமல் தியங்கிலத்திற்போய் மீண்டு வந்த புதியவர்கள் பின்வருகின்றவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி சந்தியிடங்களைக் கையாலே துடைத்து அடையாளமாக ஊகம்புல்லை முடிந்திட்டு வைப்பீர்; நீங்கள் போம் தேசத்திலே, மராமரத்தின் நிழலிலே நட்ட கல்லிடத்து இன்னான் பொருது பட்டானென உலகறிதற்கு அவன் பெயரை எழுதிவைத்திருப்பர்; தெய்வத் தன்மை யேறிட்ட அக்கற்களைக்கொண்டுள்ள கொடுமைமிக்க வழிகள் பலவற்றில் நன்னனின் பகைவரிருக்கும் அருஞ்சுரங்கள் மிகப்பலவாம்; அச்சுரங்கள் நினைக்கினும் தலை நடுங்குவிக்கும். இங்ஙனம் பகைப்புலம் இருப்பினும், நீவிர் வள்ளல் நன்னனை யுள்ளிச் செல்கின்றோமென்று கூறுவீராயின், அப்பகைப்புலமே நம்மையொத்த பரிசிலர்க்கு, எல்லாவூர்களினும் மேலாம்படி செல்வச் சிறப்புடையதாயும் உயர்ந்த ஒழுக்கத்தினையுமுடையதாயு முள்ள நன்னனது பழைய ஊரினைப்போன்று சிறந்துகாட்டும்;

ஆகவே, இளைத்த விடத்தே இளைப்பாறி அஞ்சாமற் போவீராகுக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—துறுகல்லிற்கு யானை யுவமை கூறப்படுதலை 'மாசறக் கழீஇய யானை போலப், பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்' (குறுந். 13), "மாயிருந் துறுகல், துகள்சூழ் யானையிற் பொலியத் தோன்றும்" (குறுந்: 279) என்ற விடங்களிலுங் காண்க. பகைவர் முதுகிட்ட வளவிலே வென்றவர் தமது வெற்றிதோன்ற ஆரவாரித்தாராக, அது பொறாமல் மீண்டு வந்து பொருது தம் முயிரைக்கொடுத்த மறவராதலின் "நாணுடை மறவர்" என்றது. இறந்த வீரர்க்கு நடுகல் நாட்டும்போது அக்கல்லில் அவர் பெயரினையும் புகழினையும் எழுதுதல் மரபு. இதனை, "நல்லமர்க் கடந்த நாணுடை மறவர், பெயரும் பீடும் எழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகநா: 67) என்பதனாலுணர்க. இந்த நடுகற்கள் முதுகிட்டுப்போன வரை ஏசுதல்போல் தோற்றுகின்றன. முரற்கை - தாளம். மருப்பு - யாழின்கோடு; இங்கு யாழுக்கு ஆயினமையின், ஆகுபெயர். நற்கு - நன்கு என்பதன் விகாரம். நன்கு-நன்மை. நன்மையறியாப்புலம் எனவே தீயநிலமாயிற்று. சந்து-சந்தி; பலவழிகள் கூடுமிடம்: இது முச்சந்தி நாற்சந்தி ஐஞ்சந்தி எனவாகும். 'சதுக்கமும் சந்தியும்' (திருமுருகு: 225) என்றவிடத்துரை காண்க. ஊகம்புல்லை முடிந்து அடையாளமாக வைத்தல் 'இவ்வழி செவ்விதன்று' என்று தெரித்தற்காக. 'ஒட்டாது அகன்ற ஒன்னாத் தெவ்வர் சுரம்தவப் பலவே' என்றதால், நன்னன் தன்னைப் பணியாத தெவ்வரைச் சுரத்தோட்டியவனென்பது பெறப்பட்டது. இதனால் அவனது 'இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றல்' (வரி-73) கூறினார். பணியாத தெவ்வர் சுரத்தோடுதலை "மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக வோடிக், கானம்புக", (கலிங்: 2: 40) "சந்திரன்சுவர்க்கி...விரவார்போல்,—கூரிருளில், செங்கானகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான், வெங்கானகந்தனிலே வேந்து" (நளவெண்பா: 278) முதலியவற்றானு மறியலாம். 'நினைப்பினும் பனிக்குஞ் சுரம்' என்றவிடத்து 'நினையு நெஞ்சமுஞ் சுடுவதோர் நெடுஞ்சுரம்' (கம்ப: வனம்புகு: 38) என்ற கம்பன் வாக்கும் ஒப்பு நோக்குக. படர்தல்-நினைதலாதலை, "நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொடு" (வரி-64) என்றவிடத்துங் காண்க. ஆங்கனம்-அங்ஙனம்: ஙனம் - இடம். செய்யுளாகலான் சுட்டுநீண்டது. 'நீட வருதல் செய்யுளு ளுரித்தே' என்றது விதி. வெறுத்தல் - செறிதல், மிகுதல்; ஈண்டு செல்வத்தால் மிகுதல் என்றபடி.

அடிகள்: 404—420:—புறவிடத்துப் பெறுவனபெற்றுத் தங்கிக் கழிமின் எனக் கூறும்.

புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்
கலைநின்று விளிக்குங் கானமூ ழிறந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்

வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலிற்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும்
பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவிர்
துய்ம்மயி ரடக்கிய சேக்கை யன்ன
மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்

(இ-ள்.) (404) புலி உற வீழ் தன் பிணை உள்ளி வெறுத்த (405) கலை நின்று விளிக்கும் கானம் - புலி பாய்கையினாலே பட்ட தன் பிணையை நினைத்து வெறுத்த கலைமான் நின்று கூப்பிடும் அக்காட்டை, ஊழ் இறந்து - முறைமைப்படப்போய், (406) சிலை ஒலி வெரீஇய செங்கண் மரைவிடை - வில்லின் ஓசைக்கு வெருவின சிவந்தகண்ணையுடைய மரையேறு, (407) தலை இறும்பு கதழும்-முற்பட்ட குறுங்காட்டிலே விரைந்தோடும், நாறு கொடி புறவின்-நாறுகின்ற கொடிகளையுடைய காட்டிடத்து, (408) வேறு புலம் படர்ந்த ஏறு உடை இனத்த-வேற்றுப்புலங்களிலே சென்று மேய்ந்த ஏற்றையுடைய நிரையிடத்தனவாகிய, (409) வளை ஆன் தீ பால் - சங்கு போல் வெள்ளிய பசுக்களின் இனிய பாலை, மிளை சூழ் கோவலர் - நிரையைக் காவல் சூழ்கின்ற இடையர், (410) வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின் - வளையினையுடைய மகளிர் மனமகிழும்படி கொண்டுவந்து சொரிகையினாலே, (411) பலம் பெறு நசையொடு நும் பதிவயின் தீர்ந்த (412) புலம்பு சேண் அகல-பயனைப்பெறவேண்டுமென்னும் ஆசையுடனே நும்முடைய ஊரினின்றும் போந்த வருத்தம் விட்டு நீங்குகையினாலே, புதுவிர் ஆகுவிர் - விருந்தாந்தன்மையையுடையிராகுவிர்; [அங்ஙனம் விருந்தாய்] (413) பகர் - பண்டம் விற்ற(தால் அதற்கு மாற்றாகப் பெற்ற), பல விரவு நெல்லின் - பலவகையும் கூடிய நெல்லின், அரி அன்ன - அரிசியையொத்தனவாக, (414) தகர் விரவு துருவை வெள்ளையொடு விரைஇ-கிடாய் விரவுகின்ற செம்மறித்திரள் வெள்ளாட்டுடனே கலந்து, (415) கல்லென் கடத்திடை கடலின் இரைக்கும்-கல்லென்கின்ற ஓசையையுடைய காட்டிடத்தே கடல்போலே யொலிக்கும், (416) பல் யாட்டு இனம் நிரை-பல யாட்டினினங்களையுடைய திரள்களிலே, எல்லினிர் புகினே - இராக்காலத்தேயுடையிராய்ச் செல்லின், (417) பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்-பாலும் பாற்சோறும் நுமக்கென்று சமையாமல் தமக்குச் சமைத்திருந்தவற்றைப் பெறுகுவிர்; (418) துய் மயிர் அடக்கிய சேக்கை அன்ன-மெல்லிய தலைமயிரினையுடைய சேணமிட்ட படுக்கையை

யொத்த, (419) மெய் உரித்து இயற்றிய மிதி அதள் பள்ளி-ஆடு களின் மெய்யையுரித்து ஒன்றாகத்தைத்த வார்மிதித்த தோற்படுக் கையிலே, (420) தீ துணையாக சேந்தனிர் கழிமின் - (கொடிய விலங்குகள் வாராதபடி) இடையர் ஒளிவிடமூட்டிய நெருப்புத் துணையாகத் தங்கிப் போவீர்; (எ - று.)

(405) [அக்] கானத்தை யூழிறந்து (407) புறவினிடத்து (409) ஆன்றீம்பாலைக் கோவலர் (410) சொரிகையினாலே (412) புலம்பு சேணகலப் புதுவிராகுவிர்; [அங்ஙனம் விருந்தாய்] (416) பல்யாட் டினநிரைபுகின் (417) பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்; [அவற்றைப்பெற்று] (419) அதட்பள்ளியிலே (420) சேந்தனிர் கழிமின் என இயையும். மற்றும் (413) நெல்லின் பலவரியன்ன (414) விரைஇ என முடியும்.

கருத்துரை:—புலி பாய்கையினாலே இறந்துபட்ட தன் பிணையை நினைத்து வெறுத்த கலைமான் நின்று கூப்பிடும் காட்டை முறைமை படக்கடந்துபோய், வில்வினையைக்கு வெருவின சிவந்த கண்ணை யுடைய மரையேறு குறுங்காட்டிலே விரைந்தோடும் புறவினிடத்து, வேற்றுப்புலங்களிலே செ◦ று மேய்ந்து வந்த வெள்ளிய பசுக்களின் இனிய பாலை இடையர் தம் மகளிர் மனமகிழும்படி கொண்டு வந்து சொரிகையினாலே, நீவிர் அவர்க்கு விருந்ினராய் அதனைப் பருகி நும்மூரினின்றும் போந்த வருத்தம் விட்டுநீங்கப்பெறுவிர்; அங்ஙனம் விருந்தாயபின், பண்டமாற்றாகப் பெற்ற பலவகை நெல் லினரிசியினை யொப்பச் செம்மறித்திரளும் வெள்ளாடும் விரவிக் கலந்து கடல்போலே யொலிக்கும் காட்டிடத்தே, பல யாட்டினங் களின் திரள்களிலே இராக்காலத்துச் செல்லின், ஆங்குள்ள இடை யரிடம் தமக்கென்று சமைத்துவைத்திருந்த பாலும் பாற்சோறும் பெறுகுவிர்; பெற்றபின், கொடிய விலங்குகள் வாராதபடி அவ்வி டையர் கொளுவிய நெருப்புத் துணையாகத்தங்கி, ஆடுகளின் மெய்யையுரித்து ஒன்றாகத்தைத்த வார் இறுக்கி மிதித்த தோற் படுக்கையிலே படுத்துறங்கிப் போவீராகுக என்று ஆற்றுப்படுப் போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—இறும்பு-குறுங்காடு. கதழும்-விரைந்தோடும்: "கதழ்வும் துனைவும் விரைவின் பொருள". "ஏறுடை யினத்த ஆன்"என்றவிடத்து 'கறங்குமணி துவைக்கும் ஏறுடைப் பெரு நிரை' எனமேல் வருவதும் (வரி-573) ஒப்புநோக்குக. மினை-காவல். பலம்-பலன். புலம்பு - வழிவந்த வருத்தம். விருந்து-புதுமை; எனவே புதுவிர் ஆகுவிர்-விருந்தினராகுவிர் எனப் பொருள் பட்டது. விற்ற பண்டத்துக்கு மாற்றாகப்பெறுகின்ற நெல்லி னரிசிகள் செம்மையும் வெண்மையுங்கொண்டனவாய்விரவியிருத்தல் போலச் செம்மறித்திரளும் வெள்ளாட்டுத்திரளும் கடத்திடை விரவி யிருந்தன என்றபடி. செம்மறியும் வெள்ளாடும் விரவியிருத்தலை "கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்' என்ற பெரும் பாணாலும் அறிக (வரி, 153), தகர்-ஆட்டுக்கிடாய்; துருவை-

செம்மறி. வெள்ளை-வெள்ளாடு. எல்லினிர்-இராக்காலத்தையுடையி ராய்; 'உடையிராய்' என்றது-மனத்தே அக்காலத்தைக் கருது தலின், உடைமையாயிற்று என்றார். மிதவை-ஈண்டு, பாற்சோறு. ஆட்டுத்தோற்படுக்கையில் துயிலுவதை 'அதளோன் துஞ்சும் காப்பின் உதள' என்ற பெரும்பாணாலும் அறியலாம் (வரி-151). யாட்டுமந்தையில் இராக்காலத்துக் கொடிய விலங்குகள் வாராதபடி இடையர் தீக் கொளுவிவைத்தலை "பாளுட்கங்குல், ஆடுதலைத் துருவின் றோடே மார்ப்பக், கடைகோற் சிறுதீ யடைய மாட்டித், திண்கா லுறியன் பானைய னதளன், நுண்பஃ றுவலை யொருதிற நனைப்பத், தண்டுகா லூன்றிய தனிநிலை யிடையன்" என்றதாலு மறிக (அகநா: 274).

அடிகள்: 421—433:—கொடுவில் கூளியர் உண்பித்து வழி சொல அவ்வழியே கழிமின் எனக் கூறும்.

கூப்பிடு கடக்குங் கூர்நல் லம்பிற்
கொடுவிற் கூளியர் கூவை காணிற்
படியோர்த் தேய்த்த பணிவி லாண்மைக்
கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே
தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
ஓம்புந ரல்ல துடற்றுந ரில்லை
ஆங்குவியங் கொண்மின் அதுவதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅமெல் லிணரும்
உம்ப லகைத்த வொண்முறி யாவும்
தளிரொடு மிடைந்த காமரு கண்ணி
திரங்குமர னாரிற் பொலியச் சூடி
முரம்புகண் ணுடைந்த நடவை தண்ணென
உண்டனி ராடிக் கொண்டனிர் கழிமின்

(இ - ள்.) (421) கூப்பிடு கடக்கும் கூர் நல் அம்பின்-கூப்பிடு செல்லக்கூடிய எல்லையையும் கடந்து நிற்கும் [எனவே, கூப்பிடு செல்லக்கூடாது அப்பாற்பட்ட அவ்வெல்லையையும் கடந்து நிற்கும்] கூரிய நல்ல அம்பினையும், (422) கொடு வில்-கொடிய வில்லினையு முடைய, கூளியர்-நாடுகாக்கும் வேடருடைய, கூவை காணின்-திரளைக் கண்டீராயின் அவர்களுக்கு, (423) படியோர்த் தேய்த்த-தன்னை வணங்காதாரை யழித்த, பணிவு இல் ஆண்மை-தாழ்ச்சியில்லாத பகைவரை ஆளுந் தன்மையினையுடைய, (424) கொடியோள் கணவன் படர்ந்திகும் எனினே-[கற்பின் மிகுதி தெரிக்க வெடுத்த] கொடியினை யுடையோளின் கணவனாகிய நன்னனை நினைத்துப் போகின்றோ மென்று கூறின், (425) தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ (426) ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை - தசைகளையும் கிழங்குகளையும் நும்மைநலிந்து தின்னப்பண்ணிப் பாதுகாப்பாரல்லது வருத்துவார்க ளில்லை; அவற்றை நுகர்ந்து, (427) ஆங்கு வியம் கொண்மின் - அவ் விடத்து அவர் போகச்சொன்ன வழியை நுமக்கு வழியாகக் கொண்டு போவிர்; அது அதன் பண்பே-அக்காட்டின் தன்மை அத்

தன்மைத்தாயிருக்கும்; [அப்பண்பைக் கண்டு] (428) தேன் பட மலர்ந்த மராஅ மெல் இணரும் - தேனுண்டாக மலர்ந்த மராவினது மெல்லிய பூங்கொத்தும், (429) உம்பல் அகைத்த ஒள் முறி யாவும் - யானைமுறித்த ஒள்ளிய தளிர்களையுடைய யாம் பூவும், (431) இரங்கு மரல் நாரில் (430) தளிரொடு மிடைந்த காமரு கண்ணி (431) பொலிய சூடி-உலர்ந்த மரல் நாரிலே தளிர்களோடே நெருங்கக் கட்டின விருப்பம் மருவின கண்ணியை அழகுபெறச் சூடி, (432) முரம்பு கண் உடைந்த நடவை - பருக்கையையுடைய மேட்டுநிலத்திடம் விண்ட சிறுவழி, தண்ணென-மழைபெய்து குளிருகையினாலே, (433) உண்டனிர் ஆடி கொண்டனிர் கழிமின் - அந்நீரைக் குடித்துக் குளித்து வழிக்குமுகந்துகொண்டு போமின்; (எ - று.)

(422) கூளியர் கூவை காணிற் (424) கணவற் படர்ந்திருமெனின் (425) தடியுங் கிழங்குந் தரீஇ (426) ஓம்புநரல்லது உடற்றுநரில்லை; அவற்றை நுகர்ந்து (427) வியங்கொண்மின்; அது அதன்பண்பு; அப்பண்பைக் கண்டு (430) கண்ணியைச் (431) சூடி (432) நடவை தண்ணென (433) உண்டனிராடிக் கொண்டனிர் கழிமின் என இயையும். மற்றும் (428) இணரும் (429) யாவும் (431) நாரில் (430) தளிரொடு மிடைந்த கண்ணி என இயையும்.

கருத்துரை:—கூப்பீடு தூரத்தையும் கடந்து அப்பாற் கூப்பீடு செல்லக்கூடாத எல்லையையும் கடவாநிற்கும் கூரிய அம்பினையும் கொடிய வில்லினையுமுடைய நாடுகாக்கும் வேடரின் திரளைக் கண்டீராயின், நன்னனையுள்ளிப் போகின்றேமென்று கூறின், தசையையும் கிழங்குகளையும் நிரம்பக்கொடுத்து நும்மை நலிந்து உண்ணச் செய்து பாதுகாப்பாரல்லது வருத்துவார்களில்லை; அவற்றை நுகர்ந்து, அவ்வேடர் சொன்னவழியே நுமக்கு வழியாக்கொண்டு போவீர்; ஏனெனில், அக்காட்டின் பண்பு அத்தன்மைத்தாயிருக்கும்; அப்பண்பினைக் கண்டுகொண்டே மராவினது மெல்லிய பூங்கொத்தும் யாம்பூவும் மரல்நாரினாலே தளிர்களோடு நெருங்கக் கட்டின கண்ணியைப் பொலியச்சூடி, மேட்டுநிலச் சிறுவழியை மழைபெய்து குளிருகையினாலே மேற்கொண்டு, அந்நீரைக் குடித்துக் குளித்து வழிக்கு முகந்துகொண்டு போவீராகுக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—கூப்பிடு - கூப்பீடு; கூப்பிடுதூரம்; எனவே, ஓரெல்லை குறிப்பது; அதாவது ஒருவன் கூப்பிட்டாற் பிறன் கேட்குந் தூரம்; ஒரு குரோச வளவு என்றது திவாகரம். 'கடக்கும்' என்ற சொல்லாற்றலால், 'கூப்பிடாத அவ்வெல்லையையும் கடவாநிற்கும்' என்பது பெறப்படுதலின், நச்சினார்க்கினியர் அங்ஙனமே உரைவகுத்தார். அவர் 'கூவாநிற்கும்' என்றதும் 'கடவாநிற்கும்' என்ற பொருளதே. கூளியர்-வேடர்; இவர் நாடுகாக்குந் தொழிலினராவர்; கூவை-திரள். கொடியோள்-கொடியினையுடையோள்; கற்பினுக்குக் கொடியெடுத்து நின்றவள் என்ற பாவம். இதனால் நன்னன் தேவி கற்புமிகுதி கூறினர். திருமுருகாற்றுப்படையில், "மறுவில்

கற்பின் வாணுதல் கணவன்'' (6) என்பது முருகவேள்ற்றுந் துணையாய் நின்றதுபோல, ஈண்டு, "கொடியோள் கணவன்" என்றது, நன்னனென்னும் பொருட்டாய் நின்றது. தண்டுதல்-நலிந்து தின்னச்செய்தல்; பலகாலலைத்துத் தின்னச்செய்தல்: இஃது இப்பொருட்டாதலை "பராரை வேவை பருகெனத்தண்டி" (104) என்ற பொருநராற்றுப்படையிலும் காணலாம். இங்கே "உண்ணீருண்ணீரென் றுபசரியார் தம்மனையில், உண்ணாமை கோடி பெறும்" என்பது ஒருசார் நினைக்கத்தக்கது. வியம்-ஏவல்; வழி. உம்பல்-யானை. யா-இது பாலைநிலத்திலுள்ளதொரு மரம். யாம் எனவும் வழங்கும். இம் மரத்தின் பட்டை நீர்ப்பசை மிக்கதென்ப. யானை யா மரத்தை முறித்தலை "பெருங்கை வேழம், மென்சினை யாஅம் பொளிக்கும்," (குறுந்: 37) "யானைதன், கொல் மருப்பொடியக் குத்தி..........முளிசினை யாஅத்துப் பொளிபிளந் தூட்ட" (அகநா: 335) என்றவற்றுலுமுணரலாம். முரம்பு-பருக்கைக் கற்களைக்கொண்ட மேட்டுநிலம். நடவை-வழி; 'கான்யாற்று நடவை' (214) என்றார் முன்னரும்.

அடிகள் 434—448 :—புல்வேய்குரம்பையிற் பெறுவன பெற்றுத் தங்கிக் கழிமின் எனக் கூறும்.

செவ்வீ வேங்கைப் பூவி னன்ன
வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த
சுவல்விளை நெல்லின் அவரையம் புளிங்கூழ்
அற்கிடை யுழந்தநும் வருத்தம் வீட
அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்
பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி
வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை
தண்ணெ ணுண்ணிழு துள்ளீ டாக
அசையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவிர்
விசையங் கொழித்த பூழி யன்ன
உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை
நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசே ணீங்க வினிதுடன் றுஞ்சிப்
புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்

(இ - ள்.) (434) செவீ வேங்கை பூவின் அன்ன-சிவந்த பூக்களையுடைய வேங்கைப்பூவினையொத்த நிறத்தையுடைய, (436) அவரை-அவரை விதை, (435) வேய் கொள் அரிசி - மூங்கில் தன்னிடத்தே கொண்ட அரிசி, (436) சுவல் விளை நெல்லின் (435) அரிசி - மேட்டு நிலத்தே விளைந்த நெல்லின் அரிசி,)435) சொரிந்த மிதவை (436)புளியங் கூழ்-இவற்றைப் புளிக்கரைத்த உலையிலே சொரிந்து ஆக்கின குழைந்த புளியங்கூழை, (437) அற்கு இடை உழந்த நும் வருத்தம் வீட - இராக்காலத்து, -காட்டிடத்துப் பகற்பொழுதுழந்த நும் வருத்தம் போம்படி, (438) ஆங்கண் அகலுள் கழி மிடைந்து

இயற்றிய-அவ்விடத்து அகன்ற ஊரிடத்துக் கழிகளால் தெற்றிப் பண்ணின, (439) புல் வேய் குரம்பை குடிதொறும் பெறுகுவிர்-புல்லான்வேய்ந்த குடில்களிலிருக்கும் குடிகளிடந்தோறும் பெறுகுவிர்; (443) அசையினிர் சேப்பின்-இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள் தங்குவீராயின், (444) விசையம் கொழித்த பூழி அன்ன-கருப்புக்கட்டியைக் கொழித்த பொடியையொத்த, (445) உண்ணுநர்த் தடுத்த இடி நுண் நுவணை-தன்னை நுகர்வாரை வேறொன்றை நுகராமல் தடுத்த இடித்தலால் நுண்ணிதாகிய தினைப்பிண்டியோடு, (440) பொன் அறைந்தன்ன நுண்-பொன்னை நறுக்கினலொப்ப நுண்ணிதாகிய, நேர்-தமக்குள் ஒன்றற்கொன்று ஒத்திருக்கிற, அரிசி-அரிசியை, (441) வெண்ணெறிந்து இயற்றிய-வெள்ளையெறிந்தாக்கின, மா கண் அமலை-கரிய இடத்தையுடைய சோற்றுத்திரளையை, (442) தண்ணெண் நுண் இழுது உள்ளீடாக-தண்ணென்ற நுண்ணிய நெய்விழுதை உள்ளே இட்டுண்ணும்படி, (443) அல்கலும் பெறுகுவிர்-நாடோறும் பெறுகுவிர். (446) நொய் மரம் விறகின் ஞெகிழி மாட்டி-நொய்ய மரமாகிய விறகாலாக்கின கடைக்கொள்ளியை எரித்து, (447) பனி சேண் நீங்க இனிது உடன் துஞ்சி-பனி விட்டுநீங்கும்படி இனிதாகச் சேரத்துஞ்சி, (448) புலரி விடியல் புள் ஓர்த்து கழிமின்-இராக்காலம் நீங்குதலையுடைய விடியற்காலத்தே நிமித்தம் பார்த்துப்போவீர்; (எ - று.)

(436) புளிங்கூழை (437) அற்குக் (439) குடிதொறும் பெறுகுவிர்; பெற்று (443) அசையினிர் சேப்பின் (445) நுவணையோடே (441) அமலையை (442) இழுதுள்ளீடாக (443) அல்கலும் பெறுகுவிர்; அவற்றைப்பெற்று (446) ஞெகிழி மாட்டித் (447) துஞ்சிப் (448) புள்ளோர்த்துக் கழிமின் என இயையும். மற்றும், (436) அவரை (435) வேய்கொளரிசி (436) நெல்லினரிசி இவற்றாலாக்கின (436) புளிங்கூழ் எனவும் இயையும்.

கருத்துரை :—புல்லான்வேய்ந்த குடில்களிலிருக்கும் குடிகளிடந்தோறும் அவரைவிதை, மூங்கிலரிசி, நெல்லினரிசி இவற்றைப் புளிக்கரைத்த உலையிலே சொரிந்து ஆக்கின குழைந்த புளியங்கூழைக் காட்டிடத்துப் பகற்பொழுதுழந்த நும் வருத்தம் நீங்க இராக்காலத்துப்பெறுகுவிர்; பெற்று இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள் தங்குவீராயின், தினைமாவோடு அரிசியிற்புல்லிதாயவற்றை நீக்கியாக்கின கரிய இடத்தையுடைய சோற்றுத்திரளையை நெய்விழுதை யுள்ளேயிட்டு உண்ணும்படி கொடுப்ப நாடோறும் பெறுகுவிர். சுள்ளிகளை விறகாக்கொண்டு மூட்டிய எரியினால் குளிர் போம்படி இனிதாகத்துயின்று, விடியற்காலத்தெழுந்து நிமித்தம் பார்த்துப் போவீராகுக என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—வேங்கைப்பூவினையொத்த நிறத்தையுடையது அவரைவிதையென்பதை "புகரிணர் வேங்கை வீகண் டன்ன, அவரை வான்புழுக்கட்டி" (பெரும்பாண்: 194-95) என்ற விடத்

துங் காண்க: ஆதலினாலன்றோ 'அவரை'யைக் கொணர்ந்து முன்னர்க்கூட்டிப் பொருள்கண்டனர் நச்சினார்க்கினியர். நுவணை-தினைமா. வெல்லக்கட்டியின் கொழித்த பொடியை இடித்து நுண்ணிதாக்கிய தினைமாவுக்கு உவமைகூறியமை பாராட்டற்பாலது. 'அரிசியை வெண்ணெறிந்து' என்றவிடத்து, 'வெள்ளையெறிந்து' எனவேகொண்டு வெண்மை-இளமை மேனின்று செவ்வன்முற்றாது புல்லிதாயவற்றை யுணர்த்துவதெனலாம்; எனவே, அரிசியிற் பழுதானவற்றை யெறிந்து என்பதாயிற்று. இனி, 'வெள்ளை யெறிந்து' என்பதற்கு வெள்ளாட்டினை யெறிந்து அதன் தசை கலந்தாக்கின எனவுமாம். அஞ்ஞான்று அங்ஙன் கலந்த தசை இடையிடை விரவி நிற்றலின், கரிய இடத்தையுடையதாயிற்று சோற்றுத்தடி எனக் கொள்க: "புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த, மலரா மாலைப் பந்துக்கண் டன்ன, ஊன்சோற் றமலை" (புறம்: 33) என்றது ஈண்டு ஒருசார் ஒப்புநோக்குக. முன்னருரைக்கு, சோற்றுத்தடி கரிய இடத்தையுடையதாயிருத்தல், சூடு மிகுதியான் காந்திப்போதலானென்க. நெய்விழுது நுண்ணிதாதலை "நீரினும் நுண்ணிது நெய்யென்பர்' என்ற நாலடியாரிலுங் காணலாம். புள்-நிமித்தம்: இனி 'புள்ளோர்த்துக்கழிமின்' என்றதற்குப் புட்களின் குரல்கேட்டுப் போவீரென்றுமாம்.

அடிகள் 449-470 வரை :—நாடுபடுவல்சியும் அசையுநற்புலமும் கூறும். [அதாவது, நன்னனது மருத நிலநாடு நன்பல வுடைத்தெனக்கூறி, ஆங்குள்ள உழவர் உழத்தியர் நல்குவன பெற்றுத் தங்கிக் கழிமின் எனவும் கூறும்.]

புல்லரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்லவ லிருந்த ஊர்தொறு நல்லியாழ்ப்
பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும்
பன்னா ணிற்பினுஞ் சேந்தனிர் செலினும்
நன்பல வுடைத்தவன் றண்பணை நாடே
கண்புமலி பழனங் கமழத் துழைஇ
வலையோர் தந்த விருஞ்சுவல் வாளை
நிலையோ ரிட்ட நெடுநாண் டூண்டிற்
பிடிக்கை யன்ன செங்கண் வராஅல்
துடிக்க ணன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்
ஞெண்டாடு செறுவிற் றராய்க்கண் வைத்த
விலங்க லன்ன போர்முதற் றொலைஇ
வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல்
இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்

திண்டேர் நன்னற்கு மயினி சான்மெனக்
கண்டோர் மருளக் கடும்புட னருந்தி
எருதெறி களம ரோதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி யசையினிர் கழிமின்

(இ - ள்.) புல் அரை காஞ்சி - புற்கென்ற அரையினையுடைய காஞ்சிமரத்தினையும், புனல் பொரு புதவின் - நீர்வந்து பொருகின்ற அறுகம்புல்லினையும், (450) மெல் அவல் - மெல்லிய விளைநிலங்களை யும், (451) காவும் - பொழில்களையும், பள்ளியும் - இடைச்சேரிகளை யும் உடைய, (453) அவன் தண் பணை நாடே - நன்னனுடைய குளிர்ந்த மருதநிலத்தையுடைய நாடு, (452) பல் நாள் நிற்பினும் சேந் தனிர் செலினும் - பலநாள் நிற்பினும் ஒருநாள் தங்கிப்போகினும், (450) இருந்த - நீர் நுகர்தற்குக் குடிநீங்காதிருந்த, ஊர்தொறும் - ஊர்கள்தோறும், நல் யாழ் (451) பண்ணு பெயர்த்தன்ன (453) நன் பல உடைத்து - நல்ல யாழின் பண்ணைமாறி வாசித்த தன் மையவாக நன்றாகிய பல பொருள்களை யுடைத்து; [அந் நாட் டினை யடைந்தால்], (454) கண்பு மலி பழனம் கமழ துழைஇ - சண்பங்கோரை நெருங்கின மருதநிலத்தைப் பூக்கள்நாற வளைத்து ஆராய்ந்து, (455) வலையோர் தந்த இரு சுவல் வாளை - வலையை வீசு வார் கொண்டுவந்த பெரிய கழுத்தினையுடைய வாளைத்தடியை, (456) நிலையோர் இட்ட நெடுநாண் தூண்டில் - ஓரிடத்தில் நிலைபெற நிற் றலையுடையோரிட்ட நெடிய கயிற்றையுடைய தூண்டிலிற்பட்ட, (457) பிடி கை அன்ன செங்கண் வரால் - பிடியின் கையையொத்த சிவந்த கண்ணையுடைய வராலினது, (458) துடி கண் அன்ன குறை யொடு விரைஇ - துடியின் கண்ணையொத்த தடியோடே கலந்து, (459) பகன்றை கண்ணி பழையர் மகளிர் - பகன்றைப் பூவாற்செய்த கண்ணியையுடைய கள்விற்கும் வலையருடைய மகளிர், (463) துளங்கு தசும்பு வாக்கிய பசு பொதி தேறல் - களிப்பு மிகுதியால் அசையும் மிடாவினின்றும் வார்த்த பசிய முளையாலாக்கின கட்டெளிவை, (462) நல்க- தராநிற்க,—(460) ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த - ஞெண்டுகள் ஆடித்திரியும் செய்க்கு அருகில் மேட்டு நிலத்தேயிட்ட, (461) விலங்கல் அன்ன போர் - மலையை யொத்த (நெற்) போர்களை, முதல் தொலைஇ - அடியிலேவிழ அழித்துக் கடா விட்டு, (462) வளம் செய் வினைஞர் - வளப்பத்தையுண்டாக்கும் உழ வர், வல்சி நல்க - நெல்லை முகந்து தராநிற்க, (464) ஞாயிறு இள கதிர் களங்கள் தொறும் பெறுகுவிர் - ஞாயிற்றினது இளைய கதிர்க ளெறிக்குங் காலத்திலே களங்கடோறும் பெறுகுவிர்; [அவற்றைப் பெற்ற பின்பு] (466) வண்டு பட கமழும் தேன் பாய் கண்ணி (467) திண் தேர் நன்னற்கும்-வண்டு படியும்படி நாறும் தேன் சொரிந்த கண்ணியினையும் திண்ணிய தேரினையும் உடைய நன்னனுக்கும், அயினி சான்மென (468) கண்டோர் மருள - உணவாதற்கு அமையு மென்று கண்டோர்கள் மருளும்படி, (465) முள் அரித்து இயற்றிய வெள் அரி வெள் சோறு-முள்ளைக் கழித்து ஆக்கின கொழுப்பால் வெள்ளிய நிறத்தையுடைய தடிகளையிட்ட வெள்ளிய சோற்றை,

[அவ்ரவரிட] (468) கடும்புடன் அருந்தி- நும் சுற்றத்துடனேயுண்டு, (469) எருது எறி களமர் ஓதையொடு நல் யாழ் (470) மருதம் பண்ணி அசையினிர் கழிமின் - எருத்தையடிக்கின்ற உழவரோசையோடே கூடும்படி நல்லயாழை மருதத்தை வாசித்து இளைப்பாறிப் போவீர்;

(449) காஞ்சியும் புதவும் (450) அவலும் (451) காவும் பள்ளியும் உடைய (453) அவன் தண்பணை நாடு (450) ஊர்தோறும் (453) நன் பல வுடைத்து; அதனையடைந்தால் (462) வினைஞர் வல்சிநல்காநிற் பப் (459) பழையர் மகளிர் (455) வாளைத்தடியை (457) வராலினது (458) குறையொடு விரைஇத் (463) தேறலை (462) நல்க, (464) அவற் றைப் பெறுகுவிர்; அவற்றைப் பெற்றபின்பு (468) கண்டோர்மருள (465) இயற்றிய வெண்சோற்றை அவரவரிட (468) அருந்தி (470) மருதம்பண்ணி அசையினிர் கழிமின் என இயையும்.

கருத்துரை :—காஞ்சிமரத்தினையும், அறுகம்புல்லினையும் விளை நிலங்களையும் பொழில்களையும் இடைச்சேரிகளையும் உடைய நன்ன னுடைய மருதநிலநாடு, குடிமக்கள் நீங்காதிருக்கும் ஊர்களை யுடைத்து; அவ்வூர்கள் ஒவ்வொன்றும் நீர் பலநாள் நிற்பினும் ஒரு நாள் தங்கிப்போகினும் நுகர்தற்கான நல்ல பல பொருள்களையுடை யன; அந்நாட்டினையடைந்தால், உழவர் நெல்லை முகந்து தராநிற்கப் பழையர் மகளிர் வாளைத்தடியை வராலினது தடியோடே கலந்து கள் தெளிவைத் தராநிற்க, அவற்றை விடியற்காலத்தே க்ளங்கடோறும் பெறுகுவிர்; அவற்றைப் பெற்ற பின்பு, நன்னனுக்கும் உணவாதற்கு அமையுமென்று க்ண்டோர் ம்ருளும்படியாக்கின தடியிடையிட்ட வெள்ளிய சோற்றை நும் சுற்றத்துடனே யுண்டு, நல்லியாழ் கொண்டு மருதப்பண்ணை வாசித்து இளைப்பாறிப்போவீர் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—புதவு - அறுகு. "புதவொரு விகற்பப் புல்லா கும்மே" என்றது பிங்கலந்தை. இது 'புதவம்' எனவும் வரும்: "பொய் கைக் கொழுங்காற் புதவமொடு" என்று பட்டினப்பாலையில் (243) வரு வது காண்க. அவல் - விளைநிலம்: இப்பொருளில் வருதலை "பாசவற் படப்பை யாரெயில் பலதந்து" (புறம். 6) என்றவிடத்துங் காண்க. பண் ஒன்றையொன்றொவ்வாது இனிதாயிருக்குமாறுபோல நுகரும் பொருள்களும் ஒன்றையொன்றொவ்வாது இனிமையுடையவென்பார் "நல்லியாழ்ப் பண்ணுப்பெயர்த்தன்ன நன்பல வுடைத்து" என்றார். ஈண்டு, "பாலைப் பண்கள் பலவற்றையும் ஒரோவொன்றாகப் பெயர்த்து வாசிக்குமாறுபோலே ஒன்றையொன்று ஒவ்வாத இன் பத்தை உண்டவர்க்குக் கொடுக்கும் பலதிறத்து மது" என்ற பதிற் றுப்பத்தின் உரைப்போக்கு நினைத்தற்குரியது (பதிற்: 65); 'வராஅற் குறையொடு விரைஇ' என மேல்வருதலோடு இயைதலின், 'வாளை' யென்பது 'வாளைத்தடி'யென்ற பொருளதாயிற்று. பழையர்- கள்விற்போர். ஞெண்டு-நண்டு; முதற்போலி. தராய்-மேட்டு நிலம். விலங்கல்-மலை; ஊர்க்கு விலங்கியிருப்பது என மலைக்குக் காரணக் குறி. போர்-நெற்போர். நெற்போருக்கு மலையை யுவமித்தலை "குன்

றெனக் குவைஇய குன்றுக் குப்பை" (244) என்ற பொருநராற்றுப் படையாலும் உணரலாம். தசும்பு-மிடா. அயினி-உணவு. சாலும் என்பது 'சான்ம்' என்று உகரங்கெட்டு மெய்திரிந்து நின்றது. "திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென" என்றார் முன்னரும் (319). வெள்ளரி-வெள்ளியநிறத்தையுடைய தடிகளுக்கு ஆகுபெயர். மருதம்-மருதநிலத்துக் குரிய காலைப்பண். மருதப்பண் காலைப்பண் என்பதை "மாலை மருதம் பண்ணிக் காலைக், கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி, வரவெமர் மறந்தனர்" என்ற புறப்பாட்டாலும் (149), "மங்கையர் பண்ணிய மருத யாழ்......கங்குல்போய் நாட்கடன் கழிந்த தென்பவே" என்ற சிந்தாமணியாலும் (1991) தெளியலாம். இம் மருதப்பண் கல்யாணி என்னும் படுமலைப்பாலையாகும் என்ப.

அடிகள் 471—477: — சேயாற்றின் ஒருகரைக் கொண்டனிர் கழிமின் எனக் கூறும்.

வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்கண் எருமை யினம்பிரி யொருத்தல்
கனைசெலன் முன்பொடு கதழ்ந்துவரல் போற்றி
வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்
துனைசெலற் றலைவா யோவிறந்து வரிக்கும்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்
யாண ரொருகரைக் கொண்டனிர் கழிமின்

(இ - ள்.) (471) வெள் நெல் அரிநர் தண்ணுமை வெரீஇ-வெள்ளிய நெல்லையறுப்பார் கொட்டின பறையோசைக்குப் பயந்து, (472) செ கண் எருமை இனம் பிரி ஒருத்தல்-சிவந்த கண்ணையுடைய எருமைத்திரளைப் பிரிந்த கடா, (473) கனைசெலல் முன்பொடு-ஆரவாரிக்குஞ் செலவினையுடைய வலியோடே, கதழ்ந்து வரல் போற்றி-நும்மேல் விரைந்து வருதலைப் பேணி, (474) வனை கலம் திகிரியின் குமிழி சுழலும் (475) துனை செலல் தலைவாய் ஓவு இறந்து வரிக்கும்-குயவன் வனைகின்ற மட்கலத்திற் சக்கரம்போலக் குமிழி சுழன்று தோன்றும் விரைந்த செலவினையுடைய வாய்த்தலையில் ஒழிவின்றி ஓடும், (476) காணுநர் வயாஅம் கட்கு இன் சேயாற்றின்-காண்பார் விரும்பும் கட்கு இனிய சேயாற்றினது, (477) யாணர் ஒரு கரை கொண்டனிர் கழிமின் - புதுவருவாயையுடைய ஒரு கரையை வழியாகக்கொண்டு போவீர்; (எ - று.)

(472) எருமையொருத்தல் (473) கதழ்ந்து வரல்போற்றி (475) ஓவிறந்து வரிக்கும் (476) சேயாற்றின் (477) ஒருகரைக் கொண்டனிர் கழிமின் என இயையும். [கழிந்தால், 'அவன் மூதூர் நணி சேய்த்தன்று' (487) என மேல் தொடரும்].

கருத்துரை:—வெண்ணெல்லையறுப்பார் கொட்டின பறையோசைக்குப் பயந்து செங்கண்ணையுடைய எருமைத்திரளைப்பிரிந்த கடா ஆரவாரித்து வலியோடே நும்மேல் விரைந்து வருதலைப்

பரிகரித்துக்கொண்டு, குயவன் மட்கலத்திகிரிபோற் குமிழிகள் சுழன்றுதோன்றும் விரைந்த செலவினையுடைய மதகுகளில் ஒழிவின்றி ஓடிவரும் சேயாற்றினது ஒருகரையை வழியாக்கொண்டு போவீர் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—வெண்ணெலரிநர் பறைகொட்டுதலை "வெண்ணெ லரிநர் பின்றைத் ததும்பும், தண்ணுமை வெரீஇய தடந்தாணாரை" (அகநா: 40), "வெண்ணெ லரிநர் மடிவாய்த் தண்ணுமை... படுபுள்ளோப்பும்" (அகம்: 204) முதலியவற்றுலுமறிக. "ஏற்புடைத் தென்ப வெருமைக் கண்ணும்" என்ற விதிபற்றி, ஒருத்தல் என்பது எருமைக்கு வந்தது. ஒருத்தல்-ஒருசார் விலங்கின் ஆண்பெயர். தலைவாய்=வாய்த்தலை. வாய்க்காலின் தலைப்பு மதகு. வரித்தல்-ஓடுதல். 'வயாவும்' என்பது ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெட 'வயூாம்' என வந்தது. சேயாறு-யாற்றின் பெயர்; இஃது இக்காலத்துச் சண்முகநதி என வழங்கப்படும்.

அடிகள் 478—487:—நன்னனது மூதூர்மாலை கூறி, அது நனிசேய்த்தன்று எனக் கூறும்.

நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெருஅ விழுப்பெரு நியமத்து
யாறெனக் கிடந்த தெருவிற் சாறென
இகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்
கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு
மலையென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் பல்வண் டிமிரும்
நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்

(இ - ள்.) (486) பல் வண்டு இமிரும் பனி வார் காவின்-பல வண்டுகளொலிக்கும் குளிர்ந்த நெடிய பொழில்களையும், (482) இகழுநர் வெரூஉம்-நன்னனை இகழ்ந்திருப்பார் அஞ்சுகின்ற (478) நிவந்து ஓங்கு வரைப்பின்-மிகவோங்குமதிலையும், (481) சாறு என-திருநாளென்னும்படி, (479) கெழீஇ-மாந்தர் பொருந்தி, (483) கடல் என கார் என ஒலிக்கும் சும்மையொடு-கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்தோடே, (480) வியல் இடம் பெரு விழு பெரு நியமத்து-இரிதரற்கு அகன்ற இடம் பெருத சீரிய பெரிய அங்காடித்தெருவினையும், (482) கவலை மறுகின்-பல கவர்த்த தன்மையையுடைய குறுந்தெருக்களையும், (479) பதி எழல் அறியா பழங்குடி-ஊரினின்றும் பேர்தலை யறியாத பழையகுடிமக்கள், (485) துனி தீர் காதலின் இனிது அமர்ந்து உறையும் (484) மாடம்-வெறுப்பில்லாத விருப்பத்தோடே நன்றுதல் பொருந்தியிருக்கும் மாடங்கள், மலை என மழை என ஓங்கி-மலையென மழையென ஓங்குகையினாலே, (481) யாறு என கிடந்த தெருவின்-யாறென்னும்படி கிடந்த பெருந்

தெருவினையும் உடையதாய் (478) நிதியம் துஞ்சும் - பொருட்டிரள் தங்கும், (487) அவன் பழ விறல் மூது ஊர் நனி சேய்த்தன்று- அவனது பழைய வெற்றியையுடைய மூதூர் மிகவும் தூரிதன்று (அண்மையிலுள்ளது என்றபடி); (எ - று.)

(486) காவினையும் (478) மதிலையும் (480) நியமத்தினையும் (482) மறுகினையும் (481) பெருந் தெருவினையும் உடையதாய் (478) நிதியந் துஞ்சும் (487) அவன்மூதூர் நனிசேய்த்தன்று என இயைக்க. இங்ஙன் முன்பின் கூட்டி இயைத்தது பொருட்பொருத்தமுற. என்னை? ஓர் ஊரினமைப்பு முதலிற் காவும், பின்னர்மதிலும், பின்னர்த் தெருக்களும் கொண்டிருத்தல் மரபு. ஈண்டு, தெருக்களில் முதலில் அங்காடித் தெருவும், பின்னர்க் கவர்த்த பலகுறுந்தெருக்களும், பின்னர் உயர்மாடங்கள் கொண்ட பெருந்தெருக்களும் முறையே கூறப்பட்டுள்ளன.

கருத்துரை:—பல வண்டுகளொலிக்கும் குளிர்ந்த நெடிய பொழில்களையும், நன்னனை இகழ்ந்தோர் அஞ்சும்படி மிகவோங்கி நிற்கும் மதிலையும், திருநாளோ என்னும்படி மாந்தர் குழுமிக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்தோடே திரிதற்கு ஏற்ப அகன்ற இடம் பெறுத, [ஆனால்] சீரிய பெரிய அங்காடித் தெருவினையும், கவர்த்த பல குறுந் தெருக்களையும், ஊரினின்றும் பெயர்ந்து போதலையறியாத பழங் குடிகள் விருப்பொடு நன்கு வசிக்கும் மாடங்கள் இரும்ருங்கும் மிக வுயர்ந்து ஓங்குகையினாலே கரைகளைப் போன்றிருப்ப யாறென்னும்படி கிடந்த பெருந்தெருவினையும் உடையதாய்ப் பொருட்செல்வம் நீங்காது தங்கும் அவனது பழைய மூதூர் மிகவும் தூரத்திலுள்ளதன்று என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—நன்னனை இகழுநர் மதிலினைக்கண்டு வெருவுதற்குக் காரணம், அதனைக் கைப்பற்ற முடியாமையும், அதனுள்ளிட்டால் தப்பமுடியாமையுமாகும். நியமம்-அங்காடித் தெரு; இப்பொருளில் வருதலை ''ஓவுக்கண் டன்ன இருபெரு நியமத்து'' என்ற மதுரைக்காஞ்சியிலும் காண்க. (வரி-365). 'பதியெழலறியா' எனவே பகையின்மை கூறிற்று. தெருவுக்கு யாறு உவமை கூறப்படுதலை ''யாறுகிடந் தன்ன அகனெடுந் தெருவில்'' (மதுரைக்காஞ்சி, 359) என்றவிடத்துங் காண்க. இருகரையும் போல இரண்டுபக்கத்து மாடங்களும், யாற்றைப்போலப் பெருந்தெருவுகளும் இருந்தன என்றபடி. துஞ்சுதல் - தங்குதல்.

அடிகள் 488—491 :—அருங்கடிவாயிலை அயிராது புகுமின் எனக் கூறும்.

பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை துமியப்
பருந்துபடக் கடக்கு மொள்வாண் மறவர்
490 கருங்கடை யெஃகஞ் சாத்திய புதவின்
அருங்கடி வாயி லயிராது புகுமின்

(இ-ள்.) (488) பொருந்தா தெவ்வர் இரு தலை துமிய (489) பருந்து பட கடக்கும் ஒள் வாள் மறவர்-நன்னனைப் பொருந்தாத பகைவருடைய கரிய தலைகள் துணியப் பருந்துகள் படியப் போரைவெல்லும் ஒள்ளிய வாளையுடைய மறவர், (490) கரு கடை எஃகம் சாத்திய புதவின் (491) அரு கடி வாயில் - தம்முடைய கரிய காம்பினையுடைய வேலைச் சாத்திவைத்துக் காத்திருக்கின்ற பல தெற்றுவாசல்களையுமுடைய அரிய கோபுரவாயிலை, அயிராது புகுமின்-ஐயுறாமற் புகுவீர்; (எ-று.)

(488) துமியப் (489) படக் கடக்கும் மறவர் (490) எஃகஞ் சாத்திய புதவின் (491) வாயில் புகுமின் என இயையும்.

கருத்துரை :—நன்னனது பகைவருடைய தலைகள் துணியப் பருந்துகள்படியப் போரைவெல்லும் மறவர் தம் வேலைச் சாத்திவைத்துக் காத்திருக்கின்ற தெற்றுவாசல்களைக் கொண்ட கோபுரவாயிலை ஐயுறாமற் புகுவீர் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—பருந்து படுதல் தசையுண்ணும் விருப்பத்தால். "பருந்துபசி தீர்க்கும் நற்போர்த், திருந்துவேல்" என்ற புறமும் காண்க (179). கடை - காம்பு. புதவு - தெற்றுவாசல்: திட்டிவாசல் எனவும்படும். திட்டிவாசல் - பெரிய கதவுகள் சாத்தப்படும்போது உட்செல்லுதற்கு அமைக்கப்படும் சிறிய நுழைவாயில். அயிராது புகுமின் என்றது, 'நும்மில்போல நில்லாது புகுமின்' என்றபடி; கீழ் 165-ஆம் வரியும் நினைக.

அடிகள் 492—497 :—அம்பலங்களில் தங்குவோராகிய கூத்தர் முதலியோர் நும்மை விருந்தாய், எதிர்கொள்வர் எனக் கூறும்.

மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய்ப் பெருவிற லுள்ளி
வந்தோர் மன்ற வளியர் தாமெனக்
கண்டோ ரெல்லா மமர்ந்தினிதி னோக்கி
விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப்
பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட

(இ-ள்.) (492) மன்றில் வதியுநர் சேண் புலம் பரிசிலர் (495) கண்டோர் எல்லாம்-அம்பலங்களிலே தங்குவாராகிய தூரிய நிலங்களினின்றும் வந்த கூத்தர் முதலியோராகிய [நும்மைக்] கண்டோரெல்லாம், (494) 'அளியர் தாம்-இவ்வளிக்கத்தக்கவர் தாம், (493) வெல் போர் சேஎய் பெருவிறல் (494) மன்ற (493) உள்ளி (494) வந்தோர் என-வெல்லும் போரைவல்ல முருகனைப்போலும் நன்னனைப் பரிசிலர்க்குக் கொற்றமாக நினைத்து வந்தோர்' என்று கருதி, (495) அமர்ந்து இனிதின் நோக்கி-முகம்பொருந்தி இனிதாகப் பார்த்து, (497) பரி புலம்பு அலைத்த வருத்தம் வீட-தரித்தலானுண்டான தனிமை வருத்தின வருத்தம் போம்படி, (494) அவர்-அவ்விடத்தோர், விருந்து-விருந்தாய், (495) நும் (494) இறை எதிர்

கொள-நீங்கள் தங்குதலை எதிரேற்றுக்கொள்கையாலே, அவர் குறுகி-அவர்களைச் சேர்ந்திருந்து; (எ - று.)

(492) பரிசிலர் (495) கண்டோர் எல்லாம் (493) பெருவிறலுள்ளி (494) வந்தோரென (495) நோக்கி (497) வருத்தம் வீட (496) அவர் விருந்தாய் (497) நும் (496) இறை எதிர்கொளக் குறுகி என இயையும். (496) குறுகி என்ற இது, பின்னர் (531) முற்ற முன்னி என்பதனோடு இயையும்.

கருத்துரை :—நும்மைப் போலே தூரியநிலங்களினின்றும் வந்து முன்னரே அம்பலங்களிலே தங்குவாராகிய கூத்தர் முதலியோர் நும்மைக் கண்டவுடன் 'இவர்கள் நன்னனை நினைத்துப் பரிசில் பெற வந்தவர்கள்; இவர்கள் அளிக்கத்தக்கவர்தாம்' என்று கருதி, முகமலர்ந்தினிதினோக்கி, நுமது வழிவந்த வருத்தமும் தனிமை வருத்தின வருத்தமும் போம்படி விருந்தினராய் அவர்களுடன் தங்குதலை எதிரேற்றுக் கொள்கையாலே நீங்கள் அவர்களைச் சேர்ந்திருந்து [பின்னர்த் (531) தாதெருத் ததைந்த முற்றம் முன்னுவிர்] என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—'வதியுநர், பரிசிலர், கண்டோர்' என்ற மூன்றும் ஒருபொருளின்மேல்வந்த பெயர்களாகலின், 'கண்டோர் எல்லாம்' என்றது முன்னரே தூரநிலங்களிலேயிருந்து வந்து அம்பலங்களிலே தங்கியிருந்த கூத்தர் முதலியோரைக் காட்டும். 'புலம்பே தனிமை' யாகலின், அத் தனிமையாலான வருத்தம் போதற்குத் தம் போன்ற இனத்தாரைக் குறுகியிருத்தல் பெரிதும் பொருத்தமாதலின், அதற்கேற்பக் 'கண்டோர்' என்றது மன்றில்வதியுங் கூத்தர் முதலியோரைக் காட்டிற்று என்க. அளியர்-இரங்கத்தக்கார். அம்பலங்களிலேயிருந்த இக்கூத்தர் முதலியோர் 'நன்னனையுள்ளி வந்தோர் மன்றஅளியர்தாமென அமர்ந்தினிதினோக்கி விருந்தெதிர்கொளலால்' "தன்றெறல் வாழ்க்கை"யினராயினர். தன்றெறல் வாழ்க்கை-தனதென்னுந் தன்மையில்லாத வாழ்க்கை. எனவே, பொதுப்பட்ட வாழ்க்கையை யுடையோர் என்றபடி. இதனைச் சிலப்பதிகாரத்து அடைக்கலக்காதை 195-ஆம் வரிக்கு அடியார்க்குநல்லார் வகுத்துள்ள உரையாலறியலாம். இனி பெருவிறல் மன்ற உள்ளி வந்தோர் என்பதற்கு-'நன்னனைப் பரிசிலர்க்குக் கொற்றமாக நினைத்து வந்தோர்' என்று உரைகண்டது - பகைவரொடு செய்யும் போரிற் கொற்றங் கொள்ளும் நன்னன், பரிசிலரிடத்து எளியனாதலின் அப்பரிசிலரின்கண் கொற்றங்கொள்பவனல்லன் என்று தெரிவித்தற்கு. ஈண்டு, பரிசிலர்க்குக் கொற்றமாவது - நன்னனிடத்துப் பெற உள்ளும் பரிசில் பொய்யாகாது கையகத்ததாதல். 'மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்' என்பதும் அறிக. பெருவிறல் - அன்மொழித் தொகை; ஆகுபெயரெனினுமாம். பரி - பரித்தல், தரித்தல், தாங்குதல். இறை-இறுத்தல், தங்குதல். நும் இறை-நும்முடைய தங்குதல்; எனவே, நீங்கள் தங்குதல் என்றாயிற்று.

அடிகள் 498—531 :—நன்னனது தலைவாசலில் பல்வகைப் பொருள்களும் துவன்றியிருத்தல்கூறி, 'நீவிர் முற்றம் முன்னுமின்' எனக் கூறும்.

எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத்
தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை யாமான் கயமுனிக் குழவி
ஊமை யெண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தகர்
அரவுக்குறும் பெறிந்த சிறுகட் டீர்வை
அளைச்செறி யுழுவை கோளுற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி
அரக்குவிரித் தன்ன செந்நில மருங்கிற்
பரற்றவ ழுடும்பின் கொடுந்தா ளேற்றை
வரைப்பொலிந் தியலு மடக்கண் மஞ்ஞை
கானக் கோழிக் கவர்குரற் சேவல்
கானப் பலவின் முழவுமருள் பெரும்பழம்
இடிக்கலப் பன்ன நறுவடி மாவின்
வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரம்
தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி
காஅய்க் கொண்ட நுகமரு ளூறை
பருஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி
குருஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்
வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்தள்
நாகந் திலக நறுங்கா ழாரம்
கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்
கானிலை யெருமைக் கழைபெய் தீந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லு நெய்க்க ணிறுஅல்
உடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்தும்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப
நோனாச் செருவின் நெடுங்கடைத் துவன்றி
வானத் தன்ன வள்மலி யானைத்
தாதெருத் ததைந்த முற்ற முன்னி

(இ - ள்.) (498) எரி கான்றன்ன பூ சினை மராஅத்து-நெருப்பைக் கான்றாலொத்த பூங்கொம்புகளையுடைய மராமரத்திடத்தே கிடந்த, (499) தொழுதி போக - இனமெல்லாங் கெட்டுப் போக, வலிந்து அகப்பட்ட-போகமாட்டாது அகப்பட்ட, (500) மடம் நடை

ஆமான் குழவி-மடப்பத்தையுடைய நடையையுடைய ஆமானினது இளங்கன்று, கயம் முனி குழவி-யானையின் இளங்கன்று, (501) எண்கின் குடாவடி ஊமை குருளை-கரடியின் வளைந்த அடியினை யுடைய வாய்திறவாக் குட்டி, (502) மீமிசை கொண்ட கவர் பரி கொடு தாள் (503) வரை வாழ் வருடை வல் தலை மா தகர்-முது கிடத்தே கொண்ட நிலத்தைக் கைக்கொள்ளும் செலவினையுடைய வளைந்த காலையுடைய வரையிடத்தே வாழும் எண்கால்வருடையில் வலிய தலையினையுடைய பெரியகிடாய், (504) அரவு குறும்பு எறிந்த சிறு கண் தீர்வை-பாம்பினது வலிகளையழித்த சிறிய கண்ணினை யுடைய கீரி (505) அளை செறி உழுவை கோள் உற வெறுத்த (506) மடம் கண் மரையான் பெரு செவி குழவி-முழையிலே செறிந்திருந்த புலி பாய்தலுறுகையினாலே தன் உடலைவெறுத்த மடப்பத்தை யுடைய கண்ணினையுடைய மரையானினது பெரிய செவியினை யுடைய இளங்கன்று, (507) அரக்கு விரித்தன்ன செ நிலம் மருங்கின் (508) பரல் தவழ் உடும்பின் கொடு தாள் ஏற்றை-அரக்கைப் பரப்பினாலொத்த சிவந்த நிலத்திடத்திற் சுக்கான் கல்லிலே தவழும் உடும்பினது வளைந்த காலையுடைய ஏறு, (509) வரை பொலிந்து இயலும் மடம் கண் மஞ்ஞை-மலையிடத்தே அழகுபெற்று ஆடும் மடப்பத்தையுடைய கண்ணினையுடைய மயில், (510) கானம் கோழி கவர் குரல் சேவல் - கானத்திடத்துக் கோழியினது பெடையை அழைக்கின்ற குரலையுடைய சேவல், (511) கானம் பலவின் முழவு மருள் பெரும் பழம்-காட்டிடத்துப் பலாவினுடைய முழவென்று மருளும் பெரிய பழம், (512) நறு வடி மாவின்-நறிய வடுக்களையுடைய மாவினது, இடி கலப்பன்ன (513) வடி சேறு விளைந்த தீம் பழம் தாரம் - பொடிச்செய்த கண்டின் கலப்பை யொத்த பிழியப்படும் சாறு முற்றின இனிய பழமாகிய பண்டம், (514) தூவல் கலித்த இவர் நனை வளர் கொடி-மழையாற்செருக்கின பரக்கின்ற அரும்புகளையுடைய மணம் வளருகின்ற நறைக்கொடி, (515) காஅய்க்கொண்ட நுகம் மருள் நூறை-காவிக்கொண்டுவந்த நுகமென்று மருளும் நூறைக்கிழங்கு, (516) உதிர்த்த பரூஉ பளிங்கு-மரத்தினின்றும் சிதறியுதிர்த்த பருத்த நிகரமாகிய கருப்பூரம், பல உறு திரு மணி-பலவிலை பெற்ற அழகிய மாணிக்கம், (517) குரூஉ புலி பொருத புண் கூர் (518) முழுவலி (517) யானை (518) முத்துடை மருப்பின் மிகு திரள்-நிறத்தையுடைய புலிபொரப் பட்ட புண்மிக்க குறைவில்லா வலியையுடைய யானைகளினுடைய முத்துடைக்கொம்புகளினுடைய மிக்கதிரள், (519) வளை உடைந் தன்ன வள் இதழ் காந்தள்-வளையுடைந்தாற்போன்ற வளவிய இதழையுடைய காந்தட்பூ, (520) நாகம்-புன்னைப்பூ, திலகம்-திலகப்பூ, நறு காழ் ஆரம்-நறிய வயிரத்தையுடைய சந்தனம், (521) மிளகின் கரு கொடி காய் துணர் பசு கறி-மிளகினது கரிய கொடிகள் காய்த்த கொத்திற் பசியமிளகு, (522) திருந்து அமை விளைந்த தேன் கள் தேறல் - நன்ருகிய மூங்கிற்குழாயிலே முற்றிய தேனாற் செய்த கட்டெளிவு, (523) கான் நிலை எருமை கழை பெய் தீ தயிர்-காட்டிடத்து நிலைமையினையுடைய எருமையினது மூங்கிற்குழாயிலே

தோய்த்த இனிய தயிர், (524) நீல் நிறம் ஓரி பாய்ந்தெனை-முற்று தலினாலே நீலநிறத்தையுடைய ஓரிநிறம் பரந்ததாக, நெடுவரை நேமியின் செல்லும் நெய் கண் இறால்-நெடியவரையில் தேருருள் போன்ற இறாலிடத்தினின்று விட்டுப் பாயும் தேனைத் தன்னி டத்தேயுடைய இறால்கள், (526) தழீஇய ஆசினி-நன்றென்று கூட் டிக்கொண்ட ஆசினிப்பலா, (526) அனைத்தும்-ஆகிய இவையாவும், உடம்புணர்பு-ஒருமிக்கச் சேரப்பெற்று,—(527) குடமலை பிறந்த தண் பெரு காவிரி கடல் மண்டு அழுவத்து கயவாய் கடுப்ப-குடகமலையிற் பிறந்த குளிர்ந்த பெரிய காவிரி கடலிலே மிக்குச் செல்கின்ற ஆழத் தையுடைய புகார்முகத்தை யொப்ப, (529) நோனா செருவின் நெடு கடை - பகைவர் பொறுத்தலாற்றாத போரினையுடைய தலைவாச லிலே, துவன்றி-நெருங்கியிருப்ப,—(530) வானத்தன்ன வளம் மலி யானை-மேகங்களையொப்ப வளப்பம் மிகுந்த யானைகளையுடைய, (531) தாது எரு ததைந்த முற்றம் முன்னி-தாதாகிய எருக்கள் நெருங்கின முன்றிலையணுகி; (எ - று.)

(500) ஆமான் குழவி, கயமுனிக்குழவி (501) எண்கின்குருளை (503) வருடை வன்றலை மாத்தகர் (504) தீர்வை (506) மரையான்குழவி (508) உடும்பினேற்றை (509) மஞ்ஞை (510) கானக்கோழிச்சேவல் (511) பலவின் பெரும்பழம் (512) மாவின் (513) தீம்பழத்தாரம் (514) நறைக்கொடி (515) நூறைக்கிழங்கு (516) பளிங்கு, மணி (518) முத் துடை மருப்பின் திரள் (519) காந்தள் (520) நாகம், திலகம், ஆரம் (521) மிளகின் பசுங்கறி (522) தேக்கட் டேறல் (523) தீந்தயிர் (525) நெய்க்கண் இறால் (526) ஆசினி [ஆகிய இவை] யனைத்தும் உடம் புணர்பு (528) கயவாய் கடுப்ப (529) நெடுங்கடையில் துவன்றி யிருப்ப,—(531) முற்றமுன்னி என இயையும்.

கருத்துரை :—நெருப்பைக் கான்றாலொத்த பூங்கொம்புகளை யுடைய மராமரத்திடத்தே கிடந்த ஆமானினமெல்லாம் ஓடிப்போக, அங்ஙன் போகமாட்டாது மலைவாணரிடம் அகப்பட்டுக்கொண்ட மட நடையையுடைய ஆமானினிளங்கன்று, யானையின் இளங்கன்று, கரடிக்குட்டி, வரையிடைவாழும் எண்கால் வருடையின் கிடாய், பாம்பின் வலிதொலைத்த கீரி, புலிபாய்தலாலே தன் உடலைவெறுத்த மடக்கண் மரையானின் இளங்கன்று, அரக்கைப் பரப்பினாலொத்த சிவந்த நிலத்திற் சுக்கான்கல்லிலே தவழும் உடும்பினேறு, வரை யிடத்து அழகுற ஆடும்மயில், கானத்திடத்துப் பெடையை அழைக் குங் குரலையுடைய கோழிச்சேவல், காட்டிடத்துப் பலாவினுடைய் முழவென்று மருளும் பெரியபழம், நறிய வடுக்களையுடைய மாவினது பிழியப்படுஞ் சாறுமுற்றின இனிய பழமாகிய பண்டம், மழையாற் செருக்கிப் பரந்த அரும்புகளையுடைய மணமுள்ள நறைக்கொடி, காவிக்கொண்டு வந்த நுகமென்று மருளும் நூறைக்கிழங்கு, மரத்தி னின்றும் சிதறியுதிர்த்த பருத்த திரளாகிய கருப்பூரம், பலவிலை பெற்ற மாணிக்கம், புலியொடு பொருத் வலிபடைத்த யானைகளின்

முத்துடைக் கொம்புகளினுடைய திரள், வளையுடைந்தாற் போன்ற வளவிய இதழையுடைய காந்தட்பூ, புன்னைப்பூ, திலகப்பூ, நறிய வயிரத்தையுடைய சந்தனம், மிளகுகொடிகளிற் காய்த்த கொத்திற் பசிய மிளகு, மூங்கிற் குழாயிலே முற்றிய தேறற்செய்த கட்டெளிவு, காட்டெருமையினது பாலை மூங்கிற்குழாயிலே தோய்த்த இனிய தயிர், நீலநிறத்தையுடைய ஓரிநிறம் பரந்து நெடியவரையிடத்துத் தேருருள்போல் தோன்றித் தேனைப்பெருகவிட்டிருக்கும் இறால்கள், நல்ல ஆசினிப்பலா ஆகிய இவையாவும் ஒருமிக்கச் சேரப்பெற்றுக் காவிரி கடலொடு கலக்கும் புகார்முகத்தையொப்ப நன்னனது தலைவாசலிலே துவன்றியிருப்ப, நீவிர், யானைகளையுடைய தாய்த் தாதாகிய எருக்கள் தங்கின முன்றிலையணுகுமின் என ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—நன்னனது தலைவாசலில் பலவகை மலைப்பொருள்களும் துவன்றியிருத்தற்குக் காரணம் நன்னனைக்காணவேண்டிவந்த மலைவாணர் அவனுக்குக் கொடுக்கும்படி கொணர்ந்த கையுறைப் பொருள்கள் என்க. ஈண்டு, செங்குட்டுவனைக் காணவேண்டி மலைவாணர் பலவகை மலைப்பொருள்களையும் சுமந்து கொண்டு வந்தமை நினைக (சிலப்: காட்சிக்காதை: வரி 33-55). தொழுதி - இனம், திரள். ஆமான்-காட்டுப்பசு. கயமுனி-யானைக்கன்று குடாவடி-வளைந்த அடிகளையுடையது எனக்கரடிக்கு வரும். வருடை-மலையில் வாழும் ஒரு விலங்கு; எட்டுக்காலையுடையதென்ப; இது முதுகிற் காலுடையதென்றும் கூறப்படும். 503-ஆம் வரியில் வருடையும் தகரும் என வேறாகக் கூறலுமாம். தீர்வை-கீரி: அரக்கு-சாதிலிங்கம்: 'அரக்குருக் கன்ன செந்நிலம்' என்றார், பொருநராற்றுப்படையிலும் (43). ஏற்றை-ஆண்பெயர்; "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென மொழிப" என்பது தொல்காப்பியம். 507-8-இவ்வரிகளிற் கௌசிகனார் இயற்கையிற் கண்டுகூறுங் காட்சிப் பெரிதும் சுவையுடைத்து. காஅய்க்கொண்ட - காவிக்கொண்டு வந்த; காஅய், காவி-தோளிற்சுமந்து, நூறை - நூறைக்கிழங்கு; மலங்கென்பாரு முளர்; மலங்கு - ஒருவகை மீன். பரூஉ பளிங்கு-பருத்த நிகரமாகிய கருப்பூரம்; நிகரம்-திரள். கருப்பூரம்-ஒருவகை மரம். "இமயச் சாரற் கருப்புரக் கன்று" (சீவக: 1267) என்றவிடத்துங் காண்க. வளையுடைந்தாற்போற் காந்தள் மலர்வதை - 'உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்" என்ற புறத்தாலும் (90) அறிக. ஆங்குள்ள உரைநோக்கின், காந்தள்-வெண்காந்தட்பூ எனத் தெரியவருகிறது. 'கருங்கொடிமிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி' என்ற தொடரில் முன்னர்நின்ற 'மிளகு' என்றது முதலையும், பின்னர் நின்ற 'கறி' என்றது சினையையும் குறிக்கும். மூங்கிற்குழாயிலே முற்றிய தேறற்செய்த கட்டெளிவைப் பெய்து வைத்தலை, முன்னர் 171-ஆம் வரியிற் குறித்திருத்தலும் நோக்குக. ஓரி - தேன் முதிர்ந்தாற் பரக்கும் நீலநிறம். நேமியின் -நேமி, இறாலுக்கு ஆகுபெயர்; இன்-ஐந்தனுருபு, ஆசினி-ஈரப்பலா. வரிகள் 527-28-இல், "குடமலைப் பிறந்த கொழும்பஃறாரமொடு, கடல்வளனெதிரக் கயவாய்

நெரிக்கும், காவிரி" என்ற சிலப்பதிகார அடிகளை ஒப்பு நோக்குக. (சிலப்: 10: 106-108). கடவாய் - புகார்முகம். தாதெரு - எருப் பொடிகள்.

அடிகள் 532—538 :—[முற்றமுன்னி] விறலியர் தேவபாணியைப் பாடுதல் கூறும்.

மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிட மிமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅது
அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை

(இ - ள்.) (532) மழை எதிர் படு கண் முழவு கண் இகுப்ப-மழை முழக்கத்திற்கு எதிராக முழங்கும் கண்ணையுடைய முழவின் கண்கள் ஒலியாநிற்க, (533) கழை வளர் தூம்பின் கண் இடம் இமிர-மூங்கிலாலாகிய இசை வளரும் பெருவங்கியத்தினது திறந்தகண்ணிடம் ஒலியாநிற்க,—(536) கடவது அறிந்த-தலைவனைக் கண்டாற் செய்யக் கடவ தொழிலையறிந்த [வராய்], (534) மருதம் பண்ணிய கரு கோடு சிறு யாழ் (535) நரம்பு மீது இறவாது உடன்புணர்ந்து ஒன்றி (536) இன் குரல் விறலியர் - மருதத்தை வாசித்த கரிய தண்டினையுடைய சிறிய யாழின்நரம்பினோசைக்கு மேற்போகாது அவ்வோசையுடனேகூடி ஓரோசையாய் இனிதாகிய பாட்டினையுடைய விறல்பட ஆடும் மகளிர், (537) தொன்று ஒழுகு மரபின் தம் இயல்பு வழாஅது - பழைதாய் நடக்கும் முறைமையினையுடைய தம் இலக்கணத்தில் தப்பாமல், (538) அரு திறல் கடவுள் பழிச்சியபின்றை-பொறுத்தற்கு அரிய வலிமையையுடைய கடவுளை முதலில் வாழ்த்தின பின்பு (அதாவது, தேவபாணியைப் பாடின பின்பு); (எ - று.)— 'பின்றை' என்ற இது, மேல் (539) கழிப்பி (544) ஏத்திச் (545) சென்றது நொடியவும் விடாஅன் எனத் தொடரும்.

[(531) முற்றத்தை முன்னி] (532) இகுப்ப (533) இமிர (536) கடவதறிந்த இன்குரல் விறலியர் (538) கடவுட் பழிச்சிய பின்றை என இயையும்.

கருத்துரை:—முழவும் பெருவங்கியமும் ஒலியாநிற்க, மருதப் பண்ணை வாசித்த சிறியாழின் நரம்பினோசைக்கு மேற்போகாது அவ்வோசையுடனேகூடி ஓரோசையாய் இனிதாகிய பாட்டினைப்பாடியாடும் விறலியர், தலைவனைக்கண்டாற் செய்யக்கடவ தொழிலையறிந்தவராய், தொன்றுதொட்டு நடக்கும் முறைமையினையுடைய தம் இலக்கணத்திற்றப்பாமல், முடிவிலாற்றலுடைய கடவுளை முதலில் தேவபாணியாற் பராவுதல் செய்யப்படும் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—முழவின் கண்ணிடத்தெழும் ஒலி மேகமுழக்கத்திற்கொப்பு என்றபடி; மருதம் பண்ணிய சீறியாழ்-மருதயாழ்: "நேரே-இளிகுரலில் தோன்ற மருதயாழ்" என்பது செய்யுள். குரலில் இளி தோன்ற மருதயாழ். அதாவது, குரலில் தொடங்கி இளிக்கிரமமாய்ச் செல்ல, குரல்-இளி-துத்தம்-விளரி-கைக்கிளை-தாரம்-உழை ஆகிய நரம்புகள் பிறக்கும். இவற்றை இராசி வட்டத்தில் அமைத்துக் கண்டு, மருதயாழின் சுரங்களைக் குரல் முதலாகக் கோவைப்படுத்திக் காண்போமாயின், அது படுமலைப்பாலை [அதாவது தற்காலத்துக் கல்யாணி] யாகும் என்ப. முன்னரும் வரி 469-70-இல் 'நல் யாழ், மருதம் பண்ணி யசையினிர் கழிமின்" என்றதும் நினைக. 'அருந்திறற்கடவுள்' என்றவிடத்து, அருந்திறலாவது-தன்னாலும் பொறுத்தற்கரிய வலிமை; எனவே, முடிவிலாற்றலுடைமை குறித்தபடி; ஈண்டு, சீவகசிந்தாமணியில், 'நலம் பொறுக்கலாதபிண்டி நான்முகன்' (402) என்றவிடத்து நச்சினார்க்கினியர், 'தன்நலம் தான் பொறுக்கமாட்டாத அருகன்' என உரை வகுத்ததும் ஒப்புநோக்குக. கடவுட்பழிச்சுதல் - தேவபாணியைப்பாடுதல். பாணியென்றது-பாட்டு; மேல் 'விருந்திற்பாணி கழிப்பி' (539) என்றவிடத்துங்காண்க. தேவபாணியென்பது-தேவர்ப்பராவுதலாயிற்று. இத்தேவபாணியைப்பற்றி அடியார்க்குநல்லார், 'அது முத்தமிழ்க்கும் பொது. அஃது இயற்றமிழில்வருங்காற் கொச்சகவொருபோகாய் வரும். வரும்வழியும் பெருந்தேவபாணி, சிறுதேவபாணியென இருவகைத்தாய்வரும்' எனவும், இசைத்தமிழில் வருங்கால், செந்துறை முதலாகப் பத்துவகைப்பட்டுவரும் எனவும், நாடகத்தமிழில் வருங்கால், பெருந்தேவபாணி பலதேவரையும், சிறுதேவபாணி வருணப்பூதரையும் மூவடிமுக்கால் வெண்பாவால் துதிக்க வரும் எனவும் இங்ஙன் கூறியுள்ளார். (சிலப்: கடலாடு: 35-உரை காண்க).

அடிகள் 539—566 :—நன்னனை ஏத்த, அவன் முகமன்கூறி எதிர்கொண்டு உடையும் உணவும் அளித்துப் பலநாள் நிற்பினும் உபசரிப்பன் எனக் கூறும்.

விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்று நல்லிசைச் சென்றோ ரும்பல்
இன்றிவட் செல்லா துலகமொடு நிற்ப
இடைத்தெரிந் துணரும் பெரியோர் மாய்ந்தெனக்
கொடைக்கட னிறுத்த செம்ம லோயென
வென்றிப் பல்புகழ் விறலோ டேத்திச்
சென்றது நொடியவும் விடாஅன் நசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்
பொருமுர ணெதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்ற மணுகல் வேண்டிக்
கல்லெ னொக்கல் நல்வலத் திரீஇ
உயர்ந்த கட்டி லுரும்பில் சுற்றத்து
அகன்ற தாயத் தஃகிய நுட்பத்து

இலமென மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை யிழிதரு நீத்தஞ்சா லருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவாழ் எக்கர் மணலினும் பலரே
அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரிது
உவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி
இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவல் தந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெ ணெல்லி னரிசி முட்டாது
தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர்

(இ - ள்.) (539) விருந்தின் பாணி கழிப்பி-புதிதாகப் பாடும் பாட்டுக்களைப்பாடி, நீண்மொழி (540) குன்றா நல் இசை சென்றோர் உம்பல்-(வேல்கிழற் புலவோர்க்குக் கொடுத்தவற்றைத் திரும்ப வாங்காதபடி) தாம் கூறிய வஞ்சினங்களிற் குறையாத நல்ல புகழிலே நடந்தோருடைய வழியில் வந்தவனே! (542) இடை தெரிந்து உணரும் பெரியோர் மாய்ந்தென-நன்று இது தீது இஃது என்று ஆராயும் பெரிய உபகாரிகள் இறந்தார்களாக, (541) இன்று இவண் செல்லாது உலகமொடு நிற்ப-நின்பேர் இக்காலத்து இவ்வுலகிலே நடந்து [பின் மறைந்து] விடாதே உலகமுள்ளளவும் நிற்கும்படி, (543) கொடை கடன் இறுத்த செம்மலோய்! என-கொடையாகிய கடனை முடித்த தலைமையை உடையோயென்று கூறி, (544) வென்றி பல் புகழ் விறலோடு ஏத்தி-வெற்றியாலுண்டாகிய பல புகழ்களை ஐம்பொறிகளைத் தன் வசமாக்கின வெற்றியோடே புகழ்ந்து, (545) சென்றது நொடியவும் விடாஅன்-நும்மனத்திற்சென்ற ஏனைப் புகழ்களை முற்றக்கூறவும் அமையானாய், நசை தர (546) வந்தது சாலும் வருத்தமும் பெரிது என-என்மேலுள்ள நசை கொண்டு வருகையினாலே வந்ததே அமையும்; வழிவந்த வருத்தமும் பெரிதென முகமன்கூறி, (547) பொரு முரண் எதிரிய வயவரொடு பொலிந்து-பொருகின்ற மாறுபாட்டினை எதிர்கொண்டிருக்கும் படைத்தலைவரோடே பொலிவுபெற்று, (548) திருநகர் முற்றம் அணுகல் வேண்டி - செல்வத்தையுடைய தன் மனையின்முற்றத்தை நீங்கள் செல்லுதலை விரும்பி, (549) கல்லென் ஒக்கல் நல் வலத்து இரீஇ-கல்லென்னும் ஆரவாரத்தையுடைய சான்றோரிருக்கின்ற நன்றாகிய சமயத்திருக்குமண்டபத்தேயிருந்து,—(550) உயர்ந்த கட்டில்-உயர்ந்த அரசவுரிமையினையும், உரும்பு இல் சுற்றத்து-கொடுமையில்லாத அமைச்சர் முதலியோரையும், (551) அகன்ற தாயத்து-அகன்ற நாட்டினையும், அஃகிய நுட்பத்து-நுண்ணிய அறிவினையும் உடையராய் [இருந்தும்], (552) இலம் என மலர்ந்த

லகையர் ஆகி-இரந்து வந்தோர்க்கு யாம் இல்லேமென்று கூறி இல்லை யென்று மறித்த கையினையும் உடையராய், (553) தம் பெயர் தம் மொடு கொண்டனர் மாய்ந்தோர்-தம் பெயரை உலகில் நிறுத்தாமல் தம்முடனேகொண்டு பொன்றக் கெட்டுப்போன அரசர், (554) நெடு வரை இழிதரு நீத்தம் சால் அருவி (555) கடு வரல் கலுழி கட்கு இன் சேயாறு (556) வடு வாழ் எக்கர் மணலினும் பலரே-நெடியமலை யினின்றுங் குதிக்கும் பெருக்கு நிறைந்த அருவியினது கடிய வரத்தினையுடைத்தாகிய பெருக்கினையுடைய கண்ணுக்கு இனிய சேயாற்றின் அறல் வீற்றிருக்கிற இடுமணலாகிய மணலினும் பலர்; (557) அதனால் - ஆகையினாலே, நம் வரைந்த நாள் புகழொடும் கழிக என-நமக்குத் தெய்வம் இத்துணைக்காலமிருவென எல்லையிட்டு விட்ட நாள் புகழொடே கழிந்துபோவதாகவென்று கருதி, (558) விசும்பு தோய்-ஆகாயத்தையொப்ப, பரந்து இடம் கொடுக்கும் உள்ளமொடு-[கொடுத்தற்றொழிலிலே] விரிந்து அதற்கேற்ப இடங் கொடுக்கும் நெஞ்சுடனே, (559) நயந்தனிர் (560) உவந்த உள்ளமோடு (559) சென்ற நும்மினும் தான் பெரிது (560) அமர்ந்து இனிது நோக்கி - பரிசில் பெறுதற்கு விரும்பி மகிழ்ந்த நெஞ்சத்தோடே சென்ற நும்மினுங்காட்டில் தான் பெரிதும் முகனமர்ந்து இனி தாகப் பார்த்து, (562) எள் அறு சிறப்பின்-இகழ்ச்சியற்ற தலைமை யினையுடைய, (561) இழை மருங்கு அறியா-இழைபோனவிடமறி யாத, நுழை நூல் கலிங்கம்-நுண்ணிய நூலாற்செய்த புடைவை களை, (562) வெள் அரை கொளீஇ-[அழுக்கேறின சீலைகள் கிடத்த லின்] வெள்ளிதாகிய அரையிலே உடுத்தி, (565) வழி சிறந்து - அவ் விடம் நும் நெஞ்சிற்குச் சிறப்பெய்தி, (566) பல நாள் நிற்பினும்- பலநாள் நின்றீராயினும், (563) முடுவல் தந்த பைந்நிணம் தடி யொடு-பெண்நாய் கடித்துக்கொண்டு வந்த பசிய நிணத்தையுடைய தசைகளோடே, (564) நெடு வெள் நெல்லின் அரிசி முட்டாது- நெடிய வெள்ளிய நெல்லின் அரிசியும் முட்டுப்படாமல், (565) தலைநாள் அன்ன புகலொடு (566) பெறுகுவிர்-முதல்நாட் போன்ற விருப்பத்தோடே பெறுகுவிர்; (எ - று.)

(539) விருந்திற் பாணிகழிப்பி (540) உம்பல்! (543) செம்மலோய்! எனக்கூறி (544) ஏத்திச் (545) சென்றது நொடியவும் விடாஅன் (546) வருத்தமும் பெரிதெனக்கூறி, (548) திரு [வுடை] நகர் முற்றம் அணுகல்வேண்டி (549) நல் வலத்திரீஇ—(553) 'தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர் (556) எக்கர் மணலினும் பலர்; (557) அதனால், நம் வரைந்த நாள் புகழொடு கழிக' என்று கருதிப் (558) பரந்திடங்கொடுக்கும் உள்ளத்தோடே (560) அமர்ந்து இனிது நோக்கிக் (561) கலிங்கம் (562) வெள்ளரைக் கொளீஇப் (566) பலநாள் நிற்பினும் (563) தடியொடு (564) அரிசிமுட்டாது (565) தலைநாளன்ன புகலொடு (566) தரப்பெறுகுவிர் என இயையும்.

கவனிப்பு :—நச்சினார்க்கினியர் 'நீண்மொழிக் குன்று நல்லிசைச் சென்றோரும்பல்' (539-40) என்ற இந்த அடியைப் பின்வரும் 'மெல்

லெனக் கூறிவிடுப்பின்' (568) என்பதன்பின் இயைத்துப் பொருள் காணும் கருத்துடையர்: மற்றும் 'சென்றோரும்பல்' என்ற இதனை 'நாடுகிழவோன்' (583) என்றதனோடே சேரவைத்து "தலைநாள்பரிசில் நல்கி விடுக்கும்" (580-81) என்பதற்கு எழுவாயாக்கினர்; இஃது சாலப் பொருந்துவதே.

கருத்துரை:—[முற்றத்தையணுகித் தேவபாணியைப் பாடின பின்பு] புதிதாகப் பாடும் பாட்டுக்களைப்பாடி, "கொடைக்கடனிறுத்து நல்லிசை கொண்டோர் வழியில் வந்தவனே! உலகமுள்ள வளவும் நின்பேர் நிற்கும்படி கொடைக்கடனிறுத்த செம்மலோய்!" என்று இவ்வாறு கூறி, அவன் வெற்றிப்புகழ்களை அவன் ஐம்பொறிகளைத் தன்வசமாக்கின வெற்றியோடே சேரப்புகழ்ந்து, நும் மனத்திற்சென்ற மற்றைப் புகழ்களையும் முற்றக் கூறும்வரையும் அமையானாய், "நீவிர் என்மேல் வைத்த நசைதர என்னிடத்து வந்தமையே போதும்; நுமக்கு வழிவந்த வருத்தமோ பெரிது" என முகமன் கூறி, பின் படைத்தலைவரோடு பொலிவுபெற்றுச் செல்வச் சிறப்பொடு விளங்கும் தன் மனையின் முற்றத்தே நுங்களைச் செல்ல விட்டுப் பின் சான்றோர் குழுமியிருக்கும் திருவோலக்க மண்டபத்தே யிருந்து—"உயர்ந்த அரசவுரிமையையும் நல்லமைச்சரையும் அகன்ற நாட்டையும் அறிவு நுட்பத்தையும் உடையராயிருந்தும், தம்மை நாடி யிரந்து வந்தோர்க்கு 'இல்லை'யென்று மறித்த கையினையுமுடையராயிருந்தமையால், தம் பெயரை உலகில் நிறுவாமல் தம்முடனே கொண்டு பொன்றக்கெட்டுப்போன அரசரோ சேயாற்றிடுமணலினும் பல்லோராவர்; ஆகையினால், நமக்கென வரையப்பட்ட வாணாளாவது புகழொடு கழிவதாகுக" என்ற பரந்த உள்ளத்தோடு, பரிசில் பெற விரும்பி மகிழ்ந்த நெஞ்சொடு சென்ற நும்மினும் தான் பெரிதும் முகனமர்ந்து இனிது நோக்கி, நுண்ணிய நூலாற்செய்த ஆடைகளை நும்மை உடுக்கப்பண்ணி, நீவிர் பலநாள் தங்குவீராயினும், பசிய நிணத்தையுடைய தசைகளோடே வெள்ளிய நெல்லினரிசிச் சோற்றையும் முதனாள்போன்ற விருப்பத்தோடே பெறுகுவிர் என்று ஆற்றுப்படுப்போன் நன்னனின் வரவேற்றளிக்கும் பெற்றிமையைச் சிறப்புறக் கூறியமை கருத்து.

விசேடவுரை :—பாணியென்றது - பாட்டு என்றார் அடியார்க்கு நல்லாரும் (சிலப்: 6-35 உரை). விருந்திற்பாணி - தம் இசையிற் புதுமையுண்டாகப்பாடும் பாட்டெனினுமமையும். நீண்மொழி - வஞ்சினம். அதாவது தனது வேல்வீரர்க்குத் தான் நாடும் ஊரும் கொடுப்பதாகக் கூறிய வஞ்சினம். அந் நீண்மொழியிற் குன்றாமையாவது - தான் கூறிய வஞ்சினப் படியே அவ் வேல்வீரர்க்குக் கொடுத்தவற்றைப் பின்னொருகால் திரும்ப வாங்கிக்கொள்ளாமை. அத்தகைய "நல்லிசைச் சென்றோர்" என்றமையால், 'வேல்கிழல்புலவோர்க்குக் கொடைக்கடனிறுத்த அவன் தொல்லோர் வரவு' (88-89) கூறியபடி. உம்பல்-வழித்தோன்றல் என்ற பொருளது; 'திரைதரு மரபின் உரவோன் உம்பல்'

(பெரும்பாண்-31), 'பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்' (மதுரைக்: 61) என்ற விடங்களிலும் இப்பொருளில் வருதல் காண்க. மேன்மையென்று பொருளுள்ள 'உ' என்பதனடியாகப் பிறந்த உம்பல் என்ற சொல்-சிறந்த மகன் என்ற பொருளைக் காட்டும். இனி, உம்பல் என்பதற்கு யானையென்று பொருளிருத்தலின்,'யானை போல்வானே' என்று உரை கூறினருமுளர். இடை தெரிதல்-நன்று இது தீது இஃது என்று ஆராய்தல்; அதாவது, "நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம், இல்லெனினு மீதலே நன்று" என்பது. "இன்னுயிரேனுங், கொள்ளுதல் தீது கொடுப்பது நன்ருல்" என்றது கம்பராமாயணமும். எனவே, பெரியோர்-ஈண்டு, உபகாரிகளைக் குறித்தது. 'நல்லிசைச் சென்றோரும்பல்' என்று முன்னர்க் கூறியதற்கேற்ப, நன்னனைக் 'கொடைக்கடனிறுத்த செம்மலோய்' என்றது. 544-ஆம் வரியில் 'வென்றி' என முன்னர்க் கூறிப் பின் மீண்டும் 'விறலோடு' என வந்திருத்தலின், நச்சினர்க்கினியர், 'வென்றி' என்பது-போர்வெற்றியையும், 'விறல்' என்பது-ஐம்பொறிகளைத் தன்வசமாக்கிக்கொண்டவெற்றியையும் [இந்திரியஜயத்தையும்] குறிக்கும்படி உரைகண்டார்; இந்நயம் போற்றத்தக்கது. சென்றது-வினையாலணையும் பெயர். நொடிதல்-கூறுதல். 'நொடியவும் விடான்' என்றது, நன்னனின் தலையளி செய்ய விரையும் பண்பு குறிப்பது. 'எதிரிய வயவர்' என்றது அவர்க்குப் போரிலுள்ள ஆர்வங் குறிப்பது. திருநகர்-திருவுடைய நகர்; இங்குள்ள 'உடைய' என்பதனோடு 'பொலிந்து' என்னும் எச்சத்தை முடிக்க என்றனர் நச்சினர்க்கினியர். ஒக்கல்-சுற்றம்; ஈண்டு அரசச் சுற்றமாகிய சான்றோருக்காயிற்று. இச்சான்றோர், 'மூவிருகுற்றமும் முறைமையிற்கடிதலின் காவற்சாகாடு உகைத்தற்கு உரியனாய அரசன் தன்னைத் தீநெறிவிலக்கி நன்னெறிச் செலுத்தத் துணையாக் கொள்ளும் பேரறிவுடையா'ராவர். வலம் - இடம். நல்வலம்-சமயத்திருக்கும்மண்டபம்; அதாவது, திருவோலக்க மண்டபம். ஆகவே, 'கல்லென் ஒக்கல் நல்வலத்துஇரீஇ' என்ற இத்தொடரால், நல்லிதினியக்குமவன் சுற்றத்தொழுக்கமும் (80) அவன் நாண்மகிழிருக்கையும் கூறியபடி. கட்டில் - அரசவுரிமைக்கு ஆகு பெயர்; சிங்காதனமுமாம். உரும்பு-கொடுமை; 'உரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகி' என்றது பெரும்பாணும் (447). தாயம் - நாடு; இனி, உரிமைகளெல்லாவற்றையும் கூறிற்றெனினுமாம். அஃகிய நுட்பம் - நுண்ணிதாய நுட்பம், சூட்சுமமாய நுட்பம். நுட்பம் - அறிவு; எனவே, மிக நுண்ணிய அறிவு என்றபடி. 'அஃகி அகன்ற அறிவென்னும்' என்ற குறளிலும் காண்க. இனி, அஃகுதல்-சுருங்குதல், குறைதல் எனக்கொண்டு-அறிவின்மை குறிப்பதாக் கொண்டாருமுளர்; ஆயினும் "உரும்பில் சுற்றத்து அகன்ற தாயத்து" என்றவற்றோடு ஒருசேரவைத்து 'அஃகிய நுட்பத்து' எனவந்திருத்தலின் மேம்பாடு தோன்ற உரைவகுத்தலே நேரிது எனத் தோன்றுகிறது. வடு-அறல், கருமணல். எக்கர் - இடுமணல். தோய் - உவமவுருபு. விசும்பு விரிந்து பரந்து அனைத்திற்கும் இடங்கொடுத்து நிற்பது போல, நன்னனது உள்ளமும் விரிந்து பரந்து கொடுத்தற்றொழில்

போன்ற நல்லனவனைத்திற்கும் இடங்கொடுக்கும் என்று உவமையை விரித்துக்கொள்க. 'பரந்திடங்கொடுக்கும் விசும்புதோய் உள்ள மொடு' (558) என நன்னனுள்ளத்தைச் சிறப்பித்திருப்பவே, பின் வந்த 'உவந்த உள்ளமோடு' (560) என்பதைப் பரிசில்பெறவந்த கூத்தனுக்கேற்றி யுரையிட்டார் நச்சினார்க்கினியர்; இவ்வுரைநயம் கூர்ந்தறிந்து போற்றத்தக்கதே. முடுவல்-பெண்நாய். தந்த - கடித்துக் கொண்டுவந்த. 'பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ' என்றார் முன்னரும் (177). தலைநாள் - முதற்சென்ற நாள். புகல் - விருப்பம்.

அடிகள் 566—583:—'நில்லாது ஊர்க்கே மீண்டுபோவேம்' என்றாலும், அத் தலைநாளில் நன்னன் அளிக்கும் பரிசிற்சிறப்புக் கூறும்.

நில்லாது
செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கூறி விடுப்பின் நும்முள்
தலைவன் தாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய
நீரியக் கன்ன நிரைசெல னெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழம்
கறங்குமணி துவைக்கும் ஏறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமோ டனைத்தும்
இலம்படு புலவர் ஏற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்
வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழைசுரந் தன்ன வீகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்
வென்றெழு கொடியிற் றோன்றுங்
குன்றுசூ ழிருக்கை நாடுகிழ வோனே.

(இ - ள்.) (566) நில்லாது-அவ்விடத்து நில்லாதே, (567) எம் தொல் பதி பெயர்ந்து செல்வேம்-எம்முடைய பழைய ஊரே மீண்டு போவேம்; இல்ல-இஃது எங்களுக்கு விருப்பம், என-என்று, (568) மெல்லென கூறி-அவன் பொறுக்கச் சொல்லி, விடுப்பின்-அவனை விட்டுப் புறப்படுவீராயின்,—(581) மலைநீர் (582) வென்று எழு கொடியில் தோன்றும் (583) குன்று சூழ் இருக்கை நாடு கிழவோனே-மலையினின்றும் விழுகின்ற அருவிகள் வென்றுயர்கின்ற கொடிகள்போலத் தோன்றும் மலைகள் சூழ்ந்த பரப்பினையுடைய நாட்டிற்கு உரிமையையுடையோன், (576) இலம் படு புலவர் ஏற்ற கை நிறைய (577) கலம் பெய கவிழ்ந்த கழல் தொடி தட கையின் - இல்லாமையுண்டான புலவர் ஏற்ற கைந்நிறையும்படி பேரணிகலங்

களைச் சொரிகையினாலே கீழ்நோக்கின உழலுந்தொடி யணிந்த பெரிய கையினிடத்துண்டாகிய, (578) வாய் வளம் பழுநி (579) கழை வளர் நவிரத்து மீமிசை-வாய்த்த வளப்பம் முற்றுப்பெற்று மூங்கில் வளர்ந்த நவிரமென்னும் பெயருடைய மலையிடத்துச்சியிலே, ஞெரேரென (580) மழை சுரந்தன்ன ஈகை-கடுக மழை சொரிந்தாற் போன்ற கொடையாலே, (578) வளம் பிழைப்பு அறியாது-தான் கொடுத்த செல்வம் கெடுதலையறியாதபடி, (575) நிலம் தினக் கிடந்த நிதியமோடு - மண்தின்னும்படி பழைதாய்க்கிடந்த பொருட்டிரளோடே, (571) நீர் இயக்கு அன்ன நிரை செலல் நெடு தேர்-நீரின் செலவினையொத்த நிரைத்துச் செல்கின்ற செலவினையுடைய நெடிய தேர்கள், (572) வாரி கொள்ளா வரை மருள் வேழம்-யானைபடுகின்ற விடத்திற் பிடித்துக்கொள்ளாத மலையென்று மயங்கும் யானைகள், (573) கறங்கு மணி துவைக்கும் ஏறு உடை பெரு நிரை-ஒலிக்கும் மணிகள் ஆரவாரிக்கும் ஏறுகளையுடைய பெரிய பசுத்திரள்கள், (574) பொலம் படை பொலிந்த கொய் சுவல் புரவி-பொன்னாற் செய்த கலனைமுதலியவற்றாற் பொலிவுபெற்ற மயிரைப் பலகாலும் கொய்யும் கழுத்தினையுடைய குதிரைகள், (575) அனைத்தும்-இவையெல்லாவற்றையும்,—(568) நும்முள் (569) தலைவன் தாமரை மலைய-நுங்களில் தலைவனானவன் பொற்றாமரையைச் சூட, விறலியர் (570) சீர் கெழு சிறப்பின் விளங்கு இழை அணிய-விறல்பட ஆடுமகளிர் அழகு பொருந்தின தலைமையினையுடைய விளங்குகின்ற பேரணிகலங்களைப் பூண, (581) தலைநாள் பரிசில் (580) நல்கி (581) விடுக்கும்-முதனாளிலே பரிசில்தந்து போகச்சொல்லும்; (எ - று.)

(566) நில்லாது (567) செல்வேமெனக் (568) கூறிவிடுப்பின், (583) நாடுகிழவோன் (577) தன் தடக்கையினிடத்துண்டாகிய (580) மழை சுரந்தன்ன [இயல்பாகிய] ஈகையாலே (578) வளம் பிழைப்பறியாதபடி (575) நிதியத்தோடே (571) தேர் (572) வேழம் (573) நிரை (574) புரவி (575) இவையனைத்தும் (569) தலைவன் தாமரை மலைய விறலியர் (570) இழையணியத் (581) தலைநாளிலே பரிசிலாக (580) நல்கி (581) விடுக்கும் என இயையும்.—ஆதலால், அவன்பாற் றாழாமற் கடிதாகச் சென்று பரிசில்பெறுவீராக எனக்கூட்டி வினை முடிவுசெய்க.

கருத்துரை:—பலநாள் தங்கியிருக்க விரும்பாது தலைநாளிலேயே 'எம்முடைய ஊர்க்கு மீண்டுபோவேம்' என்று அவன் அரிதிலிசையச்சொல்லி விடைகொண்டு அவனை விட்டுப்பிரியின், அம்முதனாளிலேயே நன்னன் தன் அறஞ்செறிந்த கையினிடத்துண்டாகிய மழைசுரந்தன்ன இயல்பாகிய கொடைத்தொழிலாலே, தான் கொடுத்த செல்வம் கெடுதலையறியாதபடி, பழைய பொருட்டிரளோடே நெடியதேர்கள், பகைவர்திறைதந்த யானைகள், பெரிய பசுத்திரள்கள், பொலிவுபெற்ற குதிரைகள் ஆகிய இவையெல்லாவற்றையும் பரிசிலாக நல்கி, மேலும், நுங்களில் தலைவனானவன் பொற்றாமரையைச் சூடவும், விறலியர் விளங்குகின்ற பேரணிகலங்களைப்

பூணவும் தந்து போகச்சொல்லுவன் என்று ஆற்றுப்படுப்போன் கூறியமை கருத்து.

விசேடவுரை:—தொல்பதியென்றது, இதுவும் தமக்குப் பதியென்பதுதோன்ற. இவ்வுரையைத்தைப் பொருநராற்றுப்படை 121-ஆம் வரியிலுங் காணலாம். தில்ல-இடைச்சொல்: விழைவின் கண் வந்தது. 'மெல்லெனக்கூறி' என்றது, அவன் வருந்தாதபடி இசைய மனங்கொளச் சொல்வது குறித்தது. "சேறுமெந் தொல் பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கிளந்தனமாக" என்ற பொருநராற்றுப்படையும் நினைக. அருவிகள் பலகொடிகள்போலத் தோன்றுமென்பதைத் திருமுருகாற்றுப்படையாலும் அறியலாம்; 'வேறுபல் துகிலின் நுடங்கி.........இழுமென இழிதரும் அருவி' என்றது திருமுருகு (296...316). இலம் - உரிச்சொல்: 'இலமென் கிளவிக்குப் படுவரு காலை, நிலையலு முரித்தே செய்யுளான' [தொல்: எழுத்: புள்ளி: 21] என்ற சூத்திரத்து இளம்பூரணர் 'இலம்படு புலவ ரேற்றகைந் நிறைய' என்ற இத்தொடரை உதாரணமாக எடுத்துக்காட்டி, மேலும், 'உரிச்சொல்லாகலான் உருபு விரியாதெனினும் இலத்தாற் பற்றப்படும் புலவரென்னும் பொருளுரை நிற்றலின், வேற்றுமை முடிபாயிற்று' என்றார். நச்சினார்க்கினியரோ இத்தொடர்க்கு 'இல்லாமையுண்டாகின்ற புலவரெனப் பொருள் கூறுக' என்றார். இலம்-இல்லாமை, வறுமை. இந்த உரிச்சொல், பெரும்பான்மையும் பாடென்னுந் தொழில்பற்றி இலம்பாடு என வரும். 'இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை' என்றது தொல்காப்பியம். கலம்-அணிகலம். கழல்தொடி - வினைத்தொகை. ஞரேரென-கடுக, விரைவாக. மழைசுரந்தன்ன ஈகை-மழைக்குச் சொரிதல் இயல்பாதல்போல நன்னனுக்கு ஈகை இயல்பாதல் குறித்தபடி. ஈகைமாரி என்றார் முன்னரும் (72). வாரி - யானை யகப்படுத்துமிடம். 'வாரிக் கொள்ளா வேழம்' எனவே, பகைவர் திறைதந்த யானைகளைக் காட்டிற்று; பிறகுறிப்பின்பாற்படும். பொலம்-பொன்; பொன்னென்பது பொலமெனத் திரிந்து வந்தது; "பொன்னென் கிளவி யீறுகெடுமுறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரம், செய்யுண் மருங்கிற் றொடரிய லான" [தொல்: எழுத்: புள்ளி: 61] என்ற சூத்திரத்து உதாரணமாக இளம்பூரணர் இவ்வடியைக் (574) காட்டியுள்ளனர். படை-கலனை முதலியன. கலனை-சேணம். அரசரிடத்துப் பரிசிலாகப் பாணன் கூத்தன் முதலியோர் பொற்றாமரைப் பூப்பெற்றுச் சூடுதலும், பாடினி [விறலியர்]பொன்னரிமாலை முதலியன பெற்று அணிதலும் பண்டைக்காலத்து வழக்கங்கள்; "பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி, ஒண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டி" (பதிற்: 48), "பாடினி மாலை யணிய, வாடாத் தாமரை சூட்டுவ னினக்கே" (புறம்: 319), "வாடா மாலை பாடினி யணியப், பாணன் சென்னிக் கேணி பூவா, எரிமரு டாமரைப் பெருமலர் தயங்க" (புறம்: 364) என்பன காண்க. 569-581, இதனால்,வீயாது சுரக்குமவன் நாண்மகிழிருக்கை (76) கூறினர்.

மலைபடுகடாத்தில் தொகுதிப்பட்ட வினைமுடிபு காட்டுமாறு:—

(3) முழவொடு ஆகுளியும்...(11) பதலையும் பிறவும் (8) துதைஇ (13) அவற்றைச் சுருக்கிக் காய கலப்பையிராய் (20) இயவுக்கொண் டொழுகிப் (37) பேரியாழை (38) அமைவரப்பண்ணித் (40) துறைபல முற்றிய பாணரொடு (46) விறலியர் நிற்புறஞ்சுற்றப் (48) புறவில் (47) தண்ணிழலிலே (49) புலம்பு விட்டிருந்த (50) கண்ணுள ரொக்கல் தலைவ! (52) மீமிசை யிழிந்த யாறு கடற்படர்ந்தாஅங்கு [நன்னன்பாற் படர்ந்து] (53) யாம் அவணின்றும் பரிசில்பெற்று வருதும்: நீயிரும் (64) நன்னன்சேய் நன்னற்படர்ந்த கொள்கையொடு (65) சேறீராயின், (66) என் தாக்குறுதலின் (65) எதிர்ந்த பொழு தையும் (66) புள்ளையும் உடையிராயிருந்தனிர்; இனி, (67) ஆற்றின தளவும் புலமும் (68) வல்சியும் (69) மலையும் சோலையும் கானமும் (72) ஈகைமாரியும் (73) ஆற்றலும் (76) நாண்மகிழிருக்கையும் (80) அவன் சுற்றத்தொழுக்கமும் (83) காரியுண்டிக் கடவுளதியற்கையும் (85) அவன் வசையில் சிறப்பும் (89) அவன் தொல்லோர்வரவும் (93) அவன் மூதூர் மாலையும் [இருக்கும்படி] (94) கேட்பாயாக; அவற் றுள், இனி வேளை நீ முன்னிய திசையைக் கேள்;

(98) இட்டவெல்லாம் பெட்டாங்கு விளைய (97) வானம் பொழி கையினாலே (99) பெயலொடு வைகிய புனத்து (101) முசுண்டை விரிந்தன; (106) எள் ஒழுகின; (108) ஏனல் கொய்பதமுற்றன; (110) அவரை காய்கொண்டன; (113) வரகு கவர்வுற்றன; (120) புறவிலே (121) தோரை அவற்பதங்கொண்டன; (122) துடவையிலே (123) ஐயவி யமன்றன; (123) வெண்காற் செறுவிலே (115) ஐவனநெல்லும் வெண்ணெல்லும் விளைந்தன; (119) கரும்பு ஆலைக்கு அலமரும்; (124) நெய்தல் விரிந்தன; (141) நெடுமலையடுக்கத்து (126) இஞ்சி காயங்கொண்டன; (128) கவலை வீழ்ந்தன; (131) வாழை (132) பழுத்தன; (133) உந்தூழ் அலமரும்; (135) நாவல் (கனி) உதிர்ந்தன; (136) உயவை ஒழுகின; (137) கூவை குழீஇயின; (138) தேமாத் தடுத்தன; (139) ஆசினி (அரலை) உக்கன; (144) பலவு இறைஞ்சின; (95) இவ்வாறே மிகுவளம் பழுநிய யாணர் வைப்புக்களாலே (96) புதுவது வந்தன்று; அவ்வழியின் பண்பு இத்தன்மைத்து;

அவற்றைக் கண்டு (151) மலைச்சாரலிலே (155) கானவர் (156) சிறுகுடிப்படின் (157) ஒக்கலொடும் பதமிகப் பெறுகுவிர்; (158) அசைஇ அன்று அற்சேர்ந்து அவண் அல்கிப் (160) போகிப் (162) பாக்கமெய்தி (164) விறல்வேள்வயிரியம் எனினே, (168) வேவை யொடு (169) இறடிப் பொம்மல் பெறுகுவிர்; (188) அவன் மலைமிசை நாடு அனையதன்று [மிகவும் சிறப்புடைத்து; ஆண்டுப் பெறுவன வற்றைக் கேட்பீராக] ஆண்டுத் (177) தடியொடு (175) கொழுங்குறை யையும் (176) பிளவையையும் (177) விரைஇ [தின்று இடை யிடையே] (171) தேக்கட்டேறலைப் (172) பருகிப் [பின்னர்] நறவை மகிழ்ந்து, வைகறையில் (173) அனந்தல்தீரக் (183) குறமகள் (179)

மாவையும், இனிய புளிப்பையும், மோருக்கு அளவாகக் கலந்து,(180) கழைவளர் நெல்லினரிசியைத் (181) துழைஇ (183) ஆக்கிய வல்சியை (185) மகமுறைதடுப்ப மனைதொறும் (170) மலைத் தாரத்தோடே (185) பெறுகுவிர்; [ஆண்டுப்பெற்றவற்றால்] (187) பரிசில் மறப்ப நீடலுமுரியிர்; [அங்ஙனம் நீட்டிப்பின்] (189) கடிவீதொடினும் (190) வரையரமகளிர் இருக்கைகாணினும் (191) பனித்தலுமுரியிர்; (192) ஆதலால், பலநாணில்லாது நிலநாடு படர்மின்;

படரும்பொழுது (195) அவ் வாறே (194) அரும்பொறி (195) உடைய; ஆகையினாலே நள்ளிருள் (196) வைகினிர் விரிந்த விடியல் கழிமின்; கழிந்து (197) செப்பந் துணியின், அவ்விடம் (198) போழ்வில் (199) பாம்பு ஒடுங்கும் பயம்புமுள;(200) குறிக்கொண்டு கொட்டி நோக்கி (201) விறலியர் தொழூஉப்பழிச்ச (202) நெறியொரீஇ வலஞ்செயாக் கழிமின்; கழிந்து (203) குறவர் (204) ஏறிக் கைபுடையூ (205) யானையின் (206) நிலைதளர்க்குங்கல் (209) கூற்றத்தன்ன; அவை (208) ஊகம் பார்ப்போடிரியத் (207) தத்தி (210) விசை தவிராது வரும்; அதற்கு மரம்மறையாக் கழிமின்; கழிந்து (212) இருள்தூங்கு வரைப்பினையும் (213) முடுக்கரினையும் உடைய (214) கான்யாற்று நடவை (215) வழூஉம் மருங்குடைய; அவ்விடத்திற்கு (216)வலந்த பரூஉக்கொடி மதலை பற்றி (215) வழாஅலோம்பி (218) ஒருவிரொருவிரோம்பினிர் கழிமின்; கழிந்து (219) சாரலில் (220) கயத்து அருகா (221) நுண்ணீர்ப் பாசிவழும்பு (222) அடிநிலை தளர்க்கும்; [அதுவுமன்றி, அவ்விடம்] அருப்பமுர உடைய; [அதற்குப் பரிகாரமாக] (223) வேரலோடு (224) எருவை மென்கோல் பற்றினிர் கழிமின்; கழிந்து (229) மூத்த புரிசையில் (230) கடவுட்காணின் (233) அவன் வெற்பு மாரிதலையுமாதலின், (231) தொழா கழியினல்லது (232) நும் மியங்தொடுதலோம்புமின்; ஓம்பி (235) மஞ்ஞை தளரினும் (237) கடுவன் உகளினும் (239) பிரசங் காணினும் (240) ஞெரேரென நோக்கலுரித்தன்று; (241) நெறிமாறுபடுகுவிர்; அங்ஙனம் நெறிமாறுபடாமற் போய்க் (242) கானத்துப்படின் (243) சேணோன் [எய்த] ஏவொடு போகிக் (246) கிடந்த (247) ஏனங்காணின் (248) தீயின் (249) புகைகமழாது இருயினிர் மிசைந்து (251) சுனையில் (250) தெண்ணீர் (251) பருகிப் (252) பொதியினிராய் (253) மகாரோடு (254) அற்குக் கழிதலோம்பிக் (255) கல்லளை வதிமின்; வதிந்து (256) அசைதலோம்பி (257) விடியலேற்றெழுந்து (258) செந்நெறிக் கொண்மின்; [கொண்டு] (261) மாசுணம் விலங்கி (266) நோக்கிக் (267) குறுகாது கழிமின்; கழிந்து (270) நாடுகாணனந்தலை மென்மெல அகன்மின்; [அகன்று] (272) நனந்தலைக் (275) குன்றத்துப்படின் (276) பாறைத்துவன்றி (277) இயங்க்ள் தொடுமின்; [தொட்டால்] (279) கானவருளர்; [அவர்கள்] (285) அவலம்வீட (281) விரைந்து வல்லெய்தி (282) பழனும் (283) பூவும் காட்டி (284) அவர் முந்துற (286) இனியராகுவிர்; [அங்ஙன் இனியிராய்] (287) அறிஞர் கூறிய மாதிரங்கைக்கொண்டு (289) அடுக்கத்து (288) இழிந்து (290) வரிநிழல் அசையினிர் இருப்பின்,—(296) இன்னிசையும் (299) பூசலும்

(301) அழுகையும் (304) பாடலும் (306) பூசலும் (310) குரலும் (314) பூசலும் (317) கொள்ளையும் (318) உவகையும் (322) குரவையும் (324) இசையும் (327) ஓதையும் (329) பூசலும் (335) கம்பலையும் (339) ஓதையும் (341) ஏத்தமும் (342) வள்ளையும் (344) பறையும் (345) என்றிவ்வனைத்தும் (344) குன்றகச்சிலம்பும் (345) ஒருங்கியைந்தீண்டப்பட்டு (346) ஒழிந்த ஓசைகளும் உடன் துவன்றுகையினாலே (348) மலைபடுகடாம் [=மலைகளாகிய யானைக்குண்டாகின்ற வொலி] (291) பலதிறம் பெயர்பவை (348) மாதிரத்தியம்பக் (291) கேட்குவிர்; கேட்டபின் (351) அவன் வெற்பு விழவினற்று; ஆண்டுக் (352) கண்டும் கேட்டும்(353) பாராட்டியும் (355) தொன்முறை மரபினிராகிப்(359) பாடிப் (360) பரவிப் பழிச்சினிராய் (359) மலைபிற்படக் (360) கழிமின்; கழிந்து (361) மலையிடத்து (362) மழைத்தொழுதி (363) துவற்றலின் (364) தேஎம் தேருக் கடும்பொடு (365) இயந் தொய்படாமல் (366) விடரகம் புகுமின்; புகுந்து (368) குன்றில் ஆரிடரழுவத்து (372) ஊறு தவப்பல; [அவற்றைக்] (370) கோல்கொண்டு (372) ஊன்றினிர்கழிமின்; கழிந்து (373) பாறையில் (374) இன்னலியக்கத்துக் (375) கதிர்சினந்தணிந்த அமயத்துக் கழிமின்; கழிந்து அவ்விடம் (378) அரசுநிலை தளர்க்கும் அருப்பமுமுடைய; அவ்வரண்களிற் போயின் (379) நுழைதொறும் (380) முன்னோன் வாங்கிய கோல் (381) பத்தரும் (382) கண்ணும் [கெடாது] ஓம்பிக் (383) கைபிணி விடாது கழிமின்; (385) கழிந்தாற் கானம் தவப்பல; (389) ஆண்டுக் கல் (388) நட்ட (389) கவலை மிகப்பல; (391) அக்கல்லிற்கு மருப்பிகுத்துத் துனைமின்; (392) அப்பொழுது புதுவிர் (393) புல் முடிந்திடுமின்; இட்டுப்போனால் (394) செல்லுந் தேஎத்துக் (396) கவலைகளில் (398) சுரந் தவப்பல; அவை சுட்டினும் பனிக்கும்; எனினும், (400) ஓம்பா வள்ளற் படர்ந்திகுமெனின் (402) நும்மனோர்க்கு ஆங்கனம் (401) அவன் மூதூர் (402) அற்று; (403) அசைவுழி யசைஇ அஞ்சாது கழிமின்; (405) அக் கானத்தையூழிறந்து (407) புறவினிடத்து (409) ஆன்றீம்பாலைக் கோவலர் (410) சொரிகையினாலே (412) புலம்பு சேணகலப் புதுவிராகுவிர்; [அங்ஙனம் விருந்தாய்] (416) பல்யாட்டினநிரையிலே புகின் (417) பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்; [அவற்றைப் பெற்று] (419) அதட்பள்ளியிலே (420) சேந்தனிர்கழிமின் ; கழிந்து (422) கூளியர் கூவை காணிற் (424) கணவற் படர்திகுமெனின் (425) தடியுங் கிழங்கும் தரீஇ (426) ஓம்புநரல்லது உடற்றுநரில்லை; அவற்றை நுகர்ந்து (427) வியங்கொண்மின்; அது அதன்பண்பு; அப்பண்பைக்கண்டு (430) கண்ணியைச் (431) சூடி (432) நடவை தண்ணென (433) உண்டனிர் ஆடிக்கொண்டனிர் கழிமின்: கழிந்தால், (436) புளிங்கூழை (437) அற்குக் (439) குடிதொறும் பெறுகுவிர்; பெற்று (443) அசையினிர் சேப்பின் (445) நுவணையோடே (441) அமலையை (442) இழுதுள்ளீடாக (443) அல்கலும் பெறுகுவிர்; அவற்றைப்பெற்று (446) ஞெகிழிமாட்டித் (447) துஞ்சிப் (448) புள்ளோர்த்துக் கழிமின்; கழிந்தால், (449) காஞ்சியும் புதவும் (450) அவலும் (451) காவும் பள்ளியும் உடைய (453) அவன் தண்பணைநாடு

(450) ஊர்தோறும் (453) நன்பலவுடைத்து; அதனையடைந்தால் (462) வினைஞர் வல்சி நல்காநிற்பப் (459) பழையர்மகளிர் (455) வாளைத்தடியை (457) வராலினது (458) குறையொடு விரைஇத் (463) தேறலை (462) நல்க, (464) அவற்றைப் பெறுகுவிர்; அவற்றைப் பெற்ற பின்பு (468) கண்டோர் மருள (465) இயற்றிய வெண் சோற்றை அவரவரிட (468) அருந்தி (470) மருதம்பண்ணி அசையினிர் கழிமின்; கழிந்து (472) எருமையொருத்தல் (473) கதழ்ந்து வரல்போற்றி (475) ஓவிறந்து வரிக்கும் (476) சேயாற்றின் (477) ஒருகரைக் கொண்டனிர் கழிமின்; கழிந்தால், (486) காவினையும் (478) மதிலையும் (480) நியமத்தினையும் (482) மறுகினையும் (481) பெருந்தெருவினையும் உடையதாய் (478) நிதியந் துஞ்சும் (487) அவன் மூதூர் நனிசேய்த்தன்று; அவ்வூரிற்சென்றால் (491) அருங் கடி வாயிலை அயிராது புகுமின்; புக்காற் (492) பரிசிலர் (495) கண் டோரெல்லாம் (493) பெருவிறலுள்ளி (494) வந்தோரென (495) நோக்கி (497) வருத்தம்வீட (496) அவர் விருந்தாய் எதிர்கொளக் குறுகிப்பின்னர்,—

(500) ஆமான்குழவி, கயமுனிக்குழவி (501) எண்கின்குருளை (503) வருடை வன்றலை மாத்தகர் (504) தீர்வை (506) மரையான் குழவி (508) உடும்பினேற்றை (509) மஞ்ஞை (510) கானக்கோழிச் சேவல் (511) பலவின்பெரும்பழம் (512) மாவின் (513) தீம்பழத் தாரம் (514) நறைக்கொடி (515) நூறைக்கிழங்கு (516) பளிங்கு, மணி (518) முத்துடை மருப்பின் திரள் (519) காந்தள் (520) நாகம், திலகம், ஆரம் (521) மிளகின் பசுங்கறி, (522) தேக்கட்டேறல் (523) தீந்தயிர் (525) நெய்க்கண் இறால் (526) ஆசினி [ஆகியஇவை] யனைத்தும் உடம்புணர்பு (528) கயவாய்கடுப்ப (529) நெடுங்கடையில் துவன்றியிருப்ப, (531) முற்றமுன்னி—

(532) முழவுகண் இருப்ப (533) தூம்பின் கண்ணிடம் இமிர (536) கடவதறிந்த இன்குரல் விறலியர் (538) கடவுட் பழிச்சிய பின்றை (539) விருந்திற் பாணி கழிப்பி (540) உம்பல்! (543) செம்மலோய்! எனக்கூறி (544) ஏத்திச் (545) சென்றது நொடியவும் விடானாய் (546) வருத்தமும் பெரிதெனக்கூறி, (548) திரு [வுடை] நகர் முற்றம் அணுகல்வேண்டி (549) நல்வலத்திரீஇ — (553) 'தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர் (556) எக்கர் மணலினும் பலர்; (557) அதனால், நம் வரைந்த நாள் புகழொடு கழிக' என்று கருதிப் (558) பரந்திடங்கொடுக்கும் உள்ளத்தோடே (560) அமர்ந்து இனிது நோக்கிக் (561) கலிங்கம் (562) வெள்ளரைக் கொளீஇப் (566) பலநாள் நிற்பினும் (563) தடியொடு (564) அரிசி முட்டாது (565) தலைநாளன்ன புகலொடு (566) தரப்பெறுகுவிர்; நில்லாது (567) செல்வேமெனக் (568) கூறிவிடுப்பின், (583) நாடு கிழவோன் (577) தன் தடக்கையினிடத்துண்டாகிய (580) மழை சுரந்தன்ன [இயல்பாகிய] ஈகையாலே (578) வளம் பிழைப்பறியாதபடி (575) நிதியத்தோடே (571) தேர் (572) வேழம் (573) நிரை (574) புரவி

(575) இவையனைத்தையும் (569) தலைவன் தாமரை மலைய விறலியர் (570) இழையணியத் (581) தலைநாளிலே பரிசிலாக (580) நல்கி (581) விடுக்கும்; ஆதலால், அவன்பாற் றாழாமற் கடிதாகச் சென்று பரிசில் பெறுவீராக எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

இதிலுள்ள உவமைகள் பின் வருமாறு:—(1-3) விசும்பின் விண்ணதிரிமிழிசை × முழவின் கண்ணிடத்தெழும் ஓசை, (6) யானையின் கைபோலும் தூம்பு, (12) கார்கோட் பலவின் காய்த் துணர் × வார்சியங்கள், (15) படுத்து வைத்தன்ன பாறை, (16) எடுத்துநிறுத்தன்ன இட்டருஞ் சிறுநெறி, (21) தொடித்திரிவன்ன திவவு, (24-25) வரகின் குரல் வார்ந்தன்ன நுண்துளை, (29) பொன் போற்பச்சை, (31-33) மடந்தை ஆகத்து அடங்கு மயிரொழுகிய அவ்வாய்கடுப்பப் பொல்லம் பொத்துதல் நடுவே சேரப்பட்டிருத்தல், (36-37) களங்கனி நிறம் × யாழ்க்கோட்டின்நிறம், (42-43) மதந்தபு ஞமலி நா × துளங்கியன் மெலிந்த சீறடி, (44) [விறலியர்] கணங் கொள் தோகையிற் கதுப்பிகுத்து, (47) கயம் புக்கன்ன பயம்படு தண்ணிழல், (52) நல்யாறு கடற்படர்தல் × பரிசிலர் நன்னனை நோக்கிப் போதல், (54-55) கனிபொழி கானம் கிளையொடு உணீஇய துனைபறை நிவக்கும் புள்ளினம் × நன்னனிடம் சுற்றத் தோடே சென்று பரிசில்பெற விரையும் பரிசிலர்குழு, (57) அமை × தோள், (58) மலர் × கண் (61) புதுநிறைவந்த புனல் × அஞ்சாயல், (75-76) பொய்யாவானின் வீயாது சுரக்கும், (85) ஞாயிறன்ன அவன் வசையில் சிறப்பு, (92) வரைபுரை நிவப்பின் வான்றோய் இஞ்சி, (100-101) ஆல் [ஆரல்] × முசுண்டை, (102-106) நீலமணி × எள்ளுத்தோடு ; அகளம் × சுனை, (107-108) கயமுனி முயங்கு கை × தம்மிற் பிணையுங்கதிர்களையுடைய தினை, (109) விளைதயிர்ப்பிதிர்வு × அவரையின் பூக்கள், (110) குளிர் [அரிவாள்] × அவரைக்காய், (111) மேதி × கல், (112) வாதி கை × வரகின் கவைக் கதிர், (116-117) வேலீண்டுதொழுதி யிரிவுறல் × காற்று மிகப்படு கின்ற ஆரவாரத்தாலே கரும்பு சாய்தல், (124) மை × நெய்த்தற்பூ, (127) பிடியின் முழந்தாள் × குழிதொறும் வீழ்ந்த கவலை, (129-131) வேல் யானையைக்குத்தினாற்போல வாழைப்பூ மலையைத் தீண்டி நிற்றல், (140-41) ஆகுளி கடுப்பக் குடிஞையிரட்டுதல், (142-144) அலங்கு சினைப்பலவு சுரஞ்செல் கோடியர் முழவின் கீழும்மேலும் தூங்கித் தாழ்தல், (145) தீ × செங்காந்தள், (149-50) வெறிக் களம் × பலஇதழ்கள் பரந்த வியலறை, (151) மணஞ்செய்தம்மனை × கமழும் மாமலைச் சாரல், (159) எரி × அசோகம்பூங்கொத்து, (206-209) கவணுமிழ் கடுங்கல் உயிர்செகுமரபிற் கூற்றத்தன்ன, (212) இரவினன்ன இருள்தூங்கு வரைப்பு, (214) அகழிழிந்தன்ன கான்யாற்றுநடவை, (217) துரு × புன்றலை மகார், (226) மாரியிகு தருதல் × வில் கணையுமிழ்தல், (234) அலகு [பலகறை] × பீலிவேர், (236-37) கோடியர் மகார் × கடுவன், (238-39) நேமி × பிரசம் [தேனிறால்], (244) இழுது × வால் நிணம், (247) இருள் துணிந்தன்ன ஏனம், (250) மணி [பளிங்கு] × தெண்ணீர், (261)

துஞ்சுமரம் X மாசுணம், (259-265) கயம் X பெருமரக்குழாம் [குளிர்ச்சியுடைமைக்கு உவமை], (268-69) ஆலத்துப் பறவைத்திரளின் பல ஒலி X பல வாச்சியங்களின் ஒலி, (281) புனற்படுபூசலின் விரைந்துவல்லெய்தி, (294-96) வாச்சியங்களின் இன்னிசை X அருவிநீரைக் கையாற் குடைதொறும் எழுமோசை, (307-310) இடியோசை X பிடிமுழங்குங்குரல், (323-24) தேரொலி X அருவியொலி, (340) மழைகண்டன்ன ஆலை, (361) பனுவல் [எஃகுறு பஞ்சு] X சூல்முதிராத மேகம், (362) கரிய மேகத்திரள் மலையிடத்து அணுகிக்கவிதல் X கை சென்று பிடித்தல், (366) கூவல் X விடரகம், (373) அயில்காய்ந்தன்ன கூர்ங்கற்பாறை, (377) மழை [மேகம்] X யானை, (379) பின்னி யன்ன பிணங்கரில், (384) களிறு மலைந்தன்ன கண்கூடு துறுகல், (413-416) நெல்லினரிசிகள் செம்மையும் வெண்மையும் கொண்டனவாய் விரவியிருத்தல் X செம்மறித்திரளும் வெள்ளாட்டுத் திரளும் விரவியிருத்தல், (434-36) செவ்வீ வேங்கைப் பூவினன்ன அவரைவிதை, (440) பொன்னறைந்தன்ன நுண்ணேரரிசி, (444-45) விசையங் கொழித்த பூழி [கருப்புக்கட்டியைக் கொழித்த பொடி] X இடிநுண் நுவணை [இடித்தலால் நுண்ணிதாகிய தினைப்பிண்டி], (450-453) நல்லியாழ்ப் பண்ணுப்பெயர்த்தன்ன கன்பலவுடைத்து, (457) பிடியின் கை X வரால், (458) துடியின்கண் X வராலினது தடி, (461) விலங்கல் X நெற்போர், (474) வனை கலத் திகிரியிற் குமிழி சுழலும், (481) யாறெனக் கிடந்த தெரு, (483) கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மை, (484) மலையென மழையென மாடமோங்கி, (493) வெல்போர்ச் சேய் [முருகன்] X பெருவிறல் [நன்னன்], (498) எரிகான்றன்ன பூஞ்சினை மராஅம், (507) அரக்கு விரித்தன்ன செந்நிலம், (511) முழவு X பலாப்பழம், (515) நுகம் X நூறை, (519) வளையுடைந்தன்ன வள்ளிதழ்க் காந்தள், (525) நேமி X தேனிறால், (527-529) காவிரி கடல் மண்டுழுவத்துக் கயவாய் கடுப்ப நெடுங்கடைத் துவன்றி, (530) வானம் [மேகம்] X யானை, (558) விசும்பு X உள்ளம், (571) நீரியக்கு X தேர்ச்செல்வு, (572) வரை X வேழம், (580) மழை சுரந்தன்ன ஈகை, (581-82) மலைநீர் [அருவி] X கொடி.

மலைபடுகடாத்தால் அறியலாகும் பொருள்கள்:—

முழவின் கண்ணிடத்துப் பண்ணமைத்தல், கஞ்சதாளம தகடாகத் தட்டப்பட்டிருத்தல், நெடுவங்கியம் [தூம்பு] யானை நெட்டுயிர்ப்புக் கொண்டாற்போலும் ஓசையுடையது, கார்காலத்திலே பலாப் பழுத்தல், வாச்சியங்களைப் பைகளிலிட்டுத் தம்மிலொத்த கனத்தையுடையவாகக்கட்டிக் காவுதல், நரம்பினைக் குரலோர்த்துத் தொடுத்தல், யானைக் கொம்பால் யாப்புச் செய்தல், கூத்தர் தம் சுற்றத்தொடு பரிசில்பெறக் கிளம்புதல், வள்ளல்கள் பேரணிகலங்களைப் புலவோர்க்குத் தருதல், நவிரமலையில் காரியுண்டிக் கடவுளின் கோயிலிருத்தல், கிடங்கில் முதலைகள் இரைதேடி உலாவுதல், முசுண்டை ஆரல்மீன் போல வெள்ளிதாக மலர்தல், பசிய எள்ளுத்தோடுகள் நீல்மணியை

யொத்திருத்தல், அவரைக்காய் அரிவாள் போன்றிருத்தல், தருக்கங்
கூறுகின்றவன் கையிடத்து இணைந்த விரல்களையொப்ப இரட்டித்து
வரகின்கதிர்கள் தோன்றுதல், இஞ்சிக்கிழங்கைப் பாவையெனல்,
விடாய்த்தகாலத்தில் வாயில் நீரூறுதற்காக உயவைக்கொடியைக்
கறித்தல், கானவர் யானையினது கொம்புகளைக் காவுமரமாக்கொண்டு
காவுதல், பெண்நாய் நிணத்தடிகளைக் கடித்துக்கொண்டு வரல்,
தேனாற்செய்த கட்டெளிவை மூங்கிற்குழாய்க்குள்ளே பெய்து
வைத்து முற்றச்செய்தல், தெய்வம் விரும்பும் பூக்களைக்
கிட்டினும் வரையரமகளிருடைய இருப்பைக் காணினும் உயிர்
போம்படி வெதும்பி நடுங்குதல், பன்றிக்கு அஞ்சிச் சில்வழிகள்
தோறும் பெரியகற்பொறிகளைப் பொருத்திவைத்தல், பள்ளநிலத்திற்
பிளப்பிலே பாம்பு மறைந்து கிடக்கும் குழிகளிருத்தல், விலங்கிற்கு
மரங்களிலேயேறிக் கொட்டிப்பார்த்தல், விறலியர் பாம்பினைத்
தொழுதல், தினைப்புனங்காக்குங்குறவர் இதணமேறிக் கைகொட்டிக்
கவணெறிந்து யானைகளையோட்டுதல், கவண்கல் மேல்படாவாறு
மரம் மறையாக்கழிதல், காட்டாற்றுவழியில் கால் வழுக்கும் இடங்
களை மரங்களிற் சுற்றிக்கிடக்கின்ற பரிய கொடிகளைப் பற்றுக்கோ
டாகப் பிடித்துக்கொண்டு கடத்தல், நுண்ணீர்ப் பாசி வழுக்கு
மிடங்களைச் சிறுமூங்கிற்கோல்களோடே எருவையினது மெல்லிய
கோல்களையும் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு கடத்தல், வாச்
சியங்கள் மழையில் நனையாமற் பாதுகாத்தல், உலர்ந்த மூங்கில்
தம்மில் இழையத் தீயுண்டாதல், பிள்ளையைப் பெற்றால் வளையிடா
ராதல், யானையை வலிகெடுத்து விழுங்கும் பெரும்பாம்புகள்
இருத்தல், பழுத்த ஆலத்துப் புள்ளினம் திரண்டொலித்தல்,
குறவரும் மருளும்படி குன்றமிருத்தல், முசுக்கலை பலாப்பழத்தைத்
தோண்டுதல், அருவிநீரைக் கையாற்குடையுந்தோறும் வாச்சியங்
கள்போல் இனியவோசையெழுதல், எய்ப்பன்றி தன் கூரிய முள்
ளால் எய்து கானவரைக் கொல்லுதல், புண்ணை யாற்றுதற்குக்
காப்பாகப் பாட்டுப் பாடுதல், வேங்கைப்பூவைப் பறிக்கும் மகளிர்
புலிபுலியென்று கூப்பிடுதல், களிறு பிடிக்குக் கவளந்தேடிக்கொடுத்
தல், குரங்குகள் தளிரை மேய்தல், உயர்ந்தவரையிலே கண்
ணேணியை நாட்டித் தேனிறாலையழித்துத் தேனெடுத்தல், குறவர்
நறவை நாட்காலத்தே குடித்துத் தம் பெண்டிரோடே கூடிக்
குரவைக் கூத்தாடல், யாறுகள் முழைஞ்சுகளிலே வீழ்ந்து ஒலித்தல்,
பாகர் தமதேவற்றொழிலைச் செய்தற்குக் காரணமான பேச்சுக்களைப்
பேசி யானைகளை அவற்றிலே பயிலப்பண்ணுதல், தட்டையைப்
புடைத்துப் புனங்கடோறும் மகளிர் கிளியையோட்டுதல், இடபமும்
மரையானினது ஏறும் தம்முள் முட்டிப்பொர அதைக்கண்டு கோவ
லரும் குறவரும் ஒருங்கியைந்து ஆர்த்தல், எருமைக் கடாக்கள்
தம்முட் பொருதல், பலாப்பழத்தின் விதையைப் பயன்கோடற்குக்
கன்றுகளைப் பிணைத்துக் கடாவிடுதல், ஆலையிற் கரும்பின்கோலைச்
சாறுகொள்ளுதல், தினைகுறுமகளிர் வள்ளைப்பாட்டிசைத்தல், சேம்
பையும் மஞ்சளையும் விதைத்து வளர்ந்தபின்பு பன்றி கிழங்கு அக
ழாமலிருத்தற்குப் பன்றிப்பறை கொட்டுதல், குன்றகத்து எதிரொலி

யெழுதல், விழாக்காலத்து முழவு இடைவிடாது கொட்டுதல், விறலியர் குறிஞ்சிப்பண் பாடுதல், முழவிடத்திற் காமரத்தைக் காலாகக் கொண்டு ஊன்றிக் குழிகளில் வீழாது போதல், வெப்பமிக்க வழியை அந்திப்போதில் கடத்தல், அரண்கள் யானைத்திரளைக் கொண்டிருத்தல், சிறுகாடுகள் பின்னிவைத்தாலொத்த கொடி பிணங்கியிருத்தல், முன்போகின்றவன் முகத்திலடியாமல் மூங்கிற்கோலை வாங்கி விடுதல், வீரமொடு உயிர்கொடுத்துப் புகழெய்திய மறவரின் பெயர்களையெழுதி மராமரத்தின் நிழலிலே நடுகற்கள் நாட்டுதல், அந்நடுகல்லில் தெய்வத்திற்கு விருப்பமாக யாழ் வாசித்தல், பலவழிகளுங் கூடின சந்தியைக் கையாலே துடைத்து நல்லவழி தெரிதற்கு அடையாளமாக ஊகம்புல்லை முடிந்திட்டு வைத்தல், கோவலர் பசுக்களின் இனிய பாலை வழிவந்த வருத்தம்நீங்கப் பருகக் கொடுத்தல், செம்மறித்திரள் வெள்யாட்டுடனே கலந்திருத்தல், ஆடுகளின் மெய்யையுரித்து ஒன்ருகத் தைத்துத் தோற்படுக்கை யமைத்தல், இரவில் கொடிய விலங்குகள் வாராதபடி இடையர் நெருப்புக் கொளுத்தித் தங்குதல், யானை யா மரத்தை முறித்தல், உலர்ந்த மரல்நாரினுலே கண்ணி கட்டுதல், சோற்றுத்தடியில் நெய்விழுதை உள்ளேயிட்டுண்ணுதல், தினைப்பிண்டியை இடித்து நுண்ணிதாக்குதல், இரவில் விறகாலாக்கின கடைக்கொள்ளியையெரித்துப் பனி விட்டு நீங்கச் செய்தல், புள்நிமித்தம் பார்த்துப்போதல், உழவர் நெல்லை முகந்து தரப் பழையர்மகளிர் வாளைத்தடியை வராலினது தடியோடே கலந்து தேறலையும் தருதல், செறுவில் ஞெண்டு திரிதல், மருதநிலத்துக்கேற்ப மருதப்பண்ணை வாசித்தல், நெல்லையறுப்பார்கொட்டின பறையோசைக்கு வெருவி எருமைக்கடா ஆரவாரித்துக்கொண்டு விரைய மேல்வருதல், குயவனது வனைகலத்திகிரிபோலக் குமிழி சுழலுதல், அங்காடித் தெருவில் திருநாளென்னும்படி மாந்தர் பொருந்திக் கடலெனக் காரென ஒலித்தல், மாடங்கள் மலையென மழையென ஓங்குதல், இரண்டு மருங்கின் மாடமும் தெருவும் கரையும் யாறும் போன்றிருத்தல், மறவர் தம்முடைய வேலைச் சாத்திப் பல தெற்று வாசல்களையுடைய கோபுரவாயிலைக் காத்திருத்தல், கீரி பாம்பின் வலியழித்தல், சுக்கான் கல்லிலே உடும்பு தவழ்தல், வள்ளிதழ்க் காந்தள் வளையுடைந்தாற்போன்றிருத்தல், எருமையினது பாலை மூங்கிற் குழாயிலே பெய்து இனியதயிர் தோய்த்தல்,தேன் முதிர்தலாலே நீலநிறத்தையுடைய ஓரிநிறம் பரத்தல், நெடுவரையிடத்துத் தேனிருலைவிட்டுத் தேன்பாய்தல், முற்றத்துத் தாதெருத் ததைதல், முழவு மேகம்போல் முழங்கல், முதன்முதலில் கடவுளைப் பழிச்சுதல், திருவோலக்கமண்டபத்துச் சான்ருேரிருத்தல், இலமென மலர்ந்த கையர்க்கு [ஈயாதார்க்கு]ப் புகழில்லையெனல், அத்தகையோர் எக்கர் மணலினும் பலராவரெனல், ஒருவர்க்கு வரைந்த நாள் புகழொடு கழிதல் நலமெனல், கொடுத்தற்ருெழிலிலே ஆகாயத்தையொப்பப் பரந்த வுள்ளமொடிருத்தல், இழைபோன விடமறியமாட்டாத நுண்ணிய நூலாற்செய்த ஆடைகளையுடுத்தல், கண்ணுளர் தலைவன் பொற்ருமரையைச் சூடல், விறலியர் விளங்கிழையணிதல், பகைவர் யானைகளைத் திறையாகத் தருதல், இடபங்களின் கழுத்தில்

ஒலிக்கும் மணிகள் கட்டுதல், குதிரைகளின் கழுத்தினிடத்து மயிரைக் கொய்தல், புலவர் ஏற்ற கைந்நிறையும்படி பேரணிகலங்களைச் சொரிதல், நவிரமலையில் மூங்கில் வளர்ந்திருத்தல், மலையின்வீழருவிகள் வென்றுயர்கின்ற கொடிகள்போலத் தோன்றுதல்—முதலிய இன்னோரன்ன பொருள்கள் இந்த மலைபடுகடாத்தால் அறியலாகும்.

ஏறக்குறைய இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்தைம்பது சொற்களுக்கு மேற்பட்ட இந்த மலைபடுகடாத்தில், பரம், கணம், வாதி, நிதி முதலியவாகச் சில வடசொற்களே வந்துள்ளன.

இந்த மலைபடுகடாத்திற் கூறிய விடயத்தின் சுருக்கம் வருமாறு:—ஆகாயத்திடத்திலே நடுங்க நின்று முழங்கும் மேகத்தினது ஓசையையொப்பத் தன் கண்களிலே பண்கள் உண்டாக்கப்பட்டுத் திண்வார் விசிக்கப்பட்ட மத்தளமும், சிறுபறையும், நன்கு உருக்கித் தகடாகத்தட்டின கஞ்சதாளமும், மயிற்பீலிகட்டின கொம்பும், கண்களின் நடுவே வெளியாகத்திறந்த யானையின் கைபோலும் நெடுவங்கியமும், இளிநரம்பிேனோசையைத் தாளுெலிக்கும் குறுந்தூம்பும், பாட்டைச் சுருதிகுன்றுமற் கைக்கொண்டுநிற்கும் இனியகுழலும், தவளையினது குரலையுடைய தட்டைப்பறையும், தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும் சல்லியும், மாத்திரையைச் சொல்லும் தானத்தையுடைய ஒருகண்மாக்கிணையும், இன்னோரன்ன ஏனை வாச்சியங்களும் நெருங்கப்பட்டுப் பலாவினது காயை மிகவுடைய தொத்தையொப்பத் தம்மிலொத்த கனத்தவாய்க் கட்டப்பட்டு, வாச்சிய முட்டுக்களையுடைய பையினைக் காவினராய்க் கூத்தர்தலைவனும் அவனுடைய சுற்றமும், மலையிடத்து மிக்க உயரத்திலுள்ள கல்லையிடித்தாக்கிய அருஞ்சுரநெறியைப் போதற்கரிதெனக் கருதாது, போதக்கடவேமென நெஞ்சாலே துணிந்து நடக்கின்றனர்; சுற்றமாய் உடன்வந்தோருள் பாணர்கள், பேரியாழை நூனெறிபிறழாது பொருந்துதல்வரச் சமைத்து அரசவைகளில் மன்னர் செவிக்கொளும்படி வாசிக்குந் துறைபலவும் வாசித்து முடித்த கல்வி முதிர்ந்தவராவர்; விறலியரோ ஈன்றணிமையில்லாதவராய், பெரிய மலைகளின்மேல் அசைந்தசைந்து ஏறி வருகையினாலே இளைத்த வலிகெட்ட நாயினது நாவினையொத்த சிறுஅடியினையும், மாறோடு மாறுபட்டுப் பொருந்தின செவ்வரியையுடைய கண்ணிணையும், இலங்குகின்ற வளையினையும் உடையராய் மயிரைத்தாழ்த்து மயிற்கூட்டங்கள் போலே கூத்தர்தலைவனைப் புறஞ்சூழ்ந்து வருபவராவர்; இவர்களனைவரும் வழிவந்த வருத்தந்தீரக் குளிர்ந்த மரநிழலிலே இளைப்பாறுகின்றனர்; அஞ்ஞான்று எதிர்வந்த கூத்தன் இக்கூத்தர்தலைவனை ஆற்றுப்படுப்போனாய்க் கூறலுற்றான்.

மலையுச்சியினின்றிழிந்த யாறு கடலை நோக்கிச் செல்வதுபோல, செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனைநோக்கிச் சென்று யாம் அவனிடத்தினின்று சில பரிசில்கள் பெற்று வருகின்றேம்: அந்த நன்னன் கற்புடை மகளிர்க்குக் கணவனுகிக் கிட்டுதற்கரிய வலியினை

யும், பரிசிலரிடம் மென்மையினையும், கேட்டை நினையாது ஆக்கத் தினையே நினையும் சூழ்ச்சியினையும், விற்றொழிலிற்பயின்ற கையினை யும், பேரணிகலங்களையும் உடையவன்; அத்தகையோனை உள்ளினீ ராய்க் கிளையொடு பழுமரந்தேரும் பறவைபோலே சென்று சேர்வீரா யின், என்னை எதிர்ப்படுகையினாலே நன்முகூர்த்தத்தோடே நன்னிமித்தத்தையும் தேற்றமாக உடையராயினீர்; இனி, நீவிர் செல்லவிருக்கும் வழியினது நன்மைதீமைகளின் அளவு, தங்குதற் குரிய நீர்மிக்க நல்ல இடங்கள், நன்னன்நாட்டு விளைகின்ற உணவு கள், அவன் நாடு குறிஞ்சி, முல்லை, மருதம் மூன்றினையும் உளப் படுத்தியிருக்குந்தன்மை முதலாயவற்றை முதலிற்றொகுத்துச் சுருக்கமாகக் கூறுகின்றேன்: கேட்பாயாக.

உலகமுள்ளளவும் புகழ் நிற்கும்படியாகப் பகைவர் திறையாகத் தந்த பேரணிகலங்களைப் புலவோர்க்கு முற்படக் கொடுத்து, மேலும் அவர்க்குப் பொன்னையும் மிகுதியாகக் கொடுப்பவன் நன்னன்; மற்றும், தன்னை இகழும் பகைவரை அரசுகொடாமலொடுக்கும் அறிவின் வலியும், அங்ஙனம் புறங்கண்டு கொண்ட பகைவரரசு முழு வதையும் தன்னைப் புகழ்வோர்க்குக் கொடுப்பினும் திருப்திபிறவாத உள்ளத்தோடு பின்னரும் மாறாது கொடுக்கும் நாளோலக்கமும் உடை யவன் நன்னன்; மேலும், நல்ல அறிவினையுடையோர் திரண்டுள்ள தன் அவைக்களத்திடத்தே சென்ற அறிவுடையோர் தாம் கற்ற வற்றை ஆங்குள்ளோர் மனங்கொள்ளும்வகை கூறமாட்டாராயிருப் பினும், அவர்தம் மாட்டாமையை வெளிப்படுத்தாது தாம் மறைத்து, தாம் அப்பொருளைச் சொல்லிக்காட்டி, அதனைத் தப்பின்றாக எல்லார் மனமுங்கொள்ளும்படி அறிவித்து, நன்றாக நடாத்தும் பேரொழுக்கங் கொண்ட கல்விச்சுற்றத்தை யுடையவன் நன்னன்; அவனது நவிர மலை காரியுண்டிக் கடவுளாகிய சிவபெருமான் கோயில்கொண்டிருக் குஞ் சிறப்பினது; அவனது முன்னோர்கள், பகைவர் நாடுகள் தூரத்தி லிருப்பனவாயினும் ஆண்டுச்சென்று முற்படத் தூசிப்படையைக் கொன்று குவித்து வென்று, பின்னர் யானையணியிலே வேல் கொண்டு புகுந்து பொருது வென்ற வீரர்க்கு நாடும் ஊரும் முதலிய வற்றைக் கொடுத்த நல்ல தோற்றரவையுடையவர்கள்; அன்னோர் வழி வந்தவன் நன்னன்; அவன் மூதூர் திரையுண்டாகும்படி ஆழ்ந்து முதலைகள் உலாவும்படியிருக்கும் கல்லகழ்ந்த கிடங்கினையும், மலை போலுயர்ந்து வானைத்தீண்டும் மதிலினையும் உடையது; அதன் புகழ் எங்கும் பரந்துளது.

இனி, நீ நன்னனைக் கருதிச் செல்கின்ற திசையைக் கேள்: முத லாவதாக, செல்லும் வழியிலுள்ள புனத்து வளன் கூறுகின்றேன்:— நிலத்தே வித்திட்டோர் விரும்பினாற் போலே நல்விளைச்சலுண்டாம் படி வானம் மழை பொழிகையினாலே அகன்ற பெரிய புனத்திடத்தே முசுண்டை கார்த்திகைமீன்போல் வெள்ளிதாக மலர்ந்தன; பசிய எள்ளுத்தோடுகளெல்லாம் அரக்குப் பாயாமல் இளங்காயாயிருந்த தன்மை நீங்கி முற்றிக் கரிய காயாகி ஒருபிடியிலே ஏழ்காயாக

நெய்யை உள்ளே கொண்டு வளர்ந்தன; தினைக்கதிர்கள் அறுக்குஞ் செவ்வியையுடையவாய் முற்றின; தினையரிதாள்தோறும் அவரைகள் பூக்களுதிர்ந்து காயைக்கொண்டன; வரகுகள் இரட்டித்த கதிர்கள் முற்றி வளைந்து அரிவாளாலே அரிதலுற்றன.

இனி, செல்லும் வழியிலுள்ள புறவு துடவை செறு இவையிற்றிலுண்டாம் வளன் குறிப்பன். புறவிடத்தே மூங்கில்நெல் அவலிடிக்குஞ்செவ்வியைக்கொண்டன; துடவைகளிலே விதைக்கப்பட்ட வெண்சிறுகடுகுகள் நெருங்கி விளைந்தன; செய்களிலே ஐவனநெல்லும் வெண்ணெல்லும் பால்கட்டி முற்றி நன்றாக விளைந்தன; கரும்புகள் தண்டுதிரண்டு, பாத்தி நிறையும்படி வளர்ந்து காற்றடிக்கின்ற ஆரவாரத்தாலே வேற்படைத்தானையிரிவதுபோலே சாய்ந்து, ஆலையிலே சென்று பயன்படுதற்குத் தக முற்றி அசையாநின்றன; நீண்ட நறுநெய்தல்கள் கரியநிறத்தோடு அலர்ந்தன.

இனி, செல்லும் வழியிலுள்ள நெடுமலையடுக்கத்து உண்டாம் வளன் கூறுவன். குடிஞையிரட்டும் நெடுமலையடுக்கத்து இஞ்சிக்கிழங்குகள் அழகுமுற்றிக் காழ்ப்பைக் கொண்டன. கவலைக்கிழங்குகள் முற்றி மாவாந்தன்மை தம்மிடத்தே யுளவாய்க்குழிகள்தோறும் சீரிதாகக் கீழே வளர்ந்தன; சோலையிடத்தே முறைப்பட மலர்தலையொழிந்த வாழைப்பூவின் முகங்கள் மலையைத் தீண்டிநிற்க, காய் நெருங்கின குலைகள் மிகவும் நெகிழும்படி பழுத்தன; பெருமூங்கில் நெற்கள் முற்றிப் பயன்படும் பக்குவநிலையை யடைந்து அசையாநின்றன; ஆண்டுள்ள மரங்கள் காலமல்லாக்காலத்தும் நிலவிசேடத்தாற் பயன்கொடுத்தலின், நாவல்மரம் பழுக்க, அதன் கரிய பழங்கள் காற்றாலே அகன்ற பாறையிலே உதிர்ந்தன; உயவைக் கொடி மிகுதியாகப் படர்ந்தன; கூவைக்கிழங்கு நீருந்தன்மையோடே முற்றித் திரண்டன; மாம்பழங்கள் சாறு மிக்குச் சிறந்தன; ஆசினிப்பலாப் புண்ணும்படி வெடித்து உள்ளுள்ள விதைகள் சிந்தின; பலாமரங்களில் பலாப்பழங்கள் வழிப்போகின்ற கூத்தருடைய மத்தளங்கள் போலே கீழும் மேலுந் தூங்கி முற்றித் தாழ்ந்தன.

இவ்வாறாக, செல்லும்வழி மிகுவளம் பெற்ற புதுவருவாயையுடைய ஊர்களாலே புதுவிளக்கம்பெற்று இலங்குவது.

இந்த வழிவளங்களைக்கண்டுபோகுங்கால், மலைப்பக்கத்திலுள்ள கானவர் சிறுகுடியில் தங்குவீராயின், ஆங்கு அக்கானவராலே யானைக்கோடு காத்தண்டாகக் காவிக்கொணரப்பட்ட தேனினையும் கிழங்கினையும் பழுதுபோக்கிய பன்றித்தசையினையும் மற்றுள்ள தசைகளோடே நிறைந்த வட்டிகளையும், கரிய பெரிய சுற்றத்தோடு உண்ணுமளவு மிகவும் பெறுகுவிர்; அவைகளையுண்டு இளைப்பாறி, அற்றைநாள் இராப்பொழுது அக்கானவர் சிறுகுடியிற்றங்கி, அசோகம் பூக்கொத்துக்களைச் சுற்றத்தோடேசூடி, அம்மரங்களைக்கொண்ட செவ்விய வழியேபோய், மூங்கில் நரலும் வழிகளையுடைய பக்கமலையினைச் சேர்ந்திருந்த பாக்கத்தினையெய்தி, வேள்நன்னனுடைய கூத்த

ராவேம் யாம் என்று கூறுவீராயின், அப்பாக்கத்து மனைகளில் நும் மனைபோலே வாசலில் நில்லாதே உட்புக்கு, முன்னிருந்தே உரிமையுடையவர் போலே அப்பாக்கத்து மனையுள்ளாரோடு உறவு கொள்ளுகையினாலே, அன்னார் நுமது சேணிடைவந்த வருத்தந் தீரும்படி இனியமொழிகள் கூறி, மிகச்சொரிந்த நெய்யிடத்தே வெந்த பருத்த தசைப்பொரியலோடே செவ்விய தினைச்சோற்றையிட அவற்றைப் பெறுகுவிர்.

இனி, நன்னனுடைய மலைமிசைநாடு முற்கூறிய சிறுகுடியினும் பாக்கத்தினும் மிக்க சிறப்புடைத்து; ஆண்டு, நீவிர், உடும்பின் தடிகளோடு கடமானின் கொழுத்த தசையினையும், எய்ப்பன்றியின் தசையினையும் கலந்து தின்று, இடையிடையே மூங்கிற்குழாய்க்குள்ளே பெய்துமுற்றிய தேனாற்செய்த கட்டெளிவை நிரம்பப்பருகி, பின்னர் நெல்லாற் சமைத்த கள்ளையுமுண்டு மகிழ்வீர்; அந்த மதமயக்கந்தீரும்படி வைகறையில் குறமகள், பலவின் விதையிலுள்ள மாவையும் புளியம்பழத்தின் இனிய புளிப்பையும் உலையாக வார்த்த மோருக்கு அளவாகக்கலந்து மூங்கிலினரிசியைக்கொண்டு நறுமணமெங்கும் கமழத் துழாவியாக்கிய வெள்ளிய சோறாகிய உணவை, 'விருந்தினரைப் பெற்றேம்' என்ற ஆர்வத்தோடே தத்தம் பிள்ளைகளைக்கொண்டு உறவுமுறை சொல்லித்தடுத்து மனைகடோறும் நுமக்குக் கொடுக்க, அவ்வுணவோடு மலைபடுபண்டங்களையும் பெறுகுவிர்; பெற்ற அவற்றாலே நன்னனிடத்துப் பெறக்கருதிய பரிசிலை மறந்து அங்கேயே நீட்டித்திருத்தலும் உரியிர்; அங்ஙனம் நீட்டிப்பின், தெய்வம் விரும்பிய குவளைப்பூக்களைக் கிட்டினும், வரையரமகளிருடைய இருப்பைக் காணினும் நீவிர் உயிர்போம்படி வெதும்பி நடுங்குதலும் உரியிர்; ஆகையினாலே, அம்மலைமிசைநாட்டில் பலநாட்கள் தாழ்த்து நில்லாமல், நிலநாடு படர்மின். படருங்கால், பன்றிகள் தினைப்புனத்தை நொக்குகையினாலே, அவற்றை யகப்படுத்தச் சில்வழிகடோறும் அரிய பெரிய கற்பொறிகளை வைத்திருப்பர்; இரவிற் செல்லுவீரானால், அவை தடுத்து இடையூறு விளைவிக்குமாகலின், விடியற்பொழுதிலே போவீராக; போகுங்கால், பலரும் போகாத வழியிலே போகத்துணிவீராயின், அவ்விடம் பருக்கைக்கற்களையுடைய பள்ளநிலப்பிளப்புக்களிலே, பாம்புகள் மறைந்துகிடக்கும் குழிகளைக் கொண்டுள்ளன ; அக்குழிகளுள்ளனவென்பதை மறவாது குறிக்கொண்டு கொடிய அவ்விலங்குகளுள்ளமையறிய மரங்களிலேயேறிக் கொட்டிப்பார்த்து, உடன்வரும் விறலியர் குழிகளிலுள்ள அப்பாம்புகளைக் கையாற்றொழுது வாழ்த்த, அவ்விலங்குகள் கிடக்கும் அவ்வழியைச் சிறிது அகலப்போய், வலப்பக்கத்து வழியை மேற்கொண்டு போவீராக; போகுங்கால், முற்றின தினைப்புனத்தைக் காத்தற்குச் சூழ்ந்த குறவர் உயர்ந்த நிலையினையுடைய பரணிலேறிக் கைகொட்டிக் குறுங்காட்டிடத்தேயுள்ள யானைகள் பகற்பொழுதே நிலைகெடும்படி கவண்கற்கள் வீசுவர்; வீசிய அக்கற்கள் உயிர்களைப்பறிக்குந்தன்மையவாய் யமனையொத்திருந்து, குரங்குகள் குட்டிகளோடே நிலைகெட்டிரியும்படி பசிய

மூங்கிற்கோலைக் கடந்து வெகு வேகமாக வரும்; அக் கவண்கற்கள் மேலே படாதபடி யிருப்பதற்கு மரங்களிலே ஒதுங்கிநின்று போவீராக; போகுங்கால், வலிய யானைகளை விழுங்கும் முதலைகள் தங்கும் இருள்செறிந்த காவற்காடுகளையும், நீர்குத்துதலால் ஆழ்ந்த மடுக்களைக்கொண்ட முடுக்கரையுமுடைய காட்டாற்றுவழி ஏற்றிழிவு அரிதாகி வழுக்கும் இடங்களையுடையது; அவ்விடங்களிற் சிறு பிள்ளைகளோடே போம்போது, மரங்களிற் சுற்றிக்கிடக்கின்ற பருத்த கொடிகளைப் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு கால்வழுக்கி வீழ்தலைப் பரிகரித்து, ஒருவரையொருவர் பாதுகாத்துக்கொண்டு போவீராக; போகுங்கால், கிழங்குதாழவீழ்ந்து அசையும் மலையெருக்கு நெருங்கின பக்கமலையில், வீழ்ந்தோரை மறைக்கும் ஆழத்தையுடைய குளங்களுக்கு அருகில் இடம் மறைதற்குக் காரணமாகிய நுண்ணீர்ப் பாசியினது வழும்பு கால் வழக்கும்; அன்றியும், அவ்விடம் போதற்கு அருமையையுமுடையதாகும். அதற்குப் பரிகாரமாக, வழிமுற்றும் பின்னிவளர்ந்த நுண்ணிய சிறுமூங்கிற் கோல்களையும் எருவையினது மெல்லிய கோல்களையும் பற்றுக்கோடாகப்பிடித்துக்கொண்டு போவீராக; போகுங்கால், புள்ளிகளைக் கொண்ட முகம் மறையும்படி முகபடாத்தாற் பொலிவு பெற்று, மலைபோன்றிருக்கும் போரிற்பழகிய யானைகளையும், விற்பிடித்து மழைபோல அம்பினைப்பொழியும் மறவர்களையும் கொண்ட தூசிப் படையோடே விளங்குவது மூத்த புரிசையிடத்துக்கோயில்; அதனைச் சேர்தற்கு ஒரே வழி யாற்றுக்கரையில் உண்டு; அக்கோயிலிலெழுந்தருளியிருக்கும் கடவுளைக் கண்டீராயின், நீவிர் தொழுது போமத்தனையல்லது, வாச்சியங்களை இயக்காதீர்கள்; என்னையெனில், அவனது வளப்பமுள்ள நவிரமலை மழைத்துளியை இடைவிடாது பொழியுமாதலின், வாச்சியங்களும் நனைந்து நுமக்கும் போதலரிதாகும். மற்றும், பலகறையைப்போல் வெள்ளிய முருந்தினைக்கொண்ட பீலியையுடைய மயில் காட்டிடத்தே கலாபம் விரித்தாடி, அக்கலாபத்தினது பாரத்தாலே ஆடியிளைத்து நிற்பினும், நெடிய மூங்கிலின் கவடுகளிலே கடுவன் பாய்ந்து உகளினும், நெடிய வரையிடத்துத் தெய்வம் விரும்பின பக்கமலையிலே தேருருள்போல் வைத்த தேனிறாலைக் காணினும் நீவிர் கடுகப் பார்த்தலைத் தவிர்த்தல் வேண்டும்; இல்லையேல், வழிதப்புவிர்; மற்றும், மலையைச் சேர்ந்த வழியினையுடைய காட்டிடத்தே செல்லின், பரணின்மேலிருந்த சேணோன் எய்த அம்போடே போய் வழிகெட இறந்து கிடந்த பன்றியைக் காண நேரிடும்; கண்டீராயின், உலர்ந்த மூங்கில் தம்மில் உராய்ந்ததனாற்பிறந்த காட்டுத்தீயில் புகை நாறுதபடி மயிர்போகச்சீவி, அப்பன்றியை வக்கித்தின்று, வழிவந்த இளைப்புத்தீரச் சுனையிடத்துப் பளிங்குபோன்ற தெள்ளிய நீரைக் குடித்துப் பின் முழுதுந் தின்னுமல் மிகுதிப்பட்ட தசையுணவைக் கட்டிக்கொண்ட பொதியினையுடையராய், சிறுபிள்ளைகளோடே இராக்காலத்து அவ்வழியிடத்துப் போதலைத் தவிர்த்து ஆங்குள்ள கன்முழைஞ்சுகளிலே நும் வீட்டிற் புகுவதுபோற் புகுந்து தங்குவீராக; தங்கி, எல்லாரும் இளைப்பாறி, விடியற்காலத்துத் துயிலுணர்ந்

தெழுந்து காட்டிடத்தே கிடந்த செந்நெறியே போவீராக; அங்ஙன் போகுங்கால், யானையின் வலியினையும் கெடுத்து விழுங்கும் பெரும் பாம்புகள், வீழ்ந்த பெருமரங்கள்போற் கிடக்கின்ற வழியினை விலங் கிச்செல்வீராக; மற்றும், சேண்நாறும் பூக்களையும், உண்டவர் மறக்க லாற்றாத பழங்களையும் காணநேரிட்டால், அவற்றாற் கொள்ளும் பயனைத் தவிர்தல் வேண்டும்; ஏனெனில், அவற்றைத் தெய்வங்க ளன்றி மானிடர் அணுகார்; இஃது தொன்றுதொட்டு வந்துள்ள தோர் முறைமை. ஆதலின், நீவிரும் ஊழிறந்து அவற்றைத் துன்று தவராய், அப்பூக்களையும் பழங்களையும் பெருமரக்குழாத்தினையும் அவற்றின்குறிகளையறிந்து இடனும்வலனும்நோக்கி அகலப்போவீராக மேலும், பழுத்த ஆலமரத்திடத்தே கூடியொலிக்கும் பறவைத்திரளை யுடையதாய் அகன்ற இடத்தையுடைய மலையை மெல்ல மெல்லப் போவீராக; பின்னர் ஞாயிற்றாற் சுடப்படாது மரம் நெருங்கின குறுங் காட்டாலே பெருநிழலுண்டாம்படி அகன்ற இடத்தையுடையதாயும், திசைமயங்கும் இராக்காலமாயினும் விலங்கினைத் தேர்ந்து நின்று சுழன்றுதிரியும் குறவரும் மருளும்படி யிருப்பதாயும் உள்ள குன் றத்தே நீங்கள் செல்லநேரிடின், அவ்வழியே போதலைத் தவிர்த்துப் பாறையிடத்தே நெருங்கிநின்று, கல்லென்னுமோசைபட நும் வாச் சியங்களை வாசிப்பீராக; அப்போது, ஆங்குக் காடுகாத்து உறையும் கானவர் பலரும், நீரிலே விழுந்தவரை விரைந்தெடுப்பாரைப்போலே நும் நெஞ்சத்து அவலம் வீட விரைந்தெய்தி, உண்ணுதற்கினிய பழங்களையும் சூடுதற்கினிய பூக்களையும் நுமக்குக் கொடுத்து, முந் துறச்சென்று நுமக்கு வழிகாட்ட, இடையூறுமிக்க அவ்வழியைக் கடந்து சுற்றத்தோடே மன மகிழ்வீராக; பின்னர், திசைமயக்கம் நாடியறிந்த அவர்கள் கூறிய திசையை மனத்துட்கொண்டு, புதியராய் வந்தார் கண்ணால் நோக்கினும் தலைநடுக்கும் நோய்மிக்க பக்கமலையிடத்துக் குறியவும் நெடியவுமாகிய குவடுகளை முறைப்பட ஏறியிழிந்து பூப்பரந்துள்ள வரிநிழலிலே இளைப்பாறியிருப்பின், பலதிறப்பட்டனவாய் மலையிடத்தெழுகின்ற ஓசைகளைக் கேட்பீ ராவிர்; அவ்வோசைகள் யாவை யெனில்:—

முசுக்கலை தோண்டின பெரியபலாப்பழம் கனிந்து புண்மிக்குத் தேனாறுகையினாலே மலைமுழுதும் அத்தேன்மணநாற, அங்ஙன் நாறும் திசைகடோறும் உள்ள பண்டங்களை வாரிக்கொண்டு வருகின்றவேகந் தவிராது ஒலிசெய்யும் அருவியிலாடும் தெய்வ மகளிர் அதனைக் கையாற் குடையுந்தோறும் நும்மியம்போல் தாளம் தெரிக்கின்ற இனியவோசையும், மலையின்மேலிட்ட பரணிற் கானவரிருந்து தினைப்புனத்தைப் புகுந்து தின்னும் யானையொருத் தலைப்பிடித்தற்கு வளைந்த ஆரவாரமும், நெடிய முழையிடத்துத் தங்கும் எய்ப்பன்றி தனது கூரிய முள்ளாலெய்து கொல்லுகையி னாலே இறக்கும் கானவர் அழுகையும், தம் கணவர் மார்பிற் புலி பாய்ந்தறைதலால் அவரிறக்க அம்மார்பிடத்துண்டாய நெடிய பிளத்தலையுடைய விழுப்புண்ணையாற்றுதற்குக்காப்பென்று கருதிக் கொடிச்சியர் பாடும் பாட்டாலெழுந்த ஓசையும், முதல்நாளிலேபூத்த

பொன்போலும் கொத்தினையுடைய வேங்கைப்பூவைச் சூடுதற்கு மகளிர் 'புலி புலி' யென்று கூப்பிடும் ஆரவாரமும், சூலுற்ற மடப் பிடியை வலியகளிறு கவழந்தேடிக்கொடுத்துப் பாதுகாத்துப்போக, அதன்போக்கினைக்குறித்து ஒளித்திருந்த வலிய புலி பாய்ந்ததாக, அப் பிடி தன்சுற்றத்தோடே கூப்பிடும் இடியோசைபோல் முழங்குங் குரலும், கருவிரல்மந்தி தன் பார்ப்பைத் தன்கையால் தழுவிக் கோடலை மறந்த காரணத்தால் அக்குட்டி எடுத்தற்கரிய ஆழ்ந்த முழையிலே வீழ்ந்திறக்க, அதனால் வருத்தமிக்குச் சுற்றத்தோடே கதறும் விலக்கமுடியாத ஆரவாரமும், முசுக்கலையும் ஏறமுடியாத வாறு உயர்ந்த வரையிலே நிலைபெறநாட்டிய கண்ணேணியின் வழி யாகச்சென்று பெரும்பயனுண்டாம்படி தேனீத்திரட்டிவைத்த தேனை யழித்துக்கொண்ட கொள்ளையாலுண்டான ஆரவாரமும், "நன்னனுக்குப் புதிதாகக் கொடுத்தற்கு இவற்றிற் கைக்கொண்ட பொருள்கள் அமையும்" எனக் கருதிச்சென்று அழித்தற்கரிய குறும்புகளை யழித்த கானவர் மகிழ்ச்சியிலுண்டான ஆரவாரமும், நாட்காலத்தே கட்குடித்த குறவர் தம் பெண்டிரோடே கூடி, மான்தோல் போர்த்த சிறுபறை கல்லெனக்கறங்க உச்சி மலையிலேயாடும் குரவைக்கூத்தின் ஆரவாரமும், நெடியதேர்கள் ஓடிவருவதுபோலக் கல்லின்மேல் ஓடிவந்தொலிக்கும் யாறுகள் முழைஞ்சுகளிலே வீழ்ந்து மாறுதொலிக்கும் ஓசையும், காட் டாற்றின் நெடிய சுழியிலே வீழ்ந்து அகப்பட்ட கடுங்கண் யானையின் வலிய சினத்தைத் தணியப்பண்ணிப் பெரிய கம்பத்திலே சேர்த்தற்குத் தமதேவற்றொழிலைச் செய்தற்குக் காரண மான பேச்சுக்களைப்பேசி அவற்றிலே பயிலப்பண்ணும் பாகருடைய ஆரவாரமும், தட்டையைப் புடைத்துத் தினைப்புனங்கடோறும் கிளியையோட்டுகின்ற மகளிர் கூப்பிடுதலாற் பிறந்த ஆரவாரமும், நிரையினின்றும் பெயர்ந்துவந்த இடபமும் பொருதலிற் கைவந்த மரையானேறும் ஒன்றற்கொன்று முதுகிடாத வலியுடனே புண்ணும் படி முட்டிப்பொரும் கல்லென்கின்ற ஓசையையுடைய ஆரவாரமும், அங்ஙன் அவை தம்முட்பொரக்கண்ட முல்லைநிலத்துக் கோவலரும் குறிஞ்சிநிலத்துக் குறவரும் சேரக்கூடி வென்றதன் வெற்றிதோன்ற மிக்கொலிக்கும் ஆரவாரமும், எருமைக் கடாக்கள் வளாவிய இதழை யுடைய குளவியும் குறிஞ்சியும் வாடும்படி தம்மிற்பொருகின்ற ஆர வாரமும், பலாவினது முற்றின பழத்தின் இனிய சுளையை விரும்பி னோரெல்லாரும் தின்றபின் கீழ்வீழ்ந்து கிடக்கும் மிகையான விதை களைப் பயன்கோடற்குக் கன்றுகளைப் பிணைத்து மடலோச்சிக் கடா விடும் பிள்ளைகளுடைய ஆரவாரமும், புகைசூழ்தலால் மேகத்தைக் கண்டாலொத்த கரும்பாலைகடோறும் கரும்பின்கோலைச் சாறுகொள் ளும் ஓசையும், தினையைக் குற்றும் மகளிரின் வள்ளைப்பாட்டும், சேம் பையும் மஞ்சளையும் விதைத்து வளர்த்து அவற்றின் கிழங்குகளைப் பன்றி அகழாமற் காப்போருடைய பறையோசையும் ஆகிய இவை களாம். [கவனிப்பு:—இப்பகுதி பெரிதும் சுவையுடைத்தாகலின்,மலை படுகடாம் என்று பெயரிட்டோர் வாழ்த்துக் குரியர்]. இவ்வெல்லா ஓசைகளும் எழ, அவற்றினால் மலையிடத்தெழும் எதிரொலியும்

ஒருங்கியைந்து ஈண்ட, அவற்றோடு தாழ்வரையிடத்தும் உச்சிமலை யிடத்தும் உள்ளனவாகிய ஒழிந்த பல ஓசைகளும் சேர நெருங்குகை யினாலே, மலையிடத்துண்டாம் ஒலிகள் எண்ணுதற்கரியனவாய்த் திசைகளெல்லாமொலிக்கும்; அவற்றைக் கேட்டுக்கொண்டே அந் நன்னனுடைய அகன்ற இடத்தையுடைய மலையையடைய, அம் மலையோ, மகளிர் மகிழ்ந்து ஆடற்கேற்ற விழாவினையொத்துச் சிறந்துகாணும். காண்டற்கினியவற்றைக் கண் குளிரக்கண்டும், கேட்டற்கினியவற்றைச் செவிகுளிரக்கேட்டும், உண்டற்கினிய பல வற்றைப் பாராட்டியுண்டும் 'மேலும் இந்நுகர்ச்சி நமக்கு உண்டாவ தாகுக' என்று விரும்பிப் பழைய உறவினையுடைய மக்களைப்போன்ற முறைமையினையுடையிராய்ச் சிலநாள் தங்கிப் பின் நன்னனுடைய பெருமலை நுமக்குப் பின்னாகும்படி, விறலியர் குறிஞ்சிப்பண்ணைப் பாட, ஆண்டுறையும் தெய்வங்களைக் கைதொழுது பரவுக்கடன் பூண்டு வாழ்த்திப் போவீர்; பின், மேகம் எஃகுறுபஞ்சிபோலப் பொங் கிச்சென்று கிடக்கும் பெரியமலையிடத்தில், கைசென்று பிடிப்பது போல் நெருங்குதலையுடைய கரியமேகத்திரள் துவலைகளைத் தூவு கையினாலே திசைகளைத் துணிந்துகொள்ளமாட்டாத சுற்றத் தோடே நும் வாச்சியங்கள் நனையாதபடி கிணறுகள் போன்ற முழைஞ்சுகளிடத்தே புகுவீர்; பின்பு, முறிந்துநின்ற மலைகளைச் சேராதீர்; மற்றும், அழகினால் கண்ணைக்கவரும் இடமகன்ற குன்றில் இடையூறுகள் பலவிளைக்கும் குழிகளுள; முழவுதூக்கும் காத் தண்டை நுமக்குக் காலாக வாங்கிக்கொண்டு, அக்குழிகளுள்ளே அடிவிழுதலைப் பரிகரித்து அத் தண்டையே கோலாக ஊன்றிப் போவீர்; வேல்போற்கூரிய கற்களையுடைய பாறைவழி வெப்பத்தால் இன்னாமை செய்யுமாதலின், வெம்மை குறைந்த அந்திப்பொழுதிலே போவீராக; போகுங்கால் அவ்வழியில், புகழ்செறிந்த நன்னனுடைய படைத்தலைவரோடே பல யானைத்திரளையுங்கொண்டு, பொரவந்த அரசர்களின் நிலையைக்கெடுக்கும் அரண்களும் உள்ளன. அவ்வரண் களிலுள்ள சிறுகாட்டிடத்தில் பின்னிவைத்தாலொப்பக் கொடிகள் பிணங்கின சிறுவழிகளுண்டு; அச்சிறுவழிகளிற் போகுங்கால் முன்னே போகின்றவன் பின்வருவோர் முகத்திலடியாமலிருக்கக் கடிய விசையையுடைய மூங்கிற்கோலை வாங்கிவிட்டு, அப்படியே நீவிரெல்லீரும் போகும்வரை கையாற் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்; அங்ஙனிருந்தால் நும்து யாழின் பத்தரையும் முழவின் கண்ணையும் அம்மூங்கிற்கோல் கீறிக்கெடுக்காதபடி காக்கமுடியும்; ஆதலின், முன்போகின்றவனைக் கரம்பிடித்துக்கோடலை விடாதே யிருக்கச்செய்து மெல்லமெல்லப் போவீராக; அரண்களின் சிறுவழி களைக் கழிந்தபின் அவ்விடத்துத் துறுகற்களைக்கொண்டுள்ள காடுகள் மிகப்பல; அவைகளில் மழைபெய்யும்; அக்காடுகளில் வீரமொடு உயிரைக்கொடுத்த நாணுடைமறவர்க்கு அவர்களின் பெயர்களெழுதிய கற்கள் நடப்பட்டிருக்கும்; அவை முதுகிட்டுப் போனவரை இகழ்வனபோலத் தோன்றும்; அத்தகைய வழிகள் மிகப்பலவாயிருக்கும்; அந்நடுகல்லின் தெய்வத்திற்கு விருப்பமாக அமையும்படி நும்முடைய பாட்டினை யாழினிலிசைத்து விரையப்

போவீராக; அங்ஙனம் விரையப் போம்பொழுது நும்முள் வழியறியாமல் தீயநிலத்திற்போய் மீண்டுவந்த புதியவர்கள், பின்வருகின்றவர்களும் அவ்வாறு போய்மீளாதபடி சந்தியிடங்களைக் கையாலே துடைத்து அடையாளமாக ஊகம்புல்லை முடிந்திட்டு வைப்பீர்; நீங்கள் போம் தேசத்திலே, மராமரத்தின் நிழலிலே நட்ட கல்லிடத்து இன்னான் பொருதுபட்டானென உலகறிதற்கு அவன் பெயரை எழுதிவைத்திருப்பர்; தெய்வத்தன்மையேறிட்ட அக்கற்களைக் கொண்டுள்ள கொடுமைமிக்க வழிகள் பலவற்றில் நன்னனின் பகைவரிருக்கும் அருஞ்சுரங்கள் மிகப்பலவாம்: அச்சுரங்கள் நினைக்கினும் தலைநடுங்குவிக்கும். இங்ஙனம் பகைப்புலம் இருப்பினும், நீவிர் வள்ளல் நன்னனையுள்ளிச் செல்கின்றேமென்று கூறுவீராயின், அப்பகைப்புலமே நம்மையொத்த பரிசிலர்க்கு எல்லாவூர்களினும் மேலாம்படி செல்வச்சிறப்புடையதாயும் உயர்ந்த ஒழுக்கத்தினையுமுடையதாயுமுள்ள நன்னனது பழைய ஊரினைப்போன்று சிறந்து காட்டும்; ஆகவே, இளைத்தவிடத்தே இளைப்பாறி அஞ்சாமற் போவீர்; பின், புலி பாய்கையினாலே இறந்துபட்ட தன் பிணையை நினைத்து வெறுத்த கலைமான் நின்று கூப்பிடும் காட்டை முறைமைபடக்கடந்து போய், வில்லினோசைக்கு வெருவின சிவந்த கண்ணையுடைய மரையேறு குறுங்காட்டிலே விரைந்தோடும் புறவினிடத்து வேற்றுப்புலங்களிலேசென்று மேய்ந்துவந்த வெள்ளிய பசுக்களின் இனிய பாலை இடையர் தம் மகளிர் மனமகிழும்படி கொண்டுவந்து சொரிகையினாலே, நீவிர் அவர்க்கு விருந்தினராய் அதனைப்பருகி, நும்மூரினின்றும் போந்த வருத்தம் விட்டுநீங்கப் பெறுவீர்: அங்ஙனம் விருந்தாயபின், பண்டமாற்றாகப் பெற்ற பலவகை நெல்லினரிசியினையொப்பச் செம்மறித்திரளும் வெள்ளாடும் விரவிக்கலந்து கடல்போலே யொலிக்கும் காட்டிடத்தே, பலயாட்டினங்களின் திரள்களிலே இராக்காலத்துச் செல்லின், ஆங்குள்ள இடையரிடம் தமக்கென்று சமைத்து வைத்திருந்த பாலும் பாற்சோறும் பெறுகுவிர்; பெற்றபின், கொடிய விலங்குகள் வாராதபடி அவ்விடையர் கொளுவிய நெருப்புத் துணையாகத்தங்கி, ஆடுகளின் மெய்யையுரித்து ஒன்றாகத் தைத்த வார் இறுக்கிமிதித்த தோற்படுக்கையிலே படுத்துறங்கிப் போவீர்; போகும்வழியில் கூப்பீடு தூரத்தையும் கடந்து அப்பாற்கூப்பீடுசெல்லக்கூடாத எல்லையையும் கடவாநிற்கும் கூரிய அம்பினையும் கொடிய வில்லினையுமுடைய நாடுகாக்கும் வேடரின் திரளைக் கண்டீராயின், நன்னனையுள்ளிப் போகின்றேமென்று கூறின், தசையையும் கிழங்குகளையும் நிரம்பக்கொடுத்து நும்மை நலிந்து உண்ணச்செய்து பாதுகாப்பாரல்லது வருத்துவார்களில்லை; அவற்றை நுகர்ந்து, அவ்வேடர் சொன்ன வழியே நுமக்கு வழியாக் கொண்டு போவீர்; ஏனெனில், அக்காட்டின் பண்பு அத்தன்மைத்தாயிருக்கும்; அப்பண்பினைக் கண்டுகொண்டே, மரல்நாரினாலே மராவினது மெல்லிய பூங்கொத்தையும் யாம் பூவையும் தளிர்களோடு ஒருசேரவைத்து நெருங்கக் கட்டின கண்ணியைப் பொலியச்சூடி, மேட்டுநிலச்சிறுவழியை மழைபெய்துகுளிருகையினாலே மேற்கொண்டு அந்நீரைக் குடித்துக் குளித்து வழிக்கு முகந்துகொண்டு

போர்வீர்; புல்லான் வேய்ந்த குடில்களிலிருக்கும் குடிகளிடந்தோறும் அவரைவிதை, மூங்கிலரிசி, நெல்லினரிசி இவற்றைப் புளிக்கரைத்த உலையிலே சொரிந்து ஆக்கின குழைந்த புளியங்கூழைக் காட்டிடத்துப் பகற்பொழுதுழந்த நும் வருத்தம் நீங்க, இராக்காலத்துப் பெறுகுவிர்; பெற்று இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள் தங்குவீராயின், தினைமாவோடு அரிசியிற் புல்லிதாகியவற்றை நீக்கி யாக்கின கரிய இடத்தையுடைய சோற்றுத்தடியை நெய்விழுதையுள்ளேயிட்டு உண்ணும்படி கொடுப்ப, நாடோறும் பெறுகுவிர்; பின், சுள்ளிகளை விறகாக்கொண்டு மூட்டிய எரியினால் குளிர்போம்படி இனிதாகத்துயின்று விடியற்காலத்தெழுந்து நிமித்தம் பார்த்துப் போவீராக; போனால், நன்னனுடைய மருதநிலநாடு தலைப்படும். அந்நாடு காஞ்சிமரத்தினையும் அறுகம்புல்லினையும் விளைநிலங்களையும் பொழில்களையும் இடைச்சேரிகளையும் உடையதாய், குடிமக்கள் நீங்காதிருக்கும் ஊர்களையுடைத்து; அவ்வூர்கள் ஒவ்வொன்றும் நீவிர் பலநாள்நிற்பினும் ஒருநாள் தங்கிப்போகினும் நுகர்தற்கான நல்ல பல பொருள்களையுடையன; அந்நாட்டினையடைந்தால், உழவர் நெல்லை முகந்துதராநிற்கப் பழையர்மகளிர் வாளைத்தடியை வராலினது தடியோடேகலந்து கள்தெளிவைத் தராநிற்க,அவற்றை விடியற்காலத்தே களங்கடோறும் பெறுகுவிர்; அவற்றைப் பெற்ற பின்பு, நன்னனுக்கும் உணவாதற்கு அமையுமென்று கண்டோர் மருளும்படி யாக்கின தடியிடையிட்ட வெள்ளிய சோற்றை நும் சுற்றத்துடனே யுண்டு, நல்லியாழ்கொண்டு மருதப்பண்ணை வாசித்து இளைப்பாறிப்போவீராக; போகுங்கால், வெண்ணெல்லையறுப்பார் கொட்டின பறையோசைக்குப் பயந்து செங்கண்ணையுடைய எருமைத்திரளைப்பிரிந்த கடா ஆரவாரித்து வலியோடே நும்மேல் விரைந்து வருதலைப் பரிகரித்துக்கொண்டு, குயவன் மட்கலத்திகிரி போற் குமிழிகள் சுழன்று தோன்றும் விரைந்த செலவினையுடைய மதகுகளில் ஒழிவின்றி ஓடிவரும் சேயாற்றினது ஒருகரையை வழியாக்கொண்டு போவீராக; போனால், பலவண்டுகளொலிக்கும் குளிர்ந்த நெடிய பொழில்களையும், நன்னனையிகழ்ந்தோர் அஞ்சும்படி மிக வோங்கிநிற்கும் மதிலையும், திருநாளோ என்னும்படி மாந்தர் குழுமிக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்தோடே திரிதற்கு ஏற்ப அகன்ற இடம் பெறுத [ஆனால்] சீரிய பெரிய அங்காடித் தெருவினையும், கவர்த்த பல குறுந்தெருக்களையும், ஊரினின்றும் பெயர்ந்துபோதலையறியாத பழங்குடிகள் விருப்பொடு நன்கு வசிக்கும் மாடங்கள் இருமருங்கும் மிகவுயர்ந்து ஓங்குகையினாலே கரைகளைப் போன்றிருப்ப யாறென்னும்படி கிடந்த பெருந்தெருவினையும் உடையதாய்ப் பொருட்செல்வம் நீங்காது தங்கும் அவனது பழைய மூதூர் மிகவும் தூரத்திலுள்ளதன்று; அதனைக்கிட்டி, நன்னனது பகைவருடைய தலைகள் துணியப் பருந்துகள் படியப் போரைவெல்லும் மறவர் தம் வேலைச் சாத்திவைத்துக் காத்திருக்கின்ற தெற்றுவாசல்களைக்கொண்ட கோபுரவாயிலை ஐயுறும்படி புகுவீர்; புகுந்தால், நும்மைப்போலவே தூரியநிலங்களினின்றும் வந்து முன்னரே அம்பலங்களிலே தங்குவாராகிய கூத்தர் முதலியோர்

நும்மைக் கண்டவுடன் 'இவர்கள் நன்னனைநினைந்து பரிசில்பெற வந்தவர்கள்; இவர்கள் அளிக்கத்தக்கவர்தாம்' என்று கருதி, முகமலர்ந்தினிதினோக்கி, நும்து வழிவந்த வருத்தமும் தனிமை வருத்தின வருத்தமும் போம்படி விருந்தினராய் அவர்களுடன் தங்குதலை எதிரேற்றுக்கொள்கையாலே நீங்கள் அவர்களைச் சேர்ந் திருந்து பின்னர், யானைகளையுடையதாய்த் தாதெருத் ததைந்த முற்றத்தை முன்னுவீராக; அம்முற்றத்துத் தலைவாசலில், நெருப் பைக் கான்றாலொத்த பூங்கொம்புகளையுடைய மராமரத்திடத்தே கிடந்த ஆமானினமெல்லாம் ஓடிப்போக அங்ஙன் போகமாட் டாது மலைவாணரிடம் அகப்பட்டுக்கொண்ட மடநடையையுடைய ஆமானினிளங்கன்று, யானையின் இளங்கன்று, கரடிக்குட்டி, வரை யிடைவாழும் எண்கால்வருடையின் கிடாய், பாம்பின் வலிதொலைத்த கீரி, புலி பாய்தலாலே தன் உடலை வெறுத்த மடக்கண் மரையானின் இளங்கன்று, அரக்கைப் பரப்பினாலொத்த சிவந்த நிலத்திற் சுக்கான் கல்லிலே தவழும் உடும்பினேறு, வரையிடத்து அழகுற ஆடும் மயில், கானத்திடத்துப் பெடையை யழைக்குங் குரலையுடைய கோழிச்சேவல், காட்டிடத்துப் பலாவினுடைய முழவென்று மருளும் பெரிய பழம், நறிய வடுக்களையுடைய மாவினது பிழியப்படுஞ் சாறு முற்றின இனிய பழமாகிய பண்டம், மழையாற் செருக்கிப் பரந்த அரும்புகளையுடைய மணமுள்ள நறைக்கொடி, காவிக்கொண்டுவந்த நுகமென்று மருளும் நூறைக்கிழங்கு, மரத்தினின்றும் சிதறி யுதிர்த்த பருத்த திரளாகிய கருப்பூரம், பலவிலை பெற்ற மாணிக்கம், புலியொடுபொருத வலிபடைத்த யானைகளின் முத்துடைக் கொம்பு களினுடைய திரள்,வளையுடைந்தாற்போன்ற வளவிய இதழையுடைய காந்தட்பூ, புன்னைப்பூ, திலகப்பூ, நறிய வயிரத்தையுடைய சந்தனம், மிளகுகொடிகளிற் காய்த்த கொத்திற் பசிய மிளகு, மூங்கிற்குழா யிலே முற்றிய தேனாற்செய்த கட்டெளிவு, காட்டெருமையினது பாலை மூங்கிற்குழாயிலே தோய்த்த இனிய தயிர், நீலநிறத்தை யுடைய ஓரிநிறம் பரந்து நெடியவரையிடத்துத் தேருருள்போல் தோன்றித் தேனைப் பெருகவிட்டிருக்கும் இறால்கள், நல்ல ஆசினிப் பலா ஆகிய இவையாவும் ஒருமிக்கச் சேரப்பெற்றுக் காவிரிகடலொடு கலக்கும் புகார்முகத்தையொப்பத் துவன்றியிருக்கும். [கவனிப்பு:— இப் பகுதியும் சுவையுடைத்து] அம்முற்றத்தை யணுகி, முழவும் பெருவங்கியமும் ஒலியாநிற்க, மருதப்பண்ணை வாசித்த சீறியாழின் நரம்பினோசைக்கு மேற்போகாது அவ்வோசையுடனேகூடி ஓரோசை யாய் இனிதாகிய பாட்டினைப் பாடியாடும் நும் விறலியர், தொன்று தொட்டு நடக்கும் முறைமையினையுடைய தம்மிலக்கணத்திறப்பா மல் முடிவிலாற்றலுடைய கடவுளை முதலில் தேவபாணியாற் பாடிப் பரவட்டும்; அங்ஙன் பாடிப் பரவிய பின் நீவிர், புதிதாகப் பாடும் பாட்டுக்களைப்பாடி, "கொடைக்கடனிறுத்து நல்லிசைக்கொண்டோர் வழியில் வந்தவனே! உலகமுள்ளளவளவும் நின்பேர் நிற்கும்படி கொடைக்கடனிறுத்த செம்மலோய்!" என்று இவ்வாறுகூறி, அவன் வெற்றிப்புகழ்களை அவன் ஐம்பொறிகளைத் தன்வசமாக்கின வெற்றியோடே சேரப்புகழ்ந்து, நும் மனத்திற்சென்ற மற்றைப்

புகழ்களையும் முற்றக்கூறும்வரையும் அவன் அமையானாய், "நீவிர் என்மேல் வைத்த நசைதர என்னிடத்து வந்தமையே போதும்; நுமக்கு வழிவந்த வருத்தமோ பெரிது" என முகமன்கூறி, பின் படைத்தலைவரோடு பொலிவுபெற்றுச் செல்வச்சிறப்போடு விளங்கும் தன்மனையின் முற்றத்தே நுங்களைச் செல்லவிட்டுப் பின் சான்றோர் குழுமியிருக்கும் திருவோலக்கமண்டபத்தேயிருந்து—"உயர்ந்த அரசவுரிமையையும் நல்லமைச்சரையும்,அகன்ற நாட்டையும், அறிவு நுட்பத்தையும் உடையராயிருந்தும், தம்மை நாடி யிரந்து வந்தோர்க்கு 'இல்லை' யென்று மறித்த கையினையும் உடையராயிருந்தமையால், தம் பெயரை உலகில் நிறுவாமல் தம்முடனேகொண்டு பொன்றக்கெட்டுப் போன அரசரோ சேயாற்றிடுமணலினும் பல்லோராவர்; ஆகையினால், நமக்கென வரையப்பட்ட வாணாளாவது புகழொடு கழிவதாகுக" என்ற பரந்த உள்ளத்தோடு, பரிசில்பெற விரும்பி மகிழ்ந்த நெஞ்சொடு சென்ற நும்மினும் தான் பெரிதும் முகனமர்ந்து இனிதுநோக்கி, நுண்ணிய நூலாற்செய்த ஆடைகளை நும்மை உடுக்கப்பண்ணி, நீவிர் பலநாள் தங்குவீராயினும், பசிய நிணத்தையுடைய தசைகளோடே வெள்ளிய நெல்லினரிசிச்சோற்றையும் முதனாள்போன்ற விருப்பத்தோடே பெறுகுவிர்; இனி, பலநாள் தங்கியிருக்க விரும்பாது தலைநாளிலேயே 'எம்முடைய ஊர்க்கு மீண்டுபோவேம்' என்று அவன் அரிதிலிசையச் சொல்லி, விடைகொண்டு அவனைவிட்டுப் பிரியவொருப்படின், அம்முதனாளிலேயே நன்னன் தன் அறஞ்செறிந்த கையினிடத்துண்டாகிய மழை சுரந்தன்ன இயல்பாகிய கொடைத்தொழிலாலே, தான் கொடுத்த செல்வம் கெடுதலையறியாதபடி, பழைய பொருட்டிரளோடே நெடிய தேர்கள், பகைவர் திறைதந்த யானைகள், பெரிய பசுத்திரள்கள், பொலிவுபெற்ற குதிரைகள் ஆகிய இவையெல்லாவற்றையும் பரிசிலாக நல்கி, மேலும், நுங்களில் தலைவனானவன் பொற்றாமரையைச் சூடவும், விறலியர் விளங்குகின்ற பேரணிகலங்களைப்பூணவும் தந்து போகச்சொல்லுவன்—என்று கூறி ஆற்றுப்படுப்போன் கூத்தர் தலைவனைச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய்நன்னன்பாற் போக்கினான் என்பது.

வெண்பா

தூஉஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல்
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்
மாஅ மிசையான்கோ னன்ன னறுநுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு.

(இ - ள்.) பாஅய் பகல்செய்வான்-பரவி எங்கும் பகலாக்கிவரும் சூரியன், பாம்பின்வாய்-[நன்னன் மலையிடத்துறையும்] மாசுணத்தின் (பெரும்பாம்பின்) வாயிலே, பட்டான்கொல் - அகப்பட்டுக்கொண்டானோ? [அன்றி], தூ தீம்புகை - [நன்னன் நாட்டிடத்துத்] தசையை வக்குதலால் எழும் நறிய புகையானது, தொல் விசும்பு - பழைதாகிய ஆகாயத்திடத்தை, போர்த்தது கொல்-

(முற்றுங்கவித்துக்கொண்டு) போர்த்துவிட்டதோ? [இங்ஙன் பகல்செய்பவனாகிய சூரியன் மறைந்து திடீரென இருள்வரக் காரணம் என்னை அறிகிலேம்: இது இவ்வாறாக, இரவு வந்ததென்று மயங்க எண்ணிய] மா மிசையான் கோன் நன்னன் நறுநுதலார் - குதிரைமேலேறிச்செல்பவனும் தலைவனுமாகிய நன்னனுடைய நறிய நெற்றியையுடைய மனைவியரின், மாமை எல்லாம்-மாமைநிறம் எல்லாம், பசப்பு-(வேறுபட்டுப்) பசப்பாயின; (எ - று.)

இவ்வெண்பாவில், நன்னன் நாட்டு வளனும், மலை ஓக்கமும், நாடுகாவற் சிறப்பும், அவன் கற்புடை மனைவியரின் பிரிவாற்றாமையும் முறையே கூறப்பட்டன. எங்ஙனென்னில் கூறுதும்: தசைவக்கும் தீம்புகை விசும்பைப் போர்த்ததுகொல் என்பதால் அவனது நாடுபடு வல்சிவளன் பெறவைக்கப்பட்டது; இனி, வானைத்தீண்டுமளவு மலை ஓங்கியிருத்தலால், அவ் வான்வழிப்பியங்கும் சூரியன் அங்குறையும் மாசுணத்தின் வாயில் அகப்பட்டுக்கொண்டானோ என்ற பாவத்தில், 'பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்' என்று கூறியிருத்தலால், மலையினோக்கமும் பெறவைக்கப்பட்டது. 'வான்றோய் மீமிசை' (322) என்றதும் உணர்க. இனி, இருள்வந்ததென மயங்கிய கற்புடை மனைவியர் 'நன்னன் நம்மைப் பிரிவனோ' என்றெண்ணிய வருத்தத்தால் தம்முடைய மாமைக்கவின் நீங்கிப் பசப்புநிறம் பெற்றார்கள் என்பதன் மூலம் அவர்களது பிரிவாற்றாமையும் பெறவைக்கப்பட்டது. நன்னன் நம்மைப்பிரிவன் என்றெண்ணியதற்குக் காரணம் "மா மிசையான்" என்ற கருத்துடையடையால் குறிப்பிற் பெறவைக்கப்பட்டது. என்னை? நன்னன் மா மேற்கொண்டது இரவிலும் நாடுகாத்தற்பொருட்டு என்க. இதனால், நன்னனின் நாடுகாவற்சிறப்புப் பெறவைக்கப்பட்டது. நன்னன் நாடுகாத்த சிறப்பினை "கானவர், இடுக்கண் செய்யாது இயங்குந ரியக்கும், அடுக்கல்" (*17-19*), "உயர்ந்தோங்கு பெருமலை யூறின்றேற லின்" (*41*), "ஆரிப்படுகர்ச், சிலம்படைந்திருந்த பாக்கமெய்தி, நோனாச் செருவின் வலம்படு நோன்றாள், மான விறல்வேள் வயிரியம் எனினே, நும்மில் போல நில்லாது புக்கு" (**161-165**), "குறவரு மருளுங் குன்றத்துப் படினே,......காடுகாத் துறையுங் கானவ ருளரே, நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள், புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி, உண்டற் கினிய பழனுங் கண்டோர், மலைதற் கினிய பூவுங் காட்டி, ஊறு நிரம்பிய ஆறு அவர் முந்துற, நும்மி னெஞ்சத் தவலம் வீட, இம்மென் கடும்பொ டினியராகுவிர்" (*275-286*), "ஒட்டா தகன்ற ஒன்னாத் தெவ்வர், சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே, தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை, ஓம்பா வள்ளற் படர்ந்திகு மெனினே, மேம்பட வெறுத்தவவன் தொல்திணை மூதூர், ஆங்கன மற்றே நம்மனோர்க்கே" (*397-402*), [நாடுகாக்கும்] "கொடுவிற் கூளியர் கூவை காணின், படியோர்த் தேய்த்த பணிவி லாண்மைக், கொடியோள் கணவற் படர்ந்திகுமெனினே, தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ, ஓம்புநரல்லது உடற்றுநரில்லை" (*422-426*) என்ற விடங்களால் தெற்றென அறியலாம்.

இனி, நன்னன் மலையிடத்துத் தசை வக்குதலை 243-49-அடிகளாலும், மாசுணம் [பெரும்பாம்பு] கிடத்தலை 261-ஆம் அடியாலும் உணரலாம். நன்னன் நறுநுதலார் என்றது - "வனைபுனை யெழின் முலை வாங்கமைத் திரடோள், மலர்போன் மழைக்கண் மங்கையரை" (57-58). அக் கற்புடைமங்கையருள் அவன்தேவி கற்புமிகுதிபற்றிக் "கொடியோள்" (424) எனப்பட்டதையும் நினைக. மாமை-மாமை நிறம்: நாருரித்த ஆம்பற்றண்டு போன்ற அழகிய நிறம்; "நீர்வளராம்பற் றூம்புடைத் திரள்கால், நாருரித் தன்ன மதனின் மாமை" (நற்: 6), "பொய்கை யாம்பல் நாருரி மென்கால், நிறத்தினு நிழற்றுதன் மன்னே, இனிப்பசந் தன்றென் மாமைக் கவினே" (ஐங்: 35) என்பனவுங் காண்க. இது மாமைக்கவின் எனவும்படும். இந்த மாமை கவினுடைத்தென்பதை "அம் மா அரிவை முயக்கு" (குறள்: 1107), "ஐஇய கலுழும் மாமையர்" (மதுரை: 413), "சாயலொடு மணிமாமை" (திருவாய்மொழி : 1-4-8) முதலிய வற்றாலும் அறியலாம். மாமை - அவயவசோபை யென்றது உரை. தலைவனைக் காணுதவழி இம் மாமைக்கவின் போய் அதற்குப் பதிலாகப் பசப்புப் பரவுமென்பதை, "சாயலும் நாணு மவர்கொண்டார் கைம்மாறு, நோயும் பசலையுந் தந்து" என்ற குறளின் எதிர் நிரனிறைப்பொருள்கோளாலும் அறியலாம். பசப்பு - பிரிவாற்றுமையான் வருவதோர் நிறவேறுபாடு என்றனர் பரிமேலழகர். இது பசலை யெனவும்படும்.

தொல்காப்பியத்து நூன்மரபுச் சூத்திரவுரையில் (சூ: 6) நச்சினார்க்கினியர் "தூஉத் தீம்புகைத் தொல்விசும்பு"...எனச் சான்றோர் செய்யுட்கெல்லாம் (அளபெடை) நான்கு மாத்திரை பெற்று நின்றன. அன்றி, மூன்று மாத்திரை பெற்றனவேல், ஆசிரியத்தளை தட்டுச் செப்பலோசை கெடுமாயிற்று..." எனக் கூறுமாற்ருன், அவர் கொண்ட பாடம் "தூஉத்தீம்புகை" என்பது தேற்றம். பேராசிரியர் "தூஉத் தீம்புகை" என்று பாடங்கொண்டு, முதலடியுள்ளே "தூஉத் தீம்புகை" என ஓர் ஆசிரியத்தளை வர, மற்றையன வெண்டளையாகி வந்தன எனக் கொண்டார். மேலும், அவர் "...இதனையே சொல்லின் முடிவிலக்கணத்தான் வெண்பா வென்ருன்" எனவுங் குறித்தார். இவ்வெண்பாவில் எதுகையில் அளபெடை வந்துள்ளது.

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல் குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனைப் பாடிய மலைபடுகடாத்திற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரையைத்தழுவி ஜெகந்நாதாசார்யர் செய்த உரை முற்றும்.

வெண்பா.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

மலைபடுகடாத்தின்

அரும்பதவகராதி முதலியன.

அ

அ-அழகிய, 32
அஃகிய-கூரிய, 551
அஃகிய நுட்பம்-கூரிய அறிவு, 551
அகடு-நடு, 33
அகலிருவிசும்பு-ஏனைப்பூதங்கள் தோன்றுதற்குக் காரணமான பெரிய ஆகாயம், 100
அகலுள்-அகன்ற ஊர், 438
அகழிழிந்தன்ன கான்யாற்று நடவை, 214
அகளத்தன்ன நிறைசுனை, 104
அகளம்-நீர்ச்சால், 104
அகன்றதாயம், 551
அகைத்த-முறித்த, 429
அசைஇ-இளைத்து, 44; இளைப்பாறி, 158
அசைகின்ற கொம்பிலே பலாக்கள் கூத்தருடைய மத்தளங்கள்போலே கீழும்மேலுந் தூங்கி முற்றுதல்கொண்டு தாழ்தல், 142-144
அசைதல்-தங்குதல், 67
அசைதலோம்புதல்-இளைப்பாறுதல், 256
அசையினிர், 443, 470
அசைவு-இளைப்பு, 251
அசைவுழி யசைஇ, 403
அடர்-தகடு, 4
அடுக்கம்-பக்கமலை, 239,289,359
அடுக்கல்-மலை, 19
அணங்கிய-பின்னிவளர்ந்த, 223
அதள்-தோல், 419
அமர்ந்து-முகம் பொருந்தி, 495
அமரா நோக்கம்-அமைதி பிறவாத அறிவு, 74
அமல்-நெருங்கின, 219
அமலை-சோற்றுத்தடி, 441
அமன்ற-நெருங்கி விளைந்தன, 123 [அமலுதல்-நெருங்குதல்]
அமை-மூங்கில், 522
அமைவரப்பண்ணுதல், 38
அமைவரல்-பொருந்துதல் வரல், 38
அமைவிளைந்த தேறல், 522
அயில்-வேல், 373
அயில் காய்ந்தன்ன கூர்ங்கற்பாறை, 373
அயினி-உணவு, 467
அரக்கு-சாதிலிங்கம், 507
அரக்கு விரித்தன்ன செந்நிலம், 507
அரசுநிலை தளர்க்கும் அருப்பம், 378
அரலை-கொடும்பு, கொடுமுறுக்கு 24, விதைகள், 139
அரி-அரிசி, 180,413; தடி, 465
அரிக்குரல் தட்டை, 9
அரிநர்-அறுப்பார், 471
அரில்-சிறுகாடு, 379
அருந்திறற்கடவுள், 538
அருப்பம் - அருமை, 19, 232; அரண், 378
அருவி கொடிபோலத்தோன்றும் 581-82
அருவி நுகர்தல் - அருவியிலாடுதல், 294
அருவிப்பயன்கெழு மீமிசை-அருவியின்பயன்பொருந்திய உச்சிமலை, 278
அருளுதல்-கூறுதல், 38
அரைப்படுதல்-வயிற்றிலே யுண்டாதல், 307
அல்-இராப்பொழுது, 158, 254, 256, 437
அல்கலும்-நாடோறும், 443

அல்குதல்-தங்குதல், 158, 256
அலகு-பலகறை, சோழி, 234; எண், 347
அலகைத் தவிர்த்த-எண்ணை யொழிந்த, 347
அலகையன்ன வெள்வேர்ப் பீலி, 234
அலங்கு-அசைகின்ற, 144, 161
அலமரும் - அசையாநிற்கும், 119, 133, 219
அலரி-ஞாயிற்றின்கதிர், 195
அலைத்தல்-வருத்துதல், 497
அவரையின் வளைந்தகாய் அரி வாளை யொக்கும், 110
அவல்-பள்ளநிலம், 198; விளை நிலம், 450
அவல்பதம் - அவலிடிக்குஞ் செவ்வி, 121
அவல, 346
அவலவும் மிசையவும், 346
அவிழ்-சோறு, 183
அழுவம்-குழி, 368; ஆழம், 528
அளியர்-அளிக்கத்தக்கவர், 494
அளை-முழை, 300, 505
அளைஇ-கலந்து, 184
அற்கு, 437
அறல்வாழ் கூந்தற்கொடிச்சியர், 304
அறிமார்-அறிவதற்கு, 394
அறை-பாத்தி, 118; வெட்டுதல், 118; பாறை, 133, 150
அறைதல்-நறுக்குதல், 440
அனந்தல்-மதம், 173
அனந்தல் தீரச் சோற்றைப் பெறுதல், 173-85

ஆ

ஆகுளி-சிறுபறை, 3, 140
ஆங்கண்-அவ்விடம், 438
ஆங்கனம், 40?
ஆங்கு, உவமவுருபு, 52
ஆசினி-ஆசினிப்பலா, 139, 526
ஆசினிப்பலா புண்ணும்படி வெடித்து உள்ளுள்ள விதை கள் சிந்துதல், 138-39
ஆடி-நீராடி, குளித்து, 433
ஆடுகளின் மெய்யை யுரித்துத் தோற்படுக்கை தைத்தல், 419
ஆமான்-காட்டுப்பசு, 500
ஆரம்-சந்தனம், 520
ஆரி-அருமையையுடையது, 161
ஆரிப்படுகர்-அருமையையுடைய வழி, 161
ஆல்-ஆரல், கார்த்திகையாகிய மீன், 100
ஆலை-கரும்பாலை; கொட்டிலுக்கு ஆகுபெயர் 340
ஆற்ற-வழியிடத்த, 254
ஆற்றினளவு, 67
ஆறு முந்துறல்-வழியை முற் படப்போதல், 284
ஆனந்தக்குற்றமுண்டென அறி யாது கூறியது, 145

இ

இகந்து-கடந்து, 262
இகழுநர், 482
இகழுநர்ப்பிணிக்கும் ஆற்றல், 73
இகுத்தல்-தாழ்த்தல், 44
இகுதரல்-சொரிதல், 226
இகுப்ப-ஒலிப்ப, 532
இகுப்பம்-திரட்சி, 367
இசை-புகழ், 60, 82
இஞ்சி-மதில், 92
இஞ்சிக் கிழங்கைப் பாவையென் றல் மரபு, 125-26
இட்டவெல்லாம் பெட்டாங்கு விளைதல், 98
இட்டு-இட்டிய, சிறிதாகிய, 16
இடங்கர்-முதலை, 211
இடிக்கலப்பன்ன நறுவடிமா, 512

இடிச்சுர இயவு-கல்லையிடித்து ஆக்கிய வழி, *20*
இடியுமிழ்-இடியோசை; [உமிழ்-உமிழ்ந்த ஓசைக்கு ஆகு பெயர்], *310*
இடியுமிழ் தழங்குகுரல், *310*
இடை-பொழுது, *437*
இடைத்தெரிந்துணரும் பெரியோர், *542*
இணர்-பூங்கொத்து, *159, 305, 428*
இதணம்-பரண், *204*
இம்மென் கடும்பு, *286*
இமிர்தல்-ஒலித்தல், *486*
இமிர-ஒலிப்ப, *533*
இமில்-குட்டேறு; அதாவது, எருத்தினுடைய முன் முதுகின்மேல் உருண்டு பருத்துத் தோன்றும் ஒருறுப்பு;முசுப்பு, *330*
இமிழ்தல்-ஒலித்தல், *296*
இயக்கம்-வழிப்போதல், *374*
இயக்கு-செலவு, *571*
இயக்கும்-வழிபோக்கும், *18*
இயங்கலோம்பி-போதலைப் பரிகரித்து, *277*
இயங்குநர்-வழிபோவார், *18*
இயந்தொடுதல், *232,277* [தொடுதல்-வாசித்தல்]
இயம்-வாச்சியம், *232, 296, 365*
இயம்பும்-கூப்பிடும், *310*
இயல்பு-இலக்கணம், *537*
இயலும்-ஆடும், *509*
இயவு-வழி, *20, 111, 229, 323*
இரட்டுதல்-மாறிக் கூப்பிடுதல், *141*
இரவினன்ன இருள் தூங்கு வரைப்பு, *212*
இரீஇ-இருந்து, *549*
இரு-கரிய, *5,157,182,246,488*; பெரிய, *99,194,207,367,455*; நீண்ட, *265*
இருக்கை-இருப்பு, *190*
இருக்கரையும்போல இரண்டு பக்கத்துமாடங்களும், யாற்றைப்போலப் பெருந்தெருவுகளும் இருத்தல், *481-84*
இரும்பு கவர்வுறல்-அரிவாளாலே அரிதலுறல், *113*
இரும்பேரொக்கல், *157*
இருவி-தினையரிதாள், *109*
இருள் துணிந்தன்ன ஏனம், *247*
இருள்தூங்குவரைப்பு என்றதனால் மிளையாயிற்று [மிளை-காவற்காடு], *212*
இரைதேர்தல்-இரையைத் தேடுதல், *90*
இலங்கேந்துமருப்பினினம்பிரியொருத்தல், *297*
இலஞ்சி-மடு, *228*
இலம்-இல்லாமை, வறுமை, *576* [உரிச்சொல்]
இலம்படு புலவர், *576*
இலமென மலர்ந்த கையர், *552*
இவர்தல் - படர்தல், பரத்தல், *514*
இழிபு-இழிந்து, *288*
இழுக்கிய-பட்ட, *301*
இழுதினன்ன வானிணம், *244*
இழுது-நெய்விழுது, *244, 442*
இழை மருங்கறியா நுழைநூற்கலிங்கம், *561*
இறடி-தினை, *169*
இறடிப்பொம்மல் -தினைச்சோறு, *169*
இரு-முறியாத, இருமீன், *274*
இருவன்சிலையர், *274*
இருவுதல் - நெருப்பில்வாட்டி மயிர்போகச் சீவுதல், *249*
இறுகுகுலை முறுகப்பழுத்தல், *132*
இறும்பு - குறுங்காடு, *205, 271, 407*
இறும்பூது-அதிசயம், *358*
இறு வரை-முறிந்துநின்ற மலை, *367*

இறை-இறுக்கப்படுவது [இறுத்தல்-செலுத்தல்] 319; தங்குதல், 496
இன்னலியக்கம், 374
இனத்தின்தீர்ந்த ஏறு, 330

ஈ

ஈகை-பொன், 72
ஈகைமாரி, 72
ஈர்ங்கழை-பசியகோல், 207
ஈரெள்-பசிய எள்ளுத்தோடுகள், 106

உ

உகளுதல்-பாய்தல், 237
உடற்றுநர், 426
உண்டற்கினியபல, 353
உண்டற்கினிய பழன், 282
உண்டோர் மறைந்து அமைகல்லாப் பழன், 262-63
உண்ணுநர்த் தடுத்தல், 138
உணீஇய-தின்றற்கு, 54
உந்தி-யாழகத்து ஒருறுப்பு, 34
உந்தூழ்-பெருமூங்கில், 133
உம்பல்-யானை, 429; வழியில் வந்தவன், 540
உயவை-ஓர்கொடி, 136
உயிர்-துதிக்கைக்கு ஆகுபெயர், 6
உயிர்செகுமரபு, 209
உரவு - வலிமை, 211
உரவுச்சினம், 326
உரறு-முழங்கும், 357
உரீஇ-உருவி, தீற்றி, 24
உரும்-இடியேறு, 357
உரும்பு-கொடுமை, 550
உரைசெலல்-புகழ்பரத்தல், 376
உரைசெல வெறுத்தல்-புகழெங்கும் பரக்கும்படி செறிதல், 93
உலகமொடுநிற்றல், 541
உலைவிடத்தார்த்தல், 386
உழுவை-புலி, 505
உள்ளீடு, 442
உள்ளுதல்-நினைத்தல், 65
உற்ற-மிக்க, 314

ஊ

ஊகம்-குரங்கு, 208
ஊமைக்குருளை - வாய் திறவாக் குட்டி, 501
ஊழ்-முறைமை, 130, 263, 288, 405
ஊழ்த்தல்-செவ்வியழிதல், 180
ஊழிறத்தல் - முறைமையைக் கடத்தல், 263
ஊழிறந்து, 405
ஊழுற்று-முற்றுதலுற்று, 133
ஊறு-இடையூறு, 41, 284, 372
ஊறுபட - புண்ணுண்டாம்படி, 332

எ

எஃகம்-வேல், 129, 490
எஃகு-கூர்மை, 300
எக்கர்-இடுமணல், 556
எக்கர்மணலினும்பலர், 556
எடுத்து நிறுத்தன்ன சிறுநெறி, 16
எண்கு - கரடி, 501
எய்-எய்ப்பன்றி, முள்ளம்பன்றி, 301
எருத்து-கழுத்து, 246
எருதெறிகளமர், 469
எருமைக்கடா வெண்ணெலரிநர் தண்ணுமைக்கு வெருவுதல், 471-72
எருமையினம்பிரியொருத்தல், 472
எருவை - வேழம், பஞ்சாய்க் கோரை; கொறுக்கைச்சி எனினுமாம், 224
எல்-இராக்காலம், 416
எல்லரி-சல்லி, 10
எல்லினிர், 416
எழில் நுடங்கு மடந்தை, 31
எள்ளறு சிறப்பு, 562

எறிந்த - அழித்த, 318

ஏ

ஏ - அம்பு, 243
ஏருழவர்-பரிசிலர், 60
ஏற்றை - ஏறு ; (ஆண்பெயர்), 508
ஏறு - இடபம், 330; எருமையேறு, 335
ஏறுடைப் பெருநிரை, 573
ஏனம்-பன்றி, 247
ஏனல் கொய்பதமுறல், 108

ஐ

ஐம்பால் - ஐவகைப்பட்ட தலைமயிர்; [ஐவகையான - குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன], 30
ஐவனம்-ஐவனநெல், 115

ஒ

ஒக்கல்-சுற்றம், 50, 157
ஒட்டாதகன்ற ஒன்னுத் தெவ்வர், 397
ஒரீஇ-நீக்கி, அகலப்போய், 202
ஒருகரைக்கொண்டு கழிதல், 477
ஒருங்கியைந்தீண்டுதல், 345
ஒருத்தல் - யானைத்தலைவன்; 297; ஒருசார் விலங்கின் ஆண்பெயர், 472
ஒருவிரொருவிர், 218
ஒழுகின-படர்ந்தன, 136
ஒழுகுதல்-வளர்தல், 106
ஒள்வாண்மறவர், 489
ஒன்னுத்தெவ்வர், 386

ஓ

ஓதை-ஓசை, 327, 339, 469
ஓம்பல்-பாதுகாத்தல், 308
ஓம்பா-தனக்கென்று ஒருபொருளும் பேணுத, 400
ஓம்பா வள்ளல், 400
ஓம்புநர், 426
ஓம்புநரல்லது உடற்றுநரில்லை, 426
ஓம்புமின், 232, 240
ஓரி - ஓரிநிறம், 524
ஓவிறந்து - ஒழிவின்றி, 475

க

கஞலிய-நெருங்கின, 358
கட்கின் சேயாறு, 555
கட்கு-கண்ணுக்கு, 476
கட்சி-காடு, 235
கட்டில்-அரசவுரிமை; சிங்காதனமுமாம், 550
கடத்தல்-வெல்லுதல், 489
கடமான், 175
கடலினிரைக்கும், 415
கடலெனக்காரென ஒலிக்குஞ்சும்மை, 483
கடவதறிந்த விறலியர், 536
கடாவுறுக்கும்-கடாவிடும், 339
கடி-விளக்கம், 10; காவல், 491
கடிப்பகை - வெண்சிறுகடுகு; ஐயவி. [கடி-பேய் : பேய்க்குப் பகையாதலின் வெண்சிறு கடுகைக் கடிப்பகை என்றது.]
கடிவீ, 189
கடு-கடுமரம், 14
கடுக்கும்-ஒத்திருக்கும், 150
கடுப்ப, உவமவுருபு, 2, 32, 127, 140, 528
கடும்பு-சுற்றம், 159, 286, 364, 468
கடுவரற்கலுழி, 555
கடுவன்-ஆண்குரங்கு, 237
கடை-காம்பு, 490
கடைக்கொள்ளியையெரித்துப் பனி விட்டு நீங்கும்படி செய்து இனிதுதுயிலுதல், 446-47
கண்-இடம், 14, 221, 349, 441; அடிக்கும் பக்கம், 140; வடிவு, 169

கண்ணன் தண்ணெனக்கண்டும் 352
கண்ணுடைக்கும் ஏத்தம்-சாறு கொள்ளும் ஆலை, 341
கண்ணுடைதல்-விண்டல், 432
கண்ணுளர்-கூத்தர், 50
கண்பு-சண்பங்கோரை, 454
கண்புதைத்த நுண்ணீர்ப்பாசி, 221
கண்வாள்-கண்ணிறொளி, 369
கணம்-திரட்சி, கூட்டம் 44
'கணவன்' என்பது அஃறிணை யாண்பாற்பொருளிலும் வழங்குதல், 308
கதழ்-விரைந்த, 331
கதழ்ந்து-கடுகி, 36, 473
கதழும்-விரைந்தோடும், 407
கதிர் சினந்தணிந்த அமயம்-அந்திப்பொழுது, 375
கதுப்பு-மயிர், 44
கம்பலை-ஆரவாரம், 335
கய-மெல்லிய, 307
கயந்தலைமடப்பிடி, 307
கயம்-குளம், 259
கயம் புக்கன்ன பயம்படு தண்ணிழல், 47
கயமுனி-யானைக்கன்று, 107,500
கயமுனிக்குழவி, 500
கயவாய்-புகார் முகம், 528
கரியமேகத்திரள் மலையிடத்து அணுகிக் கவிதல், கை சென்று பிடிக்கும் பெற்றியை யொத்திருத்தல், 362
கருங்கடையெஃகம், 490
கருங்கோட்டுச் சீறியாழ், 534
கருவிய - தொகுதியையுடைய, 357
கருவிரலூகம், 208
கருவிரன்மந்தி, 311
கரைபொருநிவப்பு, 51
கல்-மலைக்கு இலக்கணை, 225
கல்லளை-கன்முழைஞ்சு, 255
கல்லாப் பார்ப்பு-தனக்குரிய தொழிலைக்கல்லாத குரங்குக்குட்டி, 312 [தனக்குரியதொழில்-தாயின் மார்பை இறுகப் பற்றுதல்]
கல்லெறிந்து - கல்லையிடந்து, கல்லைப்பெயர்த்து, 395
கல்லென் கடம், 415
கல்லென்கம்பலை, 335
கல்லென, 276,321
கல்லெனொக்கல், 549
கல்லேசுகவலை, 389
கலப்பை, கலம்+பை-வாச்சிய முட்டுக்களையுடைய பை, 13
கலம்-அணிகலம், 50, 71, 577; மட்கலம், 474
கலம்பெயக் கவிழ்ந்த தடக்கை, 577
கலிங்கம்-புடைவை, 561
கலித்தல்-செருக்கி வளர்தல், 146
கலுழி-பெருக்கு, 555
கலை-முசுக்கலை, 292, 315; ஆண்மான், 405
கலைநின்று விளிக்குங்கானம், 405
கவடுபடுதல் - பகுத்தலுண்டாதல், 34
கவண்கற்கள் கூற்றத்தன்ன, 206-209
கவண்கற்கள் யானையின் நிலை தளர்க்கும், 206
கவணுமிழ் கடுங்கல், 206
கவர்குரற்சேவல், 510
கவர்தல்-கிளைத்தல், 106
கவலை-கவலைக்கிழங்கு, 128
கவலைமறுகு, 482
கவிழ்ந்த - கீழ்நோக்கின, 577
கவைஇய-அகத்திட்ட, 34
கவைக்கதிர் - இரட்டித்த கதிர்கள், 112
கழல்தொடி-உழலுந்தொடி, 577
கழிப்பி, 539
கழிமிடைந்தியற்றிய புல்வேய் குரம்பை, 438-39
கழுது - பரண், 243

கழை - மூங்கில், 161, 237, 248, 328, 533, 579; கரும்பின் கோல், 341
கழைக்கரும்பு-கோலாகிய கரும்பு, 119
கழைவளர் தூம்பு, 533
கழைவளர் நவிரம், 579
கழைவளர்நெல், 180
களமர்-உழவர், 469
களிறுகரக்கும் இடங்கர், 211
களிறுமதனழிக்கும் மாசுணம், 260-61
களிறுமலைந்தன்ன கண் கூடு துறுகல், 384
களையா-விலக்கப்படாத, 314
கறங்குதல்-ஒலித்தல், 321, 573
கறங்குமணி, 573
கறி - மிளகு, 521
கனை - திரண்ட, 380
கன்றுகளைப்பிணைத்துக் காந்தள் மடலாலே யடித்துக் கடாவிடு தல், 336-339
கனிபொழி கானம், 54
கனை - செறிந்த, 370
கனைசெலல் - ஆரவாரிக்குஞ் செலவு, 473
கனைசெலல்முன்பு, 473
கனைத்தல் - [தண்டு] திரளுதல், 117

கா

கா - பொழில், 451, 486
காஅய்க்கொண்ட-காவிக்கொண்ட, 365, 515
காஞ்சி - ஒருமரம், 449
காட்சி - அறிவு, 49
காடுகாத்துறையும் கானவர், 279
காடேசுகவலை, 396
காண்பு - காட்சி, 315
காணுநர், 476
காணுநர் வயாஅங் கட்கின் சேயாறு, 476
காந்தளினது மடல் துடுப்புப் போல்வது, 336
காய - காவின, 13, 155
காயம்-காழ்ப்பு, உறைப்பு, 126
கார்வாய்த்தெதிர்தல், 142
காரி - நஞ்சு, 83
காரியுண்டிக் கடவுள் - நஞ்சை யூணுகவுடைய இறைவன், சிவ பிரான், 83
காரியுண்டிக் கடவுள் நவிரமலை யில் மேவியுறைவது, 82-83
கால் - காற்று, 117, 135; அரி தாள், 123; கா[ம்]பு, 265
காழ் - காம்பு, 129; விதை, 174, 338; வயிரம், 520
காழ்மண்டெஃகம், 129
காற்றாலே நாவற்கனி உதிர்தல், 135
கானக்கோழி, 510

கி

கிழவர் - கிழமையுடையீர், [கிழமை-உரிமை] 166
கிளிகடிமகளிர், 329
கிளை - சுற்றம், 54, 309, 313

கு

குடமலை-குடகமலை, 527
குடமலைப்பிறந்த காவிரி, 527
குடாவடி-வளைந்த அடி, 501
குடிஞை-பேராந்தை, 141
குண்டு-ஆழம், 213, 220
குயவன்வனைகின்ற மட்கலத்திற் சக்கரம்போலக் குமிழி சுழலும், 474
குரங்குகள் தளிரை மேய்ந்து வளர்தல், 313
குரம்பை - குடில், 439
குரல் - கதிர், 25; யாழுக்கு ஆகு பெயர், 358; பாட்டு, 536
குரலோர்த்துத்தொடுத்த நரம்பு, 23
குரவையயர்தல் - குரவைக் கூத் தாடுதல், 322

குருளை - குட்டி, 501
குரூஉ-நிறம், 169, 349, 517
குரூஉப்புலி, 517
குரூஉக்கண் இறடிப்பொம்மல், 169
குழவி-கன்று, 500, 506
குழைய-வாடும்படி, 334
குளவி-காட்டுமல்லிகை, 334
குளிர்-அரிவாள், கிளிகடிகருவி, 110
குறவர் தம் பெண்டிரோடே குரவை யயர்தல், 320-322
குறவரும் மருளும் குன்றம், 275
குறிஞ்சி - குறிஞ்சிப்பூ, 334; குறிஞ்சிப்பண், 359
குறியவும் நெடியவும், 288
குறுதல்-குத்துதல், 342
குறும்பு-சிற்றரண், 318
குறும்பெறிதல் - வலியழித்தல், 504
குறை-குறைக்கப்பட்டது, எனவே தசை; 168, 458
குன்றகச்சிலம்பு - மலையிடத்தெழும் எதிரொலி, 344
குன்று சூழிருக்கை, 583

கூ

கூடியத்தன்ன குரல்புணர்புள், 269
கூத்தர்தலைவன் பொற்றாமரைப் பூச்சூடல், 569
கூப்பிடு கடக்குங் கூர்நல்லம்பு, 421
கூர்தல்-மிகுதல், 245, 289, 292, 517
கூவல்-கிணறு, 366
கூவை-கூவைக்கிழங்கு, 137; திரள், 422
கூளியர் - நாடுகாக்கும் வேடர் 422

கெ

கெழுமுதல்-முற்றுதல், 114

கே

கேழ்-நிறம், 309
கேழல்-பன்றி, 193
கேழல் விளைபுனம் நிழத்தல், 193

கை

கைக்கோள்-கையால் தழுவிக் கோடல், 311
கைதொழூஉப் பரவிப்பழிச்சுதல் 360
கைதோய்வன்ன கார்மழைத் தொழுதி, 362
கைந்நிறைய, 576
கைபுடையூ - கையைக்கொட்டி, 204
கையற்ற-செயலற்ற, 315

கொ

கொட்கும்-சுழன்று திரியும், 274
கொடி-நறைக்கொடி, 514
கொடிச்சியர்- குறிஞ்சிநிலமகளிர் 304
கொடியோள் கணவன், 424
கொடு-வளைந்த, 90, 110
கொடுந்தாள்-வளைந்த கால், 90, 502, 508
கொடுந்தாள் முதலை, 90
கொடுவரி-புலி, 302
கொடைக்கடனிறுத்தல், 89, 543
கொண்மார்-கொள்ளுதற்கு, 338
கொய்சுவற்புரவி, 574
கொழுங்குறை - கொழுவிய தசை, 175

கோ

கோட்டொடு பீலித்தழை கட்டுதல், 5
கோடியர்-கூத்தர், 143, 236
கோடியர் மகாஅரன்ன கடுவன், 236-37
கோடு-ஊதுகொம்பு, 5; கொம்பு 268; யாழ்த்தண்டு, 534

கோதை-மாலை, 349
கோள்-குலை, 337
கோளியாலம், 268

கௌ

கௌவை-எள்ளிளங்காய், 105

ச

சந்து-சந்தி, 393
சந்துநீவிப் புல்முடிங் திடுதல், 393

சா

சாயல்-மென்மை, 61
சால்-நிறைந்த, 554
சாலும், 546
சாறு-திருநாள், 481
சான்ம்-சாலும், [உகரங்கெட்டு மெய்திரிந்து நின்றது], 319, 467

சி

சிலம்பு-பக்கமலை, 14; ஒலித்தல், 26; ஒலி, 344
சிலையொலி-வில்லின்ஞெசை, 406
சிறுகுடி, 156
சிறுமை-வருத்தம், 314

சீ

சீர்-காவுமரம், 154
சீறியாழ், 534

சு

சுகிர்புரிநரம்பு - வடித்து முறுக்கின நரம்பு, 23
சுரம், 398
சுட்டினும் பனிக்குஞ்சுரம், 398
சுவல்-மேட்டுநிலம், 436; கழுத்து, 455, 574
சுவல்விளைநெல், 436
சுற்றம்-கல்வி ச் சு ற் ற ம் 80; படைத்தலைவரைக்காட்டியது, 376; அரசச் சுற்றம், 550

சூ

சூர்-தெய்வம், 239
சூர்புகல் அடுக்கம், 239
சூழி-முகபடாம், 228

செ

செங்கண் மரைவிடை, 406
செங்காந்தள் தீயினை யொத்தல், 145
செத்து-கருதி, 146
செப்பம்-செவ்விய வழி , 160, 197
செம்மல்-தலைமை, 543
செம்மலோய், 543
செம்மறியும் வெள்ளாடும் விரவியிருத்தல், 414
செம்மறியும் வெள்ளாடும் விரவியிருத்தல் - நெல்லினரிசிக்கள் செம்மையும் வெண்மையுங் கொண்டனவாய் விரவியிருத்தல்போலும், 413-14
செயலை-அசோகமரம், 160
செல்லா நல்லிசை, 388
செவ்வீ-சிவந்தபூ, 434
செறிதொடிவிறலியர், 201
செறு-செய், 123, 460

சே

சேஎய்ப் பெருவிறல் - முருகனைப் போலும் நன்னன், 493
சேக்கை-படுக்கை, 418
சேட்புலப் பரிசிலர், 492
சேண்-தூரியநிலம், 262
சேஞ்ஞென், 243
சேத்தல்- தங்குதல், 420, 443, 452
சேந்த-சிவந்த, 160

சேந்தனிர், 420
சேம்பும் மஞ்சளும் விதைத்துக் காத்தல், 343
சேய்-முருகன், 493
சேய்த்தன்று, 487
சேயரி-செவ்வரி, 45
சேயளை-நெடிய முழை, 500
சேயாறு, 476. 555
சேறு-சாறு, 137, 513

சொ

சொந்தமனைபோலப் புகுதல், 165

ஞ

ஞமலி-நாய், 42

ஞா

ஞாயிறன்ன வசையில் சிறப்பு, 85

ஞெ

ஞெகிழி-கடைக்கொள்ளி, 446
ஞெண்டு - நண்டு; முதற்போலி 460
ஞெரேரென-கடுக, 240,340,579

த

தகர்-ஆட்டுக்கிடாய், 414, 503
தசும்பு-மிடா, 463
தட்டை - கரடிகை 9; கிளிகடி கருவி, 328
தட்டைப்பறை தவளையினது குரலையுடையது, 9
தட்டை மூங்கிலாற் செய்யப் படுவது, 328
தட-பெரிய, 577
தடக்கை, 577
தடி-தசை, 177, 425, 563
தண்டுதல் - நலிந்து இன்னச் செய்தல்; பலகாலலைத்துத் இன்னச்செய்தல், 425
தண்ணுமை, 471
தண்ணென், 442
தண்ணென, 432
தண்பணைநாடு, 453
தணிமார்-ஆற்றுதற்கு, 303
தபுதல்-கெடுதல், 42
தம்பெயர் தம்மொடு கொண்டு மாய்ந்தோர், 553
தம்மிற் பிணையுங் கதிர்களை யுடைய ஏனல், கயமுனி முயங்கு கை கடுத்தல்; 107-108
தராய்-மேட்டு நிலம்; 460
தலைஇய-பெய்த, 1
தலைநாள்-முதல்நாள், 565, 581
தலைநாளன்ன புகல், 565
தலையும்-பெய்யும், 233
தலைவந்த-கைவந்த, 331
தலைவாய்-வாய்த்தலை; வாய்க் காலின் தலைப்பு மதகு, 475
தவ-மிக, 377
தவப்பல-மிகப்பல, 372,385,398
தழாஅல்-தழுவுகை, 103
தளி-மழை, 385
தளிரொடு மிடைந்த கண்ணி, 430

தா

தாஅய்-பரந்து, 149
தாக்குறுதல்-எதிர்ப்படுதல், 66
தாதெரு-எருப்பொடிகள், 531
தாதெருத் ததைந்த முற்றம், 531
தாய-பரந்த, 290
தாயம்-நாடு, 551; உரிமையெனி னும்மாம்.
தார்-தூசிப்படை, 227
தாரம்-பண்டம், 170, 513

தி

திகிரி-சக்கரம், 474
திரங்கு-உலர்ந்த, 431

திரிவு-உறழ்ச்சி; [நரம்பிற்கு உறழ்ச்சி கூறியது, வலித்தல் மெலித்தல் செய்யவேண்டு தலின்]
திருந்து வேலண்ணல் - நன்னன் 319
திருநகர்முற்றம், 548
திருமழை - செல்வத்தை யுண்டாக்கும் மழை, 1
திருவார்மார்பன், 356
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கு, 91
தில்ல-விழைவின்கண் வந்தது, 567
திலகம்-திலகப்பூ, 520
திவவு-வார்க்கட்டு, 21
திறல்-வலி, 81, 538
தினைகுறுமகளிர், 342

தீ

தீம்பழத்தாரம், 51?
தீர்வை-கீரி, 504

து

துஞ்சுதல்-தூங்குதல்; எனவே, விழுந்து கிடத்தல், 261; தங்குதல், 478
துடவை-தோட்டம், 122
துடிக்கணன்ன குறை, 458
துணர்-கொத்து, 521
துணிந்த-தெளிந்த, 250
துணை-மனைவியர், 17
துப்பு-வலி, வலிமை, 59
துமிய-துணிய, 488
துய்-ஆர்க்கு, 178. [ஆர்க்கு-புளியம்பழத்தில் நார்போன் றிருக்கும் காம்பு]
துய்ம்மயிர், 418
துரு-செம்மறியாடு, 217
துருவினன்ன புன்றலை மகார், 217
துருவை-செம்மறி, 414
துவற்றல்-தூவுகை, 363
துவன்றுதல் - நெருங்குதல், 51, 303, 529
துவன்றிய-நிறைந்த, 205
துவைக்கும்-ஒலிக்கும், 573
துவைப்பு-ஆரவாரம், 117
துழைஇ - துழாவி, 181; வளைத்து, 454
துளங்குதல்-அசைதல், 463
துளர்-களைக்கொட்டு, 122
துளர்படுதுடவை, 122
துறைபல முற்றுதல், 40 [துறை-இருபத்தொரு பாடற் றுறைகள்]
துன்னருந் துப்பு-கிட்டுதற்கரிய வலி, 59
துனிதீர்காதல், 485
துனை-விரைவு, 55, 391, 475
துனைபறை நிவக்கும் புள்ளினம், 55

தூ

தூ-தூய, 51, 75; தசை, 155
தூஉயன்ன - தூவிஞெலொத்த, 363
தூஉயன்ன துவலை, 363
தூண்டில், 456
தூம்பு-நெடுவங்கியம், 6, 533
தூம்பு - யானையின் கைபோன் றிருத்தல், 6
தூவல் - மழை, 146
தூவற்கலித்தல் - மழையாற் செருக்கிவளர்தல், 514

தெ

தெருஅ-சுடப்படாத, 272
தெறுதல்-கொல்லுதல், 301

தே

தேஎம்-தேசம், 394
தேஎம் மருளும் அம்மியம், 273

தேக்கட்டேறல் - தேறுற்செய்த கட்டெளிவு, 171, 522
தேக்கட்டேறலை மூங்கிற் குழாயிலே முற்றவைத்தல், 522
தேங்கொள் கொள்ளை, 317
தேம்-தேயம், 86; திசை, 273, 364; தேன், 399, 428
தேம்படமலர்தல், 428
தேம்பாய்கண்ணி, 399
தேர்களின்செலவு நீரின்செலவினை யொத்தல், 571
தேர்வீசுகவிகை, 399
தேரொலிபோல அருவி யொலித்தல், 323-24
தேறல்-கட்டெளிவு, 463, 522

தொ

தொஃறிணை மூதூர், 401
தொடித்திரிவன்ன தொண்டுபடுதிவவு, 21
தொடுதல்-தோண்டுதல், 292
தொண்டுபடுதிவவு, 21
தொய்படுதல்-நனைதல், 365
தொய்யாது-உழாமல், 122
தொல்பதி, 567
தொல்லோர் வரவு, 89
தொலைச்சிய-கொன்ற, 176
தொழுதி-தானை, 116; இனம், திரள், 499
தொன்முறைமரபினிராதல், 355
தொன்றுமுழுகு மரபு, 391, 537

தோ

தோரை-மூங்கில்நெல், 121
தோரை அவற்பதங்கொள்ளல், 121
தோல்-யானை, 88, 377
தோல் வரைப்பு-யானையணி, 88

ந

நசை-ஆசை, 411, 545
நசைதரவருதல், 545-46
நடவை-வழி, 214, 432
நம்வரைந்தநாள் புகழொடுங்கழிக, 557
நமக்கு இன்னும் வருவதாக, 354
நயந்தனிர், 559
நரலும்-ஒலிக்கும், 161
நல்லிசை உலகமுள்ளளவும் நிற்றல், 70
நல்லிசைச் சென்றோர், 540
நல்லிசைப்பெயரொடு நட்ட கல், 388-89
நவிலுதல்-பயிலுதல், பழகுதல், 63; கூறியடிப்படுதல், 77
நளிந்து-செறிந்து, 197 [நளி-செறிவு]
நற்கு-நன்கு, நன்மை, 392
நறவு-கள், 320; நெல்லாற்சமைத்த கள், 172
நறவு நாட்செய்தல்-கள்ளை நாட்காலத்தே குடித்தல், 320
நறுங்காழாரம், 520
நறுவடிமா, 512
நன்கறியாப் புலம்-தியநிலம், 392
நன்றுணர்சூழ்ச்சி, 62 [நன்று-ஆக்கம்]
நன்னன், 467
நன்னன் சேய் நன்னன், 64
நனந்தலை, 270, 272,
நனி, 487
நனை-அரும்பு, 514

நா

நாகம்-புன்னைப்பூ, 520
நாட்டம்-கண், 45
நாடுகாண்நனந்தலை-தன்மேலேறி நாட்டையெல்லாம் காணலாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலை, 270. [இதனை, நிலநூலில் 'out-look-Tower' என்பர்.] நனந்தலை-மலைக்கு, ஆகுபெயர்.
நாடுகிழவோன், 583
நாடுபடுவல்சி, 68

நாண்-கயிறு, 456
நாண்மகிழிருக்கை-நாளோலக்கம் 76
நாணுடைமறவர், 387
நா நவில் நல்லோர் குழீஇய அவையம்-நல்லவை, 77
நாறுகொடிப்புறவு. 407

நி

நிதியந்துஞ்சுதல், 478
நியமம்-அங்காடித்தெரு, 480
நிர்-நீரென்பது குறுகி நின்றது, 231
நிலந்தின்மருப்பு, 245
நிலந்தினக் கிடந்த நிதியம், 575
நிலநாடு, 192
நிலைதளர்க்கும், 206, 222
நிவந்தோங்கு, ஒருபொருட்பன்மொழி, 478
நிவந்தோங்குவரைப்பு, 478
நிவப்பு - ஓக்கம், உயர்ச்சி, 20, 51, 92; வளர்ச்சி, 118;
நிழுத்தல்-நொக்குகை, குறையச் செய்தல், 193
நிழல்-விளக்கம், 88
நிறம்-மருமம், உயிர் நிலை, 245

நீ

நீண்மொழி-வஞ்சினம், 539
நீத்தம்-பெருக்கு, 554
நீரகம்-கடல்சூழ்ந்த உலகு, 80
நீருறு உயவை, 136
நீரைக் கையாற்குடைந்து இனிய வோசை யெழுப்பல், 295-96
நீவி-துடைத்து, 392
நீனிறவோரி, 524

நு

நுகம்-வலி, வலிமை, 87
நுகம் படக் கடத்தல் - வலியுண்டாக வெல்லுதல், 87
நுகமருள் நூறை, 515
நுண்கோல்வேரல். 223
நுண்ணிழுது, 442
நும்மில் புக்கன்ன வதிமின், 254-55
நும்மின்-நும்முடைய, 285
நும்மினும் தான்பெரிது அமர்ந்தினிது நோக்கி, 559-60
நுவணை-தினைமா, 445
நுவறுதல்-அராவுதல், 35
நுழை-சிறியவழி, 379

நூ

நூழிலாட்டுதல்-கொன்றுகுவித்தல், 87
நூறு-நீறு, 137
நூறை - நூறைக்கிழங்கு; [மலங்கு என்பாருமுளர். மலங்கு- ஒருவகை மீன்], 515

நெ

நெடுங்கடை-தலைவாசல், 529
நெடுஞ்சுழிப்பட்ட கடுங்கண் வேழம், 325
நெடுநாண்டூண்டில், 456
நெடுவரையிழிதரு நீத்தஞ்சாலருவி, 554
நெய் - தேன், 525
நெய்தல் மையென விரிதல், 124
நெறிமாறுபடுதல்- வழிதப்புதல், 241

நே

நேமி-தேருருள், 238, 525
நேமியிற்செல்லும் நெய்க்கண் இறுல், 525
நேமியிற்றிருடுத்த பிரசம், 238-39
நேர்கொள் நெடுவரை - செங்குத்தான மலை, 238
நேர்சீர்சுருக்குதல்- தம்மிலொத்த கனத்தவாய்க் கட்டுதல், 13
நேரரிசி-தமக்குள் ஒன்றற்கொன்று ஒத்திருக்கிற அரிசி, 440

நொ

நொடி-மாத்திரை, 11
நொடிதல்-கூறுதல், 545
நொய்ம்மரம், 446

நோ

நோக்கம்-அறிவு, கருத்து, 74
நோன் தாள்-வலிய முயற்சி, 163
நோனு-பொறுத்தலாற்றாத, 163, 529
நோனுச்செரு, 529

ப

பகர்தல்-விலைகூறி விற்றல், 413
பகன்றைக்கண்ணியைப் பழையர் சூடுதல், 459
பச்சை-தோல், 29
பசும்பொதித்தேறல், 463
பசை-பற்று, பிசின், 26
பட-உண்டாக, 428
படர்தல்-நினைதல், 64
படார்ந்திகும், 400, 424
படியோர்-வணங்காதார், 423
படியோர்த்தேய்த்த ஆண்மை, 423
படுகண்முழவு, 532
படுகர்-வழி, 161
படுத்துவைத்தன்ன பாறை மருங்கு, 15
படுதல்-முழங்குதல், 532
படை-கலனை முதலியன; கலனை-சேணம், 574
பண்ணமைத்தல், 2
பண்ணிய-வாசித்த, 534
பண்ணுப்பெயர்த்தல், 451
பணவை-பரண், 298
பணை-மருதநிலம், 453
பத்தர், 381
பதம்-உணவு, 157, 252
பதலை-ஒருகண்மாக்கிணை, 11
பதியெழலறியாப் பழங்குடி, 479
பதிவயிற்றீர்ந்த புலம்பு, 411-12
பயம்பு-குழி, 199
பயம் புகுதல்-பயன்படுந்தன்மையிலே புகுதல், 132
பயிர்-தழைத்தல், 7
பரம்-மேலாகிய, 7
பரல்-சுக்கான்கல், 508
பரல்தவழுடும்பு, 508
பரலவற்போழ்வு, 198
பராவருமரபிற் கடவுள், 230
பரி-செலவு, 364, 502
பரிசில், 581
பரிசில்மறப்பநீடல், 187
பரிசிலர் புகழைவித்திப் பொருளையெடுப்பர், 60
பரித்தல்-தரித்தல், தாங்குதல், 497
பரிபுலம்பு, 497
பருந்து புற்கென்ற முதுகினையுடையது, 147
பரூஉ-பருத்த, 168, 516
பரூஉக்கண், 252
பரூஉக்கொடி, 216
பல்கவர்வளி - நாலுதிசைக் காற்று, 114
பல்யாட்டினநிரை, 416
பலம்-பலன், 411
பல்வின் பெரும்பழம் முழவு போன்றிருக்கும், 511
பலவுறுதிருமணி, 516
பலா கார்காலத்திலே பழுக்கும், 12
பலாப்பழம் புண்கூர்தல், 292
பழவிறன்மூதூர், 487
பழனம்-மருதநிலம், 454
பழிச்சுதல் - வாழ்த்துதல், 201, 360, 538
பழுதுளி - பழுதானவை, 153 [உளி: பகுதிப்பொருள்விகுதி]
பழுநி-முற்றுப்பெற்று, 578
பழுநிய-முற்றுப்பெற்ற, 95
பழையர் - கள்விற்கும் வலையர், 459
பள்ளி-இருப்பிடம், 300; இடைச்சேரி, 451

பளிங்கு - கருப்பூரம் ; இது ஒரு வகை மரம், 516
பறை-பறத்தல், 55
பன்றிப்பறை, 344
பனித்தல்-நடுங்குதல், 81, 191, 289
பனிவார்கா, 486
பனுவல் - எஃகுறுபஞ்சி; பன்னியபஞ்சு. [எஃகுதல்-பன்னுதல்], 361

பா

பாக்கம், 162
பாடி-பாட, எச்சத்திரிபு, 359
பாடு - ஓசை, 278
பாண்டில்-கஞ்சதாளம், 4
பாணி-தானம், 11; பாட்டு, 539
பாம்புகுழிகளில் கரந்து ஒடுங்கும், 199
பாய்தல்-பரத்தல், 524
பாயிருள்-பரந்த இருள், 84
'பார்ப்பு'-குரங்குக்குட்டிக்கு வருதல், 208, 312
பாராட்டி-கொண்டாடி, 353
பால்வார்தல்-பால் ஒழுகுதல்; எனவே, பால்கட்டுதல், 114

பி

பிடிக்கையன்ன செங்கண் வராஅல், 457
பிடி முழந்தாள் கடுப்பக் கவலை வீழ்ந்தன, 127-28
பிணர்-சருச்சரை, 246
பிணவுநாய்-பெண்நாய், 177
பிணிமார்-கட்டுதற்கு, 326
பிணையற்கோதை, 349
பிதிர்வு-பிதிர்ச்சி, 109
பிரசம்-தேனிறால், 239
பிழைப்பு-கெடுதல், 578
பிள்ளையைப்பெற்றால் வளையிடார், 253
பிற்படல்-பின்னுதல், 357

பீ

பீலிவேர் - பீலியின் அடிக்குருத்து; இது, முருந்து எனப்படும், 234

பு

புகர்-புள்ளி, 225
புகர்முகத்தைச் சூழி மறைத்தல், 225-228
புகர்முகம், 225
புகல்-விருப்பம், 69, 239, 565
புகலுதல்-புகழுதல், 356
புகழுநர்-சூதர் மாகதர் பாணர் கூத்தர் முதலியோர், 73
புண்கூர்யானை, 517
புண்ணையாற்றுதற்குப் பாட்டுப் பாடுதல், 303-4
புதவு-அறுகம்புல், 449; தெற்று வாசல்: திட்டிவாசல் எனவும் படும், 490
புதுவிர், 392
புதுவிராகுவிர் - விருந்தினராகுவிர், 412
புதுவோர்-புதியமாந்தர், 288
புதைத்த-மறைத்த, 221
புரி-விரும்பின, 299
புரிசை-மதில்; ஆகுபெயராய்த் திருப்பதியை யுணர்த்திற்று, 229
புரை-உயர்வு, உயர்ச்சி, 88, 377
புல்லரைக்காஞ்சி, 449
புல்வேய்குரம்பை, 439
புலந்து-வெறுத்து, 203
புலம்-தினைப்புனம், 299
புலம்பு-வருத்தம், 49, 167, 412; தனிமை, 497
புலம்புக்கு யானையுண்ணுதல், 297-299
புலம்பு சேணகலல், 412
புலரிவிடியல், 448
புழுகு-மலைபெருக்கு, 219
புழை-சில்வழி, 194
புள்-நிமித்தம், 66, 448; வளை, 253
புள்ளோர்த்தல், 448
புறங்காணல், 71
புறந்தருதல்-பாதுகாத்தல், 374

புறம்மறைத்துச் சொல்லிக்காட்டிச் சோர்வின்றி விளக்குதல், 78-79
புறவு-சிறுகாடு, 48; காட்டிடம், 407
புன்கொடி முசுண்டை வாலிதின் விரிந்த, 101
புன்றலைமகார், 217, 253
புனம்-கொல்லைநிலம், 99, 102
புனல் கால் கழுவுதல் - நீர் குப்பையை வாரிக்கொண்டு போதல், 48
புனலஞ்சாயல், 61
புனலிலே அழுந்துபவரை விரைந்தெடுத்தல், 281
புனற்படு பூசல், 281
புனிறு-ஈன்றணிமை, 49, 120, 203
புனிறுபோதல் - ஈன்றணிமை தீர்ந்து முற்றுதல், 120, 203
புனைதல்-கைசெய்தல், அலங்கரித்தல், 56, 57
புனைதார்-கைசெய்த மாலை, 56

பூ

பூங்கொத்துக்கள் நெருப்புப் போன்றுஒள்ளியவாயிருத்தல், 159
பூசல் - ஆரவாரம், 299, 306, 314, 329
பூழி-பொடி, 444

பெ

பெயல்-மழை, 99

பே

பேரியாழ், 37

பை

பை-பசுமை; இளமை குறிப்பது, 40; படம், 259
பைதீர்பாணர், 40
பைங்கிணத்தடி, 563
பைங்கிணப்பிளவை, 176
பையபைய-மெல்லமெல்ல, 383

பொ

பொதி-குலை, 121
பொய்-பொய்தல், விளையாட்டு, 107
பொய்யா வானின் வீயாது சுரத்தல், 75-76
பொருந்தாத்தெவ்வர், 488
பொருமுரணெதிரிய வயவர், 547
பொலம்-பொன், 574
பொழுது-முகூர்த்தம், 65
பொன்போலுங் கொத்தினையுடையது வேங்கைப்பூ, 305
பொன்னறைந்தன்ன நுண்ணேரரிசி, 440

போ

போர்-நெற்போர், 461
போழ்வு-பிளப்பு, 198

ம

மகமுறைதடுப்ப, 185
மகார்-பிள்ளைகள், 217, 339
மகுளி-அரக்கு, 103
மகுளிபாய்தல் - அரக்குப் பாய்தல், 103
மடக்கண் மஞ்ஞை, 509
மடக்கண் மரையான், 506
மடநடையாமான், 500
மண்-மார்ச்சனை, 370, 382
மண்டு-தைத்த, 129
மணஞ்செய்த மனை மணத்தல், 151
மணல்வார் புறவு, 48
மணி-பளிங்கு, 250; மாணிக்கம், 516
மணிமருள்தெண்ணீர், 250
மதந்தபுஞமலி நாவினன்ன சிறடி, 42-43
மதம்-வலி, 42
மதலை-பற்றுக்கோடு, 216
மதன்-வலி, 260, 280
மந்தி பார்ப்பைத் தன்கையாற் றழுவிக் கோடலை மறத்தல், 311
மரங்கடுக்கும் மாசுணம், 261
மரங்கொட்டிநோக்கல், 200

மரம் காலமன்றியும் பயன் கொடுத்தல், 134
மரம்பயிலிறும்பு, 271
மரம் மறையாக் கழிதல், 210
மரல்நார், 431
மரல்நாரிலே கண்ணிகட்டுதல், 430-31
மராஅத்த, 395
மராஅத்து, 498
மராஅம்-மராமரம், 395, 428
மராமரம் எரிகான்றன்ன பூஞ் சினை யுடைத்து, 498
மருங்கு-இடம், 215
மருதம்-மருதப்பண், 470, 534
மருதம்பண்ணுதல், 470
மருப்பிகுத்தல் - யாழை வாசித் தல், 391
மருப்பு - யாழின் தண்டு, 37; யாழுக்கு ஆகுபெயர், 391
மரையான் குழவி பெருஞ்செவி யுடைத்து, 506
மரையான்விடை, 331
மரைவிடை சிலையொலிக்கு வெருவுதல், 406
மல்லல்-வளன், 232
மல்லல் வெற்பு-வளவிய நவிர மலை, 232
மலை-மலைதல், போர்செய்தல், 331
மலைதற்கினியபூ, 283
மலைநீர்-அருவி, 581
மலைப்பக்கத்துக்குடிஞையிரட்டுதல், 141
மலைபடுகடாம் - மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி, 348
மலைமார்-சூடுதற்கு, 306
மலைமிசைநாடு, 188
மலைமுழுதும் பலாவின் தேன் கமழ்தல், 293
மலையடுக்கம்-மலைப்பக்கம், 141
மழை-குளிர்ச்சி, 58; மேகம், 340, 377
மழைசுரந்தன்ன ஈகை, 580
மழைமருள்பஃறோல், 377
மறுகு-குறுந்தெரு, 482
மன்ற-நிச்சயமாக, அறுதியாக; 66, 494
மன்றில் வதியுநர், 492

மா

மா-பலாப்பழ விதையில் மா, 179; கரிய, 441; பெரிய, 503
மாகம்-ஆகாயம், 272
மாசுணம்-பெரும்பாம்பு, 261
மாட்டிய - கொளுத்திவைத்த, [கொளுத்தி-பொருத்தி] 194
மாடம் மலையென மழையென ஓங்கியிருத்தல், 484
மாண்ட - மாட்சிமைப்பட்ட, [மாண், பகுதி] 31
மாதிரங் கைக்கொள்ளல் -திசையை மனத்துக்கோடல், 287
மாதிரத்தியம்ப, 348
மாதிரம்-திசை, 287, 293, 348
மாதேர்புகொட்கும் குறவர், 274-75
மாதோ, அசை; 291
மாநிழல்-பெரியநிழல், 271
மாபுகல்கானம், 69 [மா-விலங்குகள்]
மாமை-கருநிறம், 35
மாய்க்கும்-மறைக்கும், 220
மாரியின் இருதரல் - மழைபோலத் தாழ்ந்துவீழ்தல், 226
மால்பு-கண்ணேணி, 316
மாலை-இயல்பு, 93
மாறு மைந்து-முதுகிடாத வலி, 332
மாறு-கேடு, 62
மான்றோல்போர்த்த சிறுபறை, 321

மி

மிச்சில்-மிகை, 338
மிசைய, 346
மிதவை - பாற்சோறு, 417; குழைந்த கூழ், 435
மிதியதட்பள்ளி, 419
மிளை-காவல், 409

மிளைசூழ்கோவலர், 409
மின்னுவசிவு, 97

மீ

மீமிசை-உச்சிமலை, 278, 322, 579

மு

முகம்பாய்தல்-குத்துதல், 129
முச்சி-மயிர்முடி, 182
முசுக்கலை பலாப்பழத்தைத் தோண்டுதல், 292
முட்டாது, 564
முடுக்கர்-நீர்குத்தின இடங்கள், 213
முடுக்கிய-ஓடிக்கடித்த, 177
முடுவல்-பெண்நாய், 563
முடுவல்தந்த பைங்கிணத்தடி, 563
முத்துடைமருப்பு, 518
முதல்-அடி, 461
முரஞ்சல்-முதிர்தல், 144
முரஞ்சிய-முற்றிய 268
முரண்-மாறுபாடு, 547
முரம்பு - பருக்கைக்கல்லாலாகிய மேட்டுநிலம், 198, 432
முரற்கை-தாளம், 390
முழவுத்துயிலறியா, 350
முழுவலி, 518
முள்ளரித்தல் - முள்ளைக் கழித்தல், 465
முளவுமா-எய்ப்பன்றி 176
முளி-உலர்ந்த, 248
முளிகழை இழைதலால் தீயுண்டாதல், 248
முற்றம்-முன்றில், 531
முற்றிய எள்ளுக்காய் நெய் கொளவொழுகுதல், 106
முற்றிய தயிரினது பிதிர்ச்சி போலும் பூக்கள், 109
முற்றுதல் - வாசித்துமுடித்தல், 40
முறி-தளிர், 313, 429
முறுகப் பழுத்தல்-மிகவும் நெகிழும்படி பழுத்தல், 132
முன்பு-வலிமை, 186, 473
முன்னி-அணுகி, 531
முன்னுதல்-கருதுதல், 94, 186
முன்னோன்- முன்போகின்றவன், 380
முனை-பகைப்புலம். 59

மூ

மூங்கிற்குழாயிலே எருமையினது தயிரைத் தோய்த்து வைத்தல், 523
மூத்தபுரிசை-பழையமதில், 229
மூதூர், 401

மெ

மெல்லிணர் -மெல்லிய பூங்கொத்து, 428
மெல்லெனக் கூறுதல், 568
மென்மெல, 270

மே

மேகம் சூல்முதிர்வதற்கு முன்பு பன்னியபஞ்சுபோல் பொங்கிச் செல்லுதல், 361
மேதி-எருமை, 111
மேதியன்னகல், 111
மேவரும் [மேவுதல் வரும்]-பொருந்துதல் வரும், 63

மை

மை-மேகம், 361
மைந்து-வலி, 260
மைபடுமாமலை, 361

வ

வகுந்து-வழி, 242
வசி-பிளவு, 303
வசிவு-பிளந்து வடுப்படுதல், 97
வட்டி - கடகம்; பனையகணியாற் செய்த பெரிய பெட்டி. [அகணி-புறநார்], 152
வடுவாழெக்கர், 556
வணர்ந்து-வளைந்து, 37
வதுவை - கலியாணம் செய்த மகள், 30
வதுவைக்கு எல்லா மணமும் உளவெனல், 30
வய-வலிய, 309
வயவு-வலிய, 127
வயாஅம்-விரும்பும், 476

வயிரியம்- கூத்தராவேம் , 164 [வயிரியர்-கூத்தர்]
வரகின் குரல்வாரந்தன்ன நுண்துளை, 24-25
வரம்பு-எல்லை, 308
வரவு-தோற்றரவு, 89
வரித்தல்-ஓடுதல், 475
வரிநிழல், 290
வருடை - ஒரு விலங்கு; எட்டுக் காலையுடைய தென்ப; இது முதுகிற் காலுடையதென்றும் கூறப்படும், 503
வருதும்-வருகின்றேம், 53
வருவதாக-உண்டாவதாக, 354
வருவிசைதவிர்த்தல் - ஓடிவருகின்ற விசையைக் கெடுத்துக் கொல்லுதல், 175
வரை-மலை, 509
வரைப்பு-எல்லை, அணி, 88; மதில், 478
வரைமருள்வேழம், 572
வரையரமகளிர், 190
வரைவாழ் வருடை, 503
வல்சி-உணவு, 6 , 183; நெல், 462
வல்லெய்தி-கடுகவந்து சேர்ந்து, 281
வலந்த-சுற்றிக்கிடக்கின்ற, 216
வலம் - வலப்பக்கத்து வழி [ஆகுபெயர்], 202; இடம், 549
வலிக்கு வரம்பாகிய கணவன், 308
வழங்கா-போகாத, 197
வழாஅலோம்புதல் - காலோடு தலைப் பரிகரித்தல், 215
வழீஇய-தப்பிய, 280
வழும்பு-குற்றம், 221
வழூஉம்-வழுக்கும், காலோடும், 215
வழை-சுரபுன்னை, 181
வள்ளுயிர்-பெரிய ஓசை, 37
வள்ளை-வள்ளைப்பாட்டு, உலக்கைப்பாட்டு, 342
வளஞ்செய் வினைஞர், 462
வளம்-செல்வம், வளப்பம், 578
வளை-சங்கு, 409
வளையுடைந்தன்ன வள்ளிதழ்க் காந்தள், 519 [காந்தள்-வெண்காந்தட்பூ]
வளையோர் - வளையினையுடைய மகளிர், 410
வறிது-சிறிது, 202, 231
வன்றலைமாத்தகர், 503
வனைகலத்திகிரி, 474

வா

வாக்கிய-வார்த்த, 463
வாங்கு அமை-வளைந்த மூங்கில், 57 [112
வாதி கையன்ன கவைக்கதிர்,
வாயில்-கோபுரவாயில், 491
வார்தல்-ஒழுகுதல், 25
வாரி - யானையகப்படுத்துமிடம், 572
வாரிக்கொள்ளாவேழம் எனவே, பகைவர் திறைதந்த யானைகள் என்பது, பெறல், 572
வால்-வெள்ளிய, 183, 244
வாலிதின்-நன்றாக, 115
வாலிது-வெள்ளிது, 101
வாளி-அம்பு, 17
வாளை-வாளைத்தடி, 455
வான்அரமகளிர் அருவியில் குடைந்து நீராடுதல், 294-295
வான்கண்-ஞாயிறு, 257
வான்றோயிஞ்சி, 92
வானம்-மேகம், 97

வி

விசித்தல்-இறுக வலித்தல், 3
விசிபிணி - வலித்துக் கட்டின, 381
விசும்பு-மேகம், 1
விசும்புதோயுள்ளம், 558
விசையம் - கருப்புக்கட்டி, வெல்லம், 444
விசையம் கொழித்த பூழி-இடித்து நுண்ணிதாக்கிய தினைமாவுக்கு உவமை, 444-45

விடர்-முழை, 312, 324
விடரகம் - முழைஞ்சு, குகை, 366
விடியல், 196, 257
வியங்கொள்ளுதல், 427
வியம்-ஏவல், 427
வியல்-அகன்ற, 150
வியலிடம், 480
வியலுள்ளங்கண், 350
வியன்கண்-அகன்ற இடம், 99
வியன்கண் வெற்பு, 351
விருந்திற்பாணி-புதிதாகப்பாடும் பாட்டு, 539
விருந்து-புதுமை, 319
விரைஇ-கலந்து, 177, 458
வில்லுமிழ் கடுங்கணை, 226
விலங்கல்-மலை, 298, 461
விலங்கலன்ன போர், 461
விலங்கு மலைத்தமர்ந்த நாட்டம், 45 [விலங்கு-மான்]
விழவினற்று, 351
விழுப்புண், 303 [329
விளி-விளித்தல், கூப்பிடுதல்,
விளித்தல்-கூப்பிடுதல், 405
விளிப்பது-பாடுவது, 8
விளிபடுபூசல், 329
விளை-முற்றின, 337
விளைதயிர்-முற்றின தயிர், 109
விளைந்த-முற்றின, 513, 522
விளையுள்-முற்றுதல், 171
விறல்-வெற்றி, 164, 544
விறலியர்-விறல்பட பாடியாடுவார், 46 [விறல்-சத்துவம்]; 358, 536
விறலியர் விளங்கிழையணிதல், 569-570
வினைநவில்யானை, 227

வீ

வீ-பூ, 109, 265, 434
வீட-போம்படி, 285
வீயாமை அகற்சிமேற்று, 76
வீரைப் புலவோர் என்றது; காஞ்சிசான்ற வயவராதலின், 88
வீழ்தல்-கீழே வளர்தல், 128

வெ

வெண்கை-யானைக்கொம்பு, 28
வெண்ணெல், ஒருவகைநெல், 115, 471, 564 [441
வெண்ணெறிந்தியற்றிய அமலை, வெண்ணெறிந்து - வெள்ளையெறிந்து, 441
வெதிர்-மூங்கில், 207
வெம்பி-வெதும்பி, 191
வெள்ளரிவெண்சோறு, 465
வெள்ளரை, 562
வெள்ளை-வெள்ளாடு, 414
வெளில்-கம்பம், 326
வெறிக்களம், 150
வெறுத்த - செறிந்த, 93, 376; செல்வமுண்டான, 401; வெறுப்புண்டான, 404
வென்றிப்பல்புகழ், 544
வென்றெழுகொடி, 582

வே

வேங்கைப்பூக் கொய்யும் மகளிர் ['புலிபுலி' யென்று] பூசலிடுவரென்பது, 305-6
வேங்கைப்பூவின்ன அவரை, 434-36
வேத்தவை, 39
வேய்-மூங்கிற்குழாய், 171; மூங்கில், 435
வேய்கொளரிசி, 435
வேய்ப்பெயல் விளையுட்டேக்கட்டேறல், 171
வேரல்-சிறுமூங்கில், 223
வேல்நிழற்புலவோர், 88
வேல் யானையைக் குத்தினாற் போல வாழைப்பூ மலையைத் தீண்டிநின்றதெனல், 129-131
வேவை-வெந்த பொரியல், 168
வேள்-நன்னனைக்குறிப்பது, 164
வேறுபுலம்படர்ந்த ஏறு, 408

வை

வைகறை-விடியற்காலம், 172
வைகறையனந்தல், 172-73
வைப்பு-ஊர்கள், 95

இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. நரசிம்மன், (வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் குமாரர்) வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் கம்பெனி, 17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5 என்ற விலாசத்திற் கிடைக்கும்:—

வை. மு. கோ. பதிப்புகள்.

கம்பராமாயணம்:—

பாலகாண்டம்	உரையுடன்	...	9—00
அயோத்தியா காண்டம்	,,	...	9—00
ஆரணிய காண்டம்	,,	...	9—00
கிட்கிந்தா காண்டம்	,,	...	9—00
சுந்தர காண்டம்	,,	...	9—00
யுத்த காண்டம் 1-வது வால்யூம்	,,	...	9—00
,, 2-வது ,,	,,	...	10—00

வில்லிபாரதம்:—

ஆதிபருவம்	உரையுடன்	...	4—50
சபாபருவம்	,,	...	4—50
ஆரணிய பருவம்	,,	...	4—50
விராட பருவம்	,,	...	2—50
உத்தியோக பருவம்	,,	...	4—50
வீட்டும துரோண கன்ன பருவங்கள்	,,	...	9—00
கன்ன பருவம் மட்டும்	,,	...	3—00
சல்லிய சௌப்திக பருவங்கள்	,,	...	3—00

திருக்குறள் :—

மூன்றுபாலும் (புதிய பதிப்பு) ... 10—00

அறத்துப்பால் பரிமேலழகருரையுடனும் அதற்குக் குறிப்புரையுடனும் ... 3—00

(பரிமேலழகருரைக்கு எழுதியுள்ள குறிப்புரைகள் கற்போர்க்குப் பரிமேலழகரின் உரைக்கருத்துக்களை ஐயந் திரிபுஅற விளக்குவதோடு அவர்களைச் சிறந்த புலவராக்கும்.)

பத்துப்பாட்டு - ஆராய்ச்சியுரையுடன் ... 9—00

(இவ்வுரை நச்சினார்க்கினியருரை நயத்தைத் தெளிவுறுத்துவதுடன் கற்போர்க்கு ஆராய்ச்சித்திறனையும் ஊக்குவிக்கும்.)

பத்துப்பாட்டில் தனியே கிடைக்கும் பகுதிகள் :—

திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையுடன்	...	0—62
பட்டினப்பாலை	...	0—75
பொருநராற்றுப்படை	...	0—75

தண்டியலங்காரம் :—

தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் முழுவதும்) மூலம், பழைய வுரை, குறிப்புரையுடன் ... 3—50

அஷ்டப்ரபந்தம் - மூலமும் உரையும் :—

முதற்தொகுதி:— திருவரங்கத்துமாலை, அழகரந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி, ஸ்ரீரங்க நாயகரூசல் முதலியன 5—50

இரண்டாம்தொகுதி:— திருவரங்கக்கலம்பகம், திருவரங் கத்தந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருவேங் கடமாலை முதலியன 6—00

கம்பர் இயற்றிய புத்தகங்கள்:— மூலமும் உரையும் ஒரே பகுதியில்.

சடகோபரந்தாதி, சரசுவதியந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம் 5—50

இதர புத்தகங்கள் :—

நன்னூற் காண்டிகையுரை (திருந்திய பதிப்பு) ... **4—00**

திருப்பாவை தமிழ்நடை	உரையுடன்	...	0—50
மதுரைக்கலம்பகம்	,,	...	1—50
அழகர்கலம்பகம்	,,	...	0—62
ஆழ்வார்கள் சரித்திரம், பட்டர் வைபவம், பிள்ளைலோகாசாரியர் வைபவம்		...	2—00
சந்திராபீடசரிதம்		...	0—37

சிலப்பதிகாரம் :—

காட்சிக்காதை	உரையுடன்	...	0—60
நாடுகாண்காதை	,,	...	0—50

மணிமேகலை :—

பாத்திரம்பெற்ற காதை	உரையுடன்	...	0—25
மலர்வனம்புக்க காதை	,,	...	0—25